## அறம் பெருகும்

அறம் பெருகும் தமிழ் படித்தால்;
அகத்தில் ஒளி பெருகும் !
திறம் பெருகும்; உரம் பெருகும்;
தீமைக் கெதிர் நிற்கும் !
மறம் பெருகும்; ஆண்மை வரும் !
மருள் விலகிப் போகும் !
புறம் பெயரும் பொய்மை யெலாம் !
புதுமை பெறும் வாழ்வே !

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்
- கனிச்சாறு - 1

**தமிழ்மண் பதிப்பகம்**
2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 044-24339030
செல்பேசி : 9444410654

47
அப்பாத்துரையம்

# அப்பாத்துரையம் 47

**பொது**

| ஆங்கிலம் - தமிழ் அகராதி |



**தொகுப்பாசிரியர்**
முனைவர் **கல்பனா சேக்கிழார்**

தமிழ்மண்

# அப்பாத்துரையம் 47

(110 ஆம் ஆண்டு நினைவு வெளியீடு)

## பொது

❖ ஆங்கிலம் - தமிழ் அகராதி

ஆசிரியர்
பன்மொழிப் புலவர்
**கா. அப்பாத்துரையார்**

தொகுப்பாசிரியர்
முனைவர் **கல்பனா சேக்கிழார்**

பதிப்பாளர்
**கோ. இளவழகன்**

நூற்குறிப்பு

# அப்பாத்துரையம் - 47

| | |
|---|---|
| ஆசிரியர் | பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரையார்** |
| தொகுப்பாசிரியர் | முனைவர் **கல்பனா சேக்கிழார்** |
| பதிப்பாளர் | **கோ. இளவழகன்** |


| | | |
|---|---|---|
| **முதல்பதிப்பு** | : | 2017 |
| **பக்கம்** | : | 16+624= 640 |
| **விலை** | : | **800/-** |

பதிப்பு

**தமிழ்மண் பதிப்பகம்**

எண். 2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொ.பே.: 24339030, செல்: 9444410654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com

◆ தாள் : 16.0 கி. மேப்லித்தோ, ◆ அளவு : 1/8 தெம்மி ◆
◆ எழுத்து : 11.5 புள்ளி, ◆ பக்கம் : 648 ◆
◆கட்டமைப்பு : இயல்பு ◆ படிகள் : 500 ◆
◆ நூலாக்கம் : கோ. சித்திரா ◆
◆ அட்டை வடிவமைப்பு : செல்வன் பா. அரி (ஹரிஷ்) ◆
◆ அச்சு : வெங்கடேசுவரா ஆப்செட்,
ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006. ◆



பன்மொழிப் புலவர்

# கா. அப்பாத்துரையார்

(110 ஆம் ஆண்டு நினைவு வெளியீடு)

**தோற்றம் : 24.06.1907 – மறைவு : 26.05.1989**

# நுழைவுரை

தமிழினத்திற்குத் தம் இன உணர்வையும், மொழியுணர்வையும் ஊட்டி வளர்த்தவர்கள் **தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகள், மொழிஞாயிறு பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** முதலான பெருமக்கள் பலராவர்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் இரவு பகல் பாராது உழைத்து எழுதிய நூல்கள் **120** க்கும் மேற்பட்டவை (அவற்றுள் ஆங்கில நூல்கள் ஐந்து). எங்கள் கைகளுக்குக் கிடைத்த நூல்கள் **97**. அவற்றைப் பொருள்வழிப் பிரித்துக் கால வரிசைப்படுத்தி **48 தொகுதிகளாக அப்பாத்துரையம்** எனும் தலைப்பில் தமிழ் உலகுக்கு வழங்குகிறோம்.

தமிழினம் தன் நிலையுணரத் தவறிய வேளையில் தமிழின் தூய்மையையும், தமிழினத்தின் பண்டைப் பெருமையையும் காப்பதற்குத் தக்க வழிகாட்டி அமைப்புகளாக 1916இல் தொடங்கப்பட்டவை **தனித்தமிழ் இயக்கமும், திராவிடர் இயக்கமும்** ஆகும். இவ்விரு இயக்கங்களின் பங்களிப்பால் தமிழினம் எழுச்சிபெற்றது. இவ்வுண்மையை இத் இத்தொகுப்புகளைப் பயில்வோர் எளிதாய் உணர முடியும்.

தமிழ்மொழி ஆய்வாலும், தமிழக வரலாற்று ஆய்வாலும், மொழி பெயர்ப்புத் திறத்தாலும் பன்மொழிப் புலமையாலும் தமிழின் மேன்மைக்குப் பெரும் பங்காற்றியவர் அப்பாத்துரையார். 20ஆம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்களுள் முதல் வரிசையில் வைத்துப் போற்றப்படுபவர் அவர். அவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கையைக்குறித்து பெரியவர் **முகம் மாமணி** அவர்களும், பேராசிரியர் **கு.வெ. பாலசுப்பிரமணியன்** அவர்களும் தத்தம் நூல்களில் வழங்கிய வரிசையைப் பின்பற்றி அப்பாத்துரையம் தொகுப்புகளை வெளியிடுகிறோம்.

தமிழகம் முழுவதும் அலைந்து, பெருமுயற்சியால் தேடிச்சேகரித்தவை இந்த 97 நூல்கள். எங்களுக்குக் கிடைக்காத நூல்களைப் பின்னிணைப்பில் சேர்த்துள்ளோம். அந்நூல்கள் வைத்திருப்போர் வழங்கினால் நன்றியுடன் அடுத்த பதிப்பில் சேர்த்து வெளியிடுவோம். இத் தொகுப்புகளில் அடங்கியுள்ள

நூல்களை உருவாக்கித் தமிழர் கைகளில் தவழ விடுவதற்குத் தொகுப்பாசிரியர் முனைவர் கல்பனா சேக்கிழார் அவர்களும், யானும் பெற்ற இடர்ப்பாடுகள் மிகுதி. அருமை மகள் முனைவர் கல்பனா சேக்கிழார் தம் தொகுப்புரையில் இத்தொகுப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதை விரிவாக விளக்கியுள்ளார்.

அப்பாத்துரையாரின் அறிவுச் செல்வங்களைத் தமிழ்கூறும் நல்லுலகுக்கு வழங்கிய பதிப்பகங்களில் முதன்மையானது **சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.** தமிழ்-தமிழர் மூலங்களைத் தமிழகம் தேடிப்படிப்பதற்கு அடித்தளமாக அமைந்த பதிப்பகம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பாரி நிலையம், மணிவாசகர் பதிப்பகம், வள்ளுவர் பண்ணை, பூம்புகார் பதிப்பகம், வசந்தா பதிப்பகம், தமிழ்மண் பதிப்பகம் முலிய பல பதிப்பகங்கள் இப்பெருந்தமிழ் அறிஞரின் நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு வளமும் வலிமையும் சேர்த்துள்ளன.

இந்நூல்களின் தொகுப்பாசிரியர் பேராசிரியர் **முனைவர் கல்பனா சேக்கிழார்** அவர்கள், தமிழாய்வுக் களத்தில் குறிப்பிடத்தக்கவர். தமிழாய்வுப் பரப்பிற்கு வலிமையூட்ட இவருக்குப் பல்லாற்றானும் உதவிவருபவர் இவருடைய அருமைக் கணவர் **மருத்துவர் சேக்கிழார்** அவர்கள். தமிழ்ப்பதிப்புலகம், இவ்விணையரின் தமிழ்க்காப்புப் பேருழைப்பை என்றும் நினைவு கூரும்.

தொகுப்பு நூல்களின் உள்ளடக்கம் செப்பமாக உருவாவதற்குத் தனக்குள்ள உடல் நலிவையும் தாங்கிக் கொண்டு உழைத்த தமிழ்மகள் **கோ. சித்திரா**வுக்கு நன்றி. தொகுப்புகளின் முகப்பு அட்டைகள் பல வண்ண வடிவமைப்புடன் வருவதற்கு உழைத்த செல்வன். **பா. அரி (ஹரிஷ்)** உழைப்பிற்கு நல்ல எதிர்காலம் உண்டு. இத் தொகுப்புகள் எல்லா நிலை யிலும் நன்றாக வருவதற்கு உள்ளும் புறமும் உழைத்து உதவியவர் **திரு. இரா. பரமேசுவரன்**. பதிப்புச்சிறப்பிற்கு உதவிய **திரு. தனசேகரன், திரு. கு. மருது, திரு. வி. மதிமாறன்** இந்நால்வரும் நன்றிக்குரியோர்.

இத்தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள நூல்கள் பல இடங்களிலும் தேடிச் சேர்த்தவை. கன்னிமாரா நூலகத்தில் இருந்த நூல்களைப் படியெடுத்து உதவிய **‘கன்னிமாரா’** நூலகப் பணியாளர்களுக்கும் **‘சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம்’** (கும்பகோணம்), தாளாளர் பேரா. முனைவர் இராம குருநாதன் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி. சென்னை தரமணியில் இயங்கி வரும் **ரோசா முத்தையா** நூலகப் பணியாளர்கள் உதவிக்கு நன்றி.

நூல்களை மெய்ப்புப் பார்த்து உதவியவர் பெரும்புலவர் அய்யா **பனசை அருணா** அவர்கள். முனைவர் **அரு. அபிராமி** தன் ஆசிரியப் பணிக்கிடையிலும் சோர்வுறாது பதிப்பகம் வந்து இத் தொகுப்புகள் வெளிவருவதற்கு எல்லா

நிலையிலும் உதவியவர். மேலும் இத்தொகுப்புகள் நன்றாக வெளிவருவதற்கு உதவியவர்களின் பெயர்கள் தனிப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனக்கென வாழாது, தமிழ்க்கென வாழ்ந்து, பல்லாண்டுக் காலம் உழைத்த பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரையாரின்** நூல்களை **அப்பாத்துரையம்** எனும் தலைப்பில் தமிழர்களின் கைகளில் தவழ விடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

“ஆக்கத்தை எனக்கிந் நாட்டார்
அளித்திட்ட அறிவை யெல்லாம்
தேக்கிஎன் தமிழ்மேன் மைக்கே
செலவிடக் கடமைப் பட்டேன்.”

- பாவேந்தர்

**கோ. இளவழகன்**

# தொகுப்புரை

## மறைமலையடிகளாரிடம் பட்டை தீட்டப் பெற்ற தன்மானத் தமிழறிஞர்!

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அறிவாளுமைகளில் பெரும் புலமையாளர் **பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்**. இந்தி மொழி கற்பிக்கும் ஆசிரியராய்த் தொடங்கியது அவரின் வாழ்க்கை. பின்பு தமிழ், தமிழர், தமிழ்நாடு என்னும் சிந்தனையில் ஈடுபட்டார்; நுட்பமான பல்வேறு ஆய்வு நூல்களை எழுதியும் பிற மொழிகளில் இருந்து (இலக்கியம், ஆய்வு, அறிஞர்களின் சிந்தனைகள் போன்ற நூல்கள்) தமிழில் மொழி பெயர்த்தும் தமிழிழுலகுக்கு வழங்கினார். அவர் நூல்கள் தமிழ் ஆய்வுப் பரப்பில் பெரும் நல்விளைவுகளை ஏற்படுத்தின.

"அவர் தமிழின் மூலத்தையே ஆராய முனைந்தவர். தமிழினத்தின் வரலாற்றைத் துருவி துருவி ஆராய்வதன் மூலம் தமிழ் இனத்திற்கும் மற்ற இனத்திற்கும் இடையே தோழமையை ஏற்படுத்த நற்பணி செய்திருக்கிறார்" **பேரறிஞர் அண்ணா** பன்மொழிப் புலவரின் ஆய்வுத் தன்மையை இப்படி எடுத்துக்காட்டுகிறார்.

**பாவலரேறு பெருஞ்சித்திரனார், பன்மொழிப் புலவரையும், பாவாணரையும் ஒப்பிட்டுக் காட்டுவது மனங்கொளத்தக்கது. தேவநேயப்பாவாணரையும் - கா. அப்பாத்துரையாரையும்** குறிப்பிடும் போது, "இவ்விருவரும் இருபதாம் நூற்றாண்டுப் புலமைக்கு இரண்டு மேருமலைகள்; மறைந்த குமரிக் கண்டத்து ஓடியிருந்த பஃறுளியாறும் குமரியாறும் போன்றவர்கள்; கழகப் புலவருள் பரணரும் கபிலரும் போன்ற பெருமக்கள்; மொழியையும் இனத்தையும் தூக்கி நிறுத்த வந்த நுண்ணறி வாளர்கள். இவர்கள் காலத்து மற்ற பிற புலவர்கள் விண்மீன்கள் என்றால், இவர்கள் இருவரும் கதிரவனும் நிலவும் போன்ற அந்தணர்கள்; செந்தமிழ் அறவோர்கள்; தொண்டு தவம் இயற்றிய தீந்தமிழ்த் துறவோர்கள். மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் கொண்ட நல் உரவோர்கள்." தமிழுலகிற்கு அப்பாத்துரையார் ஆற்றிய பணியின் இன்றியமையாமையையும் அவருடைய எழுத்துக்களின் தேவையையும் பெருஞ்சித்திரனார் இவ்வாறு உணர்த்துகிறார்.

சமூகம் பல்வேறு கூறுகளை உள்ளடக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கும். அச்செயல்பாடுகள் சரியான வகையில் அமைந்து உரிய புள்ளியில் இணையும் பொழுது, அச் சமூகம் மேலெழுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் தமிழகத்தில் அப்படியான ஒன்றைக் கட்டியமைக்க வேண்டிய நிலை இருந்ததால், அதன் தொடரச்சியான செயல்பாடுகளும் எழுந்தன.

- தனித்தமிழ் இயக்கத் தோற்றம்
- நீதிக் கட்சி தொடக்கம்
- நாட்டு விடுதலை உணர்ச்சி
- தமிழின உரிமை எழுச்சி
- பகுத்தறிவு விழிப்புணர்ச்சி
- இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போர்
- புதிய கல்வி முறைப் பயிற்சி
- புதுவகை இலக்கிய வடிவங்களின் அறிமுகம்

இப்படிப் பல்வேறு தளங்களில் தமிழகம் தன்னை மறு கட்டமைப்புச் செய்ய முனைந்துகொண்டிருந்தது. அதற்கான ஒத்துழைப்பும் செயற்பாடுகளும் பல்வேறு நிலைகளில் துணையாக அமைந்தன. அப்பாத்துரையாரிடம் இந்தி ஆசிரியர் - இந்தித் திணிப்பு எதிர்ப்பு, பக்தி சார்பு - பகுத்தறிவுச் சிந்தனை, காங்கிரசுக் கொள்கை - திராவிடக் கொள்கை, மரபிலக்கியம் - நவீன இலக்கியம் என்னும் முரண்நிலைகள் இருந்தாலும், “தமிழ், தமிழர், தமிழ்நாடு” என்னும் தளத்தில் உறுதியாகச் செயல்பட்டார். மறைமலையடிகள், தேவநேயப்பாவாணரின் சிந்தனைகளை உட்செறித்து, வலுவான கருத்தாக்கங்களை உருவாக்கினார். அவை தமிழினத்தின் மறுமலர்ச்சிக்கு ஊன்றுகோலாய் அமைந்தன.

> “தாய்மொழியும், தாய்மொழி இலக்கியமும், தாய்மொழிக் கல்வியுமே மனித நாகரிகத்தின் அடிப்படை என்பது உணரப்படாமல் இந்தியா நெடுநாள் வாழ முடியாது. தமிழர் இவ்வுண்மையை அறிந்து தமிழறிவும் உலக அறிவும் ஒருங்கே பெற உதவும் எண்ணம் கொண்டே தமிழிலக்கிய வரலாற்றிலே ஆர்வம் ஏற்படாத இக்காலத்தில் உலக வரலாறு எழுத முற்பட்டோம்” என்பது அவர் கூற்று, இன்றும் அந்நிலை முழுதாய் உணரப்படாமல் உள்ளதை என்ன சொல்வது!

அப்பாத்துரையார் தொடக்கத்தில் இந்திய தேசியப் பேரியக்கத்துக்குள் தம்மை இணைத்துக் கொண்டு, காந்தியடிகளின் கொள்கைகளை ஏற்றார். அதனடிப்படையில் காந்தி ரத்தின திருப்புகழ், காந்தி புராணம், தாழ்த்தப் பட்டோர் கோயில் நுழைவு விழா முதலான பாடல்களை இதழ்களில் எழுதினார். காங்கிரசு முன் வைத்த மொழிக்கொள்கை குறிப்பாகத் தமிழகத்தில் இந்தியைத் திணிக்க முற்பட்ட முயற்சி, தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை உருவாகியது. இந்த நிகழ்வு (1938 - 1939) அவரைத் தமிழர் தேசியம் நோக்கித் திருப்பியது. அதனால் பெரியாரின் சுயமரியாதை, பகுத்தறிவுச் சிந்தனைகளோடு தம்மை இணைத்துக்கொண்டார். தமது நிலைப்பாட்டை, அவரே கூறுகிறார். “சர்.ஏ. இராமசாமி முதலியார் போன்றவர்கள் தொடக்கத்தில் சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்துப் பின் விலக நேர்ந்தது. இந்தக் காலங்களில் காங்கிரசை விட்டோ, சைவ இயக்கங்களை விட்டோ, தமிழ் இயக்கங்களை விட்டோ விலகாமல் நின்று, எல்லா முற்போக்கு வீரர்களையும் இணைக்க நான் முயன்றேன். பெரியார் இதனை எதிர்க்கவில்லை. தன்மான இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்துக்கும், தமிழ் இயக்கத்துக்கும் என்னுடைய நிலை இன்றுவரை பயன்பட்டே வந்துள்ளது” - (அறிவுச் சுரங்கம், பக்.100,101) பன்மொழிப் புலவர் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் (இயக்கம் சார்ந்தும் எழுத்து சார்ந்தும்) நின்றுவிடாத உரிமையுணர்வினர்!

பன்மொழிப் புலவர் பெயரால் வெளிவந்த முதல் நூல் **குமரிக்கண்டம்** (1940-43). இது மொழிபெயர்ப்பு நூல். காழி. கண்ணுசாமி பிள்ளை சில பக்கங்கள் மொழிபெயர்த்து இருந்ததை, முழுமையாக இவர் மொழிபெயர்த்துள்ளார். இதன் தொடர்ச்சியாக,

- உலக இலக்கியங்களை, வரலாறுகளைத் தமிழில் மொழி பெயர்த்தல்.
- தமிழ் மொழி, இனம் தொடர்பான ஆங்கில நூல்களைத் தமிழில் தருதல்.
- தமிழ் மொழி, இனம், நாடு சார்ந்த சிந்தனையாக்கங்கள் வழங்கல்.
- தமிழ் இலக்கியங்களை உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்கி தமிழ் இலக்கியத்தின் சிறப்பை உணர்த்தல்.
- திருக்குறளுக்கு மிக விரிவான விளக்கவுரை வரைதல்.
- நுண் விளக்கங்களுடன் பல்வகை அகராதி தொகுத்தல்.

இந்த அடிப்படையில் அவருடைய நூல்கள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. 1947 - 1949 ஆம் ஆண்டுகளில் நடுவண் அரசின் செய்தித் துறையில் பணியாற்றிய பொழுது, **இந்தியாவில் மொழிச் சிக்கல்** என்னும் நூலை எழுதினார். இந்நூலுக்கு மறைமலையடிகள் 40 பக்க அளவில் முன்னுரை வழங்கியுள்ளார். இந்நூல் எழுதியதன் காரணமாக அவரது அரசுப் பணி பறிக்கப்பட்டது.

பணியின்றி இருந்த (1949 - 1959) காலக்கட்டங்களில் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவருடைய நூல்களைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பாரிநிலையம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், வள்ளுவர் பண்ணை, அலமேலு பதிப்பகம் போன்ற பதிப்பகங்களும் பிறவும் வெளியிட்டுள்ளன. தமிழ்மண் பதிப்பகம் இப்போது அனைத்து நூல்களையும் 48 தொகுதிகளாக வெளியிடும் அரும்பணியை நிறைவேற்றியுள்ளது.

உலக நாகரிகத்தின் வித்து தமிழ் எனத் தம் நுண்ணாய்வின் வழி நிறுவிய, பன்மொழிப் புலவரின் அனைத்து நூல்களும் தொகுக்கப்பட வேண்டும் என்ற வேணவாவினால் தமிழ்மண் பதிப்பக நிறுவனர் ஐயா இளவழகனார் இத் தொகுப்பினை உருவாக்கப் பணித்தார்கள். ஐயா அவர்கள் தமிழுக்கு ஆற்றும் பேருழைப்பு என்னை வியக்கச் செய்யும். மெய்வருத்தம் பாராமல் கண்துஞ்சாமல் எடுத்த செயலை நேர்த்தியோடு செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பவர். அவருடன் இணைந்து இத்தொகுப்பினை உருவாக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இத் தொகுப்பிற்கான நூல்கள் கும்பகோணம் செந்தமிழ் நூலகம், ரோசா முத்தையா நூலகம், கன்னிமாரா நூலகம், வெற்றியரசி பதிப்பகம் முதலான இடங்களில் இருந்து திரட்டப்பெற்றன. பேராசிரியர் முனைவர் கு.வெ. பால சுப்பிரமணியம் அவர்களிடமிருந்தும் சில நூல்கள் பெறப்பட்டன. கிடைத்த நூல்கள் 97. அவை 48 தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு வெளி வருகின்றன. அத் தொகுதிகள் கீழ்க்காணும் முறைகளில் பகுக்கப்பட்டுள்ளன.

1. தமிழ் - தமிழர் - தமிழ்நாடு
2. வரலாறு
3. ஆய்வுகள்
4. மொழிபெயர்ப்பு
5. இளையோர் கதைகள்
6. பொது நிலை

பெரும்பான்மை நூல்கள் இத்தொகுப்பிற்குள் அதனதன் பொருள் அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டுள்ளன. பக்கச் சமநிலை கருதி மாற்றம் பெற்றும் உள்ளன. வெவ்வேறு பதிப்பகங்கள் ஒரே நூலை வேறு வேறு பெயர்களில் வெளியிட்டிருந்தன. சில நூல்களின் முதல் பதிப்பு கிடைக்காத நிலை! கிடைத்த பதிப்புகளின் அடிப்படையிலேயே நூல்கள் தொகுக்கப் பட்டிருக்கின்றன. **முகம் மாமணி** அவர்களின் **அறிவுச்சுரங்கம் அப்பாத்துரையார்** என்ற நூலையும், பேராசிரியர் முனைவர் **கு.வெ. பால சுப்பிரமணியம்** அவர்கள் எழுதியுள்ள **பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை** என்ற நூலையும் அடிப்படையாகக் கொண்டு அப்பாத்துரையம் தொகுக்கப் பட்டுள்ளது. இந்தக் கால வரிசை அடிப்படையிலான நூற்பட்டியல் இத்தொகுப்பில் இணைக்கப் பட்டுள்ளன. அப்பாத்துரையார் குறித்து வெளிவந்துள்ள கட்டுரைகள், அறிஞர்கள் கருத்துக்கள், அவர் குறித்த பாடல்கள் திரட்டப்பட்டு இத் தொகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன. விடுபட்ட நூல்கள் கிடைக்கச் செய்தால் அடுத்த பதிப்பில் நன்றியுடன் வெளியிடப்பெறும். அவரின் திருக்குறள் விளக்கவுரை இத்துடன் இணைக்கவில்லை. காரணம் பக்கம் மிகுந்து இருப்பதே. குறைகள் இருப்பின், சுட்டிக் காட்டவும். மறுபதிப்பில் அவை திருத்திக்கொள்ளப்படும்.

இத்தொகுப்பு உருவாவதற்கு எல்லாவகையிலும் முன்னின்றவர் ஐயா திரு கோ. இளவழகனார். பகுப்பு முறைகளைச் சரிபார்த்துக் கொடுத்தவர் ஐயா முதுமுனைவர் இரா. இளங்குமரனார். நூல்களைத் தட்டச்சு செய்தும், நூலின் உள் வடிவமைப்பினைச் செப்பம் செய்தும் தந்தவர் திருமதி. கோ. சித்திரா, தொகுப்பு அனைத்திற்கும் சிறப்புற மேல் அட்டைகளை வடிவமைத்தவர் செல்வன். பா. அரி (ஹரிஷ்), தொகுப்புப் பணியில் துணை செய்தோர் என் ஆய்வு மாணவர்கள் திருமதி. பா. மாலதி, திரு. கா. பாபு, செல்வன். சு. கோவிந்தராசு, செல்வி. கா. கயல்விழி. என் பணிகள் அனைத்திற்கும் என்றும் துணைநிற்பவர் கணவர் மருத்துவர் மு. சேக்கிழார். இவர்கள் அனைவருக்கும் என்றும் என் நன்றியும் அன்பும் உரியன.

**கல்பனா சேக்கிழார்**

## நூலாசிரியர் விவரம்

### பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்

| | |
|---|---|
| இயற்பெயர் | : நல்ல சிவம் |
| பிறப்பு | : 24.06.1907 இறப்பு: 26.05.1989 |
| பெற்றோர் | : காசிநாதப் பிள்ளை, முத்து இலக்குமி |
| பிறந்த ஊர் | : கன்னியாகுமரி மாவட்டம்,<br>ஆரல்வாய் மொழி (அறை வாய் மொழி) |
| உடன் பிறந்தோர் | : தங்கை இருவர், தம்பியர் இருவர் |
| மனைவியர் | : திருமதி. நாச்சியார், திருமதி. அலமேலு |
| வளர்ப்பு மகள் | : திருமதி. மல்லிகா |
| தொடக்கக் கல்வி | : ஆரல்வாய் மொழி |
| பள்ளிக் கல்வி | : நாகர்கோவில் |
| கல்லூரிக் கல்வி | : திருவனந்தபுரம் |
| | : இளங்கலை ஆங்கிலம் (ஆனர்ஸ்),<br>முதுகலை தமிழ், இந்தி 'விசாரத்', எல்.டி. |
| கற்ற மொழிகள் | : 40 (புழக்கத்தில் - தமிழ், ஆங்கிலம்,<br>சமசுகிருதம், மலையாளம், இந்தி) |
| நூல்கள் | : 120 (ஆங்கிலம், 5) |
| இதழ்பணி | : திராவிடன், ஜஸ்டிஸ், இந்தியா, பாரததேவி,<br>சினிமா உலகம், லோகோபகாரி,<br>தாருஸ் இஸ்லாம், குமரன், தென்றல், விடுதலை. |
| பணி | : - 1936-37 திருநெல்வேலி நாசரேத் பகுதியில் இந்திப் பிரச்சார சபா ஆசிரியர்.<br>- 1937-1939 நெல்லை எம்.டி.டி. கல்லூரி இந்தி ஆசிரியர்.<br>- பள்ளி ஆசிரியர், செட்டிநாட்டில் அமராவதிபுத்தூர் மற்றும் கோனாப்பட்டு.<br>- 1947-1949 மைய அரசின் செய்தித் தொடர்புதுறையில் பணி<br>- 1959 - 1965 சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் தமிழ் அகராதிப் பணியில் இணை ஆசிரியர்.<br>- 1975-1979 தமிழக வரலாற்றுக் குழு உறுப்பினர் |

**அறிஞர் தொடர்பு:**

- *தொடக்கத்தில் காந்திய சிந்தனை.*
- *1938-39 இல் இந்தி எதிர்ப்பு இயக்கம், பெரியார், அண்ணா, பாரதிதாசன் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, மறைமலையடிகள், பாவேந்தர், பாவலரேறு, தேவநேயப் பாவாணர் மற்றும் சமகால அறிஞர் பெருமக்கள், படைப் பாளுமைகள் தொடர்பு*

**விருதுகள்:**

- *மதுரையில் நிகழ்ந்த 5ஆவது உலகத் தமிழ் மாநாட்டில்* ***பொற்கிழியும் கேடயமும்*** *வழங்கப்பட்டது,*
- *1973 இல் செந்தமிழ்ச் செல்வர், சேலம் தமிழகப் புலவர் குழு கூட்டத்தில்* ***'சான்றோர் பட்டம்'***, ***'தமிழன்பர்'*** *பட்டம்.*
- *1981 சனவரி 26 இல் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில்* ***'கலைமாமணி'***.
- *1983 இல் தமிழ்நாடு அரசு வழங்கிய* ***'திரு.வி.க.'*** *விருது, தங்கப் பதக்கம்.*
- *மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் சிறப்பித்து வழங்கிய* ***'பேரவைச் செம்மல்'*** *விருது.*
- *1961 இல் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர்.*
- *1970 இல் பாரீசில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் சிறப்பு உறுப்பினராகக் கலந்து கொண்டார்.*
- *இங்கிலாந்து ஆக்சுபோடு பல்கலைக்கழகம் இவரது 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' நூலை அங்குப் படிக்கும் மேல்பட்டப் படிப்பு மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டு இருந்தது.*

**பன்மொழிப்புலவரின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்:**

- *அறிவுச் சுரங்கம் கா. அப்பாத்துரையார், முகமாமணி, மாணவர் பதிப்பகம், சென்னை -17, 2005.*
- *பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், பேரா.முனைவர். கு.வெ. பாலசுப்பிரமணியம், சாகித்திய அகாதெமி, 2007.*

# நூலாக்கத்திற்கு உதவியோர்

**தொகுப்பாசிரியர்:**

முனைவர் **கல்பனா சேக்கிழார்**

**கணினி செய்தோர்:**

திருமதி **கோ. சித்திரா**
திரு **ஆனந்தன்**
திருமதி **செல்வி**
திருமதி **வ. மலர்**
திருமதி **சு. கீதா**
திருமிகு **ஜா. செயசீலி**

**நூல் வடிவமைப்பு:**

திருமதி **கோ. சித்திரா**

**மேலட்டை வடிவமைப்பு:**

செல்வன் **பா. அரி (ஹரிஷ்)**

**திருத்தத்திற்கு உதவியோர்:**

பெரும்புலவர் **பனசை அருணா,**
புலவர் **மு. இராசவேலு**
செல்வி **பு. கலைச்செல்வி**
முனைவர் **அ. கோகிலா**
முனைவர் **ஜா. கிரிசா**
திரு. **இளங்கோவன்**
திரு. **க. கருப்பையா**
திரு. **நாக. சொக்கலிங்கம்**
முனைவர் **அரு. அபிராமி**
முனைவர் **மா. வசந்தகுமாரி**
திருமதி **சுபா இராணி**

**நூலாக்கத்திற்கு உதவியோர்:**

திரு இரா. பரமேசுவரன், திரு தனசேகரன்,
திரு கு. மருது, திரு வி. மதிமாறன்

**அச்சாக்கம் - நூல் கட்டமைப்பு:**

வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு, ஆயிரம் விளக்கு, சென்னை-14.

# ஆங்கிலம் - தமிழ் அகராதி

முதற்பதிப்பு - 1952

இந்நூல் 1944இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
வெளியிட்ட பதிப்பை மூலமாகக் கொண்டு வெளிவருகிறது.

# Index of Abbreviations in the Dictionary

| | | |
|---|---|---|
| *a.* | - | Adjective. |
| *abs.* | - | Abstract (noun). |
| *adv.* | - | Adverb. |
| *ag.* | - | Agentive (noun) (வினையாலணையும் பெயர்). |
| *art.* | - | Article. |
| *aux.* | - | Auxilliary (verb). |
| *cf.* | - | Compare. |
| *comb.* | - | Combination (of words). |
| *comp.* | - | Comparative (degree). |
| *conj.* | - | Conjunction. |
| *conn.* | - | Connected words. |
| *correl.* | - | Correlative. |
| *dimi.* | - | Diminutive (noun). |
| *fem.* | - | Feminine gender. |
| *fig.* | - | Figurative (sense). |
| *gen. pl.* | - | Generally (in) plural. |
| *impers.* | - | Impersonal (noun). |
| *Int.* | - | Interjection. |
| mas. | - | Masculine gender. |
| *n.* | - | Noun. |
| *neg.* | - | Negative. |
| *obj.* | - | Objective case (pronoun). |
| *pa.t.* | - | Past (tense). |
| *pass.* | - | Passive (voice). |
| *pers.* | - | Personal (noun). |
| *phr.* | - | Phrase. |

| | | |
|---|---|---|
| *pl.* | - | Plural. |
| *poet.* | - | Poetical. |
| *poss.* | - | possessive (case). |
| *poss. pron.* | - | Possessive (pronoun). |
| *pa. p.* | - | Past participle. |
| *pr.* | - | Present (tense, participle). |
| *pred.* | - | Predicative (adjective). |
| *prep.* | - | Preposition. |
| *pron.* | - | Pronoun. |
| *pr. p.* | - | Present Participle. |
| *refl.* | - | Reflexive. |
| *s.* | - | Secondary (noun, adjective etc). |
| *sing.* | - | Singular. |
| *sup.* | - | Superlative (degree). |
| *v.* | - | Verb. |
| *vbl.* | - | Verbal (noun). |
| இலக். | - | இலக்கணம் |
| வாய்வியல் | - | Logic. |

x *எதிர்மறை.*

> *வேர்ச் சொல்.*

< *சொல் விரிவு.*

**குறிப்பு:** *1. பெயர்கள் ஒருமையிலும் வினைகள் நிகழ்காலத்திலும் மட்டுமே தரப்பட்டுள்ளன. இன்றியமையா இடங்களில் மறுவடிவங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன.*

*2. ஒரு சொல்லின் பல வடிவங்களுக்கு அவற்றின் இலக்கணக் குறிப்பு மட்டுமே பெரும்பாலும் தரப்பட்டிருக்கிறது. வினையின்பின் வளைவுக்குள் வரும் இரு வடிவங்கள் இறந்த காலம், இறந்தகால எச்சம்* (past participles) *ஆகியவற்றைக் குறிக்கும். இரண்டும் வேறு வேறு வடிவமாயிராமல் ஒரு வடிவமாயிருந்தால் ஒரு வடிவமே தரப்படும். அஃது இரண்டையும் குறிக்கும். பெயரடையின்பின் இரு வடிவங்கள் மிகை* (comparative degree)*, மீமிகை* (superlative degree) *வடிவங்களைக் குறிக்கும்.*

# முதற்பதிப்பின்முகவுரை

*இந்திய மாநிலத்தின் தாய்மொழிகள் அனைத்திற்கும் இப்போது புதியதொரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே சமயம் அவற்றிற்குப் புதியதோர் அறைகூவலும் விடுக்கப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, வங்காளி, இந்தி போன்ற தாய் மொழிகள் அவ்வத் தாய் மொழியகங்களின் நாட்டு மொழிகளாய், நாட்டு அரசியல் மொழிகளாய் விளங்கவேண்டும் என்ற ஆர்வம் பொது மக்களிடையே பரவியுள்ளது. விடுதலை பெற்றுள்ள மாநில அரசியலும் இவ் வார்வத்தை நிழற்படுத்திக் காட்டுகிறது. இந் நிலைமை தாய்மொழிகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் ஊக்கும். இதுவே அவற்றிற்கு இன்று அளிக்கப் பட்டுள்ள வாய்ப்பு. ஆனால், இதே சமயம் அவை திடுமென அந்த நிலையை மேற்கொள்ள, தமக்குள்ளேயே ஓர் அகப்புரட்சி நிகழ்த்தவேண்டும். ஆங்கில மொழியினிடத்தில் இருந்துவரும் புதிய அரசியல் கருத்துகளையும் செயலரங்கத்துறை வழக்கு மரபுகளையுந் தற்கால நாகரிக வழக்காறுகளையும் அவை மேற்கொள்ள வேண்டும். தாய் மொழியாளர் இது செய்யக் கூடுமா? இஃது அவ்வத் தாய் மொழியாளர் தாய்மொழிப் பற்றுக்கும் தன்மதிப்புணர்ச்சிக்கும் ஒரு கடுந்தேர்வு ஆகும்.*

*மாநில மொழிகளை மட்டுமல்ல, உலகின் பலமொழி களையும், சிறப்பாகக் கீழைநாட்டு மொழிகளையும் இக்கடுந் தேர்வு பெரிதும் பாதிக்கவே செய்கின்றன. மேற்கு ஐரோப்பாவின் முன்னணி நாகரிக மொழிகளான ஆங்கிலம், ஃவிரஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளுள் ஏதானும் ஒன்றிலிருந்து சொற்கள் இரவல் பெற்றே பெரும்பாலானவை அவற்றின் இடத்தை ஓரளவு பெற்றுத் தன்மதிப்புப் பேணமுடிகிறது. இது மட்டுமன்று. இவ்வெல்லா மொழிகளும் அம் முன்னணி மொழிகள் மூன்றுங்கூட, இறந்துபட்ட பண்டை நாகரிக மொழிகளான*

கிரேக்கம், இலத்தீனம், அரபு, பாரசீகம், சமஸ்கிருதம் ஆகியவற்றின் உதவியின்றி நாகரிக மொழிகளாய் இயங்க முடியவில்லை. ஆனால், தமிழின்னிலை இவ்வெல்லா மொழிகளுக்கும் நல்லெச்சரிக்கையாகவும் எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் அமைந்துள்ளது. அது பண்டை மொழிகளையும் இன்றைய முன்னணி மொழிகளையுந் தாண்டி இன்னும் வளமடையத்தக்க அகவளம் உடையதாயுள்ளது. இன்றைய கடுந்தேர்வு அதைச் சிறிதும் ஊறுபடுத்தாது என்று நாம் நம்பலாம். புதிய வாய்ப்பை மற்ற மொழிகள் முழுதும் பயன்படுத்தத் துணிந்தால், தமிழ் தான்முன்னேறுவதுடன்னிற மொழிகளுக்கும் வழிகாட்டியாயிருக்கத்தக்க பண்புகளுடையது ஆகும். தன்னகத்துள்ள வேர்ச்சொற்களின் அடிப்படையிலேயே புதிய கருத்துக் கோட்டைக்கான புதிய செங்கல்கள் அமைக்கும் பண்புதான் தமிழ் தனக்கு வகுத்துக் கொண்ட மொழிப்பண்பு. இதனைப் பின்பற்றும் மொழிகள் யாவும் உலகில் உயர்வது உறுதி. இறந்துபட்ட பண்டை நாகரிக மொழிகள் இத் தமிழ்ப்பண்பைப் பின்பற்றிய அளவிலேயே உயர்வுற்றன. ஆதிக்க மொழிகளாகாவிட்டால் அவை இன்றும் தமிழைப் போல உயிர்ப்புடன்னிலவியுமிருக்கும்.

இன்றைய புதிய மாறுதல் தமிழ் அகரவரிசையிலும் ஆங்கிலத் தமிழ் அகரவரிசையிலும் புதுத் தேவையையும் புதுத்தேவையளவுப் பெருக்கத்தையும் உண்டுபண்ணியுள்ளது. ஆங்கிலத் தமிழ் அகரவரிசையில் இதுகாறும் இருந்துவந்த நோக்கம் மிகக் குறுகியது. ஆங்கிலம் படிப்பவருக்கு, அதுவும் தொடக்க நிலையில் படிப்பவருக்கும் உதவுவதற்கே அது தொகுக்கப்பட்டது. ஏனெனில், உயர்படியிலுள்ளவர்க்கு ஆங்கிலேயர் தொகுக்கும் ஆங்கில -ஆங்கில அகரவரிசைகளே சிறப்பும் பெரும் பயனும் உடையவையாயிருக்க முடியும். அத்துடன் ஆங்கிலத்தில் அறிவுடைய உயர்படித்தரமுடைய மக்களையன்றி தமிழில் அறிவுடைய மக்களை இம் முயற்சியில் அரசியலார் ஊக்கவில்லை. மேலும் ஆங்கிலமொழித் திறமைக்கிருந்த உயர்வும் விலையும் தாய்மொழியறிவுக்கு இல்லாததால், அவ்வறிவைப் பழைய மரபு ஊக்கவும் இல்லை.

இன்று இந்நிலை மாறத் தொடங்கியுள்ளது. விரைவில் இம் மாறுபாடு வளரும் என்றும் நம்புகிறோம். எனவேதான், ஆங்கிலத் தமிழ் அகர வரிசையில் இப்போது புது நோக்கமும், புதுப்பயனும், புதுத் தேவையும் ஏற்பட்டுள்ளன. இனி ஆங்கிலத் தமிழ் அகரவரிசையின் தேவை ஆங்கில மொழியை அறிவதும் அதைப் பேச்சிலும் எழுத்திலும் வழங்க உதவுவதும் மட்டுமல்ல; அதன் கருத்துகளைத் தாய்மொழியில் திறம்பட எடுத்துரைக்கும், எழுதும் ஆற்றலை வளர்ப்பதும், இன்று புதிய முனைப்பான நோக்கமாகும். அத்துடன் ஆங்கில மொழியறிவிலும் முன்பு ஆங்கில - ஆங்கில அகரவரிசைக்கிருந்த முதன்மை இனி ஆங்கிலத் தாய்மொழி அகரவரிசைக்கு ஏற்படவிருக்கிறது. தொடக்க ஆங்கில மாணவனுக்குச் சொற்களின் பருப்பொருள் மட்டும் தேவைப்பட்டது. இனி நாட்டில் பலருக்கு ஆங்கிலச் சொற்களின்முழுப்பொருளும் அதன் நுண்ணயம், வழக்காற்று மரபு (idiom), பண்பு (raciness) ஆகியவற்றின் அறிவும் தேவை. இவை மொழிபெயர்க்கப்படுவது மட்டுமல்ல. தாய்மொழி மரபுப் பண்பாக 'மரபு பெயர்க்கப்படுவதும்' இனிப் பெரிதும் தேவைப்படும்.

உலகின் வேறு எம்மொழிகளையும்விட, ஆங்கிலத்தை விடக்கூட, இயற்கை வளமிக்க தமிழில், தாய்மொழியின் மலர்மணமும் கனிவளமும் விட்டு, பண்பிற் பிற்பட்ட அயல் மொழிகளின் தழைகுழை வளமும் காய் மணமும் தேடிப் பலர் அலமருகின்றனர். இந்நிலையை உடனடியாக நீக்குதல் பிற தாய்மொழிகளில் முடியாதாகின்றது. ஆனால், தமிழில் சங்க காலந்தொட்டு மாளாது நிலவும் பண்பாலும், தமிழ்ப் புலவருலகின்முடிசூடாமன்னன்காலஞ் சென்ற **மறைத்திரு மறைமலையடிகளார்** நல்லியக்க வெற்றிகளாலும் கிட்டத்தட்ட முழுதும் அயல்மொழி விலக்கியே அறிவுலகில் தமிழ் முன்னணியிடம் நாடமுடிகிறது. அந்நோக்கத்தையும் ஆங்கில அறிவு மரபுடன் தமிழ்ப் பண்பு மரபும் பேணும் நோக்கத்தையும் ஆமுறை கொண்டு இக் கழக ஆங்கிலத்தமிழ் அகரவரிசை தொகுக்கப் பெற்றுள்ளது. தமிழுலகம் ஆதரவு தந்து இத்தகு பணி பெருக்குமென்று நம்புகிறேன்.

*மறைமலையடிகளாரின் புகழுடம்பாய் இன்னும் நம்மிடையே நிலவும்* ***தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்*** *இந் நன்முயற்சியை மேற்கொண்டு தமிழ்ப் பணிக்கு ஆதரவு தந்தமைக்கு அவர்களுக்கு எனது நன்றி.*

***- கா. அப்பாத்துரை***

# A

**A,** *art.* ஒரு.

**Aback,** *adv.* பின் புறமாய். (taken aback - திடுக்கிட்டு.)

**Abactor,** *n.* கால்நடைத் திருடன்; ஆனிரைக் கள்வன்.

**Abandon,** *v.* துற; கைவிடு; விலக்கு. *a.* abandoned, கைவிடப்பட்ட; ஒழுக்கந் தவறிய; கொடிய.

**Abase,** *v.* தாழ்த்து; இழிவுபடுத்து.

**Abash,** *v.* வெட்கச்செய்; தலை குனியச் செய்.

**Abate,** *v.* குறையறச் செய். *n.* abatement.

**Abba,** *n.* தந்தை; கடவுள்.

**Abbess,** *n.* மடத்தின் தலைவி; மடத்து அன்னை.

**Abbey,** *n.* மடம்.

**Abbot,** *n.* மடத்தின் தலைவர், மடத்துத் தந்தை.

**Abbreviate,** *v.* சுருக்கு. *n.* abbreviation, சுருக்கம்; சுருக்கக் குறியீடு.

**Abdicate,** *v.* உரிமை துற, அரசிருக்கை துற. *n.* abdication.

**Abdomen,** *n.* அடிவயிறு; வயிற்றறை. *a.* abdominal.

**Abduct,** *v.* (ஆளை) வலிந்து தூக்கிக் கொண்டு செல், கடத்திச் செல். *n.* abduction.

**Aberrate,** *v.* நேர்வழியினின்றும் விலகு; நெறியின் நீங்கு, *n.* aberration.

**Abet,** *v.* (தவறான காரியம் செய்யத்) தூண்டு, தீச்செயலுக்கு உதவிசெய். *n.* abetment. *n. ag.* abetter; abbettor.

**Abeyance,** *n.* நிறுத்தி வைத்தல், (சட்டம்) நடைமுறையில் இல்லா திருத்தல்.

**Abhor,** *n.* வெறு. விடு, தள்ளு, ஒதுக்கு. *n.* abhorrence; *a.* abhorrent.

**Abide,** *v.* (abode) ஒரே நிலையில் இரு, பொறுத்திரு.

**Ability,** *n.* திறமை.

**Ab inition** *adv.* தொடக்கத்தி லிருந்து; அடிமுதல்.

**Abject,** *a.* இழிந்த; தன்மதிப் பில்லாத.

**Abjure,** *v.* ஆணையிட்டுக் கை விடு; கொள்கையை மறு. *n.* abjuration.

**Ablaze,** *a. adv.* கொழுந்து விட்டு எரிகிற; (கொழுந்து விட்டு.)

**Able,** *a.* திறமையுள்ள; வலுவுள்ள. (be able to do- செய்ய இயலு.) *adv.* Ably; *n.* ability.

**Ablush,** *adv.* நாணமுற்று; நாணி.

**Ablution,** *n.* முழுக்கு; நீராட்டு.

**Abnormal,** *a.* இயல்பு கடந்த; இயற்கை மீறிய

**Aboard,** *adv. prep.* (கப்பல்) தளத்தின் மீது.

**Abode,** n (>abide) 1. வீடு; இருப்பிடம். 2. *p.t.* of abide.

**Abolish,** *v.* ஒழி: நீக்கு. *n.* abolition.

**Abominate,** *v.* வெறு. *a.* abominable. *n.* abomination. வெறுப்பு; வெறுக்கத்தக்க பொருள்.

**Aboriginal,** *a., n.* தொன்மையான; தொல்குடி சார்ந்த (வர்).

**Aborigines,** *n. pl.* ஒரு நாட்டின் பழங்குடிகள்.

**Abortion,** *n.* கருச் சிதைவு; காலமல்லாப் பிள்ளைப்பேறு. *a.* abortive, பயனற்ற.

**Abound,** *v.* செழி; நிறைந்திரு. *n.* abundance.

**About,** *prep. adv.* சுற்றிலும்; பல திசைகளிலும்; பெரும் பான்மை யாக; நேர்எதிராக. (about-turn).

**Above,** *adv. prep.* உயர; மேலே; ஆற்றலுக்கு மிகுதியாக; அப்பாற் பட்ட.

**Abrasive,** *n.* தேய்ப்புப் பொருள்.

**Abreast,** *adv.* பக்கத்துக்குப் பக்க மாக; தோளோடு தோளாக; (நெஞ் சொடு நெஞ்சாக) இணையாக.

**Abridge,** *v.* சுருக்கு; தொகு. *n.* abridgement.

**Abroad,** *adv.* வெளியே; பிறநாடுகளில்.

**Abrogate,** *v.* வழக்கொழியச் செய்; ஒழித்துக்கட்டு.

**Abrupt,** *a.* திடீரென; தொடர்ச்சி யில்லாத; செங்குத்தான. *n.* abruptness. *adv.* Abruptly.

**Abscess,** *n.* கட்டி, சீழ்க்கட்டு.

**Abscond,** *v.* ஓடி ஒளிந்துகொள்; அகப்படாமல் தலைமறைவா யிரு.

**Absence,** *n.* இல்லாதிருத்தல்; இன்மை. (x presence). *a., v.* absent. *n. pers.* Absentee.

**Absolute,** *a.* தனியான; தன்னியல் பான; கலப்பற்ற; கட்டுப்பாடில்லாத; வரம்பில்லாத; முழுமையான.

**Absolve,** *a.* குற்றம் அல்லது பழியை மன்னித்துவிடு. *n.* absolution.

**Absorb,** *v.* உறிஞ்சு; உட்கொள்; கவர்; கவனத்தைக் கவர். *n.* absorbtion.

**Abstain,** *v.* விலகி நில்; விட்டுவிடு. *n.* abstention.

**Abstemious,** *a.* சிறுகச் செலவு செய்கிற; செலவு நுணுக்கமுடைய.

**Abstract,** 1. *a.* புலன்களுக்கு அப்பாற்பட்ட; கருத்தியலான; பண்பியலான; *n.* (ஒரு நூல் அல்லது கதையின்) சுருக்கமான கருத்து, 2. *v.* பிரித்தெடு; தொகுத்துச் சொல், 3. *n.* abstracted, வேறு வகையில் கவனம் செலுத்திய.

**Absurd,** *a.* முட்டாள்தனமான; பொருந்தாத; நகைப்பிற் கிடமான. *n.* absurdity.

**Abundance,** *n.* ஏராளம்; செழிப்பு; மிக்க செல்வம். *a.* abundant, *v. see* abound.

**Abuse,** *v.* 1. தவறாக வழங்கு; பாழாக்கு 2. பழித்துரை. *n.* 1. தவறான பயன்; 2. பழிப்புரை; (2) *a.* abusive.

**Abut,** *v.* (ஒன்றின் மேல்) சார்ந்திரு; முட்டிக்கொண்டிரு. *a.* abutment.

**Abyss,** *n.* பாதாளம்; அளவிட முடியாத ஆழமுள்ள குழி அல்லது அகழி; கசம்; படுகுழி. *a.* abysmal.

**Academy,** *n.* கல்விக் கழகம் (கலைஞர் மன்றம்). *a.* academical.

**Accede,** *v.* இணங்கு; பணிப் பொறுப்பு ஏற்றுக்கொள்; இணைந்து கொள்; சேர்; கூடு. *n. see* accession.

**Accelerate,** *v.* விரைவுபடுத்து, விரைவுபெருக்கு; வேகமாக்கு. *n.* acceleration; *n. ag. (impers)* accelerator வேகத்தை மிகுதிப் படுத்தும் கருவி.

**Ac'cent,** *n.* ஒலியழுத்தம். எடுப் பொலி; அழுத்தக்குறியீடு. *v.* accent அழுத்தமாக ஒலி. *v.* accentuate, அழுத்தமாகக் கூறு, வற்புறுத்து, *n.* accentuation.

**Accept,** *v.* ஒப்புக்கொளா; ஏற்றுக் கொள்; நம்பு. *a.* acceptable, ஏற்கத்தக்க. *n.* acceptance, acceptation.

**Access,** *n.* நுழைவுரிமை; காணும் வாய்ப்பு; கலக்கும் ஆற்றல்; வாயில்; சென்றடையும் வழி., *a.* accessible.

**Accessary,** accessory, *n. a.* உடந்தை யான(வர்), ஒத்துதவு கிற(வர்); *n.* accessories, துணைக் கருவிகள். *a.* உதவியான, துணைக் கருவியான.

**Accession,** *n.* (>accede) இணக்கம்; பணியேற்பு; இணைவு; இணைந்து மிகுதல்; அரசிருக்கை யமர்வு.

**Accidence,** *n.* 1. வேற்றுமையியல்; 2. துணைப்பண்பு. தற்காலிகப் பண்பு.

**Accident,** *n.* தற்செயல் நிகழ்ச்சி; எதிர்பாரா இடர்; தற்செயற்பண்பு; சினைப்பண்பு. *a.* accidental.

**Acclaim,** *v.* கைகொட்டு அல்லது ஆர்ப்பரி; மகிழ்ச்சி தெரிவி; உரிமையுடன் ஏற்றுக்கொள். *n.* acclamation.

**Accommodate,** *v.* பொருந்து; பொருந்தச்செய்; (சச்சரவைத்) தீர்த்துவை; தேவையானவற்றைக் கொடுத்து உதவிசெய்; இடங் கொடு. *n.* accommodation. 1. இணக்கம்; 2. இடம்; இடவாய்ப்பு; 3. உதவி. இட உதவி; கடனுதவி.

**Accompany,** *v.* கூடச்செல்; (இசைக் கருவி உடனியங்கு. துணைக் கருவி யியக்கு. *n.* accompaniment, உடன் நிகழ்ச்சி; உட னிணைவு; துணைக்கருவி; பக்க மேளம். accompanist, *n.* பக்க வாத்தியக்காரர்.

**Accomplice,** *n.* (தீய காரியத்தில்) துணைசெய்பவர்; கூட்டாளி.

**Accomplish,** *v.* செய்துமுடி; நிறை வேற்று. *pp. a.* accomplished,

கலைத்திறம் நிறைந்த; பல்திறம் வாய்ந்த. *n.* accomplishment, தேர்ச்சி.

**Accord,** *v.* கொடு, ஒத்துநட; *n.* accordance, இணக்கம்; ஒத்த கருத்து; இணக்கம் அளித்தல். *phr. prep.* in accordance with according to, இணங்க. *phr, adv.* Accordingly, அதன்படி; எனவே.

**Accordian,** *n.* இசைக் கருவி வகை.

**Accoast,** *v.* (ஒருவரை) அழைத்துப் பேசு; பேச்சைத் தொடங்கு.

**Account,** *v.* கணக்கிடு; காரணங் கூறு; கணக்குக்கொடு; கணி; மதி. *n.* வரலாறு; (கணக்கு, பணி) விவரம். *a.* accountable, பொறுப் புள்ள; காரணமாகத் தக்க. *n.* accountant, கணக்கப் பிள்ளை; கணக்கர். *n. abs. n.* accountancy, கணக்குத் துறை.

**Accoutre,** *v.* போர்க்கோலப்படுத்து.

**Accredit,** *v.* செல்வாக்கு அல்லது நம்பிக்கை காட்டு. *a.* accredited, நம்பிக்கை பெற்ற; உரிமையுடைய.

**Accrete,** *a.* சேர்ந்து ஒன்றாய் வளர்ந்த. *v.* சென்றுசேர்.

**Accrue,** *v.* வளர்; சேர்க்கப்பெறு. *n.* accrual.

**Accumulate,** *v.* படிப்படியாகச் சேகரி; குவி. *n.* accumulation. *n. ag. impers.* Accumulator, சேகரிக்கும் பொறி அல்லது கலம்.

**Accurate,** *a.* சரியான; சரி நுட்ப மான; திருத்தமான. *adv.* Accurately. *n.* accuracy.

**Accursed,** accurst, *a.* பழிக்கப் பெற்ற; வெறுக்கத்தகுந்த,

**Accuse,** *v.* குற்றம் சாட்டு. பழித்துரை. *n.* accused. குற்றஞ் சாட்டப்பட்டவர். *n.* accusation.

**Accustom,** *v.* பழக்கப்படுத்து. *a.* accustomed.

**Ace,** *n.* பகடை, விளையாட்டுச் சீட்டு முதலியவற்றில் ஒன்று என்னும் இலக்கம்; திறமையுள்ள வானூர்தி வலவர்; மிகச் சிறு அளவு.

**Acedia,** *n.* கவனமின்மை; உணர்ச்சி யின்மை.

**Acerbity,** *n.* கடுகடுப்பு.

**Acetic,** *a.* புளிங்காடி சார்ந்த.

**Ache,** (ஏக்) *v.* வலியால் துன்பப்படு. *n.* நோவு. *comb.* headache, stomach ache, etc.

**Achieve,** *v.* நிறைவேற்று; செயல் முற்றுவி; பெறு. *n.* achievement, நிறைவேற்றுதல்; வெற்றி; முடித்த செயல்; செயல்.

**Acid,** *n.* புளிப்புப் பொருள்; காடி; அமிலம்; வீரியமுள்ள திராவகம் *a.* புளிப்பான; கடுமையான. *v.* acidify, *n.* acidity. *n.* acidimeter.

**Acknowledge,** *v.* ஒப்புக்கொள். *n.* acknowledg(e)ment. ஒப்புக் கொள்ளல்; பற்றுச்சீட்டு; நன்றி தெரிவிப்பு.

**Acme,** (அக்-மி) *n.* மிக உயரிய நிலை; முகடு.

**Acne,** *n.* முகப்பரு.

**Acron,** *n.* மரவகையின் (oak) கொட்டை.

**Acoustic,** *a.* ஒலிசார்ந்த. *n.* acoustics, ஒலி நூல்.

**Acquaint** தெரியப்படுத்து; அறிமுக மாக்கு. *n.* acquaintance, பழக்கம்; அறிமுகமாதல்; அறிமுகமானவர்.

**Acquiesce,** *v.* உடன்படு. *n.* acquiescence; உடன்படுதல்; வாளா ஏற்றல். *a.* acquiescent.

**Acquire,** *v.* முயற்சி செய்து பெறு; ஈட்டு. *n.* acquirement. acquisition, ஈட்டிய பொருள். *a.* acquisitive, ஈட்டுமார்வமுள்ள; கைப்பற்றும் தன்மையுள்ள.

**Acquit,** *v.* குற்றவாளியல்ல என்று தீர்ப்புச் செய்; கடமைப்படி நடந்து கொள்; கடனைச் செலுத்து. *n.* acquittal, விடுதலை. *n.* acquit tance, கடன் பொறுப்புத் தீர்ப்பு.

**Acre,** *n.* 4,840 சதுர கஜம் உள்ள பரப்பளவு. *n. abs.* acreage, பரப்பளவு, 'ஏக்கர்' அளவு

**Acrid,** *a.* உறைப்பான; விறுவிறுப் பான; கோபக்குணமுள்ள, *n.* acridity.

**Acrimony,** *n.* எரிச்சல்; காரம்.

**Acrobat,** *n.* கழைக்கூத்தாடி.

**Across,** *adv., prep.* குறுக்காக.

**Act,** *v.* நடி; செய். *n.* செய்கை; (நாடகத்தின்) ஒரு காட்சி; சட்டம். *n.* action, செயல்; வழக்கு; நடிப்பு; (நாடகம், கதை) நிகழ்ச்சி ஒழுக்க (போர், தண்டனை) நடவடிக்கை. *n. ag. see* actor.

**Active,** *a.* சுறுசுறுப்பான; முயற்சி யுள்ள active voice; செய்வினை; (x passive voice.) *n.* activity. Activist, *n.*

**Actor,** *n.* நடிகன்; (fem.) actress, நடிகை.

**Actual,** *a.* உண்மையான; நடிப்பி லுள்ள. *n.* actuality, உண்மை நிலை. *adv.* Actually. Actuary. *n.* Actuate, *v.*

**Acumen,** *n.* அறிவுக் கூர்மை; புரிந்துகொள்ளும் திறமை.

**Acute,** *a.* கூர்மையான; அறிவுக் கூர்மையுள்ள. *n.* acuteness.

**Adage,** *n.* பழஞ்சொல், நன் னெறியுரை.

**Adam,** *n.* (விவிலிய நூலில் கூறப் பட்ட) முதல் மனிதன் (ஆதாம்)

**Adamant,** *n.* வைரக்கல். *a.* adamantine, வைரம் போன்ற, திண்ணிய.

**Adapt,** *v.* சரிப்படுத்திக்கொள்; புதிய சூழ்நிலைக்கேற்பப் பயன் படுத்திக் கொள்; மாற்றியமைத்துக் கொள். *n.* adaptation *a.* adaptable, adaptability.

**Add,** *v.* சேர்; கூட்டு; மேலும் பேசு. *n. see* addition; addend, கூட்டும் எண்.

**Addendum,** *n.* (*pl.* addenda) பிற் சேர்க்கை.

**Adder,** *n.* நச்சுப் பாம்பு.

**Addict,** *v.* (generally pass) பழக்கத்தில் தோய்; வழக்கமாக்கு. (be addicted to பழகி அடிமைப் பட்டு விடு.)

**Addition,** *n.* கூட்டல்; மிகுதல்; மிகுதிப்படுத்தல்; மிகுதிப்பாடு; கூட்டப்பட்ட பகுதி. *a.* additional.

**Addle,** *n.* நீர்க்கசடு.

**Address,** *v.* முகவரியெழுத்து; பேசு; காரியத்தில் ஈடுபடுத்து; குறி பார். *n.* முகவரி; பேச்சு; திறமை; நடத்தை; *(pl.)* காதல்; (pay one's addresses to) *n.* addressee, முகவரியாளர்.

**Adduce,** *v.* எடுத்துச்சொல் சான் றைக்காட்டு.

**Adenoids,** *v. (pl.)* அடி மூக்குச் சதை வளர்ச்சி.

**Adept,** *v.* திறமையுள்ள; கை தேர்ந்த *n.* திறமையுள்ளவர்.

**Adequate**, *a.* (தேவைக்குப்) போது மான; ஏற்ற அளவான. *n.* adequateness; adequacy.

**Adhere,** *v.* 1. ஒட்டிக்கொள்; பற்றிக் கொள். 2. (கொள்கை முதலிய வற்றைக்) கைக்கொள். (2) *n.* adherence. *n. v.* adherent (கட்சிச்) சார்பாளர். (1) *n. see* adhesion.

**Adhesion** *n.* ஒட்டிக்கொள்ளல்; ஒட்டுப்பண்பு; (இயல் நூல்) பிறப் பொருள் பற்றும் ஆற்றல் (x cohesion) *a.* adhesive.

***ad hoc***, *a.* ஒன்றற்கென அமைக்கப் பெற்ற; தனிப்பட்ட.

**Adieu,** int. *n.* "போய் வருகிறேன்; நலமாயிரு!" (பிரிந்துபோக விடைபெறு முறை)

***add infinitum,*** *phr. adv.* முடிவில்லாமல், என்றென்றும்.

**Adjacent,** *a.* அருகிலுள்ள; அடுத்துள்ள. *n.* adjacency.

**Adjective,** *n.* (இலக்) பெயர் அடை, பெயருரி.

**Adjoin,** *n.* சேர்ந்திரு; பக்கத்திலிரு.

**Adjourn,** *v.* தள்ளிப்போடு; நிறுத்தி வை; ஒத்திவை. *n.* adjournment, ஒத்திவைப்பு; ஒத்திவைத்த கூட்டம்.

**Adjudge,** *v.* தீர்ப்புக்கூறு; உறுதிப் படுத்து. *n.* adjudgement.

**Adjudicate,** *n.* வழக்கில் தீர்ப்புச் சொல், நடுத்தீர்ப்புக் கூறு. *n.* adjudication. *n. ag.* Adjudicator.

**Adjunct,** *n.* தழுவு சொல்; தழுவு தொடர்; பின் சேர்ப்பு; புற ஒட்டு.

**Adjure,** *v.* ஆணையிட்டுச் சொல்லும் படி கேள்; கெஞ்சிக் கேள். *n.* adjuration.

**Adjust,** *v.* சரிப்படுத்து; பொருந்த வை; ஒழுங்கு செய். *n.* adjustment.

**Adjustor,** *n.* சீராக்கி.

**Adjutant,** *n.* உதவியாள்; படைத் துறைப் பணியாளர்.

**Administer,** *v.* செயலாட்சி செய்; (தொழில்) நடத்து; வழங்கு; (மருந்து) கொடு; தேவையான உதவி செய். *n.* administration, ஆட்சி முறை; ஆட்சித்துறை. *a.* administrative. *n. ag.* Administrator.

**Admirable,** *a.* வியக்கும்படியான, மெச்சத்தகுந்த. *adv.* Admirably. *n.* admirability.

**Admiral**, கடற் படைத் தலைவர். *n.* admiralty கடற்படைத் தலைமை (நிலையம்).

*Admire*, பாராட்டு, மெச்சு. *n. ag.* admirer *n.* admiration, வியந்து பாராட்டுதல். தனி ஈடுபாடு; மெச்சுதல். *a. see.* admirable.

**Admission,** *n.* see admit.

**Admit,** *v.* (உண்மையென்று) ஒப்புக் கொள்; நுழையவிடு. *n.* admission. *a.* admissible. *n.* admittance நுழைவு; நுழைவுரிமை.

**Admittedly,** *adv.* யாவரும் ஒப்ப; மறுப்புக்கிடமின்றி.

**Admitture,** *n.* கலவை. *v.* கலந்து கொடு.

**Admonish,** *v.* எச்சரிக்கை செய்; அறிவுரை கூறு; நினைவுறுத்து. *n.* admonition. *a.* admonitory.

*ad nauseam, adv.* வெறுக்கு மளவிற்கு.

**Ado,** *n.* கடுமுயற்சி, அரும்பாடு, பெருந்தொந்தரவு.

**Adolescence** *n.* நிறை இளமை, முழு வளர்ச்சிப் பருவம். (12 வயது முதல் 20 வயது வரைக்குமுள்ள) கட்டிளமை. *a. n.* adolescent.

**Adopt,** *v.* பிள்ளை கூட்டிக் கொள்; அயலாருடையதைத் தனதாகச் செய்து கொள். *n.* adoption. *a.* adopted.

**Adore,** *v.* வணங்கு, போற்றிப் பேணு. *n. ag.* Adorer *n.* adoration. *a.* adorable போற்றுதலுக்குரிய

**Adorn,** *v.* அழகுபடுத்து. அணி செய் *n.* adornment.

**Adrift,** *adv.* மிதந்து; துணையற்று; பிணைப்பின்றி.

**Adroit**, *a.* திறமையுள்ள. *n.* adroit ness.

**Adulate,** *v.* பொய்யாகப் புகழ்ச்சி செய். *n.* adulation.

**Adult,** *a.* முழு வளர்ச்சி யடைந்த; வயது வந்த. *n.* வயதுவந்தவர்; முழு வளர்ச்சி யடைந்தது.

**Adulterate**, *v.* கீழ்த்தரப் பொருளைக் கல. *n.* adulteration, கலப்படம். (செய்தல்.)

**Adultery,** *n.* ஒழுக்கக்கேடு, கூடா ஒழுக்கம், பிறர் மனை நயத்தல்.

**Advance,** *v.* முன்னோக்கிச் செல்; முன்னேற்றம் அடை; மிகுதிப்படு; உயர்வுறு; (புதிய திட்டம்) கொண்டு வா; (உரிமை) முன் கொணர்; ஊக்கு; விரைவுபடுத்து; முன் பணங் கொடு, கடன் கொடு. *n.* முற்போக்கு; முன்னேற்றம்; விலை உயர்வு. *(pl.)* பழகத் துணிதல், பேசத் துணிதல்; காதல் புரியத் துணிதல். *n.* advancement, முன்னேற்றம், மேம்பாடு.

**Advantage,** *n.* நலன் , நல்விளைவு, நற்பயன்; நற்பண்பு; நற்கூறு. *v.* உதவி செய்; முன்னேறச் செய். *a.* advantageous.

**Advent,** *n.* வருகை.

**Adventitious,** *a.* தற்செயல் நிகழ்ச்சியான; (செல்வ உரிமை) எதிர்பாராத விடத்திலிருந்து வரு கிற; (வேர்) கிளை; நடு கொம்பி லிருந்து வளர்கிற.

**Adventure,** *n.* துணிகர வீரம்; துணிகரச் செயல்; துணிச்சல் வாழ்வு; எதிர்பாரா நிகழ்ச்சி; நாடோடி வீர வாழ்வு. *v.* துணிந்துசெய். *a.* adventurous. *n. ag.* Adventurer. *a.* adventuresome.

**Adverb,** *n.* வினை அடை, வினை உரி.

**Adversary,** *n.* எதிராளி; பகைவர்; எதிர்க்கட்சிக்காரர்.

**Adverse,** *a.* எதிரான; பகைமை யான; தீங்கான, இன்னாத.

**Adversity,** *n.* துன்பம், இன்னல்.

**Advert,** *v.* கவனத்தைத் திருப்பு.

**Advertise,** *v.* விளம்பரஞ் செய். *n.* advertisement. விளம்பரம் (செய்தல்)

**Advice,** *n.* அறிவுரை; கருத்து; (வாணிக எழுத்துப் போக்கு வரத்து) கருத்துத் தெரிவிப்பு. *v. see* advise.

**Advise,** *v.* கருத்துரை அளி, அறிவுரை கூறு. *n.* advisable. *n. ag.* adviser. *adv.* advisedly, தெரிந்து, வேண்டுமென்றே தக்க உதவியுரைமீதே.

**Advocate,** *n.* (மற்றொருவன்) சார்பில் பேசுபவர், வழக்கறிஞர். *v.* ஆதரித்துப் பேசு; பரிந்து பேசு. *n. abs.* advocacy.

**Adze,** *n.* மரம் செதுக்கும் கருவி, வாய்ச்சி.

**Aegis,** *n.* ஆதரவு, பொறுப்பு, சார்பு.

**Aeon,** *n.* ஊழிக்காலம்.

**Aerate,** *v.* காற்றூட்டு. *n.* aerated water, கரியுயிரகி ஊட்டப்பெற்ற குடிநீர்.

**Aerial,** *a.* காற்றுக்குரிய; காற்றைப் போல் நுட்பமான; கற்பனையான *n.* வானொலியின் அலை வாங்கி.

**Aerodrome,** *n.* வானூர்தி நிலையம்.

**Aeronaut,** *n.* வானூர்தியாளர்.

**Aeronautics,** *n.* வானூர்திக் கலை.

**Aeroplance,** *n.* வானூர்தி.

**Aesthetics,** *n.* கலைச்சுவை; அழகுக்கலை. *a.* aesthetic.

**Afar,** *adv.* தொலைவில், தொலை வாக.

**Affable**, *a.* அன்பான. *adv.* affably.

**Affair,** *n.* செய்தி; நிகழ்ச்சி.

**Affect,** *v.* 1. பாவனை செய்; 2. தாக்கு; 3. விரும்பு. (1) *n.* affectation. போலி நடை. *a.* affected, (நடை) செயற்கையான. (2) *n.* affection, நோய். (3) *n.* affection, அன்பு. *a.* affectionate.

**Afferent,** *a.* (உடல் நூல்; நாடி நரம்புகள்) உள் நோக்கிச் செல்லுகிற; (x efferent)

**Affiance,** *v.* மணம் செய்வதாக உறுதி கூறு.

**Affidavit,** *n.* ஆணைப்பத்திரம்; வாக்குமூலம்.

**Affiliate,** *v.* கிளை நிலையமாகச் சேர்த்துக்கொள்; இணை; (சட்டம்) தந்தை பிள்ளை உறவு அறுதி செய். *n.* affiliation.

**Affinity,** *n.* இன உறவு; தொடர்புறவு; (உயிரினம், செடியினம், மொழி முதலியவற்றிலுள்ள) அமைப்பு ஒற்றுமை; இணக்கம்; (இயைபு நூல்; தனிப் பொருள்களை ஒன்றோடொன்று பிணிக்கும்) கவர்ச்சியாற்றல் (தளை.)

**Affirm,** *v.* உறுதியாகக் கூறு; உறுதிப்படுத்து. *n.* affirmation.

**Affirmative,** *a.* (இலக்.) உடன்பாடான. *n.* உடன்பாடு.

**Affix,** *v.* ஒட்டு; இணை; முற்பகுதியுடன் சேர். *n.* முன்னிணைப்பு ஒட்டு.

**Afflict.** *v.* துன்புறுத்து. *n.* afflication.

**Affluence,** *n.* செழிப்பு; வரம்பில்லாத செல்வம் *a. see* affluent.

**Affluent,** *n.* 1. *n.* கிளையாறு. 2. *a.* (>affluence) செழிப்பான; நல்வாழ்வுடைய.

**Afford,** *v.* இயலு; (செய்யும், கொடுக்கும், அல்லது செலவு செய்யும்) ஆற்றலுடைய வராயிரு. வாய்ப்பு உண்டு பண்ணிக்கொடு.

**Afforestation,** *n.* காடு வளர்ப்பு.

**affray,** *n.* கலகம்; அமைதிக் குலைவு.

**Affright,** *v.* அச்சுறுத்து; கிலியூட்டு. *n.* திகில்; கிலி.

**Affront,** *v.* இகழ்ச்சி செய். *n.* அவமதிப்பான நடத்தை அல்லது பேச்சு.

**Aflame,** *adv.* அழலாய்; உணர்ச்சித் தணலாக.

**Afloat,** *adv.* மிதந்துகொண்டு. *a.* மிதந்துகொண்டிருக்கிற; கடலில் செல்கிற; காற்றில் மிதக்கிற; அலைகிற; நடக்கிற; பொது மக்களிடையே வழங்குகிற; கடன் நீங்கிய; செலவுக்குத் தக்க வருமானமுள்ள.

**Afoot,** *adv.* (கால்களின் மீது) இயங்கிக்கொண்டு; ஏற்பாடாகிக் கொண்டு.

**Aforesaid,** *a.* முன் சொல்லப்பட்ட.

*afortiori. adv.* மேலும் வன்மையான காரணத்தோடு.

**Afraid,** *pred. a.* 1. அச்சங்கொண்ட; 2. வருந்துகிற அவநம்பிக்கைப் படுகிற (be afraid that... x hope that...)

**Afresh,** *adv.* மறுபடியும்; புதிதாக.

**Afrikander,** *n.* ஆப்பிரிக்க வெள்ளையர் மரபில் பிறந்த பழங்குடிக் கலப்பினத்தவர்.

**Aft,** *adv.* (கப்பல்) பின் புறமாக; பின்புறம் நோக்கி.

**After,** 1. *conj. adv.* பின் (வந்தபின், போனபின் என்ற எச்ச வாசகங்களில் மட்டும்). 2. *prep.* பின்; 3. *adv.* பின் புறத்தில்; பின்புறமாக; அடுத்தபடியாக.

**Aftermath,** *n.* அறுவடையான பிறகு வயலில் வளரும் புல்; பின் விளைவு.

**Afternoon,** *n.* பிற்பகல்.

**Afterthought,** *n.* பின் எண்ணம்.

**Afterwards,** *adv.* பிறகு.

**Again,** *adv.* மறுபடியும்; மறுமுறையாக.

**Against,** *prep.* 1. எதிராக; 2. பொருட்டு; முன் கூட்டி; எதிர்பார்த்து.

**Agape,** *adv. a.* (வியப்பினால்) வாய் திறந்தவாறு.

**Agate,** *n.* சிவப்புக் கல்வகை.

**Age,** *n.* அகவை; வயது; வாழ்நாள்; முதுமை; கிழத்தனம்; ஊழிப் பிரிவு; ஊழி. *v.* வயதாகு; முதுமைப்படு. *a.* aged. *a. neg.* ageless.

**Ageing,** *n.* முதுமைப்படுதல்; முதிர்ச்சி.

**Agency,** *n. (pers. impers.)* செயலாண்மை நிலையம்; செயற் கருவி; செயலிடையீடு. *n. pers. see.* agent.

**Agenda,** *n.* நிகழ்ச்சித் திட்டம்; நிகழ்ச்சி நிரல்; நினைவுக் குறிப்பேடு.

**Agent,** *n.* செயலாளர்; செயல் தலைவர்; நிமித்த காரணம்; (தொழில் வாணிகத்துறை) பேராள்; பகர ஆள். *a.* agential. *n. abs. com. see.* agency.

**Agglomerate,** *a.* பல்பொருள் கூட்டான, *n.* (மண்ணூல்) கலவைப் பார். *n. abs.* agglomeration.

**Agglutinate,** *v.* ஒட்டு; ஒட்டிக் கொள். *a.* ஒன்றாக ஒட்டிக்கொண்ட *n.* agglutination. *a.* agglutinative, (மொழி நூல்) அடுக்கிய லான; சொற்கள் திரிபின்றிச் சொல்லுருபடுக்கி வரும் மொழிப்பண்புடைய.

**Aggrandize,** *v.* 1. தன் ஆற்றல் பெருக்கிக்கொள்; தன் நலம்வளர். 2. உயர்வு நவிற்சியாகக் கூறு. *n.* aggrandizement.

**Aggravate,** *v.* (கேடு; உணர்ச்சி; இழப்பு ஆகியன.) பெருக்கு. 2. சினமூட்டு. *n.* aggravation.

**Aggregate,** *a.* மொத்தமான; *n.* கூட்டுத் தொகுதி. *v.* தொகையாகு; தொகுதியாக்கு. *n.* aggregation.

**Aggression,** *n.* மீச்செலவு; வலியில் தாக்குதல். *a.* aggressive. *n. ag.* aggressor. *adv.* aggressively.

**Aggrieve,** *v.* வருத்து; துன்புறுத்து, *a.* aggrieved. தீங்குக்காளான.

**Aghast,** *adv.* (அச்சம் அல்லது வியப்பினால்) மலைப்புற்று.

**Agile,** *a.* சுறுசுறுப்புள்ள; விரை வுள்ள. *n.* agility.

**Agitate,** *v.* கலக்கு; கிளர்ச்சி செய், *n.* agitation, *n. ag.* agitator.

**Aglow,** *adv.* ஒண்மைவாய்ந்த; பளபளப்பான.

**Agnostic** *a. n.* கடவுள் பற்றிய கருத்தற்ற(வர்); ஐயுறவுக் கோட் பாடுடைய(வர்). *n. abs.* agnosticism.

**Ago,** *adv.* முற்பட்டு, (years ago, ஆண்டுகள் முற்பட்டு, long ago. பண்டு)

**Agog,** *adv.* ஆர்வத்துடன்.

**Agony,** *n.* படுநோவு; வெந்துயர்; துயரம். *v.* agonize.

**Agrarian,** *a.* நிலஞ்சார்ந்த; வேளாண்மைச் சார்பான.

**Agree,** *v.* ஒப்புக்கொள்; (உடம்புக்கு, மனத்துக்கு) ஒத்துக்கொள்; (இலக்.

திணை பால் எண் இடம்) ஒத்திரு. *a.* agreeable; மனதுக்கொத்த; இன்பமான. *n.* agreement. 1. உடன்பாடு. 2. கருத்து ஒற்றுமை. 3. இணக்கம்; நேசம். 4. திணை; பால்; எண்; இட ஒப்பு.

**Agriculture**, *n.* வேளாண்மை; பயிர்த்தொழில் *a.* agricultural. *n. pers.* agriculturist.

**Agronomist,** *n.* கிராமப் பொருளியல் நூலார்.

**Agronomy,** *n.* கிராமப் பொருளியல்.

**Ague,** (அக்யூ) *n.* குளிர்காய்ச்சல்; நடுக்கம். *a.* aguish .

**Ahead,** *adv.* முன்னால்; முன் னோக்கி.

**Aid,** *v.* உதவிசெய், *n.* உதவி; உதவி செய்வோர்; உதவிப்பொருள், *phr.* first aid (ஊறுற்றவர்க்கான) முதலுதவி.

**Aide-de-camp,** *n.* (ஏ-டி-காங்) *pl.* aides-de-camp (மன்னர், படைத் தலைவர்களின்) தோழமையாளர்.

**Ail,** *v.* நோயுறு. *n.* ailment.

**Aim,** *v.* குறிபார்; இலக்காகக் கொள். *n.* குறி; நோக்கம். *a. neg.* aimless.

**Air,** *n.* காற்று மண்டலம்; விசும்பு; காற்றோட்டம்; தோற்றம்; நடத்தை; பண்; இசை. *v.* காற்றில் திறந்துவை; உலர்த்து; உலவப்போ; பலருக்குத் தெரியும்படி வெளிக்காட்டு.

**Air-conditioned**, *a.* காற்றுக் கட்டுப்பாடுடைய.

**Aircraft,** *n.* வானூர்தி; வான் கலம் aircraft carrier; (கப்பல்) வான் கலந் தூக்கி.

**Airiness,** *n. see* airy.

**Airline,** *n.* வான்குலவழி; வானெறி.

**Airmail,** *n.* வானஞ்சல்.

**Air - pump,** *n.* (கருவி) காற்று வாங்கி; வளியுறிஞ்சி.

**Airport**, *n.* வானெறித் துறை; வான்கலத் துறை.

**Air - raid,** *n.* வானின்று தாக்குதல்; வானூர்தித் தாக்கு.

**Airship,** *n.* பறவைக் கப்பல்.

**Air-sick,** *a.* விமானப் பயணக் குமட்டல்.

**Air-tight,** *a.* காற்றுச் செல்லாத; காற்றுப்புகாத; காற்றுத் தடையான.

**Airy,** *a.* காற்றோட்டமுள்ள; காற் றைப்போல் நொய்மையான; பொருண்மையற்ற; ஆவியான; புனைவான. *n. see.* airiness.

**Aisle,** *n.* (கோயில்) புடைச் சிறை; பக்கச்சிறை.

Ajar, *adv.* (கதவு) திறந்துள்ள.

**Akin,** *a.* (>kin) குருதிக் கலப்புள்ள; உறவுள்ள; ஒரே இனத்தைச் சேர்ந்த.

**Alabaster,** *n.* வெண் பளிங்குக் கல்; சலவைக்கல்.

*ala carte, adv.* உணவுப் பட்டியலின் படி.

**Alack,** *a. int.* ஐயோ!

**Alacrity,** *n.* சுறுசுறுப்பு; மகிழ்ச்சி யார்வம்.

**Alarm,** *n.* அச்சம்; இடர் எச்சரிக்கை; போர் அழைப்பு; இடர் எச்சரிக்கை மணி. *v.* கிலியூட்டு; மலைவூட்டு; *pr. p. a.* alarming!

**Alarum,** *n.* (நாழிகை வட்டிலின்) எச்சரிக்கை மணிப்பொறி.

**Alas,** *int.* ஐயோ!

**Albatross,** *n.* அண்டரண்டப் பறவை.

**Albert.** *conj.* அவ்வாறிருந்த போதிலும்; ஆயினும்.

**Albert,** *n.* கடிகாரச் சங்கிலி.

**Album,** *n.* (படங்கள், கையொப்பங்கள், அஞ்சல் தலைகள்) சேகர ஏடு; இணைப்பேடு.

**Albumen,** *n.* (முட்டையிலுள்ள) வெண்கரு; வெண்கருப் பொருள்.

**Albumin,** *n.* கருப் புரதம்

**Alchemy,** *n.* பொன்மாற்றுச்சித்து; மாறணம்; சித்து; இரசவாதம். *n. pers* alchemist.

**Alcohol,** *n.* சாராயச்சத்து; கடுந் தேறல் சத்து; வெறிமம். *a.* alcoholic.

**Alcove**, *n.* தனியிடம்; மாடம்.

**Alderman,** *n.* நகர மூப்பர்; நகரத் தந்தையர்.

**Ale,** *n.* மாத்தேறல்; புளித்த மாவிலிருந்து வடித்த குடிவகை.

**Alert,** *n.* சுறுசுறுப்பான; விழிப்பான. *n.* எச்சரிக்கை.

**Alga,** *n.* (*pl.* algae). பாசிவகை.

**Algebra,** *n.* குறிக்கணக்கியல்.

**Alias,** *adv.* அல்லது; என்று வழங்கு கிற. *n.* மறுபெயர்; புனைபெயர்.

**Alibi,** *adv.* வேறு இடத்தில் *n.* குற்றம் நிகழ்ந்த பொழுது குற்றவாளி வேறிடத்தில் இருந்ததாக வாதித்தல்; அயலிடவாதம்.

**Alien,** *n.* தொடர்பற்ற; அயலான. *n.* அயலார், அகற்றத்தக்க. *v.* alienate, அகற்று; உடைமை நீக்கு; தொடர் பகற்று. *a.* alienable (உடைமை) அகலத்தக்க; ஆள் மாற்றத்தக்க. *n.* alienation.

Alight, (1) *v.* அமர்; தங்கு; இடைத்தங்கு; இறங்கு. (2) *adv.* ஒளிர்வாக; துளக்கமாய்.

**Align, aline,** *v.* வரிசைப்படுத்து. *n.* alignment.

**Alike,** *adv., pred. a.* ஒப்பாக; ஒரே வகையாக; இது போன்ற; மற்றும்.

**Alimentary,** *a.* உணவுச்சத்துள்ள; உணவைச் செரிமானம் செய்தல் முதலிய வேலைகளைச் செய் கின்ற. alimentary canal, (உடல் நூல்) உணவுக்குழாய்.

**Alimony,** *n.* மனைவிக்குரிய வாழ்க்கைப் படி.

**Aliqout,** *a., n.* சரிவான; பகுபடாத; முழுப்பிரிவான.

**Alive,** *adv.* உயிருடன்; வாழும் நிலையில், சுறுசுறுப்பாய்; கிளர்ச்சி யாய்.

**Alkali,** *n.* 'கலிக்கம்', 'காரம்', உப்புச்சத்து. *a.* alkaline

**All,** *a.* எல்லா, *pro n.* எல்லாரும்; எல்லாமும். *adv.* முழுவதும்.

**Allay,** *v.* குறைவாக்கு; (வலி முதலியவற்றைத்) தனி.

**Allege,** *v.* 1. (விளக்கப்படாத) செய்திறு. 2. (விளக்கப்படாத) குற்றஞ்சாட்டு. *n.* allegation.

**Allegiance,** *n.* மேலுரிமை ஏற்பு; தலைவர்ப் பற்று.

**Allegory,** *n.* தொடர் உருவகம்; தொடர் உருவகக் கதை. *a.* allegoric(al) *adv.* allegorically.

**Alleluia all - eluja,** *n.* கடவுட் பாடல்; புகழ்ப்பாடல்.

**Allergy,** *n.* மிகுநுட்ப ஊறுணர்வு.

**Alleviate,** *v.* (வலி முதலியவற்றைத்) தனி; ஆற்று. *n.* alleviation.

**Alley,** *n.* சந்து; முடுக்கு; சாலை; தோட்டப்பாதை; ஒற்றையடிப் பாதை; (blind alley. மொட்டைச் சந்து, ஒரு வாயிற் சந்து.)

**Alliance,** *n.* மண உறவு; நேசம் (அரசாங்கங்களுக்குள் ஏற்படும்) நேச உடன் படிக்கை. *a.* allied. (*see* > ally)

**Alligator,** *n.* முதலை வகை.

**Alliterate,** *v.* மோனை (முதலெழுத்து ஒன்றாயிருத்தல்) அமை. *n.* alliteration, *a.* alliterative.

**Allocate,** *v.* (தனிப்பட) ஒதுக்கிவை; பங்கு வை. *n.* allocation.

**Allopathy,** *n.* 'எதிர்முறை', மருத்துவம்.

**Allot,** *v.* ஒவ்வொருவருக்கும் இவ் வளவென்று) பங்கிடு; பாத்திடு. *n.* allotment.

**Allotrop,** *n.* புறவேற்றுமை; வடிவ மாறுபாடு. *a.* allotropic.

**Allow,** *v.* (செயல் அல்லது உரிமைக்கு) இணங்கு; (கொடை, செலவு) ஒப்புக் கொள். *a.* allowable. *n. abs. com* allowance. 1. இணக்கம் 2. செலவுப்படி; வாழ்க்கைப்படி. 3. தள்ளிக் கணிப்பு. 4. சலுகை.

**Alloy,** *n.* கலவை; உலோகக் கலவை, *v.* உலோகங்களைக் கல; இழிவான ஒரு பொருளுடன் உயர்ந்ததைச் சேர்.

**Allude,** *v.* சுட்டு; குறி. *n. see* allusion

**Allure,** *v.* மனத்தைக் கவர்; மயக்கு, *n.* allurement, கவர்ச்சி.

**Allusion,** *n.* (allude) 1. மறைக் குறிப்பு. 2. சுட்டுக் குறிப்பு. *a.* allusive.

**Alluvium,** *n.* ஆற்று வண்டல்; வண்டல் மண். *a.* alluvial.

**Ally,** *v.* நேசமாக்கு; உறவாக்கு. *n.* நேச நாடு; கூட்டாளி, *n. abs. see* alliance.

*Alma Mater,* *n.* தாயகப் பள்ளி; தாயகக் கல்லூரி.

**Almanac,** *n.* ஐந்தொகுதி; நாட் கோட் குறிப்பு; ஆண்டுக் குறிப்பு.

**Almighty,** *a.* எல்லாம்வல்ல; நிறை ஆற்றலுடைய. *n.* The Almighty, (எல்லாம்வல்ல நிறை ஆற்ற லுடைய) கடவுள்.

**Almond,** *n.* வாதுமை (மரம்); வாதுமைப் பருப்பு.

**Almonry,** *n.* ஈதல் மனை.

**Almost,** *adv.* கிட்டத்தட்ட.

**Alms.** *n.* (sing) இரவலர்க் களித்தல்; ஐயம்.

**Almshouse**, *n.* இரவலர்ச் சாலை.

**Aloe,** *n.* கற்றாழை.

**Aloft,** *adv., a.* மிக உயரத்தில்.

**Alone,** *adv.* தனியாக.

**Along,** *adv. prep.* நெடுக; முன்னோக்கி; கூட; பக்கத்தில்.

**Alongside,** *adv.* பக்கத்துக்குப் பக்கமாக.

**Aloof,** *adv. a.* ஒதுக்கமாக; ஒட்டற்று; தனித்து; துண்டாக. *n.* aloofness.

**Aloud,** *adv.* உரக்க.

**Alp.** *n.* மலை முகடு.

**Alpaca,** *n.* தென் அமெரிக்காவிலுள்ள ஓர் ஆடு; (அதன்) மயிரால் ஆன ஆடை; ஒண்கம்பளிப்பட்டு.

**Alpha,** *n.* (கிரேக்க நெடுங்கணக்கில் முதலெழுத்து) அகரம்; தொடக்கம்; (alpha and omega, தொடக்கமும் ஈறும்)

**Alphabet,** *n.* நெடுங்கணக்கு. *a.* alphabetical.

**Alpinism,** *n.* மலையேற்றக் கலை.

**Already,** *adv.* ஏற்கெனவே.

**Also,** *adv.* கூட.

**Altar,** *n.* பலிமேடை; படையல் மேடை.

**Alter,** *v.* மாற்று: திருத்தம் செய். *n.* alteration.

**Altercate**, *v.* சச்சரவு செய், *n.* altercation.

***alter ego,*** *n.* (வெளி உயிர்) நெருங்கிய நண்பன்.

**Alternate,** *v.* மாறி மாறிச் செய்; மாறி மாறி நிகழ். *a.* மாறி மாறி வருகின்ற; ஒன்றுவிட்ட. *n. ag. impers.* alternator, மாறி மாறிப் பாயும் மின்சார இயந்திரம்.

**Alternative,** *a. n.* ஒன்று விட்டொன்று (ஆன) இரண்டில் மீந்த ஒன்று. மாற்றுவழி; மாற்றுத் தேர்தல் முறை; பலவழிகளில் ஒன்று.

**Although,** *conj. adv.* இருந்த போதிலும்; ஆயினும்.

**Altimeter,** *n.* உயரமானி.

**Altitude,** *n.* உயரம் (இடக்கணக்கியல்; வடிவளவைகளின்) குத்துயரம்.

**Altogether,** *adv.* முழுவதும்; மொத்தத்தில்.

**Altruism,** *n.* பொதுநலப்பண்பு. *n. pers.* altruist. *a.* altruistic.

**Alum,** *n.* படிக்காரம்.

**Aluminium,** *n.* உலோக வகை; ‘பெருவங்கம்’ ‘அலுமினியம்’.

**Alumna,** *n.* மாணவி; பழைய மாணவி.

**Alumnae,** *n. pl.* மாணவியர்; பழைய மாணவியர்.

**Alumni,** *n. pl.* பழைய மாணவர்.

**Alumnus,** *n.* மாணவன், பழைய மாணவன்.

**Always,** *adv.* எப்போதும்; என்றும்; ஓய்வொழிவின்றி.

**Am,** *v.* இருக்கிறேன். (be என்ற வினையின் நிகழ்காலத் தன்மை ஒருமை முற்று.)

**Amain,** *adv.* விரைவாக; வன்மை முழுதுற.

**Amalgam,** *n.* பாதரசமும் மற்றோர் உலோகமும் கலந்த கலவை; இரசக்கட்டு; கலவை. *v.* amalgamate *n. abs.* amalgamation.

**Amanuensis,** *n.* (*pl.* amanuenses) உரைப்ப தெழுதும் எழுத்தாளர்; எழுத்துப் பகர்ப்பாளர்.

**Amaranth,** *n.* வாடா மலர்வகை. *a.* amaranthine.

**Amass,** *v.* பேரளவில் திரட்டு.

**Amateur,** *n.* பொழுதுபோக்காக ஒரு கலையை அல்லது விளையாட்டைப் பயில்கிறவர்; தொழிற் கலைஞர்; கலைத் தொழில் வாணர். *a.* amateurish.

**Amatory,** *n.* காதல் சார்ந்த.

**Amaze,** *v.* மலைப்படையச் செய்; வியப்படையச் செய். *n.* amazement.

**Amazon,** *n.* வீரமாது. *a.* amazonian.

**Ambassador,** *n.* (*fem.* ambassadress) அரசியல் தூதர்; திசையமைச்சர்.

**Amber,** *n.* நிமிளை; அம்பர்; மரப்பிசின் வகை.

**Ambiguity,** *n.* இரு பொருள் மயக்கம். *a.* ambiguous.

**Ambit,** *n.* சுற்றெல்லை; சார்ந்துள்ள சுற்றுப்புறம்.

**Ambition.** *n.* பேரவா. *a.* ambitious.

**Ambrosia,** *n.* அருமருந்து; அமுதம்; சாவா மருந்து, இன்னரும் நல்லுண்டி, *a.* ambrosi.

**Ambulance,** *n.* தூக்கு கட்டில்; (நோயாளிகளைத் தூக்கிச் செல்லும்) கைவண்டி.

**Ambuscade,** *n.* மறைதாக்கு; தாக்குவதற்குப் பதுங்கியிருத்தல்; பதுங்கியிருக்குமிடம். *v.* தாக்குவதற்குப் பதுங்கியிரு.

**Ambush,** *n.* பதுங்கி யிருத்தல். *v.* பதுங்கியிரு; மறைத்துவை.

**Ameliorate,** *v.* குணம் அல்லது மேன்மை அடையச் செய்; சீர்திருத்து. *n.* amelioration. *a.* ameliorative.

**Amen,** *int.* (அவ்வாறே) ஆகுக. (சமய வாசக இறுதிக் குறிப்புச் சொல்)

**Amenable**, *a.* திருந்தக்கூடிய; பொறுப்புள்ள; உணரக் கூடிய; சொற்படி நடக்கக் கூடிய.

**Amend,** *v.* சீர்திருத்தஞ்செய்; தீய பழக்கங்களைக் கைவிடு. *n.* amendment, திருத்தம்; சட்டத் திருத்தம்.

**Amends,** *n.* இழப்பீடு.

**Amenity,** *n. (gen. pl.)* இன்ப வாய்ப்பு; வாழ்வு நலம்.

**Amethyst,** *n.* செவ்வந்திக் கல்.

**Amiable,** *a.* நல்லிணக்கமான; நட்புக்குரிய; நட்பான.

**Amicable,** *n.* நட்பிணக்கமான.

**Amid,** *amidst, prep.* நடுவே; இடையே.

**Amidships,** *adv.* (கப்பலின்) நடுவில்.

**Amiss,** *adv.* தவறாக.

**Amity,** *n.* நட்பு.

**Ammeter,** *n.* மின்னாற்றல் மானி.

**Ammonia,** *n.* நவச்சாரவளி. *n.* ammonium. நவச்சாரம்.

**Ammunition,** *n.* போர்த் தளவாடங்கள்; போர்க் கலத் தொகுதி.

**Amnesia**, *n.* மறதி நோய்; மறவி.

**Amnesty,** *n.* குற்ற மன்னிப்பு.

**Amoeba,** *n.* அணு, உயிரினம்.

**Among,** amongst, *prep.* (பலவற்றின்) இடையே; நடுவே.

**Amoral,** *a.* ஒழுக்கஞ் சாராத.

**Amorous,** *a.* காதலிக்கின்ற; காதல் சார்ந்த.

**Amorphous,** *a.* உருவமற்ற; (இயை பியல்) மணி உருவற்ற.

**Amount,** *v.* (குறிப்பிட்ட) தொகை யாக்கு; மொத்தமாகு! சரியாகு. *n.* மொத்தத் தொகை; கூட்டுத் தொகை; கூடிவந்த மதிப்பளவு; அளவு; பணத்தொகை; பணம்.

**Amour,** *n.* காதல் நடவடிக்கை.

**Ampere,** *n.* மின்சார ஓட்டத்தின் மூல அளவு; மின்சாரக் கூறு.

**Amphibian,** *a. n.* இருவாழ்வுயிர்; நீர் நிலவாழ்வுயிர். *v.* amphibious.

**Amphitheatre,** *n.* மிதிவட்ட அரங்கம்; நடுவரங்கு.

**Ample,** *a.* போதுமான; பெரிய; மிகுதியான; விரிவான; தாராள மான; வளமான. *v.* amplify *n. ag. impers.* amplifier, பெரிதாக்கும் கருவி. *n.* amplification. *adv.* amply of. amplitude.

**Amplitude,** *n.* அகலம்; வீச்சு.

**Amputate,** *v.* உடலுறுப்பைத் துண்டி; உறுப்புக் குறை. *n.* amputation.

**Amuck,** *adv.* பித்துப்பிடித்து,

**Amulet,** *n.* தாயத்து.

**Amuse,** *v.* மனமகிழச் செய்; வேடிக்கையால் களிக்கச் செய், *pr. p. a.* amusing. *n.* amusement.

**An, art**. ஒரு; ஏதேனுமொரு.

**Anachronism,** *n.* கால மயக்கம்; கால வழு; காலப் பொருத்தக் கேடு; கால இடமயக்கம்.

**Anoconda,** *n.* மலைப்பாம்பு.

**Anaemia**, *n.* குருதிச்சோகை; குருதிச் சோர்வு.

**Anaesthesia,** *n.* மயக்கம். *a. n.* anaesthetic, மயக்க மருந்து. *v.* anaesthetize.

**Anagram,** *n.* மாற்றெழுத்துப் போட்டி.

**Analogous,** *a.* ஒரே மாதிரியான; பொருத்தமான; இணைவான.

**Analogy,** *n.* ஒப்புமை; உவமை; பொருத்தம். *a.* analogous *n. com.* analogue, ஒப்புடையது; இணை ஒப்பானது.

**Analyse,** *v.* பாகுபாடு செய்; கூறுபடுத்து; நுணுகி ஆராய். *n.* analysis, பகுப்பாராய்ச்சி. (*pl.* analyses) *a.* analytic (al) *adv.* analytically *n. pers.* analyst.

**Anarchy,** *n.* அரசியலற்ற நிலை; அரசியல் குழப்பம்; அரசுக்கேடு. *a.* anarchic (al) *n. pers.* anarchist.

**Anastrophe,** *n.* தலைகீழ் மாற்றம் (சொல்.)

**Anathema,** *n.* பழி; பழி உரை; பழிகேடு. *v.* anathematize.

**Anatomy,** *n.* உடற் கூற்று நூல்; உடலமைப்பு. *n. pers.* anatomist *v.* anatomize. *a.* anatomical.

**Ancestor,** *n.* முன்னோர். *n. abs.* coll. Ancestry, மரபு. *a.* ancestral.

**Anchor,** நங்கூரம், ஆதாரம், நங்கூரம் பாய்ச்சு; நிலைக்கச் செய். *n. abs. com.* anchorage, நங்கூரம் பாய்ச்சுமிடம்.

**Anchorite,** *n.* துறவி.

**Ancient,** *a. n.* பண்டைய; தொன்மை யான. the ancients, பண்டைக் காலத்தவர் (பண்டை உரோம கிரேக்கர்.)

**Ancillary,** *a.* குற்றேவல் செய்கிற; துணைமையான.

**Ancle,** *n.* கணுக்கால்.

**And,** *conj.* உம். (இணைப்பிடைச் சொல்.)

**Andiron,** *n.* அடுப்புக்கட்டை விறகு அணை கோல்.

**Anecdote,** *n.* நொடிக் கதை; இடை நிகழ்ச்சி; வாழ்க்கைத் துணுக்கு; செய்தித் துணுக்கு.

**Anemone,** *n.* செடியின் வகை. sea - anemone, கடற்பஞ்சு; கடலுயிர் வகை.

**Anemometer,** *n.* காற்றுவேக மானி.

**Aneroid,** *a. n.* பாதரசமில்லாத காற்றழுத்தமானி.

**Anew,** *adv.* புதிதாக.

**Angel,** *n.* (ஏஞ்சல்) அரமகன்; அரமகள்; தேவ தூதன்; அணங்கு; அழகார் அணங்கு; தூயோர். *a.* angelic.

**Anger,** *n.* சீற்றம்; சினம். *v.* சினமூட்டு.

**angle,** *p. n.* கோணம், 2. *v.* தூண்டி விடு (1) *a.* angular, *n.* angularity, கோணமுடைமை; தனிச் சிறப் புடைமை, ஒவ்வாக் கூறுடைமை. (2) *n. pers.* angler, மீன் பிடிப்பவன்.

**Anglican,** *a. n.* இங்கிலாந்தின் அரசியல் ஏற்புடைய; சமயத்துக் குரிய(வர்).

**Anglicize,** *v.* ஆங்கில மயமாக்கு.

**Anglomania,** *n.* ஆங்கிலப் பித்து.

**Anglo - phobia,** *n.* ஆங்கிலப் பண்பச்சம்; ஆங்கில வெறுப்பு.

**Angry,** *a.* சினமுள்ள.

**Anguish,** *n.* கடுந்துயர்.

**Angular,** *a. see* angle.

**Anhydrous,** *a.* (இயைபியல்) வீரற்ற; நீர்க்கூறு நீங்கிய.

**Aniline,** *n.* நீலச்சாயம்.

**Animadvert,** *v.* குற்றங்கண்டு பிடி. *n.* animadversion.

**Animal,** *n.* உயிர்; உயிரினம்; விலங்கு. *a.* உயிரினஞ் சார்ந்த; உணர்ச்சி சார்ந்த. *n. diminut.* animalcule, சிற்றுயிர்.

**Animate,** *v.* உயிர்ப்பி; எழுச்சி யூட்டு *a.* உயிருள்ள. *pp. a.* animated, எழுச்சி தருகிற., *n.* animation.

**Animosity,** animus, *n.* மிக்க வெறுப்பு; பகைமை.

**Anise,** *n.* பெருஞ்சீரகம்; சோம்பு.

**Ankle,** *n.* கணுக்கால்.

**Anklet,** *n.* சிலம்பு.

**Annals,** *n.* வரலாறு; மரபு வரலாறு; ஆண்டுக் குறிப்பு வரலாறு *n. pers.* annalist.

**Annex,** *v.* இணை; ஒன்றுசேர்; புது நிலத்தை நாட்டுடன் சேர்; ஆட்சி யுடன் சேர். *n.* annexation. *n.* annexe, இணைத்த பகுதி.

**Annihilate,** *v.* அழி; ஒழி. *n.* annihilation.

**Anniversary,** *n. a.* ஆண்டு முடிவு விழா (சார்ந்த).

***Anno Domini,*** *phr.* (A.D.) கிறித்துநாதர் ஆண்டு.

**Annotate,** *v.* உரை எழுது; குறிப்பெழுது. *n.* annotation. *n. pers.* anotator.

**Announce,** *v.* சாற்று; அறிவி; பலரறியக் கூறு. *n.* announce ment. *n. ag.* announcer.

**Annoy** *v.* தொந்தரவு செய்; *n.* annoyance.

**Annual,** *a.* ஆண்டுதோறும் நடக்கிற; ஓராண்டுக் காலம் உள்ள. *n.* ஆட்டைப் பயிர்; ஆண்டுதோறும் வெளிவரும் பத்திரிகைப் பதிப்பு.

**Annuity;** *n.* ஆண்டுதோறும் கொடுக்கப்படும் பணம்; ஆண்டுத் தொகை; ஆண்டு வருவாய் தரும் உடைமை.

**Annul,** *v.* தள்ளுபடி செய். *n.* annulment.

**Annular,** *a.* வளைய உருவமான. Annular eclipse, வளையக் கோள் மறைவு.

**Annunciate**, *v.* எடுத்துரை; சாற்று; அறிவிப்புச் செய்.

**Anode,** n. (மின்சார) நேர்கோடி (x cathode).

**Anodyne,** *n.* வலி தணிக்கும் மருந்து.

**Anoint,** *v.* (மை, நெய்) பூசு.

**Anomaly,** *n.* முறை தவறு. முறை கேடு; முரண்; முரண்டுபாடு. *a.* anomalous.

**Anon,** *adv.* (பழவழக்கு, செய்யுள் வழக்கு) உடனே.

**Anonymous,** *a.* பெயர் தெரியாத; பெயர் வெளிப்படுத்தப் பெறாத; மறைவான. *n.* anonymity.

**Another,** *pron.* இன்னொன்று; இன் னொருவர். *a.* இன்னொரு.

**Answer,** *v.* விடைகூறு; பொருந்து; தகுதியாயிரு; பொறுப்பாளியா யிரு. *n.* விடை. *a.* answerable, பொறுப்புள்ள.

**Ant,** *n.* எறும்பு.

**Antagonize,** *v.* பகையாக்கு; எதிர்ப்பைத் தூண்டு. *n. pers.* antagonist, எதிரி. *n.*

antagonisim, எதிர்ப்பு. *a.* antagonistic எதிரிடையான.

**Antarctic,** *a., n.* (அண்டார்ட்டிக்) தென் துருவஞ் சார்ந்த (இடம்); நிலவுகின் தென்கோடி சார்ந்த (மாகடல்) antarctica, தென் துருவக் கண்டம்.

**Ante,** *n.* பந்தயப் பணம். *adv.* முன்னால்; மேலே.

**Antecedent,** a முன் நிகழ்ந்த; முந்திய. *n.* முன் நிகழ்ச்சி; முன்னுறுப்பு. *n. pl.* ஒருவனது முன் மரபு; முன் வரலாறு *n. abs.* antecedence.

**Antechamber,** *n.* ஒட்டரங்கு; ஒட்டறை வீடு; உள்வீடு.

**Antedate,** *n.* முன் தேதி குறித்தல், *v.* தேதி முன்குறி.

**Antediluvian,** *a.* ஊழிக்கால வெள்ளத்துக்கு முந்திய. *n.* பழங்கால நாகரிகஞ் சார்ந்தவர்; கருநாடகப் பேர்வழி.

**Antelope,** *n.* மான் வகை.

***Ante meridiem,*** *phr.* (சுருக்க மாக a.m.) நடுப்பகலுக்கு முன்; முற்பகலில்.

**Antenatal,** *a.* பிறப்பதற்கு முன்.

**Antenna,** *n.* (*pl.* Antennae) (பூச்சியினங்களின்) உணர்ச்சிக் கொடுக்கு; உணர்ச்சி மயிர்.

**Anterior,** *a.* காலத்தில் முற்பட்ட; எதிரில் உள்ள; முன்னால் உள்ள.

**Anthem**, *n.* வாழ்த்துப் பாடல்; நாட்டுப் பாடல்.

**Anther,** *n.* பூந்தாதுப் பை.

**Antheroid,** *a.* பூந்தாதுப் பை போன்ற.

**Anthology,** *n.* தொகுப்பு நூல்; நூல் திரட்டு; தொகை நூல்.

**Anthropoid,** *a. n.* மனித உருவ முடைய (குரங்கு).

**Anthropology,** *n.* மானிட நூல்; மனித இனவரலாற்று நூல்.

**Anti,** *prefix,* எதிராக; போட்டியாக.

**Anti-aircraft,** *a.* வானூர்தி எதிர்ப்புக்குரிய

**Antibiotic,** *n.* உயிர் எதிரி.

**Antic,** *n.* ஆட்டபாட்டம்; தகிடு தத்தம்; கொம்மாளம்; கோட்டித் தனம்.

**Anticipate,** *v.* எதிர்பார்; முன்னறி; முன்னறிந்து செய். *n.* anticipation, எதிர்பார்த்தல்.

**Anticlimax,** *n.* வீழ்ச்சி நிலை; படுதாழ்வுநிலை; முகடெதிர்; கீழ் முகடு; நேரெதிர் முரண்பாடு.

**Anti-clockwise,** *a., adv.* இடஞ் சுழியான; இடஞ் சுழியாக.

**Anti-cyclone,** எதிர்ச் சூறாவளி.

**Antidote,** *n.* நச்சு முறிவு; மாற்று மருந்து; மாற்றுப் பண்பு.

**Antifriction,** *a.* உராய்வு தடுக்கிற.

**Antilogarithm,** *n.* எதிர் அடுக்கு மூலம்.

**Antimony,** *n.* நீலங்கலந்த வெண்மை நிற உலோகம்.

**Antipathy,** *n.* வெறுப்பு. *a.* antipathic, antipathetic.

**Antipodes,** *n. (pl.)* நேர் எதிரானவை; நில உலகின் எதிர் முனைகள்.

**Antipole,** *n.* எதிர்த்துருவம்.

**Antiquarian,** *a.* தொல்பொரு ளாராய்ச்சி சார்ந்த, *n.* தொல் பொருளாராய்ச்சியாளர். *n. ag.* antiquary.

**Antiquary,** *n.* தொல் பொரு ளாராய்ச்சியாளன்.

**Antique,** a பழமையான; பண்டை நாளைய; பழைய மாதிரியான; பழங்கால வேலைப்பாடுள்ள. *n.* பழங்கலைப் பொருள்; அரும் பொருள். *n.* antiquity, *pp. a.* antiquated, பழமைப்பட்ட; காலங் கடந்த; பழைய மாதிரி யான.

**Antiseptic,** *n., a.* நச்சுத் தடை (ஆன); நச்சுக் காப்பு (ஆன).

**Antisocial,** a.வாழ்க்கைக் கொவ் வாத.

**Antithesis,** *n.* (pl. anti-thesis) முரணணி; முரண்; எதிர்முரண். *a.* anthithetic, antithetical.

**Antitoxin,** *n.* நஞ்செதிர் நஞ்சு.

**Antitrades,** *n.* எதிர்நிலக் காற்றுகள்.

**Antler,** *n.* மானின் கொம்பு.

**Antonym,** *n.* எதிர்ச்சொல்.

**Anus,** *n.* குதம்; எருவாய்.

**Anvil,** *n.* பட்டைக்கல்; பட்டடை.

**Anxious,** *a.* கவலையுள்ள; கவலை கொள்கிற; அக்கறையுடைய; பற்றார்வமுடைய. *n.* anxiety, anxiousness.

**Any,** *a., pron. adv.* (வினா; உடன் பாடு) யாரேனும்; ஏதாவது (எதிர் மறை) ஒருவரும்; ஒன்று. (x *a.* no.)

**Anybody,** *pron.* யாரேனும்; ஒருவர்; (வினா) எவராவது; (எதிர் மறை) ஒருவரும் (nobody).

**Anyhow,** *adv. conj.* ஏதேனு மொரு வழியில்; எப்படியாவது (எதிர் மறை) ஒருவகையிலும்.

**Anything,** *pron.* ஏதேனும் ஒன்று; (எதிர்மறை) ஒன்றும்; (x nothing, none)

**Anyway,** *adv.* எவ் வகையி லேனும்; (எதிர்மறை) ஒருவகை யிலும்; எவ்வகையிலும்

**Anywhere,** *adv.* எங்கேனும்; (எதிர்மறை) ஓரிடத்துக்கும்; எங்கேயும். (x nowhere.)

**Anywise,** *adv.* எவ்வகையி லேனும்.

**Aorta,** *n.* குருதிப் பெருநாடி.

**Apace,** *adv.* விரைவாக; வன்மை முழுதுற.

**Apart,** *adv.* விலகி; தனியாக.

**Apartheid,** *n.* இனவெறிக் கொள்கை.

**Apartment,** *n.* அறை.

**Apathy,** *n.* உணர்ச்சியற்ற தன்மை; அக்கறையின்மை; அசட்டுத் தன்மை. *a.* apathetic.

**Ape,** *n.* வாலில்லாக் குரங்கு. *v.* கண்மூடிப் பிறரைப் போல். *a.* apish.

*a per se, n.* ஒப்புயர்வற்ற தொன்று.

**Aperture,** *n.* தொளை; வாயில்.

**Apex,** *n.* உச்சி; முகடு.

**Aphorism,** *n.* நூற்பா; சூத்திரம்; திட்ப நுட்பமுடைய வாசகம்.

**Apiary,** *n.* தேனீக்களை வளர்க்குமிடம்.

**Apiculture,** *n.* தேனீ வளர்த்தல்.

**Apiece,** *adv.* தனித்தனியே; தனிப்பகுதியாக.

**Apivorous,** *a.* தேனீக்களைத் தின்கிற.

**Apocryphal,** *a.* ஆதாரமில்லாத; போலியான.

**Apologue,** *n.* நீதிக்கதை.

**Apology,** *n.* 1. வருத்தஉரை; மன்னிப்பு; மாப்பு. 2. காப்புரை; ஆதார உரை. 3. இரண்டாந்தரப் போலி. *a.* apologetic *a.* apologize.

**Apoplexy,** *n.* வலிப்பு நோய். *a.* apoplectic.

**Apostasy,** *n.* (தன் பழைய கருத்துகளையோ நண்பர்களையோ) கைவிடல்; கொள்கை துறத்தல்; நட்புத் துறத்தல். *a. n.* apostate, கொள்கை துறந்த (வர்).

*a posteriori, adv. a.* காரியத்திலிருந்து காரணத்திற்கு.

**Apostle,** *n.* உரிமை மாணவர்; திருமாணவர்; (இயேசுவின்) முதல் மாணவர்களுள் ஒருவர்; வீரத்திருத்தொண்டர்.

**Apostrophe,** *n.* 1. முன்னிலைப் பாட்டணி 2. எழுத்துக் குறைக் குறியீடு (') 3. ஆறாம் வேற்றுமைக் குறி. (boy's boys') *v.* apostrophize, விளி.

**Apothecary,** *n.* மருந்துக் கடைக்காரர்.

**Apotheosis,** n திருநிலைப் பாடு; தெய்வமாக வழிபாடுதல்; தெய்வ உருவகம்.

**Appal,** *v.* திடுக்கிடச் செய்; மலைக்கச் செய்.

**Aparatus,** *n.* செயற் களக் கருவி; துணைக்கருவித் தொகுதி.

**Aparel,** *n.* ஆடை; அணி; ஒப்பனை. *v.* ஆடையணிவி.

**Apparent,** *a.* தெளிவாகக் காணப்படுகிற; தோன்றுகிற; வெளிப்படையான; போலியான.

**Apparition,** *n.* தோற்றம்; பேய் உருவம்; ஆவி உரு.

**Apeal,** *v.* 1. மேல்வழக்குத்தொடு. 2. முறையீடு; வேண்டு; ஆர்வத்துடன் கோரு (appeal to one's mercy).3. பிடித்தமாயிரு; கவர்ச்சியுடையதாயிரு. (appeal to one's taste) *n.* 1. மேல்வழக்கு. 2. முறையீடு; வேண்டுகோள்; கோரிக்கை. 3. கவர்ச்சியாற்றல்; கனிவாற்றல்; உள்ளத்தையியக்கும் ஆற்றல். *conn.* (a) *see* appellant, appellate.

**Appear,** *v.* காட்சியளி; தோன்று; கண்ணுக்குப் புலப்படு; பலர்முன் காணப்படு. *n.* appearance, தோற்றம்; உருவம்.

**Appease,** *v.* (பசி; நோய்; அவா) தணி; அமைதிப் படுத்து; மனக்குறையாற்று; குறை நிறைவேற்று.

**Appellant,** *n.* (appeal) முறையிடு கிறவன்; மேல்வழக்குவாதி. *a.* முறையீட்டுக்குரிய .

**Appellation,** *n.* பட்டம்; பெயர்க் குறியீடு; சாட்டுப் பெயர்.

**Append,** *v.* இணை, *n.* appendix, (*pl.* appendices, appendixes) பின்னிணைப்பு; குடலுடன் இணைக்கப்பட்ட சிறுகுழாய்; வால்குடல். *n. deriv.* appende citis, குடல் அழற்சி.

**Apperception,** *n.* உட்புல னுணர்ச்சி.

**Appertain,** *v.* ஏற்றதாயிரு; உரியதாயிரு.

**Appetite,** *n.* பசி; பசிச்சுவை; சுவை நுகர் உணர்ச்சி, விருப்பம்; நாட்டம்.

**Applaud,** *v.* புகழ்; கைகொட்டிப் பாராட்டு. *pl.* applause.

**Apple,** *n.* பழவகை; சீமை இலந்தை apple of one's eye, கண்பாவை; அன்பாக மிகவும் நேசிக்கும் பொருள். apple of discord கலகத் தூண்டுதல் பொருள்; கலகக் காரணம்.

**Appliance,** *n.* (apply) துணைக் கருவி; சாதனம்.

**Applicable,** *a.* (apply 1, 3) பயன் படுத்தத் தகுந்த; பொருந்துகிற; பொருத்தமான, *n.* applicability.

**Application,** *a.* (apply) 1. வழங்குதல். 2. செயற்படுத்தல், 3. பொருத்தம், தொடர்பு. 4. முயற்சி. 5. மனு.

**Apply,** *v.* 1. பயன்படுத்து; வழங்கு. 2. கொள்கை; செயற்படுத்து. 3. மேல்வை; பொருத்து. 4. முனைந்து முயற்சி செய், 5. மனுச் செய்; கோரு. *n. see.* appliance, *n. see* application, applicable.

**Appoint,** *v.* திட்டம் செய்; அமர்த்து, *n.* appointment, சந்திப்பு; ஏற்பாடு; திட்டம்; பணியிடம்.

**Apportion,** *v.* பங்கிடு.

**Apposite,** *a.* தகுந்ததான; பொருத்தமான. *n.* apposition, அடுக்குரை; அடை உரை; தொடர்புற வைத்தல், குறித்தது விளக்கிக் குறிக்கும் சொல்; இணைவமைதி.

**Appraise,** *v.* மதிப்பீடு *n.* Appraisal.

**Appreciate,** *v.* 1. பாராட்டு; உயர் வாக மதி. 2. விலை மிகதியா(க்)கு. *n.* appreciation. *a.* appreciable.

**Apprehend,** v. 1. கைப்பற்று. 2. புரிந்துகொள். 3. அஞ்சு. *n.* apprehension (3) *a.* apprehensive, அஞ்சுதலுள்ள; ஐயுறவுள்ள.

**Apprentice,** *n.* தொழில் கற்றுக் கொள்பவர்; பயிற்சித் தொழி லாளர்; கற்றுக் குட்டி. *v.* தொழில் பயிலு. *n.* apprenticeship.

**Apprise,** *v.* தெரியப்படுத்து.

**Approach**, *v.* அணுகு *n.* அண்டும் வழி; அணுகுதல். *a.* approachable, அருகே செல்லத் தகுந்த; அணுக எளிமையான.

**Approbate,** *v.* ஒப்புறுதியளி.

**Appropriate,** *a.* பொருத்தமான, *v.* கைப்பற்று; (உரிமையின்றித்) தனதாக்கு; ஒதுக்கிவை, *n.* appropriation.

**Approve,** *v.* உடன்பாடு தெரிவி; ஒப்புதலளி; ஒப்பு. *n.* appro bation; approval. *n. pers.* approver. குற்றம் ஒப்புக் கொள்ளும் குற்றவாளி; காட்டிக் கொடுத்தொதுங்குபவர் (turn approver).

**Approximate,** *a.* கிட்டத்தட்டச் சரியான; ஏறக்குறைய; குத்து மதிப்பான; தோராயமான. *v.* கிட்டத்தட்ட ஒத்திரு. *adv.* approximately. *n.* approximation.

**Appurtenance,** *n.* உடைமைப் பொருள்கள்; தட்டுமுட்டுகள்.

**April,** *n.* ஆங்கில முறைப்படி நான்காம் மாதம் (கி.த. பங்குனி 15 முதல் சித்திரை 15 வரை).

*a priori, adv. a.* காரணத்தி லிருந்து காரியமாக.

**Apron,** *v.* தூசாடை; பாதுகாப்பு மேலாடை; பெண்டிர் மனையக மேலாடை; பணித்துறை ஆடை.

**Apropos,** *adv. a.* தகுதியாய்; குறித்து; ஏற்புடைய .

**Apt,** *a.* பொருத்தமான; எளிதில் புரிந்துகொள்கிற. *adv. aptly. n.* aptitude, உளச்சார்பு; இயற்கை விருப்பம்; சுவைத்திறம்.

**Aqua,** *n.* நீர்.

**Aquarium,** *n.* நீர்ப் பொருட் காட்சிச் சாலை; நீர்ச்செடியினக் காட்சிச் சாலை; மீன் காட்சிச் சாலை.

**Aquatic,** *a.* நீரக; நீர்வாழ்கிற (உயிர்).

**Aqueduct,** *n.* கட்டுக் கால்வாய்; நீர்த்தாம்பு.

**Aqueous,** *a.* நீர் கலந்த; நீர் போன்ற.

**Aquiline,** *a.* கழுகு போன்ற; கழுகுக்குரிய; (nose, eye) கருடனது போன்ற.

**Arable,** *a.* உழத் தகுந்த, *n.* உழத் தகுந்த நிலம்.

**Araneid,** *n.* சிலந்தி

**Arbiter,** *n.* நடுவர்; நடுநிலைத் தீர்ப்பாளர். *v. see* arbitrate.

**Arbitrary,** *a.* ஒருதலை முடிவான; மனம் போனபடியான; ஆணவ மான; அடங்கொண்ட; தன் முனைப்பான.

**Arbitrate,** *v.* (arbiter) நடுத்தீர்ப்புச் செய். *n.* arbitration. *n. ag.* arbitrator.

**Arbor,** *n.* மரப்பந்தர்; கொடிப்பந்தர்; பூம்பந்தல்.

**Arboreal,** *a.* மரம் சார்ந்த.

**Arc,** *n.* பிறை வளைவு; வில் வளைவு (இடக்கணக்கியல்); வட்டத்தின் பகுதி; மின்வலி ஒளிக்கம்பி.

**Arcade,** *n.* சாலைப் பாதை; மேல் வளைவுகளோடு செல்லும் தெரு; அங்காடி வீதி.

**Arcadia,** *n.* சோலைவனம்; இயற்கை வளமிக்க நாடு. *a.* arcadian, நாட்டுப்புறமான.

**Arch,** *n.* மேல் வளைவு; வளை முகடு; கவான்.

**Archaeology,** *n.* பழம்பொரு ளாராய்ச்சி. *n. pers.* archaeologist.

**Archaic,** *a.* பண்டைக்காலத்தைச் சேர்ந்த; பண்டை வழக்கமான, *n.* archaism.

**Archangel,** *n.* தலைமைத் தேவ தூதன்; முதன்மை அரமகள்; முதன்மை அணங்கு; தலைமைப் புத்தேள்.

**Archbishop,** *n.* தலைமைக்குரு; நாட்டுச் சமய முதல்வர்.

**Archer,** *n.* வில்லாளி. *n. abs.* archery, வில்வித்தை.

**Archetype,** *n.* மூலமாதிரி; மூல உருவம்.

**Archil,** *n.* பாசி வகைகள்.

**Archipelago**, *n.* தீவுக் குழு.

**Architect,** *n. abs.* சிற்பி. *n. abs.* architecture.

**Archives,** *n. (pl.)* ஆயப்பதி வேடுகள்; ஆயப்புரை. *n. pers.* archivist.

**Arctic,** (ஆர்ட்டிக்) *a., n.* நில உலகின் வடகோடி சார்ந்த (பகுதி); வடமுனை சார்ந்த (மாகடல்); வட துருவம்.

**Ardent,** *a.* ஆவல் மிகுந்த, *adv.* ardently.

**Ardour,** *n.* வெப்பம்; ஆர்வம்; உணர்ச்சி மிகுதி.

**Arduous,** *a.* செங்குத்தான; அரு முயற்சியான; கடுமையான.

**Are,** *v.* (be) இருக்கிறார்; இருக்கிறீர்கள்; இருக்கிறார்கள்; இருக்கிறோம்; இருக்கின்றன. (be என்ற வினையின் முன்னிலை வடிவமும் பன்மை வடிவமும்.)

**Area,** *n.* பரப்பளவு; நிலப்பகுதி.

**Areal,** *a.* வெற்றிடத்துக்கு உரிய.

**Arecanut,** *n.* பாக்கு; கமுக மரம்.

**Arena,** *n.* களம்; அரங்கம்; வட்டரங்கு; போர்க்களம்.

**Areola,** *n.* சிறு பரப்பு.

**Argentine,** *a.* வெள்ளிக்குரிய. *n.* போலி வெள்ளி.

**Argon,** *n.* செயலற்ற வளிகளுள் ஒன்று.

**Argosy,** *n.* சரக்கேற்றிய பெரிய கப்பல்.

**Argue** (ஆர்க்யூ) *v.* தர்க்கம் செய்; வழக்காடு; காரணம் காட்டி வாதிடு. *n.* argument, *a.* argumentative.

**Arid,** *a.* உலர்ந்த; வறண்ட. *n.* aridity.

**Aries,** *n.* மேட இராசி.

**Aright,** *adv.* சரியானபடி.

**Arise,** *v.* (*p.t.* arose, *p. p.* arisen.) எழு. *see* rise. *v.* cause, *see* rouse, arouse.

**Aristocracy,** *n.* உயர்குடியாட்சி; உயர்குடிமை.

**Aristocrat,** உயர் குடிமகன், *a.* aristocratic. *n. abs.* aristocracy.

**Arithmetic**. *n.* எண் கணக்கு; எண்களைப் பற்றிய நூல். *n. pers.* arithmetician.

**Ark,** *n.* பெட்டி; பேழை; மரக்கலம்; தோணி.

**Arm,** *n.* கை; கிளை; (*gen. pl.*) போர்க்கருவி, *v.* போர்க்கருவி அணி; போருக்கு ஒருக்கம் செய். *a.* armed. *n.* diminut. *see* armlet.

**Armada,** *n.* போர்க் கப்பல் கூட்டம்.

**Armament,** *n.* போர்க் கருவிகள் தொகுதி.

**Armatual,** *n.* படைக்கலங்கள்.

**Armistice,** *n.* போர் நிறுத்தம்.

**Armlet,** *n.* (arm) 1. கைவளை. 2. கடலின் சிறுகிளை.

**Armour,** *n.* போர்க்கவசம்; கப்பல் காப்புத் தகடு. *n. pers.* armourer, போர்க்கருவிகள் செய்வோன். *n.* armoury, போர்க்கருவிகள் சேமித்துள்ள இடம்.

**Armpit,** *n.* அக்குள்.

**Army,** *n.* படை; கூட்டம்.

**Aroma,** *n.* நறுமணம். *a.* aromatic.

**Arose,** *see* arise.

**Around,** *adv. prep.* (round) சூழ, சுற்றிலும்.

**Arouse,** *v.* (rise, arise) எழச்செய்; விழிக்கச் செய்; எழுச்சியூட்டு. *n.* arousal.

**Arrack,** *n.* பட்டைச் சாராயம்.

**Arraign,** *n.* குற்றஞ்சாட்டு. *n.* arraignment.

**Arrange,** *v.* ஒழுங்குபடுத்து; வகைப் படுத்து; வகுத்து அமை. *n.* arrangement.

**Arrant,** *a.* தீர்ந்த; கைதேர்ந்த; பழிதேர்ந்த; அடங்கொண்ட.

**Arrass,** *n.* பின் திரை.

**Array,** *n.* அணிவகு; ஆடை அணி. *n.* உடை வகுப்பு.

**Arrear,** *n.* (*gen. pl.*) நிலுவை; கடன் மிச்சம்.

**Arrest,** *v.* ‘தடு; சிறைசெய். *n.* தடுத்தல்; சிறைசெய்தல். *n.* arrestment, தடுப்பு; தடுக்கிடல்; தடுக்குவிசை. *a.* arrestive.

**Arrive,** *v.* வந்து சேர். *n.* arrival, வந்து சேர்தல். வருகை; *(pl)* வந்தவர்கள்.

**Arrogant,** *a.* வீம்புடைய; வீம் புரிமை கோருகிற; அடம் பிடித்த; செருக்கு மிக்க; தருக்குடைய. *n.* arrogance., *adv.* arrogantly.

**Arrogate,** *v.* வீம்புரிமை கொண் டாடு; உரியதல்லாததில் உரிமை கொண்டாடு.

**Arrow,** *n.* அம்பு; arrowroot, கூவற் கிழங்கு (மாவு); *a.* arrowy, அம்புகளைப் போன்ற; வேகமுள்ள.

**Arrow - shot,** *n.* அம்பு பாயும் தூரம்.

**Arsenal,** *n.* படைக்கலச் சாலை; உலைக்களம்.

**Arsenic,** *n.* சவ்வீரம்.

**Arson,** *n.* எரியூட்டு; தீயிடல்; கொளுத்தல்.

**Art,** *n.* 1. கலை; கலைத்திறமை; 2. சூழ்ச்சி. 3. இருக்கிறாய். (*2nd pers. sing.* of be in thou art) *see* artist; artistic; etc. (2) *a.* artful.)

**Artery,** *n.* நாடி; குருதிக் குழாய், a arterial.

**Artesian,** *a.* (ஊற்று) பொங்குகிற.

**Artful,** *a.* சூழ்ச்சித் திறமுள்ள; குறும்பு சூழ்கிற.

**Arthritic,** *n.* கீல்வா.

**Article,** *n.* உருப்படி; பண்டம்; சரக்கு; சட்டப்பகுதி, சட்டவாசகம்; கட்டுரை; விரிவுரை நூல்; (இலக்) பொதுச் சுட்டுச்சொல்; (a, an, the.)

**Articulate,** *a.* 1. இணைப்புடைய. 2. தெளிவாகக் கேட்கிற; தெளிவாகத் தெரியக்கூடிய; தெளிவாகப் பேசுகிற. *v.* 1. இணைப்புகளால் சேர்த்து அமை. 2. தெளிவாகப் பேசு. *n.* articulation. 1. ஒலிப்பு 2. இணைப்பு; மூட்டு.

**Artifice,** *n.* சிறு சூழ்ச்சி; பொறி யமைப்பு; செயற்கைத்திறம்; ஏமாற்று. *n. pers.* artificer.

**Artificial,** *a.* செயற்கையான; இயற்கையல்லாத.

**Artillery,** *n.* பீரங்கிப்படை; பீரங்கி.

**Artisan,** *n.* கலைத் தொழிலாளி; கம்மியர்; சிறு கருவித் தொழிலாளர்.

**Artist,** *n.* கலைஞர்; ஓவியர். *a.* artistic, அழகிய கலைத்திறமை வாய்ந்த.

**Artiste,** *n.* நடிகர்; பாடகர்.

**Artless,** *a.* இயற்கையான; கபடற்ற; சூதற்ற; வேலைப் பாடற்ற; எளிமை வாய்ந்த.

**As,** *rel., adv.* போல; போது; சமயத்தில்; தோறும். *rel. pron.* (such….as) பெயரெச்ச இடைச் சொல்.

**Asafoetida,** *n.* பெருங்காயம்.

**Asbestos,** *n.* கல்நார்.

**Ascend,** *v.* ஏறு; மேலே செல்; உச்சி யடை. *n.* ascendancy, ascendency ஆதிக்கநிலை; உச்சநிலை; மேலாட்சி; ஏற்றம். *a.* ascendant, ascendent. *n.* ascent. ஏறுதல்; ஏற்றம்; சாய்மேடு; ஏற்றப்பாறை; *see* ascension.

**Ascension,** *n.* ஏறுதல்; (இயேசுவின்) வான் செலவு; திரு எழுந்தருளிப்பு (விழாநாள்.)

**Ascertain,** *v.* கண்டறி; உறுதிப் படுத்து. *a.* ascertainable. *n.* ascertainment.

**Ascetic,** *a.* இன்ப நாட்டமற்ற; வெறுப்புத் துறவு பூண்ட; இன் பந்துறந்த. *n.* துறவி. *n. abs.* asceticism.

**Ascribe,** *v.* சாட்டு; சுமத்து; காரணமாகக் குறிப்பிடு; விளை வாகக் குறிப்பிடு. *n.* ascribtion. *a.* ascribable.

**Aseptic,** *a., n.* (மருத்துவம்) நச்சுத் தடையுடைய; அழுகலில்லாத; தொற்று நீங்குகிற.

**Ash,** *n.* 1. சாம்பல், 2. மரவகை. (1) *a.* Ashy, ashen. (2) *a.* ashen.

**Ashamed,** *pre. a.* தலைகுனிவான; வெட்கிய.

**Aside,** *adv.* ஒரு பக்கமாக விலகி; தனித்து; தனக்குள் (நாடகக் குறிப்பு).

**Asinine,** *a.* கழுதைக்குரிய; முட்டாளான.

**Ask,** *v.* வினவு; அழை; உசாவு; வேண்டு.

**Askance, askant,** *adv.* பக்க வாட்டமாக, ஒருக்கணித்து; சாய் வாக; கடைக்கண் பார்வையாக.

**Asleep,** *adv.* தூக்கமாய்.

**Asp,** *n.* 1. மரவகை. 2. நச்சுப் பாம்புவகை. *a.* (1) *see* aspen.

**Aspect,** *n.* பார்வை; தோற்றம்; கூறு; திசை.

**Aspen,** *n.* மரவகை. *a.* (அந்த) மரத்திற்குரிய; நடுங்குகிற.

**Asperity,** *n.* கடுமை; முரட்டுத் தன்மை.

**Aspersion,** *n.* அவதூறு; தூற்றல்.

**Asphalt,** *n.* நிலக்கீல்; கருங் 'காரை'. *v.* கீல் எண்ணெய்; மணல் முதலியன கலந்து பூசு.

**Asphyxia,** *n.* மூச்சுத் திணறல்.

**Aspirate,** *n.* h. (ஃ) என்பது போன்ற மெய்ஒலி. *v.* h. (ஃ) என்ற ஒலியோடு சேர்த்து ஒலி. *n. see* aspiration. (1) *n. ag. impers.* aspirator, செயற்கை உயிர்ப்புக் கருவி.

**Aspiration,** *n.* 1 (ஃ) என்று ஒலி சேர்த்தொலித்தல்; மூச்சை இழுத்தல். 2. (*n.* of aspire) விருப்பம்; அவா; ஆர்வம்.

**Aspire,** *v.* நோக்கமாகக் கொள்; பெற விரும்பு. *n. pers.* aspirant, நாடுபவன். *n. see* aspiration (2).

**Aspirin,** *v.* (தலைவலி முதலிய) வலிகளைப் போக்கும் மருந்து.

**Asquint,** a., *adv.* கடைக் கணித்த; சாய்த்துப் பார்க்கிற; ஒருக்கணித்து.

**Ass,** *n.* கழுதை; முட்டாள்.

**Assail,** *v.* தாக்கு, *n.* assailant. *a.* assailable.

**Assassin,** *n.* கொலையாளி., *v.* assassinate, கொலை செய். *n.* assassination. *n. ag.* assassinator.

**Assault.** *v.* வலிமையாகத் தாக்கு, *n.* தாக்குதல்.

**Assay,** *v.* (பொன், வெள்ளி) மாற்றுப்பார்; முனைந்து முயல். *n.* மாற்றுத்தெரிவு; பொன் வகை தெரிவு; தேர்வுக்குரிய பொன்.

**Assemble,** *v.* கூடு; கூட்டுவி; திரட்டு. *n.* assemblage கூட்டம். *n.* assembly, பேரவை; கூடியிருப் போர்.

**Assent,** *v.* உடன்படு; சொல்வதை ஒப்புக்கொள். *n.* உடன்பாடு; இணக்கம்.

**Assert,** *v.* வற்புறுத்து; உறுதியாகக் கூறு, *n.* assertion, *a.* assertive.

**Assess,** *v.* மதிப்பிடு; வரியளவைத் திட்டம் செய். *n.* assessment. *n. pers.* assessor. *a.* assessable.

**Assests**, *n. (pl.)* நிலைமுதல்; இருப்பு முதல்; வருமுதல்; செல்வநிலை.

**Assiduous,** *a.* கருத்துடன் கவனிக்கிற; முனைந்து முயலுகிற. *n.* assiduity.

**Assign,** *v.* (பங்காக) ஒதுக்கி வை; (பிறருக்கு) உரிமையாக்கு, *n.* assignation 1. ஒதுக்கி வைத்தல், 2. ஒதுக்கிய பகுதி; மாணவர்க்கு வகுத்த பாடப்பகுதி, 3. சந்திப்புக் கான கால இடவரையறை. *n. pers.* assignee, ஒதுக்கிய பகுதிக்கு உரியவர். *a. abs.* assignment, உரிமை மாற்றம்; உரிமை மாறு தலைக் காட்டும் பத்திரம்; திட்ட மிட்ட பாடம்.

**Assimilate,** *v.* செரிமானம் செய்; தன்வயப்படுத்து. *n.* assimilation. *a.* assimilative, செரிமானஞ் சார்ந்த; assimilable, செரிக்கக் கூடிய.

**Assist,** *v.* உதவிசெய். *n. pers.* assistant, உதவியாளன். *n. abs.* assistance.

**Assize,** *n.* விலையுறுதி; வழக்கு உசாவுகை வழக்கு மன்றம்.

**Associate,** *v.* கூட்டுச்சேர். *n.* கூட்டாளி. *a.* கூட்டாளியான; இணையான. *n.* association, சங்கம்; தொடர்பு; தோழமை; நட்பு.

**Assort,** *v.* இனம் இனமாகப் பிரி; வகைதொகை செய். *n.* assort ment, பிரித்தரக்கு; பிரிவு.

**Assuage,** *v.* வலியைத் தணி. *n.* assuagement.

**Assume,** *v.* மேற்கோள்; பாவனை செய். *n.* assumption. *a.* assumptive.

**Assure,** *v.* உறுதிகூறு; உறுதிப் படுத்து, *n.* assurance, (வாழ்க்கை, பொருள் முதலியவற்றின்) காப்பீடு. *adv.* assuredly.

**Asterisk,** *n.* உடுக்குறி.

**Asterism,** *n.* விண்மீன் குழு; உடுக்கூட்டம்.

**Astern,** *adv.* (கப்பல்) பின் பக்கமாக; பின்புறமாக.

**Asthma,** *n.* காசநோய். *a.* asthmatic.

**Astir,** pred, *a.* இயங்குகிற; அசை கிற; உயிர்ப்புடைய; படுக்கையி லிருந்து எழுந்த; விழிப்புடைய.

**Astonish,** *v.* (in pass.) திகைக்கச் செய். *n.* astonishment.

**Astound,** *v.* (in pass.) திகைக்கச் செய்.

**Astral,** *a.* விண் மீனங்கட்குரிய; வானக. astral body, வானக உடம்பு; அதாவது நுண்ணுடம்பு; வானகோளம்.

**Astray,** *adv.* வழிதவறி; நேர்மை யற்று.

**Astringent,** *a.* சுருங்கக்கூடிய; வறுமை மிக்க; இடுக்கப்பட்ட, காரமான; துவர்ப்பான. *n.* சவ்வு களைச் சுருங்கச் செய்யும் மருந்து.

**Astrology,** *n.* குறிநூல்; சோதிடம், *n. pers.* astgrologer.

**Astronautics,** *n.* சேணியல்; புறவெளிச் செலவு நூல். *n. pers,* astronaut.

**Astronomy,** *n.* வான நூல். *n. pers.* astronomer. *a.* astronomical.

**Astute,** *a.* அறிவுக் கூர்மையுள்ள, *n.* astuteness.

**Asunder,** *adv.* விலகி; துண்டாக.

**Asylum,** *a.* பாதுகாப்பான இடம்; (பித்தர், குருடர்) காப்பகம்.

**At,** *prep.* இடத்தில்; இல்.

**Ate,** *v. see* eat.

**Athesim,** *n.* இல் கொள்கை. கடவுளில்லை என்ற கோட்பாடு. *n. pers.* atheist, *a.* atheistic.

**Athenaeum,** *n.* அறிவுக் கழகம்; வாதிப்புச் சாலை.

**Athirst,** *a.* விடாயுள்ள; ஆர்வமுள்ள.

**Athlete,** *n.* மல்லன்; உடற்பயிற்சி வல்லுநர். *a.* athletic. *n.* athletics, உடற்பயிற்சி (த்துறை).

**Athwart,** *adv. prep.* குறுக்கே.

**Atlas,** *n.* உலகப் படச்சுவடி; கிரேக்கப் புராண வீரன் பெயர்; பிடர் எலும்பு.

**Atmosphere,** *n.* வளி மண்டலம்; காற்று; இயற் சூழ்நிலை. *a.* atmospheric. *n. (pl.)* atmospherics, வானொலியிடையே ஏற்படும் இரைச்சல்; வானிலையிரைச்சல்.

**Atom,** *n.* அணு, *a.* atomic, அணு சார்ந்த; அணுக்கூறான; அணு ஆற்றல் சார்ந்த.

**Atone,** *v.* ஈடுசெய்; சரிசெய்; கழுவாய் தேடு. *n.* atonement.

**Atrocious,** *a.* அடாதுடியான; அட்டூழியமான. *n.* atrocity.

**Attach,** *v.* இணை; பற்றறச் செய்; பொருத்து. *n.* attachment பற்றுதல்; இணைப்பு; அன்பு.

**Attache,** (அற்றாஷே) *n.* தூதர் குழாத்தில் ஒருவர்.

**Attack,** *v.* தாக்கு. *n.* தாக்குதல்.

**Attain,** *v.* அடை; பெறு. *a.* attainable. *n. see* attainment.

**Attainder,** *n.* உடைமை; உரிமையிழப்பு; கொலை; நாட்டுப் பகைமைத் தண்டனைகளின் உடன் விளைவு.

**Attainment,** *n.* பெறுதல்; பேறுதிறம்.

**Attempt,** *v.* முயற்சி செய். *n.* முயற்சி.

**Attend,** *v.* 1. கவனி, 2. உடன் செல்; உடனிரு, உடனிருந்து ஊழியஞ் செய்; இடத்திரு. *n.* (1) attention. (2) *a. see* attendant, attendance.

**Attendant,** *a.* உடன் செல்கிற; உடனிருக்கிற, *n.* ஊழியன்.

**Attention,** *n.* கவனம், பார்வை. *a.* attentive.

**Attentuate,** *a.* மெல்லிய, தளர்ந்த.

**Attest,** *v.* சான்று பகர். *n.* attestation, *n. pers* attestor.

**Attire,** *v.* உடு. *n.* உடை

**Attitude,** *n.* உருவமைதி; நிலையமைதி; நோக்கு; தோற்றம்; தோரணை.

**Attorney,** *n.* (வழக்கு நடத்தும்) ஆட்பேர்.

**Attract,** *v.* கவர். *n.* attraction. கவர்ச்சி, *a.* attractive.

**Attribute,** *v.* காரணமாகக் குறி. *n.* இயல்பு; தன்மை; குணம். *a.*

attributive, தழுவி அமைந்துள்ள; பண்பு அடைமொழியான.

**Attune,** *v.* இசை கூட்டு; பொருந்தச் செய்.

**Auburn,** *a.* பொன் நிறமான.

**Auction,** *a.* ஏலம். *v.* ஏலங்கூறு. *n. pers.* auctioneer.

**Audacious,** *a.* துணிச்சலுள்ள. *n.* audacity. *adv.* Audaciously.

**Audible,** *a.* (காதுக்குக்) கேட்கக் கூடிய, *adv.* audibly. *n.* audibility.

**Audience,** *n.* அவையோர்; கேட்போர்.

**Audit,** *n.* வரவு செலவுத் தணிக்கை, *v.* வரவு செலவுக் கணக்குகளைச் சரிபார். *n. pers.* auditor.

**Auditorium,** *n.* மண்டபம்.

**Auger,** *n.* தமரூசி.

**Aught,** *n.* ஏதாவதொன்று.

**Augment,** *v.* மிகுதியாக்கு; சேர். *v.* மிகை; (இலக்) சாரியை. *n.* augmentation.

**Augur,** *v.* குறி சொல்; வருவது கூறு, *n.* augury, குறி சொல்லல்; உறுகுறி; வருகுறி.

**August,** *a.* 1. மேதக்க. 2. *n.* ஆங்கில ஆண்டின் எட்டாம் மாதம் (ஏறத்தாழ ஆடி 15 முதல் ஆவணி 15 வரை).

**Aunt,** *n.* பெற்றோருடன் பிறந்தவள்; அத்தை; சிற்றன்னை.

**Aura,** *n.* பரிவேடம்; ஒளிவட்டம். *a. see* Aural. (1)

**Aural,** *n.* 1. (< aura) பரிவேடத்துக்குரிய, 2. செவிக்குரிய.

**Aureole,** *n.* தலைசூழ் ஒளி வட்டம்.

**Auriferouse,** *a.* (பாறை) பொன் குலந்திருக்கிற அல்லது விளைகின்ற.

**Aurist,** *n.* காது மருத்துவர்.

**Aurora,** *n.* வளரொளி (Borealis. வடமுனை வளரொளி. australis, தென்முனை வளரொளி.)

**Aurum,** *n.* பொன்.

**Auspice,** *n.* புட்குறி. *pl.* ஆதரவு: பாதுகாப்பு. *a.* auspicious நற்குறியான.

**Austere,** *a.* அவா வெறுத்த; கண்டிப்பான; இன்பந்துறந்த. *n.* austerity; austereness, நோன்பு; தவம்.

**Authentic,** *a.* நம்பத் தகுந்த; நம்பகமான; வாய்மையுடைய. *n.* authenticity. *v.* authenticate.

**Author** *n.* (*fem.* authoress) கருத்தன்; ஆக்கியோன்; (நூலின்) ஆசிரியர். *n. abs.* authorship.

**Authority,** *n.* மேலாண்மையுரிமை; தனிச் செல்வாக்கு; அதிகாரி; *(pl.)* அதிகாரக் குழு. authoritative. *v.* authorize.

**Autobiography,** *n.* தன் வரலாறு, *n. pers.* autobiographer, *a.* autobiograbhical.

**Autocracy,** *n.* தன் முனைப்பாட்சி; தனிவல்லாட்சி. *n. pers.* autocrat, வல்லாளர். *a.* autocratic.

**Autograph,** *n.* தற்கையொப்பம்; தற்கையெழுத்து.

**Autogyro,** *n.* செங்குத்தாக ஏறவும் இறங்கவும் கூடிய வானூர்தி; நிமிர் வானூர்தி.

**Automatic,** *a., n.* தன்னியக்க முடைய; தானே இயங்குகிற (இயந்திரம்) also *n. com.* Auto mati*on. n. abs.* automatism.

**Automobile,** *n.* பொறிவண்டி.

**Autonomy,** *n.* தன் ஆட்சி உரிமை; தன் உரிமை ஆட்சி. *a.* autonomous.

**Autumn,** *n.* இலையுதிர் காலம்; கூதிர்பருவம். *a.* autumnal.

**Auxiliary,** *a.* துணை செய்கிற; துணையான. *n.* உதவியாள்; உதவிப்படை.

**Avail,** *v.* உதவியாயிரு; காரியத் திற்குப் பயன்படுத்து. *a.* available, எளிதில் கிடைக்கக் கூடிய.

**Avalanche,** *n.* சறுக்கு பனிப் பாறை; சரிவு பனி.

**Avarice,** *a.* பெரும் பொருளவா; பேரவா. *a.* avaricious.

**Avaunt,** int. போ! விலகிச் செல்!

**Ave,** *int.* வாழி. *n.* வாழ்த்தொலி.

**Avenge,** *v.* பழிவாங்கு; குற்ற வாளியைத் தண்டி.

**Avenue,** *n.* சாலை; அகல்பாதை.

**Aver,** *v.* வெட்டிக் கூறு; சாதித்துச் சொல். *n.* averment.

**Average,** *n.* சராசரி; நிரல். *a.* பொதுப்படையான. *v.* சராசரி கண்டுபிடி.

**Averse,** *a.* மனமில்லாத; வெறுப் புடைய. *n.* aversion.

**Avert,** *v.* வேறு பக்கமாகத் திருப்பு; தடு.

**Aviary,** *n.* பறவைக் கூண்டு; பறவைப் பண்ணை.

**Aviate,** *v.* வானூர்தி ஓட்டு. *n.* aviation, வான் போக்கு வரவு. *n. pers.* aviator.

**Avid,** *a.* ஆர்வமுள்ள; பற்றவா வுள்ள. *n.* avidity.

**Avocation,** *n.* தொழில்; பொழுது போக்கு முயற்சி.

**Avoid,** *a.* தவிர். *v.* avoidable. *n.* avoidance.

**Avouch,** *v.* உத்தரவாதமளி; மறை வெளியிடு.

**Avow,** *v.* உறுதியாகக் கூறு; வெளியிட்டுக் கூறு. *n.* avowal, *adv.* avowedly.

**Await,** *v.* காத்திரு; எதிர்பார்த்திரு.

**Awake,** *v.* (*pt.* awoke; *p.p.* awoke, awaked) தூக்கத்தி லிருந்து எழுந்திரு; துயிலினின்று எழுப்பு; சோம்பலொழி. *pers. a.* விழிப்பான, *caus. v.* awaken, எழுப்பு; விழிப்பூட்டு.

**Award,** *v.* பரிசளி; தீர்ப்புச் செய். *n.* நடுத்தீர்ப்பு.

**Aware,** *pred. a.* தெரிந்துள்ள; உணர்கிற; உணர்வுடைய. *n.* awareness.

**Away,** *adv.* அப்பால்; தொலைவில்; தீர; முற்றிலும்.

**Awe,** *n.* மதிப்பச்சம், *v.* மதிப்பச்சம் உண்டுபண்ணு. *a.* awful, அச்சந் தருகிற; (பேச்சு வழக்கு) வியக்கத் தக்க; மிகுதியான.

**Awhile,** *adv.* சிறிது நேரத்திற்கு.

**Awkward,** *a.* அருவருப்பான; தடுமாற்றமுடைய; பயனுறாத; பொருத்தமற்ற. *n.* awkwardness. *adv.* awkwardly.

**Awl,** *n.* தோல் தைக்கும் ஊசி.

**Awning,** மேற் கட்டி; *n.* மச்சின் அடிப்புறம்.

**Axe,** *n.* கோடரி.*v.* பிள.

**Axial,** axile, *a.* இருசுக்குரிய.

**Axil,** *n.* காம்புக்கவடு.

**Axiom,** *n.* அடிப்படை மெய்ம்மை; தானே விளங்கும் உண்மை; இயல்ஒழுங்கு வெளிப்படை உண்மை. *a.* axiomatic. *adv.* axiomatically.

**Axis,** *n.* இருசு; நடுவச்சு; அச்சு; சுழல் பொருளின் மையக் கோடு.

**Axle,** *n.* சக்கரத்தின் இருசு.

**Ay,** *int. n.* (*pl.* ayes) ஆம்.

**Aye,** *adv. n.* எக்காலத்துக்கும் (for aye, எக்காலத்திற்கும்).

**Azimuth,** *n.* உச்சத்திலிருந்து. அடிவானம்வரையுள்ள வளை கோடு; விட்ட வளைவு.

**Azoic,** *a.* உயிரற்ற; உயிர்ப் பண்பற்ற; உயிரினமற்ற.

**Azure,** *n.* நீலவானம்; நீலம். *a.* நீலமான.

# B

**Babble,** *v.* மிழற்று; மதலையாடு; உளறு; சளசளவென்று பேசு; கடகடவென்று ஒலி. *n.* உளறல். *n. pers.* babbler, சலுப்பன்.

**Babe,** *n.* குழந்தை; அனுபவ மில்லாதவன்; குற்றமற்றவன்.

**Babel,** *n.* (diminut of Babylon) குழப்பமான ஒலி; குழப்பமான நிலை.

**Baboon,** *n.* ஆப்பிரிக்கா தேசத்துப் பெரிய குரங்கு வகை.

**Baby,** *n.* குழந்தை; குழந்தைத் தன்மையுள்ளவர்.

**Baccy,** *n.* (பேச்சு வழக்கு) புகையிலை.

**Bachelor,** *n.* விடலை; காளை; மணமாகா ஆடவர். Bachelor of Arts, 'கலை இளைஞர்' பல்கலைக் கழகப் பட்டங்களுள் ஒன்று.

**Back,** *n. a.* முதுகு; பின் புறம்; *adv.* பின் புறமாக; திரும்பி. *v.* ஆதரவளி; தாங்கு; பின் புறமாக நகரச் செய்; பின் வாங்கு.

**Backbite,** *v.* புறங்கூறு, *n. pers.* backbiter.

**Backbone,** *n.* முதுகெலும்பு; ஆதாரம்; உறுதி.

**Background,** *n.* பின்னணி வண்ணம்.

**Backward,** *adv., a.* பிற்பட்ட; பின்னடைந்த; அறிவு முதிராத; பின் புறமாக. *adv.* backwards, பின் புறம் நோக்கி.

**Backwater,** *n.* கடற்கழி; காயல்; நாகரிகம் பரவாத இடம்.

**Bacon,** *n.* பன்றி இறைச்சி.

**Bad,** *a.* (worse, worst) கெட்ட; மோசமான; பயன் தராத; (bad debts) *n.* badness. *adv.* badly, மோசமாக; (badly in debt) இன்றி யமையாததாக (badly in need).

Bade, (*p.t.* of bid.)

**Badge,** *n.* சின்னம்.

**Badger,** *n.* வளைதோண்டி வாழும் கரடியின் உயிர். *v.* விடாது பற்று; தொந்தரவு செய்.

**Badminton,** *n.* பூம்பந்து.

**Baffle,** *v.* திணறடி; திகைக்கச்செய். *a.* baffling, மலைக்கச்செய்கிற, புரியாத.

**Bag,** *n.* பை. *v.* சேகரி. *(comb)* bagman, மூட்டை தூக்கி விற்பவர்.

**Bagatelle**, *n.* விளையாட்டு வகை; சிறுமைப்பட்ட பொருள்.

**Baggage,** *n.* மூட்டை.

**Bah,** *int.* அடேயப்பா!

**Bail,** *n.* பிணையம்; பிணையப் பணம். *v.* பிணையாயிரு.

**Bailiff,** *n.* வழக்குமன்றத் தலையாரி (அமீனா).

**Bait**, *v.* நாய்களை ஏவித் தொந்தரவு செய். 2. தூண்டிவிடு. *n.* தூண்டில்; தூண்டில் இரை.

**Bake,** *v.* (அப்பம்; செங்கல்) வறு; சுடு; வேகவை; *(comb)* half-baked பக்குவப்படாத; அறிவு நிரம்பாத. *n. pers.* baker. *n. impers.* bakery. ஆப்பக்கடை. ஆப்பத் தொழிலகம்.

**Balance,** *n.* துலாக்கோல்; சம நிலை; மன அமைதி; மிச்ச இருப்புப் பணம். *v.* சமனாக்கு; கணக்கைச் சரிக்கட்டு. சமநிலை பேணு. *phr.* lose one's balance, அமைதி இழ; அறிவு பிறழ்.

**Balcony,** *n.* மாடி முகப்பு.

**Bald,** *a.* மொட்டையான; வழுக்கைத் தலையான; (மயிர், இலை, இறக்கை முதலியன இல்லாது) வெறுமை யான; சாரமற்ற.

**Baldrie,** *n.* தோள் கச்சை.

**Bale,** *n.* 1. ஓர் அளவை; பாரம். 2. துன்பம், தீமை. *a.* baleful, தீக்குறியான.

**Balk, baulk,** *n.* 1. வரப்பு. 2. உத்திரக் கட்டை. 3. *v.* தடையா யிரு; ஏமாற்று.

**Ball;** *n.* பந்து; குண்டு; ஆடல்வகை.

**Ballad,** *n.* நாட்டுப் பாடல்.

**Ballast,** n (கப்பல்) எடைப்பாரம்; அடிச்சுமை.

**Ball-bearings,** *n. pl.* (சக்கரம் சுழல்வதற்கான) கோளத் திர ளமைப்பு.

**Ballet,** *n.* கூடியாட்டம்; குழு நிலையாடல்.

**Balloon,** *n.* புகைக் கூண்டு.

**Ballot,** *n.* மொழி தரவுப் பெட்டி; குடவோலைப் பெட்டி.

**Balm,** *n.* தைலம்; களிம்பு; நோவு அகற்றும் மருந்து; இன்மணப் பொருள். *a.* balmy.

**Balsam,** *n.* நறுமணப் பிசின்; களிம்புவகை; மலர்வகை.

**Balustrade,** *n.* கைப்பிடி மேடை; மாடிக் கைப்பிடிச் சுவர்.

**Bamboo,** *n.* மூங்கில்.

**Bamboozle,** *v.* ஏமாற்று.

**Ban,** *v.* தடையுத்தரவுபோடு. *n.* தடையுத்தரவு.

**Banal,** *a.* (bane) தீங்கான; தீக் குறியான; இழிந்த; பொது நிலையான.

**Banana,** ஏற்றன் வாழை; நேந்திர வாழை.

**Band,** *n.* குழு; கும்பல்; இசை மேளம்; பட்டைத் தகடு; பட்டைக் கயிறு. *v.* பட்டைக் கயிற்றால் கட்டு; கூட்டமாகச் சேர்.

**Bandage,** *n.* கட்டு. *v.* (துணி அல்லது கச்சையினால்) கட்டு.

**Band-box,** *n.* அட்டைப் பெட்டி.

**Bandicoot**, *n.* பெருச்சாளி.

**Bandit,** *n.* (*pl.* banditti or bandits) கொள்ளைக்காரன்.

**Bandy,** *v.* முன்னும் பின்னும் தள்ளு; எறி. *n.* வண்டி; பண்டி.

**Bandy-legged,** *a.* சப்பைக் காலுள்ள.

**Bane,** *n.* நஞ்சு; சனியன்; பழிகேடு. *a.* baneful, *see.* banal.

**Bang,** *v.* தடாலென மூடு; மோது; வெடி. *n.* வெடி ஓசை. *adv.* திடீரென.

**Bangle,** *n.* வளையல்; காப்பு.

**Banian, banyan,** *n.* இந்திய வணிகன்; ஆலமரம்; உட்சட்டை.

**Banish,** *v.* துரத்து; நாடு கடத்து.

**Bank,** *n.* மேடு; கரை; அணைக் கட்டு; பொருளகம்; பொருள் மனை. *v.* பொருளகத்தில் பணம் போடு; காசுக்கடையில் வாணிகம் செய். *phr.* bank on, நம்பியிரு.

**Bankrupt** *n.*, *a.* தீவாளி குளித்த(வர்); பணமுற்றிலும் இழந்த(வர்). *n. abs.* bankruptcy.

**Banner,** *n.* கொடி.

**Banns,** *n.* *(pl.)* மண முன்னறிவிப்பு.

**Banquet,** *n.* விருந்து.

**Banter,** *n.* ஏளனப் பேச்சு. *v.* ஏளனம் செய்.

**Baptism,** *n.* பெயரீட்டு விழா; தீக்கை; சமய நுழைவு விழா; புது மலர்ச்சி விழா. *a.* baptismal. *v.* baptize.

**Bar,** *n.* கம்பி; கம்பிவேலி; தடை; கோட்டரங்கம்; வழக்கறிஞர் கழகம். (*see* barrister) தேறல் விலையகம்; கம்பிக் கரை; கம்பிக் கோடு.

**Barb,** *n.* முள்; அம்புமுனை. *a.* barbed, முள்ளமைந்த. (barbed wire, முட்கம்பி)

**Barbarian,** *n.* காட்டுமிராண்டி; முரடன். *a.* நாகரிகமற்ற. *a.* barbarous, *n. abs.* barbarity, barbarism, barbarousness. *adv.* barbarously.

**Barber,** *n.* அம்பட்டன்.

**Barbican,** *n.* புற அரண்.

**Bard,** *n.* பாணன்.

**Bare,** *a.* பாதுகாப்பில்லாத; வெறுமையான; திறந்த மேனியான. *v.* வெளிக் காட்டு; திறந்து காட்டு. *adv.* barely, உண்டோ இல்லையோ என்ற நிலையில்.

**Bargain,** *n.* பேரம். *v.* பேரம் செய்.

**Barge,** *n.* தெப்பம். *n. pers.* barger.

**Bark** (1) *n.* மரப்பட்டை; தோல். *v.* தோலை உரி. (2) குரைப்பு. *v.* குரை. (3) *see* barque.

**Barley,** *n.* வாற் கோதுமை.

**Barn,** *n.* களஞ்சியம்; பத்தாயம்; குதிர்.

**Barnacle,** *n.* கப்பல்களின் அடியிலும் பாறைகளிலும் ஒட்டிக் கொள்ளும் ஒருவகை நத்தை; விடாமல் ஒட்டிக் கொள்பவன். *(pl.)* மூக்குக் கண்ணாடி.

B**arometer,** *n.* காற்று அழுத்தமானி. *(fig)* மனநிலை; சூழ்நிலை காட்டுவது.

**Baron,** *n.* பெருமான்; பெருமக்கள் பட்டவகை. (*fem.* baroness) *n.* diminut, baronet, பெருமகன்.

**Barouche,** *n.* நான்கு சக்கர வண்டி.

**Barque, bark,** *n.* படகு.

**Barrack,** *n.* (*gen. in. pl.*) படை வீரர் தாவணம்; பாளையம்.

**Barrage,** *n.* அணைக்கட்டு; குண்டுவீச்சு; குண்டுமாரி.

**Barrel,** *n.* மிடா; பீப்பாய்; (துப்பாக்கிக்) குழல்.

**Barren,** *a.* மலடான; தரிசான; பயனற்ற.

**Barricade,** *n.* தெருமறிப்பு; தடை அரண். *v.* அரண் செய்து தடு.

**Barrier,** *n.* வேலி; எல்லைக் கோடு; தடை.

**Barrister,** *n.* வழக்கறிஞர்; Barrister-at-law or Bar-at-law, ஆங்கில வழக்கறிஞர் பட்டம் (பெற்றவர்).

**Barrow,** *n.* தள்ளுவண்டி.

**Barter,** *v.* பண்டமாற்றுச் செய். *n.* பண்டமாற்று.

**Basalt,** *n.* கந்தகப் பாறை; எரிமலைப் பாறை.

**Base,** (1) *n.* அடிப்பகுதி; ஆதாரம்; மூலதளம். (படைத்துறை;) *v.* ஆதாரமாகக்கொள். (2) *a.* .இழிவான, (1) *a. neg.* baseless. s*n. see* basis *a. see* basic.

**Basement,** *n.* நிலவறை; கீழறை.

**Bashful,** *a.* நாணமுடைய. *n.* bashfulness.

**Basic,** a (base) அடிப்படையான.

**Basil,** *n.* நறுமணச் செடிவகை, holy basil, துளசி.

**Basilica,** *n.* அரண்மனை; நீண்ட மண்டபம்.

**Basilisk,** *n.* நச்சுக்கட் பாம்பு (திட்டிவிடம்).

**Basin,** *n.* தட்டம்; நீர்க்குட்டை; வடிநிலம்; ஆற்றுப் பள்ளத்தாக்கு.

*basis, n.* (*pl.* bases) ஆதாரம்; அடிப்படை மூலச்சரக்கு.

**Bask,** *v.* வெயிலில் காய்.

**Basket,** *n.* கூடை.

**Bas-relief.** *n.* அரை குறை முனைப்போவியம்.

**Bass,** *n.* படுத்தலோசை; மட்டக் குரல்.

**Bast,** *n.* உள் மரப்பட்டை; மென்மரம்.

**Bastard,** *n. a.* முறைகேடாகப் பிறந்த(வர்); உரிமையில்லாத(வர்) போலியான (வர்).

**Bastille,** *n.* (வரலாறு) ஃபிரஞ்சுச் சிறைக் கோட்டம்; அரண்; சிறை.

**Bastinado,** *v.* உள்ளங்காலில் பிரம்பால் அடி. *n.* உள்ளங் காலிலடிக்கும் தண்டனை.

**Bastion,** *n.* காவலரண்.

**Bat,** *n.* வௌவால்; (பந்து) மட்டை; ஆட்டக்காரன்; மரப்பந்தாட்டக் காரன்.

**Batch,** *n.* தொகுதி; கும்பு.

**Bate,** *v.* குறை; தணி; அடக்கு.

**Bath,** (பாத்) *n.* நீராட்டு; நீராடும் அறை; தொட்டி.

**Bathe,** (பேஃத்) *v.* நீராடு; கழுவு; அமிழ்த்து.

**Bathos,** *n.* சுவை வீழ்ச்சி; முரண் சுவை. *a.* bathetic.

**Baton,** *n.* தடி. *v.* தடியால் அடி.

**Batta,** *n.* படிப்பணம்.

**Battalion,** *n.* படைப்பிரிவு.

**Batten,** 1. *n.* மரச்சட்டம். *v.* மரச்சட்டத்தால் வலுப்படுத்து. 1. *v.* தின்றுபருமனாகு; கொழு.

**Batter**, *v.* அடித்துத் தாக்கு; இடி. (*phr.* batteringram, இடிப் பொறி).

**Battery,** *n.* பீரங்கிப்படை; மின்கல அடுக்கு; பீரங்கி அடுக்கு.

**Battle,** *n.* சண்டை; *v.* போர் செய்; பொரு.

**Battledore,** *n.* மரத்துடுப்பு; இறகுப்பந்து மட்டை; (correl shuttle cock).

**Battlement,** *n.* ஞாயில், கொத்தளம்.

**Bauble**, *n.* விளையாட்டுப் பொருள்; சிங்காரப் பொருள்; சிறு துணுக்கு.

**Baulk,** (balk பார்க்கவும்).

**Bawdy,** *a, n.* ஒழுக்கங்கெட்ட; இழிந்த.

**Bawl,** *v.* கூச்சலிடு.

**Bay,** 1. *n.* வெற்றித் தழை; 'வாகை'. 2. *n.* விரிகுடா. 3. *n.* கருஞ் சிவப்புக் குதிரை; கருஞ் சிவப்பு நிறம். 4. *n.* வேட்டைநாய் குரைப்பு; போக்கு முட்டி எதிர்த்து நிற்றல். (*phr.* stand at bay) *v.* குரை, உறுமு.

**Bayonet,** *n.* துப்பாக்கி முனை; சனியன். *v.* துப்பாக்கி முனையால் குத்து.

**Bazaar,** *n.* கடைத்தெரு, ஆவணம்; சந்தை.

**Be,** *n.* (*pr. t.* (1) am; (thou) art; (he she, it; all nouns, pronouns singular) is; (we, You, ye, they,

all nouns and pronouns plural) are; *p. t.* (I, he she, it, all nouns and pronouns singlular) was; (thou) wert; (we, You, Ye, they, all nouns and pronouns plural) were; *f. t.* will be, shall be; *pr.p*, being; *pp*. been; inf. to be.), இரு; ஆயிரு.

**Beach,** *n.* கடற்கரை. *v.* கரையேறச் செய்.

**Beacon,** *n.* மலைமேல் விளக்கம்; அவிரொளி; கலங்கரை விளக்கம்; குறியொளி; வழிகாட்டுகிற அல்லது எச்சரிக்கிற பொருள்.

**Bead,** *n.* உருண்டை மணி; நீர்த்துளி; வழிபாடு.

**Beadle,** *n.* சமயத்துணைவர். கோவில் குருவுக்கு உதவி செய்பவர்.

**Beak,** *n.* அலகு.

**Beaker,** *n.* குவளை, மூக்குக் குவளை; முகவை; கிண்ணம்.

**Beam,** *n.* விட்டம். துலையின் கோல்; ஒளிக்கற்றை. *v.* ஒளிவிடு; ஒளிர்; புன்னகை செய்.

**Bean,** *n.* அவரை; மொச்சை.

**Bear, 1**. *n.* கரடி; முரடன். The great bear, வடமீன் குழு. 2. ***v. i.*** (bore, borne) தாங்கு; படு; கொண்டு செல்; நடந்துகொள். ii (bore, born) பெறு; பெற்றெடு; (be born பிற) *n. ag. see* bearer, *pr. p. n. see* bearing.

**Beard,** *n.* தாடி. *v.* தாடியைப் பிடி.

**Bearer,** *n.* சுமப்பவன்.

**Bearing,** *n.* நடத்தை; *(pl.)* நிலை; சூழ்நிலை (கப்பல்) சூழிருக்கை.

**Beast,** *n.* விலங்கு; மாவினம்; காட்டு உயிரினம்; முரட்டு மனிதன். *a.* beastly. *see* bestial. *n.* beastliness.

**Beat,** ***v***. (beat, beaten) அடி; தோல்வியுறச் செய்; ஒழுங்காக இயங்கு. *n.* அடிப்பு; துடிப்பு; முறைகாவல்.

**Beatific,** *a.* பேரின்பமயமான beautitude.

**Beau,** *n.* (*pl.* beaux) (*f.* belle.) காதலன்; பகட்டன்; பகடி.

***beau ideal,*** *n.* மிக உயர்ந்த அழகு; மிகச் சிறந்தது; சிறப்பிலக்கு.

***beau monde,*** *phr. n.* நாகரிக சமூகம்.

**Beauty,** *n.* அழகு. *a.* beauteous, beautiful. *adv.* beautifully. *v.* beautify.

**Beaver,** *n.* நீர்நாய்; நீர்நாய் மயிர்த் தலையணி; நீர்நாய்த் தோல்

**Became,** *v. pt.* (become, பார்க்கவும்).

**Because,** *rel. adv.* காரணத் தினால்; இதனால்.

**Beck,** *n.* சைகை; அழைத்தல். *v.* சைகை செய்.

**Beckon,** *v.* சைகை செய்து அழை.

**Become,** *v.* (became, become) ஆகு; உண்டாகு; தகுதியாயிரு. *a.* becoming, தகுதியான.

**Bed,** *n.* படுக்கை; அடிப்பரப்பு; பாத்தி.

**Bedstead,** *n.* கட்டில்.

**Bedding,** *n.* படுக்கைக்கட்டு (மெத்தை, தலையணை முதலியன.)

**Bedeck,** *v.* அணிசெய்.

**Bedew,** *v.* நீர்த்துளிகளால் நனை; தெளி.

**Bedlam,** *n.* கிறுக்கர் வாழ்விடம்; கூச்சல் நிறைந்த இடம்.

**Bedouin,** *n. a.* பாலைவன வாழ்நன்; ஊர் சுற்றுபவன்.

**Bedraggled,** *a.* (ஆடைமுதலியன) அலங்கோலமான.

**Bed -rock,** *n.* அடிப்பாறை; அடிப்படையானது.

**Bee,** *n.* தேனீ.

**Beech,** *n.* மரவகை.

**Beef,** *n.* (*pl.* beeves) மாட்டு இறைச்சி.

**Beehive,** *n.* தேன் கூடு, தேன் அடை.

**Bee-line,** *n.* (இரு இடங்களை இணைக்கிற) நேர்கோடு, குறுக்கு நேர்கோடு.

**Been,** (*p.p.* of. Be..)

**Beer,** *n.* சாராய வகை.

**Beeswax,** *n.* தேன் மெழுகு.

**Beet,** *n.* கிழங்கு வகை, சர்க்கரைக் கிழங்கு (beetroot).

**Beetle,** *n.* வண்டு, விட்டில், தட்டான் பூச்சி.

**Befall,** *v.* (befell, befallen) நிகழ்; ஏற்பாடு; வந்துநேர்.

**Befit,** *v.* தகுதியாக்கு; தகுதியாயிரு.

**Befog,** *v.* பனியால் மறை.

**Befool,** *v.* ஏமாற்று.

**Before,** *adv. prep, conj.* முன் புறமாக எதிரே.

**Beforehand,** *adv.* முன் கூட்டி.

**Befriend,** *v.* உதவிசெய்.

**Beg,** *v.* இர; ஐயம் கோரு; வேண்டிக்கொள். *n.* beggar இரவலர். *a.* beggarly. *n. abs.* beggary.

**Began,** (*p.t.* of begin.)

**Beget,** (begot, begotten. பிறப்பி; தோற்றுவி; பெறு; பெற்றெடு.

**Begin,** *v.* (began, begun.) தொடங்கு. *n. abs.* beginning. *n. ag.* beginner.

**Begone**, *pred, a, int.* தொலைந்து போ.

**Begotton,** (*p. p.* of, beget)

**Beguil,** *v.* மகிழச்செய்; நேரம் போக்கு; மயக்கி ஏய்; மயக்கிக் கொண்டுசெல்.

**Begun,** (*p. p.* of begin)

**Behalf,** *n.* சார்புநிலை; (in or on one's behalf) சார்பு; திறம்.

**Behave,** *v.* நடந்துகொள்; நேர்மை யாக நட. *n.* behaviour, நடத்தை.

**Behead,** *v.* தூக்கிடு.

**Beheld,** (*p. t.* of behold.)

**Behest,** *n.* விருப்பம்.

**Behin,** *adv. prep. n.* பின் புறமாக; பின்புறத்தில்; பின்புறம்.

**Behind-hand,** *adv.* காலத்தால் பிற்பட்டு; காலந்தாழ்த்து.

**Behold,** *v.* (beheld) பார்.

**Beholden,** *a.* கடமைப்பட்டுள்ள.

**Behove,** behoove, *v.* பொருத்தமாயிரு; தகுதியாயிரு.

**Being,** *n.* அறிவுடைப் பொருள்; உரு; ஆள்.

**Belabour,** *v.* கடுமையாக அடி.

**Belated,** *a.* காலம் தவறிய; (வழிப்போக்கர்) பகல்நேரம் கடந்துவிட்ட காலந்தாழ்த்த.

**Belch,** *v.* உமிழ்.

**Beldam, beldame,** *n.* கிழவி.

**Beleaguer,** *v.* முற்றுகை செய்.

**Belfry,** *n.* மணிக்கோபுரம்.

**Belie,** *v.* பொய்ப்பி.

**Belief,** *n.* நம்பிக்கை; கோட்பாடு; (x disbelief; also unbelief,) நம்பிக்கை எதுவுமின்மை. miss belief, தவறான நம்பிக்கை. *v.* நம்பு; எண்ணு. (x disbelieve) *n. ag.* believer, நம்புபவர்; அகச்சமயி; ஆத்திகர்.

**Belittle,** *v.* குறைவாக எண்ணு; புறக்கணி.

**Bell,** *n.* மணி, *v.* மணிகட்டு.

**Belle,** *n.* அழகி. (*f. of beau*)

**Belligerent,** *a.* போரில் ஈடுபடுகிறவர். *n.* போரிடும் அரசு. *n. abs.* belligerency.

**Bell metal,** *n.* மணி வெண்கலம்.

**Bellow,** 1. *v.* (மாடு, ஆடு, எருமை) கத்து. *n.* உரத்த கத்தல். 2. *n. pl.* கொல்லன் துருத்தி.

**Belly,** *n.* வயிறு *(comb.) n.* bellyful, விரும்பும் அளவு.

**Belong,** *v.* உரிமையாயிரு.

**Belongings,** *pr. p. n. pl.* உடைமைப் பொருள்கள்.

**Beloved,** *a.* மிகவும்நேசிக்கிற, *n.* அன்புக்குரியவர்; காதலர்.

**Below,** *adv. prep.* கீழாக; தாழே.

**Belt,** *n.* தோல் பட்டை; அரைக் கச்சை; மேகலை வளையம்; வளைசூழல்; இடை நிலப்பகுதி. *a.* கச்சை அணி; தோல் பட்டையால் கட்டு.

**Bemoan,** *v.* துயருறு; புலம்பு; அழுதரற்று; ஏங்கு.

**Bench,** *n.* விசிப்பலகை; (வழக்கு மன்ற) நடுவர் குழு இருக்கை.

**Bend,** *n.* (bent) திரும்பு; வளை; குனி; கீழ்ப்படி. *n.* வளைவு; திருப்பம்; கோணல்.

**Beneath,** *adv. prep.* கீழே; 2. அடியில்.

**Benediction,** *n.* வாழ்த்துரை.

**Benefaction,** *n.* உதவி; நற்செயல். *n. pers.* benefactor. *fem. benefactress.*

**Benefice,** *n.* மானியம்.

**Beneficence,** *n.* நன்மை செய்தல், *a.* beneficent, நலஞ்செய்கிற.

**Beneficial.** *a.* நலந்தருகிற.

**Beneficiary,** *n.* நலம் பெறுவோர்.

**Benefit,** *n.* உதவி; சலுகை. *v.* உதவிசெய்; உதவிபெறு.

**Benevolence,** *n.* நன்மைசெய்யும் விருப்பம்; அற ஆர்வம். *a.* benevolent.

**Benighted,** a இரவால் சூழப்பட்ட; (வழிப்போக்கன்) இரவில் பயணம் செய்ய நேர்ந்த; அறியாமை யுடைய.

**Benign,** *a.* அன்புடைய; அரு ளுடைய. s.*a.* benignant *n.* benignity.

**Bent,** *a.* வளைவான. *n.* வளைவு; விருப்பம்; இயற்கை அவா.

**Benumb.** *v.* மரக்கச் செய்; திமிர்வடையச் செய்.

**Benzoin,** *n.* சாம்பிராணி.

**Bequeath,** *v.* இறுதிப்பத்திரம் எழுதிவை; உடைமை விட்டுப் போ; மரபுரிமையாகக்கொடு. *n.* bequest.

**Bereave,** *v.* (bereaved or Bereft,) (*gen. pass.*) இழக்கச் செய்; தவிக்கவிடு; துணை யின்றிவிடு. *n.* bereavement, (உறவினர் முதலியோர்)இழப்பு.

**Beriberi,** *n.* குழந்தை நோய் வகை; திமிர்நோய்.

**Berry,** *n.* உலர்ந்த விதை; கொட்டை.

**Berth,** *n.* தங்குமிடம்; துயிலிடம்; நற்பணியிடம்.

**Beseech,** *v.* (besought) கெஞ்சிக்கேள்.

**Bescem,** *v.* தகுதியாயிரு.

**Beset,** *a.* (beset) சூழ்; நெருக்கித் தாக்கு.

**Beshrew,** *v.* பழி. opt. mood, பழிக்கு ஆளாக்குக.

**Beside,** 1. *prep.* பக்கத்தில், *phr.* be beside oneself, தன்னை மறந்து மகிழ்; உணர்ச்சியில் தன்னைமற 2. *see* besides.

**Beside,** besides, *prep. adv.* மேலும்; தவிர; அல்லாமலும்.

**Besiege**, *v.* முற்றுகையிடு.

**Besmear,** *v.* பூசு.

**Besought,** (*p.t.* of beseech)

**Bespatter,** *v.* சிதறித்தெளி.

**Bespeack,** *v.* (bespoke or bespoken) முன் கூட்டியே பேசி வை.

**Besprinkly,** *v.* தெளி; சிதறு.

**Best,** *a., adv.* (*see* good, well) மிகச் சிறந்த.

**Bestial,** *a.* (beast) விலங்குத் தன்மையுள்ள; முரட்டுத்தனமான; நாகரிகமற்ற; கீழான. *n.* bestiality.

**Bestir,** *v.* எழுச்சிகொள்.

**Bestow,** *v.* கொடு; சேமித்து வை. *n.* bestowal.

**bestride,** *v.* (bestrode bestriden) கால்விரித்து நட; தாண்டிநட; எட்டிநட; கால்விரித் தமர்.

**Bet,** *n.* பந்தயம், *v.* பந்தயம் கட்டு; உறுதியாகக் கூறு.

**Betake,** *v.* (*p.t.* betook, *p. p.* betaken) மேற்கோள்.

**Betel,** *n.* வெற்றிலை.

**Bethink,** *v.* (bethought) நினைத்துப் பார்.

**Betide,** *v.* நிகழ்.

**Betimes,** *adv.* முன் கூட்டி; தகுந்த காலத்தில்.

**Betoken,** *v.* குறி; குறித்துக் காட்டு.

**Betook,** (*p.t.* of betake).

**Betray,** *v.* காட்டிக்கொடு; மறை வெளிப்படுத்து. *n.* betrayal.

**Betroth.** *v.* மணஉறுதி செய். *n. abs.* betrothal, betrothed, மணஉறுதி செய்யப்பட்ட (பெண், ஆண்).

**Better,** 1. *a. adv.* (*comp.* of good, well) சிறந்த; சிறப்பாக. *a.* சீர்திருத்தம் செய். *n.* (தன்னினும்) உயர் குடியினர். 2. *see* bettor.

**Better, bettor,** *n.* பந்தயம் வைப்பவன்.

**Between, betwixt,** *prep, adv.* (இருவர் அல்லது இருபொருள் களுக்கு) இடையே இடைமறித்து.

**Bevel,** *n.* சரிவு; சாய்வு. *a.* சரிவாகச் செய். *a.* bevelled.

**Beverage,** *n.* குடிநீர்.

**Bevy,** *n.* (பறவை. நங்கையர்). கூட்டம்.

**Bewail,** *v.* அழு; இழப்பு, நினைந் தழு.

**Beware,** *v.* எச்சரிக்கையாயிரு; கவனமாயிரு.

**Bewilder,** *v.* தடுமாறு; குழப்ப மடையச் செய். *n.* bewilder ment.

**Bewitch,** *v.* மந்திரத்தால் மயக்கு; மருட்டு; மிரட்டு. கவர்ச்சிசெய். *a.* bewitching. *n.* bewitchment.

**Beyond,** *adv. prep.* அப்பால்; உப்பால்; எட்டாத இடத்தில். *n.* the beyond, எதிர்காலம்; உம்மை; இறப்புக்குப் பிந்திய நிலை.

**Bias,** *v.* ஒருபுறமாகச் சாய்வி; ஒரு தலையாகப் பற்றுக் கொள்ளுவி. *n.* ஒர வஞ்சகம்; சரிதல்; மனக் கவர்ச்சிப்போக்கு. *pp. a.* biassed.

**Bible,** *n.* கிறித்துவரின் மறை நூல். *a.* biblical.

**Bicameral,** *a.* இரு அவை களுள்ள.

**Bicentenary,** *n. a.* இருநூறாம் ஆண்டுவிழா (சார்ந்த).

**Biceps,** *n.* இருதலைத் தசை (மேற்கை உள்தசை).

**Bicker,** *v.* சச்சரவிடு. *n.* சச்சரவு.

**Bicycle,** *n.* இருசக்கர வண்டி; மிதிவண்டி. *v.* மிதிவண்டி ஓட்டு. *n.* bicyclist.

**Bid,** (*p.t.* bid, bade; *p.p.* bid, bidde*n*. ( அழை; உத்தரவிடு; விலை கூறு. *n.* ஏலத்தில் விலைகூறுதல்; ஏலவிலை.

**Bide,** *v.* (bide one's time) எதிர்பார்த்திரு.

**Biennial,** *a.* இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறையான. *n.* இரு பருவச்செடி.

**Bier,** *n.* பாடை; ஆசந்தி.

**Bifocal,** *a. n.* (சில்) இரு குழி வுடைய, இருமுகப்புடைய.

**Bifurcate,** *v.* இருகிளைகளாகப் பிரி. *n.* bifurcation.

**Big,** *a. adv.* பெரிதான; மூத்த; தனிச் சிறப்புப்பட.

**Bigamy,** *n.* (ஒரே சமயத்தில்) இருமனைவி மணம்; இருமனை வாழ்வு. *a.* bigamous. *n. pers.* bigamist.

**Bigot,** *n.* கொள்கை வெறியர்; மூடப்பற்றுள்ளவர். *n. abs.* bigotry, *a.* bigotted.

**Bigwig,** *n.* (பேச்சு வழக்கு) பெரிய புள்ளி.

**Bike,** *n. v. abbr,* of bicycle, மிதிவண்டி (ஓட்டு).

**Bilateral,** *a.* இருபக்கமுள்ள; இரு கட்சிகள் சார்ந்த; சரிசமத் தொடர்புடைய.

**Bile,** *n.* பித்த நீர்; சீற்றம். *a.* bilious.

**Bilingual,** *a.* இருமொழி பேசுகிற.

**Bill,** 1. *n.* (பறவை) அலகு. 2. *n.* விலைப்பட்டி; பட்டியல். 3. *n.* சட்டப் பகர்ப்பு. 4. துண்டு வெளியீடு; சுவரொட்டி.

**Billet,** *n.* சிறு குறிப்புத் தாள். *v.* (படைவீரர் செலவின்) பொறுப் பேற்று.

***billet doux,*** *n.* காதல் கடிதம்.

**Billiards,** *n. (pl.)* மேடைக் கோற்பந்து.

**Billion,** *n.* (ஆங்கில நாட்டு வழக்கு) இலக்கக்கோடி; (அமெரிக்க நாட்டு வழக்கு) ஆயிரம் கோடி.

**Billow,** *n.* பெரிய அலை; கடல். *a.* billowy.

**Billy-goat,** *n.* ஆட்டுக்கடா.

**Bi monthly,** *a., n.* மாதம் இருமுறை (வெளியீடு); (அமெரிக்க வழக்கு) இருமாதங்களுக்கு ஒரு முறையான (வெளியீடு).

**Bin,** *n.* தொட்டி, dustbin, குப்பைத் தொட்டி.

**Bin,** *n.* (bound *p.p.* bound *pp. a.* bound bounden), கட்டு; பிணை; ஏடு தை; (ஏடு) கட்டடம் செய்; மொழியுறுதியால் கட்டுப்படுத்து; சட்டத்தால் கட்டுப்படுத்து. *n.* கட்டுமானம். *a.* பிணைக்கிற *n. pers.* binder. (ஏடு) கட்டடம் கட்டுபவர்.

**Binocular,** *n.* மூக்குக் கண்ணாடி, *a.* இரு கண்களுக்குரிய

**Biography,** *n.* வாழ்க்கை வரலாறு. *a.* biographical. *n. pers.* biographer.

**Biology,** *n.* உயிர்நூல். *a.* biological. *n. pers.* biologist.

**Bioscope, biograph,** *n.* படக்காட்சி.

**Biped,** *n.* இருகால் உயிர்.

**Birch,** *n.* மரவகை; பிரம்பு. *v.* பிரம்பினால் அடி.

**Bird,** *n.* பறவை.

**Birth,** *n.* பிறத்தல்; பிறப்பு; தொடக்கம்.

**Birthright,** *n.* பிறப்புரிமை.

**Biscuit,** *n.* மாப்பண்டம்; மாச்சில் (பிஸ்கோத்து).

**Bisect,** *v.* இரு பாதிகளாகப் பிரி; இருசமக்கூறிடு. *n.* bisection. *n. ag. impers.* bisector, சம கூறாக்குங் கோடு.

**Bisexual,** *a.* இருபால் கூறுள்ள; ஆண் பெண்பால் மயங்குகிற.

**Bishop,** *n.* சமயவட்டத் தலைவர்; தலைமகன்.

**Bismuth,** *n.* நிமிளை.

**Bison,** *n.* காட்டெருமை; ஆமா; கடமா.

**Bit,** *n.* சிறுதுண்டு; துணுக்கு.

**Bitch,** *n.* பெண் நாய்.

**Bite,** *v.* (*p.t.* bit; *p. p.* bitten or bit). கடி; வலி; உண்டாக்கு. *n.* கடித்தல்; உணவு. *n. ag.* Biter, கடிப்பவன்; தீங்கிழைப்பவன். (*phr.* biter bit. கெடுவான் கேடு நினைப்பான்) *a.* biting, காரமான; கடிப்புடைய.

**Bitter,** *a.* கசப்பான; வெறுப்பான, *n.* bitterness.

**Bitumen,** *n.* நிலக்கீல். *a.* bitu minous.

**Bivouac,** n (பிவூவக்) வான் வெளித் தங்கல்; இராவெளித் தங்கல். *v.* (bivoucked) இரவில் வெளியில் தங்கு.

**Bizarre,** *a.* இயல்புக்கு மாறான; பேயுணர்வுடைய; முரண் கலப்புடைய.

**Black,** *a.* கரிய; கெட்ட. *n.* கருமை; கரியநிறத்தான். *n.* blackenss, கருமை; இருள். *v.* blacken, கருமையாக்கு; கரி பூசு; இழிவு படுத்து; *(comb)* blackboard, *n.* கரும்பலகை.

**Blackguard,** *n.* போக்கிரி; *n. abs.* blackguardism.

**Blackmail,** *n. v.* அச்சுறுத்திப் பணம் பறி(த்தல்). *n. pers,*blackmailer.

**Blacksheep,** *n.* (கும்பலில் கரந் துறையும்) குற்றவாளி; இனக் கேடர்; குழுக்கேடர்.

**Blacksmith,** *n.* கருமான்; கொல்லன்.

**Bladder,** *n.* மெல்லியதோல் பை; ஊத்தாம்பெட்டி.

**Blade,** *n.* இலை (காம்புநீங்கிய பகுதி); வாள் அலகு.

**Blame,** *v.* குற்றங்கூறு. *n.* குற்றம். *a.* blamle. *a. (neg.)* blameless. *phr.* a blame worthy, குற்றங் கூறத்தக்க.

**Blanch,** *v.* வெண்மையாகச் செய்; வெளிறச் செய்.

**Bland,** *a.* இன்னமைதியுடைய; எழுச்சியுற்ற; அடக்கமுள்ள; அமைந்த.

**Blandish,** *v.* புகழ்ச்சி செய்; மிரட்டு. *n.* blandishment.

**Blank,** *a.* வெறுமையான; எழுதப் படாத. *n.* blankverse, எதுகை யில்லாத செய்யுள்ள; செந் தொடைப்பா.

**Blanket,** *n.* கம்பளம்.

**Blare,** *v.* (எக்காளம்) முழங்கு. *n.* முழக்கம்.

**Blaspheme,** *v.* (தெய்வம் அல்லது உயர்ந்தோரைப்) பழித்துரை; பழிப்புரை கூறு. *a.* blasphemous. *n.* blasphemy.

**Blast,** *n.* எக்காள ஓசை; கடுங்காற்று. *v.* சிதறச்செய்; அழி; உலையிலிட்டு உருக்கு.

**Blaze,** *v.* தீக்கொழுந்து. *v.* கொழுந்து விட்டெரி; விளம்பரப் படுத்து; (மரத்தில்) வடுக் குறியிடு.

**Blazer,** *n.* (படகு உலாவாணரின்) வண்ணச் சட்டை; (கொச்சை) புளுகு.

**Blazon,** *n.* வீரனின் மெய்க்கவசம். *v.* பலரறியச் செய்; அணிசெய்.

**Bleach,** *v.* வெண்மையாக்கு; நிறம் நீக்கு; சலவை செய்.

**Bleak,** *a.* நிறமற்ற குளிர் மிகுந்த; (இடம்) ஆளற்ற.

**Bleat,** *v.* (ஆடு) கத்து, *n.* ஆட்டின் கத்தல்.

**Bleed,** *v.* (bled), குருதிப் பெருக்கெடு; மனங்கனிவுறு; துயருறு; (*conn.* blood.)

**Blemish,** *v.* அழுக்காக்கு. *n.* குற்றம்; கறை.

**Blend,** *v. p. p.* (blended, blent) கல; ஒன்றுசேர். *n.* கலப்பு; கலப்ப நயம்; நயமுடைய மாதிரி.

**Bless,** *v.* வாழ்த்து; மகிழச் செய். *n.* blessing, வாழ்த்து; நன்மை; நல்வாழ்வு; பெரியோர் போற்றுகை; கடவுளருட்பேறு. *a.* blessed, (ப்ளெஸெட்) *n.* blessed.

**Blew,** *v.* (*p.t.* of blow).

**Blight,** *v.* வாடச்செய். *n.* செடி கொடி நோய். *n. ag.* Blighter, அழிப்பவன்; தொந்தரவு செய்பவன்.

**Blind,** *a.* குருடான; அறிவில்லாத, *v.* குருடாக்கு. *n.* திரை. *adv.* blindly; *n.* blindness.

**Blindfold,** *a. adv.* கண்களைக் கட்டியவாறு; குருட்டுத்தனமாக. *a.* கண்களைக் கட்டு.

**Blink,** *v.* கண்ணிமைகொட்டு; தெண்டத்தெண்ட விழி; ஒன்று மறியாது விழி; மங்கலாக ஒளிவிடு.

**Blinkers,** *n. (pl.)* குதிரை கண் மறைப்பு.

**Bliss,** *n.* பேரின்பம், *a.* blissful.

**Blister,** *n.* கொப்புளம். *v.* கொப்புளமுண்டாக்கு.

**Blizzard,** *n.* உறைபனிப்புயல்.

**Block,** *n.* மரக்கட்டை; தொகுதி; தடை. *v.* தடைசெய்.

**Blockade,** *n.* முற்றுகை. *v.* போக்கு வரவைத் தடைசெய்.

**Bloke,** *n.* (பேச்சு வழக்கு) ஆள்; பேர்வழி.

**Blond, blonde,** *a.* பொன்னிறமான.

**Blood,** *n.* குருதி; குருதிமரபு; உறவு. *a.* bloody குருதி தோய்ந்த; கொலைகாரத் தனமான.

**Bloodhound,** *n.* வேட்டை நாய்.

**Blood -shed,** *n.* கொலை.

**Blood-shot.** *a.* குருதிச் சிவப்பான.

**Blood sucker,** *n.* (நீர்வாழ்) அட்டை; பணம் பறிப்பவன்.

**Blood-vessel,** *n.* குருதிக்குழாய்.

**Bloom,** *n.* மலர்; வனப்பு; புது மலர்ச்சி. *v.* மலர் அலர்; மலர்ச்சியுறு; வனப்புடன் விளங்கு.

**Bloomer,** *n.* (பேச்சு வழக்கு) தவறு.

**Blossom,** *n.* மலர். *v.* மலர்ந்து விரி; அலர்.

**Blot,** *n.* கறை; குற்றம். *v.* கறைப் படுத்து; அழி; அவமதி. *n. ag.* blotter.

**Blouse,** *n.* மார்புச் சட்டை.

**Blow,** *v.* (blew, blown) (காற்று) வீசு; ஊது; பருமனாகு; மலர். *n.* பேரடி; மிகுதுயர்.

**Blubber,** *v.* ( (பேச்சு வழக்கு) முகம் வீங்க அழு; விம்மி அழு; திமிங்கிலக் கொழுப்பு.

**Bludgeon,** *n.* குண்டாந்தடி. *v.* தடியால் அடி.

**Blue,** *a.* நீலநிறமான. *n.* நீலநிறம். *(id)* blue blood, உயர்குடி; blue looks, வெறுப்பு; red and blue; நாடி நரம்பு; blue jacket, கப்பற் படைஞர்; blue stocking, இலக்கிய அறிஞர்.

**Blue-book,** *n.* (அரசியல் மன்ற அறிக்கையின்) திருந்தா முதல்படி.

**Bluff,** *a.* செங்குத்தான; ஒளிவு மறைவற்ற பருவெட்டான. *n.* மொட்டை, அச்சுறுத்து. *v.* மொட்டை அச்சுறுத்துச் செய்; வெற்றுப் புகட்டுரை பேசு.

**Blunder,** *v.* தவறு செய். *n.* தவறு.

**Blunderbuss,** *n.* பழையகாலக் கைத்துப்பாக்கி.

**Blunt,** *a.* மழுங்கலான; அறிவுக் கூர்மையில்லாத; ஒளிவு மறை வின்றிப் பேசுகிற; மொட்டை மழுங்கலான. *v.* மழுங்கலாக்கு.

**Blur,** *n.* மங்கலான தோற்றம். *v.* மங்கலாக்கு.

**Blurt,** *v.* உளறிக்கொட்டு.

**Blush,** *v.* (முகத்தில்) சிவப்பாகு; வெட்கப்படு. *n.* முகஞ்சிவத்தல்; வெட்கம்; நாணம்.

**Bluster,** *v.* தற்புகழ்ச்சிசெய்; வீம்புபேசு. *n.* வீம்பு; தற்புகழ்ச்சி.

**Boa constrictor,** *n.* (தென் அமெரிக்க) மலைப்பாம்பு.

**Boar,** *n.* ஆண்பன்றி; காட்டுப் பன்றி.

**Board,** *n.* பலகை; உணவு மேடை; கப்பலின் பக்கம்; (on board - கப்பல் மேல்) *v.* பலகையால் மூடு; உணவளி; கப்பல் அல்லது தொடர் ஊர்தியில் ஏறு. *n. pers.* boarder, (விடுதியில்) உண்பவர். *n.* boarding, உணவேற்பாடு (boarding house.)

**Boast,** *v.* தற்புகழ்ச்சிசெய். *n.* தற்புகழ்ச்சி *a.* boastful.

**Boat,** *n.* ஓடம். *v.* (in the same boat, ஒரே வகை இடரில்)

**Bob,** *v.* மித; அமிழ்ந்தமிழ்ந்துயர்; ஊசலாடு; மயிர் குட்டையாக வெட்டு. *a.* மயிர்முடி; குஞ்சம்; ஊசல் குண்டு.

**Bobbin,** *n.* துடிக்கட்டை; தார்க்குழல்.

**Bobby,** *n.* (பேச்சுவழக்கு) ஊர் காவலர்.

**Bode,** *v.* முன் அறிவி; முன் குறி.

**Bodice,** *n.* பெண்களின் உள்சட்டைக் கச்சு.

**Body,** *n.* உடல்; உடற்பகுதி; வண்டியின் உடற்பகுதி; சட்டையின்

உடற்பகுதி; தலைசினையற்ற உடற் பகுதி. குழு; கூட்டம். *adv.* bodily உடனுடன்; நேராக ஆளையே.

**Body-guard,** *n.* மெய் காவலர்.

**Bog,** *n.* சதுப்பு நிலம். *v.* முழுகிப் போ.

**Bogey, Bogy,** *n.* பேயுரு; பூச் சாண்டி; கற்பனை உரு.

**Bogus,** *a.* போலியான.

**Bohemian,** *a., n.* பொஹிமியா நாட்டார்; நாடோடி; கட்டற்றுத் திரிபவர்

**Boil,** *v.* கொதி. *n.* கொப்புளம்; குருதிக்கட்டி. *n. ag. impers* boiler, வேம்பா.

**Boesterous,** *a.* பகட்டாரவார முடைய; கும்மாளமடிக்கிற.

**Bold,** *a.* துணிவுள்ள; முனைப்பான; பெரிதான; தெளிவாகத் தெரிகிற. *n.* boldness.

**Bole,** *n.* அடிமரம்.

**Bolshevik,** *n.* (ரஷ்ய) தீவிர பொதுவுடைமைக் கட்சியார். *n. abs.* bolshevism.

**Bolster,** *n.* தலையணை; அணை. ஆதாரம். *v.* முட்டுக்கொடு.

**Bolt,** *n.* அம்பு; மின்னல்; தாழ்ப்பாள். *v.* தப்பி ஓடு; விழுங்கு; கதவடை; பூட்டு.

**Bomb,** *n.* வெடிகுண்டு, *v.* குண்டு வீசு.

**Bombard,** *v.* குண்டுகளினால் தாக்கு, *n.* bombardment.

**Bombast,** *n.* தற்பெருமைப் பேச்சு, *a.* bombastic.

***bonafide,*** *a. adv.* நல்லெண்ணத் தோடு; நம்பிக்கையோடு; மலரணையான. *n.* bonafides.

**bon-bon,** *n.* இனிப்புத் தின் பண்டம்.

**Bond,** *n.* கட்டுப்பாடு; பிணைப்பு; ஒப்பந்தம்; பத்திரம். *s.n.* bondage, தளை; அடிமைத்தனம். *n.* bondsman அடிமை.

**Bone,** *n.* எலும்பு. *a.* bony.

**Bonfire,** *n.* சொக்கப்பனை; குன்றின் மேலிட்ட ஒளி; விழாப்பந்தம்.

**Bonnet,** *n.* (பெண்டிர் அணியும்) குல்லாய்; பாகை.

**Bonny,** *a.* அழகிய; தளதளப்பான; மகிழ்ச்சியான தோற்றமுடைய.

**Bonus,** *n.* விருப்பூதியம்; மிகையூதியம்.

**Booby,** *n.* முட்டாள்; கடற்பறவை வகை.

**Book,** *n.* புத்தகம்; ஏடு; சுவடி. *v.* புத்தகத்தில் பதிவு செய்; (பயணநுழைவுச் சீட்டு) வாங்கு. *a.* bookish, புத்தகப் பூச்சியான. *n.* diminut booklet; *(comb.)* booking clerk, பயணச் சீட்டுக்கொடுப்பவர்; booking office, பயணச் சீட்டு மனை; book-keeping, கடைக்கணக்கு; வாணிகக் கணக்குமுறை; book-post, நூலஞ்சல், book-worm, புத்தகப்பூச்சி; புத்தகப் பூச்சி போன்றவர்.

**Boom,** *n. v.* சங்கோசை (செய்) *n.* சங்கோசை; திடீர் விலையேற்றம்; தேவை மிகுதி; புகழ் உச்சி.

**Boomerang,** *n.* (எறிந்தவனிடமே திரும்பி வரும்) வளைதடி; சக்கரப் படை; (ஆஸ்திரேலியப் பழங்குடியினர்க்குரிய) எறிபடை.

**Boon,** *n.* வேண்டுகோள்; உரிமை யளிப்பு; உரிமைப்பேறு. *a.* மனதுக்குகந்த.

**Boor.** *n.* காட்டாள். *a.* boorish.

**Boost,** *v.* விளம்பரம் செய்; மதிப்பை உயர்வாக்கு.

**Boot,** 1. *n. (pl)* செருப்பு வகை. 2. *n.* வாய்ப்புப் பேறு; நலம் (to boot, மிகையாக). *v.* பயன் அளி. *a. (neg.)* bootless, பயனற்ற.

**Booth,** *n.* குடிசை; கூடாரம்; சிறுகடை; சாவடி.

**Bootlegger,** *n.* திருட்டுச் சாராயம் முதலியன விற்பவன்.

**Booty,** *n.* திருட்டுச் சொத்து; கொள்ளைப்பங்கு.

**Borax,** *n.* வெண்காரம்.

**Border,** *n.* எல்லைப்புறம்; வரம்பு; கரை. *v.* எல்லையாயிரு; கரையாயமை.

**Bore,** 1. *v.* துளை செய்; சோர் வடையச் செய். *n.* துளை; ஓயாத தொந்தரவு; சடைவு; ஓய்வில்லாமல் தொந்தரை செய்பவன். *n. abs.* boredom,. *n. ag. impers,* borer, துளையிடும் கருவி.

**Bore,** (*p.t.* of bear).

**Born,** *a.* (*p.p.*of bear) பிறந்துள்ள.

**Borne,** *v.* (*p. p.* of bear) சுமந்து.

**Borought,** burgh, *n.* தன்னாட்சியுரிமை பெற்ற நகரம்.

**Borrow,** *v.* கடன் வாங்கு. *n. ag,* borrower.

**Bosh,** *n. int.* பொருளற்ற பேச்சு விட்டுத் தொலை.

**Bosom,** *n.* மார்பு; உள்ளம்; மேற்பரப்பு

**Boss,** 1. *n.* குமிழ், 2. (பேச்சு வழக்கு) பணித்தலைவர். *v.* மேலாளித்தனம் பண்ணு.

**Botany,** *n.* செடியின நூல். *a.* botanic, botanical. *n. pers.* botanist.

**Botch,** *n.* ஒட்டுவேலை. *v.* குறை பாடாக வேலைசெய் (hotch-potch)

**Both,** *a. pron.* இரண்டும் இருவரும்.

**Bother,** *v.* தொந்தரைசெய். *n.* தொந்தரவு. *a.* bothersome, *vbl n.* botheration.

**Bottle,** *v.* குப்பி; புட்டி; (வைக்கோல்) கட்டு.

**Bottom,** *n.* அடிப்புறம்; தூர். *a.* அடிப்பட்ட; தூர்சார்ந்த. *v.* அடிகோலு; அடிசார். *a. (neg.)* bottomless, அடித்தளம் காணாத; ஆழமிகுதியுடைய.

**Boudoir,** *n.* பெண்டிர் உள்துறை.

**Bough.** *n.* மரக்கிளை.

**Bought,** (buy, பார்க்கவும்).

**Boulder,** *n.* கற்பாறை.

**Bounce,** *v.* துள்ளிக் குதி. *n.* துள்ளல். s. *n.* bouncer. நாணமில்லாப் பொய்.

**Bound,** 1. *n.* எல்லை, *v.* எல்லை யாயிரு. 2. *pred., a.* போக ஒருங்கி; நாடிப் போய்க்கொண்டு. 3. (*p. p.* of bind) கடமைப்பட்ட; கட்டுண்ட. 4. *v.* கதி; தள்ளு; எழுந்தெழுந்தமிழ்; *n.* துள்ளல்; குதி; (1) *n.* boundary, எல்லை; வேலி. (2) boundless, எல்லை யில்லாத. (3) *p. p. a.,* bounden, மிகக் கடமைப்பட்ட.

**Bounty,** *n.* கொடை; வளம்; வள்ளன்மை; ஏராளமான; வளமான *a.* bounteous, bountiful, வள்ளன்மையுடைய.

**Bouquet,** *n.* (பொக்கே) மலர்ச்செண்டு.

**Bourgeoisie,** (பூர்ஷ்வா) *n.* நடுத்தரவகுப்பு.

**Bout,** *n.* குடித்தல், மற்போர்.

**Bovine,** *a.* மாட்டுக்குரிய.

**Bow,** (பௌ) *v.* தலைவணங்கு; குனி *n.* வணக்கம்.

**Bow,** (போ) 1. *n.* வில்; யாழ் மீட்டும் வில். *v.* யாழ் வில் மீட்டு. 2. *n.* கப்பல் முன்புறம். i. *(comb) n.* bow man, வில்லாளி. *n.* bowshot, அம்பு எய்யும் தொலை.

**Bowels,** *n. (pl.)* குடல்.

**Bowler,** *n.* 1. (பழவழக்கு) கும்பா; (செய்யுள் வழக்கு) கிண்ணம்; முடப்பந்து. *v.* முடப் பந்துருட்டு; முடப்பந்து எறி. *n.* bowler, முடப் பந்தாட்டக்காரர்.

**Box,** *n.* 1. பெட்டி, *v.* பெட்டியில் வை. 2. *n.* (வண்டியின் முன் புற) இருக்கை; (நாடகக் கொட்டகை) மூடிருக்கை. 3. *v.* (செப்பையில்) அடி; குத்துச் சண்டை செய். *n.* (செவிட்டில் அடிக்கும்) அடி; அடித்தல் (3) *n. pers.* boxer, *n.* boxing.

**Boy,** *n.* பையன்; சிறுவன் *a.* boyish, *n.* boyhood.

**Boycott,** *n., v.* கட்டு மறுப்பு (ச்செய்); வெட்டு விலக்கு(ச்செய்)

**Brace,** *n.* சோடி இணை; பிணைப்பு; ஆதாரம் *(pl.)* காலுறைப் பட்டைகள் இரட்டை வளைகோடுகள் *v.* இறுக்கு *a.* bracing உடல் வலுவூட்டுகிற.

**Bracelet,** *n.* கைவளை; காப்பு.

**Bracken,** brake, *n.* புதர் வகை.

**Bracket,** *n.* அடைப்புக் குறி; கவரணை. (curved) வளைவு அடைப்பு; (square) பகர அடைப்பு; (double) இரட்டை அடைப்பு etc.

**Brackish,** *a.* (நீர்) சற்று உப்பான; கடுப்பான.

**Brag,** *v.* தற்புகழ்ச்சி செய். *n.* தற்புகழ்ச்சி. *n. pers.* Braggart.

**Braggadocio,** *n.* வீண் பெருமை.

**Braid,** *n.* பின்னல்; முறுக்கிய கயிறு; நாடா; வாரிழை. *a.* பின்னு. வாரிழை வைத்துத் தை.

**Braillc,** *n.* குருடர்கள் எழுத்துமுறை.

**Brain,** *n.* மூளை; அறிவு. *a.* brainy, அறிவுள்ள.

**Brake,** 1. *n.* முட்டுக்கட்டை; சக்கரத் தடுக்கு. 2. *see* bracken.

**Bramble,** *n.* முட்செடி.

**Bran,** *n.* தவிடு.

**Branch,** *n.* கிளை; கொப்பு; கிளை நிலையம், *v.* கிளையாகு; பிரி.

**Brand,** *n.* கொள்ளிக்கட்டை; சுட்ட தழும்பு; (வாணிகச் சரக்குமீது இடப்படும்) பொறிப்பு; சின்னம்; வகை. *v.* சூடுபோட்டுக் குறியிடு; பழிசுமத்து.

**Brandish,** *a.* சுழற்று.

**Brandy,** *n.* சாராய வகை; பழத்தேறல்.

**Brass,** *n.* பித்தளை பணம்; நாணமின்மை. *a. see* brazen; *n. pers. see* brazier.

**Brat,** *n.* மதலை; சிறு குழவி.

**Bravado,** *n.* ஆட்டபாட்டம்; பகட்டார்ப்பரிப்பு.

**Brave,** *a.* துணிவான; வீறிய; அச்சமற்ற; உரமான; *v.* எதிர்த்து நில். *n.* bravery.

**Bravo,** *int. n.* மிகநன்று. *int.* நன்று!

**Brawl,** *n. v.* சச்சரவு செய்.

**Brawn,** *n.* தசை நார்; ஆண் பன்றி இறைச்சி. *a.* brawny.

**Bray,** *v.* (கழுதை) கத்து. கனை.

**Braze,** *v.* பற்றுவை.

**Brazen,** *a.* (> brass) பித்தளையாலான; நாணமற்ற *v.* நாணமில்லாமல் காரியம் செய்.

**Brazier,** (> brass) 1. *n.* கன்னான். *n.* 2. தணல் தட்டு.

**Breach,** *n.* பிளவு; உடைப்பு. *v.* பிளவுசெய்; உடைப்பிடு.

**Bread,** *n.* அப்பம்; உணவு.

**Breadth,** *n.* (> broad) அகலம்; பரப்பு; பரந்த நோக்கம்.

**Break,** *v.* (broke, broken) உடை; தோன்று; (வேகத்தை) குறை. *n.* இடைநிறுத்தம்; முறிவு; *(comb) n.* breakdown. ஓய்வு.

**Breaker,** *n.* பெரிய அலை.

**Breakfast,** *n.* காலையுணவு. *v.* காலையுணவு கொள்.

**Breakneck,** *a.* தலை தெறிப்பான. மிகு விரைவான.

**Breakwater,** *n.* நீர்த்தடை; அலைத் தடுக்கு; அணை; கல்லடை.

**Breast,** *n.* மார்பு; நெஞ்சம்; உள்ளம், *v.* எதிர்த்துத் தாங்கு.

**Breath,** (ப்ரெத்) *n.* மூச்சு. *a.* breathless, உயிரில்லாத; பெருமூச்சு விடுகிற; காற்று வீசாத.

Breathe, (ப்ரீஃத்) *v.* மூச்சு; உயிர்ப்பு வாங்கு.

**Breeches,** (ப்ரீச்சஸ்) *n.* கால்சட்டை.

**Breed,** *v.* (bred) பயிற்றிவளர்; பயிற்றுவி; பெற்றுப் பெருகு; இனம் பெருக்கு. *n.* பயிற்சியினம்; நற்பயிற்சி மரபு; பயிற்சிமரபு. *n.* breeding. *(comb.) a.* well-bred, ill-bred. நன்கு அல்லது கேடாக வளர்க்கப்பட்ட; நாகரிகமுள்ள அல்லது இல்லாத.

**Breeze,** *n.* தென்றல்; இளங்காற்று. *a.* breezy, (கோடுகள்) காற்றுப் போக்கான; நீளலை ஒழுக்குடைய.

**Brethren,** *n. pl.* (brother) உடன் பிறவாத்தோழமை, உடன்பிறப் பாளர் (அன்பு வழக்கு).

**Brevity,** *n.* சுருக்கம்.

**Brew,** *v.* சாராயவகை வடி. *n.* குடிவகை. *n.* brewery, சாராய ஆலை.

**Briar, Brier,** *n.* முட்செடி.

**Bribe,** *n.* கைக்கூலி. *v.* கைக்கூலி கொடு. *n.* bribery, கைக்கூலி கொடுத்தல்.

**Brick.** *n.* செங்கல்.

**Bridal,** *n.* திருமணம்; மண விருந்து; மணவிழா. *a.* திருமண வினை சார்ந்த.

**Bride,** *n.* மணப்பெண்.

**Bride-groom,** *n.* மணமகன்; மாப்பிள்ளை; மணவாளன்.

**Bridge,** *n.* பாலம்; கப்பல் இடை மேடை; மூக்குக் கண்ணாடி இணைப்பு; சீட்டாட்ட வகை. *v.* (பாலமாக) இணை; இடைநிரப்பு.

**Bridle,** *n.* கடிவாளம், *v.* கட்டுப் படுத்து; கடிவாளம் மாட்டு.

**Brief,** *a.* சுருக்கமான. *n.* சலுகை வாதம்; ஆதரவுரை.

**Brier,** *n. see* briar.

**Brigade,** *n.* படைப் பகுதி. *a. n.* brigadier, படைப்பகுதித் தலைவன்.

**Brigand,** *n.* கொள்ளைக்காரன்.

**Bright,** *a.* ஒள்ளிய; ஒளிர்வுடைய; மகிழ்ச்சியுள்ள; அறிவுக் கூர்மை யுள்ள. *v.* brightern. *n.* bright ness. *adv. b*rightly.

**Brilliant,** *a.* சுடர் வீசுகின்ற; ஒளி துளங்குகிற! கதிரெறிக்கின்ற; மிகுந்த அறிவு படைத்த. *n.* பட்டையிட்ட வைரம். *n.* brilliance. brilliancy, *adv.* brilliantly.

**Brilliantine,** *n.* தலைநெய்; மயிர்க்குழம்பு.

**Brim,** *n.* விளிம்பு, *v.* விளிம்பு வரை நிரப்பு; பொங்கித் ததும்பு.

**Brimstone,** *n.* கந்தகம்; கந்தகக் கல்.

**Brine,** *n.* உவர்நீர்; கடல்நீர்; கடல். *a.* briny.

**Bring,** *v.* (brought) கொண்டு வா; கொணர்; அளி.

**Brink,** *n.* செங்குத்தான அருகு; நீர்நிலையின் ஓரம்.

**Brisk,** *a.* சுறுசுறுப்பான; விரைவான. *n.* briskness.

**Bristle,** *n.* கட்டையான தடித்த முள்மயிர். சிலிர்; அடர்ந்து நிறைந்திடு.

**Brittle,** *a.* எளிதில் உடையக் கூடிய; எளிதில் நொறுங்கக் கூடிய. *n.* brittleness.

**Broach,** *n.* அகப்பைக்கோல்; துளையிடும் கருவி. *v.* தொளையிட்டு நீர்மம் வெளியே எடு; வெளிக்கொணர்; (பேச்சு, வாதம் செய்தி) தொடங்கு.

**Broad,** *a.* அகலமான; பரந்த நோக்கமுடைய; நிறைவான; தெள்ளத் தெளிவான; (broad daylight); *adv.* அகலத்தில் (six feet broad) *v.* broaden*. n. see* breadth.

**Broadcast,** *a. adv.* எல்லாத் திசைகளிலும். *n.* broadcasting ஒலிபரப்பு. *v.* பரப்பு; வானொலி பரப்பு.

**Broadside,** *n.* வாள்; (நீர்மேலுள்ள கப்பலின்) பக்கம்.

**Brocade,** *n. v.* மணிப்பின்னல் (பின்னு)

**Brochure,** *n.* துண்டு வெளியீடு; சிறு வெளியீடு; சிறுநூல்.

**Broken,** broke. (*p.p.* of break)

**Broker,** *n.* தரகன். *n. abs. com.* brokereage, தரகு; தரகுவேலை.

**Bronchus,** *n.* (*pl.* bronchi) மூச்சுக்குழாயின் இரு பிரிவுகளுள் ஒன்று. *s. n.* bronchitis. மூச்சுக்குழல் அழற்சி.

**Bronze,** *n.* வெண்கலம்; வெண்கல நிறம், *v.* வெண்கல நிறமாக்கு; நிறங்குன்று.

**Brooch,** *n.* குத்தூசி; ஆடை ஊக்கு.

**Brood,** *n.* முட்டைத் தொகுதி; ஒரு தடவையிட்ட முட்டையின் குஞ்சுத் தொகுதி. *v.* அடை கா; நினைவில் ஆழ்ந்திரு. *conn. see* breed.

**Brook,** *n.* ஓடை, *v.* தாங்கு; பொறு. (dim) brooklet.

**Broom,** *n.* துடைப்பம், வாருகோல்; விளக்குமாறு.

**Broth,** *n.* கஞ்சி; கூழ்.

**Brothel,** *n.* பொதுமகளிர் மனை.

**Brother,** *n.* (*pl.* brothers, also *see* brethren) உடன் பிறப்பாளன்; அண்ணன்; தம்பி; தோழன், (brother-in-arms etc.) *a.* brotherly. *n. abs.* brotherhood. *(comb)* brother-in-law, மனைவி உடன் பிறந்தான்; உடன் பிறந்தாள் கணவன்.

**Brougham,** *n.* மூடுவண்டி.

**Brought,** (bring, பார்க்கவும்.)

**Brow,** *n.* புருவம்; நெற்றி; மேடு; அருகு; (கப்பல் ஏறும் சாரப் பலகை.)

**Browbeat,** *v.* மடக்கு; எதிர்த்து அடக்கு.

**Brown,** *n.* மாநிறம்; தவிட்டு நிறம். *a.* தவிட்டு நிறமான. *a. (comb.)* brownstudy, ஆழ்ந்த சிந்தனை, *a.* brownish.

**Brownie,** *n.* கூளி; குறளி; பொடியன்.

**Browse,** *n.* இளந்தளிர். *v.* தழை மேய்.

**Bruin,** *n.* (செய்யுள் வழக்கு) கரடி.

**Bruise,** *v.* கன்னவை, புண்படுத்து. *n.* கன்னிப்போன காயம்; புண்.

**Brunette,** *n.* மாநிற அழகி.

**Brunt,** *n.* தாக்கு முனை.

**Brush,** *n.* தூரிகை; மயிர்க் குச்சு. *v.* துடை; தூரிகை தடவு.

**Brute,** *n.* மா; விலங்கு; முரடன்; கொடுமையுள்ள மனிதன்; முரட்டு விலங்கு. *a.* brutish, brutal. *n.* brutality, *v.* brutalize, விலங்கு போல் ஆக்கு; விலங்குத் தன்மை யாக்கு.

**Bubble,** *n.* (நீர்க்) குமிழி; எளிதில் அழியும் தன்மையது *v.* குமிழி யிடு.

**Bubo** *n.* நெறிக்கட்டு; அக்குள் நெறிக்கட்டு. (Bubonic, fever plague, மாமாரி நோய்.)

**Buck,** *n.* மான்; (மான், ஆடு, முயல்) ஆண் விலங்கு.

**Bucket,** *n.* வாளி.

**Buckle,** *n.* கச்சு இறுக்கி; வில்லை; பட்டை முகப்பு; பட்டைப்பிடி. *v.* மாட்டு; மடிதற்று; வேலையில் முனை; நெரிந்து விழு.

**Buckler,** *n.* சிறுகேடயம்.

**Bud,** *n.* அரும்பு; தளிர்; மொக்கு; பூ மொட்டு. *v.* தளிர்விடு; அரும்பு.

**Budge,** *v.* நகர்; இடம்விட்டுக் கொடு.

**Budget,** *n.* வரவு செலவுத் திட்டம், *v.* மதிப்பீடு.

**Buff,** *n.* (buffalo) மங்கிய மஞ்சள் நிறக் கெட்டித்தோல். *a.* மங்கிய மஞ்சள் நிறமான.

**Buffalo,** *n.* எருமை.

**Buffer,** *n.* தாக்குதல் தடுக்கும் பொறி; 'அடிதாங்கி' ஊடேநின்று தாக்குதல் ஏற்கும் பொருள் (buffer state.)

**Buffet,** *n.* அடித்தல்; தாங்குதல், *v.* அடி; எதிர்த்து நில்; அடித்து வீக்கு.

**Buffoon,** *n.* கோமாளி.

**Bug,** *n.* மூட்டைப் பூச்சி.

**Bugbear,** *n.* பூச்சாண்டி.

**Bugle,** *n.* கொம்பு; எக்காளம்.

**Build,** *v.* (built) (அருவழக்கு) *p.p.* builded. (கட்டடம் அமை; கட்டு; கட்டமை; இணைத்துரு வாக்கு. *n.* (கட்டட) அமைப்பு. *n.* building, கட்டடம்.

**Bulb,** *n.* பூண்டு; உள்ளிப் பூண்டு; குமிழ். *a.* bulbous, குமிழ் வடிவான.

**Bulge,** *v.* புடை;உப்பு; வீங்கு. *n.* புடைப்பு. வீக்கம்; வளைவு.

**Bulk,** *n.* பருமன்; பெரும்பகுதி. *a.* bulky, பருமனான.

**Bull,** *n.* 1. காளை; (மாடு. யானை, திமிங்கலம் முதலியவற்றின்) ஆண் விலங்கு; (கத்தோலிக்கத் திருத் தந்தை) கட்டளை.

**Bulldog,** *n.* நாய்வகை.

**Bullet,** *n.* துப்பாக்கிக்குண்டு; இரவை.

**Bulletin,** *n.* செய்தி அறிக்கை.

**Bullion,** *n.* வெள்ளி அல்லது தங்கக் கட்டி

**Bullock,** *n.* எருது. *a.* bullish.

**Bull's eye,** *n.* துப்பாக்கி சுடும் இலக்கின் மையம்; விளக்கின் முகப்பாகவுள்ள குவிந்த கண்ணாடிச் சில்.

**Bully,** *n.* எளியவரைக் கொடுமை செய்பவன்; கொடுமைக்காரன். *v.* கொடுமைப்படுத்து; அச்சுறுத்தி அடக்கியாளு.

**Bulwark,** *n.* அலங்கம்; கோத்தளம்; தடைச்சுவர்; பாதுகாப்பு.

**Bump,** *v.* மோது; முட்டு; இடி. *n.* மோதுதல்.

**Bumper,** *n.* சாராயம் நிறைந்த கிண்ணம்; ஏராளமான பெருக்கம்; (உந்து பொறிவண்டியின்) முட்டுத் தாங்கி.

**Bumptious,** *a.* இறுமாப்புடைய.

**Bumpy,** *a.* நொடியான; (மேடு பள்ளத்தால்) ஆட்டங் கொடுக்கிற; துள்ளிக் குதிக்கிற.

**Bun,** *n.* (பழஞ் செய்யுள். குழந்தை வழக்கு) பொங்கப்பம்; அணில்; முயல்.

**Bunch,** *n.* கொத்து. *v.* ஒன்றாகச் சேர்.

**Buncombe,** *n. see* bunkum.

**Bundle,** *n.* மூட்டை. *v.*மூட்டை கட்டு.

**Bungalow,** *n.* மாளிகை.

**Bungle,** *v.* குளறுபடி செய்; தவறு செய்; மோசமாக வேலைசெய்.

**Bunk,** *n.* அறை; தொட்டி; சிறுகடை.

**Bunkum, Buncombe,** *n.* புரட்டு; பித்தலாட்டம்.

**Bunting,** *n.* கொடித்துணி.

**Buoy,** *n.* மிதவை; மிதப்புக் கட்டை *v.* மித; மிதக்க வை; உந்து; கிளர்ச்சியூட்டு *a.* buoyant, மிதக்கிற; கிளர்ச்சியுடைய *n. abs.* buoyancy, மிதப்புப்பண்பு; மிதப்பாற்றல்.

**Burden, Burthen,** *n.* சுமை; பளு; பாரம்; பொறுப்பு; கவலை; பல்லவி. *v.* பளுவேற்று.

**Bureau,** *n.* (pl. bureaux,) இழுப்பறைப் பெட்டி, அறைப் பெட்டி; அலுவலகம்; பணிமனை; செயலகம்.

**Bureaucracy,** *n.* பணித்துறை ஆட்சி; ஒருமுக மைய ஆட்சி; பணித்துறைக் குழு. *a.* bureaucratic. *n. pers.* bureaucrat.

**Burettee,** *n.* (நீர்ப் பொருள்களை அளக்கும்) அளவைக் குழாய்.

**Burgess, Burgher,** *n.* நகரத்தார்; நகரமூப்பர்.

**Burglar,** *n.* திருடன். *n. abs.* burglary, திருட்டு. *v.* burgle, திருடு.

**Burial,** *n.* (Bury) புதைவினை; புதைத்தல்

**Burlesque,** *n.* கேலிப்பாட்டு; நையாண்டிப் பாட்டு; விகடம், *v.* கேலிசெய், *a.* நகைக்கத்தக்க.

**Burly,** *a.* பருத்த; திடமுள்ள, *n.* burliness.

**Burn,** *v.* (*pt. p.p.* burnt, burned) கொளுத்து; பொசுக்கு; எரி. *n.* சுட்ட புண். *n. ag.* burner, விளக்கு.

**Burnish,** *v.* தேய்த்துப் பளபளப் பாக்கு; மெருகிடு.

**Burrow,** *n.* வளை. *v.* வளை தோண்டு.

**Burst** *v.* உடைத்துத் திற; உடைத்துச் சிதறு.

**Bury,** *v.* புதை; மறைத்து வை; மூடு; பொதி.

**Bus,** *n.* பெரிய பொறி வண்டி; உந்து ஊர்தி.

**Bush,** *n.* புதர்; செடி; புதர்க்காடு. *a.* bushy, புதர் அடர்ந்த; மயிர் அடர்ந்த; கற்றையான, *(comb.) n.* bushman. தென் ஆப்பிரிக்க இனவகையினர்.

**Bushel,** *v.* எட்டு ‘காலன்’ அளவு (புஷல்); மரக்கால்.

**Business**, *n.* (> busy) தொழில்; வாணிகம். *a.* business like. கண்டிப்பான; சுறுசுறுப்பான; திட்டவட்டமான.

**Bust,** *n.* மார்புவரை மேல் பகுதி; நெஞ்சளவுச் சிலை.

**Bustle,** *v.* ஆரவாரம் செய். *n.* ஆரவாரம்; கம்பலை; கூக்குரல்; இரைச்சல்.

**Busy,** *a.* சுறுசுறுப்பான; மிகு வேலையில் ஈடுபட்ட; வேலை நெருக்கடியுள்ள; வேலை யுள்ள. *v.* சுறுசுறுப்பாக இரு. *adv.* busily. *n.* busyness, சுறுசுறுப்பா யிருக்கும் தன்மை. *see* business.

**But,** *adv., prep., conj.* ஆனால்; மட்டும்; தவிர.

**Butcher,** *n.* இறைச்சிக் கடைக் காரன்; கொலைகாரன். *v.* கொடுமையாகக் கொல். *n. abs.* butchery, கொடுவதை.

**Butler,** *n.* வீட்டுவேலையாள்; ஏவலர்.

**Butt,** *n.* தடித்தமுனை; இலக்கு; தலையால் முட்டித் தள்ளுதல்; பலர் நகைப்புக்கு இடமானவர். *v.* தலையால் தள்ளு; முட்டு; உந்திக் கொண்டிரு.

**Butter,** *n.* வெண்ணெய். *v.* வெண்ணெய் தடவு.

**Butterfly,** *n.* பாப்பாத்திப் பூச்சி; பகட்டுக்காரர்.

**Buttermilk,** *n.* மோர்.

**Buttock,** *n.* சந்துப்பட்டை; பிட்டம்.

**Button,** *n.* கொளுவி; கொளுவிக் குமிழ்; (பொத்தான்). *v.* கொளுவிக் குமிழ் வைத்து இணை.

**Buttress,** *n.* அணைசுவர்; உதைகால்.

**Buxom,** *a.* சதை அழகுள்ள, உருண்டு திரண்ட; கொழு மழுவான.

**Buy,** *v.* (*pa. t.* bought) விலைக்கு வாங்கு; விலைகொள்.

**Buzz,** *v.* (தேனீ) இரைச்சலிடு; முரலு. *n.* தேனீக்களின் ஒலி; அடங்கிய பேச்சொலி. *n. ag.* buzzer, ஒலிக்கருவி.

**By,** *prep.* 1. ஆல். கொண்டு, 2. வழியாக (by sea); மூலமாக (by train) 2. கூறிட்டதில்; வகுக்கப் பட்டு (two by five, ஐங்கூற்றில் இரண்டு ஐந்தால் வகுக்கப்பட்ட இரண்டு). 4. *pre. adv.* பக்கத்தில் (lay by, சேமித்து வை); அருகாக; கடந்து (pass by). 5. *phr. adv.* by and by, விரைவிலேயே; மெள்ள மெள்ள; படிப்படியாக. 6. *see* bye.

**Bye, by,** 1. *a.* (முன்னிணைப்பு வடிவம்;) துணைமையான (bye law or by law); கிளையான (bye way or by way); மாற்று

வழக்கமான (bye name or by name) 2. *int.* போய் வருக (good bye = God be with you, குழந்தை வழக்கு. Bye-bye) 3. *int. n.* Bye-Bye. (குழந்தை வழக்கு) உறங்குறங்கு; தாலாட்டு. 4. *phr. int.* by the by(e) இடையே இன்னொன்று. இதற்கிடையே.

**Bygone,** *a.* கழிந்த காலத்தைச் சேர்ந்த, *n.* இறந்த காலத்தைச் சேர்ந்தது.

**By-law,** *n.* (*see* 'by') கிளைவிதி துணை ஒழுங்கு.

**By pass,** *v.* கடந்துசெல்; தாண்டிச் செல்.

**Bypath,** *n.* கிளைப்பாதை; சந்து.

**Byproduct,** *n.* உடன் விளைவு; உடன் விளை பொருள்; துணை விளைவு.

**Byword,** *n.* பழமொழி; வழக்குச் சொல்; (எடுத்துக் காட்டாகச் சொல்லும்படி) பெயர்வாங்கின சூள்; இடம்.

# C

**Cab,** *n.* வாடகை வண்டி.

**Cabal,** *n.* சூழ்ச்சிக்குழு; மறை குழு; உட்குழு. *a.* cabbalistic, மறையடக்கமான.

**Cabbage,** *n.* கோசுக்கீரை.

**Cabin,** *n.* குடிசை; கப்பலின் அறை. *v.* சிறு அறையில் அடைத்து வை.

**Cabinet,** *v.* 1. அமைச்சர் குழு. 2. ஒதுக்கமான தனி அறை; மறை அறை. 3. பெட்டி.

**Cable,** *n.* வலுவான கம்பி; வடம்; நிலத்துள் அல்லது கடலுள் போடப்படும் தந்திக்கம்பி வடம்; கடல் கடந்த தந்திச்செய்தி. *v.* கடல் தந்தி அனுப்பு.

**Cablegram.** *n.* கடல் தாண்டி வரும் தந்தி.

**Cabriolet,** *n.* குதிரைவண்டி.

**Cacao,** *n.* கோகோ மரம்.

**Cache,** n பதுக்கிடம். *v.* பதுக்கு.

**Cackle,** *v.* (முட்டையிடுங் கோழி போல்) கொக்கரி; வெட்டிப் பேச்சுப் பேசு; பெருமை பேசு. *n.* கோழி கொக்கரிப்பு.

**Cactus,** *n.* கள்ளி.

**Cad,** *a.* மட்டுமதிப்பற்றவன்; கீழ்மகன்; போக்கிரி. *a.* caddish.

**Cadaverous,** *a.* பிணம் போன்ற; பிணம்போல் வெளுப்பான.

**Cadence,** *n.* இசை ஒழுக்கு; சந்தம்.

**Cadet,** *n.* இளைய புதல்வர். படைத்துறைப்பள்ளி மாணவர்; பயிற்சிப் படைஞர்.

**Cadmium,** *n.* நீலவெண்மை நிறமுள்ள ஒரு திண்மம்; ஓர் உலோகம்.

**Cadre,** *n.* வரிச்சட்டம்; கோப்பு; ஊழியர் எண்ணிக்கைத் திட்டம்; தரம்; நிலை; படைத்துறை அமைப்பு.

**Cafe,** *n.* (கஃவே) சிற்றுண்டிச் சாலை.

**Caffeine,** *n.* (சிறு குடிவகைகளி லுள்ள) நச்சுப் பொருள் வகை; 'வெறியம்'.

**Cage,** *n.* (பறவை) கூடு; கூண்டு; சிறை. *v.* சிறைப்படுத்து; கூட்டி லடை.

**Cairn,** *n.* (நினைவுக்குறிக்) கற்குவியல்.

**Caitiff,** *n.* கயவன்.

**Cajole,** *v.* பசப்பு; கெஞ்சு. *n.* cajolement, cajolery.

**Cake,** *n.* அப்பம்; பாளம். (cake of brick, bread etc.) *v.* கெட்டியாக்கு.

**Calamity,** *n.* இடர்; பேரிழப்பு; இடையூறு. *a.* calamitous.

**Calcium,** *n.* மஞ்சளான ஒரு திண்மம்; சுண்ணச்சத்து; 'சுண்ணகம்'. *v.* சுண்ணமாகு. calcine, நீற்று; calcify, சுண்ண மூட்டு. *n.* Calcification. *a.* calcareous; calcarious, சுண்ணகம் கலந்த; சுண்ணகம் சார்ந்த.

**Calculate,** *v.* கணக்கிடு; திட்டம் செய். *n. ag.* calculator. *n.* calculation. *a.* calculable.

**Calculus,** *n.* கணக்குமுறை; (differential, பிரித்துக் கணிக்கும் முறை; integral. தொகுத்துக் கணிக்கும் முறை.)

**Caldron, cauldron,** *n.* கொப்பரை.

**Calendar,** *n.* ஆண்டுக் குறிப்பேடு; ஆண்டு விவரக் குறிப்பு; 'ஐந் தொகுதி'. *v.* பதி; வகைப்படுத்து. *n. pers.* calendarer.

**Calender,** *n.* (தாள்; துணி) மழமழப் பாக்கும் பொறி. *v.* மழமழப் பாக்கு.

**Calends, kalends,** *n. pl.* மாத முதல் நாள்.

**Calf,** *n.* (*pl.* calves) 1. பசுவின் கன்று. 2. புறங்கால் சதை; தவளைச்சதை. (1) *v. see* calve.

**Calibre, caliber.** *n.* (துப்பாக்கி முதலியவற்றின்) குழாயின் உள் குறுக்களவு; வலு; பண்பாற்றல்; திறமை *v.* calibrate.

**Calico,** *n.* தோல்போன்ற பத முடைய துணி; கள்ளிக் கோட்டைத் துணி; 'தோல் துணி'.

**Caliph, calif,** *n.* முஸ்லிம் உலகத் தலைவர்.

**Call,** *v.* அழை; கூப்பிடு, பெயரிட் டழை; பெயர்கூறு, காணச்செல், *n.* கூப்பிடுதல்; அழைப்பு; காணச் செல்கை; வருகை. *n. ag.* caller.

**Calligraphy,** *n.* அழகிய கை யெழுத்து.

**Calling,** *n.* வாழ்க்கைத் தொழில்.

**Cal(l)ipers,** *n.* பொருள்களின் குறுக்களவுகளை அளக்கும் கருவி; பிடி அளவை; நுண் ணளவை.

**Callisthenics,** *n.* கட்டழகுக் கலை.

**Callous,** *a.* உணர்ச்சியற்று; மரத்துப் போன. *n.* callousness.

**Callow,** *a.* இறக்கை முளையாத; பழக்கமில்லாத.

**Calm,** *n.* அமைதி, *a.* அமைதி யான. *v.* அமைதியாகு; அமைதிப் படுத்து. *n.* calmness.

**Calomel,** *n.* இரசகர்ப்பூரம்.

**Calorie,** *n.* வெப்ப ஆற்றல்.

**Calorie,** *n.* வெப்பக் கூறு; (உணவின் உயிர் வெப்பச்) சத்துக்கூறு.

**Calumniate,** *v.* பழிசொல்லு. *a.* calumnious, அவதூறான. *n.* calumniation, calumny, அவதூறு. *n. ag. pers.* calumniator.

**Calve,** *v.* (> calf) கன்று போடு; ஈனு.

**Calx,** *n.* நீற்றுப் பொருள்; சாம்பல்.

**Calyx,** *n.* மலர் அடிக்கிண்ணம்; புல்லி வட்டம்.

**Camaraderie,** *n.* (கமராதெரீ) தோழமை யுணர்ச்சி.

**Cambric,** *n.* தூய வெள்ளைத் துணி; கைக்குட்டை.

**Camel,** *n.* ஒட்டகம்.

**Camelopard,** *n.* ஒட்டைச் சிவிங்கி.

**Camera,** *n.* புகைப்படக்கருவி; தனியிடம்; மறைவிடம். (incamera).

**Camouflage,** *n.* உருமறைப்பு; கண் மறைப்பு; உரு மாறாட்டம்; உரு மறைத்துப் பிறிதுருக்காட்டல். *v.* மறைத்து வை.

**Camp,** *n.* பாசறை; கூடாரம்; தங்கல். *v.* தங்கு.

**Campaign,** *n.* போர் நடவடிக்கை; போர் எழுச்சி.

**Camphor,** *n.* சூடம்.

**Can,** 1.(past form could) இயலும்; முடியும்; (no future form). 2. தகரக் குவளை; குவளை; தகர அடைப்பு.

**canal,** *n.* கால்வாய்; நீர்செல் நெறி; செல்நெறி. *v.* canalize, கால் வாயாக்கு; கால்வாய்போல வழியமை.

**Canar,** *n.* பொய்; புளுகு.

**Canary,** *n.* பாடும் பறவை வகை.

**Cancel,** *v.* தள்ளுபடி செய்; அடித்து விடு; ஒழி. *n.* cancellation.

**Cancer,** 1. n பிளவை; புற்று நோய். *a.* cancerous.

**Cancer,** 2. *n.* ஆடிக்கோடு ஆடி வீடு.

**Candescent,** *a.* சுடர் வீசுகிற; சூட்டின் மிகுதியால் ஒளிவிடுகிற.

**Candid,** *a.* நேர்மையான; கபடில் லாத; வெளிப்படையான. *n.* candidness.

**Candidate,** *n.* மனுச் செய்பவர்; தேர்வு நாடுபவர். தேர்தல் நாடுபவர். *n. abs.* candidature.

**Candle,** *n.* மெழுகுபற்றி. *n.* மெழுகுபற்றி விளக்கு.

**Candlemas,** *n.* கிறித்துவர் விளக்கு விழா (பிப்ரவரி 2. ஆம் நாள்.)

**Candour,** *n.* நேர்மை; கபட மின்மை; வஞ்சகமின்மை.

**Candy,** *n.* கற்கண்டு. *v.* கற்கண்டில் தோய்.

**Cane,** *n.* பிரம்பு; சூரல்; கரும்பு; மூங்கில் வகை. *v.* பிரம்பினால் அடி.

**Canine,** *a.* நாய்க்குரிய; நாய்த் தன்மையுள்ள. *n.* நாய்ப்பல்.

**Canister,** *n.* சிறு பெட்டி.

**Canker,** *n.* உள்வாய்ப்புண். ஊழல்புழு; ஊழல்புண்; மலர்ப் புழு; கனிப்புழு. *v.* அழி; ஊழலாக்கு. *a.* cankerous.

**Cannibal,** *n.* மனிதனை உண்ணும் மனிதன்; தன்னினம் உண்ணும் உயிர். *n. abs.* cannibalism.

**Cannon,** *n.* பீரங்கி.

**Cannonade,** *n.* தொடர்ந்து பீரங்கி சுடுதல். *v.* தொடர்ந்து சுடு.

**Canny,** *a.* அறிவுக்கூர்மையுள்ள; அமைதியான.

**Canoe,** *n.* வள்ளம்; படகு. *v.* படகில் செல்.

**Canon,** *n.* சட்டம்; திருநூல்; படிநூல்; ஆகமம்; கோயில் முறை. *a.* canonical, canonize, திருத் தொண்டராக்கு; திருத்தொண்டத் தொகையுட் சேர்.

**Canopy,** *n.* மேற் கட்டி. *v.* மேற் கட்டி அமை.

**Cant,** 1. *n.* சாய்வான விளிம்பு; சாய்வு; வாட்டம். 2. பாசாங்குப் பேச்சு; குழூஉக்குறி; வெறும் பேச்சு. *v.* பாசாங்காகப் பேசு.

**Canteen,** *n.* அருந்தகம்; சிற்றுண்டி விடுதி.

**Canter,** *v.* மெல் நடையில் செல்; மட்டான விரைவுடன் ஓடு. *n.* மட்டான விரைவுடைய ஓட்டம்; மெல்நடை.

**Cantharides** *n.* பொன் வண்டு. (வகை).

**Canticle,** *n.* சிறு பாடல்.

**Cantilever,** *n.* வளைவுச் சட்டம்.

**Canto,** *n.* படலம்; காண்டம்.

**Canton,** *n.* நாட்டின் உட்பிரிவு; கோட்டம்; மாவட்டம்.

**Cantonment,** *n.* (கண்டூன்மென்ட்) பாளையம்; தண்டு.

**Canvas,** *n.* கித்தான்; திரைச்சீலை; திரை.

**Canvass,** *v.* ஆதரவு தேடு; வருந்தி வேண்டு. *n. pers.* canvasser.

**Canyon,** *n.* ஆற்றுக்குடைவு; கெவியாறு; அகழ்ந்தோடும் ஆறு; கீழ்நில ஆறு.

**Cap,** *n.* குல்லாய்; தொப்பி; மூடி, *v.* குல்லாய் அணி; சிறப்பு அளி; மூடியிட்டு மூடு.

**Capable,** *a.* செய்யக்கூடிய; திறமையுடைய; தகுதியுடைய. *n.* capability.

**Capacious** *a.* அகல மிகுந்த; இடமுள்ள. *n.* capaciousness.

**Capacity,** *n.* 1. கொள்ளும் அளவு. 2. அறிவுத் திறன்; திறமை. 3. சட்டப்படியான தகுதி. *v.* capacitate,

**Cap-a-pie,** *adv.* தலைமுதல் கால்வரை.

**Caparison,** n (குதிரை) அணிமணி யாடை, *v.* அணிசெய்.

**Cape,** *n.* நிலமுனை; கோடி.

**Caper,** *v.* விசுக்கு விசுக்கென நடத்தல்; குதி; கூத்தாடு. *n.* கூத்தாட்டு.

**Capillary,** *v.* மயிரிழை போன்ற. *n.* மயிரிழை போன்ற குழாய்.

**Capital,** 1. *a.* மிகச் சிறந்த. 2. *n.* தலைநகரம்; தூணின் தலைப் பகுதி. 3. *n.* மூலதனம்; விடுமுதல். (3) *v. see* capitalize, capitalism.

**Capitalism,** *n.* முதலாளி ஆட்சி; முதலாளி ஆதிக்கம்; முதலாளித் துவம். *n. pers.* capitalist, *a.* capitalistic,

**Capitalize,** *v.* மூலதனமாக்கு; பயன் படுத்திக்கொள்.

**Capitulate,** *v.* (ஒப்பந்தத்தின் மேல்) சரணடை. *n.* capitulation.

**Capon,** *n.* விதையடித்த சேவல்.

**Caprice,** *n.* காரணமில்லா உணர்ச்சிப் போக்கு; மனம் போன போக்கு; விருப்பு வெறுப்பாட்சி. *a.* capricious, மனம்போல போகிற; நிலையற்ற; ஒழுங்கற்ற.

**Capricorn,** *n.* மாசிக்கோடு; மகர ராசி.

**Capsize,** *v.* கவிழ்; குடைசாய்.

**Capsule,** *n.* விதையின் மேலுறை; பொதி மருந்து; மருந்துபொதி.

**Captain,** *n.* தலைவன்; கப்பல் தலைவன்; மீகாமன்; படைத் தலைவன். *v.* தலைமை வகித்து நடத்து.

**Caption,** *n.* சிறைப்படுத்தல் கட்டுரைத் தலைப்பு.

**Captious,** *a.* குற்றங் காண்பதில் ஆர்வமுள்ள.

**Captivate,** *v.* மனத்தைக் கவர் *n.* captivation.

**Captor,** *n.* சிறைபிடிப்பவன். *n.(fem.)* captress.

**Captive,** *a.* சிறைப்பட்டுள்ள. *n.* சிறைப்பட்டவர்.

**Capture,** *n.* கைப்பற்றுதல்; கைப்பற்றிய பொருள் அல்லது ஆள். *v.* கைப்பற்று; சிறைசெய்.

**Car,** *n.* வண்டி; தேர். பொறியூர்தி; ஊரகழ்.

**Carat,** *n.* சுமார் 3 1/5 குன்றிமணி எடையளவு; பொன்மாற்றை அளக்கும் ஓர் அளவு, (10 ½ மாற்று = 24 காரட்)

**Caravan,** *n.* வணிகக் குழு; வழிப் போக்கர்குழு; சாத்து; (*comb.*) caravanserai, வழிப்போக்கர் விடுதி.

**Carbon,** *n.* கரி; கரியம்

**Carbolic.** (acid), *n.* கருநெய்க் காரம்.

**Carbuncle,** *n.* மாணிக்கக் கல்; அரச பிளவை; முகப்பரு.

**Carcass-ase,** *n.* விலங்கின் பிணம்.

**Card,** (1) *n.* 1. அட்டை. 2. அஞ்சல் அட்டை, அஞ்சல் முறி; அஞ்சல் சீட்டு. 3. விளையாட்டுச் சீட்டு. (2) *v.* (நார்; கம்பளி; பஞ்சு) கோது. *n.* சிக்கெடுக்கும் சீப்பு.

**Cardamom**, *n.* ஏலக்காய்.

**Cardiac,** *a.* நெஞ்சுப்பைக்குரிய. *n.* நெஞ்சுக்கு உரஞ்செய்யும் மருந்து.

**Cardinal,** 1. *a.* முக்கியமான; அடிப்படையான (cardinal number, இயல் எண். cardinal points, நாற்றிசைகள்.)

**Cardinal,** 2. *n.* கத்தோலிக்கத் திருத்துணைவர்; திருத்தூதர்.

**Care,** *n.* கவலை. *v.* பொருட் படுத்து; அக்கறைகொள்; கவனி; கவலைப்படு. *a.* careful, கவனமுள்ள *(neg.)* careless கவனமில்லாத; கவலையில்லாத. *n.* carefulness. *n. (neg.)* carelessness.

**Career,** *n.* விரைந்த இயக்கம்; வாழ்க்கைநெறி; தொழில். *v.* விரைந்துசெல்.

**Caress,** *v.* அன்பாகத் தழுவு; அன்பு காட்டு. தழுவி முத்தமிடு. *n.* தழுவல்; அணைதல்; முத்தம்.

**Caret,** *n.* சொல் விடப்பட் டுள்ளதைக் காட்டும் குறி(‘) இடையீட்டடையாளக் குறி.

**Cargo,** *n.* கப்பல் சரக்கு; கப்பல் பாரம்.

**Caricature,** *n.* மிகைப்படுத்தப் பட்ட கேலிச் சித்திரம். நையாண்டிப் படம்; நையாண்டி விரிவுரை. *v.* கேலியாக மிகைப் படுத்திக்காட்டு. *n.* caricaturist.

**Carious,** *a.* சொத்தையான.

**Carnage,** *n.* படுகொலை; குருதியழிவு.

**Carnal,** *a.* தசைக்குரிய; சிற்றின்பஞ் சார்ந்த.

**Carnation,** *n.* இறைச்சி நிறம்.

**Carnival,** *n.* கத்தோலிக்க விழா; இன்பவிழா; கொண்டாட்டம்.

**Carnivore,** *n.* ஊனுண்ணி. *a.* carnivorous.

**Carol,** *n.* மகிழ்ச்சிப்பாடல்; சிந்து. *v.* மகிழ்ச்சியுடன் பாடு.

**Carouse,** *n.* மிகுதிக்குடி. *v.* அளவுமீறிக் குடி.

**Carp,** 1. *v.* குற்றங்கண்டு பிடி. 2. மீன் வகை.

**Carpenter,** *n.* தச்சன். *v.* தச்சு வேலை செய். *n.* carpentry, தச்சு வேலை.

**Carpet,** *n.* சமுக்காளம்; கம்பளம்.

**Carriage,** *n.* வண்டி; கொண்டு போதல்.

**Carrier,** *n.* வண்டி விடுபவர்; பாரந்தாங்கும் உறுப்பு; நோய்க் கிருமிகளைக் கடத்தும் உயிரினம்.

**Carrion,** *n.* ஊழ்த்த இறைச்சி. *a.* அழுகுகின்ற; வெறுக்கத்தக்க.

**Carrot,** *n.* சிவப்பு முள்ளங்கி.

**Carry,** *v.* தூக்கிச் செல்; கொண்டு போ. *n.* carriage, தூக்கிச் செல்லல்; வண்டி நடத்தை. *n. ag.* carrier.

**Cart,** *n.* பாரவண்டி. *v.* பார வண்டியில் தூக்கிச்செல். *n.* cartage, வண்டிக்கூலி. *n.* carter வண்டிக்காரன். *s.n. ag.* cart wright வண்டிகளை அமைக்கும் தச்சன்.

**Carte blanche,** *phr. n. (fr.)* (மனம்போல தொகை அல்லது விவரம் குறித்துக் கொள்ளும்படி தரப்பட்ட) வெள்ளைத்தாள்; பத்திரம் அல்லது பொருள்முறி.

**Cartilage,** *n.* குருத்தெலும்பு.

**Cartoon,** *n.* கேலிப் படம். *n. pers.* cartoonist.

**Cartridge,** *n.* துப்பாக்கிக் குண்டு; தோட்டா. (cartridge paper, கெட்டிக் காகிதம்.

**Carve,** *v.* செதுக்கு; புனைந்து கொள்; புனைந்துகொடு; பண்ணு; இறைச்சி வகுத்தறு. *n. ag.* carving. சிற்பம். *n. ag. pers. impers.* carver, சிற்பி; அறுக்க உதவும் கத்தி.

**Cascade,** *n.* சிறு அருவி; நீர் வீழ்ச்சியின் ஒரு கால்.

**Case,** 1. *n.* நிகழ்ச்சி; நிலைமை (in-case; if, நிலையில்; ஆயிருந்தால்) வழக்கு; தறுவாய். 2. *n.* உறை; பெட்டி. *n.* casing, உறை, பெட்டி.

**Casement,** *n.* பலகணிச் சட்டம்.

**Cash,** *n.* கைப்பணம்; உடனடிப் பணம்; காசுப்பணம் (ரொக்கம்). *v.* பணமாக மாற்று.

**Cashew-nut,** முந்திரி(க்கொட்டை); கொல்லாமா(ங் கொட்டை)

**Cashier,** 1. *n.* பொருட் கணக்கர். 2. *v.* வேலையிலிருந்து தள்ளு.

**Cask,** *n.* மிடா; மரப்பெட்டி.

**Casket,** *n.* பெட்டி; பேழை; சிமிழ்.

**Cast,** *v.* (cast) எறி; களை; வார்ப்பு உருவம் செய். *n.* எறிதல்; நாடக உறுப்புகள். *n.* casting, வார்ப்பு.

**Castaway,** *n.* கைவிடப்பட்டவன். *a.* கைவிடப்பட்ட.

**Caste,** *n.* (இந்தியரிடையே யுள்ள) பிறப்புப் பிரிவு சாதி; பிறப்பு வேறுபாட்டு மனப்பான்மை; பிறப்பு உயர்வு மனப்பான்மை.

**Castigate,** *v.* தண்டனை செய். *n.* castigation.

**Casting-vote,** *n.* தலைவரின் இறுதி மொழி யளிப்பு; முடிவு கட்டும் வாக்கு.

**Cast-iron,** *n.* வார்ப்பிரும்பு.

**Castle,** *n.* அரண்மனை; மாளிகை; கோட்டை வீடு.

**Castor-oil,** *n.* ஆமணக்கு எண்ணெய்; விளக்கெண்ணெய்.

**Castrate,** *v.* விதையடி. *n.* castration.

**Casual,** *a.* தற்செயலான, *n.* casualty, தற்செயல் இடர்; தற் செயல் நிகழ்ச்சி; விபத்துக் குள்ளானவர் விவரம்.

**Casuist,** *n.* ஐயவாதி; குதர்க்கம் செய்பவன். *n. abs.* casuistry.

**Cat,** *n.* பூனை; நயவஞ்சகன்.

**Cataclysm,** *n.* ஊழிவெள்ளம்; பெரும் புரட்சி.

**Catacomb,** *n.* (நிலத்துக்குக் கீழுள்ள) கல்லறை.

**Catalepsy,** *n.* உணர்ச்சியிழந்து உடல் விறைத்துப் போகும் ஒருநோய்: மூடுசன்னி.

**Catalogue,** *n.* புத்தகப்பட்டி; அட்டவணை. *v.* அட்ட வணையில் சேர்.

**Catamaran,** *n.* கட்டுமரம்.

**Catapult,** *n.* கவண்; கல்லெறியும் பொறி.

**Cataract,** *n.* நீர்வீழ்ச்சி; கண் நோய்வகை; கண்படலம்; திமிரம்.

**Catarrh.** *n.* நீர்க்கோப்பு; தடுமல்.

**Catastrophe,** *n.* பெருங்கேடு; அழிவு.

**Catch,** *v.* (caught) பிடி; கைப்பற்று. *n.* பிடித்த மீன் அளவு; பிடித்தல்; கைப்பற்றிய பொருள். *pr. p. a.* catching, தொற்றிக் கொள்ளுகிற. s*n.* catchment, மழை நீர்வாங்கு பரப்பு. s*a.* catchy, கவனம் கவரத்தக்க. *comb.* catchword, தூண்டுசொல்; படிப்புச்சொல்.

**Catechism,** *n.* வினாவிடை; வினாவிடை நூல். *v.* catechise, வினாவிடையாக்கு; கேள்வி களைக்கேள். *n. pers.* catechist. *a.* catechetic (al).

**Category,** *n.* இனம்; வகை. *a.* categorical, உறுதியான.

**Catenate,** *v.* இணை; பின்னு.

**Cater,** *v.* உணவு அளி; தேவைக் குதவு; தேவை நிரப்பு. *n.* caterer.

**Caterpillar,** *n.* கம்பளிப்புழு.

**Caterwaul,** *v.* பூனைபோல் கத்து. *n.* பூனையின் கத்தல்.

**Catgut,** *n.* நரம்புத் தந்தி.

**Cathedral,** *n.* தலைக்கோயில். (church, தலைமையிடக் கோயில்.)

**Cathode,** *n.* மின்சாரத்தின் எதிர் மின்வாய்; மின் எதிர்முனை. (-குறியுள்ளது. x anode)

**Catholic,** *a.* விரிந்த நோக்கமுள்ள; எல்லா மக்களுக்கும் பயனுள்ள தான; கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த. *n.* கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவன். *n.* catholicity, பரந்த நோக்கம். *n.* catholicism, கத்தோலிக்க மதம்.

**Catkin,** *n.* வனைமலர்க் கொம்பு.

**Cat-o'-nine-tails,** *n.* ஒன்பது முடிச்சுள்ள கசை.

**Cat's paw,** *n.* எடுப்பார் கைப்பிள்ளை; பிறருக்குக் கருவியாகப் பயன் படுபவன்; இளங்காற்று.

**Cattle,** *n.* கால்நடை; ஆடு மாடுகள்; கன்றுகாலிகள்.

**Caucasian,** *a. n.* காக்கேஷியர் அல்லது வெள்ளையர் அல்லது ஆரிய இனத்தைச் சேர்ந்த(வர்)

**Caucus,** *n.* அரசியல் குழு; கட்சிகளின் உட்குழு.

**Cauldron,** *n.* கொப்பரை.

**Cauliflower,** *n.* கோசுக்கீரை வகை; பூக்கோசு.

**Cause,** *n.* காரணம்; செயல் நோக்கம்; கட்சிக் குறிக்கோள். *n.* உண்டாகச் செய்; தூண்டு. *a.* causal, காரணமான; காரண காரியத் தொடர்பான. *n. abs.* causality, causation.

**Causerie,** *n.* பத்திரிகைக் கட்டுரை.

**Causeway, causey,** *n.* மேடைப் பாதை; ஊடுபாதை.

**Caustic,** *a.* எரிச்சலுள்ள; காரமான.

**Cauterize,** *v.* சூடு போடு; புண்ணைச் சுடு.

**Caution,** *n.* எச்சரிக்கை; விழிப் புடைமை. *v.* எச்சரிக்கைசெய். *a.* cautious.

**Cavalcade,** *n.* குதிரை வீரர் வரிசை; வரிசை.

**Cavalier,** *n.* குதிரை வீரர்; நவநாகரிக வீரன்; பண்புடைய வீரன்; பெண்டிரிடம் மதிப்புடன் நடப்பவன். *a.* எடுத்தெறிந்த முறையில் நடக்கிற.

**Cavalry,** *n.* குதிரைப்படை.

**Cave,** *n.* குகை, முழைஞ்சு; சுரங்க அறை, *v.* குகை தோண்டு.

**Caveat,** *n.* சட்ட நடவடிக்கையை நிறுத்தித் தடை கூறல்.

**Cavern,** *n.* குகை. *a.* cavernous.

**Caviar(e),** n உயர்தர மீன்கறி வகை; மதிக்கப்படா உயர் பொருள்.

**Cavil,** *n.* காரணமில்லாமல் தடைசொல். *n.* நேர்மையற்ற கூற்று.

**Cavity,** *n.* அறை; குழி.

**Caw,** *n.* காகத்தின் கரை குரல்.

**Cayenne,** (pepper), *a.* சிவப்பு மிளகு.

**Cease,** *v.* நிறுத்து; முடிவு செய். *a.(neg.)* ceaseless, ஓயாத. *n.* cessation, நிறுத்தல்;.

**Cedar,** *n.* மரவகை; தேவதாரு வகை.

**Cede,** *v.* ஒப்படை; கொடு. *n.* cession, உரிமை கொடுத்தல்; ஒப்படைத்தல்

**Ceiling,** *n.* மேல்தளம்; தட்டு; மச்சின் அடிப்புறம்.

**Celebrate,** *v.* விழாவாகக் கொண்டாடு; புகழ்ச்சிசெய். *n.* celebration. கொண்டாட்டம். *n.* celebrity, புகழ் பெற்றவர்.)

**Celerity,** *n.* விரைவு.

**Celestial,** *n.* வானத்திற்குரிய; தெய்விகமான. *n.* வானவன்.

**Celibate,** *a.* மணமாகாத; நிறை யுடைய. *n.* மணமாகாதவர்; நிறை யுடையவர். *n.* celibacy.

**Cell,** *n.* சிறு அறை; உயிரணு; நுண்ணியம்; மின்கலம். *a. see* cellular.

**Cellar,** *n.* நிலவறை.

**Cellular,** *a.* சிறு அறைகளால் அமைக்கப்பட்ட; உயிரணுக் களாலான.

**Celluloid,** *n.* மரச் சத்து; மரமாப் பொருள்; தந்தம் போன்ற செயற்கைப் பொருள்.

**Cement,** *n.* பசை; சீமைக்காரை (சிமிட்டி). *v.* இணையச் செய்; பொருந்த வை.

**Cemetery,** *n.* இடுகாடு; கல்லறை.

**Cenotaph,** *n.* (கல்லறைமேல் அமைக்கும்) நினைவுச் சின்னம்.

**Censor,** *n.* குற்றங் காண்பவன். *v.* குற்றங் கண்டுபிடி. *a.* censorial, censorious. *n.* censorship.

**Censure,** *n.* பழிப்பு; கண்டனம், *v.* கண்டி. *a.* censurable.

**Census,** *n.* மக்கட்கணிப்பு; குடிமதிப்பு; குடிக்கணக்கு.

**Cent,** *n.* நூறு; (வெள்ளியில்) நூற்றில் ஒன்று; சிறுகாசு (percent, நூற்றுக்கு; குறியீடு).

**Centaur,** *n.* (கிரேக்க புராணக் கதை) குதிரையும் மனிதனும் இணைந்த உருவம்.

**Centenarian,** *n.* நூறு வயதானவன்.

**Centenary,** *a.* நூற்றுக்கு உரிய. *n.* நூற்றாண்டு விழா.

**Centennial,** *a.* நூற்றாண்டுக்கு ஒருமுறை நிகழ்கிற.

**Centigrade,** *a. n.* நூறு கூறுகளாகப் பிரிக்கப்பட்ட அளவை (சார்ந்த); நூற்றுக் கூறளவை (யான).

**Centipede,** *n.* பூரான்.

**Centre, Center,** *n.* மையம்; நடு. *v.* மையத்தில் அமை. *a.* central, மையப்படுத்து. *v.* centralize, மையப்படுத்து, *n.* Centralization.

**Centrifugal,** *a.* மையம் விட்டோடுகிற; விரிந்து செல்கிற; ஊர்ந்து செல்கிற.

**Centripetal,** *a.* மையம் நாடுகிற; குவிந்துவருகிற.

**Century,** *n.* நூற்றாண்டு; நூறு அடங்கிய தொகுதி.

**Ceramic,** *a.* மட்பாண்டத் தொழில் சார்ந்த.

**Cereal,** *n.* கூலம்; கூலவகை. *a.* கூலத்திற்குரிய

**Cerebrum,** *n.* பெரு மூளை; *a.* cerebral, மூளை சம்பந்தமான.

**Ceremony,** *n.* வினைமுறை; சிறப்புக் கொண்டாட்டம்; ஆசாரம். *a. n.* ceremonial, வினைமுறையிற் கவனமுள்ள; புற ஆசாரமான.

**Certain,** *a.* 1. கட்டாயமான; உறுதியான; தவறாத. 2. ஏதோ ஒரு; குறித்து ஒரு; ஒரானொரு. *adv.* certainly. *n.* certainty.

**Certify,** *v.* உண்மையென உறுதி கூறு; நற் சான்றுப் பத்திரம் கொடு. *n.* certificate, நற்சான்றுப் பத்திரம்; தகுதிச் சான்று. *a.* certifiable. *a. ag.* certifier.

**Certitude,** *n.* உறுதி.

**Cess,** *n.* வரி; தீர்வை. *v.* வரி விதி.

**Cessation,** *n.* (cease, பார்க்கவும்.)

**Cession,** *n.* (cede, பார்க்கவும்.)

**Cesspool,** *n.* கழிவு நீர் தேங்கும் குழி.

**Chafe,** *v.* தேய்; உராய்; உராய்ந்து புண்ணாகு; ஊரு; துடி துடி; பொறுமை யிழந்து படபடப்புக் காட்டு; தேய்த்துச் சூடாக்கு. *n.* உராய் புண்.

**Chaff,** *n.* பதர்; உமி; சாவி. *v.* கேலிபண்ணு.

**Charin,** *n.* ஏமாற்றமடைதல். *v.* ஏமாற்றமடைந்து வருந்து.

**Chain,** *n.* சங்கிலி; தொடர்; தொடுப்பு; 44 முழு நீள அளவு. *v.* தொடராக இணை.

**Chair,** *n.* நாற்காலி; தலைவரின் இருக்கை. *comb. n.* chairman, தலைவர்.

**Chaise,** *n.* இன்பப் பயணத்துக் கான வண்டி.

**Chalk,** *n.* சீமைச் சுண்ணாம்பு; சுண்ணக்காம்பு. *v.* சுண்ணக் காம்பினால் எழுது; திட்டம் செய்.

**Challenge,** *v.* போருக்கு அழை; அறைகூவு; எதிர்த்து நில்; வழக்காடு. *n.* போருக்கு அழைத்தல்; மறுத்தல்.

**Chamber,** *n.* அறை.

**Chamberlain,** *n.* அரண்மனை முதல்வர்.

**Chameleon,** *n.* பச்சோந்தி; கோம்பி.

**Chamois,** *n.* மலையாடு; மென்மையான தோல்.

**Champ,** *v.* ஓசையுடன் அசை போடு; குதிரை வாயிரும்பைப் பல்லால் கடி; பல்லை நெறநெற வெனக் கடி.

**Champagne**, *n.* உயர்ந்த குடிதேறல் வகை.

**Champion** *n.* வெற்றி வீரன்; கெலிப்பவன். *(pl.)* ஆதரவாளன்; வாகை முதல்வன்; வாகை வீரன். *v.* ஆதரி. *n.* championship.

**Chance,** *n.* தற்செயல் நிகழ்ச்சி; வாய்ப்பு, *n.* தற் செயலாக நிகழ்.

**Chancellery-ory,** *n.* உயர்முறை மன்றம்; பொருள் மன்ற அலுவலகம்; தூதர் மாளிகை. *n. pers.* Chancellor, அமைச்சர்; நீதித் தலைவர்; உயர்முறை வாணருள் ஒருவர்; பொருள் அமைச்சர்; பல்கலைக்கழக முதல்வர்; பெருமக்கள் அவைத் தலைவர்.

**Chancery,** n உயர்தர முறை மன்றத்தில் ஒரு பகுதி; பொதுப் பதிவேடுகளை வைக்குமிடம்; உயர்முறை மன்றத்தின் பதிவேட்டுப் பகுதி; 'பதிவேடகம்', 'ஏடகம்'.

**Chandelier,** *n.* சரவிளக்கு; கொத்துவிளக்கு; பல கிளை களுள்ள தொங்குவிளக்கு.

**Chandler,** *n.* (வத்தி) மெழுகு; சவுக்காரக் கட்டி; எண்ணெய் முதலியன விற்பவர்; பல்பொருள் வணிகர்.

**Change,** *v.* மாறு; மாற்று; சில்லறை மாற்று; ஒன்றை மற்றொன்றுக்கு. *n.* மாற்றுதல்; மாறுதல்; மாற்றம்; சில்லறை. *a.* changeable, மாறுபடுகிற; நிலையற்ற.

**Changeling,** *n.* எடுப்புப் பிள்ளை; கண்டெடுத்த பிள்ளை.

**Channel,** *n.* வாய்க்கால்; கால் வாய்; கடற் சந்தி. *v.* வாய்க்கால் வெட்டு.

**Chant,** *v.* பாடு; பண்மையச் சொல்; திரும்பத் திரும்பச் சொல். *n.* பாடல் பண்ணமை பேச்சு.

**Chantry,** *n.* குருக்கள் மானியம்.

**Chanty,** *n.* ஓடப் பாட்டு; வஞ்சிப்பா.

**Chaos,** *n.* படைப்புக்கு முந்திய பாழ்; படைப்பண்ட எல்லை கடந்த பாழ்; குழப்பம்.

**Chap,** 1. *n.* கீறல்; வெடிப்பு; பிளவு; பையன்; பயல். 2. *v.* கீறு; வெடிக்கச்செய்.

**Chapel,** *n.* தொழுமிடம்; வீட்டுக்கோயில்; கோயில் வீடு. *n.*

chaplain, குரு; குடும்பக் குருக்கள்.

**Chaperon,** *n.* இள மங்கைக்குக் காவலாகச் செல்லும் மூதாட்டி; செவிலி. *v.* இளமங்கைக்குக் காவலாகச் செல்.

**Chaplet,** n (தலைக்) கண்ணி; (தலைச்) சூட்டு; (தலை) நகை; மணிமாலை; மணிகள் செய்வதற் கான அச்சு வடு.

**Chapman,** *n.* ஊரூராகச் செல்லும் வணிகர்; நாடோடி விற்பனை யாளர்.

**Chapter,** *n.* அதிகாரம்; நூலின் உட்பிரிவு; கூறு; பிரிவு; கோயிற் குருக்கள் கூட்டம்.

**Char,** *v.* கரியாக்கு.

**Character,** *n.* தனி அடையாளம்; நடத்தை. *(pro.)* எழுத்து வடிவம்; குணவியல்பு; பலரறிந்த ஒருவர்; கதையுறுப்பு.

**Characteristic,** *n.* தனிப்பட்ட இயல்பு. சிறப்புக் கூறு. *a.* குறிப்பிடத்தக்க; தனிமாதிரியான முனைப்பான.

**Characterize,** *v.* தனிச்சிறப்பாகக் குறி.

**Char, Charcoal,** *n.* கரி; கட்டைக் கரி.

**Chare,** *n.* சிற்றாள் வேலை; கை வேலை; வீட்டுவேலை. *(comb.)* charwoman, பணிப்பெண்.

**Charge,** *v.* 1. பாரம் ஏற்று. 2. விலை குறிப்பிடு. 3. குற்றம் சாட்டு. 4. தாக்கு. 5. கட்டணம் விதி. 6. பொறுப்பு ஒப்படை. 7. செலவு சேர்த்து விலை குறி. 8. துப்பாக்கியில் மருந்து அடை. *n.* பாரம்; பொறுப்பு; குற்றச்சாட்டு; கடமை; வேலை; விலை; தாக்குதல். *a.* (3, 7) chargeable.

**Charge d'affairs,** *n.* (துணை நிலை) அரசியல் தூதர்.

**Charger,** *n.* போர்க் குதிரை.

**Chariot,** *n.* தேர். *n. pers.* charioteer.

**Charity,** *n.* அறம்; அற உதவி; அன்புக் கனிவு; ஈகை. *a.* charitable, உதவி செய்கிற; இரக்க மனப்பான்மையுள்ள.

**Charlatan,** *n.* போலி அறிஞர்.

**Charm,** *n.* மாயமந்திரம்; தாயத்து; கவர்ச்சியாற்றல்; கவர்ச்சிக் கூறு; வனப்புக் கூறு; வனப்பு. *v.* மயக்கு; மகிழ்வி; மந்திரத்தால் கட்டுப் படுத்து. *n. ag.* charmer.

**Chart,** n (கடல், நிலம், செய்திகள் ஆகியவற்றின்) விளக்கப் படம்; விளக்கக் குறியீட்டுப் படம்; விளக்கப்பட்டி; (கப்பலோட்டி களின்) கடல்நெறி விளக்கம். *v.* விளக்கப்படம் வரை.

**Charter,** *n.* உரிமைப் பத்திரம்; அரசுரிமைப் பதிவு செய்து கொடு; முழு உரிமையாக வாடகைக்கு அமர்த்து.

**Charwoman,** *n. see* chare.

**Chary,** *a.* செலவு செய்ய விரும்பாத; எளிதில் மனம் வராத; எண்ணித் தயங்குகிற.

**Chase,** *v.* துரத்திச் செல் வேட்டையாடு; வேட்டை.

**Chasm,** *n.* ஆழ்ந்தகன்ற பிளவு; பிடர்; விடர்.

**Chassis,** *n.* வண்டியின் அடிச் சட்டம்; அமைப்புச் சட்டம்.

**Chaste,** *a.* தூய; கற்புடைய; குற்றமில்லாத. *n.* chastity.

**Chasten** *v.* கண்டி; திருத்து; தூயதாக்கு; சீர்படுத்து.

**Chastise**, *v.* தண்டனைசெய்; அடி. *n.* chastisement.

**Chat,** *v.* அளவளாவி உரையாடு. *n.* வம்பளப்பு.

**Chateau,** *n.* மாளிகை.

**Chattels,** *n. (pl)* தட்டு முட்டுகள்.

**Chatter,** *v.* பிதற்று; ஓயாது பேசு; (பற்களை) நெறநெறனக் கடித்துக் கொள். *n.* கடகடவெனப் பேசு.

**Chauffeur,** *n.* பொறிவண்டி (மோட்டார்) ஓட்டி.

**Cheap**. *a.* மலிவான; தாழ்ந்த; அருமையற்ற. *n.* cheapness. *v.* cheapen.

**Cheat,** *v.* ஏமாற்று. *n.* ஏமாற்றுபவர்.

**Check,** *n.* 1. நிறுத்தல்; தடை, 2. கட்டங் கட்டமான அமைப்பு. 3. *see* cheque. *v.* நிறுத்து; சரிபார்; (கணக்குத்) தணிக்கைசெய்.

**Checkmate,** *v.* (சதுரங்க ஆட்டத்தில் அரசைக்) கட்டுப்படுத்து; அடை. *n.* தோல்வி; திக்குமுக்காட்டம்.

**Cheek,** *n.* கன்னம்; துடுக்குத் தனம்.

**Cheer,** *n.* மகிழ்ச்சி; ஊக்குரை. *v.* மகிழ்வி; ஊக்கு. *a.* cheerful.

**Cheese,** *n.* பாலடைக் கட்டி; பாலேடு.

**Cheetah,** *n.* சிறுத்தைப்புலி.

**Chemistry,** *n.* இயைபியல்; இயைபு நூல்; (பொருள்களின் சேர்மான பிரிமான இயல்புகளை ஆராயும் நூல்). *a. n.* chemical. இயைபு நூலுக்குரிய; (பொருள்) இயைபுற்ற. *n. pers.* Chemist, இயைபியல் வல்லுநர் மருந்து விற்பவர்.

**Cheque, Check,** *n.* பொருள் முறி; காசோலை (உண்டியல்).

**Chequer, checker,** *v.* கட்டங் களிடு; மாறுபாடுகள் உண்டு பண்ணு; தடங்கல்கள் செய். *pp. a.* chequered.

**Cherish,** *v.* போற்றிவளர்; அன் புடன் நடத்து; சீராட்டு; பாராட்டு; கொண்டாடு.

**Cheroot,** *n.* சுருட்டு.

**Cherry,** சிறு பழவகை.

**Cherub,** *n.* (*pl.* cherubs or cherubim.) தெய்வக் குழந்தை; அரமகவு; அழகிய அல்லது குற்றமேதுமறியாக் குழந்தை.

**Chess,** *n.* சதுரங்க ஆட்டம்.

**Chest,** *n.* பெட்டி; மார்பு.

**Chestnut,** *n.* மரவகை; மரக் கொட்டை வகை. *n. a.* கருஞ் சிவப்பு நிறம் (வாய்ந்த).

**Chevalier,** *n.* வீரன்; குதிரை வீரன்.

**Chew,** *v.* பற்களால் அரை; சவை. cud. அசைபோடு.

**Chicanery,** *n.* உருட்டுப் புரட்டு; ஏமாற்று.

**Chick,** *n.* கோழிக்குஞ்சு.

**Chicken,** *n.* கோழிக் குஞ்சு; பறவைக் குஞ்சு.

**Chicory,** *n.* செடிவகை; செடி வேர்ப்பொருள் வகை; (காப்பிக் கொட்டைக்கு மாற்றாகப் பயன் படுவது.

**Chide,** *v.* (*p. t.* chid. *p. p.* chid or chidden) கடிந்து சொல்; கடிந்துகொள்.

**Chief,** *a.* தலைமையான. *n.* தலைவர். *adv.* chiefly, முக்கியமாக.

**Chieftain,** *n.* தலைவன்; குலமரபுத் தலைவன்.

**Child,** *n.* (*pl.* children), குழந்தை மகவு; பிள்ளை; மழலை; சிறுவர் *comb. n.* chairman, குழந்தைப் பருவம்.

**Chill,** *n.* குளிர்; தணுப்பு; காய்ச்சல் நடுக்கம்; உணர்ச்சி யுறைவு ஆர்வக்கோடு. *v.* குளிரச்செய்; ஊக்கங்கெடு. *a.* chilly, 1. குளிர்ச்சியான. *n.* chilliness.

**Chilli, Chilly,** *n.* மிளகாய்.

**Chime,** *n.* மணிகள் ஒத்து இசைத்தல்; மணிகளின் ஒலி. *v.* இசைவாக மணிகளை ஒலிக்கச் செய்; ஒத்திசை.

**Chimera, Chimaera,** *n.* கற்பனை விலங்குவகை; விந்தைக் கற்பனை; பூதம். *a.* chimerial, விந்தைக் கற்பனையான; தெளிவற்று.

**Chimney,** *a.* புகை போக்கி.

**Chimpanzee,** *n.* (ஆப்பிரிக்கப் பகுதியின்) வாலில்லாக் குரங்கு.

**Chin,** *n.* நாடி; மோவாய். தாடை, (*phr.* up to the chin) ஆழ்ந்து ஈடுபட்டிரு.

**China,** *n.* பீங்கான் சீனநாடு பளிங்கு.

**Chink,** *n.* இடுக்கு; கீறல்; ஓட்டை; பிளவு. *v.* கிண்கிண் என்று ஒலி.

**Chip.** *v.* சிறுதுண்டு வெட்டு; நறுக்கு. *n.* சிறு துண்டு. (*phr. id.* chip of the old block, பழைய நன்மரத்தின் சிறு துணுக்கு.

**Chiromancy,** *n.* கை வரை நூல்.

**Chirp,** *v.* (பறவை, பல்லி) அரவமிடு; கலகலவென்று ஒலி; கீச்சிடு.

**Chirrup,** *v.* கீச்சுக்கீச்சென்று ஒலி.

**Chisel,** *n.* உளி. *v.* உளியால் வெட்டு; செதுக்கு.

**Chit,** *n.* 1. சிறிது; இனிமையானது, 2. முறிச்சீட்டு.

**Chit-chat,** *n.* பொழுது போக்கான பேச்சு.

**Chivalry,** *n.* நல்வீரர் பண்பு; நவநாகரிக வீரமரபு; மாதர் எளியோர் ஆதரவுப் பண்பு; பெருந்தன்மை; அருளாண்மை. *a.* chivalrous.

**Chlorine,** *n.* 'பாசகம்' நீனிற நச்சுவளி.

**Chloroform,** *n.* 'பாசகவளி' மயக்க மருந்து.

**Cholorophyll,** *n.* 'பாசியம்' இலைகளின் பசுமைத் துகள்.

**Chocolate**, *n.* கோகோவிலிருந்து எடுக்கப்படும் இனிப்புத் தின் பண்டம் அல்லது குடிதேறல்.

**Choice,** *n.* தேர்வு; தெரிந்தெடுப்பு; விருப்பம்; தேர்ந்தெடுக்கப் பட்டது; மிகச் சிறந்தது. *a.* ஆராய்ந்து பொறுக்கி எடுத்த; மிக உயர்ந்த.

**Choir,** *n.* பாடகர் தொகுதி; நடிகர் அல்லது பாடகர் கூட்டம்; கோயிலில் பாடகர்களின் இடம்.

**Choke,** *v.* திணறவை; வழியடை; தொண்டையடைத்துக்கொள்; மூச்சு முட்டு. *n.* இடுங்கிய பகுதி; தடை செய்யும் ஒடுக்க வழி.

**Choler,** *n.* சினம். *a.* choleric எளிதில் சீற்றங்கொள்கிற.

**Cholera,** *n.* கழிச்சல்; வாந்தி பேதி.

**Choose,** *v.* (chose, chosen) தேர்; தேர்ந்தெடு.

**Chop,** *v.* வெட்டு, *n.* இறைச்சித் துண்டு. *(pl.)* இறைச்சித்துண்டு வேவல்; பொரியல். *n. ag. pers. impers.* chopper. *n.* வெட்டுபவர்; வெட்டு கருவி.

**Chord,** *n.* இசைக் கருவிகளின் தந்தி; (உருக்கணக்கு) நாண்வரை (வளைவு கோட்டு முனைகளை இணைக்கும் நேர் கோடு).

**Chorus**, *n.* பாடகர்; நடிகர்களின் கூட்டம்; பலர்கூடிப் பாடுதல்; பல்லவி. *n. a.* choral.

**Christen,** *n.* கிறித்துவப் பெயரிடு.

**Christendom,** *n.* கிறித்துவ சமூகம்; கிறித்துவ நாடுகள்; கிறித்துவ உலகு.

**Christmas,** *n.* கிறித்து பிறந்த நாள் விழா. (டிசம்பர் மாதம் 25 ஆம் நாள்.)

**Chromatic,** *a.* நிறத்திற்குரிய.

**Chronic,** *a.* (நோய்) நாட்பட்ட; முற்றிய.

**Chronicle,** *n.* காலவரிசை வரலாறு; செய்திக்கோவை. *v.* காலக் கோவைப்படி நிகழ்ச்சிகளை எழுது. *n. pers.* chronicler.

**Chronology,** *n.* கால ஆராய்ச்சி; காலவரையறை, நிகழ்ச்சிக்காலம். *a.* chronological. *n. pers.* chronologist.

**Chronometer**, *n.* காலக்கருவி மணிப்பொறி.

**Chrysalis, Chrysalid,** *n.* (*pl.* ises, - ids, ides) (பூச்சிகளின்) கூட்டுப்புழுப் பருவம்; கூட்டுப் புழு.

**Chubby,** *a.* உருண்டை முகத்தை யுடைய; பருத்துத் திரண்ட தடித்த; கொழுமழனுடைய.

**Chuck,** *v.* தாடையின் கீழ் மெல்லத் தட்டு; மெல்ல எறி; தூரத்தள்ளு; புறக்கணி. *n.* இலேசான அடி; கருவிகளிலுள்ள கவ்வி அல்லது பிடி.

**Chuckle,** *v.* உள்ளூர நகை. *n.* மனத்துள் சிரித்தல்.

**Chum,** *n.* நெருங்கிய நண்பன். ஏடன்; சேக்காளி.

**Chump,** *n.* பருங்கட்டை; தடித்த பகுதி; முட்டாள்.

**Chunk,** *n.* பருந்துண்டு.

**Church**, *n.* (கிறித்துவக்) கோயில்; தொழுமிடம்; சமய மக்கள் தொகுதி; கோயிலாட்சித் துறை (*correl.* congregation.)

**Churl,** *n.* பொதுமகன்; இழிந்தவன்; வணக்க இணக்க மில்லாதவன், *a.* churlish.

**Churn,** *v.* கடை. *n.* வெண்ணெ யெடுக்கும் பொறி.

**Chute,** *n.* சாய்வு வாய்க்கால்; சாய் வொழுக்கு; சறுக்கி; சொரிவாய்.

**Chyle,** *n.* குடற்பால்.

**Chyme,** *n.* இரைப்பைப் பாகு.

**Cicerone,** *n.* வழிகாட்டி; வழி விளக்குவோர்.

**Cider,** *n.* குடிவகை.

**Cigar,** *n.* சுருட்டு; 'காம்புச் சுருட்டு'.

**Cigarette**, *n.* 'கவின் சுருட்டு'; 'பூஞ்சுருட்டு'.

**Cinchona,** *n.* மருந்து மரவகை; மருந்து (கொய்னா), மரப்பட்டை.

**Cinder,** *n.* தணல்.

**Cinderella,** *n.* (பழங்கதையில் வரும் மாற்றாந்தாயின் சிறுமி.) மதிக்கப்பெறாத பெருமை அல்லது அழகை உடையவர்.

**Cinema,** *n.* படக்காட்சி.

**Cinematograph,** *n.* படக்காட்சிக் கருவி.

**Cinnabar,** *n.* இங்குலிகம்.

**Cinnamon,** *n.* இலவங்கப்பட்டை.

**Cinque,** *n.* (சூதாட்டத்தில்) ஐந்து.

**Cipher, Cypher,** *n.* இன்மை எண் குறி (O); சுழி; மதிப்பில்லாத பொருள்; குழூஉக்குறி. *v.* கணக்கிடு.

**Circa,** *prep.* ஏறக்குறைய; குத்து மதிப்பாக; கிட்டத்தட்ட.

**Circle,** *n.* வட்டம்; வளையம்; மண்டலம்; வட்டாரம்; நாட்டுப் பகுதி. *v.* வட்டமாகச் செல்; சுழன்றுசெல். *n. pers.* circlet, சிறு வட்டம்; பொன் வளை.

**Circuit,** *n.* சுற்றுப்பயணம்; மின் ஓட்ட மண்டலம். *a.* circuitous, சுற்றுவழியான.

**Circular,** *a.* (> circle,) வட்டமான, *n.* சுற்றறிக்கை.

**Circulate,** *v.* சுற்றிச் செல்; ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்; எங்கும் பரவு; புழங்கு. *a.* circulatory, (காற்று. குருதி) ஓட்டம். *n.* circulation, சுற்றோட்டம்; உடலில் குருதிசுற்றி வருதல்; செய்தித்தாள் முதலியன பரவுதல்; நாணயச் செலாவணி.

**Circumambulate,** *v.* சுற்றிச் சுற்றி நட.

**Circumcision,** *n.* (யூதர் இஸ்லாமியர் வழக்கு) குறியின் நுனித்தோல் செதுக்கல்; சுன்னத்து. *n.* circumcise.

**Circumference**, *n.* வட்டத்தின் சுற்றுக்கோடு; சுற்றளவு.

**Circumlocution,** *n.* சுற்றிப் பேசுதல்.

**Circumnavigate,** *v.* (உலகத்தைச்) சுற்றிக் கப்பலோட்டு.

**Circumscribe,** *v.* சுற்றிக்கோடு வரை; எல்லைகட்டு; வரையறு; (உருக் கணக்கியல்) புற அணையாக வரை (- a triangle) முக்கோணப் புறப்புள்ளிகளூடாக வட்டம் வரை.

**Circumspect,** *a.* கவனமுள்ள; எச்சரிக்கையுள்ள. *n.* circumspection.

**Circumstance,** *n.* தறுவாய்; கால இடச் சூழ்நிலை; நிகழ்ச்சி. *a.* circumstantial, தற்செயலான; இடையீடான; துணைமையான.

Circumvent, *v.* ஏமாற்று; சிக்கவை. *n.* circumvention.

**Circus**, *n.* வட்டரங்கு; விலங்குக் காட்சி (க்கொட்டகை). பயிற்சிக் காட்சியரங்கு.

**Cistern,** *n.* தொட்டி.

**Citadel,** *n.* நகரைக் காக்குங் கோட்டை அல்லது அரணம்; உட்கோட்டை; நடு அரண்; சேமஅரண்.

**Cite,** *v.* குறி; எடுத்துக்காட்டு. *n.* citation.

**Citizen,** *n.* நாடு அல்லது நகரத்தில் வாழ்பவர்; குடியுரிமையாளர். *n.* citizenship, குடிமை; குடியுரிமை.

**City,** *n.* மாநகர்; தலைநகர்; *(comb.)* city-state, (பண்டைக் கிரேக்க) நகரரசு.

**Civet,** *n.* புனுகுப் பூனை.

**Civic,** *a.* நகரத்தைச் சேர்ந்த; உள்நாட்டு அரசியல் சார்ந்த, (civic guards, நாடு காவற் படைஞர்). *n.* civics ஆட்சியியல்.

**Civil,** *a.* சமூகத்தைச் சேர்ந்த போர்த் துறையில்லாத; மட்டு மதிப்புள்ள; வணக்க இணக்கமுள்ள. *n.* civility, வணக்க இணக்கம்.

**Civilian,** *n.* படைத்துறை சாராப் பொதுமகன். *a.* பொதுவாழ்வுக் குரிய; படை சாராத.

**Civilization,** *n.* நாகரிகம்; வாழ்க்கை; பண்பாடு. *v.* civilize. நாகரிகப்படுத்து.

**Clad,** *pred. a. pp. see* clothe.

**Claim,** *v.* உரிமை கொண்டாடு. *n.* உரிமை; உரிமைப் பொருள். *n. pers.* claimant, உரிமை கொண்டாடுபவன்.

**Clairvoyance,** *n.* பிறிதிடக் காட்சி; தொலைவிடக் காட்சி. *a.* clairvoyant.

**Clamant,** *a.* கூச்சலிடுகிற. மிகவிரைவு காட்டுகிற; தொந்தரவு பண்ணுகிற.

**Clamber,** *a.* தொற்றி ஏறு.

**Clammy,** *a.* ஈரமான; பிசுக்குள்ள.

**Clamour,** *n.* கூப்பாடு; கூச்சல். *v.* விடாது கூச்சலிடு. *a.* clamorous.

**Clamp,** *v.* இறுகப்பற்று; இறுகப் பற்றுவி; பற்றி இறுக்கு. *n.* பற்றிறுக்கி.

**Clan,** *n.* கூட்டுக்கிளை; கூட்டுக் குடும்பம்; இனம்; கோத்திரம்; கிளை; குலம்.

**Clandestine,** *a.* களவான; மறைவொளிப்பான; ஒளிவு மறைவான.

**Clang,** *n.* உலோகம் அடிபடுவது போன்ற ஒலி; உரத்த ஒலி. *v.* உலோகம் போல ஒலி.

**Clangour,** *n.* மணிஒலி.

**Clank,** *n.* சங்கிலி ஒலி. *v.*சங்கிலி ஒலி செய்.

**Clap,** *v.* கை தட்டு; தட்டு; (சிறையில்) அடை. *n.* தட்டும் ஓசை.

**Claret,** *n.* குடிவகை.

**Clarify,** *v.* தெளிவாக்கு. *n.* clarification. *n. ag.* clarifier.

**Clarinet,** Clarionet, n (நாகசுரம் போன்ற குழல்) இசைக்கருவி வகை.

**Clarion,** *n.* எக்காளம்.

**Clarity,** *n.* (clear) தெளிவு.

**Clash,** *v.* மோது, *n.* மோதுதல்.

**Clasp,** *v.* தழுவு; பற்றிப்பிடி. *n.* கொக்கி; தழுவுதல்.

**Class,** *n.* வகுப்பு; வகை; பள்ளிவகுப்பு; பொருளியல் வாழ்க்கைக் குழுவினம்; தரம்; படிவகை. *(pl)* உயர் வகுப்புகள் (x masses). *v.* இனமாகப் பிரி.

**Classic,** *a.* 1. உயர்தர; முதல் தர; முன்மாதிரியான. 2. *n. pl.* classics. உயர்தர (கிரேக்கம் இலத்தீனம் முதலிய பண்டை) இலக்கியங்கள். *n.* classical.

**Classify,** *v.* இனமாகப் பிரி; வகைப்படுத்து. *n.* classification.

**Clatter,** *v.* சடசடவென்றொலி. *n.* சடசடவொலி.

**Clause,** *n.* (வாக்கியத்தின் உட்பிரிவான) வாக்கியம்; துணை உறுப்பு வாசகம்; (சட்ட) வாசகம்.

**Claw,** *n.* (விலங்கு, பறவை) உகிர்; கூரிய நகம்; வளைநகம். *v.* நகத்தால் கிழி அல்லது கீறு.

**Clay,** *n.* களிமண்; மண் *(fig.)* உடல்.

**Clean,** *a.* தூய; தெளிவான; கறையில்லாத. *adv.* முழுவதும். *v.* தூய்மையாக்கு; துப்புரவு பண்ணு. *n.* cleanness, cleanliness. *adv.* cleanly. *v.* cleanse.

**Clear,** *a.* தெளிவான; தடையில்லாத; குற்றமில்லாத; ஐயத்துக்கு இடமில்லாத; *v.* தெளிவாக்கு; குற்றம் நீக்கு. *n.* clearness, clarity. *adv.* clearly.

**Clearance,** *n.* தெளிவாக்கல்; தடைகளை ஒழித்தல்; இட மொழிப்பு; நடுவெளியிடம்.

**Clearing,** *n.* மரமற்றவெளி; வெட்டித்திருத்திய காட்டுப் பகுதி.

**Cleave,** 1. *v.* (cleaved or clave, cleaved) ஒட்டிக் கொள். 2. *v.* (clove or cleft, cloven or cleft) பிள. pp. *a. n.* cleft *n.* cleavage. பிளத்தல்; பிரிவினை; பிளவு.

**Clemency,** *n.* இரக்கம்; தயவு இளக்கார மனப்பான்மை. இரக்கம் காட்டுதல். *a.* clement.

**Clench, clinch,** *v.* இறுகப்பற்று; முடி; அறுதிசெய். *n.* அறுதி.

**Clergy,** *n.* சமயக்குருக் குழு. *n.* clergyman. மதகுரு.

**Clerk,** *n.* எழுத்தாளர்; (பண்டைய வழக்கு) கோயிற் குரு; அதிகாரி. *a.* clerical.

**Clever,** *a.* திறமையுள்ள. *n.* cleverness.

*Cliche,* *n.* கேட்டுக் காது புளித்த சொற்றொடர்.

**Click,** *n.* 'கிளிக்' என்ற ஓசை.

**Client,** *n.* கட்சிக்காரன். (வழக் கறிஞரின்); வாடிக்கைக் காரர். *sin.* Clientele வாடிக்கைக் காரர் தொகுதி; சார்ந்து வாழ்பவர் தொகுதி.

**Clif.** *n.* செங்குத்தான பாறை.

**Climate,** *n.* தட்பவெப்பநிலை. *a.* climatic.

**Climax**, *n.* உணர்ச்சி முகடு; (x anticlimax)

**Climb,** *v.* ஏறு. *n. ag. (impers.),* climber கொடி; தழுவியேறு கொடி.

**Clime,** *n.* தட்பவெப்பநிலை; திணை; தேசம்.

**Clinch,** (clench பார்க்கவும்.)

**Clincher, clencher,** *n.* தீர்மான வாதம்.

**Cling,** *v.* (clung) ஒட்டிக்கொள்; பற்றிக்கொள்.

**Clinic,** *n.* மருத்துவ விடுதி; மருத்துவப் பயிற்சிச் சாலை; மருத்துவப் பயிற்சிக் கல்லூரி. *a.* clinical.

**Clink,** *n.* கண்ணாடிப் பாத்திரம் முதலியன அடிபடுவது போன்ற ஒலி. *v.* கண்ணாடி ஒலி செய்.

**Clip,** *v.* இறுகலாகப் பிடி; கத்தரியால் வெட்டு. *n. ag.* clipper, *(impers.)* கத்திரி; இடுக்கி; மயிர் வெட்டும் கருவி. *prep. n.* clipping. துண்டுத் துணுக்கு.

**Clique,** *n.* தன்னலக் கும்பல்; உட்குழு; குறுங்குழு.

**Cloak, Cloke,** *n.* மேலாடை.

**Clock,** *n.* மணிப்பொறி; ஓரை வட்டில்; வேளைப்பொறி; கடிகாரம். *n. a.* clockwork. *(comb.)* மணிப்பொறியமைப்பு; மணிப் பொறி போன்ற ஒழுங்கு (வாய்ந்த). *a. adv.* Clock-wise, வலஞ் சுழியாக.

**Clod,** *n.* மண்கட்டி; முட்டாள்.

**Clog,** *n.* தடை; மிதியடிக் கட்டை, *v.* தடு; கால்கட்டாயிரு.

**Cloister,** *n.* துறவி மடம்; கன்னி மடம்; மூடப்பட்ட பாதை; ஒதுக்கிடம்.

**Close,** 1. *a.* நெருங்கிய இடை வெளியில்லாத; புழுக்கமான; வெளிப்படையாயில்லாத; அடக்கமான; சிறிய. *n.* வளைக்கப்பட்ட இடம். 2. *v.* அடை; மூடு. *n.* முடிவு.

**Closet,** *n.* அறை. *v.* அறையில் அமைந்தாராய்.

**Closure,** *n.* முடித்தல்.

**Clot,** *n.* உறைவு; உறைந்த கட்டி. *v.* (குருதி) உறை.

**Cloth,** *n.* துணி; சீலை.

**Clothe,** *v.* (clothed, clothed or clad). உடு; அணி; உடுத்து. *n.* clothing, clothes, உடை; ஆடை.

**Cloud,** *n.* முகில்; மேகம்; மறைக்கும் புகைப்படலம். *v.* முகிலால் மறை; இருளடை. *a.* cloudy. *a. neg.* cloudless. *n.* cloudiness.

**Clove,** *n.* இலவங்கம்.

**Clover,** *n.* மணப்புல்.

**Clown,** *n.* கோமாளி; விகடன்; பட்டிக்காட்டான். *a.* clownish.

**Cloy,** *v.* தெவிட்டு.

**Club,** *n.* தடி; குண்டாந்தடி; கைத்துண்டு; குழு; குழாம்; சங்கம். *v.* தடியாலடி; ஒன்றுகூடு.

**Clue,** *n.* உளவு; கதைத் தொடர்பு; (நடிகர்) தூண்டுதல்; குறிப்பு.

**Clump,** *n.* கொத்து; கும்பு; மொக்கை அருகு.

**Clumsy,** *a.* அருவருப்பான; அமைப்பில் குறைபாடான. *a.* clumsiness.

**Clung,** (cling, பார்க்கவும்.)

**Cluster,** *n.* கொத்து; கூட்டம். *v.* கொத்தாகச் சேர்.

**Clutch,** *v.* (ஆர்வத்துடன்) கைப்பற்று. *n.* இறுகப் பிடித்தல்; பொறியை ஓட்டவும் நிறுத்தவும் செய்யும் கருவி.

**Coach,** 1. *n.* நான்கு சக்கர வண்டி, 2. *v.* பழக்கு. *comb. n.* coachman, வண்டிக்காரன்.

**Coagulate,** v. உறை.

**Coal,** *n.* நிலக்கரி. *a.* coaly.

**Coalesce,** *v.* ஒன்றுசேர்; கல; இணை. *n.* coalescence.

**Coalition,** *n.* கூட்டிணைப்பு.

**Coarse,** *a.* கரடுமுரடான. *n.* coarseness.

**Coast,** *n.* (நாட்டின்) கடற்கரை. *v.* (படகு முதலியன) கடற்கரை யோரமாகச் செலுத்து.

**Coat,** *n.* மேல்சட்டை; உடுப்பு. *v.* வண்ணம் முதலியன பூசு. *n.* coating, சட்டைத் துணி; மேற் பூச்சு; புறத்தோல்.

**Coat-of-arms,** *n.* பெருமக்களின் குடும்பச் சின்னங்கள் குடும்ப மரபுச் சின்னங்கள்.

**Coax,** *n.* நயமாகப் பேசி இணங்கச் செய்; கெஞ்சு; வேண்டிக்கொள்.

**Cob,** *n.* குதிரை; குமிழ்.

**Cobble,** *v.* ஒட்டுப்போடு; பருவெட்டாக வேலை செய்.

**Cobbler,** *n.* செம்மான்.

**Cobra,** நல்ல பாம்பு.

**Cobweb,** *n.* சிலந்திக் கூடு.

**Cocaine,** *n.* பட்ட இடம் மரக்கச் செய்யும் நச்சு மயக்க மருந்து; 'திமிரம்'.

**Coccyx,** *n.* குத எலும்பு.

**Cock,** *n.* சேவல்; குழாயின் அடைப்பு; திறப்புக் கருவி. *v.* சாய்த்துவை; துப்பாக்கிக் குதிரையை இழு. *comb, a.* cock eyed. சாய்ந்த பார்வையுள்ள.

**Cockade,** *n.* இறகு; முடி (மீதுள்ள) சூட்டு.

**Cockney,** *n.* இலண்டன் நகருள் அடைபட்ட நகரத்தார்; இலண்டன் நகரச் கொச்சைப் பேச்சு.

**Cockpit,** *n.* போர் அரங்கம்; வானூர்தி வலவன் அறை.

**Cockroach,** *n.* கரப்பான் பூச்சி.

**Cock-sure,** *a.* (ஆராயா) முன் உறுதியுடைய; மடமுன்னுறுதி யுடைய.

**Cocktail,** *n.* தேறல் கலவை வகை.

**Cocoa,** *n.* குடிவகை (அதற்கான கொட்டை, தூள்).

**Cocoanut,** *n.* தேங்காய்; தென்னை.

**Cocoon,** n. புழுக்கூடு; பூச்சிக் கூம்பு.

**Cod,** *n.* கடல் மீன் வகை.

**Code,** *n.* சட்டத் தொகுப்பு; விதித் தொகுதி; குழூஉக் குறித் தொகுதி. (Morse Code, தந்திக் குறியீட்டுத் தொகுதி); கோவை. *v.* codify, விதி களை ஒழுங்குபடுத்து; தொகு.

**Codicil,** *n.* இறுதிப் பத்திரப் பிற் சேர்க்கை.

**Coeducation,** *n.* ஆண்பெண் இணை பயிற்சிமுறை.

**Co-efficient,** *n.* (உருக்கணக் கியலில்) மடங்கிலக்கம்.

**Coerce,** *v.* கட்டாயப்படுத்து; வலுக்கட்டாயம் பண்ணு. *n.* coertion.

**Coeval,** *a., n.* சமகாலத்த(வர்); சமவயதுள்ள(வர்).

**Coexist,** *v.* ஒரே காலத்தில் வாழ்ந்திரு; ஒருங்கிரு; ஒருங்கே காணப்பெறு. *n.* co-existence.

**Coextensive,** *a.* ஒரே பரப்பு அல்லது காலத்திலுள்ள.

**Coffee,** *n.* காப்பிச் செடி; அதன் விதையிலிருந்து வடிக்கப்படும் குடி நீரகம்.

**Coffer,** *n.* (பணம் நகைகள் முதலியன வைக்கும்) பெட்டி; பேழை.

**Coffin,** *n.* பிணப்பெட்டி.

**Cog,** *n.* சக்கரத்தின் பல். *a.* cogged.

**Cogent,** *a.* (அறிவுக்குப்) பொருத்த மான; மறுக்க முடியாத. *n.* cogency.

**Cogitate,** *v.* ஆழ்ந்தாராய். *n.* cogitation.

**Cognate,** *a. n.* ஒரே நேர் மரபு சார்ந்தவர்; (*correl.* agnate).

**Cognition,** *n.* உணர்வு உணர்தல். *a.* cognizable, தெரிந்து கொள்ளக் கூடிய வழக்குரிமைக்கு உட்பட்ட. *n.* cognizance. தெரிதல்; தனிப் பட்ட அடையாளம். *a.* cognizant, தெரிந் துள்ள.

**Cognomen,** *n.* புனைபெயர்.

**Cohabit,** *v.* கூடிவாழ்; கலவி செய்; ஊடு; முயங்கு.

**Cohere,** *v.* (இயங்கில்) தன்னுள் இணை; ஒன்றுபட்டிரு; தன்னினத் துடன் தான் இணை; இணைசேர்; (*correl.* adhere). நாணயம். *a.* coherent, cohesive. *n.* cohesion.

**Coil,** *v.* வளையமாகச் சுற்று. *n.* சுருள்.

**Coin,** *n.* காசு; நாணயம். *v.* காசுபொறி; புதிதாக உண்டு பண்ணு. *n.* coinage.

**Coincide,** *v.* முற்றிலும் பொருந்து, *n. abs.* coincidence. பொருத்த மாக அமைதல்; ஒன்றித்தல்; தற் செயல் பொருத்தம். *a.* coincident.

**Coir,** *n.* தென்னை நார்; கயிறு.

**Coke,** *n.* சுட்ட நிலக்கரி; கல் கரி.

**Cold,** *a.* குளிர்ச்சியான; தணுப்பான. *n.* குளிர்ச்சி. *(comb.) a.* cold blooded உணர்ச்சியற்ற; மனமாரச் செய்த cold-hearted, அன்பற்ற.

**Colic,** *n.* குடல்வலி; வயிற்று வலி.

**Collaborate,** *v.* சேர்ந்துசெய். *n. pers.* collaborator. *a.* collaboration.

**Collapse,** *v.* இடிந்து விழு; *n.* தகர்வு; வீழ்ச்சி; அழிவு; (ஆள்) இறப்பு.

**Collar,** *n.* கழுத்துப்பட்டை. *v.* கழுத்துப் பட்டையால் பிடி.

**Collate,** *v.* ஒத்திணை; ஒத்துப்பார்.

**Collateral,** *a.* இடையுறவான; இணைந்த; ஒன்றொன்றின் தொடர்பான; ஓரினத்தொடர்பான.

**Colleague,** *n.* கூட்டாளி.

**Collect,** *v.* கூடு; திரட்டு. *n.* collection, தொகுதி *n. pers.* collector, வரிமுதல்வர்; வரிபிரிப்பவர், திரட்டுபவர். *a.* collective; திரளான; கூட்டான.

**College,** *n.* பேராசிரியர்கள் குழு; அறிஞர் குழு; கழகம்; கல்லூரி. *a.* collegiate.

**Collide,** *v.* மோது, *n.* collision, மோதுதல்.

**Collier,** *n.* நிலக்கரிச் சுரங்க வேலையாள். *abs. n.* colliery, நிலக்கரிச் சுரங்கம்.

**Collocate,** *v.* தக்க இடத்தில் அமை. *n.* collocation.

**Colloquy,** *n.* பேச்சு; உரையாடல். *a.* colloquial, பேச்சுவழக்கிலுள்ள.

**Collzrium,** *n.* (கண்ணுக்கிடும்) மை.

**Colon,** 1. *n.* பெருங்குடல். 2. *n.* வாக்கியத்தின் இடை நிறுத்துக் குறி ( : ) முக்காற் புள்ளி. *comb. n, see* semicolon.

**Colonel,** *n.* (கே(ர்)ணல்) படைப் பகுதித் தலைவன்.

**Colonnade,** *n.* தூண் வரிசை.

**Colony,** *n.* குடியேற்ற நாடு குடியேற்றம். *v.* colonise, குடியேறு. *n.* colonization. *n. pers.* colonizer. *a.* colonial.

**Colossus,** *n.* பெரிய உருவம். *a.* colassal. மாபெரிய.

**Colour,** *n.* நிறம்; வண்ணம்; பகட்டான தோற்றம்; கொடி. *v.* நிறங்கொடு; வண்ணம் பூசு; முகம் சிவப்பாகு. *n.* colouring.

**Colt,** *n.* குதிரைக் குட்டி.

**Column,** *n.* தூண்; படைவரிசை; பத்தி; பத்திரிகைச் செய்தி யகலம்; பத்திரிகைப் பத்தி.

**Coma,** *n.* மயக்கம்.

**Comb.** *n.* சீப்பு; சீப்புப் போன்ற கருவி; தேன் கூடு; (honey comb.) *v.* கோது; சீவு.

**Combat,** *v.* போர் செய். *n.* போர்.

**Combine,** *v.* ஒன்றுசேர்; கூடு; கூட்டு

**Combustion,** *n.* எரிதல், *a.* combustible, எரியக்கூடிய.

**Come,** *v.* (came, come) வா; அருகே செல்.

**Comedy,** *n.* இன்பியல் நாடகம்; களி நாடகம்; கேலி நிகழ்ச்சி; இன்ப நிகழ்ச்சி; கேலிக்கூத்து. *a. see* comic. *n. pers.* comedian. களி நாடக நடிகன்; களிநாடக ஆசிரியன்.

**Comely,** *a.* அழகான. *n.* comeliness.

**Comet,** *n.* வால் வெள்ளி; வால் மீன்.

**Comfort,** *n.* இன்ப வாய்ப்பு; சொகுசு; வாழ்க்கை நலம். *v.* ஆறுதலளி; மகிழ்வி. *a.* comfor table இன்பம் வாய்ந்த. *n. pers.* comforter, ஆறுதலளிப்பவர்.

**Comic, Comical,** *a.* நகைச்சுவை யான; சிரிப்பைத் தருகிற.

**Comity,** *n.* இணக்கம்; தோழமை; நட்பு.

**Comma,** *n.* வாக்கியத்தில் அமைக்கும் இடைநிறுத்தற் குறி; காற்புள்ளி ( , ).

**Command,** vl. உத்தரவிடு; அடக்கியாள்; ஆட்சிசெய். *n.* உத்தரவு; உத்தரவுரிமை. *n. pers.* commander, commandant.

**Commander,** *v.* படைத் துறைக்காகக் கைப்பற்று.

**Commandment,** *n.* கட்டளை; ஆணை விதி.

**Commemorate,** *v.* நினைவு கொண்டாடு; நினைவுவிழாக் கொண்டாடு. *n.* commemoration.

**Commence,** *v.* தொடங்கு. *n.* commencement.

**Commend,** *v.* புகழ்; ஆதரி; ஒப்படை; பிறன் பாதுகாப்பில் விடு. *a.* commendable. *n.* commendation. புகழ்ச்சி. *a.* commendatory, புகழ்கிற.

**Commensurable**, *a.* ஒப்பிடத் தக்க; ஒரே அளவால் அளக்கத் தகுந்த; பொதுஅளவுள்ள.

**Commensurate.** *a.* தகுந்ததான; சமமான.

**Comment,** *v.* விளக்கிச்சொல்; உரை எழுது. *n.* விளக்கக் குறிப்பு; உரை. *n.* commentary. விரிவுரை. *n. pers.* commentator, உரை யாசிரியர்.

**Commerce,** *n.* வாணிகம். *a.* commercial, வாணிகஞ் சார்ந்த.

**Commingle,** *v.* ஒன்றாகக் கல.

**Commiserate,** *v.* இரக்கப்படு; மனமுருகு. *n.* commiseration.

**Commissariat,** *n.* படையுணவுப் பொறுப்பாளர். *n. abs.* commissariat. படையுணவுத் துறை.

**Commissary,** *n.* செயலாளர்; படை உணவுப் பொறுப்பாளர்.

**Commission**, *n.* 1. செய்தல். (*n.* of commit) 2. ஆணை. 3.

அரசனாணை யமர்வு. 4. சிறப்புக் குழு. 5. தரகு; கழிவு. *v.* செயலுரிமை கொடு. *n. pers.* commissioner, ஆணையாளர்.

**Commit,** *v.* (தவறு) செய்; ஒப்படை; சிறைக்கனுப்பு. *n. vbl.* commitment, committal. *see.* commission.

**Committee,** குழு.

**Commodity,** *n.* சரக்கு; வாணிகப் பொருள்.

**Commodore,** *n.* கப்பற்படைத் தலைவன்; வான் படை முகவர்.

**Common,** *a.* பொதுவான; பொதுப் படையான; மதிப்பற்ற தனிச் சிறப்பற்ற. *n.* ஊர்ப் பொதுநிலம். *n. pers.* commoner, பொது மக்களில் ஒருவர்; பொதுப் பேரவை உறுப்பினர். *(pl.)* பொது அவை; பொது அவை உறுப்பினர். *adv.* commonly, பொதுவாக; பெரும்பாலாக. *(comb.)* common place, யாவரும் அறிந்த செய்தி; பொது அறிவுச் செய்தி. *n.* commonwealth. பொது அரசு; சம உரிமைக் குழு.

**Commotion,** *n.* குழப்பம்; கலக்கம்; கொந்தளிப்பு.

**Communal,** *a.* (*see* commune.)

**Communalism,** *n.* ”

**Commune,** *n.* சமூகம்; (பிரஞ்சு) நாட்டின் ஆட்சிப் பிரிவு. *v.* சமூகமாகக் கூடிவாழ்; கூடிக்கல; கலந்து பேசு; சிந்தனைசெய். *n.* communication, 1. கூடிக் கலப்பு, 2. இறைவழிபாடு; (கடவுளுடன் ஒன்றுபட் டுணர்தல்); கூட்டுத் தொழுகை; தொடர்புறவு. *a.* communal, சமூகத்திற்குரிய சமூகப் பொது உடைமைக்குரிய; (இந்திய வழக்கு) சாதிக்குரிய; வகுப்புக்குரிய. *n.* communalism. *a.* communalistic. *n. abs.* communism, பொது உடைமை; சமநெறி. *n. pers.* communist, *a.* communistic. *n. abs.* community, சமூக உறவு; சமூகப் பொது உணர்ச்சி; பொது உணர்ச்சி யால் கட்டுப்பட்ட சமூகம்; (இந்திய வழக்கு) சாதி; மத சமூகம்; வகுப்பு.

**Communicate,** *v.* (செய்தி முதலியன) அனுப்பு; தொடர்பு கொள். *n.* communication, (செய்தி முதலியன) அனுப்புதல்; செய்திப் போக்குவரத்துத் தொடர்பு. *a.* communicative, பேச்சில் விருப்பமுள்ள.

**Communion,** *n. see* commune.

**Commute,** *n.* (ஒன்றுக் கொன்றாக இரு பொருள்களை) மாற்று; தண்டனையைக் குறை, *n.* commutation. *a.* commutable.

**Compact,** 1. *n.* ஒப்பந்தம், 2. *a.* (compa’ct). நெருக்கமாக அமைக்கப்பட்ட; நெருக்கமான; ஒழுங்காக வைக்கப்பட்ட. *n.* நெருக்கு. *n.* compactness.

Companion, *n.* தோழன்; கூட்டாளி. *a.* companionable, பழகத் தகுந்த; companionate, தோழமைப் பண்புடைய. (companionate marriage, கட்டுப் பாடற்ற

தற்காலிக மணத்தொடர்பு ஒப்பந்தம்). *n.* companionship.

**Company,** *n.* மக்கள் கூட்டம்; சங்கம்; கூட்டுக்குழு; படைப் பிரிவு.

**Compare,** *v.* ஒப்பிடு, *n.* ஒப்பு. *a.* ஒப்பிடத்தகுந்த. *a.* comparative, ஒப்பீடான; ஒப்பிட்டுணர்ந்த. *adv.* comparatively, *n.* comparison, ஒப்புமை; ஒப்பீடு; ஒற்றுமை காண்டல்; ஒற்றுமை (degrees of-) ஒப்பீட்டுப் படிகள் மூன்று (positive, comparative, superlative.)

**Compartment**, *n.* பிரிக்கப்பட்ட அறை; பிரிவுத்துறை.

**Compass,** *n.* எல்லைக் கோட்டுக்கு உட்பட்டது. *pl.* compasses, வட்டம் வரைய உதவும் கருவி; கவராயம்; (mariner's compass) திசையறி கருவி; திசைகாட்டி. *v.* சுற்றிச் செல்; மனத்தால் அறிந்துகொள்; திட்டமிட்டு முடி.

**Compassion,** *n.* இரக்க உணர்ச்சி. *v.* இரக்கம் காட்டு. *a.* compassionate, இரக்கமுள்ள.

**Compatible,** *a.* சேர்ந்திருக்கத் தகுந்த; உகந்த; (ஒன்றுடன் ஒன்று) பொருத்தமான. *n.* compatibility.

**Compatriot,** *n.* ஒரே நாட்டைச் சேர்ந்தவர்; உடனுறை நாட்டார்.

**Compeer,** *n.* (பதவி; வயது முதலியவற்றில்) சமமானவர்; ஒரு தரத்தார்.

**Commpel,** *v.* கட்டாயம் பண்ணு. *n. see* compulsion.

**Compendium,** *n.* பெரிய நூலின் சுருக்கம். *a.* compendious, சுருக்கமான.

**Compensate,** *v.* ஈடு செய்; இழப்புச் சரிசெய். *n.* compen sation.

**Compete,** *v.* போட்டியிடு; போட்டி யாயிரு. *a.* competitive; போட்டி யால் முடிவு செய்யப்படுகிற. *n.* competition, போட்டி. *n. pers.* competitor.

**Competent,** *a.* தகுதியுள்ள. *n.* competence, competency தகுதி; (உலக வாழ்க்கைக்குப்) போதுமான செல்வநிலை.

**Compile,** *v.* (இலக்கியப்பகுதிகள் முதலியவற்றைத்) தொகு; திரட்டு. *n.* compilation, தொகுதி; தொகுத்தல்.

**Complacent,** *a.* தன் நிறைவுணர்ச்சி யுள்ள; தன் இறுமாப்புள்ள; ஆர்வமில்லா நிறைவுடைய. *n.* complacence, complacency. தன்னிறைவு.

**Complain,** *v.* முறையீடு; குறை தெரிவி; வருத்தம் தெரிவி; குற்றங் கூறு. *n. pers.* complainant, குற்றஞ் சாட்டுபவர். *n.* complaint. குற்றங்கூறல்; வருத்தம்; நோய்; முறையீடு.

**Complaisant,** *a.* இணக்க வணக்கமுள்ள. *n.* complaisance.

**Complement,** *n.* நிரப்புப் பகுதி; நிறைவுறுப்பு, *v.*. நிரப்பு. *a.* complemental, complementary.

**Complete,** *v.* நிறைவாக்கு; முழுமையாக்கு; முடிவுசெய். *a.*

நிறைவான; முடிந்த. *n.* completion, completeness.

**Complex,** *a.* பல பகுதிகள் சேர்ந்த; சிக்கலான; பல் கலப்பான. *n.* உருவாகா எண்ணம்; அடங்கிய உணர்ச்சி; உள்ளார்வநிலை; உணர்ச்சிச் சிக்கல். *n.* complexity.

**Complexion,** *n.* நிறம்; தோற்றம்.

**Complicate,** *v.* சிக்கலாக்கு; புரியாதபடி செய். *n.* complication.

**Complicity,** *n.* பங்குடைமை; குற்றப் பொறுப்பில் பங்கு; ஈடுபாடு.

**Compliment,** *n.* முகமனுரை; பாராட்டு; வாழ்த்து; புகழ்ச்சி. *v.* முகமனுரை; வாழ்த்துக்கூறு. *a.* complimentary.

**Comply,** *v.* (உத்தரவு அல்லது விருப்பத்துக்கு) இணங்கு. *n.* compliance. இணக்கம். *a.* compliant.

**Component,** *a.* பகுதியாயுள்ள. *n.* பகுதி; பகுதிப் பொருள்; உறுப்பு.

**Comport,** *v.* மதிப்புடன் நட. *n.* comportment.

**Compose,** *v.* 1. *(gen-in-pass)* சேர்ந்து உருவாக்கு; சேர்ந்து அமை. 2. கட்டுரை அல்லது பாடல் எழுது. 3. அமைதிப் படுத்து. 4. அச்சுக் கோத்தல் செய். *n.* composition, (1.2) *a.* compositional, (2) *n. pers.* composer. (4) compositor *n., vbl.* composing, (3) *abs.* composure, மன அமைதி.

**Composite,** *n.* பல சேர்ந்து அமைந்த. *n.* கலவை; பகு நிலை.

**Compou'nd,** *v.* கல; சேர்; சேர்த்து அமை; ஒரு பகுதியைக் கொடுத்து முழுக்கடனையும் தீர்; உடன் படிக்கை செய்துகொள். *a.* (co'mpound) பல பொருள்கள் சேர்ந்துள்ள. *n.* பல பகுதிகள் சேர்ந்தமைந்த பொருள்; கூட்டுப் பொருள்; வேலிக்கு உட்பட்ட இடம்; வளாகம்; புறமதிலகம்.

**Comprehend,** *v.* புரிந்து கொள்; உட்கொள்; *a.* comprehensible, புரியக் கூடிய. *n.* comprehension. புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல்; அறிவுணர்வு. *a.* comprehensive, பலவற்றை உட்கொண்டுள்ள.

**Compre'ss.** *v.* சுருக்கு; நெருக்கு. *n.* compression, அழுத்துதல்; அடர்த்தி; நெருக்கம். *a.* compressible, அழுத்தியடக்கக்கூடிய; அமுக்கக்கூடிய. *n.* compressibility.

**Comprise,** *v.* உட்கொண்டிரு; சேர்ந்திரு.

**Compromise,** *v.* விட்டுக் கொடுத்து ஒப்பந்தம் செய்; இடர்நிலை கொண்டுவா. *n.* உடன் படிக்கை; ஒப்பந்தம்; விட்டுக்கொடுப்ப. comptroller. *n. see* control.

**Compulsion,** *n.* (> compel.) வலுக்கட்டாயம்; கட்டுப்பாடு. *a.* compulsory.

**Compunction,** *n.* மன உறுத்தல்; மனச்சான்றுறுத்தல்.

**Compute,** *v.* கணக்கிடு; எண்ணு. *n.* computation.

**Comrade,** *n.* தோழன்; கூட்டாளி. *n. abs.* comradeship. *see* comraderie.

**Con,** 1. *v.* மனப்பாடம் செய்; கவனமாகப் படி. 2. *n.* எதிரானது (*phr.* pros and cons).

**Concatenate**, *v.* தொடர்பாக இணை. *n.* concatenation, (ஒன்றையொன்று சார்ந்துள்ள) சங்கிலித் தொடர்.

C**oncave,** *a.* வட்டத்தின் உட்புறம் போன்ற; கவிந்துள்ள; குழிவான. (x convex.) *n.* concavity.

**Conceal,** *v.* மறைத்து வை. *n.* concealment.

**Concede,** *v.* ஒப்புக்கொள்; விட்டுக் கொடு. *n.* concession, விட்டுக் கொடுத்தல் விட்டுக் கொடுக்கப் பட்ட பொருள்; சலுகை.

**Conceit,** *n.* இறுமாப்பு; செம்மாப்பு; செருக்கு; புனை கருத்து; செயற்கைச் சொற் புரட்டு. *a.* conceited.

**Conceive,** *v.* கருக்கொள்; கருது; எண்ணமுருவாக்கு; கற்பனை செய். *a.* conceivable. *n.* conception. கருக்கொள்ளல்; கற்பனை; கருத்து; புலனுணர்வு தொகுத்த பொதுக்கருத்து. *conn. n. see* concept.

**Concentrate**, *v.* ஓரிடத்தில் திரட்டு. (மனம்) ஒருமுகப்படுத்து; (நீர்க்கலவை) அடர்த்தியாக்கு; திட்பம் பெருக்கு; வீறுபெருக்கு. *n.* concentration.

**Concentric,** *a.* (வட்டமான) ஒரே மையமுள்ள; பொது மைய.

**Concept,** n கருத்து; பொதுக் கருத்து; (உளநூல்) புலனுணர்வு அடிப்படையாக மனத்தால் உருவாக்கப்படும் எண்ணம்; கருத்துணர்வு.

**Conception,** *n.* (conceive பார்க்க.)

**Concern,** *n.* தொடர்பு; அக்கறை; கவலை. (*v. gen. pass.)* தொடர்பு படுத்து; கவலை கொள்வி; அக்கறைகொள்வி (*pass.* be concerned); ஈடுபடு; கவலை கொள்; அக்கறை கொள். *a.* concerned. *pr. p. prep.* concerning, பற்றி.

**Concer't.** *v.* ஏற்பாடு செய்; பலருடன் சேர்ந்து திட்டம் செய். *n.* (con'cert) உடன்பாடு; ஒருமைப்பாடு; இசைவு; இசை யரங்கு. *p. pa.* concerted, பலர் கூடிச் செய்துள்ள; திட்டம் செய்துள்ள.

**Conch,** *n.* சங்கு

**Conciliate,** *v.* இணக்கப்படுத்து; நட்பாக்கு. *n.* conciliation. *a.* conciliatory.

**Concise,** *a.* சுருக்கமான. *n.* conciseness.

**Conclude,** *v.* முடிவுசெய்; தீர்மானஞ் செய். *n.* conclusion, *a.* conclusive.

**Concoct,** *v.* பல பொருள்கள் சேர்த்து ஆக்கு; புனைந்து இயற்று; பொய் புனை; வடித்திறு; திட்டம் செய். *n.* concoction, புனைசுருட்டு; குடிநீர்; வடிநீர்.

**Concomitant,** *a.* உடன் செல்கிற. *n.* உடனிகழ்வது.

**Concord,** *n.* உடன்படிக்கை; ஒற்றுமை; இசைவு; இசைப் பொருத்தம்.

**Concordance,** *n.* பொருத்தம் (நூலின்) சொல் ஒப்பீட்டாராய்ச்சி. *a.* concordant, ஒத்திருக்கிற; ஒத்த.

**Concourse,** *n.* கூட்டம்; மக்கள் திரள்.

**Concrete,** *a.* 1. பருப்பொருளான; புலனீடான. 2. *n.* சீமைக் காரைக்கட்டு. *n.* concretion, இறுக்கம்.

**Concubine,** *n.* காமக்கிழத்தி; வைப்பாட்டி.

**Concur,** *v.* ஒரே சமயத்தில் நடைபெறு; ஒத்தியங்கு; இசைவுறு; ஒன்றுபடு; சந்தி; பொருந்து. *n.* concurrence, concurrent.

**Concussion,** *n.* மோதல்; அடிபடுதல்; தாக்குதல்.

**Condemn,** *v.* கண்டி; தவறென்று கூறு; தண்டனை கொடு. *n.* condemnation.

**Condense,** *v.* சுருங்கு; சுருக்கு; உருவத்தைக் குறை; கெட்டியாக்கு; (வளிப்பொருளை) நீர்ப் பொருளாக்கு. *n.* condensation.

**Condescend,** *v.* மதிப்பு விட்டிறங்கிச் செயலாற்று; அருள் பாலி. *n.* condescension.

**Condiment,** *n.* (உணவுக் குரிய) சுவைப்பொருள்; காரம்.

**Condition,** *n.* சூழ்நிலை; கட்டுப் பாடு; வரையறை நிலைமை; தனிநிலைமை. *v.* வரையறைப் படுத்து; கட்டுப்படுத்து. *a.* conditional, கட்டுப்பாட்டின் மீதான; தனி நிலைசார்ந்த; (இலக்.) (வாசகம்) முன்னிகழ்வான; காரணத் தொடர்பான. *comb. a.* air-conditioned, காற்றுத் தட்பவெப்ப வரையறைப் படுத்தப்பட்ட.

**Condole,** *v.* வருத்தந்தெரிவி; துயர் பரிமாறிக்கொள்; (x congratulate.) *n.* condolence, *a.* condolatory.

**Condone,** *v.* மன்னி; குற்றத்தை மற; *n.* condonation.

**Conduce,** *v.* (விளைவுக்குக்) காரணமாகு; (நிலைமைக்கு) உதவு; துணைசெய். *a.* conducive.

**Condu'ct,** *v.* அழைத்துச் செல்; வழிகாட்டு; நடத்து. *n.* con'duct. நடத்தை; ஒழுக்கம். *n.* conductor. அழைத்துச் செல்பவன்; வழிகாட்டி; ஊர்தித்துணைவன்; (வெப்பம், மின் வலி) ஊடு செலவிடும் பொருள். *n.* conduction.

**Conduit,** n கால்வாய்; குழாய்.

**Cone,** *n.* கூர் உருளை; கூம்பிய வடிவம்; கூம்பு. *a.* conic. conical.

**Confabulate,** *v.* பிறருடன் கூடிப்பேசு. *n.* confabulation.

**Confection,** n கலந்து உண்டு பண்ணுதல்; தின்பண்டம். *n. pers.* confectioner. திண்பண் டங்களை உண்டுபண்ணுபவன். *n.* confectionary, தின்பண்டக் கடை.

**Confederacy,** *n.* கூட்டுக் கழக இணைப்பு; நாடுகள் கூட்டிணைப்பு; நேசக்குழு. *n. pers. com.* confederate, கூட்டிணைப்பு உறுப்பினர்; கூட்டாள்; கூட்டிணைப்பரசு. *n. abs.* confederation, *also a.* confederate.

**Confess,** *v.* உண்மையென ஒப்புக் கொள்; (தன்) குற்றங்குறைகளைக் கூறு. *n.* confession. *a. n.* confessional, மன்னிப்புக் கேட்கிற (இடம்). *n. pers.* confessor. 1. ஒப்புக் கொள்கிறவர். 2. ஒப்புக் கொள்வதை ஏற்கும் சமயகுரு.

**Confide,** *v.* முழு நம்பிக்கைவை; பிறன் கண்காணிப்பில் வை. *n. pers.* confidant, நம்பிக்கைக் குரியவர். *n.* confidence. *a.* confident, confidential நம்பக மான; மறைவடக்கமான.

**Configuration,** *n.* வெளியுருவம்; உருவ அமைப்பு; தோற்றம்.

**Confine,** *v.* எல்லைக்குட்படுத்து; அடைத்து வை. *n. (pl.)* எல்லைப்புறம். *n.* confinement, சிறை வைத்தல்; பிள்ளைப்பேறு.

**Confirm,** *v.* உண்மையென உறுதிப்படுத்து; வலியுறுத்து. *n.* confirmation, *a.* confirmatory, confirmative.

**Confiscate,*v.*** பறிமுதல் செய். *n.* confiscation.

**Conflagration,** *n.* பெருந் தீ; காட்டுத் தீ.

**Conflict,** *n.* போர்; சச்சரவு. *v.* confli'ct, போர் செய்; எதிர்த்து நில்; முரண்படு.

**Confluent,** *a.* ஒன்றாகப் பாய்கிற. *n.* confluence, conflux, ஆற்றுச் சந்திப்பு; ஆற்று விழுவாய்.

**Conform,** ***v.*** ஒரே மாதிரியாக அமைந்திரு; ஒத்தியலு. *a.* conformable, பொருத்தமான; ஒரே மாதிரியான. *n.* conformation, conformity, உடன்பாடு.

**Confound,** குழப்பு; திகைக்கச் செய்; பாழாக்கு. *pp. a.* confounded, பாழான; கொடிய.

**Confront,** *v.* நேருக்கு நேர் நில்; எதிர்த்துநில்; எதிரில் கொண்டுவா.

**Confuse,** *v.* குழப்பமாக்கு; தாறுமாறாக்கு, *n.* confusion.

**Confute,** *v.* தவறென்று எண்பி. *n.* confutation.

**Congeal,** *v.* குளிர்ச்சியால் இறுகச் செய்; உறை. *n.* congealment.

**Congenial,** *a.* உகந்த; பிடித்தமான; நலந்தருகிற.

**Congenital,** *a.* பிறப்புறவுடைய; இன உறவுடைய.

**Congest,** *v. (gen-in-pass.)* நெருக்கமாக்கு; அடர்த்தியாக்கு.

*a.* congested, நெருக்கமான; குருதி கட்டிய. *n.* congestion.

**Conglomerate,** *v.* பந்துபோல் திரள்; கும்பலாகச் சேர்த்துத் திரட்டு. *n.* கூழாங்கற்கள் சேர்ந்ததான பாறை; கலவைப் பாறை. *n.* conglomeration, பல்பொருள் திரள்.

**Congratulate,** *v.* மகிழ்ச்சி தெரிவி; பாராட்டு; (x condole). *n.* cong-ratulation. *a.* congratulatory.

**Congregate,** *v.* கூட்டமாகச் சேர். *n.* congregation; கூட்டம்; அடியார் குழு; சமயத் திருக் கூட்டம்; கோயில்வழிபாட்டாளர் பொது அவை.

**Congress,** *n.* பொதுமன்றம்; நாட்டு மன்றம்; முழுப்பேரவை.

**Congruence,** ***cy.,*** *n.* முழு ஒற்றுமை; முழுதுறழ் ஒற்றுமை. *a.* congruent, முழு ஒற்றுமை யுள்ள.

**Congruous,** *a.* பொருத்தமான. *n.* congruity.

**Conjecture,** *v.* ஊகி; உய்த்தெண்ணு. *n.* ஊகம்; உய்த்தெண்ணம்.

**Conjoin,** *v.* (இருதரப்பினர் சரி சமமாக) இணை; ஒன்று சேர். *a.* conjoint, இணைந்த; சேர்ந்து நடத்துகிற.

**Conjugal,** *a.* மண உறவு சார்ந்த; கணவன் மனைவிக்குரிய.

**Conjugate,** *v.* வினைச்சொல்லின் வெவ்வேறு உருவங்களைக் காட்டு. *n.* conjugation, வினைத் திரிபு; திரிபுக்கணம்.

**Conjunction,** *n.* சேர்த்தல்; (இலக்) இணைக்கும் சொல்; இணைப் பிடைச் சொல். *a.* conjunctive, இமை இணைப்படலம். *a.* conjuct, கூட்டான; இணைக்கப்பட்ட *n.* conjuncture, நிகழ்ச்சிகளின் சேர்க்கை.

**Conjure**, *v.* மிகவும் வேண்டிக் கொள்; பசப்பி இணங்குவி; மாயம் செய். *n.* conjuration. *n. pers.* Conjurer, conjuror.

**Connect,** *v.* இணைத்துக்கட்டு; தொடர்பாக்கு. *n.* connection, connexion, இணைப்பு உறவு; இணைப்பது; உறவினர். *a.* connective, சேர்க்கிற. *n.* சேர்க்கும் சொல்; இணைப்பு.

**Connive,** *v.* தெரிந்தும் தெரியாதது போலிரு; வாளா இருந்து இணங்கு; மறைவாக இணக்கமளி; மறைமுக உடந்தையாயிரு. *n.* connivance.

**Connoisseur,** *n.* கலைப்பண் பறிஞர்; நுண்திற அறிஞர்.

**Connote,** *v.* குறி; பண்புகுறி; பொருள்படு. *n.* connotation, பண்பு; (வாய்வியல்) சொற்பண்பு.

**Connubial,** *a.* மணவாழ்வு சார்ந்த.

**Conquer,** *v.* வெல்; நாடு வென்று கைக்கொள்; கீழடக்கு. *n.* conquest, *n. pers.* conqueror.

**Consanguinity,** n அணிமைக் குருதி உறவு; மணத்தொடர்புக்குத் தகா உறவு. *a.* consanguine, consanguineous.

**Conscience,** *n.* மனச்சான்று. *a.* conscientious. நேர்மையான; மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட.

**Conscious,** *a.* தெரிந்துள்ள; (மனம்) விழித்திருக்கிற. *a.* consciousness, உணர்ச்சி விழிப்புள்ள நிலைமை; தன்னறிவு.

**Conscription,** *n.* (படைக்கு) கட்டாய ஆட்சேர்ப்பு. *(> v.* conscribe.) *n. pers. a.* conscript.

**Consecrate,** *v.* திருப்பணிக்கு ஒதுக்கிவை; தெய்வத்துக்கு நேர்ந்துவிடு; திருநிலைவாண ராக்கு. *a.* நேர்ந்துவிட்ட; திரு நிலையாக்கப்பட்ட *n.* consecration.

**Consecutive,** *a.* தொடர்ச்சியான; ஒன்றின்பின் ஒன்றான; அடுத் தடுத்து; இடைவிடாத.

**Consensus,** *n.* (பலவற்றின்) ஒற்றுமை; ஒருமனப்பட்ட தன்மை.

**Consent,** *v.* இணங்கு, *n.* இணக்கம்; உடன்பாடு.

**Consequence,** *n.* 1. விளைவு; பயன். 2. பெரும்பயன்; மதிப்பு; சிறப்பு; முக்கியத்துவம். *a.* consequent (x antecedent). பயனாக ஏற்பட்ட; செயல் விளைவான. *n.* பயனிகழ்ச்சி பின்னிகழ்ச்சி; (வாய்பியல்) காரியவாசகம்; (கணக்கியல்) எண் பொருத்தத்தில் பின் எண். *a.* consequential. 2. விளைவாக; உண்டான. 2. தற் பெருமையுள்ள. *adv.* consequently, அதன் பயனாக; ஆகையால்.

**Conservancy,** *n.* (காடு; ஆறு; தெரு; உடல்நலம் ஆகியவற்றின்) பாதுகாப்பு; பேணுகை; பொது நிலை ஒதுக்கீடு; பாதுகாப்புத் துறை. conserve, *v.* பாதுகாத்து வை; சேமித்துவை; பழுது படாமல் பேணு; வருபயனோக்கிச் சேர்த்து வை. *n.* conservation. *n. pers.* conservator. *n. com.* cnservatory, பாதுகாப்பகம்.

**Conservative,** *a.* மாறுதல் விரும் பாத. *n.* மாறுதல் விரும்பாதவர்; பழைமைப் பற்றாளர்; பழைமை பேணும் கட்சியினர்.

**Conserve,** *v. see* conservancy.

**Consider,** *v.* ஆழ்ந்து ஆராய்; எண்ணிப்பார்; அமைந்து எண்ணு; சிந்தி. *n.* consideration, 1. ஆராய்வு. 2. (for a consideration,) சலுகை; தன்னலத்துக் குரிய; விட்டுக்கொடுப்பு. 3. தயக்கம். *a.* considerate, எண்ணிப் பார்க்கிற; அன்பாதரவுடைய; விட்டுக்கொடுப்புப் பண்புடைய. (*n.* considerateness)

**Considerable,** *a.* 1. எண்ணத்தக்க, 2. பெரிய; மிகுதியான; பல. *adv.* considerably, மிக; நிரம்ப.

**Consign,** v ஒப்படை; அனுப்பு; வகுத்தமை. *n.* consignment, ஒப்படைப் பொருள்; அனுப்புச் சரக்கு; ஒப்படைக்கப்பட்ட சரக்கு; *n. ag.* consignor. *n. pers.* consignee, சரக்கை ஏற்றுக் கொள்பவர்.

**Consist,** *v.* ஆக்கப்பட்டிரு; (உறுப்பாக) உட்கொண்டிரு.

**Consistence, consistency,** *n.* நிலையாயிருத்தல்; (கொள்கை) மாறாமை; நிலையமைதி; பொருத்தம்; முன் பின் இணைவு; உறுதி அல்லது கெட்டியான தன்மை. *a.* consistent., கொள்கை மாறாத; முரணில்லாத; ஒத்திருக்கிற.

**Console,** *v.* தேற்று; துயர் ஆற்று; ஆறுதலளி. *n.* consolation. *a.* consolatory, (*com.* solace) ஒன்று சேர் ஒன்றாகத் திரட்டு.

**Consolidate,** *v.* (solid,) திடமாக்கு; வலுப்படுத்து. *n.* consolidation.

**Consonance,** *n.* ஒத்து இசைத்தல்; ஒத்தொலிப்பு; ஒற்றுமை.

**Consonant,** 1. *a.* ஒத்திருக்கிற. 2. *n.* மெய்யெழுத்து; (*correl.* sonant)

**Co'nsort,** *n.* வாழ்க்கைத் துணை; கணவன் அல்லது மனைவி. *v.* (conso'rt) துணையாயிரு இணங்கு; தோழமைகொள்; உறவாடு.

**Conspicuous,** *a.* தெளிவாகத் தெரிகிற; முனைப்பான; பகட்டாகத் தெரிகிற. *n.* conspicuity.

**Conspire,** *v.* கூடிச் சதி செய்; ஒன்றுகூடிச் செயலாற்று; ஒருங்கே காரணமாயிரு. *n.* conspiracy, சதி; கூட்டு மறை பகைச்செயல்; சட்ட மீறிய மறைசெயல். *n. pers.*conspirator, சதிகாரன்.

**Constable,** *n.* காவலர்; காவல் துறையாளர்; காவல் துறைத் தலைவர். *n.* constabulary, காவலர் தொகுதி.

**Constant,** *a.* நிலையான; பற்றுறுதி யான; மாறாத; இடைவிடாத. *n.* நிலைஎண்; மாறாமதிப்பளவை. *n. abs.* constancy. *adv.* constantly, ஓயாது; இடை விடாமல்.

**Constellation,** *n.* விண்மீன் குழு; நாண்மீன் குழு.

**Consternation,** *n.* கிலி; திகைப்பு; திண்டாட்டம்.

**Constipate,** *v.* மலச்சிக்கலுண்டாகு. *n.* constipation.

**Constituency,** *n.* தேர்தல் தொகுதி.

**Constituent,** *a.* பகுதியாயுள்ள; கூறியலான. *n.* பகுதி; கூறு; உறுப்பு.

**Constitute,** *v.* அமை; சேர்ந் துருவா(க்)கு; சமை; சேர்த்து உருவாக்கு. *n. con.* constitution, ஆக்கம்; உறுப்பமைதி; உடம்பு; யாக்கை; கூற்றியலமைதி; அரச மைப்பு; அரசடிப்படை அமைதி; சட்ட அமைதி. *a.* constitutional. சட்டத்துக்கு உட்பட்ட; அரசமைப்புக்குக் கட்டுப்பட்ட. *n. abs.* constitutionalism. *n. pers.* cnstitutionalist.

**Constrain,** *v.* வற்புறுத்திச் செய். *n.* constraint, வற்புறுத்தல்.

**Constrict,** *v.* சுருக்கு; இறுக்கு, *n.* constriction.

**Construct,** *v.* கட்டமை; கட்டு மானம் செய். (உருக்கணக்கியல்) கொண்டு கூட்டுக்கோடு வரை. *n.* construction. 1. கட்டுமானம்;

கட்டடம்; (உருக்கணக்கு) கொண்டு கூட்டுக் கோடு. 2. உய்த்தறிகருத்து; தற்குறிப்பு. consul, *n.* ஆக்கச் சார்பான; (x destructive.) *n. pers.* constructor.

**Construe,** *v.* (சொற்) பொருளை விளக்கு; பொருள் முடிபு கூறு; பொருள் கொள். *n. see* construction.

**Consul,** *n.* ஆட்சித் தலைவர்; அயல்நாட்டு ஆட்சிப் பேராள்; அயல்நாட்டுப் பேராள். *n. abs. conn.* consulate, அயல்நாட்டுப் பேராள் அலுவலகம். *a.* consular.

**Consult,** *v.* கலந்துபேசு; கலந்தாராய்; அறிவுரை கோரு. *n.* consultation, *a.* consultative.

**Consume,** *v.* அழி; செலவழி; பயன் படுத்திச் செலவுசெய்; பயன் படுத்து; வீணாக்கு. *n.* consumer, பயனீட்டாளர்; நுகர்வோர்; பயன் பாட்டாளர். *n.* consumption. 2. செலவழிப்பு; பயன்பாடு; நுகர்வு. 2. எலும்புருக்கி நோய்; > *a.* consumptive, எலும்புருக்கி நோய் உடைய.

**Consummate,** *v.* நிறைவுசெய்; செய்து முடி. *a.* சிறந்த; நிறைவான. *n.* consummation. நிறை வேற்றும்; மண நிறைவு.

**Contact,** *n.* பற்று; தொக்கு; தொடக்கு; தொடுகை; பற்றிணைப்பு. *v.* தொடு; பற்றிணைப்புக் கொள்; தொடர்புகொள்; சந்தி.

**Contagion,** *n.* நோய்த் தொத்து; ஒட்டுநோய். *a.* contagious.

**Contain,** *v.* அகத்தே கொண்டிரு; அடக்கிக்கொள்.

**Contaminate,** *v*, கறைப்படுத்து; தூய்மை கெடு. *n.* contamination.

**Contemn,** *v.* வெறு, மதிப்புக் குறை.

**Contemplate,** *v.* ஆழ்ந்துநினை; சிந்தி; எதிர்பார்; கருது. *a.* contemplation. *a.* contemplative.

**Contemporary,** *a.* ஒரே காலத்தில் உள்ள அல்லது வாழ்கிற. *n.* சமகாலத்தவர்; சம காலத்தது.

**Contempt,** n வெறுப்பு; புறக்கணிப்பு. *a.* contemptuous *a.* contemptible, வெறுக்கத்தக்க; இழிவான.

**Contend,** *v.* எதிர்த்துப் போர் செய்; முயற்சிசெய்; தாக்கம் செய். (கொள்கையை) நிலைநிறுத்து. *n. see* contention.

**Content,** 1. *n.* உட்கொண்ட பொருள். *(pl.)* பொருளடக்கம்; உள்ளடக்கம். 2. *v.* மனநிறைவு உண்டுபண்ணு (*gen. pass*) *a.* content or contended. *n.* contentment, contentedness.

**Contention,** *n.* வாதம்; கொள்கை; சொற்போர்; சச்சரவு; ஒருவர் நிலைநிறுத்தும் கொள்கை. (*phr.* bone of contention, சச்சரவுக் குரிய எலும்பு அதாவது சிறு பொருள்). *a.* contentious, சச்சரவுக்கு இடமுள்ள; போராடுகிற.

**Conterminal, conterminous,** *a.* ஒரே எல்லையிலுள்ள.

**Conte'st,** *v.* தர்க்கம் செய்; சச்சரவு செய்; போட்டியிடு. *n.* (con'test) போட்டி; சச்சரவு. *n.* conte'stable.

**Context,** *n.* தறுவாய்; சூழ்நிலை; கட்டம்.

**Contiguity,** *a.* பக்க அணிமை; ஒட்டணிமை; அடுத்திருத்தல்; பக்கத்துக்குப் பக்கமாக யிருத்தல், *a.* contiguous.

**Continent,** 1. *a.* மட்டமான தன்னடக்கமுடைய. 2. *n.* பெருநிலப்பகுதி; கண்டம். ( (1) *n.* continence, (2) *a.* continental. பெருநிலம் அல்லது உள்நிலம் சார்ந்த; தலைநிலம் சார்ந்த; (வரலாறு- பிரிட்டன்) ஐரோப்பா சார்ந்த.

**Contingency,** *n.* தற்செயல் நிகழ்ச்சி; எதிர்பாரா நிலை; எதிர்கால நேர்வு. *a.* contingent (also) *n.* துணைப்படை.

**Continue,** *v.* தொடர்; தொடர்ந்து நிகழ்; தொடர்ந்து செல்; இடைவிடாது செய்; தங்கியிரு. *a.* continual, continuous, continuative, (தொடரத்தக்க). *n.* continuity, தொடர்ச்சி. continuation, தொடர்ச்சியாதல்; தொடர்ச்சியானது.

**Contort,** *v.* உருவத்தைக் கோணல் மாணலாக்கு; வளைந்து நெளி; முறுகு; முறுக்கு. *n.* contortion.

**Contour,** *n.* (நிலப்படம்) தளவேறு பாட்டு எல்லைக்கோடு; மட்ட நிலைக்கோடு.

**Contraband,** *n.* திருட்டு வாணிகம்; சட்டமீறிய வாணிகச் சரக்கு.

**Contraceptive,** *a. n.* கருத்தடை யான (கருவி).

**Contract,** 1. *n.* ஒப்பந்தம்; உடன்படிக்கை; குத்தகை; *v.* (contra'ct) ஒப்பந்தம் செய். 2. (contra'ct) சுருக்கு; பற்று; பெறு. *n.* contractor, குத்தகையாளர்.

**Contradict,** *v.* மறுத்துப் பேசு; எதிராயிரு. *n.* contradiction, மறுத்தல்; பொருத்தமில்லாமை. *a.* contradictory.

**Contradistinction,** *n.* எதிரெதிர் மாறுபாடு; நேர் எதிர் முரண்பாடு.

**Contradistinguish,** *v.* மாறுபாடுகளால் அறி.

**Contrary,** *a.* வேறுபடுத்தியுணர்; எதிர்நிலையான; எதிர்மாறான. *n.* contrariety.

**Contra'st,** *v.* எதிரெதிராக அமை; ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கூறு. *n.* (co'ntrast) வேறுபாடு; வேறுபாடுள்ள பொருள்.

**Contravene,** *v.* சட்டத்துக்கு மாறாகச் செய் எதிர்த்துத் தர்க்கம் செய். *n.* contravention, எதிரிடை.

**Contribute,** *v.* பங்காகக் கொடு; வரிகொடு; உதவு; துணையளி; ஒரு கூறாயுதவு. *n.* contribution, பங்காகக் கொடுத்தல்; பங்கு. *n. pers.* contributor. *n.* contributory.

**Contrite,** *a.* செய்த பழிக்கு வருந்துகிற; தன்னுறுத்தலுடைய. *n.* contrition.

**Contrive,** *v.* புதிதாக ஆக்கு; ஏற்பாடு செய். *n.* contrivance, ஏற்பாடு; இயந்திர அமைப்பு; கருவி; சூழ்ச்சித் திறம்.

**Control,** *n.* கட்டுப்பாடு, *v.* கட்டுப்படுத்து; தடுத்து நிறுத்து; அடக்கியாள்; வசப்படுத்து; ஒழுங்குபடுத்து. *n.* controller, (comtroller) கட்டுப்பாட்டு அதிகாரி; தேர்வதிகாரி.

**Controvert,** *v.* (மறுத்துப் பேசு; தர்க்கம் செய். *n.* controversy, கருத்துமாறுபாடு; வாத எதிர் வாதம். *a.* controversial. *n. pers.* controversialist.

**Contumacious,** *a.* கீழ்க்படியாத; அடங்காத. *n.* contumacy.

**Contumely,** *n.* அவமதிப்பு; பழிப்பு; அவமதிச்செயல். *a.* contumelious.

**Conundrum,** *n.* விடுகதை; கடுவினா; சொற் பொறி; புதிர்; வெற்றுவேட்டு.

**Convalesce,** *v.* நோய்நீங்கி மீளு; உடல்நலம் பெறு. *a.* convalescent. *n.* convalescence.

**Convection**, *(current) n.* (மின் வலி, வெப்பம்) புடைபெயர்ச்சிச் சுழல்.

**Convene,** *v.* அழை; அவைகூட்டு; 'மன்னழை'. *n. pers.* convener.

**Convenient,** *a.* வாய்ப்பான; வாக் கான; வசதியான. *n.* convenience. *adv.* conveniently.

**Convent,** *n.* பெண் துறவி மடம்; கன்னியர் மடம்.

**Convention,** *n.* 1. மரபொழுங்கு; வழக்காறு; ஆசாரம்; உறுப்பினர்; ஒத்த உடன்படிக்கை; இணக்க விதி. 2. மனமொத்த கூட்டம்; சட்டப்படி அமையா ஒழுங்கு மறை மன்றம். *a.* conventional, மரபு ஒழுங்கான; ஆசாரமான; மரபு வழக்கமான.

**Converge,** *v.* ஓரிடத்தில் கூடு; நெருங்கு; குவி. *a.* convergent. *n.* convergence.

**Conve'rse,** 1. *v.* கூடிப்பேசு; உரையாடு. *n.* co'nverse, பேச்சு; கூட்டுறவு; தோழமைத் தொடர்பு 2. converse, தலைமாற்று.; எதிரிடை. (1) *a.* conversant, செய்தியறிந்த. *n.* conversation, உரையாடல். *a.* conversational. *n. pers.* conversationist, conversationalist.

**Conve'rt,** *v.* மாற்று; (கொள்கை) மதம் முதலியன. *n. pers.* co'nvert. *n.* conversion. (*also see* converse 2.)

**Convex,** *a.* வட்டத்தின் வெளிப்புறம் போன்ற; குவிந்த; (x concave) *n.* convexity.

**Convey,** *v.* தூக்கிச் செல்; கொண்டு செல். (செய்தி) அனுப்பு. *n.* conveyance, தூக்கிச்செல்லல்; வண்டி; ஊர்திவகை; (நிலம் முதலியன) உரிமை மாற்று.

**Convi'ct,** *v.* குற்றவாளி யென்று தீர்ப்புக் கூறு. *n.* (co'nvict),

தண்டனை பெற்ற குற்றவாளி. *n.* conviction, 2. குற்றத் தீர்ப்பு. 2. (*n.* of convince), திட நம்பிக்கை.

**Convince,** *v.* மெய்ப்பி; மெய் எனக் காட்டி நம்ப வை. *adv.* convincingly, *n.* conviction (convict பார்க்க).

**Convoke,** *v.* ஒருங்கு கூட்டு. *n.* convocation, கூட்டுதல்; பல்கலைக்கழகப் பட்டமளிப்புக் கூட்டம்; பட்டமளிப்பு விழா; குருமார் கூட்டம்.

**Convolution,** *n.* சுருண்டிருத்தல்; மடிப்புகளோடிருத்தல்.

**Convoy,** *n.* துணை; காவல்; பாதுகாப்புடன் செல்லும் கப்பல் கூட்டம். *v.* convoy, பாதுகாத்துச் செல்.

**Convalse,** *v.* நடுங்கு; பலமாக ஆட்டங்கொடு; நடுங்கச் செய்; சிரிப்பினால் குலுங்கச் செய். *n.* convulsion நடுக்கம்; வலிப்பு. *a.* convulsive.

**Coo,** *v.* (புறாவைப்போல்) கூவு; செல்லங்கொஞ்சு.

**Cook,** *v.* உணவு சமை. *n.* சமையற் காரன். *n. ag. impers*, cooker, சமையற் கருவி *n.* cookery, சமையல். *n.* cook shop.

**Cool,** *a.* குளிர்நலமுடைய; குளிர்ந்த; அமைதியுள்ள, *v.* குளிரச் செய். *adv.* coolly. *n.* coolness. *n.* cooler, குளிரச் செய்யும் கருவி.

**Coolie, cooly,** *n.* கூலி வேலை செய்பவன்.

**Coop,** *n.* கோழி முதலிய உயிரினங்களை அடைக்கும் கூடு. *v.* கூட்டிலடை. *n.* cooper, கூடை மிடா செய்பவர்.

**Co-operate,** *v.* (பிறருடன்) ஒத்துழை; உதவியாக வேலை செய்; *n.* co-operation. s. co-operative. *n. pers.* co-operator.

**Co-opt,** *v.* (உறுப்பினர்கூடிப் புது உறுப்பினரைத்) தேர்ந்தெடு; இணங்கித் தேர்ந்தெடு.

**Co-ordinate,** *a.* ஒரே இன; (coordinate, conjunction) ஒரே இன இணைப்பு இடைச் சொல், *v.* ஒரே இனத்தில் சேர்; இணக்கு. *n.* coordination, ஓரினமாக்கல்; ஒருமுகப்படுத்தல்.

**Co-partner,** n வாணிகக் கூட்டாளி.

**Cope,** *v.* எதிர்த்து நின்று சமாளி.

**Copious,** *a.* போதிய; ஏராளமான, *n.* copiousness.

**Copper,** *n.* செம்பு; அண்டா; செப்புக்காசு coppersmith, கன்னான்.

**Coppice, copse,** *n.* சிறுகாடு; புதர்க்காடு.

**Copra,** *n.* கொப்பரைத் தேங்காய்.

**Copula,** *n.* இணைப்புவினை (நெ) (உடற் கூற்றியல்) இணைப் புறுப்பு. *v.* copulate. *a. n.* இணைக்கிற (வினைச் சொல்) *n. vbl.* copulation.

**Copy,** *n.* ஒன்றைப் போன்றிருப்பது படி; பகர்ப்பு. *v.* ஒன்றைப்போல் செய்; பகர்ப்புச் செய்; படியெடு. *n. pers.* copyist.

**Copyright,** *n.* பதிப்புரிமை.

**Coquette, coquet,** *v.* ஊடு; துனிகொள்; புலவிகொள்; பிணக்கு; பிகுசெய்; காதல் காட்டி ஏய்.

**Coracle,** n .பரிசில்; ஓடவகை.

**Coral,** *n.* பவழம்.

**Corbel,** *n.* தண்டையம் (பளுத்தாங்கும் சுவரொட்டி)

**Cord,** *n.* கயிறு; திண்ணிய நூற் கயிறு; (உடற் கூற்றியல்) (spinal, umbilical, vocal-) முதுகந்தண்டு; தொப்பூழ்க்கொடி; குரல்வளை. *n. abs. com*. கயிறுகள் (தொகுதி)

**Cordate,** *a.* இதய வடிவான.

**Cordial,** *a.* உளமார்ந்த; நட்பான. *n.* உடல் வலிமை தரும் மருந்து. *n.* cordiality, உளமார்ந்த அன்பு; ஆர்வ ஆதரவு. *adv.* cordially.

**Cordon,** *n.* நன்மதிப்புப் பட்டை; பாதுகாப்புக் கயிறு வேலி.

**Corduroy,** *n.* முரட்டு ஆடைவகை.

**Core,** *n.* நடுப்பகுதி.

**Coriander,** *n.* கொத்தமல்லி.

**Cork,** *n.* தக்கை; நெட்டி; கிடைச்சு; தக்கைமூடி. *v.*தக்கையால் மூடு. *pp. a.* corked. *(comb.)* cork screw, தக்கை வாங்கி.

**Cormorant,** *n.* கடற்பறவை வகை; பேராவல்காரன்.

**Corn,** *n.* கூலம்; கதிர்மணி.

**Cornea,** *n.* கண்ணின் முன் பகுதி; சவ்வு; விழி வெண்படலம்.

**Corner,** *n.* மூலை, *n.* cornerstone, மூலைக்கல்; தலைக்கல்; ஆதாரம்.

**Cornet,** *n.* இசைக்கருவி வகை.

**Cornucopia,** *n.* குறையா நிறை கலம்; அள்ளக் குறையாது அளிக்கும் ஏனம்.

**Corolla,** *n.* நிறை இதழ் வட்டம்.

**Corollary,** *n.* தொடர்முடிபு; பின் தொடர்பு; துணைமுடிவு.

**Corona,** *n.* பரிவேடம்; ஊர் கோள்.

**Coronation,** *n.* முடிசூட்டு விழா.

**Coroner,** n (கொலை, இடர்) பிண ஆராய்ச்சியாளர்.

**Coronet,** *n.* பெருமக்கள் அணி முடி.

**Corporal,** 1. *n.* படைத்துறைப் பணியாளர். 2. *a.* உடல் சார்ந்த.

**Corporate,** *a.* ஓரமைப்பாகச் சேர்ந்துள்ள. *n.* corporation, கூட்டவை; சங்கம்; நகர்ப்பேரவை; பெரு நகரவை.

**Corporeal,** *n.* உடல் சார்ந்த; உற்றறியக்கூடிய.

**Corps,** *n.* (கோர்) *(pl. corps.)* படைப்பிரிவு; தனித்துறைக் குழு.

**Corpse,** (*poet.* **Corse**), *n.* பிணம்.

**Corpulent,** *a.* கொழுத்து; தடித்து.

**Corpuscle,** *n.* (குருதிக்) கூறு; நுண்ணியம்.

**Correct,** *v.* சரிபார்; திருத்து. *n.* correction, திருத்தும்; சரி பார்த்தல். *n.* correctness, தவறில்லாமை. *a. n.* corrective, *n.* correctitude, தவறில்லா நடத்தை.

**Correlate,** *n.* தொடர்புபடுத்து; ஒருமுகப்படுத்து. *a., n.* correlative, எதிரிணை(யான). *n. vbl. abs.* correlation.

**Correspond,** *v.* 1. இசைந்திரு; ஒத்திரு; போன்றிரு. 2. கடிதத் தொடர்புகொள். (2) corresponding, (மனைக் கணக்கியல்-கோணம்) இணை எதிரான; கோடுகளின் ஒரே புறமான. *adv.* correspondingly, (2) *n. pers.* correspondent, கடிதப் போக்கு வரவு செய்பவர் (1,2) *n.* correspondence.

**Corridor,** *n.* இடைவழி; ஊடுவழி.

**Corrigendum,** *n.* (*pl.* -da) திருத்தவேண்டிய பிழை.

**Corrigible,** *a.* திருத்தக்கூடிய.

**Corroborate,** v (சான்று முதலிய வற்றால்) உறுதிப்படுத்து. *n.* corroboration. *a.* corroborative, corroboratory.

**Corrode,** *v.* அரித்துத்தின்; கரம்பு. *a.* corrosive, பொன்மங்களை அரிக்கக் கூடிய(து).

**Corrugate,** *v.* வளைத்துநெளி.

**Corrupt,** *v.* அழுகு; தூய்மை கெடு; அழுகலாக்கு; கைக்கூலிகொடு. *a.* தூய்மையற்ற; கைக்கூலி வாங்கிய. *n.* corruption. corruptness, *a.* corruptible.

**Corsair,** *n.* கொள்ளைக் கப்பல்.

**Corslet,** மார்புக் கவசம்.

**Cortex,** *n.* (*pl.* cortices) மரப் பட்டை; மூளையின் வெளிப்பகுதி.

**Corundum,** *n.* குருந்தக் கல்.

**Coruscate,** *v.* ஒளி வீசு. *n.* coruscation.

**Corvette,** *n.* சிறு போர்க்கப்பல் வகை.

**Co-signatory,** *n.* பலருடன் கையொப்பமிட்டவர்.

**Cosmetic,** *n.* ஒப்பனைப் பொருள்; சிங்காரிப்புப் பொருள்.

**Cosmic,** *a.* (> **cosmos**) அண்டத்துக்குரிய

**Cosmogony,** *n.* அண்டப் படைப்பு; அண்டத் தோற்றம்.

**Cosmology,** *n.* அண்டப்படைப்புக் கோட்பாடு; அண்ட ஆராய்ச்சி.

**Cosmopolitan,** *n.* உலகக் குடியுரிமையாளர்; நாட்டுப் பொதுப் பற்றாளர்; உலகப்பற்றாளர்; பரந்த நோக்குடையவர். *a.* உலகப் பற்றுடைய; நாட்டுப் பொதுப் பற்றுடைய; உலகக் குடியுரிமை யுடைய.

**Cosmos,** *n.* அண்டம்; இயல் அண்டம் (x chaos).

**Cossack,** *n.* ரஷ்ய நாட்டு வீரன்.

**Cost,** *n.* விலை; செலவு; (விலை) மதிப்பு, *v.* விலைபெறு; பெறுமதி யாக; விலைபிடி; செலவாகு. *a.* costly, விலையேறிய. *n.* costliness.

**Costal,** *a.* விலா எலும்பு சார்ந்த.

**Coster, costermonger,** *n.* பழவிற்பனையாளர்.

**Costive**, *a.* மலச்சிக்கலுள்ள; கை இறுக்கமுடைய. *n.* costiveness.

**Costume,** *n.* உடை; உடையணியும்வகை.

**Cosy,** *a.* சொகுசான; வாய்ப்பமர்வான.

**Cot,** *n.* கட்டில்; சிறுகுடிசை.

**Cote,** *n.* (கோழி, ஆடு) பட்டி.

**Co-tenant,** *n.* உடன் குடியிருப்பவன்.

**Coterie,** *n.* சிறுகுழு; கூட்டு.

**Cottage,** *n.* குடிசை; *n. pers.* cottager.

**Cotton,** *n.* பருத்தி; பருத்தி ஆடை. *a.* பருத்தியாலான.

**Cotyledon,** *n.* கதுப்பு; விதையிலுள்ள இலைப்பருப்பு; விதை இலை.

**Couch,** *v.* பதுங்கு; ஒளிந்திரு. *n.* படுக்கை; சாய்விருக்கை; சொகுசிருக்கை.

**Cough,** *v.* இருமு. *n.* இருமல்.

**Could,** (can பார்க்கவும்).

**Council,** *n.* அவை; கழகம்; மன்றம். *n. pers.* councillor, மன்றத்தார்.

**Counsel,** *n.* அறிவுரை; வழக்குரைஞர். *v.* அறிவுரை கூறு. *n. ag.* counsellor.

**Count,** 1. *n.* பெருமகன்; பெருமான். (*fem.* countess). 2. கணக்கிடு; எண்ணு; எண்ணிக்கையிடு; மதி; கருது; (on) நம்பியிரு. *n.* எண்ணிக்கை; (ஆளின்) கணக்கு; திறம்; சார்பு.

**Countenance,** *n.* முகம்; முகத்தோற்றம். *v.* ஆதரி; இடங்கொடு.

**Counter,** *n.* பணம் எண்ணும் பலகை; கணக்கு வைப்பதில் குறியாக உதவும் வில்லை; பொருளக முகப்பிடம். *v.* எதிர்; மறு. *adv. pred. a.* எதிராக; எதிரான.

**Counteract,** *v.* மாறுசெய்; எதிரிடையாகச்செய்; தடை செய்; சரிசெய்; ஈடுகட்டு. *n.* counteraction.

**Counterbalance,** *v.* ஈடுபட்டு; சரிக்கட்டு, *n.* எடை கட்டல்.

**Counterblast,** *n.* எதிர்மறுப்பு; எதிர் முழக்கம்.

**Counter - clockwise,** *a.* இடஞ்சுழியாக x clockwise).

**Counterfeit,** *v.* நடி; போலியாக உண்டுபண்டு. *a., n.* போலியான (ஆள், சரக்கு).

**Counterfoil,** *n.* சரிநேர்படி; பகர்ப்பு மூலம்.

**Countermand,** *v.* எதிராக உத்தரவிடு, *n.* எதிரான உத்தரவு.

**Counterpart,** *n.* ஒத்த பகுதி, சரிநேர் பகுதி.

**Counterpoise,** *v.* எடையைச் சமமாக்கு, *n.* சரி எடை.

**Countersign,** *v.* எதிர் கையொப்பமிடு, *n.* (பாசறை) அடையாளச் சொல்.

**Countess,** *n.* (count பார்க்கவும்.)

**Countless,** *a.* எண்ண முடியாத.

**Country,** *n.* நாடு; பிறந்த நாடு; நாட்டுப்புறம்; பட்டிக்காடு.

**County,** *n.* கோட்டம்; மாவட்டம்; நாட்டுப்பிரிவு.

**Coup,** *n.* நடவடிக்கை.

*coup d' etat, n.* திடீர்ப் புரட்சி; திடீர் நடவடிக்கை.

*coup de grace, n.* முடிவான அடி.

*coup de main, n.* திடீர்த் தாக்குதல்.

*coup d'oeil, n.* விரைந்த சுற்றுப் பார்வை.

**Couple,** *n.* இரட்டை; இணை; இரண்டு; இருவர். *v.* இரண்டிரண் டாக இணை; *n.* coupling, (வண்டி, ஊர்தி,) இடையிணைப்பு.

**Couplet,** *n.* ஈரடிச் செய்யுள் குறட்பா.

**Coupon,** *n.* சீட்டு; ஆட்சீட்டு.

**Courage,** *n.* துணிவு; உரம்.

**Courier,** *v.* விரைதூதன்; தூதேவலர்; பயண உதவியாளர்.

**Course,** *n.* செல்திசை; செல் வழி; வழி; (உணவின்) ஒரு தடவை வட்டிப்பு; ஒரு முறை பரிமாறிய தொகுதி; (ஆட்ட) முறை. *v.* விரைந்தோடு; சுற்றிச் சுற்றியோடு; வேட்டையாடு. *n. ag.* courser விரைகுதிரை; பந்தயக் குதிரை.

**Court,** *n.* கூடம் அல்லது முற்றம்; முறைமன்றம்; முறையவை; அரசவை; (அரசர்) உழையர்குழு, *v.* காதலாடு; காதல்புரி; ஊடாடு; உதவியிரந்துகேள்; பசப்பு; வசப் படுத்த முயலு. *conn. see* courtier, courtship, courtly. etc.

**Courteous,** *a.* இணக்கவணக்க மான; பண்பமைதியுடைய.

**Courtesan,** *n.* ஆடலணங்கு.

**Courtesy,** *n.* நடத்தை நயம்; வணக்க இணக்கமான நடை.

**Courtier,** *n.* அரசவையார்; (மன்னர்) உழையர் குழுவினர்; புகழ்ந்து பசப்புபவர்; இச்சகம் பேசுபவர்; நாகரிக நடையாளர்.

**Courtly,** *a.* முகப்புகழ்ச்சி செய்கிற; வணக்க இணக்கம் உடைய; அரசவைக்குரிய. *n.* courtliness.

**Courtmartial,** *n.* படைத்துறை முறை மன்றம்; படைமன்ற வழக்கு; சிறப்புப் படை மன்றம். *v.* படை மன்ற நடவடிக்கை எடு.

**Courtship,** *n.* காதலூடாட்டம்.

**Courtyard,** *n.* முற்றம்.

**Cousin,** *n.* அத்தை, மாமன், சித்தி, பெரியன்னை ஆகியவரின் பிள்ளை; சரிசம வயதுடைய தொலை உறவினர்.

**Cove,** *n.* குடா; ஒதுக்கிடம்.

**Covenant,** *n.* ஒப்பந்தம், *v.* உடன் படிக்கை செய்து கொள்.

**Cover,** *v.* இடங்கொள்; நிரப்பு; பங்கு நிரப்பு; மூடு. *n.* மறைவிடம்; போர்வை; உறை; மூடி. *n.* covering, போர்வை; மூடி.

**Coverlet,** *n.* (படுக்கை) விரிப்பு.

**Covert,** *n.* மறைவிடம் *a.* மறைந்துள்ள.

**Covet,** *v.* விழை; நாட்டம் வை; பற்றுக் கொள். *a.* covetous, *n.* covetousness.

**Covey,** *n.* பறவைக் கூட்டம்; குடும்பம்.

**Cow,** *n.* (*pl.* cows, kine.) ஆவினம்; பெற்றம்; பசு; (யானை திமிங்கிலம் முதலியவற்றின்) பெண் இனம். *v.* அடக்கு; அச்சுறுத்து.

**Coward,** *n.* கோழை. *n.* cowardice, *a.* cowardly.

**Cower,** *v.* அச்சத்தால் பதுங்கு.

**Cowherd,** *n.* மாட்டிடையன்.

**Cowl.** *n.* (கிறித்துவக் குருமாரின்) தலைமுடி; புகை போக்கியின் மேல்மூடி.

**Cowle,** *n.* நிலவாரக் குத்தகை.

**Cow-pox,** *n.* (பசுக்களின்) வைசூரி நோய்.

**Cowry, cowrie,** *n.* சோழி; சோவி.

**Coxcomb,** *n.* பகடி; பசப்பன்; தற் பெருமை யுடையவன்; முட்டாள்.

**Coxswain,** *n.* படகோட்டி.

**Coy,** *a.* நாணமுடைய; தன்னடக்க முள்ள. *n.* coyness.

**Cozen,** *v.* ஏமாற்று, *n.* cozenage.

**Crab,** *n.* நண்டு, *v.* நகத்தால் கீறு.

**Crabbed,** *a.* சிடுசிடுப்பான; (மொழி நடை) கரடுமுரடான; துரடான.

**Crack,** *n.* வெடிப்பு; சிறுபிளவு; வெடிப்பொலி. *v.* சிறிது பிள; வெடி. *phr.* crack jokes, கேலியாடு. *n. ag. impers.* cracker, *n.* படக்கு; சீனவெடி.

**Crackle,** *v.* படபடவென்று வெடி.

**Cradle,** *n.* தொட்டில்; ஊஞ்சல். *v.* தொட்டிலில் கிடத்து.

**Craft,** *n.* கைத்திறம்; தந்திரம்; தொழில்; கப்பல்; சிறுகலம்; ஓடம். *n.* craftsman, தொழிலாளி. *a.* crafty, தந்திரமுள்ள. *comb. see* handicraft.

**Crag,** *n.* செங்குத்தான பாறை. *a.* craggy.

**Cram,** *v.* திணி; உருப்போடு.

**Cramp,** *n.* மரமரப்பு; சுளுக்கு; பிடிப்பு; பற்றிணைப்பு; கட்டுப் பிடிப்பு. *a.* (எழுத்து, சொல்) விளக்கமற்ற; புரியாத. *v.* இறுகப் பிடி; சுளுக்கு; நெருக்க மான இடத்தில் அடை.

**Crane,** *n.* நாரை; பாரந் தூக்கி. *v.* கழுத்தை நீட்டு.

**Cranium,** *n.* மண்டையோடு *a.* cranial.

**Crank,** *n.* சுழற்சி முறை மாற்றுப் பொறி; அரைப் பைத்தியம். *a.* (பொறி) ஆட்டங்காணுகிற; (கப்பல் துறை) கவிழத்தக்க. *v.* (> வடிவில்) வளை; கொக்கி மாட்டு. *a.* cranky.

**Cranny,** *n.* பிளவு. *a.* crannied.

**Crape,** *a.* (கறுப்பு) பட்டுத் துணிவகை.

**Crash,** *v.* உடைந்து சிதறு; மோது; திடீரென்று கீழே விழு. *n.* உடைவு; மோதும் ஒலி.

**Crass,** *a.* தடித்த.

**Crate,** *n.* கூடை.

**Crater,** *n.* எரிமலையின் வாய்.

**Cravat,** *n.* கழுத்துப்பட்டி.

**Crave,** *v.* கெஞ்சிக் கேள்.

**Craven,** *a. n.* கோழைத்தனமுள்ள (வர்).

**Craw,** *n.* பறவையின் இரைப்பை.

**Crawl,** *v.* நகர்; ஊர்ந்துசெல். *n.* தவழ்வு; நகர்வு. *n. ag.* crawler, பேன்.

**Crayon,** *n.* வண்ணக்கோல்; சுண்ணக்கோல் ( Chalk).

**Craze,** *n.* மிகு ஆர்வம்; கிறுக்கு; கோட்டி, *v.* கிறுக்காக்கு. *a.* crazy, அறிவு மாறாட்ட முள்ள. *a.* crazed, அறிவுதவறிய. *n.* craziness.

**Creak,** *v.* கிரீச்சென்று ஒலி. *n.* கிரீச்சென்ற ஒலி.

**Cream,** *n.* பால்ஏடு; சிறந்த பகுதி. *v.* (பால் முதலியவற்றின்) சத்துப் பகுதியைப் பிரித்தெடு. *n. ag. impers.* creamer, பாலேட்டைப் பிரிக்கும் கருவி. *n.* creamery, பாலாடை வெண்ணெய் முதலியன உண்டு பண்ணுமிடம்.

**Crease,** *n.* மடிப்பினால் ஏற்படும் கோடு, *v.* மடித்து அடையாளம் செய்.

**Create,** (கிரியேட்) *v.* ஆக்கு; உண்டுபண்ணு; படை; தோற்றுவி; பிறப்பி. *n.* creation, படைப்புத் தொழில்; உலகப் படைப்பு. *a.* creative, படைப்புச் சார்ந்த; உண்டுபண்ணும் திறனுடைய. *n. ag.* creator, படைப்போன்; கடவுள். *n.* creature, படைப் புயிர்; உயிரினம்; கைப்பாவை; கைப்படைப்பு.

**Creche,** *n.* குழந்தை காப்பிடம்; பிள்ளை விடுதி.

**Credence,** *n.* நம்பிக்கை.

**Credentials,** *n. (pl.)* நற்சான்றுப் பத்திரங்கள்; நற்சான்று.

**Credible,** *a.* நம்பத்தகுந்த. (x incredible) *n.* credibility. *adv.* credibly, *conn. see* credish.

Credit, *n.* செல்வாக்கு; நாணயம், பொருளகக்கையிருப்பு; பற்று; ஆதாயம். *v.* நம்பிக்கை வை; மதி; பற்று எழுது. *a.* creditable, *n. pers.* கடன் கொடுத்தவர்; பற்றாளர்.

**Credulous,** *a.* எதையும் நம்புகிற; ஏமாளியான. *n.* credulity, *conn. see* credible.

**Credo,** *n. see* creed.

**Creed, credo,** *n.* கொள்கை; கோட்பாடு; சமயம்; சமயக் கிளை.

**Creck,** *n.* சிறு கடற் கழி; சிறு ஓடை.

**Creep,** *v.* (crept) ஊர்ந்து செல்; தரையில் படர்; திருட்டுத்தனமாகச் செல்; *n. ag. impers.* creeper, படர் கொடி. a creepy. ஊரும் உணர்ச்சி தருகிற; அவல அச்சந்தருகிற.

**Cremate,** *v.* (பிணம்) தீயில் எரி; எரியூட்டு. *n.* cremation. *n.* crematorium, சுடுகாடு.

**Creosote,** *n.* (carbolic acid) கருநெய்க்காரம்.

**Crept,** *v.* (creep பார்க்கவும்).

**Crescent,** *n.* பிறை; குறைமதி. *a.* பிறை வடிவான; வளர்கிற.

**Crest,** *n.* சிகை; முடி; உச்சி; மேடு; அலை; முகடு; மலைக்குவடு; (கேடயம் முதலியவற்றிலுள்ள) அடையாள உருவம். *(comb.) a.* crest-fallen. அவமதிப்படைந்த; சோர்ந்த.

**Crevice,** *n.* வெடிப்பு; பிளவு.

**Crew,** 1. *v.* (*p.t.* of. crow) 2. *n.* கப்பலோட்டிகள் தொகுதி; கப்பலாட்கள்.

**Crib,** *n.* வைக்கோல் தொட்டி; தொட்டில்.

**Cricket,** 1. *n.* பாச்சை; சுவர்க்கோழி. 2. *n.* மரப்பந்து (ஆட்டம்) *n. pers.* cricketer, cricketeer.

**Crier,** *n.* பறையறைவோர்; கூறுவோர்; விலை கூவுவோர்.

**Crime,** *n.* குற்றம்; பழிச்செயல்; சட்டமீறுகை. *a.* criminal, குற்றவியல் (சார்ந்த); குற்றத்துறை சார்ந்த. *n.* criminal, குற்றவாளி. *v.* criminate, குற்றப்படுத்து.

**Crimp,** *v.* மடிப்பாக்கு; சுருக்கு; கட்டாயமாகக் கொண்டு செல். *n.* கட்டாயப்படைச் சேர்ப்பாளர்.

**Crimson,** *a. n.* மிக்க சிவப்பான (நிறம்). *v.* சிவப்பாகு; சிவ.

**Cringe,** *v.* கெஞ்சு.

**Cripple,** *n.* முடவன்; உறுப்புக் குறைந்தவன்; *v.* முடமாக்கு; குறைப்படுத்து.

**Crisis,** *n.* (*pl.* crises) நெருக்கடி கண்டம்; திரும்பு கட்டம்; மாறு கட்டம்; மாறும் நிலை.

**Crisp,** *n.* மொறு மொறுப்பான; சுறுசுறுப்பான. *v.* சுருளாக்கு.

**Criss-cross,** *a. n.* குறுக்கும் நெடுக்குமான.

**Criterion,** *n.* (*pl.* criteria) அளவு கருவி; ஒப்பளவுக் கருவி.

**Critic,** *n.* கருத்துரைஞர்; மதியுரைஞர்; நூலாராய்ச்சியாளர்; கலையாராய்ச்சியாளர்; நுண்ணாய் வாளர்; நடுநிலையாய்வுரையாளர்; குற்றங் காண்பவர். *a.* critical. *v.* criticize. *n. abs.* criticism. *n.* com. critique, ஆராய்ச்சிக் கட்டுரை.

**Croak,** *v.* (தவளைபோல்) கத்து. *n.* (தவளை) கத்தல்.

**Crock,** *n.* மட்பாண்டம். *n. abs., col. n.* crockery.

**Crocodile,** *n.* முதலை.

**Crone,** *n.* கிழவி.

**Crony,** *n.* உற்ற தோழர்; 'சேக்காளி'.

**Crook,** *n.* வளை தடி; வளைவு; கோணல்; மோசடிக்காரர். *a.* crooked, கோணலான; வளைந்த.

**Crop,** *n.* பயிர்; விளைவு; விளைச்சல்; சாட்டையின் கைப்பிடி; பறவையின் முதல் இரைப்பை. *v.* (மயிர் முதலியன) குறுகத்தறி; கத்தரி; வளர்; தலைதூக்கு; பயிர் செய்.

**Crore,** *n.* கோடி; நூறு இலக்கம்; நூறு நூறாயிரம்.

**Cross,** *a.* குறுக்கான; எதிரெதிரான (*comb.* cross road etc). இனக்கலப்பான (cross -breed etc.); சிடுசிடுப்பான. *n.* சிலுவை;

சிலுவைக்குறி; இன்னல்; இடர். *v.* சிலுவைக் குறியிடு; குறுக்கிடு; குறுக்கே செல்; கட; தடைசெய்; மாறாக நட; வெறுப்புண்டு பண்ணு. *(comb.) n.* cross cheque, கீறிய பணமுறி. ஒதுக்கீட்டுப் பணமுறி. *(comb.) v.* cross-examine, cross-question, குறுக்குக் கேள்வி கேள். *a.* cross-grained, அடங்காத; முரண்பட்ட. *n.* cross-reference, மாட்டெறிவு; இடை எதிர் குறிப்பீடு. cross-breed, கலப்பினம் cross word. (puzzle) குறுக்கெழுத்துப் போட்டி).

**Crotchet,** *n.* கொக்கி; கொளுவி.

**Croton,** *n.* தோட்டச் செடி.

**Crouch,** *v.* பதுங்கு; மிகத் தாழ்வாகக் குனி.

**Croup,** *n.* காசநோய் வகை.

**Crow,** 1. *n.* காகம். Crowd, *n.* 2. *v.* (*p. t.* crowed, crew. *p. a. p.* crowed.) சேவல் கூவு; மகிழ்வுடன் கூச்சலிடு.

**Crowbar,** *n.* கடப்பாரை; பாரைக் கோல்.

**Crowd,** *n.* கூட்டம்; திரள். *v.* கூட்ட மாகச்சேர்; நெருக்கு. *a.* crowded.

**Crown,** *n.* முடி; மணிமுடி; மண்டை; தலையுச்சி; பிரிட்டனின் ஐந்து வெள்ளி கொண்ட பணம். *v.* முடி சூடு; முத்தாய்ப்பிடு; முடிவான சிறப்பாயமை. *a.* crowned. *a.* crowning, முத்தாய்ப்பான; முடிவான.

**Crucial,** *a.* மெய்ம்மை விளக்கு கிற; அறுதியிட உதவுகிற; தீர்மான மான.

**Crucible,** *n.* மூசை; குகை; புடத்தேர்வு.

**Crucify,** *v.* (< cross) சிலுவையில் அறைந்து கொல்; கழுவேற்று. *n.* crucifix, சிலுவையில் மாண்ட கிறித்துவின் உருவம். crucifixion. சிலுவையில் அறைதல். *a.* cruciform, சிலுவை வடிவமான.

**Crude,** *a.* செப்பமற்ற; பண்படாத; திருந்தாத; முரடான; முதிரா முதல் நிலையிலுள்ள. *n.* crudeness, crudity.

**Cruel,** *a.* இரக்கமற்ற; கொடிய, *adv.* cruelly. *n.* cruelty.

**Cruise,** *v.* (கப்பல், கப்பலில்) சுற்றித்திரி; அங்குமிங்கும் செல். *n.* கப்பல் பயணம். *n. ag. impers.* cruiser, போர்க்கப்பல் வகை.

**Crumb,** *n.* சிறுதுண்டு; துணுக்கு.

**Crumble,** *v.* சிறு துண்டுகளாக்கு; சிறு துண்டுகளாகு; பொடிந்து விழு.

**Crumpet,** *n.* தோசை; அப்பம்.

**Crumple,** *v.* சுருட்டிக் கசக்கு.

**Crunch,** *v.* கடித்து அரை; மிதித்துக் கசக்கு.

**Crupper,** *n.* (குதிரையின் வாலடி) வார்.

**Crusade,** *n.* (வரலாறு) சமயப் போர்; சிலுவைப்போர்; அறப்போர்.

**Cruse,** *n.* மண்பானை; சாடி.

**Crush,** *v.* அழுத்து. நசுக்கு; நொறுக்கு. *n.* நசுக்குதல்; (lemon crush etc.) பழப்பிழிவு.

**Crust,** *n.* தோடு; (பால்) ஏடு; மேல் ஓடு; துரு. *v.* ஏட்டினால் மூடச் செய். *a.* crusty. *a.* crustacean. crustaceous. *a.* (இயல் நூல்) மேலோடு உள்ள; (மண்ணூல்) (நத்தை நண்டு போன்ற இனத்தைச் சேர்ந்த); பொருக்குப் போன்ற மேலோட்டுயிர் வாழ்வுக்குரிய

**Coutch,** *n.* முடவன் கோல்; ஊன்று கட்டை; ஆதாரம்.

**Crux,** *n.* புரியாப் பகுதி; சிக்கற்பகுதி.

**Cry,** *v.* (cried) கூக்குரலிடு; அழு. *n.* கூச்சல்; அழுகை.

**Crypt,** *n.* நிலவறை. *a.* cryptic, மறைபொருளான.

**Cryptogam,** *n.* பூவாத செடியினம்; பொய்ப்பூவினம்.

**Crystal,** *n.* பளிங்கு; (இயங்கு நூல்) பொருள்களின் மணி உரு. *a.* crystalline, பளிங்கினாலான; பளிங்குபோன்ற. *v.* crystallize, பளிங்கு போன்றதாக்கு; மணி உருவாகு. *(fig.)* (மெள்ள) உருப்பெறு.

**Cub,** *n.* குட்டி; குருளை.

**Cube,** *n. v.* குழிப் பெருக்கம்; மும்மடிப் பெருக்கம். *n.* cubicle, தனிப்படுக்கை யறை. *a.* cubic, cubical.

**Cubit,** *n.* முழம்.

**Cuckold,** *n.* ஒழுக்கமிழந்த மனைவியுடையவன். *v.* மனைவி கற்பிழக்க வை.

**Cuckoo,** *n.* சீமைக்குயில்; பறவை வகை.

**Cucumber,** *n.* வெள்ளரி; கக்கரி.

**Cud,** *n.* அசை ஊண்; அசை போடுதல். (*phr. idi*) *v.* chew the cud. அசைபோடு.

**Cuddel,** *n.* நெருங்கியிரு; இறுகத் தழுவு.

**Cudgel,** *n.* குட்டையான பருத்த தடி. *v.* தடியால் அடி.

**Cue,** *n.* நினைப்பூட்டும் சொற் குறிப்பு; குறிப்புச்சொல்; மேடைக் கோற்பந்துக் கோல்.

**Cuff,** *v.* கையால் அடி. *n.* கையால் அடித்தல்; சட்டையின் முன் கைப் பகுதி.

**Cuirass,** *n.* உடற் கவசம்.

**Cuisine,** (க்விஸின்) *n.* சமையல் அறை; அடுக்களை; சமையல் முறை.

**Culinary,** *a.* சமையல் சார்ந்த; சமைக்கத் தகுந்த.

**Cull,** *v.* பொறுக்கியெடு; கொய்; பறி.

**Culminate,** *v.* உச்சியை அடை; முடிவுபெறு. *n.* culmination, *a.* culminant.

**Cullpable,** *a.* குற்றமுள்ள.

**Culprit,** *n.* குற்றவாளி.

**Cult,** *n.* வழிபாட்டு மரபு; வழிபாட்டு முறை; சமயவழக்கு.

**Cultivate,** *v.* பயிர் செய்; நிலம் பண்படுத்து; பேணி வளர்;

திருத்து. *n.* cultivation. *n. pers. ag.* cultivator, *a.* cultivable, பயிரிடத்தக்க.

**Culture,** *n.* பண்பாடு; அறிவின் பண்பட்ட நிலை. பண்ணை வளர்ப்பு; வளர்ப்பு; நிலத்திருத்தம். *v.* திருத்து; சீர்பெறச் செய். *pa. p.* cultured. *a.* cultural. *n. pers.* culturist. *phr.* physical culture, உடற்பயிற்சி.

**Culvert,** *n.* பாலம்; மதகு.

*cum. prep.* (இலத்தீன்) உடன் (= with).

*cum grano salis* (*phr.*) (=சிறிய உப்புடன்) வேண்டும் திருத்தங் களுடன்; எச்சரிக்கையோடு.

**Cumber,** *v.* பளுவைச் சுமத்து; தடைசெய். *a.* cumbersome, cumbrous.

**Cummin, cumin,** *n.* சீரகச் செடி.

**Cumulus,** *n.* (*pl*. Cumuli) திரள்; திரளாகக் குவிந்த முகில்; மஞ்சு. *a.* cumulous. *v.* cumulate, திரளாகச் சேர். *a.* cumulative, திரண்ட.

**Cuneiform, cuniform,** *a.* (எழுத்துகள்) ஆப்பு வடிவமுள்ள.

**Cunning,** *n.* சூழ்ச்சி; திறமை. *a.* சூழ்ச்சியுள்ள; திறமையுள்ள; வஞ்சனையுள்ள. *n. abs.* cunningness. *adv.* cunningly.

**Cup,** *n.* கிண்ணம்; குவளை; கோப்பை; பரிசுக்கோப்பை; மலர்க்காம்புக் கிண்ணம்.

**Cupboard,** *n.* நிலையறைப் பெட்டி.

**Cupid,** *n.* காமன்; மாரன்; வேள்மதன்; காதல் தெய்வம்; காதல்.

**Cupidity,** *n.* சிற்றின்ப அவா; தகாத அவா; கீழ்த்தர ஆவல்; பேரவா; காமம்.

**Cupola,** *n.* கவிந்த கூரை; கவிகை.

**Cur,** *n.* இழிந்த வகை நாய்; கயவன். *a.* currish.

**Curate,** *n.* ஊர்த் துணைக்குரு. *n. abs., conn.* curacy.

**Curator,** *n.* காட்சிசாலையின் காவற் பணியாளர்; காப்பாளர். *n.* curatorship.

**Curb,** *v.* அடக்கு; தடை செய். *n.* கடிவாளம்; அடக்கும் கருவி; தடைச்சுவர். *a.* curby.

**Curd,** *n.* தயிர் *a.* curdy.

**Curdle,** *v.* உறை; இறுகு; தயிர்போலாகு.

**Cure,** *v.* நோய் போக்கு; குணப் படுத்து; உப்பிட்டு உலர்த்து. *n.* நோய்க் குணப்படல்; நோய் நீக்க மருந்து; மருத்துவ முறை; ஊர்க்குரு. *a.* curable, (மருந்தால்) தீர்க்கக்கூடிய; தீரக்கூடிய; குணப் படக்கூடிய. *n., a.* curative, (நோய் வந்தபின்) தடுக்கிற (x prophylactic); *(comb.)* cureall, அனைத்து நோய் மருந்து; சஞ்சீவி; முப்பு.

**Curfew,** *n.* மாலைக்கால மணி; ஊரடங்குச் சட்டம்; ஊரடங்கு உத்தரவு.

**Curio,** *n.* விந்தைப் பொருள்.

**Curiosity,** *n.* அறிவார்வம்; விந்தைப் பொருள்; அரும்பொருள். *a.* curious, ஆவலுள்ள; புதுமை யான; அவாத் தூண்டுகிற.

**Curl,** *n.* சுருள் மயிர்; சுருள். *v.* சுருட்டு; அலை அலையாகச் செய். *a.* curly.

**Currant,** *n.* உலர்த்திய விதையில்லா முந்திரிப்பழம்.

**Currency,** *n.* செலாவணி; செலாவணியிலுள்ள பணம்; நடப்பு நாணயம்; தாள் நாணயம், (சொல், கருத்து) வழக்காறு. *a.* current, வழக்கத்திலுள்ள; நடப்பி லுள்ள; செல்கின்ற; செல்லுபடியான. *n.* (நீர், காற்று) ஓட்டம்; (குறிப் பிட்ட திசையில் செல்லும்) ஒழுங்கு.

**Curriculum,** *n.* (கல்வி நிலையப்) பாடத் திட்டம்; பாடத்தொகுதி

**Curry,** 1. *n.* கறித் துணையுணவு. 2. *v.* (குதிரை) தேய். *phr. v.* curry favour, கெஞ்சி நலம் பெறு. *(comb.) n.* curry comb, குதிரை தேய்க்கும் சீப்பு.

**Curse,** *n.* பழிப்புரை; பழிகேடு; அழிபொருள். *v.* பழித்துரை; வசை கூறு; கடுமொழி கூறு.

**Cursive,** *a.* (கையெழுத்துப் போல்) தொடராகச் செல்கிற.

**Cursory,** *a.* மிகு விரைவுடைய; நன்கு ஆராயாத.

**Curt,** *a.* சுருக்கமான; வெடுக்கென்ற; மட்டுமதிப்பற்ற.

**Curtail,** *v.* குறைவாக்கு; சுருக்கு. *n.* curtailment.

**Curtain,** *n.* திரை; மறைப்புத் திரை. *v.* திரையால் மறை.

**Curts(e)y,** *v.* வணங்கு; வணக்கம் தெரிவி; தலை அசைத்து வணங்கு, *n.* வணக்கம்.

**Curve,** *v.* வளைவாகச் செய்; வளை. *n.* வளை கோடு; வளைவு.

**Curvilinear,** *a.* வளைகோடு களாலான.

**Cuscus,** *n.* வெட்டிவேர்.

**Cusec,** *n.* நொடிக்கு ஒரு கன அடி.

**Cushion,** *n.* மெத்தை; திண்டு. *v.* (திண்டு, மெத்தை முதலியன) இணை.

**Cusp,** *n.* முகடு.

**Cuspid,** *n.* நாய்ப்பல், *a.* cuspidal, கூரான.

**Custard,** *n.* (முட்டையும் பாலும் சேர்த்த) தின்பண்ட வகை.

**Custody,** *n.* காவல்; பொறுப்பு; கைகாப்பு; சிறைகாப்பு; சிறையீடு; சிறைப்படுத்தல். *n. pers.* custodian, பாதுகாப்பவர்; காவலாளர்; காப்பாளர்.

**Custom,** *n.* வழக்கம்; வாடிக்கை; வாணிகச் செல்வாக்கு; வாணிகப் பழக்கம். *(pl.)* customs, வாணிக வரி; தீர்வை. *a.* customary, வழக்கமான, *n. pers.* customer. வாடிக்கைக்காரர் (*comb. n.* custom-house, ஆயத்துறை; சுங்கச் சாவடி; தீர்வை வரி பிரிக்கும் இடம்.

**Cut,** *v.* (cut) வெட்டு; செதுக்கு; குறைவாக்கு; காயப்படுத்து;

குறுக்கே வெட்டு. *n.* வெட்டுக் காயம். அடி; உள்ளம் புண்படுதல்; (ஊதியம், செலவு) குறைப்பு. *n. phr. pers. impers.* Cutter, வெட்டுபவன்; வெட்டுங் கருவி; ஒருவகைப் படகு.

**Cutaneous,** *a.* தோலைப் பற்றிய.

**Cuticle,** *n.* (புற) மேல்தோல்.

**Cutis,** *n.* (மெய்ம்மையான) உள்தோல்.

**Cutlass,** *n.* வெட்டுக்கத்தி; அகலக் கத்தி.

**Cutler.** *n.* கத்தி முதலிய கருவி களைச் செய்பவர் அல்லது விற்பவர். *n. abs. com., coll.* cutlery, இரும்புக் கருவித் தொழில்; இரும்புத் தொழிற் சாலை; இரும்புத் தொழிற் கருவிகள்.

**Cutlet,** *n.* இறைச்சிக் கறிவகை; கன்றுக்குட்டி இறைச்சி.

**Cutpurse,** *n.* முடிச்சுமாறி; சேப்படித் திருடன்.

**Cut-throat,** *n.* கழுத்தறுப்பவர்; கொலைகாரர்.

**Cutting,** *n.* வெட்டுத்துண்டு; வெட்டப்பட்ட மரக்கிளை.

**Cuttle,** *n.* ஒருவகை மீன்.

**Cutwater,** *n.* (தண்ணீரைக் கிழித்துச் செல்லும்) கப்பலின் முகப்பு.

**Cutworm,** *n.* கம்பளிப் புழு.

**Cycle,** *n.* சுழற்சியாக வரும் நிகழ்ச்சி; மிதிவண்டி; வட்டம்; சக்கரம். *v.* சுழற்சியாக நிகழ; மிதிவண்டியில் செல். *a.* cyclic, சுழன்று வருகிற; வட்டமான. *n. pers.* cyclist, மிதிவண்டியாளர்.

**Cyclone,** *n.* சூறாவளி; சுழல் காற்று; சூறைக்காற்று; சுழலாக வரும் பெரும் புயல்.

**Cyclopaedia,** *n.* **(encyclopaedia)** அறிவுத் தொகுதி.

**Cyclops,** *n.* (கிரேக்க புராணக் கதை) ஒற்றைக்கண் அரக்கன்.

**Cyclostyle,** *n.* படியெடுக்கும் கருவி; படிபெருக்கி.

**Cyclotron,** *n.* அணுப்பிளக்கும் பொறி.

**Cygnet,** *n.* அன்னக்குஞ்சு.

**Cylinder,** *n.* உருள் தடி; நீள் உருளை. *a.* cylindrical.

**Cymbal,** *n.* கைத்தாளம்.

**Cynic,** *n.* எடுத்ததற் கெல்லாம் குறை கூறுபவர்; சிணுங்கி; நசுமாறி. *a.* cynical, *n. abs.* cynicism.

**Cynosure,** *n.* வடமீன் குழுவின் பகுதி; எல்லாருடைய கவனத்தை யும் கவரும் பொருள்; கண்ணுறுத்து.

**Cypher,** (cipher பார்க்க.)

**Cypress,** *n.* மரவகை.

**Cyst,** *n.* உடலில் பைபோன்ற உறுப்பு. *a.* cystic.

**Czar, tsar**, *n.* (*fem.* czarina) ரஷ்யச் சக்கரவர்த்தி.

# D

**Dab,** *v. n.* மெல்ல அடி; ஈரத்துணி அழுத்து. *n.* இலேசாக அடித்தல்; துணி ஒற்றுதல். *n.* dabber.

**Dabble,** *v.* ஈரப்படுத்து; கறைப் படுத்து; நீரில் அளை; ஓழிந்த நேர வேலையாகச் செய்; பசப்பு; விளையாடு; மேற்போக்காகப் பயின்று உரையாடு. *n.* dabbler.

**Dace,** *n.* ஒருவகை மீன்.

**Dacoit,** *n.* கொள்ளைக்காரன். *n. abs.* dacoity கொள்ளை.

**Dactyl,** *n.* மூவசைச்சீர் (நெடில் குறில் குறில்).

**Dad, daddy,** *n.* தந்தை (அப்பா).

**Daffodil,** *n.* மஞ்சள் குவளை மலர் வகை.

**Dagger,** *n.* குத்துவாள்; உடைவாள்.

**Dahlia,** *n.* பன்னிறங்கள் வகை.

**Dail,** (Eirean) *n.* (அயர்லாந்து) அரசியல் மன்றம்.

**Daily,** *a., adv.* நாள்தோறும். *n.* நாளிதழ்; நாட்பத்திரிகை.

**Dainty,** *a.* சுவையான; சுவைமிக்க; அருஞ் சிறப்பான. *n.* சுவைமிக்க பொருள். *n.* daintiness.

**Dairy,** *n.* பால், தயிர், வெண்ணெய் முதலியன வைக்குமிடம்; இவை விற்குமிடம்; பால் பண்ணை, *comb. n.* dairy farming, பால் பண்ணைத் தொழில்; பால் பண்ணை அமைப்பு.

**Dais,** *n.* மேடை; அரங்கம்.

**Daisy,** *n.* சிறுமலர் வகை.

**Dale, dell,** *n.* பள்ளத்தாக்கு.

**Dally,** *v.* பொழுது போக்காக விளையாடு; தாமதம் செய். *n.* dalliance.

**Daltonism,** *n.* நிறக் குருடு.

**Dam,** (1) *n.* அணைக்கட்டு. *v.* அணை கட்டு.

**Dam,** (2) *n.* தாய் விலங்கு; தள்ளை.

**Damage,** *n.* சிதைவு; அழிவு; இழப்பு *(pl.)* இழப்பீடு. *v.* சேதப்படுத்து; மதிப்பைக் குறை.

**Damask,** *n.* சித்திரப் பட்டாடை. *a.* மென் சிவப்பு நிறமான.

**Dame,** *n.* வீட்டுத் தலைவி; தலைவி; பெருமாட்டி.

**Damn,** *v.* பழித்திடு; குற்றவாளியாக முடிவு செய்; நாசமாக்கு. *n.* பழிகேடு. புன்மைப் பொருள். *a.* damnable, வெறுக்கத்தக்க; தொந்தரையான. *a.* damnatory, பழிக்கத்தக்க. *n.* damnation, பழிகேடு; நரக தண்டனை, *pa. p. a., adv.* damned. நரகத்துக் குரிய; கேடுகெட்ட; வெறுக்கத் தக்க; மிகுதியான.

**Damocles,** *n.* (sword of Damocles, தலைமீது தொங்கும் வாள்); (செல்வ வாழ்வின் நடுவே) வரவிருக்கும் இடையூறு.

**Damp,** *n.* ஈரம். *a.* ஈரமுள்ள *v.* ஈரமாக்கு; ஊக்கங்கெடு. *n. ag. pers. impers.* damper, ஊக்கங் கெடுக்கும் ஆள் அல்லது பொருள்; தடைக் கருவி.

**Damsel,** *n.* இளநங்கை; அணங்கு.

**Dance,** *v.* நடனஞ் செய்; ஆடலாடு. *n.* நடனம்; ஆடல். *n. pers.* dancer.

**Dandle,** *v.* விளையாடு; எடுத்து விளையாடு; பாராட்டி விளையாடு; வைத்தாட்டு.

**Dandruff,** *n.* பொடுகு; தலையின் பொடிப்பு.

**Dandy,** *n.* பகட்டன்; பகடி; சொகுசுக்காரர். *v.* dandify. *n.* dandyism.

**Danger,** *n.* இடைஞ்சல்; இடையூறு; இடர்; பொல்லாங்கு; தீங்கு. *a.* dangerous. *n.* dangerousness.

**Dangle,** *v.* தொங்கு; தூங்கு; அவாத் தூண்டியவண்ணம் இயங்கு.

**Daniel,** *n.* (இடுகுறிகாரணப் பெயர்) நேர்மையான நடுவர்; நுண் அறிவாளர்.

**Dank,** *a.* ஈரமான.

**Dapper,** *a.* மழ இளமையுடைய; தளதளத்த; சுறுசுறுப்பான.

**Dapple,** *v.* புள்ளிகளிடு. *n.* புள்ளி களுடைய தோற்றம். *a.* dappled.

**Darbar,** *n.* கொலு; ஓலக்கம்.

**Dare,** *v.* (*p.t.* dared, durst) துணிவுகொள்; முனைந்து நில்; எதிர்த்து நில். *pr. p. a.* daring, துணிகரமான. *prep. n.* daring, துணிவு. *n. (comb)* dare-devil, துணிகரவீரன்; துணிகரக் கொள்ளைக்காரன்.

**Dark,** *a.* இருளான; மங்கிய ஒளியுள்ள; புரியாத; அறியாமை யுடைய. *n.* இருள் darkness, இருள்; அறியாமை. *a.* darkish, *v. pers.* darken. *adv.* darkling, இருளில். *v.* dark, மறைந்திரு; இருளாகு. *adv.* darkly, இருட்டாக; கறுப்பாக.

**Darling,** *a., n.* (dear) அன் புக்குரிய (ஒருவர், குழந்தை, உயிரினம்); செல்வம்.

**Darn,** *v.* தைத்துமூட்டு. *n.* தைத்த இடம்; தையல்.

**Dart,** *n.* அம்பு; கூர்ப்படை; எறி படை; பாய்தல். *v.* எறி; பாய்ந்து செல்.

**Dash,** *v.* எறி; மோது; மோதி உடை. *n.* மோதுதல்; இடநிறைகுறி; விட்டிசைப்புக்குறி; வீச்சு; விரை வியக்கம்; திடீர் இயக்கம்; துணிச்சல். *a.* dashing, துணிவுள்ள, *n. ag.* dasher.

**Dastard,** *n.* கோழை; கீழ்மகன்; இழிஞன். *a.* dastardly.

**Data,** *n.* (*pl* of datum.) (இலத்தீன்) தரப்பட்டவை; தெரிபொருள்; தீர்வுக்கு ஆதாரமானவை; வாத மூலம்; தரவு.

**Date,** *n.* மாதநாள்; நாட்குறிப்பு; தேதி; காலக்குறிப்பு; பேரீந்த (மரம், பழம்). *v.* நாட்குறிப்பிடு; காலங் குறிப்பிடு; காலவரையறை செய்; தொடங்கு. *a.* dated, தேதி யிட்ட; கால வரையறையுள்ள. (x undated), datable, காலங் குறிக்கத்தக்க. *a. neg.* dateless. *comb. n.* date - stamp, நாள் முத்திரை; தேதிப் பொறிப்பீடு.

**Dative,** *n. a.* நான்காம் வேற்றுமை; கொடைப் பொருள் வேற்றுமை.

**Datum,** *n.* (*pl. see* data,) தரப்பட்டது.

**Datura,** *n.* ஊமத்தை.

**Daub,** *v.* பூசு; அப்பு.

**Daughter,** *n.* மகள். *n. comb.* daughter-in-law, மருமகள். step daughter, மறுதார மகள்; வேறு கணவன் மகள்.

**Daunt,** *v.* அச்சுறுத்து. (*gen. pass.* be daunted) அஞ்சு; தயங்கு. *a.* dauntless.

**Dauphin,** *n.* (*fem.* dauphiness) (பிரெஞ்சு நாட்டு) இளவரசன்.

**Daw,** *n.* காக்கை வகை.

**Dawdle,** *v.* வீண் காலம் போக்கு; மெல்ல நகர்ந்து செல்.

**Dawk, dak,** *n.* அஞ்சல், dak edition, பத்திரிகை அஞ்சல். *phr.* (= வெளியூர்ப்) பதிப்பு.

**Dawn,** *v.* விடி; தோன்று; மனத்தில் விளக்கமாகு. *n.* புலர்காலை; விடியல்; முதல் தோற்றம்.

**Day,** *n.* நாள்; பகல். *(pl.)* வாழ்நாள். *a. adv.* daily.

**Day -book,** *n.* (கடைக் கணக்கு) குறிப்பேடு.

**Day-break,** *n.* காலை.

**Day -light,** பகல் ஒளி.

**Daze,** *v.* திகைக்கச் செய்; கண் கூசச்செய்.

**Dazzle**, *v.* கண்கூசச் செய் அல்லது திகைக்கச் செய். *a.* dazzling.

**Deacon,** *n.* (கிறித்துவக்) கோயில்.

**Dead,** *a.* (die) இறந்த; உயிரற்ற; அரவமற்ற; உணர்ச்சியற்ற. *n.* அமைதியான வேளை. *(pl.)* இறந்தோர். *adv. a.* முழுவதும். *n.* deadness. *a.* deadly, உயிருக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய; மிகக்கேடான. *v.* deaden. *a.* deadening. *phr. n.* dead house, பிணக்குடில். dead letter, முகவரியற்ற கடிதம்; கொடுபடாத கடிதம் dead letter office, கொடுபடாக் கடித மனை.

**Deadlock,** *n.* சிக்கல் நிலை; முட்டுக் கட்டை நிலை; நெருக்கடி.

**Deadly** *a.* உயிருக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய. *adv.* இறந்தாற் போன்ற மிகவும். *n.* deadliness.

**Deadslow,** *a.* மிக மந்தமான; மசணையான.

**Deadshot,** *n.* குறி தவறாது எய்தது; குறிதவறாது எய்பவர்.

**Deaf,** *a.* செவிடான; கேட்க விருப்பமில்லாத. *v.* deafen. *n.* deafness.

**Deal,** *v.* (dealt) பங்கிட்டுக் கொடு; வாணிகம் செய்; நடந்துகொள். *n.* பங்கு முறை; அளவு; சாதிக்காய் மரம். *n.* dealer, வாணிகர். *n.* dealing, வாணிகம்; செயல் தொடர்பு. *see* dole.

**Dean,** *n.* (சமய வட்டத்) துணைத் தலைவர்; (பல்கலைக் கழகத்) துறைத் தலைவர். *n.* deanery.

**Dear,** *n.* 1. அருமையான. (1) விலைமிக்க; அருந்தலான. 2. *n.* அன்புக்குரிய ஒருவர் அல்லது ஒன்று. *see* darling. *adv.* dearly. *n.* dearness. *comb. n.* dearness

allowance, அருந்தற் படி; பஞ்சப்படி. (2) *see* dearth.

**Dearth,** *n.* பஞ்சம்; (உணவு முதலியன) போதாமை.

**Death,** *n.* (die) சாவு; இறத்தல். *a.* deathless, இறப்பில்லாத. comb. *a.* death dealing, சாவூட்டுகிற. deathslow, *n.* சாவு தரும் அடி; முழுத் தோல்வி; பேரிழப்பு. death duty, சாவுவரி; சாவரி. death's head, *n.* மண்டை யோடு; பட்டுப்பூச்சி வகை. death warrant, சாவுத்தரவுச் சீட்டு.

**debacle,** *n.* தோல்வி; திடீர் முறிவு.

**Debar,** *v.* உரிமையைத் தள்ளுபடிசெய்; தடைசெய்.

**Debark,** *v.* கப்பலிலிருந்து இறங்கு. *n.* debarkation.

**Debase,** *v.* (நாணயம்) மதிப்புக் குறை; இழிவுபடுத்து.

**Debate,** *v.* சொற் போரிடு; வாதம் செய். *n.* தர்க்கம்; வாதம். *a.* debatable, வாதிக்கத்தக்க; வாதத்துக்கிடமான.

**Debauch,** *v.* ஒழுக்கம் கெடு. *n.* தீயொழுக்கக்காரர்; ஒழுக்கக் கேடு. *n.* debauchery, தீயொழுக்கம். *n. pers.* debauchee, தீயொழுக் கத்தைக் கைக் கொண்டவர்.

**Debenture,** *n.* கடனீட்டுப் பத்திரம்; கூட்ட வாணிக சங்கத்தார் கடன் வாங்கியதற்காகக் கொடுக்கும் உறுதிப் பத்திரம்.

**Debilitate,** *v.* வலுக்கெடு; வலுக்கேடாக்கு. *n.* debility.

**Debit,** *n.* கடனாகக் குறிக்கப்படும் தொகை. *v.* கடனாகக் குறிப்பிடு; வரவுவை. *see* debt.

**Debonair,** *a.* களிமகிழ்வுடைய; மலர்ச்சியுடைய; எழுச்சியுள்ள.

**Debris,** *n.* குப்பை; கூளம்.

**Debt,** *n.* கடன்; கடமை; பொறுப்பு; *n.* debtor, கடனாளி; கடமைப் பட்டவர். good debt, பிரியும் கடன். bad debt, வராக் கடன். national debt, தேசியக் கடன்; நாட்டுக் கடன். *conn. a.* indebted, *v. see* debit.

**debut,** *n.* (அரங்கு) முதல் நுழைவு; அரங்கேற்றம். *n. pers.* (m) debutant, (f) debutante.

**Decade** *n.* பதிகம்; பத்துப் பத்தான தொகுதி; பத்தாண்டு.

**Decadence,** *n.* நலிவு; சோர்வு; தளர்ச்சி. *a.* decadent.

**Decagon,** *n.* பதின் கோணம்.

**Decalcify,** *v.* சுண்ணச் சத்தைப் போக்கு.

**Decalogue,** *n.* (கிறித்துவ வேதத்தி லுள்ள) பத்துக் கட்டளைகள்.

**Decamp,** *v.* கலைந்து செல்; திருட்டுத்தனமாகச் செல். *n.* decampment.

**Decant,** *v.* தெளிய வைத்து இறு; வடி. *n.* decanter, (சாராயம் முதலியன கொண்டுவரும்) பெரிய புட்டி.

**Decapitate,** *v.* தலையை வெட்டு. *n.* decapitation.

**Decay,** *v.* அழுகு; அழி, சிதை. n அழுகுதல்; அழிவு சிதைவு.

**Decease,** *v.* இற. *n.* இறத்தல்.

**Deceive,** *v.* ஏமாற்று. *n.* 1. deceit, ஏமாற்று; வஞ்சகம். 2. deception, ஏமாற்று; ஏமாற்றல்; ஏமாற்றம். *n. ag.* deceiver, *a.* deceitful, (ஆள்) ஏமாற்றுகிற. deceptive, (பொருள்) ஏமாறச் செய்கிற; மாயமான; மருட்சி தருகிற.

**December,** *n.* ஆங்கில ஆண்டின் பன்னிரண்டாம் மாதம் (கார்த்திகை - மார்கழி)

**Decennial,** *a.* பத்து ஆண்டு களுக்கு ஒருமுறை நிகழ்கிற.

**Decent,** *a.* மெட்டான; மதிப்புக் குரிய; மதிப்பான; மதிப்பான தோற்றமுடைய *n.* decency.

**Decentralize,** *v.* நடுவாட்சி வலுத் தளர்த்து; கிளையாட்சி வலுப் படுத்து; ஆட்சி உரிமை பன்முகப் படுத்து. *n.* decentralization.

**Decide,** *v.* தீர்மானி; முடிவு செய். *adv.* decidedly. *n.* decision. *a.* decisive.

**deciduous,** *a.* (மரம்) ஆண்டு தோறும் இலையுதிர்க்கிற.

**Decimal,** *a.* பதின் கூறான; பதின் தொகையான பதின்மானமான. *n.* பதின் கூறு.

**Decimate,** *v.* பத்திலொன்றை அழி; அழி. *n.* decimation.

**Decipher,** *v.* புதிர் விடுவி; விளக்கு; புரியவை; கண்டுணர்.

**Deck,** *v.* அணிசெய்; ஆடையணி; அணிமணியால் ஒப்பனை செய். *n.* (கப்பலின்) மேல் தளம்.

**Declaim,** *v.* கூச்சலிடு; ஆத்திர மாகச் சொற் பொழிவு செய்; குறைத்துப் பேசு; கண்டி. *n.* declamation. *n. ag. impers. pers.* declaimer, குறை; குறை கூறுபவர். *a.* declamatory.

**Declare,** *v.* கூறு; உறுதி கூறு; அறிவி; அறை; கழறு; பறைசாற்று; விளம்பு; அறிவிப்புச் செய்; உறுதியாகச் சொல். *a.* declarative. declaratory. *n.* declaration.

**Declension,** n நேர்மையிலிருந்து மாறுபடுதல்; (பெயர்ச்சொல் வேற்றுமையில்) திரிபடைதல்.

**Decline,** *v.* 1. கீழ் நோக்கிச் சாய். 2.நலிவுறு; தளர்ச்சியுறு. 3. (இலக்கணம்) பெயர்ச்சொல் திரிபுறு; பெயர்ச்சொல் திரிபு கூறு. 4. மறு; வேண்டாமென்று கூறு. *n.* 1. இறக்கம். 2. நலிவு. (1) *n.* declination, declivity, (3) *n.* declension.

**Decoction,** *n.* வடிநீர்; குடிநீர்; கியாழம்.

**Decolourize,** *v.* நிறம் நீக்கு. *n.* decolourization.

**Decompose,** *v.* பகுதிகளாகப் பிரி; சிதை; அழுகு. *n.* decomposition.

**Decorate,** *v.* அழகு செய்; அணி செய்; ஒப்பனைசெய்; பதக்கம் முதலியவற்றை அளி. *n.* decoration, ஒப்பனை; பதக்கம். *a.* decorative. *n. pers.* decorator, வீட்டிற்கு வண்ணம் பூசுபவர்.

**Decorticator,** *n.* தொலிப்புக் கருவி.

**Decorum,** *n.* வெளிமதிப்பு; மெய்ப்பு; மதிப்பு வரம்பு; மரபொழுங்கு. *a.* decorous.

**Decoy,** *v.* வலையில் விழச் செய்; ஏமாற்றி வசப்படுத்து. *n.* வலை; வசப்படுத்தும் கருவி.

**Decrease,** *v.* குறைவாகு; குறையச் செய். *n.* குறைதல்; குறைவு. *n.* decrement.

**Decree,** *n.* கட்டளை; தீர்ப்பு; ஆணை; சட்டம். *v.* தீர்ப்புச் செய் சட்டம் இயற்று.

**Decrepit,** *a.* முதுமையுற்ற; தளர்ந்த.

**Decry,** *v.* இகழ்ந்து கூறு; பழி.

**Decuple,** *n., v.* பத்துமடங்கு (ஆக்கு).

**Decussate,** *a.* குறுக்கு மறுக்கான; ஒன்றையொன்று வெட்டுகிற. *v.* குறுக்கு மறுக்காக்கு.

**Dedicate,** *v.* படைப்பாக்கு; படையலளி; உரிமையாக்கு. *n.* dedication. உரிமையுரை.

**Deduce,** *v.* வருவி; உய்த்துணர். *n. see* deduction. I. *a.* deducible.

**Deduct,** *v.* குறை; கழி. *n. see* 2. deduction.

**Deduction,** 1. *n.* (deduce) (வாய்வியல்) பிரித்துணர்வு; உய்த் துணர்வு மெய்ம்மையிலிருந்து மெய்ம்மை வருவிப்பு. (x induction) 2. *n.* (deduct), குறைப்பு. *a.* deductive.

**Deed,** *n.* செயல்; உடன்படிக்கைப் பத்திரம்.

**Deem,** *v.* கருது; மதி.

**Deep** *a.* ஆழமான; ஆழ்ந்த கருத்துள்ள; தந்திரமான. *n.* கசம்; கடல். *v.* deepen, ஆழமாக்கு. *n. see* depth.

**Deer,** *n.* (*pl.* deer) மான்.

**Deface,** *v.* தோற்றத்தைக் கெடு எழுத்தை அழி. *n.* defacement.

*de facto, a. adv.* உண்மையில்; பொருண்மை நிலையில்; நடப்பில்.

**Defalcate,** *v.* (திருட்டுத் தனமாகப்) பணத்தைக் கையாடு. *n.* defal cation. *n. pers.* defalcator.

**Defame,** *v.* பழித்துக் கூறு; நற் பெயரைக் கெடு. *a.* defamatory மானக்கேடான; அவமதிப்பான. *n.* defamation. ஆட்பழிப்புக் குற்றம்; அவமதிப்புக் குற்றம்.

**Default,** *n.* செய்யத் தவறுதல்; இல்லாதிருத்தல்; குற்றம்; தவறு; பிழை. *v.* கடமையில் தவறு. *n. pers.* defaulter. *n.* defaultation.

**Defeat,** *v.* தோல்வியுறச்செய். *n.* தோல்வி. *n.* defeatism, தோல்வி மனப்பான்மை. defeatist.

**Defect** *n.* குறைபாடு; தவறு. *a.* defective

**Defection,** *n.* கடமையில் தவறுதல்; தன் கட்சியைக் கைவிடுதல்.

**Defence,** *n. see* defend.

**Defend,** *v.* பாதுகாத்தல் செய்; தாக்குதலை எதிர்த்து நில்; ஆதர வாகப் பேசு. *n. pers.* defender. *n. pers.* defendant, எதிர்வழக்

காடி; எதிர்வாதி. *a.* defensible, எளிதில் காக்கக்கூடிய *a.* defensive, (x offensive) பாது காப்புக்குரிய. *n.* defence, தற்காப்பு; பாதுகாப்பு. *a.* *(neg.)* defenceless.

**Defer,** *v.* 1. தள்ளிவை; தாமதப் படுத்து. 2. இணங்கு. *n.* (1) deferment. (2) *n.* deference *a.* deferential. *conn. also see* deferent.

**Deferent,** *a.* 1. வெளிக்கொண்டு செல்லக்கூடிய. 2. மதிப்புச் செய்கிற.

**Defiance,** *n.* defiant, *a. see* defy.

**Deficiency,** *n.* பற்றாக்குறை. *a.* deficient.

**Deficit,** *n.* குறைபாடு.

**Defier,** *n.* (defy பார்க்க.)

**Defile,** 1. *v.* கெடு; கறைப்படுத்து; தூய்மை கெடு; பழி. 2. *v.* ஒன்றன் பின் ஒன்றாக அணிவகு. *n.* ஒடுக்கமான வழி. *n.* defilement.

**Define,** *v.* வரைந்து பொருள் கூறு; இலக்கணம் கூறு; வரையறு. *a. see* definite. *n. se*e difinition.

**Definite** *a.* திட்டமான; உறுதியான; தெளிவான. *adv.* definitely. *n.* definiteness. s. *a.* definitive, தீர்மானமான.

**Definition,** *n.* விளக்கம்; விளக்க உரை; வரையறை.

**Deflagrate,** *v.* கொழுந்து விட்டு விரைவாக எரி. *n.* deflagration.

**Deflate,** *v.* அடைத்தகாற்றை வெளிவிடு; மதிப்பைக் குறை. *n.* deflation (x inflation. )

**Deflect,** பாதையிலிருந்து திரும்பு; ஒரு பக்கமாக ஒதுங்கு; பாதையி லிருந்து திருப்பு. *n.* deflection, deflextion.

**Deforestation,** *n.* காடழிப்பு.

**Deform,** *v.* உருவத்தை மாற்று உருவத்தைக் கெடு. *n. vbl.* deformation. *n. abs.* deformity, அருவருப்பான உருவம் (உடைமை)

**Defraud,** *v.* (fraud) ஏமாற்று; வஞ்சித்துப் பெறு.

**Defray,** *v.* செலவைக்கொடு; செலவைச் செலவழி.

**Deft,** *a.* திறமை வாய்ந்த, கைத்திறனுள்ள.

**Defunct,** *a.* மாய்வுற்றுப் போன; செல்லுபடியற்றுப் போன.

**Defy,** *v.* எதிர்த்து நில்; போருக்கு அழை; தடை செய்; செல்லாத தாக்கு. *n.* defiance, *a.* defiant.

**Degenerate,** *v.* இழிவுபடு; வரவரக்கெடு; சீர்கெடு. *a.* இழிந்த; தாழ்வான; சீர்கெட்ட. *n. (vbl.)* degeneration. *n.* (*abs.*) degeneracy.

**Degrade,** *v.* நிலையிறக்கு; அவமதிகொடு. *n.* degradation, இழிவு. *pr. p. a.* degrading.

**Degree,** *n.* சிறு அளவுக்கூறு; பாகை; பட்டம்; படி; தரம்; நிலை; அளவு. (*bv* degrees) சிறிது சிறிதாக.

**Dehumanise,** *v.* மனிதத் தன்மையைப் போக்கு.

**Dehydrate,** *v.* உலர்த்து; புலர்த்து; உணக்கு; ஈரத்தைப் போக்கு; (இயைபியல்) நீரகற்று. *n.* dehydration.

**Deicide,** *v.* தெய்வத்தைக் கொல்லல் அல்லது கொல்வோன்.

**Deify,** *v.* கடவுளாகத் தொழு. *n.* deification.

**Deign,** *v.* மனம் வைத்து (ஒன் றைச்) செய்; அருள் கூர்; அருள் செய்.

*dei gratia*, *adv.* தெய்வ அருளால்.

**Deism,** *n.* கிறித்துவ சமயக் கோட் பாடு வகை; (சமய நூல்) தெய்வத் தன்மை மறுத்து இறைமை ஏற்கும் கொள்கை

**Deity,** தெய்வம்; இறைமை; கடவுள்.

**Dejected** *a.* வாட்டமுள்ள; சோர்ந்த; கிளர்ச்சியற்ற. *n.* dejection.

**dejure,** *a. adv.* உரிமைப் படி; சட்டப்படி.

**Delay,** *v.* காலம் தாழ்த்து; சுணங்கு; சுணக்கு. *n.* சுணக்கம்; கால நீட்டிப்பு; தடங்கல்.

**Dele,** *see* delete, அச்சகச் சுருக்கக் குறிப்பு (d.)

**Delectable,** *a.* மகிழ்ச்சிகரமான; இன்பமான. *a.* delectation.

**Delegate,** *n.* பேராள்; ஆட்பேர் உரிமை பெற்றவர். *v.* பேராளாக அனுப்பு; ஆட் பேருரிமை தந்தனுப்பு. *n. see* delegation, delegacy.

**Delegation,** *n.* (உரிமை ஒப்படைப்பு) ஆட்பேர் உரிமை ஒப்படைப்பு; பேராள் அமர்வு; பேராட்டக் குழு; தூதுக்குழு, அரசியல் உரிமைக்குழு.

**Delete, dele,** (அச்சுத்தொழில் குறி) *v.* அழி; (எழுத்து, வார்த்தை முதலியவற்றை) நீக்கு. *n.* deletion.

**Deleterious.** *a.* உடல் நலனுக்குக் கேடான.

**Deliberate,** *v.* ஆழ்ந்து ஆராய். *a.* ஆழ்ந்தாராய்ந்து செய்த; அமைந்து செய்த; மனமமைந்த; வேண்டு மென்று செய்த. *a.* deliberative, ஆராய்ந்து தீர்மானிப்பதற்குரிய *n.* deliberation.

**Delicate,** *a.* மென்மையான; நுண்ணயமுடைய; சுவை நய முடைய; நேர்த்தியான; நொய்மை யான. *n.* delicacy, மென்மை; அருஞ்சுவைப் பொருள்; பிறர் உளம் நோகக்கூடாதென்று கருதுதல்; நயநாகரிகம்.

**Delicious** *a.* மிகு சுவையான; இன் பமான *n.* deliciousness.

**Delict,** *n.* சட்டமீறுகை.

**Delight,** *v.* மகிழச்செய்; மகிழ். *n.* களிப்பு *a.* delightful, delight -some.

**Delimit,** *v.* வரையறு; எல்லைகுறி; கட்டுப் படுத்து. *n.* delimitation.

**Delineate,** *v.* வரைந்து காட்டு; குறியிடு; விரித்துரை. *n.* delineation.

**Delinquent,** *a.* கடமையில் தவறுகிற. *n.* கடமையில் தவறு செய்தவர். *n. abs.* delinquency.

**Delirious,** *a.* தலை கறங்குகிற; தலை சுழற்றுகிற; மயக்கவெறியில் பிதற்றுகிற *n.* delirium, மயக்க வெறி; வெறிப்பிதற்றல்.

**Deliver** *v.* விடுவி (பிறர் கையில்) ஒப்படை; குழந்தை பெறு; சொற் பொழிவாற்று. *n.* deliverance, விடுதலை; காப்பாற்றுதல். *n.* delivery, ஒப்படைப்பு; மீட்டல்; பிள்ளைப்பேறு; பேச்சுமுறை.

**Dell,** *n.* பள்ளத்தக்கு

**Delphian, Delphic,** *a.* (கிரேக்க சமயக்குறிப்பு) டெல்ஃபி (கோயில்) சார்ந்த வருங்குறி கூறுகிற; ஈரடியான; இருபொருள் உள்ள.

**Delta,** *n.* (கிரேக்க அரிச்சுவடியின் முக்கோண வடிவுடைய; ஆங்கில D க்குச் சரியான நான்காம் எழுத்து). (ஆற்றின்) கழிமுகம். *n.* deltoid, முக்கோண வடிவுடைய.

**Delude,** *v.* ஏமாற்று; மயக்கு. *n.* delusion. *a.* delusive.

**Deluge,** *n.* பெரு வெள்ளம்; பெரு மழை; ஊழி வெள்ள எழுச்சி. *v.* பெருவெள்ளமாக்கு.

**deluxe,** *phr. a.* முதல்தரமான; செழிப்பான.

**Delve,** *v.* தோண்டு.

**Demagnetize,** *v.* காந்த வலி அகற்று.

**Demagogue,** *n.* மக்களை இயக்கித் தூண்டிவிடும் தலைவர்; கும்பலாட்சியாளர்; பொது மக்கள் சார்பாளர்.

**Demand,** *v.* உரிமையைக் கேள்; உரிமையுடன் கேள்; கோரு; வேண்டு. *n.* உரிமைக்கோரிக்கை; கேட்டல்; தேவை.

**Demarcation,** *n.* எல்லை குறித்தல் எல்லைப் பாகுபாடு. *v.* demarcate.

**Demean,** *v.* பெருமையைக் குறை; இழிவுபடுத்து.

**Demeanour,** *n.* நடத்து.

**Demented,** *n.* கிறுக்கான; கோட்டி பிடித்த.

**Demerit,** *n.* குறைபாடு; குற்றம்.

**Demesne,** *n.* தன்னுரிமை நிலம் தனியுரிமை நிலம்.

**Demigod,** *n.* தெய்வத்துட னொத்தவர்; தெய்வக் கூறுடையர்.

*demi-monde,* *n.* கீழ்த்தர மாதர்கள்.

**Demi-official,** *a.* (கடிதம் முதலியன) பெயர் குறித்து அலுவல் சார்பாக எழுதப்பட்ட; அரைகுறை அலுவல் தொடர்பான.

**Demise,** *v.* இறுதிப் பத்திரத்தின் மூலமாகக் கொடு. *n.* உயிர்ப் பிரிவு; இறுதிப் பத்திர மூலம் கொடுத்தல்.

**Demiurge,** *n.* படைப்பு முதல்வர்; கடவுள்.

**Demobilize,** *v.* (படை முதலிய வற்றைக்) கலை. *n.* demobilization, படைக்கலைப்பு.

**Democracy,** *n.* குடியாட்சி; பொதுவுரிமை யாட்சி; பொதுக் குடியாட்சி. *n.* democrat. *a.* democratic.

**Demolish,** *v.* இடித்து அழி; நாசமாக்கு. *n.* demolition.

**Demon,** *n.* பேய்; கொடியவன். *a.* demonaic. *n.* பேய் பிடித்தவன். *a.* demoniacal.

**Demonetize,** *n.* (காசு) மதிப்பில் லாததாகச் செய்.

**Demonstrate,** *v.* விளக்கிக் கூறு; செய்து காட்டு; செயல் விளக்கம் அளி. *n.* demonstration, விளக்கம்; திறமையைக் காட்டல்; செய்து காட்டல்; செயல்விளக்கம். *a.* demonstrative, தெளிவாக்குகிற; (இலக்.) காட்டுகிற. *n. ag. pers.* demonstrator.

**Demoralize,** *v.* ஒழுக்கத்தைக் கெடு. *n.* demoralization.

**Demos,** *n.* பொதுமக்கள்.

**Demur,** *v.* தடைகூறு; சந்தேகங் களை எழுப்பு.

**Demure,** *a.* அமைதியுள்ள; நாணப்படுகிற.

**Demurrage,** *n.* (துறைமுகத் தொடர்வண்டி. நிலையச் சரக்கு) கிடப்பு வரி; முடக்கவரி; தண்டக் கட்டணம்.

**Demurrer,** *n.* (சட்டம்) தடங்கல் செல்லாதென்ற எதிர்ப்புரை.

**Demy,** *n.* தாள் அளவுக்கூறு; 17½ x 22½

**Den,** *n.* குகை, சிறை.

**Denature,** *v.* இயற்கைத் தன்மையைச் சிதை; கலப்பட மாகக் செய். *comb. n.* denatured spirit. வலுக்குறைந்த சாராயம்.

**Dengue,** (டெங்கே) *n.* சூலைக் காய்ச்சல்.

**Denial,** *n.* மறுப்பு.

**Denizen,** *n.* தங்கி வாழ்பவர்.

**Denominate,** *v.* பெயர்கொடு; பெயரிட்டுக் கூறு. *n.* denomination, பெயர்; இனப்பெயர்; மதப் பிரிவு. *a.* denominational.

**Denominator,** *n.* (கீழ்வாய் இலக்கத்தின்) அடி எண்; தொகுதி.

**Denote,** *v.* குறிப்பிடு; சுட்டு; பொருள் குறிப்பிடு. *n.* denotation.

***denouement,*** ***n.*** (நாடகம் கதை) கொண்டு கூட்டவிழப்பு; பூட்ட விழ்ப்பு; முடிபு; இறுதி விளக்கம்.

**Denounce,** *v.* பலரறியப்பழித்துக் கூறு; குற்றங் கூறு; *n.* denouncement, denunciation. *n. pers.* denunciator.

**Dense,** *a.* நெருக்கமான; முட்டாளான. *n.* denseness, density.

**Dent,** *n.* வடு; சிறு விளைவு; பள்ளம். *v.* வடுப்பண்ணு. *conn. see* indent.

**Dental,** *a.* பல் சார்ந்த, *n.* dentist, பல் மருத்துவர். *n.* dentistry, பல் மருத்துவம். *conn. n.* dentition, பல் முளைத்தல்.

**Dentate,** *a.* கூர்ப்பல் விளிம்புள்ள.

**Dentifrice,** *n.* பற்பொடி; பற் குழம்பு.

**Dentine,** *n.* உட்பல்; பல்லில் அமைந்துள்ள பொருள்.

**Denude,** *n.* அம்மணமாக்கு; ஆடைநீக்கு; மேற் போர்வை

யகற்று; வெறுமையாக்கு. *n.* denudation.

**Deny,** *v.* மறுத்துக் கூறு; கொடுக்க மறு. *a.* denial.

**Deodorize,** *v.* நாற்றத்தைப் போக்கு.

**Deontology,** *n.* ஒழுக்க நூல்; அற நூல்.

**Depart,** *v.* புறப்படு; போ; இற. *n.* departure, புறப்பாடு; விலகுதல்.

**Department,** *n.* பகுதி; அரங்கம்; துறை. *a.* departmental அரங்கம் சார்ந்த. *comb. n.* Public Works department பொதுப் பணித் துறை.

**Depend,** *v.* தொங்கு; நம்பு *n.* dependence, சார்ந்திருத்தல். *n.* dependency, சார்பரசு நாடு. dependable, நம்பத் தகுந்த *n. pers.* dependent. சார்ந்திருக் கிறவர். *a.* சார்ந்திருக்கிற.

**Depict,** *v.* தீட்டு; வரை; விரித்துரை. *n.* deicture.

**Deplenish,** *v.* (x replenish.) வெறுமையாக்கு.

**Deplete,** *v.* நெருக்கத்தைக் குறை; வெறுமையாக்கு. *n.* depletion.

**Deplore,** *v.* வருந்து. *a.* deplorable, வருந்தத்தக்க.

**Deploy,** *v.* (படையைப்) பரவ லாக்கு. *n.* deployment.

**Deplume,** *v.* இறகுகளைப் போக்கு.

**Depolarize,** *v.* (மின் வலி; காந்தம்) கோடிமை அகற்று; (ஒளிநூல்) முகப்பு மாற்று; நீக்கு. *n.* depolari -zation. *n. ag.* depolarizer.

**Deponent,** *n.* முறை மன்றத்தில் ஆணையிட்டு வாக்குமூலம் கொடுப்பவர்.

**Depopulate,** *v.* மக்கள் தொகை குறைவாக்கு; மக்கள் தொகையைக் குறை. *n.* depopulation.

**Deport,** *v.* நடந்துகொள்; நாடு கடத்து. *n.* deportment நடத்தை *n.* deportation, நாடுகடத்தல்.

**Depose,** *v.* பணியிலிருந்து விலக்கு; சான் றுகூறு; *n.* deposition.

**Deposit,** *v.* சேமித்துவை; ஒப்படை; கிடத்து. *n.* சேமிப்பு; வைப்புத் தொகை; படிவு. *n.* depositor, *n.* depository, ஒப்படைப் பொருள் வாங்கியவர்; சேமிக்குமிடம். *comb. n.* Current deposit நடப்பு வைப்பு; Fixed deposit நிலை வைப்பு; தவணை வைப்பு; Lapse deposit, தவணை கடப்பு வைப்பு. Provident deposit, சேம வைப்பு. Recurrent deposit, மடக்கு வைப்பு. Savings deposit, சேமிப்பு வைப்பு Security deposit, பிணை வைப்பு.

**Deposition,** *n. see* depose.

**Depositor,** *n. see* deposit.

**Depot,** *n.* கிடங்கு; சாலை.

**Deprave,** *v.* சீர்கெடு; இழிவாக்கு. *n.* depravity.

**Deprecate,** *v.* கருத்து மாறு பாட்டைத் தெரிவி; எதிராகப் பேசு; *n.* deprecation.

**Depreciate,** *v.* (விலை) மதிப்பில் குறைவாகு; மதிப்பைக் குறைத்துப் பேசு; *n.* depreciation, குறைவு; குறைவுக் கணிப்பு குறைவு மதிப்பு. *a.* depreciative depreciatory.

**Depredation,** *n.* கொள்ளையிடல்; பாழாக்குதல். *n. ag. pers.* depredator. *a.* depredatory.

**Depress,** *v.* அமுத்து; தாழ்த்து; ஊக்கமழி; சோர்வூட்டு. (*gen. pass.* be depressed, அமிழ்ந்திரு; பள்ளமாயிரு; சோர்ந்திரு; தளர்ச்சியடை). *n.* depression, பள்ளம்; சோர்வு; அமுத்தம். *pa. p. a.* depressed, *a.* depressive, அமுத்துகிற; சோர்வு தருகிற. *comb. n.* depressed classes, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.

**Deprive,** *v.* கவர்ந்துகொள்; போக்கு; பயனடையாமல் செய். *n.* deprivation.

*de profundis, n. adv.* ஆழத்திலிருந்து; ஆழ்ந்து.

**Depth,** *n.* (> deep) ஆழம்; ஆழ அளவு; ஆழ் இடம்; ஆழ்ந்த கருத்து; உணர்ச்சி யாழம். *phr.* depth charge, *n.* ஆழத்தில் வெடிக்கும் குண்டு; நீர்மூழ்கிக் குண்டு.

**Depute,** *v.* பகரமாக அனுப்பு ஆட்பேராக அனுப்பு; ஆட்பேருரிமையளி. *n.* deputation, பகரமானம் பேராண்மை; பகராண்மை; பேராட்குழு; ஆட்பேர்க் குழு. *n.* deputy, ஆட்பேர்; பகர ஆள். *v.* deputize, ஆட்பேராக வேலை செய்; (*comb.* Deputy - President etc, உதவித்தலைவர்; துணைமைத் தலைவர்)

**Derail,** *v.* தண்டவாளத்தை விட்டு விலகு *n.* derailment.

**Derange,** *v.* ஒழுங்கைக் குலை; மூளைகுழப்பு; அறிவு திறம்புவி; கோட்டியுறு. pass., be deranged, அறிவு திறம்பு; குழப்பமுறு; கோட்டியுறு. *n.* derangement.

**Derelict,** *a.* கைவிடப்பட்ட. *n.* துணையிலி; கைவிடப்பட்டவர்; கைவிடப் பட்டது.; (கப்பல்) உடையவரில்லாதது. *n.* dereliction, (கடமையைக்) கைவிடுதல்,

**Deride** *v.* இகழ்ச்சியாகச் சிரி; ஏளனம் செய். *n.* derision, *a.* derisive.

**Derive,** *v.* (ஒன்றிலிருந்து ஒன்று) வருவி; தருவி; பிறப்பி; (மூலச் சொல்லிலிருந்து சொல்) ஆக்கு; தருவி. *a, n.* derivative. (மூலத்திலிருந்து) வருவிக்கப் பெற்றது); ஆக்கப் பெற்ற(து) *n. abs.* derivation.

**Derm,** *n.* தொலி, *a.* dermal. dermic.

**Dermis,** *n.* உள் தோல்.

**Derogate,** *v.* இழிவாக்கு; தாழ்த்து. *a.* derogatory, *n.* derogation.

**Derrick,** *n.* பாரந்தூக்கும் ஒரு வகைக் கருவி.

**Derring-do** *n.* வீரச்செயல்; அஞ்சா நெஞ்சம்.

**Dervish,** *n.* முகமதியத் துறவி.

**Descant,** *v.* வீசிப்பேசு; விரித்துப் பேசு. உச்சத் தனி இசைக்கூறு.

**Descend,** *v.* இறங்கு; மரபில் வா. *n. pers* descendant பின் மரபினன். *n.* descent. இறக்கம்; மரபு; படை யெடுப்பு.

**Describe,** *v.* விரித்துரை, *n.* description. விரிவுரை; விளக்க வுரை, விரித்துரைத்தல். *a.* descriptive.

**Descry,** *v.* பார்.

**Descrate,** *v.* மதிப்புக்கெடு; அழிபாடு செய். *n.* desecration. *n. ag. pers,* desecrator.

**Desert,** *n.* 1. பாலைநிலம்; விளை யாத தரிசு நிலம் *a.* பாலைநிலம் போன்ற 2. *v.* கைவிடு. 3. *n.* (*conn.* deserve), தகுதி; தகுதிக் கேற்ற ஊதியம். (2) *n. ag. pers.* deserter (படை கொள்கை) விட்டோடியவர்; கைவிடுபவர்; எடுத்தேறி.

**Deserve,** *v.* தகுதி பெறு; உழைத்துப் பெறு. a deserving, *n. see* desert.

**Desiccate,** *v.* ஈரத்தைப் போக்கு; உலர்த்து. *n.* desiccation. *n. ag. impers.* desiccator, உலர்த்து கருவி (உலர்த்தி.)

**Desiderate** *a.* விரும்பு; தேவை யாயிரு. *a.* desiderative, விருப்புக்குரிய (இலக்கணம்); விருப்பந் தெரிவிக்கிற(வினை, பெயர் *etc*) *n.* desideratum. *(pl. -ta)* விரும்பத்தக்கது; மிகத் தேவைப்பட்டது.

**Design,** *n.* நோக்கம்; திட்டம்; உள் எண்ணம்; சூழ்ச்சி; உருவரைப் படம் மாதிரிக் குறிப்பு. *v.* திட்டம் செய்; மாதிரிப் படம் வரை; சூழ்ச்சி செய். *n. ag.* designer, திட்டமிடுபவர் வரைவோர். *pr. p. a.* designing, சூழ்ச்சி செய்கிற; சூழ்ச்சி நோக்குள்ள; அறிவுக் கூர்மையுள்ள.

**Designate,** *a.* திட்டமிட்டுக் குறிக்கப்பட்டுள்ள; Governor Designate, மாநில ஆட்சித் தலைவராகக் குறிக்கப்பட்டவர்). *v.* குறிப்பிடு. *n.* designation, பட்டம்; பெயர்.

**Desire,** *v.* அவாவு; விரும்பு; ஆவல்கொள்ளு. *n.* விருப்பம்; அவா; அவா ஆர்வம்; கோரிக்கை. *a.* 1. desirable, விரும்பத்தக்க. 2. desirous, விரும்புகிற.

**Desist,** *v.* நிறுத்து; தவிர்.

**Desk,** *v.* (எழுத அல்லதுபடிக்க உதவும்) சாய்வு மேடை; சார் மேடை.

**Desolate,** *a.* தனிமையான; துணை யில்லாத; நடமாட்ட மில்லாத; பாழாயுள்ள. *v.* பாழாக்கு. *n. abs.* desolation, பாழ்நிலை.

**Despair,** *v.* நம்பிக்கையை இழ; மனக்கசப்படை மனம் முறிவுறு. *n.* நம்பிக்கையை இழந்த நிலை; நம்பிக்கையை இழப்பதற்குக் காரணமானது. *a. see* desperate.

**Despatch,** *v. see* dispatch.

**Desperado,** *n.* துணிகரமாக இறங்குபவர்; துணிகரச் செயலாளர்.

**Desperate,** *a.* (> despair) நம்பிக்கையற்ற; இடர் நிறைந்த. *n.* desperation.

**Despise,** *v.* எள்ளு; இழிவாகக் கருது; ஏளனமாகக் கருது; வெறு. *a.* despicable, வெறுக்கத்தக்க.

**Despite** *n.* வன்மம்; பகைமை; அவமதிப்பு. *prep. n.* (*per.* in despite of, despite of) அவ்வாறிருந்த போதிலும்; எதிர்மாறாக.

**Despoil,** *v.* அழித்துக் கவர்; கொள்ளையடி. *n.* despoilation.

**Despond,** *v.* ஊக்கமிழ; சோர்; தளர். *n.* despondency, *a.* despondent.

**Despot,** *n.* ஆணவக்காரர்; வல்லாட்சியாளர்; தன்முனைப்பாளர்; கொடுங் கோலர். *a.* despotic, *n.* despotism.

**Dessert,** *n.* சாப்பாட்டிற்குப் பிறகு உண்ணும் பழவகை முதலியன.

**Destination,** *n.* (பயண) இலக்கு; சேரிடம்; குறித்துச் செல்லும் இடம்

**Destine,** *v.* முன் கூட்டி ஏற்பாடு செய்; குறித்து ஒதுக்கு; அமைவி. *n.* destiny. ஊழ்.

**Destitute,** *a.* துணையற்று; வறிய. *n.* destitution.

**Destroy,** *v.* அழி. *n.* destruction. *n. ag. pers. impers.* destroyer, அழிப்பவர்; போர்க் கப்பல் வகை. *a.* destructive, *n.* destructiveness. *a.* destructible, அழிக்கக் கூடிய. *n.* destructibility.

**Desuetude,** *n.* வழக்கொழிவு; வழக்காற்றிலொழிதல்.

**Desultory,** *a.* தொடர்பில்லாத; துண்டுத்துணுக்கான; இடைஇடை விட்ட; தக்க ஏற்பாட்டுடனில்லாத. *n.* desultoriness

**Detach,** *v.* (x attach) பற்றறு; தொடர்பறு; பிரி. *a.* detached. *n.* detachement, பிரித்தல்; தனிமை; (படைப்) பகுதி.

**Detail,** *n.* விவரம்; நுணுக்கப்பிரிவு. (*phr. adv.* In detail, விரிவாக), *a.* விவரமாகக் கூறு; தனி வேலைக்காக ஒதுக்கிவை.

**Detain,** *v.* சிறைப்படுத்து; பின் தங்கச் செய்; *n.* detention சிறை (வைத்தல்) தடைப்படுத்தி வைத்தல். *n. ag. abs.* detainer, *abs.* (சட்டம்) கட்டாயப்படுத்தி ஆளைத் தடுத்து வைத்தல் (செய்பவர்) *conn. see* detenu.

**Detect,** *v.* கண்டுபிடி; உளவறி. *n.* detection. *a.* detective, *n.* detector, ஒற்றன்.

**Detenu,** *n.* (*fem.* detenue) காவல் சிறையாள்.

**Deter,** *v.* (அச்சத்தால்) பின் வாங்கு; தயங்கு; பின் வாங்கச் செய். *a.* deterrent, பின் வாங்கச்செய்கிற; தடையான *n.* பின் வாங்கச் செய்கிற ஒன்று; தடை.

**Deteriorate,** *v.* (நிலைமை) மோசமாகு; *n.* deterioration.

**Determine,** *v.* தீர்மானி; மனவுறுதி கொள்; முடிவாக்கு; வரையறு; உறுதிசெய். *a.* determined, உறுதியான *a.* determinate தீர்

மானிக்கப்பட்ட; உறுதியான. *n.* determination, உறுதி; முடிவான தீர்மானம். *a. n.* determinant, உறுதி செய்கிற (ஒன்று)

**Detest,.** *v.* வெறுப்புக்கொள். *a.* detestable, *n.* detestation.

**Dethrone,** *v.* தவிசிறக்கு; உயர் நிலையினின்று அகற்று; *n.* dethronement.

**Detonate,** *v.* ஓசையுடன் வெடி; வெடிக்கச் செய். *n. ag.* detonator, *n.* detonation.

**Detour,** *n.* சுற்று வழி.

**Detract** *v.* குறையச்செய்; *n.* detraction, *n. ag.* detractor.

**Detrain** v தொடர் வண்டியி லிருந்து இறங்கு (இறக்கு)

**Detriment,** *n.* இழப்பு; சேதம். *a.* detrimental.

**Deuce,** *n.* இரண்டு எண்ணுள்ள சீட்டு; பகடை; கடவுள்; பேய்; சைத்தான்; *phr. deus ex machina,* கடவுள் வந்து விடுவிக்கும் முறை (கட்டம்)

**Devaluate** *v.* (காசு, பணம்) மதிப்பைக் குறை. *n.* devaluation.

**Devastate,** *v.* அழி பாழாக்கு. *n.* devastation.

**Develo,** *v.* வளரச் செய்; முதிர்ச்சி பெறச் செய்; விரிவுபடுத்து. *n.* development. *n. ag.* developer, *(impers)* 1. நிழற் படத்தின் உருவிளக்கும் உறுப்பு. 2. உடல் விரிவுறுத்தும் பயிற்சிக் கருவி.

**Deviate,** *v.* (வழியிலிருந்து) விலகு; *n.* deviation.

**Devious,** *a.* வளைந்து வளைந்து செல்கிற; தவறான.

**Device,** *n.* திட்டம்; அடையாளம்; புதிதாக அமைக்கப்பட்ட ஏற்பாடு; பொறி அமைப்பு; சூழ்ச்சி முறை. *v. see* devise.

**Devil,** *n.* சைத்தான்; பேய்; அச்சுத்தொழில் சிற்றாள். (printer's devil, அச்சுப் பிழை) *a.* devilish *n.* devilry, devilment, குறும்பு; சூனியம். *see* diabolic.

**Devise,** *v.* திட்டம் செய். *n.* திட்டம். ஏற்பாடு; இறுதிப்பத்திர மூலம் கொடுத்தல்; இறுதிப் பத்திரம். *n.* see device.

**Devitalize,** *v.* உயிராற்றலற்ற தாக்கு; வீறகற்று.

**Devoide,** *n.* இல்லாத.

**Devolve,** v உரிமையாக வந்து சேர்; (பிறனிடம்) சுமத்து. *n.* devolution.

**Devote,** *v.* ஒருமுகப்படுத்து; ஒருவேலைக்காக ஒதுக்கிவை; ஒருநோக்கப்படுத்து. (*gen. pass.* be devoted to) ஒருமுகப்பற்றுக் கொண்டிரு; பற்றுறுதி கொண்டிரு; (*gen. refl.* devote oneself to) *a.* devoted *n. pers.* devotee, பற்றுறதியுடையவர். *n.* devotion, ஈடுபாடு; பற்றுதி. *com. a. see* devout.

**Devour,** *v.* விழுங்கு; கொள்ளை யிடு; அழி. *adv.* devouringly.

**Devout,** *a.* (*see v.* devote) பற்றுறுதியுள்ள; கடவுட் பற்றுள்ள; சமயப் பற்றுள்ள. *n.* devoutness.

**Dew,** *n.* பனித்திவலை; புதிய தன்மை. *v.* பனித்துளியால் நனை. *n.* dewy, *(comb.) n.* dew-drop, பனித்துளி.

**Dew-lap,** n (மாடு) தொங்கு தாடை; மடி; கழுத்து மடிப்பு.

**Dexter,** *a.* வலப்பக்கமாக.

**Dexterity,** *n.* திறமை; கைத்திறன்; தந்திரம். *a.* dexterous, dextrous, கைத்திறம் வாய்ந்த.

**Dextrose,** *n.* ஒருவகைச் சர்க்கரை.

**Dhatkhast,** n (இந்திய வழக்கு) பொதுநிலம்

**Diabetes,** *n.* நீரிழிவு நோய். *a., n.* diabetic, நீரிழிவு நோயுற்ற (ஆள்).

**Diabolic(al),** *a.* (devil) பேய்த்தனமான; கொடிய. *n. abs.* diabolism.

**Diacritical,** *a.* ஒலிப்பைக் காட்டுகிற; (...marks), எழுத்தின் ஒலி மாறுபாடு குறிக்கும் குறியீடுகள்.

**Diadem,** n அணிமுடி; தலைமுடி; மகுடம்.

**Diagnose,** v நுணுகிக் காண்; ஆய்ந்துணர்; (நோயின்) தன்மையை அறி. *n.* diagnosis.

**Diagonal,** *a., n.* மூலைவிட்டம்; சதுக்கத்தின் குறுக்குவரை.

**Diagram** *n.* விளக்கப்படம்.

**Diagraph,** *n.* அளவுக்குப் படம் வரைய உதவும் கருவி.

**Dial,** *n.* ((மணிப்பொறி), முகப்பு, (மணிப்பொறி, இயந்திரங்கள் ஆகியவற்றின்) அளவை முகப்பு.

**Dialect,** *n.* மொழிப் பிரிவு; பேச்சுவகை; திசைமொழி. *a.* dialectic.

**Dialectics,** *n.* சொற் போர் முறை; விவாதமுறை நூல்; சமயத் தருக்கநூல். *a.* dialectical. *n.* dialectician.

**Dialogue,** *n.* உரையாடல்

**Diameter,** *n.* விட்டம்; வட்டத்தின் குறுக்களவு. *adv.* Diametrically, முற்றிலும் எதிராக.

**Diamond,** *n.* வைரம்; வைரக்கல்.

**Diaphanous,** *a.* ஒளி ஊடுருவுகிற; கண்ணாடி போன்ற.

**Diaphragm,** *n.* வயிற்றையும் மார்பையும் பிரிக்கும் தசை; வயிற்று முகடு; (பிரிக்கும்) தகடு.

**Diarchy.** *n.* இரட்டை யாட்சி.

**Diarrhoea,** *n.* வயிற்றுப் போக்கு; கழிச்சல்; வயிற்றோட்டம்.

**Diary,** *n.* நாட்குறிப்பேடு *v.* diarize, *n. pers.* diarist.

**Diastase,** *n.* மாச் சத்தைச் சர்க்கரையாக்கும் பொருள்.

**Diastol,** *n.* நெஞ்சு விரிவு; நெஞ்சுப்பை வீக்கம்.

**Diatomic,** *a.* இரண்டு அணுக்களுள்ள.

**Diatribe,** *n.* வசைமாரி.

**Dice,** *n. pl. see* die.

**Dichromatic,** *a.* இருநிறமுள்ள.

**Dickens,** *n.* பேய். (*phr.* what the dickens etc. என்ன இழவு, etc.)

**Dicker,** *n.* பத்து, *v.* பேரம் பேசு.

**Dicky-key,** *n.* கழுதை; வண்டியோட்டியின் இருக்கை.

**Dicotyledon,** *n.* இரட்டைப் பருப்பு (விதை); இருவிதை யிலை. *a.* dicotyledonous.

**Dictaphone,** *n.* பேச்சுப் பதிவெடுக்கும் கருவி; சொற் பதிவுக் கருவி.

**Dictate,** *v.* 1. கட்டளையிடு; மேதாவித்தனம்பண்ணு. 2. எழுத வாசகம் கூறு. *n.* கட்டளை. *n.* dictation, கட்டளை; கேட்டெழுத்து; சொல்வதெழுதல்; எழுத வாசகங் கூறல். *n. ag. pers.* dictator, (1) வல்லாட்சியாளர்; தனித் தன்னாட்சியாளர். *a.* dictatorial, ஆணவமான; அடக்குமுறை யான. *n. abs.* dictatorship.

**Diction,** *n.* சொல்வண்ணம்; எழுத்து நடைவளம்.

**Dictionary,** *n.* சொற் பொருள் தொகுதி; அகர வரிசை; அகரவரிசை நிகண்டு.

**Dictum,** *n.* (pl. dicta) ஆணை; உறுதிமொழி.

**Did,** (do பார்க்கவும்).

**Die,** 1. *n.* (*pl.* dice, dies) சூதாடு கருவி; பகடை; தாயக்கட்டை; (பொறிப்புக்கான) வாய்ப்புரு. 5. *v.* died) இறந்துபோ. *n. a.* diehard, முரட்டுப் பிடிவாதக் கொள்கை யுடையவர்; பிற்போக்காளர். *n. see.* death; *pr. p. a.* dying; *comb. see.* diesinker. *a. see* dead.

**Dielectric,** *n.* மின் தடைப் பொருள்.

**Diesinker,** *n.* (die 1.) அச்சு வார்ப்புச் செய்பவர்.

**Diet,** 1. *n.* உணவு; சாப்பாடு; நோய் உணவு; பத்தியம்; *v.* உணவளி. 2. *n.* சட்டசபை; மன்றம். (1) *n.* dietary, உணவுப் பட்டியல். *n.* dietetics, உணவு முறை. *a.* dietetic.

**Differ,** *v.* வேறுபடு; வேற்றுமைப் படு; (கருத்து; நட்பிணக்கம்) மாறுபடு. *n.* difference, வேற்றுமை; (மன) மாறுபாடு; (எண் இடை யுள்ள) வேற்றுமை; மனக்குறை பாடு. *a.* defferent, மாறுபாடான > *n.* differencia (வாய்வியல்) சிறப்புப் பண்பு; தனிவேறு பாடு. *a.* differential. (*a.* of differentia) (கணக்கியல்) மீதிக் கணிப்புச் சார்ந்த. 2. (*a.* of difference) வேறுபாடுடைய; தராதர வேறுபாடுடைய; ஒருச் சார்பான; வேறு வேறான. 3. (*a.* of difference) தராதரக் கூறுபாடுடைய. *v.* differentiate, etc.

**Difficult,** *a.* வருத்தமான; கடுமை யான; செயலருமையுடைய; கடினமான; எளிதல்லாத. *n.* difficulty, செய்வதற்குக் கடினமாயிருத்தல்; இக்கட்டு.

**Diffident,** *a.* (x confident) தன்னம்பிக்கையில்லாத. *n.* diffidence.

**Diffract,** *v.* (ஒளி முதலியன) கோணு; திசைமாறு. *n.* diffraction.

**Diffuse,** *v.* நாலா பக்கங்களிலும் பரவச்செய்; நொய்தாகு. *a.* பரவுகிற; சிதறுகிற; மிகைபடக் கூறுகிற. *n.* diffusion.

**Dig,** *v.* (dug) கிண்டு; குடை; தோண்டு *n. ag. pers.* digger.

**Digamy,** *n.* இரண்டாம் மணம் செய்தல்.

**Digest,** *v.* உணவைச் செரிமானம் செய்; புதிய அறிவைப் பொது அறிவாக்கு; மனத்தில் தோயவை; மனத்திற் கொள். *n.* சட்டத் தொகுப்பு; செய்திக்குறிப்பு. *n.* digestion. *a.* digestible; digestive.

**Dight,** *v.* (dight) ஆடையணி; ஒப்பனை செய்; முன்னேற்பாடு செய்.

**Digit,** *n.* விரல். விரலகலம்; இலக்கம்; எண்ணின் வரிவடிவ உரு (0 முதல் 9 வரையுள்ள எண்மான உரு).

**Diglot,** *n.* இருமொழிப் புலவர். *a.* இருமொழிச்சார்பான.

**Dignify,** *v.* (dignity) மதிப்புடையதாக்கு *pa. p.a.* dignified, மதிப்பான.

**Dignity,** *n.* மதிப்பு உயர்படி; உயர் நிலை. *n. pers.* dignitary, *v. see* dignify.

**Digraph,** *n.* ஓரொலியுடைய ஈரெழுத்து (எ-டு *sh.ph. -f*).

**Digress,** *v.* வழியிலிருந்து விலகு; செய்தியை விட்டு வேறொன்று கூறு. *n.* digression, மற்றொன்று விரித்தல் குற்றம்.

**Dike, dyke,** *n.* செய்கரை; பள்ளம்; *v.* அணைக்கட்டு.

**Dilapidate,** *v.* சீர்கெடு; பாழாகு. *n.* dilapidation

**Dilate,** *v.* விரிந்து பெரிதாகு; விரியச்செய்; மிகைப்படக் கூறு; விளக்கமாகக் கூறு. *n.* dilatation, dilation, *a.* dilatory, (காலங் கடத்துகிற; தயங்குகிற).

**Dilemma,** *n.* இருதலைக் கொள்ளி எறும்பு நிலை; அறப்பொறி.

**Dilettante,** *n. (pl.ti)* ஆர்வக் கலைஞர்; மேற் போக்கான அறிவுள்ளவர்; பொழுதுபோக்குக் கலைஞர். dilettantism.

**Diligence,** *n.* விடாமுயற்சி; ஒருவகை வண்டி. *a.* diligent.

**Dilly-Dally,** *v.* தயங்கு; மனமின்றி வேலைசெய்; கடன் கழி.

**Dilute,** *a.* நீர் கலந்த; வீரியங் குறைந்த. *v.* நீர் முதலியன கலந்து வீரியங்குறை. *n. vbl.* dilution. *n. abs.* diluteness.

**Dim,** *a.* மங்கலான; ஒளி குறைந்த; பார்வை மங்கிய *v.* மங்கலா(க்கு). *n.* dimness.

**Dime,** *n.* (அமெரிக்க) வெள்ளியில் பத்திலொன்று மதிப்புள்ள காசு.

**Dimension,** *n.* அளவு; பருமன்; நீள அகல உயரங்கள்.

**Diminish,** *v.* குறை; குறைவாகு. *a.* diminutive, சிறு அளவான. *a. n.* (இலக்கணம்) சிறு அளவைக்

குறிக்கிற (சொல்). *n.* diminution குறைவு.

**Dimorphic,** *a.* இருவேறு உருவ முள்ள; (இயல் நூல்) இருவேறு அணு அமைவுள்ள.

**Dimple,** *n.* கன்னத்தில் விழும் சிறு குழி. *v.* கன்னங் குழிவாகு.

**Din,** *n.* பேரொலி. *v.* பேரொலி செய்து தொந்தரை கொடு.

**Dine,** *v.* சாப்பிடு; உண்பி. *n.* dinner, நாளின் தலையூண், சாப்பாடு. *n. ag. pers.* dinner. *comb.* dinning room உணவுக் கூடம்; விருதுக் கூடம்.

**Ding-dong,** *n.* மணியின் ஓசை.

**Dinghy,** Ding, Dingey, *n.* சிறு ஓடம்.

**Dingle,** *n.* பள்ளத்தாக்கு.

**Dinglo,** *n.* ஆஸ்ட்ரேலிய நாய்.

**Dingy,** 1. *see* dinghy., 2.*a.* அழுக்கடைந்த தோற்றமுடைய; மங்கலான.

**Dining, dinner,** *n. see* dine.

**Dint,** *n.* வடு. (by dint of, தொடர் முயற்சியால்)

**Diocese,** *n.* தலை முதல்வர்; சமய ஆட்சிப் பகுதி. *a. (n)* diocesan, தலைமுதல்வர்க்குரிய).

**Dip** *v.* முக்கு; அமுக்கு; தோய்; முங்கு; முழுகு; சாய். சூ. முக்குதல்; குவிப்பு. *n. ag. impers.* dipper. கரண்டி; சாய்வு; சரிவு.

**Diphtheria,** *n.* தொண்டைக் கட்டு நோய்.

**Diphthong,** *n.* (ஒலி அல்லது எழுத்து) இணையுயிர்.

**Diploma,** *n.* (பல்கலைக்கழகப் பட்டச்) சான்றுப் பத்திரம்; பத்திரம். *a.* diploma'd, diplomated.

**Diplomacy,** *n.* அரசியல் சூழ்ச்சித் திறம்; வெல்திறம்; நயத்திறம்; தூதாண்மை. *a.* diplomatic, *adv.* diplomatically.*n. pers.*diplomat, diplomatist.

**Dipsomania,** *n.* குடி அவா.

**Dire,** *a.* அஞ்சத்தக்க; இடர்க்குரிய; மிகக்கேடான. *see* direful.

**Direct,** 1. *v.* வழிகாட்டு; கட்டளை யிடு; இயக்கு; முகவரி யிட்டனுப்பு. 2. *a. adv. n.* நேராக; directly, நேராக; உடனே. *n.* direction. 1. வழிகாட்டுதல்; முகவரி காட்டுதல்; கட்டளை யிடுதல்; இயக்குதல். 2. திசை. *n. ag. pers.* director. இயக்குநர்; ஆணையாளர்; பொறுப்பாளர். *(fem.)* directress. *n. abs.* directorate 1. இயக்குநர் குழு; இயக்குநராட்சி (முறை); இயக்குநர் ஆட்சிப் பகுதி. *conn. n.* directory, தகவல் தொகுதி விவரத் திரட்டு.

**Direful,** *a.* தீமை குறிக்கிற; தீக்குறியான; மிக இன்றியமை யாத.

**Dirge,** *n.* இரங்கற்பா. துயரப்பாடல்; புலம்பல்; இழவுப்பண்.

**Dirigible,** *n.* குறித்த திசையில் செலுத்தத்தக்க வானூர்தி.

**Dirk,** *n.* கட்டாரி; குத்துவாள்.

**Dirt,** *n.* தூசி அழுக்கு. *a. n.* dirty.

**Disability,** *n.* (வேலை செய்ய) ஏலாநிலை; *v.* disable.

**Disabuse,** *v.* தவறான எண்ணத்தைப் போக்கு; (தப்பெண்ணம்) தெளிவுபடுத்து.

**Disaccord,** n மாறுபாடு. *v.* மாறுபடு.

**Disadvantage,** *n.* குறைபாடு தங்கு; குறை. *a.* dis advantageous.

**Disaffected,** *a.* நேசமில்லாத; இணக்கமுறிவுற்ற. *n.* disaffection.

**Disagree,** *v.* மாறுபடு; ஒத்துக் கொள்ளாதிரு. *n.* disagreement, பூசல். *a.* disagreeable, வெறுப்பூட்டுகிற; விரும்பாத.

**Disallow,** *v.* தடைசெய்; ஒப்புக் கொள்ள மறு.

**Disappear,** *v.* காணாமற் போ; மறை; ஒளித்துக்கொள். *n.* disappearance.

**Disappoint,** *v.* ஏமாற்றமளி; ஏக்கமளி. *n.* disappointment.

**Disapprove,** *v.* ஒத்துக் கொள்ள மறு; மாறுபட்ட கருத்துக்கொள்; கண்டி. *n.* disapproval, disapprobation.

**Disarm,** *v.* படைக்கலம் வாங்கு; படைக்கலம் அகற்று. *n.* disarmament (x armament). *see* earmament, படைக் குறைப்பு; படைக்கலக்குறைப்பு.

**Disarrange,** *v.* ஒழுங்கு கலை. *n.* disarrangement.

**Disarray,** *v.* ஒழுங்கைக் குலை; அணி குலை; ஆடையை அலங்கோலம் செய். *n.* ஒழுங்குக் குலைவு.

**Disassemble,** *v.* தனித்தனியே பிரித்தெடு.

**Disassociate,** *v.* உறவைத் தறி; பிரிந்து நில்.

**Disaster,** *n.* பேரிழப்பு; கடுந் துன்பம். *a.* disastrous.

**Disavow,** *v.* ஏற்க மறு; தெரியாதெனக் கூறு. *n.* disavowal.

**Disband,** *v.* கலை. *n.* disbandment.

**Disbelieve,** *v.* நம்பிக்கை வைக்காதிரு. *n.* disbelief.

**Disburden,** *v.* பாரத்தைக் குறை; பாரமிறக்கு.

**Disburse,** *v.* பணங்கொடு; பிரித்துக்கொடு. *n.* disbursement, கொடுபாடு; பாத்தீடு.

**Disc,** *n. see* disk.

**Discard,** *v.* தள்ளு; விலக்கு; (சீட்டாட்டத்தில் பயனற்ற சீட்டைத்) தள்ளு. *n.* (பயனற்ற சீட்டைக்) கழித்தல்.

**Discern,** *v.* தெளிவாகப் பார்; தெளிவாக அறி; கூர்ந்துணர்; அறிவுத் திறத்தாலறி. *a.* discernible, *n.* discernment, கூரிய அறிவு. *a.* discerning, தெளிந்த அறிவுள்ள நுண் அறிவுடைய.

**Discharge,** *v.* தீர்; நிறைவேற்று; ஒப்பேற்று; செலுத்து; நீக்கு; வெடி. வேட்டுவிடு; கடனைக்கொடு; கடமையைச் செலுத்து; பாரத்தை இறக்கு; துப்பாக்கி சுடு; பதவியிலிருந்து விலக்கு. *n.* விடுவித்தல்; செலுத்தல்; வெடித்தல்; விலக்குதல்.

**Disciple,** *n.* மாணவர்; மாணாக்கர்; சீடர்; கொள்கை பின்பற்றுபவர்.

**Discipline,** *n.* ஒழுங்கு; ஒழுங்கு முறை; கட்டுப்பாடு; தன்னடக்கம்; ஒழுங்குப் பயிற்சி. *v.* பயற்சியளி; ஒழுங்கு படுத்து. *a.* disciplinary, ஒழுங்கு முறைக்குரிய; தண்டனைக் குரிய; கண்டிப்பிற் குரிய. *n. pers.* disciplinarian. கண்டிப் பாளர்.

**Disclaim,** *v.* உரிமையைக் கைவிடு; தனதன்றெனக் கூறு. *n. ag. abs.* disclaimer. கண்டிப்பாளர்.

**Disclose,** v வெளிப்படுத்து; தெரிவி; *n.* disclosure.

**Discomfit,** *v.* தோல்வியுறச் செய். *n.* discomfiture.

**Discomfort,** *n.* வாய்ப்புக் குறை; நலக்கேடு; நலக்குறை; மனக்குறை.

**Disconcert,** *v.* மன உலைவு படுத்து; தாறுமாறாகச் செய். *adv.* disconcertingly.

**Disconnect,** *v.* தொடர்பை அறு; துண்டி; பிரி. *n.* disconnection; disconnexion.

**Disconsolate,** *a.* துயர்மிகுந்த; ஆறுதலில்லாத; நம்பிக்கையற்ற.

**Discontent,** *n.* உள்ள நிறை வின்மை; போதாமையுணர்ச்சி; அமைதியின்மை. *pa. p. a.* discontented, *n.* discontentment.

**Discontinue,** *v.* தொடர்பறு; நிறுத்து. *n. abl.* discontinuance; discontinuation, *n. vbs.* discontinuity, தொடர்பில்லாமை *a.* discontinuous, (இடை யிடையே) தொடர்பில்லாத.

**Discord** *n.* ஒற்றுமைக்கேடு; வேறுபாடு; முரண்பாடு *a.* discordant, *n.* discordance.

**Discount,** *v.* தள்ளுபடி கழித்துக் கொடு; குறை. *n.* தள்ளுபடி; கழிவு; கழிமானம்.

**Discountenance,** *v.* ஆதரவு மறு.

**Discourage,** *v.* ஊக்கம் கெடு; மறைமுகத் தடைசெய். *n.* discouragement

**Discourse,** *n.* உரையாடல்; பேச்சு; அறவுரை. *v.* உரையாடு.

**Discourteous,** *a.* பண்பு மதிப்பற்ற; மட்டுமதிப்பற்ற. *n.* discourtesy.

**Discover,** *v.* வெளிப்படுத்து; திறந்துகாட்டு; மறைவுதிற; புதிது காண்; கண்டுணர்; கண்டுணர்த்து; கண்டுபிடி. *n.* discovery, கண்டு பிடித்தல்; கண்டுபிடிப்பு; புதுக் காட்சி; மறை வெளியீடு; மறைவு திறப்பு. *n. ag. pers.* discoverer.

**Discredit,** *n.* அவமதிப்பு; இகழ்; அவப்பெயர் மானக்கேடு. *v.* குறைவாகப் பேசு; நம்பாதிரு. *a.* discreditable.

**Discreet** *a.* அறிவுக்கூர்மை யுடைய; செயல் நோக்குடைய; அமைந்திருந்து செயல் செய்யக் கூடிய. *n.* discretion, தன்விருப் புரிமை; தன்முடிபு. *a.* discretionary, காலத்துக் கேற்ற மரபுஉரிமையுள்ள; நிலைமைக் கேற்ற முடிபுரிமை வாய்ந்த.

**Discrepant,** *a.* மாறுபடுகிற; முரணான. *n.* discrepancy பொருந்தாமை; முரண்பாடு.

**Discrete,** *a.* தனித்தனியாகப் பிரிந்துள்ள.

**Discriminate,** v வேறுபாடுரை; வேறுபடுத்திக் காட்டு; வேறுபட நட; ஓரம்காட்டு. *n.* discrimi nation. *a.* discriminative.

**Discursive,** *a.* விட்டுவிட்டுத் தாவுகிற; மேலீடாகப் பொறுக்கி யெடுத்த; மேலீடாகப் பலபற்றிய. *n.* discursiveness.

**Discus,** *n.* சக்கரப்படை; ஆழிப் படை.

**Discuss,** *v.* சொல்லாடு; கலந்து பேசு; கலந்தாய்; சொற் போரிடு; வாதாடு; வாதம்செய். *n.* discussion. வாதம்; சொற் போர்; கலந்தாய்வு; வாதாட்டம்.

**Disdain,** *v.* வெறு; இழிவாகக்கருது; வெறுத்தொதுக்கு. *n.* வெறுப்பு; அவமதி; ஏளனம். *a.* disdainful.

**Disease,** *n.* நோய்; நலிவு; பிணி; நோக்காடு. *a.* diseased.

**Disembark,** *v.* கப்பலிலிருந்து இறங்கு. *n.* disembarkation.

**Disembarrass,** *v.* ஐயம்நீக்கு; மலைவகற்று. *n.* dis embarrassment.

**Disembody,** *v.* உடலிலிருந்து விடுவி; அணிவகுப்பைக் கலை. *a.* disembodied, உடலற்ற; ஆவி வடிவமான.

**Disembosom,** *v.* வெளிப்படுத்து; மறை வெளியிடு.

**Disembowel,** *v.* குடலை வெளிப்படுத்து.

**Disenchant,** *v.* மயக்கந்தெளிவி. *n.* disenchantment.

**Disencumber,** *v.* சுமையை நீக்கு; தளையகற்று; விடுவி.

**Disengage,** *v.* இணைப்பறு; விடுவித்துக்கொள்;இணைத்த பொருள்களைப் பிரி. *n.* disengagement.

**Disentangle,** *v.* சிக்கலிலிருந்து விடுவி.

**Disestablish,** *v.* (கோயில் முதலிய வற்றிற்கு) அரசாங்க ஆதரவை நிறுத்து.

**Disfavour,** *n.* ஆதரவின்மை; வெறுப்பு. *v.* வெறு.

**Disfigure,** *v.* அழகைக் கெடு. *n.* disfigurement.

**Disfranchise,** *v.* மொழிதரவு உரிமையைப் பறி; தேர்வாண்மை உரிமை நீக்கு.

**Disgorge,** *v.* கவர்ந்ததைத் திரும்பக்கொடு; கக்கு.

**Disgrace,** *n.* இழிவு; அவமானம். *v.* இழிவுபடுத்து. *a.* disgraceful.

**Disgruntled,** *a.* மனக்குறை யுடைய; குறைபட்டுக் கொள்கிற.

**Disguise,** *v.* மாற்றுருக் கொள்; மாற்றுருக்கொடு; உருமாறு. *n.* உருமாற்றம்.

**Disgust,** *n.* வெறுப்பு; அருவருப்பு. *v.* வெறுக்கச்செய். *a.* disgustful, disgusted.

**Dish,** *n.* தட்டு; தகழி; கலம்; வட்டில் துணையுணவு; கூட்டு; கறி. *v.*

தட்டில் போடு உணவு பரிமாறு; கூட்டிக்கல; கறிசெய்; சேர்த்துரு வாக்கு; பனை; சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி செய்து தோற்கடி.

**Dishabille,** *n.* அரைகுறை ஆடை (அணிந்திருத்தல்).

**Disharmonize,** *v.* பொருத்தத்தைக் குலை; பொருத்தக் கேடாயிரு. *n.* disharmony.

**Dishearten,** *v.* ஊக்கங் குலை.

**Dishevel,** *v.* (தலைமயிர் முதலிய வற்றைச்) சீர்குலையச் செய்; அமைதி குலை.

**Dishonest,** *a.* வாய்மையற்ற, வஞ்சித்தொழுகிற. *n.* dishonesty.

**Dishonour,** *n.* அவமானம்; அவமதிப்பு. *v.* அவமானஞ் செய்; இகழ்; அவமதி. *a.* dishonourable.

**Disillusion,** *n. v.* disillusionize. *v.* மயக்கம் அகற்று.

**Disincline,** *v.* விருப்பக் கேடுறுவி; விருப்பங் குறை; (*gen pass.* be disinclined) விரும்பாதிரு. *n.* disinclination, மனமில்லாமை.

**Disinfect,** *v.* நச்சுயிர் ஒழி; நச்சுத்தடை செய். *n.* disinfection. *n. ag. impers.* disinfectant, நச்சுத்தடை மருந்து.

**Disingenuous,** *a.* வஞ்சகமுள்ள; (x ingenuous)

**Disinherit,** *v.* மரபுரிமை இழக்கச்செய்; மரபுத்தொடர்பறு; உரிமை மறு. *n.* disinheritance.

**Disintegrate,** *v.* உதிரச்செய்; சிதறச்செய் பிரிவுறச்செய்; சிதை. *n.* disintegration.

**Disinter,** *v.* வெளிப்படுத்து; (பிணம் முதலியவற்றைத்) தோண்டியெடு.

**Disinterested,** *a.* தன்னலமற்ற; தன்னலமறுத்த. *n.* disinterested -ness.

*disjecta membra,* *n.* pl. சிதறியுள்ள பகுதிகள்; தொடர் பில்லாத துணுக்குகள்.

**Disjoin,** *v.* தனித்தனியாகப் பிரி.

**Disjoint,** *v.* பொருத்துவாயில் பிரி; இணையறு. *a.* disjointed, இணைப்பற்ற.

**Disjunction,** *n.* பிரித்தல். *a.* disjunctive (வாய்வியல்) பிரிநிலையான; பிரிநிலைத் தேர்வான (x conjunctive)

**Disk, disc,** *n.* வட்டத் தகடு; சில்லு.

**Dislike,** *v.* வெறு *n.* வெறுப்பு.

**Dislocate,** *v.* இடம் பெயர்; கழற்று; சீர்குலை; குணங்கு; சுளுக்கு. *n.* dislocation.

**Dislodge,** *v.* இடம் பெயரச் செய்; குடி பெயரச் செய். *n.* dislodg(e)ment.

**Disloyal,** *a.* பற்றுறுதி மாறிய உண்மையற்ற. *n.* disloyalty.

**Dismal,** *a.* துயரம் நிறைந்த; துயர்குறித்த; இருண்ட.

**Dismantle,** *v.* கவசம் அகற்று; உடை கழற்று; உறுப்புப் பிரி.

**Dismay,** *v.* கிலியூட்டு. *n.* கிலி.

**Dismember,** *v.* உறுப்பு வெட்டி நீக்கு; தனித்தனி பிரி. *n.* dismemberment.

**Dismiss,** *v.* அகற்று; விலக்கு; நீக்கு; அனுப்பு. *n.* dismissal.

**Dismount,** v இறங்கு; இறக்கு.

**Disobey,** *v.* கீழ்ப்படிய மறு; அதிகார மீறு *n.* disobedience, *a.* disobedient.

**Disoblige,** *v.* உதவி மற; கடப்பாடு தவிர்; நேசமின்மை காட்டு. *a.* disobliging.

**Disorder,** *n.* ஒழுங்கற்ற நிலை; *v.* ஒழுங்கற்றதாகச் செய். *a.* disorderly.

**Disorganize,** *v.* ஒழுங்கைக் குலை; தாறுமாறு செய். *n.* disorganization.

**Disown,** *v.* மறுதலி; கைவிடு.

**Disparage,** *v.* இழித்துப் பேசு. *n.* disparagement.

**Disparate,** *a.* உயர்வு தாழ்வுடைய; ஏற்றத்தாழ்வான; வெவ்வேறு வகையைச் சேர்ந்த; முரண் பாடுடைய; ஏறுமாறான. *n.* disparateness, disparity.

**Dispassionate,** *a.* உணர்ச்சி வசப்படாத; அமைதியான; நடுநிலை யுணர்வுடைய *n.* dispassionateness.

**Dispatch, despatch,** *v.* அனுப்பு; கொலை செய்; செயல்தீர்; காரிய முடி; விரைந்து காரியம் செய். *n.* அனுப்புதல்; விரைவு; தீர்வு; காரிய முடிவு. *comb. n.* dispatch register, தீர்வேடு.

**Dispel,** *v.* ஓட்டு; துரத்து; சிதறச் செய்.

**Dispensable,** *a.* தவிர்க்கக் கூடிய. (x indispensable) *n.* dispensability.

**Dispensary,** *n.* மருந்து விற்குமிடம்; மருந்து வழங்குமிடம்; மருந்தகம்.

**Dispense,** *v.* நிறுத்துக் கொடு; பகிர்ந்து கொடு; இல்லாது கழி. *n.* dispensation, பகிர்ந்து கொடுத்தல்; ஊழ்; அமைப்பு; வகுப்பு; தெய்வ ஆணை; முறைமை; ஏற்பாடு (கிறித்துவ திருநூல்) திரு ஏற்பாடு.

**Disperse,** *v.* சிதறு; பரவச் செய்; கலை. *n.* dispersio*n.* dispersal.

**Dispirit,** *v.* ஊக்கங்கெடு. *adv.* dispiritedly.

**Displace,** *v.* புலம்பெயர்; இடம் பெயரச்செய்; தள்ளு; இடத்தி லிருந்தகற்று; இடத்திலிருந்தகற்றி இடங்கொள். *n.* displacement.

**Display,** *v.* காட்டு; பகட்டு. *n.* பகட்டு; காட்சியணி; காட்சி ஒழுங்கு.

**Displease,** *v.* வெறுக்கச்செய்; சினமூட்டு. *pa.p.a.* displeased, *n.* displeasure.

**Disport,** *v.* விளையாடு; மகிழ்ந்து பொழுதுபோக்கு.

**Dispose,** *v.* ஒழுங்குபடுத்து; மனம்பற்று; விருப்பங் கொள்; மனஞ்சார்; சாய்; விற்பனைசெய்; கையாளு; வழங்கு; ஒழித்துக் கட்டு; தள்ளிக்கழி; முடிவுசெய்; தீர்; ஒப்பேற்று; நிறைவு செய்; முடி. *n.* disposal, கையாட்சி; செயலாட்சி; செலவழிப்பு; கைதவிர்ப்பு;

பயனீடு; கொடுத்தல். also *see* disposition.

**Disposition,** *n.* (dispose) நிலைமை; மனநிலை; மன விருப்பம்; நாட்டம்.

**Dispossess,** *v.* உடைமை விலக்கு; இல்லாதாக்கு; கவர்; பறி. dispossess one of a thing), *n.* dispossession.

**Dispraise,** *n.* பழிப்பு.

**Disproportion,** *n.* ஒவ்வாத தன்மை; முரண்பாடு ஏறுமாறு. *a.* disproportionate.

**Disprove,** *v.* தவறென்று எண்பி. *n.* disproof.

**Dispute,** *v.* வாதமிடு; வழக்காடு; எதிர். *n.* சொற் போர்; மாறுபாடு; பூசல்; வழக்கு வாதம். *n.* disputa -tion. வாதம் (இடல்) *n. pers.* disputant. *a.* disputable, வாதத் துக்கிடமான; கருத்து வேற்றுமை யுள்ள. (x indisputable) *adv.* disputably, *n.* disputability.

**Disqualify,** *v.* தகுதியகற்று; தகுதி யற்றதாகச் செய். *n.* disqualifica -tion.

**Disquiet,** *v.* மனங் கலங்கச் செய்; தொந்தரவு கொடு. *n.* கலக்கம்; தொந்தரை. *n.* disquietude, அமைதியின்மை.

**Disquisition,** *n.* ஆராய்ச்சிக் கட்டுரை.

**Disregard,** *v.* புறக்கணி; அவமதி. *n.* அவமதிப்பு; புறக்கணித்தல்.

**Disrepair,** *n.* நன்னிலையில் இல்லாமை; பழுதுபாடு.

**Disrepute,** *n.* இகழ்ச்சி; பழி. *a.* disreputable.

**Disrespect,** *n.* மதிப்புக்கேடு; அவமதிப்பு. *a.* disrespectful.

**Disroble,** *v.* உடை கழற்று.

**Disrupt,** *v.* தடைசெய்; தகர்த்தெறி. *n.* disruption. *a.* disruptive.

**Dissatisfy.** *v.* மனக்குறை உண்டு பண்ணு. (*pass*.be dissatisfied, குறைபடு; மனக்குறைபடு.) *n.* dissatisfaction.

**Dissect,** *v.* பிளந்து ஆய்வு செய். *n.* dissection.

**Dissemble,** *v.* பாசாங்கு செய்; மனக்கருத்தை மறை.

**Disseminate,** *v.* பலவிடங் களிலும் பரவச்செய்; விதைதூவு. *n.* dissemination.

**Dissent,** *v.* கருத்துவேறுபடு, *n.* கருத்து வேறுபாடு. *n.* dissension, கருத்து வேறுபாடு; கலகம். *n. pers.* dissenter, ஏற்புடையச் சமயத்தினின்று பிணக்க முடையவர். *a. n.* dissentient மாறுபாடுடைய; வேறுபடுகிற. இணங்காத. *pr. p. a.* dissenting, இணங்காத; முரண்பாடுடைய.

**Dissertation,** *n.* கட்டுரை; சொற் பொழிவு. இடையுரை; துணை யுரை; இடைவிளக்கவுரை; தனி விளக்கவுரை; விரிவுரை.

**Disservice,** *n.* தீங்கு; தீங்கிழைப்பு; இன்னாச்செயல்; ஊறுபாடு; தீம்பு; பொல்லாப்பு.

**Dissever,** *v.* தொடர்பை அறு.

**Dissimilar,** *a.* வேறுபாடான; (ஒன்றைப்) போலிராத. *n.* dis-similarity.

**Dissimulate,** *v.* பாசாங்கு செய்; பாவனைசெய் உருட்டுப் புரட்டுச் செய். *n.* dissimulation.

**Dissipate,** *v.* சிதறச் செய்; வீண்செலவு செய். (*refl.* oneself). ஒழுக்கங்கெட்டு வாழ். *pa.p.* dissipated. *n.* dissipation.

**Dissociate,** *v.* கூட்டுறவு தவிர்; தொடர்பை அறு. *n.* dissociation.

**Dissolve,** *v.* கலை; கரை. *n.* dissolution, *a.* dissoluble.

**Dissolute,** *a.* ஒழுக்கக் கேடான. *n.* dissoluteness.

**Dissonant,** *a.* இசை பொருந்தாத; மாறுபட்டுள்ள. *n.* dissonance.

**Dissuade,** *v.* உள்ளத்தை மாற்று; அறிவுறுத்தித்தடு. (x. persuade) *n.* dissuasion. *a.* dissuasive.

**Dissyllable,** *n.* ஈரசை. *a.* dis(s)yllabic.

**Dissymmetry,** *n.* (x symmetry) அந்தசந்தமின்மை; ஒவ்வாமை; சீர்சமமின்மை. *a.* dissymmetric, -al).

**Distaff,** *n.* நூற்புக் கழி; கழி.

**Distance,** *n.* தொலைவு; ஒதுக்கமாயிருத்தல். *v.* முன் செல். *a.* distant, தூரமான; நெருங்கிப் பழகாத.

**Distaste,** *n.* வெறுப்பு; விருப்பின்மை; சுவையின்மை. *a.* distasteful.

**Distemper,** *n.* குணக்கேடு; உடற்கேடு; நோய்; அரசியல் குழப்பம்.

**Distend,** *v.* பருக்கச் செய்; விரியச்செய். *n.* distension.

**Distich,** *n.* ஈரடிச் செய்யுள்; குறளடிப்பா.

**Distil,** *v.* துளிகளாக விழு; வடித்திறக்கு. *n.* distillation. *n.* distillery, (சாராயம்) வடிக்குமிடம்; வடிசாலை; வடிப்பகம் வடிமனை. 3. *n.* distillate, வடித்தெடுத்த பொருள்.

**Distinct,** *a.* தெளிவாகத் தெரிகிற; தனிப்பட்ட. *n.* distinction, தனிச்சிறப்பு; *a.* distinctive தனிப்பட்ட; *n.* distinctness, தெளிவு தனிப்பட்ட தோற்றம்; தனிப்பண்பு.

**distingue,** *a.* (டிஸ்டிங்கே) தனித்தோற்றமுள்ள.

**Distinguish,** *v.* வேறுபாடு கண்டறி. *a.* distinguishable, வேறு பிரித்தறியக் கூடிய *pa.* distinguished, புகழ்பெற்ற.

**Distort** *v.* உருவத்தை மாற்று; கருத்தைப் புரட்டு. *n.* distortion, உருத்திரிபு. *pp. a.* distorted, உருத்திரிந்த; ஏடாகோடமான.

**Distract,** *v.* கவனத்தைத் திருப்பு; மனத்தைக் கலக்கு. *n.* distraction, மனக்குழப்பம்; கவனத்தைத் திருப்பும் இடையூறு. *pred. a.* distracted. அறிவு குழம்பி(ய).

**Distrain,** *v.* கடனுக்காகச் சொத்தைப் பறி. *n.* distraint, பற்றீடு கைப்பற்றுதல். *comb. n.* distraint warrant, பற்றாணை.

**Distrait,** *a.* கவனமில்லாத; நினைவு வேறாயுள்ள.

**Distraught,** *a.* மனக் கொந் தளிப்புள்ள; குழப்பமடைந்த.

**Distress,** *v. n.* பெருந் துயரம்; (வழக்குத்துறை) கடனுக்காகச் சொத்தை உடனடியாகக் கைப் பற்றுதல். *a.* distressing, distressful, கடுந்துயரார்ந்த *comb. n.* distress petition, உடனடிப் பற்றாணை மனு; உடனடிப் பற்றீட்டு மனு. distress warrant, உடனடிப் பற்றாணை.

**Distribute,** *v.* பலருக்குப் பகிர்ந்து அளி; பகிர்; வழங்கு; பரத்திடு; பங்கிடு; எங்கும் பரப்பு. *n.* distribution, பகிர்வு; பாத்தீடு; பங்கீடு; அகலப் பரப்புதல்; அகலப் பரப்பு; பரப்பு வீதம். *n. pers.* distributor. *a. n.* distributive, தனித்தனியான; (இலக்கணம்) தனித்தனிகுறிக்கிற.

**District,** *n.* கோட்டம்; மாவட்டம்; வட்டாரம்; நாட்டின் பிரிவு; அரசின் பிரிவு. *comb. n.* district board, கோட்ட ஆட்சிக்குழு; மாவட்டக்குழு.

**Distrust,** *n.* அவநம்பிக்கை. *v.* அவநம்பிக்கை கொள். *a.* distrustful.

**Disturb,** *v.* உலைவு செய்; கலை; தொடர் கலை; அமைதி கலை; தொந்தரவு செய்; தடை செய் *n.* disturbance, தடை; குழப்பம்; உலைவு; கலைவு; கலசல்; பூசல்.

**Disunion,** *n.* ஒற்றுமையின்மை; ஒற்றுமைக்கேடு; வேற்றுமை; உட்பிணக்கு; பிரிவு. *v.* disunite, *n.* disunity.

**Dissuse,** *v.* (டிஸ்யூஃஜ்) வழங்காதிரு; வழக்கு நிறுத்து. *n.* (டிஸ்யூஸ்) வழங்காமை; வழக்கு நிறுத்தம் வழக்காறின்மை.

**Ditch,** *n.* குழி; பள்ளம்; *v.* குழிதோண்டு.

**Ditto,** *n. a.* மேற்படி.

**Ditty,** *n.* பாடல்.

**Diurnal,** *a.* பகலுக்குரிய; நாள் முறையான.

**Divan,** *n.* ஆய்வு மன்றம்; மெத்தை தைத்த இருக்கை.

**Dive,** *v.* மூழ்கு; முக்குளி. *n. pers.*, diver, *comb. n.* diving bell, (முத்துக்குளிப்பவர் கடல்) மூழ்கு கூண்டு.

**Diverge,** *v.* விலகு; விரிந்து செல்; வேறுபட்டுச் செல். a.divergent, *n.* divergence; divergency.

**Divers, Diverse,** *a.* வெவ் வெறான; பல. *v.* diversify, பலவகைப்படுத்து. *n.* diversity.

**Diversion,** *n. see* divert.

**Divert,** *v.* வேறுவழி செலுத்து; கவனத்தைத் திருப்பு பொழுது போக்காக மகிழச்செய். *n.* diversion, பொழுதுபோக்கு.

**Divest,** *v.* உடை களை; உடைமை நீக்கு; இல்லாமற் செய். (x invest) *n.* divestment; divestiture.

**Divide,** *v.* பிரி; பங்கிடு; (கணக்கு) வகு. *n.* division, வகுத்தல்; பங்கிடல்; பிரிவு கோட்டம்; மண்டலம்; அரங்கம்; வகுப்பு;

வகை; கிளை. *a.* divisible, வகுக்கக் கூடிய. *n. abs.* divisibility, s. *n.* divisor, வகுக்கும் எண். *n.* dividend, வகுக்கப்படும் எண்; பங்கீடு; பங்கு வீதம்; ஊதிய வீதம்; பங்கூதியம். *n. ag. impers. pl.* dividers, (இடக் கணக்கியல், தச்சுக்) கவை முள்கருவி; கவராயம். *a.* divisional, மண்டலம் சார்ந்த; கோட்டம் சார்ந்த. *comb. n.* divisional, officer, கோட்டப் பணிமுதல்வர்; கோட்டத் தலைவர்; மண்டலிகர்.

**Divination,** *n.* உய்த்துணர்தல்; வருவதுணர்த்தல். *n. pers.* divinator, *v. see* divine, (3).

**Divine,** 1. *a.* தெய்வத்தன்மை யுள்ள 2. *n.* மதகுரு. 3. *v.*முன் கூட்டி அறி; உய்த்துணர்; நுணுகி யுணர். divining rod. மண்ணின் கீழ்த் தண்ணீர் முதலியன இருப் பதைக் கண்டுபிடிக்க உதவும் கோல். (1) *n.* divinity, தெய்வத் தன்மை; கடவுள்; தெய்வம்.

**Division,** *n. see* divide.

**Divorce,** *v.* மணம் விலக்கு; இணைப்பறு; வேறுபிரி. *n.* மணவிலக்கு; பிரிவினை; பிளவு.

**Divulge,** *v.* பலரறியக் கூறு. *n.* divulgence.

**Dizzy,** *a.* தலை சுற்றுகிற; மயக்கம் தருகிற. *n.* dizziness.

**Do,** *v.* (did, done) செய்; நடத்து; நிறைவேற்று. *n. pers.* doer.

**Docile,** *a.* கீழ்ப்படிகிற; பணிவுள்ள; அமைந்த இணக்கமுள்ள. *n.* docility

**Dock,** 1. *n.* வால்கட்டை; தறித்த வால். *v.* வால் தறி. 2. *a.* குற்றவாளிக் கூண்டு. 3. (கப்பல்) துறை. *v.* துறையில் நிறுத்து, (3) *n.* dockage, கப்பல் துறைக் கூலி. *n. pers.*docker, கப்பல் துறை வேலையாள்.

**Docket,** *n.* பொழிப்பு; குறிப்புச் சீட்டு. *v.* குறிப்பெழுது. *comb. n.* docketsheets, பொழிப்புத் தாள்கள்.

**Dockyard** *n.* கப்பல் (கட்டும் அல்லது செப்பனிடும்) துறை.

**Doctor,** *n.* கல்விமான்; பேரறிஞர்; மருத்துவர். *v.* பண்டுவம் செய். *n. abs.* doctorate, பேரறிஞர் பட்டம்.

**Doctrine,** *n.* சித்தாந்தம்; கோட் பாடு; *a.* doctrinal, *a., n.* doctrinaire உறுதிக் கோட்பாடு உடைய(வர்)

**Document,** *n.* ஆவணம்; பத்திரம்; ஆயக்கட்டு; கைச்சாத்து. *a.* documentary.

**Dodder,** *v.* நடுங்கு.

**Dodge,** *v.* ஏமாற்றிச் செல்; ஏய்; காலங்கடத்து. *n.* ஏய்ப்பு; கடத்தும் சூழ்ச்சி. *n. ag.* dodger.

**Doe,** *n.* பெண் மான்.

**Doff,** *v.* (ஆடை, தொப்பி, முதலிய வற்றை) நீக்கு, (*corr.* -don)

**Dog,** *n.* நாய். *v.* (நாய்போல்) விடாது பின் தொடர். *v.* doggish. *(comb.) n.* dogcart, இருசக்கர வண்டி. *n.* dogstar, ‘அழல் வெள்ளி’. *n.* dog-tooth) நாய்ப்பல்; கோரைப்பல்; ஓர முன் பல்.

**Doge,** *n.* (டோஜி) (பண்டை வெனிஸ் நகர) (முறை) மன்றத் தலைவர்.

**Dogfish,** *n.* சுறாமீன் வகை.

**Dogged,** *a.* பிடிவாதமுள்ள.

**Doggerel,** *n.* கீழ்த்தரச் செய்யுள்; நகளிப்பாட்டு.

**Dogma,** *n.* சித்தாந்தம்; பிடிவாதக் கொள்கை. *a.* dogmatic, dogmatical. *v.* dogmatize, *n.* dogmatism. *n. pers.* dogmatist.

**Doldrums,** *n.* (pl) காற்றுத் தேக்கம்; (நிலநூல்) எதிரெதிர் காற்று முட்டும் வெப்பமண்டலப் பகுதி; அமைதி; எழுச்சியற்ற நிலை.

**Dole,** 1. *v.* பங்கிடு; பங்கிட்டுக் கொடு; சிறுகக்கொடு; தொழிலில் லாதார்க்குப் பண உதவிகொடு; *n.* பங்கு; சிறு சம்பளம்; தொழி லில்லாதார் உதவிப்பங்கு. 2. *n.* வருத்தம். துன்பம். (2) *a.* doleful.

**Doll, Dolly,** *n.* பொம்மை.

**Doller,** *n.* (அமெரிக்க) வெள்ளி; (மலேயா) வெள்ளி.

**Dolour,** *n.* துன்பம்; துயரம்; *a.* dolorous.

**Dolphin,** *n.* கடலுயிர் வகை.

**Dolt,** *n.* மடையன்.

**Domain,** *n.* ஆட்சிப் பகுதி; நிலப்பகுதி.

**Dome,** *n.* கவிகை மோடு; வளை மாடம் குவிமாடம்; தூங்கானை மாடம்; (விளக்கின்) கும்மடம்.

**Domesday,** *n.* (விவிலியநூல்) உலகிறுதிக் கணிப்புநாள்; (ஒப்பு நோக்குக; சித்திர புத்திரன் கணக்கு) (-book) (வரலாறு; பிரிட்டனின் முதல் வில்லியம் காலத்து) நில உடைமைக் கணிப்பேடு. *see* doom.

**Domestic,** *a.* வீட்டுக்குரிய; பழகிய. *n.* வீட்டு வேலையாள். *v.* domes -ticate, வீட்டு வாழ்க்கையில் பற்றுக் கொள்ளச் செய்; பழக்கு. *n. (vbl)* domestication. *n. abs.*, domesticity வீட்டுப் பண்பு, *comb. n.* domestic economy, வீட்டுச்செட்டு; குடும்பச்செட்டு; மனைப்பொருளியல் (நூல்).

**Domicile,** *n.* வீடு; குடியிருப்பிடம்; குடிவாழ்வுரிமை; குடிவாழ் வுரிமை யாளர். *v.* குடியேறு; குடியுரிமை பெறு.

**Dominant,** *a.* ஆதிக்கமுள்ள; முனைப்புள்ள. *n.* dominance, *v.* dominate, ஆதிக்கஞ் செலுத்து; முதன்மையாயிரு; முனைப்பாக அமை. *n.* domination.

**Domineer,** *v.* அடக்கியாள்; ஆணவம் செலுத்து; தலைமை யுரிமை கொள்; முனைத்திரு. *a.* domineering.

**Dominion,** *n.* அரசு; ஆட்சி, ஆட்சிப்பகுதி குடியேற்ற உரிமை நாடு.

**Dominion,** *n.* ஒருவகை முகமூடி.

**Don** 1. *n.* (*fem.* dona.) (ஸ்பெயின் நாட்டு வழக்கு) திருவாளர்; செல்வர்; வீரர்; திரு. 2. *v.* ஆடையணிந்து கொள். (*corr.* doff).

**Donate,** *v.* கொடு; நன் கொடை யளி. *n.* donation.

**Donjon** *n. see d*ungeon.

**Donkey,** *n.* கழுதை; முட்டாள்.

**Doom,** *n.* ஊழித் தீர்ப்பு. *v.* தீர்ப்பளி; தண்டி; முன் கூட்டி(ச்சாவு) முடிவு செய். *comb. n.* doomsday, *see* domesday.

**Door,** *n.* வாயில்; கதவு.

**Dope,** *n.* ஒருவகை வண்ணப் பசை; மயக்கப்பொருள், *v.* மயக்க மருந்து கொடு.

**Dormant,** *a.* உறங்குகிற; இயக்கமில்லாத; இயங்காத.

**Dormitory,** *n.* படுக்கைக் கூடம்.

**Dormouse,** *n.* (*pl.* dormice.) முள்ளெலி.

**Dorsal,** *a.* முதுகுக்குரிய.

**Dosage,** *n.* (dose) வேளை மருந்தளவு; மருந்து கொடுத்தல்.

**Dose,** *n.* ஒருவேளை மருந்து. *v.* மருந்துகொடு; கல *n. abs. com. see* dosage.

**Dot,** *n.* புள்ளி *v.* புள்ளியிடு. *a.* dotty, புள்ளிகளுள்ள; நடுக்க முள்ள; dotted, புள்ளிகளுள்ள; (dotted with) இடையிடையே சிதறப்பெற்று.

**Dote,** *v.* மிகுதி அன்பு காட்டு; மூடத்தனமாக நட. *n.* dotage, முதுமையால் ஏற்படும் மனத் தளர்ச்சி; தளர் முதுமை. *n.* dotard, மூப்பினால் தளர்ந்தவர்; தளர்மூப்புடையவர்.

**Double,** *a.* இரட்டையான; இரண்டாக மடிந்த; வஞ்சகமான. *v.* மடித்தல் செய்; இரு பங்காக்கு; திரும்பிச் செல். *n.* இரு மடங்கு; ஒன்றைப்போன்ற உருவ முள்ளது. *adv.* double, doubly, *(comb.) n.* double dealing, இரண்டகச் செயல்; ஏமாற்று.

*double entendre, n.* இரட்டுற மொழிதல்; சிலேடையாகப் பேசுதல்.

**Doublet,** *n.* மார்புச் சட்டை; (பிள்ளை; குட்டி) ஈரிணையில் ஒன் று.

**Doubt,** *v.* ஐயுறு. *n.* ஐயுறுவு; அவநம்பிக்கை. *a.* doubtful. *a. neg.* doubtless, *adv.* doubtfully *conn. a.* dubious, பார்க்க.

**Douche,** *n.* நீர்த்தாரை, *v.* தாரை பீற்று.

**Dough,** (டஃவ்) *n.* பிசைந்த மாவு. *a.* doughy.

**Doughty,** *a.* திடமான; வலிமை யுள்ள.

**Dour,** *a.* பிடிவாதமான; உறுதி தளராத.

**Dove,** *n.* புறா; அருமையானது.

**Dovecot,** *n.* புறாக்கூண்டு.

**Dovetail,** *v.* பலகைகளைப் பொருத்து கண்ணறுத்துப் பொருத்து.

**Dowager,** *n.* பெருங் கோப்பெண்டு.

**Dowdy,** a., *n.* அருவருப்பாக ஆடையுடுத்த(வள்)

**Dower,** *n.* சீர்வரிசை; பெண் வழிச்சீர்; கைம்பெண் செலவுப் பணம்; இயற்கை அறிவு; திறமை. *a.* dowered, *n.* see dowry.

**Down,** 1. *n.* மணல்வெளி; பாலைமேட்டு நிலம். 2. *n.* தூவி; மெல் இறகு; மென்மயிர்த்திரள். 2.*adv.* Prep. கீழ்நோக்கி தாமே; கீழே 4. தாழ்வு; நலிவு; இடர் நிலை. (2) *a.* downy, மென்மை யான; மெல்லிறகு போன்ற (3) comb. *a. adv.* Donwncast, (முகம்) கவிழ்த்து; எழுச்சியற்ற; *n.* downfall, வீழ்ச்சி; அழிவு. *a.* downright, தீர்மானமான; தீர்க்கமான. *adv. a., n.* down stair. Downstairs, கீழ்த்தளம்; கீழ்த்தளம் சார்ந்த கீழ்த்தளத்தில்; கீழ்த்தள நோக்கி. *a.* adv, downtrodden, மிதித் தமிழ்த்தப் பட்ட; அமுக்கப்பட்ட; கொடு மைக்கு ஆளாக்கப்பட்ட. *adv, a.* downward *adv.* downwards கிழ்நோக்கி(ய). *n.* downpour, (மழை) பெரும் பெயர்; சோனை மாரி.

**Dowry,** *n.* பெண் வழிச்சீர்; சீர்வரிசை; சுருள்; இயற்கைத் திறமை.

**Doxology,** *n.* புகழ்ப்பாடல் தொகுதி.

**Doyen,** *n.* மூத்தவர்; தலைமூத்தவர்.

**Doze,** *v.* அரைகுறையாகத் துயிலு. *n.* சிறு தூக்கம்.

**Dozen,** *n.* பன்னிரண்டின் தொகுதி.

**Drachm,** *n.* கிரேக்க நாணயம்.

**Drachma,** *n.* ஒரு முகத்தலளவைக் கூறு.

**Draconian, Draconic,** *a.* (சட்டம்) கடுமையான.

**Draft,** *n.* வரைவு; முதற் குறிப்பு; திட்டக் குறிப்பு; திட்டப்படி; பொருள்பேற்றுரிமைச் சீட்டு; *v.* வரை; திட்டக் குறிப்பு எழுது பொறுக்கியெடு; பொருள் பேற்றுரிமைச் சீட்டெழுது பேற் றுரிமைச் சீட்டெழுதிப் பொருள் பெறு. *n. pers.* draftsman, (-draughtsman), வரிப் படம் எழுதுபவர்; படி எழுத்தாளர் பத்திர எழுத்தாளர்; வரைவாளர். *comb. n.* drafamendment, திருத்தப்படி திருத்த வரைவு, *conn.* see. Draw.

**Drag,** *v.* இழு; மெல்லநகர்த்து; நகர்ந்து செல்; இழுபடு. *n.* மீன் வலை வகை; ஒருவகைப் பளுவான வண்டி; கால்கட்டு; சக்கரத் தடை.

**Draggle,** *v.* தரையில் இழுத்து அழுக்காக்கு அல்லது ஈரமாக்கு.

**Dragnet,** *n.* இழுக்கப்பட வேண்டிய வலை; பரப்பி வைத்தகண்ணி.

**Dragoman,** *n.* (பிறமொழி யாளரிடையே) துணைசென்று வழிகாட்டுவோர்.

**Dragon,** *n.* வேதாளம்.

**Dragonfly,** *n.* தட்டாரப் பூச்சி.

**Dragoon,** *n.* துப்பாக்கி தாங்கிய குதிரை வீரன். *v.* வலுக் கட்டாயமாக வேலை செய்வி.

**Drain,** *v.* வடிகால் வகு; வற்றச் செய். *n.* வடிகால் சாக்கடை; செலவு இனம். *n. vbl. abs. com.* drainage, வடிகால் வசதி; சாக்கடை (வசதி); சாக்கடைத் திட்டம்; வடிகால் திட்டம்.

**Drake,** *n.* (fem duck) ஆண் வாத்து.

**Dram,** *n.* எடையளவுக் கூறு. (=drachm) முகத்தல் அளவுக் கூறு.

**Drama,** *n.* நாடகம்; நாடக இயல்புள்ள வாழ்க்கை நிகழ்ச்சி. *a.* dramatic, நாடகத்துக்குரிய; திடீரென நிகழ்கிற; உணர்ச்சி தூண்டுகிற. *n. pers.* dramatist நாடகாசிரியன். *v.* dramatize, நாடகமாக எழுது. *n.* dramaturgy, நாடகக்கலை, *n. pers.* dramaturgist.

**dramatis** personae, *n. pl.* நாடக உறுப்பினர்கள்.

**Drank,** *v. pt.* see drink.

**Drape,** *v.* துணியால் மூடு; *n.* draper, துணிக்கடைக்காரர்; அறுவை வணிகர். *n. abs. com.* Drapery, திரைச்சீலை; துணிச் சரக்கு; அறுவை வாணிகம்.

**Drastic,** *a.* தீவிரமான; துடைத்துத் தூர்க்கிற தீர்க்கமான; திடீரெனத் தீவிர நடவடிக்கை எடுக்கிற. *adv,* drastically, ஒட்டற வழுவின்றி.

**Draught,** *n.* (டிராஃவ்ட்) (draw) 1. (draft) பண உத்தரவுச் சீட்டு. 2. குடித்தல்; மடக்கு (ஒரு தடவை குடித்தல்). 3. கட்டுரை முதலிய வற்றின் முதல் படி. 4. (கப்பல்) நீரில் அமிழும் அளவு. 5. காற்றோட்டம்; காற்று அலை; காற்றின் ஒரு வீச்சு. (1) *n. pers.* Draughsma*n.* (pl. men) (see draftman) குறிப்புப் படம் திட்டம் முதலியன வரைபவர். (4) *a.* draughty.

**Draw,** *v.* (drew, drawn) இழு; படம் வரை; கவர்; குறிப்பெழுது; (வில்லை) வளை; (விளையாட்டுப் பந்தயம்) வெற்றி தோல்வி இன்றி முடிவாகு. *n.* ஒரு தடவை சீட்டுக் குலுக்கியெடுப்பு; (விளையாட்டு) வெற்றி தோல்வியற்று நிலை; தயக்க நிலை. *n.* see drawer. Drawing, draught, draft, comb.*n.* drawback, இடர்ப்பாடு; குறைபாடு குறை. *a.* drawbridge, (உயர்த்தித் தாழ்த்தும்படி அமைந்துள்ள) தூக்குப் பாலம்.

**Drawer,** *n.* (draw) இழுக்கத் தகுந்த அறைகளுள்ள பெட்டி; இழுக்கிறவன்; *pl.* குறுங்கால் சட்டை.

**Drawing,** *n.* (draw) இழுத்தல்; சீட்டுக் குலுக்கி எடுத்தல்; படம் வரைதல்; படம். *com. n.* drawing-room வீட்டில் விருந்தினரை வரவேற்கும் அறை; கூடம்.

**Drawl,** *v.* இழுத்துக்கோடிடு; நீட்டிக் கொண்டு போ; இழுத்துப் பேசு. *n.* இழுத்துப் பேசுதல்.

**Dray,** *n.* கட்டை வண்டிவகை.

**Dread,** *v.* அஞ்சு; கிலிகொள்; *n.* கிலி. *a.* அஞ்சத்தக்க. *a.* dreadful, கிலியூட்டுகிற.

**Dreadnought,** *n.* போர்க்கப்பல்; மழை காலத்தில் அணியத்தக்க தடித்த சட்டை.

**Dream,** *n.* கனவு *v.* (dreamt or dreamed) கனவுகாண்; வீண்

கற்பனை செய். *a.* dreamy, கனவு போன்ற; வீண் கற்பனையான; *adv.* dreamily *n.* dreaminess, *n. pers*.dreamer.

**Drear, dreary,** *a.* மகிழ்ச்சியற்ற; கிளர்ச்சியற்ற; சுவையற்ற; பாலை யான.

**Dredge,** *n.* சிப்பி வாரும் கருவி; *v.* தூர் எடு; தூர் வாரு; தூர்வை எடு. *n.* dredger.

**Dregs,** *n.* வண்டல்; மண்டி.

**Drench,** *v.* தோய்; நனை.

**Dress,** *v.* ஆடை அணி; ஒழுங்கு செய் (புண், காயம் முதலியவற் றைக்) கட்டு. *a.* dressy, ஆடைப் பற்றுள்ள *n. ag.* dresser. காயம்; புண் முதலியன கட்டுவதில் அறுவை மருத்துவருக்கு உதவி செய்வோர்; சமையலறையில் சமைத்த உணவுகளை வைக்கும் மேடை. *pr. p. n.* dressing, உடை; ஆடையை நனைக்கும் கஞ்சிப் பசை; புண்களுக்குக் கட்டும் துணி, மருந்து முதலியன; சாம்பர்; எரு.

**Drew,** *v. pt.see* draw.

**Dribble,** *v.* துளி துளியாகச் சொட்டு; வாயிலிருந்து வழி.

**Driblet,** *n.* சிறு துளி.

**Dried, Drier,** *see* dry.

**Drift,** *n.* (காற்று, பனி, நீர்ப்) போக்கு; இயற்கை ஓட்டம்; (வாசகம், நூற் பகுதி) பொருள் போக்கு; திசை; குறியிலக்கு; சொற் குறிப்பு; உட்கருத்து; போக்கில் ஒதுக்கப் பட்ட பொருள்; சவறு செத்தை; ஓட்டத்தால் இழுக்கப் படல்; சுரங்கவழி, *v.* இழுத்துச் செல்லப் படு; வண்டலாகத் திரள். *comb. n.* drift-wood. (நீரில்மிதந்து வந்த) சருகு விறகு; மிதவைக் கட்டை.

**Drill,** *v.* துளை செய்; வரிசையாக விதையிடு; பயிற்றுவித்துப் பழக்கு; பயிற்சி அளி. *n.* துளையிடும் கருவி; (துரப்பணம்) பயிற்சி; முரட்டுத் துணிவகை.

**Drill master,** *v.* உடற் பயிற்சி ஆசிரியர்.

**Drink,** *v.* (drank,drunk, or drunken) குடி, *n.* குடிவகை, குடிக்கும் நீர் முதலியன; குடிமானம். *a.* drinkable.

**Drip,** *v.* சொட்டு *n.* துளித் துளியாகச் சொட்டல்.

**Drive,** *v.* (drove, driven) ஓட்டு; செலுத்து; ஏறிச்செல். *n.* ஊர்தி செல்லல்; வழிப்பாதை, *see* driver.

**Drivel,** *n.* சாளைவாய்; பிதற்றல், *v.* (be) சாளை வாய் வழியச்செய்; பிதற்று. *n. pers,* drivel(1)er.

**Driver,** *n.* வண்டியோட்டி; வலவன்.

**Drizzle,** *v.* தூறலிடு; தூறு. *n.* தூறல்.

**Droll,** *a.* நகைக்கத் தகுந்த; வேடிக்கையான; கோமாளித் தனமான. *n. pers.* droller, கோமாளி. *n. abs,* drollery விகடம்.

**Dromedary,** *n.* ஒற்றைத் திமில் உள்ள (அரபி) ஒட்டகம்.

**Drone,** *n.* ஆண் தேனீ, சோம் பேறித் தேனீ. சோம்பேறி; இரைச்சல். *v.* இரைச்சலிடு.

**Droop,** *v.* குனி, வாடி வதங்கு; சோர்வடை. *n.* சோர்ந்த தோற்றம்.

**Drop,** *n.* நீர்த்துளி; மருந்துத்துளி; துளிமருந்து; சிறிது குடிதேறல்; (திரை) விழுதல். *v.* துளிகளாக விழு; நிலத்தில் விழு; கீழேபோடு; கைவிடு; விட்டுவிடு; விழவிடு.

**Dropsy,** *n.* உடல்வீக்கம்; நீர்க் கோவை; ஊதுநோய்.

**Dross,** *n.* துரு; மாசு; களிம்பு; மண்டி.

**Drought, drouth,** *n.* வறட்சி, கருப்பு; பஞ்சம்.

**Drove,** *n.* மந்தை (யாகச் செல்லல்.). *n. pers.* drover, மாட்டுமந்தை ஓட்டுபவர்; மாட்டு வணிகர்.

**Drown,** *v.* மூழ்கடி; நீரில் அமுக்கி இறக்கச் செய்; அமுக்கு; கீழ்ப் படுத்து; (*pass.* bedrowned, மூழ்கி இற; மறக்கப்படு; அழிந்து போ).

**Drowse,** *v.* குறைத் தூக்கமாயிரு; சோம்பலாயிரு. *n.* அரைகுறைத் தூக்க நிலை. *a.* drowsy. *n.* drowsiness.

**Drub,** *v.* தடியால் அடி; குத்து. *n.* drubbling நன்கு அடித்தல்.

**Drudge,** *v.* ஊழியவேலைசெய். *n.* ஊழியவேலை செய்வோன் *n.* drudgery.

**Drug,** *n.* மருந்துச் சரக்கு; தேவைப்படாச் சரக்கு. *v.* மருந்திடு; மருந்திட்டுக் கொல். *n. ag. pers.* druggist, *(comb.) n.* drugstore, மருந்துக்கடை.

**Druid,** *n.* (பண்டைப் பிரிட்டானியர்) மதகுரு.

**Dry,** *a.* உலர்ந்த; நீர்வேட்கைமிக்க; சாரமற்ற; சுவைத்திறமற்ற. *v.* (dried) உலர்த்து. *n.* dryness, comb. *n.* dry land., புன் செய்; dry zone, வறட்சி மண்டலம்.

**Dryad,** *n.* வன தெய்வம்.

**Duad,** *n.* இரட்டை.

**Dual,** *a.* இருமையான. *n.* இருமை எண்; இருமை. *n. abs.* duality, இருமை. dualism, இருபொருள் வாதம்.

**Dub,** *n.* வீரரெனப் பட்டங்கட்டு,; பெயரிடு; பூசு.

**Dubious,** *n.* ஐயுறவான; உறுதி யற்ற. *n.* dubiousness. *n.* dubiety, *a.* dubitable, (X indubitable).

**Ducal,** *adj.* கோமகனுக்குரிய.

**Ducat,** *n.* பழம்பொற் காசு.

*duce, n.* தலைவன்.

**Duchess,** *n. see* duke.

**Duchy,** *n.* (duke) கோமகன் பட்டம்; கோமகன் ஆட்சிப் பகுதி.

**Duck,** *see* drake, பெண்வாத்து; அருமையுடையார். *v.* மூழ்கு; தலையைத் தாழ்த்து. *n. dim.* duckling, வாத்துக் குஞ்சு.

**Duct,** *n.* குழாய்; கால்வாய்; நாளம்.

**Ductile,** *a.* கம்பியாக இழுக்கக் கூடிய. *n.* ductility. ஒசிவு; மசிவு.

**Dud,** *n.* வெடிக்காத குண்டு முழுத் தோல்வி.

**Dudgeon,** *n.* சினம்; பகைமை உணர்ச்சி.

**Due,** *a.* செலுத்தக் கடமைப் பட்டுள்ள; நிகழவேண்டிய; தகுதி யான. *n.* உரிமை; ( *(pl.)* கடன்.

**Duel,** *n.* (நேரிருவர்) மற்போர்; கைச்சண்டை. *v.* (இருவருள்) கைச்சண்டை செய். *n. pers.* duellist.

**Duet,** *n.* இருவர் பாடுதற் குரிய பாட்டு; இருவர் குரல் பாட்டு; எதிர் வரிப்பாட்டு.

**Duff,** *n.* கொழுக்கட்டை, மக்கிய இலை.

**Duffer,** *n.* மட்டச் சரக்கு வாணிகர்; தெரு வாணிகர்.

**Dug,** 1. *see* dig. 2. *n.* விலங்கு களின் பால்மடி.

**Dugout,** *n.* மரக்கட்டையைக் குடைந்து அமைத்த தோணி; குடையப்பட்ட குகை; பாதுகாப்பு நில அகழ்.

**Duke,** *n.* (*fem.* duchess.) கோமகன். *n. abs. com.* duke -dom *see* duchy.

**Dulcet,** *a.* இனிய; மெல் இனிமை வாய்ந்த.

**Dulcimer,** *n.* தந்திகளுள்ள இசைக் கருவி வகை.

**Dull,** *a.* கூரில்லாத; எழுச்சியற்ற; ஒளியற்ற; மடத்தனமான. *v.* மங்கலாக்கு; மழுங்கலாக்கு; முட்டாளாக்கு. *n.* dulness, *n. pers.* dullard.

**Duly,** *adv.* நேராக; தகுதியாக.

**Dumb,** *a.* ஊமையான; பேசாத.

**Dumb-bells,** *n.* உடற்பயிற்சிக் கருவி வகை; 'வன்பிடி'.

**Dumbfound,** *v.* திகைப்பினால் ஊமையாகு.

**Dumbshow,** *n.* ஊமைக் கூத்து; கதைக்களி போன்ற கூத்து.

**Dumdum,** *v.* ஒருவகைத் துப்பாக்கிக் குண்டு.

**Dummy,** *n.* பொம்மை உரு; பெயரளவுக்குக் காரியஞ் செய் பவன்; முட்டாள்; பொய்யுருவம்.

**Dump,** *n.* கடைக் கருவிகள் சேமிக்குமிடம்; பொத்தென்று விழுதல். *v.* குவியலாகப் போடு; மட்டச் சரக்கைத் தேக்கு.

**Dumpling,** *n.* கொழுக்கட்டை.

**Dumps,** *n. (pl.)* எழுச்சிக் குறைவு.

**Dumpy,** *a.* தடித்துக்குறுகிய.

**Dunce,** *n.* அறிவு மட்டமானவன்; மட்டி; மடையன்; 'மண்டு'.

**Dune,** *n.* மணற்குன்று; தேரி.

**Dung,** *n.* சாணம். *v.* (நிலத்திற்கு) எருவிடு.

**Dungeon, donjon,** *n.* பாது காப்பான அறை; நிலவறைச் சிறை; (அணிவழக்கு) காற் றோட்டமற்ற இடம்; இருட்டறை; இறுக்கமான இடம்; சிறைக் கிடங்கு. *v.* சிறைப்படுத்து.

**Dunk,** *v.* அமிழ்த்து; தோய்.

**Dunnage,** *n.* மூட்டை.

**Duodecimal,** *a.* (எண்மானம்) பன்னிரண்டின் பகுதியான; பன்னிரண்டின் கூறான.

**Duodecimo,** *n.* பன்னிரண்டாக மடிக்கப்பட்ட தாள் மடிப்பு.

**Duodenum,** *n.* சிறுகுடல்.

**Dupe,** *n.* ஏமாற்றப்பட்டவன். *v.* ஏமாற்று; மோசஞ் செய்.

**Duplex,** *a.* இரட்டையான; இரண்டு இசைந்துள்ள.

**Duplicate,** *a.* இருமடங்கான. *n.* பகர்ப்பு; படி *n.*இரண்டுபடுத்து. இருமடியாக்கு; இருபடி எடு; பகர்த்து; மாதிரி உருவம் செய். *n.* duplication, *n. ag. impers.* duplicator, பகர்ப்புப் பொறி. *comb. n.* duplicating paper, படித் தாள்; இளந்தாள்; மென் தாள்.

**Duplicity,** *n.* வஞ்சகம்; இரண்டகம்.

**Durable,** *a.* நீடித்து உழைக்கக் கூடிய. *n.* durability.

**Durance,** *n.* சிறைப்பட்டிருத்தல்.

**Duration,** *n.* நிகழ்ச்சிக் காலம்; நேரக்கூறு; ஆகும் வேளை; நேரம்; காலத்தொடர்ச்சி.

**Durbar,** *n.* (இந்திய வழக்கு) கொலுவிருக்கை.

**Duress,** *n.* சிறை செய்தல்; வலுக் கட்டாயம்.

**During,** *prep.* காலத்திடையே; நடைபெறும் காலத்தில்; காலத் தினுள்; தறுவாயில்.

**Durst,** *v. see* dare.

**Dusk,** *n.* அந்திவேளை; அரை யிருள். *a.* dusky, அரை யிரு ளான; கருநிற. *n.* duskiness.

**Dust,** *n.* தூசி; புழுதி; தூள். *v.* தூசியை நீக்கு; தூசியால் மூடு. *a.* dusty, *n. ag. impers,* duster, தூசியைத் துடைக்கும் துணி; துடைப்பத் துணி.

**Dutch,** *a.* ஹாலந்து நாட்டு. ஹாலந்து நாட்டார்.

**Duty,** *n.* கடமை; வரி; தீர்வை; அலுவல்; வேலை. *a.* duteous, dutiful, கடமையை உணர்ந்த; பணிவான; இணக்கமான; பொறுப் புடைய. *a.* dutiable, தீர்வை சுமத்தக்கூடிய.

**Dwarf,** *n.* குள்ளன்; குள்ளமானது. *v.* குள்ளமாக்கு; வளராமல் செய். *a.* dwarfish.

**Dwell,** *v.* (dwelt) குடியிரு; இருப்பிடமாகக் கொள். *n.* dwelling, இருப்பிடம்; வீடு.

**Dwindle,** *v.* சிறிதாகு; சுருங்கு.

**Dyad,** *n.* இரட்டை.

**Dyarchy,** *n. see* diarchy.

**Dye,** *n.* சாயம்; வண்ணம். *v.* சாயமிடு; வண்ணந்தீட்டு. *n. pers.* dyer, *pr. p., n.* dyeing. (for dying *see* die) சாயந் தோய்த்தல்; சாயத்தொழில்.

**Dying,** *v. pr.p. see* die.

**Dyke,** *n. see* dike.

**Dynamic,** *a.* விரைவு இயக்கம் சார்ந்த; இயக்க ஆற்றல் சார்ந்த; விரைவாக மாறுபட்டுக் கொண்டிருக்கும் இயல்புடைய; விசைத்திறம் வாய்ந்த; ஊக்கு விசையுடைய. *n.* dynamics, இயக்க நூல். (இயங்கியலின் இயக்கத்துறை) *a.* dynamical, *adv.* dynamically, *n. pers.* dynamist.

**Dynamite,** *n.* வெடி மருந்து. *v.* வெடி மருந்தினால் தகர்த்தெறி;

சுரங்கம் வை. *n. ag. pers.* dynamiter, புரட்சிக்காரர்; அழிவுப் புரட்சியாளர்.

**Dynamo,** *n.* மின் சுழற்சிப் பொறி; மின்னாற்றலுண்டுபண்ணும் பொறி; மின் ஆக்கப்பொறி; மின்னாக்கி.

**Dynamometer,** n விசையை அளக்கும் கருவி; விசை அளவைக் கருவி.

**Dynasty,** *n.* அரச மரபு; கால்வழி; மரபு வழி. *a.* dynastic. < *n.* dynast. மரபினர்.

**Dyne,** *n.* விசையின் அலகு; ஆற்றல் அளவைக் கூறு.

**Dysentery,** *n.* வயிற்றுக் கடுப்பு; அளைச்சல்.

**Dyspepsia,** *n.* வயிற்றுமந்தம். *a., n.* dyseptic, வயிற்று மந்தமுள்ள (நோயாளி).

# E

**Each,** *a.* ஒவ்வொரு; தனித்தனி. *pers. n.* ஒவ்வொருவரும்; ஒவ்வொன்றும். *adv.* ஒவ்வொருவருக்கும்; ஒவ்வொன்றுக்கும்.

**Eager,** *a.* ஆவலுள்ள. *n.* eagerness.

**Eagle,** *n.* கழுகு. *n. dim.* eaglet, கழுகுக்குஞ்சு.

**Ear,** *n.* செவி; காது; கேள்விப்புலன்; கவனம்; இசை அறிவு; கூலமணிக் கதிர்.

**Earl,** *n.* கோமான்; *(fem.)* countess., *n. abs. com.* earldom, கோமான் நிலை; கோமான் ஆட்சிப் பகுதி.

**Early,** *adv.* (earlier, earliest) புலர்காலையில்; வைகறையில்; விடியிற் காலத்தில்; முன்பே; முன் கூட்டி. *a.* முன்; முந்திய.

**Earmark,** v (கால்நடையின் காதில் இடும்) அடையாளக் குறியிடு; குறிப்பிட்ட காரியத்திற்கெனக் குறித்து வை; குறித்து ஒதுக்கு. *n.* அடையாளக்குறி. *pp. a.* ear marked, குறித்தொதுக்கப்பட்ட.

**Earn,** *v.* ஈட்டு; உழைத்துப் பெறு. *n.* earnings, *(pl.)* உழைத்துப் பெற்ற பொருள்; ஈட்டுப்பொருள்; வருவாய்; சம்பளம்.

**Earnest,** *a.* மனமார்ந்த; அக்கறையுள்ள. *n.* உண்மை; அக்கறைச் சான்று; அச்சாரம். *n.* earnest ness, *adv.* earnestly, *comb. n.* earnest money, நம்பிக்கைக் குரிய முன்பணம்; அச்சாரம்.

**Earth,** *n.* மண்; நிலம்; நில உலகம். *a.* earthern, மண்ணாலான. *a.* earthly, நில உலகுக்குரிய; உலகியற்பற்றுடைய; காரியவாதியான; காரியக்குட்டியான.

**Earthernware,** *n.* மண்பாண்டத் தொகுதி; மண்பாண்டங்கள்.

**Earthquake,** *n.* நில அதிர்ச்சி; நிலநடுக்கம்.

**Earwax,** *n.* காதுக் குறும்பி.

**Ease,** *n.* தளர்வு, ஓய்வு. *v.* கண்டிப்புக் குறை; ஓய்வுகொடு. *a.* easy, கடுமையற்ற எளிதான; ஓய்வான; கவலையற்ற. *adv.* easily. *n.* easiness.

**Easel,** *n.* சட்டம்; நிலைச் சட்டம்; சார்சட்டம்.

**Easement,** *n.* (gen. *pl.*) துய்ப் புரிமை; துய்ப்புரிமைக் குரிய உடைமை(கள்).

**East,** *n.* கிழக்கு; கிழக்குத் திசை (உலகு). *a.* கிழக்குச் சார்ந்த. *adv.* கிழக்குத் திசையில். *a.* eastern, கீழ்த்திசைக்குரிய. *sup-deg,* easternmost, *n. pers.* easterner. a easterly, கிழக்குத் திசை நோக்கிய; கிழக்கிலிருந்து வருகிற; *see* eastward.

**Easter,** *n.* ஏசுநாதர் உயிர்த் தொழுந்த நாள் விழா.

**Eastward,** *a.* கிழக்கு நோக்கிய. *adv.* eastwards.

**Easy,** *ag. see* ease.

**Easychair,** *n.* சாய்மாற்காலி; சாய்கட்டில்; சாய்விருக்கை; சாய் பள்ளி; சார்பாயல்.

**Easygoing,** *a.* கண்டிப்பில்லாத; சோம்பல் வாழ்வுடைய; மெத்தன மான.

**Eat,** *v.* (ate, eaten) தின்; உண்; (காரங்கள் etc) கரம்பு; அரித்துத் தின்; அழி; *a.* eatable, தின்னக் கூடிய; உண்ணத்தக்க.

*eau de cologne, n.* (கொலோனி லுள்ள மருந்து) ஊற்றுநீர்.

**Eaves,** *n.* வீட்டிறைப்பு. *v.* eaves drop, மறை ஒற்றுக்கேள். *n. ag.* eavesdropper.

**Ebb,** *v.* தாழ்; குறை; தணி; (வேலி) இறங்கு; கடல் எழுச்சியடங்கு. *n.* தாழ்தல்; கடல் பொங்குதலின் இறக்கம்.

**Ebonite,** *n.* 'காரகம்', தொய்வகம் கலந்த கந்தகக் கலவை.

**Ebony,** *n.* கருங்காலி (மரம்).

**Ebullient,** *a.* கொதிக்கிற; உணர்ச்சி மிகுந்துள்ள. *n.* ebullition.

**Eccentric,** *a.* நடுவிலிருந்து விலகிய; பொதுப்பண்பு மீறிய; தனிச்சிறப்புடைய; பித்துக் கொள்ளியான. *v.* பித்துக்கொள். *n.* eccentricity.

**Ecclesiastic,** *n.* சமயகுரு, *a.* ecclesiastical, சமயம் சார்ந்த; கோவிலகம்; சார்ந்த திருச்சபை சார்ந்த; திருக்கூட்டம் சார்ந்த.

**Echo,** *n.* (*pl.* echoes) எதிரொலி *v.* எதிரொலி சொன்னதைத் திரும்பச் சொல்; ஆமாம்போடு.

*eclat n.* (எக்ளா) ஆரவாரம்; மகிழ்ச்சியார்ப்பரிப்பு; குறிப்பிடத் தக்க வெற்றி.

**Eclectic,** *n.* பிறர் நற்பண்பு தொகுத்து மேற்கொள்பவர். *a.* நற்பண்புத் திரட்டான; நற்பண்புத் திரள் உடைய; நற்பண்பு பிரித் தெடுத்துக் கூட்டுகிற.

**Eclipse,** *n.* கோள்மறைப்பு; ஒளி மறைப்பு; மறைப்பு; மறைவு. *a.* (ஒரு பொருளை) மறை; ஒளி மறையச் செய்; (போட்டியில்) விஞ்சு.

**Ecliptic,** *n.* ஞாயிற்றின் வெளித் தோற்றப் பாதை; கோள்நெறி.

**Eclogue,** *n.* நாட்டுப்புறப் பாடல்.

**Economy,** *n.* வரவுசெலவுத் துறை; சிக்கனம். *n.* economics, பொருளியல் நூல்; நாட்டுப்

பொருளியல். *a.* economic(a)l, சிக்கனமான; ஆதாயவிகித மிகுதியுள்ள; விகித ஆதாயமுள்ள; பொருளியல் சார்ந்த; பொருள் நூல் சார்ந்த. *n. pers.* economist, *v.* economize, சிக்கனமாகச் செலவழி; செலவைக் குறை.

**Ecstasy,** *n.* பெருமகிழ்ச்சி; கழி பேருவகை. *a.* ecstatic. *adv.* ecstatically.

**Eczema,** *n.* படை நோய்; பற்று.

**Eddy,** *n.* சுழல்; சுழி. *v.* சுழியிடு; சுழல்.

**Edge,** *n.* அருகு; விளிம்பு. *v.* கூராக்கு; வேலிகட்டு; பக்கமாக நகர்ந்து செல். *n.* edging விளிம்பு. *(comb.) adv, a.* edgeways, edgewise, விளிம்பு நோக்கி.

**Edible,** *a., n.* உண்ணத் தக்க (பொருள்.)

**Edict,** *n.* கட்டளைப் பட்டியல்; திருவிளம்பரம்.

**Edifice,** *n.* மாளிகை; பெரிய கட்டடம் (அல்லது அமைப்பு).

**Edify,** *v.* அறிவூட்டு; சீர்திருத்து; ஒழுக்கம் பயிற்று. *n.* edification.

**Edit,** *v.* பதிப்பி. *n.* edition. பதிப்பு *(vbl)* பதிப்பித்தல். *n. pers.* editor, பதிப்பாளர்; பதிப்பாசிரியர். *a.* editorial, பதிப்புக்குரிய; பதிப்பாண்மை சார்ந்த. பதிப்பாசிரியர் சார்ந்த. *n.* தலையங்கம் *n. abs.* editorship, பதிப்பாண்மை; பதிப்பாசிரியர் பணிநிலை.

**Educate,** *v.* கல்வி கற்பி; பயிற்சியளி. *n.* education, கல்வி; பயிற்சி அளித்தல். *a.* educational, கல்வி சார்ந்த; கல்விமுறை சார்ந்த. *n. pers,* educator, கற்பிப்பவர்; போதகர். *a.* educative, அறிவு தருகிற; படிப்பினை அளிக்கிற.

**Eel,** *n.* விலாங்கு (மீன்)

**Eerie, eary,** *a.* இயல்புக்கு மாறான; அச்சந்தருகிற; துணுக்குறச் செய்யக்கூடிய.

**Efface,** *v.* துடைத்தழி; இல்லாமற் செய்; அழி. *n.* effacement.

**Effect,** *n.* விளைவு; பயன்; *(pl.)* உடைமைகள். *v.* நிறைவேற்று; நிகழச்செய்; செயல்படுத்து; விளைவுண்டாக்கு. *a.* effective, பயன் விளையத்தக்க; பயனுறுதியுடைய. *a.* effectual, விரும்பிய பயன் விளைகிற. *v.* effectuate, < *n.* effectuation

**Effeminate,** *a.* பெண்தன்மையுள்ள; ஆண்மையில்லாத; கோழைத் தன்மையுடைய; வலிவுறுதியற்ற. *n.* effminacy.

**Efferent,** *a.* வெளி நோக்கிய; புறநாடி ஓடுகிற.

**Effervesce,** *v.* (குமிழிகளோடு) பொங்கு; நுரைத்துப் பொங்கு. *n.* effervescence.

**Efficacious,** *a.* விரும்பிய பலனை யளிக்கத்தக்க; பயனிறையுடைய. *n.* efficacy.

**Efficient,** *a.* திறமையுள்ள; செயல் திட்பமுடைய; தேர்ந்த; தேர்ச்சியுடைய; நிறைமுதிர்வுடைய; நிறைபயனுடைய; திறநிறை வுடைய; பயன் தரத்தக்க. *n.* efficiency.

**Effigy,** *n.* பொம்மை; ஒருவரைப் போன்ற உருவம்; படம்.

**Effloresce,** *v.* பூத்துக்குலுங்கு; பூங்கொத்திடு; பொடியாக உதிர். *n.* efflorescence, *a.* efflorescent.

**Effluvium,** *n.* மணம்; வாடை.

**Efflux,** *n.* புறப்போக்கு; வெளியொழுக்கு. *a. n.* effluent, *a.* பெருகி ஓடுகிற. *n.* கிளை நதி. *n. abs.* effluence.

**Effort,** *n.* முயற்சி. *a.* effortless, முயற்சியில்லாத.

**Effrontery,** *n.* துடுக்குப் பேச்சு; நாணமிலா நடத்தை.

**Effulgent,** *a.* ஒளிமயமான. *n.* effulgence.

**Effuse,** *v.* வெளிப்படு; கொட்டு; பொங்கு. *n. vbl. com.* effusion, கொட்டல்; கொட்டப்படுவது. *a.* effusive.

**Eft,** *n.* பாம்பரணை.

**Eftsoon(s),** *adv.* உடனே.

**Egad,** *int.* கடவுளாணையாய்.

**Egg,** 1. *n.* முட்டை. 2. *v.* தூண்டு.

**Eglantine,** *n.* செடி கொடி வகை.

**Ego,** *n.* தான் என்னும் உணர்ச்சி; தன்முனைப்பு.

**Egocentric,** *a.* ஆணவ முடைய; தன்முனைப்புடைய; தன்காரியக் குட்டியான.

**Egoism,** *n.* தானெனும் எண்ணம்.

**Egotism,** *n.* தன்னலம்; தற்பெருமை. *n. pers.* egotist. *a.* egotistic(al).

**Egregious,** *a.* குறிப்பிடத்தக்க பெருமையுள்ள; துணுக்குறச் செய்கிற.

**Egress,** *n.* வெளிப்போதல்; வெளியேறும் வழி.

**Egyptology,** *n.* எகிப்து நாட்டுப் பழமையாராய்ச்சி.

**Eh,** *int.* அப்படியா!

**Eidolon,** *n.* உருவம்; தெய்வ உரு; ஆவி உரு; பேய்த் தோற்றம்.

**Eight,** *a., n.* எட்டு. *a.* eighth, எட்டாவது; அரைக்கால். *a. n.* eighteen பதினெட்டு *a. n.* eighteenth, பதினெட்டாவது; பதினெட்டிலொன்று. *a.* eighty. எண்பது. *a. n.* eightieth, எண்பதாவது; எண்பதிலொன்று.

**Either,** *a. pron adv. conj.* (இரண்டில்) ஒன்று; இரண்டும்.

**Ejaculate,** *v.* அறை; சாற்று; கழறு; திடீரென்று கூச்சலிடு. *n.* ejaculation. *a.* ejaculatory.

**Eject,** *v.* வெளிப்படுத்து; தள்ளு. *n.* வெளியேற்று; உரிமை புறமாக்கு. *n.* 1. ejection, ejectment.

**Eke,** *v.* சேர்; கூட்டு. *adv.* கூட.

**Elaborate,** *v.* விரிவுபடுத்து; விளக்க விரிவுரையாற்று; நுணுக்க விரிவு விளக்கங்கொடு; நுணுக்க விரிவுடைய. *n. (vbl.)* elaboration; eloborateness.

***elan.*** *n.* எழுச்சி துணிவு.

**Elapse,** *v.* (காலம்) கழி; (*conn.* < lapse.)

**Elastic,** *a.* நீண்டு சுருங்கும் தன்மையுடைய; நீட்டிப்பாற்றலுடைய; (இயல்நூல்) தன்னிலைக்கு மீளும் ஆற்றலுடைய. *n.* elasticity.

**Elate,** *v.* தற்பெருமைகொள்; இறும்பூதடை; மகிழ்ச்சியடை. *a.* எழுச்சியுடைய; தற்பெருமை யுடைய. *n.* elation.

**Elbow,** *n.* முழங்கை; கைமுட்டு. *v.* (முழங்கையால்) இடித்துத் தள்ளு.

**Elder,** *a.* (*comp.* degree; no positive, *sup.* degree, eldest, தலைமூத்த) (வயதில்) மூத்த. *n.* (வயதில்) மூத்தவர்; மூத்தோர்; நகரமூப்பர். *a.* elderly.

**El Dorado,** *n.* பொன்னுலகு; பொன்னாடு.

**Elect,** *v.* விரும்பித் தேர்; பொறுக்கி யெடு; தேர்ந்தெடு. *a.* பொறுக்கி யெடுத்த. *a. n.* தேர்ந் தெடுத்த (வர்) (சமூகம். உறவினர், அரசியல், கடவுளால்) தேர்ந்து குறிக்கப் பட்ட. (*cf.* bride elect, president elect, etc) *n.* election, தேர்தல், விருப்பத் தேர். *v.* electioneer, தேர்தல் போட்டி நடத்து; *n. pers.* elector, மொழி யுரிமையாளர்; தேர்வாளர்; ஜெர்மன் பெருமகன் (பேரரசுத் தேர்வுரிமை யாளர்). *a.* elective, (தேர்வுரிமை) சார்ந்த. *a.* electoral, தேர்வாளர் சார்ந்த; தேர்தல் சார்ந்த; தேர் வாண்மைக் குரிய. *n. com.* electorate, தேர்தல் தொகுதி.

**Electric, electrical,** *a.* மின் வலி சார்ந்த; மின் வலியுடைய. *n. abs.* electricity, மின் வலி, *n. pers.* electrician. மின் துறைஞன். *v.* electrify, மின் வலியூட்டு; அதிர்வுறச் செய்; மின் இணைப்பு ஏற்பாடு செய். *n.* electrification, மின் இணைப்பு; மின்னூட்டம்; மின்னிணைப்பு; அமைப்பு.

**Electrocution,** *n.* மின் பாய்வு. மின்னேறு; மின் அதிர்ச்சியால் கொல்லல் > *v.* electrocute, *comb. n.* electrocution chamber, மின் பாய்ச்சறை.

**Electrolysis,** *n.* மின் பகுப்பு; மின் வலியால் சேர்மானம் பிரித்தல். *v.* electrolyse, etc. *n.* electrolyte, மின் வலியால் பிரிப்புற்ற பொருள்.

**Electromagnet,** *n.* மின் காந்தம்.

**Electrometer,** *n.* மின்னளவைக் கருவி.

**Electron,** *n.* மின்னணு; அணு வினுட்பட்ட நுண்மம்; அணு மையஞ்சூழ் நுண்மம்.

**Electroplate,** *v.* மின்வலு உதவியால் உலோக முலாம் பூசு.

**Elegant,** *a.* நேர்த்தியான; நாகரிக மான; அழகிய. *n.* elegance.

**Elegy,** *n.* இரங்கற்பா. *a.* elegiac, *n.* elegist.

**Element,** *n.* தனிப்பொருள்; முதற் பொருள் (பூதம்); வாழ்க்கைச் சூழல்; தாயக மூலம்; இயற்கைச் சூழல்; மூலமுதற் பொருள். *(pl)* கருவூலம்; கருப்பொருள்; மூலக் கூறுகள்; மூலபாடம். *a.* elemental, இயற்கையின் மூலப்பொருளின் ஆற்றுலுடைய; மூலப்பொருள் சார்ந்த. *a.* elementary, தொடக்க நிலையான; முதற் படியான.

**Elephant,** *n.* யானை. *a.* elephantine, பாரிய; செப்பமற்ற.

**Elephantiasis,** *n.* யானைக் கால் நோய்.

**Elevate,** *v.* உயர்த்து; (மனத்தை) மேன்மையுறச் செய். *n.* elevation, உயர்த்துதல் உயரம்; மேடு. *n. ag. impers.* elevator, தூக்கும் கருவி; மாடி எறி இயங்க உதவும் ‘மின் ஏற்றுப்பொறி’. *p. a.* elevated, உயர்ந்த மேடான.

**Eleven,** *n.* பதினொன்று. *a.* பதினொரு. *n. a.* eleventh, பதினொன்றாவது; பதினொன்றி லொன்று.

**Elf,** *n.* (*pl.* elves) கூளி; குறுந்தெய்வம் குறளி. *a.* elfish, elvish, elfin.

**Elicit,** *v.* சிறிது சிறிதாக வெளிக் கொணர். *n.* elicitation.

**Elide,** *v.* எழுத்தைக் குறை; இடைக் குறை. *n.* elision, குறைத்து ஒலித்தல்; மறைவுக்குறி(’)

**Eligible,** *a.* உரிமையுடைய; தகுதியுடைய. *n.* eligibility.

**Eliminate,** *v.* கழி; (வெளியே) தள்ளு; தள்ளிக் கழி. *n.* elimination, நீக்கம்; விலக்கு; தள்ளுபடி; அகற்றல்.

*elite*, *n.* சிறந்த பகுதி; பொறுக்கி யெடுத்த பகுதி.

**Elixir,** *n.* சிந்தாமணி; சஞ்சீவி; அமிழ்தம்.

**Elk,** *n.* மான் வகை.

**Ell,** *n.* நீட்டலளவைக் கூறு. (45 அங்.)

**Ellipse,** *n.* நீள்வட்ட வடிவம்; வரைமைய வட்டம்; (நேர் கோட்டிற்குச் சம தொலைவான வட்டம்) *a. see* elliptic. 1.

**Ellipsis,** *n.* சொற்கள்; தொக்கு நிற்றல்; அவாய் நிலை. *a. see* elliptic, 2.

**Elliptic,** *a.* 1. (ellipse) நீள்வட்ட மான. 2 (ellipsis) அவாய் நிலையான.

**Elm,** *n.* மரவகை.

**Elocution,** *n.* சொற்பொழிவுக் கலை; பெருஞ்சொல் திறம். *n. pers.* elocutionist.

**Elongate,** *v.* நீளச்செய். *n.* elongation.

**Elope,** *v.* (திருட்டுத்தனமாக) ஓடிப்போ; காதலரை உடன் கொண்டு போ; காதலருடன் போ. elopement, (காதலர்) உடன் போக்கு.

**Eloquence,** *n.* சொல்வன்மை; சொற் பொழிவுத் திறன். *a.* eloquent, சொற்றிறமிக்க; உணர்ச்சி முனைப்புடைய.

**Else,** *adv.* தவிர; மேலும். *adv.* Elsewhere, வேறோரிடத்தில்.

**Elucidate,** *v.* விளக்கிச்சொல். *n.* elucidation.

**Elude,** *v.* அகப்படாமல் தப்பு; நழுவத் தப்பு. *a.* elusive. *n.* elusion, *a.* elusory.

**Elysiam,** *n.* இன்ப உலகம்; துறக்கம். *a.* ellysian.

**Em,** *n.* அச்சுத்தொழிலில் ஒரு வரியின் நீளத்தை அளக்கும் (‘m’ என்னும் எழுத்தின் நீளம் குறிக்கும்) அலகு; அச்சு எழுத்துக் காம்பின் நீள அளவைக் கூறு (1/6 அங்குலம், 2. ‘en’ *see* en.

**Emaciate,** *v.* மெலியச் செய்; சத்துக்குறை. *n.* emaciation.

**Emanate,** *v.* (மற்றொன்றிலிருந்து) வெளிப்படு; தோன்று. *n.* emanation.

**Emancipate,** *v.* விடுதலைசெய். (அடிமைத் தனத்திலிருந்து) விடுவி. *n.* emancipation.

**Emasculate,** *v.* ஆண்மைத் தனத்தைப் போக்கு. *n.* emasculation.

**Embalm,** *v.* நறுநெய் பூசு; நறுமணத் தைலம் கொண்டு பிணம் முதலியவற்றைக் கெடாமல் வை; பேணு; போற்று.

**Embank,** *v.* கரை கட்டு; அணை கட்டு. *n.* embankment, கரை கட்டல்; கரை.

**Embargo,** *n.* துறைமுகத்திலிருந்து கப்பல்கள் வெளிச்செல்லாமல் தடைசெய்தல்; வாணிகத் தடை.

**Embark,** *v.* கப்பலில் செல்; கப்பலில் ஏற்று; காரியத்தி லிறங்கு; புறப்படு. *n.* embarkation.

**Embarrass,** *v.* தொல்லை கொடு மலைக்கச் செய்; திக்குமுக்காடச் செய். *n.* embarrassment, தொல்லை கொடுத்தல்; தொல்லை; மலைப்பு.

**Embassy,** *n.* தூது; தூதர்; தூதுக்குழு; தூதர் பணி மனை; தூதுக்குழு அலுவலகம். *conn. see* ambassador.

**Embattle,** *v.* (வீடு முதலியவற்றை) அரண் செய்.

**Embed, imbed,** *v.* பதித்து வை.

**Embellish,** *v.* அணி செய்; அழகுபடுத்து. *n.* embellishment.

**Embers,** *n. (pl.)* தணல்; கனல்.

**Embezzle,** *v.* (பொருள், உடைமை) கையாடு; ஒதுக்கிப் பதுக்கு; கவர்ந்து கொள். *n.* embezzlement. *n. pers.* embezzler.

**Embitter,** *v.* வெறுக்கச்செய்; கசந்துபோகச் செய். *n.* embitterment.

**Emblazon,** *n.* குலவிருதுகளால் அணிசெய்; துலக்கமாக அணி செய். *n. vbl. abs.* emblazon ment, *n. abs*, emblazonry.

**Emblem,** *n.* சின்னம்; விருது அடையாளம். *a.* emblematic(al).

**Embody,** *v.* (கருத்தைச் சொற் களால்) வெளியிடு; உருவம் கொடு; உட்கொண்டிரு. *n.* embodiment, உரு; திருவுரு.

**Embolden,** *v.* துணிவூட்டு; ஊக்க மூட்டு.

*embonpoint, n.* கொழுத்திருத்தல்; உருட்சி.

**Embosom,** *v.* தழுவு; உட்கொண் டிரு.

**Emboss,** *v.* உருவங்கள் மேடாக வரும்படி செதுக்கு; முனைப் பியலாகச் செதுக்கு. *n.* embossment.

**Embowel,** *v.* (உடலிலிருந்து குடலை) வெளியே எடு.

**Embrace,** *v.* தழுவு; உட்கொண் டிரு; ஆர்வத்துடன் ஏற்றுக்கொள். *n.* அணைப்பு. ஆவித்தழுவல்.

**Embrasure,** *n.* வாயிற் சாய்வு; பலகணிச் சாய்வு; அரண்புழைச் சாய்வு; ஞாயில்.

**Embroider,** *v.* பின்னல் வேலை செய்; பூவேலைசெய்; அணிசெய். *n.* embroidery, பின்னல் வேலை; பூத்தையல் வேலை.

**Embroil,** *v.* குழப்பு (கலகத்தில்) சிக்கவை. *n.* embroilment.

**Embryo,** *n.* கரு; முதிராநிலை; *a.* embryonic, s. *n.* embryology, கருவளர்ச்சி நூல்.

**Emend,** *v.* பிழைகளை நீக்கு சரிபடிவம் மீட்டுக்கொணர்; பாடம்புதுக்கு. *n.* emendation. *n. pers.* emendator, *a.* emendatory.

**Emerald,** *n.* மரகதம்; பச்சைக்கல்.

**Emerge,** *v.* வெளிப்படு; திடீரென்று தோன்று. *n.* emergence. *a.* 1. emergent, *conn. n.* emergency, அவசரம்; திடீர்த்தேவை; நெருக்கடி (நிலை) > *n.* 2. emergent.

**Emeritus,** *a.* பணித்துறை யிலிருந்து விலகி ஓய்வு பெற்றுள்ள.

**Emery,** *n.* குருந்தக்கல்.

**Emetic,** *a., n.* வாந்தி யுண்டாக்குகிற (மருந்து)

**Emigrate,** *v.* குடிபுறஞ்செல்; குடிவெளியேறு. (x immigrate) *a., n. pers.* emigrant. *n.* emigration.

*emigre*, *n.* நாட்டைவிட்டு ஓடிவந்த துணையற்றோர்.

**Eminence** *n.* மேடு; மேன்மை; சிறப்பு. *a.* eminent, மேன்மை பொருந்திய.

**Emissary,** *n.* மறை தூதர்; தனிமுறைத் தூதர்.

**Emit,** *v.* வெளியே அனுப்பு; புறந்தள்ளு. *n.* emission, புறந்தள்ளுதல் புறங்கசிவு.

**Emmet,** *n.* எறும்பு வகை.

**Emolument,** *n.* உழைப்புக் கூலி; ஊதியம்.

**Emotion,** *n.* உணர்ச்சி; மன வெழுச்சி. *a.* emotional. s., *n.* emotionalism, மனவெழுச்சி வயப்பட்ட தன்மை (கோட்பாடு, முறை)

**Empanel, impanel,** *v.* பட்டிகையில் சேர்; குழாத்தில் சேர்; குழாம் அமை.

**Emperor,** *n.* (*fem.* empress) பேரரசர். *n.* emperorship. *conn. n. see* empire. *a. see* imperial.

**Emphasis,** *n.* அழுத்தம்; சொல்லழுத்தம். *v.* emphasize, வற்புறுத்து. *a.* emphatic(al). *adv.* emphatically.

**Empire,** *n.* பேரரசு. *n. pers. see* emperor, *a. see* imperial.

**Empiric,** *a., n.* செயலறிவு சார்ந்த; செயலாராய்ச்சித் திறமான. *s.a.* empirical. *n.* empiricism.

**Emplacement,** *n.* நிலைமை; பீரங்கி மேடை.

**Emplane,** *v.* வானூர்தியில் ஏறு.

**Employ,** *v.* வேலை கொடு; வழங்கு. *n.* பயனீடு; வேலை

யீடுபடுத்தல்; பணித்துறை. *n. ag.* employer, வேலை கொடுப்பவர்; பணிமுதல்வர். அமர்த்தாளர். *a.* employables, s.*n. pers.* employee, பணித்துறையாளர்; பணியில் அமர்த்தப்பட்டவர். *n. abs.* employment வேலையி லீடுபடுத்தல்; வேலைகொடுத்தல்; வேலை பணியிடம்.

**Emporium,** *n.* மளிகை: மூல பண்டாரம்; கொட்டாரம்; பண்டகசாலை.

**Empower,** *v.* ஆற்றலளி; உரிமை யாற்றல் கொடு உரிமை கொடு.

**Empress,** *(f) see* emperor.

**Emprise,** *n.* கடுமுயற்சி.

**Empty,** *a.* ஒன்றுமில்லாத; வெறுமையான. *v.* வெறுமை யாக்கு. (-into) கொட்டு. *n.* emptiness.

**Empyrean,** *n.* வானுலகம்; கடவுளுலகம். *a.* empyreal.

**Emu,** *n.* ஆஸ்திரேலியப் பறவை வகை.

**Emulate,** *v.* போட்டியிடு; பின் பற்றி நட. *n.* emulation. *a.* emulous.

**Emulsion,** *n.* பச்சைக்குழம்பு. *v.* emulsify.

**En,** *n.* அச்சுத்தொழில் அளவைக் கூறு, (அங்குலம் ½ em). *see* ‘em’.

**Enable,** *v.* இயலச் செய்; உதவியளி; ஆற்றல் கொடு.

**Enact,** *v.* சட்டமியற்று. *n.* enact -ment சட்டமியற்றல்; சட்டம்.

**Enamel,** *n.* மெருகு; *v.* மெருகிடு.

**Enamour,** *v.* மகிழ்வி; காதலைத் தூண்டு; கவர்ச்சியளி.

*enblolc, adv* மொத்தமாக.

**Encage,** *v.* கூட்டிலடை.

**Encamp,** *v.* கூடாரமடித்துத் தங்கு. *n.* encampment.

**Encase,** *v.* உறையில் போடு. *n.* encasement.

**Encash,** *v.* காசு பணமாக மாற்று.

**Enchant,** *v.* மந்திரத்தால் மயக்கு; மகிழ்வி. *n.* enchantment. *n. pers.* enchanter, *(fem.)* enchantress.

**Encircle,** *v.* வட்டமாகச் சூழ்.

**Enclave,** *n.* அயல் நாட்டினால் சூழப்பட்ட பகுதி.

**Enclose,** *v.* நாலாபக்கமும் சூழ்; வேலியால் அடை. *n.* enclosure, வேலி அடைப்பிட்ட மனை; அடைப்பு; தாள் கூடு; தாள் உறை; உள்ளடக்கம்; உள்ளடக்கப் பொருள்(கள்)

**Encomium,** *n.* புகழ்.

**Encompass,** *v.* சூழ்ந்து செல்; உட்கொண்டிரு; செயல் சூழ்; செயல் முறைக்குக் கொண்டுவர. *n.* encompassment.

**Encore,** *int. n. v.* மறுபடியும்; மற்றொரு முறை (நாடக மேடை ஊக்கச் சொல்); ஊக்குரை.

**Encounter,** *v.* நேருக்கு நேர் நில்; எதிர்த்து நில்; சந்தி. *n.* போர்; சந்திப்பு.

**Encourage,** *v.* ஊக்கு; எழுச்சியூட்டு; ஆதரவளி. *n.* encouragement. *adv.* encouragingly.

**Encroach,** *v.* வரம்புகடந்து செல்; வரைகட; மீதேறு; மீறிப்பற்று; பிறர் உரிமையில் நுழை; உரிமை யின்றிக் கைப்பற்று. *n.* encroachment, வரைகடப்பு; எல்லை மீறல்; மீதேற்றும்.

**Encrust, incrust,** *v.* துருவேறு; ஏடு படிந்திரு; மேற் பூச்சு பூசு.

**Encumber,** *v.* சுமத்து; பளுக் கொடு; வில்லங்கம் செய்; தடை செய். *n.* encumbrance, சுமை; தடை; தொந்தரவு; வில்லங்கம்.

**Encyclical,** *n.* (திருத்தந்தையின்) சுற்றறிக்கை.

**Encyclopaedia,** *n.* பல் பொருள் தொகுதி; அறிவுத் தொகுதி; அறிவுக் களஞ்சியம். *n. pers.* encyclopaedist. *a.* encyclopaedic.

**End,** *n.* முடிவு; கடைசி எல்லை; நோக்கம்; *n.* முடிவு செய்; அழி. *n.* ending, முடிவு. *a. (neg.)* endless முடிவில்லாத.

**Endanger,** *v.* இடருக்கு உட்படுத்து.

**Endear,** *v.* அன்புக்குரிய தாக்கு *n.* endearment.

**Endeavour,** *v.* முயற்சி செய். *n.* முயற்சி.

**Endenic,** *a.* (நோய்) ஒரு பகுதிக்கு உரியதான; சிறுதிணைவாரியான; சிறு நிலச்சூழ்வான.

**Endocrine,** *a. n.* (உறுப்பு, சுரப்பி) உள் நோக்கிச் சுரக்கிற.

**Endogamy,** *n.* தன் இனமணம்; தன்மரபு மணம்; (x exogamy). *a.* endogamous.

**Endorse, indorse,** *v.* பின் புறம் எழுது; மேலெழுது; ஆதரித் தெழுது; ஆதரி; *n.* endorsement மேலெழுத்து; புறவரி; புற எழுத்து ஆதரித்தெழுது; ஆதரவெழுத்து; ஆதரவு.

**Endosperm,** *n.* (செடி நூல்) விதையில் முளை சூழ்ந்த அரிசிப் பகுதி; விதையின் தசை (ப்பகுதி).

**Endow,** *v.* அறக்கொடை அளி; உடைமைப் பத்திரம் எழுதிவை; உரிமையாகக் கொடு; இயற்கை வாய்ப்பளி; இயற்பண்பாக அமைவி. (*pass,.* be endowed with, இயற்பண்பாகப் பெற்றிரு) *n.* endowment, அறக்கொடை உடைமைப் பத்திரம்; பொறுப் புரிமைக் கொடைப்பத்திரம்; பொறுப்புரிமைக் கொடைப் பத்திரம் எழுதிக் கொடுத்தல்.

**Endure,** *v.* (துன்பத்திற்கு) உட்படு; தாங்கு; பொறு; நீடித்திரு; நீடித்துழை; நீடித்து நிலைபெறு. *a.* endurable, enduring. *n.* endurance.

**Enema,** *n.* குடல் கழுவுகருவி; குடல் கழுவுதல் (மூலம் வழி நீர் முதலியன செலுத்தி மலக்குடல் தூய்மை செய்தல்.) நீரேற்றி.

**Enemy,** *n.* பகைவன்; எதிரி.

**Energy,** *n.* ஊக்கம்; ஆற்றல். *v.* energize. *a.* energetic,

வலுவான; சுறுசுறுப்பான. *adv.* energetically.

**Enervate,** *v.* வலுவிழக்கச் செய்; நலிவு செய். *a.* வலுவிழந்த. *pp. a.* enervated, enervation.

**Enfeeble,** *v.* நலியச் செய்; மெலியச்செய். *n.* enfeeblement.

**Enfetter,** *v.* விலங்கிடு; கட்டுப்படுத்து.

**Enfold,** *v.* உறை முதலியவற்றால் மூடு; அணைத்துக் கொள்; தழுவு.

**Enforce,** *v.* கட்டாயப்படுத்து; கீழ்ப்படியச்செய்; நிறைவேற்று. *n.* enforcement

**Enfranchise,** *v.* (> franchise) தேர்வுரிமையளி; மொழியுரிமை அளி; வாக்குரிமை கொடு. *n.* enfranchisement.

**Engage,** *v.* ஈடுபடு; ஒப்பந்தம் செய்துகொள்; உடன் படு; வேலைக்கு அமர்த்து. *n.* engagement, ஒப்பந்தம். நேரக் கட்டுப்பாடு; அலுவல்கட்டுப்பாடு; மண உறுதி ஒப்பந்தம். *n. vbl.* வேலைக்கு அமர்த்துதல். *a.* engaging, இணக்கமான; அன் பாதரவு காட்டுகிற.

**Engender,** *v.* ஏற்படுத்து; உண்டு பண்ணு.

**Engine,** *n.* பொறி; கருவி; இயக்கு பொறி; இயந்திரம்.

**Engineer,** *n.* பொறியமைப்பாளர்; பொறியியலாளர்; அமைப்பிய லாளர்; சிற்பி; தச்சன் , *v.* ஏற்பாடு செய். *n. abs.* engineering, பொறியமைப்பாண்மை; பொறி யியல்; பொறியாண்மை.

**Engirdle,** *v.* சூழ அமை; சூழ்ந்திரு; சுற்றிவளை.

**English,** *a.* இங்கிலாந்துக்குரிய; ஆங்கில மொழிக்குரிய. *n.* ஆங்கில மொழி. *the* English, ஆங்கிலேயர். *comb. n.* English man, (*pl.* Englishmen) ஆங்கிலேயர். (*f.* English woman) (*pl.* Englishwomen)

**Engorge,** *v.* பேராவலோடு உட்கொள்; விழுங்கு.

**Engraft, ingraft,** *v.* (graft; (ஒட்டுச் செடி) ஒட்டவை), பதியவை.

**Engrain, ingrain,** *v.* ஆழமாகப் பதியச்செய்.

**Engrave,** *v.* செதுக்கு. *n.* engraving.

**Engross,** v பெரிய எழுத்துகளால் எழுது; கவனத்தைக் கவர். *n.* engrossment.

**Engulf, ingulf,** *v.* விழுங்கு; அமிழ்த்து; வளைந்து சூழ்.

**Enhance,** *v.* மிகுதிப்படுத்து; உயர்த்து. *n.* enhancement.

**Enigma,** *n.* புதிர்; புரியாத ஒன்று. *a.* enigmatic(al).

**Enjoin,** *n.* உத்தரவிடு; கட்டுப் படுத்து; வற்புறுத்திக் கூறு; வேண்டிக்கொள்.

**Enjoy,** *v.* நுகர்ந்து மகிழ்; துய்த்து மகிழ். *n.* enjoyment, *a.* enjoyable.

**Enkindle,** *v.* தீக்களறு; கிண்டு; உணர்ச்சியைத் தூண்டு.

**Enlace,** *v.* இறுகக் கட்டு; பின்னு; சிக்கவை.

**Enlarge,** *v.* பெரியதாக்கு; விவரமாகக் கூறு; பண்பு விரி. *n.* enlargement. நிழற்பட அகற்சி; விரிவுபடுத்தல்; தழுவுதொடர்.

**Enlighten,** *v.* அறிவு கொளுத்து; ஐயந் தெளிவி; ஒளியூட்டு. *a.* enlightened, அறிவுடைய. *n.* enlightenment, அறிவொளி; மெய்யறிவு.

**Enlist,** *v.* (பிறர்) ஒத்துழைப்பைப் பெறு; பட்டியலில் சேர்; சேர்; ஆட்சேர்; படையில் சேர். *n.* enlistment.

**Enliven,** *v.* உயிர்ப்பூட்டு; உணர்ச்சி யூட்டு. *n. pers, ag.* enlivener.

*enmasse, adv.* மொத்தமாக; கூட்டாக.

**Enmesh,** *v.* (வலையில்) சிக்கச் செய்.

**Enmity,** *n.* பகைமை.

**Ennoble,** *v.* மேம்படுத்து; உயர்த்து; மேன்மக்களாக்கு.

**Enormity,** *n.* மாபேரளவு; மிகப் பெருங்குற்றம். *a.* enormous, மிகப் பெரிய; அளவிடமுடியாத.

**Enough,** *a.* போதுமான; *adv.* போதுமான அளவுக்கு. *n.* போதுமான அளவு. *int.* நிறுத்து! போதும்!

*en passant, adv.* இடையில்; இதற் கிடையே; அதனிடையே.

**Enquire, Enqauiry,** (inquire பார்க்கவும்).

**Enrage,** *v.* சீற்றமூட்டு.

**Enrapture,** *v.* களிப்பூட்டு.

**Enrich,** *v.* செல்வம் பெருக்கு; செல்வராக்கு; செழிப்பாக்கு; வளமூட்டு. *n.* enrichment.

**Enrobe,** *v.* உடை அணி; அணி செய்.

**Enrol,** *v.* பட்டியில் சேர்; உறுப்பினராகச் சேர்த்துக் கொள்.

**en route,** *adv.* வழியில்.

**Ensconce,** *v.* பாதுகாப்பான இடத்தில் தங்கவை; நிலை பெறுவி; (refl. Ensconce oneself in, ஒதுங்கியிருந்து கொள்; ஆதரவில் ஒதுங்கிப் பிழை).

**Ensemble,** *n.* மொத்த மதிப்பு; முழுத்தோற்றும்.

**Enshrine,** *v.* (> shrine, மூலக் கோயில்) மதிப்புடன் பதித்துவை; நிறுவு.

**Enshroud,** *v.* (ஆடை, போர்வை முதலியவற்றால்) மூடு.

**Ensign,** *n.* (படையின்) கொடி; கொடியைத் தாங்கும் வீரன்.

**Enslave,** *v.* அடிமைப்படுத்து. *n.* enslavement.

**Ensnare,** *v.* (தண்ணியில்) சிக்கவை.

**Ensue,** *v.* விளைவுறு; நிகழ்; பின்னிகழ்.

**Ensure,** *v.* உறுதியாக்கு; பாது காப்பாகச் செய்.

**Entail,** *v.* (உடைமையை) மரபுரிமையில் கட்டுப்படுத்து. *n.* கட்டுப்படுத்தப்பட்ட உடைமை. *n.* entailment.

**Entangle,** *v.* (கண்ணியில்) சிக்கவை. *n.* entanglement, சிக்கல்.

**entente,** *n.* நேச உடன் படிக்கை.

**Enter,** *v.* நுழை; புகு; உட்செல்; பதிவுசெய்; தொடங்கு; மேற்கொள். *n. see* entrance, entry 1. வாயில்; 2. பதிவுசெய்தல். *n. pers.* entrant, நுழைபவர்.

**Enteric,** *a.* குடல் சார்ந்த. *comb.n.* enteric fever, குடற்புண் காய்ச்சல்.

**Enterprise,** *n.* முயற்சி; ஊக்கம். *a.* enterprising, துணிவுள்ள; முயற்சியுள்ள.

**Entertain,** *v.* 1. விரந்து பேணு; விருந்தோம்பு; 2. பொழுது போக்கு; பொழுதுபோக்கு ஏற்பாடு செய்; மகிழச்செய். 3. மனத்திற்கு கொள். 4. வேலையிலமர்த்து. *n.* entertainment. பொழுதுபோக்கு; களியாட்டம்.

**Enthral,** *v.* அடிமைப்படுத்து; கவர்ச்சிசெய். *n.* enthralment.

**Enthrone,.** *v.* தவிசிலமர்த்து. *n.* enthronement.

**Enthusiasm,** *n.* ஆர்வம்; உணர்ச்சியார்வம். *n. pers.* Enthusiast, *a.* enthusiastic, *v.* enthuse, ஆர்வங் கொள்; உணர்ச்சிக் களஸவறு.

**Entice,** *v.* மயக்கிச் சிக்கவை. *n.* enticement, adv, enticingly.

**Entire,** *a., n.* முழுவதும்; சிதைவுபடாத. *adv.* Entirely, *n.* entireness; entirety.

**Entitle,** *v.* பெயர் அல்லது பட்டம் சூட்டு; உரிமையளி.

**Entity,** *n.* பொருள்; ஆள்; பண்பு; உருப்படி; முழுநிறைக் கூறு; குறிப்பிடத்தக்க ஒன்று. (x *see* nonentity).

**Entomb,** *v.* (கல்லறையில்) அடக்கம் செய்; புதை. *n.* entombment.

**Entomology,** *n.* பூச்சியினங்களைப்பற்றிய நூல்; பூச்சியின நூல்; புழுப் பூச்சியியல். *n.* entomologist, *a.* entomological.

**entourage,** *n.* புடையர்குழு.

**Entrails,** *n. (pl.)* குடல் உள் உறுப்புகள்.

**Entrain,** *v.* தொடர் ஊர்தியேறு.

**Entrammel,** *v.* தடு; முட்டுக் கட்டையிடு; சிக்கவை; தடங்கல் செய்.

**Entrance,** 1. e'ntrance, *n.* (enter,) வாயில்; நுழைவாயில்; புகுவழி; நுழைவுரிமை; நுழைவு. 2. entra'nce, (trance) *v.* மகிழ்வி; தன் வயமிழக்கச் செய்; பரவசமாகச் செய். (2) *n.* entrancement.

**Entrant,** *n.* see enter.

**Entrap,** *v.* பொறியில் அகப்படுத்து; சிக்க வை.

**Entreat,** *v.* வேண்டிக்கொள்; கெஞ்சிக் கேள். *adv.* Entreatingly. *n.* entreaty.

**Entrench, intrench,** *v.* அகழ்தோண்டி அரண்செய். *n.* entrenchment.

**Entrepreneur,** *n.* கூட்டு வாணிகத்தில் தலைமை வகிப்பவர்; முனைவர்.

**Entrust,** *v.* நம்பகமாக ஒப்படை.

**Entry,** *n.* (enter) நுழைதல்; நுழை வாயில்; புகுவழி; புகுவாயில்; பதிவு செய்தல்; பதிவுசெய்த குறிப்பு; குறிப்பு; வரைவு; பதிவு.

**Entwine,** *v.* தழுவு; பின்னிக் கொள்; பின்னு; முறுகு; சுற்றிப் பிணை; முறுக்கு; சுற்றித்தழுவு; சுற்றிக் கட்டு; சுருள்.

**Entwist,** *v.* சுற்றிவளை; சுற்றித் தழுவு.

**Enumerat,** *v.* வரிசைப்படுத்திக் கூறு; எடுத்துரை; கணக்கெடு; எண்ணு; எண்ணிக்கையிடு. *n.* enumeration. *a.* enumerative, *n. pers.* Enumerator, கணக் கெடுப்பவர்; கணிப்பாளர்; வரிசையாளர்.

**Enunciate,** *v.* விளங்கக் கூறு; தெளிவுபடக் கூறு. *n.* enunciation, விளக்கக் கூற்று.

**Envelop,** *v.* சூழ்ந்துகொள்; உறையிலிட்டு மூடு. *n.* see envelope.

**Envelope,** *n.* கடித உறை; கூட; தாள் பை; உறை; பை. *v.* see envelop.

**Envenom,** *v.* நஞ்சிடு; மனங்கெடு.

**Enviable,** *a.* (> envy) பொறாமை உண்டாக்கக் கூடிய; (பிறர்) விரும்பத்தக்க. (x *see* unenviable.)

**Envious,** *a.* (> envy) பொறாமை யுடைய.

**Environ,** *v.* சூழ்ந்து கொள். *n.* pl. environs, சுற்றுப்புற இடங்கள். *n.* environment, சுற்றுப்புறம்; சூழ்நிலை.

**Envisage,** *v.* எதிர்நோக்கு; முன்னாடிக்கருது.

**Envoy,** *n.* தூதர்; அரசியல் பேராள்.

**Envy,** *n.* பொறாமை; பொறாமைக் குரியது. *v.* பொறாமைப்படு. *a.* *see* envious; enviable.

**Enwrap,** *v.* மூடு; பொதி; மறை.

**Enwreathe,** *v.* (மாலைபோல்) சூழ்ந்திரு.

**Enzyme,** *n.* செரிமானப் பொருள் வகை.

**Eon,** *n.* பெருங் காலக்கூறு; ஊழி. *see* aeon.

**Eos,** *n.* காலைத் தெய்வம்; அருணன்.

**Epaulet,** *n.* (படை வீரர் தலைவர்) தோளிலணியும் சின்னம் தோள் கச்சை.

**Ephemeron,** *n.* (*pl.* - rons, or-ra) ஒரே நாள் வாணாள் உள்ள உயிர்; நாளுயிர். *a.* ephemeral, விரைந் தழியக்கூடிய; ஒருநாள் வாழ் வுடைய.

**Ephemeris,** *n.* ஆண்டுத் தொகுதி; ஆண்டு விவரக் குறிப்பு; ஐந்தொகுதி (பஞ்சாங்கம்)

**Epic,** *n.* வீரகாதை; (பெருங்) காப்பியம். *a.* காப்பியத்திற்குரிய; வீறுடைய; விழுமிய; விழுப்பம் வாய்ந்த; அகல் விரிவுடைய.

**Epicardium,** *n.* இதய உறையின் உட்பகுதி.

**Epicarp,** *n.* (கனியின்) மேல் தோல்.

**Epicene,** *n.* (இலக்கணம்) ஆண்பெண் பொதுப்பால்.

**Epicentre,** *n.* நில நடுக்க மையம்.

**Epicure,** *n.* இன்ப விருப்பினர். *a. n. pers.* epicurean. *n. abs.* epicureanism.

**Epidemic,** *n.* கொள்ளைநோய்; பெருவாரி தொத்து நோய். *a.* பெருவாரியாகப் பரவுகிற.

**Epidermis,** *n.* மேல் தோல்.

**Epiglottis,** *n.* குரல்வளை அடைப்பு; குரல் நாளம்.

**Eprigram,** *n.* திட்ப உரை; பொருள் செறிதொடர்.

**Epigraph,** *n.* கல்வெட்டு; கல் வரைவு; பொறிப்பு; செதுக்கு வரி. *n. abs.* epigraphy, கல் வெட்டுத் துறை; பொறிப்புத் துறை.

**Epilepsy,** *n.* வலிப்பு நோய். *a.* epileptic.

**Epilogue,** *n.* பின்னுரை; புறவரை.

**epiphany,** *n.* (கிறித்துவின்) தெய்விகத் தோற்றம்; தெய்விகத் தோற்ற விழா; இயற்கை கடந்த ஆற்றல்.

**Episcopacy,** *n.* தலைமக்கள் ஆட்சி; சமயத் தலைமை; குரு ஆட்சிப்பகுதி. *a.* episcopal. *n. abs.* episcopate.

**Episode,** *n.* கிளைக்கதை; உட்கதை; கதை நிகழ்ச்சிக் கதைக் கூறு.

**Epistemology,** *n.* அறிவுத் துறை விளக்க ஆராய்ச்சி; அறிவுபற்றிய ஆராய்ச்சி.

**Epistle,** *n.* கடிதம்; நீண் முடங்கல். *a.* epistolary.

**Epitaph,** *n.* கல்லறை வாசகம்.

**Epithet,** *n.* இடுபெயர்; பட்டப் பெயர்; அடைமொழி.

**Epitome,** *n.* சுருக்கம்; பொழிப்பு. *v.* epitomize.

**Epoch,** *n.* ஊழி; திரும்பு கட்டம்.

**Epopee, Epos,** *n.* காப்பியச் செய்யுள்.

**Equable,** *a.* சமமான; நேர்மை யான; மாறாத. *n.* equability.

**Equal,** a, சமமான; ஒத்த; ஒப்பான; தகுந்த; ஒத்த ஆற்றுலுடைய; சமாளிக்கக் கூடிய; நேர்மையான. *v.* சமமாக்கு. *n.* சமமானவர்; சமமானது. *n.* equality, சமநிலை; ஒப்ப; சரிநிகர்வு. *v.* equalize, *n.* equalization, *conn. see* equate, equivalence.

**Equanimity,** *n. pers.* அமைதி; உள்ளச் சமநிலை.

**Equate,** *v.* சமப்படுத்து; சரி நிகராகக்கொள். *n.* equation, (குறிக்கணக்கியல்) சமநிலைக் கூற்று; சமன் தொடர்.

**Equator,** *n.* நில நடுக்கோடு, நடுவரை, *a.* equatorial.

**Equerry,** *n.* குதிரை வலவர்; இலாயத்துறைத் தலைவர் அரண் மனை அலுவலாள்.

**Equestrian,** *a.* குதிரை சார்ந்த; குதிரை யேற்றக் கலை சார்ந்த. *n.* குதிரை யமர்ந்தவர்; குதிரை யேற்ற வல்லுநர்.

**Equidistant,** *a.* சரிதொலைவுள்ள.

**Equilateral,** *a.* (முக்கோணம்) சரிசம பக்கமுள்ள.

**Equilibrium,** *n.* சமநிலை; சரி ஒப்பு நிலை; அமைதிநிலை.

**Equine,** *a.* குதிரைகளுக்குரிய; குதிரைகள் போன்ற.

**Equinoctial,** *a.* பகலிரவு சமமான *n.* equinox, பகலிராச் சமமுடைய நாள், ஆண்டு நடுநாள்; நேர்நாள் (விசு).

**Equip,** *v.* ஒருக்கம் செய்; துணைச் சாதனம் அளி; துணைக் கலம் பொருத்து; படைக்கலம் பூட்டு; தளவாடம் உண்டுபண்ணு. *n.* equipment தளவாடம் (சேகரித்தல்); துணைச்சாதனம் (பூட்டுதல்) equi page தேவைப் பொருள்கள்; துணைப் பொருள்கள் (சாதனங் கள்).

**Equipoise,** *n.* (உள்ளச்) சமநிலை.

**Equitable,** *a. see* equity.

**Equitation,** *n.* குதிரையேற்றும்.

**Equity,** *n.* நேர்மை. *a.* equitable, *adv.* equitably.

**Equivalent,** *a. n.* சம மதிப் புள்ள(து)

**Equivocal,** *a.* இரண்டகப் பொரு ளுடைய; ஐயப்பாடுடைய. *v.* equivocate தாக்காட்டு. *n.* equivocation.

**Era.,** *n.* வரலாற்றுப் பிரிவு; ஊழி.

**Eradicate,** *v.* வேருடன் அழி. *n.* eradication. *a.* eradicable.

**Erase,** *v.* துடை; அழி. *n., impers.* eraser (=rubber) எழுதியது துடைக்கும் கருவி; துடைப்பான். *n.* erasure, துடைத்தல்; துடைத் தழிப்பு; அடித்தல் துடைத்தல்; திருத்துமானம்.

**Ere.** *pre. conj.* முன்னே; முன்பு. *comb. see* erelong, erenow, etc.

**Erebus,** *n.* (கிரேக்க புராணம்) இருளுலகு; நரகம்.

**Erect,** *a.* நிலைக்குத்தான; நிமிர்ந்த. *v.* நிமிர்ந்து; எழுப்பு; கட்டடம்; அமை. *n.* erection. *a.* erectile, நிமிர்ந்து நிற்கக்கூடிய.

**Erelong,** *adv.* விரைவிலேயே,

**Eremite,** *n.* துறவி.

**Erenow,** *adv.* இதற்கு முன்பே.

**Erg.** *n.* ஆற்றல் அலகு; ஆற்றல் அளவைக் கூறு.

**Ergo,** *adv.* (இலத்தீன் மொழி) ஆகையால்.

**Ermine,** *n.* கீரியினத்தைச் சேர்ந்த ஓர் உயிர்; அதன் மயிர்ப்பட்டு.

**Erode,** *v.* அரித்துத் தின்; அழி கரம்பு. *n.* erosion. அரிமானம். *a.* erosive.

**Eros,** *n.* மதன்; மாரவேள். *a.* erotic, காதல் சார்ந்த.

**Err,** *v.* தவறு செய். *n. see* error. *a. see* errant, erratic *s. n.* erration.

**Errand,** *n.* சிறுதிறப்பயணம்; அலுவலாளர் சிற்றேவல்; சிறு காரியம். *comb. n.* errandboy, ஏவற் பையன்

**Errant,** *a.* தீரச்செயல் செய்கிற; தவறு செய்கிற *n.* errantry,

தீரச்செயல் தேட்டம்; திருவீரச் செயல் (chivalry)

**Erratic,** *a.* ஒழுங்கற்று; தவறுகிற; நெறி திறம்பிய.

**Errata,** *n. pl.* (> erratum, பிழை); பிழைப்பட்டி; (புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள) பிழைத் திருத்தப்பட்டி; பிழைத் திருத்தப் பின் இணைப்பு.

**Error,** *n.* தவறு; பிழையான கருத்து. *a.* erroneous.

**Erst,** *adv.* முன்காலத்தில்; முன்னே.

**Erudite,** *n.* நன்கு கற்ற; ஆழ் புலமையுள்ள; துறைபோன. *n.* erudition.

**Erupt,** *v.* வெளிப்படு; வெடித்துக் கிளம்பு. *a.* eruptive. *n.* eruption. (எரிமலை, நோய் முதலியன) திடீரென வெடித்தல் அல்லது வெளிப்படல்.

**Escalade,** *n.* ஏணியால் மதில் சுவர் ஏறுதல்.

**Escape,** *v.* தப்பிப் பிழை; தப்பி ஓடு; அறியாமல் வெளிப்படு; கசிந்தொழுகு; *n.* தப்பி ஓடல்; இடர் நீங்குதல். *s. n.* escapade, த.ப்பியோடல்; தவறானநடத்தை. *n.* escapement, வெளிப்போகும் வழி; மணிப்பொறியின் ஒழுங்குபடுத்தும் கருவி.

**Escarp,** *n.* அரணைச் சூழ்ந்துள்ள செங்குத்தான சாய்வு கரை. *s.n.* escarpment.

**Escheat,** *n.* (குலவழி) உரிமை யாளில்லாப் பறிமுதல்; இறை யுரிமைப்பாடு. *v.* பறிமுதல் செய்.

**Eschew,** *v.* தவிர்; விலக்கு.

**Escort,** *n.* வழித்துணை; மெய்க் காவலர். *v.* வழித் துணையாகச் செல்.

**Esculent,** *a., n.* உண்ணத் தக்க (பொருள்)

**Escutcheon,** *n.* மரபுச் சின்னம்; குலச் சின்னங்களைத் தாங்கிய கேடயம்.

**Esoteric,** *a.* சிலருக்கு மட்டும் கற்றுக் கொடுக்கப்படும் தன்மை யுள்ள; மறையுரையான; (x exoteric).

**Esparto,** *n.* தாள் செய்ய உதவும் புல் வகை.

**Especial,** *a.* தனிப்பட்ட. *adv.* especially, தனிப்பட; சிறப்பாக.

**Esperanto,** *n.* செயற்கை உலகப்பொதுமொழி வகை.

**Esplande,** *n.* அகல்வெளி; அகல்வழி.

**Espouse,** *v.* (spouse) மணம் புணர்; தழுவு; துணையளி. *n.* espousal.

*esprit de corps, n.* குழு உணர்ச்சி.

**Espy,** *v.* தொலைவிலுள்ளதைக் காண்; கண்டுபிடி; ஒற்றாடு. *n.* espial, பார்த்தல்; ஒற்றறிதல். *n.* espionage, ஒற்று.

**Esquire,** *n.* வீரனுக்குக் கேடயம் தாங்குபவன்; (நன்மதிப்பு அடை யீட்டுச் சொல்).

**Essay,** *n.* முயற்சி; கட்டுரை. *v.* முயற்சிசெய். *n. pers.* essayist.

**Essence,** *n.* சாறு; சாரம்; உள் ளுறைத் தன்மை. *a.* essential,

உயிர்நிலையான; இன்றியமையாத; உயிர்மையான; சாரமான; முக்கியமான. *adv.* essentially.

**Establish,** *v.* நிறுவு; நிலைநாட்டு. *n.* establishment, நிலைநாட்டல்; (நிலை நாட்டப்பட்ட) சங்கம், அமைப்பு. establishment charges. நிலையவகைச் செலவு; பணித் துறைச் செலவு; நிலைவாரச் செலவு.

**Estate,** *n.* பதவி; நிலையம்; பண்ணை; ஆதினம்; அரசியலில் உரிமையுள்ள வகுப்பினர்; (அரசியல் மன்ற) மண்டலம் *comb. n.* estate duty, உடைமை மாற்றுவரி; மரபு மாற்றுவரி; சாவரி.

**Esteem,** v உயர்வாக மதி. *n.* மதிப்பு. *a.* estimable, *v., n. see* estimate.

**Estimate.** *n.* ஒன்றைப் பற்றிய கருத்து; மதிப்பீடு; மதிப்பு; மதிப்புப் பட்டி; மதிப்புரை; முன்மதிப்பு; முன் கருத்து; திட்டம். *v.* மதிப்பீடு. *n.* estimation.

**Estrange,** *v.* நட்பைக்கெடு; பகைமையாக்கு; பிரி. *n.* estrangement.

**Estuary,** *n.* (ஆற்றின்) கழி முகம்.

**Etcetera,** *phr.* (சுருக்கம் etc.) முதலானவை; இன்னபிற. (இலத்தீன் et. உம். cetera, பிற).

**Etch,** *v.* (உலோகத்தில் திராவகங்களின் உதவியால்) செதுக்கு; தோண்டி உருவாக்கு. *n.* etching, செதுக்குவேலை.

**Eternal,** *a.* நிலையான; என்றுமுள்ள பிறப்பிறப்பற்ற. *n.* eternity, முக்கால முழுமை; ஈறில்காலம்; ஊழூழி.

**Ether,** *n.* 1. (ஒளி அலைக்கு முதலாகக் கருதப்படும்) வானவெளி; வான்முதல் 2. நீர்மவகை; ‘வானி’ நுண்பொருள். *a.* ethereal, நுண்பொருளான; கட்புலப் படாத; புலன்குடந்த.

**Ethic,** *a.* நன்னெறி சார்ந்த. *n. (pl.)* ethical, *a.* ஒழுக்க நூல்; அறநூல். *a.* etichal.

**Ethiopian,** a., *n.* எதியோப்பியா நாட்டுக்(காரன்); கருமை நிறமுடைய (நீகிரோ).

**Ethnic, ethnical,** *a.* மனித இன ஆராய்ச்சிக்குரிய. *n.* ethnograpy, இன அமைப்பு நூல். *n.* ethnology, இனமரபு நூல்; மரபினநூல்; மனிதஇன வேறுபாட்டு நூல். *n. pers.* ethnologist. *a.* ethnological.

**Ethos,** *n.* (நாடு, இனம் ஆகியவற்றின்) தனிப்பண்பு.

**Etiology,** *n.* (=aetiology.)

**Etiquette.** n நன்னடக்கை முறை; ஒழுங்கு; ஆசாரம்.

**Etymology,** *n.* சொல் வரலாறு; சொல்லிலக்கணம், *a.* etymological. *n.* etymologist.

**Eucalyptus,** *n.* நீலகிரித் தைல (மர)ம்; தேவதாரு வகை.

**Eucharist,** *n.* (கிறித்துநாதரின்) இறுதி உணவு (விழா).

**Euclid,** *n.* பண்டைய கிரேக்க உருக்கணக்கு அறிஞர்; அவர் எழுதிய நூல். *n., a.* Euclideau.

**Eugenic,** *a.* மனித இன மேம்பாட் டாராய்ச்சி (நூல்) சார்ந்த, *n.* eugenics. இன மேம்பாட்டு நூல்.

**Eulogize,** *v.* புகழ்ச்சி செய். *n. pers.*, eulogist, *a.* eulogistic. *n. abs.* eulogy.

**Eunuch,** *n.* ஆண் தன்மை யற்றவன்; அலி; பேடி.

**Euphemism,** *n.* மங்கல வழக்கு; தீயகுறிப்பு; மறைத்துக் கூறும் மங்கலக் குறி. *a.* euphemistic.

**Euphony,** *n.* இன்னோசை. *a.* euphonic(al), euphonious.

**Euphuism,** *n.* செயற்கை மொழி நடை; செயற்கை அணி செறிந்த நடை *a.* euphuisic.

**Eureka,** *int., n.* "நான் கண்டு கொண்டேன்!" (ஆர்க்கிமிடீஸ் புது மெய்ம்மை கண்டபோது கூவிய கூக்குரல்).

**European,** *a., n.* ஐரோப்பிய (நாட்டார்).

**Euthanasia,** *n.* நல்லிறப்பு; அமைதியிறுதி.

**Euthenics.** *n.* வாழ்க்கை மேம்பாட்டு நூல்.

**Evacuate,** *v.* வெறுமையாக்கு; குடி யெழுப்பி வெளியேற்று; வெளி யேறு. *n.* evacuation வெளி யேற்றும். *a., n.* evacuee, வெளி யேற்றத்தார் (சார்ந்த); விட்டோடி (சார்ந்த); புலம் பெயர்வாளர் (சார்ந்த).

**Evade,** *v.* தவிர்; மழுப்பு; தந்திர மாகத் தப்பித்துக் கொள். *n.* evasion. *a.* evasive.

**Evaluate,** *v.* மதிப்பிடு. *n.* evaluation.

**Evanescent,** *a.* நிலையற்ற; அழியக்கூடிய. *n.* evanescence.

**Evangelist,** *n.* கிறித்துவ சமய அறிவுரையாளர்; சமய ஆர்வலர்; சமயம் பரப்புவோர். *a.* evangelic(al); *v.* evangelize. *n.* evangelization.

**Evaporate,** *v.* ஆவியாகு, *n.* evaporation.

**Eve,** *n.* 1 (கிறித்துவ, யூத முகமதிய மரபுப்படி படைப்பின்) முதல் மாது; ஏவாள். 2. சுருக்கம்; செய்யுள் வழக்கு for evening மாலைக்காலம் 3. (Christmas eve etc.,) விழாவுக்கு முன் நாள்; விழா ஒருக்கல் நாள்.

**Even** 1. *n.* மாலைக்காலம், 2. *a.* (எண்) இரட்டைப் படியான; சமனான; சமமான; ஒழுங்கான. *v.* சமமாக்கு; மட்டமாக்கு 3. *adv.* கூட; உம் (சிறப்புப் பொருள்.)

**Evenfall,** *n.* மாலைக் காலம்.

**Evening,** *n.* மாலை; சாய்பொழுது; வாழ்க்கையின் கடைசிக் காலம்.

**Evensong,** *n.* மாலைப் பாட்டு; இறுதிப்பா.

**Event,** *n.* நிகழ்ச்சி; விளைவு. *a.* eventful, முக்கியமான; நிகழ்ச்சி நிரம்பிய.

**Eventide,** *n.* மாலைக் காலம்.

**Eventual,** *a.* முடிவாக விளைகிற, *adv.* eventually. *n.* eventuality, விளைவுநேர்வு; நேரக்கூடும் நிகழ்ச்சி.

**Ever,** *adv.* எக்காலத்தும்; எக் காலத்திலாவது; முடிவில்லாமல்.

**Everlasting,** *a., n.* எக்காலத்து முள்ள(து).

**Evermore,** *adv., n.* பின் எப் பொழுதும்.

**Every,** *a.* ஒவ்வொரு; ஒவ்வொன் றாக; எல்லா.

**Evict,** *v.* உரிமையிலிருந்து விலக்கு துரத்து; வெளியேற்று; அப்புறப்படுத்து. *n.* eviction வெளியேற்றுதல்; வெளியேற்றம்; இடப்பெயர்ப்பு; நீக்கம். *n. pers.* evictor, வெளியேற்றுபவர். துரத்துபவர்.

**Evidence,** *n.* சான்று; தெளிவு; எண்பு; அத்தாட்சி. *v.* சான்றளி; எண்பி.

**Evident,** *a.* தெளிவாகத் தெரிகிற; தெளிவான. *adv.* evidently, தெற்றென; மேலீடாகவே; எளிதாகவே; தேற்றமாக.

**Evil,** *a.* கெடுதலான. *n.* கேடு; கொடுமை.

**Evince,** *v.* காட்டு; தெளிவாகக் காடு.

**Evoke,** *v.* வெளிவரச் செய்; அழை. *n.* evocation.

**Evolution,** *n.* (evolve) (உலகு, உயிரின்) படிமுறை வளர்ச்சி படி மலர்ச்சி; உருமலர்ச்சி; படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு. (x revolution) *a.* evolutionary. *n. pers.* evolutionist).

**Evolve,** *v.* மலர்; உருமலர்ச்சியுறு; தோன்று; படிமலர்ச்சியுறு; ஒன்றின் பின் ஒன்றாக வெளிப்படு. *n.* evolvement, *see* evolution.

**Ewe,** *n.* (யூ) (*n.* sheep) பெண் ஆடு.

**Ewer,** *n.* தண்ணீர்ப் பாண்டம்.

**Ex.** (முன்னிணைப்பு இடைச் சொல்) முன்னாள் (சார்ந்த), முன்னிருந்து விலகிய.

**Exacerbate,** *v.* மனம் வெறுக்கச் செய்; நோயை மிகுதிப் படுத்து. *n.* exacerbation.

**Exact,** 1.*a.* துல்லியமான; கணக்கான; மயிரிழை கூடப் பிசகாத. 2. *v.* வலிந்து பெறு; கொடுமை செய்து வாங்கு. (1) *n.* exactness, exactitude, (2) *n.* exaction, *n., a.* exacting.

**Exaggerate,** *v.* மிகைபடக் கூறு. *n.* exaggeration. உயர்வுநவிற்சி; மிகையுரை. *a.* exaggerative, மிகுதிப்படுத்தப்பட்ட; மிகைப் படுத்தப்பட்ட; மிகுதிப்படுத்தத் தக்க.

**Exalt,** *v.* உயர்த்து; உயர் பதவியில் அமர்த்து; புகழ்ந்துபேசு. *n.* exaltation உயர்பதவி; உயர்வு; கழி பேருவகை.

**Exam,** *n.* (examination.) (மாணவர் வழக்கு) தேர்வு; மாணவர் தேர்வு.

**Examine,** *v.* ஆராய்; தேர்; ஆய்; தேர்ந்தாராய்; கூர்ந்து நோக்கு; பிரித்தாராய் வகுத்தாராய்;

நன்காராய்; தேர்வு நடத்து. *n.* examination, (*see* exam) தேர்வு; ஆய்வு; பகுத்தாய்வு; தேர்வாராய்வு; *n. pers.* dxaminer, தேர்வு நடத்துபவர்; ஆய்வாளர்; தேர்வாளர். dxaminee, தேர்வுக்கு அமர்பவர்; தேர்வமர்வாளர்.

**Example,** *n.* 1. எடுத்துக்காட்டு; காட்டு. 2. சான்று. முன்மாதிரி; மேற்கோள். *n. pers. see* exemplar, *v. see* exemplify.

**Exasperate,** v சினமூட்டு; கோபந் தூண்டு; உணர்ச்சி கிண்டிவிடு; கிளறு. *n.* exasperation.

**Excavate,** v அகழ்; குடை; *n.* excavation. அகழ்தல்; அகழ்வு; குடைவு; நில அகழ்வு; சுரங்கம். *n. ag.* excavator.

**Exceed,** *v.* எல்லை மீறு; மிகு; மேம்படு; மிகுதியாகு; கூடுதலாகு. *a.* exceeding, வளர்கிற மிகுகிற; கழிமிகையான. *adv.* exceedingly, மிகதியாக. *n. see* excess, மிகை. *comb. n.* மிகைவரி.

**Excel,** *v.* மேம்படு; மேம்பாடடை. *n.* excellence, மேம்பாடு; சிறப்பு; நேர்த்தி; மிகநலம். *a.* excellent, மிகச் சிறந்த.

**Excellency,** *n.* மாட்சி. (your, His, Her etc.,) இளங்கோக்கள்; கோமாட்டிகள்; ஆட்சித் தலைவர், தூதர் பட்டம்.

**Excelsior,** *a.* மிகவும் உயர்ந்த.

**Except,** *v.* விலக்கு; நீக்கு; *prep.* தவிர; இல்லாமல்; நீங்கலாக. *pr. p. prep.* excepting, *n.* exception. விலக்கு; தடங்கலுரை புறனடை; தனிநிலை; தனிப்பட்ட செய்தி. *a.* exceptionable, தனிப்பட்ட; தனிப்பண்புடைய; தனிச் சிறப் புடைய. *a.* exceptional, வழக்கு மீறிய; பொதுநிலை மீறிய; மட்டு மிஞ்சிய.

**Excerpt,** *n.* ஒரு நூலிலிருந்து எடுத்த பகுதி. *v.* நூலிலிருந்து ஒரு பகுதியை எடு.

**Excess,** *n.* (> exceed) மிகுதி; மிகைபாடு; மிகை; மட்டு மீறிய அளவு; மிச்சம். *(pl.)* excesses. ஒழுக்க வரம்பு கடந்தசெயல்கள். *a.* excessive. *comb. n.* excess tax, excess profit tax மிகை (ஆதாய) வரி.

**Exchange,** *v.* பண்டமாற்றுச் செய்; கொடுத்து வாங்கு. *n.* பண்ட மாற்றல்; நாணய மாற்றல்; பரிமாற்றம்; நாணயச் செலாவணி (நிலையம்) *a.* exchangeable.

**Exchequer,** *n.* கருவூலம்.

**Excise,** 1. *n.* தீர்வை; உள்நாட்டுப் பொருள்; வரி; தீர்வைத் துறை; ஆயத்துறை. 2. *v.* வெட்டு; நறுக்கு. 1. *a.* excisable, *n.* excision.

**Excite,** *v.* தூண்டு; கிளர்ச்சியூட்டு. e. excitable, எளிதில் தூண்டக் கூடிய. *a.* excitant, கிளர்ச்சி தருகிற. *n.* excitation, excitement; excitability.

**Exclaim,** *v.* கூச்சலிடு; உரத்துப் பேசு; விதந்துரை. *n.* exclamation, வியப்புக்குறி(!). வியப்புரை. *a.* exclamatory.

**Exclude,** *v.* ஒதுக்கு; விலக்கு; நுழைவதைத்தடு. *n.* exclusion. *a.* exclusive, தனி ஒதுங்கிய; பிரிவுணர்ச்சியுள்ள; தனியுரிமைப் பட்ட. *n.* exclusiveness.

**Excommunicate,** *v.* சமய விலக்குச்செய்; சாதி விலக்குச் செய் சாதிக் கட்டுச் செய். *n.* excommunication.

**Excrescence,** *n.* இயற்கைக்கு மாறான தசை வளர்ச்சி; புடைப்பு; வெறுக்கத்தக்கது; வெறுப்பு.

**Excreta,** *n. (pl.)* எச்சங்கள்; சிறுநீர் மலங்கள்.

**Excruciating,** *a.* நொம்பலந் தருகிற; கொடுநோவுடைய.

**Exculpate,** *v.* குற்றச் சாட்டைப் போக்கு; குற்றமற்றவனாக்கு. *n.* exculpation.

**Excursion,** *n.* இன்பப் பயணம், *n. pers.* excursionist, *a.* excursive திரிகிற; மற்றொன்று விரிக்கிற.

**Excuse,** *v.* பொறு; மன்னி; விலக்கு; சாக்குப்போக்குக் கூறு. *n.* சாக்குப்போக்கு; மன்னிப்பு. *a.* excusable, மன்னிக்கத்தக்க.

**Execrate,** *v.* வெறு; பழித்துரை. *a.* execratable, வெறுக்கத்தக்க. *n.* execration, பழி.

**Execute,** *v.* 1. செய்து முடி; நிறைவேற்று. 2. கொலைநிறை வேற்று; தூக்கிடு. (1) *a.*, *n.* executive. நிறைவேற்றத்துறை (சார்ந்த); செயல்துறை (சார்ந்த). *n. pers.* executor, (*fem.* executrix). காரியம் நிறை வேற்றுபவர் உறுதிப் பத்திரம் நிறைவேற்ற அதிகாரம் பெற்றவர். (1) (2) execution, (2) *n. pers.* executioner

**Exegesis,** *n.* விளக்கம்; விளக்க உரை.

**Exemplar,** *n.* (example) முன்மாதிரி (ஆனது, ஆனவர்). சான்றோர்; தனித்தகையாளர்; சான்று. *a.* exemplary, எடுத்துக் காட்டாயுள்ள; முன்மாதிரியான.

**Excemlify,** *v.* (example 1) எடுத்துக் காட்டால் விளக்கு; சான்றாக இயக்கு. *n.* exemplification.

**Exempt,** *v.* விலக்கு. *a.* நீங்கலாக; கட்டுப்பாடு அல்லது வரிக்கு உட்படாத. *n.* exemption, விலக்குரிமை.

**Exercise,** *n.* பயிற்சி; உடற்பயிற்சி; வீட்டுப்பாடம்; பயிற்சிப்பாடம், *v.* பயிற்சி செய்; பயிற்சியளி.

**Exert,** *v.* முயற்சி செய்; ஆற்றலைப் பயன்படுத்து. *n.* exertion.

*exeunt, v.* (*pl.* of exit, நாடக அரங்க வழக்கு) (நடிக நடிகையர் பலர்) வெளியேற்றம்; வெளியேறு கின்றனர். (இலத்தீன் படர்க்கைப் பன்மை வினைமுற்று).

**Exhale,** *v.* மூச்சுவிடு; வெளிவிடு; ஊடு; மணம் பரப்பு; ஆவி வெளிவிடு. *n.* exhalation.

**Exhaust,** *v.* வெறுமையாக்கு; செலவழி; களைப்படையச் செய்; செய்துதீர்; பேசித் தீர்; முற்றிலும் அறி; அல்லது பேசு. *n.* இயந்திரங்களில் நீராவி முதலிய வற்றின் வெளிப்போக்குக் குழாய். *a.* exhaustible; exhausted. *n.*

exhaustion, சோர்வு. *a.* exhaustive, எல்லாம் தன்னு ளடக்கிய; நிறைதீர்வான; தீர்ந்த.

**Exhibit,** *v.* பலரறியக்காட்டு; அம்பலப்படுத்து; விளம்பர மாக்கு; *n.* காட்சிப்பொருள். *n.* exhibition, கண்காட்சி; காட்சிச் சாலை; அம்பல மாக்குதல். *n. pers.* exhibitioner.

**Exhilarate,** *v.* மகிழச்செய் எழுச்சி யூட்டு. *a.* exhilarating, exhilarant, *n.* exhilaration.

**Exhort,** *v.* அறிவு கொளுத்து. *a.* exhortative, exhortatory. *n.* exhortation.

**Exhume,** *v.* நிலமகழ்ந்து எடு; புதையல் வெளியெடு. *n.* exhumation.

**Exigence, - cy,** *n.* அவசரம்; உடனடியான தேவை. *a.* exigent, உடனே தேவையான.

**Exiguous,** *a.* சிறிய; போதாத.

**Exile,** *n.* நாடு கடத்தல்; நாடு கடத்தப்பட்டவர்; நாடு கடத்தப் பட்டுத் திரிபவர்; நாடோடி. *v.* நாட்டிலிருந்து துரத்து.

**Exist,** *n.* இரு; உளதாகு. *n.* existence, உளதாம் தன்மை; வாழ்க்கை; படைப்பு முழுவதும். *a.* existent.

**Exit,** n (இலத்தீன் வினைமுற்று - ஒருமை) போதல்; சாவு; நடிகர் வெளியேறுதல். (*pl.* exeunt) வெளிச்செல்லும் வழி; செல்வழி; புறவழி.

**Exodus,** *n.* போதல்; (பலர்) புறப்பாடு; புறஞ்செல்லல்.

*ex.officio, adv. a.* பணித்துறை சார்ந்த; (பணித்துறைச் சார்பாக).

**Exogamy,** *n.* இனத்திற்கு வெளியே மணம் செய்யும் வழக்கம்; புறமரபு மணவழக்கம்.

**Exonerate,** *v.* குற்றத்திலிருந்து விடுவி; குற்றமில்லை என்று தெளி. *n.* exoneration, *a.* exonerative.

**Exorbitant,** *a.* அளவு மீறிய; மிகுதியான. *n.* exorbitance.

**Exorcise,** *v.* பேய் ஓட்டு. *n.* exorcism. *n. pers.* exorcist.

**Exoteric,** *a.* எல்லாருக்கும் கற் பிக்கத்தக்க ஒளிவுமறை வற்ற; பொதுவுரிமையான; (x esoteric).

**Exotic,** *a.* பிறதிணைக்குரிய; அயல்திணைக்குரிய; அயல் நிலஞ் சார்ந்த; அயல் நாட்டுக் குரிய; அயற் பண்புடைய.

**Expand,** *v.* விரிவடை; பெரிதாகு; *a.* expansible. *n.* expansibility., *n.* expanse, சமவெளி; அகலம்; அகற்சி. *a.* expansive. *n. vbl.* expansion, விரிவடைதல்.

**Exparte,** *adv., a.* ஒருதலையான; ஒரு பக்கமான; (தீர்ப்பு) கட்சி யில்லாதபோது செய்யப்பட்ட (exparte decree)

**Expatiate,** *v.* விரிவாகப் பேசு அல்லது எழுது. *n.* expatiation.

**Expatriate,** *v.* நாடு கடத்து; குடி கிளப்பிப் பிறநாடனுப்பு. *n.* expatriation.

**Expect,** *v.* எதிர்பார்; காத்திரு. *n.* expectancy. *a., n.* expectant. *n.* expectation.

**Expectorate,** *v.* துப்பு; காரியுமிழ். *n.* expectoration. *n.* expectorant, சிலேட்டு மத்தை வெளிப்படுத்தும் மருந்து.

**Expedient,** *a.* உதவிச் சாதனமா யுள்ள; சமயச் சூழ்நிலைக் குரிய; கால இடச் சூழலுக்கேற்ற; சமயத் துக்கேற்ற; நெருக் கடிக்கேற்ற; சூழ்வினைத் திறமுடைய. *n.* உதவிச் சாதனம்; வகை துறை; வழிதுறை; சூழ்திறம்; சூழ்வகை திறம். *n. abs.* expedience, expediency, சூழ்வினைத்திறம்.

**Expedite,** *v.* விரைவுபடுத்து. *n.* expedition, விரைவு; ஒரு நோக்கத்துடன் செல்லும் பயணம்; போர்மேல் செல்லல்; படை யெடுப்பு. *a.* expeditious, விரைவான.

**Expel,** *v.* வெளியே துரத்து. *a., n. ag.* Expellant (*see* expulsion)

**Expend** *v.* செலவு செய்; செலவழி. *n.* expenditure, செலவு செய்தல்; செலவினம். *n.* expense, செலவு; செலவிழப்பு. *a.* expensive செலவு பிடிக்கிற; விலைமிகுதி பிடிக்கிற; விலையேறிய. *n.* expensiveness.

**Experience,** *n.* செயலறிவு; நுகர்வறிவு; முன்னறிவு. *v.* உணர்; நுகர் படு; பட்டறி; பட்டுணர்.

**Experiment,** *v.* செயலாய்வு; ஆய்வு; செயல்முறை; சோதனை முறை; தேர்வாராய்ச்சி; செயல் தேர்வு *v.* செயல் தேர்வு செய். *n.* experimentation. *a.* experimental, செய்முறை சார்ந்த செயலாய்வுக்குரிய; செய்து செய்தறிகிற; தேர்வு முறையான. *n.* experimentalist.

**Expert,** *a.* திறமைவாய்ந்த; துறை தேர்ந்த; துறைபோன. *n.* வல்லுநர்; திறலாளர்; தேர்ந்தோர். *n.* expertness.

**Expiate,** *v.* கழுவாய் செய். *n.* expiation. *a.* expiatory, expiable.

**Expire,** *v.* வெளிமூச்சு விடு; இற. *n.* expiration, வெளிமூச்சு. *n.* expiry, சாவு. *a.* expiratory, வெளி உயிர்ப்புக்குரிய; வெளி மூச்சுக்குரிய.

**Explain,** *v.* விளக்கு; விளக்கிக் கூறு; தெளிவாக்கு; விரித்துரை; *n.* explanation, விளக்கிக் கூறல்; விளக்கம். *a.* explanatory; explainable.

**Expletive,** *a., n.* அசைச்சொல்; சாரியை.

**Explicit,** *a.* விவரமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ள; தெளி விளக்கமான.

**Explode,** *v.* வெடி *n.* explosion. *a., n.* explosive வெடிக்கிற (பொருள்)

**Exploit,** 1. *n.* தீரச்செயல்; 2. *v.* சுரண்டு; பிறனைப் பயன்படுத்திக் கொள்; பயன்படுத்து; வினை பயன் கொள்; (2) *n.* exploitation, சுரண்டல்; பயன் கொள்ளல் பயனரிப்பு.

**Explore,** *v.* துருவி ஆராய்; தேடு; ஆய்ந்துதேடு. புது நிலந்தேடு. *n.* exploration. புதுநிலத் தேட்டம்; புதுப்பொருள் தேட்டம். *n. ag,* explorer.

**Explosion,** *n.* (*see* explode).

**Explosive,** *n., a.* (*see* explode.

**Exponent,** *n.* விளக்கிக் கூறுபவர்; இசை முதலியவற்றில் வல்லுநர்; (கணக்கியலில்) அடுக்குக்குறி. *a.* exponential.

**Export,** *v.* ஏற்றுமதி செய்; *n.* ஏற்றுமதிச் சரக்கு; ஏற்றுமதி. *a.* exportable. *n.* exportation

**Expose,** *v.* திறந்துகாட்டு; குற்றங் குறைகளை வெளிப்படுத்து. *n.* exposure.

**Exposition,** *n.* காட்டுதல்; விளக்கவுரை.

**Expostulate,** *v.* தடுத்து விளக்கிக் கூறு. *n.* expostulation.

**Expound,** *v.* தெளிவாக்கு; விரிவுரை கூறு; ஆய்ந்தாராய்ந்து விளக்கு.

**Express,** 1. *a., adv.* விரைவான; தனிப்பட்ட. *n.* விரைவாகச் செல் லும் தொடர் ஊர்தி 2. *v.* வெளியீடு (2) *n.* expression. சொற்றொடர்; (உருக் கணக்கு) எண் உருக்கோவை. *a.* expressive, வெளியிடக் கூடிய; தனிக்கருத்துள்ள.

**Expressly,** *adv.* தெளிவாக; தனியாக.

**Expropriate,** *v.* பறிமுதல் செய். *n.* expropriation.

**Expulsion,** *n.* (> expel) வெளியே துரத்துதல். *a.* expulsive.

**Expunge,** *v.* துடைத்தெறி பகுதியை நீக்கு. *n.* expunction.

**Expurgate,** *v.* குறைபாடு நீக்கு. *n.* expurgation. *n., pers.* expurgator. *a.* expurgatory.

**Exquisite,** *a.* நேர்த்திவாய்ந்த; மிகச் சிறந்த. *n.* பிலுக்கன். *n.* exquisiteness.

**Extant,** *a.* இன்னும் உளதான.

**Extempore,** *adv., a.* முயற்சி யின்றிச்செய்கிற. *a.* extemporary, extemporaneous. *v.* extemporize, முயற்சியின்றிப் பே சு, அல்லது எழுது.

**Extend,** *v.* நீட்டு; பரப்பு; விரிவாக்கு, *a.* extensible, விரிவான. *n.* extensibility, விரிவு; பெருக்கம். extension, பெருக்கம்; நீட்சி; விரிவு; தொடர்ச்சி; நீட்டுதல்; விரிவாக்கல்; மிகுதிப்படுத்திய பகுதி; தொடர்பகுதி; விட்ட தொடர்பு; (வாய்வியல்) (சொற் பொருள்) சுட்டுப்பரப்பு; சுட்டு விரிவு. *a.* extensive, பரப்புள்ள; பரப்புச் சார்ந்த. *n.* extensor, (உடல் நூல்) நீட்டுத் தசை.

**Extent,** *n.* பரப்பு அகல நீளங்கள்.

**Extenuate,** *v.* குற்றந் தணித்துக் காட்டு; தண்டனை குறை. *n.* extenuation. *a.* extenuatory.

**Exterior,** *a.* வெளிப்புறமான. *n.* வெளிப்புறம்.

**Exterminate,** *v.* வேருடன் அழி. *n.* extermination. *n. ag.* exterminator.

**External,** *a.* வெளிப்பகுதியான; புறம்பான; அயலான. *n.* pl. externals, வெளிப்பகுதிகள்; முக்கியமற்றவை.

**Exterritorial,** *a.* நாட்டின் சட்ட திட்டத்துக்கு உட்படாத.

**Extinct,** *a.* அழிந்துபோன; அவிந்த; மாய்ந்த. *n.* extinction.

**Extinguish,** *v.* அவி; அழி; மறை. *n. impers.* extinguisher, தீ அணைக்கும் கருவி.

**Extor,** *v.* புகழ்ந்து பேசு.

**Extort,** *v.* கைப்பற்று; பிடுங்கு. *a.* extortion. *a.* extortive. *a.* extortionate.

**Extra,** *a. adv.,* (முன்னிணைப்பு விகுதி) மிகைப்படியான; தனி மிகையான; தனிச்சிறப்பான; மிகையான.

**Extract,** *n.* பிழிவு; சாறு; குடிநீர்; வடிசாறு; வடிநீர்; சாற்று மருந்து; சுருக்கம்; பொழிப்பு; சாரம்; பொறுக்கு மணி; பகுதி; கூறு; பத்தி. *v.* புத்தகத்திலிருந்து சில பகுதிகளை எடு; வலிந்து எடு; பொறுக்கு; பிரித்தொடு; பிழி. *n. (vbl.)* extraction. *n. ag.* extractor.

**Extradition,** *n.* நாடுகடத்தப்பட்டு வந்தவர்களைத் திருப்பி ஒப்படைத்தல்; நாடு கடத்து; ஒப்படைப்பு. > *a.* extradite.

**Extramural,** *a.* கட்டட எல்லைக்குப் புறம்பான; மதிற் புற; ‘மனைப்புற’.

**Extraneous,** *a.* அயலான; புறம்பான.

**Extraterritorial,** *a.* ஒரு நாட்டு அரசாங்கத்துக்கு அப்பாற்பட்ட.

**Extraordinary,** *a.* அளவு மீறிய; தனிப்பட்ட; தனிச் சிறப்புடைய; வழக்கமீறிய; பொதுநிலை கடந்த; வியப்பான.

**Extravagant,** *a.* எல்லைமீறிய; அளவுமீறிச் செலவு செய்கிற; அழிம்பான; அளவு கடந்த; வீண் மிகையான; வீணான; வெற்றுச் செலவான; ஊதாரித்தனமான. *n.* extravagance, ஊதாரித்தனம்; கழிமிகை; மட்டுமிகை.

**Extravaganza,** *n.* வரம்பு மீறிய கிளர்ச்சிப் பாடல். வரம்பற்ற பேச்சு; செயல்.

**Extreme,** *n.* இறுதி; கோடி; புறக்கோடி. *a.* புறக்கோடியான; முனைக்கோடியான; தெறித்த; வெறித்த; உச்சநிலையுடைய. *(pl)* இருதிறக்கோடிகள்; இருதிறப் பண்பு உச்சநிலைகள்; எதிர் பண்புகள். *n.* extremity, எல்லை; மிக்க அளவு; இடர்.

**Extricate,** *v.* சிக்கலிலிருந்து விடுபடு; விடுவி. *n.* extrication. *a.* extricable.

**Extrinsic,** *a.* (x intrinsic) வெளிப் புறத்துக்குரிய; அவசியமில்லாத; புறப் பண்பான; சினைப் பண்பான.

**Extrovert,** *n.* (x introvert) வெளிச் செய்திகளிலேயே கருத் துள்ளவர்.

**Exuberant,** *a.* செழிப்பான. *n.* exuberance.

**Exude,** *v.* புறங்கசி; வெளிப்படுவி. *n.* exudation.

**Exult,** *v.* மிக்க மகிழ்ச்சியடை. *n.* exultant. *n.* exultation.

**Eye,** *n.* கண்; பார்வை; கண் உறுப்பு. *v.* பார்; கவனித்துப் பார். *comb. n.* eyeball, கண்விழி. *n.* eyebrow, புருவம். *n.* eyelash, கண்ணிமை (மயிர்). *n.* eyelid, கண்ணிமை (கதுப்பு). *n.* eye-piece, பார்க்கும் கண்ணாடிச் சில். *n.* eyesight, பார்வை, *n.* eyeshot, பார்வை எல்லை, *n.* eyesore, கண்நோவு; கண்ணூறு. *n.* eyewitness, நேர்சான்று; கட்சான்று.

**Eyrie, Eyre,** (*see* aerie).

# F

**Fable,** *n.* கட்டுக் கதை; நீதிக் கதை; பழங்கதை; புள்விலங்குக் கதை; புரட்டு. *v.* கட்டுக்கதை சொல்லு. *a.* fabulous, பழம்புகழ் உடைய; வியத்தக்க; நம்பத்தகாத புனை சுருட்டான. *n. pers. see* fabulist.

**Fabric,** *a.* அமைப்பு; சட்டம்; கட்டுமானப் பொருள் (தரம்) நெசவுமானப் பொருள் (தரம்); மூலப்பொருள் (தரம்). *v.* fabricate, (கதை) கட்டு; அமை; (பொய்யாகக்) கற்பனை செய். *n.* fabrication, கட்டுக்கதை; பொய்; பொய்புனைவு.

**Fabulist,** *n.* (fable) கட்டுக்கதை இயற்றுபவன்; பொய்யன்.

**Facade,** *n.* (ஃவசேட்) கட்டடத்தின் முகப்பு; முன் பக்கம்.

**Face,** *n.* முகம்; முன் பக்கம்; பக்கம்; தோற்றம்; மனஉரம். *v.* எதிராக நில். திரும்பு; உறுதியாக எதிர்த்து நில்.

**Facer,** *n.* முகத்திலடிக்கும் அடி; மிகு துயர்.

**Facet,** *n.* (வைரம் பளிங்கு முதலிய வற்றின்) பட்டை; முகப்புக் கூறு.

**Facetious,** *a.* நயமிக்க; நயத்திற முடைய; *n.* facetiousness, குறும்பு.

**Facial,** *a.* முகத்திற்குரிய.

**Facile,** *a.* எளிதாகச் செய்யக் கூடிய. *v.* facilitate, எளிதாக்கு. *n.* facility, வாய்ப்புத்திறம்; எளிமைத்திறம்; வாய்ப்பு.

**Facing** *n.* முன் பக்கம்; முகப்பு.

**Facsimile,** *n.* சரிமாதிரி; உருவ நேர்படி.

**Fact,** *n.* உண்மை நிகழ்ச்சி; உண்மை. *a.* factual.

**Faction,** *n.* கட்சி; உட்பகை; உட்குழு; தன்னலக்கும்பல். *a.* factious.

**Factitious,** *a.* செயற்கையான; போலியான.

**Factor,** *n.* 1. வாணிகப் பேராள்; தரகர்; நிலத்தரகர்; 2. எண்கூறு; காரணக் கூறு; மூலக்கூறு. (1) *n. abs.* factorage, தரகு (த் தொழில்) (2) *a.*, *n.* factorial, (கணக்கியல்) கீழ் இலக்கப் பெருக்கம் (ஆன)

**Factory,** *n.* தொழிலகம்; தொழில் மனை; பட்டறை; தொழிற் சாலை; பண்டக சாலை; ஆலை.

**Factotum,** *n.* பலதிற வேலையாள்.

**Faculty,** *n.* செயல் திறச்சார்பு; செயல்திறன்; மனத்திறன்; இயற்கைப் பெற்றி; திறம்; கலைத்திற அரங்கம்.

**Fad,** *n.* பற்றுவெறி; பற்று மரபு. *n. pers.* faddist.

**Fade,** *v.* வாடிப்போ; மங்கு; அழகு, நிறம் முதலியவற்றை இழ.

**Faeces,** *n. (pl)* மலம்

**Faerie, Faery.** *n., a.* (fairy காண்க)

**Fag,** *v.* சோர்வு மிகும்படி வேலை செய். *n.* வேலையாள்.

**Faggot, Fagot,** *n.* விறகுக் கட்டு.

**Fail,** *v.* தவறு; ஒழுங்கு தவறு; குறைவாகு; தோல்வியடை. *n.* failing; குறைபாடு வலுவின்மை. *n.* failure, தோல்வி; தோல்வி யடைந்தவர்.

**Fain,** *a., adv.* மகிழ்ச்சியான; மகிழ்ச்சியுடன்.

**Faint,** *a.* மயக்கமான; மங்கலான. *v.* மயங்கு; உணர்விழந்து விழு. *n.* faintness.

**Fait,** 1. *a.* அழகான; (ஆள்) செந்நிறமான; வெண்ணிறமான; அந்தசந்தமான; நேர்மையான; (அளவு) பெரும்பான்மையான; போற்றத்தக்க; (படி) திருந்திய; திருத்தமான . *v.* அழகானாக்கு; 2. சேந்தை. (1) *adv.* fairly, தெளிவாக; உண்மையாக; நன்கு. *n. abs.* fairness.

**Fairy,** *n.* வனதெய்வம். *a.* கட்டுக் கதையான; கற்பனையான. *n.* fairyland, கற்பனை உலகு.

*fait accompli, n.* செய்துமுடிந்த காரியம்.

**Faith,** n திடநம்பிக்கை; பற்றுறுதி சமயம்; கோட்பாடு; நாணயம் காத்தல். *a.* faithful, திடப் பற்றுடைய; சமயப்பற்றுடைய; நம்பிக்கைக்குரிய. *adv.* faith fully. *n.* faithfulness. *a.* (*neg.*) faithless, நம்பிக்கைக்கு மாறு செய்கிற. *n. (neg.)* faithless-ness.

**Fake,** *n, v.* போலித்தனம் போலி யான பொருள் (செய்)

**Falange,** *n.* (ஸ்பெயின் நாட்டில் 1939க்குப் பிறகு ஏற்படுத்திய) அரசியல் மன்றம். *n. pers.* falangist.

**Falchion,** *n.* கொடுவாள்.

**Falcon,** *n.* வேட்டைப்பருந்து. *n. pers.* (falconer. *n.* falconry, பருந்து வளர்த்துப் பழக்கி வேட்டையாடுதல்.

**Fall,** (fell, fallen) விழு; அழிந்துபோ; விலையிறங்கு; தவறாகு; தற்செயலாக நிகழ். *n.* வீழ்ச்சி; இறக்கம்; தவறுதல்; இலையுதிர் காலம்.

**Fallacy,** *n.* பிழையான வாதம்; தவறான எண்ணம்; குற்றங் குறைபாடு. *a.* fallacious.

**Fallible,** *a.* தவறு செய்யுமியல் புள்ள. *n.* fallibility. *a. (neg.)* infallible. *n. (neg.)* infallibility.

**Falling sickness,** *n.* வலிப்பு நோய்.

**Fallow,** *n.* தரிசுநிலம்; உழுத, ஆனால் பயிரிடாத நிலம்.

**Fallow-deer,** *n.* கருமஞ்சள் நிறமுள்ள மான் வகை.

**False,** *a.* பொய்யான; ஆதாரமற்ற; நாணயமில்லாத *n.* falseness; falsity. *adv.* falsely. *n.* false hood. உண்மைக்கு மாறானது; பொய்ம்மை. *v.* falsify, தவறாக்கு; நேர்மையற்ற முறையில் மாற்று; பொய்கூறு; *s. n.* falsetto, வளர்ந்தவர்; போலி இசைக்குரல்.

**Falter,** *v.* தயங்கு; தள்ளாடு; நடுக்கம் கொள். *adv.* falteringly.

**Fame,** *n.* , *v.* புகழ்; பலரறிந்த நிலை (செய்). *a.* famed, புகழ்ந்து கூறப்படுகிற. *a.* famous.

**Familiar,** *a.* பழக்கப்பட்ட; அறியப்பட்ட; நன்கு தெரிந்த. நெருங்கிய நண்பன். *adv.* familiarly. *n.* familiarity, நெருங்கிய பழக்கம். *v.* familiarize, நன்கு பழகச் செய்.

**Family,** *n.* குடும்பம்; இனம்.

**Famine,** *n.* பஞ்சம்; கருப்பு; நிரப்பு; வறட்சி; பரு; முடை; குறைபாடு; குறை.

**Famish,** *v.* பசியால் வாடு. *n.* famishment.

**Fan,** 1. *n.* (கலை, சமூக) ஆர்வலர். 2. *n.* விசிறி; முறம். *v.* கூலமணி தூற்றும் கருவி; முறம். (2) *n. ag.* fanner,

**Fanatic,** *a.*, *n.* வெறிகொண்ட (வர்); வெறித்த(வர்); விடாப்பிடி கொண்ட(வர்); வெறியர் (ஆன). *a.* fanatical. *n. abs.* fanaticism, கோட்பாட்டு வெறி; கொள்கை விடாப்பிடி.

**Fancy,** *n.* போலிப் புனைவு: மனம் போல உருப்புனைதல்; காதல் புனைவு; புனைவு. கற்பனைசெய்; கருது; விரும்பு; விசித்திரமான; சித்திர வேலைப் பாடுள்ள; நடை முறைக்கு அப்பாற்பட்ட

**Fane,** *n.* (செய்யுள் வழக்கு) கோயில்.

**Fanfare,** *n.* எக்காள வகை.

**Fang,** *n.* கோரைப்பல்; நச்சுப்பல்.

**Fantasia,** *n.* விசித்திரப் பாடல்.

**Fantastic,** *a.* முரண் புனைவான; நம்பத்தகாத.

**Fantasy, phantasy,** *n.* கற்பனை யுருவங்கள் தோற்றுவிக்கும் சக்தி; வெளித் தோற்றம்; புனைவு.

**Far,** *adv.*, *a.* (farther, farthest) தொலைவான; தொலைவில் (உள்ள).

**Farce,** *n.* கேலிக்கூத்து. *a.* farcical.

**Farcy,** *n.* குதிரைத் தொற்று நோய் வகை.

**Fare,** *v.* 1. நிகழ்; நட (How do you fare? நலந்தானா?) 2. *n.* உணவு, உணவாகக்கொள்; உணவாகு. 3. வண்டிச் சத்தம்; பயணக்கூலி; வாடகை வண்டியில் செல்பவர். *v.* பயணமாகு.

**Farewell,** *int.* போய் வா. *n.* வழியனுப்பு; பிரியா விடை; விடைபேறு.

**Farm,** *n.* விளைநிலம்; பண்ணை; பண்ணை வீடு. *v.* பயிரிடு; குத்தகைக்கு விடு.

**Farmer,** *n.* குடியானவன்.

**Farrier,** *n.* (குதிரை) இலாட மடிப்பவன்.

**Farther, farthiest,** *a., adv. see* far

**Farthing,** *n.* ஆங்கில நாட்டுக் கால்துட்டு.

**Fascinate,** *v.* கண்ணைக்கவர்; பார்வையால் மயக்கு. *n.* fascination.

**Fascism,** *n.* பொதுவுடைமை எதிர்ப்புக் கட்சி; இத்தாலிய வல்லாண்மைக் கட்சி; நாட்டுரிமைச் சமதர்மக் கட்சி. *n. pers.* fascist.

**Fashion,** *n.* காலவண்ணம்; தினுசு; நாண்மரபு; அமைப்பு; உயர்தர சமூகத்தினர் (குழு). *v.* உருவாக்கு; அமை. *a.* fashionable.

**Fast,** 1. *v.* உண்ணாமலிரு; நோன் புகொள். *n.* உண்ணா நோன்பு 2. *a.* விரைவான. 3. உறுதியாக இணைக்கப்பட்ட. உறுதியாக; கெட்டியாக; விரைவாக; (3) *see* fastness. *v.* fasten, இணை; கட்டு; இறுக்கு.

**Fastidious,** *a.* எளிதில் நிறை வடையாத; மிகுகண்டிப்பான; சுவைத்திறமுடைய; அழுத்தப் பாடான. *n.* fastidiousness.

**Fastness,** *n.* உறுதித்தன்மை; அரண்

**Fat,** *a.* கொழுத்த; பருத்த; செழிப் பான செல்வமுள்ள. *n.* கொழுப்பு. *v.* fatten. *n.* fatness. *a.* fatty.

**Fatal,** *a.* ஊழ்த்திறம்பட்ட; சாவுக் குரிய; சாவுதருகிற; *n.* fatalism, ஊழ்வலிக்கொள்கை; ஊழ்வலி யச்சம். *n. pers.* fatalist. *n.* fatality, ஊழ்வலி, ஊழ்முறை இறுதி; ஊழ்முறைமை.

**Fate,** *n.* ஊழ்; முடிவு; அழிவு; (ஊழ்) தீர்ப்புச் செய். *a.* fated, (அழியும் படி) விதிக்கப்பட்ட. *a.* fateful, முடிவுக்குரிய; முக்கியமான.

**Father,** *n.* தந்தை; மதகுரு; ஆக்கியோன். *v.* தந்தைபோல் இரு; ஆதரவளி; பிறப்பு *n.* fatherhood.

**Father-in-law,** *n.* மாமனார்; மனைவியின் தந்தை; கணவனின் தந்தை.

**Fatherland,** *n.* பிறந்த நாடு; தந்தையர் நாடு. (தாய் நாடு).

**Fathom,** *n.* ஆறு அடி அளவு; பாகம். *v.* ஆழங்கண்டுபிடி; கருத்தை அறி. *a.* fathomable, fathomless.

**Fatigue,** *n.* களைப்பு; சோர்வு. *v.* களைப்படையச் செய்.

**Fatling,** *n.* கொழுங்கன்று.

**Fatuous,** *n.* முட்டாள் தனமான. *n.* fatuity, fatuousness.

**Fault,** *n.* குறைபாடு; தவறு; பிழை; தொடர்பு அறுதல். *a.* faulty, *(neg.)* faultless.

**Fauna,** *n.* (நாட்டு) உயிரினம்.

**Favour,** *n.* உதவு; ஆதரவு; அன்புச் செயல் *v.* உதவிசெய்; ஆதரி. *a.* favourable.

**Favourite,** *n.* தனிப்பற்றுக் குரியவர்; உரியது. *a.* மிக்க அன்

புக்குரிய. *n.* favouritism. தனிப்பற்று.

**Fawn,** *n.* மான்குன்று. *a.* மங்கிய செம்மஞ்சள் நிறமான. *v.* (மான்) கன்று ஈனு.

**Fawn,** *v.* (உயிர்கள்) கோதிக்குலவி அன்புகாட்டு; கெஞ்சி ஆதரவைப் பெறு. *a.* fawning. *adv.* fawningly.

**Fay,** *n.* பேய்த் தெய்வம்.

**Fealty,** *n.* தலைவரவேற்பு; தலைமை வழிபாடு; பணிவேற்பு.

**Fear,** *n.* அச்சம். *v.* அஞ்சு. *a.* fearful. *a.* fearsome. *(neg.)* fearless. n, fearsomeness. *n.* *(neg.)* fearlessness.

**Feasible,** *a.* செய்யக்கூடிய; அமைக்கக்கூடிய. *n.* feasibility, feasance, கடமை செய்தல்.

**Feast,** *n.* விருந்து. *v.* விருந்து சாப்பிடு.

**Feat,** *n.* வீரச்செயல்; அருஞ்செயல்; செப்படி வித்தைச் செயல்.

**Feather,** *n.* இறகு. *v.* இறகினால் மூடு; இறகுபோல் அசை *(idiom)* feather one's nest. தனக்குச் செல்வம் திரட்டு.

**Feartherweight,** *n.* 115 கல்வரை எடைக்கு மேற்படாத மல்லன்; நொய்ய பொருள்; சிறு திறத்தவர். *a.* முக்கியமல்லாத; சிறுதிற (மான).

**Feature,** *n.* முகத்தோற்றம்; முகத்தின் உறுப்புகள்; கவனத்தைக் கவரும் சிறப்புக்கூறு *v.* முக்கியப் பகுதியாய் அமைந்திரு; விளம் பரப்படுத்து; சிறப்புக்கூறாயமை.

**February,** *n.* (ஏறத்தாழ தை 15 முதல் மாசி 15 வரையுள்ள) ஆங்கில ஆண்டின் இரண்டாம் மாதம்.

**Fecund,** *a.* செழிப்பாக விளைகிற; மிகுதி இனம் பெருக்குகிற. *n.* fecundity.

**Federal,** *a.* கூட்டுக் குழாமான; இணைப்பரசியல் சார்ந்த; கூட்டரசு சார்ந்த. *n. abs.* federalism. *v.* federate, (பல நாடுகள்) ஒப்பந்தம் செய்து கொண்டு ஒன்றுபடு. *n.* federation, கூட்டரசு; இணை யரசு; கூட்டுக்குழு; கூட்டு இணைவு.

**Fee,** *n.* கட்டணம்; கூலி; சம்பளம்; ஊதியம். *v.* (feed) கூலி கொடு; கூலிக்கு அமர்த்து.

**Feeble,** *a.* நொய்மையான; மந்தமான; வலுக்குறைவுள்ள; மெல்லிய; அறிவுச் சோர்வுள்ள. *n.* feebleness. *adv.* feebly. *(comb)* feebleminded, அறிவு வளர்ச்சியற்ற; மடமையுள்ள. *n.* feeblemindedness.

**Feed,** 1. *v.* (fed) உணவு கொள்; உண்பி. 2. [*see* fee.] *n. ag.* feeder.

**Feel,** *v.* (felt) தொட்டுப்பார்; தொடு; உணர்; துயரப்படு; கண்டிரங்கு. *n.* feeler, உணர்ச்சிக் கருவி; முன்னறி கருவி; தொட்டறி உறுப்பு (பூனை மீசை முதலியன); சோதனை முயற்சி.

**Feign,** *v.* பாசாங்கு செய். *a.* feigned.

**Feint,** *v.* பாசாங்கு; போலித் தாக்குதல். *v.* பாசாங்கு செய்.

**Felicitate,** *v.* வாழ்த்துக் கூறு; மகிழ்ச்சி தெரிவி. felicitous, மகிழ்ச்சி தருகிற; பொருத்தமான. *n.* felicitation, பாராட்டு.

**Felicity,** *n.* மிகுமகிழ்ச்சி; பொருத்தமாகப் பேசுந்தன்மை.

**Feline,** *a.* பூனை போன்ற; பூனைக்குரிய

**Fell,** 1. *v.* விழச் செய்; வெட்டு. 2. [*p. t.* of fall.] 3. *a.* கொடிய 4. *n.* தோல்

**Fellah,** *n.* (எகிப்து நாட்டு) வேளாளர்.

**Fellow,** *n.* கூட்டாளி; தோழன்; ஆள்; பயனற்றவன்; கல்லூரி அல்லது கழகத்தில் சேர்ந்தவன். *n.* fellowship, தோழமை கல்விக் கழக உறுப்பினர் நிலை (அல்லது உதவிப் பொருள் ஏற்பாடு).

**Felon,** *n.* கொடுங் குற்றவாளி; கொடியவன். *n. abs.* felony, *a.* felonious.

**Felt,** 1. *n.* கம்பளத்தில் ஒருவகை. *v.* கம்பளத்தால் மூடு. 2. [*pa.* and *pre.* of feel]

**Female,** *n.* பெண்; பெண்பால்.

**Feminine,** *a.* பெண்பாலுக்குரிய.

**Fen.** *n.* சதுப்பு நிலம்.

**Fence,** 1. *n.* வேலி; வேலி அரண்; பாதுகாப்பு. *v.* வேலியமை. வளைத்துத் தற்காப்புச் செய்; சூழ் 2. *n.* வாள்போர். *v.* வாள்போர் செய்; வாதத்தால் தற்காப்புச் செய். 3. திருட்டுப் பொருள் வாங்குகிறவன் (நிலையம் (1) (2) *s. n.* fencing, வேலி (யிடல்); வேலியமைப்பு; வாள்போர். (2) (3) *n. ag.* febcer.

**Fend,** *v.* தடு; விலக்கு; பயனீட்டுக்காக ஒதுக்கி வை.

**Fender,** *n.* பாதுகாப்புச் சாதனம்; அடுப்பில் நெருப்பைத் தாங்கும் பகுதி (கப்பல்) மோதுவதால் சேதத்தைக் குறைக்கும் கருவி.

**Ferment,** *n.* குழப்பம்; பொங்குதல்; காடிச்சத்து; *v.* பொங்கச்செய்; பொங்கு; புளிப்பாகு. *n.* fermentation.

**Fern,** *n.* சூரல்; மலைநாட்டுப் பூண்டு.

**Ferocious,** *a.* மூர்க்கமான; கொடிய. *n.* ferocity.

**Ferret,** *n.* கீரி இனத்தைச் சேர்ந்த உயிரினம். *v.* வேட்டையாடு; பொறுமையாகத் தேடியெடு.

**Ferriage,** *n.* (ferry) படகில் செல்லல்; படகுக் கூலி.

**Ferromagnetic,** *a.* (இரும்பு போல்) காந்தத் தன்மையுள்ள *n.* ferromagnetism.

**Ferrotype,** *n.* இரும்புத் தகட்டில் எடுத்த படம்.

**Ferrule,** *n.* (கைத்தடி முதலிய வற்றின் முனையிலுள்ள) பூண்.

**Ferry,** *v.* படகு உகை; பரிசல் செலுத்து. *n.* படகுத்துறை. *n. pers.* ferryman. *see* ferriage. *n. comb,* ferryboat, படகு.

**Fertile,** *a.* செழிப்பான; கற்பனைத் திறமிக்க. *n.* fertility. *v.* fertilize,

வளமுறச் செய். *n.* fertilization. *n.* fertilizer, செயற்கை உரம்; பொலிவூட்டும் உயிர்.

**Ferula, Ferule,** *n.* தண்டனை யளிக்க உதவும் கோல்.

**Fervent,** *a.* ஆர்வமுள்ள. *adv.* fervently. *n.* fervency.

**Fervid,** *a.* ஆர்வமுள்ள; வெப்பமான.

**Fervour,** *n.* ஆர்வம்; உணர்ச்சித் துடிப்பு; வெப்பம்.

**Festal,** *a.* மகிழ்வுடைய; விழா சார்ந்த.

**Fester,** *v.* (புண் சிரங்கு முதலியன) சீழ்பிடி; அழுகு. சீழ்பிடித்த நிலை

**Festival,** *a., n.* விழாவுக்குரிய (நாள்); கொண்டாட்டம்.

**Festive,** *a.* விழாவுக்குரிய; மகிழ்ச்சிகரமான. *n.* festivity.

**Festoon,** *n.* தோரணம். *v.* தோரணத்தால் அணிசெய்.

**Fetch,** *n.* போய்க் கொண்டு வா; விலைபெறு. *n.* தந்திரம் மகிழ்ச்சி தருகிற; கவர்ச்சியான. *a.* fetching, மகிழ்ச்சி தருகிற; கவர்ச்சியான

**Fete,** *n.* விழா. *v.* விழாக் கொண்டாடு.

**Fetid,** *a.* தீயவாடையுள்ள.

**Fetish,** *n.* போலி வணக்கப் பொருள்; போலிப் பாராட்டு; போலிக்கொள்கை வழக்கம். *n.* fetishism. *n. pers.* fetishist.

**Fetter,** *n.* விலங்கு; பந்தம்; கட்டுமானம். *v.* விலங்கிடு

**Fetters,** சிறைப்பட்ட நிலை; தடை.

**Fetus,** *n.* [foetus] பார்க்கவும்.

**Feud,** 1. *n.* மரபுப் பகை; பழம் பகை; நீண்டநாட் பகை; குடும்பப் பகைமை; கலகம். 2. *n.* மானியம்; ஊழியத்திற்காக விடப் படும் நிலமானியம்; ஊழியர் நிலமானியம். (2) *a.*, etc *see* feudal, feudatory.

**Feudal,** *a.* (feud 2) நில மானியத்திற்குரிய; நிலமானிய முறைக்குரிய. *n.* feudalism.

**Feudatory,** *a.* நிலமானித்துக்குரிய *n.* feudalism. மானியக்காரர்; கீழ்வாரக்காரர்; வாரியர்.

**Fever,** *n.* காய்ச்சல்; ஆர்வத் துடிப்பு; மிகுந்த கிளர்ச்சி. *a.* feverish.

**Few,** *a., pron.* சில; பலவல்லாத; மிக அருகலான.

**Fez,** *n.* (துருக்கிக்) குல்லாய்.

*fiance, n. (g. fiancee)* மண உறுதி செய்யப்பட்டவர்

**Fiasco,** *n.* தோல்வி; முடிவு; குளறுபடி.

**Fiat,** *n.* (இலத்தின் வியங்கோள் = ஆகுக.) உத்தரவு; சட்டம்.

*fiat lux, (int.)* (இலத்தீனத் தொடர்) ஒளி உண்டாகட்டும்.

**Fib,** *n.* பொய்; சிறு திறம். *v.* பொய் கூறு.

**Fibre,** *n.* நாரியற் பொருள்; மெல்லிய நூல்; நூலிழை; இயல்பு; குணம். *a.* fibrous.

**Fickle,** *a.* மாறும் இயல்புள்ள. *n.* fickleness.

**Fiction,** *n.* புனை கதை; உண்மை யல்லாதது; பொய். *a.* fictitious, கற்பனையான; போலியான. *s. a.* fictive.

**Fiddle,** *n.* இசைக்கருவி (யாழ்) வகை *(int.)* மண்ணாங்கட்டி! *v.* யாழ் வாசி; வீண் காலம் போக்கு. *a.* fiddling வீணான. *n.* fiddlestick, யாழ் இயக்கும் வில்; சிறுதிறப்பொருள்

**Fiddle - faddle,** *n.* வீண் பேச்சு; அரட்டை. *v.* வீண் பொழுது போக்கு.

**Fidelity,** *n.* பற்றுறுதி; அன்புறுதி; மெய்யன்பு; மெய்ப்பற்று; நம்பிக்கை; நல்லெண்ணம்.

**Fidget,** *v.* படபடத்துக் கொண்டிரு; துடியாய்த் துடி; பசபசத்துக் கொண்டிரு. *n.* அமைதியற்ற நிலை. *a.* fidgety. *n.* fidgetiness.

**Fiducial,** *a.* ஆதாரமான; அடிப்படையான.

**Fidiciary,** *a.* நம்பிக்கையாக விடப் பட்ட, *n.* அறப் பொறுப்பாள்.

**Fie,** *int.* சீ! சீ! கேவலம்!

**Fief,** *n.* மானியம்.

**Field,** *n.* வயல்; விளை நிலம்; விளை; பற்று; களம்; களரி; கழனி.

**Field artillery,** *n.* போர்க்களப் பீரங்கி.

**Field day,** போர்க்களப் பயிற்சி நாள்; கொண்டாட்டம்.

**Field - glass,** *n.* சிறு தொலை நோக்கிக் கண்ணாடி. [*see* binocular].

**Field-marshal,** *n.* படைத் தலைவர்.

**Fiend,** *n.* பேய்; கொடியவன். *a.* fiendish.

**Fierce,** *a.* அடல் வாய்ந்த; மூர்க்கமான; உக்கிரமான; கொடிய. *n.* fierceness.

**Fiery,** *a.* நெருப்பைப் போன்ற; கோபமுள்ள.

**Fife,** *n.* ஓர் இசைக் கருவி. *n. pers.* fifer.

**Fifteen,** a., *n.* பதினைந்து. *a., n.* fifteenth, பதினைந்தாவது (ஆன); பதினைந்தில் ஒன்று (ஆன).

**Fifth,** *a. n.* ஐந்தாவது (ஆன); ஐந்திலொன்று (ஆன). *adv.* fifthly, *phr. n.* fifth column, ஐந்தாம் படை, (அஃதாவது) உட்பகை; எதிரியின் உளவாளி. *n. pers.* fifth columnist, ஐந்தாம்படைக்காரர்; எதிரி உள்ளாள்.

**Fifty,** *a. n.* ஐம்பது. *a., n.* fiftieth, ஐம்பதாவது(ஆன); ஐம்பதி லொன்று (ஆன).

**Fig,** *n.* அத்திமரம்; அத்திப்பழம்; மதிப்பற்றது.

**Fight,** *v.* போர் செய்; சண்டையிடு; சச்சரவுசெய்; எதிர்த்து நில். *n.* போர்; சச்சரவு; சண்டை.

**Figment,** *n.* கட்டுக்கதை; கற்பனை.

**Figuration,** *n.* (figure) உருவம்; தோற்றம்.

**Figurative,** *a.* (figure) சித்திரமான; அணி அமைந்த; உவம உருவகப் பொருள் குறித்த.

**Figure,** *n.* உருவம்; சித்திரம்; எண்; (figure of speech) அணி; சொல்லழகு வகை. *a. see* figurative.

**Figure head,** *n.* பெயரளவுக்குத் தலைவன்; பொம்மை உரு.

**Filament,** *n.* இழை.

**Filaria,** *n.* (*pl.* filariae). நோய்ப் புழு வகை. *a.* filarial. *n.* filariasis, நுண்புழுவினால் தோன்றும் நோய் வகை.

**Filch,** *v.* சிறு அளவில் திருடு; களவு செய். *n.* filcher.

**File,** *n.* 1. அரம் *v.* அராவு. 2. *n.* கோவை; கட்டு; அடுக்கு; தொகை; தொகுதி; கோப்பு; *v.* ஒழுங்காக வை; கோத்து வை; கோப்பில் சேர்; இணை; பதிவு செய். (1) *n.* filing(s), அராவிய தூள். *comb. n.* file-pad, கோப்பு அட்டை; கோப்பு உறை.

**Filial,** *a.* பிள்ளைத் தொடர்புக் குரிய; மகன் அல்லது மகளுக் குரிய; தாய்பிள்ளை சார்ந்த; தந்தை மகன் சார்ந்த.

**Filiation,** *n.* மரபு உறுதி செய்தல்.

**Filibuster,** 1. *v.* கொள்ளையிடு. *n.* நாடுகடந்து கொள்ளையிடும் படைஞன். 2. *n., v.* மன்ற நடவடிக்கையை ஆதாளி (பேரொலி) செய்து தடு(ப்பவர்).

**Filicide,** *n.* குழந்தைக் கொலை.

**Filigree,** *n.* கசவுப்பூவேலை; சரிகைச் சித்திர வேலை.

**Fill,** *v.* நிரப்பு; போதுமானதுகொடு. *n. ag. impers.* filler. நிறைவு; ஏராளம்.

**Fillet,** *n.* தலைமயிரைக் கட்டும் கச்சை; மயிர்க்கொடி; பக்குவப் படுத்திய இறைச்சி. *v.* மயிர்க் கச்சையினால் கட்டு.

**Fillip,** *n.* சுண்டுதல்; தூண்டுதல்; தொடக்கவிசை. *v.* விரலை மடக்கிச் சுண்டு.

**Filly,** *n.* பெண் குதிரைக் குட்டி; அழகிய சிறுமி.

**Film.** *n.* மென் தோல்; படலம்; மெல்லிய சவ்வு; மெல்லிய ஏடு. *v.* காட்சிப் படமெடு; மெல்லிய சவ்வினால் மூடு. *a.* filmy.

**Filose,** *a.* நூலிழைபோன்ற; நூலிழையில் முடிகிற.

**Filter,** *v.* இறு; வடிகட்டு. *n.* வடிகட்டும் கருவி; வடிகருவி. *n.* filterate, வடிகட்டிய நீர். *n. abs.* filteration. *(comb.) n.* filterbed, வடிகட்டு தளம்; இறுப்புப் படிகை.

**Filth,** *n.* அழுக்கு; மாசு; மண்டி, சேறு; அருவருப்புப் பொருள். *a.* filthy, *n.* filthiness.

**Fin,** *n.* மீனின் துடுப்பு. *a.* finny.

**Final,** *a.* முடிவான; கடைசியான, *n.* முடிவு. *n.* finality, முடிநிலை; அறுதி.

**Finale,** *n.* முடிவு; முடிவுப் பகுதி; நிறைவு.

**Finance,** *n.* பொருள் நிலை. செல்வ நிலை; நிதிநிலை; வருமானத்தை மேற்பார்த்தல். *v.* முதல் அளி; முதலீடு தந்துதவு; பணப் பொறுப்பு ஏற்றுக்கொள்; பணம் போடு. *a.* financial. *n. pers.* financier, பொருளியல் வல்லுநர், *v.* கொடுக்கல் வாங்கல் செய்.

**Finch,** *n.* சிறு பறவை வகை.

**Find,** *v.* (found) கண்டுபிடி; எதிர்ப்படு; தேடி எடு; தேவை யானதை அடை. *n.* புதையல்; கண்டு பிடிப்பு. *n.* finding, தீர்ப்பு *conn. v. see* found; *n. ag. pers. impers.* finder, கண்டுபிடிப்பவர்; (பீரங்கி, தொலை நோக்காடி) பொருள் சுட்டும் பொறி உறுப்பு.

**Fine,** 1. *a.* நேர்த்தியான; தூயதான; சிறந்த. *v.* நேர்த்தியாக்கு; மென்மை யாக்கு. 2. *n.* தண்டப் பணம். *v.* தண்டம் விதி. (1) *n.* fineness. *s. n.* finery, அணிமணி. *(comb.) n.* fine art. கவின் கலை; அழகுக்கலை.

**Finesse,** *n.* தந்திரம்; சூழ்ச்சி வகை. *v.* சூழ்ச்சி செய்.

**Finger,** *n.* விரல், *v.* விரலால் தொடு; (இசைக்கருவி) மீட்டு. *n.* fingering, இசைக்கருவையை மீட்டுதல்; தடவுதல்.

**Fingerboard,** *n.* (இசைக்கருவி யில்) விரல்களை அழுத்தும் கட்டை.

**Fingerprint,** *n.* விரல் அடையாளம்.

**Finis,** *n.* முடிவு; இறுதி; வேலைக் கூறு.

**Finish,** *v.* முடிவு செய். *n.* முடிவு; வேலை நிறைவு.

**Finished,** *a.* வேலை முற்றிய.

**Finite,** *a.* எல்லைக்குட்பட்ட; அளவுடைய; வரையறையுள்ள.

**Fiond, fiord,** *n.* கடற் கழி.

**Fir,** *n.* ஒருவகை மரம்.

**Fire,** *n.* நெருப்பு; தீ; அனற் பிழம்பு; பீரங்கி சுடுதல்; உணர்ச்சி மிகுதி. *v.* எரியச் செய்; பீரங்கி; துப்பாக்கி முதலியன சுடு. *n. (comb)* fire engine, தீ அணைக்கும் பொறி.

**Firearms,** *n.* துப்பாக்கி, பீரங்கி முதலிய கருவிகள்.

**Fire brand,** *n.* எரிகொள்ளி; கலகக்காரன்.

**Firebrick,** *n.* நெருப்பினால் பாதிக்கப்படாத செங்கல்.

**Fire-brigade,** *n.* தீயணைப்புப் படை.

**Firecracker,** *n.* படக்கு; வெடி (பட்டாசு).

**Firedamp,** *n.* (நிலக்கரிச் சுரங்கத்தில் உண்டாகும்) எரியாவி.

**Fire eater,** *n.* நெருப்பை விழுங்குவோர்; அடங்காப் பிடாரி.

**Firefly,** *n.* மின் மினிப் புழு.

**Firelock,** *n.* பழைய வகைத் துப்பாக்கி.

**Fireman,** *n.* தீ அணைக்கும் படை வீரர்; இயக்கும் பொறிக்கு எரியூட்டுபவர்.

**Fireplace,** *n.* நெருப்புண்டாக்கு மிடம்; அடுப்பு.

**Fireproof,** *a.* தீப்பற்றாத,

**Fireworks,** *n.* வானவெடிகள்.

**Firka,** *n.* (இந்திய வழக்கு) பகுதி; வளாகம்; வளநாடு; பிடாகை; வட்டம்; வட்டாரம்.

**Firm,** 1. *a.* உறுதியான; நிலையான; வலுப்படுத்து. 2. *n.* (கூட்டு) வாணிக நிலையம்; தொழிற்

கூட்டு *v.* உறுதியாக்கு; வாணிகஞ் செய்.

**Firmament,** *n.* வானமண்டலம்; வானவெளி.

**Firman,** *n.* (அரசரின்) ஆணை.

**First,** *a., adv.* முதலான; எல்லோருக்கும் முன்னால், *n.* முதலாவது. *adv.* firstly, *comb. n.* first-aid, (இடரில் சிக்கியோருக்கு) முதல் உதவி. *n. a.* firsthand, நேரடியாகப் பெற்ற; நேரடியாகக் கேட்ட. *n.* firstling, தலையீற்று; முதலில் பிறந்தது.

**Firth, frith,** *n.* கடற் கழி.

**Fiscal,** *a.* நாட்டின் வருமானத்துக் குரிய. *n.* கருவூலத்தார்.

**Fish,** *n.* மீன். *v.* மீன் பிடி; துருவித் தேடு. *n.* fisher, fisherman, மீன்பிடிப்பவர். *n.* fishmonger, மீன் வணிகர். *a.* fishy, மீன் போன்ற; ஐயறுவான. *n.* fishery, மீன் பிடித்தல்; மீன் (பிடிப்புத்) தொழில்; மீன் (தொழில்) துறை.

**Fishhook,** *n.* தூண்டில் முள்.

**Fishplate,** *n.* தண்டவாளங்களை இணைக்கும் இரும்புத் தகடு.

**Fission,** *n.* பிளத்தல்; வெடித்தல்.

**Fissiparous,** *a.* பிளந்து இனப் பெருக்கமடைகிற.

**Fissure,** *n.* பிளவு; வெடிப்பு.

**Fist,** *n.* கைமுட்டி. *v.* முட்டியால் குத்து.

**Fisticuffs,** *n. (pl.)* குத்துச் சண்டை.

**Fistula,** *n.* புரையோடிய புண்.

**Fit,** 1. *n.* வலிப்பு நோய்; திடீர் வெறிப்பு. 2. *v.* இணை; பொருந்து; தகுதியாயிரு; அளவொத்திரு; பொருத்து; பற்றிடு. 3. *a.* தகுதி யான; பொருத்தமான *v.* தகுதி யாக்கு. (1) fitful, விட்டுவிட்டு நடைபெறுகிற. *phr.* in fits and starts, விட்டுவிட்டு. (2) *n. ag.* fitter, (3) *n. abs.* fitness. *a.* fitting.

**Five,** *a., n.* ஐந்தாவது (ஆன); ஐந்திலொன்று (ஆன). 1. *n. pl.* பந்தாட்ட வகை. *see* fifth, fifteen, fifty etc.

**Fix,** 1. *v.* நிலைப்படுத்து; நிலவர மாக்கு; உறுதியாக்கு; தீர்மானி. 2. *n.* இக்கட்டு. (1) *a.* fixed. *n.* fixedness, fixation, அறுதிப்பாடு; உறுதி; *n.* fixity, fixture, நிலவரம்; உறுதிப்பாடு; உறுதி; நிலையான தன்மை.

**Fizz, Fizzle,** *v.* ‘உசு’ என்று ஓசைசெய்; உருகிப்போ.

**Flabbergast,** *v.* திடுக்கிடச் செய்.

**Flabby,** *a.* தொங்கலான; கொழு மழுத்த; அருவருப்பான; உர மில்லாத. *n.* flabbiness.

**Flaccid,** *a.* தொங்குகிற; சுருங்கல் விழுந்த; உரமற்ற. *n.* flaccidity.

**Flag,** 1. *n.* விருதுக்கொடி; கொடி; துகில். *v.* கொடிகாட்டு; கொடி யடையாளம் காட்டு. 2. *v.* தொங்கு; தளர்ச்சியடை; ஆர்வம் குறை. (1) *n.* flagstaff, கொடிக்கம்பம்; கொடிக் கால்.

**Flagellate,** *v.* கசையால் அடி. *n.* flagellation. *n. pers.* flagellant,

தன்னைத் தானே கசையால் அடித்துக்கொள்பவர்; கசை நோன்பாளர்.

**Flagon,** *n.* குவளை; குழிசி; குண்டா.

**Flagrant,** *a.* படுமோசமான; பட்டாங்கமான *n.* flagrancy, flagrance. *adv.* flagrantly.

**Flagship,** *n.* கடற்படைத் தலைவரின் கப்பல்.

**Flagstaff,** *n.* கொடி பறக்கும் கம்பம்; கொடிமரம்.

**Flagstone,** *n.* நடை வழியில் பாவும் கல்.

**Flail,** *n.* சூட்டிக்கும் கோல்; சாட்டை.

**Flair,** *n.* சிறந்ததைத் தெரிந்தெடுக்கும் இயல்பு; செவ்வி; நுண்திறம்; 'ஒட்பம்'.

**Flake,** *n.* சிம்பு; குச்சு; சுளை; காம்பு; விரல்போன்ற துண்டு. *v.* படலம் படலமாக வெளிப்படு. *a.* flaky.

**Flambeau,** *n.* (*pl.* flambeaux) தீவட்டி. *a.* flamboyant, *a.* முனைத்த நிறங்களோடு கூடிய; பகட்டான.

**Flame,** *n.* தீக்கொழுந்து; அனற்பிழம்பு; உணர்ச்சி; மிகுதி; எழுச்சி; காதல் தீ. *v.* கொழுந்துவிட்டு எரி; சினந்தெழு; காதல் வெறியூட்டு. *a.* flaming, எரிகிற; எழுச்சியுள்ள.

**Flamingo,** *n.* (சிவந்த நிறமுடைய) நாரை போன்று பறவை.

**Flank,** *n.* விலாப்புறம்; புடைப்புற அணி. *v.* பக்கவாட்டில் தாக்கு.

**Flannel,** *n.* மென் கம்பளம்.

**Flap,** *n.* தொங்கல்; மடி; தானைமுடி; தகட்டினால் அடித்தல்; தொப்பெனும் ஒலி *v.* தொங்கி ஆடு; இறக்கைகளை அடி. *n. ag.* flapper.

**Flare,** *v.* திடீரெனச் சுடர் விட்டெரி; ஒளிர். *n.* வெளிச்சம்; மின்னொளி.

**Flare up,** *n.* திடீர் அழல்; திடீர்க் கிளர்ச்சி; சீற்றம்.

**Flash,** *v.* பளிச்சென்று மின்னு; திடீரென்று மனத்தில் தோன்று; மின்னச் செய். *n.* மின்னல்; திடீர் ஒளி; திடீரென்று தோன்றும் எண்ணம். *a.* பகட்டான; போலியான. *a.* flashy, மின் போன்ற; விட்டுவிட்டு ஒளிக்கிற; நிலையற்ற பகட்டான. *n.* flashiness.

**Flashlight,** *n.* திடீர் வெளிச்சம்; மின் பொறிக் கைவிளக்கு.

**Flask,** *n.* குடுவை; குண்டிகை; குடுக்கை; குண்டுக்கலம்; குடுகலம்; குப்பி; புட்டி.

**Flat,** *n. adv.* தட்டையான; படுக்கையான; சமதளமான; உயர்வு தாழ்வற்ற; நிரலான; ஒருநிலையான; ஒரு மொத்த மான; சாரமற்ற; உயிரற்ற; உணர்ச்சியற்ற; சுவைகளயற்ற; ஓசை கட்டையான. *n.* மட்டமான நிலம்; கட்டைச் சுதி; ஒரு மாடிக் கட்டடம், flatness.*v.* flatten, மட்டமாக்கு.

**Flatter,** *v.* முகப் புகழ்ச்சி செய்; புகழ்ந்து பசப்பு. *n.* flattery. *n. pers.* flatterer.

**Flatulent,** *a.* வயிற்றில் பொருமலுள்ள; ஊதிய; உப்பிய; உப்பலான. *n.* flatulence.

**Flaunt,** *v.* பெருமையாக வெளிக் காட்டு; வீம்படி; பாரித்துரை. *a.* flaunty. *pr. p. a.* flaunting.

**Flavour,** *n.* தனிச் சுவை; சுவைத் திறம்; இன் சுவை; இன்மணம்; கலைச்சுவைத் திறம். *v.* சுவைப் படுத்து; பக்குவப்படுத்து. *n.* flavouring.

**Flaw,** *n.* பழுது; கோட்டம்; வடு; வழு; குறைபாடு. *a. (neg.)* flaw less. *n. (neg.)* flawlessness.

**Flax,** *n.* சணல்வகை; புளிச்சை. *a.* flaxen, சணலுக்குரிய; செம்மஞ்சள் நிறமுள்ள; படிவுள்ள; தொய் வுடைய; பளபளப்பான.

**Flay,** *v.* தோலுரி; கொள்ளையடி; கடுமையாகக் குறைகூறு.

**Flea,** *n.* தெள்ளு (ப்பூச்சி)

**Fleck,** *n.* புள்ளி; கறை *v.* புள்ளியிடு.

**Fled,** *v.* [flee பார்க்கவும்].

**Fledge(e)ling,** *n.* (சிறகு முளைத்த) பறவைக் குஞ்சு.

**Flee,** *v.* (fled) தப்பி ஓடு; ஓடிப்போ; அகல்.

**Fleece,** *n.* ஆட்டு மயிர். *v.* ஆட்டு மயிர் கத்தரி; கொள்ளையடி; (பிறர் பொருள்) உறிஞ்சு. *a.* fleecy

**Fleet,** 1. *n.* கப்பற்கூட்டம்; கப்பற் படை, தொகுதியீட்டம் 2. *a.* வேகமான. *v.* வேகமாகச் செல். (2) *n.* fleetness. *a.* fleeting, நிலையற்ற; விரைந்தோடுகிற. *comb. a.* fleet-footed, விரை நடையுடைய.

**Flesh,** *n.* சதை; உடல்; மானிடத் தன்மை; உடலோடுகூடிய பண்பு. *a.* fleshly, மனித இயற்கையான; இம்மை வாழ்விற்குரிய. *a.* fleshy, கொழுத்த, சதைப் பற்றுள்ள. *n.* fleshiness.

*fleur-de-lis, n.* பிரெஞ்சு நாட்டு அரசுச் சின்னம்.

**Flew,** *v.* [fly] பார்க்கவும்.

**Flex,** *n.* உறையிடப்பட்ட மின் திறக் கம்பி.

**Flexible-flexile,** *a.* எளிதில் வளையக்கூடிய; கருத்துக்கு இணங்குகிற; மாறுபாட்டுக்கு இடந்தருகிற. *n.* flexibility.

**Flibbertigibbet,** *n.* அரட்டன்.

**Flick,** *v.* மென்மையாக அடி. *n.* மெல்லிய அடி; மெல்வீச்சு.

**Flicker,** *v.* (ஒளி) நடுங்கு; பெரிதாகிக் குறை. *n.* நடுங்குவது போன்ற அசைவு.

**Flier, flyer,** [fly] பார்க்க.

**Flight,** *n.* பறத்தல்; ஓட்டம்; பறவைக் கூட்டம் படிக்கட்டு; கற்பனையின் உயர்வு. *a.* flighty, துடிப்பான; துள்ளுகிற; கற்பனை மிகுதியுடைய; மனநிலை திரிந்த; கோட்டியுடைய; ஏறுமாறுப் போக்குடைய. *n.* flightiness.

**Flimsy,** *a.* மெல்லிய; மிகச் சிறிய; போலியான. *n.* flimsiness.

**Flinch,** *v.* பின் வாங்கு; தயக்கமடை; அஞ்சிநில்.

**Fling,** *v.* (flung) எறி; தூக்கி வீசு.

**Flint,** *n.* தீக்கல்; சக்கிமுக்கி. (flintglass). *a.* flinty.

**Flippant,** *a.* சிறுபிள்ளைத் தனமான; துள்ளிக் குதிக்கிற. *n.* flippancy.

**Flipper,** *n.* (கடலாமை முதலிய வற்றின்) கைபோன்ற துடுப்புருவ முடைய முன்கால்.

**Flirt,** *v.* ஊடிப் பிணங்கு; பசப்புக் காதல்புரி; ஊடாடு. *n.* காதல் காட்டி ஏய்ப்பவர்; பிணக்குக்காரி; காதல் நாடகமாடுபவன். *n.* flirtation. *a.* flirtatious, flirtish, flirty.

**Flit,** *v.* சட்டென்று பற; இங்கு மங்கும் செல்; மின்னாடு.

**Flitter,** *v.* படபடவென்று அடித்துக் கொண்டு செல்.

**Flittermouse,** *n.* வௌவால்.

**Float,** *n.* மிதவை; சிறுபடகு; தெப்பம். *v.* மித; மிதக்கச் செய்; புது நிறுவனம் தொடங்கு. *n.* floatation, மிதக்கவிடல்; (புதுக் கழகம்) தொடங்கல்.

**Flocculent,** *a.* கம்பளி மயிருள்ள; மயிர்போன்று. *n.* flocculence.

**Flock,** *n.* (விலங்கு பறவை முதலியவற்றின்) கூட்டம்; மந்தை; (மதகுருவுக்கு உட்பட்ட) மக்கள் தொகுதி. *v.* கூட்டங்கூடு; திரள்.

**Floe,** *n.* மிதக்கும் பனிக்கட்டி

**Flog,** *v.* கசையால் அடி; அடித்துத் தண்டனை செய். *n.* flogging,

**Flood,** *n.* நீர்ப் பெருக்கு; ஆற்றுப் பெருக்கு; வெள்ளம். *v.* வெள்ளப் பெருக்கெடு; கரை புரண்டோடு; நீரிலாழ்த்து.

**Flood-gate,** *n.* வெள்ளவாரி; மதகு; அடிமடை; பெருமடை; நெடுமடை; வாயில் மடை.

**Floodlight,** *n.* பிறங்கொளி விளக்கம்; ஒண்கதிர்ப் பிழம்பு.

**Floor,** *n.* நிலம்; கீழ்த்தளம். *v.* தளம் அமை; நிலத்தில் வீழ்த்து; தோற் கடி; முறியடி; பணியச் செய். *n.* flooring, தளம்.

**Flop,** *v.* தள்ளாடு; தடுமாறி விழு. *n.* தள்ளாட்டம்; தடுமாற்றம்; தோல்வி. *a.* floppy.

**Flora,** *n.* திணையின் செடிவளம்; திணைவளம்; செடி வளம்; செடி கொடி வளம்; மலர்வளம். *a.* floral, செடியினம் சார்ந்த; மலர் சார்ந்த

**Florescence,** *n.* மலர்தல்; மலருங் காலம்; மலர்ச்சி.

**Floriculture,** *n.* பூஞ்செடி வளர்ப்பு.

**Florid,** *a.* தீவண்ணமான; சிவப்பான; பகட்டான.

**Florin,** *n.* ஆங்கில நாட்டு இரண்டு வெள்ளி மதிப்புடைய நாணயம்.

**Florist,** *n.* பூ விற்பனையாளர்; பூக்காரர்; பூத்தேர்வாளர்; பூ ஆராய்ச்சியாளர்.

**Floss,** *n.* கழிவு பட்டு. *a.* flossy.

**Flotilla,** *n.* சிறு கப்பற் கூட்டம்; படகுத் தொகுதி; மிதவைத் தொகுதி.

**Flotsam,** *n.* (கப்பல் உடைந்து மூழ்கிய பிறகு கடலில்) மிதக்கும் சரக்கு.

**Flounce,** 1. *n.* மாதர்களின் சட்டைக் குஞ்சம் அல்லது தொங்கல். *v.* குஞ்சம் வைத்துத் தை. 2. *v.* அங்குமிங்கும் குதி; உதறு. *n.* அங்குமிங்கும் குதித்தல்; உதறல்.

**Flounder,** 1. *v.* தத்தளி; கை கால்களை உதறு. *n.* தத்தளித்தல். 2. *n.* மீன் வகை

**Flour,** *n.* மாவு. *v.* மாவைத் தூவு.

**Flourish,** *v.* செழிப்பாகு; கையில் வைத்து ஆட்டு. *n.* இசைக் கருவிகள் திடீரென ஒலித்தல்; பகட்டார வாரம்.

**Flout,** *v.* இகழ்ந்து கூறு; புறக்கணி. *n.* இகழ்ச்சி; ஏளனம்.

**Flow,** *a.* ஒழுகு; பொங்கு *n.* நீரோட்டம். *a.* flowing, ஆற்றொழுக்காகச் செல்கிற

**Flower,** *n.* மலர்; சிறந்த பகுதி. *v.* மலராகி விரி. *a.* flowery, பூப்போன்ற; பூ நிறைந்த; பகட்டான. *n. pers.* flowerer.

**Flown,** *v.* [fly] பார்க்கவும்.

**Flu,** *n.* (கொச்சை) (influenza).

**Fluctuate,** *v.* ஏறி யிறங்கு; மாறிக் கொண்டிரு. *n.* fluctuation, ஏற்ற இறக்கம்; அலைமாற்றம்; உயர்வு தாழ்வு; அலைவு; உலைவு மாறுபாடு.

**Flue,** *n.* புகை போக்கிக் குழல்.

**Fluent,** *a.* தட்டுத் தடையின்றிப் பேசுகிற; ஆற்றொழுக்கான. *n.* fluency, சொல் ஒழுங்கு.

**Fluff,** *n.* பஞ்சு போன்ற பொருள். *a.* fluffy,

**Fluid,** *a.* நீர்த்தன்மையுள்ள; எளிதில் ஒழுகுகிற. *n.* நெகிழ்ச்சி யுடைய பொருள். *n.* fluidity.

**Fluke,** *n.* குத்துக் கம்பு; கொக்கி; குருட்டு யோகம். *v.* குருட்டடி யாக ஆதாயம் சேர்.

**Flung,** *v.* [fling பார்க்கவும்]

**Flunkey,** *n.* வேலைக்காரன்; உயர்ந்தோர்க்கு அடிமையாக நடப்பவன்.

**Fluorescence,** *n.* ஊதா அல்லது நுண் ஊதாகக் கதிர்களால் ஒளிரும் ஆற்றல்; ஒளிர்தல். *a.* fluorescent.

**Fluorine,** *n.* (இயைபியல்) தனிப் பொருள் வகை.

**Flurry,** *n.* காற்று வீச்சு; பரபரப்பு; பதற்றம். *v.* பதறு; குழப்பமடை.

**Flush,** *v.* பாய்ந்து செல்; முகஞ் சிவப்பாகு. *n.* திடீரென்று பாய்தல்; முகஞ் சிவத்தல். *a.* பெருகுகிற; செழிப்பாயுள்ள; சம மட்டமான *a. (comb)* flushout latrine, (நீரால் எளிதில் தூய்மைப்படுகிற) 'கொட்டு' தூம்பா.

**Flute,** *n.* புல்லாங்குழல்; தூணில் நெடுக்காயுள்ள பள்ளம். *v.* புல்லாங்குழல் வாசி; நெடுக்காகப் பள்ளம் செய். *n. pers.* flutist.

**Flux,** *n.* இயக்கம்; அசைவு; புடை பெயர்ச்சி; சுழற்சி. *v.* நீரியலாகு; மாறு; நீரியலாக்கு. *n.* fluxion, ஓட்டம்; மாறுதல் வீதம்.

**Fly,** 1. *v.* (flew, flow*n.* ) பற; பறக்கச்செய்; ஓட்டம் பிடி. *n.* பறத்தல். (*phr.* on the fly), 2. *n.*

ஈ. 3. ஒரு வகை வண்டி (1) *n. see* flight.

**Foal,** *n.* குதிரைக் குட்டி; கழுதைக் குட்டி. *v.* (குதிரை அல்லது கழுதை) ஈனு; குட்டியிடு.

**Foam,** *n.* நுரை. *v.* நுரையுண்டாக்கு; பெருஞ் சினமடை.

**Focus,** *n.* (*pl.* foci or focuses.) குவிமையம்; முகப்பு; ஒளி முகப்பு. *a.* focal. *v.* focalize, குவியச் செய்.

**Fodder,** *n.* தீனி; கால்நடை விலங்குக்கான உணவு; தீவனம். *v.* வைக்கோலுணவிடு.

**Foe,** *n.* எதிரி; பகைவர். *n. comb.* foeman, போர் எதிரி.

**Foetus, fetus,** *n.* (முட்டை அல்லது கருப்பையிலுள்ள) கரு. *a.* foetal, fetal.

**Fog,** *n.* மூடுபனி; மஞ்சு *v.* மூடுபனியால் மறை. *a.* foggy, குழப்பமான. *n.* fogginess.

**Foible,** *n.* குற்றங்குறை; குறைபாடு; இழுக்கம்.

**Foil,** 1. *n.* மெல்லிய உலோகத் தகடு; தகட்டுச் சுருள்; தூணிடை வளைவு; கண்ணாடியின் பின் புறமுள்ள பாதரசப் பூச்சு; பின்னணி; பின்னணி எதிர் பண்பு. (*cf.* counterfoil); மோப்பத்தடை 2. *v.* ஏமாற்று; தோற்கடி; மோப்பம் தவறச் செய்; வளைவு இணைத்து அணிசெய்; (கண்ணாடிக்குப்) பாதரசம் பூசு.

**Foist,** *v.* உரிமையில்லாமல் நுழை. போலியுரிமையேற்று; சுமத்து.

**Fold,** 1. *n.* ஆடுகள் அடையும் பட்டி. *v.* ஆட்டுக்கிடையமர்த்து; ஆடுகளைப் பட்டியில் அடை 2. *v.* மடி; தழுவு. *n.* மடிப்பு; மடிப்பு விடு. *n. ag. impers.* folder, மடிக்கும் கருவி.

**Foliage,** *n.* இலைத்தொகுதி; தழை. *a., v.* foliate, இலைகளுள்ள; இலைபோன்ந. *v.* இலைகளாகப் பிரி; இலை போன்ந அமைப்பு களால் அணிசெய். *n.* foliation.

**Folio.** *n.* ஒருமுறை மடித்த தாள்; இருமடி; இருமடி அளவேடு; எழுதும் முழுத்தாள் அளவு; இணையேடு.

**Folk,** *n.* பொதுமக்கள்; மக்களினம்.

**Follow,** *v.* பின் பற்றிச் செல்; உடன் செல்; வழியேசெல்; கவனி; துரத்து. விளைவாகு; புரிந்துகொள். *n.* follower, பின்பற்றுபவர்; கோட்பாட்டு மாணவர்.

**Follow-up,** *n.* தொடர்ந்த செயல்.

**Folly,** *n.* முட்டாள் தனம்; மடமை.

**Foment,** *v.* ஒத்தடம் கொடு; வேதிடு *n.* fomentation.

**Fond,** *a.* பற்றுமீதூர்ந்த; சொக்கிய; பற்றால் மடமையார்ந்த. *n.* fondness.

**Fondle,** *v.* கொஞ்சு; தடவிக் கொடு.

**Font,** *n.* ஊற்று; (கிறித்துவக் கோவிலில்) திருநீர் வட்டில்.

**Fontanel(le),** *n.* குழந்தை தலையுச்சியில் எலும்பு வளராத இடம்.

**Food,** *n.* உ ணவு; தீனி. *comb. n.* food control, உணவுக்கட்டுப் பாடு; உணவுப் பொருள் கட்டுப்

பாடு. food grains, உணவுக் கூலங்கள்; உணவுத் தானியங்கள்.

**Fool,** *n.* அறிவிலி; மட்டி; அறிவுக் குறையுள்ளவன்; அரசவைக் கோமாளி. *v.* ஏமாற்று; மூடனாக நடி. *n.* foolery. *a.* foolish. *n.* foolishness, *v. see* befool. *a. (comb).* foolhardy, துணிவுடைய; மடத்தனமான. *a.* foolproof, மட்டியாலும் கையாளத் தக்க; மடமைத் தடையுள்ள.

**Foolscap,** *a., n.* 17 ½' x 13½ " அளவுள்ள (தாள்).

**Foot,** *n.* (*pl.* feet) காலடி; காலாட் படை; 12 அங்குல நீளமுள்ள அடியளவு; செய்யுளடியில் ஒரு 'சீர்' *v.* நட; நடனம் செய். *(comb.) n.* football, கால் பந்து; உதை பந்து (விளை யாட்டு). footboard, மிதிபலகை; படிக்கட்டை; ஏறும் படி footboy, வேலைக்காரச் சிறுவன். footbridge, நடைப் பாலம்; ஒற்றைப் பாலம். *n.* foothold. கால் இடம். *n.* footing, கால் வைக்குமிடம்; சமூகத்தின் ஒருவனுடைய நிலை; பணியிடம்; நிலைமை; தரம்; படிமுறை. *n.* footman, வேலையாள். *n.* foot note, அடிக்குறிப்பு. *n.* footprint, அடிச்சுவடு. *n.* footstep, காலடி யோசை; அடிச் சுவடு. *n.* foot stool, கால் வைக்கும் மணை.

**Fop,** *n.* பகட்டுச் செய்பவன்; பகடி; பசப்பன்; பிலுக்கன். *n.* foppery. *a.* foppish.

**For,** *prep.* ஆக; வேண்டி; பொருட்டு; 'கு' (நான்காம் வேற்றுப் பொருளைத் தரும் சொல்). *comb. n. aj. ad* for and against, *prep.* ஏற்பாகவும் எதிரிப்பாகவும்; சாதகபாதகமாக.

**Forage,** *n.* (குதிரை, ஆடு, மாடுகளின்) தீனி. *v.* தீனி தேடு; கொள்ளையடி. *n. ag.* forager.

**Foray,** *n. v.* தாக்குதல்; கொள்ளை யடித்தல் (செய்).

**Forbear,** *n.* மூதாதை. *v.* பொறுத் திரு; தவிர; அடங்கு *n.* forbearance.

**Forbid,** *v.* (forbad, forbade; forbidden.) (செயலைத்) தடு; தடை உத்தரவிடு.

**Force,** *n.* உடல் வலிவு; வலிமை; ஆற்றல்; வலுக்கட்டாயம்; வல்லந்தச் செயல்; படை வலிமை; படை. *n. pl.* forces, படை வகுப்புகள். *v.* கட்டாயப் படுத்து *a.* (forced) இயற்கை யல்லாத; வலிந்து செய்கிற *a.* forceful, ஆற்றல் வாய்ந்த, மனதில் பதிகின்ற. forcible, வலிமை வாய்ந்த; வலுக்கட்டாயமனா.

**Forceps,** *n.* பற்றுக் குறடு; இடுக்கி; சாமணம்.

**Ford,** *n.* கடவு; கடக்கக்கூடிய துறை *v.* நீரில் இறங்கிக் கடந்து செல். *a.* fordable.

**Fore,** *a., adv.* முன்னால்; எதிரில்; முன்காலத்தில். *n.* கப்பலின் முன் பகுதி. *comp deg. see* further, furthermore, sup. deg. see furtherest, furthermost, *a.* comb, deg. foremost, first.

**Forearm,** *n.* முன்கை; கீழ்க்கை. *v.* முன்பே ஏற்பாடாயிரு; முன்னரே படை தாங்கியிரு.

**Forebode,** *v.* (கெடுதலுக்கு) முன்னறிகுறி காட்டு. *n.* foreboading.

**Forecast,** *v.* குறிசொல்; முன்னரே கூறு முன்னரே குறி; முன்னரே திட்டம் செய். *n.* முன்னறிந்து கூறல்; முன்னறிகூற்று; குறிச்சொல்.

**Forefather,** *n.* மூதாதை. *pl.* மரபு முன்னோர்.

**Forefinger,** *n.* ஆள்காட்டி விரல்.

**Forefront,** *n.* முன்னிடம்; முன்னணி

**Forego,** *v.* (forewent, foregone), 1. முன் செல் 2. இழ; விட்டுவிடு. (1) *a.* foregoing, மேற் சொல்லிய *a.* foregone, முன்பே தீர் மானிக்கப்பட்ட. (2) [*see* forgo].

**Foreground,** *n.* (காட்சியின் அல்லது படத்தின்) முன் பகுதி.

**Forehead,** *n.* நெற்றி.

**Foreign,** *a.* அயல்நாட்டுக்குரிய; வெளிநாட்டுக்குரிய. *n. pers.* foreigner.

**Foreleg,** *n.* (விலக்கின்) முன்கால்.

**Forelock,** *n.* நெற்றிமயிர்; முன் குடுமி.

**Foremen,** *n.* (அச்சக) மேற் பார்வையாளர்; தொழில் முதல்வன்; முறையாள்; மேலாள்; முதலாள்; முதல்வன்; முன்னோன்.

**Foremast,** *n.* (கப்பலின் முன்புறப் பாய்மரம்.

**Foremost,** *a., adv.* (*see* fore) முதலாவதான; தலைசிறந்த.

**Forenoon,** *n.* முற்பகல்.

**Forensic,** *a.* சட்டஞ் சார்ந்த.

**Foreordain,** *v.* முன்பே அறுதி யிடு; ஏற்கெனவே விதித்தல் செய்.

**Forerunner,** *n.* முன்னோடி; முன்னறிகுறி; வருவதை முன் சென்று அறிவிப்பவன்.

**Foresee,** *v.* (foresaw, foreseen) முன்னறி. *n.* foresight, முன்னறிவு.

**Foreshadow,** *v.* முன்னறி குறி காட்டு; நிழலிட்டுக் காட்டு

**Foreshore,** *n.* அலை வாய்க் கரை; குளவாய்க்கரை; அணைகரை.

**Forest,** *n.* காடு; கான். *n. pers.* forester, காட்டில் வாழ்பவன்; காட்டை மேற்பார்வை செய்பவன் *n. abs.* Forestry, காட்டுத் துறை.

**Forestall,** *v.* எதிர்பார்த்து நடவடிக்கை எடு; முன் நடவடிக்கையெடு.

**Foretaste,** *n.* வரப்போவதின் முன் சுவை. *v.* முன் சுவைத்துப் பார்; எதிர்பார்.

**Foretell.** *v.* (Foretold) வரப்போவது கூறு.

**Forethought,** *n.* முன்னறிவு.

**Forever,** *adv.* எக்காலத்தும்.

**Forewarn,** *v.* முன்னெச்சரிக்கை செய். *n.* forewarning.

**Foreword,** *n.* (புத்தக) முன்னுரை; புறவுரை.

**Forfeit,** *n.* உரிமை யிழத்தல்; பறிமுதல்; தண்டவரி. *v.* உரிமை

யிழ; தண்டங்கொடு. *n.* for - feiture, உரிமையிழப்பு; பறிமுதல் (பொருள்); தண்டவரி(யிடு).

**Forfend,** *v.* தவிர்; விலக்கு.

**Forgave,** *v.* [forgive] பார்க்கவும்.

**Forge,** 1. *n.* உலைக்களம்; உலை. *v.* (காய்ச்சி அடித்து) உருவாக்கு. 2. *v.* பொய்யாக அமை; பொய்க் கையொப்பமிடு. (1) (2) *n. pers.* forger, (2) *p. pa.* forged, கள்ளக் கையொப்பமிட்ட; போலியான; பொய்யான; கள்ளக் கையொப்பம். *n. abs.* forgery,

**Forget,** *v.* (forgot, forgotten, forgot) மற; புறக்கணி; forget oneself, தகாததைச் செய்; தவறு; தன்னை மறந்து செய். *a.* forgetful, *n.* forgetfulness.

**Forgive,** *v.* (forgave, forgiven). பிழை பொறு; பொறுத்தருள்; மன்னி. *n.* forgiveness. *a,* forgivable.

**Forgo,** *v.* (forwent, forgone) துற; கைவிடு.

**Forgot, forgotten,** *v.* [forget பார்க்க.]

**Fork,** *n.* கவர் முன்; கவடுபட்ட கருவி; கவர்படுமிடம். *v.* கவர்படு; இருகிளைகளாகப் பிரி. *a.* forked,

**Forlorn,** *a.* கைவிடப்பட்ட; துணையற்ற.

**Form,** *n.* உருவம்; தோற்றம்; ஒழுங்கு; முறை; அச்சடித்த தாள்; கோவை; மடி; பள்ளிக்கூட வகுப்பு; படிவம்; எழுது சட்டம்; மேல்வரி; வக்கணைப்படி; நிரப்பு படிவம்; இனப் படிவம். *v.* ஒழுங்குபடுத்து; உருவாக்கு *n.* *see* formation. *a.* *(neg.)* formless, உருவற்ற *a.* *see* formal.

**Formal,** *a.* (form) ஒழுங்கு முறைப்படியுள்ள; கண்டிப்பான; வழக்கத்திற் கிசைந்த; மர பொழுங்கு சார்ந்த. *n.* formality, ஆசாரம்; ஒழுங்கு முறை. *n. abs.* formalism, ஆசாரத்தில் கண்டிப்பு. *n. pers.* formalist.

**Formation,** *n.* (> form) உருவம்; அமைப்பு; உருவாதல்; அணி யமைப்பு. *a.* formative, கருவுரு வாகிற நிலையுடைய.

**Former,** *pron.* முந்தியது; (இரண்டில்) முன்னது. *a.* சென்ற காலத்தைச் சேர்ந்த முன்னதான. *adv.* formerly.

**Formic,** *a.* எறும்புகளுக்குரிய *n.* formic acid எறும்புக்காடி.

**Formidable,** *a.* வெல்ல முடியாத

**Formless,** *a.* *see* form**.**

**Formula**, *n.* (*pl.* formulae, formulas) வாய்பாடு; ஒழுங்கு வகுப்பு; முறை மரபு. *n.* formulary, வாய் பாட்டுநூல். *v.* formulate, முறைப்படுத்தி கூறு; வாய்பாடுகளாக வகு; ஒழுங்கு படுத்து. *n.* formulation.

**Fornicate,** *v.* முறையற்ற புணர்ச்சி யாடு; முறையின்றி உடன் வாழ். *n.* fornication.

**Forsake,** *v.* (forsook, forsaken) கைவிடு.

**Forsooth,** *adv.* உண்மையாக; ஐயமற.

**Forswear,** *v.* (forswore, forsworn) ஆணையிட்டு மறுத்துக் கூறு; பொய்யாக ஆணையிடு.

**Fort,** *n.* கோட்டை; அரண்; புரிசை; 'இலஞ்சி'; எயில்.

**Forte,** *n.* வலிமைக் கூறு.

**Forth,** *adv.* முன்னாக; (கால இடப் பொருள்களில்) வெளிப்புறமாக.

**Forthcoming,** *a.* விரைவில் வரப்போகிற; வெளிப்பட இருக்கிற; வரவிருக்கிற.

**Forthright,** *a.* நேர்மையான; ஒளிவு மறைவற்ற.

**Forthwith,** *adv.* உடனே; தாமதமின்றி.

**Fortieth,** *a., n.* நாற்பதாவது.

**Fortify,** *v.* அரண்களை வலுப் படுத்து; உள்ளத்தை உரப்படுத்து *n.* fortification, அரணீடு; அரண்.

**Fortitude,** *n.* மன உரம்; உள்ள உறுதி; பொறுதி.

**Fortnight,** *n.* இரண்டு வார காலம்; அரை மதியம்; பக்கம். *v. n., adv.* fortnightly, அரை மதிய (இதழ்); அரை மாத காலத்தில்; அரைமதி வாரியாக.

**Fortress,** *n.* அரண்.

**Fortuity,** *n.* தற்செயல் நிகழ்ச்சி. *a.* fortuitous.

**Fortune,** *n.* நற்காலம்; நற்பேறு; செல்வநிலை; செல்வம். *a.* fortunate, நற்பேறுடைய. *adv.* fortunately.

**Forty,** *a., n.* நாற்பது.

**Forum,** *n.* பொதுமன்றும்; 'பொது இல்'; அம்பலம்.

**Forward,** *a.* முன் வரிசையிலுள்ள; முன்னேறியுள்ள; முற்போக்கான; துடியாயுள்ள; அடக்கமற்ற. *v.* முன்னேறச் செய்; உதவிசெய் *adv.* (forward or forwards) முன்னுக்கு; முன்னோக்கி. *n.* forwardness.

**Fossil,** *n.* புதையுயிர்தடம்; மரபற்றுப்போன உயிர்; உயிரற்ற; வழக்காறற்ற. *v.* fossilize.

**Foster,** ஊட்டி வளர்; ஊக்கமளி. *n.* foster-brother, foster-child, foster-son, foster-father, etc, வளர்ப்பினால் ஏற்படும் உறவு முறையினர்.

**Fosterling,** *n.* வளர்ப்புக் குழந்தை.

**Fought,** *v.* [fight பார்க்கவும்].

**Foul,** *n.* வெறுப்பைத் தருகிற அழுக்கான; கீழான; நேர்மையற்ற (x fair) *v.* நேர்மையில்லாமல் நட; சிக்கிக்கொள்; அழுக்காக்கு.

**Found,** *v.* 1. [find பார்க்கவும்] 2. *v.* அடிகோலு; நிலைநாட்டு. *n.* foundation, கடைகால்; அடித் தளம்; அடிப்படை; கால்கோள் இடல் 3. *v. n. see* founder, 1. *n. abs.* [*see* foundry].

**Founder,** 1. *n.* (*n. ag.* of found) நிறுவியவர்; முதல்வர்; முகவர். 2. *v.* முழுகு; நீரில் அமிழ்; தோல்வி யுறு; அழிவுறு.

**Foundling,** *n.* துணையற்ற குழந்தை; எடுப்புக் குழந்தை.

**Foundry,** *n.* வார்ப்படத் தொழிற் சாலை.

**Fount,** 1. (ஒரே இனமான அச்செழுத்துத்) தொகுதி. 2. *n. see* fountain.

**Fountain, fount,** *n.* நீர் ஊற்று; சுனை; பிறப்பிடம்.

**Four,** *a., n.* நான்கு *a.* four-fold, நான்கு மடங்கான. *n., a.* fourth, நான்காவது (ஆன); நான் கிலொன்று(ஆன). *conn. see quarter.*

**Foursquare,** *a. adv.* சதுரமான; நாற் கோட்டமான; உறுதியான; நேர்மையான.

**Fourteen,** *a. n.* பதினான்கு. *a., n.* fourteenth, பதினான்காவது (ஆன); பதினான்கிலொன்று (ஆன).

**Fowl,** *n.* கோழி; பறவை. *n.* fowler, பறவை வேட்டையாடுபவன். *n.* fowling, பறவை வேட்டை. *n.* fowling piece, பறவை வேட்டைத் துப்பாக்கி.

**Fox,** *n.* தந்திரமுள்ளவன். *a.* foxy.

**Foxhound,** *n.* வேட்டை நாய் வகை.

**Fracas,** *n.* சச்சரவு.

**Fraction,** *n.* கீழ்வாய் எண்; பங்கு; கிளை; உறுப்புப் பகுதி. *a.* fractional.

**Fractious,** *a.* சிடுசிடுப்பான; எளிதில் சினங்கொள்கிற.

**Fracture,** *n.* முறிவு; எலும்பு முறிதல். *v.* முறி; பிள.

**Fragile,** *a.* எளிதில் முறியக்கூடிய; உடையக் கூடிய; நொய்மையான. *n.* fragility.

**Fragment,** *n.* உடை பகுதி; துண்டு. *a.* fragmentary, துண்டு துண்டான; துண்டான; துண்டுப் பகுதியான.

**Fragrant,** *a.* நறுமணமுள்ள. *n.* fragrance.

**Frail,** *a.* நொய்மையான; (நன் னெறியில்) உறுதியில்லாத. *n.* frailty.

**Frame,** *v.* திட்டம் செய்; சட்டம் அமை; ஒன்றோடொன்று புணை; பொருத்து; கற்பனை செய்; உருவாக்கு. *n.* அமைப்பு; திட்டம்; படம்; பலகணிச் சட்டம்; சட்டம். *n.* frame-work, வேலைத் திட்டம்; பணிச் சட்டம்.

**Franc,** *n.* (ஃவிரஞ்சு) வெள்ளிக் காசு.

**Franchise,** *n.* தேர்ந்தெடுக்கும் உரிமை; மொழியுரிமை.

**Franciscan,** *a. n.* தூய பிரான் ஸிஸ் என்பவரால் நிறுவப்பட்ட மடத்தைச் சார்ந்த(வர்).

**Frank,** 1, *a.* கவடில்லாத; கள்ளமற்ற; வெளிப்படையாகச் சொல்கிற; 2. பழைய ஃவிரான்சு நாட்டார்; (1) *n.* frankness.

**Frankincense,** *n.* சாம்பிராணி.

**Frantic,** *a.* வெறிகொண்ட; ஆட்டபாட்டமான.

**Fraternal,** *a.* உடன்பிறப்புக்குரிய; உடன்பிறப்புப் பாசமுடைய. *n.* fraternity, உடன்பிறப்புக் குழு;

சம உரிமைக் குழு; இன ஒப்புமைக் குழு. *v.* fraternize. *n.* fraternization.

**Fratricide,** *n.* உடன்பிறப்பாளர் கொலை (செய்பவர்). *a.* fratricidal.

**Fraud,** *n.* ஏமாற்று; மோசம்; மோசடி; வகைகேடு; எத்துமானம்; ஏய்ப்பு; பொய்; புனை சுருட்டு; போலிச் செயல்; சூது. *a.* fraudulent. *n.* fraudulence, [*v. see* defraud.]

**Fray,** *n.* சச்சரவு சண்டை.

**Freak,** *n.* திடீரென மனம் மாறுதல்; குறும்புச்செயல்; இயற்கைக்கு மாறான வழு; இயல்பிழுக்கம்.

**Freckle,** *n.* மச்சம்; வடு. *v.* புள்ளியிடு.

**Free,** *a.* கட்டுப்பாடில்லாத; கட்டற்ற; தடையற்ற; தங்குதடையற்ற; வரையற்ற; (தொண்டு) காசில்லாத; விலையில்லாத; வரையற்ற; இலவசமான; தற்சார்புடைய; தன்னுரிமையுடைய; (நிலை, ஆள், நாடு) விடுதலையுரிமை வாய்ந்த; தனிவிருப்பார்ந்த; ஊழியமான. *v.* தடை விலக்கு; விடுவி. *n.* freedom, தன்னுரிமை; *(comb.)* விடுதலை செய்; கட்டவிழ்த்து விடு; தன்னுரிமையளி. *n.* freehold, விலையில்லா நிலம்; இறையிலி நிலம்; மானிய நிலம். *n.* freelance, கட்டுப்பாடற்ற தொழிலாளி; கட்டுப்பாடற்ற காதலாளர்; கட்டற்றவர்.

**Freebooter,** *n.* கொள்ளைக்காரன்.

**Freemasonry,** *n.* நற் கொத்தர் சங்கக் கோட்பாடு; அக்கூட்டுறவு; கூட்டுறவு; (> Free Mason அக்கூட்டுறவுச் சங்கத்தார்.

**Freethinker,** *n.* மூடநம்பிக்கை யற்றவர்; தற்சிந்தனையாளர்; சமய மரபுப் பற்றற்றவர்.

**Freeze,** *v.* (froze, frozen) பனிக் கட்டியாகு; உறை; அச்சத்தால் செயலறு; பொருள் முறிமாற்றுத் தடு; சாகச நடவடிக்கை தடு. *n.* freezing point, உறை நிலை; இறுகுநிலை.

**Freight,** *n.* கப்பல் ஏற்றும் சரக்கு; சரக்குக் கூலி. *n., abs.* freightage.

**Freighter,** *n.* மூட்டை தூக்கும் கூலியாள்; சரக்குக் கப்பல்.

**French,** a., *n.* ஃவிரஞ்சு நாட்டினர்; ஃவிரஞ்சுக்காரர்; ஃவிரஞ்சு மொழி.

**Frenzy,** *n.* வெறி; சீற்றம்; மிகு சினம். *a.* frenzied.

**Frequent,** *a.* அடிக்கடி நிகழ்கிற *v.* அடிக்கடி செல். *n.* frequency, அடிக்கடி நிகழ்தல்; நிகழும் விரைவு; அலைவு எண்.

**Fresco,** *n.* சுவர் ஓவியம்; மேல் தட்டி ஓவியம்; மண்டப ஓவியம்.

**Fresh,** *a.* புதிய; செழிப்பான; தூயதான; சோர்வு நீங்கிய; ஊக்க முள்ள. *pl.* freshes, புதுவெள்ளம் *v.* freshen. *n.* freshness.

**Fresher,** *n. see* freshman.

**Freshet,** *n.* கடலுள் தொடர்ந் தோடும் ஆற்று நன்னீர்; (ஆற்றுப்) புது வெள்ளம்; பனி வெள்ளம்.

**Freshman, fresher,** *n.* (கல்லூரி வழக்கு) முதல் ஆண்டு மாணவன்.

**Fret,** 1. *n.* செதுக்கிய சித்திரம். *v.* செதுக்கிச் செய். 2. *v.* படபடத்துக் கொள்; தொந்தரை செய்; சினமூட்டு *n.* தொந்தரை; எரிச்சல். *n.* 1. fretwork. 2. *a.* fretful. *n.* fretfulness.

**Freudian,** *a., n.* ஃவிரூட் என் பவரின் உளநூல் ஆராய்ச்சிக் குரிய(வர்); அக்கோட்பாட்டாளர். (சிற்றின்பமே அடிப்படைப் பண்பு எனுங் கொள்கை சார்ந்த(வர்).

**Friar,** *n.* துறவி. *n.* friary, துறவி மடம்.

**Friscassee,** *n.* பொரித்த இறைச்சி.

**Friction,** *n.* உராய்தல்; தேய்தல்; பொருத்தமின்மை. *a.* frictional.

**Friday,** *a.* வெள்ளிக்கிழமை.

**Friend,** *n.* நண்பர்; அன்பர்; தோழன். *n.* friendship. *a.* friendly. *n.* friendliness.

**Frieze,** *n.* முரட்டுக் கம்பளம்; பொதிகை; பொதிகைச் சிற்பம்.

**Frigate,** *n.* விரை போர்க் கப்பல்.

**Fright,** *n.* திகில் கோர உருவினர். *v.* frighten. *a.* frightful. *n.* frightfulness.

**Frigid,** *a.* குளிர் மிகுந்த; அன் பற்ற; உணர்ச்சியற்ற. *n.* frigidity, *comb. a. n.* frigidaire, குளிர் பாதுகாப்புடைய (பொறி). *comb. phr. n.* frigid zone, மிகு குளிர் மண்டலம்.

**Frill,** *n.* குஞ்சம்; கொய்சகம். *pl. n.* frills, பகட்டான கூறுகள்.

**Fringe,** *n.* கரை; ஓரம். *v.* குஞ்சத் தினால் அணிசெய்.

**Frippery,** *n.* (ஆடையணி) வீண்பகட்டு; சிறுமைத்தனம்.

**Frisk,** *v.* குதித்து மகிழ்; துள்ளு. *a.* frisky.

**Frith,** *n.* [firth பார்க்கவும்.]

**Fritler,** *v.* வீணாகச் சிதறு; பல அணுக்களாக்கு.

**Frivolous,** *a.* சிறுதிற; வீணான; விளையாட்டுத்தனமான; இன்ப நாட்டமுடைய. *n.* frivolity.

**Friz(z),** *v.* (மயிர்) சுருளாகு. *n.* சுருண்ட நிலை.

**Frizzle,** *n.* சுருட்டை மயிர்.

**Fro,** *adv.* திருப்பி; (*phr.*) *to* and *fro*, முன்னும் பின்னும்.

**Frock,** *n.* மேலங்கி; மேற்சட்டை *v.* மேலங்கி அணி.

**Frog,** *n.* தவளை.

**Frolic,** *n.* விளையாட்டு; வேடிக்கை. *v.* களித்து விளையாடு frolicsome.

**From,** *prep.* (இடத்தில் காலத்தில்) இருந்து; காரணமாக; (ஐந்தாம் வேற்றுமைப் பொருள் உருபுச் சொல்).

**Front,** *n.* முன்புறம்; நெற்றி; முகம்; முகப்பு; போரில் முன்னணி. *v.* நேராகத் திரும்பி நில்; நேருக்கு நேர் சந்தி. *n.* frontage, முகப்பு; தெருவை நோக்கிய பகுதி. *a. n.* frontal.

**Frontier,** *n.* எல்லைப்புறம்.

**Frontispiece,** *n.* முகப்புப் படம்; முகப்புத்தாள்.

**Frost,** *n.* உறைபனி; மிக்க குளிர்; *v.* உறைபனியால் கெடுதி செய்;

கண்ணாடி உலோகம் முதலிய வற்றிற்குச் சற்று சொரசொரப்புக் கொடு; நரையாக்கு. *a.* frosty.

**Froth,** *n.* நுரை. *v.* நுரைத்துப் பொங்கு. *a.* frothy.

**Froward,** *a.* (யாருக்கும்) அடங்காத; முரடான.

**Frown,** *v.* புருவங்களை நெரி; வெறுப்புக் காட்டு.

**Fructify,** *v.* பலனளி; பலன் தரச் செய். *n.* fructification.

**Frugal,** *a.* செட்டான; மட்டாகச் செலவு செய்கிற. *n.* frugality.

**Fruit,** *n.* ஆதாயம்; பழம்; காய்; பலன்; விளைவு. *a.* fruitful.

**Fruiterer,** *n.* பழக்காரர்.

**Fruition,** *n.* பலன் நுகர்வு; பலன் தருதல்; பலன்.

**Fruitless,** *a.* பயனற்ற; வீணான. *n.* fruitlessness.

**Frustrate,** *v.* காரியத்தைத் தடு; கெடுதலைச் செய்; ஏமாற்று. *n.* frustration.

**Frustum,** *n.* அடிக்கண்டம்; முகடற்ற கூம்பு.

**Fry,** *v.* பொரி. *n.* பொரியல்; மீன் குஞ்சு; (தவளை முதலியவற்றின்) குஞ்சுத் திரள்.

**Fudge,** *v.* கதை கட்டு; போலி செய். *n.* கட்டுக்கதை; பொருளற்ற பேச்சு.

**Fuehrer,** *n.* வல்லாட்சியாளர்; ஜெர்மன் நாட்டு வல்லாளர். *n.* fuehrership.

**Fuel,** *n.* விறகு; எரிபொருள்; உணர்ச்சியைப் பெருக்கும் பொருள்.

**Fugacious,** *a.* நிலையில்லாத; எளிதில் மறைகின்ற.

**Fugitive,** *a.* தப்பி ஓடுகிற; விரைவில் மறைகிற நாடோடி யான. *n.* தப்பி ஓடினவர்.

**Fulcrum,** *n.* (*pl.* fulcra.) நெம்புகோலின் ஆதாரம்.

**Fulfil,** *v.* நிறைவேற்று; நிறைவு செய்; *n.* fulfilment

**Fulgent,** *a.* ஒளிவிடுகிற.

**Full,** 1. *a.* நிரம்பிய; மிகுந்த அளவி லுள்ள. *n.* நிறைவு. *adv.* முழுமையும். 2. *v.* ஆடையை வெளு. (1) *n.* fulness. *adv.* fully. (2) *n. pers.* fuller, வண்ணார்.

**Fulminate,** *v.* வெடி; இடி; மின்னு; உறுமு; அச்சுறுத்திப் பேசு. *n.* fulmination. *a., n.* fulminant.

**Fulsome,** *a.* உவட்டுகின்ற.

**Fumble,** *v.* தவறுசெய்; தடுமாறு.

**Fume,** *n.* ஆவி; புகை, *v.* புகை வெளிவிடு; சினம் பொங்கு.

**Fumigate,** *v.* புகையூட்டு. *n.* fumigation. *n. ag.* fumigator.

**Fun,** *n.* விளையாட்டு; வேடிக்கை; கேலி. *a.* funny.

**Function,** *n.* கடமை; சடங்கு; செயல் பண்பு; செயல் கூறு; நிகழ்ச்சி முறை. *v.* செயற்பாடு. *a.* functional. *n. pers.* functionary, கடமைப்பொறுப்பாளர்.

**Fund,** *n.* பொருட்குவை; பொருள் வளம்; சேமவளம்; நிதி; வளம்.

*(pl.)* funds, பண இருப்பு. *v.* பணம் சேமித்து வை; பணத்தை வட்டிக்கு விடு. *comb. n.* provident fund, காப்பு நிதி Reserve fund, சேமநிதி Sinking fund, கடன் கரைப்பு நிதி.

**Fundamental,** *n.* , *a.* அடிப்படை (யான); உயிர் மூலமான(து). *comb. n.* Fundamental Rights, அடிப்படை உரிமைகள்; கருமுதல் உரிமைகள் Fundamental Rules, மூலவிதிகள்.

**Funeral,** *a.* இழவுக்குரிய. *n.* இழவுவினை.

**Fungus,** *n.* (*pl.* fungi or funguses) காளான்; பூஞ்சை. fungous.

**Funicular,** *a.* கம்பிகள் போன்ற.

**Funk,** *n.* அச்சம்; கோழைத்தன முள்ளவன். *v.* அஞ்சிப் பின் வாங்கு. *a.* funky.

**Funnel,** *n.* புகை போக்கி; பெய் குழல், ஊற்றாங்குழல்; வைத்தூற்றி; ஏந்துகுழல்.

**Funny,** *a. see* fun.

**Fur,** *n.* மென்மயிர்; மென் மயிருடன் கூடிய மெல்லிய தோல்; சமையல் கலத்தினுள் படியும் ஏடு. *a.* furry.

**Furbish,** *v.* துருவை நீக்கி மெருகிடு; புதுத்தோற்றமளி.

**Furl,** *v.* சுருட்டி வை.

**Furlong,** *n.* 220 கச அளவு (440 முழம்; 660 அடி).

**Furlough,** *n.* நீண்ட விடுமுறை.

**Furnace,** *n.* உலை; கொல்லுலை.

**Furnish,** *v.* தேடிக்கொடு; தருவி; ஏற்படுத்திக்கொடு; நிறைவாக்கிக் கொடு. *n. pers.* furnisher, *n.* furnishings, தட்டுமுட்டுப் பொருள்.

**Furniture,** *n.* தட்டுமுட்டுப் பொருள்; மனைத்துணை.

**Furore,** *n.* பெருங்களிப்பு; மிகு எழுச்சி.

**Furrier,** *n.* கம்பள வாணிகர்.

**Furrow,** *n.* உழவு சால்; நீண்ட பள்ளம்; வழி. *v.* உழு; வரிபோன்ற பள்ளம் செய் *n. ag.* furrower.

**Further,** *also adv.,* furthermore, *a.* (*see* fore) மேலும். *v.* முன் னேறச் செய்; உதவிசெய். *n.* furtherance, முன்னேற்றம். *a., adv. (sup deg.)* furthermost, முதன்மையாக.

**Furtive,** *a.* திருட்டுத் தனமான; கபடமான. *n.* furtiveness.

**Fury,** *n.* மூர்க்கத்தனம்; பேய்உரு. பேய்; கூளி. *a.* furious, மூர்க்க மான. *n.* furiousness.

**Fuse,** *v.* உருகச்செய்; உருகு; மின் வலியால் எரிந்து போ; அடித்து ஒன்றாகப் பொருத்து. *n.* வெடி மருந்தின் வத்தி; மின்சார இணைப்பில் உருகு கம்பி; மின் எரி இழை. *a.* fusible. *n.* fusion.

**Fuselage,** *n.* வானூர்தியின் உடற்பகுதி.

**Fusillade,** *n.* பெருவாரியாகப் பீரங்கி முதலியன சுடுதல். *v.* பெருவாரியாகத் தாக்கு.

**Fuss,** *n.* பெருஞ் சந்தடி (செய்தல்); குழப்பம். *v.* வீண் சந்தடி செய். *a.* fussy.

**Fustain,** *n.* முரட்டுத் துணிவகை; ஆரவாரமான பேச்சு.

**Futile,** *a.* பயனற்ற; வீணான; சிறுதிறமான. *n.* futility.

**Future,** *a.* நிகழப் போகிற; எதிர்கால. *n.* எதிர்காலம். *a. abs.* futurity, வருங்காலம்; மறுமை.

# G

**Gabble,** *v.* பிதற்று.

**Gable,** *n.* முக்கோணச் சுவர் முகடு.

**Gad,** *v.* வீணாகச் சுற்றித் திரி.

**Gad- fly,** *n.* உண்ணி.

**Gadget,** *n.* கருவி; இயந்திரப் பகுதி; சூழ்ச்சித் திறம்.

**Gaffer,** *n.* (*f.* gammer) கிழவன் ; தொழில் மேலோன்.

**Gag,** *n.* வாய்ப்பூட்டு *v.* வாய்ப் பூட்டுப் போடு.

**Gage,** *n.* அடகுப்பொருள்; மற் போர் அழைப்புக்காக எறியப் படும் கையுறை. *v.* அடகு வை. 2. see gango.

**Gaggle,** *v.* (வாத்து) கத்து; கூச்சலிடு.

**Gaiety, gaily,** *a.* [*gay* பார்க்கவும்].

**Gain,** *n.* ஆதாயம்; பண வருவாய். (x loss) *n. pl.* gains, ஊதிய வருவாய். *v.* ஆதாயம் பெறு; வெற்றி யடை. (x lose) *n. ag.* gainer. *a.* gainful. *n. pl.* gainings, ஆதாயம்; பலன்.

**Gainsay,** *v.* மறுத்துப் பேசு.

**Gait,** *n.* நடை; நடக்கும் பாணி.

**Gala,,** *n.* கொண்டாட்டநாள்; விழா. *(comb.) n.* gala day.

**Galaxy,** *n.* வானிலுள்ள பால் மண்டலம்; 'வான் கங்கை'; சிறந்தோர் கூட்டம். *a.* galactic.

**Gale,** *n.* புயல்காற்று.

**Gall,** *n.* பித்தநீர்; கசப்பு; நஞ்சு; வெறுப்புக்குரிய பொருள். *v.* புண்படுத்து; தொந்தரவு செய். *n.* gall-bladder, பித்தப் பை. *phr.* Gall and wormwood, வெறுப்புக் குரிய நஞ்சு போன்றது.

**Gallant,** *a.* மாதரிடம் பழக்க முடைய; இளமை வீரமுடைய; செவ் வீரமுடைய; நேர்மை யுடைய; வீர முடைய; காதல்புரி திறமுடைய. *n.* gallantry.

**Galleon,** *n.* ஒருவகைப் பெரிய கப்பல்.

**Gallery,** *n.* ஒடுங்கு வழி; சுரங்க வழி; படியடுக்கு; படி மேடை; படியரங்கம்; மேடை இருக்கை வரிசை; சித்திரக் காட்சிச் சாலை; மேல் தளம். *comb. n.* art gallery, கலைக்கூடம்; infiltration gallery, வடியடுக்கு, வடியரங்கம்.

**Galley,** *n.* குட்டையான ஒருவகைக் கப்பல்; சிறைக்கப்பல். கப்பலில் சமையலறை; அச்சு எழுத்துகள் அடுக்கும் தகடு; அச்சுப் பாளம்.

**Gallic,** *a.* (பண்டை) ஃபிரெஞ்சு நாட்டுக்குரிய.

**Gallipot,** *n.* ஒருவகை மண்; (பீங்கான் ) பாண்டம்.

**Gallon,** *n.* முகத்தலளவுக் கூறு.

**Gallop,** *v.* குதித்து ஓடு; பாய்ந் தோடு. *n.* பாய்ந்தோடல்.

**Gallows,** *n. (pl.* used in *sing.)* தூக்குமரம்.

**Galore,** *adv.,n.* மிகு அளவில் (உள்ளது).

**Galvanic,** *a.* மின் ஆற்றலுக்குரிய; திடீரென நிகழ்கிற. n. galvanism, உலோக மின் ஆற்றல். *v.* galvanize, மின் திறம் பாய்ச்சு; திடீரென்று உயிர்ப்பி; திடீரென்று சுறுசுறுப்பாக்கு. *n.* galvanization. *phr. n.* galvanized iron, துத்த நாகம் பூசிய இரும்பு.

**Galvanometer,** *n.* மின்னோட்ட மானி.

**Galvanoscope,** *n.* மின்னோட்டங் காட்டி.

**Gambit,** *n.* சதுரங்கத்தில் முதல் ஆட்டம்.

**Gamble,** *v.* சூதாடு. *n.* சூதாட்டம். *n.* gambling. *n., ag.,* gambler.

**Gambol,** *v* குதித்து விளையாடு. *n.* குதித்து விளையாடல்; குதிப்பு.

**Game,** *n.* விளையாட்டு; கேளிக்கை; களியாட்டம்; களிவேட்டை; பயிற்சி யாட்டம்; மனைப்புற விளை யாட்டு; வேட்டைப் பொருள்; வேட்டை விலங்கு; வேட்டைப் புள்; வேட்டையிரை; மகிழ்ச்சி; களியாட்டநம தோழர்; களிமகன்; களியாட்டப் பொருள். *a.* களி யாட்டத்துக்குரிய; களிப்பூட்டு கிற; இனிய. *a.* gamesome *comb. n.* gamekeeper, வேட்டைக் காட்டைப் பாதுகாப் பவன். *n. pers.* gamester, களியாட்டக் காரன் ; களிவேட்டை யாளர்.

**Gamma rays,** *n.* 'கம்மா' ஒளிக்கதிர்; பொருளூடுருவும் சிற்றலை ஒளிக்கதிர் வகை; நுண்கதிர்.

**Gammer,** *n.* (*m.* gaffer) கிழவி.

**Gammon,** 1. *n.* உப்பிட்டு உலர்த்திய பன்றிக்கால் இறைச்சி. 2. *v., n.* மோசடி (செய்).

**Gamut,** *n.* சுதி வரிசை.

**Gander,** *n.* ஆண் வாத்து; முட்டாள்.

**Gang,** *n.* தொகுதி; கூட்டம்; கும்பல்; குழு. *n.* ganger, கூலியாட்களின் பொறுப்பாளர்.

**Ganglion,** *n.* (உடலில்) நரம்பு முடிப்பு; நரம்பு மையம்.

**Gangrene,** *n.* குடலின் பகுதி அழுகுதல்; பிளவை. *a.* gangrenous.

**Gangster,** *n.* கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன்.

**Gangway,** *n.* வரிசையான இருக்கைகளுக்கு இடையிலுள்ள வழி; கப்பலில் ஏறியிறங்கும் பாதை.

**Goal,** *n. see* jail.

**Gap,** *n.* பிளவு; திறப்பு; தொடர்ச்சி யில் இடைமுறிதல்.

**Gape,** *v.* வாயைப்பிள; கொட்டாவி விடு; திகைத்துப் பார். *n.* வாயைப் பிளத்தல்; உற்றுப் பார்த்தல்.

**Garage,** *n.* பொறி வண்டிக் குச்சில்.

**Garb,** *n., v.* உடை (அணிந்து கொள்).

**Garbage,** *n.* கழிவுப்பொருள்; குப்பை.

**Garble,** *v.* தீயநோக்கத்துடன் எடுத்துக்காட்டு; புரட்டிக் கூறு.

***garcon,*** *n.* சிற்றாள்; வேலையாள்.

**Garden,** *n.* தோட்டம்; தோப்பு. *v.* தோட்ட வேலை செய். *n.* gardening. *n. pers.* gardener.

**Garget,** *n.* தொண்டை அல்லது பால்மடியின் அழற்சி.

**Gargle,** *v.* தொண்டையைக் கழுவு; கொப்பளி. *n.* தொண்டை கழுவுதல்.

**Gargoyle,** *n.* பழங்கதை; விலங்கு வகை; தூம்பு.

**Garish,** *a.* பகட்டான; ஒளி பிறங்குகிற.

**Garland,** *n.* பூமாலை. *v.* மாலையணி.

**Garlic,** *n.* வெள்ளைப் பூண்டு; பூடு; வெங்காயம். *a.* garlicky.

**Garment,** *n.* உடை; மேலங்கி.

**Garner,** *n.* களஞ்சியம். *v.* சேமித்து வை.

**Garnet,** *n.* மாணிக்க வகை.

**Garnish,** *v.* அணி செய். *n.* garnishment.

**Garret,** *n.* மச்சு அறை; மச்சில்.

**Garrison,** *n.* கோட்டைப் பாது காப்புப் படை. *v.* காவல்படை நிறுத்து.

**Garrulous,** *a.* ஓயாமல் பேசுகிற; பிதற்றுகிற. *n.* garrulity.

**Garter,** *n.* காலுறையைக் கட்டும் நாடா. *v.* நாடாவினால் கட்டு. *n.* the Garter, ஆங்கில அரசால் வழங்கப்படும் ஒரு பட்டம்.

**Gas,** *n.* ஆவி; நச்சுப் புகை; நிலக்கரி வளி. *v.* நச்சுவளியால் தாக்கு. *a.* gaseous, *comb. n.* poison gas, நச்சுவளி(க்குண்டு). gas light, ஆவி விளக்கு. gas works, ஆவி நிலையம்; வளிமனை.

**Gash,** *n.* ஆழமான வெட்டு; பிளவுடன் கூடிய புண். *v.* ஆழமாக வெட்டு.

**Gasify,** *v.* ஆவியாகு; ஆவியாக்கு.

**Gaslight,** *n.* ஆவி விளக்கு.

**Gas mask,** *n.* நச்சுப் புகை (தடுக்கும்) முகமூடி.

**Gasolene, gasoline,** *n.* கல்லெண்ணெய் வகை.

**Gasp,** *v.* மூச்சுத் திணறு; மூச்சுத் திணறிப் பேசு. *n.* திணறல்.

**Gassy,** *a.* ஆவிபோன்ற.

**Gastric,** *a.* இரைப்பை சார்ந்த.

**Gastritis,** *n.* இரைப்பை அழற்சி.

**Gastronomy,** *n.* நல்லுணவுக் கலை. *n.* gastronome, நல்லுணவு வல்லுநர். *a.* gastronomic.

**Gate,** *n.* வாயில்; நுழைகதவு. *n.* Gateway, வாயில் வழி.

**Gather,** *v.* ஒன்றாகச் சேர்; திரட்டு; ஒன்றுகூடு; திரளாகு. *n.* gathering கூட்டம்; திரட்சி.

**Gaud,** *n.* பகட்டு. *a.* gaudy, பகட்டான. *n.* guadiness.

**Gauge, 1.** *n.* **(also gage)** படியளவை; திசை அளவை; நுண்ணளவை; அளவு; அளவு

கோல். 2. *v.* ஒன்றின் அளவைக் கண்டுபிடி; மதிப்பிடு.

**Gaunt,** *a.* ஒல்லியான; இளைத்த; சல்லியான.

**Gauntlet,** *n.* கைக் கவசம்; வரிசையில் ஒருவனை அடிக்கும் தண்டனை. *phr. v.* run the gauntlet, துணிவு கொள்.

**Gauze,** *n.* மெல்லிய துணி; மெல்லிய கம்பி வலை. *a.* gauzy.

**Gay,** *a.* களிகூர்ந்த; இன்பகரமான; மகிழ்ச்சி பொங்குகிற. *n.* gaiety, அகமகிழ்வு. *adv.* gaily.

**Gaze,** *v.* உற்றுப் பார். *n.* உற்றுப் பார்த்தல்.

**Gazelle,** *n.* ஒருவகை மான்.

**Gazette,** *n.* அரசியல் செய்தி; வெளியீட்டுத் தொகுதி; அரசியலார் நடத்தும் பத்திரிகை; அரசுத்தாள்; அரசிதழ். *p. pr.* gazetted, (x *see* non-gazetted) அரசிதழ் பதிவுபெற்ற. *comb. n.* gazetted officer, அரசிதழ் பதிவுப் பணியாளர்.

**Gazetteer,** *n.* நிலஇயல் தகவல் தொகுதி; திணையேடு.

**Gear,** *n.* தளவாடம்; பொருந்து கருவி; இணைந்து சுழலும் பற் சக்கரங்கள். *v.* பற் சக்கரங் களுடன் பொருத்து; கருவிகளுடன் இணை.

**Geese,** *n. pl.* [goose] பார்க்கவும்.

**Gehenna,** *n.* நரகம்; எரியுமிடம்.

**Geisha,** *n.* ஜப்பானிய நடிகை. gies, *n.* அறிவுத்திறன்; நல்லுணர்ச்சி; ஆர்வம்.

**Gelatin(e),** *n.* எலும்புப் பசை. *a.* gelatinous, பசை போன்ற.

**Geld,** *v.* (உயிரினங்களை) விதை யடி; காயடி. *n.* gelding, காயடித்த விலங்கு.

**Gem,** *n.* மணிக்கல்; மணி.

**Geminate,** *v.* இணை; இரண்டை இணை.

**Gemini,** *n.* ஆனிவீடு; சோடி; இணை; சுவடு.

*gnedarme,* ***n.*** ஃவிரான்ஸ் நாட்டுக் காவற்படையாளர்.

**Gender,** *n.* (இலக்கணம்) பால்; பால்பாகுபாடு.

**Gene,** *n.* மரபு உறுதிப்படுத்தும் நுட்ப அணு.

**Genealogy,** *n.* மரபு முறை; மரபு வரிசை; மரபு விளக்கக் கொடி; மரபுக்கொடி; வழி. *a.* genealogical, *n.* genealogist.

**General, 1.** *a.* பொதுவான; பரவி யுள்ள. 2. *n.* படைத்தலைவர்; தலைவர் பெரும்பான்மை. (1) *adv.* generally, *n.* generalty. *v.* generalize, பொது வீதி கூறு; பொதுப்பட அமைத்துச் சொல். *n.* generalization, (2) *n. abs.* generalship.

**Generalissimo,** *n.* படை முதல் தலைவர்; முதல் படைத்தலைவர்; படை முதல்வர்.

**Generate,** *v.* பிறப்பி. *n.* generation, 1. பிறப்பித்தல். 2. தலைமுறை. (2) *a.* generative, பிறப்புக்குரிய. *n. ag.* generator, 1. பிறப்பிப்போன். மின் உண்டு பண்ணும் கருவி.

**Generous,** *a.* தாராள குணமுள்ள; பெருந்தன்மையுள்ள. *n.* generosity.

**Genesis,** *n.* தொடக்கம்; படைப்பு.

**Genetics,** *n.* பிறப்பு மரபு பற்றிய நூல் *a.* genetic.

**Genial,** *a.* வளர்ச்சிக்குகந்த; மகிழ்ச்சியான. *n.* geniality.

**Genie,** (*see* genius) *n.* (*pl.* genii) தெய்வம்; குறளி; பூதம்.

**Genital,** *a.* பிறப்புக்குரிய. *n. (pl.)* genitals, பிறப்புறுப்புகள்.

**Genitive,** *n., a.* ஆறாம் வேற்றுமை (சார்ந்த); கிழமைப் பொருள் தருகிற வேற்றுமை (சார்ந்த).

**Genius,** *n.* (*pl.* -iuses, - ii) (*see* genius) குலதெய்பம்; திணைத் தெய்வம்; சிறுதெய்வம். (*see* genius); தனித் திறமையுடையவர்; திறமை மிக்கவர்; சிறப்புத் திறமை.

*genre,* *n.* பாணி; வகைமுறை; தரம்.

**Genteel,** *a.* நாகரிகமான; வணக்க இணக்கமான; உயர்குடிக்குரிய; உயர்குடிப் பயிர்ப்புடைய.

**Gentile,** *a., n.* (யூதவழக்கு) பிறஇனத்தார் (சார்ந்த).

**Gentility,** *n.* (gentle) உயர்குடிப் பிறப்பு; பெருந்தன்மை.

**Gentle,** *a.* படிமானமுடைய; பணி விணக்கமுடைய; முரட்டுத் தனமற்ற; உயர்குடிப் பிறந்த; குடிப்பண்புடைய. *n.* gentleness, *see* gentility, *adv.* gently, *comb. n.* see gentleman etc.

**Gentle-man,** *n.* (*pl.* gentlemen) (*fem,* gentlewoman, lady and *f. pl.* gentle women) பண்பாளர்; உயர்குடிப் பிறந்தோர்; பொறுப் புணர்ச்சியுடையவர்; பெருந் தன்மையுடையவர். *a.* gentle manly, gentleman like. *n. abs, coll.* gentry உயர்குடிப் பிறந்தோர்; நன் மக்கட் குழு.

**Genuine,** *a.* கலப்பில்லாத; உண்மையான; வாய்மையுடைய.

**Genus,** *n.* (*pl.* genera.) இனம்: பிண்டம்; தொகுதி; பேரினம்; இனப்பொதுத்தொகுதி. *a.* generic.

**Geocentric,** *a.* நில உலகின் மையம் சார்ந்த.

**Geodesy,** *n.* நில உலகின் மேற் பரப்பைப் பற்றிய கணக்கியல். *a.* geodesic, geodetic.

**Geography,** *n.* நில நூல். *a.* geographic(al). *adv.* geographically. *n. pers.* geographer.

**Geology,** *n.* மண்ணூல்; பார் இயல்; நில உட்கூற்றியல் நூல். *a.* geologic (al), *n. pers.* geologist.

**Geometry,** *n.* நிலக்கணக்கியல்; மனைக்கணக்கியல்; வடிவ இயல் *a.* geometric(al). *n. pers.* geometer, geometrician.

**Geophysics,** *n.* நில உலக இயக்க நூல்.

**Georgettee,** *n.* மெல்லிய பட்டுத் துணி.

**Geostatics,** *n.* திண்ம இயக்க இயல்; திடப்பொருள் இயங்கியல்.

**Germ,** *n.* முளை; மொட்டு; கரு; புழு; நுண்புழு; நோய் நுண்மம். *a.* germinal, கருச்சார்ந்த; முளை சார்ந்த.

**Germane, german,** *a.* பொருத் தமான; ஓரினத்தொடர்புடைய.

**Germinate,** *v.* முளைவிடு; வளரத் தொடங்கு. *n.* germination.

**Gerund,** *n.* தொழிற் பெயர்.

**Gestapo,** *n.* (ஜெர்மன் நாஜிக் கட்சியின்) மறை ஒற்றர் கூட்டம்; மறை கொடுமையாட்சி.

**Gestation,** *n.* கருப்பேறு; கருவகமுதிர்ச்சி.

**Gesticulate,** *v.* கைகாலாட்டிப் பேசு; சைகை செய். *n.* gesti -culation, *a.* gesticulatory.

**Gesture,** *n.* சைகை.

**Get,** *v.* **(got, got or gotten)** பெறு; வாங்கு; சென்று சேர்; ஆகு (-dry,-) trained etc.) *n.* get-up, அமைப்பு; அமைதி; சட்ட அமைப்பு; பின்னணி அமைப்பு.

**Geegaw,** *a.* பகட்டு.

**Geyser,** *n.* வெந்நீர் ஊற்று.

**Ghastly,** *a., adv.* (ghost) கோர உருவமான; பேய் போன்ற. *n.* ghastliness.

**Ghat,** *n.* மலைத்தொடர்; படித்துறை.

**Ghee,** *n.* நெய்.

**Ghette,** *n.* (நகரில்) யூதர் சேரி.

**Ghost,** *n.* பேய்; ஆவி உரு; பொய்த்தோற்றம்; மனமயக்கம்; நினைவெச்சம்; எச்சம்; பின் விளைவு; அச்சம். *a.* ghostlike, *a.* ghostly, *see* ghastly.

**Ghoul,** *n.* பிணந்தின்னும் பேய்; கூளி; பிணவு.

**Giant,** *n.* (*fem.* giantess,) பேருருவுடையவர்; சூரர்; அசுரமாந்தர்; அரக்கர். *a.* மாபெரிய; அளவுகடந்த *a.* giantlike.

**Gibber,** *v.* பிதற்று. *n.* gibberish, பிதற்றல் உரை.

**Gibbet,** *n.* தூக்குமரம்; தூக்குத் தண்டனை. *v.* தூக்கிலிடப் பெறு.

**Gibbon,** *n.* வாலில்லாக் குரங்கு வகை.

**Gibe,** *v.* ஏளனம் செய்; இகழ்ந்து சிரி. *n.* ஏளனம்.

**Giddy,** *a.* மயக்கமான; தலை சுற்றுகிற; ஆழ்ந்தாய்வில்லலாத. *n.* giddiness.

**Gift,** *n.* கொடை; நன் கொடை; இயற்கைத் திறம். *a.* gifted, இயற்கைத் திறமையுள்ள; அறிவுள்ள.

**Gig,** *n.* இருசக்கரக் குதிரை வண்டி; ஓடம்.

**Gigantic,** *a.* மிகப் பெரிதான.

**Giggle,** *b.* முட்டாள்தனமாகச் சிரி. *n.* இளித்தல். *n.* giggler.

**Gild,** *v.* **(gilded, gilded or gilt)** பொன் முலாம் பூசு; பளபளப் பாகச் செய். *n.* gilding *n. a. see* gilt.

**Gill,** *n.* (மீன்) செவுள்.

**Gilt, (> gild),** *n.* பொன் முலாம். *a.* பொன் முலாம் பூசிய.

**Gimlet,** *n.* தமரூசி; துளையிடுங் கருவி.

**Gin, 1.** *n.* வலை; கண்ணி; பாரந்தூக்கும் கருவி வகை *v.* கண்ணியிலகப்படுத்து 2. *n.* பருத்தி விதையைப் பிரித் தெடுக்கும் கருவி; *v.* (பருத்தி) விதையைப் பிரித்தெடு; கொட்டை பிரி; அரை. 3. கடுந்தேறல் குடி வகை; சாராயவகை; (2) *prep. n., adj.* ginning, அரைவை (செய்கிற); (பருத்தி) கொட்டை பிரிக்கிற.

**Ginger,** *n.* இஞ்சி; காரப்பொருள். *a.* மங்கிய சிவப்பான *v.* இஞ்சி சேர். *a.* gingerly. *adv., a.* gingerly. விழிப்பான; முன் எச்சரிக்கையுள்ள; பிசுணித் தனமான.

**Gingelly, gingili,** *n.* எள்.

**Gipsy, gypsy,** *n.* நாடோடி இனம்; குழுவர் இனம்; குழுவன்.

**Giraffe,** *n.* ஒட்டைச் சிவிங்கி.

**Gird,** *v.* (girded or girt) கசை; வரித்துக்கட்டு; (மல்லுக்கு) ஒருங்கு.

**Girder,** *n.* பெரிய உத்தரம்; பாரந்தாங்கி; விட்டம்; தாங்கு கட்டை.

**Girdle,** *n.* கச்சை; அரைக்கச்சை; வளையம். *v.* சுற்றிக் கட்டு; சுற்றி வளை.

**Girl,** *n.* பெண்; சிறுமி; பெதும்பை. *a.* girlish, (பெண்) சிறுபிள்ளைத் தனமான. *n. abs.* girlhood, சிறுமிப் பருவம்; பெதும்பைப் பருவம். *comb. n.* girl guide, பெண் தொண்டர் (படை); பெண் சாரணர்.

**Girth,** *n.* சுற்றளவு; சுற்றிக்கட்டும் பட்டை. *v.* சுற்றிக் கட்டு.

**Gist,** *n.* சாரம்; சுருக்கம்; முடிவுக் கூறு; அடிப்படை மெய்ம்மை.

**Give,** *v.* (gave given) கொடு; விட்டுக் கொடு; *(idiom)* -way = வழி விடு. பணி முறிவுறு.

**Glacial,** *a.* பனிக்கட்டிக்குரிய; பனி ஊழிக்குரிய; பனி போன்ற.

**Glacier,** *n.* பனியோடை; (மலைச் சரிவில் நகரும்) பனிப் படலம்.

**Glacis,** *n.* அரணுக்கு முன்னுள்ள சரிவு.

**Glad,** *a.* மகிழ்ச்சி வாய்ந்த; மன நிறைவுடைய. *v.* gladden, மகிழ்வி. *s. a.* gladsome. *n.* gladness.

**Glade,** *n.* (காட்டினடுவுள்ள) வெளியிடம்; அகவெளி.

**Gladiator,** *n.* அரங்கமல்லர்; வாள்போர் வல்லுநர்; சொற்போர் வல்லுநர்.

**Glamour,** *n.* பகட்டு; மருட்சி; கவர்ச்சியாற்றல். *v.* மயக்கு; மாயத்தால் கவர்ச்சியூட்டு. *a.* glamorous.

**Glance,** *v.* பட்டும் படாமலும் செல்; தொட்டுச் செல்; நோக்கு. *n.* கணநேரப் பார்வை; பட்டுச் செல்லல்.

**Gland,** *n.* சுரப்பி. *a.* glandular.

**Glanders,** *n. pl.* குதிரைத்தொற்று நோய் வகை.

**Glare,** *v.* உறுத்துப்பார்; ஒளி வீசு. *n.* வெளிச்சம்; ஒளிமிகுதி; கண் கூசுதல்; உறுத்துப் பார்த்தல்; கனல் வெப்பு; ஒளி வெப்பு. *a.* glaring.

**Glass,** *n.* பளிங்கு; கண்ணாடி; கண்ணாடிக் கலம். (looking glass) *(pl)* முகம் பார்க்கும் கண்ணாடி; மூக்குக் கண்ணாடி *a.* glossy, பளபளப்பான; கண்ணாடி போன்ற. *v. see* glaze. *n. ag. see* glazier. *comb. n.* glassware, கண்ணாடிக் கலங்கள்; கண்ணாடிப் பொருள்கள். glassworks, கண்ணாடித்தொழிற் சாலை.

**Glaucous,** *a.* பசுமை அல்லது நீலநிறமான.

**Glaze,** *v.* (glass) மெருகிடு; பளபளப்பாக்கு; மினுசமாக்கு. *n.* பளபளப்பு; மெருகு; மினுக்கம்; மினுமினுப்பு. *n. pers.* glazier.

**Glazier,** *n.* (glass) கண்ணாடி போடுபவன்.

**Gleam,** *n.* சுடரொளி; மினுமினுப்பு; மின்னொளி; (இடையீட்டுத்) தோற்றம்; கூறு. *v.* பளபள; மின்னு; மினுங்கு.

**Glean,** *n.* பொறுக்கு; பொறுக்கிச் சேகரி. *n. ag.* gleander. *n. pl.* gleanings, பொறுக்குமணிகள்; பொறுக்கு கதிர்கள்.

**Glee,** *n.* களிப்பு; மகிழ்ச்சி; பலர் சேர்ந்து பாடக்கூடிய பாட்டு. *a.* gleeful.

**Glen,** *n.* (ஒடுங்கிய) பள்ளத்தாக்கு.

**Glib,** *a, adv.* சரளமாகப் பேசுகிற; எதிர்ப்பில்லாத; வழுவழுப்பான.

**Glide,** *v.* வழுக்கிச் செல்; ஊர். *n.* வழுக்கிச் சொல். *n. ag. impers.* glider, சறுக்குப் பலகை; சறுக்கி; (பொறியில்லாச்) சறுக்கு வானூர்தி.

**Glimmer,** *v.* மினுங்கு; விட்டு விட்டு ஒளிர். *n., a.* glimmering.

**Glimpse,** *n.* கணநேரத்தோற்றம்; காட்சித் துணுக்கு. *v.* கணநேரம் பார்.

**Glint,** *v.* பளிச்சென்று ஒளி வீசு. *n.* பளிச்சென்று ஒளி வீசுதல்.

**Glisten,** *v.* பளபளப்பாயிரு.

**Glister,** *v.* ஒளி விடு.

**Glitter,** *v.* மின்னு; பளபளப்பாக ஒளிவிடு. *n.* மின்னுதல்; பகட்டு.

**Gloat,** *v.* மட்டின்றி மகிழ்; துன்பம் கண்டு மகிழ்.

**Globe,** *a.* உருண்டை; கோளம்; நிலக்கோளம். *a.* globular, உருண்டை வடிவான. *a.* global, முழு உலகுக்குரிய. *n.* (diminut) globule, சிறு கோளம்; உருள்மணி.

**Glomerate,** *a.* திரண்டுள்ள; கட்டியாகச் சேர்ந்துள்ள.

**Gloom,** *n.* இருள்; மனவருத்தம். *v.* இருளடை; மனம் வருந்து. *a.* gloomy.

**Glorify,** *v.* (glory) புகழ்; பாராட்டு; மெச்சு; மேன்மைப்படுத்து; மட்டின்றிப் புகழ்; மிகைப்படுத்து. *n.* glorification.

**Glory,** *n.* மிகுபுகழ்; மேன்மை. *v.* புகழ்ச்சி செய்; பெருமைகொள். *a.* glorious, *v.* glorify.

**Gloss,** *n.* பளபளப்பு; வெளிப் பகட்டு; குறிப்புரை; பதவுரை. *v.*

பளபளப்பாக்கு; மினுக்கு; குறிப்புரை எழுது. *a.* glossy.

**Glossal,** *a.* நாவுக்குரிய.

**Glossary,** *n.* பதஉரை; சொற்றொகுதி.

**Glottis,** *n.* உள் நா. *a.* glottal.

**Glove,** *n. (gen. pl.)* கையுறை. *v.* கையுறை அணிந்துகொள்.

**Glow,** *v.* ஒளி விடு; ஒளிர்; பிறங்கு; உணர்ச்சியால் துலக்கமுறு. *n.* ஒளிமிகுதி; சிவத்தல்; உணர்ச்சி மிகுதல்.

**Glower,** *v.* உறுத்துப் பார்.

**Glow-worm,** *n.* மின் மினி.

**Glucose,** *n.* பழவெல்லம்; பழச் சர்க்கரை.

**Glue,** *n.* பசை; பிசின். *a.* gluey.

**Glum,** *a.* எழுச்சியற்ற; வருத்த மிகுந்த.

**Glut,** *v.* மட்டறத் தெவிட்டு. *n.* நிரப்புதல்; தெவிட்டல்.

**Gluton,** *n.* பிசின்; பசை. *a.* glutinous.

**Glutto***n.* *n.* பெருந்தீனிக்காரன் *a.* gluttonous, *n. abs.* gluttony.

**Glycerine(e),** *n.* இன்பசை நீர்க்கலவைப் பொருள்.

**Gnarled, gnarly,** *a.* கணுக்களுள்ள; முண்டுகளுள்ள.

**Gnash,** *v.* பற்களை நெரி.

**Gnat,** *n.* மொதும்பு; ஒலுங்கு; கொசு வகை.

**Gnaw,** *v.* பல்லைக் கறி.

**Gneiss,** *n.* தீப்பாறை; கொழுந்துப் பாறை.

**Gnome,** *n.* **1.** சூத்திரம்; நீதிமொழி; பொருள் செறிதொடர்; மறை மொழி; வாய்பாடு. 2. கூளி; குறளி. (1) *a.* gnomic, செறிந்த மணிச் சுருக்கமான .

**Gnomon,** *n.* நிழற் கடிகாரம்.

**Gnostic,** *a.* 1. அறிவு நெறிக் கோட்பாட்டாளர். 2. *a. n.* பண்டைக்கிறித்துவநெறி வகை சார்ந்த(வர்).

**Go,** *v.* (went, gone) போ; செல்; நட; இழ; இற; கழி; நடைபெறு. *n.* போக்கு; உய்வு; ஊக்கம். *n. ag.* goer, போகிறவன். *phr. v.* go in far, நாடியடை. go half-half, சரிபங்கு ஏற்றுக்கொள். துணை யாயமை. go for, நாடு. go to, ஒழி. go by, கட. *n.* give one the, go by, வெல்; தோற்கடி.

**Goad,** *n.* தாற்றுக்கோல்; தூண்டு கோல். *v.* தூண்டு; தொந்தரை செய்.

**Goal,** *n.* ஓட்டப் பந்தயத்தின் முடிவிடம்; இலக்கு; குறிக்கோள்; நோக்கம்.

**Goat,** வெள்ளாடு.

**Gobble,** *v.* விழுங்கு.

**Go-between,** *n.* தரகன்.

**Goblet,** *n.* கிண்ணம்.

**Goblin,** *n.* பேய்; சிறு தெய்வம்.

**Go-cart,** *n.* நடைவண்டி.

**God,** *n.* கடவுள்; தேவன் ; தெய்வம் *n. (fem.)* goddess. *a. neg,* godless. கடவுட்பற்றில்லாத. *a.* godly, கடவுள் பற்றுள்ள; தெய்விகமான. *n.* godlliness.

**Godfather,** *n.* நற்றந்தை; தீக்கைக் குரிய திருத்தந்தை; பெயரிடும் தந்தை; ஆதரவாளர்.

**Godhead,** *n.* தெய்வத்தன்மை; முதற் றெய்வம்; இறை(மை).

**Godlike,** *a.* மிகச் சிறந்த; தெய்வத்துக்குரிய.

**Godown,** *n.* கிடங்கு; பண்டக சாலை.

**Godsend,** *n.* நற்பேறு; தற்செயற் பேறு.

**Godspeed,** *n.* (முயற்சியில்) நல் வெற்றி.

**Goggle,** *v.* (விழிகளை) உருட்டிப் பார். *a.* விழி பிதுங்கியுள்ள. *n.* goggles, மூக்குக் கண்ணாடி வகை.

**Goglet,** *n.* மண்கூசா; குவளை; குப்பி.

**Goitre,** *n.* குரல்வளைச் சுரப்பி வீக்கம்.

**Gold,** *n.* பொன்; தங்கம், பணம். *a.* golden, பொன்னாலான; பொன் போன்ற, பொன்னான.

**Goldsmith,** *n.* பொற் கொல்லன்.

**Golf,** *n.* ஒருவகைப் பந்தாட்டம்.

**Golosh,** *n.* தொய்வகக் காலுறை.

**Gondola,** *n.* (வெனிஸ் நகரத்துப்) படகு. இன்ப ஓடம். *n. pers.* gondolier, படகோட்டி.

**Gone,** (*pa. p.* of go) *a.* சென்று போன; கழிந்த; நம்பிக்கை யற்ற.

**Gong,** *n.* சேண்டை (மணி.)

**Gonorrhoea,** *n.* மேகவெள்ளை (நோய்); வெட்டை.

**Good,** *a.* (better, best) நல்ல; சரியான; தகுந்த. *n.* நன்மை; நலம் நற்செயல். *n.* goods, பொருள்கள்; சரக்கு. *n. abs.* goodness.

**Goodbye,** *int., n.* போய் வருகிறேன் ("சிறுபொழுது" விடைகொள்ளும் மொழி.)

**Goodly,** *n.* (good) அழகான; பார்க்கத்தகுந்த; போதிய.

**Goodman,** *n.* **(good)** வீட்டுக்காரர்; கணவன்.

**Goodness,** *n. see* good.

**Goods,** *n. pl. see* good.

**Goodwill,** *n.* நல்லெண்ணம்; (வர்த்தகர்) செல்வாக்கு; நட்புச் சுழல்.

**Goody,** *a.* (பேச்சு, கேலி வழக்கு) நன்னெறியிலுள்ள; மிகநல்ல; அப்பாவியான.

**Goose,** *n.* (*pl.* geese) பெண் வாத்து; முட்டாள்.

**Gooseberry,** *n.* முட்செடி வகை; (அதன்) பழம்.

**Goose step,** *n.* (முழங்கால் மடியாத ஒருவகை) படைத்துறை நடைவகை.

**Gordian knot,** *n.* சிக்கல் மிக்க நிலை. (*id-phr.* cut the-) குறுக்கு வழியில் சிக்கல் தீர்.

**Gore,** *n.* குருதி; கொம்பினால் குத்து *a.* gory.

**Gorge,** *n.* தொண்டை; ஒடுக்கமான வழி; அருவி பாய்ந்து உண்டான கெவிமலைப் பள்ளம்; விழுங்கிய பொருள். *v.* விரைவாக விழுங்கு.

**Gorgeous,** *a.* பகட்டான நிறங் களுள்ள; பகட்டான அணி ஒப்பனையுடைய.

**Gorgon,** *n.* (கிரேக்க புராணம்) ஒரு கொடும் பிடாரித் தெய்வம்.

**Gorilla,** *n.* (வாலில்லாக்) குரங்கு வகை.

**Gormandize,** *v.* மட்டின்றி விரைந்து உணவு உட்கொள்; மட்டின்றி விழுங்கு.

**Gosling,** *n.* வாத்துக்குஞ்சு.

**Gospel,** *n.* நற்செய்தி (கிறிஸ்து பெருமான் வாழ்க்கைச் செய்தி;) விவிலிய நூலின் தலைமாணவர் நால்வர் ஏடுகளுள் ஒன்று.

**Gossamer,** *n.* சிலந்தி நூல்; மிக மெல்லிய வலை.

**Gossip,** *n.* வம்புப் பேச்சு; வம்பளப்பு. *v.* வம்பு அள; பேசு.

**Got,** [get *v.* பார்க்கவும்.]

**Goth,** *n.* பண்டைக் கிழக்கு ஜெர்மானிய இனத்தார். *a. n.* Gothic, பண்டைய கிழக்கு ஜெர்மானிய (மொழி). *a.* கூர் வளைவுடைய சிற்பவகை சார்ந்த.

**Gourd,** *n.* சுரைக் கொடி; சுரைக்காய்.

**Gourmand,** *a.* மட்டின்றி உணவு விரும்புகிற. *n.* மட்டின்றி உண்பவன்.

**Gout,** *n.* கீல்வாதம்; முடக்கு வாதம். *n.* gouty.

**Govern,** *v.* (நாட்டை) ஆட்சி செய். *n.* government, அரசு; அரசிய லார்; ஆட்சிக்குழு; ஆட்சியாளர்; அமைச்சர் குழு. *n.* governance, ஆட்சிமுறை. *n. ag. pers.* governor, (*fem.* governess) ஆட்சி செய்வோர்; மாகாணத் தலைவர்; பொருளக முதல்வர்; ஆளுநர்; ஆணர்; செயலாளர்; மண்டலிகர்; வேந்தர்; இயந்திரத்தில் வேகத்தை ஒழுங்கு செய்யும் அமைப்பு. *comb.* Governor-general, (*pl. n.* governess-general) மா முதல்வர்; மாமண்டலிகர்; மாவாருணர்.

**Gown,** *n.* மாதர் மேலாடை; மேலங்கி.

**Grab,** *v.* கைப்பற்று; சுரண்டு; கைக்கொள். *n.* கைப்பற்றுதல்; பிடித்தல். *n. ag.* grabber.

**Grabble,** *v.* தேடு; தடவு.

**Grace,** *n.* நயம்; பண்பு; அழகு; நல்லெண்ணம்; சலுகை; (8 days grace) மன்னிப்பு (act of grace) இரக்கம்; (show grace); அருள்; (with capital grace,) (கோமான், கோமாட்டி; தலை முதல்வர் பட்டம்) திருமேனி. (His, Her or Your Grace, the duke, the Duchess, the archbishop) *v.* அழகு செய்; மேன்மைப்படுத்து. *a.* graceful, *see* gracious, *n.* gracefulness, *a. (neg.)* grace less, நயமற்ற; அருளற்ற; உருப்படாத.

**Gra'cious,** *a.* அன்பான; மன்னிக்கும் குணமுள்ள; பெருந் தன்மை யுள்ள (x ingracious) *n.* graciousness.

**Gradate,** *v.* **(> grade)** படிப்படி யாக அமை; வரிசைப் படுத்து. *n.* gradation.

**Grade,** *n.* தரவரிசை; தரம். *v.* வரிசைப்படி அமை.

**Gradient,** *n.* சாய்வலகு; சாய்வின் அளவு.

**Gradual,** *a.* படிப்படியான. *adv.* gradually, *n.* gradualness.

**Graduate,** *n.* பல்கலைக் கழகப் பட்டதாரி. *v.* பட்டம் பெறு; அளவுகளைக் குறி; படிமுறைப் படுத்து *n.* graduation.

**Graft,** *v.* ஒட்டவை. *n.* ஒட்ட வைத்த கிளை. *a.* ஒட்டான. *v. see* engraft.

**Grail,** *n.* கிறித்து பெருமான் கடைசி விருந்துக் கிண்ணம்.

**Grain,** *n.* கூலம்; தானியம்; சிறிய துணுக்கு; குன்றிமணியளவு எடை; வரை. *v.* சிறு துணுக்குகளாக்கு; மரம்போல் வண்ணம் தீட்டு.

**Gram,** *n.* **1.** கொள்; காணம்; கொள்ளு வகைப்பயிர். 2. [gramme பார்க்க].

**Gramaphone,** *n.* ஒலிவழங்கி; இசைவழங்கி; இசைப் பெட்டி; இசை பாடி.

**Grammar,** *n.* இலக்கணம். *n. pers.* grammarian, *a.* grammatical.

**Gramme, gram,** *n.* ஃவிரஞ்சு எடை அளவு.

**Gramophone,** *n.* பதிவிசைப் பெட்டி.

**Grampus,** *n.* திமிங்கிலம்; பெருந் திமிங்கிலம்.

**Granary,** *n.* (தானியக்) களஞ்சியம்; பத்தாயம்.

**Grand,** *a.* மேன்மையான; பெரு மிதமான; பாரித்த. *n.* grand-child, பேரன் அல்லது பேர்த்தி. *n.* grand-father, grand-uncle, grand-papa, grand-pa பாட்டன். grand-mother, grand-aunt, grandma (mma) granny. *comb. n.* grand-total, ஆக மொத்தம்; பெருமொத்தம்.

**Grandame,** *n.* கிழவி; பாட்டி.

**Grandee,** *n.* பெருமகன்.

**Grandeur,** *n.* மேன்மை; சிறப்பு.

**Grandiloquent,** *a.* பகட்டாகப் பேசுகிற; பகட்டாரவாரமான. *n.* grandiloquence.

**Grandiose,** *a.* பகட்டான; பெருமையான தோற்றமளிக்கிற; *n.* grandiosity.

**Grange,** *n.* பண்ணை வீடு; களஞ்சியம்.

**Granite,** *n.* கருங்கல்.

**Granny,** *n. see* grand.

**Grant,** *v.* கொடு; அளி; இணங்கு; கொடுத்தருள்; அருள்செய். *n.* அளித்தல்; கொடைப்பெருள்; (ஆட்சியாளர்) பொருள் உதவி.

**Granule,** *n.* சிறுமணி; திறள் மணி; சிறு துணுக்கு. *a.* granular, *v.* granulate, துணுக்குகளாகச் செய்; சொர சொரப்பாக்கு. *n.* granulation.

**Grape,** *n.* கொடி முந்திரிப் பழம். *a.* grapy, *n.* grapery, கொடி முந்திரித்தோட்டம். *comb. n.* grapestone, கொடி முந்திரி விதை. *comb. n.* grapewine,

முந்திரிக்கொடி. *n.* grape-shot, தெறிகுண்டு; இரவைகுண்டு.

**Graph,** *n.* வரைக்கட்டம்; வரைக் கட்டத்தாள்; வரைக்கட்ட விளக்கம். *a.* graphic (al), படம்போ லமைந்த; விளக்கமான; கவரும் படி வருணிக்கப் பட்டுள்ள. *adv.* graphically.

**Graphite,** *n.* 'தூரியம்'; 'வரையி'; ஒருவகைக் 'கரியம்', 'கருவங்கம்'.

**Grapnel,** *n.* சிறு நங்கூரம்; பல கொக்கிகளுள்ள கருவி; குண்டின் சிதறல் துணுக்கு.

**Grapple,** *v.* இறுகப் பிடி; போராடு. *n.* கொளுவி; பிடிப்பு; போராட்டம்.

**Grasp,** *v.* கையினால் பிடி; பற்று; புரிந்துகொள். *n.* பிடிப்பு; பற்றுதல்; அறிவுறுதி. *a.* grasping, பேராவலுள்ள.

**Grass,** *n.* புல்; புல் வகை. *a.* grassy.

**Grass-hopper,** *n.* தத்துக்கிளி.

**Grate, 1.** *v.* சுரண்டு; தேய்த்துப் பொடியாக்கு; மனம் புண்படுத்து. 2. *n.* கிராதி; அழி; இரும்பு அடுப்புத் தட்டம். *n.* grater, (சொரசொரப்பான) தோய்ப்புக் கருவி *a.* grating, வெறுப்பைத் தரும் ஓசையுள்ள; வெறுப்பைத் தருகிற.

**Grateful,** *a.* நன்றியறிதலுடைய; நன்றியுள்ள *n. see* gratitude.

**Gratify,** *v.* மனநிறைவு செய்; மகிழச்செய். *n.* gratification.

**Grating,** 1. *n.* கிராதி; அழி; கம்பிவேலி 2. *see* grate.

**Gratis,** *adv. a.* இலவசமாக; கைம்மாறின்றி.

**Gratitude,** *n.* நன்றியறிவு. *a. see* grateful.

**Gratuitous,** *a.* இலவசமான. *n.* gratuity, கைம்மாறு; பணிக் கொடை; கொடை.

**Gratulatory,** *a.* (பிறர் வெற்றி கண்டு) மகிழ்ந்து நலம் பாராட்டு கிற. *conn. see* congratulate.

**Grave,** 1. *n.* பிணக்குழி; கல்லறை(க்குழி); அழிவிடம். 2. செதுக்கு. *v.* (*see* engrave). 3. *a.* பளுவான; பொறுப்பான; முக்கிய மான. 4. *a.* வீறார்ந்த கடுகடுப் பான; கண்டிப்பான; துயரார்ந்த. 5. *a.* வாட்டமான; துயரார்ந்த. 6. *a.* (இலக்கணம்; சொல் அழுத்தம்; குறியீடு) படுத்தலான; (*see* aculate circumflex) (1) *a.* *(neg.)* graveless. *a., adv.* graveward, கல்லறை (சாவு) நோக்கி. *comb. n.* grave-yard, கல்லறைநிலம். (3-5) *adv.* gravey, *n.* graveness, *see* gravity.

**Gravel,** *n.* சரல்; சரளைக் கல்; பரல்; பருக்கைக் கல்; கல் மணல் கலவை. *v.* சரளை பரப்பு.

**Gravity,** *n.* பளு; மண்ணுலக மைய ஈர்ப்பு; பாரம்; வீறு; சிரிப்பற்ற தன்மை; அமைவு முக்கியத் துவம்; இடர். *v.* gravitate. *n.* gravitation.

**Gravy,** *n.* இறைச்சிக் குழம்பி.

**Gray,** *a.* [**grey** பார்க்க.]

**Graze,** 1. *v.* புல்மேய்; புல் மேய விடு; 2. *v.* தடவிச் செல்; உராய்ந்து செல். (1) *n.* grazier, ஆடு மாடு மேய்ப்பவன்.

**Grease,** *n.* கொழுப்பு; எண்ணெய்ப் பசை. *v.* எண்ணெய் பூசு; சக்கரங் களுக்கு மசகு போடு. *a.* greasy, கொழுப்புப்போன்ற; எண்ணெய்ப் பசையார்ந்த; ஒட்டுகிற; பசபசப் பான. *n.* greasiness.

**Great,** *a.* பெரிய; மேன்மையான; செல்வாக்குள்ள; ஆற்றல் மிகுதி யான; பேரளவான. *adv.* greatly, மிகுதியாக; பெரும்பாலும். *n.* greatness. *phr. n.* The great Divide, சாவு. *comb. n.* great-grand father, etc, முப்பாட்டன்.

**Greed,** *n.* மிக்க ஆவல். *a.* greedy, பேராவலுள்ள; பேருணவாயுள்ள.

**Greek,** *a.* கிரீஸ் நாட்டுக்குரிய; *n.* கிரேக்கமொழி; கிரேக்கர்; யவனர்.

**Green,** *a.* பசுமையான; முதிராத; அனுபவமில்லாத. *n.* பசுமை; பசும்புல் வெளி. *n. pl.* greens, கீரைகள்; பச்சைக் காய்கறிகள். *n. adv.* greenness.

**Greenery,** *n.* பசுமையான செடி கொடிகள்; செடி கொடிப் பண்ணை.

**Greeneyed,** *a.* பொறாமையுள்ள.

**Greenhouse,** *n.* செடி கொடிகளை வளர்க்கும் கண்ணாடி வீடு.

**Green-room,** *n.* (நாடகக் கொட்டகை) ஒப்பனை அறை.

**Green,** *n. see* greens.

**Greet,** *v.* முகமனுரை கூறு; வரவேற்புரை. *n.* greeting(s), முகமனுரைகள்; வணக்கவுரை.

**Gregarious,** *a.* கூட்டமாக (மந்தையாக) வாழ்கிற.

**Grenade,** *n.* எறிகுண்டு; வெடிகுண்டு. *n. pers.* grenadier, (குண்டு எறியும்) போர் வீரன் ; துப்பாக்கி வீரன்.

**Grey, gray,** *a.* சாம்பல் நிறமுள்ள. *a.* greyish.

**Greybird,** *n.* கிழவன்.

**Greyhound,** *n.* வேட்டை நாய். *phr. n.* ocean, grey hound, விரைவாகச் செல்லக்கூடிய கப்பல்.

**Gridiron,** *n.* இறைச்சி முதலியன சுடும்) இரும்புச் சட்டம்; தோசைக்கல்.

**Grief,** *n.* துயரம்; கவலை; துன்ப முடிவு. *v. see* grieve, s. *n. see* grievance.

**Grievance,** *n.* (grieve) குறை; துயரத்தின் காரணம்.

**Grieve,** *v.* (grief) துயரப்படு; துயரமுண்டாக்கு. *a.* grievous, துக்கந் தருகிற; பொறுக்க முடியாத.

**Griffin, griffon, gryphon,** *n.* (கழுகின் தலையும் இறக்கையும் சிங்கத்தின் உடலுமுடைய) ஒரு புராண விலங்கு.

**Grig,** *n.* தத்துக்கிளி; சிறுமீன்.

**Grill,** *v.* வேக வை.

**Grille,** *n.* கிராதி; கதவின் அழி.

**Grim,** *a.* கடுகடுப்பான; கொடூரமான.

**Grimace,** *n.* முகச் சுளி; முக வலிப்பு.

**Grimalkin,** *n.* கிழப் பெண் பூனை; கிழவி.

**Grime,** *n.* களிம்பு; அழுக்கு. *a.* grimy, *n.* griminess.

**Grin,** *v.* இளி; பல்லைக்காட்டு. *n.* இளித்தல்.

**Grind,** *v.* **(ground).** பொடியாக்கு; அரை; கூராக்கு; வருத்து; வருந்திப் படி. *n. ag. see* grinder, *comb. n. see* grindstone.

**Grinder,** *n.* கடைவாய்ப் பல்; அரைக்கும் இயந்திரம்; அரைப் பவன்; சாணை பிடிப்பவன்.

**Grindstone,** *n.* சாணை பிடிக்கும் கல்; சாணை.

**Grip,** *v.* இறுகப் பிடி; கவனத்தைப் பிணி *n.* பிடித்தல்; பிணித்தல். *a.* gripping, கவனத்தைப் பிணிக்கிற.

**Gripe,** *v.* இறுகப் பிடி; கௌவு; குடலை நோகச் செய். *n.* பிடிப்பு; குடல் வலி.

**Grisly,** *a.* அருவருப்பான; கொடிய.

**Grit,** *n.* பொடிக்கல் அல்லது மணல்; உறுதியான குணம்; திராணி; மனவுறுதி. *a.* gritty.

**Grizzled,** *a.* சாம்பல் நிறமுள்ள; நரைத்த.

**Grizzly,** *a.* நரைத்த; சாம்பல் நிறமுள்ள. *n.* சாம்பல் நிறக்கரடு.

**Groan,** *v.* ஏங்கு. *n.* ஏக்கம்; புலம்பல்; முனங்கல். *pr. p. n.* groaning.

**Groat,** *n.* (நான்கு ஆங்கிலத் துட்டு மதிப்புள்ள) பழைய காசு வகை.

**Grocer,** *n.* மளிகை வாணிகர்; பலசரக்கு வாணிகர். *n.* grocery, மளிகைச் சரக்கு; மளிகைக்கடை; மளிகை வாணிகத் துறை.

**Grog,** *n.* நீர்கலந்த சாராயம்.

**Groggy,** *a.* குடித்துள்ள; நடுக்க முள்ள.

**Groin,** *n.* பிட்டி தொடை சேருமிடம். இரு வளைவுகள் சேரும் இடைக்கோணம்.

**Groom,** *n.* பணியாளன்; மணவாளன் ; குதிரைக்காவலன் *v.* குதிரையைப் பேணு. *well groomed,* கச்சிதமாக உடை யணிந்துள்ள.

**Groove,** *n.* பள்ளம். *v.* பள்ளம் செய்.

**Grope,** *v.* தடவித் தேடு; இருட்டில் தடவு.

**Gross,** *a.* பருத்த; கொச்சையான; மொத்தமான; நாகரிகமற்ற *n.* மொத்தம்; பன்னிரண்டு பன்னிரண்டு அராவது 144 உருப்படி. *n.* grossness, பருநிலை; கீழ்த்தரப்பண்பு.

**Grot,** [grotto பார்க்க.]

**Grotesque,** *a.* விசித்திர உருவமுள்ள, கோரமான. *n.* grotesqueness.

**Grotto,** *n.* குகை; உள் மண்டபம்.

**Ground,** *n.* நிலத்தளம்; நிலம், தளம்; அடித்தளம்; ஆதாரம்; காரணம்; மனையளவு; (ஒரு) மனை. *n. (pl.)* grounds,

வீட்டைச் சுற்றியுள்ள நிலம்; (வாத) ஆதாரம்; தெளிவு; சரியான காரணம்; வண்டல். *v.* நிலத்தில் ஊன்று; நிறுவு; நிலைநாட்டு அறிவாதாரம் அளி; தொடக்கக் கல்வி. கற்பி; (கப்பல்) அடிநிலத் தட்டு. *a.* groundless, ஆதார மில்லாத.

**Ground-floor,** *n.* (கட்டடத்தின்) நிலத்தளம்.

**Groundnut,** *n.* வேர்க்கடலை; நிலக்கடலை; மணிலாக்கடலை.

**Ground-plan,** *n.* மனை படம்; அடிப்படை.

**Ground-work,** *n.* அடிப்படை அமைப்பு; திட்ட அமைப்பு.

**Group,** *n.* தொகுதி; கூட்டம்; கும்பல்; குழு. *v.* கூட்டமாகக் கூடு; இனமாகச் சேர்.

**Grouse, s.** ஒருவகை காட்டுக் கோழி. *v.* முனங்கு.

**Grove,** *n.* தோட்டம்.

**Grovel,** *v.* (நிலத்தில்) நகர்ந்து செல். மானமின்றிப் பணிந்து நட.

**Grow, v, (grew, grown),** வளர்; பெரிதாகு; வளர்த்துப் பேணு. *n.* growth, *n. ag.* grower, *phr. a. see* grown-up.

**Growl,** *v.* உறுமு. *n.* உறுமுதல்; முனங்குதல்.

**Grown-up,** *n.* வயது வந்தோர். *a.* வயதுவந்த; வளர்ச்சி முற்றிய.

**Grub,** *n.* புழு; உழைப்பாளி; உணவு. 2. *v.* தோண்டு; தேடி யெடு; உண்பி. (2) *n.* grubber, வேர் களைக் களைந்தெறியும் பொறி.

**Grudge,** *n.*, *v.* பொறாமைப்படு; விருப்பமில்லாதிரு, *adv.* grudgingly.

**Gruel,** *n.* கஞ்சி; கூழ். *a.* gruelling, மிகுந்த சோர்வைத் தருகிற.

**Gruesome,** *a.* அருவருப்பான; கோரமான.

**Gruff,** *a.* வெடுவெடுப்பான; கடுமையான.

**Grumble,** *v.* முனங்கு. *n.* grumbler, *adv.* grumblingly.

**Grunt,** *v.* (பன்றியைப் போல்) உறுமு; வெறுப்பைக் காட்டு *n.* உறுமுதல்; முனங்குதல். *n. ag.* grunter, பன்றி.

**Guarantee,** *v.* உறுதிமொழி கொடு; உத்தரவாதமாகு. *n.* உறுதிமொழி; உத்தரவாதம்; பிணையம்; பிணையமாக நிற்பவர். *n., v.* guaranty, உறுதிமொழி (கொடு); பிணையம் (கொடு). *n. pers.* guarantor.

**Guard,** *v.* காப்பாற்று; காவல்செய். *n.* காவல்காரர்; காவலர். *a.* guarded, பாதுகாப்புச் செய்யப் பட்ட; முன்னெச்சரிக்கையான; அடக்கமுடைய. *n. pers. see* guardian, *com*b. *n.* guardsman, காவல் வீரன்.

**Guardian,** *n.* **(guard)** பாது காவலர்; காப்பாளர்; முதுகண்; முதுகணர்; முதுகணாளர். (*correl, see* ward). *n.* guardianship, *conn. n. see* warden.

**Gubernatorial,** *n.* மாகாண ஆட்சியாளர்க்குரிய.

**Gudgeon,** *n.* சிறுமீன் வகை; எளிதில் நம்பி ஏமாறுகிறவன் ; அச்சு; இணைப்புக் கம்பி; குமிழ்.

**Guerdon,** *n.* ஊதியம்; பலன்.

**Guer(r)illa,** *n.* குரங்கு வகை; *(comb.) n.* guerrilla war, குரங்குச் சண்டை. guerrilla tactics, குரங்குப் போர்முறை.

**Guess,** *v.* உய்த்துணர்; ஊகி. *n.* ஊகம்.

**Guest,** *n.* விருந்தாளி. *(correl. see* host) *comb. n.* Guest house, விருந்தகம்.

**Guffaw;** *n.* உரத்த சிரிப்பு, *v.* உரத்துச் சிரி.

**Guide,** *v.* வழிகாட்டு; நடத்து. *n.* வழிகாட்டி; அறிவுரைஞர். *n.* guidance.

**Guide-book,** *n.* வழி விவரங்கள் தரும் புத்தகம்.

**Guild, gild,** *n.* சங்கம்; வாணிகக் குழு.

**Guilder,** *n.* ஒரு நாணயம்.

**Guile,** *n.* வஞ்சகம்; ஏமாற்றுதல். *a.* guileful, guileless.

**Guillotine,** *n.* (முற்காலத் தண்டனை முறைப்படியான) தலைவாங்கிப் பொறி; (சட்ட மன்றம்) வாத முடிவிக்க வழங்கும் மரபுமுறை. *v.* தலைவாங்கிப் பொறியால் தலைவாங்கு.

**Guilt,** *n.* குற்றம்; பழி. *a.* guilty, *a.* (*neg.)* guiltless.

**Guinea,** *n.* இருபத்தொரு வெள்ளி கொண்ட பொன் காசு.

**Guise,** *n.* தோற்றம்; மாற்றுரு. *conn. see* disguise.

**Guitar,** *n.* (யாழ் வகையைச் சேர்ந்த) ஓர் இசைக் கருவி.

**Gulf,** *n.* வளைகுடா; நீர்ச் சுழி; மிகு ஆழம்.

**Gull,** *n.* ஒரு கடற்பறவை; எளிதில் ஏமாறுகிறவன். *v.* ஏமாற்று. *a.* gullible. *n.* gullibility.

**Gullet,** *n.* தொண்டை; உணவுக் குழாய்.

**Gully,** *n.* அருவியால் தோண்டப் பட்ட பள்ளம்.

**Gulp,** *v.* விழுங்கு. *n.* விழுங்குதல்.

**Gum, 1.** *n.* பல்லின் ஈறு. 2. *n.* கெட்டிப் பசை; பிசின்; கோந்து. *v.* பிசினால் ஒட்டு (2) *a.* gummy.

**Gum-arabic,** *n.* வேலம்பிசின்.

**Gumption,** *n.* திறம்; உலகியலறிவு.

**Gun,** *n.* துப்பாக்கி; பீரங்கி. *n.* gunner, பீரங்கிப்படை வீரன். *n.* gunnery, பீரங்கிப்படை; பீரங்கி தொழில். *comb. n. see* gun-powder.

**Gunboat,** *n.* சிறு பீரங்கிப் படகு.

**Gun-cotton,** *n.* ஒருவகை வெடி மருந்து; வெடி பஞ்சு.

**Gunny,** *n.* கோணிப்பை.

**Gun-powder,** *n.* வெடி மருந்து.

**Gunwale,** *n.* கப்பலின் பக்கத்தின் மேல் விளிம்பு.

**Gurgle,** *v.* குமிழி.

**Gush,** *v.* பீறிடு; (திரவம்) பாய்ந்து வெளிப்படு. *n.* பாய்ச்சல்; பீறிடல்.

**Gust,** *n.* வலுவான காற்று வீச்சு; வன்காற்று; திடீர் உணர்ச்சி வேகம். *a.* gusty.

**Gustation,** *n.* சுவைத்தல். *a.* gustatory.

**Gusto,** *n.* ஆர்வம்; சுவை நயம்.

**Gut,** *n.* குடல்; ஒடுக்க வழி; உள் இருக்கும் பொருள்; நரம்பு; நாண்; இசைக் கருவிகளின் தந்தி. (*pl.* guts) உறுதி; திறமை; *v.* குடலை வெளிப்படுத்து; உள்ளிருக்கும் பொருள்களை அழி.

**Gutta percha,** *n.* பிசின் வகை; (ஒருவகை மரத்தின்) இறுகிய பால்.

**Guttar,** *n.* சாக்கடை. *v.* கால்வாயாக ஓடு.

**Guttural,** *a.* தொண்டைக்கு (மிடற்றுக்கு) உரிய. *n.* மிடற்றில் பிறக்கும் எழுத்து.

**Guy,** *n.* (கூடாரம், தம்பம் முதலியன சாயாமல் உதவும்) ஆதாரக் கயிறு; ஆள்; பேர்வழி.

**Gymkhana,** *n.* போட்டி விளையாட்டுகளுக்கு வாய்ப்பான இடம்; வையாளி வீதி.

**Gymnasium,** *n.* உடற் பயிற்சிக்கூடம்; பயிற்சிக்களரி; வையாளி வீதி. *n. pers.* gymnast, உடற் பயிற்சியாளன். *a.* gymnastic, உடற்பயிற்சி சார்ந்த. *n. abs.* gymnastics, உடற் பயிற்சித் துறை.

**Gynandrous,** *a.* (செடி நூல்) ஆண் பெண் இருபால் கூறும் அமைந்துள்ள.

**Gypsum,** *n.* களிக்கல்.

**Gypsy,** *n.* [**gipsy** பார்க்கவும்.]

**Gyrate,** *v.* சுழலு. *n.* gyration, சுழற்சி. *a.* gyratory.

**Gyre,** *n.* வளையம்; வட்டச் சுழற்சி.

**Gyrocompass,** *n.* (திசை காட்டியாக உதவும்) சுழல் வேகமானி.

**Gyroplane,** *n.* செங்குத்தாய் ஏறி இறங்கும் விமானம்.

**Gyroscope,** *n.* சுழல் வேகமானி.

**Gyrose,** *a.* சுருளான.

**Gyrostatics,** *n.* சுழல் பொருள்களைப்பற்றிய நூல்.

**Gyve,** *v.* விலங்கிடு. *n. (pl.)* gyves, விலங்கு.

# H

**Ha,** *int.* ஆகா.

**Habeas corpus,** *n.* ஆளுரிமை காப்புச் சட்டம்; ஆட்கொணர் சட்டம்.

**Haberdasher,** *n.* சடைக் கச்சை விற்பவர்; கொண்டு விற்பவர். *n.* haberdashery.

**Habiliments,** *n. (pl.)* உடுப்பு; உடை.

**Habilitate,** *v.* (தொழிலுக்கு) முதல் போடு; பதவிக்குத் தகுதி பெறு. *n.* habilitation.

**Habit,** *n.* வழக்கம்; மனப்பாங்கு; உடுப்பு *v.* உடை அணி.

**Habitation,** *n.* இருப்பிடம். *a.* habitable, *n.* habitat, இயல்பான இருப்பிடம்.

**Habitual,** *a.* வழக்கமான. *v.* habituate.

**Habitude,** *n.* வழக்கம்; இயல்பு.

*habitue,* [hab-i-tu-e ஹாபிட்சுவே] *n.* வழக்கமாக வருபவர் அல்லது தங்குபவர்; வாடிக்கையாளர்.

**Hack,** 1. *v.* சிதை; நைய வெட்டு. *n.* வெட்டுதல் 2. *n.* குதிரை; அளவுமீறி உழைப்பவன். (2) hacking cough, வரட்டு இருமல்.

**Hackle,** *v.* வெட்டு; சிதை.

**Hackney,** *n.* வாடகை வண்டி. *a.* hackneyed, வழங்கித் தேய்ந்த; பழமைப்பட்ட.

**Had,** *v.* [have பார்க்கவும்.]

**Hades,** *n.* கீழ் உலகம்; தென்புல உலகு.

**Haemoglobin,** *n.* (குருதி) சிவப்பு வண்ணம் தரும் பொருள்.

**H(a)emorrhage,** *n.* குருதிப் போக்கு.

**Haft,** *n.* கைப்பிடி. *v.* கைப்பிடி பொருத்து.

**Hag,** *n.* அருவருப்புத் தோற்ற முடைய கிழவி. *a.* haggish.

**Haggard,** *v.* பரட்டையான.

**Haggle,** *v.* (சிறு செய்திக்கு) சச்சரவு செய்து; பேரம் செய்.

**Hagiolatry,** *n.* அடியார் வழிபாடு.

**Hagiology,** *n.* குரு பரம்பரை நூல்.

**Hail,** 1. *v.* வாழ்த்துக் கூறு; அழை. *n.* வாழ்த்து; அழைப்பு. *int.* (வாழ்த்துக்கூறும் சொல்) வாழி! 2. *n.* ஆலங்கட்டி மழை. *v.* கல்மழை பெய். 3. *v.* (hail from a place, இடத்திலிருந்து) வருகை தா; வெளிப்பட்டு வா; புறப்பட்டு வா. *n.* hailstone. ஆலங்கட்டி.

**Hair,** *n.* மயிர்; தலைமுடி. *a.* hairy, *n.* hairiness.

**Hair bready,** hair's breadth, *n.* மிகச் சிறு தொலைவு. *a.* hairy. *n.* நெருங்கிய.

**Hakeem, hakim,** *n.* மருத்துவர்; புலவர்.

**Halberd,** *n.* குத்துவாள்.

**Halcyon,** *n.* (புயலமர்த்துவதாகக் கூறப்படும்) மாயக் கடற்பறவை. *a.* இன்ப அமைதியுடைய.

**Hale,** *a.* திடமான; உடல் நலமுடைய.

**Half,** *a., adv., n. (pl.* halves*)* அரை; பாதி. *v.* halve, பாதியாக்கு.

**Half-baked,** *a.* அரை வேக்காடான; அரைகுறையான; அனுபவமற்ற; அறிவுக் குறைவான.

**Halfbred,** *a.* கலப்பட இனமான; நன்னடக்கை அறியாத.

**Half-brother, half - sister.** *n.* ஒன்றுவிட்ட உடன் பிறப்பாளர்.

**Half-caste,** *n.* கலப்புச் சாதி; பருவெட்டானவர்; பருவெட்டு.

**Half-hearted,** *a.* ஆர்வமற்ற; மனம் பொருந்தாத.

**Half-mast,** *n. adv.* (கொடி மரத்தில்) பாதி உயரம் (ஆக).

**Half-tone,** *n.* நுண்பதிவுப் படம்.

**Hall,** *n.* கூடம்; மண்டபம். *n.* hall-mark, தூய்மைக் குறி; தரக்குறியீடு; தனிக் குறியீடு.

**Hallo, halloa,** 'தோழரே!' *v. int., n.,* விளி(த்தல்).

**Hallow,** *v.* தூய்மையாக்கு; திருநிலையானதென்று மதி.

**Hallucination,** *n.* மனமாறாட்டம்; மயக்கம்; தவறான கருத்து.

**Halo,** *n.* பரிவேடம்; ஒளி வட்டம்.

**Halt,** *n.* தங்குதல். *v.* தங்கு; நில்; நிறுத்து.

**Halt,** *v.* நொண்டி நட; இடையில் நில்; நிறுத்து; திக்கிப் பேசு; பேச்சில் திக்கு; இடைத்தங்கு. *n.* முடம்; தட்டுத் தடங்கல்; திக்கல்; கொள்ளல்; தங்கல்; தங்கல் இடம். *a.* முடமான. *adv.* haltingly, திக்கித் திக்கி; விட்டு விட்டு.

**Halter,** *n.* தூக்கிட உதவும் கயிறு; கடிவாளக் கயிறு.

**Ham,** *n.* தொடையின் பிற்பகுதி; பன்றித்தொடையின் உப்பிட்ட இறைச்சி.

**Hamlet,** *n.* சிற்றூர்; பாடி; பாக்கம்; குடி; குடில்.

**Hammer,** *n.* சுத்தி; சம்மட்டி. *v.* சம்மட்டியால் அடி.

**Hammock,** *n.* வலை அல்லது கித்தான் படுக்கை.

**Hamper,** *n.* பெரிய கூடை. *v.* தடைசெய்; இடையூறாயிரு.

**Hamstring,** *n.* முழங்காலுக்குப் பின்புறமுள்ள தசைக் கயிறு. *v.* (-inged or-ung) முழங்கால் தசைக் கயிற்றை அறு.

**Hand,** *n.* கை; பக்கம்; வேலையாள்; கைத்திறன்; கையெழுத்தின் அமைதி. *v.* கொடு. *comb. a. see* left-handed.

**Handbill,** *n.* விளம்பரத்துண்டு.

**Handbook,** *n.* பயண விவரப் புத்தகம்; (விவரங்கள் தரும்) சிறு புத்தகம்.

**Handcart,** *n.* கைவண்டி.

**Handcuff,** *v.* கைவிலங்கிடு. *n. pl.* கைவிலங்கு.

**Handful,** *n.* கையளவு; சில.

**Hand-grenade,** (கையால்) எறியப்படும் வெடி குண்டு.

**Handicap,** *n., v.* தடங்கல் (அளி); முட்டுக்கட்டை (கொடு); தடை (செய்து.)

**Handicraft,** *n.* சிறு கைத்தொழில்; கைவினை; கைப்பணி.

**Handiwork,** *n.* செய்தொழில் வேலைப்பாடு.

**Handkerchief,** *n.* கைக்குட்டை; கழுத்துக்குட்டை.

**Handle,** *n.* கைப்பிடி. *v.* தொடு; கையாளு; நடத்து; மேற்பார்வை செய்.

**Handloom,** *n.* கைத்தறி.

**Handmaid,** *n.* வேலைக்காரி; துணைவி.

**Handsome,** *a.* அந்தசந்தமான; தாராளமான. *n.* handsomeness.

**Handwriting,** *n.* கையெழுத்து.

**Handy,** *a.* அருகிலுள்ள; துணை தருகிற; கைப்பழக்கமுள்ள *adv.* handily. *n.* handiness.

**Hang,** *v.* (hanged or hung) தொங்கவிடு; தொங்கு; தூக்கிலிடு;

சார்ந்திரு; தொய். *n.* hanger, உடைவாள் தொங்கவிட உதவும் கருவி. *n.* hanger-on, உதவியை நாடுபவன்; சார்ந்திருப்பவன்.

**Hangar,** *n.* வானூர்தி தங்கும் கொட்டகை.

**Hanging,** *n.* மேல் கட்டித் தொங்க விடுதல்.

**Hangman,** *n.* கொலைப் பணியாள்.

**Hangover,** *n.* எஞ்சியுள்ள சிறிதளவு; எச்சமிச்சம்.

**Hank,** *n.* நூல் கழி.

**Hanker,** *v.* மிக்க ஆசை கொள். *n.* hankering.

**Hanky-panky,** *n.* புரட்டு; ஏமாற்று.

**Hansom-cab,** *n.* இரு சக்கர வண்டி வகை.

**Hap,** *n.* தற்செயல் நிகழ்ச்சி. *v.* தற்செயலாக நிகழ். *a.* hapless, நலக்கேடான. *adv.* haply, தற்செயலாக.

**Haphazard,** *n.* ஒழுங்கின்மை; தற் செயல். *a. adv.* தற்செயலான.

**Happen,** *v.* நிகழ்; நேரிடு. *n.* happening, நிகழ்ச்சி.

**Happy** *a.* மகிழ்ச்சியான; பொருத்த மான. *n.* happiness, *adv.* happily.

**Happy-go-lucky,** *v.* வாழ்க்கையை எளிதாகக் கொள்கிற; கவலை யற்ற.

*hara-kiri*, *n.* (ஜப்பானியர்) தற் கொலை முறை.

**Harangue,** *n.* சொற்பொழிவு; வாய்வீச்சு. *v.* உரத்துப் பேசு.

**Harass,** *v.* தொந்தரவு செய்; அடிக்கடி தாக்குதல் செய். *n.* harassment.

**Harbinger,** *n.* முன்சென்று அறிவிப்போன். *v.* முன்சென்று அறிவி.

**Harbour,** *n.* துறைமுகம்; தஞ்சமான இடம். *v.* தஞ்சமடை; தஞ்சமளி; துறை முகத்தில் தங்கு. *n.* harbourage, தஞ்சம்.

**Hard,** *a.* கடினமான; உறுதியான; இக்கட்டான. *n.* hardness, *n.* hardship, கொடுமை. *v.* harden, திடப்படுத்து; கெட்டியாக்கு; உணர்ச்சியறச் செய்.

**Hardhearted,** *a.* கொடுமையான; இரக்கமற்ற.

**Hardly,** *adv.* பெரும்பாலும் இல்லாமல்.

**Hard up,** *a.* பணமுடையுள்ள; பணத்துக்குத் தவித்த.

**Hardware,** *n.* இரும்புச் சரக்கு.

**Hardy,** *a.* துணிவான; திடமான. *n.* hardihood, hardiness, துணிவு; உறுதி. *adv.* hardily.

**Hare,** *n.* முயல். *a.* harebrained, மன உறுதியற்ற; முரட்டுத்தன மாகப் பாய்கிற.

**Harelip,** *n.* பிளந்த உதடு.

**Harem,** *n.* உவளகம்; மாதர் பகுதி.

**Hark,** *v.* கவனித்துக் கேள்; உற்றுக் கேள்.

**Harlequin,** *n.* விகடன் ; கோமாளி.

**Harlot,** *n.* விலைமகள்.

**Harm,** *n.* கேடு; தீங்கு; ஊறு. *v.* தீங்கு செய். *a.* harmful, *(neg.)* harmless.

**Harmonica,** *n.* ஊதுகுழல் வகை.

**Harmonious,** *a.* (harmony) இன்னிசையான; இணக்கமான; ஒத்திசைந்த; இசைவிணக்கமான.

**Harmonium,** *n.* இசைப் பெட்டி. *n. pers.* harmonist. இசை வல்லார்.

**Harmony,** *n.* இசைவு; இணக்கம்; இசை விணக்கம்; பொருத்தம்; பல பண்திற இசைவு. *v.* harmonize, *a. see* harmonious.

**Harness,** *n.* குதிரைச் சேணம்; போர்வீரர் கவசம். *v.* கவசம் அணி; சேணம் அணிவி; ஆற்றலைப் பயன்படுத்து.

**Harp,** *n.* யாழ்வகை. *v.* யாழ் வகை வாசி (ஒன்றையே) திரும்பத் திரும்பக் கூறு; வற்புறுத்து. *n. pers.* harper, harpist.

**Harpoon,** *n.* ஈட்டி வகை. *v.* ஈட்டி எறி.

**Harpsichord,** *n.* இசைக்கருவி வகை.

**Harpy,** *n.* பிடுங்கித் தின்பவன்; பேராவல்காரன்.

**Harquebus, arquebus,** *n.* பழைய துப்பாக்கி வகை.

**Harrow,** *n.* பரம்பு (உழுத நிலம் சமப்படுத்தும்பொறி). *v.* பரம்படி; வதை; புண்படுத்து; உள்ளத்தைப் புண்படுத்து.

**Harry,** *v.* கொள்ளையிடு; அழி; தொந்தரை செய்.

**Harsh,** *v.* கரடுமுரடான; கடுமையான. *n.* harshness.

**Hart,** *n.* கலைமான்.

**Hartal,** *n.* கடையடைப்பு; வேலை நிறுத்தம்.

**Harvest,** *n.* அறுவடை; அறுவடைக் காலம்; விளைபொருள். *v.* பலனைத் திரட்டு; அறுவடை செய்.

**Has,** *v.* [**have** பார்க்கவும்.]

**Hash,** *v.* நறுக்கு; சிறு துண்டுகளாக வெட்டு. *n.* கொத்தின இறைச்சி.

**Hassock,** *n.* கால் திண்டு; மிதிபாய்; சேற்று நிலப்புல்.

**Haste,** *n.* விரைவு; அவசரம். *v.* விரைவுபடுத்து. *v.* hasten, விரைவுபடுத்து; விரைவாகச்செல்; விரை. *a.* hasty. விரைவு மிகுதியான; முன் கருதலில்லாத; ஆத்திரமான; முன் கோபியான. *n.* hastiness.

**Hat,** *n.* குல்லாய் வகை; தட்டையுருடைய தலையணி. *n. pers. see* hatter.

**Hatch,** *n.* 1. கதவின் கீழ்ப்பகுதி; கதவினுட் பகுதி; (கப்பலில்) தளம், பக்கம் முதலியவற்றிலுள்ள திறப்பு; மதகு; கப்பலேணி வாயில். 2.*v.* அடைகா; குஞ்சு பொரி. *n.* ஒரு கூட்டுக் குஞ்சுகள்.

**Hatchet,** *n.* கைக்கோடரி.

**Hate,** *n.* வெறுப்பு; பகைமை. *v.* வெறு; பகைமை கொள். *a.* hateful. *n.* hatred.

**Hatter,** *n.* *(hat)* குல்லாய் வணிகன்.

**Haughty,** *a.* ஆணவம் பிடித்த. *n.* haughtiness.

**Haul,** *v.* வலித்து இழு. *n.* இழுத்தல்; இழுத்துக் கிடைத்த பொருள். *n.* haulage, வலித்து இழுத்தல்; இழுப்புக் கூலி. *n. ag.* hauler.

**Haunch,** *n.* இடுப்பு; தொடை.

**Haunt,** *v.* அடிக்கடி செல்; வழக்க மாகச் சென்று தங்கு; சுற்றி ஊடாடு; (பேய்) நட. *n.* வழக்கமாகச் செல்லுமிடம். *a.* haunted, பேய் நடமாட்டமுடைய; அடிக்கடி ஓயாது வந்து சுற்றுகிற.

**Hautboy,** *n.* ஊது குழல்வகை.

*hauteur, n.* இறுமாப்பு.

**Havana,** *v.* க்யூபாவின் தலை நகரம்; ஹாவன்னாச் சுருட்டு.

**Have,** *v. (p. pp.* had *pr. 3rd pers. sing* has.*)* உடைமையாகப் பெற்றிரு; ஏற்றுக்கொள்; அறி; நுகர். *conn. see* haves, have-nots.

**Haven,** *n.* துறைமுகம் பாது காப்பான இடம்.

**Have-nots,** *n. pl.* (have) வறியோர்; இல்லார்.

**Haves,** *n. pl.* (have) செல்வ முள்ளவர்; உள்ளார்.

**Havoc,** *n.* பெரிய அளவில் அழிவு. *v.* அழிவு செய்.

**Haw-haw,** *n., int.* பெருஞ் சிரிப்பு; ஒலிக் குறிப்பு.

**Hawk,** *a.* வேட்டையில் பயன் படும் பருந்து போன்ற பறவை; பேராசைக்காரன். 1. *v.* பருந்து கொண்டு வேட்டையாடு. 2. *v.* கூவி விற்பனை செய்.

**Hawker,** *n.* கூவி விற்பவர்.

**Hawk-eyed,** *a.* கூரிய பார்வை யுள்ள.

**Hawser,** *n.* தடித்த கயிறு அல்லது கம்பி.

**Hawthorn,** *n.* ஒருவகை முட் செடி.

**Hay,** *n.* உலர் புல். *n.* haycock, உலர்ந்த புல் போர்.

**Hayrick, haystack,** *n.* உலர் புல்போர்; வைக்கோல் போர்.

**Hazard,** *n.* தற்செயல் இடர்; இடையூறு *v.* துணிந்து செய். *a.* hazardous.

**Haze,** *n.* மங்கல்; மூடுபனி; மனக் குழப்பம்; குழப்பமாக்கு. *a.* hazy, *n.* haziness.

**Hazel,** *n.* (கொட்டை உடைய) மரவகை. *a.* பழுப்பு நீலநிற முள்ள. *n.* hazel-nut, அச் செடியின் கொட்டை.

**He,** *pron.* மறுவேற்றுமை; வடிவம். 2ஆம் வேற்றுமை; him, 6ஆம் வேற்றுமை; his; possessive pronoun his; *refl.* himself) (*fem. see* she; *neuter. see* (it) அவன்; அவர். *n.* ஆண்.

**Head,** *n.* தலை; தலையாய பொருள்; தலைப்பு; தலைவர்; அறிவு. *a.* தலைமையான. *v.* தலைமை தாங்கு; நடத்து; எதிர். *n.* head-ache, தலைவலி.

**Header,** *n.* (சுவரில்) குறுக்குச் செங்கல்; தலைகுப்புற விழுதல்.

**Headgear,** *n.* தலையணி.

**Headily,** *adv.* மூர்க்கமாக.

**Heading,** *n.* தலைப்பு.

**Headlight,** *n.* முகப்பு விளக்கு.

**Headline,** *n.* பத்திரிகைகளின் தலைப்பு.

**Headlong,** *adv. a.* தலை கீழாக; பதற்றமாக.

**Headman,** *(pl.* headmen*)* ஊர்த் தலைவன் ; தலையாரி.

**Headphone,** *n.* தொலைபேசியின் செவிக் குழாய்.

**Headpiece,** *n.* தலையணி; உச்சிப் பகுதி; தலை; மண்டையோடு; மூளை.

**Headquarters,** *n.* தலைமை யிடம்; பணியிட மையம்; தலைமை அலுவலகம்.

**Headstrong,** *a.* முரட்டுப் பிடிவாதமுள்ள.

**Headway,** *n.* முன்னேற்றம்.

**Heady,** *a.* மூர்க்கமான; மயக்கந் தருகிற.

**Heal,** *v.* (நோய் முதலியவற்றைக்) குணப்படுத்து; குணமாக்கு.

**Health,** *n.* உடல் நலம். *a.* healthful, உடல்நலம் தருகிற. *a.* healthy.

**Heap,** *n.* குவியல். *v.* குவி; அடுக்கு.

**Hear,** *v.* 1. (செவியால்) கேள்; செவிக் கொள்; கவனித்துக்கேள். 2. வேண்டுகோளுக்கிணங்கு. 3. வழக்கு உசாவு. *n.* hearing, கேட்டல்; கவனம்; வழக்கு விசாரணை.

**Hearken,** *v.* உற்றுக் கேள்.

**Hearsay,** *n.* கேள்வி; செவியறி தகவல்.

**Hearse,** *n.* பிண வண்டி; பாடை.

**Heart,** *n.* நெஞ்சம்; உள்ளம்; முக்கிய அல்லது நடுப்பகுதி; உட்பொருள்; கனிவு; உணர்ச்சி; வீரம். *v. see* hearten. *a. see* hearty, heartless. *comb. see* heart-ache, etc. *a. see* hearty *a. neg. see* heart-less.

**Heart-ache,** *n.* துயரம்.

**Heart-broken,** *a.* துயரத்தால் மனமுறிந்த.

**Heart-burn,** *n.* மனவேதனை; நெஞ்செரிச்சல்.

**Hearten,** *v.* (heart) ஊக்கப் படுத்து.

**Heartfelt,** *a.* (heart) மனப்பூர்வ மான.

**Hearth,** *n.* அடுப்படி; அடுக்களை; குடும்பம்.

**Heartily,** *adv.* (hearty, heart) முழு மனத்தோடு; உளமார.

**Heartless,** *a.* (heart) கொடுமை யான; இரக்கமற்ற.

**Heart-rending,** *a.* (heart) மிகு துயர்தருகிற; மனத்தை அறுக்கிற.

**Heartstring,** *n.* (heart) உளநாடி; உள்ளுயிர் நாடி.

**Hearty,** *a.* (heart) மனமார்ந்த; ஊக்கமுள்ள, நிறைவான. *n.* heartiness.

**Heat,** *n.* வெப்பம்; சூடு; காரம். *pl.* heats, (ஓட்டம் முதலிய விளை

யாட்டுகளில்) முதற் போட்டி. *v.* சூடாக்கு; தூண்டு. *a.* heated. *v.* heaten. *n. ag. impers.* heater, அடுப்பு.

**Heath,** *n.* புதர்; புதர்க்காடு. புதரடர்ந்த சமவெளி.

**Heathen,** *a., n.* (கிறித்துவ வழக்கு) புறச்சமயம் சேர்ந்த(வர்). *a.* heathenish, heathenism.

**Heather,** *n.* புதர்ச் செடிகளில் ஒன்று. *a.* heathery.

**Heave,** *v.* (heaved or hove.) வலித்து உயர்த்து; முயற்சிசெய்; உயர்ந்து தாழ்; பொங்கு.

**Heaven,** *n.* வானம்; கடவுளின் இருப்பிடம்; கடவுள்; வானுலகம். *a.* heavenly.

**Heavy,** *a.* பளுவான; தாங்க முடியாத; துக்கமயமான; மேகத்தால் இருண்ட; மந்தமான *n.* heaviness.

**Hebrew,** *n.* யூதர்; யூதமொழி.

**Heckle,** *n.* (சணல் சிக்கெடுக்கும்) எஃகுச் சீப்பு. *v.* சணல் சிக்கெடு; குறுக்குக் கேள்விகள் கேட்டுத் தொந்தரை செய்.

**Hectic,** *a.* எலும்புருக்கி நோயுள்ள; தீவிரமான; வெறித்த. *n.* எலும்புருக்கி நோய்.

**Hedge,** *n.* முள்வேலி; புதர். *v.* வேலி அமை; தடைசெய்; பின்னிடு.

**Hedgehog,** *n.* முள்ளெலி.

**Hedgerow,** *n.* புதர்ச்செடி வேலி.

**Hedonic,** *a.* இன்பத்துக்குரிய; இன்பக் கோட்பாட்டுக்குரிய. *n.* hedonism.

**Heed,** *v.* கவனி. *n.* கவனம். *a.* heedful, *(neg.)* heedless.

**Heehaw,** *n.* கழுதையின் கத்தல்; பெருஞ் சிரிப்பு.

**Heel,** *n.* குதிகால்; (செருப்பு முதலியவற்றின்) குதிகால் பகுதி. *v.* குதிகாலினால் தொடு; செருப்பில் குதிகால் பகுதி அமை; நெருங்கித்தொடர்ந்து செல்; ஒரு புறமாகச் சாய்.

**Heft,** *n.* பாரம்; கனம்; கனமான பகுதி. *a.* hefty, வலிமை மிகுந்த; திடமுள்ள.

**Hegemony,** *n.* கூட்டுறவின் தலைமை; கூட்டுத்தலைமை.

**Hegira, hejira,** *n.* கி.பி. 622இல் முகம்மது நபிகள் மக்காவி லிருந்து மதீனாவுக்குச் சென்ற நிகழ்ச்சி; முகமதிய ஊழி.

**Heifer,** *n.* கன்று போடாத இளம் பசு.

**Heigh,** *int.* ஹை! ஹை! (ஊக்கப் படுத்தல்; வினா போன்றவற்றைக் குறிக்கும் சொல்)

**Height,** *n.* (high) உயரம்; மேடு; உயர்ந்த இடம்; உயர்ந்த பதவி; உச்சி. *v.* heighten, உயர்த்து; தீவிரப்படுத்து.

**Heil,** *int.* வாழ்க.

**Heinous,** *a.* கொடிய. *n.* heinousness.

**Heir,** *n. (fem.* heiress*) n.* மரபினன் ; மரபுரிமையாளன்; மரபுரிமையில் வந்தது; பின் விளைவு; பின் வரவு. *a.* heirdom, *see* heirship.

**Heir-loom,** *n.* மரபுரிமை.

**Heir-presumptive,** *n.* மரபுரிமை நேர்வு உடையவர்; மரபு நேர்வாளர்.

**Heirship,** *n.* மரபுரிமை.

**Helianthus,** *n.* சூரிய காந்தி.

**Helical,** *a.* சுருள் வடிவுடைய.

**Helicopter,** *n.* செங்குத்தாக மேலெழும் ஒரு வகை வானூர்தி; 'மீவான் கலம்'

**Heliocentric,** *a.* ஞாயிற்று மைய.

**Heliochrome,** *n.* இயற்கை நிறங்களைக் காட்டும் நிழற்படம்.

**Heliograph,** *n.* ஞாயிற்றின் ஒளியால் சைகை காட்ட உதவும் கருவி.

**Helios,** *n.* ஞாயிற்றுச் செல்வன்.

**Helioscope,** *n.* ஞாயிறு பார்க்கும் தொலை நோக்கு.

**Heliotherapy,** *n.* ஞாயிற்றுக் கதிர் மருத்துவ முறை.

**Helio-tropism,** *n.* ஞாயிற் றொளியின் செயலால் தாவரப் பகுதிகளின் அசைவு; ஒளி நாட்டம்.

**Helium,** *n.* செயலற்ற வளிவகை; தனிப் பொருள்களில் ஒன்று. 'கதிரம்'.

**Hell,** *n.* நரகம்; அளறு; பாதாளம். *a.* Hellish, வெறுக்கத்தக்க.

**Hellcat,** *n.* மாயக்காரி; சூனியக்காரி.

**Hellenic,** *a.* கிரேக்கருக்குரிய

**Hello,** *n. v. int.* [*see* hallo.]

**Helm,** *n.* (கப்பலின் சுக்கான்; கைப்பிடி; தலைமுடி; தலையணி. *n.* helmsman, சுக்கானைத் திருப்புபவர்; இயக்குநர்.

**Helmet,** *n.* தலைச் சீரா; எஃகுக் குல்லாய்; தலையணி.

**Helot,** *n.* அடிமை. *n. abs.* helotry.

**Help,** *v.* உதவிசெய்; ஆதரி. தேவையானதைக் கொடு; தவிர். (I cannot help it; he cannot help going) *n.* உதவி; உதவியாளன். *n. ag.* helper, *a.* helpful, உதவியளிக்கிற *a.* helping. உதவி செய்கிற. *n.* உதவி செய்தல்; ஒரு தடவையில் பரிமாறும் உணவு. *a. neg,* helpless, உதவியற்ற; கதியற்ற.

**Helpmate, helpmeet,** *n.* துணைவன்; கணவன்; மனைவி.

**Helter-skelter,** *adv.* பதற்றமாக; ஒழுங்கில்லாமல்.

**Hem,** *v.* விளிம்பு மடித்துத் தை; சுற்றிவளைந்துகொள். *n.* விளிம்பு (த் தையல்); (ஆடையின்) கரை.

**Hemicycle,** *n.* அரை வட்டம்.

**Hemisphere,** *n.* பாதி உருண்டை; உலகப் பாதி.

**Hemistich,** *n.* செய்யுளடியில் பாதி.

**Hemlock,** *n.* நச்சுப் பூண்டு வகை.

**Hemp,** *n.* சணல்; தூக்கிடுங்கயிறு. *a.* hempen.

**Hempseed,** *n.* சணல் விதை; தூக்குமரத்துக்குரியவன்.

**Hen,** *n.* பெட்டைக் கோழி; பறவையின் பேடு. *n.* hencoop, கோழிகளை அடைக்கும் கூடை. *a.* henpecked, மனைவி சொற் கேட்கிற.

**Hence,** *adv.* இங்கிருந்து; இச்சமய முதல்; இதனால் *int.* இங்கிருந்து செல்! *comb. adv.* henceforth, henceforward, இது முதற் கொண்டு.

**Henchman,** *n.* வேலைக்காரன்; கையாள்.

**Henna,** *n.* மருதோன்றிவகை; சிவப்புச் சாயம்.

**Hepatic,** *a.* கல்லீரலுக்குரிய.

**Heptad,** *n.* ஏழு; ஏழின் தொகுதி.

**Heptagon,** *n.* ஏழு பக்கவடிவம்; எழுகோணம்.

**Heptameter,** *n.* ஏழு சீரடி.

**Heptarchy,** *n.* ஏழரசு.

**Heptasyllabic,** *a.*, ஏழசையுடைய.

**Her,** *pron. acc.* case of she.

**Herald,** *n.* வள்ளுவன்; தூதன்; பறையறிவிப்போன். *v.* (வருவதை அல்லது வருபவரைப் பற்றி) முன்னறிவி. *n.* heraldry, மரபுரிமைத் துறை (நூல்). *a.* heraldic, மரபுரிமை (நூல்) சார்ந்த.

**Herb,** *n.* சிறு செடி; பூண்டு; மூலிகை. *a.* herbacious. *see* herbal, herbiferous. *n. abs. see* herbage.

**Herbage,** *n.* புல்; பூண்டு.

**Herbal,** *a.*, *n.* புல் பூண்டுகளைப் பற்றிய (நூல்). *n. pers.* herbalist.

**Herbiferous,** *a.* புல் பூண்டு விளைகிற.

**Herbivorous,** *a.* புல் பூண்டு களை உண்கிற; தழையூணுடைய.

**Herculean,** *a.* (ஹெர்குலிஸ் போல்) வலிமை வாய்ந்த; (வேலை) செயற்கரிய.

**Herd,** *n.* மந்தை; கூட்டம். *v.* மந்தையாகக் கூடு; மந்தை மேய்.

**Here,** *adv. n.* இவ்விடத்தில்; இங்கே. *comb. adv. n.* here after, இனிமேல்; மறுமை(யில்). *adv.* hereby, இதனால் herewith, இதனுடன். herein, இதில். heretofore, இச்சமயம் வரை. hereunder, இதனடியில், இதன் கீழ். *adv.* hereabout, இங்கே எங்காவது.

**Hereditary,** *a.* மரபாக வந்த; மரபுரிமையான; வழிவழியாக வந்த. *n.* heredity, *n.* hereditariness.

**Herein,** *etc. adv. see* here.

**Heresy,** *n.* (ஏற்றுக்கொள்ளப் பட்டதற் கெதிரான) முரண்சமயம்; சமயமறுப்பு; கடவுள் மறுப்பு; முரண் (சமயக்) கோட்பாடு; கொள்கை எதிர்ப்பு. *n. pers.* heretic, *a.* heretical.

**Heretofore,** *adv. see* here.

**Heritage,** *n.* மரபுரிமை; வழிவழி உடைமை.

**Hermaphrodite,** *n.* (ஆண் பெண்) இருபால் (கூறுமுள்ள) உயிர்.

**Hermitic,** *a.* காற்று நுழையாமல் அடைக்கப்பட்ட *adv.* hermitically.

**Hermit,** *n.* துறவி; தனிமை வாழ்வினர். *n.* hermitage, துறவியின் குடில்.

**Hermit-crab,** *n.* சிப்பிக் கூட்டில் வாழும் நண்டுவகை.

**Hernia,** *n.* (மருத்துவத்தில்) உடைவு; முறிவு.

**Hero,** *n.* (*fem.* heroine) வீரன்; கதைத் தலைவர் (காவிய நாடகத்) தலைமையுறுப்பினர். *a.* heroic, வீரமான. *n.*, *a.* heroic, வீர காவியம் (சார்ந்த). *n.* heroics, *n.* ஆரவாரப் பேச்சு. *n.* heroism, வீரம். *comb. n. a. see* mock heroic.

**Heron,** hern, *n.* நாரை; கொக்கு.

*herr, n. (pl. herren)* (ஜெர்மானிய வழக்கு) திருவாளர்.

**Herring,** *n.* ஒருவகைக் கடல் மீன்.

**Hers,** *pron.* அவளுடையது.

**Herself,** *pron.* அவளையே; அவளே.

**Hertzian waves,** *n.* வானொலியின் மின் காந்த அலைகள்.

**Hesitate,** *v.* தயங்கு; (பேச்சில்) தடைப்படு. *a.* hesitant. *n.* hesitance, hesitancy, hesitation.

**Hesperus,** *n.* மாலைக்கால வெள்ளி.

**Hessian,** *n.* சணல் கித்தான் துணி.

**Heterodox,** *a.* ஏற்புடைய சமயக் கொள்கைக்கு) மாறுபாடான; முரணான. *n.* heterodoxy.

**Heterogeneous,** *a.* பலவகையான; பலபடித்தான; கலப்பான; (x homogeneous) *n.* heterogeneity.

**Hew,** *v.* (hewed, hewn or hewed.) வெட்டு; நறுக்கு; செதுக்கு.

**Hexad,** *n.* ஆறு (எண்); ஆறு சேர்ந்த தொகுதி.

**Hexagon,** *n.* ஆறு பக்கமுள்ள உருவம்; அறுகோணம்.

**Hexameter,** *n.* அறுசீரடி.

**Hexapody,** *n.* அறுசீர்ச் செய்யுளடி.

**Hexasyllabic,** *a.* ஆறு அசைகளையுடைய.

**Hey,** *int.* ஹே! (வியப்பு, வினா, கவனந்திருப்பல் முதலியன குறிக்கும் சொல்.)

**Hey-day,** *n.* பொங்கு காலம்; மகிழ்ச்சிக் காலம்.

**Hiatus,** *n.* பிளவு; இடைவெளி.

**Hibernate,** *v.* (விலங்கு) பனி வறட்சி கழி; (பனி வறட்சிக் காலத்தில்) உறங்கு; செயலற்றிரு. *n.* hibernation, பனிமாரி கழித்தல்.

**Hiccup,** *n.* விக்கல்.

**Hide,** 1. *v.* (hid, hid or hidden) மறை; மறைந்திரு; ஒளி. 2. *n.* விலங்கின் தோல்; மாவதள்; அதள்; உரியதள்; விலங்குரி; உரிவை; கசை. *v.* கசையால் அடி. (2) *a.* hidebound, குறுகிய நோக்கமுள்ள.

**Hideous,** *a.* வெறுப்பான; கோரமான; அச்சந்தருகிற. *n.* hideousness.

**Hie,** *v.* (hied) விரைவாகப் போ.

**Hierarch,** *n.* தலைமைக்குரு. *n. abs.* hierarchy, (குருமார், வானவர்) படிமரபு. *a.* hierarchical.

**Hieroglyph,** *n.* (பண்டை எகிப்தியர்) சித்திர எழுத்து முறை; புரியாக்குறி எழுத்துரு. *a., n.* hieroglyphic. *n. pl.* hieroglyphics.

**Higgle,** *v.* விடாது பேரம் செய்.

**Higgledy, piggledy,** *n., a., adv.* குழப்பம் (ஆன); குளறுபடி (ஆன).

**High,** *a. adv.* உயரமான; மேன்மை யான; உயர்தரமான; உயரத்தில். *adv.* highly, உயர்வாக; மேலாக; மிக. *n.* high-brow, உயர்தனி அறிவு படைத்தவர்; இறுமாந்தவர். *a.* highhanded, தான்தோன்றித் தனமான; தன் முனைப்பான. high court, உயர்முறை மன்றம்.

**Highflown,** *a.* பகட்டான; வீறாப்பான.

**Highness,** *n.* (இளவரசர்) கோமக்கள் இந்திய அரசர், பட்டம்; உயர்வு.

**High-strung,** *a.* பதற்றமான; உணர்ச்சி மிகுந்துள்ள.

**High-toned,** *a.* உயர்குரலான; எடுப்பான.

**Highway,** *n.* நெடுஞ்சாலை; பெரியாசலை; நீணெறி; நெடுவழி; பெருவழி; தலைவழி. *n.* highway-man, வழிப்பறி செய்பவன் ; ஆறலைக் கள்வன்.

**Hike,** *a.* கால்நடையாகச் செல்; உயர்த்து. *n.* உலாவுதல்.

**Hilarious,** *a.* மகிழ்ச்சி மிகுந்த; களிப்பான. *n.* hilarity.

**Hill,** *n.* குன்று. *a.* hilly.

**Hillock,** *n.* சிறுகுன்று; மேடு.

**Hilt,** *n.* கத்தியின் கைப்பிடி.

**Hilum,** *n.* விதைத் தழும்பு.

**Him,** *pron. acc.* case. *see* he

**Himself,** *pron. refl. see* he

**Hind,** பெண்மான். 1. *n.* 2. *see* hinder.

**Hinder,** hind, (ஹைண்டர், ஹைண்ட்). *a.* (*sup.* hindmost, hindermost.) பின்புறமான; பின்புறத்து. (ஹின்டர்). *v.* தடை செய். (2) *p. n.* hindrance, தடை. தொந்தரை.

**Hinge,** *n.* (கதவுக்) குடுமி; கீல்; முனை; சுழல்வதற்கான அச்சு. *v.* கீழ் பொருத்து; முனையில் சுழலு.

**Hinny,** *n.* ஆண் குதிரைக்கும் பெண் கழுதைக்கும் பிறந்த விலங்கு.

**Hint,** *n.* சைகை; குறிப்பு; குறிப்பாகத் தெரிவித்தல். *v.* குறிப்பினால் தெரிவி.

*hinterland, n.* ஆற்றங்கரை அல்லது கடற்கரையை அடுத்த உள்நாடு.

**Hip,** 1. *n.* இடுப்பு. 2. *v.* மகிழ் விக்கச் செய்.

**Hipbone,** *n.* இடுப்பெலும்பு.

**Hippodrome,** *n.* மற்போர் முதலியன பயில்கின்ற அரங்கம்.

**Hippopotamus,** *n.* நீர் யானை.

**Hire,** *n.* வாடகை; குடிக்கூலி. *v.* வாடகைக்கு அமர்த்து. *n.* hireling, கூலியாள்; கூலிக் குழைப்பவர். *comb. n.* hire charge, வண்டிச் சத்தம்; வாடகைக் கட்டணம்; *(pl.)* வாடகைச் செலவு.

**His,** *pron.* possessive case and possessive pronoun, (he) அவனுடைய; அவனுடையது.

**Hiss,** *v.* சீறு; 'உசு' என்ற ஒலி செய்.

**Hist,** *int.* உசு; (கவனந் திருப்புதல் அல்லது கூச்சலை நிறுத்துதலுக் காகச் சொல்லப்படும் சொல்.)

**Histology,** *n.* உயிர்களின் உடலாக்க நூல்.

**Historian,** *n.* வரலாற்று ஆசிரியர்.

**Historic,** *a.* வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த; புகழ் பெற்ற. *n.* historicity, *a.* historical.

**History,** *n.* வரலாறு; நாட்டு வரலாறு. *a. see* historic, *n. pers. see* historian.

**Histrionic,** *a.* நாடகசாலைக்கு உரிய. *n. abs.* histrionics, நாடகக் கலை; (செயல்துறை) நடிப்பு.

**Hit,** *n.* அடி; தாக்குதல்; மோதுதல்; இலக்குமீது படுதல்; ஆதாயம்; பேறு; நற்பேறு; திறமையான பேச்சு. *v.* தற்செயலாகக் கண்டுபிடி.

**Hitch,** *n.* தடை; பிடிப்பு; சிக்கல்; தடுக்கு. *v.* மாட்டு; சிக்கிக்கொள்.

**Hither,** *adv. a.* இவ்விடத்திற்கு; இப்பக்கத்திலுள்ள. *adv.* hitherto, இதுவரை. hitherward, இவ் விடத்தை நோக்கி.

**Hive,** *n.* தேன் கூடு; சுறுசுறுப்பான மக்களின் கூட்டம்.

**Ho,** *int.* ஓ! ஹோ!

**Hoard,** *n.* சேகரித்து வைத்த பொருள். (சட்டத்துக்கு எதிரான, பதுக்கிவைத்த) குவை; திரள்; கூட்டம். *v.* சேகரி; திரட்டி வை. (வாணிகம், அரசியல் சட்டம்) பதுக்கிச் சேர்; சட்டத்துக்கு எதிராகச் சேமித்து வை.

**Hoarse,** *a.* (குரல்) கரகரப்பான; கம்மிய. *n.* hoarseness.

**Hoary,** *a.* நரைத்த; மிக முதிய; பழமைப்பட்ட

**Hoax,** *v.* ஏமாற்று; மோசம் செய். *n.* ஏமாற்றல்; மோசடி.

**Hobble,** *v.* நொண்டி நட. *n.* நொண்டி நடத்தல்.

**Hobble dehoy,** *n.* இளைஞன்.

**Hobby,** *n.* விருப்பத்தொழில்; ஓய்வுநேரத் தொழில்.

**Hobgoblin,** *n.* சிறு தெய்வம்; பூதம்.

**Hobnail,** *n.* (செருப்புகளில் அடிக்கும்) தடித்த கொண்டை யுடைய ஆணி.

**Hockey,** *n.* கோற்பந்து; மட்டைப் பந்து; வளைகோற்பந்து (ஆட்டம்.)

**Hocus-pocus,** *n.* மாயவித்தை; ஏமாற்றல்.

**Hodge-podge,** *n.* [*see* hotch-potch.]

**Hoe,** *n.* மண்வெட்டி; களைக் கொட்டு. *v.* மண் வெட்டியால் கொத்து.

**Hog,** *n.* பன்றி; முரடன். *a.* hoggish.

**Hogshed,** *n.* பீப்பாய்; 52½ காலன் முகத்தலளவு.

**Hoist,** *v.* உயர்த்து; மேலே ஏற்று. *n.* ஏற்றம்.

**Hold,** *v.* (held) கையில் பிடித்திரு; கட்டுப்படுத்தி வை; கைவசமாகக் கொள்; கருது; நிறுத்து. *n.* பிடிப்பு; உரிமை; சிறை; கப்பலில் சரக்கு ஏற்றுமிடம். *n. ag.* holder, கொளுவி. *n.* கைப்பிடி. holding, சொத்து; ஆட்சி. *phr. v.* hold on, (hold) (வண்டி முதலியன) நிறுத்து! நிற்கட்டும். (x right ho!)

**Hole,** *n.* துளை. *v.* துளை செய்.

**Holiday,** *n.* ஓய்வுநாள்; விடுமுறை (நாள்); பண்டிகை நாள்.

**Holiness,** *n.* திருத்தூய்மை; சமயத் தலைவருக்கு அளிக்கப்படும் பட்டம்.

**Hollo,** *int.* (விளித்தலைக் குறிக்கும் சொல்) அடே; இதோ.

**Hollo, holloa, holler,** *v.* விளி. கூப்பிடு. *n.* கூப்பாடு; விளித்தல்.

**Hollow,** *a.* உட்குழிவான; வெறுமையான; நம்பத் தகாத. *v.* பள்ளம் செய். *n.* பொந்து; பள்ளத்தாக்கு. *n.* hollowness.

**Holly,** *n.* ஒரு மரம்.

**Holocaust,** *n.* எரிந்து அழிதல்.

**Holster,** *n.* துப்பாக்கி வைக்கும் தோல் பை.

**Holy,** *a.* தூய்மையான; திருநிலையான.

**Holyrood,** *n.* (கிறித்துவச்) சிலுவை.

**Homage,** *n.* வழிபாடு; கீழடக்கம்; வணக்கம்.

**Home,** *n.* வீடு; தாயக நாடு. *a.* வீட்டுக்குரிய. *adv.* வீட்டுக்கு; தாய் நாட்டுக்கு; உள்ளூர; முழுமையும். (the blow went home) *a.* homing, வீட்டை நாடும் இயல்புள்ள. *a.* homely, வீட்டு வாய்ப்புப்போன்ற; வாய்ப் பெளிமையான. *n.* homeliness, இன்னெளிமை.

**Homiric,** *a.* ஹோமர் (Homer) என்னும் கிரேக்க கவிஞனின் நடையிலுள்ள; வீறுடைய.

**Homerule,** *n.* தன்னாட்சி.

**Homestead,** *n.* குடும்ப மனையகம்.

**Homicide,** *n.* ஆட்கொலை; கொலைகாரர். *a.* homicidal.

**Homily.** *n.* அறிவுரை; சமயச் சொற்பொழிவு.

**Homoeopathy,** *n.* (நோயை அதே நோய்க் கூற்றுப் பெருக்கத்தால் குணப்படுத்தும்) நேர் மருத்துவ முறை. (*cf.* allopathy, naturopathy, etc.)

**Homogeneous,** *a.* ஒரு சீராயுள்ள. *n.* homogeneity.

**Homologous,** *a.* அமைப்பில் ஒத்துள்ள. *n.* homologue, நேர் ஒப்பான பகுதி.

**Homonym.** *n.* ஒரே உருவமும் மாறுபட்ட பொருளும் உள்ள சொல்.

**Homo sapiens.** *n.* (தற்கால) மனித இனம்.

**Honest,** *a.* நேர்மையான; நாணய மான; நியாயமான. (x dishonet) *adv.* honestly, *n.* honesty.

**Honey,** *n.* தேன் ; தேன் போன்ற இனிய பொருள்; (அணி வழக்கு) காதலி.

**Honeycomb,** *n.* தேன் கூடு.

**Honeymoon,** *n.* திருமணத் துணைவர் முதல் இன்ப உலாக் காலம்; 'தேனிலவு'க் காலம்.

**Honor, honour,** *n.* தன் மதிப்பு; மானம்; நற்பெயர்; புகழ்; புகழ் மரபு; தற் கட்டுப்பாடு; கற்பு; மேன்மை; மேதகைமை. *n. pl.* (honours), (படைத்துறை; அரசியல்) விருது; புகழ்ப்பட்டம். *v.* நன்மதிப்பளி; மேன்மைப் படுத்து *a.* honorary, மதிப்பிய லான. *a.* honourable, மதிப்பு வாய்ந்த; தகு; தகை சான்ற; மதிப்புக்குரிய *n*, honorarium, மதிப்பூதியம். *a.* honorific, மதிப்புக்குறியான.

**Hood,** *n.* முக்காடு; முகமூடி வகை; பாம்புப்படம்; தலையணி வகை. *v.* தலை மூடி அணி.

**Hoodoo,** *n.* வினை வைப்பு; சூனியம்.

**Hoodwink,** *n.* ஏமாற்று; கண்ணைக் கட்டு.

**Hoof,** *n*, (*pl.* hoofs, hooves) குளம்பு.

**Hook,** *n.* கொக்கி; கொளுவி; அரிவாள்; தூண்டில்முள். *v.* மாட்டு; சிக்கவை வளைவாயிரு. *a.* hooked, வளைந்த, கொக்கி யலகுடைய. *comb. n.* hook worm, கொக்கிப் புழு.

**Hookah,** *n.* புகைக் குழாய்.

**Hooligan,** *n.* போக்கிரி. *n. abs.* hooliganism.

**Hoop,** *n.* 1. வளையம்; கண்ணி; கம்பிவார்க்கட்டு. *v.* வளை; கட்டுப்போடு. 2. *v.* இரைச்சலிடு; கூப்பாடு போடு.

**Hoot,** *v.* கூப்பாடு போடு; இரைந்து வெறுப்பைக் காட்டு; கூவு. *n.* கூவுதல்; ஆந்தையின் கத்தல்; அலறல்.

**Hop,** *v.* தத்து; துள்ளு. *n.* தத்தல்; துள்ளல்.

**Hope,** *n.* அவா; ஆர்வம்; நன்மையை எதிர்பார்த்தல். *v.* நலனை எதிர்பார். *a.* hopeful *(neg)* hopeless, நம்பிக்கைக்கு இடமற்ற; உருப்படாத; மோச மான.

**Horal, horary,** *a.* மணிக்குரிய; மணிக் கூற்றுக்குரிய; மணிக்கு மணி நிகழ்கிற.

**Horde,** *n.* கூட்டம்; நாடோடிகளின் குழு; படை; புடையர் குழு.

**Horizon,** *n.* அடிவானம்; வான விளிம்பு.

**Horizontal,** *a.* படுக்கைமட்ட மான; தளமட்டமான; கிடைநிலை யான.

**Hormone,** *n.* குருதியில் கலந்து இயக்குமாற்றலுடைய சுரப்பிநீர்; இயக்குநீர்.

**Horn,** *n.* கொம்பு; ஊது குழல்; குடிக்க உதவும் கொம்புக் கலம். *a.* horned, கொம்புடைய. horny, கொம்புபோன்ற; கடினமான.

**Hornet,** *n.* குளவி.

**Horologe,** *n.* மணிப்பொறி. *n.* horology, கால அளவை; மணிப்பொறித்தொழில்.

**Horologer,** *n.* கால அளவை வல்லுநர்.

**Horoscope,** *n.* பிறப்புக் குறிப்பு; பிறப்புக் கணிப்பு; பிறப்புப் பட்டியல்.

**Horrible,** *a.* கோரமான.

**Horrid,** *a.* அருவருப்பான; அஞ்சத்தக்க. *v.* horrify, அச்சப் படுத்து. *a.* horrific, *n.* horror.

**Horse,** *n.* குதிரை; குதிரைப் படை.

**Horseleech,** *n.* நீர் அட்டை வகை; (அணி வழக்கு) மனநிறை யாப் பேராவலாளன்.

**Horseman,** *n.* குதிரைவீரன். *n.* horsemanship.

**Horseplay,** *n.* முரட்டு விளையாட்டு.

**Horse-power,** *n.* ஆற்றல் அளவுக் கூறு; ஒரு குதிரை ஆற்றலளவு; புரவியாற்றல்; இவுளிவலம்; குதிரைத் திறம்; மாத்திரம்; பரித்திறம்.

**Horse-shoe,** *n.* குதிரை இலாடம்.

**Horse-whip,** *n.* குதிரைச் சவுக்கு *v.* குதிரைச் சவுக்கால் அடி.

**Hortative,** hortatory, *a.* அறிவுறுத்துகிற. *n.* hortation. *conn. see* exhort.

**Horticulture,** *n.* தோட்டக்கலை. *a.* horticultural. *n. pers.* horticulturist.

**Hosanna,** *n.* புகழ்ப்பாடல்.

**Hose,** *n.* உள் காற் சட்டை; நெளியக்கூடிய நீண்ட குழாய்.

**Hosier,** *n.* கம்பளத் துணி வணிகர். *n.* hosiery.

**Hospitable,** *a.* விருந்தோம்பும் பண்புடைய; வேளாண்மைப் பண்புடைய. *adv.* hospitably. *n. abs. see* hospitality.

**Hospital,** *n.* மருத்துவச் சாலை; மருந்தகம்; மருந்துமனை; நோய் நீப்பகம்; பேணகம்; ஓம்பகம்.

**Hospitality,** *n.* விருந்தினரை ஆதரித்தல்; வேளாண்மைப் பண்பு. *a. see* hospitable.

**Host,** *n.* 1. (*fem.* hostess) விருந் தளிப்பவர்; புரவலர்; ஓம்புநர். 2. *n.* கூட்டம்; பெருந்திரள்; படை; திருக்கூட்டம்; பூதகணம்; தேவர் குழு.

**Hostage,** *n.* பிணையாக நிறுத்தப் பட்டவன் ; பிணை.

**Hostel,** *n.* மாணவர் விடுதி; இல்லம்; வழிவிடுதி. *n. abs.* hostelry. விடுதித்துறை.

**Hostile,** *a.* பகையான; எதிரான. *n.* hostility.

**Hostler,** *n.* குதிரைப்பாகன்; குதிரைவலவன்; இலாய வாணன்.

**Hot,** *a. adv.* சூடான; உறைப்பான; சினமுடைய. *adv.* hotly.

**Hotbed,** *n.* வளமூட்டிய பண்ணை; எளிதில் வளரும் நிலம்.

**Hotblooded,** *a.* உணர்ச்சி வயப் பட்ட; எளிதில் சினங்கொள்கிற.

**Hotchpotch, hotchpot,** *n.* கதம்பக் கூட்டு; களேபரம்; 'கந்தர் கோலம்'.

**Hotel,** *n.* உண்டி விடுதி; உணவு சாலை; அருந்தகம்; உணவகம்; உணாமனை. *n. pers.* hotelier.

**Hot-head,** *n.* மூர்க்கன். *a.* hot-headed.

**Hot-house,** *n.* (இளஞ் செடிகளை வளர்க்கும்) சேமப் பண்ணை; செயற்கை வெப்பநிலைப் பண்ணை.

**Hot-spur,** *n.* மூர்க்கன்; ஆர்வ வெறியன்.

**Hottentot,** *n.* (தென் ஆப்பிரிக்கா விலுள்ள) நாடோடி வகுப்பினர்.

**Hound,** *n.* வேட்டை நாய். *v.* வேட்டை மீது ஏவு; தூண்டு; வேட்டையாடு; பின் தொடர்.

**Hour,** *n.* மணிநேரம்; குறித்த காலம்; நேரம். *a. adv. see* hourly. *n. (comb.)* hour-glass, மணல் வட்டில்.

**Houri,** *n.* அரநங்கை.

**Hourly,** *a. adv.* (hours) மணிதோறும் (நிகழ்கிற).

**House,** *n.* வீடு; மனை; அகம்; இல்லம்; உறையுள்; கட்டடம்; நிலைய மனை; குடும்பம்; கூட்டு வாணிகச் சங்கம். *v.* தங்குமிடம் அளி; குடி வை; வை; அமைத்து வை; அமை; கட்டடத்தில் நிறுவு *conn. a. see* domestic, *comb. n.* poor-house, ஏழையகம். rest-house, தங்கல் மனை. slaughter-house, கொல்களம்; இறைச்சிக் கடை. *see* housebreaking, household, house wife, house-keeper, etc.

**Housebreaking,** *n.* திருடல்; கன்னமிடல்.

**Housefly,** *n.* வீட்டு ஈ.

**Household,** *n.* குடும்பம். *n.* householder, வீட்டுக்காரர்.

**House-keeper,** *n.* வீட்டைக் கண்காணிப்பவன் ; வீட்டுக்காரி. *n.* house-keeping, குடும்பம் நடத்துதல்.

**Housewife,** *n.* மனைவி; வீட்டின் தலைவி; இல்லாள். *see* hussy.

**Housing,** *n.* (house) 1. (குதிரை மேல்) விரிப்பு. 2. வீட்டு வசதி (அளித்தல்).

**Hovel,** *n.* குடிசை; குச்சு; குடில்; புரை.

**Hove,** *v.* வட்டமிடு; இங்குமங்கும் திரி. *n.* தாழ்ந்து பற.

**How,** *adv.* எப்படி; எவ்வகையில்.

**Howbeit,** *conj.* எப்படியான போதிலும்.

**Howdah,** *n.* (யானைமீது) அம்பாரி; யானைமேல் தவிசு.

**However,** *adv., conj.* எப்படியாயினும்.

**Howitzer,** *n.* பீரங்கி வகை.

**Howl,** *v.* ஊளையிடு; அலறு. *n.* ஊளையிடுதல்; அலறல்.

**Howler,** *n.* கூப்பாடு போடுபவன்; முட்டாள்தனமான தவறு.

**Hub,** *n.* சக்கரத்தின் குடம்; கருவியின் கைப்பிடி; நடுப்பகுதி.

**Hubbub,** *n.* குழப்பம்; ஆரவாரம்.

**Huckle,** *n.* இடுப்பு.

**Huddle,** *v.* தாறுமாறாகக் குவி; நெருங்கு. *n.* குழப்பம்; நெருக்கம்.

**Hue,** *(1) a.* hued, *2. comb. n.* நிறம்; சாயல். 2. கூப்பாடு *hue and cry,* அச்சத்தால் இடும் கூக்குரல்.

**Hug,** *v.* தழுவு; கட்டியணை. *n.* தழுவுதல்.

**Huge,** *a.* மிகப் பெரிய.

**Hugenot,** *n.* ஃவிரஞ்சு புராடஸ்டன்டு.

**Hulk,** *n.* பழைய கப்பலின் உடற் பகுதி; பருத்தது.

**Hull,** *n.* (தானிய) உமி; (கொட்டை யின்) ஓடு; கப்பலின் உடற்பகுதி *v.* உமியைப் போக்கு. தோலுரி.

**Hullbaloo,** *n.* கூப்பாடும் இரைச்சலும். *v.* இரைச்சலிடு.

**Hum,** *v.* தாழ்ந்த குரலில் பாடு; முனங்கு. *n.* மந்த ஓசை; முரலும் ஓசை.

**Human,** *a.* மனிதனுக்குரிய; மனிதத் தன்மையுடைய *adv.* humanly. *v. see* humanize. *n. abs. see* humanity, humanism. *n. coll.* humankind.

**Humane,** *a.* இரக்கமுள்ள *n. abs. see* humanity.

**Humanitarian,** *a., n.* (humanity 2) அன்புப்பணி சார்ந்த(வர்).

**Humanism,** *n.* மனிதத் தன்மை; மனிதப் பற்றுக் கோட்பாடு. *n.* humanist. *a.* humanistic,

**Humanity,** *n.* 1. மனிதத் தன்மை; மனித வகுப்பு. 2. மனிதப்பண்பு; அன்பு; அருளிரக்கம்; அன் பருள். 3. *(pl. n.)* humanities, உயர் மனிதப் பண்புப் பயிற்சித் துறைகள்; (சிறப்பாக) கிரேக்க உரோம இலக்கியங்கள்.

**Humanize,** *v.* மனிதனாக்கு; நாகரிகப்படுத்து. *n. vbl.* humanization, *n. pers.* humanizer.

**Humankind,** *n.* மனித வகுப்பு; மனித இனம்.

**Humble,** *a.* பணிவான; தாழ்மை யுள்ள *v.* கீழ்ப்படுத்து; செருக்கைக் குலை. *adv.* humbly.

**Humble-bee.** *n.* பெரிய வண்டு வகை.

**Humble-pie,** *n.* இழிந்த உணவுப் பண்டம். *comb. v.* eat humble pie, அவமானத்துக்கு உட்படு.

**Humbug,** *n.* மோசக்காரன்; மோசம்; மோசம்செய். எத்து. *v.* [-gg-]

**Humdrum,** *a.* ஒரே மாதிரியான; வெறுப்பைத் தருகிற. மோசம் செய்.

**Humid,** *a.* ஈரமான; ஈரக்கசிவான *n.* humidity, *v.* humidify.

**Humiliate,** *v.* தாழ்த்து. *n.* humiliation, தாழ்வு.

**Humility,** *n.* பணிவு; தாழ்மை யுணர்ச்சி.

**Humming,** *n.* முரலும் ஓசை.

**Humor,** *n. see* humour.

**Humorist,** *n.* (humour, humor) நகைப்பு விளைவிப்பவன்; தனிப் பண்பாளன்.

**Humorous,** *a.* (humour, humor) வேடிக்கையான; நகைப்பை விளைவிக்கிற.

**Humour, humor,** *n.* 1. உள்ள நிலை. 2. நகைச்சுவை; உவகைச் சுவை. 3. உடம்பிலுள்ள நீர்க்கூறு; தாது. 4. *v.* இசையச்செய்; இணக்க மாக்கு.

**Humoursome,** *a.* மனம்போல் நடக்கின்ற.

**Hump,** *n.* கூனல். *n.* humpback, கூனல்முதுகு; கூனன்; கூனி.

**Humus,** *n.* தோட்டத்து மண் சத்து.

**Hun,** *n.* (வரலாறு) ஊணன்; (அணி வழக்கு) அவுணன்; முரடன்.

**Hunch,** *n.* கூனன். *v.* கூனச்செய் *n.* hunchback, கூனல் முதுகு; கூனன்; கூனி.

**Hundred,** *n., a.* நூறு *a.* hundredth, நூறாவதான; நூறில் ஒரு பகுதி.

**Hundredfold,** *a.* நூறுமடங்கான.

**Hundredweight,** *n.* (சுருக்கக்குறி cwt.); 112 கல் எடை.

**Hunger,** *n.* பசி; மிக்க ஆர்வம். *v.* பசிகொள்; ஆவலடை. *a.* hungry.

**Hunger-strike,** *n.* உண்ணா நோன்பு; உண்ணாமுரண்டு.

**Hunt,** *v.* வேட்டையாடு. *n.* பின் தொடர்; தேடு. *n.* வேட்டை யாடுதல். *n.* hunting. *n. ag. pers.* hunter, வேடன். (*fem.* huntress) huntsman, வேட்டை யாளர்; வேட்டைத் துணைவர்.

**Hurdle,** *n.* தடை; தடைக்கட்டு; பந்தயத்தில் தாவவேண்டிய தடங்கல். *v.* தட்டி கட்டி மறித்தல்.

**Hurl,** *n.* வீசியெறி. வீச்சு.

**Hurly-burly,** *n.* குழப்பம்.

**Hurrah, hurray,** *int., n.* வாழ்க! (மகிழ்ச்சிக் கூச்சல்.)

**Hurricane,** *n.* புயல்காற்று;

**Hurry,** *n.* விரைவு; பரபரப்பு. *v.* பரபரப்படை; விரைவுபடுத்து.

**Hurt,** *v.* புண்படுத்து. *n.* புண். *a.* hurtful. *(neg.)* hurtless.

**Husband,** *n.* கணவன் *v.* செட்டாகத்தொழில் நடத்து.

**Husbandman,** *n.* உழவன்; வேளாளன். *n.* husbandry, உழவுத் தொழில்.

**Hush,** *v.* கூச்சலை அடக்கு. *n.* அமைதி. *int.* அமைதியாயிரு.

**Hushmoney,** *n.* (மறைவெளியிடா திருக்கத் தரும்) கைக்கூலி.

**Husk,** *n.* உமி; புறத்தோல்; ஓடு. *v.* உமியை அல்லது ஓட்டைப் போக்கு. *a.* husky, உமி நிறைந்த (குரல்) வறட்சியான; சுரசுரப்பான. *n.* huskiness.

**Hussar,** *n.* குதிரை வீரன்.

**Hussy,** *n.* (housewife, என்பதன் மரூஉ) துடுக்கான பெண்; சிறுக்கி.

**Hut,** *n.* குடிசை; வேய்மனை; புல்வீடு.

**Hyacinth,** *n.* பலவண்ணங்களில் மணிவடிவமலர் பூக்கும் செடி வகை. 2. பதுமராகம்; செம்மணிக் கல் வகை.

**Hyaena, hyena,** *n.* கழுதைப் புலி.

**Hybrid,** *n.* கலப்பு இனம்.

**Hydra,** *n.* பலதலைப் பாம்பு; பல வழிகளில் கிளைக்கும் தீங்கு.

**Hydrate,** *n.* நீரகமுடைய இயை பியல் பொருள்; 'நீரகி'. *a.* hydrated, நீரூட்டப்பெற்ற; நீரியலான.

**Hydraulic,** *a.* தண்ணீரின் ஆற்றலால் வேலை செய்கிற; நீர்வலம் கொண்ட, தண்ணீரைத் தாங்கிச் செல்கிற; நீர்ச்சுமை யுடைய. *n.* hydraulics, குழாயில் தண்ணீரின் இயக்கத்தைப் பற்றிய நூல்.

**Hydride,** *n.* நீரக வகை.

**Hydrocarbon,** *n.* நீரகக் கரியம்.

**Hydrocele,** *n.* விதை வீக்கம்; ஓதம்.

**Hydroelectric,** *a.* நீர் மின்சாரஞ் சார்ந்த.

**Hydrogen,** *n.* நீர் வளி, நீரகம்.

**Hydrography,** *n.* நீர்ப்பரப்பு விளக்கும் நிலப்படம். *n. pers.* hydrographer.

**Hydrameter,** *n.* நீர்மத்தின் செறிவை அளக்கும் கருவி.

**Hydropathy,** *n.* நீர் மருத்துவ முறை. *a., n.* hydropathic, நீர் முறை சார்ந்த (மருத்துவச்சாலை).

**Hydrophobia,** *n.* நீர்ப் பைத்தியம்; நீரச்சநோய்; நாய்க் கடி நோய்.

**Hydroplane,** *n.* கடலிலும் செல்லக்கூடிய வானூர்தி; நீர்த்தள வான் கலம்.

**Hydrosphere,** *n.* (நிலவுலகு சூழ்) நீர் மண்டலம்.

**Hydrostatic,** *a.* நீர்மங்களின் நிலையைப் பற்றிய. *n.* hydrostatics, நீர்மங்களின் நிலையைப் பற்றிய நூல்.

**Hydrotherapeutics,** *n. pl.* நீர் மருத்துவம்; நீரால் நோய் குணப்படுத்தும் முறைபற்றிய நூல்.

**Hydrous,** *a.* நீருள்ள.

**Hyena,** *n.* [*see* hyaena]

**Hygiene,** *n.* உடல்நல நூல்; நலவழி; பேணியல்; நலவியல் *a.* hygenic, *adv.* hygenically.

**Hygrometer,** *n.* ஈரமானி. *a.* hygrometry.

**Hygroscope,** *n.* ஈரங்காட்டி.

**Hymen,** *n.* (கிரேக்க புராணம்) திருமணம்; திருமணத் தெய்வம்.

**Hymn,** *n.* துதிப் பாடல்; கடவுளின் மீது துதி; பாசுரம். *n.* hymnist.

**Hyperbola,** *n.* நீள்வட்டம்.

**Hyperbole,** *n.* புனைந்துரை; மிகையுரை *a.* hyperbolic(al).

**Hypercritical,** *a.* நுணுக்கங் களைக் கவனிக்கிற.

**Hypersensitive,** *a.* உணர்ச்சி மிக்க.

**Hyphen,** *n.* இணைப்புக்குறி (-)

**Hypnotism,** *n.* மயக்குதலைச் செய்யும் மாய்மாலம்; உறக்கம் போன்ற நிலையை உண்டாக்கும் வித்தை *a.* hypnotic, *v.* hypnotize.

**Hypochondria,** *n.* அச்சம் தருகிற மனநோய்வகை. *a. n. pers.* hypochondriac.

**Hypocrisy,** *n.* பாசாங்கு; கபடம்; வெளிவேடம். *n.* hypocrite, பாசாங்குக்காரன். *a.* hypocritical.

**Hypodermic,** *a.* தோலுக்குக் கீழ்ப்புறமான.

**Hypotenuse,** *n.* செங்கோண முக்கோணத்தின் மிக்க நீளமான பக்கம் 'நெடுங்கை வரை'.

**Hypothecate,** *v.* அடகு வை. *n.* hypothecation, அடமானம்; கொதுவை; ஈடு; பந்தகம். *comb. n.* hypothecation bond, அடமானப் பத்திரம்.

**Hypothesis,** *n.* (*pl.* hypotheses) தற்காலிகக் கோட்பாடு ஊகம்; புனைகொள்கை; தற்கோள் *a.* hypothetical, புனைவான; கற்பிதமான.

**Hypsography,** *n.* நில உலக மேல்பரப்பின் உயர வேறுபாடு களைப் பற்றிய நூல்.

**Hysteria, hysterics,** *n.* வலிப்பு நோய்; நரம்புத் தளர்ச்சி. *a.* hysteric(al).

# I

**I,** *pron.* (1st *pers. sing.*) நான்.

**Iambus,** *n.* குறில் நெடில் (ஆங்கிலத்தில் அழுத்தமில்லா அசை, அழுத்த அசை) என்று வரும் செய்யுள் சீர். (U-) *a.* iambic.

**Iberian,** *a.* ஸ்பெயின் போர்ச்சுகல் தீவக்குறைக்குரிய.

**Ibex,** *n.* மலை ஆடு.

*ibidem, adv.* சுருக்கம்; (*ib.* or *ibid.*) அதே புத்தகத்தில் அல்லது இடத்தில்.

**Ibis,** *n.* நாரை வகை.

**Ice,** *n.* பனிக்கட்டி. *v.* பனிக்கட்டி யாக்கு. *a.* icy. *n.* iceberg. கடலில் மிதக்கும் பெரிய பனிக்கட்டி. *a.* icebound, பனிக்கட்டியால் சூழப் பட்ட. *n.* diminicicle. பனிக்கட்டித் துண்டு.

**Ichthyosaurus,** *n.* (இறந்தொழிந்த) மீன் போன்ற உடலும் துடுப்புக் கால்களும் உடைய பெரிய ஊரும் விலங்கு.

**Icon,** *n.* தெய்வ வடிவம்; வழிபாட்டு உருவம் *a.* iconic.

**Iconoclast,** *n.* தெய்வ உருவங் களை உடைப்பவன்; நம்பிக்கை களையும் பழக்க வழக்கங் களையும் எதிர்ப்பவன். *n. abs.* iconoclasm. *a.* iconoclastic.

**Iconography,** *n.* உருவங்களை விவரிக்கும் நூல்.

**Icosahedron,** *n.* இருபது பக்கங் களைக் கொண்ட கன வடிவம்.

**Idea,** *n.* கருத்து; புது எண்ணம்; நினைவுப் படிவம்.

**Ideal,** *a.* கருத்திலுள்ள; மிகச் சிறந்த; உயர்குறிக்கொண்ட; கருத்தியலான. *n.* மிகச் சிறந்த கற்பனை அல்லது நோக்கம். *n.* idealism, குறிக்கோள் நெறி; களவியல் நெறி; (மெய் விளக்கம்) அகமெய்ம்மை நெறி. *n. pers.* idealist. *a.* idealistic. *v.* idealize. *n. vbl.* idealization.

*idem, n.* or *adv.* (சுருக்கம் *id*) அதே சொல்; அதே ஆசிரியர்.

**Identic,** *a.* ஒரே மாதிரியான; அதே உருப்படியான; அதே; ஒருமைப் பட்ட; ஒன்றேயான.

**Identical,** *a.* அதே; அதே மாதிரியான.

**Identify,** *v.* (ஆள்) அடையாளம் காண்; (ஆள்) அடையாள உறுதி செய்; இன உறுதிசெய்; உறுப்பு உறுதிசெய். *n.* identification, ஆளடையாளம்; இன உறுதி. *a.* identifiable, *n.* identity card, certificate of identity. இன உறுதிச் சான்று; ஆளடையாளச் சீட்டு.

**Ideology,** *n.* கருத்துகளைப் பற்றிய கலை; ஒருவருடைய அல்லது ஒரு கூட்டத்தாருடைய கொள்கைகள்.

**Ides,** *n. pl.* (உரோமானிய) மாத நடுநாள் விழா.

*id est,* (சுருக்கம் *i.e.*) அதாவது.

**Idiocy,** *n.* மடமை; அறியாமை.

**Idiom,** *n.* மொழி மரபு. *a.* idiomatic.

**Idiosyncrasy,** *n.* தனி முரண்பாடு; தனிச் சிறப்புப் பண்பு.

**Idiot,** *n.* முட்டாள்; அறிவிலான். *a.* idiotic.

**Idle,** *a. v.* சோம்பேறியான; வேலை செய்ய மனமில்லாத; பயனில்லாத. *v.* காலத்தை வீணாக்கு. *n.* idleness. *n. pers.* idler. சோம்பேறி *adv.* idly.

**Idol,** *n.* சிலைஉரு; வழிபாட்டுப் புனை உரு.

**Idolatory,** *n.* உருவ வணக்கம். *n. pers.* idolater. (*fem.* idolatress.) idolatrous.

**Idol ze,** *v.* சிறந்ததாகக் கொண்டாடு; தொழு; மிகவும் அன்பு செய். *n.* idolization.

**Idyll, Idyl,** *n.* நாட்டுப்புற வாழ்க்கைச் சித்திரம். *a.* idyllic.

**If,** *conj.* அவ்வாறாயின் ; அப்படி யிருந்தால்.

**Igneous,** *a.* தீ சார்ந்த; எரிமலை யால் ஆக்கப்பட்ட.

**Ignite,** *v.* கொளுத்து; தீப்பற்று. *n.* ignition. *a.* ignitable.

**Ignoble,** *a.* இழிவான; தாழ்ந்த *n.* ignobleness, *adv.* ignobly.

**Ignominy,** *n.* இகழ்; பழி. *a.* ignominous.

**Ignoromus,** *n.* அறிவிலி; முட்டாள்.

**Ignorance,** *n.* அறியாமை. *a.* ignorant.

**Ignore,** *v.* புறக்கணி; கவனியாதிரு; தள்ளுபடி செய்.

**Iliad,** *n.* (ஹோமர் எழுதிய) பெருங் காவியம்; துன்பத்தொகுதி.

**Ilk,** *n.* அதே இனம்.

**Ill,** *a.* தீங்கான; தவறான; நோய் வாய்ப்பட்டுள்ள. *n.* நோய். தீமை. *adv.* தீங்காக.

**Ill bred,** *a.* நற்பழக்கமற்ற.

**Illegal,** *a.* சட்ட முரண்பாடான. *n.* illegality, *adv.* illegally.

**Illegible,** *a.* தெளிவில்லாத. *n.* illegibility.

**Illegitimate,** *a.* சட்டத்துக்கு மாறான; கேடான. *n.* illegitimacy.

**Illiberal,** *a.* (liberal) குறுகிய மனப் பான்மையுள்ள. *n.* illiberality.

**Illicit,** *a.* ஒழுங்கற்ற.

**Illimitable,** *a.* எல்லையற்ற; அளவிறந்த. *n.* illimitability.

**Illiterate,** *a.* கல்வியில்லாத; எழுதப்படிக்கத் தெரியாத. *n.* படிப்பில்லாதவன். *n. abs.* illiteracy.

**Illness,** *n.* நோய்.

**Illogical,** *a.* வாத நூலுக்கு மாறான; வாதத்திற்குப் பொருந்தாத. *n.* illogicality.

**Ill-omened,** *a.* தீங்கு குறித்த,

**Illuminate,** *v.* (illumine) ஒளி பெறச் செய்; விளங்கச் செய்; அறிவு பெறச் செய். *n.* illumination, பேரொளி விளக்கம்; ஒளி விளக்கம்; ஒளியணிக்காட்சி. *n. pers.* illuminitor. *a.* illuminative, *a.*, *n.* illuminant.

**Illumine,** *v.* ஒளிபெறச் செய்; விளங்கச் செய். *conn. see* illuminate.

**Illusion,** *n.* ஏமாற்றம்; பொய்த் தோற்றம்; மாயை. *n. agt.* illusionist, மாயாவாதி. *a.* illusive, illusory. *n.* illusiveness, illusoriness.

**Illustrate,** *v.* தெளிவாக்கு; விளங்கச் செய்; மேற்கோளுடன் அல்லது படத்துடன் விளக்கு; படங்கள் வரை. *n.* illustration, எடுத்துக்காட்டு. *n. pers.* illustrator. *a.* illustrative.

**Illustrious,** *a.* புகழ் பெற்றுள்ள. *n.* illustriousness.

**Ill-will,** *n.* தீய எண்ணம்; பகைமை.

**Image,** *n.* உருவம்; உருவச் சிலை. *v.* உருவம் அமை; மனத்தில் சித்திரி; நிழற்படக் காட்சி.

**Imagery,** *n.* உருவகமுறை; வர்ணனை; கற்பனைச் சித்திரம்.

**Imaginary,** *a.* உண்மையல்லாத; கற்பனையில் மட்டுமுள்ள.

**Imagination,** *n.* கற்பனை; புனை வாற்றல்.

**Imaginative,** *a.* கற்பனை சார்ந்த; கற்பனையில் ஈடுபட்டுள்ள.

**Imagine,** *v.* கற்பனை செய்; கருது; புனை.

**Imbecile,** *a.* நொய்ய; உரமற்ற; வலுவிழந்த. *pers.* மூடன். *n. abs.* imbecility.

**Imbibe,** *v.* உட்கொள்; பருகு; மனத்திற் கொள்.

**Imbroglio,** *n.* ஒழுங்கற்ற குவியல்; குழப்ப நிலைமை.

**Imbue,** *v.* தோய்; சாயந் தோய்; மனத்திற் பதிய வை.

**Imitate,** *v.* பின்பற்றி நட; (ஒன்றைப்) போலிரு; ஒன்றைப் போல அமை. *n.* imitation, போலிப் பொருள்; போலி நடத்தை. *n.* imitable, imitative, *n. pers.* imitator.

**Immaculate,** *a.* மாசற்ற; தூய்மையான.

**Immanent,** *a.* இயல்பாயுள்ள; உள்ளார்ந்த. *n.* immanence.

**Immaterial,** *a.* பொருள் தன்மை யில்லாத; புறக்கணிக்கத்தக்க.

**Immature,** *a.* முதிராத. *n.* immaturity.

**Immeasurable,** *a.* அளவிடற் கரிய. *n.* immeasurability.

**Immediate,** *a.* அடுத்துள்ள; உடனடியான; நெருங்கியுள்ள; இடையீடில்லாத. *adv.* immediately. *n.* immediate-ness.

**Immemorial,** *a.* நினைவுக்கு எட்டாத பழங்காலத்தைச் சேர்ந்த; மிகப் பழைய; தொல்பழமை யான.

**Immense,** *a.* மிகப் பெரிய. *n.* immensity.

**Immerse,** *v.* அமிழ்த்து. *n.* immersion.

**Immigrate,** *v.* (migrate) குடி நுழை; வந்தேறு; குடிபுகு; வந்து குடியேறு. (x emigrate). *n. pers.* immigrant. *n.* immigration, குடி நுழைவு; குடி வரவு; வந்தேற்றம்; குடிபுகல்.

**Imminent,** *a.* உடனடியாக நிகழப் போகிற; அச்சுறுத்துகிற. *n.* imminence.

**Immobile,** *a.* அசைக்க முடியாத *n.* immobility. *v.* immobilize.

**Immoderate,** *a.* மட்டுமிஞ்சிய; அளவு மீறிச் செல்கிற.

**Immodest,** *a.* நாணமில்லாத; அடக்கமற்ற; துடுக்கான. *n.* immodesty.

**Immolate,** *v.* பலியாகக் கொடு; பலியிடு. *n.* immolation. *n. pers.* immolator.

**Immoral,** *a.* நெறியற்ற; கொடிய; பாவமான; ஒழுக்கமற்ற. *n.* immorality, *comb. n.* immoral traffic, பரத்தைமைத்தொழில்; பெண் விலைத்தொழில்.

**Immortal,** *a.* இறத்தலில்லாத; தெய்விகமான; என்றும் புகழ் பெற்றுள்ள. *n.* கடவுள்; தேவதை. *n.* imortality. *v.* immortalize.

**Immovable,** *a.* அசைக்க முடியாத; நிலையான. *n.* immovability.

**Immunity,** *n.* விலக்கு; விடுபாடு. *a.* immune. *v.* immunize.

**Immutable,** *a.* நிலையான; மாற்ற முடியாத. *n.* immutability.

**Imp,** *n.* குறளி.

**I'mpact,** *n.* தாங்குதல்; மோதுதல்.

**Impa'ct.** *v.* நெருக்கு; இறுக்கிப் பிணை.

**Impair,** *v.* வலுக்குறை; பழுதாகச் செய். *n.* impairment.

**Impale,** *v.* கழுவிலேற்று. *n.* impalement.

**Impalpable,** *a.* தொட்டுணர முடியாத; மிக மெல்லிய; மனத்தால் உணரமுடியாத. *n.* impalpability.

**Impanel,** *v.* [*see* empanel]

**Impart,** *v.* பங்கு கொடு; (கூறு) கொடு; தெரிவி; அறிவி; கற்பி; பலங்கொள்வி; அறிவுறுத்து; (செய்தியை) வெளியிடு. impartible, *a.* பிரிக்கக்கூடாத; பகுக்கக் கூடாத; (பண்ணை) பிரிவினை செய்யத்தகாத. *n.* impartation.

**Impartial,** *a.* நடுநிலையான. *adv.* impartially. *n.* impartiality.

**Impassable,** *a.* கடக்க முடியாத. *n.* impassability, impassableness.

**Impasse,** *n.* நெருக்கடி நிலை; இக்கட்டு.

**Impassible,** *a.* உணர்ச்சியற்ற; மனவெழுச்சிகளற்ற.

**Impassioned,** *a.* ஆர்வமுள்ள; மனவெழுச்சிகளைத் தூண்டுகிற.

**Impassive,** *a.* உணர்ச்சியற்ற; மன அமைதியான. *n.* impassiveness.

**Impaste,** *v.* பசையினுள் மூடி வை; பசையாக்கு.

**Impatient,** *a.* பொறுமையற்ற; பதற்றமான. *n.* impatience.

**Impawn,** *v.* அடகு வை; வாக்குறுதி அளி.

**Impeach,** *v.* தலைமன்றத்தில் குற்றஞ்சாட்டு; குறை கூறு. *n.* impeachment, தலைக்குற்றஞ் சாட்டு; தலைச்சாட்டு.

**Impeccable,** *a.* குற்றமில்லாத. *n.* impeccability. *a.* impeccant.

**Impecunious,** *a.* பணமில்லாத. *n.* impecuniosity. தடை; குறை.

**Impede,** *v.* தடை செய். *n.* impediment.

**Impel,** *v.* முன்னேறச் செய்; தூண்டு. *n., a.* impellent.

**Impend,** *v.* விழு நிலையிலிரு; அணுகு; தொங்கு; அண்மையில் நிகழவிரு. *a.* impending.

**Impenetrable,** *a.* நுழைய முடியாத; முட்டாளான. *n.* impenetrability.

**Impenitence,** *n.* தவறுக்கு வருந்தாமை. *a.* impenitent.

**Imperative,** *a.* அதிகாரமான; தவிர்க்க முடியாத; (இலக்கணம்) ஏவலைக் குறிக்கிற.

**Imperceptible,** *a.* புலப்படாத; மிக்க நுட்பமான. imperceptibility.

**Imperfect,** *a.* குறைபாடுள்ள; குற்றமுள்ள. *n.* imperfection.

**Imperial,** *a.* பேரரசு நிலைக்கு உரிய; மாட்சிமையுள்ள. *n.* imperialism, பேரரசாட்சி முறை; பேரரசுத் தன்மை; பேரரசுக் கோட்பாடு. *n. pers*, imperialist, *conn. see* empire.

**Imperil,** *v.* இடையூறுக்கு உட்படுத்து.

**Imperious,** *a.* ஆதிக்க மனப் பான்மையுள்ள; வீறாப்பான; அவசரமான.

**Imperishable,** *a.* அழிவில்லாத. *n.* imperishability.

**Imperium,** *n.* பேரரசு; வல்லாட்சி *imperium in imperio*, பேரரசு ஆட்சிக்குட் பேரரசாட்சி.

**Impermanent,** *a.* நிலையாமையான.

**Impermeable,** *a.* நுழையக்கூடாத. *n.* impermeability.

**Impersonal,** *a.* ஆளைக் குறிக்காத; தனிமுறைச் சார்பற்ற; பண்பு குறித்த. *adv.* impersonally.

**Impersonate,** *v.* ஒருவரைப் போல் நடி; உருவகப்படுத்து. *n.* impersonation. *n. pers.* impersonator.

**Impertinent,** *a.* துடுக்கான; முறையற்ற. *n.* impertinence.

**Imperturbable,** *a.* மன அமைதி குலையாத. *n.* imperturbability.

**Impervious,** *a.* ஊடுருவ முடியாத; (செவியில், மூளையில்) நுழையாத. *n.* imperviousness.

**Impetuous,** *v.* வேகமாகச் செல்கிற; மும்முரமாகப் பாய்கிற. *n.* impetuosity. *n.* impetuousness.

**Impetus,** *n.* தூண்டும் விசை.

**Impinge,** *v.* மோது; மேல்விழு.

**Impious,** *a.* தெய்வ பக்தியற்ற; சமயத்தை இகழ்கிற; மட்டுமதிப்பற்ற. *n.* impiety.

**Implacable,** *a.* அமைதிப்படுத்த முடியாத; ஆறாத; தீராத; தணியாத. *n.* implacability.

**Implant,** *v.* நிலைநாட்டு; மனத்தில் ஊன்றச் செய்.

**Implement,** *n.* கருவி. நிறைவேற்று; காரியம் செய்.

**Implicate,** *v.* சிக்க வை. *n.* implication.

**Implicit,** *a.* பொருள்தொக்கு நிற்கிற; முழுதும் நம்புகிற; எதிர்ப்பில்லாத.

**Implore,** *v.* வேண்டு; மன்றாடு. *adv.* imploringly.

**Imply,** *v.* (வெளிப்படையாயில்லாமல்) குறிப்பாகச் சொல். *a.* implied.

**Impolite,** *a.* வணக்க இணக்கமற்ற; முரட்டுத்தனமான *n.* impoliteness.

**Impolitic,** *a.* நயமுறையற்ற.

**Imponderable,** *a.* இலேசான.

**Import,** *v.* இறக்குமதி செய்; பொருள் கொள்; குறி. *n.* இறக்குமதி; பொருள்; குறிப்பு; மதிப்பு. *n.* importation, இறக்குமதி (செய்தல்); இறக்குமதிச் சரக்கு.

**Importance,** *n.* முக்கியத்துவம்; பெருமை. *a.* important.

**Importune,** *v.* கெஞ்சிக்கேள்; பலமுறை கேட்டுத் தொந்தரை செய். *a.* importunate. *n.* importunity.

**Impose,** *v.* (upon person) சுமத்து; ஏமாற்று; அழுத்து; மலைக்க வை; வீறுகாட்டு; அச்சுச் சட்டத்தில் முடுக்கு. *a.* imposing, வீறமைந்த; மலைக்க வைக்கிற; ஏமாற்றுகிற. *adv.* imposingly. *n. see* imposition. *n. pers. see* impositor.

**Imposition,** *n.* (impose) ஏமாற்றல்; சுமத்தல்; வரி; தண்ட எழுத்து வேலை.

**Impossible,** *a.* செய்ய முடியாத; இயலாத. *n.* impossibility.

**Impost,** *n.* வரி. சுமை.

**Imposter,** *n. pers.* ஏமாற்று கிறவன் ; வஞ்சகன். *n.* imposture, ஏமாற்றல்; மோசடி.

**Imposthume,** *n.* புண்; கட்டி; சிலந்தி.

**Impotent,** *a.* வலுவற்ற; உதவி யற்ற. *n.* impotence, impotency.

**Impound,** *v.* சிறைப்படுத்து; பட்டியில் அடை.

**Impoverish,** *v.* வறுமையாக்கு; வலுக் குறையச் செய். *n.* impoverishment.

**Impower,** *v.* முதன்மைகொடு; ஆட்சி கொடு.

**Impracticable,** *a.* காரியத்தில் செய்ய முடியாத; கடக்க முடியாத. *n.* impracticability.

**Imprecate,** *v.* பழி; பழித்துரை. *n.* imprecation. *a.* imprecatory.

**Impregnable,** *a.* முற்றுகையிட்டு வெற்றிபெற இயலாத; கைப்பற்ற முடியாத; கடக்க முடியாத; தாக்கு தலுக்கு அசையாத. *n.* impregnability. *adv.* impregnably, கருவுயிர்க்கச் செய்.

**Impregnate,** *v.* வளமாக்கு; கருவுயிர்க்கச் செய்; ஒன்றை மற்றொன்றுடன் கல. *n.* impregnation.

**Impress,** *v.* அழுத்து; பதியச் செய். *n.* முத்திரை; பதிந்த குறி. *n.* impressment.

**Impression,** *n.* முத்திரை பதிப்பு; மனத்தில் பதிகை. *a.* impression - able, எளிதில் பதிகிற.

**Impressive,** *a.* உள்ளத்தில் பதியும் சக்திவாய்ந்த; உள்ளக் கிளர்ச்சி தருகிற. *n.* impressiveness.

**Imprest,** *n. (gen. pl.)* முன் பணம்.

**Imprint,** *v.* அச்சிடு; பதி. *n.* பதிப்பு; பதிப்பாளர் குறிப்பு; (பெயர் பதிப்பித்த காலம் முதலியன.)

**Imprison,** *v.* சிறை செய்; காவலில் அடை. *n.* imprisonment.

**Improbable,** *a.* நிகழ்தற்கரிய; பொருத்தமற்ற; உண்மையா யிருக்கக்கூடாத. *n.* improbability.

**Improbity,** *n.* நாணயமற்ற தன்மை.

**Impromptu,** *a., adv.* முன்னராக ஆராயாமல் சமயத்தில் தோன்று கிறபடி. *n.* தோன்றுகிறபடி பேசுதல் அல்லது செய்தல்.

**Improper,** *a.* தகுதியற்ற; தவறான; ஒழுங்கில்லாத.

**Impropriety,** *n.* தகுதியின்மை; தவறான வழக்கம்; ஒழுங்கின்மை.

**Improve,** *v.* திருத்து; செம்மை யாக்கு; மேம்படச் செய்; முன்னேற்று. *a.* improvable. *n.* improvement, முன்னேற்றம்; திருத்தம்; மேம்பாடு; செப்பம்.

**Improvident,** *a.* நிகழப்போவதை உணராத; எதிர்காலத்தைக் கவனி யாமல் செலவழிக்கிற. *n.* improvidence.

**Improvise,** *v.* சமயத்திற் கேற்றபடி திறம்படச் செய் அல்லது பேசு. *n.* improvisation.

**Imprudent,** *a.* அமைந்துணர் வற்ற; முரட்டுத்தனமாகப் பாய்கிற. *n.* imprudence.

**Impudent,** *a.* வெட்கமில்லாத; ஆணவமான. *n.* impudence.

**Impugn** *v.* மறுத்துரை; குறைகூறித் தடங்கல் செய்.

**Impuissant,** *a.* வலிமையற்ற.

**Impulse,** *n.* தூண்டுகை; விசை; தாக்கும் வேகம்.

**Impulsive,** *a.* தூண்டும் ஆற்றல் வாய்ந்த; எளிதில் மன உணர்ச்சியை எழுப்புகிற.

**Impulsion,** *n.* தாங்கும் விசை.

**Impunity,** *n.* பணிவச்சமின்மை; திண்ணக்கம்; அடம்; திமிர்.

**Impure,** *a.* தூய்மையற்ற; துப்புர வற்ற; கற்பில்லாத. *n.* impurity.

**Imputable,** *a.* (impute) சுமத்தக் கூடிய; சாட்டக்கூடிய.

**Impute,** *v.* சாட்டு; குற்றம் சுமத்து; பொறுப்பாக்கு. *n.* imputation.

**In,** *prep.* இல்; உள். *adv.* உள்ளே.

**Inability,** *n.* வலிவின்மை; சோர்வு; செய்ய முடியாமை.

*in absentia, adv.* நேரில் வராமல்; ஆள் நேரடியாயிராமல்.

**Inaccessible,** *n.* அணுகமுடியாத; அடைய முடியாத. *n.* inaccessibility.

**Inaccurate,** *a.* தவறான; சரியாக இல்லாத. *n.* inaccuracy

**Inaction,** *n.* செயலின்மை. *a.* inactive, சோம்பலான. *n.* inactivity.

**Indequate,** *a.* போதாத; தேவைக்குக் குறைவான. *n.* inadequacy, பற்றாக்குறை. *n.* inadequateness.

**Inadmissible,** *a.* ஏற்கக்கூடாத; ஒத்துக்கொள்ளத்தகாத; செல்லு படியாகாத. inadmissibility.

**Inadvertent,** *a.* கவனமில்லாத. *n.* inadvertence; inadvertency.

**Inadvisable,** *a.* செய்யத்தகாத.

**Inalienable,** *a.* வேறொருவருக்கு மாற்ற முடியாத.

**Inane,** *a.* வெறுமையான; முட்டாள் தனமான. 1. *n.* inanity, அறிவில் லாமை. 2. *n.* inanition, பட்டினி; வெறுமை.

**Inanimate,** *a.* உயிரில்லாத. *n.* inanimateness.

**Inappeasable** *a.* நிறைவுபடுத்த முடியாத; அமைதிப்படுத்த முடியாத; தணிக்க முடியாத.

**Inapplicable,** *a.* பொருந்தாத. *n.* inapplicability.

**Inapposite,** *a.* ஒவ்வாத; பொருத்த மற்ற.

**Inappreciable,** *a.* மிகச் சிறிதான; மதிப்பிட முடியாத; உணர முடியாத.

**Inapprehensible,** *a.* புலன்களால் உணர முடியாத.

**Inapproachable,** *a.* நெருங்க முடியாத.

**Inappropriate,** *a.* தகுதியற்ற.

**Inapt,** *a.* தகுதியற்ற; பொருந்தாத; கற்பதில் மந்தமான. *n.* inaptitude,

**Inarticulate,** *a.* நன்கு தெளிவற்ற; இணைப்பில்லாத. *n.* inarticulate -ness.

**Inartistic,** *a.* கலைத் திறமை யில்லாத.

**Inasmuch(as),** *rel. adv.* (அது) காரணமாக; ஆதலால்.

**Inattention,** *n.* கவனக்குறை. *a.* inattentive.

**Inaudible,** *a.* செவிப்புலனாகாத. *n.* inaudibility.

**Inaugurate,** *v.* தொடக்கம். செய்; திறப்புவிழாவாற்று. *a.* inaugural, தொடக்கத்திற்குரிய. *n.* inauguration, தொடக்க விழா; தொடக்கம்.

**Inauspisious,** *a.* கெடுதலான; மங்களமல்லாத.

**Inborn,** *a.* உடன் பிறந்த; இயல்பான; உள்ளார்ந்த.

**Inbred,** *a.* இயல்பான.

**Inbreeding,** *n.* உட்குழு மண முறை.

**Incalculable,** *a.* எண்ணிறந்த; வரையறுக்க முடியாத.

**in camera,** அடக்கத்தில்; மறைவில்.

**Incandescent,** *a.* வெண்சுடர் வீசி எரிகிற. *n.* incandescence.

**Incantation,** *n.* முணுமுணுப்பு; ஓதுதல்.

**Incapable,** *a.* திறமையில்லாத; 'திராணி'யற்ற. *n.* incapability,

**Incapacitate,** *v.* தகுதியற்றதாகச் செய். *n.* incapacity

**Incarcerate,** *v.* சிறைப்படுத்து. *n.* incarceration.

**Incarnate,** *v.* திருப்பிறவியெடு; திருஉருக்கொள். *a.* உடலெடுத்த; (பண்பு) உருக்கொண்ட. *n.* incarnation.

**Incase,** *v.* [*see* encase.]

**In case,** *phr. (=if) rel. adv.* அப்படியானால்.

**Incautious,** *a.* ஆராயாது இறங்குகிற; எச்சரிக்கையற்ற.

**Incendiary,** *a.* தீ மூட்டுகிற; கலகம் செய்கிற. தீ மூட்டுகிறவன்; கலகக்காரன். *n.* incendiarism.

**Incense,** *v.* சினமூட்டு; கிளறிடு. *n.* நறும்புகை; முகப்புகழ்ச்சி.

**Incentive,** *n.* தூண்டு விசை; செயற் காரணம்.

**Inception,** *n.* தொடக்கம். *a.* inceptive, தொடங்குகிற.

**Incessant,** *a.* இடைவிடாத; தொடர்ச்சியான.

**Incest,** *n.* மண உறவு கொள்ளாத வரின் கலவி; தகாப்புணர்ச்சி; இழிபழி.

**Inch,** *n.* அங்குலம்; அடியின் பன்னிரண்டில் ஒரு பகுதி.

**Inchoate,** *a.* புனிற்றிளமையுள்ள; நன்கு முதிராத. *a.* inchoative,

**Incidence,** *n.* வரி வீதம்.

**Incident,** *n.* நிகழ்ச்சி; இடை நிகழ்ச்சி; கிளைக்கதை; சிறு செய்தி; சிறு பண்பு. *a.* நிகழக் கூடிய; சார்ந்திருக்கிற.

**Incidental,** *a.* தற்செயலாக நிகழ்கிற; முக்கியமல்லாத.

**Incipient,** *a.* தொடங்குகிற.

**Incise,** *v.* கூரிய கருவியால் வெட்டு; செதுக்கு. *n.* incision. *a.* incisive.

**Incisor,** *n.* முன் வாய்ப் பல்.

**Incite,** *v.* தூண்டு; கிளர்ச்சி செய். *n.* incitement, incitation,

**Incivility,** *n.* வணக்க இணக்க மில்லாமை; முரட்டுத்தனம்.

**Inclement,** *a.* நலத்துக்கொவ் வாத; விருப்பற்ற; கடுமையான. *n.* inclemency.

**Incline,** *v.* சாய்; சார்ந்திரு; மனம் பற்று. *n.* inclemency, சாய்வு. *n.* inclination.

**Inclined-plane,** சாய் தளம்.

**Include,** *v.* அடங்கு; உட்கொள்; பகுதியாக அமை. *n.* inclusion, *a.* inclusive.

**Incognito,** (சுருக்கம்: incog.) *a. adv.* எவரும் அறியாமல். *n.* மாற்றுருவினன்.

**Incognizant,** *a.* அறியாமல்; தெரியாமல்.

**Incoherent,** *a.* பொருத்தமில்லாத; குழப்பமான. *n.* incoherence.

**Incombustible,** *a.* எரிக்க முடியாத. *n.* incombustibility.

**Income,** *n.* வருமானம்; வரவு; வருவாய்; வரும்படி; தொழில் கிடைக்கும் ஊதியம்; நிகர ஆதாயம்.

**Incomer,** *n.* புதிதாக வருபவர்; உள்ளே நுழைபவர்.

**Income-tax,** *n.* வருமானவரி.

**In-coming,** *n.* உள்ளே வருகை. *a.* உள்ளே வருகிற; ஆதாயமாகச் சேருகிற. *comb. n.* incoming returns, வரவிருக்கும் கூறுகள்; மேல்வரவினங்கள்.

**Incommensurable,** *a.* பொது அளவில்லாத.

**Incommensurate,** *a.* தகுதியற்ற; போதாத.

**Incommode,** *v.* தொந்தரவு செய். *a.* incommodious, தொந்தர வாயுள்ள; இடவசதியற்ற.

**Incommunicable,** *a.* பிறருக்குச் சொல்ல முடியாத.

**Incommunicative,** *a.* பேச்சு விருப்பமில்லாத; பழக விரும்பாத. *n.* incommunicativeness.

**Incommutable,** *a.* மாற்ற முடியாத; நிலையான. *n.* incommutability.

**Incompatible,** *a.* முரண்பட்ட இயல்பில் பொருத்தமில்லாத; மாறுபாடான. *n.* பொருந்தாதவர்; பொருந்தாப் பொருள். *n.* incompatibility.

**Incompetent,** *a.* வேலைக்குத் தகுதியற்ற உரிமையற்ற. *n.* தகுதி யற்றவன். *n.* incompetence.

**Incomplete,** *a.* முடிவுபெறாத. *n.* incompleteness.

**Incomprehensible,** *a.* புரியாத. *n.* incomprehensibility.

**Incompressible,** *a.* அழுத்திச் சுருக்க முடியாத. *n.* incompressibility.

**Inconceivable,** *a.* நினைக்க முடியாத; கருதுதற்கரிய. *n.* inconceivability.

**Inconclusive,** *a.* முடிவுக்கு வராத; தீர்மானமற்ற.

**Incondensable,** *a.* உறையச் செய்ய முடியாத.

**Incongruous,** *a.* இசையாத. *n.* incongruity. ஒவ்வாத.

**Inconsiderable,** *a.* முக்கிய மல்லாத; கவனிக்க வேண்டாத; சிறிய அளவான.

**Inconsiderate,** *a.* ஆய்ந்தமை வில்லாத; பிறருணர்ச்சி கருதாத. *n.* inconsiderateness.

**Inconsistent,** *a.* முரண்பாடான; ஒவ்வாத. *n.* inconsistency.

**Inconsolable,** *a.* துயர்மிகுந்த; ஆற்றவொண்ணாத.

**Inconsonant,** *a.* இசையாத; பொருத்தமற்ற.

**Inconspicuous,** *a.* தெளிவாகப் புலப்படாத; மிகச்சிறிய.

**Inconstant,** *a.* நிலையற்ற; உலை வுடைய; அடிக்கடி மாறுகிற *n.* inconstancy.

**Incontrovertible,** *a* மறுக்க முடியாத; மிகத்தெளிவான.

**Inconvenience,** *n.* வசதிக் குறைவு; தொந்தரை. *v.* தொந்தரவு செய். *a.* inconvenient.

**Inconvertible,** *a.* மாற்றிக் கொள்ள முடியாத. *n.* inconvertibility.

**Inconvincible,** *a.* உணர்த்த முடியாத; ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியாத.

**Incoordination,** *n.* பொருத்த மின்மை; இணக்கமின்மை.

**Incorporate,** *v.* ஒன்றாகச் சேர்; சங்கமாக அமை. *a.* ஒரே சங்கமாக அமைந்த. *n.* incorporation. *a.* incorporated.

**Incorporeal,** *a* உடலற்ற; உடல் சார்பில்லாத.

**Incorrect,** *a.* தவறான; சரியல்லாத. incorrectness.

**Incorrigible,** *a.* திருத்த முடியாத; சீர்படுத்த முடியாதபடி கேடான. *n. pl.* incorrigibles, திருத்த முடியாதவை. *n. abs.* incorrigi--bility, திருந்த முடியா நிலை.

**Incorruptible,** *a.* கெடாத; நடுநிலையில் நிற்கிற. *n.* incorruptibility.

**Increase,** *v.* பெருகச் செய்; பெருகு. *n.* பெருகுதல்; மிகுதிப்பாடு; வளர்ச்சி. *n.* [*see* increment.]

**Incredible,** *n.* நம்ப முடியாத; உண்மையெனக் கருத முடியாத படி விசித்திரமான. *n.* incredibility.

**Incredulous,** *a.* நம்பிக்கையற்ற; (ஆள், பொருள்) ஐயுறவான. *n.* incredulity.

**Increment,** *n.* (increase) மிகைப்பாடு; கூடுதல்; உயர்வுப் படி; படிப்படியுயர்வு; உயர்வு வீதம்.

**Incriminate,** *v.* குற்றம் சாட்டு; உடந்தையாக்கு. *a.* incriminatory.

**Incrustation,** *n.* மேலோடு; பொருக்கு.

**Incubate,** *v.* (முட்டையை அடைகா. *n.* incubation. *n. ag.* incubator, அடை காக்கும் கருவி.

**Incubus,** *n*, (*pl.* incubuses, incubi) நச்சுக் கனவு; மனக் கிலி.

**Inculcate,** *v.* கம்பி; மனத்திற் பதியவை. *n.* inculcation.

**Inculpate,** *v.* குற்றஞ்சாட்டு; குற்றத்தை எடுத்துக் காட்டு.

**Incumbent,** *a.* சார்ந்திருக்கிற; கடமையாயுள்ள; சுமத்தப் பட்டுள்ள. *n.* பணிவகிக்கிறவர்; பொறுப்பானவர்; உடைமை யாளர்; ஆள்; பேர் வழி. *n.* incumbency, பணியிடம் *comb. n.* acting incumbent, பகர ஆள்.

**Incur,** *v.* (தன் மேல்) வருவித்துக் கொள்.

**Incurable,** *a.* குணப்படுத்த முடியாத. *n.* தீரா நோயுள்ளவன்.

**Incursion,** *n.* எதிரி நாட்டினுட் புகுதல். *a.* incursive.

**Indebted,** *a.* கடன் பட்டுள்ள. *n.* idebtedness.

**Indecent,** *a.* நாணமில்லாத; நடை நயமற்ற. *n.* indecency.

**Indecision,** *n.* உறுதியின்மை; ஐயம். *a.* indecisive. *n.* indecisiveness.

**Indeclinable,** *a. n.* (இலக்கணம்) உருவம் மாறுபடாத; சிதையாத; (சொல்).

**Indecorous,** *a.* நயமுறையற்ற. *n.* indecorum.

**Indeed,** *adv.* உண்மையாக.

**Indefatigable,** *a.* (மனச்) சோர் வில்லாத; தளராத; விடா முயற்சி யுடைய. *n.* indefatigability.

**Indefeasible,** *a.* தவிர்க்க முடியாத. *v.* indefeasibility.

**Indefensible,** *a.* காக்க முடியாத.

**Indefinable,** *a.* தெளிவாகக் கூற முடியாத.

**Indefinite,** *a.* எல்லையற்ற; அறுதியிட முடியாத; (இலக். article) பொதுச் சுட்டு (a, an) *n.* indefiniteness, வரையறை யில்லாநிலை; உறுதிக்கேடு; தெளிவின்மை.

**Indelible,** *a.* அழிக்க முடியாத; நிலையான. *n.* indelibility.

**Indelicate,** *a.* நுண்ணயமற்ற; உணர்ச்சிநயமற்ற; கொச்சையான. *n.* idelicacy.

**Indemnify,** *v.* இழப்பீடுசெய்; உத்திரவாதம் செய். *n.* indemnification. *n.* indemnity, இழப்பீடு.

**Indent,** *v.* ஓரத்தில் பற்களாக வெட்டு; முத்திரையிடு; பத்தி தொடங்கு; சரக்கு வாங்க இணக்கம் அளி; தேவை குறிப்பிடு; தேவை கோரு. *n.* ஓரவெட்டு; சரக்கு வாங்க இணக்கம்; தேவைக் குறிப்பு; தேவைக் கோரிக்கை. *n.* indentation. *a.* indented.

**Indenture,** *n.* , *v.* எழுத்து உடன் படிக்கை (செய்). *comb, n.* indentured labour, ஒப்பந்தத் தொழிலாளர் முறை.

**Independence, independency,** *n.* சார்பின்மை; தற்சார்வு; தன்னுரிமை; தன்னாட்சி; தன் னாண்மை; (சுதந்திரம்) *a.*

independent, கட்டற்ற; தற்சார்புடைய; சார்பற்ற; தன்னிலையுடைய.

**Indescribable,** *a.* விவரித்துக் கூறமுடியாத.

**Indestructible,** *a.* அழிக்க முடியாத. *n.* indestructibility.

**Indeterminable,** *a.* உறுதிசெய்ய முடியாத. *a.* indeterminate. *n.* indetermination, indeterminateness.

**Indeterminism,** *n.* மனிதனின் எல்லாச் செயல்களும் காரிய நோக்கத்துடனேயே செய்யப் படுவன அல்லவென்ற கொள்கை. *n.* indeterminist.

**Index,** *n.* (*pl.* indice) ஆள் காட்டி விரல்; சுட்டு; அட்டவணை; (கணக்கியல்) பெருக்க அடுக்குக் குறி; பொருளடக்க அகரவரிசை. *v.* பொருளடக்க அகர வரிசை அமை. *n. ag.* indexer.

**Indian,** *a.* இந்தியாவுக்குரிய. *v.* indianize. இந்தியன்.

**Indian ink,** *n.* ஓவியம் வரைவதில் பயன்படும் கரிய மை வகை.

**Indiarubber,** *n.* துடைப்பம்; தொய்வகம்.

**Indicate,** *v.* சுட்டிக் காட்டு; தெரிவி. *n.* indication.

**Indicative,** *a.* சுட்டிக்காட்டுகிற; (இலக்கணம்) தெரிநிலை (வினை).

**Indicator,** *n.* காட்டுபவன்; (பொறியியல்) அளவு தெரிவிக்கும் கருவி.

**Indict,** *v.* குற்றம் சாட்டு. *a.* indictable. *n.* indictment, குற்றச்சாட்டு.

**Indifferent,** *a.* கருத்தில்லாத; மட்டான; இரண்டுங் கெட்டானான; நல்லதல்லாத. *n.* indifference.

**Indigene,** *n.* நாட்டுத் தனியுரிமையாளர்.

**Indigenous,** *a.* தன் நாட்டிலுண்டான; உள்நாட்டுக்குரிய.

**Indigent,** *a.* வறுமையான; ஏழ்மையான. *n.* indigence.

**Indigestable,** *a.* செரிக்க முடியாத; வகைப்படுத்த முடியாத. *n.* indigestion.

**Indignant,** *a.* சினங்கொள்கிற; சீற்றங்கொள்கிற. *n.* indignation.

**Indignity,** *n.* அவமதிப்பு; இகழ்ச்சி.

**Indigo,** *n., a.* அவுரி; நீலம்; கருநீலச் சாயம்; நீலமான.

**Indirect,** *a.* மறைமுகமான; நேரல்லாத; சுற்றிவளைக்கிற; நேர்மைக் குணமற்ற. *n.* indirectness.

**Indiscernible,** *a.* தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாத.

**Indiscipline,** *n.* ஒழுங்கின்மை.

**Indiscreet,** *a.* ஆராயாமல் காரியம் செய்கிற; உணர்வில்லாத. *n.* indiscretion, மடச்செயல்; ஆராயாத செயல்.

**Indiscrete,** *a.* பல பகுதிகளாகப் பிரிந்திராத.

**Indiscriminate,** *a.* பகுத்தறி வில்லாத; தராதரமறியாத; குழப்ப மான; கண்டபடியான; தாறுமாறான. *n.* indiscrimination. *a.* indiscriminative.

**Indispensable,** *a.* இன்றியமை யாத; அவசியமான. *n.* இன்றியமை யாத ஆள் அல்லது பொருள்.

**Indispose,** *v.* விருப்பமில்லாமல் செய்; உதவாமற் செய். நல மில்லாமல் செய்; நோய்ப்படுத்து. *a.* indisposed, விருப்பமில்லாத; நோயுள்ள. *n.* indisposition,

**Indisputable,** *a.* மறுக்க முடியாத.

**Indissoluble,** *a.* பிரிக்க முடியாத; பகுக்க முடியாத; என்றும் இணைந்துள்ள. *n.* indissolubility.

**Indistinct,** *a.* தெளிவில்லாத. *n.* indistinctness, *a.* indistinctive.

**Indistinguishable,** *a.* வேறாகப் பிரித்தறிய முடியாத.

**Indite,** *v.* எழுது; சொற்களை நினைவுறுத்து.

**Individual,** *a.* ஒற்றையான; தனித் தனியான. *n.* தனியன், தனியள்; தனியான்; தனி ஒன்று; ஒருவர்; தனி ஒருவர்; ஒருவன்; ஒருத்தி. *n.* individuality, தனித்தன்மை. *n.* individualism, தனிப்பண்பு; தனியுரிமைக் கோட்பாடு. *n. pers.* individualist, *v.* individualize, தனித் தன்மையளி; தனிப்படக் குறிப்பிடு. *n.* individualization.

**Individuate,** *v.* வேறுபாடு தெரியச் செய். *n.* individuation.

**Indivisible,** *a., n.* பகுக்க முடியாத (ஒன்று). *n.* indivisibility.

**Indocile,** *a.* கீழ்ப்படிதலில்லாத. *n.* indocility, பிடிவாதம்.

**Indolent,** *a.* சோம்பலான; வேலையில் விருப்பமில்லாத. *n.* indolence.

**Indomitable,** *a.* வெல்ல முடியாத.

**Indoor,** *a.* (x outdoor) (விளை யாட்டுகள்) இல்லக; மனையக.

**Indoors,** *adv.* வீட்டினுள்ளே.

**Indorse,** *v.* [*see* endorse.]

**Indubitable,** *a.* ஐயமில்லாத. *adv.* indubitably.

**Induce,** *v.* தூண்டு; செய்வி. *n.* inducement.

**Induct,** *v.* நுழையச் செய்; பதவியிலமர்த்து. *n.* induction.

**Indulge,** *v.* சலுகை நுகர்; சலுகை கொடு. *n.* indulgence, இடங் கொடுத்தல்; இன்ப மிகுதி நுகர்தல்; தீவினை மன்னிப்பு. *a.* indulgent.

**Indurate,** *v.* மனம் உணர்ச்சியறச் செய்; தடிப்பாகு.

**Industry,** *v.* விடாமுயற்சி; உழைப்பு; தொழில்; தொழில் துறை; பெருந்தொழில்; கைத் தொழில்; இயந்திரத்தொழில். *a.* industrial, தொழில் சார்ந்த. *a.* industrious, முயற்சியுள்ள; செயலூக்கமுள்ள; சுறுசுறுப்பான.

**Inebriate,** *v.* குடித்து வெறியூட்டு. *a.* குடிவெறியுள்ள. *n.* inebriation, inebriety. குடியன்.

**Ineffable,** *a.* விவரிக்க முடியாத; சொல்ல முடியாத.

**Ineffaceable,** *a.* அழித்துத் துடைக்க முடியாத.

**Ineffective, ineffectual,** *a.* பயனற்ற; வீணான.

**Inefficacious,** *a.* திறனற்ற; தகுதியற்ற. *n.* inefficacy.

**Inefficient,** *a.* (வேலைக்குத் தகுதியற்ற; திறமையற்ற. *n.* inefficiency.

**Inelastic,** *a.* மீள் திறமற்ற; தொய்வற்ற. *n.* inelasticity.

**Inelegant,** *a.* அழகற்ற; நேர்த்தியில்லாத. *n.* inelegance.

**Ineligible,** *a.* தகுதியற்ற; விரும்பத் தகாத. *n.* ineligibility, தகுதிக்கேடு.

**Ineloquent,** *a.* பேச்சுத் திறனில்லாத.

**Inept,** *a.* பொருத்தமில்லாத; மடத்தனமான. *n.* ineptitude.

**Inequality,** *n.* சரிஒப்பின்மை; சமமின்மை.

**Inequitable,** *a.* நேர்மையற்ற; முறையற்ற *n.* inequity, நேர்மையின்மை; முறைகேடு.

**Inert,** *n.* மந்தமான; உயிர்ப்பற்ற; அசைவில்லாத. *n.* inertia, இயங்காத் தன்மை; தடையாற்றல். *n.* inertness, உயிரற்ற தன்மை; கிளர்ச்சியின்மை.

**Inessential,** *a.* அவசியமின்மை.

**Inestimable,** *a.* விலை மதிக்க முடியாத; மிக உயர்ந்த.

**Inevitable,** *a.* தவிர்க்க முடியாத; இன்றியமையாத; தீராத. *n.* inevitablility.

**Inexact,** *a.* சரியில்லாத; திருத்தமாயில்லாத. *n.* inexactitude.

**Inexcusable,** *a.* மன்னிக்க முடியாத. *n.* inexcusability.

**Inexhaustible,** *a.* வற்றாத; அழிவில்லாத. *n.* inexhaustibility.

**Inexorable,** *a.* மனமிரங்காத; மாற்ற முடியாத. *n.* inexorability.

**Inexpedient,** *a.* தகுதியற்ற; பொருத்தமல்லாத. *n.* inexpedience, inexpediency.

**Inexpensive,** *a.* மலிவான; செலவில்லாத.

**Inexperience,** *n.* அனுபவமின்மை; அறியாமை. *a.* inexperienced.

**Inexpert,** *a.* கைத்திறமையில்லாத; தேர்வில்லாத.

**Inexplicable,** *a.* கூறமுடியாத; விளக்க முடியாத.

**Inexplicit,** *a.* தெளிவாயிராத.

**Inexpressible,** *a.* விவரிக்க முடியாத; சொல்லா முடியாத.

**Inexpressive,** *a.* பொருளில்லாத; பொருள் குறிக்காத. *n.* inexpressiveness.

***in extenso,*** *phr. adv.* விவரமாக; விளக்கமாக.

**Inextinguishable,** *a.* அணைக்க முடியாத; தணிக்க முடியாத.

**Inextricable,** *a.* சிக்கறுக்க முடியாத; விடுவிக்க முடியாத.

**Infallible,** *a.* தவறுசெய்யாத; தவறில்லாத. *n.* தவறு செய்யாதவர். *n.* infallibility.

**Infamous,** *a.* இகழுக்குரிய; இழிவான. *n.* infamy.

**Infancy,** *n.* குழந்தைப் பருவம்; இளமை.

**Infant,** *n.* குழந்தைப் பருவம்; இளமை. *a. see* infantile.

**Infanta,** *n.* (ஸ்பெயின் அல்லது போர்ச்சுகல் நாட்டு) இளவரசி.

**Infanticide,** *n.* குழந்தைக் கொலை செய்தவன்; குழந்தைக் கொலை.

**Infantile,** *a.* குழந்தைக்குரிய; குழந்தைப் பருவத்திலுள்ள.

**Infantry,** *n.* காலாட்படை.

**Infatuate,** *v.* அறிவை மயக்கு; முட்டாளாக்கு. *n.* infatuation.

**Infect,** *v.* நோய் ஒட்டவை; கெடுதலைப் புகட்டு. *n.* infection, நோய் தொற்றல்; பெருவாரி நோய். *a.* infectious, infective.

**Infer,** *v.* உய்த்துணர்; ஊகித்துத் தீர்மானி. *n.* inference. *a.* inferential.

**Inferior,** *a.* கீழ்த்தரமான; *n. pers.* கீழ்த்தரமானவர்; ஏவலாள். *n. abs.* inferiority, கீழ்த்தரம்; கீழான தன்மை (inferiority complex, அடிமை மனப்பான்மை)

**Infernal,** *a.* நரகத்திற்குரிய; கொடிய.

**Inferno,** *n.* நரகம்; அளறு.

**Infertile,** *a.* பயன் கொடாத; மலடான. *n.* infertility.

**Infest,** *v.* தாக்கு; துன்பப்படுத்து. *n.* infestation.

**Infidel,** *n.* நம்பாதவர்; புறச் சமயி. *n.* infidelity, நம்பிக்கைக்கேடு.

**Infiltrate,** *v.* நுண் துளைகளின் வழியே கசிந்து செல்; புகுந்து பரவு. *n.* infiltration.

**Infinite,** *a.* முடிவற்ற; எல்லை யில்லாத; (இலக்.) முற்றாத (வினை). *a. n.* infinitive, (இலக்.) நிகழ்கால வினையெச்சம்; செயவெனெச்சம். *n. abs.* infinitude, எல்லையற்ற வெளி. infinity, எல்லையற்ற எண்.

**Infinitesimal,** *a.* மிகச் சிறிய.

**Infirm,** *a.* நொய்ய; உறுதியற்ற. *n.* infirmity.

**Infirmary,** *n.* மருத்துவமனை.

**Infix,** *v.* உறுதியாக இணை; பதிய வை.

**Inflame,** *v.* தீ மூட்டு; சினமூட்டு. *a.* inflammable, எளிதில் தீப்பற்றக் கூடிய.

**Inflammatory,** *a.* வீங்கச் செய்கிற. *n.* inflammation. வீக்கம்.

**Inflate,** *v.* பருக்கச் செய்; ஊதச் செய். *n.* inflation, உப்புதல்; பணப் பெருக்கம். *n. ag. impers.* inflator, ஊதச் செய்யும் கருவி; ஊதும் பகுதி.

**Inflect,** *v.* திரும்பச் செய்; (இலக்கணம்) சொல் மாறுபடச் செய்; (உருக்கணக்கியல்) குவிவைக் குழிவாக்கு. *n.* iflection, inflexion.

**Inflexible,** *a.* வளைக்க முடியாத; உறுதியான. *n.* inflexibility.

**Inflict,** *v.* சுமத்து; (தண்டனை) அளி. *n.* infliction.

**Inflorescence,** *n.* பூக்கள் மலர்தல்; ஒரு செடியின் மலர்த் தொகுதி.

**Inflow,** *n.* உள் நோக்கிய ஓட்டம்.

**Influence,** *n.* செல்வாக்கு. *v.* வசப்படுத்து; இயக்கு; தூண்டு. *a.* influential.

**Influent,** *a.* உள்நோக்கி ஓடுகிற. *n.* உள் நோக்கிய ஓட்டம்; கிளையாறு.

**Influenza,** *n.* சளிக்காய்ச்சல்.

**Influx,** *n.* உள்நோக்கிப் பெருகுதல்; நுழைதல்.

**Inform,** *v.* 1. (against person) தகவல் கூறு; தெரிவி; அறிவி. 2. (person of thing) குற்றஞ்சாட்டு. (1) *n.* information, செய்தி. *a.* informative, informatory. *n. pers.* informer, informant. (2) *n. pers.* informer.

**Informal,** *a,* முறைப்படியில்லாத; முறை நிரம்பாதமைந்த; தனிப் பட்ட முறையான. *n.* informality.

**Informed,** *a.* அறிவுரை பெற்ற; தகவல்பெற்ற; அறிவுள்ள.

*infra, adv.* கீழே; பின்னால்.

*infra dig., pred. a.* ஒருவருடைய மதிப்புக்கு குறைவான; தகாத.

**Infra-red,** *a.* (கதிர்ப்பட்டையில்) இப்பால்-சிவப்பு நிறமான.

**Infrequency,** *n.* அடிக்கடி நிகழாமை. *n.* infrequent.

**Infringe,** *v.* மீறிநட; ஒப்பந்தத்தை மீறு. *n.* infringement.

**Infuriate,** *v.* சினமூட்டு; வெறியூட்டு.

**Infuse,** *v.* புகட்டு; கலக்கவிடு; கல. *n. see* infusion.

**Infusible,** *a.* (fuse) உருக்க முடியாத.

**Infusion,** *n.* கலப்பு; குருதியில் செலுத்தல். *a.* infusive.

**Ingenious,** *a.* அறிவு அல்லது திறமை மிகுந்த. *n.* ingeniousness, ingenuity.

**Ingenue,** (ஆஃங்ஃழானோ). *n.* சூதுவாதற்ற சிறுமி.

**Ingenuity,** *n. see* ingenious.

**Ingenuous,** *a.* கபடமில்லாத; ஒளிவு மறைவு இல்லாத. *n.* ingenuousness.

**Ingle,** *n.* கணப்பு நெருப்பு.

**Inglorious,** *a.* புகழ் இல்லாத; இழிவான.

**Ingot,** *n.* வார்ப்பாகச் செய்த உலோகக் கட்டி; பாளம்.

**Ingrain,** *v.* [*see* engrain.]

**Ingraft,** *v. see* engraft.

**Ingrate,** *n.* நன்றியில்லாதவர்.

**Ingratiate,** *v.* நல்லெண்ணத்தைப் பெறு; உகந்தவராகப் பண்ணு.

**Ingratitude,** *n.* நன்றியறி வின்மை; செய்ந்நன்றி மறத்தல்.

**Ingredient,** *n.* கலவையிற் சேர்ந்துள்ள பொருள்.

**Ingress,** *n.* உட்புகும் வழி.

**Ingrowing,** *a.* உள்நோக்கி வளர்கிற.

**Ingulf,** *v. see* engulf.

**Inhabit,** *v.* தங்கி வாழ்; குடியிரு. *a.* inhabitable, *see* inhabitant, குடியிருப்பவர். *n.* inhabitation, குடியிருப்பு; குடியிருப்பிடம்; குடியமர்வு.

**Inhalant,** *n.* (inhale) முகந்து பார்க்கும் பொருள்.

**Inhale,** *v.* மூச்சு வாங்கு; மூச்சு உட்கொள்; உள் உயிர்ப்புச் செய். *n.* inhalation, *see* inhalant.

**Inharmonious,** *a.* இசைந் தொலிக்காத பொருத்தமில்லாத; முரணிசையான.

**Inhere,** *v.* உள்ளார்ந்த பண்பா யிரு; இயற்கையாயமைந்திரு. *n.* inherence. *a.* inherent.

**Inherit,** *v.* மரபுரிமையாகப் பெறு. *n. pers.* inheritor. *n.* inheritance, *see* heritage. *a.* inheritable.

**Inhesion,** *n.* இயற்கையாயமைந் துள்ள தன்மை.

**Inhibit,** *v.* தடை செய்; கட்டுப் படுத்து. *n.* inhibition. *a.* inhibitory.

**Inhospitable,** *a.* விருந்து வரவேற் காத; அன்பில்லாத; தரிசான.

**Inhuman,** *a.* மனிதத்தன்மையற்ற; கொடிய. *n.* inhumanity.

**Inhume,** *v.* புதை. *n.* inhumation, *n. ag.* inhumer.

**Inimical,** *a.* பகையான; நட்பில்லாத.

**Inimitable,** *a.* ஒப்பில்லாத; ஒன் றைப்போல் செய்ய முடியாத. *n.* inimitability.

**Iniquity,** *n.* கொடுமை; கொடிய செயல். *a.* iniquitous.

**Initial,** *a.* முதலாவதான; தொடக்கத் திலுள்ள. *n.* முதலெழுத்து; பெயர் முதலெழுத்து. *(pl.)* பெயரின் முதலெழுத்துகள். *v.* பெயரின் முதலெழுத்துகளை எழுது.

**Initiate,** *v.* தொடங்கி வை; சங்கத்தில் சேர்; சமயமுறையுட் சேர். *n.* initiation. *n. pers.* initiator.

**Initiative,** *n.* தொடக்கம்; முதற்படி. *a.* initiatory.

**Inject,** *v.* உட்செலுத்து; புகுத்து; ஊசிபோடு. *n.* injection. *n. ag.* injector.

**Injudicious,** *a.* நன்மதிப்பற்ற; நடுநிலை திறம்பிய; அறிவுக் குறைவான.

**Injunction,** *n.* தடை யுத்தரவு; கட்டளை.

**Injure,** *v.* தீங்கு செய். *a.* injurious. *n.* injury.

**Injustice,** *n.* முறையற்ற செயல்; முறைகேடு.

**Ink,** *n.* மை. *v.* மையினால் எழுது. *a.* inky.

**Inkling,** *n.* அறிகுறி; சைகை.

**Inkstand, inkwell,** *n.* மைக்கூடு.

**Inland,** *n.* உள் நாடு. *a.* உள்நாட்டுக்குரிய.

**Inlay,** *v.* பதிய வை; உள்ளீடாக்கு; இழை. *a.* inlaid. *n.* கல் முதலியன பதித்துச் செய்த (வேலை).

**Inlet,** *n.* நுழைவாயில்; சிறுகடற் கழி. உட்கடா.

**Inmate,** *n.* உடன் உறைபவர்; குடியிருப்பவர்.

**Inmost, innermost,** *a.* [inner] உள்ளார்ந்த; தொலை உள்ளான.

**Inn,** *n.* வழித்தங்கல்; சத்திரம்; வழிமனை, வழியகம்; தங்கல் மனை; சாவடி; விடுதி. *n. pers.* innkeeper, விடுதியாளர்.

**Innate,** *a.* இயல்பாயமைந்துள்ள; உடன் பிறந்துள்ள.

**Inner,** *a. comp.* (*sup.* innermost, inmost) உட்புறமான, உள்ளான; உள்.

**Innervate,** *v.* ஊக்கு; நரம்புகளைத் தூண்டு. (x enervate). *n.* innervation.

**Innings,** *n.* (அமெரிக்க வழக்கு. *ag.* inning) ஒரு ஆட்ட முறை; ஒரு ஆட்டம். (மரப் பந்தாட் டத்தில்) இருபுற இணைகெலிப்பு; ஆட்ட முடிவு.

**Innocent,** *a.* குற்றமில்லாத; தீங்கில்லாத. *n.* innocence. குற்றமற்றவர்.

**Innocuous,** *a.* (x nocuous), சூதற்ற; வஞ்சமிமலாத; தீது விளைவியாத. *n.* innocuity.

**Innovate,** *v.* புதிதாக அமை. *n. pers.* innovator. *n.* innovation.

**Innoxious,** *a.* தீங்கற்ற.

**Innuendo,** *n.* மறைமுகமான குறிப்பு; நேராகச் செய்யும் குறிப்பு; குத்திப் பேசுதல்.

**Innumerable,** *a.* எண்ணிறந்த; மிகப் பல.

**Innumerous,** *a.* கணக்கில்லாத.

**Inobservance,** *n.* கவனமின்மை; விழிப்பின்மை. *a.* inobservant.

**Inoculate,** *v.* மருந்தை ஊசி மூலமாகக் குத்து; கருத்தைப் புகுத்து. *n.* inoculation. *n. ag.* inoculator, inoculant.

**Inoffensive,** *a.* தீமையில்லாத. *n.* inoffensiveness.

**Inoperative,** *a.* செயலற்ற; பயனற்ற.

**Inopportune,** *a.* சமயப் பொருத்தமற்ற.

**Inordinate,** *a.* மட்டுமிஞ்சிய.

**Inorganic,** *a.* உறுப்பில்லாத; உயிர்ப்பொருளால் ஆக்கப் படாத.

**Inornate,** *a.* வேலைப்பாடில்லாத.

**In-patient,** *n.* மருத்துவ விடுதியில் தங்கும் நோயாளி.

**Inpour,** *v.* சொரி; பொழி.

**Inquest,** *n.* பொது ஆய்வு; முறை ஆய்வு; மெய் ஆராய்வு; தேர்வாய்வு; பொது விசாரணை. *comb. n.* coroner's inquest, பிண ஆய்வு; கள ஆய்வு; துப்பாய்வு.

**Inquire,** *v.* விவரம் ஆராய்; தகவல் வினவு; உசாவு. *n.* inquiry, தகவல்; ஆய்வு; உசாவல்; ஆராய்ச்சி; வழக்காராய்வு.

**Inquisition,** *n.* (கடுமை வாய்ந்த இடைக்கால) உயர் வழக்கு உசாவல் (மன்றம்). *n. pers.* inquisitor. *a.* inquisitorial, கடுமுறைமை வாய்ந்த.

**Inquisitive,** *a.* அறிவார்வ மிக்க; நுண்ணுணர்வுமிக்க; பிறர் காரியங்களில் தலையிடுகிற. *n.* inquisitiveness.

**Inroad,** *n.* படையெடுத்தல்.

**Inrush,** *n.* உள்நோக்கிய (பாய்வு).

**Insalubrious,** *a.* உடல் நலத்துக்குதவாத. *n.* insalubrity.

**Insane,** *a* கிறுக்கான; பித்துப் பிடித்த; வெறியார்ந்த. *n.* insanity.

**Insanitary,** *a.* உடல் நலத்துக் குதவாத. *n.* insanitation.

**Insatiate,** *a.* மனநிறைவடையாத.

**Inscribe,** *v.* எழுத்துகளைப் பொறி; முகவரி யெழுது; ஒன்றினுள் ஒன்றாக எழுது. *v.* inscription. *a.* inscriptive, உள்ளீடாய் எழுதப் பெற்ற

**Inscrutable,** *a.* புரியாத; அறிய முடியாத.

**Insect,** *n.* பூச்சி புழுவினம்.

**Insecticide,** *n.* பூச்சி கொல்லி.

**Insectivore,** *n.* பூச்சிகளைத் தின் னும் உயிர். *a.* inscetivorous.

**Insectology,** *n.* பூச்சி நூல்.

**Insecure,** *a.* நம்பகமற்ற; காப்பில்லாத. *n.* insecurity.

**Inseminate,** *v.* (விதைகளைத்) தூவு.

**Insensate,** *a.* உணர்ச்சியற்ற.

**Insensible,** *a.* நினைவிழந்த. *n.* insensibility. *a.* insensitive, உணர்ச்சியற்ற.

**Insentient,** *a.* உயிரற்ற; உணர்வற்ற.

**Inseparable,** *a.* பிரிக்க முடியாத; சேர்ந்தேயுள்ள. *n.* *(pl.)* inseparables, பிரியா நிலை யுடைய இணைகள்.

**Insert,** *v.* ஊடாக நுழை; இடைப் புகுத்து; உள்ளிடு; நுழைத்து வை; இடையீடு செய். *n.* insertion.

**Inset,** *n.* படத்தினுள் படம்; உட்படம்; ஒட்டவைத்த பக்கம். *v.* உட்பதி; உள்ளீடு செய்; உள்வரை.

**Inside,** *n.* உட்பக்கம். *n.* உள்ளே யிருக்கிற; உள்ளான; மறைவான. *pers. adv.* உள்ளே.

**Insidious,** *a.* வஞ்சகமான; பொல்லாத; கபடமாகத் தீங்கு செய்கிற. *n.* insidiousness.

**Insight,** *n.* உள்நோக்கு; நுண் நோக்கு; நுண்புலம்; நுண்அறிவு.

**Insignia,** *n.* *(pl.)* விருதுகள்; சின்னங்கள்.

**Insignificant,** *a.* சிறுமையான; குறிக்க வேண்டியதல்லாத; மிகச் சிறு திறமான. *n.* insignificance.

**Insincere,** *a.* வஞ்சகமான; வாய்மையற்ற; உள்ளொன்று புறமொன்றான. *n.* insincerity.

**Insinuate,** *v.* நயமாகப் புகுத்து; மறைமுகமாகக் குறிப்பிடு; புதைபடப்பேசு; சாட்டிக்கூறு; சூழ்ச்சித் திறம்பட நட. *a.* insinuative. *n. ag.* insinuator.

**Insipid,** *a.* சுவையற்ற; உவர்ப்பான; உணர்ச்சி தூண்டாத. *n.* insipidity.

**Insipience,** *n.* அறிவின்மை. *a.* insipient.

**Insist,** *v.* வற்புறுத்து; உறுதியாக நில். *a.* insistent. *n.* insistence.

*in situ, (phr.) adv.* உரிய இடத்தில்.

**Insobriety,** *n.* குடி வெறி; மதி மயக்கம்.

**Insociable,** *a.* பழகும் இயல் பில்லாத; பாசநேசமற்ற. *n.* insociability.

**Insolent,** *a.* துடுக்கான; அவமதிக்கிற. *n.* insolence.

**Insoluble,** *a.* கரைக்க முடியாத; விடை கண்டறிய முடியாத. *n.* isolubility.

**Insolvent,** *a.* கடனைச் செலுத்த முடியாத; வகையற்ற; வக்கற்ற நொடித்த. *n.* கடன் தீர்க்க முடியாதவர். *n. abs.* insolvency, ஏலாமை; தொழில் நொடிப்பு; பொருள் முறிவு.

**Insomnia,** *n.* தூக்கமின்மை (நோய்).

**Insomuch,** *adv. (. . . . .as)* (இந்த) அளவுக்கு.

**Inspect,** *v.* கண்காணி; மேற்பார்வை செய். *n.* inspection, *n. pers.* inspector, மேற்பார்வை யாளர்; பார்வையாளர்; கண்காணிப் பாளர்.

**Inspire,** *v.* உள்மூச்சு வாங்கு; உயிர்ப்பூட்டு; ஊக்கு; தெய்விக ஊக்கம் அளி. *a.* inspired, தெய்விக அருள்பெற்ற; ஊக்கு விக்கப் பெற்ற. *n.* inspiration.

**Inspirit,** *v.* உயிர்ப்பி; எழுச்சி யூட்டு.

**Instability,** *n.* நிலையில்லாமை; விழும் நிலை.

**Install,** *v.* நிறுவு; நாட்டு; பதவி யிலமர்த்து. *n.* installation, பணியமர்த்து; பணிசூட்டு; நிறுவுதல்; நிறுவனம்; புத்தமர்விப்பு.

**Instalment,** *n.* தவணை (ப்பணம்).

**Instance,** *n.* எடுத்துக்காட்டு. *v.* சான்றாக எடுத்துக் கூறு.

**Instant,** *a.* உடனடியான; நாளது; நிகழும் மாதத்து. *n.* கணநேரம். *adv.* instanter, instantly.

**Instantaneous,** *a.* உடனடியான; கணத்து நிகழ்கிற. *adv.* instantaneously, உடனே; அதே கணத்தில்.

*in statu quo, phr., adv.* முன் போன்ற.

**Instead,** *adv.* பகரம்; (ஒன்றன்) இடமாக; ஈடாக.

**Instigate,** *v.* (தீமை செய்யத்) தூண்டு. *n.* instigation. *n. ag.* instigator.

**Instill,** *v.* சிறிது சிறிதாகப் புகட்டு; அறுவுறுத்து. *n.* instillation.

**Instinct,** *n.* இயற்கையறிவு; இயல்புணர்ச்சி. *a.* instinctive.

**Institute,** *n.* நிலவர ஏற்பாடு; கட்டளை; திட்டம்; பட்டயம்; நிலையம்; கழகம்; சட்டம்; நிறுவனம். *v.* ஏற்படுத்து; திட்டப் படுத்து; நிறுவு; தொடங்கிவை; ஏற்பாடு செய். *n. see* institution.

**Institution,** *n.* (institute) நிலையம்; நிறுவனம்; நிறுவுதல். *a.* institutional.

**Instruct,** *v.* அறிவுறுத்து; கற்பி; கட்டளையிடு. *n.* instruction. *a.* instructive. *n. ag.* instructor. *(fem.)* instructress.

**Instrument,** *n.* கருவி; துணைப் பொருள்; கைச் சார்த்து; பத்திரம்; இசைக் கருவி. *a.* instrumental, துணையாளான; கருவியான. 2. கருவி சார்ந்த. *n. abs.* instrumentality, துணைமை; துணைப்பொருள். *n. pers.* instrumentalist, இசைக்கருவி வலவன்.

**Insubordinate,** *a., n.* கீழ்ப் படியாத(வர்). *n. abs.* insubordination.

**Insubstantial,** *a.* திடத்தன்மை யற்ற; மெல்லிய; முதன்மையற்ற.

**Insufferable,** *a.* பொறுக்க முடியாத; இறுமாப்புள்ள.

**Insufficient,** *a.* போதாத. *n.* insufficiency.

**Insular,** *a.* தீவுபோன்ற; தொடர் பற்ற; குறுகிய மனமுள்ள. *n.* insularity.

**Insulate,** *v.* பிரி; தனித்து வை; மின் சாரம் பாயாமல் காப்பிடு. *n.* insulation. *n. ag.* insulator, மின் வலித்தடை; மின் காப்பு.

**Insulin,** *n.* கணைய நீர்மம்; கணையம் சுரக்கும் பொருள்.

**Insult,** *v.* அவமதி; அவமானப் படுத்து; பழித்துரை; வசைச் சொல் கூறு. *a.* அவமதிப்பு; பழியுரை; வசை.

**Insuperable,** *a.* கடக்க முடியாத. *n.* insuperability.

**Insupportable,** *a.* பொறுக்க முடியாத; இறுமாப்புள்ள.

**Insurance,** *n. see* insure.

**Insure,** *v.* உறுதிசெய்; காப்புறுதிசெய்; காப்பீடு செய்; ஈட்டுறுதிசெய்; சாவு அல்லது இழப்புக்கு முன் காப்பீடுசெய். *n.* insurance, காப்புறுதி; ஈட்டுறுதி; காப்பீடு.

**Insurgent,** *a.* கிளர்ச்சி செய்கிற. *n.* கிளர்ச்சிக்காரன். *n.* insurgency.

**Insurmountable,** *a.* கடக்க முடியாத; வெல்லுதற்குரிய.

**Insurrrection,** *n.* ஆட்சிக் கெதிரான எழுச்சி; கிளர்ச்சி. *n. pers.* insurrectionist.

**Insusceptible,** *a.* உணர்ச்சியற்ற. *n.* insusceptibility.

**Intact,** *a.* சேதமுறாத; முழுதான.

**Intake,** *n.* (குழாயில் அல்லது கால்வாயில் நீர்) புகுமிடம்; கொள் அளவு; கொள்பொருள்.

**Intangible,** *a.* தொட்டறிய முடியாத; புரிய முடியாத; புதிரான *n.* intangibility.

**Integer,** *n.* முழுமை; முழு எண். *a.* integral. *v.* integrate, முழுமையாக்கு. *n.* integration. *n. abs.* integrity, 1. நேர்மை; வாய்மை. 2. முழுமை.

**Integument,** *n.* புறத்தோல். புறப்பட்டை.

**Intellect,** *n.* அறிவு; அறிவாற்றல்; ஆய்பண்பு. *a., n.* intellectual, அறிவாற்றலுள்ள(வர்). *n. abs.* intellectuality. *v.* intellectualize.

**Intelligence,** *n.* அறிவு; அறிவுக் கூர்மை; செய்தி. *a.* intelligent, அறிவுள்ள; நுண்புலமுள்ள. *a.* intelligible, அறிவுக்குப் புலப் படக்கூடிய. *n.* intellifibility, *n. (pl.)* intelligentsia, கற்றறிந்தோர் *(comb) n.* intelligence department, செய்தியறிவிப்புத்துறை; தகவல் சேகர அரங்கம்; தகவல் அளிப்பு அரங்கம். intelligence quotient, அறிவுக்குறிய.

**Intemperate,** *a.* மட்டமைதி யற்ற; மட்டுமீறிய குடியுள்ள. *n.* intemperance.

**Intend,** *v.* கருது; செய்ய எண்ணு. *n. see* intention.

**Intense,** *a.* ஆர்வமிகுந்த; முனைப் பான; செறிவார்ந்த *v.* intensify., *n.* intensity. *a.* intensive, விடாப் பிடியான; ஒருமுக முனைப்பான.

**Intent,** *a.* ஆவலுள்ள; கவன முள்ள. *n.* கருத்து; செயல் நோக்கம்.

**Intention,** *n.* உள்நோக்கம்; எண்ணம். *a.* intentional, வேண்டுமென்று செய்த; தற்செயலல்லாத.

**Inter,** 1. *n.* (சுருக்கக் குறியீடு). *see* intermediate. *v.* நிலத்தில் புதை. (1) *n.* interment.

**Interact,** 1. *v.* ஒன்றையொன்று பாதித்தல் செய்; செயல் எதிர் செயல் உண்டுபண்ணு. 2. *a.* இடைக்காட்சி.

**Interaction,** *n.* செயல் எதிர் செயல்; விளைவெதிர் விளைவு. இருபுறமாறுபாடு.

*inter alia, phr., adv.* பிறசெய்தி களுக்கிடையில்.

**Interbreed,** *v.* இனங்களைக் கலந்து உருவாக்கு.

**Intercalate,** *v.* இடையில் கல.

**Intercede,** *v.* பரிந்து பேசு. *n.* intercession. *n. pers.* intercessor.

**Intercept,** *v.* தடு; வழியில் மறி; தலையிட்டுத் தடு; குறுக்கிடு; இடைநின்று பிரி; இடையீடாகு.

**Interchange,** *v.* ஒன்றுக்கு ஒன்றாக மாற்று; பரிமாற்றம் செய். *n.* பரிமாற்றம். *a.* inter changeable.

**Intercommunicate,** *v.* (இரண் டிடங்களிடையே) செய்தி இணைப்புச் செய்; செய்தித் தொடர்புகொள்; செய்தி பரிமாறு. *n.* intercommunication.

**Intercommunion,** *n.* நெருங்கிய உறவு.

**Intercourse,** *n.* 1. புணர்ச்சி; கல்வி. 2. செயல் தொடர்பு 3. வாணிக, (சமூகத்) தொடர்பு; கூட்டுறவு.

**Intercurrent,** *a.* இடையே இயங்குகின்ற.

**Interdependent,** *a.* ஒருவருக் கொருவர் சார்புள்ள. *n.* interdependence.

**Interdict,** *v.* விலக்கு; தடை விதி. *n.* விலக்கு; தடை. *a.* interdictory. *n.* interdiction.

**Interest,** *n.* 1. தனி நலம்; அக்கறை; கவனம்; செல்வாக்கு. 2.

கூட்டி. *v.* கவனத்தைக் கவர்; அக்கறையுண்டாகச் செய். (1) *a.* interested, அக்கறையுள்ள; ஒர்சார்பான. *a.* interesting, சுவையான; கவர்ச்சியாற்றலுள்ள. (2) *comb. n.* Compound Interest, தொடர் வட்டி; கூட்டு வட்டி Simple interest, தனிவட்டி; பொது வட்டி; நேர்வட்டி.

**Interfere,** *v.* தலையீடு; இடையில் புகு. *n.* interference, தலையீடு.

**Interim,** *n.* இடைப்பட்ட நேரம். *a.* இடைக்காலச் சார்பான.

**Interior,** *a.* உட்புறத்து. *n.* உட்புறம்.

**Interject,** *v.* இடையிற் பேசு. *n.* interjection, வியப்பிடைச் சொல்.

**Interlace,** *v.* இசைத்துப் பின்னு; இழை பின்னு.

**Interleaf,** *n.* இடைத்தாள். *v.* இடையிடையே தாள் இணை.

**Interline,** *v.* வரிகளுக்கு இடையே எழுது.

**Interlock,** *v.* ஒன்றையொன்று பிணை.

**Interlocutor,** *n.* இடையே பேசுபவர். *n.* interlocution.

**Interlope,** *v.* காரணமின்றித் தலையிடு. *n. pers.* interloper.

**Interlude,** *n.* சிறுநாடகம்; இடை நாடகம்; இடைக்காட்சி இசை.

**Intermarriage,** *n.* கலப்பு மணம். *v.* intermarry.

**Intermeddle,** *v.* பிறர் காரியத்தில் தலையிடு.

**Intermediary,** *n.* நடுவர்; இடையீட்டாளர்.

**Intermediate,** *a., n.,* 1. (சுருக்கக் குறியீடு) பல்கலைக்கழக முதல் வகுப்பு(ச்சார்ந்த); கலைமாணவர் (வகுப்பு சார்ந்த). 2. இடைப் பட்ட(து).

**Interminable,** *a.* முடிவில்லாத.

**Intermingle,** *v.* கூடிக் கல; ஒருங்கு கூடு.

**Intermit,** *v.* நிறுத்தி வை. *n.* intermission, இடை நிறுத்தம். *a.* intermittent, இடையிடையே நின்று மறுபடியும் நிகழ்கிற. *n.* intermittence.

**Intermix,** *v.* ஒன்றாகக் கல. *a.* intermixture.

**Intern,** *v.* சிறைப்படுத்து; ஒரு எல்லைக்குள் வசிக்கச் செய். *n.* internment. *n. pers.* internee, சிறைப்பட்டவர்.

**Internal,** *a.* உட்புறமான; உள்நாட்டுக்குரிய.

**International,** *a.* உலகநாடுகள் சார்ந்த; நாடுகளிடைப்பட்ட; நாடு கடந்த; நாடொடு நாடு சார்ந்த; பன் னாடு சார்ந்த; நாடுகளிடைப்பட்ட; எல்லா நாட்டுக்குமுரிய. *n. pers.* internationalist. *n. abs.* internationalism.

**Internecine,** *a.* ஒருவரை யொருவர் அழிக்கிற; உட்பகை சார்ந்த.

*inter nos, phr., adv.* நமக்குள்ளேயே.

**Interpellate,** *v.* (அரசியல் மன்றம்) இடைக் கேள்வி கேள்; இடை வினா எழுப்பு. *n.* interpellation.

**Interplay,** *n.* வினைவெதிர் விளைவுத்தொடர்பு; இடைத் தொடர்பு; தொக்குத்தொடர்பு; கலப்புத்தொடர்பு.

**Interpolate,** *v.* இடைச் செருகு. *n.* interpolation. *n. pers.* interpolator.

**Interpose,** *v.* குறுக்கிடு; தடை செய்; இடையிற் பேசு. *n.* interposition.

**Interpret,** *v.* விளக்கிப் பொருள் கூறு; மொழிபெயர்த்துக் கூறு. *n.* interpretation. *n. pers.* interpreter.

**Interregnum,** *n.* அரசனில்லாக் காலம்; இடையாட்சிக் காலம்.

**Interrogate,** *v.* வினாவு; உசாவு. *n.* interrogation, வினா; வினாக்குறி. *a.* interrogative, வினாவுகிற. *a.* interrogatory, வினாமுறையான. *n. pers.* interrogator.

**Interrupt,** *v.* தடைசெய்; குறுக்கிடு *n.* interruption.

*interse, phr., adv.* அவர்களுக்குள்ளேயே.

**Intersect,** *v.* இடையில் வெட்டு; ஊடறு; (கோடுகளைக் குறுக்கிட்டு) வெட்டு. *n.* intersection.

**Intersperse,** *v.* இடையிடையே தூவு. *n.* interspersion.

**Interstate,** *a.* இரு நாடுகளின் இடைப்பட்ட.

**Interstellar,** *a.* வான் மீன்களுக்கிடைப்பட்ட.

**Interstice,** *n.* சிறு இடைவெளி.

**Interval,** *n.* இடைவேளை; இடையீடு; இடைவெளி.

**Intervene,** *v.* குறுக்கிடு; இடையில் நிகழ்; நிகழ்; தலையிடு. *n.* intervention, குறுக்கீடு; இடையீடு; தலையீடு; இடைநிகழ்வு. *n. pers.* intervener.

**Interview,** *n.* பேட்டி. *v.* காண; சந்தித்துப் பேசு. *n. pers.* interviewer.

**Interweave,** *v.* (interwove, interwoven) இசைத்துப் பின்னு; இடையே கல; இடையே பின்னு.

**Intestate,** *a.* இறுதிப் பத்திரம் எழுதாமல் இறக்கிற. *n.* intestacy.

**Intestine,** *a.* அயலல்லாத; உள்ளான. *n.* intestines, குடல். *a.* intestinal.

**Intimate,** *a.* நெருங்கிய பழக்கமுள்ள. *n.* நெருங்கிய நண்பர். *v.* தெரியப்படுத்து; அறிவி. *n.* intimacy, நெருங்கிய பழக்கம். *n.* intimation, தெரியப்படுத்தல்.

**Intimidate,** *v.* அச்சுறுத்து. *n.* intimidation.

**Into,** *prep.* உள்ளே; உள்.

**Intolerable,** *a.* பொறுக்க முடியாத.

**Intolerant,** *a.* (கொள்கை வேறுபாடு காணப்) பொறாத. சகிப்புத் தன்மையற்ற; பொறுதியற்ற. *n.* intolerance.

*in toto, phr. adv.* முழுவதும்.

**Intoxicate,** *v.* வெறியுண்டாக்கு; வெறியூட்டு; கிளர்ச்சியூட்டு. *n.* intoxication. *a., n.* intoxicant.

**Intractable,** *a.* வசப்படுத்த முடியாத; அடங்காத. *n.* intractability.

**Intramural,** *a.* கட்டடம் அல்லது கல்லூரி எல்லைக்கு உட்புறத்தான; மதிலக; மனையக.

**Intramuscular,** *a.* தசைகளுக்கு இடைப்பட்ட.

**Intransigent,** *a.* ஒத்துவர மறுக்கிற; இணக்கமற்ற; ஏடாகோடமான. *n.* intransigence.

**Intransitive,** *a., n.* செயப்படுபொருள் குன்றா (வினை).

**Intravenous,** *a.* (ஊசி போடுதல்) குருதிக் குழாய் வழியான.

**Intench,** *v. see* entrench.

**Intrepid,** *a.,* அஞ்சாத *n.* intrepidity.

**Intricate,** *a.* சிக்கலான; புரியாத. *n.* intricacy.

**Intrigue,** *v.* சதியாலோசனை செய்; ஆவலைக் கிளப்பு. *n.* சதி; உட்கிளர்ச்சி.

**Intrinsic,** *a.* இயல்பான; உள்ளுறுப்பான; தன்னியல்பான; தற்பண்பு சார்ந்த.

**Introduce,** *v.* அறிமுகப்படுத்து; புகுத்து; புதுவது புகுத்து; புதிதாகத் தொடங்கி வை. *n.* introduction, *a.* அறிமுகப் படுத்தல். 2. முன்னுரை; முகவுரை. 3. புகுத்திடு. *a.* introductory.

**Introspection,** *n.* உள்நோக்கு; உள்முக ஆராய்ச்சி(ப்பண்பு). *a.* introspective.

**Introvert,** *v.* உட்புறமாகத் திருப்பு.

**Intrude,** *a.* அழையாது நுழை; தலையிடு. *n.* intrusion.

**Intrust,** *v.* [*see* entrust.]

**Intuition,** *n.* உள்ளுணர்வு. *a.* intuitive, உள்ளுணர்வான. *a.* intuitional, உள்ளுணர்வு சார்ந்த

**Inundate,** *v.* வழிந்தோடு; வெள்ளப் பெருக்கெடு. *n.* inundation.

**Inure,** *v.* பழக்கப்படுத்து; பழக்கத்தால் காய்த்துப் போகச் செய்; பயிற்சி வலுவூட்டு.

*in vacuo, phr, adv.* வெற்றிடத்தில்.

**Invade,** *v.* தண்டெழுந்து செல்; வல்லந்தமாக நுழை; படையெடுத்துச் செல். *n.* invasion, படையெடுப்பு. *n. pers.* invader.

**Inva'lid,** 1. *a.* முறையற்ற; பயனில்லாத; கட்டுப்படுத்தாத; நோயாளிக்குரிய. 2. *n.* in'valid, நோயாளி; ஏலமாட்டாதவர்; ஊறுண்டவர். *v.* invalidate, *n.* invalidity, invalidation.

**Invaluable,** *a.* விலை மதிக்க முடியாத; அருமதிப்புள்ள.

**Invariable** *a.* மாறாத; நிலையான.

**Invective,** *n.* திட்டு; வசை மாரி.

**Inveigh,** *v.* இடித்துப் பேசு.

**Inveigle,** *v.* வஞ்சித்துத் தவறான வழியில் செலுத்து; ஏமாற்று. *n.* inveiglement.

**Invent,** *v.* புதிதாக அமை; புதுமெய்மை கண்டுபிடி; புதுவது புனை; புனை. *n.* invention, 1. புதுப்புனைவுச் செயல்; புதுக் கண்டு பிடிப்பு. 2. புனைவு; கற்பனை. *a.* inventive. *n.* inventiveness. *n. pers.* inventer, inventor.

**Inventory,** *n.* உருப்படிகளின் பட்டியல்; தொகைப்பட்டி; பொருட்பட்டி.

**Inveracity,** *n.* பொய்.

**Inverse,** *a.* தலைகீழான. *n.* inversion, தலைகீழாகத் திருப்புதல்.

**Invert,** *v.* எதிர்மாறாகத் திருப்பு; தலைகீழாக்கு. *a.* invertible. *n. abs.* inverter.

**Invertebrate,** *a., n.* முதுகெலும்பு இல்லாத (உயிரினம்).

**Invest,** *v.* ஆடையுடுத்து; பதவி யில் அமர்த்து; முற்றுகை செய்; (ஆதாயத்திற்காக) முதல் இடு; பணம் முதல் இடு. *n.* investiture, பணிசூட்டு; பதவி யேற்பு விழா (முறை). *n.* investment, முதலீடு; பதவி யளிப்பு. *n. pers.* investor.

**Investigate,** *v.* அலசியாராய்; தேர்ந்தாராய்; ஆராய்; முழுதாராய்; துருவித் தேடு. *n.* investigation, தேர்வாராய்வு. *n. pers.* investigator.

**Inveterate,** *a.* நெடுநாளைய; நன்கு வேர் பாய்ந்துள்ள. *n.* inveteracy.

**Invidious,** *a.* மனக்கசப்பு உண்டு பண்ணக் கூடிய; நச்சுத் தன்மை யுடைய. *n.* invidiousness.

**Invigorate,** *v.* எழுச்சியூட்டு; ஊக்கமூட்டு; உயிர்ப்பி. *n.* invigoration.

**Invincible,** *a.* வெல்ல முடியாத. *n.* invincibility.

**Inviolable,** *a.* கேடுறாமல் வைத்திருக்க வேண்டிய; மீறக் கூடாத. *n.* inviolability.

**Inviolate,** *a.* கேடுறாத; சிதையாத; மீறாத.

**Invisible,** *a.* கண்ணுக்குப் புலப்படாத; மறைந்துள்ள. *n.* invisibility.

**Invite,** *v.* அழை. *n.* invitation. *a.* inviting, மனத்தைக் கவர்கிற.

**Invocation,** *n.* (invoke), வேண்டுதல்; வணக்க வழிபாடு; வேண்டுகோள்.

**Invoice,** *n.* விலைப்பட்டி. *v.* விலைப்பட்டி வரை.

**Invoke,** *v.* தொழுதுவேண்டு; வழிபட்டழை; உதவிக்கு அழை. *n. see* invocation.

**Involuntary,** *a.* தன் விருப்பார்ந்த; தானாகச் செய்கிற; தன்னியல் பான; எண்ணாது நிகழ்கிற. *n.* involuntariness.

**Involute,** *n.* சிக்கல்; சுருள். *a.* சிக்கலான; சுருண்டுள்ள. *n.* involution.

**Involve,** *v.* ஊகமாகு; உள் அடக்கமாகக் கொள்; சுருட்டி மூடு; சிக்கலாகு; சிக்கலாக்கு; சிக்கவை; உள்ளடக்கு. *n.* involvement, [*see* involute, involution.]

**Invulnerable,** *a.* ஊறுசெய்ய முடியாத. *n.* invulnerability.

**Inward,** *a.* உட்புறமாக; மனத்தி லுள்ள. *adv.* inward, inwards, inwardly. *n.* inwardness.

**Inwrought,** *a.* செதுக்குவேலை யமைந்த.

**Iodine,** *n.* 'கறையம்', மூலப் பொருள் வகை.

**Iodoform,** *n.* கறையத் தடை (வளி) மருந்து.

**Ion,** *n.* (கரைதல்) சார்ந்த மின் வலி அணு; வெளியணு.

**Iononsphere,** *n.* (வளி மண்டலங் கடந்த) மின்னணு மண்டலம்.

**Iota,** *n.* மிகச் சிறிது.

*ipso facto, phr. adv.* இது காரணமாகவே.

**Iranian,** *a., n.* ஈரான் அல்லது பாரசீக நாடு சார்ந்த.

**Irascible,** *a.* எளிதில் கோபிக்கிற; முன்கோபியான.

**Irate,** *a.* கோபமுள்ள.

**Ire,** *n.* கோபம். *a.* ireful.

**Iridescent,** *a.* வானவில்லின் நிறங்காட்டுகிற; பல நிறங்களுடன் ஒளிர்கிற; பன்னிறங் காட்டுகிற; ஒளிப்பகட்டான. *n.* iridescence.

**Iridium,** *n.* உலோக வகை 'ஒண்மம்'.

**Iris,** *n.* கண் விழியிலுள்ள சவ்வு. கருவிழிப் படலம்.

**Irish,** *a., n.* அயர்லாந்து நாட்டுக் குரிய (ஆள் மொழி).

**Irk,** *v.* தொந்தரவு செய். *a.* irksome, தொந்தரவான.

**Iron,** *n.* இரும்பு; இரும்பினால் ஆன கருவி. *(pl.)* விலங்கு. *a.* இரும்பால் ஆன. *comb. a.* iron-bound, iron clad, இரும்புத் தகடு போர்த்துள்ள; இரும்புப் பிடிப் புள்ள; விட்டுக் கொடுக்காத; நெகிழ்ச்சியற்ற. *a.* iron-hearted, வீரமான; மன உரமுடைய. *phr. n.* ironage, இரும்புக் காலம்; (நம்பிக்கையற்ற) கலியூழி.

**Irony,** *n.* வஞ்சப் புகழ்ச்சி. *a.* ironic(al).

**Irradiant,** *a.* ஒளிவீசுகிற. *n.* irradiance. *v.* irradiate, ஒளியால் நிரப்பு; ஒளி வீசு. *n.* irradiation.

**Irrational,** *a.* பகுத்தறிவுக்கு மாறான; அறிவுக்குப் பொருந் தாத; முரண்பாடான; பிழைபாடான; குழறுபடியான (x rational). *n.* irrationality, irrationalism.

**Irreclaimable,** *a.* சீர்திருத்த முடியாத; மீட்க முடியாத; பண்படுத்த முடியாத.

**Irreconcilable,** *a.* பொருத்தமற்ற; இணக்க முடியாத.

**Irrecoverable,** *a.* மீளாத; மீட்க முடியாத; மீட்டுப் பெற முடியாத; ஒழிந்து போன.

**Irredeemable,** *a.* சீர்திருத்த முடியாத; திரும்ப வாங்க முடியாத.

**Irreducible,** *a.* குறுக்க முடியாத; சிறுக்க முடியாத; சிற்றினமாக்க முடியாத; தொகைவகைப் படாத; கடைதீர்ந்த வடிவான.

**Irrefragable,** *a.* மறுக்க முடியாத; உறுதியான.

**Irrefrangible,** *a.* மீற முடியாத; (ஒளி) விலகாத.

**Irrefutable,** *a.* கண்டிக்க முடியாத; பொய்யென்று காட்ட முடியாத; மறுக்க முடியாத.

**Irregular,** *a.* ஒழுங்கற்ற; விட்டுவிட்டுச் செயலாற்றுகிற; அங்கொன்றும் இங்கொன்றுமான; உறுதியற்ற சமமல்லாத; கரடு முரடான. *n.* irregularity.

**Irrelative,** *a.* தொடர்பில்லாத; உறவில்லாத.

**Irrelevant,** *a.* தொடர்பு அற்ற; தலைப்புக்குப் பொருத்தமில்லாத. *n.* irrelevancy.

**Irreligion,** *n.* சமயப் பற்றின்மை; சமய மறுப்பு; சமயப் புறக் கணிப்பு மனப்பான்மை. *a.* irreligious.

**Irremediable,** *a.* சரிப்படுத்த முடியாத; சீர்படுத்த முடியாத.

**Irremovable,** *a.* விலக்க முடியாத.

**Irreparable,** *a.* சீர்படுத்த முடியாத; சரிப்படுத்தக் கூடாத; செப்பனிட இயலாத; பழுது பார்க்க முடியாத.

**Irreplaceable,** *a.* இடம் நிரப்ப முடியாத; பகரம் அகப்பட முடியாத.

**Irrepressible,** *a.* அடக்கி வைக்க முடியாத.

**Irreproachable,** *a.* குற்றமற்ற; நேர்மையான; குறைகூற முடியாத.

**Irresistible,** *a.* எதிர்த்து வெல்ல முடியாத; தடுக்க முடியாத.

**Irresolute,** *a.* மனஉறுதிப் பாடில்லாத; மனவுறுதியற்ற. *n.* irresoluteness, irresolution.

**Irresolvable,** *a.* பகுக்க முடியாத; விடை காண முடியாத.

**Irrespective,** *a.* (மற்றொன்று) எப்படியிருப்பினும்; எவ்வா றாயினும்.

**Irresponsible,** *a.* பொறுப்பற்ற; பொறுப்புணர்ச்சியில்லாத. *n.* பொறுப்புணர்ச்சியற்றவர். *n.* irresponsibilty.

**Irresponsive,** *a.* விடைகூறாத; கவனிப்பற்ற; எதிர் செயலற்ற; செயல் விளைவற்ற.

**Irretentive,** *a.* (x retentive) நினைவாற்றலற்ற; பதிவு நிலை யாத; தங்கவைத்துக் கொள்ளாத; (எதையும்) வாங்கி வைத்துக் கொள்ளாத.

**Irretrievable,** *a.* மீட்க முடியாத.

**Irreverence,** *n.* பற்று மதிப் பின்மை; மட்டு மதிப்பின்மை. *a.* irreverent.

**Irreversible,** *a.* முன்னுருப்பெற முடியாத; திருப்ப முடியாத; செயல் மாற்ற முடியாத.

**Irrevocable,** *a.* செயல்மாற்ற முடியாத; மீட்க முடியாத; செய்தது செய்ததான.

**Irrigate,** *v.* நீர் பாய்ச்சு; பாசன வாய்ப்பளி; பண்படுத்து. *n.* irrigation, நீர்ப்பாசனம்; பாசனம். *a.* irrigable.

**Irrisible,** *a.* நகைப்புக்குரிய.

**Irritate,** *v.* கோபமூட்டு; மாய்ச்சலுண்டுபண்ணு. எரிச்சலூட்டு; கடுப்பூட்டு. *a.* irritable, எளிதில் கோபிக்கிற. *n.* irritability. *a., n.* irritant, எரிவு தருகிற (பொருள்) *n. abs.* irritation, irritancy. *a.* irritative, எரிச்சல் பண்புடைய; உராய்கிற; புண்படுத்துகிற.

**Irruption,** *n.* (எரிமலை) எழுச்சி; திடீர் வெடிப்பு; திடீர்த்தோற்றம்; திடீர்ப் பாய்ச்சல். *a.* irruptive.

**Is,** *v. (3rd pers. sing. pr.* tense of *'to be')* இருக்கிறான் ; இருக்கிறாள்; இருக்கிறது; உண்டு.

**Iscariot,** *n.* (இயேசுவைக் காட்டிக் கொடுத்த சீடன்); காட்டிக் கொடுப்பவர்.

**Ishmaelite,** *n.* (x Israelite) அரபு இனத்தவர்.

**Island,** *n.* தீவு; நிலத்திட்டு; சூழரங்கம்; நடுநிலை அரங்கம்; நீர்சூழ் நிலம்; திட்டு; அரங்கம். islander, தீவுக்காரர். *n. see* isle.

**Isle,** *n.* (island, என்பதன் சுருக்கம்) தீவு; சிறு தீவு; சிறு திட்டு. *n. diminutive.* islet.

**Ism,** *n.* தனிப்பட்ட கொள்கை; கோட்பாடு; சமயம்.

**Isobar,** *n.* சம அழுத்தக் கோடு.

**Isolate,** *v.* தனிப்படுத்து; துண்டி. *n.* isolation. *n. abs.* isolationism, (அமெரிக்க நாடுகளின்) பிறர் தொடர்பற்ற தனித் தன்மைக் கோட்பாடு. *n. pers.* isolationist.

**Isosceles,** *a.* (முக்கோணம்) இரு பக்கங்கள் சமமான; இரு சமபக்க (*see correl.* equilateral, scalene.)

**Isotherm,** *n.* தட்ப வெப்ப சமக்கோடு.

**Isotope,** *n.* ஒரே இயைபியல் மூலப் பொருளின் அணு எடை மாறிய பிற வடிவம்; 'இயைபிறிதுரு'.

**Isralite,** *n.* (x ishmaelite) யூத இனத்தவர்.

**Issue,** *n.* 1. வெளியீடு; நூல்; ஏடு; செய்தி; இதழ். 2. கால்வழி; தோன்றல்; பிள்ளை. 3. போக்கு; வழி. 4. பயன்; விளைவு. 5. நடைமுறை ஆய்வு; (thing at issue, ஆயப்படு பொருள்). *v.* 1. வெளியீடு; அனுப்பு. 2. வெளிச்செல்; வெளிப்படு; புறப்படு. 3. வினை; பயனாகு. 4. (ஆணை) பிறப்பி. *n.* issuance. *n. pers.* issuer.

**Isthmus,** *n.* நில இடுக்கு; நில இணைப்பு.

**It,** *pron,* (எழுவாய் வேற்றுமை) அது (இரண்டாம் வேற்றுமை; மறுவேற்றுமை) அதை. etc, *see* its, itself.

**Italian,** *a., n.* இத்தாலி நாட்டுக்குரிய (ஆள், மொழி).

**Italics,** *n. (pl.)* சாய்ந்த அச்செழுத்து வகை. *n.* italicize

**Itch,** *n. (pl.)* மிகுந்த அவா; சொறி சிரங்கு. *v.* அரிப்பெடு; ஆவல் கொள். *a.* itchy.

**Item,** *adv.* (எண்ணிடைச் சொல்) 'ஏ' 'என்றாக'. *n.* செய்தி; வகை; வகைத் திறம்; இனம்; உருப்படி.

**Iterate,** *v.* திரும்பத் திரும்பச் சொல். *n.* iteration. *a.* itera. *see* reiterate.

**Itinerant,** *a.* அலைந்து திரிகிற. *n.* நாடு திரிவோர்; நாடோடி. *v.* itinerate.

**Itinerary,** *n.* பயணவிளக்கம். பயண விளக்க நூல்.

**Its,** *pron.* (it) *(poss. case; poss. pron. )* அதனுடைய(து).

**Itself,** *pron.* (it) *(reflexive)* (எழுவாய் வேற்றுமை) தானே; தானாக; அதுவே; (இரண்டாம் வேற்றுமை, மறுவேற்றுமை) அதனையே. etc.

**Ivory,** *n.* தந்தம்; யானை மருப்பு; இபம். *a.* தந்தத்தினால் ஆன; தந்தம் போன்ற; வழவழப்பான; வெண்மையான.

**Ivy,** *n.* கொடி வகை; சுவரொட்டி.

# J

**Jabber,** *v.* உளறு; பிதற்று. *n.* பிதற்றல்.

**Jacinth,** *v.* பழுப்புநிற மணிக்கல்; செவ்வந்தி கல். (பதுமராகம்).

**Jack,** *n.* பலாமரம்; பலாப்பழம்; இளமீன் ; விளையாட்டுச் சீட்டில் ஒன்று; பளுத் தாங்கும் ஆட் குறிப்பு (ஒரு) ஆண்; கருவிப் பொறி; கவசம்; கொடி; மீகாமன் (மாலுமி).

**Jackal,** *n.* நரி.

**Jackanapes,** *n.* குரங்கு; துடுக்கானவன் ; பசப்பன்.

**Jackass,** *n.* ஆண் கழுதை; முட்டாள்.

**Jackdaw,** *n.* காக்கை வகை.

**Jacket,** *n.* சிறு சட்டை; மெய்ப்பை; கச்சு; உறை; புத்தகத் தாளுறை.

**Jack-o'-lantern,** *n.* கொள்ளி வாய்ப் பேய்.

**Jack-tar,** *n.* மீகாமன் (மாலுமி).

**Jocobin,** *n.* முனைத்த அரசியல் வாதி.

**Jocobite,** *n.* (வரலாறு) (இரண்டாம் ஜேம்ஸ் கால) அரசியல் கிளர்ச்சிக் காரர்.

**Jade,** 1. *n.* களைத்த குதிரை; பயனற்றவன்; இழிந்த பெண்; களைத்த. 2. *n.* பச்சை; நீலமணிக் கல் வகை. (1) *a.* jaded.

**Jag,** 1. *n.* கூர்மை. 2. *v.* ஒழுங் கில்லாமல் வெட்டு; தாறு மாறாகக் கிழி; குத்து; பற்களைப் போல் வெட்டு. (1) *a.* jaggy, (2) *a.* jagged, *n.* jaggedness.

**Jaggery,** *n.* பனை வெல்லம்.

**Jaghir,** *n.* (இந்திய வழக்கு) ஊழிய மானியம்.

**Jaguar,** *n.* சிறுத்தை வகை.

**Jail, gaol,** *n.* சிறைச்சாலை; சிறைக்கூடம்; சிறை. *n. pers.* jailer, jailor, gaoler, சிறைக் காவலர். *comb. n.* jailbird, அடிக்கடி சிறை சென்றவன். jail-corps, சிறை காவற்படை.

**Jam,** 1. *v.* நெருங்கு; அழுத்து; தடு; நெருக்கமாக நிறைத்து வை. *n.* நெருக்கம்; நெருங்கிய கூட்டம். 2. *n.* இன்பழ ஊறல்; பழச்சத்து.

**Jamabandi,** *n.* (இந்திய வழக்கு) நிலவரித்தணிக்கை; கணக்குத் தணிக்கை; தணிக்கைக் கூட்டம்.

**Janitor,** *n.* வாயில் காப்போன். *(fem.)* janitress, janitrix.

**Janizary, Janissary,** *n.* மெய்காப்பாளர்.

**January,** *n.* ஆங்கில ஆண்டின் முதல் மாதம்.

**Janus,** *n.* (உரோமக புராணம்) இருமுகத் தெய்வம் *(comb.) a.* janus faced, இரண்டகமான.

**Japan,** 1. *n.* வண்ணநெய்; பூச்சுக் களிம்பு. *v.* பூச்சக்கொடு. 2. *n.* ஜப்பான் நாடு. (2) Japanese, *a., n.* ஜப்பான் நாட்டுக்குரிய (ஆள்மொழி).

**Jape,** *v.* ஏமாற்று வேடிக்கை செய்.

**Jar,** 1. *n.* சாடி. 2. *v.* கரகரப்பான ஒலி செய்; பொருத்தமற்றிரு; நடுக்க மேற்படுத்து. *n.* கரகரப்பான ஒலி; அதிர்ச்சி; மாறுபாடு (2) *a.* jarring, நடுக்கமுண்டுபண்ணுகிற; வெறுப் பூட்டுகிற; இசை முறிவான.

**Jargon,** *n.* பிதற்றல்; பொருளற்ற பேச்சு; புரியா மொழி. *v.* jargonize.

**Jasmine,** jessamine, *n.* மல்லிகை வகை; பிச்சி வெள்ளை.

**Jasper,** *n.* ஒருவகை மணிக்கல்; இரவைக்கல்.

**Jaundice,** *n.* காமாலை நோய். *a.* jaundiced, ஒருச் சார்பான கருத்துள்ள.

**Jaunt,** *n.* , *v.* இன்பப் பயணம் (செய்). *a.* jaunty, இன்பமான; எழுச்சியூட்டுகிற. *n.* jauntiness, *adv.* jauntily.

**Javelin,** *n.* வேல்; ஈட்டி.

**Jaw,** *n.* தாடை எலும்பு; தாடை. *(pl.)* வாய். *(comb.) n.* jaw breaker, கெட்டியான உணவு; ஒலிக்க முடியாச் சொல்.

**Jay,** *n.* (காக்கையினத்தைச் சேர்ந்த பகட்டான சிறகுகளையுடைய) பறவை வகை.

**Jazz,** *n.* கூத்து; இசை. *a.* இரைச்சலான; ஒலிமிக்க.

**Jealous,** *a.* பொறாமையுள்ள; காதலர்மீது ஐயுறுகிற; பொறுப்புத் தன்மை இல்லாத. *n.* jealousy.

**Jeer,** *v.* இகழ்ச்சி செய். *n.* இகழ்ச்சி.

**Jehad,** *n. see* jihad.

**Jehovah,** *n.* (யூத வழக்கு) கடவுள்.

**Jejune,** *a.* செழிப்பில்லாத; முதிராத; சிறுமையுடைய; சாரமற்ற.

**Jelly,** 1. *n.* பாகு இழுது. *v.* பாகு செய். 2. *n.* சல்லிக்கல்; சரளை. (1) *n.* jellyfish, இழுதுமீன். (2) baby jelly, சிறுசல்லி; பொடிச் சரளை.

**Jemmy,** *n.* சிறு கடப்பாறை.

**Jenny,** *n.* நூற்கும் பொறிக் கருவி.

**Jeopardize,** *v.* இடருள்ளாக்கு.

**Jeopardy,** *n.* இடர்; இடுக்கண்; இடையூறு.

**Jerimiad,** *n.* துயரக் கதை; புலம்பல்; இரங்கற்பா.

**Jerk,** *v.* சட்டென அசை; வெட்டித் தள்ளு; மின் வெட்டு; ஆட்டங் கொடு; குலுக்கு; வெட்டிப்

பின்னடை. *n.* குலுக்குதல்; சுண்டுதல். *a.* jerky. *n.* jerkiness.

**Jerked,** *a.* (இறைச்சி) தகடுகளாக நறுக்கி வற்றல் போடப்பட்ட.

**Jerkin,** *n.* (பழைய காலச் சட்டை வகை; குறுஞ்சட்டை.)

**Jersey,** *n.* பின்னல் சட்டை.

**Jessamine,** *n. see* jasmine.

**Jest,** *n.* கேலி; கேலிக்கு இலக்கானவர். *v.* கேலி செய். *n. pers.* jester. *n., a.* j'esting.

**Jet,** 1. *n.* நீர்த்தரை; நீர்க் குழாய்; பீற்றாங்குழல்; தாரை. *v.* பீறிடு. 2. *n.* கருமணி; திட்டிக்கல்; கருநிமிளை; கரியெண்ணெய். *a.* jetty. *(comb.) a.* jet-black.

**Jetsam,** Jettison, *n.* பளுக் குறைக்க எறியப்படும் சரக்கு. *v.* jettison, (கப்பலின்) பளுக் குறைக்க எறி.

**Jetty,** *n.* சரக்கு இறங்கும் சிறு துறை; தோணித்துறை; வள்ளக்கடவு.

**Jew,** *n.* யூதன். (*fem.* jewess). *a.* jewish. *n. abs.* jewry, யூதர் சமூகம்; யூதர்சேரி.

**Jewel,** *n.* நகை நட்டு; பூணணி மணி. *v.* அணி. *n.* pers-jeweller. *n. abs. coll.* jewellery, jewelry, நகைக்கு வை; நகைகள்; நகைத் தொழில்.

**Jezebel,** *n.* கொடியவன்; பிடாரி.

**Jib,** *n.* (கப்பலின்) முகப்புப் பாய். *v.* பாயை நகர்த்து; மன உலை வடை.

**Jibe,** [= gibe].

**Jig,** *n.* ஆடல் வகை. *v.* நடி; ஆடு. *n. pers.* jigger, நடிகன்.

**Jiggle,** *v.* அசைந்தாடு; ஊசலாடு.

**Jig-saw,** *n.* வளைந்து வளைந்து அறுக்க உதவும் வாள். *comb. n.* jigsaw puzzle, ஒழுங்கற்ற முறையில் படம் வெட்டிப் பொருத்தச் செய்யும் புதிராட்டம்.

**Jihad,** *n.* (முகம்மதிய வழக்கு) அறப்போர்.

**Jilt,** *n.* ஆசைகாட்டி ஏமாற்று கிறவள். *v.* ஆசைகாட்டி ஏமாற்று.

**Jimmy,** *n.* கன்னக் கோல்; சிறு கடப்பாரை.

**Jimp,** *a.* ஒல்லியான; நேர்த்தியான.

**Jingle,** *v.* மணி ஒலிசெய். *n.* கணகண வென்ற ஒலி.

**Jinas,** *n.* கேளிக்கை; ஆரவார விளையாட்டு.

**Jingo,** *n.* வீண் வீரம்; போலி நாட்டுப்பற்று; வீரச் சூளுரை. *n.* jingoism, வீறாப்பு; குறுகிய போலிப் பற்று.

**Jitter,** *n. (pl.)* தடுமாற்றம். *(comb). n.* jitterbug, ஆடற்சிறுவன்.

**Job,** 1. *v.* குத்து. *n.* குத்து. (2. கூலி வேலை; சிற்றூதிய வேலை. *v.* தொழில் செய்; வாடகைக்கு விடு. (2) *n.* jobber, தரகன். *n.* jobbery, சிறு தொழில் தேட்டம்; தொழில் தேட்ட ஊழல்.

**Jockey,** *n.* பந்தயக் குதிரைக் காரன்; ஏமாற்றுகிறவன். ஏமாற்று; சூது செய்.

**Jocose,** *a.* விளையாட்டான. *n.* jocosity.

**Jocular,** *a.* வேடிக்கையான. *n.* jocularity.

**Jocund,** *a.* மகிழ்ச்சியான. *n.* jocundity.

**Jodi,** *n.* (இந்திய வழக்கு) கொடைநிலத் தீர்வை.

**Jog,** *v.* முழங்கையால் இடி; தள்ளாடி நட. *n.* தள்ளல்; அசைத்தல். *n.* jog-trot, விரைந்த நடை.

**Joggle,** *v.* நின்று நின்று அசைந்து போ. *n.* அசைவு.

**John Bull,** *n.* ஆங்கிலேயன் ; (உருவகம்) இங்கிலாந்து.

**Johnny,** *n.* ஆள்; பேர் வழி.

**Join,** *v.* இணை; ஒன்று சேர்; பொருத்து; பிணை; ஒட்ட வை; (போர்) தொடங்கு; (படையில் சேர்; (பணியில்) சென்று சேர். *n. pers.* joiner, மரத் தச்சன். *n. abs.* joinery, தச்சு. *a. see* joint, *comb. n.* joining time, பணி சேருவ தற்கு அளிக்கப்படும் இடைக் காலம்; சேர்விடைக் காலம்.

**Joinder,** *n.* இணைத்தல்; சேர்க்கை.

**Joinery, joiner,** *n.* [*see* join].

**Joint,** *n.* இணைப்பு; கணு; இணையுமிடம்; (எலும்பு) மூட்டு; இறைச்சித் துண்டம். *v.* பொருத்து. *a.* கூட்டான. *adv.* jointly. *comb. n.* joint responsibility. கூட்டுப் பொறுப்பு.

**Joint-stock,** *n.* கூட்டு முதல்; (company), கூட்டுக்கழகம்.

**Jointure,** *n.* கைம்மைக் காலத்துக் கென விடப்படும் பொருள்; கைம்மை காப்புப் பொருள்.

**Joist,** *n.* பாவுக்கட்டை; விட்டம்; உத்திரம்.

**Joke,** *n.* வேடிக்கைப் பேச்சு. *v.* வேடிக்கையாகப் பேசு. *n. pers.* joker, மிகுதிப்படியான சீட்டு.

**Jolly,** *a.* மகிழ்ச்சியான; எழுச்சி யுடைய. *n.* jollity, jolliness.

**Jolt,** *v.* குலுங்க ஆடு. *n.* குலுங்குதல்.

**Jostle,** *v.* நெருக்கித் தள்ளு; கூட்டம் கூடு. *n.* நெருக்கம்.

**Jot,** *n.* புள்ளி; அணு; சிறு திறம் (care a jot, கூட்டாக்காதிரு) *v.* குறிப்பு எழுது *n.* jotting, குறிப்பு.

**Journal,** *n.* குறிப்பேடு; பத்திரிகை; (வரவு, செலவு) நாட்கணக்கு; நாளேடு *see* journalese, journalism.

**Journalese,** *n.* (journal) பத்திரிகை நடை; பத்திரிகை மொழி.

**Journalism,** *n.* பத்திரிகைத் தொழில். *n. pers.* journalist, journalisitic.

**Journey,** *n.* பயணம்; வழிப் போக்கு. *v.* பயணஞ்செய். *(comb.) n.* journeyman, தொழிலைக் கற்றுக்கொண்டே கூலிக்கு உழைப்பவன்.

**Joust,** *v.* குதிரையேற்றப் போரிடு. *n.* குதிரை வீரர்களின் ஈட்டிப் போர்.

**Jove,** *n.* உரோமர் பெருந் தெய்வம்; தேவர்கள் தந்தை. (= Jupiter).

**Jovial,** *a.* களிப்பான. *n.* joviality, jovialness.

**Jowl,** *n.* தாடை; கன்னம்.

**Joy,** *n.* மகிழ்ச்சி; மகிழ்ச்சி தருவது. *v.* மகிழ். *n.* joyous, joyful. *n.* joyousness, joyfulness.

**Joyance,** *n.* மகிழ்ச்சி; விழாக் கொண்டாட்டம்.

**Joyless,** *a.* மகிழ்ச்சியற்ற. *n.* joylessness.

**Jubilant,** *a.* களிப்பு மிகுந்த; வெற்றிப்பாடல் பாடுகிற. *n.* jubilation.

**Jubilee,** *n.* கொண்டாட்ட நாள். silver-, வெள்ளி விழா. (25ஆம் ஆண்டு) golden-, பொன் விழா (50ஆம் ஆண்டு). diamond-, மணிவிழா (60ஆம் ஆண்டு). [*see* centenary] *a.* [*see* jubilant.]

**Judaism,** *n.* யூத மதம். *a.* judaic(al).

**Judas,** *n.* கிறித்து நாதரைக் காட்டிக் கொடுத்த சீடன்; காட்டிக் கொடுப்பவன்.

**Judge,** *n.* முறைவர்; நடுவர்; தீர்ப்பாளர். *v.* தீர்ப்பளி; மதிப்பிடு; கருத்துரை. *n.* judgeship, நடுவர் பதவி. judgement, judgment, தீர்ப்பு. *(comb.) n.* judgment day, கடைசித் தீர்ப்பு நாள்; கடையூழி நாள்; ஊழ்க்கடை நாள்.

**Judicature,** *n.* முறைமன்றம்; முறைமன்றத்துறை; வழக்குத் துறை.

**Judicial,** *a.* முறைமன்றச் சார்பான; சட்டச் சார்பான. இருசார்புக்கும் பொருத்தமான; சார்பு எதிர்வு நோக்கிய; நடுநிலையான; நடு நேர்மையான.

**Judiciary,** *n.* முறைவர் குழு; முறைமன்றப் பணியாளர் தொகுதி; அறத் துறை; முறைமன்றத் துறை.

**Judicious,** *a.* நடுநிலையுணர் வுள்ள; தேர்வுணர்வுடைய; ஆய் வறிவுடைய; பகுத்துணர்வுடைய. *n.* judiciousness.

**Jug,** *n.* குடுவை; குண்டிகை; சாடி; கூசா; குவளை.

**Jugal,** *a.* கன்ன எலும்புக்குரிய.

**Jugate,** *a.* இரட்டையான; இரட்டை இலைகளையுடைய.

**Juggle,** *v.* கைமாயம் செய்; செப்பிடு வித்தை செய். *n. pers.* juggler. *n. abs.* jugglery.

**Jugular,** *a.* குரல்வளைச் சார்பான. *n.* கழுத்துக் குருதிக் குழாய். *v.* jugulate, குரல்வளை நெரித்துக் கொல்.

**Juice,** *n.* சாறு. *a.* juicy. *n.* juiciness.

*ju-ju,* *n.* தாயத்து; மந்திரத் தடை.

**Ju-jube,** *n.* பழவகை; இனிய சவ்வுப் பண்டம்.

**Ju-justu, jiu jitsu,** *n.* ஜப்பானிய) மற்போர் முறை.

**Julep,** *n.* மருந்து கலந்த இனிய குடிநீர்.

**July,** *n.* ஆங்கில ஆண்டின் ஏழாம் மாதம் (ஏறத்தாழ ஆனி 15 முதல் ஆடி 15 வரை).

**Jumble,** *v.* குழப்பு; ஒழுங்கின்றிச் சேர்த்து வை கூளம்; கும்பு; கதம்பக் கூட்டு; குழப்பம்; தாறுமாறு.

**Jumbo,** *n.* (> இலண்டன் காட்சிச் சாலை யானையின் பெயர்; மக்கள் மரபு வழக்கு; கதைமரபு வழக்கு). யானை; அருவருப்பான பேருருவம்.

**Jump,** *v.* குதி; தாண்டு. *n.* குதித்தல்; தாண்டுதல்; தாண்டும் தொலை. *a. see* jumpy. *n. ag. see* jumper.

**Jumper,** *n.* 1. வெளிச் சட்டை. 2. குதிப்பவர்.

**Jumpy,** *a.* குதிக்கிற; பதறுகிற; எளிதில் கோபிக்கிற.

**Junction,** *n.* சேருமிடம்; கூடல்; பிணைப்பு; மூட்டு; இணைப்பு; சந்திப்பு.

**Juncture,** *n.* முக்கிய வேளை; கட்டம்; அமையம்; தறுவாய்.

**June,** *a.* ஆங்கில ஆண்டின் ஆறாம் மாதம் (ஏறத்தாழ வைகாசி 15 முதல் ஆனி 15 வரை).

**Jungle,** *n.* காடு; வனம். *a.* jungly.

**Junior,** *v.* இளைய; கீழ்ப்பட்ட; சிறுதிணை சார்ந்த; சிறுதிற; குறைந்த நிலையுடைய; தணிந்த படியான. *n.* இளையவர்; தாழ்ந்தவர். (x senior) *n. abs.* juniority.

**Juniper,** *n.* (தேவதாரு இனத்தைச் சேர்ந்த) மரவகை.

**Junk,** *n.* (சீனக்) கப்பல்; பழைய கயிற்றுத் துண்டுகள்; உப்பிட்ட இறைச்சி.

**Juno,** *n.* ஜூபிடர் தெய்வத்தின் துணைவி.

**Junta,** *n.* செயற் குழுமம்.

**Junto,** *n.* மறை குழு; உட்குழு.

**Jupiter,** *n.* (உரோம புராணப்) பெருந்த தெய்வம் (= Jove)

**Jural,** *a.* சட்டம் சார்ந்த; கடமைகள்; உரிமைகள் சார்ந்த.

**Jurisdiction,** *n.* ஆட்சி எல்லை; சட்ட வரம்பு; முறைமை வரம்பு.

**Jurisprudence,** *n.* சட்ட நூல்; சட்டத்துறை; சட்ட முறைமை; சட்டவியல்.

**Jurist,** *n.* சட்ட வல்லுநர். *a.* jusristic.

**Juror,** *n.* (jury) (வழக்கில்) சான்றாள்.

**Jury,** *n.* தீர்ப்புச் சான்றாளர் (குழு). *n. pers.* juryman, சான்றாளர்; சான்று நடுவர். *also see* juror.

**Just,** 1. (*see* joust). *2. a.* நேர்மை யான. 3. *adv.* குறிப்பாக; திட்பமாக. (just now இப்பொழுதுதான்). (2) *n.* justness, *see* justice.

**Justice,** 1. *n.* நேர்மை; ஒழுங்கு முறைவர் (2) *n. abs.* justiceship, முறைவர் பணி.

**Justiciary,** *n.* முறை நடத்துபவர்.

**Justify,** *v.* எண்பி; நேர்மை என்று காட்டு; காரணம் காட்டி விளக்கு. கெட்ட பெயர் போக்கு. *a.* justifiable.*n.* justification.

**Jut,** *v.* உந்தி நில்; உந்தியிரு. துருத்து *n.* துருத்துதல்; உந்தி யிருத்தல்.

**Jute,** 1. *n.* சணல் (பயிர்) 2 (வரலாறு) ஆங்கிலோ சாக்ஸினியருள் ஒரு பிரிவினத்தார்

**Juvenile,** *a.* இளைமையான. *n.* இளைஞன். *comb. n.* juvenile offenders, இளங்குற்றவாளிகள்.

**Juxtaposition,** *n.* அடுத்தடுத் திருக்கும்படி வைத்த, அண்மை நிலை. *v.* juxtapose.

# K

**Kaiser,** *n.* (ஜெர்மன்) பேரரசர்.

**Kala-azar,** *n.* (இந்திய வழக்கு) கருப்புக் காய்ச்சல்; கருங்காய்ச்சல்.

**Kaleidoscope,** *n.* பல உருவங் காட்டும் ஒரு விளையாட்டுக் கருவி.

**Kalenda,** *n. pl. see* calends.

**Kangaroo,** *n.* (ஆஸ்திரேலிய) விலங்கு வகை; ‘பைம்மா’.

**Kaolin,** *n.* வெள்ளைக் களிமண்.

**Kapok,** *n.* இலவம் பஞ்சு.

**Karnam,** *n.* (இந்திய வழக்கு) கரணத்தார்; கணக்கர்; கணக்கு (த்துறை).

**Kayak,** *n.* (எஸ்கிமோ) தோல் படகு.

**Kazi,** *a.* (இஸ்லாமிய வழக்கு) முறைநடுவர்; சட்ட அறிஞர்; சமய அறிஞர்.

**Kedge,** *n.* சிறு நங்கூரம்.

**Keel,** *n.* கப்பலின் அடிக்கட்டை. *v.* (கப்பலைக்) கவிழ்; தலை கீழாக்கு. *(comb) v.* keelhaul, கடலில் சிறிது தொலை மிதக்க விட்டுத் தண்டி.

**Keen,** *a.* கூர்மையான; ஆர்வ முடைய. *n.* keenness.

**Keep,** *v.* (kept, kept) வைத்திரு; சேமமாக வை; பேணு; வழக்க மாகக் கைக்கொள்; நிலைத்திரு; பதனழியாதிரு. *n.* காப்புப் பொருள்; அரணின் நடுவிடம்; (கொச்சை) வைப்பாட்டி. *n. pers.* keeper, காவலாளி; காப்பகம்; பேழை; சேமமாக வைத்திருக்க உதவுவது. *n.* keeping, காவல்; பொருத்தம்; பாதுகாப்பு *(comb) n.* keepsake, நினைவுப் பொருள்.

**Keg,** *n.* சிறு மிடா; குட்டுவம்.

**Kelt,** *n.* [*see* celt].

**Kemp,** *n.* முரட்டுக் கம்பளி மயிர்.

**Ken,** *n.* கண்ணுக்கு எட்டிய தொலை; பார்வை; அறிவெல்லை. *v.* பார்; அறி.

**Kennel,** *n.* நாய்த்தொட்டி; நாய்ப் பட்டி; நாய்ப்பட்டித் தொகுதி. *v.* பட்டியில் அடை.

**Kerb, Kerbstone,** *n.* மேடையின் ஓரக்கல்.

**Kerchief,** *n.* தலைக்குட்டை; சிறு சவுக்கம்.

**Kernel,** *n.* கொட்டை; பருப்பு; உயிர்நிலைப் பகுதி.

**Kerosene,** *n.* மண்ணெண்ணெய்.

**Kersy,** *n.* முரட்டுக் கம்பளித் துணி.

**Kettle,** *n.* வெந்நீர்க்கெண்டி; கொதிகலம்.

**Kettledrum,** *n.* முரசு வகை.

**Key,** *n.* திறவுகோல்; (இசைக் கருவி, இயந்திரங்களின்) திருகாணி; உயிர்நிலையானது; உயிர் நாடி யானது; மறை திறவு; சிக்கலை

விளக்கக்கூடியது; விடைப் புத்தகம். *n.* திறவு இறுக்கிப் பிணை. *(comb) n.* key industry, உயிர்நிலைத்தொழில். *n.* key-note, அடிப்படைக் கருத்து. *n.* keyboard, (இசைக்கருவி) ஆணிப் பட்டை; இசைப் பட்டை. *n.* key-stone, மையக் கல்.

**Khaki,** *a.* (இந்திய வழக்கு) காவிமண் நிறமான. *n.* பழுப்பு நிறத் துணி.

**Khan,** *n.* (முகம்மதிய வழக்கு) வீரன்; தலைவன்; கோன்.

*kheda, keddah, n.* (இந்திய வழக்கு) யானைப் படுகுழி; யானைப் பொறி; யானைக் கூண்டு.

**Kibe,** *n.* குதிகாலில் பித்த வெடிப்பு.

**Kick,** *n.* உதை; உதைத்தல். *n.* எதிர்த்து அடி; கீழ்ப்படிய மறு.

**Kid,** *n.* ஆட்டுக்குட்டி; ஆட்டுக் குட்டியின் தோல்.

**Kidnap,** *v.* (குழந்தையைத்) திருடிச் செல்; கடத்திச் செல்.

**Kidney,** *n.* சிறுநீர்ப்பை.

**Kill,** *v.* கொல். *n.* கொலை; (வேட்டையில்) கொல்லப்பட்ட விலங்கு. *n. ag.* killer.

**Kiln,** *n.* காளவாய்; சூளை.

**Kilogram, kilogramme,** *n.* (ஃவிரஞ்சு) எடையளவு (=ஆயிரம் கிராம்).

**Kilometer,** *n.* (ஃவிரஞ்சு) நீள அளவு; (ஆயிரம் மீட்டர்).

**Kilowatt,** *n.* மின்சாரத் திறன் அலகு; (1000 வாட்டுகள்).

**Kin,** *n.* உறவு. *n. abs.* kinship, உறவு. *comb. n.* kinsfolk, உறவினர். *n. pers.* kinsman, *(fem.)* kinswoman.

**Kind,** *a.* அன்புள்ள; நல்லெண்ண முடைய. *n.* இனம்; வகை; மாதிரி. *a., adv.* kindly, (a) நல்ல. *adv.* அன்பாக; அருள் கூர்ந்து. *n. abs.* kindness.

**Kindergarten,** *n.* இளஞ் சிறுவர்களின் பள்ளிக்கூடம்.

**Kindle,** *v.* கொளுத்து; தூண்டு; எழுச்சிபெறு.

**Kindred,** *n.* உறவு; உறவினர். *a.* உறவுள்ள; ஒரே மாதிரியியல் புள்ள; தொடர்புடைய.

**Kine,** *n.* (*pl.* of cows), பசுக்கள்.

**Kinema,** *n.* [*se*e cinema.]

**Kinematic,** *a.* இயக்கம் சார்ந்த. *n.* kinematics, இயக்க நூல்.

**Kinematograph,** *n. see* [cinematograph.]

**Kinetic,** *a.* இயக்கத்துக்குரிய. (x potential) *n. (pl.)* இயக்க நூல்.

**King,** *n.* (*fem.* queen) அரசன்; சதுரங்கத்தில் ஒருகாய்; சீட்டாட் டத்தில் ஒரு சீட்டு. *n. abs. see* kingship. *n. com. see* kingdom, *a. see* kingly, royal.

**Kingdom,** *n.* அரசு; (உயிர்செடி) இனப்பிரிவு.

**Kingfisher,** *n.* மீன்கொத்திப் பறவை.

**Kingly,** *a.* அரசனுக்குரிய; வீறு வாய்ந்த. *n.* kingliness.

**King's evil,** *n.* (அரசன் தொடுவதால் குணமாகும் என்று நம்பப்பட்ட பழங்கால) நோய் வகை; சுரப்பி வீக்கம்.

**Kingship,** *n.* அரசுரிமை.

**Kink,** *n.* முறுக்கு; வளைவு. *a.* kinky, நெளிவுகளுள்ள; விசித்திரமான.

**Kiosk,** *n.* (துருக்கி, பாரசீக நாட்டுக்) கூடாரம்.

**Kirk,** *n.* (ஸ்காட்லாந்து நாட்டுக்) கோவில்.

**Kisan,** *n.* (இந்திய வழக்கு) உழவர்; வேளாளர்.

**Kismet,** *n.* (அரபு வழக்கு) ஊழ் (வலி).

**Kiss,** *v.* முத்தமிடு. *n.* முத்தம்.

**Kist,** *n.* (இந்திய வழக்கு) நிலத் தீர்வை.

**Kit,** *n.* மரத்தொட்டி; போர் வீரன்; மூட்டை; தொழிலாளியின் பெட்டி; அரைக்கால் சட்டை.

**Kitchen,** *n.* சமையலறை; அடிசிற் களம்; அடுக்களை. *n.* kitchen garden, காய்கறித்தோட்டம்.

**Kite,** *n.* 1. பருந்து. 2. காற்றாடி; பட்டம்.

**Kith,** *n.* இனத்தார்.

**Kitten,** *n.* பூனைக் குட்டி. *a.* kittenish.

**Kiwi,** *n.* (நியூசிலாந்திலுள்ள பறக்காத) கோழிவகை.

**Kleptomania,** *n.* திருட்டார்வம். a., *n.* kleptomanic, திருட்டு ஆர்வமுடைய(வர்).

**Knack,** *n.* திறமை; கைத்திறம்; நுண்திறம்.

**Knag,** *n.* மரக்கணு; முருடு. *a.* knaggy.

**Knap,** *v.* சட்டென அடி; ஒடி.

**Knapsack,** *n.* பைக்கட்டு. பை.

**Knave,** *n.* போக்கிரிப் பயல்; விளையாட்டுச் சீட்டில் ஒன்று). (J) *n. abs.* knavery. *a.* knavish.

**Knead,** *v.* பிசை; பிசைந்து அழுத்தி உருவாக்கு.

**Knee,** *n.* முழங்கால்; முழங்கால் போன்ற வளைவு.

**Knee-cap, knee-pan,** *n.* முழங்கால் சில்; முட்டு

**Kneel,** *v.* (knelt or kneeled) மண்டியிடு; முழங்கால் படியிடு; வணங்கு.

**Knell,** *n.* சாவுமணி; மணியோசை; அழிவின் அறிகுறி. *v.* சாவு மணியடி.

**Knickerbockers,** *n. (pl.)* (அகன்ற கட்டையான) கால் சட்டை. (சுருக்கம் - knickers.]

**Knife,** *n.* (*pl.* knives) கத்தி.

**Knight,** *n.* வீரன் ; வீரத்தொண்டன்; திருவீரன்; (பட்டம்) வீரப் பெருந் தகை. *n.* knighthood, வீரப் பட்டம். *a,* knightly, நன் மதிப்புடைய; பெருந்தகைக் குரிய.

**Knight-errant,** *n.* நாடோடி வீரன்; அருஞ்செயல் தேடி யலையும் வீரன்; வீரத்தொண்டன்.

**Knit,** *v.* (knit) பின்னல்வேலை செய்; இணை; (புருவத்தை) நெரி.

**Knob,** *n.* குமிழ்; கைப்பிடி; மேடு; கதவுக் குமிழ். *a.* knobby, knobbed. *n.* knobbiness.

**Knobble,** *n.* சிறு குமிழ்.

**Knock,** *v.* தட்டு; மோது. *n.* தட்டுதல்; மோதுதல். *n.* knocker, கதவு தட்ட அமைத்திருக்கும் பிடி.

**Knockabout,** *a.* முரட்டுத் தனமான.

**Knockout,** *n.* மயங்க வைக்கும் அடி.

**Knoll,** *n.* சிறுகுன்று; கிடர்; தேரி.

**Knot,** *n.* முடிச்சு; கணு; சிக்கலான செய்தி; பந்தம்; கூட்டம்; (கடல் முறை) நீட்டலளவு வகை. *v.* முடிச்சுப் போடு சிக்கலாகு. *a.* knotty.

**Know,** *v.* (knew, known) அறி; தெரிந்துகொள்; புரிந்துகொள். *a.* knowable. *n. ag.* knower, *a.* knowing. *n.* knowledge, அறிவு; அறிவுத்தொகுதி; படிப்பு; தகவல்.

**Knuckle,** *n.* விரலின் கணு; முளி. *v.* விரல் கணுவால் அடி; கீழ்ப்படி.

**Kodak,** *n.* புகைப்படக் கருவி. *v.* படம் பிடி; காட்சியைத் தெளிவாக விரி.

**Kopeck, kopek,** *n.* (ரஷிய நாட்டுச்) செப்புத் துட்டு.

**Kraal,** *n.* (தென் ஆப்பிரிக்க) சிற் றூர்.

**Kremlin,** *n.* (மாஸ்கோ நகரின்) அரண்மனை.

**Krypton,** *n.* மூலப்பொருள் வகை.

**Ku-Klux-Klan, (K. K. K.)** *n.* வெள்ளையர் இன ஆதிக்கப் பாதுகாப்புச் சங்கம்.

*kultur, n.* (ஜெர்மன் வழக்கு = culture) நாகரிகம்; பண்பாடு.

# L

**Label,** *n.* பெயர் குறிப்புச் சீட்டு; பெயர் ஒட்டுச் சீட்டு; முத்திரை. *v.* ஒட்டு; முத்திரையடி.

**Labial,** *a.* இதழ் சார்ந்த. *n.* இதழ் ஒலி (எழுத்து) [எ-டு. தமிழ்; ப், ம்; ஆங்கிலம்; p, b, m] *comb. n.* labiodental, பல்இதழ் கூட்டு ஒலி (எழுத்து) [எ-டு; தமிழ்; வ் ; ஆங்கிலம்; f, v.]

**Laboratory,** *n.* ஆய்வுக்கூடம்; அறிவியல் துறைத் தேர்வுச் சாலை.

**Laborious,** *a.* (labour) கடுவேலை யான; உழைப்பாளியான. *n.* laboriousness.

**Labour,** *n.* உழைப்பு; தொழிலாளர் துறை; தொழிலாளர் தொகுதி; பிள்ளைப் பேறு. *v.* உழை; கடுவேலை செய். *a. see* laborious. *n. pers.* labourer, கூலியாள்; தொழிலாளி. *n.* labourite, தொழிற் கட்சியைச் சேர்ந்தவர். *(comb.) n.* labour union, தொழிலாளிகள் கூட்டுறவு; தொழிற் சங்கம்.

**Laburnum,** *n.* (மஞ்சள் மலர் உடைய) பூஞ்செடி வகை.

**Labyrinth,** *n.* ஏடாகோடமான வழி; புதிர் நெறி. *a.* labyrinthine, வளைந்து வளைந்து செல்கிற.

**Lac,** 1. *n.* அரக்கு. 2. *n. see* lakh.

**Lace,** *n.* கசவு; சரிகை; நாடா. *v.* பின்னு; கசவு இழையில் வேலை செய். *n.* lacing, கசவு; பின்னல்.

**Lacerate,** *v.* புண்படுத்து; கீறு; மனவருத்தமுண்டாக்கு. *n.* laceration.

**Lachrymal,** *a.* கண்ணீர் சார்ந்த.

**Lack,** *n.* தேவை; குறைபாடு. *v.* தேவையாயிரு; குறைபடு.

**Lackadaisical,** *a.* சோர்வுற்றதாகக் காண்கிற; வருந்துவதாக நடிக்கிற.

**Lackey, lacquey,** *n.* குற்றேவலன். *v.* குற்றேவலனாயிரு.

**Lack-lustre,** *a.* ஒளிமங்கிய.

**Laconic,** *a.* மணிச் சுருக்கமான.

**Lactation,** *n.* பால் கறத்தல்; பால் சுரத்தல்; பால்கொடுத்தல். *a.* lactary. *a,* lacteal, பால் சார்ந்த. *n.* பால் குழாய்களில் ஒன்று; குடல் பாற் குழல்.

**Lactic,** *a.* பாலுக்குரிய.

**Lactometer,** *n.* பாலின் தன்மை அளக்கும் கருவி; பால்மானி.

**Lactose,** *n.* பாலில் உள்ள சர்க்கரை.

**Lacuna,** *n.* இடைவெளி; இடையீடு; சிறுதிறப்பு.

**Lacy,** *a.* சரிகை போன்ற.

**Lad, laddle, n**. (*fem.* lass), சிறுவன்; பையன்.

**Ladder,** *n.* ஏணி.

**Lade,** *v.* (கப்பலில்) பாரம் ஏற்று. *p.p.* laden [*see* load] *n.* lading, பாரம்; சரக்கு.

**Ladle,** *n.* அகப்பை. *v.* அகப்பையால் எடு.

**Lady,** *n.* உயர்குடி மங்கை; பெருமாட்டி; தலைவி; மனைவி. *n. abs.* ladyship. *a.* ladylike, உயர்குடி நங்கை போன்ற (வீறமைதியுடைய). *(comb.) n.* lady killer, மாதரை மயக்கி அழிப்பவன் ; அழகன்.

**Lag,** *n.* பின் தங்குதல்; தாமதம்; மெல்ல நடத்தல். *v.* பின் தங்கு; மெல்ல நட. *a.* lagging.

**Laggard,** *a., n.* சோம்பேறி யான(வர்). பின்னடைகிற(வர்).

**Lagoon,** *n.* உப்பங்கழி; காயல்.

**Lain,** *v.* [lie பார்க்கவும்.)

**Lair,** *n.* தூறு; குகை. *v.* குகையில் தங்கு.

**Laird,** *n.* (ஸ்காட்லாந்து வழக்கு) நிலக்கிழார்; பண்ணையாளர். *n. abs.* lairdship.

**Laissez-faire,** *n.* (லேஸிஃவேர்) அரசியல் கட்டுப்பாடற்ற வாணிகக் கோட்பாடு.

**Laity,** *n.* பொதுத்திற மக்கள் (குழு).

**Lake,** *n.* ஏரி; கண்வாய்; வானமாரிக் குளம்.

**Lakh,** *n.* [*see* lac. 2] நூறாயிரம்; இலக்கம்.

**Lallation,** *n.* ரகர லகர மயக்கம்; ரகரம் லகரமாதல்.

**Lama,** *n.* திபெத் தலைமைப் புத்தகுரு. *(comp.) n.* lamasery, அவர் மடம்.

**Lamb, lambkin.** *n.* (செம்மறி) ஆட்டுக்குட்டி; (கிறித்துவத் திருக்கூட்டத்தில்) புதிதாகச் சேர்ந்தவன்; கபடில்லாதவன்.

**Lambent,** *a.* கொழுந்து விட்டெரிகிற; தழல்கிற.

**Lame,** *a.* நொண்டியான; சரியான காரணமற்ற. *v.* நொண்டியாக்கு முடமாக்கு. *n.* lameness.

**Lament,** *n.* புலப்பம். *v.* அழு; புலம்பு. *n.* lamentation. *a.* lamentable.

**Laminate,** *v.* (உலோகத்தை) மெல்லிய தகடாக்கு; தகடுகளை அடுக்கு. *a.* தகடான. *n.* lamination.

**Lamp,** *n.* விளக்கு. *(comb.) n.* lamp-black, புகைக்கரி.

**Lampoon,** *n.* வசை; வசைப்பா; அங்கதம்.

**Lance,** *n.* ஈட்டி. *v.* ஈட்டியினாற் குத்து. *n. pers.* lancer, ஈட்டியை யுடைய குதிரைப்படை வீரன்.

**Lancer,** *n.* (அறுவை மருத்துவக்) கூர்ங்கத்தி; அறுவைச் சிறு கத்தி; சூரி.

**Land,** *n.* நிலம்; விளைநிலம்; நிலவுலகு; நாடு; நில உடைமை. *v.* (கப்பலிலிருந்து) இறங்கு; இறக்கு மதி செய்; புதிய நிலை அல்லது இடத்தில் சிக்கு; (அடி, குத்து) கொடு.

**Landed,** *a.* நில உடைமையுடைய.

**Landholder,** *n.* நிலக்கிழார்.

**Landing,** *n.* இறங்குதல்; இறங்கு துறை.

**Landlady,** *n.* நிலத்தை வாடகைக்கு விடுபவள்; சாப்பாட்டு விடுதிக்காரி.

**Landlocked,** *a.* நிலத்தால் சூழப்பட்ட.

**Landlord,** *n.* நிலத்துக்குரியவர்; சாப்பாட்டு விடுதிக்காரர்; நிலக்கிழார்.

**Landmark,** *n.* எல்லையைக் காட்டும் அடையாளம்; குறிப்பிடத் தக்க பொருள்; முனைப்பாகத் தோன்றும் பொருள்; முக்கிய நிகழ்ச்சி.

**Landowner,** *n.* நில உடைமை யாளர்.

**Land revenue,** *n.* (அரசியல்) நிலவருமானம்.

**Landscape,** *n.* இயற்கைக் காட்சி; இயற்கைக் காட்சிப் படம்.

**Landslide,** *n.* நிலச்சரிவு; எதிர்பாராத வெற்றி; எதிர்பாராத நிகழ்ச்சி.

**Land tenure,** *n.* நிலவார முறை; குடிவார முறை.

**Land ward,** *adv.* நிலத்தை நோக்கி.

**Lane,** *n.* சந்து; முடுக்கு; ஒழுங்கை; இடைவழி; இடுங்கல் வழி.

**Language,** *n.* மொழி; வாசக நடை; பேச்சு முறை; கருத்தைத் தெரிவிக்கும் முறை.

**Languid,** *a.* களைத்த; மந்தமான; எழுச்சியற்ற.

**Languish,** *v.* சோர்வடை; ஊக்கம் குறை.

**Languor,** *n.* களைப்பு; சோர்வு.

**Laniary,** *a.* கிழிக்கக் கூடிய. *n.* நாய்ப்பல்.

**Laniferous,** *a.* கம்பளியார்ந்த.

**Lank,** *a.* மெலிந்த.

**Lanky,** *a.* அருவருப்பாக நீண்டு மெலிந்த; வக்கை நாடியான. *n.* lankiness.

**Lanolin,** *n.* ஆட்டு மயிர்த் தைலம்.

**Lantana,** *n.* களைச்செடி வகை.

**Lantern,** *n.* விளக்கின் கண்ணாடிக் கூண்டு; விளக்கு.

**Lanyard,** *n.* (கப்பலின்) சிறிய பாய்க்கயிறு.

**Lap,** *n.* (சட்டையின்) தொங்கல்; மடிப்பு; மடி; துடை; சிறு அலை ஒலி; ஓட்டப் பந்தயத்தின் ஒரு சுற்று. *v.* சுற்று; மடி; திரை; நக்கிக் குடி; சிறு அலைகளைப் போல் ஒலி.

**Lap-dog,** *n.* சிறு வளர்ப்பு நாய்.

**Lapidary,** *a.* கல்வெட்டுகள் சார்ந்த. *n.* மணி இழைப்பவன்.

**Lappet,** *n.* (ஆடையின்) மடிப்பு; தொங்கல்; புறச்செவி.

**Lapse,** *n.* தவறு; நழுவுதல்; காலக்கடப்பு; தவணை கடப்பு; காலக் கழிவு. *v.* நழுவவிடு; காலங் கடந்து போ; (சொத்து) உரிமையழிந்து போ.

**Laputan,** *a., n.* (கல்லிவர் பயணம் என்னும் நூல் வழக்கு) குதிரை நாட்டு (ஆள்) கற்பனையான (ஆள், பொருள்).

**Lapwing,** *n.* ஆட்காட்டிக் குருவி.

**Larboard,** *n.* (கப்பலின்) இடப்பக்கம்.

**Larceny,** *n.* திருட்டு; களவு. *n. pers.* larcener. *a.* larcenious.

**Lard,** *n.* பன்றிக் கொழுப்பு. *v.* பன்றிக் கொழுப்பைப் பூசு.

**Larder,** *n.* உக்கிராணம்; அரங்கம்; உணவுப்பொருள் சேம அறை.

**Large,** *a.* பெரிய; அகலமான. *n.* largeness. *a.* largehearted, தாராள மனப்பான்மையுள்ள *adv.* largely, பெரும்பாலும்.

**Largess(e),** *n.* கொடைவன்மை; வள்ளன்மை; தாராளம்.

**Lark,** *n.* வானம்பாடி; மகிழ்வுக் குரியவர்; கேளிக்கை. *v.* கேளிக்கையிலீடுபடு; துள்ளி விளையாடு.

**Larrikin,** *n.* தெருச் சண்டை யிடுவோன்; வீணன்.

**Larva,** *n.* (*pl.* larvae) முட்டை யினின்றும் வெளிவந்த புழு.

**Larynx,** *n.* குரல் வளை. *a.* laryngeal. *n.* laryngitis, குரல்வளை வீக்கம்.

**Lascar,** *n.* (கப்பல்) வேலைக்காரன்.

**Lascivious,** *a.* மிகு சிற்றின்பப் பற்றுள்ள. *a.* lasciviousness.

**Lash,** *n.* கசையின் கயிறு. *v.* கசையாலடி; மோதியடி; வன் சொல் கூறு. lashing.

**Lass,** *n. [masc. see* lad*]* பெண்; சிறுமி; சிறுக்கி.

**Lassitude,** *n.* களைப்பு; தளர்ச்சி.

**Lasso,** *n.* (*pl.* lassoes) (காட்டுக் குதிரை பிடிக்கும்) கண்ணி. *v.* கண்ணியால் பிடி.

**Last,** *a., adv.* 1. கடைசியான; முந்திய; முடிவான. 2. *v.* நீடித்திரு; (நீடித்து) உழை நிலைத்திரு. (1) *adv.* lastly, கடைசியாக. (2) *a.* lasting, நீடித்திருக்கிற நிலையான.

**Latch,** *n.* தாழ்ப்பாள்; விசைப் பூட்டு. *v.* தாழ்ப்பாளிடு; பூட்டு.

**Latchet,** *n.* வார்.

**Latchkey,** *n.* (கதவை வெளிப்புற மிருந்து திறக்க உதவும்) திறவு.

**Late,** *a* தாமதமான; காலஞ் சென்ற; சிறிது காலத்திற்கு முன் நடந்த; முன் பதவியில் இருந்த. *adv.* தாமதமாய். *n.* lateness.

**Lately,** *adv.* சிறிது காலத்திற்கு முன்; சிறிது காலமாய்; அண்மையில்.

**Latent,** (x manifest) *a.* மறைந் திருக்கிற; உள்ளுறைவான; உள்ளார்ந்த; வெளியில் காணப் படாத. *n.* latency.

**Lateral,** *a.* பக்கத்திலுள்ள; பக்கத்திலிருந்து; இயங்குகிற. *n.* பக்கம்; பக்கத்திலுள்ள பொருள்.

**Laterite,** *n.* சரளைக்கல்.

**Latex,** *n.* (இரப்பர்) மரப்பால்.

**Lath,** *n.* (ஓடு பரப்பும் மோட்டு மரச் சட்டம். *v.* மோட்டு மரச் சட்டம் அமை.

**Lathe,** *n.* கடைசல் (பிடிக்கும்) பொறி.

**Lather,** *n.* நுரை. *v.* நுரை பூசு; நுரையாகு.

**Latitude,** *n.* விரிவு; அகலம்; பரந்தநோக்கம்; (நில இயல்) நில நேர் கோடு. *correl. see* longitude.

**Latitudinarian,** *n.* (சமயத் துறையில்) பரந்த நோக்க முடையவர். *n.* latitudinarianism.

**Latrine,** *n.* கழி நீர் விடுதி; கழிப்பிடம்; மறைவிடம். *comp. n.* Bore-hole latrine, குழாய் மலக்குழி; flush out latrine, பாய்நீர் மலக்குழி. *conn. see* septic tank.

**Latter,** *n.* இரண்டாவதான; பின் சொல்லப்பட்ட; பிந்திய.

**Latterly,** *a.* குறித்த கால முடிவில்; வாழ்நாள் முடிவில்; பிற் காலத்தில்.

**Lattermost,** *a.* கடைசியான.

**Lattice,** *n.* பின்னல் தட்டி; கிராதி; பின்னல் சட்டம்; *v.* பின்னல் தட்டி செய். *n.* latticework, பின்னல் வேலை.

**Laud,** *n.* புகழ்ச்சி; புகழ். *a.* laudatory, laudative. *n.* laudation. *a.* laudable, புகழத்தக்க.

**Laudanum,** *n.* அபினி.

**Laugh,** *v.* சிரி; நகை. *n.* சிரிப்பு. *a.* laughable, சிரிக்கத் தகுந்த. *adv.* laughingly. *n.* laughter, *(comb.) n.* laughing-gas, வளிவகை; ‘வெடி வகை.’

**Launch,** *v.* தூக்கியெறி; கடலில் தள்ளு; வாணிகத்தில் இறங்கு. *n.* கப்பல் கடலில் இறங்குதல்; தோணி; இயந்திரப் படகு.

**Launder,** *v.* ஆடைகளை வெளு; சலவை செய். *n. pers.* launderer, *(fem.)* laundress. *n.* laundry, சலவைமனை; மண்ணகம்; வெளுப்பகம்.

**Laureate,** *a.* வெற்றி மாலை சூட்டப்பட்ட. *n.* அரசவைக்கவி. *n. abs.* laureateship.

**Laurel,** *n.* புன்னை. *(pl.)* வெற்றி மாலை; மிக்க புகழ்.

**Lava,** *n.* எரிமலைக் குழம்பு.

**Lavation,** *n.* குளித்தல்; கழுவுதல்.

**Lavatory,** *n.* (lave) கை கால் கழுவும் அறை; கழுநீர்க் கலம்.

**Lave,** *v.* கழுவு; நீராடு. *n.* laver, கழுவ உதவும் நீர்த்தொட்டி. *see* lavatory.

**Lavender,** *n.* நறுமணப் பூஞ்செடி வகை.

**Lavish,** *n.* மட்டு மிஞ்சிச் செலவிடுகிற. *v.* செலவு செய்; மட்டுமிஞ்சிக் கொடு. *n.* lavishness.

**Law,** *n.* சட்டம்; அமைதி; ஒழுங்கு முறை. *comb. n.* law giver, சட்ட முதல்வர். lawsuit, வழக்கு.

**Law-abiding,** *a.* சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கிற.

**Law-breaker,** *n.* சட்டத்தை மீறுபவர்.

**Lawful,** *a.* சட்டத்திற் குட்பட்ட. *n.* lawfulness.

**Lawless,** *a.* சட்டத்தை மீறிய; மனம்போனபடி நடக்கிற. *n.* lawlessness.

**Lawn,** *n.* புல்வெளி; மெல்லிய ஆடை வகை.

**Lawsuit,** *n.* [*see* law].

**Lawyer,** *n.* வழக்கறிஞர்; மன்றாடி; சட்ட அறிஞர்.

**Lax,** *a.* தளர்ச்சியான; விழிப் பில்லாத; கண்டிப்பில்லாத. *n.* laxity, laxness.

**Laxate,** *v.* தளரச் செய். *n.* laxation.

**Laxative,** *n.* குடலிளக்க மருந்து.

**Lay,** 1. *v.* (laid, laid) படுக்க வை; விழச்செய்; வை; அமைதியாக்கு; அழுத்திப் பதி. 2. *a.* தீக்கை பெறாத; பொது நிலையான; சமயச் சார்பற்ற; தேர்ச்சியற்ற; பழக்கமற்ற; புதிய; துறைநெறி சாராத. 3. பாடல்; நாட்டுப்பாடல். 4. *v.* [*see* lie]. (2) *(comb.) n.* layman, 'தீக்கை' பெறாதவன் ; பொதுநிலை மக்களில் ஒருவன். *n.* laity, பொதுநிலை மக்கள் (குழு).

**Layer,** *n.* அடுக்கு; அடை; பாளம்.

**Lay-off,** *n.* தற்காலிக வேலை நிறுத்தம்.

**Lay-out,** *n.* திட்டம்; ஏற்பாடு; அமைப்புத் திட்டம்.

**Layover,** *n.* பயணத் தங்கல்.

**Laystaff,** *n.* குப்பை மேடு

**Lazar,** *n.* ஏழை நோயாளி; குட்ட நோயாளி.

**Lazy,** *a.* சோம்பலான; மந்தமான. *n.* laziness.

**Lea,** *n.* பசும்புல் வெளி.

**Lead,** 1. *n.* (லெட்) ஈயம். *v.* ஈயத்தகடு வேய். *a.* leaden,

ஈயத்தாலான; ஈயம் போன்ற. *n.* black-lead, எழுதுகோல் கரியம்.

**Lead,** 2. *v.* (லீட்) (led, led) வழிகாட்டு; முதலில் செல்; (வாழ்க்கையை) நடத்து. *n.* முதன்மை; தலைமை; தொடக்கம்; (பத்திரிகை) செய்திச் சுருக்க குறிப்பு; முதற் குறிப்பு.

**Leader,** *n.* தலைவன்; தலையங்கம். *n.* leadership.

**Leaderette,** *n.* துணைத் தலையங்கம்.

**Leading,** *a.* முக்கியமான. *n.* தலைமை; செல்வாக்கு.

**Leading question,** *n.* விடையைக் குறிப்பாகக் காட்டும் வினா; விடைவருத்தும் வினா.

**Leading strings,** *n. (pl.)* இழுப்புக் கயிறு; ஒருவர்க்கு அடங்கிய நிலை.

**Lead-line,** *n.* குண்டு நூல்.

**Lead-off,** *n.* (ஆடல், நாடகத்) தொடக்கம். *v.* (ஆடல் நாடகம்) தொடங்கு.

**Leaf,** *n. (pl.* **leaves***)* இலை; இதழ்; புத்தகத்தில்) ஒரு தாள்; ஏடு. *v.* தாளிடு. *a.* leafy. *(neg.)* leafless.

**Leaflet,** *n.* சிறிய இலை; தளிர்; துண்டு விளம்பரம்.

**League,** 1. *n.* கட்டுப்பாடு; உடன் படிக்கை; நாட்டுக் குழு; நேசக் குழு; கூட்டுக்குழு; சங்கம்; கூட்டு; இணைவு. *v.* உடன்படிக்கை செய்; நேசக் குழுவாய்ச் சேர். 2. *n.* மூன்று கல் தொலைவு. (1) *phr. adv.* inleague, (with) இணைந்து; கூட்டாகச் சேர்ந்து; உடந்தையாய்.

**Leaguer,** *n.* உடன்படிக்கையில் சேர்ந்தவர்; நேசக் குழுவில் சேர்ந்தவர்.

**Leak,** *n.* ஒழுக்கு. *v.* (மறைவுகளை) வெளியிடு. *n.* leakage, *a.* leaky, ஒழுக்குள்ள; மறை வெளியிடுகிற.

**Leal,** *a.* வாய்மையுடைய.

**Lean,** 1. *a.* மெலிந்த; ஒடுங்கிய. 2. *v.* (leaned or leant) சாய். *n.* சார்வு; சாய்வு; பழம் பற்றுக்கோடு. (1) *n.* leanness. (2) *n.* leaning. (also *pl.*) சாய்வு; மனச்சார்பு.

**Leap,** 1. *n.* (leaped or leapt) குதி; பாய். *n.* பாய்ச்சல்; துள்ளுதல். 2. *a. see* leap year.

**Leap-frog,** *n.* குதிரை தாவுதல் விளையாட்டு.

**Leap-year,** *n.* நான் மிகை ஆண்டு.

**Learn,** *v.* (learnt or learned) அறிந்துகொள்; கற்றுக்கொள்; மனப்பாடஞ்செய்.

**Learned,** *a.* (லேணெட்) கற்றறிந்த; புலமை சான்ற.

**Learning,** *n.* கல்வி; படிப்பு.

**Lease,** *n.* குத்தகை; ஈடு. *v.* குத்தகைக்கு விடு. *n.* lessee, lease holder, குத்தகை எடுப்பவர். *n.* lessor, குத்தகை விடுபவர். *comb. n.* lease deed, ஈட்டுப் பத்திரம்; அடையோலை.

**Leasehold,** *n.* குத்தகை உரிமை.

**Leash,** *n.* வேட்டை நாய்களைக் கட்டும் தோல்வார். *v.* வாரினால்

கட்டு அல்லது பிடி. (hold in leash) கைக்குள் வைத்திரு.

**Least,** *a., adv.* மிகச் சிறிய; மிகக் குறைவாக.

**Leastwise,** *adv.* குறைந்த அளவில்; (இது) மட்டுமாவது.

**Leather,** *n.* பதனிட்ட தோல். *a.* leathern, தோலினால் ஆன. *a.* leathery, தோல் போன்ற.

**Leatheroid,** *n.* பஞ்சினால் செய்யப்பட்ட செயற்கைத்தோல்.

**Leave,** 1. *v.* (left, left) விட்டு விட்டுப் போ; விலக்கு; கைவிடு; நின்றுவிடு. 2. *n.* ஓய்வுநாள்; விடுமுறை; விடை; பிரிவு; பிரிவு விடை; பிரிவிணக்கம்; ஓய் விணக்கம். *comb. n.* earned leave, பற்றோய்வு. leave on loss of pay, சம்பள உரிமையற்ற ஓய்வு. sick leave, நோய்கால ஓய்வு. study leave, படிப்பு (காரணமான) ஓய்வு. maternity leave, பேறுகால ஓய்வு. privilege leave, உரிமை ஓய்வு. furlough leave. நீடு ஓய்வு.

**Leaved,** *a. (n.* leaf, *v.* leave*)* இலைகளுள்ள.

**Leaven,** *n.* (மாவைப் புளிக்கச் செய்யும்) நொதி. *v.* நொதி சேர்; புளிப்படை; பக்குவமாக்கு. *a., n.* leavening, பக்குவம் (ஆக்குகிற).

**Leebensraum,** *n.* (ஜெர்மன் வழக்கு). வாழ்க்கைக்குப் போதிய இடம்; ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான இடம்.

**Lecher,** *n.* கயவன் ; இழிஞன்.

**Lecture,** *n.* சொற்பொழிவு; கண்டித்துப் பேசுதல். *v.* பேருரை யாற்று.

**Lecturer,** *n.* சொற் பொழிவாளர்; விரிவுரையாளர்; கல்லூரி ஆசிரியர்.

**Ledge,** *n.* மதிலின் பிதுக்கம்; மலைப்பாறை வரி; கடலகப் பாறை வரி. *a.* ledgy.

**Ledger,** *n.* வரவு செலவுக் கணக்குப் புத்தகம்; சாரத்தின் மட்ட மரச் சட்டம்.

**Ledger paper,** *n.* திண்ணிய தாள்.

**Lee,** *n.* காற்றிற்கு மறைவான பகுதி; ஒதுக்கிடம். [*see* lees].

**Leach,** *n.* அட்டை; மருத்துவர்.

**Leek,** *n.* வெங்காய வகைச் செடியினம்.

**Leer,** *v.* ஏளனமாகக் கடைக் கண்ணால் பார். *n.* கடைக் கண் பார்வை.

**Leery,** *a.* சூழ்ச்சி மிகுந்த.

**Lees,** *n. (pl.)* வண்டல்; மண்டி.

**Leeward,** *a.* காற்று மறைவுப் பக்கமாக.

**Leeway,** *n.* கப்பலின் பக்க வாட்டில்; இடவாய்ப்பு; கால் வாய்ப்பு.

**Left,** 1. *v.* [*see* leave.] 2. *a., adv.* இடப் பக்கமான; இடப்பக்கமாக. *n.* இடப்பக்கம்; இடசாரிக் கட்சி.

**Left-handed,** *a.* இடக்கைப் பழக்கமுள்ள; மனப்பூர்வமல்லாத; எளிதில் செய்யும் திறமையுள்ள.

**Left-over,** *a., n.* மீதமுள்ள பொருள்.

**Leg,** *n.* கால்; கால் போன்ற ஆதாரம். *v.* வேகமாய் ஓடு.

**Legacy,** *n.* இறுதிப் பத்திரத்தால் கிடைக்கும் உடைமை; மரபுரிமை உடைமை; மரபுரிமை; எச்சம்; விட்டுச் செல்லும் பொருள்.

**Legal,** *a.* சட்டத்துக்குட்பட்ட; சட்டத்துக்குகந்த சட்டம் சார்ந்த; சட்டப்படியான; சட்டத் துறை சார்ந்த. *v.* legalize, சட்டப்படி யாக்கு; சட்டப்படுத்து. *n.* legality, சட்டப்படியான நேர்மை; செல்லு படி நிலை. *comb. n.* legal proceedings, சட்டபடியான நடவடிக்கைகள்; வழக்காடல்; வழக்குமன்ற நடவடிக்கைகள் legal practice, வழக்குரைஞர் தொழில். legal practitioner, வழக்குரைஞர். legal tender, *n.* செலவாணிக்குரிய பொருள்.

**Legate,** *n.* திருத்தந்தை (போப்) தூதர்; திருத்தூதர்.

**Ligatee,** *n.* இறுதிப் பத்திர மூலம் பொருள் பெற்றவர்.

**Legation,** *n.* தூது; (அரசியல்) தூதர் அலுவலகம்.

**Legend,** *n.* புராணம்; கட்டுக் கதை; (பதக்கம், காசு முதலியவற்றில் எழுதப் பெற்றுள்ள) விளக்க வாசகம். *a.* legendary.

**Legerdemain,** *n.* கண்கட்டு வித்தை; சாலம்; செப்பிடுவித்தை.

**Legible,** *a.* தெளிவான *n.* legibility.

**Legion,** *n.* படைப் பகுதி; எண்ணிறந்த கூட்டம். *a. n.* legionary, படைப் பகுதியைச் சேர்ந்த(வர்) *(comb.) n.* legion of honour, நன்மதிப்பு அணி.

**Legislate,** *v.* சட்டம் இயற்று. *n.* legislation, சட்டமியற்றல்; சட்ட ஆக்கம்; சட்ட ஆக்கத் துறை. *n. pers.* legislator, சட்டமியற்றநர். *a., n.* legislative, சட்டம் ஆக்குகிற (மன்றம்); சட்ட ஆக்க(த் துறை). *n.* legislature, (*comb. n.* legislative assembly) சட்டமன்றம்; சட்ட அவை.

**Legitimate,** *a.* 1. முறைப்படி பிறந்த. 2. சட்டப்படி அமைந் துள்ள. 3. உண்மையான; நேர்மை யான. *v.* நேர்மையுடையதாக்கு. *n.* legitimacy. *v.* legitimatize, legitimize. *n.* legitimation, legitimization.

**Legume,** leguman. *n.* இருபுற வெடி காய்; நெற்று; பருப்பு வகைக் கூலம். *a.* leguminous, பருப்பு வகை சார்ந்த,

**Leisure,** *n.* ஓய்வு. *a., adv.* leisurely, ஓய்வான; ஓய்வாய்.

**Leman,** *n.* காதலன்.

**Lemon,** *n.* எலுமிச்சை.

**Lemonade,** *n.* எலுமிச்சம் பழச்சாறு; குடி நீர் வகை.

**Lemur,** *n.* மனிதக் குரங்கு; வாலில்லாக் குரங்கு; காட்டு மனிதன்.

**Lend,** *v.* (lent) கடன் கொடு; இரவல் கொடு. *n. pers.* lender.

**Length,** *n.* நீளம்; தொலை; காலம். *adv.* lengthwise, lengthways, நீட்டுப் போக்காக. *v.* lengthen, நீட்டு; நீளமாகச் செய். *a.* lengthy, மிகவும் நீண்ட. *n.* lengthiness.

**Lenient,** *a.* உளக் கனிவுள்ள; கடுமையில்லாத; கண்டிப்புத் தளர்வுடைய. *n.* lenience, leniency.

**Lenitive,** *a., n.* நோவுக்கு நலமான; நோவு தணிக்கிற (மருந்து).

**Lenity,** *n.* இளக்காரம்; தயவு.

**Lens,** கண்ணாடி வில்லை.

**Lent,** 1. *v.* [*see* lend] 2. *n.* (கிறித்துவ) நோன்பு விழா. (2) *a.* lenten.

**Lentil,** *n.* அவரை வகைச் செடியினம்.

**Lentoid,** *a.* வில்லை போன்ற.

**Leo,** *n.* (கோள் வட்டம்) ஆவணி வீடு; அரிமா வீடு.

**Leonine,** *a.* சிங்கத்துக்குரிய; சிங்கம் போன்ற.

**Leopard,** *n.* சிறுத்தைப்புலி; வேங்கை.

**Leper,** *n.* தொழு நோயாளி; குட்ட நோயாளி; பெரு நோயாளி. *a.* leprous, தொழுநோய் பற்றிய. *n. abs.* leprosy, தொழுநோய். *comb. n.* leper asylum, தொழுநோயர் பேணகம்; ‘தொழுமர்’ காப்பகம்.

*lese-majesty, n.* அரசுப்பகை.

**Lesion,** *n.* நைவுப் புண்

**Less,** *a. adv.* [*see* little].

**Lessee,** *n.* [*see* lease].

**Lessen,** (> less > little) *v.* குறைவாக்கு; குன்றச் செய்.

**Lesser,** *a.* [*see* less, little].

**Lesson,** *n.* பாடம்; படிப்பினை; அறிவுரை.

**Lessor,** *n.* [*see* lease].

**Lest,** *conj.* (அவ்வாறு) ஆகாதபடி. (lest we forget, நாம் மறக்காதபடி).

**Let,** *v.* (let, let) வாடகைக்கு விடு; (செய்ய) விடு; இணங்கு; தடு. *n.* தடை; இடையூறு.

**Letdown,** *n.* கைவிடல். *v.* கைவிடு.

**Lethal,** *a.* கொல்லக்கூடிய.

**Lethargy,** *a.* மயக்கம்; மந்தம்; சோம்பேறித்தனம். *a.* lethargic.

**Lethe,** *n.* மறதியூட்டும் கீழுலக ஆறு; மறதி.

**Letter,** *n.* எழுத்து; கடிதம்; நேர் பொருள். *(pl.)* இலக்கியம்; கல்வி.

**Lettered,** *a.* எழுத்துகள் வரையப் பட்ட; கல்வி கற்றுள்ள.

**Letters-patent,** *n.* பாதுகாப்பு உரிமைச் சீட்டு.

**Letterweight,** *n.* காற்றில் பறக்காமல் வைக்கும் பளு.

**Lettuce,** *n.* (முட்டைக் கோசைப் போன்ற) கீரை வகை.

**Leucoma,** *n.* கண்நோய் வகை.

**Leucoderm,** *a., n.* தோல் நோய் வகை.

**Levant,** *v.* சூதாட்டத்தில்) தோற்று ஓடி விடு; கடன் கொடாது ஓடு. *n. ag.* levanter.

**Levee,** *n.* அரசவை; பெருமக்கட் கூட்டம்; அரசவைப் பேட்டிக் குழு.

**Level,** *n.* தளம்; மட்டம்; தளமட்டம்; படித்தளம்; படி; கடல் மட்டத்துக்கு மேல் உயரம். *v.* மட்டமான; சமதளமான; உயர்வு தாழ்வற்ற; சாய்வற்ற. *v.* மட்டமாக்கு; கீழே தள்ளு; சமமாக்கு; உயர்வு தாழ்வகற்று; (மேடு பள்ளம் நீக்கி) நிரப்பாக்கு. *n. ag.* leveller, மட்டமாக்குபவர்; (அணி வழக்கு) சமன்; நமன்; கூற்றுவன். *comb. n.* level-crossing, (இருப்புப் பாதை குறுக்கிடும்) ‘சந்திக்கடவு’.

**Lever,** *n.* நெம்புகோல்; தென்னுகோல்; உதைகோல். *v.* நெம்பு கோலினால் இயக்கு. *n.* leverage, நெம்பு கோலினால் கிடைக்கும் ஆற்றல்; சூழல் வாய்ப்பு; இடவாய்ப்பு.

**Leviathan**. *n.* (பழங்கால) பெருங்கடலுயிரினம்; பெரிய கப்பல்; (இனத்தில்) மிகப் பெரிது.

**Levity,** *n.* பளுவின்மை; கவலையின்மை; கட்டற்ற வாழ்வு; பொறுப்பற்ற போக்கு; கீழ்த்தர வாழ்க்கை; தளர் ஒழுக்கம்; தீயொழுக்கம்; புறக்கணிப்பு; சிற்றவர்.

**Levy,** *v.* வரி பிரி; வரி போடு; படைக்கு ஆள் திரட்டு. *n.* வரிப்பிரிவு; படைக்குத் திரட்டப் பட்ட ஆட்கள்; தொகுதி. *a.* leviable.

**Lewd,** *a.* இழிவான; காமவெறி பிடித்த; அருவருப்பான. *n.* lewdness.

**Lexical,** *a.* மொழி அகர வரிசை சார்ந்த.

**Lexicon,** *n.* சொல் தொகுதி; நிகண்டு. *n.* lexicography, சொல்தொகுதி முறை. *n. pers.* lexicographer.

**Liability,** *n.* கடன் ; உத்தரவாதம்; பொறுப்பு. (*pl.* liabilities x assets) செலவினம்; போக்கினம்; கடன் பொறுப்பு; பொறுப்பு; செல்; செல்லுத்தொகை. *phr. n.* assets and liabilities, இருப்பினமும் போக்கினமும்.

**Liable,** *a.* பொறுப்புள்ள; உத்தரவாதமான; நிகழக் கூடிய; கூடிய; உள்ளாகக் கூடிய; ஆளாகக்கூடிய; பலிக்கக்கூடிய; சாதகமான.

**Liaison,** *n.* உறவு; இணைப்பு.

**Liar,** *n.* பொய்யன்.

**Libation,** *n.* (தெய்வத்துக்கு அளிக்கும்) தேறல்; குடி தேறல்.

**Libel,** *n.* (அவதூறு) வழக்கு. *a.* libellous. *n. pers.* libeller, அவதூறு செய்பவர். libellant, (அவதூறு வழக்கு) முறையீட்டாளர்; வாதி. libellee, அவதூறு வழக்கின்) எதிர்முறையீட்டாளர்; எதிர்வாதி.

**Liberal,** 1. *a.* தாராள எண்ண முடைய; வள்ளன்மையுடைய; தாராளமான. 2. முற்போக்குக் கொள்கையுடைய. *n.* முற் போக்குக்

கட்சியைச் சேர்ந்தவர். *(pl.)* முற்போக்குக் கட்சி(யாளர்); (1) *n. see* liberality, (2) *n. see* liberalism.

**Liberalism,** *n.* (liberal, 1) பரந்த நோக்கம்; பரந்த கொள்கை.

**Liberality,** *n.* (liberal, 2) தாராளமாகக் கொடுத்தல்; பரந்த நோக்கம்; வள்ளன்மை; வண்மை. *v.* liberalize, பரந்த நோக்க முள்ளதாகச் செய்; கட்டுப்பாடு தளர்த்து.

**Liberate,** *v.* விடுதலை செய்; விடுவி. *n. pers.* liberator. *n.* liberation.

**Libertine,** *n.* (மத, சமூகக் கட்டுப் பாடுகளுக்கு உட்படாதவர்; தவறான நெறியில் நடப்பவர்.

**Liberty,** *n.* விடுதலை நிலை; தன் னுரிமை; தன்னாண்மை.

**Libidinous,** *a.* சிற்றின்ப வெறியுடைய.

**Libra,** *n.* ஐப்பசி வீடு; துலைவீடு.

**Librarian,** *n.* நூல் நிலையத் தலைவர்.

**Library,** *n.* நூல் நிலையம்; ஏடகம்; நூலகம்; படிப்பகம்; வாசிப்பகம்.

**Librate,** *v.* துலைக்கோல் போல ஆடு; துள்ளு; துடி. *n.* libration.

**Lice,** *n. pl.* [*see* louse].

**Licence,** *n.* தனி உரிமை; (அரசியல்) தனி இணக்கம்; விலக்குரிமை; கட்டற்ற விடுதலை. *v. see* license.

**License-ce,** *v.* உரிமைகொடு; இணக்கம் கொடு. *n.* licensee, தனி விலக்குரிமை பெறுவோர். *n. pers.* licensor, தனி விலக் குரிமை உத்தரவு கொடுப்பவர்.

**Licentiate,** *n.* பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்; தொழில் உரிமை பெற்றவர்.

**Licentious,** *a.* கட்டு மீறி நடக்கிற; ஒழுக்க வரம்பற்ற; கட்டுப்பாடு களை மதியாத. *n.* licentious- ness.

**Lichen,** *n.* காளான் வகைப் பூண்டு; தோல் நோய் வகை.

**Lick,** *v.* நக்கு. *n.* நக்குதல்; சிறு அளவு.

**Lid,** *n.* மூடி; கண்ணிமை. *a. (neg.)* lidless.

**Lie,** 1. (*v.* lay, lain) கிட. *n.* வழி; ஒருபொருள் இருக்கும் இடம். 2. *n.* பொய் புளுகு. *v.* பொய் பேசு. (2) *n. pers.* liar. (1) *phr. v.* lieover, ஒதுக்கி வைக்கப்பெறு; தள்ளி வைக்கப்பெறு.

**Lief,** *adv.* மகிழ்ச்சியுடன்; விருப்பத்துடன்.

**Liege,** *a.* ஆண்டானுரிமை யுடைய; மேலுரிமையுடைய. *n.* ஆண்டை; மேலாள். *n.* liege man, ஊழியன் ; தொண்டூழியன்; படியாள்.

**Lien,** *n.* உரிமைச் சார்பு; தொடர் புரிமை; (பணித்துறை) மீள்வுரிமை.

**Lieu,** *n.* (*phr.* in lieu of பகரமாக, பதிலாக) பகரம்; பதில்.

**Lieutenant,** *n.* பகரத் தலைவர்; படைத் தலைவர்; துணைத் தலைவர். *comb. n.* lieutenant

governor, சிறு மாகாணத் தலைவர்; துணை வேந்தர்; துணை முதல்வர்.

**Life,** *n.* ஆவி; உயிர்; வாழ் நாள்; பிழைப்பு; வாழ்க்கை வரலாறு; உயிர்த்துடிப்பு; உயிர்க்களை; எழுச்சி; ஊக்கம்; உயிரினம்.

**Life-assurance,** *n.* உயிர்காப் புறுதி; உயிர் ஈட்டுறுதி.

**Life-belt,** *n.* நீரில் மிதக்க உதவும்) உயிர்ப் பாதுகாப்புக் கச்சை.

**Life-blood,** *n.* உயிர்க்குருதி.

**Life-boat,** *n.* உயிர்ப் பாதுகாப்புப் படகு.

**Life-buoy,** *n.* உயிர்க்காப்பு மிதவை.

**Life-cycle,** *n.* உயிர் வாழ்க்கைச் சுழற்சி; உயிர்ச் சுழற்சி.

**Life-estate,** *n.* வாழ்நாள் உரிமை உடைமை.

**Life-guard,** *n.* (அரசன் முதலியோரின்) மெய் காவலர்; மெய்காப்பாளர்.

**Life-like,** *a.* உயிருள்ளதுபோல் தோன்றுகிற; உயிர்த்துடிப்புடைய.

**Lifeless,** *a.* உயிரில்லாத; உயிரற்ற.

**Life line,** *n.* உயிரைக் காக்க உதவும் கயிறு. (கைவரை) வாணாட் கோடு; (நாட்டின்) உயிர்நிலைப் பாதை.

**Lifelong,** *a.* வாணாள் முழுமை யான; மிக நீண்ட.

**Life size,** *n.* முழு அளவிலுள்ள; இயற்கை வடிவளவான.

**Life-work,** *n.* வாழ்நாள் பணி.

**Lift,** *v.* கையிலெடு; உயர்த்து; ஆடு மாடுகளைத் திருடு. *n.* தூக்குதல்; உயர்த்தல்; பாரத்தைத் தூக்கும் பொறி; ஏற்ற இறக்க மின் பொறி.

**Ligament,** *n.* எலும்புகளை இணைக்கும் தசை; இணைப்பு.

**Ligature,** *n.* குருதிக் குழாய் களைக் கட்டும் கயிறு; வார். *v.* குருதிக் குழாய்களைக் கட்டு.

**Light,** 1. *n.* ஒளி; வெளிச்சம்; விளங்கு; தெளிவு; பகல்; அறிவு; ஒளிதரும் பொருள்; ஒளிப் பகுதி. *v.* ஒண்மையான. *v.* (lighted or lit) விளக்கேற்று; ஒளிகொடு; வெளிச்சம் காட்டு; தெளிவாக்கு. 2. *a.* நொய்தான; சிறுதிறமான; எளிதான. 3 .*v.* (lighted or let) தங்கு; நிலத்தில் இறங்கு; தற் செயலாக எதிர்ப்படு. (1) *conn. v. see e*nlighten. (2) *v.* lighten, பளுக்குறை. *n.* lightness, பளுவின்மை; செயலெளிமை; செயல் விரைவு. *adv.* lighty, எளிதாக.

**Light-hearted,** *a.* கவலையற்ற; மகிழ்ச்சியுடைய.

**Lighthouse,** *n.* கலங்கரை விளக்கம்; கரை விளக்கம்; 'தொலை விளக்கு'.

**Lightning,** *n.* மின்னல். *n.* lightning-rod, lightning conductor, மின்னல் தாங்கி; மின் தாங்கி; மின் வாங்கி; மின் கடத்தி.

**Lightsome,** *a.* கிளர்ச்சியான; எழுச்சி தருகிற. *n.* lightsomeness.

**Light-weight,** *n.* (light 2) எடை குறைவானவன்; (127 முதல் 136

கல்லெடை வரையுள்ள) மல்லன்; சிறு திறமுடையவன்.

**Light-year,** *n.* (வான நூல்) ஓர் ஆண்டுக் காலத்தில் ஒளி செல்லும் தொலை; 'ஒளி ஆண்டு'.

**Lignite,** *n.* பழுப்பு நிலக்கரி; (நொய்தான) நிலக்கரி வகை.

**Like,** 1. *a.* போன்ற. *n.* போன்றது; இனம். *n. pl.* தனி விருப்புகள். (*phr.* likes and dislikes விருப்பு வெறுப்புகள்). 2. *v.* விரும்பு. (1) *n. see* likeness. *v. see* liken. (2) *a.* likable. *a. see* liking.

**Likelihood,** *n.* (likely) நிகழக் கூடிய நிலை; கூடிய நிலை; எய்து நிலை; வருநிலை; கை வருநிலை.

**Likely,** *a. adv.* நிகழக்கூடிய; பெரும்பாலும். *n.* likeliness, *see* likelihood.

**Liken,** *v.* (like) ஒப்பிடு; ஒப்பாகச் செய்.

**Likeness,** *n.* ஒப்பு; பொருத்தம்; படம்; உருவகம்.

**Likewise,** *adv.* அதேபோல்; அவ் வாறே; அப்படியே.

**Liking,** *n.* விருப்பம்; பற்று; பிடிப்பு; பிடித்தம்; ஆசை.

**Lilac,** *n.* மலர்ச்செடி வகை.

**Liliputian,** *a., n.* ('கல்லிவர் பயணம்' என்னும் நூல் வழக்கு) லிலிப்புட்டுக்குரிய(வர்); மிகச் சிறிய உருவுடைய (ஆள், உயிர்).

**Lilt,** *v.* இனிமையாகப் பாடு. *n.* இனிமையான பாட்டு.

**Lily,** *n.* அல்லி மலர்; குவளை; வெண்மை நிறம்.

**Limb,** *n.* கை; கால்; புற உறுப்பு; மரக்கிளை.

**Limbo,** *n.* நரகின் சுற்றுப் புறம்; சிறை.

**Lime,** 1. *n.* சுண்ணாம்பு; (பறவை களைப் பிடிக்க உதவும்) பசை. *v.* சுண்ணாம்பு பூசு; பசையால் பிடி; சூளை. 2. *n.* எலுமிச்சை. (1) *(comb.) n.* lime-kiln, சுண்ணாம்புக் காளவாய். limelight, வெள் ஒளி limestone, சுண்ணாம்புக் கல். (2) lime juice, எலுமிச்சம் பழச்சாறு.

**Limerick,** *n.* ஒருவகைச் செய்யுள்.

**Lime-water,** *n.* தெளிந்த சுண்ணாம்பு நீர்.

**Limit,** *n.* எல்லை; வரம்பு. *v.* எல்லைப்படுத்து எல்லை ஏற்படுத்து; கட்டுப்படுத்து; வரை யறு; மட்டுப்படுத்து. *pa.p.a.* limited, வரம்புக்குட்பட்ட; குறை வான; கட்டுப்பட்ட; (கூட்டுக் கழகம்) வரையறைப்பட்ட; வரை நிலையான; (ஆட்சி, அரசு) வரை யறுக்கப்பட்ட குடிப்பொறுப் புடைய. *n.* limitation, கட்டுப் படுத்தல்; வரையறுத்தல்; கட்டுப் பாடு வரையறை; கால எல்லை; காலவரையறை; ஆற்றல் எல்லை; இயற்கைக் குறைபாடு. *comb. n.* limited company, வரைநிலைக் கழகம் (X unlimited, வரையிலாத.)

**Limb,** 1. *v.* நொண்டு; நொண்டி நட. *n.* நொண்டி நடத்தல்; குன்னுதல்; உன்னுதல். 2. *a.* வளைகின்ற; கெட்டியில்லாத.

**Limousine,** *n.* மூடிய பொறி வண்டி.

**Limpid,** *a.* தெளிவான; துலக்க மான, *n.* limpidity

**Limy,** *a.* சுண்ணாம்பு போன்ற; சுண்ணாம்பு சேர்ந்த; பசையுள்ள.

**Linage,** *n.* (அச்சடிப்பதில்) வரி களின் எண்ணிக்கை; வரிவிழுக் காட்டுக் கூலி.

**Linchpin,** *n.* கடையாணி; அச்சாணி.

**Lincen,.** *n.* எலுமிச்சை மரம்.

**Line,** *n.* (ஆழமளக்கும்) நூல் குண்டு; தந்திக்கம்பி; கயிறு; கோடு (*see* linear); அங்குலத்தில் பன்னிரண்டில் ஒரு கூறு; எல்லை; படைவீரர்களின் வரிசை; எழுத்துகளின் வரிசை; பாட்டின் அடி; கால்வழி. (*see* lineage, lineament) சிறு கடிதம். வேலை; தொழில் (railwayline; shipping line) நெறி; பாதை வழி; சராசரி மட்டம். (above, below line) *(pl.)* அரண்வரிசைகள். *v.* கோடு வரை; வரிசையாய் நிறுத்து உடுப்புகளுக்கு உள் துணி வைத்துத் தை. (*see* lining.)

**Lineage,** *n.* (line) வழிமரபு. *a.* lineal.

**Lineament,** *n.* (line*)* தோற்ற அமைப்பு.

**Linear,** *a.* (line*)* நேர்கோட்டுக் குரிய; நேர்கோடு போன்ற; நீட்டலளவை சார்ந்த.

**Lineate,** *a.* கோடுகள் உள்ள.

**Lineman,** *n.* தந்திக் கம்பி பழுது பார்ப்பவர்.

**Linen,** *a.* நாரால் செய்யப்பட்ட. *n.* நாரால் செய்யப்பட்ட துணி.

**Liner,** *n.* நீராவிக் கப்பல்.

**Linger,** *v.* தயங்கி நில்; சுணங்கு; நீடித்திரு.

**Lingo,** *n.* குழூஉக்குறி. *abs. n.* lingoism, குறுகிய மொழிப்பற்று.

**Lingua franca,** *n.* பொது மொழி; கலப்பு மொழி.

**Lingual,** *a.* நாவுக்குரிய (ஒலி, எழுத்து) *n.* நாவில் பறக்கும் (எழுத்து, ஒலி).

**Linguiform,** *a.* நாக்கு வடிவ முடைய.

**Linguist,** *n.* பல மொழிகள் தெரிந்தவர்; மொழிவாணர்.

**Linguistic,** *a.* மொழிசார்ந்த. *n.* *(pl.)* linguistics. மொழி யாராய்ச்சித் துறை.

**Liniment,** *n.* தேய்ப்பு மருந்து; தைலம்.

**Lining,** *n.* (line) உட்புற உறை; 'அகத்திரை'.

**Link,** *n.* சங்கிலியின் ஒரு வளையம்; கண்ணி; கொக்கி ஏறக் குறைய 8 அங்குல நீளமுள்ள அளவு. *v.* கொக்கியால் பிணை; இணைத்தல் செய். *n.* linkage. *comb. n.* linking files, இணைவுக்குரிய கோப்புகள் ஒட்டுக் கோளங்கள்.

**Linn,** *n.* அருவிக்கயம்; அருவிப் பள்ளம்; பிளவுப் பள்ளத்தாக்கு.

**Linnet,** *n.* குருவி வகை.

**Linoleum,** *n.* கித்தான் துணி வகை.

**Linotype,** *n.* வரியச்சுப் பொறி; வார்ப்பச்சுப் பொறி.

**Linseed,** *n.* ஆளி விதை.

**Lint,** *n.* (காயங்களுக்குக் கட்டும்) பஞ்சுத் துணி.

**Lintel,** *n.* வாசற்படி உத்திரம்.

**Liny,** *a.* கோடுகளாலான; வரி வரியான.

**Lion,** *n.* (*fem* lioness) சிங்கம்; அரிமா; கோளரி; சீயம்; மனவுறுதி யுள்ளவன். *v.* lionize, பெரிது பண்ணு; பாராட்டு; போற்று.

**Lip,** *n.* உதடு; இதழ்; பிளவுப் பகுதி. *v.* உதட்டால் தொடு; மெல்லப் பேசு; வழியும்படி நிரம்பு.

**Lipstick,** *n.* இதழ்ச்சாயம்.

**Liquefy,** *v.* உருகச் செய்; சீராக்கு. *n.* liquefaction.

**Liquescent,** *a.* உருகக்கூடிய.

**Liqueur,** *n.* இன்மணத்தேறல்.

**Liquid,** *a.* நீர்மயமான; நீராளமான. *n.* 'நீர்மம்'; நீரியற் பொருள்; ஒழுகும் ஓசையுள்ள (ல, ர போன்ற) ஒலி (எழுத்து).

**Liquidate,** *v.* கடனைத் தீர்; கூட்டுக்கழகம் கலை; மூடி ஒழுங்குபடுத்து. *n.* liquidation. *n. pers* liquidator.

**Liquor,** *n.* சாராயம்; கடுந்தேறல்.

**Lisp,** *v.* மழலை, பேசு. *n.* மழலைச் சொல்.

**Lissom(e),** *a.* வளையக்கூடிய; தொய்வான.

**List,** 1.*n.* பட்டியல்; பெயர் வரிசை; நிரல். *v.* பட்டியலில் சேர். 2. *n.* ஆடையின் கரை; விளிம்பு. 3. *n.* *(pl.)* மற்போர் அரங்கம்; குத்துச் சண்டை வட்டரங்கம். 4. *v.* விரும்பு. 5. *v. see* listen. (1) *comb. n.* arrears list, மீதி நிரல்; எச்சப்பட்டி; நிலுவைப்பட்டி, black list; கரும்பட்டி; வடுப்பட்டி; குற்றப்பட்டி.

**Listen,** *(poet)* list, *v.* உற்றுக்கேள்; கவனமாய்க் கேள்; அறிவுரைப் படி நட. *a. (neg.)* listless, கவனமில்லாத; அக்கறையற்ற. *n.* listlessness.

**Lit,** *v. (see* light.)

**Litany,** *n.* வழிபாட்டுப் பாசுரம்.

**Literacy,** *n.* எழுதப் படிக்கத் தெரிதல்; எழுத்தறிவு.

**Literal,** *a.* சொல்லுக்குச் சொல் சரியான; உயர்வு நவிற்சியில்லாத; சொற்பொருள் சார்ந்த.

**Literary,** *a.* இலக்கியத்துக்குரிய; கல்வி சார்ந்த; கற்றோர்க்குரிய. *comb. n.* literary association, இலக்கியக் கழகம்.

**Literate,** *a.* படித்த; கல்வியறி வுள்ள. *n.* கல்வியறிவுள்ளவர்.

*literateur, n.* இலக்கிய ஆராய்ச்சி யாளர்; புலவர்.

*literati, n. (pl.)* கற்றோர்; புலவர்.

**Literatim,** *adv.* எழுத்துக்கு எழுத்து ஆக; சிறிதும் மாறுதலில்லாதபடியே.

**Literature,** *n.* இலக்கியம்; (தனித்துறை) விளக்க ஏட்டுத் தொகுதி.

**Litharage,** *n.* காரீய மிகை உயிரகை; மஞ்சள் காரீயம்.

**Lithe,** *a.* வளையக்கூடிய. *a.* lithesome.

**Lithograph,** *v.* கல்லச்சு அடி. *n.* கல்லச்சுப் படி. *n. abs,* lithography, கல்லச்சு முறை.

**Lithosphere,** *n.* (நிலவுலகின்) உட்பாறை மண்டலம்; நிலப் பாறை.

**Litigate,** *v.* வழக்குத்தொடு; வழக்காடு. *n. pers.* litigant. *n. abs.* litigation. *a.* litigious. (ஓயாது) வழக்காடுகிற; வாதாடு வதில் விருப்பமுடைய.

**Litmus,** *n.* (புளியம்; காரம் தேர உதவும் நீல, சிவப்பு) நிறத்தாள்.

**Litotes,** *n.* வஞ்சப் புகழ்.

**Litre,** *n.* பருமனளவுக் கூறு; 10 குழி சென்டிமீட்டர்.

**Litter,** *n.* பல்லக்கு; குப்பை கூளம்; ஒரே ஈற்றுக் குட்டிகள். *v.* வைக்கோல் முதலியவற்றைப் பரப்பு; குப்பையாக்கு; குட்டி போடு.

**Little,** 1. *a.* சிறிய. 2. *a., n., adv.* மிக அருகலான; கிட்டத்தட்ட இல்லாத. 3. *a. n., adv.,* a little, கொஞ்சம் கொஞ்சமான. (1) *n.* littleness, சிறுமை; சிற்றளவு; சிறுமதி; கீழ்மை.

**Littoral,** *a.* கரையோரமான. *n.* கரைப் பகுதி.

**Liturgy,** *n.* வழிபாட்டுச் சுவடி.

**Live,** *a.* (லைவ்) உயிருள்ள; சுறுசுறுப்புள்ள; (நிலக்கரி) அழல்கிற. *v.* (லிவ்) உயிரோடிரு; குடியிரு; வாழ்.

**Livelihood,** *n.* வாழ்க்கைத் தொழில்; பிழைப்பு.

**Livelong,** *a.* மிக நீடித்த.

**Lively,** *a.* சுறுசுறுப்புள்ள; எழுச்சி யுள்ள.

**Liven,** *v.* கிளர்ச்சியூட்டு.

**Liver,** *n.* கல்லீரல். *a.* liverish, ஈரல் கோளாறுடைய.

**Livery,** *n.* தொழில் திறச் சின்னம்; ஊழியச் சின்னம்; தொழிலடை; அடையாள உடைப்பட்டி.

**Live-stock,** *n.* கால்நடை (த் தொகுதி).

**Livid** *a.* நீலமான.

**Living,** *n.* பிழைப்பு; வாழ்க்கை; பிழைப்புவழி; பிழைப்புக் குரிய நிலஉடைமை. *a.* உயிரோ டிருக்கிற; வாழ்கிற; உயிரியக்க முடைய; வாழ்க்கைக் குரிய; வாழ்க்கைக்குப் போதிய. *comb. n.* living wage, வாழ்க்கைக்கு போதிய கூலி; 'வாழ்கூலி'. *phr. n.* standard of living, வாழ்க்கைத்தரம்; வாழ்க்கைப்படி.

**Lizard,** *n.* பல்லி.

**Llama,** *n* (ஒட்டையினத்தைச் சேர்ந்த தென் அமெரிக்க) விலங்கு வகை.

**Llanos,** *n. (pl)* தென் அமெரிக்கப் புல்வெளிப் பகுதி.

**Lo,** *int.* பார்!

**Load,** *n.* பாரம்; சரக்கு; பளுவு. *v.* (loaded, laden *see* lade) பாரமேற்று; சுமையேற்றித் துன் புறுத்து; துப்பாக்கியில் மருந்தை அடை.

**Load-line,** *n.* (கப்பலில்,சரியான பாரம் ஏற்றப்பட்டதைக் காட்டும்) பார வரை.

**Loadestar,** *n.* (*see* lodestar.)

**Loadstone,** *n.* (*see* lodestone.)

**Loaf,** 1. *v.* காலத்தை வீணில் கழி; சோம்பித் திரி. 2. *n.* (*pl.* loaves) அப்பச் சிட்டம்; உணவு; நாளுணவு; பிழைப்பு. (1) *n.* loafer, வீணில் சுற்றித் திரிபவர்.

**Loam,** *n.* (செங்கல் செய்யும்) களிமண்; தோட்டமண். *a.* loamy.

**Loan,** *n.* கடன்; இரவல். *v.* கடன் கொடு.

**Loath,** *pred. a.* அருவருப்பான; விருப்பமில்லாத. *v.* loathe, வெறு; அருவருப்புடன் பார். *n., a.* loathing. அருவருப்பு (ஆன). *a.* loathsome, அருவருப்பான; வெறுக்கத்தக்க. *n.* loathsomeness.

**Lob,** *v.* மெல்ல எறி; ஆடி ஆடிச் செல். *n.* துள்ளு பந்து.

**Lobby,** *n.* தலைவாயில்; (அரசியல் மன்றின்) ஒதுக்க அறை. *v.* சட்டமன்ற உறுப்பினர் ஆதரவு தேடு.

**Lobe,** *n.* (காதின்) மடல்; தொங்கு சதை; தொங்கும் பகுதி; இதழ்; (நண்டின்) கொடுக்கு.

**Lobster,** *n.* (நண்டு போன்ற) உயிரின வகை; நண்டின் வகை.

**Local,** *a.* உள்ளூருக்குரிய; உள்ளூர் சார்ந்த; சிறுநில; சிறுதிணை சார்ந்த; சிறு பரப்புடைய, அகன்ற பரவுதலற்ற; இடம் சார்ந்த; இடவேறுபாடுடைய; (நோய், மருந்து etc.) உறுப்புச் சார்ந்த; உடல் முழுவதும் பரவாத; தனியிடம் சார்ந்த; ஓரிடத்துக் குரிய. *n.* உள்ளூரைச் சார்ந்தவர்; சிறுதிற எல்லை செல்லும் ஊர்தி. *comb. n.* local administration, நாட்டாண்மை; சிறு குடியாண்மை; திணையாண்மை. local government, சிறு நில ஆட்சி; சிறு திணையாட்சி. local self-govern -ment சிறுதிணைத் தன்னாட்சி. local trade, உள்ளூர் வாணிகம். local variation, இடத்துக்கிட வேறுபாடு; சிறுதிற இடவேறுபாடு; local disarrangement, உறுப்புக் கோளாறு; சிறு சூழல் கோளாறு.

**Locale,** *n.* நிகழ்ச்சி நடந்த இடம்.

**Locality,** *n.* இடம்; சிற்றெல்லை அயிடம்; சிறு சூழல்.

**Localize,** *v.* இடம் பழகு; சூழலுக்கியைவி. *n.* localization.

**Locate,** *v.* இடத்தில் வை; இடங்காண்; கண்டுபிடி; இடம் குறி; இடத்தில் அமை; நிறுவு. *n.* location. இடம்; இட அமைதி; இடத்தில் அமைத்தல் இடங் காணல்; அமைப்புக்காணல்; கண்டுபிடித்தல்.

**Locative,** *a., n.* (இலக்கணம்) ஏழாம் வேற்றுமை (சார்ந்த); இடவேற்றுமை(க்குரிய)

**Loch,** (லோஃ) *n.* ஏரி; கடற் கழி.

**Lock,** *n.* பூட்டு; துப்பாக்கி விசை; (கால்வாயில்) அணை அடைப்பு. *v.* பூட்டு; தாழிடு; அணைத்துக் கொள்.

**Locker,** *n.* நிலைப்பெட்டி.

**Locket,** *n.* பதக்கம்; மாலை முகப்பு.

**Lock-jaw,** *n.* தாடைச் சுளுக்கு.

**Lock-out,** *n.* (வேலை நிறுத்த காலக்) கதவடைப்பு.

**Locksmith,** *n.* (பூட்டுகள் செய்யும்) கொல்லன்.

**Lock-up,** *n.* தற்காலிகச் சிறை; காவலறை.

**Locomotion,** *n.* நகர்தல்; இடம் பெயர்ப்பு. *a.* locomotive, இடம் விட்டுப் பெயர்கிற. *n.* இருப்புப் பாதை (நீராவி) தொடர்வண்டி உந்து இயந்திரம்.

**Locus,** *n.* (*pl.* loci) இருப்பிடம்; புள்ளி இயங்கு கோடு.

*locus standi*, *n.* தெரிந்த நிலைமை.

**Locust,** *n.* வெட்டுக்கிளி.

**Locution,** *n.* பேச்சுத்திறம்.

**Lode,** *n.* (ஆடு, மாடுகளின்) திறந்த சாக்கடை; சுரங்கம்; தாதுப் படுகை.

**Lodestar, loadstone,** *n.* வடமீன்; வழிகாட்டி; உறுதியான (ஆள், பொருள், குறிக்கோள்)

**Lodestone,** loadstone, *n.* காந்தக்கல்.

**Lodge,** *n.* சிறிய வீடு; தங்கிடம்; இல்லம், *v.* இடங்கொடு; (வழக்கு) பதிவு செய்; கொடுத்து வை; தங்கு; தங்க இடம் கொடு. *n. see* lodging, lodg(e)ment, *comb. n.* lodged disposals, (சுருக்கம்; L. Dis; பணிமனை வழக்கு) ஒதுக்குத் தீர்வு (ஒ. தீ.)

**Lodging,** *n.* தங்குமிடம்; விடுதி. *comb, n.* Boarding and lodging, உணவிடமும் உறைவிடமும்; உணவுறையுள்.

**Lodg(e)ment,** *n.* பதிவு செய்தல்; (போர்) பிடித்த இடம் பாது காத்தல்; நிலவர இடமடைதல்; தங்கிடம்; (பணம்) தங்கல்.

**Loft,** *n.* மாடி அறை; புறாக்கூண்டு.

**Lofty,** *a.* மிக்க உயரமுள்ள; இறுமாப்புள்ள; வீறுடைய.

**Log,** *n.* மரக்கட்டை; (கப்பல்) வேகம் அளக்கும் கருவி. *v.* துண்டு போடு. *n.* log book, குறிப்புப் புத்தகம்.

**Logarithm,** (சுருக்கம் - log) *n.* (கணக்கியல்) பத்து மூலமாகக் கொண்ட எண்ணுக்குரிய பெருக்க மூல அடுக்கு; 'அடுக்கு மூலம்' (எ-டு. $10^3$=1000. 1000த்தின் அடுக்கு மூலம்3) *a.* logarithmic.

**Loggerhead,** *n.* மடையன். *(pl.)* சச்சரவு.

**Logic,** *n.* வாய்வியல் (தருக்க நூல்.) *n., pers.* logician. *a.* logical, வாதப்பொருத்தமுடைய; காரண காரியத்தொடர்புடைய.

**Logogram,** *n.* (சுருக்கெழுத்துச்) சொற்குறி.

**Logos,** *n.* நாதமுதல்; திரு எழுத்து; ஓங்காரம்; முதற்பொருள்.

**Loin,** *n.* இடுப்பு; அரை *(pl.)* (ஆண்) கால்வழி மரபு.

**Loiter,** *v.* அலைந்து திரி; சோம்பித் திரி; தாமதஞ் செய்.

**Loll,** *v.* நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிரு; சோம்பலாய்க் கிட.

**Lollipop,** *n.* தித்திப்புத் தின்பண்ட வகை.

**Lone, lonely, lonesome,** *a.* தனிமையான; தனித்து. *n.* loneliness.

**Long,** *a., adv.* நீளமான; நீண்ட; நீண்ட காலமாக. *v.* அவாவு; மிக விரும்பு. *n.* longing, விருப்பம். *(comb.) n.* long gun முடிந்த முடிவு.

**Longeval,** *a* நீண்ட நாள் உயிரோடிருக்கிற. *n.* longevity, நீள்வாழ்வுடைமை; நீடுவாழ்வு.

**Longhand,** *n.* (சுருக்கெழுத்து அல்லாத) நிறை எழுத்து முறை.

**Long headed,** *a.* முன் கருத்துள்ள; அறிவுக் கூர்மை யுள்ள.

**Longitude,** *a.* நிரை கோடு. (x latitude)., *a.* longitudinal.

**Looby,** *n.* மந்தமானவன்.

**Look,** *v.* நோக்கு; பார்; வியப்புடன் பார். *n.* பார்வை; தோற்றம்; நோக்கு.

**Looker-on,** *n. (pl.* lookerof - son) செயலற்றுப்) பார்த்துக் கொண்டிருப்பவர்.

**Loom,** 1. *n.* நெசவுத் தறி 2. *v.* தெளிவில்லாமல் தோன்று; (பெரிதாகக்) காணப்படு.

**Loon,** *n.* சோம்பேறி; இழிஞன்; நீர்ப்பறவை வகை.

**Loony,** *a.* கிறுக்கான. *n.* கிறுக்கு.

**Loop** *n.* கொக்கி; வளையம்; கண்ணி. *v.* வளையம்போல் சுருண்டு மடி; வளைத்துச் சுருக்கிடு; கொளுவு.

**Loo hole,** *n.* சிறிய துளை; தப்பித்துக் கொள்ளும் வழி.

**Loose,** *a.* தளர்ச்சியான; சரியில்லாத; நெறி தவறின. *v.* தளர்த்து; விட்டு விடு. *n.* looseness. *v.* loosen.

**Loot,** *n.* கொள்ளையடித்த பொருள். *n.* கொள்ளையடி.

**Lop,** *n.* சிறு கிளை. *v.*கிளைகளைக் கழி; வெட்டு. *a.* lopeared, தொங்கும் செவியுள்ள. *a.* lop-sided ஒரு பக்கம் மிகுதிப் பளுவான; ஏற்றத்தாழ்வாயுள்ள.

**Loquacious,** *a.* மிகுதி பேசுகிற; வீண் பேச்சு வளர்க்கிற; வம்பளக்கிற. *n.* loquaciousness, loquacity.

**Lord,** *n.* ஆண்டை; தலைவன்; அரசன்; நிலக்கிழார்; பெருமகன்; கணவன். *v.* பெருமகன் பட்டம் கொடு; இறுமாப்புக் கொள்; மேதாவித்தனம் செய்.

**Lordly,** *a.* வீறார்ந்த.

**Lordship,** *n.* பெருமகன் உரிமை (பட்டம்) மேலாட்சி; ஆட்சியுரிமை.

**Lore,** *n.* கல்வி அறிவு; அறிவுக்கு வை.

**Lorn,** *a.* தனிமையான; தனித்து. *comb., a. see* love lorn.

**Lorry,** *n.* பார (ப்பொறி) வண்டி.

**Lose,** *n.* (lost) இழந்து விடு; தோல்வி அடை; வழி தவறி நட. *n. see* loss, *n. pers,* loser.

**Loss,** *n.* (*v.* loss) இழப்பு; அழிவு; சேதம்; நட்டம்.

**Lot,** *n.* பங்கு; ஊழ்; மொத்தம்; சீட்டு விழுதல்; நற் பேறு; பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலம்; மிகுதி அளவு. *v.* நிலம் முதலியவற்றைப் பிரி.

**Lotion,** *n.* கழுவும் நீர்; குணநீர்.

**Lottery,** *n.* குலுக்குச் சீட்டு; பரிசுச் சீட்டு; பொறுக்குச் சீட்டு; ஆதாயச் சீட்டு; குருட்டடி (முறை); சூதாட்ட முறை.

**Lotus, lotos,** *n.* தாமரை; (இனிய கனி தரும்) செடியினம். *n.* lotus eater, lotos eater, சோம்பேறி.

**Loud,** *a., adv.* உரத்து; உரக்க. *n.* loudness.

**Loudspeaker,** *n.* ஒலிபெருக்கி.

**Lough,** *n* ஏரி; கடற் கழி.

**Lounge,** *v.* சோம்பித் திரி; தயங்கி நட. *n.* சோம்பித் திரிதல்; சாய் விருக்கை; பெரிய சாய்வு நாற்காலி.

**Lour,** *n.* சிடு சிடுப்புடன் காணப்படு.

**Louse,** *n.* (*pl.* lice) பேன். *a.* lousy.

**Lout,** *v.* மூடன்; நாகரிகம் தெரியாதவன்; முரடன்.

**Lovable,** *a.* விரும்பத்தக்க.

**Love,** *n.* நேசம்; அன்பு; காதல்; அருள். *a.* நேசி; அன்புகொள்; காதல்கொள்; விரும்பு.

**Love-lorn,** *a.* காதலன் அல்லது காதலியைப் பிரிந்த.

**Lovely,** *a.* அழகான; வனப்பு மிக்க; காட்சிக்கினிய கண்ணைக் கவர்கிற. *n.* loveliness.

**Lover,** *n.* காதலர்; விருப்ப முடையவர்; அன்பர்.

**Love-sick,** *a.* காதல் நோய் உள்ள. *n.* love-sickness.

**Loving,** *a.* அன்புள்ள.

**Low,** 1. *v.* பசுவைப்போல் கத்து. *n.* பசுவின் கதறல். 2. *a., adv.* உயரமில்லாத; தாழ்வான; கீழ்ப் பட்ட; இழிவான; தாழ்ந்த குரலில்; குறைவாக.

**Lower,** 1. *v.* கீழே இறக்கு; தாழ்த்து இறங்கு; அமுக்கு. 2. *a. comp. deg.* of low. 3. *a. (comb.)* தாழ்ந்த; கீழுள்ள. *a. (sup.deg.)* lowe(rmo)st மிகக்கீழான; அடியிலுள்ள.

**Lowland,** *n.* தாழ்நிலம்; சமவெளி.

**Lowly,** *v. adv.,* பணிவுள்ள; தாழ்ந்த; தாழ்மையாய். *n.* lowliness பணிவு; இழிவு.

**Lowness,** *n.* கீழ்மை.

**Low-spirited,** *a.* சோர்வுள்ள.

**Loyal,** *a.* பற்று மாறாத; பற்றுறுதி யுள்ள; வாய்மை தவறாத. *n.* loyality. *n. pers.* loyalist மன்னர் கட்சியாளர்; பற்றுறுதிக் கோட் பாட்டாளர்.

**Lozenge,** *n.* சாய் சதுரம்; (சர்க்கரை கலந்த மருந்துப் பில்லை).

**Lubber,** *n.* மடையன்.

**Lubricate,** *v.* உயவிடு; இளக்க மாக்கு; மசகிடு. *n.* lubricant,

மசகெண்ணெய். *n.* lubrication, உயவிடுதல்; மசகு.

**Lucent,** *a.* பளபளப்பான; மின்னுகிற.

**Lucid,** *a.* தெளிவாக விளங்குகிற. *n.* lucidity.

**Lucifer,** *n.* விடி வெள்ளி; சைத்தான். (நச்சுத்) தீக்குச்சி. *a.* luciferous.

**Luck,** *n.* எதிர்பாரா நற்பேறு; குருட்டடி. *a.* lucky. *adv.* luckily. *n. (neg.)* luckless.

**Lucrative,** *a.* மிகு வருவாய் உடைய; ஊதிய மிகுதியுடைய.

**Lucre,** *n.* ஆதாயம்; ஊதியம்; வருவாய்; (தீய வழியில் தேடிய) பணம்.

**Lucubrate,** *v.* (கருத்துகளை) எழுத்தில் அமை; இரவில் படி. *n.* lucubration, தலைசிறந்த புலமையுடைய ஒருவரது நூல்.

**Ludicrous,** *a.* நகைப்புக்கிடமான; கேலியான.

*lues,* *n.* தொத்துநோய்; மாமாரி; மேகநோய். *a.* luetic.

**Lug,** *v.* பளுவான பொருளை இழு; வலுவாய் இழு. *n.* வலுவாய் இழுத்தல்.

**Luggage,** *n.* பயண மூட்டை; மூட்டை முடிச்சு; பெட்டி படுக்கை.

**Lugger,** *n.* சிறிய கப்பல்.

**Lugubrious,** *a.* துயரத்தோற்ற முள்ள.

**Lukewarm,** *a.* இளவெப்ப முடைய; மட்டமான வெப்ப முடைய; இள ஆர்வமுடைய; சிற்றார்வமுடைய; அரைகுறை ஆர்வமுடைய.

**Lull,** *v.* தாலாட்டித் தூங்கச் செய்; அமைதிப்படுத்து. *n.* (புயலில்) அமைதி.

**Lullaby,** *n.* தாலாட்டுப் பாட்டு; தாலாட்டு.

**Lumber,** 1. *n.* குப்பை கூளம்; *v.* குப்பை கூளம் குவி; மரத்தைத் துண்டு துண்டாக்கு. 2. *v.* அருவருப்பாக நகர்.

**Lumbering,** *a.* தள்ளாடுகிற.

**Lumberjack** *n.* காடுவெட்டி; மரம் வெட்டுகிறவன்.

**Lumen,** *n.* உறுப்பின் உள்ளிடம் ஒளியின் அலகு.

**Luminary,** *n.* ஒளியுடைய பொருள்; சிறந்த அறிவாளி, முனைத்த புகழாளர்.

**Luminous,** *a.* ஒளி விடுகிற. *n.* luminosity.

**Lump,** *n.* கட்டி; மொத்தம். *v.* ஒன்றாகக் கட்டு; குழப்பமாகக் குவி.

**Lumping,** *a.* பெரிய; பளுவான.

**Lumpish,** *a.* மிகுந்த பளுவான; மூடமான; சோம்பேறியான.

**Lumpy,** *a.* கட்டிகள் நிறைந்த; சிறு சிறு அலைகளையுடைய.

**Luna,** *a.* (உரோம வழக்கு) திங்களஞ் செல்வி. *a.* lunar, மதியத்துக்குரிய; (ஆண்டு etc). மதியமுறை கணக்கிட்ட.

**Lunacy,** *n.* கோட்டி; கிறுக்கு. *a., n.* lunatic, கிறுக்கான(வர்).

**Lune,** *n.* பிறை.

**Lunation,** *n.* உவாக்காலம் (மறையுவாக்களுக்குட்பட்ட காலம்).

**Lunch, lucheon,** *n.* நண்பகல் உணவு; தேநீர் விருந்து; சிற்றுண்டி. *n.* சிற்றுண்டி அருந்து; சிற்றுண்டி ஏற்பாடு செய்.

**Lung,** *n.* உயிர்ப்புப் பை.

**Lunge,** *n.* குதிரையைச் சுற்றி ஓட வைக்கும் கயிறு; முன் காலை மடித்து முன் சாய்ந்து நிற்றல். *v.* குதிரையைச் சுற்றி ஓட வை; முன் சாய்ந்த நிலை; பாய்ந்து குதி. *n. ag.* lunger.

**Lupine, lupin,** *a.* ஓநாய் சார்ந்த ஓநாய் போன்ற.

**Lurch,** 1. *n.* கைவிடுதல்; திடீரென்று ஒரு பக்கம் சாய்தல். (*idiom*: leave in the lurch). *v.* திடீரென்று ஒரு பக்கம் சாய். 2 *n.* உதவியற்ற நிலை.

**Lure,** *n.* ஆசை காட்டுதல், *v.* ஆசை காட்டிக் கவர்ச்சி செய்.

**Lurid,** *a.* கோரமான; இயற்கைக்கு மாறான.

**Lurk,** *v.* பதுங்கியிரு; மறைந்திரு.

**Luscicus,** *a.* மணமும் சுவையும் மிகுந்த; நறுஞ்சுவையான.

**Lush,** *a.* வளமான; செழிப்பான. *n.* கட் குடி.

**Lust,** *n.* சிற்றின்பம்; புல்லுணர்ச்சி. *v.* சிற்றின்ப வயப்படு காமுறு; விரும்பு. *a.* lustful.

**Lustre,** *n.* 1. ஒளி; பளபளப்பு; மிகுந்த அழகு. *a.* lustrous.

**Lustrum,** lustre. *n. pl.* lustra) ஐந்தாண்டுக்காலம்.

**Lusty,** *a.* வலிமையுள்ள.

**Lute,** *n.* யாழ். *n. pers.*lutist. *n.* lutanist, lutenist, யாழ் வாசிப்பவர்.

**Luxuriant,** *a.* செழிப்பான; மிகுந்த வேலைப்பாடுள்ள; கொழுத்து வளர்ந்துள்ள. *n.* luxuriance.

**Luxuriate,** *v.* இன்பமயர்; செழிப்பாக வளர்.

**Luxurious,** *a.* சொகுசான. *n.* luxury, சொகுசு; இன்ப வாழ்வு; உயர் இன்பத்தேவை; இன்பப் பொருள்.

**Lycopod, lycopodium,** *n.* காளான் வகை.

**Lye,** *n.* காரக் கரைசல் வகை.

**Lying,** 1. *a.* படுத்திருக்கிற. 2. பொய் பேசுகிற; ஏமாற்றுகிற. *n.* படுக்கை.

**Lymph,** *n.* குருதிக் கசிவு நீர்; நிண நீர்; அம்மைப் பால்.

**Lymphatic,** *n.* நிணநீர் ஓடுகிற குழாய்.

**Lynch,** *n.* உயிருடன் தோல் உரித்தல். *v.* உயிருடன் தோலுரி.

**Lynx,** *n.* காட்டுப்பூனை வகை. *a.* lynx eyed, கூரிய பார்வையுள்ள.

**Lyre,** *n.* இசைக் கருவி வகை; யாழ்.

**Lyric, lyrical,** *a.* யாழுக்குரிய; பாடக்கூடிய; உணர்ச்சி தெரிவிக்கிற. *n.*உணர்ச்சிப் பாடல். *n.* lyrist, யாழ் வாசிப்பவர். *n.* lyricist, உணர்ச்சிப் பாவலர்.

**Lysol,** *n.* கறுப்பெண்ணெயி லிருந்து கிடைக்கும் நோய்த் தடை மருந்து.

# M

**Ma,** *n.* தாய்; அன்னை; அம்மா.

**Macabre,** *a.* கோரமான; சாவாட்டத்துக்குரிய.

**Macadam,** *a., n.* கல் பரப்பிய சாலை; சாலைக்கப்பி. *v.* macadamize, பாட்டையில் கப்பி பரப்பு; சரளைபோடு.

**Macaroni, macaroon,** *n.* பண்ட வகை.

**Mace,** 1. *n.* சாதிபத்திரி. 2. தண்டு; தடி; (பணித்தலைமையுரிமை காட்டும்) வெள்ளித்தடி; கட்டியக் கோல்; குறுந்தடி. *n. pers.* macer, கட்டியக்காரன்.

**Macerate,** *v.* ஊறவைத்து மென்மையாக்கு.

**Machiavellian,** *a., n.* (Machiavelli, 14 ஆம் நூற்றாண்டிலிருந்த இத்தாலிய அறிஞர்) நேர்மையற்றவர்; அரசியல் சூழ்ச்சியாளர்; சாணக்கியர்.

**Machinate,** *v.* தந்திரம்செய்; சதிசெய். *n.* machination.

**Machine,** *n.* கருவி; துணைக் கருவி; சாதனம்; இயந்திரப் பொறி. *n. abs.* machinery, இயந்திரப் பொறிகள்; இயந்திரப் பகுதிகள்; இயந்திர முறை. *comb. n.* machineman, பொறி இயக்குநர்; பொறிவலவர்; பொறிவாணர்.

**Machine-tool,** *n.* இயந்திர ஆற்றலால் வேலை செய்யும் கருவி

**Machinist,** *n.* இயந்திரங்கள் செய்பவர்; இயந்திரங்களை ஓட்டுபவர்.

**Mackerel,** *n.* கடல்மீன் வகை.

**Mackintosh,** *n.* தொய்வக (இரப்பர்) மேற்சட்டை; நீர் தோயா மேற் சட்டை.

**Macrocosm,** *n.* பேரண்டம்.

**Macron,** *n.* நெடிற்குறி.

**Mad,** a (-dd-) பித்தேறிய; கிறுக்குற்ற; தன்னிலை மறந்த; அறிவிழந்த. *v.* கிறுக்காக்கு. *n.* madness. *v. see* madden. *aslo com. see* madder.

**Madam, madame,** *n.* மாது (விளி) மாதரீர்!

**Madcap,** *n.* பைத்தியம் போல் மூர்க்கமாக நடப்பவன்.

**Madden,** *n.* கிறுக்காக்கு; சினமூட்டு. adv.maddeningly.

**Madder,** 1.*n.* செடியின் வகை; எருக்கு; (இதிலிருந்து பெறும்) செஞ்சாயம் 2. *a. comp. see* mad.

**Made,** *v.* (*see* make)

**Madeira,** *n.* (ஒரு தீவு; அங்கு செய்யப்படும்) இன் தேறல்.

*mademoiselle,* *n.* செல்வி; மணமாகா நங்கை.

**Madonna,** *n.* கன்னித்தாய்; கன்னிமரியாவின் படம்.

**Madrigal,** *n.* காதல் செய்யுள்.

**Maelstrom,** *n.* ஆற்றின் சுழி.

**Magazine,** *n.* வெடி மருந்துக் கிடங்கு; மருந்துப் பட்டறை; தளவாடக் கிடங்கு; மாத இதழ்; திங்கள் வெளியீடு.

**Mage,** *n.* மாயாவி; அறிவர்; சித்தர்; முனி; அறிஞர்; புலவர்.

**Maggot,** *n.* புழு; விசித்திர எண்ணம். *a.* maggoty.

**Magic,** *n.* செப்பிடு வித்தை; மாயவித்தை. *a.* magic(al). *n. pers.* magician. *(comb.) n.* magic-lantern, பட விளக்கு; விளக்க ஒளிப்படம்.

**Magisterial,** *a.* (magistrate) முறைநடுவர்க்குரிய; குற்ற நடுவர்க்குரிய.

**Magistrate,** *n.* குற்றநடுவர்; தண்டலாளர். *n. abs.* magistracy, குற்ற நடுவர் நிலை. *a. see* magisterial.

**Magnanimous,** *a.* பெருந் தன்மையுடைய; மேதக்க. *n. abs.* magnanimity.

**Magnate,** *n.* பெருமான்; பெருமகன்; வணிக இளங்கோ.

**Magnesia,** *n.* 'வாலிமம்' (மக்னீசியம்) என்னும் உலோகத்தின் நீறு; 'வாலிம' உயிரகி.

**Magnesium,** *n.* 'வாலிமம்' என்னும் உலோகம்.

**Magnet,** *a.* காந்தம்; காந்த ஊசி. magnetic. *n.* magnetic field, காந்த மண்டலம். *n. abs.* magnetism, காந்தக் கவர்ச்சி. *v.* magnetize, காந்தத்தன்மை யுண்டாக்கு.

**Magnification,** *n.* (magnify) உருவம் பெரிதாதல்; உருப் பெருக்கம்.

**Magnificent,** *a.* பகட்டழகுடைய; வண்ணப் பகட்டான; கண்ணைப் பறிக்கும் அழகு வாய்ந்த; சிறந்த. *n.* magnificence.

**Magnify,** *v.* பெரியதாகக் காட்டு; பெரிதுபடுத்து; மிகைப்படுத்திக் காட்டு; புகழ்ச்சி செய்.

**Magniloquent,** *a.* பகட்டாகப் பேசுகிற; முழக்கமான.

**Magnitude,** *n.* பருமன்; முக்கியத்துவம்; முதன்மை.

*magnum opus*, *n.* (ஒருவரின்) தலைசிறந்த படைப்பு.

**Magpie,** *n.* பறவை வகை; வீண் வம்பு பேசுபவர்.

**Mahogany,** *n.* மரவகை; 'செங் கருங்காலி'; 'செந்தேவ தாரு'.

**Mahout,** *n.* மாவுத்தன்; யானைப்பாகன்.

**Maid,** *n.* கன்னி; பெண்; வேலைக்காரி.

**Maiden,** *n.* சிறிய பெண். *a.* கன்னிக்குரிய; முதன் முதலில் செய்கிற. *n.* maidenhood, maiden head. *a.* maidenly, maidenish. *phr.* maid, of honour, (மன்னவைப்) பாங்கி.

**Mail,** 1. *n.* இரும்புச் சட்டை; கவசம். *v.* கவசம் அளி. 2. *n.* அஞ்சல் கட்டு; அஞ்சல் ஊர்தி. *v.* அஞ்சலில் அனுப்பு.

**Maim,** *v.* நொண்டியாக்கு; உறுப்புக் குறை செய்; முடமாக்கு.

**Main,** 1.*n.* வலிமை. 2. கடல்; உடற் பகுதி. 3. பெரிய குழாய். *a.* முதன்மையான; தலைமையான.

**Mainland,** *n.* பெருநிலப் பகுதி; கண்டம்; தலைநிலம்.

**Mainspring,** *n.* மூல வில்; உயிர்ப் பொறி; (மணிப்பொறியின்) மூல விசை.

**Mainstay,** *n.* முக்கிய ஆதாரம்.

**Maintain,** *v.* பேணு; போற்று; காப் பாற்று; நிலை நிறுத்து; தொடர்ந்து செயலாற்று; தொடர்ச்சிபேணு; விடாப்பிடியாகக் கொள்; பிடி முரண்டு செய். *n.* maintenance, காப்பாற்றுதல்; பிழைப்பு; பிழைப்புக் கான தேவைகள். *comb., n.* maintenance charges காப்புச் செலவு; பேணற் செலவு.

**Maistry,** *n.* (இந்திய வழக்கு) கண்காணி; 'கங்காணி'.

**Maize,** *n.* சோளம்; மக்காச் சோளம்.

**Majesty,** *n.* மாட்சிமை. *a.* majestic.

**Majer,** *n.* படையில் ஒரு பணி யாளர்; வயதுவந்தவர்; பெரிய தரம். *a.* பெரிதான; பெரும்படி யான; உயர் இனமான; மூத்த; பெரும் பான்மையான; வயது வந்த. (x minor)

**Major-domo,** *n.* (இளவரசன் அல்லது பெருமகன் மாளிகை) மேற்பார்வையாளர்; பணியாள் தலைவன்.

**Majority,** *n.* பெரும்பான்மை; பெரும்பாலோர்; முதிர் பருவ வயது; உரிமை நிறைவு; நிறை முதிர்வு; உரிமை வயது.

**Make,** *v.* (made) செய்; உண்டாக்கு; இயக்கு (make one do). *n .* உருவம்; தொழிலாக்கம். *phr.* n. Indian make, இந்தியாவில் செய்தது.

**Make-shift,** *n.* தற்காலிகப் பயனீடு; தற்காலிகச் சரக்கு.

**Make-up** *n.* (நடிகரின்) உடை ஒப்பனை; உரு ஒப்பனை; அணி ஒப்பனை.

**Making,** n ஆக்கம்; அந்த நிலை; செயலிடை நிலை.

**Malacca,** *n.* (மலாக்காவில் விளை யும்) கெட்டிப் பிரம்பு வகை.

**Maladjustment,** *n.* பொருத்தக் கேடு; தவறுதலான அமைப்பு.

**Maladministration,** *n.* திறமை யற்ற ஆட்சி; ஆட்சிக் குளறுபடி.

**Maladroit,** *a.* தவறான.

**Malady** *n.* நோய்; பிணி.

*mala fide, adv.* தீய எண்ணத் துடன். *n., a.* (செய்யப்பட்டது) (ஆன.) (x bonafide), உண்மை யற்ற; வஞ்சகமான; சூதான.

**Malapropism,** *n.* சொற்குளறுபடி; ஒலிக்குழப்ப வழக்கு.

**Malar,** *a., n.* கன்னத்துக்குரிய; கன்ன எலும்பு.

**Malaria,** *n.* முறைக் காய்ச்சல்; மலங்காய்ச்சல்; மலம்பளி. *a.* malarial, முறைக் காய்ச்சலுக் குரிய; முறைக்காய்ச்சலுக் கிடமான. (x antimalarial, முறைக்காய்ச்

சலுக்கெதிரான; முறைக் காய்ச்சல் தடையான.)

**Malcontent,** *a.* மனக்குறை யுடைய; கிளர்ச்சி செய்கிற. *n.* மனக்குறையுடையவர்; கிளர்ச்சி யாளர்.

**Male,** *a.* (x female) ஆண்பாலுக் குரிய. *n.* ஆண்.

**Malediction,** *n.* பழமொழி; தீங்கு; வசை மொழி.அagnetic, *n.* magnetic field.

**Malefactor,** *n.* தீம்பு செய்பவர். *n. abs.* malefaction.

**Maleficent,** *a.* தீவினை செய்கிற; பழி சூழ்கிற. *n.* maleficence.

**Malversation,** *n.* ஒதுக்கிப் பதுக்கல். கையாடல்.

**Malevolent,** *a.* துன்பம் விளை விக்கிற; பழியார்வமுள்ள. *n.* malevolence.

**Malformation,** *n.* தோற்றக்கேடு; பொருத்தமில்லாத அமைப்பு.

**Malice,** *n.* உள்ளப் பகைமை; வன்மம் கெட்ட எண்ணம். *a.* malicious.

**Malign,** *a.* தீய சிந்தனையுள்ள; துன்புறுத்தக்கூடிய. *v.* அவதூறு சொல்; புறங்கூறு. *a.* malignant, *n.* malignity.

**Malison,** *n.* பழமொழி.

**Mall,** *n.* கூரையிடப்பட்ட நடை வழி; கொட்டாப்புளி.

**Malleable,** *a.* தகடாக்கக் கூடிய; வளைவு நெளிவுக்குரிய; வளைந்து கொடுக்கிற. *n.* malleability.

**Mallet,** *n.* மரக் கொட்டாப்புளி.

*malleus, n.* (காதிலுள்ள) சுத்தி எலும்பு.

**malnutrition,** *n.* ஊட்டக் குறை; போதா ஊட்டம்; சத்துக் குறை உணவு; உணவுக்குறை; உணவுக் கேடு.

**Malpractice,** *n.* கெட்ட வழக்கம்; கவனக் குறைவான மருத்துவம்.

**Malt,** *n.* ஊறவைத்து அரைத்த மாவு. *v.* ஊறவைத்து மாவாக்கு. *n. pers.*malster. *s. n.* maltose, மாப்புளிப்புச் சத்து.

**Malthusian,** *a.* மால்தூஸ் என்பவரின் கொள்கை சார்ந்த; இனப் பெருக்கம் சார்ந்த.

**Maltose,** *n.* ஊறிய மாச்சத்தி லிருந்து எடுக்கப்பட்ட சர்க்கரை; ‘மாவெல்லம்’.

**Maltreat,** *v.* துன்புறுத்து; வருத்து. *n.* maltreatment.

**Mam(m)a, mammy,** *n.* தாய்; அம்மா (குழந்தைகள் வழக்கு)

**Mamma,** 1.*n.* (*pl.* mammae) பால்மடி; 2. *see* mama. *a.* mamary.

**Mammal,** *n.* ‘பால் உணி’ கருப்பை உயிர். *n. (pl.)* mammalia.

**Mammon,** *n.* பொருளிறைவன்; செல்வத்துக்குரிய கிரேக்க தெய்வம்; பணப்பூதம். *v.* mammonize, *n. abs.* mammonism, செல்வ வழிபாடு; செல்வப்பற்று.

**Mammoth,** *n.* (இறந்தொழிந்த தொல்காலத்திய யானையினும்

பெரிய) கம்பளி யானை. *a. adv.* மிகப்பெரிய.

**Mammy,** *n.* (கொச்சை வழக்கு) (*see* mammal).

**Mamul,** *a.* (இந்திய வழக்கு) வழக்கமான; நடப்பிலுள்ள; வாலாயமான; மரபு வழக்கான. *n.* வழக்கு மரபு.

**Man,** *n.* (*pl.* men) (*fem.* woman) மனிதன்; ஆடவன். *v.* (manned) (கப்பல் முதலியவற்றில்) ஆள் தளவாடம் நிரப்பு; நிறைவுபடுத்து. *n. abs.see* manhood. *n. coll. see* mankind, *comb. n.* man-of-war, போர்க் கப்பல். *see* manhole.

**Manacle,** *n.* தளை; கைவிலங்கு. *v.* விலங்கிடு.

**Manage,** *v.* நடத்து; செயலாட்சி செய்; வசப்படுத்து; சமாளித்துக் கொள்; சாதித்துக்கொள்; கையாடு; அடக்கியாள்; மேலாண்மை யாற்று. *a.* manageable, சமாளிக்கக் கூடிய; வசப்படுத்தற் கூடிய; இணக்கமான. *n.* management, செயலாட்சி; செயலாட்சியாளர் குழு; மேலாண்மை; மேலாண்மைக் குழு; செயலாட்சிப் பொறுப்பு. *n. pers.* manager, செயலர்; செயலாட்சியாளர்; மேலாள்; மேலாளர்.

**Mandarin,** *n.* சீன உயர் குடி மகன்.

**Mandatary,-tory,** *a., n.* கட்டளை பெற்ற(வர்); கட்டாய மாகச் செய்யவேண்டிய(வர்)

**Mandate,** *n.* பகரமாக நடத்திடும் உரிமை; செயலுரிமையாணை; உரிமைக் கட்டளை. *comb. n.* mandatory area, ஆட்சி யுரிமைப்பரப்பு; ஆட்சியுரிமை பெற்ற பகுதி.

**Mandolin(e),** *n.* ஒரு வகை இசைக்கருவி.

**Mandrake,** *n.* உறக்க மருந்துப் பூண்டு வகை.

**Mandrill,** *n.* பெரிய மனிதக் குரங்கு வகை.

**Mane,** *n.* (குதிரை, சிங்கம் ஆகியவற்றின்) பிடரி மயிர்.

**Man-eater,** *n.* கடுவாய்; சுறாமீன்.

**Manes,** n.*(pl.)* தென் புலத்தார்; மூதாதையர் ஆவிகள்.

**Manful,** *a.* மனவுறுதியுள்ள.

**Manganese,** *n.* உலோகப் பொருள் வகை; ‘கன்னுகம்’ (மங்கனகை).

**Manger,** *n.* குதிரை இலாயம்; மாட்டுக் கொட்டில்.

**Mangle,** *v.* சிதை; வெட்டிக் கிழி; அடித்துக் காயப்படுத்து; உருவத் தைக் குலை; பிழைபடப் பேசு. 2. *n.* (துணிமணிகள்) பெட்டி போடும் பொறி; மெருகுப் பெட்டி. *v.* பெட்டி போடு.

**Mango,** *n.* மாம்பழம்; மாங்காய்; மாமரம்.

**Mangrove,** *n.* கடற்றாழை; கடம்பு.

**Manhandle,** *v.* முரட்டுத்தனமாகப் பிடித்து இழு.

**Manhole,** *n.* (man) புதை சாக்கடை வாயில்; ஆள் இறங்கு வழி; புதை வழி; நிலநுழை வழி.

**Manhood,** *n.* (man) மனிதத் தன்மை; ஆண்மை; வீரம்; முழு வளர்ச்சிப் பருவம்.

**Mania,** *n.* கோட்டி; பைத்தியம்; மட்டுமீறிய ஆவல்.

**Maniac,** *n.* கோட்டிக்காரர்; வெறியர்.

**Manicure,** *n.* (கைவிரல் நகங்களை) அழகு படுத்துதல். *v.* (கைவிரல் நகங்களை) அழகு படுத்து.

**Manifest,** *a.* வெளிப்படையான; *v.* தெளிவாகக்காட்டு; விளக்கு; காணப்படு. *n.* (கப்பல்) சரக்குப் பட்டி. *n.* manifestation, *adv.* manifestly.

**Manifesto,** *n.* கொள்கை யறிவிப்பு; பொது அறிவிப்பு; விளக்க விளம்பரம்.

**Manifold,** *a.* பலவகை; பல; பற்பல; பலவகைப்பட்ட; பல படியான; பல்பயனுடைய. *n.* (தாள் முதலியன) பல் பயனுடை யது; பலபடி யெடுத்தற்குரிய தாள்; பல படியெடுத்தற்குரிய கருவிப் பொறி. *v.* படியெடு. *n. ag. impers.* manifolder, பலபடி யெடுக்கும் பொறி.

**Manikin,** n.(man) குள்ளன்.

**Manilla,** *n.* மணிலா சுருட்டு; மணிலா கொச்சக் கயிறு.

**Manipulate,** *v.* கையாற் செய்; திறமையாய்ச் செய் திறமையாய் நடத்து; சூழ்ச்சித் திறத்துடன் கையாளு. *n.* manipulation. *n. ag.*manipulator.

**Mankind,** *n.* (man) மனித இனம்.

**Manlike,** *a.* மனித குணங்களை யுடைய; ஆண்மையுடைய.

**Manly,** *a.* ஆடவர்க்குரிய; வீறுமிக்க. *n.* manliness.

**Manna,** *n.* இன்னுணவு; பாற்கஞ்சி; அமுதுநீர்; (யூதர்களுக்குப் பாலை வனத்தில் தெய்வ அருளால் அளிக்கப்பட்ட உணவு).

**Mannequin,** *n.* (கடைகளில் உடையணிந்து காட்டும்) பொம்மை உரு; ஆவி; கொல்லைப் பொம்மை.

**Manner,** *n.* வகை; வழிவகை; வகைமுறை; தினுசு; தோரணை; மாதிரி. *(pl.)* manners, நடத்தை; ஒழுக்கம். *a. neg.* mannerless.

**Mannerism,** *n.* செயற்கைப் பழக்கம்; போலிமரபு; தனிப்பட்ட புதுநடை.

**Mannish,** *a.* (பெண்பற்றிய வழக்கு) ஆண் போன்ற; போலியான.

**Manoeuvre,** *n.* போர் நடவடிக்கை; சூழ்ச்சித்திறச் செயல்; ஏய்ப்பு நடவடிக்கை. *v.* திட்டம்போடு; சூழ்ச்சித் திறமையுடன் செயலாற்று.

**Manometer,** *n.* அழுத்தும் வலிமையை அளக்கும்கருவி; அழுத்தமானி.

**Manor,** *n.* பண்ணை; பண்ணை மனை; பண்ணைத் தனியுடைமை. *a.* manorial. *(comb.) n.* manor-house.

**Mansion,** *n.* மாளிகை; பெரிய வீடு.

**Man-slaughter,** *n.* கொலை; (தற்செயலாக நிகழ்ந்த) மனிதக் கொலை. (*cf.* murder.)

**Mantel, Mantelpiece,** *n.* நெருப்புக் கணப்பினருகில் இருக்கும் தட்டு; தண்டயப் பலகை; தண்டய மரம்.

**Mantelet,** *n.* குட்டையான சட்டை; (பீரங்கி சுடுபவரின்) கவசம்.

**Mantis,** *n.* (பூச்சிகளைத் தின்னும்) பெரிய பூச்சி வகை.

**Mantle,** *n.* மேல் அங்கி; போர்வை; விளக்கினத் திரை; மெல்லிய வலை; மெல்வலை; துகில் வலை. *v.* மூடு; அங்கியைப் போர்த்து. *comb. n.* mantlelamp, வெண்டழல் விளக்கு.

**Mantua,** *n.* மேல் அங்கி.

**Manual,** *a.* கையால் செய்யப் பட்ட. *n.* சிறு 'புத்தகம்; கைப் புத்தகம். *comb. n.* manual-training. கைவினைப்பயிற்சி. manual labour, கைப்பாடு; உடலுழைப்பு.

**Manufacture,** *n.* கைத்தொழில்; செய்தொழில்; இயந்திரத் தொழில், *v.* உண்டுபண்ணு; செய்; கைத் தொழிலால் விளைவு; படைத் துருவாக்கு; படைத்தாக்கு; ஆக்கிப் படை; புனைந்துரு வாக்கு; உண் டாக்கு. *n. ag.* manufacturer.

**Manumit,** *v.* (அடிமையை) விடுதலை செய். *n.* manumission.

**Manure,** *n.* உரம்; எரு; வளச்சத்து. *v.* எருப்போடு; செழிப்பாக உரமிடு. *comb. n.* green manure பசுந்தாள் உரம்; குழை உரம்; தழையுரம். mineral manure, கனிப் பொருள் உரம்; செயற்கை உரம். animal manure, விலங் கெரு; சாணி உரம்.

**Manuscript,** *a., n.* கையெழுத்துப் படி; வரைப்படி.

**Many,** *a., pron.* பலர்; பல.

**Map,** *n.* நாட்டுப் படம்; நிலப்படம்; திணைப் படம். *v.* திணைப்படம் வரை; திட்டம் போடு.

**Maple,** *n.* பசுமர வகை.

**Mar,** *v.* கெடு; பாழாக்கு.

**Marathon,** *n.* ஓட்டப் போட்டி.

**Marble,** *n.* சலவைக் கல்; மாக்கல்; கோலி. *n. (pl.)* கோலி (விளை யாட்டு). *v.* சலவைக் கல்லைப் போல் வண்ணம் தீட்டு. *a.* marbly.

**March,** 1.*n.* ஆங்கில ஆண்டின் மூன்றாவது மாதம். (ஏறத்தாழ மாசி 15 முதல் பங்குனி 15 வரை). 2. *n.* (நாடுகளுக்கிடை) எல்லை; எல்லைப்புறம். *n. pl.* marches, எல்லைப் பகுதிகள். 3. *n.* அணி வகுத்து நடத்தல்; அணிவகுத்துச் செல்லல்; படையணிச் செலவு; படைச்செலவு; அணிச்செலவு. *v.* அணிவகுத்து நட; முன்னேறு; முன்னேறச் செய். *n. pers.* marcher, எல்லைப் புறவாழ்நர்.

**Marchioness,** *n.* (*see* Marquis)

**Marconigram,** *n.* கம்பியில்லாத் தந்திச் செய்தி.

**Mare,** *n.* (*masc*, horse) பெண் குதிரை. *phr.* mare's nest, மிகச்

சிறந்ததெனத் தவறாக நம்பப் படுவது.

**Margarine,** *n.* போலி வெண்ணெய்.

**Margin, Marge,** *n.* ஓரம்; கரை; ஓரத்தில் எழுதாது விடப்பட்ட பாகம். *v.* ஓரங்களில் குறிப்புகள் எழுது. *a.* marginal. *n. pl.* marginalia, ஓரக் குறிப்பு.

**Margosa,** *n.* வேப்ப மரம்; வேம்பு.

*mariage de convenance phr. n.* காதலில்லா மணம்; செல்வ வாழ்வு அவாவிய மணம்.

**Marigold,** *n.* பொன்னிற மலர்களுடைய தோட்டச் செடிவகை.

**Marine,** *a.* கடலுக்குரிய; கடல் துறை பற்றிய; கப்பல் பற்றிய; கடற்படைச் சார்பான; கடற்படையில் வேலையாயிருக்கிற. *n.* கடற்படை; கடற்படை வீரன். *n. pers* mariner.

**Marionette,** *n.* சூத்திரத்தால் ஆடும் பொம்மை; (play) பொம்மலாட்டம்; பாவைக் கூத்து.

**Marish,** *a., n.* சதுப்பு நிலமான (இடம்).

**Marital,** *a.* திருமணத்துக்குரிய.

**Maritime,** *a.* கடலின் அருகில் வாழ்கிற அல்லது அகப்படக் கூடிய; கப்பல் சார்ந்த.

**Mark,** *n.* இலக்கு; குறி; அடையாளம்; முத்திரை; மச்சம்; (மாணவர் தேர்வின்) மதிப்புக்குறி; திறக்கூறு; ஜெர்மன் நாணய வகை. *v.* அடையாளம் வை; விலைகளைக் குறி; கவனி. *pa. p.* marked, குறித்த. *pa. p. a.* marked, சிறப்புக்குறியுடைய; நன்கு தெரிகிற; தனிப்படக் குறிக்கப்பட்ட; முனைப்பான. *adv.* markedly, குறிப்பிடத் தகுந்தபடி. *n. pers.* marker, விளையாட்டிடங் குறிப்பவர்; கணக்கு வைக்கிறவர். *n. pers. see* marksman. *comb. n.* black mark, இகழ்க்குறி; கண்டனக்குறி. trade mark வாணிகக் குறியீடு. marked price, குறிப்பீட்டு விலை; வரை விலை.

**Market,** *n.* சந்தை; சந்தைக் கடை; கொடுக்கல் வாங்கல் களம்; விலைக்களம்; விற்பனைக்களம் வாணிகக் களம். *v.* விற்பனை செய்; விலைப்படுத்து. *a.* marketable, விற்கத்தக்க. *n.* marketing, கொண்டு விற்றல். *comb. n.* market-place சந்தையிடம். market price, நடைமுறை விலை.

**Marksman,** *n.* குறி தவறாது சுடுபவர்; இலக்கு வீரர். *n. abs.* marksmanship; இலக்காண்மை.

**Marmalade,** *n.* பழச்சாறு; பழக்குழம்பு.

**Marmoreal,** *a.* சலவைக் கல் போன்ற; சலவைக் கல்லினாலான.

**Maroon,** *n.* சிவப்புவண்ணம்; ஒரு வகை வான வெடி. *v.* தனிமையான ஒரு தீவில் குற்றவாளியை விட்டுவிடு; சோம்பித் திரி.

**Marquis, marquess,** 1. *n.* கோமகன். 2. வட்டக்கல் மோதிரம். 3. கூடாரம் *(fem.)* marchioness.

*n. abs.* marquisate. *n. (fem.)* marquise.

**Marriage,** *n.* (> marry) திருமணம். *a.* marriageable.

**Marrow,** *n.* எலும்புச்சோறு; தண்டெலும்பிலுள்ள பித்து; சிறந்த பகுதி.

**Marrowbone,** *n.* உட்சோறு உள்ள எலும்பு; முழங்கால்.

**Marry,** *v.* திருமணம் செய்து கொள். *n.* (*see* marriage).

**Mars,** *n.* போர்த் தெய்வம்; செவ் வாய் (கோள், தெய்வம்.) *a. see* martial.

**Marsh,** *n.* சதுப்பு நிலம்; சேறு. *a.* marshy. *phr.* marsh gas, சதுப்பு நிலத்தின் நச்சு ஆவி.

**Marshal,** *n.* படைத்துறைத் தலைவர் வகை.

**Marsupial,** *n.* மதலைப் பையுடைய ஆஸ்திரேலிய உயிரின் வகை; 'பைம்மா' வகை.

**Marsupium,** *n.* மதலைப் பை.

**Mart,** *n.* கடை; சந்தைச் சாவடி; விற்குமிடம்.

**Martial,** *a.* (mars) போருக்குரிய; வீரனான; போரில் விருப்ப முள்ள. *phr. n.* martial law படை ஆட்சிச் சட்டம்; போர்க் காலப் படைத்துறைச் சட்டம் *comb. n.* court-martial. படை ஆட்சிமுறை மன்றம்; படை ஆட்சிமன்றத் தேர்வு. *v.* படை மன்றத்தில் தேர்வு செய்.

**Martian,** *a.* செவ்வாய்க்குரிய. *n.* செவ்வாய் உலகில் வாழ்பவர்.

**Martyr,** *n.* உயர் குறிக்கோளுக்காக உயிர் விட்டோர்; தன் மறுப்பாளர்; உயிர் மறுத்தோர்; உயிர்த் தியாகி. *n. abs.*martyrdom.

**Marvel,** *n.* வியப்பு; வியப்புக் குரியது. *v.* வியப்படை. *a.* marvellous, வியக்கத்தகுந்த.

**Markian, marxist,** *a., n.* மார்க்சின் (பொதுவுடைமைக்) கொள்கை சார்ந்த(வர்); மார்க்சின் கொள்கையைப் பின்பற்று(பவர்.)

**Mascot,** *n.* நற்பேற்றுக்குரிய முன் குறி.

**Masculine,** *a.* ஆண்பாலுக்குரிய. *n.* ஆண்பால்.

**Mash,** *n.* சூடான கூழ்; கலப்பு. *v.* கூழாக்கு; அரை; பிசை.

**Mask,** *n.* முகமூடி; பொய் முகம்; மாற்றுரு; *v.* முகமூடியணி; மறை. *n. ag.* masker.

**Masochism,** *n.* கொடுமை யவாவும் சிற்றின்ப உணர்ச்சி வகை. *n. pers* -masochist.

**Mason,** *n.* கொத்தன்; கல்தச்சன். *a.* masonic, கல்தச்சு சார்ந்த; கொத்தர் வேலை சார்ந்த; உயர் கலை உலக மன்றம் சார்ந்த. *n. abs.* masonry, செங்கல் வேலைப்பாடு; கல் கட்டடம். *comb. n.* Free Mason's (club.) உயர்கலை உலக மன்றம். masonry drain, கட்டி வடிகால்.

**Masque** *n.* பொய் முகங்கள் கட்டி ஆடும் ஆட்டம்; தெருக்கூத்து; முகமூடி ஆட்டம்; முகமூடி ஆட்டக்காப்பியம். *conn. v. see* masquerade.

**Masquerade,** *n.* பொய்முகங் கொண்டு ஆடும் கூத்து. *v.* ஏமாற்றித் திரி; மாற்றுருவில் ஆடு.

**Mass,** *n.* கட்டி; மெத்தை; மொத்தம்; பெரும்பான்மை; மக்கள் திரள்; பொதுமக்கள்; (இயல் நூல்) பொருள் திரட்சி. *v.* கூட்டு; சேர்; படைகளை ஒன்றுசேர். *a.* மிகப் பெரிய; மக்கள் திரளுக்குரிய.

**Massacrea,** *n.* கூட்டுக் கொலை (செய்தல்). *v.* மொத்தமாகக் கொல்; வதைத்துக் கொல்.

**Massage,** *n.* (உடல் தசை பிடித்தல். *v.* தசை பிடித்து விடு.

**Masses,** *n. (pl.)* மக்கள் திரள்.

**Massive,** *a.* (> mass) *a.* மிகப் பளுவான; மிகப் பெரிய பருமனான.

**Mast,** *n.* பாய்மரம். *v.* பாய்மரங் கட்டு.

**Master,** *n.* தலைவர்; மேலாள்; பணி முதல்வர்; ஆசிரியர்; தேர்ச்சியாளர்; முதல்வர்; பல்கலைக் கழகத்தலைமைப் பட்டம். *v.* ஆட்சிகொள்; கையாண்டு வெற்றியடை; அடக்கி யாள்; தேர்ச்சி பெறு; வயப்படுத்து. *a.* masterful, masterly, திறமை மிக்க; பிடி முரண்டுடைய; ஆண்மையுடைய; முதன்மைத் திறமுடைய; வளமை வாய்ந்த; கை தேர்ந்த. *n. abs.* mastery, தேர்ச்சி; வெற்றி; ஆட்சித் தலைமை; முதிர்திறம். *comb. n.* master piece, தலைசிறந்த நூல்; தலை சிறந்த படைப்பு. *n.* master-stroke, திறமிக்க செயல்.

**Mastic,** *n.* (சாயத்துக்கான) பசை; மரவகை; பசை மண் வகை.

**Masticate,** *n.* பல்லால்; அரை; சவை; மென்று தின். *n.* mastication.

**Mastiff,** *n.* (தொங்குகின்ற காது, உதடுகளையுடைய) பெரிய வேட்டை நாய்வகை.

**Mastodon,** *n.* இறந்தொழிந்த பண்டை யானை வகை.

**Mat,** *n.* பாய். *v.* பாயால் மூடு; அடர்த்தியாக வளர்; பாய்முடை; பின்னு. *n.* matting, பாய்போல் பின்னப்பட்டது; பாய்.

**Match,** 1. *n.* சரிசமம்; சரி எதிரி; போட்டி; போட்டியாட்டம்; திருமண இணைவு; திருமணம்; மணத் துணைவர்; சரியான மணத் துணை. *v.* இணையாகு; இணை ஒட்டு. மணம் செய்து வை. 2. *n.* தீக்குச்சி (1) *a.* matchable. *a. (neg.)* matchless. இணையற்ற. *s. n. pers. impers.* matcher, சமமானது; சமமானவர். *comb. n. pers.* match-maker., திருமணத் தரகன். (2) *n. (comb.)* match-lock, துப்பாக்கிவகை. matchhood, சுள்ளிக்குச்சு, match box, தீப்பெட்டி.

**Mate,** *n.* தோழன்; கூட்டாளி; இணைக்கு இணை; ஆண் அல்லது பெண்; கப்பல் தலைவன்; கையாள். *v.* மணமுடி; இணைந் திரு; பொருந்து; பொருத்து; இணை சேர்.

*mater familias, n.* குடும்பத் தாய்.

**Material,** *a.* பருப்பொருளான; பருப்பொருள் தன்மையுடைய;

முக்கியமான; கவைக்குதவுகிற; உடல் சார்ந்த; உடல் வாழ்க்கை யொட்டிய. *n.* மூலப் பொருள்; செய்முதற் பொருள்; கருவி; முதற் காரணம். *n. abs.* materialism (ஆவியியல் உயிரியல் மறுத்த) பருப்பொருட் கோட்பாடு, இயற் பொருள் வாதம். *n. pers.* materialist. *a.* materialistic. *v.* materialize, பருப்பொருளாகு; உருப்பெறு; உண்மையாகு; கைகூடு. *n.* materialization. *adv.* materially, முக்கியமாக; மிகுதியாக; உருவாக.

*materia medica*, *n.* மருந்துச் சரக்குகள்; மருந்துச் சரக்கு விளக்க நூல்.

**Maternal,** *a.* தாய்க்குரிய; தாய் சார்ந்த; தாய்வழியான; தாய்மை சார்ந்த.

**Maternity,** *n.* தாயாகுதல்; தாய்மை; சூல்நிலை; கருக்கோள் நிலை; சினை நிலை. *comb. n.* maternity hospital, பேறுகால மருத்துவமனை. maternity relief, பேறுகாலத்துயருதவி. maternity home, தாய்மைப் பேணகம்.

**Matey.** *a.* நட்பாயுள்ள; கூடிப் பழகும் இயல்புள்ள.

**Mathematics,** *n.* கணக்கியல். *a.* mathematical. *n. pers.* mathematician.

**Matins,** *n.* பறவைகளின் பாட்டு; பகல் வழிபாட்டுப் பாடல்; பகல் வழிபாடு.

**Matinee,** *n.* காலை அல்லது பிற்பகலில் நடக்கும் படக்காட்சி.

**Mating,** *n.* கூட்டம்; இணைப்பு.

**Matriarch,** *n.* குடும்பம் அல்லது இனத்தின் தலைவி; ஆட்சித் தாய்.

**Matriarchy,** *n.* தாய் ஆட்சி; பெண் ஆட்சி; தாய் வழி மரபு; தாய் வழி உரிமை; (மலையாள நாட்டு) மருமக்கள் தாயம்.

**Matricide,** *n.* தாய்க்கொலை.

**Matriculate,** *v.* பல்கலைக் கழக நுழைவுத் தேர்வில் தேர். *n.* Matriculation. பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு.

**Matrimony,** *n.* திருமணச் சடங்கு திருமண உறவு. *a.* matrimonial.

**Matrix,** *n.* (*pl.* ixes,-ices.) கருப்பை; பிறப்பிடம்; மாணிக்கங் கள் நிறைந்த பாறை; எழுத்துகள் முதலியன வார்க்கும் அச்சு.

**Matron,** *n.* தாய்ப்பருவ மாது; அரிவை; பேரிளம் பெண்; மேற் பார்வை யிடுபவள்; (கன்னியர் மாடத் தலைவி. *a.* matronly; matronlike.

**Matted,** *a.* பாய்விரித்த; சடை யிட்ட; சிக்குற்ற.

**Matter,** *n.* பொருள்; பருப்பொருள்; இயற் பொருள்; செய்தி; முக்கிய செய்தி; சுருக்கம்; மூலப்பொருள்; பொருண்மை (matter and manner, பொருண்மையும், முறைமையும்) காரியம். *v.* முக்கியமாகு; அவசியமாயிரு. *n. phr.* matter of course, matter of fact, எதிர்பார்த்த ஒன்று,

வெளிப்படையாகத் தெரிந்தது; உண்மை நிகழ்ச்சி.

**Mattock,** *n.* மண்வெட்டி வகை.

**Mattress,** *n.* மெத்தை.

**Mature,** *a.* பழுத்து. *v.* பழுக்க வை; விளைய வை; முதிர வை; உரிமை பெறுவி; முதிர்வு பெறு; முதிரு; பருவமடை; நிறைவுறு; நிறைவேறப்பெறு; (பத்திர முதலியன) உரிமை நிறைவேறு (x immature, *cf.* premature.) *n. abs.* maturity. *v.* maturate. *n. vbl.* maturation.

**Maudlin,** *a.* எளிதில் கண்ணீர் விடுகிற; சிணுங்குகிற; அழுங்கு கிற; (குடித்துப் போதையில்) அழுகிற.

**Maul,** *n.* முளையடிக்கும் பெரிய சம்மட்டி. *v.* அடித்துக் காயப் படுத்து; முரட்டுத்தனமாகக் கையாடு.

**Maund,** *n.* மணங்கு; மணு; மனு (எட்டு வீசை நிறை).

**Mausoleum,** *n.* மாடம்; கல்லறைக் கூடம்

**Mauve,** *n.* ஊதா நிறம். *a.* ஊதா நிறமான.

**Maw,** n வயிறு; (அசை போடும் விலங்குகளின்) இரைப்பை.

**Mawkish,** *a.* மணமில்லாத; வெறுக்கச் செய்கிற.

**Maxilla,** *n.* (*pl.*-ae) *n.* மேல் தாடை எலும்பு. *a.* maxillary.

**Maxim,** *n.* முதுமொழி; நன்னடத்தைக்குரிய மேற் கோளுரை.

**Maximum,** *n.* (*pl.* maxima) உச்சம்; பரும எல்லை; மீஎல்லை (x minimum). *a.* உச்ச அளவான; மிக உயர்ந்த. *a.* maximal. *v.* maximize, உச்ச மிகுதிப் படுத்து; பெரிதாக்கு; உயர்ந்த நிலைக்குக் கொண்டுவா.

**May,** 1. *v.* *(pa. t.* form. might) கூடும்; ஆகலாம். (may come etc. வரலாம்). 2. ஆங்கில ஆண்டில் ஐந்தாவது மாதம். 3. *n.* ஒரு வகைப் பூ; கன்னிப் பெண். 2. May day, மே மாதம் முதல்நாள் விழா; மகிழ்ச்சி நாள்; தொழிலாளர் நாள்.

**May pole,** மேவிழா ஆட்டத் திற்கான நடுக்கம்பம். *n.* May queen, மே மாத விழாவில் அழகியாகத் தேர்ந்தெடுக்கப் படும் நங்கை.

**May be,** *a., v.* ஒரு வேளை.

**Mayor,** *n.(fem.)* mayoress, முதல்தர நகரவையின் தலைவர்; மாநகர் முதல்வர்; நகர மாமுதல்வர். *n. abs.*mayorality.

**Mazdoor,** *n.* (இந்திய வழக்கு) கூலிக்காரர்; தொழிலாளி.

**Maze,** *n.* மிகுந்த சிக்கல்களை யுடைய வழி. *v.* தடுமாறச் செய்; திகைக்க வை. *a.* mazy.

**Me,** *pron,* (1) (இரண்டாம் வேற்றுமை) என்னை; எனக்கு. etc.

**Mead,** 1.*n.* தேன் ; தேறல்; இனிய குடிவகை; பாராட்டுதல். 2. *see* meadow.

**Meadow,** Mead, (poet) *n.* பசும்புல் வெளி. *a.* meadowy.

**Meagre,** *a.* ஒல்லியான; சாரமற்ற; குறைந்த; வளமற்ற. *n.* meagreness.

**Meal,** *n.* உண்டி; உணவு; மாவு; ஒருவேளைக் கறவைப் பால். *v.* உணவு அருந்து. *(comb.)* mealtime, உணவு வேளை.

**Mealy,** *n.* மாவு போன்ற; மென்மை யான. *(comb.) a.* mealy mouthed, கவடமாகப் பேசுகிற.

**Mean,** 1. *n.* சராசரி; இடைநிலை. 2. *n. (pl.)* வகை துறை; கருவி; பிழைப்பு வழி; வரும்படி. *a.* சராசரியான; பொது நிலையான; 3. *a.* தாழ்வான; இழிந்த; ஏழ்மை யான; கஞ்சத்தனமான. 4. *v.* கருது; எண்ணு; உட்கோள் உடைய ராயிரு; பொருள் கொள்; பொருள் படு. (3) *n.* meanness (4) *n.* (*see* meaning.)

**Meander,** *n.* (ஆறு) வளைவு; நெளிவு; சுற்று வழி. *v.* அலைந்து திரி; வளைந்து செல்; வளைந் தோடு. *a.* meandrine, meandering.

**Meaning,** *n.* (mean-4) பொருள்; கருத்து; உட்கோள்; உள் எண்ணம். *a.* பொருள் தருகிற. *a. (neg.)* meaningless.

**Meantime, Meanwhile,** *n.* இடைப்பட்ட வேளை. *adv.* இடை வேளையில்; அச்சமயத்தில்.

**Measles,** *n. (pl.)* தட்டம்மை; புட்டாளம்மை; சின்னம்மை; பன்றிகளுக்கு வரும் ஒருநோய். *a.* measly.

**Measure,** *n.* அளவு; படி; தாளம்; பொது அளவு; ( (ge*n. pl.*) (மன்றச்சட்ட) நடவடிக்கை. *v.* அள; மதிப்பிடு; கணித்தறி; குறி; பயனை ஒப்பிடு. *a.* measurable, *n.* measurement. *pred. a* measured, அளவான; தாளத்துக்குச் சரியான; நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்த. *a. neg.* measureless, அளவற்ற; எல்லை யற்ற. *comb. n.* measurement books. அளவுச் சுவடிகள்.

**Meat,** *n.* ஊனுணவு; இறைச்சி உணவு. *a.* meaty, சதைப் பற்றுள்ள.

**Mechanic,** *n.* கைத்தொழில் வேலைக்காரர்; இயந்திர வேலைக் காரர்; இயந்திரக் கம்மியர்; பொறிக் கம்மியர். *n. (pl.)* mechanics, பொறித்துறை; பொறித்துறை நூல். *a.* mechanic(al). *n. pers.* mechanician.

**Mechanism,** *n.* இயந்திரத்தின் அமைப்பு; இயந்திர நுட்பம். *n. pers.* mechanist, இயந்திர நுட்பம் அறிந்தவர்.

**Mechanize,** *v.* இயந்திரங்கள் போல் ஒழுங்குபடுத்து; இயந்திர மயமாக்கு.

**Medal,** *n.* பதக்கம்.

**Medallion,** *n.* பெரிய பதக்கம்.

**Medallist,** *n.* பதக்கங்கள் செய்பவர்; பதக்கம் பரிசு பெற்றவர்.

**Meddle,** *v.* குறுக்கிடு; தலையிடு. *n. ag.*meddler. *a.* meddlesome. *n.* meddlesomeness.

**Media,** *n.* (*pl.* mediate) குருதிக் குழாயின் உள் தோல்.

**Mediaeval,** *a.* (வரலாறு) இடைக் காலத்திய; இடையிருட்காலத்திய -(கி.பி. 5 முதல் 15 நூற்றாண்டு வரை). *n. abs.* mediaevalism, இடைக்காலப் பழைமை; பிற் போக்கு நிலை.

**Medial,** *a.* இடையிலுள்ள.

**Median,** *a.* இடைப்பட்டதான; மையமான. *n.* இடை எண்.

**Mediate,** *v.* இருவரிடையே இணக்கம் உண்டுபண்ணு; நடுத் தீர்ப்பளி. *a.* இடைப்பட்ட. *n.* mediation. *n. pers.* mediator, நடுவர். *(fem.)* mediatrix. *a.* mediatory.

**Medicable,** *a.* குணப்படுத்தக் கூடிய.

**Medical,,** *a.* மருந்துசார்ந்த; மருத்துவத்துறை சார்ந்த. *comb. n.* medical stores மருந்துச் சாலை. medical jurisprudence, மருத்துவ அறிவுசார்ந்த சட்டத் துறை.

**Medicament,** *n.* குணப்படுத்தும் மருந்து.

**Medicate,** *v.* மருந்துடன் கல; மருந்துகொடு. *n.* medication.

**Medicine,** *n.* மருந்து; மருத்துவத் துறை. *a.* medicinal, மருந்து சார்ந்த; குணப்படுத்துகிற.

**Mediocre,** *a.* மட்டமான; இடைத் தரமான; உயர்வல்லாத. *n.* mediocrity.

**Meditate,** *v.* உள் ஆராய்; ஆய்ந்துநினை. *n.* meditation. *a.* meditative.

**Mediterranean,** *n. a.* நடுநிலக் கடல் (சார்ந்த). (climate) நடுநிலக்கடல் பகுதிக்குரிய சமதட்ப வெப்பநிலையுடைய.

**Medium,** *n.* (*pl.* mediums, media) ஊடுபொருள் வாயிற் பொருள்; ஊடகம்; வாயில்; இயங்குகளம்; நடுத்தரம்; கொடுக்கல் வாங்கல்; இடை யீட்டுப் பொருள்; ஆவி யுலகுடன் ஊடாடுபவர்; இடையாள்; ஊடாள்; ஊடாடி. *a.* நடுத்தரமான.

**Medley,** *n.* கதம்பம்; குழப்பம்.

*medulla, n.* சுழிமுனை மையம்; நரம்புத்தண்டின் மேல் முனை. *a.* medullary.

**Meed,** *n.* ஊதியம்; கூலி.

**Meek,** *a.* அமைந்த; அமரிக்கை யான; எதிர்ப்பற்ற. *n.* meekness. *adv.* meekly.

**Meet,** 1. *v.* (met) சென்று கூடு; சந்தி; எதிராகு; இணைசேர். 2. *a.* தகுதியான; ஏற்ற. (1) *n.* meeting, கூட்டம்; சந்திப்பு (2) *n.* Meetness. தகுதி. *phr. v.* meet with தற்செயலாகக் கண்ணுறு; எய்தப் பெறு; அடை; சரியாகு; பொருந்து.

**Megalith,** *n.* பெரிய கல்.

**Megalomania,** *n.* தற்பெருமை யுணர்ச்சி; தன்னைப் புகழ்தலில் ஆர்வம். *n. pers.* megalomaniac.

**Megaphone,** *n.* குரல்பெருக்கி; ஒலிபெருக்கி.

**Megapod,** *a.* பெரிய கால்களுள்ள.

**Megatherium,** *n.* இறந்தொழிந்த பெரிய விலங்கு வகை.

**Melancholia,** *n.* மனநோய் அழுங்குநோய்.

**Melancholy,** *n., a.* சோர்வு(டைய); சடைவு(டைய); முகவாட்டம் (உடைய), *a.* melancholic.

**Melanism,** *n.* தோல் கறுப்பாதல்.

*melee, n.* கைகலப்பு; கூட்டம்; (தொண்டர் படை) கூட்டணி.

**Meliorate,** *v.* சீர்திருத்து; உயர் வாக்கு. *n.* melioration. *conn. see* amelioration.

**Melliferous,** *a.* தேன் துளிக்கிற.

**Mellifluous, Mellifluent,** *a.* தேன் போல் ஒழுகுகிற; மெல்லிய; இனிய.

**Mellow,** *a.* பக்குவமான; கனிந்த; நயமான; இனிய; பழுப்புத் தோற்றமுடைய. *v.* பக்குவ மடைந்து மென்மையாகு; கனிவுறு; பழுப்பு நிறமாகு. *n.* mellowness.

**Melodious, Melodist,** (*see* melody.)

**Melodrama,** *a.* சோகநாடகம்; உணர்ச்சி முனைந்த நாடகம்; சோகம்; உணர்ச்சி முனைப்பு. *a.* melodramatic, *n. pers.* melodramatist.

**Melody,** *n.* இசையினிமை. *a.* melodious, காதுக்கினிய. *n.* melodiousness. *n. pers.* melodist பண்ணிசை வல்லுநர்.

**Melon,** *n.* முலாம் பழம்.

**Melt,** *v.* (melted, melted or molted) உருகு; உருகச் செய்; உருக்கு; இளகு; கனிவி; இளகுவி; அழிந்து போ; மறை. *n.* melting. point, (வெப்பதட்பமானியின்) உருகுநிலை.

**Member,** *n.* உறுப்பு; உறுப்பினர்.; பகுதி; கூறு. *n. abs.*membership. *conn. v. neg. see* dismember.

**Membrane,** *n.* தொலி; மென் றோல்; சவ்வு; தாள்; தாள் போன்ற பொருள். *a.* membranous, membran(ac)eous.

**Memento,** *n.* நினைவுக்குறிப்பு; நினைவுச் சின்னம்.

**Memo,** *n.* (சுருக்கம்; *see* memorandum) நினைவுக் குறிப்பு; சுருக்கக் குறிப்பு. *(comb.) n.* government memo அரசறிவிப்பு.

**Memoir,** *n.* வாழ்க்கைக் குறிப்பு.

*memorabilia, n. (pl.)* நினைவில் வைக்கத்தக்கவை.

**Memorable,** *a.* நினைவில் வைக்கத் தகுந்த; எளிதில் மறக்க முடியாத.

**Memorandum,** *n.* (*pl.* memoranda) (சுருக்கம்; memo) நினைவுக் குறிப்பு. *comb. n.* memorandum of association, சங்க அமைப்புக்குறிப்புகள்.

**Memorial,** n.(memory) நினைவுச் சின்னம்; நினைவுக் கூடம்; நீண்ட விண்ணப்பம். *a.* நினைவில் வைத்துக் கொள்ள உதவுகிற.

**Memory,** *n.* நினைவு; நினை வாற்றல். *v.* memorize, உருவிடு. *conn. see* memorial.

**Men,** *n. (pl.)* (*see* man).

**Menace,** *n.* அச்சுறுத்து; பேரிடர்; பேரிடர் அறிகுறி. *v.* அச்சுறுத்து; இடர்குறி. *a.* menacing.

**Menagerie,** *n.* விலங்குக் காட்சிச் சாலை.

**Mend,** *v.* திருத்து; திருந்து; (எழுது கோல் முதலியன) சரிசெய்; சீவு.

**Mendacious,** *a.* வழக்கமாகப் பொய் சொல்லுகிற. *n.* mendacity.

**Mendelism,** *n.* மெண்டலின் கொள்கை; பண்பு மரபுக் கோட்பாடு.

**Mendicant,** *a.* இரந்து வாழ்கிற. *n.* இரவலன் ; பிச்சைக்காரன். *n. abs.* mendicancy mendicity. இரத்தல் வாழ்க்கை.

**Menial,** *a.* ஊழிய வேலை செய்கிற; இழிவான. *n.* ஊழியர்; கீழ்த்தர வேலையாள்; தொழும்பர்; குற்றேவலர்; ஏவலர்.

**Meninges,** *n. (pl.)* (*sing.* menix) (மூளையையும் தண்டு வடத்தையும் மூடியிருக்கும் மூன்று) போர்வைகள்.

**Meningitis,** *n.* மூளைப்போர்வை அழற்சி.

**Meniscus,** *n.* பிறை போன்ற வில்லைக் கண்ணாடி.

*mensem, phr. see* per mensem.

*menses n. (pl.)* (sing. mensus), மாதவிடாய்; மாதவிலக்கம்; தீண்டல்.

**Menstrual,** *a.* மாதந்தோறும் நிகழ்கிற; மாதவிடாய்க்குரிய.

**Mensurable,** *a.* அளக்கக் கூடிய.

**Mensural,** *a.* அளவுக்குரிய.

**Mensuration,** *a.* உரு அளவை நூல்.

**Mental,** *a.* மனத்துக்குரிய. *adv.* mentally. *n.* mentality, மனப் போக்கு; மனப்பாங்கு.

**Menthol,** *n.* பச்சைக் கர்ப்பூரம்.

**Mention,** *v.* குறிப்பிடு; தெரிவி; கூறு. *n.* குறிப்பீடு; குறிப்பு.

**Mentor,** *n.* அறிவுரையாளர்; எச்சரிக்கையாளர் நட்பறிஞர்.

**Menu,** *n.* உணவுப் பட்டி.

**Mephistopheles,** *n.* சைத்தான்; பேயுலக இறைவன் *a.* mephistophelean.

**Mercantile,** *a.* வாணிகஞ் சார்ந்த. *comb. n.* mercantile marine வாணிகக் கப்பல்கள் (தொகுதி).

**Mercenary,** *a.* கூலிக்கு வேலை செய்கிற; பண அவாவுள்ள. *n.* பணத்திற்கு உழைப்பவர்; கூலிப் படையாள்.

**Mercer,** *n.* துகில் வாணிகர். அறுவை வணிகர்.

**Mercerize,** *v.* (பருத்தி நூலைச்) சாயந் தோய்க்க முன்னொருக்கஞ் செய். *a.* mercerized, பட்டைப் போல் பளபளப்பாக்கிய.

**Merchandise,** *n.* வாணிகச் சரக்கு. *comb. n.* merchandise marks, வணிகக் குறிகள்.

**Merchant,** *n.* வணிகர். *a.* வாணிகத்துக்குரிய. *comb. n.* merchant shipping, வணிகக் கப்பல்கள் (தொகுதி அல்லது துறை.)

**Merchantman,** *n.* வாணிகக் கப்பல்.

**Merchant marine,** *n.* வாணிகக் கப்பற்படை.

**Merciful, merciless,** *a.* (*see* mercy).

**Mercury,** *n.* பாதரசம்; புதன் எனும் வான் கோள்; தேவதூதன். *a.* mercurial, பாதரசம் சேர்ந்துள்ள; புதன் கோளுக்குரிய; மிகு விரைவான; எளிதில் மாறுகிற. *comb. n.* mercury (vapour) lamp, பாதரச ஆவி விளக்கு; நீல ஒளிவிளக்கு; mercuric oxide, (red) oxide of mercury, பாதரச செந்தூரம்; சாதிலிங்கம்.

**Mercy,** n இரக்கம்; பரிவு; மன்னிப்புப் பண்பு. *a.* merciful. *(neg.)* merciless, இரக்கமற்ற; கொடிய.

**Mere** 1. *n.* குளம்; குட்டை. 2. *a.* கலப்பில்லாத; தனித்த; வெறுமை யான. (2) *adv.* merely, வெறுமனே.

**Meretricious,** *a.* பகட்டான; போலியான.

**Merge,** *v.* இரண்டறக் கல; ஒன் றாக. *n.* mergence; (*see* merger.)

**Merger,** *n.* (merger) இணைத்தல்; இரண்டறக் கலத்தல்; கலப் பிணைவு; இணைப்பு; பிணைப்பு; ஒரு நிலையமாதல்.

**Meridian,** *n.* நடுப்பகல்; வானுச்சம்; வானிலை உச்சம்; (நில நூல்) நடுநிரல் கோடு.

**Merit,** *n.* தகுதி; மதிப்பு; நலன். *(pl.)* நற்பண்புகள்; குணங்கள். (x demerits.) *v.* தகுதியாக்கு; ஊழியத்தால் உரிமை பெறு. *a.* meritorious.

**Merlin** *n.* பருந்து வகை.

**Mermaid(en),** *n.* கடற் கன்னி.

**Merry,** *a.* களிப்பான; மகிழ்ச்சி விளைவிக்கிற. *n.* merriment, வேடிக்கை. *n.* merry-Andrew, களிமகன்; கோமாளி.

**Merry-go-round,** *n.* சுழலும் இராட்டினம்; சுழல்குடை.

*mesalliance***,** *n.* தகாமணம்.

*mesdames, n. pl.* (*see madame.*)

*mesdemoiselles, n. pl.* (*see madamoiselle.*)

**Mesems,** *v.* (பழையவழக்கு) எனக்குத் தோன்றுகிறது.

**Mesh,** *n.* வலைக்கண். *(pl.)* வலை. *v.* வலையில் சிக்கவை. *a.* meshy. (*v. see* enmesh.)

**Mesmerism,** *n.* வசிய வித்தை. *n. pers.* mesmerist. *a.* mesmeric. *v.* mesmerize, உள் ஆற்றலால் மயக்கு. *n.* mesmerization.

**Mesocarp,** *n.* நடுத்தோல்; சதை.

**Mesozoic,** *a.* (மண்ணியல்) நடு உயிரூழிக்குரிய.

**Mess,** 1. *n.* உணவு ஏற்பாடு; உணவு அரங்கம்; உணவுப் பந்தி; உணவுத் தவணை. *n.* 2. வெறுப்பைத்தரும் கலவை; குழப்பம்; தாறுமாறு. *v.* குழப்பு; அழுக்காக்கு. (2) *a.* messy.

**Message,** *n.* தூதுச் செய்தி; தூது; செய்தி; தகவல்.

**Messenger,** *n.* தூதன்.

**Messish,** *n.* (யூதர், கிறித்துவ மரபு) திருமகன்; இறைமகன் (கிறித்து)

**Metabolism,** *n.* உயிர்ப் பொருள் மாறுபாடு. *a.* metabolic. *v.* metabolize.

**Metal,** *n.* உலோகப்பொருள், 'பொன்மம்'; சரளைக் கல். பாதைகளுக்கிடும் கப்பி. *(pl.)* இருப்புப் பாதை. *v.* பாதையில் கற்பாவு. *a.* metallic, உலோகத் தாலான; கணீர் ஓசையுடைய. *n. pers.* metallist, உலோக வேலையாள்; உலோக விற்பனன்.

**Metallurgy,** *n.* உலோகத்தொழில்; உலோகத்தைப் பிரித்தெடுத்தல். *n. pers.* metallurgist.

**Metamorphic,** *a.* உருவம் மாறும் இயல்புடைய.

**Metamorphose,** *v.* (உருவம் அல்லது தன்மையில்) முழு மாறுதலடை. *n.* metamorphosis, *(pl.)* metamorphoses, உருமாற்றம்.

**Metaphor,** *n.* (Figure of speech) உருவகம். *a.* metaphoric(al.)

**Metaphysics,** *n.* புலங்கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி நூல்; நுணுக்க ஆராய்ச்சி நூல்; மறை பொருளாராய்ச்சி நூல். *a.* metaphysical. *n. pers.* metaphysician, மறை நூலறிஞர்; அகப்பொருளறிஞர்.

**Metastasis,** *n.* ஓர் உறுப்பி லிருந்து மற்றொன்றுக்கு நோய் மாறுதல்; ஒரு நோயிலிருந்து மற்றொன்றுக்கு மாறுதல்.

**Mete,** *v.* அள; படியள; பாத்திடு; பங்கிடு.

**Metompsychosis,** *n.* கூடு விட்டுப் கூடு பாய்தல்.

**Meteor,** *n.* எரிமீன்; வால்மீன். *a.* meteoric, திடு நிலையான; திடீர் வளர்ச்சியான; திடீர் ஏற்றம் வாய்ந்த.

**Meteorite,** *n.* விண்கல்; வான் கோளம் உருகி விழுந்த கல்.

**Meteorology,** *n.* வானிலை ஆராய்ச்சித்துறை; வானியல் நூல். *a.* meteorological. *n. pers.* meteorologist.

**Meter,** *n.* (பதின் கூற்று முறையில்) அளக்கும் கருவி; ஓர் அளவை. (*see* metre; ஃபிரஞ்சு நீட்ட லளவைக் கூறு; 39.37 அங்குலம்.)

**Methinks,** *v.* (*pa. form only,* methought) (பழ வழக்கு) எனக்குத்தோன்றுகிறது; நான் நினைக்கிறேன்.

**Method,** *n.* முறை; ஒழுங்கு. *a.* methodic(al) *n. see* methodist, *v. see* methodize.

**Methodist,** *n.* ஜான் வெஸ்லி நிறுவிய (கிறித்துவ உட் சமய) வகுப்பைச் சேர்ந்தவர். *n. abs.* Methodism.

**Methodize,** *v.* ஒழுங்கு செய்; முறைப்படுத்து. *n.* methodology, ஒழுங்கு முறை (ஆராய்ச்சி.)

**Methuselah,** *n.* 969 ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறப்படும் பண்டைப் பொற்கால மனிதர்.

**Methylated,** *a.* மர எண்ணெய் கலந்த. *comb. n.* methylated spirit, 'வடி சாராயம்'; எரி சாராயம்; 'எரி நீர்'.

**Meticulous,** *a.* நுட்பக் கவனிப்புடைய; நுண்ணிய.

**Metonymy,** *n.* ஆகுபெயர்; இலக்கணை. *n.* metonym.

**Metre,** *n.* 1. (செய்யுளிலக்கணம்) சீர். 2. *see* (meter) (1). (2). *a.* metric, metrical, சீர் சார்ந்த; யாப்புமுறை சார்ந்த; செய்யுள் வடிவான; செய்யுள் அமைதி யுடைய; பதின் கூற்றளவையான.

**Metropolis,** *n.* தலைநகர். *a., n.* metropolitan, தலைநகருக்குரிய (வரி); தலைமைச் சமயக் குழு.

**Mettle,** *n.* ஊக்கம்; சுறுசுறுப்பு; திறம். *a.* mettled, mettlesome.

**Mew,** *v.* (பூனை) கரை; புலம்பு; (பூனை போல்) கூச்சலிடு; மியா மியா என இரை.

**Mewl, Mule,** *v.* (பூனைபோல்) கரை; கத்து; ஊளையிடு.

**Miasma,** *n.* நச்சு வளி. *a.* miasmatic, miasmal.

**Mica,** *n.* அப்பிரகம்; காக்காய்ப் பொன்.

**Mice,** *n.* (s*ee* mouse.)

**Michaelmass,** *n.* திருத்தகு மைக்கேல் விழா நாள்.

**Mickle, Muckle,** *a., n.* (பழ வழக்கு) மிகுதி.

**Micra,** *n.* (*see* micron).

**Micro-analysis,** *n.* நுட்பப் பகுப்பாராய்ச்சி.

**Microbe,** *n.* அணு உயிர்; நுண்ணுயிர்; நோய் அணுஉயிர். *a.* microbial, microbic.

**Microcosm,** *n.* சிற்றண்டம்; பண்டம்; தனி உயிர்; மானிடன். (x macrocosm) *a.* microcosmic.

**Microgram,** *n.* ஒரு கிராம் எடையில் பத்து நூறாயிரத்தில் ஒரு பகுதி.

**Micrograph,** *n.* நுட்ப அளவில் எழுத அல்லது செதுக்க உதவும் கருவி; நுட்ப இயக்க அளவு கருவி.

**Micrometer,** *n.* நுட்ப பருமன் அளக்கும் கருவி. *n. abs.* micrometry.

**Micron,** *n.* (*pl.* microns, micra) நுண் அளவைக் கூறு (மீட்டரில் ஆயிரத்திலொரு கூறில் ஆயிரத்தில் ஒரு கூறு).

**Micro organism,** *n.* கண்காண முடியா நுட்பமான உயிர்.

**Microphone,** *n.* (சுருக்கம்; mike); (ஒலிப்பரப்பியின்) குரல் வாய்; (வானொலியின்) வாயுறுப்பு ஒலிவாங்கி.

**Microphotograph,** *n.* நுண் ணளவு நிழற்படம்.

**Microphyte,** *n.* அணுச்செடி உயிர்.

**Micropyle,** *n.* அணு உயிர்.

**Microscope,** *a.* உருப்பெருக்கி; உருப்பெருக்கிக் கண்ணாடி; நுண் நோக்காடி; 'நுண்பேராடி'. *n.* microscopic(al), நுண்ணுரு வான; நுண்ணியலான; நுட்பமான. *n. abs.* microscopy.

**Microspore,** *n.* நுண் விதை.

**Mid,** *a.* இடையிலுள்ள; மையமான.

**Midday,** *n.* நடுப் (நண்) பகல்.

**Midden,** *n.* குப்பை மேடு.

**Middle,** *a.* மையமான. இடைப் பட்ட. *n.* நடுப்பகுதி. *phr.* middle ages. (வரலாறு) இடையிருட் காலம் (5 முதல் 15 ஆம் நூற்றாண்டுவரை).

**Middleman,** *n.* தரகன்.

**Middling,** *a., adv.* நடுத்தரமான; பொது நிலையான; உயர் சிறப்பற்ற.

**Midge,** *n.* ஈ வகை; சிறு ஆள்.

**Midget,** *n.* (கண்காட்சியாகக் காட்டத்தகுந்த) குள்ளன்.

**Midland,** *n.* நாட்டின் நடுப்பகுதி. *a.* உள்நாட்டுக்குரிய.

**Midnight,** *n.* நள்ளிரவு.

**Midnoon,** *n.* நடுப்பகல்; நண்பகல்.

**Midrib,** *n.* நடுநரம்பு; இறகுத் தண்டு.

**Midriff,** *n.* மார்பையும் வயிற்றையும் பிரிக்கும் படலம்.

**Midship,** *n.* கப்பலின் நடுப்பகுதி.

**Midshipman,** *n.* கப்பற் பணியாள் (வகை.)

**Midships,** *adv.* கப்பலின் நடுவில்.

**Midst,** *n.* நடு *adv. prep.* இடையாக.

**Midsummer,** *n.* நடுவேனில்; நடுக்கோடை. (ஜூன் 21 தேதி)

**Midway,** *n.* பாதிவழி. *a., adv.* இடையில்; பாதி வழியில்.

**Midwife,** *n.* மருத்துவச்சி; (பிள்ளைப் பேற்றுத் (தாய்ச்சி *n. abs.* midwifery, பிள்ளைப் பேற்றுத் தாய்ச்ச்சியர் பயிற்சித் துறை; தாய்மை மருத்துவம்.

**Mien,** *n.* தோற்றம்; சாயல்; நடை.

**Might,** 1. (*see.* May). 2. *n.* வலிமை; ஆற்றல் (2) *a.* mighty, வல்லமை வாய்ந்த; மிகப்பெரிய. *n.* mightiness.

**Migrant,** *a., n.* அயல் நாட்டில் குடியேறுகிற(வர்).

**Migrate,** *v.* இடம் பெயர்; குடி பெயர்; குடியேறு. *n.* migration, குடிப்பெயர்ச்சி. *a.* migratory, (மக்கள்) குடிபெயர்கிற; (பறவைகள்) மண்டலத்துக்கு மண்டலம் பருவந்தோறும் பெயர்கிற; புலம் பெயர்கிற. *n. pers.* migrant, இடம் மாறுபவர்.

**Mike,** *n.* (*see* microphone.)

**Mil,** *n.* அங்குலத்தில் ஆயிரத்தில் ஒன்று.

**Milage, mileage,** *n.* (> mile) கல்தொலைக் கட்டண விழுக்காடு; கல்தொலை. milage allowance கல்தொலைக் கட்டணப்படி.

**Milch,** *a.* (milk) பால் தருகிற.

**Mild,** *a.* அமைதி வாய்ந்த; இணக்கமுடைய; மென்மையான. *n.* mildness.

**Mildew,** *n.* பூஞ்சைக்காளான்.

**Mile,** *n.* கல்தொலை; நாழிகைத் தொலை. *n.* mileage, *see* milage.

**Mileage,** *n.* (*see* milage.)

**Milestone,** *n.* நாழிகைக்கல்.

*milieu, n.* சூழ்நிலை.

**Militant,** *a.* போரில் ஈடுபட்டுள்ள; போர்விருப்பமுள்ள; எதிர்ப் பார்வமுள்ள.

**Militarism,** *n.* (> military) படைவலி ஆட்சிக் கொள்கை; வல்லாட்சிக் கொள்கை. *n. pers.* militarist. *v.* militarize, -se. militarization, -sation.

**Military,** *a.* போர் சார்ந்த; படைத்துறைக்குரிய *n.* படைத் துறை. *n. abs. see* militarism. *comb. n.* military service, படை ஊழியம்; போர்த்துறைப் பணி.

**Militate,** *v.* எதிர்த்து நில்; பொருந்தாதிரு; முரண்படு.

**Militia,** *n.* நாட்டுப் படை; மக்கட்படை; குடிப்படை.

**Milk,** *n.* பால். *v.* பால்கற. *a.* milky, பால் போன்ற; பால்கலந்த. *n.* milkiness.

**Milk-and-water,** *a.* சாரமற்ற.

**Milk-livered,** *a.* கோழைத் தனமான.

**Milkmaid,** *n.* பால்காரி; ஆய்மகள்.

**Milkman,** *n.* பால்காரன்.

**Milksop,** *n.* கோழை நெஞ்சினர்; வீரமற்றவர்.

**Milk-tooth,** *n.* பால் மல்.

**Milkway, Milky way,** *n.* வான் கங்கை; வான ஒளித்தடம்; பால் வீதி.

**Mill,** *n.* மாவாலை; ஆலை; நெல் அரைக்கும் ஆலை, எந்திரத் தொழிற்சாலை. *v.* (மாவு) அரை; ஆடையை வெளு; நாணயங் களின் ஓரத்தில் வரி யமை. *n. pers. see* miller.

**Millennium,** *n.* ஆயிரம் ஆண்டுக் காலம்; கிறித்துவின் நல் ஆட்சி; நல் ஊழித் தொடக்கம்; வருங்கால நல்லூழி. *a.* millennial, millenary.

**Millepede,** *n.* மரவட்டை; பூரான்.

**Miller,** *n.* (mill) (பழங் கால) மாவாலைக்காரர்; ஆலைவாணர்; சிறு தொழிற் சாலையாளர்.

**Millet,** *n.* தினை; சாமை.

**Milliard,** *n.* நூறு கோடி.

**Millimeter,** *n.* ஃவிரஞ்சு நீட்டளவை நுண்கூறு; மீட்டரில் ஆயிரத்திலொன்று.

**Milliner,** *n.* மாதர் உடை செய்பவர். *n. abs. com.* millinery.

**Million,** *n., a.* பத்து நூறாயிரம், *a.* millionth, பத்து நூறாயிராவது; பத்து நூறாயிரத்திலொரு கூறு.

**Millionaire,** *n.* பத்து நூறாயிரம் படைத்த பெருஞ்செல்வர்; கோடியஞ் செல்வர்.

**Millstone,** *n.* திரிகை; எந்திரக் கல்; மாவாலை உருளை.

**Millwright,** *n.* எந்திரச் சிற்பி.

**Mimetic(al),** *a.* (mimic) (ஒன்றைப்போல்) போலி விகடம் நடித்துக் காட்டுகிற; நையாண்டி விகடம் பண்ணுகிற.

**Mimic,** *n.* நடிப்புப் போலி செய்பவர்; மாறாட்ட நடிகர்; போலிப் பகர்ப்பு நடிகர்; பாவித்துக்

காட்டுபவர்; *a.* மாறாட்ட நடிப்பான; நடிப்புப் போலியான. *n.* நடிப்புப் போலி செய்; மாறாட்ட நடிப்புச் செய்; போலியாக நடி. *n.* mimicry, mimicker. *a.* (*see* mimetic.)

**Mimosa,** *n.* (தொட்டால் சுருங்கி இனத்தைச் சேர்ந்த) செடியினம்.

**Minar,** *n.* கூம்பு கோபுரம்; கூர்ங்கோபுரம்; தூபி; கம்பம்; ஒளிக்கம்பம்.

**Minaret,** *n.* கம்பம்; சிறுகிளைக் கோபுரம்.

**Mince,** *v.* நறுக்கு; தளுக்கு; பசப்பு; (குற்றத்தை) மறைத்துப் பேசு. *n.* mincemeat, கொத்திய இறைச்சி. *a.* mincing. *adv.*mincingly.

**Mind,** *n.* மனம்; கருத்து; எண்ணம்; உணர்வு. *v.* கவனி; நினைவில் வை; பொருட்படுத்து; சட்டை பண்ணு; (don't mind, never mind). *a.* mindful, கவனமுள்ள; விழிப்பான. *(neg.)* mindless, மனமில்லாத; கவனமற்ற.

**Mine,** 1. *pron.* என்னுடையது; எனது; (பழைய வழக்கு) என்னுடைய (உயிர் எழுத்தின் முன் மட்டும்). 2. சுரங்கம்; சுரங்கக் குழி; சுரங்கவெடி; கடற்கண்ணி; கருவூலம்; கனி. 3. நிலப்பொருட் சுரங்கம். *v.* சுரங்கம் தோண்டு. (3) *n.* mining.

**Mineral,** *a.*, *n.* கனிப்பொருள்; நிலக் கருப்பொருள்; நிலப் பொருள்; கருப்பொருள்.

**Mineralogy,** *n.* கனிப்பொரு ளாராய்ச்சி. *n. pers.* mineralogist.

**Mineral oil,** *n.* நில எண்ணெய்.

**Mineral water,** *n.* நில உப்புக் கரைந்த ஊற்று நீர்.

**Minerva,** *n.* (ரோமானிய) அறிவு, கலை, போர் முதலியவற்றின் பெண் தெய்வம்; கலைமகள்; போர்மகள்.

**Mingle,** *v.* கல; ஒன்றாகச் சேர்; குழப்பமாகு; கலந்து பழகு.

**Miniature,** *n.* சிறு ஓவியப் படம்; சிறு உருவம். *v.* சிறிய அளவி லமைந்த.

**Minim,** *n.* நுண்ணிய முகத்தல் அளவைக் கூறு; திராமில் (dram) அறுபதில் ஒன்று; சிறு துளி; சிறிது; இசையின் நுண் கூறு.

**Minimize,-se,** *v.* கூடியவரை சிறிதாக்கு; குறை. *n.* minimization, -sation.

**Minimum,** *n.* (*pl.* minima) மிகக் குறைந்த அளவு; 'சிறுமம்', 'சிறுமன்'; சிற்றளவு; சிற்றெல்லை. *a.* மிகக் குறைந்த. (x maximum.)

**Minion,** *n.* செல்வச் சிறுவன் அல்லது சிறுமி; சிற்றுயிர்; சிற்றா ளடிமை; சிறிய அச்சு வடிவக் கூறு.

**Minister,** 1. *n.* அமைச்சர்; செயலாளர்; சமயகுரு. 2. *a.* தொண்டு செய்; தேவை நிறை வேற்று; உதவு. *n. abs. see* ministry.

**Ministerial,** *a.* (> minister) அமைச் ணசர் பதவி சார்ந்த; ஊழியத்துக்குரிய. *n.* ministerialist.

**Ministration,** *n.* ஊழியம்; அமைச்சர் தொழில்.

**Ministry,** *n.* (minister) அமைச்சர்; அமைச்சுக் குழு; அமைச்சரவை; அமைச்சரின் கடமை; மத குருக்கள் குழு; தொண்டு; துணையுதவி.

**Minnow,** *n.* மீன் குஞ்சு; சிறு மீன்.

**Minor,** *a.* (x major) சிறிய; கீழ்த்தரமான; சிறு திறமான; சிற்றியலான; சில்லறையான; சிறுபடியான; இளைய. *n.* இருபத்தொரு வயதுக்கு உட்பட்டவர்; இளங்கனர்; ஆதரவுக் குட்பட்டவர். *n. abs.* minority, இருபத்தொரு வயதுக்கு உட்பட்ட பருவம்; சிறு பான்மையோர்.

**Minster,** *n.* கோவில்; மடத்தைச் சார்ந்த கோவில்.

**Minstrel,** *n.* பாணன்; பாண் மகன்; இசைக் கருவியுடன் பாடுபவன்; நாடோடிப் பாடகன். *n. abs.* minstrelsy, பாண்தொழில்; பாணன் கலை.

**Mint,** *n.* நாணயம் அச்சிடும் சாலை; நாணயச்சாலை; தம் பட்டச்சாலை; அக்கசாலை; தங்கச் சாலை. *v.* நாணயம் அடி. *n.* mintage.

**Minuet,** *n.* இருவர் ஆடுவதற் குரிய ஆடல் வகை; அதற்குரிய இசை.

**Minus,** *a.* குறைவான. (x plus) *n.* கழித்தல் அடையாளம் ( - ).

**Minute,** 1. *n.* (மினிட்) ஒரு மணி நேரத்தில் அறுபதில் ஒன்று; இரண்டரை வினாடி (கோண அளவில்) ஒரு பாகையில் அறுபதில் ஒன்று (கலை). *(pl.)* கூட்ட நடவடிக்கைக் குறிப்பு *v.* குறிப்பெழுது. *comb. n.* minutes book, நிகழ்ச்சிப் பதிவேடு.

**Minu'te,** 2. *a.* (மைன் யூட்) மிகச் சிறிய; நுட்பமான; துல்லியமான. *n.* minuteness.

**Minutiae,** *n.* (*sing.* minutia) நுட்பமானவை; சில்லறை நுணுக்கங்கள்.

**Minx,** *n.* துடுக்கானவள்; பகட்டுக்காரி.

**Miracle,** *n.* இயற்கை மீறிய நிகழ்ச்சி. தெய்விக அரு நிகழ்வு; அருஞ் செயல் வெளிப்பாடு; அருள் விளையாட்டு; திருவிளை யாட்டு; திருவருள் விளையாட்டு; திருவிளையாடல். *a.* miraculous.

**Mirage,** *n.* கானல்நீர்; பேய்த் தேர்.

**Miras,** *n.* (இந்திய வழக்கு) பண்ணை; நிலக்கிழமை. *n. pers.* mirasdar, பண்ணையார்; நிலக்கிழார். *comb. n.* mirasi rights, பண்ணை உரிமைகள்.

**Mire,** *n.* சேறு; சதுப்புநிலம். *v.* சேற்றில் புதை; சேற்றைப் பூசு. *a.* miry.

**Mirk,** *a.* (*see* murk.)

**Mirror,** *n.* முகம் பார்க்கும் கண்ணாடி; உருக்காட்டி; பளிங்கு; உண்மையை எடுத்துக் காட்டுவது. *v.* எதிர் உருக்காட்டு.

**Mirth,** *n.* மகிழ்ச்சி; களிப்பு. *a.* mirthful, *(neg.)* mirthless. *n.* mirthfulness.

**Misadventure,** *n.* தீய நிகழ்ச்சி இடையூறு.

**Misalliance,** *n.* பொருந்தாத மணத்தொடர்பு.

**Misanthrope,** u. மனித இனத்தை வெறுப்பவர். *n.* misanthropy. *a.* misanthropic(al). *n. pers.* misanthropist.

**Misapply,** *v.* தவறாக வழங்கு. *n.* misapplication.

**Misapprehend,** *v.* தவறாகப் புரிந்து கொள். *n.* misapprehension, *a.* misapprehensive.

**Misappropriate,** *v.* பிறர் பொருளைக் கையாடு; மோசடி செய்; கைமோசம் செய். *n.* misappropriation.

**Misarrange,** *v.* கலை; குழப்பு.

**Misbecome,** *v.* (misbecame, misbecome) பொருந்தாதிரு; தகாதிரு. *a.* misbecoming.

**Misbegot, Misbegotten,** *a.* நெறிதவறிப் பிறந்த.

**Misbehave,** *v.* நெறிதவறி நட. *n.* misbehaviour.

**Miscalculate,** *v.* தவறாகக் கணக்கிடு. *n.* miscalculation.

**Miscall,** *v.* தவறாகக் குறிப்பிடப் பெறு; தவறான பெயரால் அழை; திட்டு.

**Miscarry,** *v.* தோல்வியடை; காலத்துக்குமுன் குழந்தை பெறு; குறி தவறு. *n.* miscarriage.

**Miscellanea,** *n.* (miscellany) (செய்தியிதழ்த்துறை) பல்பொருள் திரட்டு. *a.* miscellaneous, பல்வகையான; சிறு திரட்டான; சிறு திறமான; சில்லறையான.

**Miscellany,** *n.* கலவை; கதம்பம்; சிறுதிறம். *conn. see* miscellanea.

**Mischance,** *n.* தற்செயலாக நேர்ந்த இடர்; இடையூறு.

**Mischief,** *n.* குறும்புச்செயல்; தீங்கு; தவறு. *a.* michievous. *n. pers.* michief monger, குறும்பன்; வீணன்; பழிதேடி.

**Misconceive,** *v.* தவறாக எண்ணு. *n.* misconception.

**Misco'nduct,** n. (x. conduct) நெறிதவறிய நடத்தை; தீயொழுக்கம்; கெடுநடை; படிற்றொழுக்கம்; தவறு; பிசகு; திறமைக் கேடு. *v.* miscondu'ct, நெறிதவறி நடத்து.

**Miconstrue,** *v.* தவறாகக் கொள்; பிழைபட உணர்; திரித்தறி. *v.* misconstruction.

**Miscount,** *v.* தவறாக எண்ணு. *n.* தவறாகக் கணக்கிடல்.

**Miscreant,** *n.* கெட்டவன்; தீயவன்.

**Misdeed,** *n.* குற்றச் செயல்; தவறு; தீச்செயல்.

**Misdemeanour,** *n.* தவறான நடத்தை; சிறு குற்றம்.

**Misdirect,** *v.* தவறாக வழி காட்டு. *n.* misdirection.

**Misdoing,** *n.* குற்றம்; தவறு. *n. pers.* misdoer.

**Miser,** *n.* கஞ்சன். *a.* miserly, *n.* miserliness.

**Miserable,** *a.* (misery) மகிழ்ச்சியற்ற; துயரம் நிரம்பிய; இழிவான; இரங்கத்தக்க.

**Misery,** *n.* கடுந்துயரம்; இடுக்கண்; கையறவு; துயரத்துக்குக் காரண மாயிருப்பது; நோவு.

**Misfire,** *v.* குறிதவறிச் சுடு; *n.* வேலை செய்யத் தவறுதல்.

**Misfit,** *v.* பொருந்தாதிரு. *n.* பொருத்தமின்மை; பொருத்த மற்றவர்.

**Misfortune,** *n.* இடையூறு; வாய்ப்புக் கேடு.

**Misgive,** *n.* (misgave, misgiven) நம்பிக்கையிழ. *n.* misgiving.

**Misgovern,** *v.* கொடுங்கோலாட்சி செய். *n.* misgovernment.

**Misguide,** *v.* தப்புவழி காட்டு.

**Mishandle,** *v.* தவறாகக் கையாடு.

**Mishap,** *n.* இடையூறு; வாய்ப்புக் கேடு; தற்செயல்; இடர்.

**Mishappen,** *v.* தவறாக நிகழ். *n.* mishappening.

**Misinform,** *v.* பொதுச்செய்தி சொல்; தப்புநெறி காட்டு.

**Misinterpret,** *v.* தவறாகப் பொருள்கொள். *n.* misinterpretation.

**Misjudge,** *v.* தவறாகத் தீர்மானி; தவறாக மதிப்பிடு.

**Mislay,** *v.* (mislaid) தவறான இடத்தில் வை; வைத்த இடத்தை மற.

**Mislead,** *v.* (misled) தப்பு வழி காட்டு; தவறாகக் கருதச் செய்.

**Mismanage,** *v.* தவறாக நடத்து; திறமையற்றுக் காரியமாற்று. *n.* mismanagement.

**Mismarriage,** *a.* பொருந்தா மணம்.

**Misname,** *v.* பொருந்தாப் பெயரிடு. *n.* தவறான பெயர்.

**Misnomer,** *n.* தவறான வழக்கு.

**Misogamy,** *n.* மணவெறுப்பு. *n. pers.* misogamist.

**Misogynist,** *n.* பெண்ணினத்தை வெறுப்பவர். *a.* misogynic.

**misplace,** *v.* இடந்தவறி வை. *n.* misplacement.

**Misprint,** *n.* அச்சுப் பிழை. *v.* பிழையாக அச்சிடு.

**Mispronounce,** *v.* தவறாக ஒலி. *n.* mispronunciation.

**Misquote,** *v.* தவறாக மேற் கோள் காட்டு. *n.* misquotation.

**Misread,** *v.* தவறாக வாசி; தவறாகப் புரிந்துகொள். *n.* misreading.

**Misrepresent,** *v.* தவறாக விவரி. *n.* misrepresentation.

**Misrule,** *n.* கொடுங்கோல் ஆட்சி.

**Miss,** 1. *v.* பெறத்தவறு; இன்மை யுணர்; இழ; தவறவிடு. *n.*. தோல்வி; சிறு தவறு; சிறு சறுக்கல். 2. *n.* (*pl.* misses) செல்வி; (மணமாகாக் கன்னிக்குரிய அடைமொழி). *see* mister, mistress,missi's, misses, etc. (1) *a.* missing.

**Mis-shapen,** *a.* தவறான உருவம் அமைந்துள்ள; அருவருப்பான உருவுடைய.

**Missile,** *n.* எறி படை.

**Mission,** *n.* தூதுக் குழு; சமயப் பரப்புக் குழு தூது நோக்கம்; தூதுச் செய்தி; வாழ்க்கைக் குறிக்கோள்; வாழ்க்கைப்பணி. *conn. n. a. see* missionary.

**Missionary,** *n.* சமயப் பரப்பாளர்; சமய ஊழியர். *a.* சமயம் பரப்புகிற.

**Missis-us,** *n.* (சுருக்கம் Mrs.) (mistress என்பதன் மரூஉ வழக்கு) திருவாட்டி; திருமதி. (*see* mister, miss. etc.)

**Missive,** *n.* கடிதம்; அரசாங்கக் கடிதம்.

**Mis-spell,** *v.* (mis-spelt) தவறாக எழுத்துக், கூட்டு.

**Mis-spend,** *v.* (mis-spent) வீண் செலவு செய்.

**Mis-state,** *v.* பிழைபடக் கூறு. *n.* mis-statement.

**Mist,** *n.* மூடுபனி; பார்வையை மறைக்கும் படலம்; புகை போன்ற ஆவி. *a.* misty, மூடுபனி சூழ்ந்த; தெளிவில்லாத. *adv.* mistily. *n.* mistiness.

**Mistake,** *v.* (mistook, mistaken) தவறாகப் பொருள் கொள். *n.* தவறு; குற்றம்.

**Mister,** *n.* (சுருக்கம்: Mr.) திருவாளர் (திரு.) *pl.* messieurs, -mess(e)rss. (*see monsieur*). (*fem. see* mistress, miss, missis, etc.)

**Mistletoe,** *n.* புல்லுருவி.

**Mistress,** *n.* (சுருக்கம்: Mrs.) மனைவி; தலைவி; திருவாட்டி; (இழிவழக்கு) காமக்கிழத்தி; வைப்பாட்டி.

**Mistrust,** *v.* அவநம்பிக்கை கொள் ஐயப்பாடு. *n.* அவநம்பிக்கை. *a.* mistrustful. *n.* mistrustfullness.

**Misunderstand,** *v.* (misunder stood) தவறாகப் பொருள்கொள். *n.* misunderstanding, தப்பெண்ணம்; நேசமுறிவு; மனவேறுபாடு.

**Misusage,** *n.* தவறானவழக்கு.

**Misuse,** *v.* (மிஸ் யூஃஜ்) தவறாக வழங்கு. *n.* misuse, (மிஸ் யூஸ்), தவறான வழக்கு.

**Mite,** *n.* சிறு பூச்சி; சிறு குழந்தை; சிறிது. *a.* mity, பூச்சிகள் நிறைந்த.

**Mitigate,** *v.* மட்டுப்படுத்து; தனி. *n.* mitigation. *a.* mitigatory.

**Mitre,** *n.* (குருமார்களின்) தலைப்பாகை; தலைமைக் குரு பதவி.

**Mix,** *v.* கல. *n.* mixture, கலவை. *a.* mixed (மிக்ஸெட்).

**Minemonic,-al,** *a.* நினைவுக் குறிப்புச் சார்ந்த. *n.* minemonics, நினைவுக் குறிப்பு; எழுத்துக் குறிப்புத் தொகுதி.

**Moan,** *v.* புலம்பு; துயரத்தைச் சொல்லியழு. *n.* புலம்பல்; அழுகுரல்.

**Moat,** *n.* அகழி. *v.* அகழியால் வளை.

**Mob,** *n.* கும்பல். *v.* கூட்டமாகத் தாக்கு; முரட்டுத்தனமாக அடி.

**Mobile,** *a.* எளிதில் இயங்குகிற; நிலையற்ற; அடிக்கடி தோற்றம் மாறுகிற. *n.* mobility.

**Mobilize,-se,** *v.* படை திரட்டு. *n.* mobilizaion, -sation.

**Mobocracy,** *n.* கும்பலாட்சி.

**Mock,** *v.* ஏளனஞ் செய். *n.* ஏளனம். *n.* mockery, ஏளனம்; போலி.

**Mode,** *n.* முறை; வழக்கம். *a.* modal.

**Model,** *n.* மாதிரி; மேற்காட்டு. *v.* உருவம் அமை; உருக்கொடு. *a.* நல்ல மாதிரியான; மேற்காட்டான.

**Moderate,** *a.* நடுத்தரமான. *v.* மட்டமாக்கு; குறை. *n.* moderation. *n. ag. impers.* moderator. அமைதி நிறுவும் பொறி.

**Modern,** *a.* தற்காலத்துக்குரிய; புதுமையான. *v.* modernize, -se. *n.* modernity, modernism.

**Modest,** *a.* அடக்கமுள்ள; பணிவுள்ள; நாணமுள்ள. *n.* modesty.

**Modicum,** *n.* சிறு அளவு.

**Modify,** *v.* திருத்தம் செய்; சிறிது மாற்று; புது உருவம் கொடு; மட்டுப்படுத்து. *n.* modification. *a.* modifiable. modificatory.

**Modish,** *a.* தற்காலப் பாங்கான.

**Modulate,** *v.* குரலை மாற்றி அமை; வேற்றுமைப்படுத்து; ஒழுங்குபடுத்து. *n. abs.* modulation, *impers.* modulator.

**modus operandi,** *n.* செயல் முறை.

*modus vivendi, n.* வாழ்க்கை முறை; தற்காலிக உடன் படிக்கை.

*mofussil, n.* (இந்திய வழக்கு) (தலைநகரல்லாத) புறப்பகுதி; நாட்டுப்புறப்பகுதி; மாவட்டப் பகுதி.

**Moiety,** *n.* பாதி; சிறு பகுதி.

**Moist,** *a.* ஈரமான; மழைக்கால மான; நீர்க் கசிவான. *v.* moistern, *n.* moisture.

**Molar,** *a.* அரைப்பதற்கேற்ற. *n.* கடைவாய்ப் பல்.

**Molasses,** *n.* வெல்லப் பாகு.

**Mole,** 1. *n.* அகழெலி. *n.* mole-hill, அகழெலிப் புற்று. 2. *n.* அலை தாங்கு கரை.

**Molecule,** *n.* மூலக்கூற்று; பரு அணு; அணுத்திரள்; அணுக்களின் கூட்டால் உண்டாகும் ஒரு பொருளின் மிகச் சிறிய பகுதி. *see* atom. a. molecular.

**Molest,** *v.* தொந்தரை செய். *n.* molestation.

**Mollify,** *v.* நோவைக் குறை; ஆற்று; தணி. *n.* mollification.

**Molluse,** *n.* நத்தை இனப் பிராணி. *a.* mollusean.

**Moloch,** *n.* ஒரு பண்டை உலகத் தெய்வம்.

**Molten,** *a.* (molt) உருகிய.

**Moment,** *n.* கண நேரம்; முக்கியத்துவம்; மதிப்பு; சுழலும் வேகம்.

**Momentary,** *a.* கணநேரமே நிலைக்கிற.

**Momentous,** *a.* முக்கியத்துவம் வாய்ந்த.

**Momentum,** *n.* (*pl.* momenta) இயக்க விசை.

**Monad,** *n.* ஒன்று; ஒருமை; ஒன்றான தத்துவப்பொருள்.

**Monarch,** *n.* அரசன்; அரசி; முடிமன்னன். *n. abs.* monarchy, முடியரசு நாடு. *n.* monarchism, முடியரசுக் கோட்பாடு. *n.* monarchist, முடியரசுக் கோட் பாட்டாளர். *a.* monarchial, monarchical.

**Monastery,** *n.* (துறவி) மடம். *a.* monastic.monastical. *a. abs.* monasticism.

**Monday,** *n.* திங்கட்கிழமை.

**Monetary,** *a.* காசுபணஞ் சார்ந்த; *comb. n.* monetary demand, பணத்தேவை.

**Money,** *n.* பணம்; நாணயம்; *a.* moneyed, பணமுள்ள; பணவள முடைய. *a. see* monetary, *(comb.) n.* money order, பண அஞ்சல்; money lending, பணம் கொடுக்கல் வாங்கல்; வட்டித் தொழில், money lender, வட்டித் தொழிலாளர்; வட்டிக்கடைக்காரர்.

**Monger,** *n.* சிறு வணிகன். (*see comb. n.* fishmonger, iron-monger, etc.)

**Mongooze, mungoose,** *n.* கீரி.

**Mongrel,** *n.* கலப்பு இன உயிர்; கலப்பின நாய்.

**Monism,** *n.* ஒருமைக் கோட்பாடு. a.monistic.

**Monitor,** (*fem.* monitress) *n.* எச்சரிப்பவர்; சட்டாம் பிள்ளை; ஒருவகைப்பல்லி; காவற்கப்பல். *n.* monitorship. *a.* monitory.

**Monk,** *n.* (*fem.* nun) துறவி. *a.* monkish. *n.* monkhood. *n.* monkery, துறவி வாழ்க்கை; துறவிக் கூட்டம்.

**Monkey,** *n.* குரங்கு. *v.* குறும்பு செய்; கேலி செய். *a.* monkeyish.

**Monochord,** *n.* ஒற்றைத்தந்தி இசைக் கருவி.

**Monochrome,** *n.* தனி வண்ண ஓவியம்.

**Monocle,** *n.* ஒற்றை மூக்குக் கண்ணாடி.

**Mnocotyledonous,** *a.* ஒரு விதையிலையுள்ள; ஒற்றைப் பருப்புள்ள.

**Monogamy,** *n.* ஒரு சமயம் ஒருவரையே மணம் செய்யும் முறை. *n. pers.* monogamist, ஒரு மணத்துணையாளர்; ஒரு மணத்துணைக் கோட்பாட்டாளர்.

**Monogram,** *n.* கூட்டெழுத்தச்சு.

**Monograph,** *n.* (ஒருபொருள் பற்றிய) தனிக்கட்டுரை நூல்.

**Monolith,** *n.* ஒரே கல்லில் செதுக்கிய உரு. *a.* monolithic. ஒற்றைக் கல்லாலான.

**Monologue,** *n.* தனிமையில் பேசுதல்; தன்னுரை. *v.* monologise.

**Mono mania,** *n.* ஒரு வழிக் கிறுக்கு. *a.* mono-maniac(al). *n. pers.* mono-maniac.

**Mono-metallism,** *n.* ஒரே உலோக நாணயச் செலாவணி முறை.

**Monomial,** *a., n.* (கணக்கியல்) ஒரு குறி தொடர்ந்த (தொடர் எண்).

**Monopetalous,** *a.* ஓரிதழுள்ள.

**Monoplane,** *n.* ஒருதள வானூர்தி.

**Monopoly,** *n.* தனி உரிமை குத்தகை. *v.* monopolisie-ze, தனி உரிமை கொள். monopolization, *a., n. pers.* monopolist.

**Monorail,** *n.* ஒரே தண்டவாள முள்ள இருப்புப் பாதை.

**Monosepalous,** *a.* ஒரே புல்லிதழ் உள்ள; புல்லிதழ்கள் ஒன்றாய் இணைந்த.

**Monosyllable,** *n.* ஓர் (நேர்). அசைச் சொல். *a.* monosyllabic.

**Monotheism,** *n.* ஒரே கடவுள் கொள்ளை. *n. pers.* Monotheist, *a.* monotheistic.

**Monotone,** *n.* ஒரே வகைக் குரல். *a.* monotonic.

**Monotonous,** *a.* ஒரே குரலான; ஒரே மாதிரியான; சலிப்பைத் தருகிற. *n. abs* .monotony.

**Monoxide,** *n.* (இயைபியல்) ஒருயிரகி.

*mons igneur, n.* ஃவிரஞ்சு மொழி வழக்கு; ஆட்பெயர் முன் அடை மொழி; உயர்திரு.

*monsieur, n.* (ஃ விரஞ்சு வழக்கு) (*pl. messieurs,* சுருக்கம் mess(e)rs, *pl.* of Mr) திரு.

*monsignore, n.* (இத்தாலிய வழக்கு) உயர்திரு.

**Monsoon,** *n.* பருவக்காற்று.

**Monster,** *n.* அரக்கன்; தடியன்; தடிமாடன்; அச்சந்தரும் பாரிய விலங்கு; அருவருப்புத்தரும் பேருயிரினம். *a.* monstrous, மிகப் பெரிய; கொடிய; அரு வருப்பான. *n.* monstrosity, மாபெருங் கொடுமை.

**Montane,** *a.* மலைநாட்டு வாசியான.

**Month,** *n.* திங்கள்; மாதம்; மதியம்; மதிவட்டம். *adv., a.* மாதந்தோறும் (நிகழ்கிற). monthly, திங்கள் வாரி(யாக), *n.* monthly, திங்களிதழ்.

**Monument,** *n.* நினைவுச் சின்னம்; நினைவுக்குரிய செய்தி; பாரிய செயல். *a.* monumental, நினைவுக்குரிய; பாரிய; பெரும்புகழ்வாய்ந்த.

**Mood,** *n.* மனநிலை; மனப்போக்கு; (இலக்) (உணர்ச்சிக் குறிப்புச் சார்ந்த) வினைச்சொல்லின் பாகுபாடு).

**Moody,** *a.* அடிக்கடி மனமாறுகிற; கிளர்ச்சியில்லாத; *n.* moodiness.

**Moon,** *n.* மதியம்; (கோளினங் களின்) துணைக்கோள்; மாதம். *v.* திரி; பித்தனைப் போல் நடந்து கொள்.

**Moon-calf,** *n.* பிறவி மடையன்.

**Moonlight,** *n.* நிலா ஒளி. *a.* moonlite.

**Moonshine,** *n.* நிலவொளி; வீண்பேச்சு; பயனற்ற பகட்டு.

**Moonstone,** *n.* நிலா மணிக்கல்; நிலாக்காந்தக் கல்.

**Moonstruck,** *a.* கிறுக்குப் பிடித்த; அறிவிழந்த.

**Moor,** 1.*n.* சதுப்பு நிலம். 2. வட ஆப்பிரிக்க கருநிற இனத்தார். 2. *v.* நங்கூரம் பாய்ச்சு; உறுதியாகப் பிணை. (1) *a.* moorish (2) *n.* moorings, moorage.

**Moot,** *n.* (பழவழக்கு) மன்று. *v.* வாதிடு; வாதத்திற்குக் கொண்டு வா. *a.* தீர்மானிக்கப்படாத; வாதத்துக்குரிய; வாதிக்க வேண்டிய. *a.* mootable.

**Mop,** *v.* முகத்தைச் சுளி.

**Mope,** *v.* மந்தமாயிரு. *a.* mopish.

**Moral,** *a.* ஒழுக்கத்துறைக்குரிய; ஒழுக்கம் சார்ந்த; நேர்மையான. *n.* (கதையின்) நீதி. *(pl.)* நடத்தை; நன்னடக்கை முறை.

**Morale,** *n.* உள்ளத்தின் ஒழுங்கு; அமைதி; உள அமைதி; (படை வீரர்) மனவுறுதி; நம்பிக்கை; கிளர்ச்சி; ஒழுக்க அடிப்படை.

**Moralist,** *n.* (> moral) நன்னடக்கை கற்பிப்பவர்; முறையாளர் ஒழுக்க நூலாசிரியர்; நல்லொழுக்கக் கொள்கையாளர்.

**Morality,** *n.* நன்னடக்கை நெறி; நீதி.

**Moralize,-se,** *v.* ஒழுக்கமுறை பேசு; ஒழுக்கத்துறையில் கருத்தைச் செலுத்து; (ஒழுக்க முறை) ஆராய்; அமைந்து நுண்ணாராய்ச்சியிலீடுபடு. *n.* moralization,-sation, *n. ag.* moralizer,-ser. moralism.

**Morass,** *n.* சேற்று நிலம்; சதுப்பு.

**Moratorium,** *n.* (கடன்களைச் சிறிது காலந்தாழ்த்திக் கொடுப்ப தற்கான) சட்ட வாயிலான இலக்கம். *a.* moratory.

**Morbid,** *a.* நோய்ப்பட்ட மன முடைய; நோயின் தன்மையுள்ள; கலங்கலான. *n.* morbidness, morbidity.

**Mordant,** *a.* சுருக்கென்று தைக்கிற; எரிச்சலுள்ள; சாயத்தைக் கெட்டி யாகப் பிடிக்கச் செய்கிற. *n.* சாயத்தை நன்கு ஒட்டச் செய்யும் பொருள்.

**More,** 1. *a. adv.* (*comp. degree of* 'many' *a.* much *a., adv.*) (பிறிதொன்றைக் காட்டிலும் அளவில்) மிகுதியான; பலவான; (தொகையில்) மிகுதியாக.

**Moreover,** *adv.* மேலும்; இன்னும்; இவையல்லாமலும்.

**Moribund,** *a.* சாகுந்தறு வாயிலுள்ள.

**Morning, morn,** (poet) *n.* காலைநேரம்; வைகறை; முற்பகல்; வாழ்க்கையின் தொடக்கக் காலம். *(comb.)* morning star, விடிவெள்ளி.

**Morocco,** *n.* தோல் வகை.

**Morose,** *a.* சிடுசிடுப்பான; துயரப் படுகிற. *n.* moroseness.

**Morphia, morphine,** *n.* (நோயைக் குறைத்துத் தூக்கம் தருகிற) அபினிச் சத்து மருந்து.

**Morphology,** *n.* (செடி உயிரினங் களின்) இயற்கையுருவ ஆராய்ச்சி நூல்.

**Morrow,** *n.* மறுநாள்; அடுத்த நாள். *conn. see* tomorrow.

**Morsel,** *n.* சிறு துண்டு.

**Mortal,** *a.* இறக்கும் தன்மையுள்ள; சாகச்செய்யக்கூடிய; கொடிய. *n.* மானிடன்; மாந்தன். *adv.* Mortallty, உயிருக்கு இடையூறு வரும்படி. உயிரிடர் நேரிடத்தக்க தாக; உயிர்ப் பகைமையுடன் *n. abs. com.* mortality, இறப்பு; இறப்புப் பட்டி; சாக்கணக்கு; சாவீதம்.

**Mortar,** *n.* உரல்; குழியம்மி; சிறுபீரங்கி; (சுண்ணாம்பும் மணலும் கலந்த) காரை.

**Mortgage,** *n.* அடக்கு; அடை மானம்; ஒற்றி; ஈடு. *v.* அடகு வை. *conn. n.* mortgagee, அடை மானப் பொருளை வாங்கியவர். *n.* mortgager, பொருளை அடை மானம் தருபவர். *comb. n.* mortgage bond, ஈட்டுப்பத்திரம்.

**Mortify,** *v.* செயலடக்கு; துன் புறுத்து; தன் மதிப்பை ஊறுபடுத்து; அழுங்குவி; அழுகிக் கெடவை. *n.* mortification.

**Mortmain,** *n.* கோயிலகமானியம்; விளங்கா உரிமை மானியம்.

**Mortuary,** *n.* புதைப்பதற்கு முன் பிணங்களை வைத்திருக்குமிடம்; பிணமனை; பிணப்பேழை.

**Mosaic,** *n.* பல்வண்ண ஓவியம்; பன்மணிவண்ண ஓவியம். *a.* பலவண்ணமமைந்த.

**Mosque,** *n.* (முஸ்லிம்) பள்ளி வாசல்; பள்ளி.

**Mosquito,** *n.* (*pl.* mosquitoes) கொசு; நுளம்பு.

**Moss,** *n.* பாசி, *v.* பாசி அல்லது காளானால் மூடப் பெறு. *a.* mossy.

**Most,** *a.*, *adv.* (*sup.* degree of 'many'. *a.* 'much' *a. adv.*) மிகப்பல; உறுபல; மிக நிரம்ப; மிகப் பெரும்பாலான. *adv.* mostly, பெரும்பாலாக.

**Mote,** *n.* சிறு தூசி; துரும்பு.

**Moth,** *n.* அந்துப் பூச்சி; பட்டுப்பூச்சி, இராப்பூச்சி. *a.* moth eaten, அந்து அரித்த; பழைய மாதிரியான.

**Mother,** *n.* தாய்; தலைவி; துறவிப் பெண்களின் தலைவி. *v.* தாயாகப் பேணு; தாய் போல் நடத்து. *n. abs.*

**Motherhood,** *a.* motherly, தாய் போன்ற. *(comb.) n.* mother-in-law, மாமி. *n.* mother-of pearl, mother O' pearl, முத்துச் சிப்பி.

**Motif,** *n.* தலைமைக் கருத்து.

**Motion,** *n.* அசைவு; இயக்கம்; செயல்; சைகை; மன்ற நடவடிக்கை; வயிற்றுப்போக்கு. *v.* சைகை காட்டி உத்தரவிடு. *(comb. n.)* motion picture, இயக்கப் படம்.

**Motive,** 1. *a.* இயக்கத்திற்குக் காரணமாகிற. 2. *n.* உட்கோள்; நோக்கம்; உள்ளெண்ணம்; உள் அவா. (1) *comb. n.* motive power, பொறிகளை இயக்கும் ஆற்றல்; இயந்திர ஆற்றல். (2) *v.*

motivate, உள்நோக்கம் கற்பி; (நாடகம்) செயல்காரண உட்கோள் கற்பி. *n.* motivation.

**Motley,** *a.* பலவகை நிறங்களுள்ள; பலவகையான. *n.* பொருத்தமில்லாத கலவை; கோமாளியின் உடை.

**Motor,** *a.* மின் இயக்கத்துக்குரிய *n.* (-car), உந்துவண்டி; விசை வண்டி; பொறி வண்டி. *v.* பொறிவண்டியில் செல்.

**Motor-bike, Motorcycle,** *n.* இயங்கு மிதிவண்டி; மிதிப் பொறி வண்டி; 'விசைமிதி' வண்டி.

**Motor-boat,** *n.* இய.ந்திரப் படகு; விசைப்படகு.

**Motor-bus,** *n.* விசை 'ஊர்தி'.

**Motor-car,** *n.* 'விசை' வண்டி.

**Motor-cycle,** *n. see* motor-bike.

**Motorist,** *n.* விசைவலவன்; பொறி வண்டியோட்டி.

**Mottled,** *a.* பலநிறங்களமைந்த; புள்ளிகளுடைய.

**Motto,** *n.* மேற்கோள் வாசகம்; குறிக்கோளுரை; மேலுரை; இலக்குரை; நெறியுரை.

**Mould, mold,** 1. *n.* பூஞ்சக்காளான். *v.* பூஞ்சக்காளான் பிடி. 2. *n.* வார்ப்படம்; அச்சு; மாதிரி. *v.* வார்ப்படம் செய்; உருவாக்கு. (1) *a.* mouldy. *v.* moulder, பொடிப் பொடியாகு; நசித்துப்போ. (2). *n.* moulder, வார்ப்படம் செய்பவன். *n.* moulding, வார்ப்படம் செய்தல்; இம்முறையால் அமைத்த உருவம்; சித்திர வேலை.

**Mound,** *n.* மேடு; திட்டு; திடல்.

**Mount,** 1. *n.* (சுருக்கம்). *n.* (mountain) மலை; குன்று; மலைமுகடு; கொடுமுடி; மேடு. *v.* ஏறு; ஏற்று. 2. *n.* (படங்களுக்கான) சட்டம். *v.* (படம் முதலிய வற்றிற்குச்) சட்டம் பொருத்து; மணிக்கல்லை நகையில் பதி; பீரங்கியை அரணில் அமை. (2) *n.* mounting, பதிக்க உதவும் சட்டம்.

**Mountain,** *n.* (*see* mount) மலை; வெற்பு; பொருப்பு. *n. pers.* mountaineer, *n.* மலை ஏறுபவர்; மலைவாழ்நர். *n.* mountaineering. மலையேறுதல். *a.* mountainous. மலைகள் நிறைந்த; மிகப்பெரிய. *(comb.)* mountain sickness மலையேறுபவர்க்குரிய மயக்க நோய்.

**Mountebank,** *n.* நாடோடி மருத்துவன் ; வாய் வீச்சுக்காரன்.

**Mourn,** *v.* (இறந்தவர்க்காகப்) பரிந்து புலம்பு; (இழவுத்) துயர்க் கொண்டாடு; துயருறு. *a.* mournful, துயர்தருகிற; இரங்கத் தக்க. *a.* mournfulness. *n. abs. com.* mourning, இழவுத்துயர்; இழவுத்துயர்க் குறியான கருநிற உடை.

**Mouse,** *n.* (*pl.* mice) சுண்டெலி, *v.* சுண்டெலி வேட்டையாடு. *n. ag.* mouser.

**Moustache,** *n.* மீசை.

**Mouth,** *n.* வாய்; வாய் போன்ற வாயில்; ஆறு கடலிலே சேருமிடம். *v.* மேட்டிமையாகப் பேசு. *n.* mouthful, கவளம்.

**Mouthpiece,** *n.* இசைக்கருவிகளில் வாயில் கொள்ளும் பகுதி; பிறருக்காகப் பரிந்து பேசுபவர்.

**Mouthy,** *a.* தடபுடலாகப் பேசுகிற; பிதற்றுகிற; திட்டுகிற.

**Movable,** *a.* அசையக்கூடிய; இயங்கக்கூடிய. *n.* movables, பெயர்ப்பில் உடைமைகள்; இயங்குடைமைகள்.

**Move,** *v.* அசை; நகர்; உணர்ச்சியை எழுப்பு; மன்றத்தில் கொண்டு நிறைவேற்று.

**Movement,** *n.* அசைவு; அனக்கம்; புடைபெயர்ச்சி; இயக்கம்; படை பெயர்ச்சி; படைப் போக்கு; (அரசியல், பண்பாட்டு) இயக்கம்.

**Movies,** *n. (pl)* இயக்கப் படக் காட்சிகள், (*correl*. talkies.)

**Moving,** *a.* அசைகிற; உணர்ச்சியை எழுப்புகிற.

**Mow,** *v.* (mowed, mown) புல் அறு; வரிசைவரிசையாக வெட்டித் தள்ளு. *n.* mower.

**Much,** *a., adv.* (more, most) மிகுதியான; மிகுதியாய்; நிரம்ப.

**Muck,** *n.* எரு; அழுகும் பொருள். *v.* அழுக்காக்கு. *a.* mucky.

**Mucus,** *n.* சளி; சலம். *a.* mucous.

**Mud,** *n.* சேறு; ஈர மண். *a.* muddy, சேறான; குழப்பமான. *v.* சேறாக்கு; *n.* mudguard, மட்பட்டை; மட்பாதுகாப்புப் பட்டை.

**Muddle,** *v.* குழப்பமாக்கு; தவறு செய். *n.* குழப்பம்.

**Muff,** *n.* மூடன். *v.* தவறு செய்; தவற விடு.

**Muffin,** *n.* அப்ப வகை.

**Muffle,** *v.* போர்த்து; மூடு; ஒலி தடங்கல் செய். *n. ag. impers.* muffler, கழுத்துக் குட்டை; சவுக்கத்துணி.

**Mutti,** *n.* பொது ஆடை; பணித்துறையல்லா ஆடை.

**Mug,** *n.* சாடி; குடிகிண்ணம்.

**Mulberry,** *n.* முசுக்கட்டை மரம்.

**Mulct,** *n.* தண்டவரி. *v.* தண்ட வரி சுமத்து.

**Mule,** 1. *n.* கோவேறு கழுதை பிடிவாதக்காரர். 2. *n.* நூல் நூற்கும் ஓர் இயந்திரப் பொறி. 3. *see* mewl.

**Muleteer,** *n.* கோவேறு கழுதை ஓட்டி.

**Mulligatawny,** *n.* (இந்திய வழக்கு) மிளகுத்தண்ணீர் மிளகு சாறு; மிளகு நீர்.

**Multifarious,** *a.* பலவகைப் பட்ட.

**Multi-form,** *a.* பல உருவங் களான.

**Multi-millionaire,** *n.* பெருங்கோடியாளர்; பல்கோடிச் செல்வர்.

**Multiple,** *n.* (எண்ணின்) மடங்கு; மீதமின்றி ஓர் எண்ணால் வகுக்கப்படும் தொகை. *a.* மடங்கான.

**Multiplex,** *a.* பல அமைப்புகளை ஒன்றாயிணைத்துள்ள.

**Multiplicand,** *n. see* multiply

**Multiplication**. *n. see* multiply.

**Multiplicity,** *n.* பலவான தன்மை; மிகப் பல.

**Multiplier,** *n. see* multiply.

**Multiply,** *v.* மிகுதியாகு; பெருகு; மிகுதிப்படுத்து; (கணக்கியல்) பெருக்கு. *n.* multiplication. *n. ag.* multiplier, பெருக்கும் எண். s.,*n.* multiplicand, பெருக்கப் படும் எண்.

**Multitude,** *n.* எண்ணிறந்த தன்மை; கூட்டம். *a.* multitudinous, மிகப் பலவான.

*multum in parvo, n.* சிறு அளவில் பெரும் பொருள்.

**Mum,** *adv.* பேசாது; வாளா. *n.* அரவமின்மை; பேசாமை; மிண்டாமை.

**Mumble** *v.* முணு முணு; வாயை மூடிக் கொண்டு அசைபோடு.

**Mummer,** *n.* முகமூடியணிந்த நடிகன் ; வாய் பேசா நடிகன். *n. abs.* mummery.

**Mummy,** *n.* (தைலம் முதலிய வற்றில் கெடாமல் வைக்கப்பட்ட) பிணம்; தாழியிலடக்கப்பட்ட 'முதுமக்கள்' உரு. *v.* mummify, 2. *n.* குழந்தை வழக்கில் 'அம்மா'.

**Mump,** *v.* மசணையாயிரு.

**Mumps,** *n. (pl.)* புட்டாளம்மை.

**Munch,** *v.* அசைபோடு.

**Mundane,** *a.* இவ் வுலக வாழ்வுக்குரிய; இம்மைக்குரிய; உலகியலான.

**Mungoose,** *n. see* mongoose.

**Municipal,** *a.* நகரவைக்குரிய; நகராண்மைக்குரிய; தன்னாட்சியவையுடைய; நகருக் குரிய. *n. com.* municipality, நகரவை; நகராண்மையுடைய நகரம்.

**Munificent,** *a.* வண்மையுடைய. *n. abs.* munificence.

**Munition,** *n. (gen. in. pl.)* போர்த் தளவாடம்; வெடிமருந்துக்குவை.

**Munsiff,** *n.* (இந்திய வழக்கு) வட்டமுதல்வர்; வட்ட நடுவர். *comb. n.* village munsiff, ஊர்த்தலைவர்; ஊர் முதல்வர். district munsiff, மாவட்ட நடுவர்.

**Mural,** *a.* சுவருக்குரிய; சுவரைப் போன்ற.

**Murder,** *n.* கொலை; மனமறிந்த கொலை. (*see* manslaughter) *v.* கொலை செய்; தவறாக்கிக் கெடு. *n. ag.* murderer. (*fem.* murderess) *a.* murderous.

**Mure,** *v.* சிறைசெய்.

**Murk,mirk, murky.** (poet) *a.* இருளடர்ந்த; இருண்ட. *n.* murkiness.

**Murmur,** *n.* முணுமுணுத்தல். தாழ்குரலில் குறை சொல்லல், *v.* முணுமுணு; குறைசொல்.

**Murphy,** *n.* உருளைக் கிழங்கு.

**Murrain,** *n.* மாட்டு நோய் வகை.

**Muscle,** *n.* தசை; தசைநார்; *a.* muscular.

**Muse,** *n.* கலை; கலைத்துறை; கலைப்பண்பு; கலைத்தெய்வம் (கிரேக்க புராணப்படி ஒன்பது

கலை நங்கையருள் ஒருவர்). *v.* சிந்தனை செய். ஆழ்ந்தாராய். *n.* musing.

**Museum** *n.* அரும் பொருட் காட்சிச் சாலை; காட்சிச் சாலை; காட்சியகம்; காட்சிமனை.

**Mushroom,** *n.* காளான் ; சட்டென வளருவது திடீரென்று உயர் நிலைக்கு வருபவர்.

**Music,** *n.* இசை; பாட்டு; பண். *a.* musical, இசைக்குரிய; காதுக் கினிய. *n. pers.* musician, பாடகர்; இசைஞன்; பாணன்.

**Musk,** *n.* (musk deer, கத்தூரி மான்). *a.* musky.

**Musket,** *n.* (பழைய வகை) துப்பாக்கி. *n. pers.* musketeer. *n. abs.* muskety.

**Musk-rat, musquash.** *a.* மூஞ்சூறு (வகை).

**Muslin,** *n.* மெல்லிய துணிவகை; வெண்துகில்

**Mussel,** *n.* சிப்பிவகை. *v.* (*impers.* aux) வேண்டும். (must go.) போக வேண்டும்.)

**Mustard,** *n.* கடுகு.

**Muster,** *v.* திரட்டு; திரட்டிக் கூட்டு; ஒன்று கூட்டு; திரள்; ஒன்றுகூடு; திரண்டு கூடு; வந்து கூடு. *n.* திரள் குழு; கூட்டம்; போர்வீரர் முதலியோர் கூடுதல். (*comb. n.* muster roll, திரள் பதிவு; வருகைப் பதிவு; வருகைப் பதிவேடு; கூடகைப் பதிவேடு.

**Musty,** *a.* பூஞ்சக் காளான் பிடித்த; பழைமையான. *n.* mustiness.

**Mutable,** *a.* மாறக்கூடிய; மாற்றக் கூடிய; நிலையற்ற. *n.* mutability.

**Mutation,** *n.* மாறுதல்; மாறுத லடைந்து புது உயிரினம் தோன்றுதல்.

*mutatis, mutandis, adv.* தேவையான மாறுதல்களோடு.

**Mute,** *a.* பேசாத; ஓசையற்ற; ஊமையான. *n.* ஊமை; (இலக்) ஊமையொலி (அஃதாவது வல்லினம்).

**Mutilate,** *v.* முடமாக்கு. *n.* mutilation. *n. ag.* mutilator.

**Mutineer,** *n.* கலகக்காரன்; கிளர்ச்சிக்காரன்.

**Mutiny,** *n.* கலகம்; கிளர்ச்சி; கலவரம். *v.* கலவரம் செய். *a.* mutinous.

**Muttas,** *n.* (இஸ்லாமிய வழக்கு) அறநிலையம்; s. *n.* muttadar, அறக்காவலர்.

**Mutter,** *v.* தாழ்குரலில்பேசு. முணுமுணு. *n.* முணுமுணுப்பு.

**Mutton,** *n.* ஆட்டிறைச்சி.

**Mutual,** *a.* ஒருவருக்கொருவர் ஆன; ஒன்றுக்கொன்றான, செயலெதிர் செயலான.

**Muzzle,** *n.* மூஞ்சி; துப்பாக்கி வாய்; வாயடைப்பு. *v.* வாயை அடை.

**My,** *pron* (*poss.* of 'I') என்னுடைய.

**Mycology,** *n.* காளானைப் பற்றிய நூல்துறை; காளான் ஆய்வு நூல்.

**Mycosis,** *n.* காளானால் ஏற்படும் நோய்வகை.

**Myocarditis,** *n.* இதயத்தசை அழற்சி.

**Myopia,** *n.* அண்மைநோக்கு (நோய்.)

**Myriad,** *a. n.* பதினாயிரம்; மிகப்பல.

**Myriapod,** *a.* பல கால்களுள்ள. *n.* பூரான் ; மரவட்டை போன்ற பூச்சி.

**Myrmidon,** *n.* (குறும்பு செய்யும்) கடைசிப்படி ஏவலாள்.

**Myrobalan,** *n.* (தோல் பதனிடல், சாயங் காய்ச்சுதல் ஆகியவற்றில் பயன்படும்) பழவகை.

**Myrrh,** *n.* சாம்பிராணி.

**Myrtle,** *n.* மண மலர்ச்செடிவகை.

**Myself,** *pron,* (*refl.*) (1) நானே; என்னையே.

**Mysterious,** *a.* புரியாத; அறிவு கடந்த. *n. abs.com.* mystery, புரியாத மறைச் செய்தி தெய்விக மறை உண்மை.

**Mystic, Mystical,** *a.* மறைப் பொருளுள்ள; மறை மெய்மை சார்ந்த. *n. pers.* mystic. *n. abs.* mysticism. *v.* mystify, மறை புதைவாக்கு; திகைக்கச் செய்; ஏமாற்று. *n.* mystification.

**Myth,** *n.* கட்டுக்கதை; புராணக் கதை. *a.* mythic(al) *n. abs. coll.* mythology, புராணம்; பழம் புனைவு; பழங்கதை; புராணத் தொகுதி. *a.* mythologic(al). *n. pers.* mythologist.

**Mythus,** *n.* கட்டுக் கதை.

# N

**Nab,** *v.* எதிர்பாராதிருக்கும் பொழுது கைப்பற்று; கைக்கொள்; சிறை கொள்.

**Nadir,** *n.* (வானூல்) அகடு; சுவடு; எதிர்முகடு; நீசம்.

**Nag,** 1. *n.* சிறுகுதிரை; குதிரை. 2. *v.* குற்றங்கூறு; வைது தொந்தரை செய். (2) *n.* nagging.

**Naiad,** *n.* நீர் அரமகன்; நீர் உறை தெய்வம்.

*naif, a. see* naive.

**Nail,** 1. *n.* நகம்; உகிர். 2. ஆணி. *v.* ஆணியடி (2) *n. ag.* nailer, ஆணி செய்பவர் *n. abs.*nailery.

**Naive, naif,** *a.* சூதற்ற; எளிமை யான. *n. abs.*naivety, naivete.

**Naked,** *a.* அம்மணமான; பாதுகாப் பில்லாத; திறந்துள்ள. *n.* naked ness.

**Namable, nameable,** *a.* பெயர் சொல்லத்தகுந்த.

**Namby-pamby,** *a., n.* பொருளற்ற (பேச்சு).

**Name,** *n.* பெயர்; புகழ்; பெயரளவு. *v.* பெயரிடு; பெயர் குறிப்பிடு. *a. see* namable. *a. neg.* nameless, புகழற்ற; பெயர் தெரியாத; பெயர் கூறமுடியாத. *n.* namesake, (பிறனொருவன்) பெயரை யுடையவன்; பெயர் முதல்.

**Namely,** *adv.* (குறியீடு. *viz*) என்னவெனில்; அஃதாவது.

**Nanny,** *n.* பெண் ஆடு; குழந்தையின் செவிலித்தாய்.

**Nap,** *n.* சிறுதுயில். *v.* சற்று நேரம் தூங்கு; சிறிது அயர்ந்து இருந்து விடு.

**Nape,** *n.* கழுத்தின் பின் புறம் பிடரி.

**Naphtha,** *n.* கறுப்பெண்ணெய் வடிப்பு.

**Naphthalene,** *n.* இரசகர்ப்பூரம்.

**Naphthol,** *n.* இரசகர்ப்பூரச் சத்து.

**Napkin,** *n.* கைக்குட்டை.

**Napoleon,** *n.* (பிரஞ்சு) ஃபிரெஞ்சுக் காசு.

**Napoleonic,** *a.* (வரலாறு) நெப்போலியனுக்குரிய; நெப்போலியன் ஊழிக்குரிய; நெப்போலியன் போன்ற.

**Narcosis,** *n.* மயக்க மருந்தின் செயல். *a., n.* narcotic, மயக்கம் தருகிற (மருந்து).

**Narrate,** *v.* கூறு; கதையாகச் சொல். *n. abs.* narration., *n. ag.* narrator, *n. com.* narrative, கதை; நிகழ்ச்சியுரை. *a.* கதை யுருவத்திலுள்ள; விவரமாயுள்ள.

**Narrow,** *a.* ஒடுக்கமான; இடுக்க மான; குறுகிய. *n.* குறுகிய வழி. *v.* குறுக்கு; ஒடுக்கமாகச் செய். *n.* narrowness, *a. (comb.)* narrow-minded, குறுகிய மனப் பான்மையுள்ள. *n.* narrow mindedness.

**Nasal,** *a.* மூக்குச் சார்ந்த; மூக்கினால் ஒலிக்கிற. *n.* (இலக்.) மூக்குவழி ஒலி; மூக்கொலி எழுத்து; (தமிழ்) மெல்லின எழுத்து. *v.* nasalize, -se. *n.* nasalization, -sation.

**Nascent,** *a.* பிறந்த நிலையிலுள்ள; முதிராத; புனிற்றிள.

**Nasty,** *a.* அழகான; அருவருப் பான; ஊழலான. *n.* nastiness.

**Natal,** *a.* பிறப்புக்குரிய; பேறுகால. *comb. a.* antenatal, பேறு காலத்துக்கு முற்பட்ட.

**Natality,** *n.* பிறப்பு வீதம்.

**Nates,** *n. (pl.)* பிட்டிகள்; சந்துப் பட்டைகள்; குண்டி.

**Nation,** *n.* நாட்டினம்; நாடு; நாட்டு மக்கள். *n. abs.* nationhood, நாட்டினத்தன்மை. *a.* national, நாட்டினம் சார்ந்த; நாடு முழுமைக்குரிய; நாட்டியக்கம் சார்ந்த. *n. pers.* nationals நாட்டைச் சேர்ந்த மக்கள். *n. abs.* nationalism. நாட்டுரிமை; நாட்டுணர்ச்சி; தேசியம். *see* nationality

**Nationality,** *n.* (nation) நாட் டுரிமை இயக்கம்; தேசிய இயக்கம்; தேசிய வாதம். *n. pers.* nationalist, நாட்டுரிமை இயக்கத் தார்; தேசியவாதி; தேசியத் தன்மை; நாட்டினம்; துணை நாட்டினம்; நாட்டினத் தொடர்பு. *comb. n.* national savings certificate., நாட்டுச் சேமிப்புப் பத்திரம். *v.* nationalize, -se, நாட்டுரிமைப் படுத்து; நாட்டியற்படுத்து; நாட்டுப் பொது உரிமையாக்கு. *n.* nationalization, -sation, நாட்டுப் பொதுமயம் (ஆக்கம்) பொதுவியல் ஆக்கம்.

**Native,** *a.* பிறப்பிடத்திற்குரிய; இயற்கையான; பிறப்புக்குரிய. *n.*

திணைக்குரியவர்; திணைக்கு உரியது; நாட்டுக்குரிய செடி; உயிர்; மனிதர். *n.* nativity, பிறப்பு; பிறப்புப் பட்டி (சாதகம்) *comb. n.* native states, (இந்திய வழக்கு) தனியரசுகள்.

**Nattam,** *n.* (தமிழக வழக்கு) நத்தம்; சிற்றூர்.

**Natural,** *a.* இயற்கையான; பிறப் பளவில் உரிமையான; (பிறப்பு, மகன் மகள்) சட்டப் படியல்லாத. *n.* அரைப் பைத்தியமாகப் பிறந்தவன். *n.* natural ness, இயல்தன்மை. *n.* naturalism, இயற்கையே கடவுள் என்ற கொள்கை. *v.* naturalise. *see* naturalize.

**Naturalist,** *n.* செடியின் வாழ்க்கை நூலறிஞன்.

**Naturalistic,** *a.* இயற்கைத் தத்துவத்துக்குரிய.

**Naturalize-se,** *v.* நாட்டின் உரிமையளி; பழக்கு; சூழலுடன் இணக்கு; சுற்றுச் சார்புடன் இசைவி.

**Naturally,** *adv.* இயற்கையாக; முயற்சியின்றி.

**Nature,** *n.* இயற்கை; இயற்கை யாற்றல்; தன்மை; இயல்பு. (*see* naturalist, etc.)

**Naught,nought,** *n.* இன்மை; இல்பொருள்; வெறுமை; சூனியம்.

**Naughty,** *a.* கீழ்ப்படியாத; அடம் பிடித்த; குறும்பான. *n. abs.* naughtiness.

**Nausea,** *n.* அருவருப்பு; வெறுப் புணர்ச்சி; வாந்தி.

**Nauseate,** *v.* வெறுத்துத்தள்ளு; அருவரு. *a.* nauscous.

**Nautch,** *n.* சதிர்; ஆடல்.

**Nautical,** *a.* கப்பல் துறை சார்ந்த.

**Naval,** *a.* கடற்படை சார்ந்த.

**Nave,** *n.* கிறித்துவக் கோவிலின் நடுப்பகுதி; சக்கரத்தில் அச்சைப் பொருத்துமிடம்.

**Navel,** *n.* கொப்பூழ்; தொப்புள்; மையப்பகுதி.

**Navicert,** *n.* கடல் முற்றுகையைத் தாண்டிச் செல்லுவதற்கான சீட்டு.

**Navigate,** *v.* கப்பல்செலுத்து; கடலில் செல்லு. *a.* navigable, கப்பற் போக்கு வரவுக்குரிய.

**Navigation,** *n.* கப்பல் தொழில், *n.* navigator, கப்பலோட்டி; கடலோடி; மீகாமன் (மாலுமி); கடற் பயண வாணர்.

**Navy,** *n.* கடற்படை; நாவாய்க் கூட்டம்.

**Nay,** *adv.* இல்லை; அவ்வாறில்லை. *n.* மறுப்பு. (x aye).

**Nazarene,** *n.* நாசரத்து (Nazareth) நகரத்தினர் (ஏசு கிறித்து).

**N.B.** (சுருக்கக் குறிப்பு) *see nota bene.*

**Neap,** (tide), *n.* மிகக்குறைந்த அளவில் (கடல்) பொங்குதல்; சிறுவேலி ஏற்றம்.

**Near,** adv, *a. (old comparative of* nigh*)* அருகிலுள்ள; போன் றுள்ள. *prep.* பக்கத்தில். *v.* நெருங்கி வா. *adv.* nearly, கிட்டத்தட்ட. *n.* nearness. *comb. a.* near-sighted, கிட்டப் பார்வை யுள்ள.

**Neat,** 1.*a.* ஒழுங்கான; தூய. 2. *n.* மாடு; கால்நடை (1) *n.* neatness, தூய்மை. (2) *n.* neatherd, மாடு மேய்ப்போன்.

**Neath,** *prep.* (> beneath) கீழே

**Nebula,** *n.* (*pl.* nebulae) வான் மீன் ஒளிக்குழு; ஒளி முகில்; ஒளி ஆவி. *a.* nebular, ஒளிமீன் குழு வடிவுடைய. *a.* nebulous, புகை போன்ற; குழப்பமான.

**Necessary,** *a.* இன்றியமையாத. *n.* அவசியமானது. *adv.* necessarily.

**Necessity,** *n.* கட்டாயத் தேவை; அவசியப்பொருள்; இன்றியமை யாதது; தேவை. *n.* necessitate, அவசியமாக்கு; தவிர்க்கமுடியாத படி செய். *a.* necessitous, இன்றியமையாத் தேவையுடைய; ஏழ்மையான.

**Neck,** *n.* கழுத்து; ஒடுங்கிய பகுதி *(comb.) n.* neckerchief, கழுத்தைச் சுற்றி அணியும் துண்டு. *n.* neck lace, கழுத்து மாலை; கழுத்தணி.

**Necromancy,** *n.* (இறந்தோர் ஆவி மூலமாக) வருங்கால முரைத்தல்; செப்படிவித்தை. *n.* necromancer.

**Nectar,** *n.* அமுதம்; சாவா மருந்து; தேன்.

**Nectary,** *n.* (மலரின்) தேன் கலம்.

**Need,** n தேவை; வறுமை. *v.* (*impers.* aux.) தேவைப்படு. *a.* needy, வறுமையான; தேவையான. *adv.* needs, கட்டாயமாக. *a.* needful வேண்டப்படுகிற. *a.* needless, அவசியமில்லாத. *adv.* needlessly.

**Needle,** *n.* ஊசி. *n.* needle-woman, தையற்காரி. *n.* needle-work, தையல்வேலை.

**Nefarious,** *a.* கீழ்த்தரமான; கயமைத்தன்மை வாய்ந்த; கொடிய.

**Negate,** *v.* மறு.; இல்லை என்று கூறு. *n.* negation, எதிர்மறை; மறுத்தல்; இல்லையெனல். *a.* negatory, மறுப்புச் சார்ந்த.

**Negative,** *a.* எதிர்மறையான; இல்லையென்கிற. *n.* எதிர்மறை வாசகம். *v.* தள்ளுபடி செய்; மறு. *adv.* negatively.

**Neglect,** *v.* அசட்டை செய்; சிறிதெனத் தள்ளு; மற; *n.* புறக்கணிப்பு; கவனியாதிருத்தல். *a.* neglectful. *n.* neglectful ness.

**Neglige,** *n.* (நெஃக்ளிஃழெ) அரைகுறை உடை.

**Negligence,** *n.* கவனியா திருத்தல்; கடமையைத்தவற விடுதல். *a.* negligent, கவனியாதிருக்கிற; கடமையில் தவறுகிற. *a.* negligible, தள்ளக்கூடிய; மிகச் சிறிய.

**Negotiate,** *v.* பேரம் செய்; உடன் படிக்கை ஏற்பாடு செய்; இன்னலை வெல் அல்லது தாண்டு. *n.* negotiation. *n. pers.* negotiator. *n.* negotiable, *comb. n.* negotiable instruments மாற்றக் கூடிய பத்திரங்கள்; மாற்றுரிமைப் பத்திரம்; மாற்றியல் தாள் முறி.

**Negro,** *(fem.)* negress, கருநிற மனிதர்; நீகிரோ இனத்தவர். *a.*

நீகிரோ இனம் சார்ந்த. *conn. a., n.* negroid நீகிரோ இனம் சார்ந்த(வர்) நீகிரோ இனக்கலப் புள்ள(வர்).

**Neigh,** *v.* (குதிரை போல்) கனை. *n.* கனைத்தல்.

**Neighbour,** *n.* அயலார்; அண்டை வீட்டுக்காரர். *a.* அருகிலுள்ள, *v.* பக்கத்திலிரு; எல்லையிலிரு. *a.* neighbouring, *a.* neighbourly. அயலாருடன் இணக்கமான; நட்பான. *n. abs.* neighbour hood, அயலிடம்; அக்கம் பக்கம்; சுற்றுப்புறம்.

**Neither,** *adv., conj. n., pron.,.* (neither..... nor) இரண்டு மில்லை; இதுவுமன்று; அதுவுமன்று; (எதிர்மறைப் பொருள்) இரண்டில் எதுவும் இல்லை.; (neither this nor that இதா அன்று, அதா அன்று).

**Nemesis,** *n.* பழித்தெய்வம்; பழிக்குப் பழி; தீவினைப் பயன்; ஊழ்.

**Neolithic,** *a.* புதிய கற்காலத்தைச் சேர்ந்த.

**Neon,** *n.* செயலற்ற வளிகளில் ஒன்று.

**Neophyte,** *n.* புதிய சீடர்; புதிதாக மதம் மாறியவர்.

**Nephew,** *n.* (*fem.* niece.) உடன் பிறந்தார் மகன்; மருமகன் (அல்லது) ஒன்று விட்ட மகன்.

*ne plus ultra, n.* மேலும் முன்னேற முடியாத நிலை; உச்ச நிலை.

**Nepotism,** *n.* (பணித்துறையில் உறவினருக்குக் காட்டும்) தனிச் சலுகை.

**Neptune,** *n.* (கிரேக்க புராணம்) கடல் தெய்வம்; வருணன்; கோள் களில் ஒன்று; ஏழாவது கோளினம்.

**Nerve,** *n.* நரம்பு; மனவுறுதி. *v.* மனவுறுதி கொள். *a.* nervous, நடுக்கமுள்ள. *n.* nervousness, *a.* nerveless வலிவற்ற; மன உரமில்லாத.

**Nervine** a., *n.* நரம்புகளை வலுப்படுத்துகிற (மருந்து).

**Nescience,** *n.* அறியாமை; மாயை. *a.* nescient, அறியாமை யுடைய.

**Ness,** *n.* நிலமுளை; நிலக்கோடி; நில அலகு.

**Nest,** *n.* பறவைக் கூடு; சிறிய வீடு; திருடர்கள் கூடுமிடம். *v.* கூடு கட்டு. *conn. v. see* nestle. *n. see* nestling.

**Nestle,** *n.* (nest) ஒன்றி அணைந் திரு; அருகிலிரு; ஒட்டிக்கொள்; தழுவு; வாய்ப்பாக அமர்ந்து கொள். *p. pr. p.* nestling.

**Nestling,** *n.* 1. (nest) கூட்டை விட்டு வெளியேறாத பறவைக் குஞ்சு. 3. *v. pr.p. see* nestle.

**Net,** 1.*n.* வலை; கண்ணி; சூழ்ச்சி *v.* வலை பின்னு; வலை அல்லது கண்ணியில் சிக்க வை. 2. *a.* கழிவு அல்லது செலவு போக எஞ்சி யுள்ள; கழிநிலையான; நிகரமான; நிலை எச்சமான; மீப்பான; இறுவாயான. *v.* செலவுபோக ஆதாயம் பெறு. (1) *a. see*

netting. 2. *comb. v.* net income, நிகர வருமானம்; மீட்பு வருமானம். net proceeds, செலவுநீக்கி வருவாய்; நிகர ஆதாயம். net profit, நிகர ஆதாயம்; மிச்ச ஆதாயம்.

**Nether,** *a.* கீழான; பாதாளத்தைச் சேர்ந்த. *(sup.)* nethermost, கீழ்க்கோடியிலுள்ள.

**Netting,** *n.* வலை.

**Nettle,** *n.* முட்செடி, *v.* முள்ளி னால் குத்தப்பெறு; சினமூட்டு.

**Network,** n பின்னல்; பின்னல் போன்றது.

**Neural,** *n.* நரம்பு சார்ந்த.

**Neuralgia,** *n.* நரம்பு வலி. *a.* neuralgic.

**Neurasthenia,** *a.* நரம்புத்தளர்ச்சி. *a.* neurasthenic.

**Neuritis,** *n.* நரம்பு நோய்.

**Neuropathy,** *n.* நரம்புநோய். *n. pers.*neuropathist, நரம்பு நோய் வல்லுநர்.

**Neurosis,** *n.* நரம்புக் கோளாறு; மளை வேறுபாடு. *a.* neurotic, நரம்பு சார்ந்த. *n.* நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் மருந்து; நரம்புத்தளர்ச்சி அல்லது மிகு உணர்ச்சியுள்ளவர்.

**Neuter,** *a.* அஃறிணையான; ஆண் பெண் பொதுவான; நடு நிலையான; பொதுநிலையான; (பகை நட்பில்லா) நொதுமல் நிலையான; (இலக்கு.) அஃறிணைப் பாலான. *n.* ஆண் பெண் பாகு பாடில்லாத பொருள் அல்லது உயிர். *a., n. see* neutral.

**Neutral,** *a.* பொது நிலையான; நொதுமலான; நடுநிலையான; ஒரு கட்சியிலும் சேராத; போரில் ஈடுபடாத; இரு சார்புமற்ற. *n.* நடுநிலைமை வகிக்கிற நாடு அல்லது ஆள். *n. abs.* neutrality, *comb. n.* neutral state, நொதுமல் நாட்டுக் கப்பல்கள்; பொதுவர் கலங்கள்; நொதுமலர் கலங்கள்.

**Neutralize-se,** *v.* (neutral) மட்டுப்படுத்து; முனைப்பழி. *n.* neutralization- sation.

**Neutron,** *n.* அணுவில் மின் இயக்கமில்லாத சிறு பகுதி; 'நொதுமம்'.

**Never** *adv.* எப்பொழுதுமில்லை; கட்டாயமாக இல்லை.

**Nevertheless,** *adv.* எனினும்.

**New,** *a.* புதிதான; சற்றுமுன் தொடங்கப்பட்ட. *n.* newness. *comb. n.* new case, புது வழக்கு; புதுநிகழ்வு. புது நிகழ்வினம்; புது இனம்; புது உருப்படி. new moon. மறையுவா; மறைமதியம், (அமாவாசி).

**Newfangled,** *a.* புதிதாக வழக் காற்றில் புகுந்துள்ள.

**Newnoon,** *n. see* new.

**News,** *n.(pl)* செய்தி.

**Newsmonger,** *n.* செய்தியைப் பரப்புகிறவர்.

**Newspaper,** *n.* செய்தித்தாள்; நாளேடு; செய்தி இதழ்; 'நிகழ் விதழ்; பத்திரிகை.

**Newsprint,** *n.* செய்தி அச்சிடும் தாள்; பத்திரிகை அச்சு.

**News- vendor,** *n.* பத்திரிகை விற்பவர்.

**Newt,** *n.* பல்லியின் வகை.

**Next,** *a.* (*old superlative of* nigh) பக்கத்திலுள்ள; அடுத்து. *pron.* அடுத்தவர்; அடுத்தது. *adv.* அடுத்து.

**Nexus,** *n.* இணைப்பு; தொடர்பு.

**N.G.O.** (சுருக்கக் குறிப்பு) *see* Non-gazetted officer. பதிவுயர்வு பெறாப் பணியாளர்.

**Nib,** *n.* (மைக்கோல்) முகப்புப் பகுதி; 'பேனா' முனை; பறவையின் அலகு. *n. (pl.)* nibs, உடைத்து 'கொக்கோ' விதைகள்.

**Nibble,** *v.* கொறி; கௌவு. குற்றம் கண்டுபிடி. *n.* தூண்டிலை மீன் கௌவுதல்.

**Nice,** *a.* நேர்த்தியான; பட்டுப் போன்ற; மினுசமான நுண்திற முடைய; விருப்பமான; சிறு குற்றங் காண்கிற; அரிய. *n.* niceness, nicety, நுட்பம்; நுணுக்கம் நுண்நயம்; நுட்ப வேறுபாடு காணும் திறம்.

**Niche,** *n.* மாடக்குழி; மாடம்.

**Nick,** *n.* கத்தரிப்பு; கரை அல்லது ஓரத்திலிருந்து கத்தரித்த துண்டு; சரியான இடம். *v.* கத்தரி.

**Nickel,** *n.* வங்கக் கலவை வகை; செர்மன் வெள்ளி. *v.* வங்கக் கலவை பூசு.

**Nickname,** *n.* சாட்டுப் பெயர்; அடை பெயர். *v.* மாறுபெயர் கொடு; சாட்டுப் பெயரிடு.

**Nicotian,** *a.* புகையிலைக்குரிய. *n.* புகையிலைச் சுருட்டுப் பிடிப்பவன்.

**Nicotine,** *n.* புகையிலைச் சத்து; புகையிலை நஞ்சு.

**Nidus,** *n.* (*pl.* nidi niduses). பூச்சிக் கூடு; நோய் பிறக்குமிடம்.

**Niece,** *n.* (*mas.* nephews) உடன் பிறந்தாருடைய மகள்; மருமகள் அல்லது உடன் பிறந்தான் மகள்.

**Niggard,** *a., n.* கஞ்சத்தன மான(வர்); பிசுணித்தனமான(வர்); இழிவான(வர்). *a., adv.* niggardly. *n.* niggardliness.

**Nigger,** *n.* நீகிரோ; கறுப்பு மனிதர்.

**Nigh,** *a., adv., prep.* (*old positive of* near and next) அருகிலுள்ள; அருகே.

**Night,** *n.* இரவு; இருள்; இன்னல்; அறியாமை. *a.* nightly, இரவுக்குரிய; ஒவ்வொரு இரவும் நிகழ்கிற. *adv.*, nightly, இரவில்; இரவு தோறும். *comb. n.* night-soil, 'கழிமலம்', 'கசடு', night soil depot. 'கழிமலக் கிடங்கு; 'அழிகிடங்கு'.

**Nightingale,** *n.* 'இராப்பாடிப் பறவை'; 'அல்லிசைப்புள்'; 'இராக்குயில்'; குயிலினப் பறவை.

**Nightlong,** *a.*, இரவு முழுது மிருக்கிற.

**Nightmare,** *n.* கொடுங் கனவு; தீக்கனா.

**Nihilism,** *n.* சூனியவாதம். *n. pers.* nihilist.

**Nil,** *n.* ஒன்றுமில்லை; சூனியம்.

**Nimble,** *n.* விரைவுடைய; எளிதில் இயங்குகிற. *n.* nimbleness.

**Nimbus,** *a.* ஒளிவட்டம்; கார் முகில்.

**Nine,** *a., n.* ஒன்பது. *a., n.* ninth, ஒன்பதாவது; ஒன்பதிலொன்று. *adv.* ninthly.

**Ninepins,** *n.* ஒன்பது முளைகள் நிறுத்திப் பந்தடித்து வீழ்த்தும் ஒரு விளையாட்டு. 'அடிபந்து'.

**Nineteen,** *a., n.* பத்தொன்பது. *a., n.* nineteenth, பத்தொன்பதாவது; பத்தொன்பதிலொன்று.

**Ninety,** a., *n.* தொண்ணூறு. *a., n.* nintieth, தொண்ணூறாவது; தொண்ணூறிலொன்று.

**Ninth,** *a., n. see* nine.

**Nip,** *v.* கிள்ளு; முனையை ஒடி. *n.* கிள்ளுதல்; அழித்தல்; கடித்தல். *n.* nipper.

**Nippers,** *n. (pl.)* இடுக்கி.

**Nipple,** *n.* முலைக் காம்பு.

**Nit,** *n.* (பேனின்) ஈர்.

**Nitrate,** *n.* வெடியகி; உப்பு வகை.

**Nitre,** *n.* வெடியுப்பு; வெடியம். *a.* nitric.

**Nitrogen,** *n.* உப்பு வளி; காற்று மண்டலத்திலுள்ள செயலிலாப் பெருவளி. *a.* nitrogeneous.

**Nix,** *n.* (*fem.* nixe) நீர்த் தெய்வம்.

**No.** 1. *a., adv.* ஒன்றுமில்லாத; இல்லை. *n.*மறுப்பு, *(pl.* noes.) மறுத்துக் கூறுவோர். 2. (சுருக்கக் குறிப்பு) *see* number. (1) *comb. n.* no confidence, நம்பிக்கையின்மை; நம்பிக்கையின்மை யறிவிப்பு. no confidence motion, vote of no confidence, நம்பிக்கையில்லாத் தீர்மானம் (மொழியெடுப்பு).

**Nob,** *n.* தலை; மேல் சமூகத்தினர்.

**Nobility,** *n.* பெருந்தன்மை; பெரு மக்கள் குடி; மேன்மை வாய்ந்தவர்.

**Noble,** *a.* உயர்தரமான.

*noblesse oblige, phr., v.* உரிமைக் கேற்ற கடமையும் உண்டு.

**Nock,** *n.* (வில்லின்) நாண்பள்ளம்.

**No-confidence,** *n. see* no.

**Nocturnal,** *a.* இரவுக்குரிய; இரவில் நிகழ்கிற.

**Nocuous,** *a.* தீங்கு நிறைந்த. (x innocuous.)

**Nod,** *v.* தலையசை; தலையாட்டு; சிறு துயில்கொள்; சிறு பிழை செய். *n.* தலையசைப்பு.

**Noddle,** *n.* தலை.

**Noddy,** *n.* முட்டாள்; கடற் பறவை வகை.

**Node,** *n.* முடிப்பு; கணு. *a.* nodal.

**Nodose,** *a.* கணுக்கள் நிரம்பிய. *n. abs.*nodosity.

**Nodule,** *n.* சிறு முடிப்பு; கணு.

**Nodus,** *n.* சிக்கலான கடா; சிக்கல் வாய்ந்த செய்தி; இன்னல்; நெருக்கடி.

**Nog,** *n.* ஆப்பு; மர முளை.

**Noise,** *n.* இரைச்சல்; கூப்பாடு. *a.* கூச்சலிடு. பல இடங்களிலும் பரவச்செய். *a.* noisy, கூச்சலிடுகிற; கூச்சலான. *n.* noisiness,

*a. (neg.)* noiseless. *n. (neg.)* noiselessness.

**Nomad,** *n.* நாடோடி. *a.* அலைந்து திரிகிற. *a.* nomadic.

**No man's land,** *phr. n.* உரியவனில்லா நிலம் பொதுவல் நிலம்; போரில் எதிரிகளின் முன்னணிகளுக்கு இடைப்பட்ட நிலம்.

*nom de plume, n.* (எழுத்தா சிரியரின்) புனை பெயர்.

**Nomenclature,** *n.* பெயரிடும் முறை; சொல் வழக்கு.

**Nominal,** *a.* பெயரளவினதான; உண்மையல்லாத; பெயர் சுட்டிலு மான; மட்டளவான; சமிக்கை மட்டான.

**Nominate,** *v.* பெயர் குறிப்பிடு; அமர்த்து; (பணியாளராக, மன்ற உறுப்பினராகக்) குறிப்பிடு, தேர்விலாது அமர்த்து. *n. abs.* nomination, அமர்வு; ஆளமர்வு; பெயர்க்குறிப்பீடு. (x election.) *n. pers.* nominator, அமர்த்துபவர். nominee, அமர்வு பெற்றவர்; பெயர் குறிக்கப் பட்டவர்; பேராள்.

**Nominative,** *a.* (இலக்கணம்) எழுவாய் வேற்றுமையான. *n.* எழுவாய் வேற்றுமை.

**Nominee,** *n.* (*see* nominate.)

**Nonage,** *a.* முதிரா இளமை.

**Nonagenarian,** *n.* தொண்ணூறு வயதானவர்.

**Nonce,** *n.* தற்சமயம் (for the nonce.)

**Nonchalant,** *a.* அமைதியான; கவலையில்லாத *n. abs.* nonchalance.

**Noncombatant,** *a., n.* போரிலீடு படாத (ஆள் அல்லது நாடு).

**Non-committal,** *a., n.* பிடிகொடாத; பொறுப்பெடுத்துக் கொள்ளாத; பட்டும் படாததுமான.

**Non-conductor,** *n.* மின்சாரம் அல்லது வெப்பம் தாவவிடாத பொருள்.

**Nonconformist,** *n.* 'இணங் காதவர்'; நாட்டுச் சமய நிலையத் துடன் மாறுபட்டவர். *n.* non conformity.

**Non-co-operation,** *n.* ஒத்துழை யாமை; பொறுமை எதிர்ப்பு; விலகி நிற்றல். *n.* non-co-operator.

**Nondescript,** *a., n.* ஊர் பெயர் அறியப்படாத (பொருள், ஆள்); வகைப்படுத்தப்பட முடியாத (பொருள், ஆள்); கலப்பு இனமான (பொருள், ஆள்)

**None,** *pron., a., adv.* ஒன்றுமில்லாத; யாருமில்லை; (none the less, இருந்த போதிலும், none too soon, போதிய அளவு விரைவில்.)

**Non-ego,** *n.* தானல்லாதது; அகம் அல்லாதது; புறப்பொருள்.

**Nonetity,** *n.* இராத ஒன்று; இல்லாமை; மதிப்பு ஏது மில்லாதவன்.

**Non-essential,** *a., n.* அவசிய மில்லாத(து).

**Non-gazetted officer,** *n.* (சுருக்க குறிப்பு N.G.O.) அரசேட்டுப் பதிவற்ற பணியாளர். (அ.ப.ப.)

**Non-intervention,** *n.* தலையிடாக் கொள்கை.

**Non-metal,** *n.* உலோக மல்லாதது.

**Non-officials,** *n. pl.* பணியீடு பாடற்றோர். *a.* non-official, பணிச்சார்பற்ற.

**Nonpareil,** a., *n.* இணையில்லாத (ஒன்று அல்லது ஒருவர்). *v.* ஒருவகைச் சிறு எழுத்து அச்சு.

**Nonplus,** *v.* திகைக்க வை, *n.* திகைப்பு நிலை.

**Nonsense,** *n.* முட்டாள்தனம். *a.* nonsensical.

*nonsequitur, n.* காரணகாரியத் தொடர்பின்மை.

**Nonstop,** *a.* நிறுத்தாத; இடை நிற்காத.

**Noodle,** *n.* முட்டாள்; பேதை

**Nook,** *n.* மூலை; அமைதியான இடம்.

**Noon, noonday, noontide,** *n.* நண்பகல்.

**Noose,** *n.* சுருக்கு; கண்ணி; முடிச்சு. *v.* சுருக்கிட்டுப் பிடி.

**Nor,** *adv., con.* (எதிர்மறை) அல்லது *see* neither … nor)

**Nordic,** *n.* வடமேற்கு இந்து - ஐரோப்பிய (ஆரிய) இனம் சார்ந்த; தூய ஜெர்மானிய இனம் சார்ந்த.

**Norm,** *n.* மாதிரி; மேல்வரிச்சட்டம்; வடிவம்; படிவம். *a. see* normal.

**Normal,** 1.*a.* விதிப்படியுள்ள; ஒழுங்கான; பொது நிலையான. *n.* செங்குத்துக் கோடு; வழக்கமானது. 2. *a.* வடிவியலான; அமைவியலான; படிவ இலக்கணமான; முறையியலான; பொருண்மை சாராத. (1) *n.* normalcy, normality, பொதுமை. *v.* normalize, பொதுமையாக்கு. (2) *comb. n.* normal school, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி; கல்வி முறைப் பள்ளி. normal science, முறையியல் நூல் துறை.

**North,** *n.* வடக்கு. *a.* வட திசை நோக்கிய. *a.* northern, வடபாலைய. *conn. n.* norther, வாடைக் காற்று. *adv., a.* northerly வடதிசை நோக்கி(ய) *n.* northerner, வட நாட்டான்; வாடைக்காற்று. *phr.* nothern lights, வடமுனைவளர் ஒளி.

**Nose,** *n.* மூக்கு; அலகு. *v.* மோப்பம் பிடி; நுழை.

**Nosegay,** *n.* மலர்ச்செண்டு.

**Nostalgia,** *n.* தாயக நாட்டம்.

**Nostril,** *n.* மூக்குத் தொளை.

**Nostrum,** *n.* சிறு மருந்து; போலி மருந்து; புட்டி மருந்து; தனிப் பட்டதன் திட்டம்.

**Nosy,** *a.* பெரிய நாசியுடைய; நாற்றமுள்ள.

**Not,** *adv.* இல்லை; அன்று; அல்ல.

*nota bene, v.* (இலத்தீனத் தொடர்) (*conn.* note) (சுருக்கம் (N.B.) நன்கு கவனி.

**Notable,** *a.* (note) குறிப்பிடத்தக்க; பெயர்பெற்ற. *n.* குறிப்பிடத்

தக்கவர்; புகழ்பெற்றவர். *n.* notability.

**Notary,** *n.* ஆய எழுத்தாளர்; ஆயத்துறைப் பதிவாளர்.

**Notation,** *n.* எண்குறிப்பு; எண்மானம்; இலக்கக்குறி.

**Notch,** *n.* சிறு வெட்டு; சிறு பிளவு; அடையாளக்குறி; கீற்று. *v.* கீறு; அடையாளம் ஏற்படும்படி வெட்டு.

**Note,** *n.* குறிப்பு; எழுத்துக் குறிப்பு; கைச்சீட்டு; கடன் சீட்டு; தாள் பணம்; 'காசு முறி'; இசைமானம்; பண்; புகழ்; *v.* கவனி; குறித்துக் கொள்; குறிப்பெழுது. *a. see* notable, noted, noteworthy. *v. see* notify. *(comb.) n.* notebook குறிப்பேடு; குறிப்புப் புத்தகம் எழுதேடு. bank note, பொருளக முறி. *phr. a.* of note, புகழ்பெற்ற. *n.* note files, குறிப்புக் கோப்புகள். குறிப்புக் கோவைகள்; notes and draffts, குறிப்புவரைவுகள்; காசுமுறி ஆணை முறிகள். promissory note, உறுதிப் பத்திரம். Currency note, செலாவணி (க்காசு)முறி.

**Noted,** *a.* (note) குறிக்கப் பெற்ற; புகழ்பெற்ற.

**Noteworthy,** *a.* (note) குறிப்பிடத் தக்க; சிறப்பான.

**Nothing,** *n.* ஒன்றுமில்லை; மதிப் பற்றது; இழிஞன்; இழிபொருள். *adv.* ஒன்றுமில்லாமல் (nothing daunted, etc.) *n. abs.* nothingness.

**Notice,** *n.* செய்தி; அறிக்கை; கவனம்; முன்னறிவிப்பு. *v.* கவனி; குறித்துக்கொள்; (ஒன்றைப் பற்றிக்) குறிப்பிடு. *a.* noticeable *comb. n.* notice-board, அறிவிப்புப் பலகை.

**Notify,** v.(note) அறிக்கை வெளியீடு; எச்சரிக்கை செய்; குறிப்பிடு. தெரியப்படுத்து; விளம்பரப்படுத்து. *n.* notification.

**Notion,** *n.* கருத்து; எண்ணம்.

**Notional,** *n.* (செயலறிவுத் துணை யில்லாது) கருத்தியலான.

**Notorious,** *a.* நாடறிந்த; கெட்ட பெயர் பெற்ற; இகழார்ந்த *n.* notoriety.

*notre dame, n.* (=நம் பெருமாட்டி; கிறித்துநாதரின், தாயாரான கன்னி மரியா) பாரிஸ்நகர் மாதா கோவில் (இடுகுறிப் பெயர்)

**Notwithstanding,** *prep. adv., conj.* அவ்வாறிருந்தாலும்; ஆயினும்.

**Nought,** *n.* (*see* naught.)

**Noun,** *n.* பெயர்ச்சொல். *a. see* nominal. *comb. n.* common noun, பொதுப் பெயர்; சாதிப் பெயர். proper noun, இடுகுறிப் பெயர். material noun, பொருட் பெயர். collective noun, குழுப் பெயர்; தொகுதிப் பெயர். abstract noun, பண்புப் பெயர்; குணப் பெயர்.

**Nourish;** *v.* உணவூட்டிவளர்; பேணு. *n.* nourishment, உணவு; ஊட்டம்.

**Novel,** *a.* புதிய.

**Novelette,** *n.* சிறு புனைகதை; குட்டிப் புனைகதை.

**Novelist,** *n.* புனைகதையாசிரியர்.

**Novelty,** *n.* புதுமை; புதுமையான பொருள்.

**November,** *n.* ஆங்கில ஆண்டின் பதினோராம் மாதம்.

**Novice,** *n.* புது மாணவர்; வேலை பழகுபவர். *n. abs.* noviciate, novitiate, வேலை பழகுங் காலம்; பயிலும் நிலைமை.

**Now,** *adv., conj., n.* இப்பொழுது; உடனே; தற்காலம்.

**Nowadays,** *adv.* தற்காலத்தில். *n.* தற்காலம்.

**Nowhere,** *adv.* எங்குமில்லை.

**Nowise,** *adv.* எவ்வகையிலு மில்லை.

**Noxious,** *a.* கெடுதலான; கேடு தருகிற; வெறுப்பூட்டுகிற. *n.* noxiousness.

**Nozzle,** *n.* குழாயின் நுனி; மூக்கு.

**Nuance,** *n.* மிகச் சிறு மாறுதல்.

**Nucleus,** *n. (pl.* nuclei) விதை மூளை; அணுமையம்; பருப்பு; நடுப்பகுதி; உட்கரு. *a.* nuclear.

**Nude,** *a.* மூடப்பெறாத; அம்மண மான. *n.* nudity. *n.* nudism, அம்மணக் கொள்கை.

**Nudge,** *v.* மெல்ல இடி; தள்ளு. *n.* முன் கையால் மெல்ல இடித்தல்.

**Nugatory,** *a.* சிறுமையான; வீணான.

**Nugget,** *n.* (தங்கம். வெள்ளி) கட்டி.

**Nuisance,** *n.* தொந்தரை; தொல்லை; இடர்ப்பாடு ஊறுபாடு பீடை; நச்சரிப்பு. *comb. n.* nuisance case, இடர்ப்பாட்டு நிகழ்ச்சி; ஊறுசெயல்.

**Null,** *a.* பயனற்ற; கட்டுப்படுத்தாத (*phr.* null and void, தள்ளு படியான). *n.* nullity. *v.* nullify. *n.* nullification.

**Numb.,** *a.* உணர்ச்சியற்ற. *v.* உணர்ச்சியறச் செய். *n.* numbness. *v.* benumb.

**Number,** *n.* எண்; இலக்கம்; பல. (இலக்கணத்தில் ஒருமை, பன்மை) எண். (நாளேட்டின்) தனியிதழ்; *(pl.)* செய்யுள்; யாப்பு; *a.* எண்ணிக்கையிடு; எண்ணு; எண் குறிப்பிடு; மொத்தமாக *a. see* numorous, numeral, numerical, *conn. see* innumerable, *a. (neg.)* numberless, கணக்கற்ற.

**Numeral,** *a.* எண்ணைக் குறிக்கிற. *n.* எண்ணைக் குறிக்கும் வரி வடிவம்; இலக்கம்.

**Numeration,** *n.* எண்முறை; எண்களை வரிசையாகக் குறிப் பிடும் முறை; எண் ஏற்ற இறக்கம். (கணக்.) (எண்ணின்) எழுத்து மானம்; 'பகுதி'. (x notation)

**Numerator,** *n.* கணக்கிடுபவர் கீழ்வாயிலக்கத்தில் மேல் எண்.

**Numerical,** *a.* எண்ணைக் குறிக்கிற

**Numerous,** *a.* பல; மிகப்பல.

**Numismatics,** *n. (pl.)* நாணயங் களைப் பற்றிய நூல். *a.* numismatic.

**Numskull,** *n.* மடையன்.

**Nun,** *n.* (*mas.* monk) துறவிப் பெண் கன்னித்துறவி; அறநங்கை. *n.* nunnery, துறவிப் பெண்கள் வாழும் மடம்.

**Nuncio,** *n.* (கத்தோலிக்கத் திருத் தந்தையாரின்) தூதர்.

**Nuptial,** *a.* திருமணஞ்சார்ந்த. *n.* nuptials, மன்றல் மணக்கூட்டுறவு விழா.

**Nurse,** *n.* தாதி; செவிலி; செவிலித் தாய்; நோயாளியைக் கவனிப்பவர். *v.* பால் கொடுத்துவளர்; கவனித்துப் பேணு.

**Nursery,** *n.* (nurse) குழந்தைகளை வளர்க்குமிடம்; நாற்றங்கால்; உயிரினப்பண்ணை; செடிப் பண்ணை.

**Nursling,** *n.* குழந்தை.

**Nurture,** *n.* வளர்ப்பு. *v.* பேணு; வளர்; கற்பி.

**Nut,** *n.* கொட்டை; சுரை. *v.* கொட்டைகளைத் திரட்டு.

**Nutation,** *n.* அரைவு; சுழலும் பம்பரத்தின் தலையசைவு.

**Nutcraker,** *n.* பாக்கு வெட்டி.

**Nutmeg,** *n.* சாதிக்காய்.

**Nutrient,** *a.* ஊட்டமுள்ள; சத்துள்ள.

**Nutriment,** *n.* ஊட்ட உணவு.

**Nutrition,** *n.* உணவு ஊட்டம்; ஊட்ட வளம். *a.* nutritious, ஊட்டம் தரத்தக்க. *a.* nutritive, உணவாகிற; ஊட்டமுடைய; *comb. n.* level of nutrition, ஊட்ட அளவு; ஊட்டப் படித்தரம்.

**Nut-shell,** *n.* கொட்டை மேலோடு; தோடு.

**Nutty,** *a.* கொட்டையுடைய; கொட்டை போன்ற; எழுச்சியுள்ள; கிறுக்கான.

**Nux-vomica,** *n.* எட்டிக் கொட்டை; காஞ்சிரங்காய்.

**Nuzzle,** *v.* மூக்கால் அழுத்து; மோப்பம் பிடி; அணைத்துக் கிட.

**Nylon,** *n.* செயற்கைப் பட்டு வகை.

**Nymph,** *n.* அணங்கு; (கான் , நீர், மலை) அரமகள்.

# O

**Oak,** *n.* படர் மரவகை; சீமை ஆல் *a.* oaken.

**Oakum,** *n.* நார்நாராகப் பிரிந்த பழைய கயிறுகள்.

**Oar,** *n.* (படகு;த) துடுப்பு. *v.* துடுப்பினால் (படகைத்) தள்ளு. *n.* oarsman, படகோட்டி. *n.abs.* oarage,

**Oasis,** *n.* (*pl.* oases) பாலை இடைச்சோலை; செம்பாலை இன் பாலை.

**Oat,** *n.* கூல்வகை; பயிர்வகை. *n.* oatcake, (அதன்) சுட்டப்பம். *n.* ‘oatmeal’ (அதன்) மாவு.

**Oath,** *n.* சூளுரை; உறுதி; மொழி; ஆணையிடல். *comb. n.* oath of allegiance பணிவுரை உறுதி; தலைமையேற்புறுதி. oath of office, பணியேற்புரை உறுதி, oath of secrecy, மறையடக்க உறுதி; மறைபேணுறுதி.

**Obdurate,** *a.* பிடி முரண்டான; கடின மனமுள்ள. *n.* obduracy.

**Obedient,** *a.* பணிவான; சொற்படி கேட்கிற. *n.* obedience.

**Obeisance,** *n.* பணிவு; வணக்கம்; வணங்குதல்.

**Obelisk,** *n.* (கோபுர வடிவமான) தூண்; தூபி.

**Obese,** *a.* மிகத் தடித்த; கொழுத்த. *n.* obesity.

**Obey,** *v.* கீழ்ப்படி; இணங்கி நட.

*obit, v.* (சுருக்கம் ob) இறந்தார்.

*obiter dictum, n.* (*pl.-ta*) இடையில் சொல்லப்பட்ட செய்தி.

**Obituary,** n, *a.* இறந்தோர் பட்டி; மறைவறிவிப்பு.

**Object,** 1. (ஆப்ஜெக்ட்) *n.* நோக்கம்; பொருள்; (இலக்கணத் தில் செயப்படுபொருள். (object glass. நடுச்சில்). 2. *v.* (அப்ஜெக்ட்) மறுத்துக் கூறு. (1) *a. n. see* objective, (2) *n.* objector, *n.* objection, மறுத்துரை; மறுப்பு எதிர்ப்பு; தடை; தடைக்காரணம். *a.* objectionable, விரும்பத் தகாத; வெறுப்பைத் தருகிற.

**Objective,** (object) 1. *a.* பொருளின் தன்மையுள்ள. 2. (இலக்கணம்) இரண்டாம் வேற்றுமையான. *n.* 3. நோக்கம். 4. (x subjective) அறியப்படு பொருள் சார்ந்த; புறநிலை மெய்ம்மை சார்ந்த; (4) *n. see* objectivity.

**Objectivity,** *n.* புலன்களால் அறியக் கூடியதன்மை; (அறியப் படும்) புறப்பொருள் தன்மை.

**Object lesson,** *n.* (பருப்பொருள் மூலம் விளக்கும்) விளக்க பாடம்; படிப்பினை.

**Oblation,** *n.* அவியுணவு; பலியுணவு; படைப்பு; படையல்.

**Obligation,** *n.* கடமை; கடப்பாடு; நயநாகரிகக் கட்டுப்பாடு. *a.* obligatory, கடமையான; (எளிதில்) விலக்க முடியாத; கட்டாயமான.

**Oblige,** *v.* கடமைப்படுத்து; அன் புரிமை வலியுறுத்து; *a.* obliging, அன்பாதரவான.

**Obligee,** *n.* கட்டுப்பாட்டை ஏற்பவர்.

**Oblique,** *a.* சாய்வான; கோண லான; செங்கோணமல்லாத. *n. see* obliquity.

**Obliquitous,** *a.* (obliquity). தோற்றம் அல்லது நடத்தையில்) கோணலான.

**Obliquity,** *n.* (oblique) சாய்வு; நடத்தைக் கோணல். *a. see* obliquitous.

**Obliterate,** *v.* அழி; துடைத்தெறி. *n.* obliteration. *a. ag.* obliterator.

**Oblivion,** *n.* நினைவின்மை; சூனிய நிலை; முழுமறதி. *a.*

oblivious, முழுமறதியுள்ள; தன்னை மறந்த; கவனிக்காத.

**Oblong,** *a.* நீண்டுருண்ட. *n.* நீண்ட சதுரம்; செவ்வகம்.

**Obloquy,** *n.* வசைச் சொல்; புறக்கணிப்பு.

**Obnoxious,** *a.* வெறுக்கத்தகுந்த; கெடுதலான.

**Oboe,** *n.* (நாதசுரம்போன்ற) இசைக் கருவி வகை. *n.* oboist.

**Obscene,** *a.* இழிவான; கீழ்த்தர உணர்ச்சி சார்ந்த. *n.* obscenity.

**Obscurant,** *n.* சீர்திருத்த எதிர்ப் பாளர். *n.* obscurantism.

**Obscure,** *a.* தெளிவில்லாத; மங்கலான; புரியாத; புகழ் பெறாத; (ஆள்) அறியப்படாத. *n.* obscurity, இருள்; தெளிவற்று நிலை. *n. abs.* obscuration.

**Obsequies,** *n. (pl.)* இறுதிவினை முறைகள்; சாவுச் சடங்குகள்.

**Obsequious,** *a.* கெஞ்சுகிற; மான மிழந்து தாழ்கிற. *n.* obsequious ness, கெஞ்சுதல்; இழிவு.

**Observance,** *n.* (observe) கவனம்; ஆசாரமுறை; சடங்கு; வழக்கம்.

**Observant,** *a.* (observe) கூர்ந்து கவனிக்கிற.

**Observation,** *n.* (observe) கவனித்தல்; நுண்காட்சி பயில் காட்சி; கூர்ங்காட்சி; கூராய்வு; காட்சியாராய்வு; காட்சியறிவு; குறிப்பு; குறித்துரை; குறிப்பீடு; வாயுறை; இடையுரை; குறித்துக் கொண்ட செய்தி.

**Observatory,** *n.* வானாராய்ச்சி நிலையம்; விண்காட்சி மனை; சேண் ஆய்வகம்.

**Observe,** *v.* உற்றுப் பார்; கவனித்துப் பின் பற்று; குறித்துரை; கண்டுரை; இடையீட்டுரை. குறிப்பிடு; குறி; பேசு. *n. ag.* Observer. *n. see* observer. *n.* see observance, observation. *a.* see observant.

**Obsess,** *v.* மனத்தில் நிறைந்திரு; தொந்தரை செய்.

**Obsolescent,** *a.* சிறிது சிறிதாக மறைகிற; வழக்கத்திலிருந்து மறைகிற.

**Obsolete,** *a.* வழக்கற்ற; வழக் கிறந்த; வழக்காற்றிலில்லாத; பழைய மாதிரியான. *n.* பழைய மாதிரி; இறந்த வழக்கு.

**Obstacle,** *n.* தடை; இடையூறு; தடங்கல்; முட்டுக்கட்டை; கால் கட்டு.

**Obstertric(al),** *a.* பேறு மருத்துவம் சார்ந்த. *n. (pl.)* obsterics, பேறு மருத்துவம்.

**Obstinate,** *a.* பிடி முரண்டான; அசைக்க முடியாத, *n.* obstinacy.

**Obstreperous,** *a.* கூச்சலிடுகிற; அடங்காது துள்ளுகிற.

**Obstruct,** *v.* தடு; வழியடை; முட்டுக்கட்டையிடு. *n.* obstruction. *a.* obstructive, *n. pers.* Obstructionist.

**Obtain,** *v.* பெறு; கைப்பற்று; வழக்கத்திலிரு. *a.* obtainable.

**Obtrude,** *v.* வல்லந்தமாக நுழை; உரிமையின்றிப் புகு. *n.*

obtrusion. *a.* obtrusive. *n.* obtrusiveness.

**Obtuse,** *a.* மழுங்கலான; அறிவுக் கூர்மையற்ற; (இடக் கணக்கியல்) ஒரு செங்கோணத்திற்கு மிகை யான. *n.* obtuseness.

**Obverse,** *a.* தலைகீழாகத் திருப்பப் பட்ட, *n.* காசின் மறுபக்கம்.

**Obviate,** *v.* போக்கு; விலக்கு; பயனற்றதாகச் செய். *n.* obviation.

**Obvious,** *a.* தெளிவான; ஐயமற்ற. *adv.* Obviously. *n.* obviousness.

**Occasion,** *n.* நிகழ்ச்சி; தறுவாய்; காரணம்; அவசியம். *v.* காரண மாக்கு; விளைவி.

**Occasional,** *a.* சிற்சில சமயங்களில் நடக்கிற; தற்செயல் நிகழ்ச்சியான; இடை நிகழ்வான.

**Occident,** *n.* மேற்குலகு. *a.* occidental, மேற்குலகுக்குரிய.

**Occult,** *a.* மறை பொருளான; அறிவுக்கு எட்டாத. *n.* occultism, மறைதுறை; மறைநூல்.

**Occultation,** *n.* மறைதல்; (கிரகணம்) கோள்மறைவு.

**Occupant,** *n.* இருப்பாட்சி யுடையவர்; கடைமுறை உரிமை யாளர்; தங்கலுடையவர். *n. abs.* occupancy. *n.* occupation.

**Occupy,** *v.* கைப்பற்று; கைக்கொள்; தொழில்செய்; தங்கு; உறைவிடம் ஆக்கு. *n. pers. see* occupant.

**Occur,** *v.* நிகழ்; மனத்தில் எழு; தோன்று. *n.* occurrence நிகழ்ச்சி.

**Ocean,** *n.* மாகடல் *a.* oceanic, மாகடல் போன்ற; மாகடலுக் குரிய.

**Oceania,** *n.* பசிபிக் தீவுகள்.பரவை; பெருங்கடல். (கவிதை) கடலகச் செல்வி.

**Oceanus,** *n.* (கிரேக்க) கடல் தெய்வம்.

**Ochre,** *n.* மஞ்சள் களிமண்.

**Octad,** *n.* எட்டின் தொகுதி.

**Octagon,** *n.* எண்கோணம். *a.* octagonal.

**Octave,** *n.* எட்டாம் இசை; மேற்பாலை; மேலிசைத் தொகுதி.

**Octavo,** *n.* (*pl.* octaves) எட்டாக மடித்த தாள் அளவு.

**October,** *n.* ஆங்கில ஆண்டின் பத்தாம் மாதம்.

**Octogenarian,** *n.* எண்பது வயதானவர்.

**Octopede, Octopod,** *a., n.* எண்கால் உடைய(து).

**Octopus,** *n.* எட்டுக் கையுடைய உயிர்; பேரிடர் தரும் பொருள்.

**Ocular,** *a.* கண்ணுக்குரிய; காணத்தக்க.

**Oculist,** *n.* கண் மருத்துவர்.

**Odd,** *a.* ஒற்றையான; மிச்சமான; புதுமை வாய்ந்த; இயல்முரணிய. *a. n.* oddment, oddness, oddity. *a.* oddish. *n.* (*see* odds.)

**Odds,** *n.(pl.)* தீங்கு; நன்மை தீமை வாய்ப்புகள், தடங்கல்கள்; (-for) நலம்; சார்வு; (-against) எதிர்வு. (odds and ends, எச்சமிச்சங்கள்).

**Ode,** *n.* ஆடல்சார்ந்த பாடல் வகை; (கிரேக்க) துள்ளற் கலிப்பாடல்.

**Odium,** *n.* வெறுப்பு; பழி. *a.* odious, *n.* odiousness.

**Odour,** *n.* நறுமணம்; வாடை; சீர்த்தி. *a.* odorous, odoriferous.

**Of,** *prep.* உடைய; இன்; இருந்து; குறித்து.

**Off,** *adv. prep.* விலகி; அப்பால்; தள்ளி; திடீரென. *(int.)* போய்த் தொலை. *a. adv.* off and on, நடு நடுவே; விட்டு விட்டு. *n.* off-chance, எதிர்பாராத் தற்செயல் நிகழ்ச்சி. *a., adv.* of-hand, முன் நினைவின்றிச் செய்த; முன்னேற் பாடு இல்லாமல்.

**Offal,** *n.* கழிவுப் பொருள்; குப்பை.

**Offence,** *n.* குற்றம்; தீச்செயல்; தீங்கு; பொல்லாங்கு; தாக்குதல்; பொல்லாப்பு; கடுப்பு; சீற்றம்

**Offend,** *v.* சினமுறச்செய்; வெறுப்புறச் செய் சட்டத்தை மீறு. *n. see* offence.

**Offensive,** *a.* வெறுப்பைத் தருகிற; தீங்கான; தாக்குதல் செய்கிற. *n.* மீச்செலவு; போரில் முதலில் மேற்சென்று தாக்குதல். (X defensive) *n.* offensiveness.

**Offer,** *v.* 1. கொடு. 2. கொடுக்க முன் வா. 3. படையலிடு. 4. (வாங்க, விற்க) விலைகூறு. 4. முன் வந்து மேற் கோள், *n.* 1. விலை கோரிக்கை. 2. விருப்பறிவிப்பு. 3. கொடையறிவிப்பு; நன்கொடை. *n.* offering படையல்.

**Office,** *n.* கடமை; உயர்பணியிடம்; ஊழியம்; பணிமனை; தொழிலகம்; அலுவலகம், *(pl.)* உதவி முறை ஊழியம்(ங்கள்); *phr.* through the good offices of one ஒருவரது நல்லெண்ணத்தால்; நன்முயற்சி யால். *n. pers. see* officer. *a. see* official. *v.* officiate பணியாற்று; ஆற்று; பகரப் பணிசெய்.

**Officer,** *n.* (office) பணியாளுநர்; பணியாணர்; பணி முதல்வர்; பணியாளர்; பணித்துறைவர். *v.* பணியாளமர்த்து; பணியாள் இணை; *comb. n.* district officer, (D.O.) மாவட்ட ஆணர். divisional officer, (D.O.) மண்டல ஆணர். sub-divisional officer. (S.D.O.) மண்டலத் துணை ஆணர்.

**Official,** *a.* (office) பணிமுறை யான; சட்ட முறைப்படியான; பணித்துறைச் சார்பான. *n.* பணித்துறை யாள். *n. abs.* cool. officialdom.

**Officiate,** *v.* (office) பகரமாகப் பணியாற்று; பணியாளராகக் கடமையாற்று; கடமையாற்று.

**Officious,** *a.* உரிமையின்றித் தலையிடுகிற.

**Offish,** *a.* தனித்து நிற்கிற; நன்கு கலந்து பழகாத.

**Offprint,** *n.* சிறு பகுதியைத் தனிப்பட அச்சிடல் (அச்சிட்டது).

**Offscourings,** *n. (pl.)* கழிவுப் பொருள்; குப்பை.

**Offset,** 1. *n.* எதிரீடு; சரிக்குச் சரி *v.* ஈடுபடு. 2. *n.* கிளை; தளிர்.

**Offshoot,** *n.* தளிர்; கிளை.

**Offspring,** *n.* குழந்தைகள்; பின் எச்சம்; வழிமரபு.

**Oft, Often, oft(en) times,** *adv.* அடிக்கடி.

**Ogle,** *v., n.* கடைக்கண்ணால் பார்(வை); விருப்பத்துடன் பார்(வை).

**Ogre,** *n.* (*fem.* Ogress) மனிதரைக் கொன்று தின்னும் அரக்கன். *a.* ogr(e)ish.

**Oh, O.** *int.* ஓ! ஐயோ!

**Ohm,** *n.* மின்வலித் தடை அளவுக் கூறு.

**Oil,** *n.* எண்ணெய், *v.* எண்ணெய் பூசு. *a.* oily, எண்ணெய்ப் பசையான; வழுக்குகிற. (*comb.*) *n.* oilcake, பிண்ணாக்கு. *n.* oil cloth, மெழுகுச் சீலை. *n.* oilskin. நீர் புகாத எண்ணெய்த் துணி; மெழுகுச் சீலை. mineral oil, நில எண்ணெய்.

**Ointment,** *n.* களிம்பு; மெழுகு.

**Old,** *a.* (older, oldest, with in family elder, eldest) வயதான; நாட்பட்ட; பழைய. *a.* olden, பண்டைய. *n.* oldness, *a.* oldish, சற்றுப் பழைமைப்பட்ட.

**Oleander,** *n.* நச்சு மூலிகை வகை.

**Olegraph,** *n.* எண்ணெய் வண்ணப்படம்.

**Olfactory,** *a.* முகர்தல் சார்ந்த.

**Oligarchy,** *n.* சில் குழு ஆட்சி; குழு ஆட்சி; ஆட்சிக் குழு. *a.* oligarchic(al). *n., pers.* Oligarch.

**Olive,** *n.* (எண்ணெய் தரும்) தேவதார மரவகை; மரவகை; அமைதி; நட்பு அறிகுறி. *phr.* holdout the olive branch, அமைதி நாடு. *a.* மஞ்சள் கலந்த பச்சை நிறமுடைய.

**Olympian, Olympic,** *a.* (கிரேக்க புராண வானவர் வாழும்) ஒலிம்பஸ் மலைக்குரிய; (நாட்டு, உலகப்) போட்டியாட்டங்களுக் குரிய (> *n.* Olympus.)

**Omega,** *n.* (கிரேக்க மொழியின் கடைசி எழுத்து) முடிவு. (x alpha.)

**Omelet, omelette,** *n.* பொரித்த முட்டை.

**Omen,** *n.* எதிர்ப்பு முன்னம்; புட்குறி. *a.* ominous, வருவதை அறிவிக்கிற தீய முன்னறி குறியான; அச்சந் தருகிற; தீக்குறியான. *adv.* ominously.

**Omission,** *n.* (omit) விடுபடல்; விடுபட்டது. *a.* omissive.

**Omit,** *v.* தவிர்; விடு; விடுபடச் செய்; விலக்கு. *n. see* omission.

**Omnibus** *n.* பெரியபொறி வண்டி. *a.* பல வகைகள் உட்கொண்ட பெருந்தொகுதி.

**Omnipotent,** *a.* எல்லாம் வல்ல. *n.* omnipotence.

**Omnipresent,** *n.* எங்கும் நிறைந்துள்ள. *n.* omnipresence.

**Omniscient,** *a.* எல்லாம் அறிந்த, *n.* omniscience.

**Omnivorous,** *a.* எல்லா வகை உணவுகளையும் உண்கிற.

**On,** *prep*. மேல்; மீது. *adv.* முன்னோக்கி; மேலே

**Once,** *adv.* ஒரு தடவை; ஒரு காலத்தில்; ஒரு சமயத்தில். *n.* ஒரு தடவை.

**Oncoming,** *a.* விரைந்து வருகிற; அணுகுகிற; உடனடி எதிர்காலத்திற்குரிய.

**One,** 1. *pron.* ஒன்று. 2. ஒருவர்; ஒருவன் ; ஒருத்தி. 3. ஓர் ஆள்; ஒருவர்; ஒன்று; ஒரு பொருள். *phr. n.* no one யார் ஒருவரும் இல்லை; எவரும் இல்லை; எதுவும் இல்லை. this one, இவர்; இது. etc. 4. *a.* ஒரு. 5. *pron.* (ஏதோ) ஒருவர்; (ஏதோ) ஒரு பொருள். (2) (3) *pron. (refl.)* one self, ஒருவரே; தானே; தன்னையே etc. *n.* oneness, ஒருமை.

**Onerary,** *a.* (> onus) பாரந் தாங்குவதற்கான.

**Onerous** (> onus) பாரமான; பெரும் பளுவுடைய; கடும் பொறுப்பு வாய்ந்த; இன்னல் நிறைந்த. *n.* onerousness.

**One-sided,** *a.* ஒரு தலையான; ஒரு சார்பான

**One-way,** *a.* ஒரு திசையில் மட்டும் செல்லக்கூடிய.

**Onion,** *n.* வெங்காயம்; உள்ளி.

**Onlooker,** *n.* பார்த்துக் கொண்டிருப்பவர்.

**Only,** *a.* ஒரே; ஒன்று மட்டிலுமான; ஒரே ஒரு. *adv.* மட்டும்; தான். *conj.* ஆயினும்; விதிவிலக்காக.

**Onomatopoeia,** *n.* (figure of speech) பொருள் ஓசையிசைவு அணி. *a.* onomatopoe(t)ic.

**Onrush,** *n.* திடீர்ப்பாய்ச்சல்; மோதல்.

**Onset,** *n.* தாக்குதல்; தொடக்கம்.

**Onslaught,** *n.* தாக்குதல்; எதிர்ப்பு; மோதல்.

**Onto,** *prep.* மேல்; மேல் பொருந்த.

**Ontology,** *n.* உயிர்த் தத்துவ ஆராய்ச்சி; உயிர்த் தத்துவ விளக்கம். *n. pers.* onto logist.

**Onus,** *n.* பளு; பொறுப்பு. *a.* see onerary, onerous.

**Onward, onwards,** *adv.* முன்னோக்கி. *a.* onward.

**Onymous,** *a.* பெயருள்ள. (x anonymous.)

**Onyx,** *n.* பல நிறங்களுள்ள மணி வகை.

**Ooze,** *n.* குழைவான சேறு; சக்தி; கசிவு. *v.* கசிந்தொழுகு. *a.* oozy.

**Opacity,** *n.* (> opaque) ஒளித்தத் தடை; ஒளி நிழல் படாமை.

**Opal,** *n.* பலநிறம் நிழலாடும் மணி வகை; *a.* opaline, opalescent.

**Opaque,** *a.* ஒளியைத் தடை செய்கிற; தெளிவில்லாத; இருளான; மந்தமான. *n.* opaqueness, (*see* opacity.)

**Ope,** *v.* (செய்யுள் வழக்கு) திற.

**Open,** *v.* திற; தொடங்கு. *a.* திறந்துள்ள திறந்த வெளியான; மடிந்திராத; கவடமில்லாத. *n.* திறந்த வெளி. *adv.* openly. *n.*

opening, திறப்பு; வாயில்; தொடக்கம். *comb. n.* opening celebration, திறப்பு விழா. opening balance, (வாணிக கணக்குத் துறை) முன் மீதி; தொடக்க இனம்.

**Opera,** *n.* இசை நாடகம்.

**Operate,** *v.* இயக்கு; தொழிற் படுத்து; பாதிக்கச் செய்; தொழிற் படு; இயங்கு; நடைபெறு; பாதி; பயன் அளி; அறுவை செய். *n. pers.* operator, *n. abe.* operation, செயல்முறை; நடை முறை; அறுவை. *a.* operative, நடைமுறையிலிருக்கிற; இயங்கு கிற; செயல் நிலையிலிருக்கிற.

**Ophthalmia,** *n.* கண் நோய். *a.* ophthalmic.

**Opiate,** *v.* மயக்க மருந்து.

**Opine,** *v.* கருது; கருத்துரை கூறு.

**Opinion,** *n.* கருத்து; கருத்துரை.

**Opinionated, opinionative,** *a.* முரட்டுப் பிடிவாதமுள்ள. *n.* opinionatedness.

**Opium,** *n.* அபின் .

**Oponent,** *n.* எதிரி; எதிராளி; எதிர்தரப்பாளர்; பகைவர்.

**Opportune,** *a.* சமயத்திற் கேற்ற; தக்க சமயத்திற் செய்த. *n.* opportuneness.

**Oppotunism,** *n.* சமயத்திற் கேற்ப நடத்தல்; சமயத்துக்கேற்ற ஒழுக்கம். *n. pers.* opportunist.

**Opportunity,** *n.* வாய்ப்பு; தறுவாய்.

**Oppose,** *v.* எதிர்த்து நில். *a.* opposable. *n. pers.* opposer.

**Opposite,** *v.* எதிரான; எதிர்ப் பக்கமான; முற்றிலும் மாறான. *n.* opposition.

**Oppress,** *v.* கொடுமை செய்; வருத்து; பளுவால் அழுத்து. *n.* oppression. *n. ag*, oppressor, *a.* oppressive.

**Opprobrium,** *n.* இழிமதி; பழிமொழி.

**Optative,** *a., n.* (இலக்கணம்) வியங்கோள்; விருப்பம் தெரிவிக்கும் வினை வடிவம்.

**Optic(al)** *a.* கண் அல்லது பார்வைக்குரிய. *n.* optics, ஒளிநூல்; பார்வை நூல்.

**Optician,** *n.* மூக்குக் கண்ணாடித் தொழிலாளர்; மூக்குக் கண்ணாடி விற்பவர்; மூக்குக் கண்ணாடி வணிகர்.

**Optics,** *n.* (*see* optic.)

**Optimism,** *n.* நன்னம்பிக்கைக் கோட்பாடு; இன்பமே எதிர் பார்க்கும் மனப்பான்மை. *n. pers.* optimist,. *a.* optimistic.

**Optimum,** *n.* (மிக விருப்பத்துக் குரியது) மிகச் சிறந்த அளவு அல்லது தன்மை.

**Option,** *n.* விருப்ப உரிமை; தேர்வுரிமை; விருப்பம். *a., n.* optional, விருப்பத்துக்குரிய (பாடம்) (x compulsory).

**Opulent,** *a.* மிகுந்த செல்வமுள்ள; செழிப்பான. *n.* opulence.

**Or,** *conj.* அல்லது.

**Oracle,** *n.* தெய்வ மொழி; குறியுரை; எதிர்காலக்குறி உரை; முன்னறிவுடையோர்; அறிவர்; தெய்விக அறிவு *a.* oracuiar.

**Oral,** *a.* வாய்மொழியான.

**Orange,** *n.* கிச்சிலிப் பழம். *a., n.* சிவந்த மஞ்சளான (நிறம்).

**Orang-outang, Orang-utan,** *n.* வாலில்லாக் குரங்கு வகை.

**Orate,** *v.* சொற்பொழிவாற்று. *n.* oration, சொற்பொழிவு. *n. pers.* Orator, *(fem.)* oratress. *a.* oratory. *n. abs.* oratory, சொற் பொழிவுக்கலை; பேச்சு வன்மை. *a.* oratorical.

**Orb.** *n.* உருண்டை. *a.* orbicular.

**Orchard,** *n.* பழத்தோட்டம்; இன் கனிச் சோலை. *n.* orchardist.

**Orchestra,** *n.* இசைக்குழு. *a.* orchestral.

**Orchid, Orchis,** *n.* மலர்ச் செடி வகை.

**Ordain,** *n.* ஆணையிட்டமர்த்து; ஆணை செய்; அமைத்தாளு.

**Ordeal,** *n.* கடுந்தேர்வு; துன்பம்.

**Order,** *n.* ஒழுங்கு; முறைமை; அமைதி; (சமூகம், சமயம், அரசியல்சார்ந்த) அமைப்பு; கூட்டுக்குழு; சங்கம்; ஆணை; உத்தரவு; கட்டளை. *n.* orders, *(pl.)* துறவுக்குழு; மடத்து வகுப்பு; மடத்துறை. *v.* ஒழுங்கு படுத்து; கட்டளையிடு. *pa., p. a.* ordered, ஒழுங்குபட்ட. *(neg.)* disordered, ஒழுங்கு குலைந்த; குழப்பமான. *comb. n.* appoint ment order, அமர்வாணை. standing order, நிலவரக் கட்டளை. order of merit, புகழ்மரபுக் குழாம்; புகழ் மரபு. order of the star etc. வான் மீன் மரபு.

**Orderly,** *a.* ஒழுங்கான. *n.* ஏவலாள். *n.* orderliness.

**Ordinal,** *a.* வரிசையான. *n.* வரிசையைக் குறிக்கும் எண் (ஒன்றாவது, இரண்டாவது etc.) (*correl.* cardinal.)

**Ordinance,** *n.* உத்தரவு; அவசரச் சட்டம்; (மதச்) சடங்கு.

**Ordinary,** *a.* வழக்கமான; பொது முறையான. *n.* மதகுரு.

**Ordination,** *n.* முறைமை; ஒழுங்கு; தீக்கை.

**Ordinance,** *n.* பீரங்கி; பீரங்கிப் படை; படைக்கலப் பணித்துறை.

**Ore,** *n.* கனி உலோகக் கலவை.

**Organ,** *n.* உறுப்பு; இசைக் கருவி (பெட்டி); பிரசாரக் கருவி; பத்திரிகை. *n. pers.* organist, இசைப் பெட்டிவல்லார்.

**Organic,** *a.* உறுப்புகளுக்குரிய; உறுப்புகளாலமைந்த; கரியகச் சேர்க்கைப் பொருள்களாலான; உடலுக்கு இயல்பான; உயிர்ப் பொருளான.

**Organisation,** *n. see* organize.

**Organize,** *v. see* organize.

**Organism,** *n.* உயிருள்ள பொருள்; உறுப்புடை உயிரினம்; உயிரினம்.

**Organize,-se,** *v.* உறுப்பமைதி உண்டுபண்ணு; ஒழுங்கமை; ஏற்பாடு செய்; திட்டமாக அமை.

*n.* organization, -sation, அமைப்பு முறை; சங்கம்; சமூகம்.

**Orgasm,** *n.* தீவிரச் செயல்; செயலுச்சநிலை; கிளர்ச்சியின் உச்சநிலை.

**Orgy,** *n.* (*pl.* orgles) வெறியாட்டம்.

**Orient,** 1. *a.* கீழ்த்திசை சார்ந்த. *n.* கிழக்கு; கிழக்கு நாடுகள். 2. *see* orientate. (1) *a.* oriental. கீழ்த் திசைக்குரிய. *n.* கீழ் நாட்டார். *n. abs.* orientalism, கீழ்த்திசைப் பண்பு. *n. pers.* orientalist, கீழ்நாட்டு (வரலாற்று, மொழி) ஆராய்ச்சியாளர்.

**Orientate, orient,** *v.* கிழக்கு நோக்கி அமை; ஒழுங்கு அமை. *n.* orientation.

**Orifice,** *n.* தொளை; புடைவாய்.

**Origin,** *n.* துவக்கம்; மூலம்; பிறப்பிடம்; காரணம்.

**Original,** *a.* தொடக்கத்தி லிருந்துள்ள; பிறிதின் சார்பற்ற; மூலமான; முன்மாதிரியான. *n.* மூல முன்மாதிரி; முதல் நூல். *n. abs.* originality.

**Originate,** *v.* தொடங்கு; தொடங்கச்செய்; பிறப்பி. *a.* originative. *n. pers.* originator, *n. abs.* origination.

**Oriole,** *n.* பொன் குருவி.

**Orion,** *n.* மார்கழி மீன் குழு; மான் தலைக்குழு.

**Orison,** *n.* வணக்க வழிபாடு.

**Ornament,** *n.* அணிகலன் ; அணி. *v.* பூணு; அணி. *a.* ornamental, பூண் பணி போன்ற நுட்ப வேலைப்பாடுடைய; (பயனிலாது) அழகுமட்டுமுடைய; அழகொப் பனையான. *n.* ornamentation.

**Ornate,** *a.* முயன்று அழகு படுத்தப்பட்ட; பகட்டணியுடைய.

**Ornithology,** *n.* பறவைநூல். *n. pers.* ornithologist.

**Orology,** *n.* மலை அமைப்பு; நூல்.

**Orometer,** *n.* மலைகளின் உயர அளவைக் கருவி.

**Orphan,** *n.* பெற்றோரை இழந்த குழந்தை. *n. abs.* orphanhood, *n.* orphanage, துணையில் குழந்தையர்மனை; ‘புகலகம்’; துணையிலார் காப்பகம்; ‘ஏலார் பேணகம்’.

**Orthodox,** *a.* வைதிகமான; பழமைக் கட்டுப்பட்ட; நூலொழுங்கு விடாத; மரபுச் சட்டமீறாத. *n.* orthodoxy.

**Orthoepy,** *n.* சரியான ஒலிப்பு. *a.* orthoepic. *n. pers.* orthoepist.

**Orthography,** *n.* எழுத்திலக் கணம். *n. pers.* orthographer.

**Oscillate,** *v.* ஊசலாடு; முன்னும் பின்னும் அசை; அலை. *a.* oscillatory. *n.* oscillation. *n. ag.*, oscillator.

**Osiel,** *n.* கூடைப் பிரம்பு.

**Osmose, osmosis,** *n.* சவ் வூடு கலவை நீர் பரவுமியக்கம் (திட்ப மிக்க கலவை திட்பங் குறைந்த கலவையுடன் இடமாறிக் கலத்தல்) *a.* osmotic.

**Osseous,** *a.* எலும்பாலான; எலும்புக் கூடுள்ள.

**Ossicle,** *n.* சிறு எலும்பு.

**Ossify,** *v.* எலும்பாகிக் கெட்டிப்படு. *n.* ossification.

**Ostensible,** *a.* புறப் பகட்டான; மெய்ப்புக்கான.

**Ostenta on,** *n.* புறப்பகட்டு. *n.* ostentatious.

**Osteology,** *n.* எலும்புக் கூறு நூல்.

**Ostler,** *n.* குதிரை இலாயக்காரன்.

**Ostracize,** *v.* (கிரேக்க வழக்கமரபு) சாதிக்கட்டுச் செய்; குழுவிலிருந்து நீக்கு. *n.* ostracism.

**Ostrich,** *n.* நெருப்புக் கோழி; தீப்பறவை.

**Other,** *pron.* (*pl.* the others) மற்றவர்; மற்றது. *a.* வேறான; மற்ற. *comb. adv.* each other, (இருவருள்) ஒருவர் மற்றவரை. etc. (பலருள்) ஒவ்வொருவரும் மற்றறு ஒவ்வொருவரையும்; (பலவற்றுள்) ஒவ்வொன்றும் மற்ற ஒவ்வொன்றையும். *pron., a.* the other (இருவருள்) மற்றவர்; மற்றவரை etc. the others. (பலருள் ஒருவர்) மற்ற எல்லாரையும்; (பலவற்றுள் ஒன்று) மற்ற எல்லாவற்றையும். *n., adv.* the other day, மற்றநாள்; முன்னொரு நாள்; அடுத்த நாள். மறுநாள். every other dday, ஒவ்வொரு நாள் விட்டு மறுநாள். *pron,* and others, இன்னோர் பிறர்; இன்ன பிற.

**Otherwise,** *adv.* அல்லா விட்டால்.

**Other-worldly,** *a.* மறுமையே சிந்திக்கிற; உலகியல் பற்றற்ற; (x worldly.) *n.* other - worldliness.

**Otiose,** *a.* சோம்பேறியான; தேவையில்லாத; பயனற்றுப் போன.

**Otter,** *n.* நீர்நாய்.

**Otto,** *n.* அத்தர்; வனமல்லி (உரோசா மலர்)ச் சத்து.

**Ought,** 1. *v.* (*pa.*, of owe) கடமையாகு; வேண்டியதாகு. 2. *n.* (*see* aught).

**Ounce,** *n.* வீசங்கல்லெடை; எடுத்தலளவுக் கூறு.

**Our,** *pron. poss.* (we) நம்முடைய; நமது.

**Ours,** *pron,. poss.* (we) நம்முடையது.

**Ourself,** *pron, (refl.)* (we) (*pl.* ourselves) நாமே; நாங்களே; எங்களையே; நம்மையே.

**Oust,** *v.* நீக்கு; துரத்து.

**Out,** *adv.* வெளியே. *prep.* வெளியில்; தொலைவில். *n.* வேலையிலிருந்து நீங்கியவர். *adj.* தொலைவிலுள்ள; வெளிப்புறமான old *comp. see* outer. *sup. see* outmost, outermost. *phr., a., adv.* out and out, முழுதும்.

**Outbid,** *v.* (outbade, outbidden or outbid) போட்டிக்கு விலை உயர்த்து; மிகுதி ஏலங்கூறு; போட்டி விலை கூறு.

**Outbrave,** *v.* போட்டியிட்டு வெல்லு.

**Outbreak,** *n.* திடீர்க்கிளர்ச்சி; கலகம்; திடீர் எழுச்சி.

**Outburst,** *n.* வெடித்தல்; திடீரென்று வெளிப்படல்.

**Outcast,** *a.* துணையற்ற; துரத்தப் பெற்ற. *n.* போக்கிரி; தள்ளப் பட்டவர்.

**Outcaste,** *a.* சமூகப் புறம்பானவர்; புறச்சாதி.

**Outclass,** *v.* மேம்படு; விஞ்சு.

**Outcome,** *n.* விளைவு.

**Outcry,** *n.* கூக்குரல்.

**Outdistance,** *v.* (ஓட்டப் போட்டியில்) வெற்றிகொள்; மேம்படு.

**Outdo,** *v.* (outdid, outdone) செயலில் மேம்படு.

**Outdoor,** *a.* (விளையாட்டு, பயிற்சி) மனைப்புற; வெளியிடஞ் சார்ந்த. *adv.* outdoors.

**Outer,** *a.* வெளிப்புறமாயுள்ள; புறம்பாயுள்ள.

**Outmost, outermost,** (*conn.* outmost, *a.* மிகவும் வெளிக் கோடியிலுள்ள; புறக்கோடியான.

**Outface,** *v.* (உறுத்து விழித்துத்) தலைகுனியச் செய்.

**Outfit,** *n.* உடை; ஆடை அணி மணி; துணைக்கருவி; துணைச் சட்டம்; தளவாடம்; கருவிகலத் தொகுதி.

**Outflank,** *v.* சுற்றி முன் செல்; தாண்டிச்செல்; மேம்படு.

**Outflow,** *n.* வழிந்து ஓடுதல்; *v.* வழிந்தோடு.

**Outgeneral,** *v.* மேம்பட்ட படைத் தலைமைத் திறம் காட்டி வெல்; படைத் திறத்தால் வெல்.

**Outgo,** *v.* வெளியேறு; பணி விட்டுச்செல்; வெளியே அனுப்பப் பெறு. *pr., p. a.* outgoing.

**Outgrow,** *v.* (outgrew, outgrown) மீறி வளர்; எல்லை மீறி வளர்ச்சியடை.

**Outgrowth,** *n.* விளைவு.

**Outhouse,** *n.* புறவீடு.

**Outing,** *n.* பொழுதுபோக்குப் பயணம்; கிளர்ச்சியுலா.

**Outlandish,** *a.* அயற்பண்புடைய; தாயகத்துக்குப் புதிய; புறம்பான.

**Outlast,** *v.* (ஒன்றைவிட) நீடித்துழை.

**Outlaw,** *n.* சமூகத்திலிருந்து தள்ளப்பட்டவர்; கொள்ளைக் காரர். *v.* சமூகத்திலிருந்து விலக்கு. *n. abs.*, outlawry.

**Outlay,** *n.* விடுமுதல்; லதனம்.

**Outlet,** *n.* வெளிப்போகும் வழி; போக்கிடம்.

**Outline,** *n.* எல்லைக்கோடு; வரைச்சட்டம்; சுருக்கம். *v.* எல்லைவகு; சுருங்கக் கூறு.

**Outlive,** *v.* கடந்துவாழ்; விஞ்சிவாழ்.

**Outlook,** *n.* தோற்றம்; எதிர்கால நிலவரம்.

**Outlying,** *a.* புறம்பாயுள்ள; புறஎல்லை யடுத்துள்ள.

**Outmanoeuvre,** *v.* படையணித் திறத்தில் மேம்படு; போர்முறை யால் வெல்.

**Outmarch,** *v.* விஞ்சிக் கட.

**Outmode,** *v.* வழக்கத்திலில்லாத தாகச் செய். *a.* outmoded.

**Outnumber,** *v.* எண்ணிக்கையில் விஞ்சு.

**Out-of-date,** *a.* காலத்திற்குப் பொருந்தாத; பழைய மாதிரியான; பழைமைப்பட்ட.

**Out-of-the-way** *a.* வழக்கத்தி லில்லாத; முக்கியமல்லாத; தொலைக்கோடியான.

**Out-parts,** *n. pl.* புறப்பகுதிகள்; வெளிப்பகுதிகள்.

**Outpatient,** *n.* (மருத்துவ விடுதியின்) தங்கலில்லா நோயாளி; புறவருகையாளர்.

**Outplay,** *v.* ஆட்டத்தில் மேம்பட்ட திறமை காட்டு.

**Outpost,** *n.* புறக்காவல்; மாடம்; புறஅரண்; எல்லைக்காவல்; எல்லைக்காவலர்; எல்லைப்புற அரண்; எல்லைப் புறத் தளம்.

**Outpour,** *n.* பொழிவு; பெரும் பெயல். *n.* outpouring, உணர்ச்சி வெளிப்பாடு.

**Output,** *n.* விளைவின் அளவு; வேலையளவு; விளைவு.

**Outrage,** *n.* பேரவமதிப்பு; அவமானப்படுத்தல்; மானக்கேடு. *v.* மானக்கேடு செய்; கொடுமை செய். *a.* outrageous.

**Outreach,** *v.* தாண்டிச்செல்.

**Outrigger,** *n.* (கப்பலின் வெளிப் புறமாக நீட்டிக் கொண்டிருக்கும்) புறச்சட்டம்.

**Outright,** *adv., a.* உடனே; முழுவதும்.

**Outrun,** *v.* (outran, outrun) ஓட்டத்தில் விஞ்சு. *n.* outrunner.

**Outset,** *n.* தொடக்கம்.

**Outshine,** *v.* ஒளிவீசு; புகழ் விஞ்சு; மேம்படு.

**Outside,** *n.* வெளிப்புறம்; மேற்பரப்பு. *a.* வெளிப்புறமான. *adv. prep,* வெளிப்புறத்தில். *n. pers.* outsider, வெளியாள்; அயலார்; ஏதிலார்.

**Outskirt(s),** *n.* ஓரம் புற எல்லை; எல்லைப்பகுதி.

**Outspoken,** *a.* வெளிப்படை யாகப் பேசுகிற; கபடமில்லாத.

**Outspread,** *v.* பரவு. *a.* பரந்த. *n.* பரப்பு; மேற்புறவிரிவு.

**Outstanding,** *a.* 1. தலைசிறந்த; ஒப்பற்ற; முனைத்த; முனைப் பான. 2. (தொகை) நிலுவையாக நிற்கிற; பிரிவுறாது மீந்துள்ள.

**Outstation,** *n.* புறத்தொலை நிலையம்.

**Outstrip,** *v.* விஞ்சு; மேம்படு.

**Out-turn,** *n.* விளைச்சல் அளவு; விளைவளவு; செயலளவு; விளைவு.

**Outvote,** *v.* மிகுதி மொழியால் வெல்; மிகுதி ஆதரவுபெறு; மிகுதி மொழிபெறு.

**Outward,** *a.* வெளிநோக்கிய. *adv.* outward, outwards. வெளிப் புறமாக. *n. adv.,* outwardly, வெளித் தோற்றத்தில்.

**Outward-bound,** *a.* வெளியே செல்கிற.

**Outwear,** *v.* (மற்றொன்றை விட) நாட்பட உழை.

**Outweigh,** *v.* (எடையில் மதிப்பில் அல்லது செல்வாக்கில்) விஞ்சு.

**Outwit,** *v.* அறிவால் வெல்; ஏய்.

**Outwork,** *n.* புற அரண்.

**Outworn,** *a.* காலத்திற்குப் பொருந்தாத; பழம்பஞ்சடைந்த.

**Ova,** *n.* (*pl.* of ovum) சிறு முட்டைத் திரள்; கரு உயிர்த்திரள். *a.* oval, முட்டை வடிவமான. *n.* முட்டை வடிவம்.

**Ovary,** *n.* மலரின் கருவுக்கலம். கருப்பை.

**Ovate,** *a.* முட்டை வடிவமான.

**Ovation,** *n.* பெருவரவேற்பு; புகழ்ச்சி; கைகொட்டி ஆர்ப்பரித்தல்.

**Oven,** *n.* அடுப்பு.

**Over,** *adv.*, *prep.* மேலே; மிகுதியாக; குறுக்கே; திரும்பவும்; மிகு எண்ணிக்கையாக; முடிந்துபோன. *comb, prep.* over and above. தாராளமாக; போதிய தற்குமேல் ஆக; மிகபேரளவாக. head over ears, தலைகுப்புற; ஆர்வ மிகுதியாக. over and over (again) மறுபடியும் மறுபடியும்.

**Overact,** *v.* மிகைப்படுத்தி நடி; உணர்ச்சி வரம்பு கடந்து நடி.

**Overall,** *a.* மொத்தத்தில் முழுதும் தழுவிய. *n.* முழுமேலங்கி; முழுப்படுக்கைக் கட்டு.

**Over-arch,** *v.* மேலே வளைவாக அமை.

**Overawe,** *v.* அச்சுறுத்தித் தடு; அச்சுறுத்து.

**Overbalance,** *v.* நடுநிலைதிறம்பு.

**Overbear,** *v.* (overbore, over borne) சூழ்ந்தடங்கு; விஞ்சிக் கீழ்ப்படுத்து; வீறாப்புக்காட்டு *pr., p.* overbearing, வீறாப்பான மேலாவித்தனமான.

**Overboard,** *adv.* (கப்பலிலிருந்து) வெளியே.

**Overcast,** *a.*, *v.* மூடாக்கிடு; மங்கலாகு; இருளடை; விளிம்பு தை. *pa.*, *p.a.*, இருளடைந்த; கார்முகில் போர்த்த.

**Overcharge,** *v.* பளு மீறி ஏற்று; அளவுமீறி விலைகுறி; வரம்பு மீறி மின் வலியூட்டு; மின் ஆற்றல் செறிவி; *n.* பெரும்பாரம்; மிகு பளு; அளவிறந்த மின்னாற்றல் செறிவு. *n. pl.* overcharges, மிகைக் கட்டணம்; மிகுபற்று; தண்டக் கட்டணம்.

**Overcoat,** *v.* புறமேற் சட்டை.

**Overcome,** *v.* வெற்றியடை; வெல்; அடக்கியாள்.

**Overconfidence,** *n.* அளவு மீறிய தன்னம்பிக்கை; ஆணவம்; 'பொக்கம்'.

**Overcrowd,** *v.* அளவு மீறிக் கூட்டம் கூடு.

**Overdo,** *v.* (overdid, overdone) அளவுமீறிச் செய்.

**Overdose,** *v.* அளவு மீறி மருந்துகொடு. *n.* (மருந்து) மீறிய அளவு; எல்லை கடந்த அளவு.

**Overdraft,** *n.* (overdraw) பொருள் மனையில்) இருப்புக்கு மேல் பணம் எடுத்தல்; 'மிகுபற்று'; 'மிகை எடுப்பு'.

**Overdraw,** *v.* (overdrew, over drawn) 2. (பொருள் மனையில் கணக்கு இருப்புக்கு மேல்) பணம் மிகையாக எடு. 2. (ஓவியம் etc.) மட்டுமீறிப் பண்பேற்று; மட்டுமீறி வரை. (1) *n. see* overdraft. *n.* over drawals, (கணக்கு இருப்புக்கு மேற்பட்ட) மிகு பற்றுகள்.

**Overdue,** *a.* தவணை கடந்த; இன்னும் பெருக்க வேண்டிய.

**Overestimate,** *v.* அளவுக்கு மேல் மதிப்பிடு. *n.* அளவுக்கு மீறிய மதிப்பு.

**Overflow,** *v.* வழிந்தோடு; பொங்கு; *n.* வழிந்தோடல்; வெள்ளம்; வடிகால். *a.* overflowing, செழிப்பான; பொங்கலான.

**Overgrow,** *v.* (overgrew, over grown) அளவுமீறிவளர்; (செடிகள்) வளர்ந்து மூடு. *n.* overgrowth.

**Overhang,** *v.* (overhung) கவிந்திரு; வெளிப்புறமாகத் தொங்கு; மேலே தொங்கு.

**Overhaul,** *v.* முழுதும் பிரித்தமை; பிரித்துப் பழுதுபார்; விரைந்து தொடர்ந்து பிடி. *n.* முழு உறுப்பாராய்வு; பழுது பார்த்தல்.

**Overhead,** *adv.*, *a.* தலைக்கு மேலே(யுள்ள). *comb.*, *n.* over head charges. ஆற்றல் மீறிய செலவு; வரம்புமீறிய வரி; சிறப்பு வரி; சிறப்புக் கட்டணம்.

**Overland,** a.,*adv.* நிலவழியாக.

**Overlap,** *v.* (ஒன்று) மற்றொன்றின் மீது படிந்திரு; எல்லைகடந்து அமை; மேற்கவிந்து செல்.

**Overlay,** *v.* (overlaid) மேலே பூசு அல்லது மூடு; ஒன்றின் மீது கிட; பொதி.

**Overload,** *v.* அளவு மீறிப் பாரம் ஏற்று. *n.* அளவு மீறி.

**Overlook,** *v.* மேலிருந்து பார்; புறக்கணி; மன்னி; அறியாப் பிழை செய்.

**Overlord,** *n.* மேலாள்; மேம்பட்ட தலைவர்; ஆண்டை; மேலாட்சி யாளர். *n.* over-lordship.

**Overmaster,** *v.* அடக்கு; கீழ்ப் படியச் செய். *a.* overmastering, *n.* overmastery.

**Overmatch,** *v.* மேம்பட்டதாயிரு; போட்டியிட்டு வெல், *n.* மேம்பட்டவர்.

**Overnice,** *a.* தேவைக்கு மேல் மிகுநய விருப்பான; அழுத்தக் குணமுடைய.

**Overnight,** *adv.*, *a.* முன்னிரவில்; சற்றே முந்தி.

**Overpay, (overpaid)** கூடுதலாகப் பணம் கொடு; மிகையாகச் செலுத்து; மிகுதிகொடு; மிகுதியாகச் சம்பளம் கொடு. *n.* overpayment, மிகை செலுத்திடு.

**Overpopulated,** *a.* அளவுமீறி மக்கள் பெருக்கமான. *n.* over population, மட்டற்ற மக்கள் தொகை.

**Overpower,** *v.* வலி; மீறு; அடக்கு; வெற்றிகொள்.

**Overproduction,** *n.* தேவைக்கு மிகுதியான வளைவு; மிகு விளைவு; மிகு விளைவிப்பு; மிகு பொருளாக்கம்; மிகை ஆக்கம்.

**Overprize,** *v.* அளவுக்கு மீறி மதிப்புக்கொடு.

**Overrate.** *v.* அளவுக்கு மீறி மதிப்பிடு.

**Overraeach,** *v.* எல்லை மீறு; தந்திரத்தால் ஏமாற்று; தாண்டு.

**Override,** *v.* (overrode, overridden) மிதித்து அடக்கு; புறக்கணித்து நடத்து.

**Overrule,** *v.* மேலுரிமையால் தள்ளுபடி செய்.

**Overrun,** *v.* (overran, overrun) படையெடுத்தழி.

**Overseas,** *a.* வெளிநாடு சார்ந்த; கடற் பேரரசாகப் பரந்த; கடல் கடந்து பரவிய. overseamen. *n. pl.* கடல் கடந்தவர்.

**Oversee,** *v.* (oversaw, overseen) கவனி; கண்காணி. *n. pers.* overseer, மேற்பார்வையாளர்; கண்காணிப்பாளர்.

**Overshadow,** *v.* இருளடை; மறையச்செய்; மறை.

**Overshoot,** *n.* (overshot) இலக்குக்கு அப்பால் சுடு; அளவு மீறிச் செல்; மிகு திறத்தால் தவறு.

**Oversight,** *a.* மேற்பார்வை; கவனக் குறைவு; தவறு.

**Oversize,** *n.* மிஞ்சிய அளவு; மீறிய பருமன். *a.* oversized.

**Oversleep,** *v.* மட்டுமிஞ்சி உறங்கு. *n.* மிகுதி உறக்கம்.

**Overspend,** *v.* (overspent) வரவு மீறிச் செலவழி.

**Overspread,** *v.* (overspread) மேலே பரப்பிவை.

**Overstate,** *v.* மிகைபடக் கூறு. *n.* overstatement.

**Overstay,** *v.* காலம் மீறித் தங்கு.

**Overstep,** *v.* மீறு; அளவு மீறிச் செல்.

**Overstock,** *n.* தேவை மீறிய சேமிப்பு மிகு கையிருப்பு; கையிருப்பு மிகை.

**Overstain,** *v.* மட்டுமிஞ்சி இழு; மட்டுமீறி உழைப்புக் கொடு. *n.* அளவு மீறிய உழைப்பு; சோர்வு.

**Overstrung,** *a.* மட்டுமிஞ்சி முறுக்கேறியுள்ள;

**Overstuff,** *v.* அளவு மீறித் திணி.

**Overt,** *a.* ஒளிவு மறைவில்லாத, (x covert).

**Overtake,** *v.* (overtook, over taken) தொடர்ந்து சென்று பிடி.

**Overtax,** *v.* அளவுமீறி வரிபிரி; வரம்பு மிஞ்சித் தொல்லை கொடு.

**Overthrow,** *v.* (overthrew, overthrown) கீழே தள்ளு; தோற்கடி.

**Overtime,** *n., adv.* குறித்த காலத்துக்குக் கூடுதலாக; மிகை நேர (த்துக்குரிய). *comb., n.* overtime, fees (charges etc.) மிகுநேர ஊதியம் (செலவு முதலியன.)

**Overture,** *n.* (செய்தி, பேச்சு. பாட்டு முதலியவற்றின்) தொடக்கம்; முன்னுரை; வலிந்து கோருதல்;

வலிந்து சந்தி; பேசுதல்; இடையீட்டுப் பேச்சு; (பெண்கள்) முனைந்து காதல் கூர்தல்.

**Overturn,** *v.* கவிழ்.

**Overvalue,** *v.* மிகுதி மதிப்பீடு. *n.* overvaluation.

**Overweary,** *v.* மிகுதி களைப்படை.

**Overweening,** *a.* இறுமாந்த; அளவுமீறிய நம்பிக்கையுடைய.

**Overwhelm,** *v.* மீறு; பொங்கு விஞ்சிமேற் செல்; அடக்கு.

**Overwind,** *v.* (overwound) அளவு மீறி இறுகச் சுற்று.

**Overwork,** *v.* மட்டுமீறி வேலை செய்(வி). *n.* மட்டுமீறிய வேலைப்பாடு; உழைப்பு.

**Overwriting,** *n.* எழுத்தின் மேல் எழுத்து.

**Oviform,** *a.* முட்டை வடிவமான.

**Ovine,** *a.* ஆடு போன்ற.

**Oviparous,** *a.* முட்டையிடுகிற.

**Ovoid,** *a.* முட்டை வடிவமான.

**Ovule,** *n.* விதைக் கரு. *a.* ovular.

**Ovum,** *n.* (*see* ova.)

**Owe,** *v.* கடன்பட்டிரு; செய்ய அல்லது கொடுக்க வேண்டியிரு.

**Owing,** *a.* செலுத்த வேண்டிய. *phr., prep,* owing to காரணத்தினால்.

**Owl,** *n.* ஆந்தை; கூகை. *a.* owlish, *n. (dimu.)* owlet.

**Own,** *v.* உடைமையில் வைத்திரு; உடையவராயிரு; உடைமை கொள்; ஒப்புக்கொள். *a.* சொந்தமான; தனக்கே உரிய; உடந்தையான. *n. pers.* owner. *n. abs.* ownership, தன்னுரிமை; உடைமை.

**Ox,** *n.* (*pl.* oxen) எருது.

**Oxbow,** *n.* நுகத்தடி.

**Oxide,** *n.* 'உயிரகி', உயிர்வளிக் கலவை. *v.* oxidize-se, oxidate. *n.* oxidsement, oxidation. *a.* oxidisable. *n. ag.*, oxidiser.

**Oxonian,** *n.* (சுருக்கம் oxon) ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்.

**Oxygen,** *n.* உயிர்வளி.

**Oxymoron,** *n.* முரண் அணி.

**Oyster,** *n.* சிப்பி; கிளிஞ்சில். *comb. n.*, oyster farm கிளிஞ்சிற் பண்ணை; சிப்பிப் பண்ணை.

**Ozone,** *n.* முனைப்புயிரக நீர்; (மூன்று நுண்ணணுத்திரள் உடைய முனைத்த உயிர் வளியின் நீருரு.) *(fig.)* கிளர்ச்சி தருவது. *a.* ozonic, *v.* ozonize. *n., ag.* ozonizer.

# P

**Pa,** *n.* (குழந்தை வழக்கு) அப்பா.

**Pace,** *n.* காலடி அளவு; தாண்டு மளவு; நடை வேகம்; நடை *v.* அடிமேலடிவைத்து நட; அடியளா. *n. ag.* pacer.

**Pachyderm,** *n.* தடித்த தோலுள்ள உயிரினவகை.

**Pacificism, pacifism,** *n.* (> pacify) அமைதிக் கோட்பாடு; போர் ஒழிப்பியக்கம்.

**Pacify,** *v.* அமைதிப்படுத்து. *a.* pacific. *n.* pacification. *n. pers.*, pacifist, அமைதியியக்கத் தார். *n. abs. see* pacificism.

**Pack,** *v.* 1. அடர்த்தியாகக் கட்டு; அடர்த்தியாக அடுக்கு; நெருக்கி வை; நெருக்கி அடை. 2. மூட்டை கட்டு 3. (மறை முறையில் தன் ஆட்களைப்) பணித்துறையில் நிரப்பு. *n.* 1. சீட்டுக்கட்டு. 2. பொட்டணம்; மூட்டை; பொதி. (pack horse, oxen). 3. பனிக் கட்டித் தொகுதி. 4. (நாய் முதலிய) உயிரினத்தொகுதி.

**Package,** *n.* மூட்டை; பொட்டணம்; கட்டு.

**Packet,** *n.* சிறுகட்டு; சிறு பொட்டணம்; சிப்பம்.

**Packing,** *n.* சிப்பக்கட்டு மானம்; (*comb, n.* packing charge, சிப்பக்கட்டணம்; கட்டுக் கூலி.)

**packsaddle,** *n.* பொதிசேணம்.

**Packthread,** *n.* தடித்த நூல்; கட்டு நூல்.

**Pact,** *n.* உடன் படிக்கை; ஒப்பந்தம்.

**pad,** *n.* மெத்தை; திண்டு. *v.* (பஞ்சு முதலியவற்றால்) திணி; சொற் களைப் பெருக்கு. *n.* padding, அடை பஞ்சு.

**Paddle,** *n.* துடுப்பு. *v.* கைகால் களை அடித்து நீரில் விளையாடு; துடுப்பினால் தள்ளு.

**Paddock,** *n.* தவளை.

**Paddy,** *n.* நெல்.

**Padlock,** *n.* ஒருவகைத் தாழ்ப்பாள்; பூட்டு.

*padre, n.* கத்தோலிக்க மத குரு.

**Paean,** *n.* வெற்றிப்பாடல்.

**Pagan,** *n.* புறமதத்தார்; மத நம்பிக்கை யில்லாதவர். *a.* புற மதத்தைச் சேர்ந்த. *n. abs.* paganism. *v.* paganize.

**Page,** *a.* 1. கையாள்; பணிப் பையன். 2. (புத்தகப்) பக்கம். *v.* பக்கங்களுக்கு இலக்கமிடு.

**Pageant,** *n.* பகட்டாரவாரம்; புறப்பகட்டு விழாக்காட்சி; பல் வண்ணக் காட்சி. *a.* பகட்டான. *n. abs.* pageantry, புறப்பகட்டுத் தன்மை; விழாக்காட்சி.

**Pagoda,** *n.* கோவில் கூர்ங் கோபுரம்; கூருருளைமோடு. பண்டை இந்தியப் பொன் நாணயம்; வராகன் .

**Paid,** *v.* (*see* pay.)

**Pail,** *n.* தொட்டி குவளை; வாளி; போகணி.

**Pain,** *n.* நோவு; வலி; நொம்பலம். *(pl.)* கவனம்; முயற்சி; பிள்ளைப் பேற்று நோவு; பிள்ளைப்பேறு. *v.* வருத்து; துன் புறுத்து; நோவளி. *a.* painful. (*comb.*) *a.* painstaking, வருந்தியுழைக்கிற.

**Paint,** *n.* வண்ணப்பூச்சு. *v.* வண்ணம் பூசு; வண்ணப் படமெழுது; விரித்துரை தீட்டு. *n.* painting, சித்திரம்; ஓவியம். *n. ag,* painter, ஓவியர்.

**Pair,** *n.* இரட்டை; சோடி; இணை துணை; இணை. *v.* பொருத்தமாக இணை; சோடி சேர்.

**Pal,** *n.* கூட்டாளி.

**Palace,** *n.* அரண்மனை; மாளிகை. *a.* palatial.

**Paladin,** *n.* வீரன்.

**Pal(a)eography,** *n.* தொன்மைக் கால எழுத்து முறை; பண்டை வரிவடிவாராய்ச்சித் துறை.

**Pal(a)eontology,** *n.* இறந்தொழிந்த உயிர்களைப் பற்றிய நூல்கள்.

**Pal(a)eozoic,** *n., a.* (மண்ணூல்) பழைய உயிரின (ஊழி).

**Pal(a)eo-lithic,** *a.* பழங்கற்கால.

**Palankeen, Palanquin,** *n.* பல்லக்கு.

**Palatable,** *a.* (*see* palate.)

**Palate,** *n.* மேல்வாய்; அண்ணம்; சுவை உறுப்பு; சுவை. *a., n.* palatal, அண்ணத்திற்குரிய; அண்ணத்திற் பிறக்கிற (எழுத்து). *a.* palatable, சுவை தருகிற; விரும்பத்தக்க.

**Palatine,** 1. *n.* அண்ண எலும்பு. *a.* அண்ணத்திற்குரிய. 2. *a., n.* (count palatine) ஆட்சியுரிமையுடைய(வர்). (2) *n. abs, com.* palatinate, ஆட்சியுரிமைப் பகுதி; நில ஆட்சியுரிமை.

**Pale,** 1. *n.* வேலி; அழிவேலி; வேலியால் சூழப்பட்ட இடம் எல்லை. 2. *a.* வெளிறிய; மங்கலான; வெளுத்த. *v.* வெளிறு; மங்கலாகு. (2) *n.* paleness, pallor.

**Palfrey,** *n.* மட்டக் குதிரை.

**Paling,** *n.* வேலி; கம்பிவேலி.

**Palisade,** *n.* கழிகளாலான. வேலி; கம்பிவேலி; கிராதி.

**Pall,** *n.* பிணச்சீலை; போர்வைத் துணி. 2. *v.* வெறுப்படையச்செய்; தெவிட்டு. (1) *(comb) n.* pall-bearer, பிணப்பெட்டி தூக்குபவன்.

**Pallet,** *n.* வைக்கோல் மெத்தை.

**Palliate,** *v.* துன்பந்தணி; மட்டுப் படுத்து; குற்றங் குறைகளை மறை. *n.* palliation. *a.* palliative, நோவு ஆற்றுகிற; கழுவாய் தருகிற. *n.* கழுவாய்; நோய் ஆற்றும் மருந்து.

**Pllor,** *n.* வெளிறிய நிறம்.

**Palm,** *n.* 1. உள்ளங்கை. 2. பனையின் மரம்; பனை. 3. வெற்றி மடல்; வெற்றி. *comb. n.* palm disease, தாளிநோய்; போந்தை நோய்.

**Palmate,** *a.* உள்ளங்கை போன்ற.

**Palmer,** *n.* (கிறித்துவ) புண்ணிய யாத்திரிகர்.

**Palmistry,** *n.* கைவரை நூல். *n. pers.* palmist.

**Palmy,** *a.* செழிப்பாக வளர்கிற; செழித்த. (palmy days).

**Palmyra,** *n.* பனைமரம்.

**Palpable,** *a.* எளிதில் புலப்படக் கூடிய; தொட்டு உணரத் தகுந்த. *n.* palpability, *adv.* palpably.

**Palpitate,** *v.* நடுங்கு; துடி. *n.* palpitation, நெஞ்சு துடித்தல்; பதைப்பு.

**Palsy,** *n.* நடுக்கு வாதம்; பக்க வாதம். *a.* palsied.

**Paltry,** *a.* இழிவான; சிறுமையான.

**Paly,** *a.* வெளுத்த; மங்கலான.

**Pampas,** *n. (pl.)* புல் சமவெளிகள்.

**pamper,** *v.* இடங்கொடுத்துக் கெடு; இளக்காரங்கொடு; ஊட்டிக் கொழுக்கவை.

**Pamphlet,** *n.* துண்டு வெளியீடு; சிறுபுத்தகம். *n. pers.* pamphleteer.

**pan,** *n.* தாலம்; தட்டு; அகன்ற சட்டி. *v.* தாலத்திலிட்டுக் கழுவு. *n.* pancake, தோசை; அடை.

**Panacea,** *n.* சஞ்சீவி; குரு மருந்து.

**Pan-Americanism,** *n.* அமெரிக்கக் கண்ட நாடுகளின் ஒற்றுமை உணர்ச்சி.

**Panchayat,** *n.* (இந்திய வழக்கு) ஐம்பெருங் குழு; நாட்டாண்மைக் குழு. *comb. n.* Panchayat Board, ஊராண்மைக் குழு.

**Pancreas,** *n.* கணையம் என்ற உடலுறுப்பு. *a.* pancreatic.

**Pandemonium,** *n.* பெருங் குழப்பம்; கந்தறுகோலம்.

**Pander,** *n.* (ஆவலுக்குப்) பரிந்துதவு.

**Pane,** *n.* கண்ணாடித் தகடு பலகணிச் சட்டம்.

**panegyric,** *n., a.* புகழ்மொழி. *a.* panegyrical. *v.* panegyrize, -se *n. pers.* panegyrist.

**Panel,** *n.* மரச்சட்டம்; தகடு; குழுப்பட்டி. *v.* தகடு அல்லது சட்டம் அமை. *n.* panelling.

**Pang,** *n.* படுநோவு; கொடிய நோவு.

**Panic,** *n.* கிலி; பேரச்சம்; பீதி; ஆதாரமில்லாத அச்சம். *a.* காரணமில்லாத; அளவு மீறிய; (அல்லது திடீரென) ஏற்படுகிற.

**Panoply,** *n.* கவசம். *a.* panoplied, கவசமணிந்த.

**Panorama,** *n.* பரந்த காட்சி யோவியம்; அடுக்கணிக் காட்சி.

**Pansy,** *n.* பூஞ்செடி வகை.

**Pant,** *v.* பெருமூச்செறி; பதை; அவாக்கொள்.

**Pantaloon,** *n.* கோமாளி. *(pl.)* pantaloons, (சுருக்கம் - pants கால் சட்டை.

**Pantheism** *n.* மாயாவாதம்; உலகே கடவுள் எனும் கொள்கை. *n. pers.* pantheist.

**Pantheon,** *n.* தெய்வத்தொகுதி; பல்தெய்வக் குழு; பல்தெய்வ முடைய வட்டவடிவ உரோமர் கோயில்.

**Panther,** *n.* சிறுத்தைப் புலி.

**Pantomime,** *n.* ஊமைக் கூத்து; அவிநயக் கூத்து.

**Pantry,** *n.* உக்கிராணம்; பொருட் கிடங்கு.

**Pants,** *n.* (*see* pantaloon).

**Pap,** *n.* பாலில் தோய்ந்த அப்பம்; முலை வாய்; முலை முகம்.

**Papa,** *n.* அப்பா.

**papacy,** *n.* திருத்தந்தை (போப்) சார்ந்த முறை அதாவது கத்தோலிக்க மதம். *a.* papal. *n. pers.* papist, கத்தோலிக்கர்.

**Paper,** *n.* தாள்; பத்திரம்; பத்திரிகை. *pl.* தாள் கட்டுகள்; ஆதாரத்

தாள்கள்; தாள் மூலங்கள். *a.* தாளால் ஆன. *v.* தாளால் மூடு. *comb. n.* paper - money, paper-currency, காசுத் தாள்; தாள் பணம்; தாள் நாணயம்.

**Papery,** *a.* தாள் போன்ற.

**Papier - mache,** *n.* தாள் கூழ்.

**Papyrus,** *n.* (*pl.* papyri) புல்வகை; தாள் புல்.

**Par,** *n.* சரிசமம்; முகப்பு மதிப்பு. *n.* see parity.

**Parable,** *v.* நீதியை உட்கொண்ட கதை. (*see* parabolical 1).

**Parabola,** *n.* மாலை வளைவு. (கூருருளையின் பக்கத்துக் கிணையான தளவளைவு). (*see* parabolical. 2.)

**Parabolic(al)** *a.* 1. (parable) கதைபோன்ற; உருவகமா யமைந்த 2. (parabola) மாலை வளை வான.

**Parachute,** *a.* வான்குடை 'பாவு குடை'; 'குடைமிதவை'.

**Parade,** *n.* படை அணிவகுப்பு; அணிவகுப்பு; ஊர்வலம். *v.* அணிவகுத்து நட.

**Paradigm,** *n.* (இலக்கணத்தில்) மேற்கோள் சொல்; வாய்பாடு.

**Paradise,** *n.* விண்ணுலகம்; பொன்னுலகு; துறக்கம்.

**Paradox,** *n.* முரண்; முரணுரை. *a.* paradoxical.

**Paraffin,** *n.* மெழுகு வகை.

**Paragon,** *n.* மிகச் சிறந்த எடுத்துக்காட்டு; முன் மாதிரி.

**Paragraph,** *n.* பத்தி; பிரிவு; பகுதி. *a.* paragraphic. *n. pers* para grapher. *n. abs.* paragraphy.

**Paralipsis,** *n.* (கிரேக்க அணிநூல்) கூறாது விடுவது போற்பாவித்துக் கூறுமணி; பாவனைக் குறிப்பணி.

**Parallax,** *n.* நோக்கு மயக்கம் பார்வைக் கோணத்தால் பொருள் நிலையில் தோன்றும் மாறுதல் கோண அளவு.

**Parallel,** *a.* இணை தொலையான; இணைவரையான; ஒருபோகான. *n.* இணைவரை; ஒரு போகு கொடு. *v.* ஒத்திரு.

**Parallelogram.** *n.* சாய் கட்டம்; இணைவகம்; ஒரு போகுச் சதுக்கம்.

**Paralyse,** *v.* பக்க வாதத்தினால் பீடிக்கச் செய்; சக்தியறச் செய். *n.* paralysis, பக்கவாதம்; உடலுறுப் பில் உணர்ச்சியில்லாது போகும் நோய். *a., n. pers.* paralytic, பக்கவாத நோயுள்ள(வர்).

**Paramagnetism,** *n.* காந்தக் கவர்ச்சிப்பாடு; காந்தத்தால் கவரப் படும் தன்மை. *a.* para magnetic.

**Paramount,** *a.* முதன்மையான; எல்லாவற்றிற்கும் மேலான. *n.* paramountcy.

**Paramour,** *n.* கள்ளக் காதலர்.

**Parapet,** *n.* கைப்பிடிச் சுவர்.

**Paraphernalia,** *n. (pl.)* ஒருவரது உடைமைப் பொருள்தொகுதி; துணைக்கலத் தொகுதி.

**Paraphrase,** *n.* பொழிப்புரை; எளிய கருத்துரை; எளிய மொழி பெயர்ப்புரை. பெயர்த்து எழுது.

**Parashooter,** *n.* வான்குடைப் படையை எதிர்த்துச் சுடுபவர்.

**Parasite,** *n.* ஒட்டுயிர்; பிறரை ஒட்டி வாழ்பவர்.

**Parasol,** *n.* கைக்குட்டை.

**Prathyroid,** *n.* சுரப்பிவகை.

**Paratroop,** *n.* வான்குடைப் படை.

**Parboil,** *v.* அரைகுறையாக வேகவை; (நெல்லைப்) புழுக்கு.

**Parcel,** *n.* சிறுகட்டு; சிப்பம்; பொட்டலம்; கட்டுமானம் சிறு துண்டு; சிறு பொருள். *v.* சிப்பங்க ளாகக் கட்டு; பொட்டலங் கட்டு.

**Parcener,** *n.* பங்காளி; பங்காளி உறவினர். *n.* parcenary.

**Parch.** *v.* உலரச்செய், வறு; வாட்டு; வெடிக்க வை.

**Parchment,** *n.* (எழுதும்) தோல்; பழந்தாள் வகை.

**Pard,** *n.* (பழவழக்கு leopard) சிறுத்தை.

**Pardon,** *n.* மன்னிப்பு; பொறுத் தமைவு; விடுதலை. *v.* மன்னி; விடுதலை செய். *a.* pardonable, மன்னிக்கத்தக்க. *n. ag.* pardoner.

**Pare,** *v.* தோலை உரி; ஓரத்தைச் சீவு; நறுக்கு. *n.* parling. சீவல்; சீவிய தொலி.

**Parent,** *n.* பெற்றோர்; தந்தை தாய்; பிறப்பகம்; தாயகம்; தள்ளை. *a.* parental. *n. pers.* parenthood.

**Parenthesis,** *n.* (*pl*-theses) செருகு தொடர்; இடைத் தொடர், தனிநிலைத் தொடர். *a.* parenthetic(al). *v.* parenthesize,-se.

***par excellence,*** *adv.* மிகச் சிறந்ததாக; ஒப்புயர்வற்ற.

*pari passu. adv.* இணையாக.

**Parish,** *n.* (மதகுரு அல்லது கோவிலுக்குரிய) வட்டாரம்; ஊர். *n. pers.* parishioner. *a. see* parochial.

**Parity,** *n.* ஒப்பு; சரி ஒப்பு;

**Park,** *n.* பூங்கா; மலர்க்கா; மலர்ச் சோலை; பூந்தோட்டம். *v.* (வண்டியை) நிறுத்திவை; பீரங்கி களை வரிசையாக வை.

**Parlance,** *n.* பேச்சு முறை.

**Parley,** *n. v.* பேச்சு; உரையாட்டு; பேரம் பேசுதல்; கலந்த பேசுதல். *v.* கூடிப் பேசு; எதிரியுடன் பேரம் பேசு.

**Parliament,** *n.* அரசியல் மன்றம்; மாமன்றம்; சட்ட மன்றம். *a.* parliamentary, சட்ட சபைக் குரிய. *n. pers.* parliamentarian.

**Parlour,** *n.* (வீட்டுக்) கூடம் விருந்தினரை வரவேற்கும் அறை.

**Parochial,** *a.* (parish) மதகுரு வட்டாரத்திற்குரிய; கோயில் ஆட்சி வட்டாரத்துக்குரிய; குறுகிய மனப்பான்மையுள்ள.

**Parody,** *n.* ஏளனப் போலி நடிப்பு; ஏளனச் செய்யுள்.

**Parole,** *n.* உறுதி மொழி. (on parole, உறுதிமொழி மீது) அன்றாட அடையாளச் சொல்.

**Paronym,** *n.* ஒரே பகுதியிலிருந்து பிறக்கும் இருசொற்களில் ஒன்று; ஒரே பகுதியுடைய இரு பகுபதங்கள்; பகுதித் தொடர் புடைய சொல்.

**Paroxysm,** *n.* (நோய்) திடீர் வலிப்பு; திடீர் எழுச்சி.

**Parricide,** *n.* தந்தையைக் கொல். *a.* parricidal.

**Parrot,** *n.* கிளி.

**Parry,** *v.* தடு; தட்டு; தடுத்து விலக்கு.

**Parse,** *v.* சொல்லிலக்கணம் கூறு. *n.* parsing.

**Parsec,** *n.* விண்மீன் தொலை அளக்கும் ஓர் அலகு (19 x $10^{12}$ மைல்கள்)

**Parsnip, -nep,** *n.* கிழங்கு வகை.

**Parson,** *n.* ஊர் மதகுரு, *n. com.* parsonage, ஊர் மதகுரு மனையிடம்.

**Part,** *n.* பாகம்; பகுதி; சார்பு; நாடக உறுப்பு. *(pl.)* குணம்; திறமை. *v.* பங்கு செய்; பிரி. *n.* parting, இரண்டாகப் பகுத்தல்; பிரிதல். (*see* partition).

**Partake,** *v.* (partook, partaken) பங்கெடுத்துக் கொள்; பெறு. *n. ag.* partaker.

**Partial,** *v.* அரைகுறையான; ஒருதலையான. *n.* partiality.

**participate,** *v.* பங்கெடுத்துக் கொள். *n. pers.* participant. *n. abs.* participation.

**Participle,** *n.* எச்சவினை. *a.* participal.

**Particle,** *n.* சிறு துணுக்கு; இம்மி; அணு; இடைச்சொல் உருபு.

**Pari-coloured,** *a.* பல நிறங்கொண்ட.

**Particular,** *a.* குறிப்பிட்ட; தனிப்படக் கவனிக்கிற; நுட்பங் காண்கிற. *n.* particularity. *v.* particularize, தனிப்படுத்திக் கூறு; பெயர் குறித்துரை; இனங்குறி.

**Partisan,** *n.* கட்சியாளர்; ஒருதலைச் சார்பானவர். *a.* ஒருதலைச் சார்பான.

**Partition,** *n.* (part) பங்கு பிரித்தல்; பிரிவினை; பங்கீடு; கூறுபாடு; தட்டி; எல்லைச் சுவர். *v.* பிரி; பங்கிடு.

**Partly,** *adv.* ஓரளவு; அரை குறையாக.

**Partner,** *n.* கூட்டாளி; பங்காளி; கணவன் அல்லது மனைவி. *v.* கூட்டாளியுடன் சேர். *n.* partnership

**Partridge,** *n.* கௌதாரி; பறவை வகை.

**Party,** *a.* கட்சி; கூட்டம்; *n.* விருந்துக்குழு; குழாம். *comb. n.* party government, கட்சி முறை அரசு.

**Par value,** *n.* முகப்பு விலை.

*parvenu*, *n.* புதிதாகப் பதவிக்கு வந்தவன்; திடீரென்று முளைத்தவன்.

**Pass,** *v.* (*p.pa. p.* passed, *pa.p. p. a. see* past) கடந்து செல்; செலுத்து; புறக்கணி; நிகழ்;

கைவிட்டுக் கைமாற்றி அனுப்பு; இற; (தீர்மானம்) நிறைவேற்று; (தேர்வில்) தேறு; (தேர்வாய்வு) வெற்றியுடன் கடந்துசெல். *n.* கடவுச் சீட்டு; கடப்பிணக்கம்; கடப்புரிமை; நுழைவுரிமை; நெருக்கடி; கட்டம்; தறுவாய்; கணவாய்; இடுங்கிய வழி; வெற்றி. *a.* வெற்றிக்குப் போதிய. (pass marks) *p. pa. see* past. *a. see* passable. *n. see* passage. *comb. n. see* passbook.

**Passable,** *a.* செல்லக்கூடிய; ஒப்பத்தகுந்த; ஏற்றத் தாழ்வான.

**Passage,** *n.* கடந்து செல்லுதல்; கழிதல்; நிறைவேறுதல் வழி; ஊடு வழி; பயணம்; செல்ல உரிமை; (கட்டுரை நூல்) பகுதி.

**Passbook,** *n.* குறிப்புப் புத்தகம்; தனிக் கணக்கீட்டுப் புத்தகம்; பற்று வரவுச் சிட்டை.

**Passenger,** *n.* பயணி.

**Passer, passer by,** *n.* கடந்து செல்பவர்; வழிசெல்பவர்.

**Passible,** *a.* துன்பம் உணரக் கூடிய.

*passim, adv.* எல்லா இடத்தும்; இங்குமங்கும்.

**Passing,** *a., adv.* வழியே செல்கிற; முக்கியமல்லாத; மிக்க; கடந்த. *n.* passingbell, சாவு மணி.

**Passion,** *n.* மனவெழுச்சி; ஆர்வம்; சினம்; காமம். *a.* passionate, மனவெழுச்சி மிகுந்த. *a., neg,* passionless, passion week, 'ஈஸ்டர்' பண்டிகைக்கு முந்திய விழா.

**Passion play,** *n.* கிறித்துவின் வாழ்விறுதி பற்றிய நாடகம்.

**Passive,** *a.* கீழ்ப்படிவான; செயலற்ற; செயலுக்கரளான; முனைப்பற்ற; (இலக்) (voice= வினை வடிவம்); செயப்பாட்டு (x active). *n.* passiveness, passivity.

**Passport,** *n.* அடையாளம்; நுழைவுச்சீட்டு; செல்சீட்டு. கடவுச் சீட்டு.

**Past,** *a.* (*pa.p.a* > Pass) சென்ற; கழிந்த; இறந்த காலமான. *n.* இறந்தகாலம். *prep.* அப்பால்; கடந்து.

**Paste,** *n.* கூழ்; பசை; பிசைந்த மாவு; *v.* பசையினால் ஒட்டவை. *n.* pasteboard, தாள் அட்டை; அட்டைப்பலகை. *a. see* pasty.

**Pasteurize,-se** *v.* (பாஸ்டர் முறைப்படி பாலைக்) காய்ச்சித் தூய்மை செய். *n.* pasteurization, -sation. *n. impers.* pasteurizer, -ser.

**Pastime,** *n.* விளையாட்டு; பொழுதுபோக்கு.

**Pastor,** *n.* இடையர்; கோவலர்; மதகுரு.

**Pastoral,** *a.* 1. மதபோதகரின் வேலைக்குரிய. 2. (கவிதை, வாழ்வு) நாட்டுப் புற வாழ்வுக் குரிய; முல்லை நிலத்துக்குரிய. *n.* நாட்டுப்புறப் பாடல்; முல்லைப் பாட்டு.

**Pastry,** *n.* (part) மாப் பணியார வகை.

**Pasturage,** *n.* மேய்ச்சல் வெளி; புல்தரை.

**Pasture,** *n.* புல் தரை. *v.* மேயச் செய்.

**Pasty,** *a.* (paste) பசையான. *n.* பணியாரவகை.

**Pat,** *n.* தட்டுதல்; சிறுகட்டி. *a., adv.* கணக்காக; சரியாக; சரியான சமயத்தில் அல்லது இடத்தில். *v.* கையினால் மெல்லத் தட்டு.

**Patch,** *n.* ஒட்டுப்பகுதி; ஒட்டுப் பாளம்; ஒட்டுத் துணி; ஒட்டுத் துண்டு; சிறு நிலம். (*phr.* purple patch, சிறந்த இடைப்பகுதி.) *v.* ஒட்டுப் போட்டுச் சீர்படுத்து. *a.* patchy, ஒட்டிச் சேர்த்த; துண்டுத் துணுக்கான; துண்டுதுண்டான. *(comb) n.* patch-work, ஒட்டுத் தையல்; ஒட்டுப் போட்ட வேலை; ஒட்டுமானம்.

**Pate,** n தலை; மூளை.

**Patent,** *n.* தெளிவாகத் தெரிகிற; (மருந்து, புதுவது கண்டுபிடிப்பு; உரிமை ஆகியவற்றில்) தனி உரிமையுடைய. *n.* தனி உரிமைப் பத்திரம். *v.* உரிமைப் பத்திரப் படுத்து. *n. pers.* patentee, உரிமைப் பத்திரம் பெற்றவர்.

**Paterfamilias,** *n.* குடும்பத் தலைவன்; குடும்பத்தந்தை; மூப்பர்.

**Paternal,** *a.* தந்தைக்குரிய; தந்தை போன்ற; தந்தை வழியாக வந்த.

**Paternity** *n.* தந்தைமுறை; தந்தை வழி உடைமை; தந்தை நிலை.

**Paternostor,** *n.* (= எங்கள் தந்தை) இலத்தீன் வழிபாட்டுப் பாடலுள் ஒன்று.

**Path,** *n.* வழி; நெறி; பாதை. *a.* pathless, வழியற்ற. *comb. n.* bypath, bye-path, கிளைப் பாதை; பக்கப்பாதை pathfinder, புதுப்பயணக்காரன்; வழிகாட்டி.

**Pathetic,** (*see* pathos).

**Pathology,** *n.* நோய்க்குறி நூல்; நோய்க்கூறு. *n.* pathologist, நோய்க்கூறு மருத்துவர். *a.* pathological.

**Pathos,** *n.* இரக்கம்; அவலச் சுவை. *a.* pathetic, இரங்கத் தக்க.

**Patience,** *n.* பொறுமை; பொறுதி; அமைதி. *a. see* patient. 1.

**Patient,** *a.* (patience) பொறுமை யான; 2. *n.* நோயாளி. *comb. n.* in-patient, தங்கு நோயாளி; மனையக நோயாளி. out-patient, வெளிநோயாளி, மனைப்புற நோயாளி.

*potois,* **n.** திசை மொழி; நாட்டுப்புற மொழி.

**Patriarch,** *n.* குலத்தலைவர்; முதியோர். *a.* patriarchal. *n. abs* patriarchy.

**Patrician,** *a.* உயர்குலத்துக்குரிய *n.* உயர்குலத்தோர்; ஆட்சி வகுப்பினர்.

**Patricide,** *n.* தந்தையைக் கொன்றவர்.

**Patrimony,** *n.* தந்தை வழி உடைமை. *a.* patrimonial.

**Patriot,** *n.* நாட்டுப் பற்றாளர். *a.* patriotic. *n. abs.* patriotism.

**Patrol,** *v.* சுற்றித் திரி; காவல் செய். *n.* காவலாகச் சுற்றித் திரிதல்; சுற்றி வரும் காவலர். *n. pers.* patrolman.

**Patron,** *n.* (*fem.* patroness) புரவலர்; ஆதரவாளர்; உதவி யாளர். *n. abs.* patronage, ஆதரவு. *v.* patronize,-se, *adv.* patronizingly, பசப்பாதரவுடன்.

**Ptronymic,** *n.* தந்தைவழிப் பெயர்.

**Patta,** *n.* (இந்திய வழக்கு) தனியுரிமைப் பத்திரம்; நிலநேர் உரிமைப் பத்திரம்; தனி நிலக் கிழமை. *n. pers.* pattadar, தனி நிலக்கிழவர்.

**Patter,** *n.* சடசட ஒலி. *v.* தடதட வென்று நட; சடசட வென்று ஒலி செய்; பட பட வென்று பேசு.

**Pattern,** *n.* மாதிரி; இலக்கு; எடுத்துக்காட்டு; கோலம் படிவம். *v.* மாதிரியாகக் கொண்டு செய் கோலத்தால் அணிசெய் வடிவமை.

**Paucity,** *n.* போதாமை; அருமை; (பொருளின்) அருந்தல் நிலை; சுருக்கம்.

**Paunch,** *n.* இரைப்பை; வயிறு.

**Pauper,** *n.* ஏழை; வறியவர்; 'வேங்கர்'. *v.* pauperize, -se, *n. abs.* pauperism.

**Pause,** *n.* இடை நிறுத்தம்; தயக்கம். *v.* நிறுத்து; தயங்கு.

**Pave,** *v.* பாவு; தளம்பதி. *n.ag.* Paver, paviour.

**Pavement,** *n.* பாவிய பாதை; தளம்; தளவரிசை.

**Pavilion,** *n.* கூடாரம்.

**Paw,** *n.* விலங்கின் பாதம். *v.* பாதத்தினால் பிறாண்டு; முரட்டுத் தனமாகக் கையாளு.

**Pawn,** 1. *n.* அடைமானப் பொருள். *v.* அடைமானமாக வை. 2. (வட்டாடலில்) ஆள்; காலாள் (1) *n.* pawn broker, அடைமானத் துக்குக் கடன் கொடுப்பவர். *n.* pawnee, அடைமானப் பொருள் வாங்கியவர்.

**Pay,** *v.* (paid) பணம் கொடு (கடனைச்) செலுத்து; சம்பளம் அல்லது விலை கொடு; ஆதாய மளி; ஆதாயமாயிரு. *n.* (வேலைக்குக்) கூலி; சம்பளம். *n.* payee, பணத்தைப் பெறுகிறவர். *n. ag,* payer, பணம் கொடுப் பவர். *a.* payable, கொடுக்க வேண்டிய; கொடுக்கக் கூடிய; செலுத்தக்கூடிய. *comb. n.*, pay bill, சம்பளப் பட்டி.

**Paymaster,** *n.* கூலி வழங்குபவர்.

**Payment,** *n.* செலுத்தும் பணம்; கட்டணம்; செலுத்துதல்.

**Pea,** *n.* பட்டாணிப் பயறு; பயறு; கடலை. (-family) பயற்றினம்.

**Peace,** *n.* அமைதி அமைதிக் காலம்; போர் நின்றநிலை; போர் நிறுத்தம்; உடம்படிக்கை; நல்லுறவு; நட்பு. *v. int.* அமைதியாயிரு. *a.* peaceable, peaceful, அமைதி யான. *n.* peace maker, அமைதிக் காவலர். *n.* peace-offering, அமைதிக்காக அளிக்கப்படும்

படையல். *comb n.* peace and security, அமைதியும் காப்பு நலமும்.

**Peach,** *n.* பழவகை.

**Peacock,** *n.* (*fem.* peahen) மயில்; ஆண் மயில்.

**Peafowl,** *n.* மயில்.

**Peak,** *n.* மலையுச்சி; குவடு; கொடுமுடி; உச்ச அளவு.

**Peal,** *n., v.* பேரொலி; முழக்கம். *v.* பேரொலி செய்.

**Pear,** *n.* பேரிக்காய் இனப் பழவகை.

**Pearl,** *n.* முத்து; முத்துப் போன்ற பொருள். *a.* pearly, (*comb.*) dewpearl, (முத்துப் போன்ற) பனித்துளி. பனி முத்து. pearl fishery, முத்துக் குளித்தல்; முத்துத் தொழில்.

**Peasant,** *n.* நாட்டுப்புறத்தான்; உழவன். *n. abs., coll.* peasantry, உழவர்.

**Peat,** *n.* நிலக்கரி; முற்றா நிலக்கரி.

**Pebble,** *n.* கூழாங்கல்.

**Peccable,** *a.* பழிச்சார்புடைய; குறை காணக் கூடிய; (x impeccable) *a.* peccability.

**Peck,** *v.* அலகினால் கொத்து; *n.* கொத்துதல்.

**Pectoral,** *a.* மார்புக்குரிய *n.* மார்புக் கவசம்; மீனின் மார்புத் துடுப்பு.

**Peculate,** *v.* ஒப்படைத்த பொருளைக் கைக்கொள். *n.* peculation. *n. ag.* peculator.

**Peculiar,** *a.* தனிப்பட்ட; வழக்கத்திற்கு மாறான; புதிதான. *n.* peculiarity, தனித்தன்மை; சிறப்புப் பண்பு; கோட்டம்.

**Pecuniary,** *a.* பணஞ்சார்ந்த.

**Pedagogic,** *a.* (pedagogue) ஆசிரியர் தொழிலுக்குரிய *n.* pedagogics, ஆசிரியத் தொழில்.

**Pedagogue,** *n.* ஆசிரியன்; புலவன். *n. abs.* pedagogy. *a. see* pedagogic.

**Pedal,** *a.* காலடிக்குரிய. *n.* காலடியால் இயக்கப்படும் கருவி; மிதிப்படி. *v.* மிதித் தியக்கு.

**Pedant,** *n.* புலவர்; கல்விச் செருக்குடையவர். *a.* pedantic. *n. abs.* pedantry.

**Pedestal,** *n.* பீடம்; நிலைமேடை.

**Pedestrian,** *n.* கால்நடையாளர். *a.* கால்நடையாகச் செல்வதற்குரிய.

**Pedigree,** *n.* மரபு வரிசை; கால்வழி.

**Pediment,** *n.* கதவு; பலகணி முதலியவற்றின் மீதுள்ள வேலைப் பாடு.

**Pedlar,** *n.* திரிந்து விற்பவன் .

**Peduncle,** *n.* காம்பு; (உயிரினத்தின்) காம்பு போன்ற உறுப்பு.

**Peel,** *n.* பட்டை; தோல்; பூழி; சீவல்; பற்றை. *v.* தோலுரி; பட்டை கழற்று; அரி; கீறு. *n. (pl.)* peelings, சீவல்கள்.

**Peep,** *v.* துளை வழியாகப்பார்; உற்றுப்பார். *n.* உற்றுப்பார்த்தல். *n. ag.* peeper.

**Peer,** 1. *n.* இணையானது; இணையானவர்; பெருமகன். 2. *v.* உற்றுப் பார். (1) *(fem.)* peeress. *a.* peerless, இணையற்ற. *n. abs., coll.* peerage, பெருமக்கள் பட்டம் (அல்லது உரிமை); பெருமக்கள் குழு (அல்லது வகுப்பு.)

**Peevish,** *a.* சிடுசிடுப்பான; எளிதில் சீறுகிற. *n.* peevishness.

**Peg,** *n.* மர அணி; முளை; ஆப்பு. *v.* முளை அடி; முளையில் மாட்டு. *v.* peg away, விடாமல் உழை.

**Pelf,** *n.* (இழிவழக்கு) பணம்.

**Pelican,** *n.* கடல் நாரை வகை.

**Pelisse,** *n.* மாதர் சட்டை வகை.

**Pellet,** *n.* சிறு உருண்டை; சிறு குண்டு.

**Pellicle,** *n.* தோல் போன்ற சவ்வு; நீரினத்தில் (மிதக்கும்) ஆடை.

**Pell-mell.** *adv.* குழப்பமாக; தாறுமாறாக.

**Pellucid,** *a.* மிகத் தெளிவான; ஒளி செல்ல விடுகிற. *n.* pellucidity.

**Pelmanism,** *n.* பெல்மனின் கலைப்பயிற்சி நினைவாற்றல் வளர்ப்புக் கலை.

**Pelt,** 1. *v.* கல்லால் அடி; (மழை போல்) வாரியடி. 2. *n.* பதப்படுத்தாத தோல்.

**Pelvis,** *n.* இடுப்பு. *a.* pelvic.

**Pen,** 1. எழுதுகோல்; மைக்கோல். v.(penned) எழுது. 2. *v.* (penned, penned or pent) பட்டியில் அடை; தொழுவில் அடை. (1) *n.* pen-knife, சிறு கத்தி. *n.* penman, எழுத்தாளர்; நூலாசிரியர். *n. abs.* penmanship, எழுத்தாளர் கை.

**Penal,** *a.* தண்டனைக்குரிய; தண்டனையான; குற்றத் துறைக் குரிய. *v.* penalize,-se, தண்டனைக் குரியதாக்கு; கண்டி; தண்டி. *conn. see* penalty. *comb. n.* penal code, குற்றமுறை கோப்பு; குற்றத் துறைச் சட்டத் தொகுதி. Indian Penal Code (I.P.C.) இந்தியக் குற்றமுறைக் கோப்பு (இ.கு.கோ).

**Penalty,** *n.* தண்டனை; தண்டம்; தண்டத் தொகை; தண்ட வரி.

**Penance,** *n.* நோன்பு; தவம்; எழுவாய்.

**Pence,** *n. see* penny.

**Pencil,** *n.* எழுதுகோல்; வரைகோல்; கரிக்கோல்; (அணிவழக்கு) வரைகோல் வடிவப் பொருள். (pencil of light, ஒளிக்காம்பு) *v.* கரிக்கோலால் எழுது அல்லது அடையாளம் செய்; தீட்டு. *comb. n.* copying pencil, படிவரை கோல்; பகர்ப்புக் கோல், colour pencil, வண்ணவரை கோல், pencil-pen, மைவரை கோல்.

**Pendant,** 1.*n.* குண்டலம்; பதக்கம்; கொடி. 2. *a.* தொங்குகிற; உறுதிப் படாத. (2) *n.* pendency.

**Pending,** *prep., a.* தொங்கிக் கொண்டு; சார்ந்து எதிர் நோக்கி; முடிவுறாது; தொடர்ந்து.

**Pendulum,** *n.* (மணிப்பொறியின்) ஊசல்குண்டு; ஊசல்; 'ஊசலின்' முன் பின் இயக்கம்; ஏற்ற

இறக்கம்; செயல் எதிர் செயல். *a.* pendulous. *v.* pendulate.

**Penetrate,** *v.* நுழை; ஊடுருவிச் செல். *a.* penetrable, penetrating, penetrative, *n.* penetration, நுழைதல்; நுண்ணறிவு.

**Penguin,** *v.* (தென்கடல் பகுதியில் வாழ்) பறவை வகை.

**Penholder,** *n.* மைக்கோல் பிடி.

**Penicillin,** *n.* மருந்து வகை; 'பூஞ்சகம்'.

**Peninsula,** *n.* தீவக்குறை; 'முந்நீரகம்'. *a.* peninsular.

**Penis,** *n.* ஆண்குறி; குய்யம்.

**Penitent,** *a.* கழிவிரக்க முடைய, *n.* தவறுக்கு வருந்துகிறவர். *n.* penitence, கழிவிரக்கம்.

**Penitentiary,** *n.* தற்காலிகச் சிறைச்சாலை. *n.* கழுவாய்க்குரிய

**Pennant, pennon,** *n.* சிறுகொடி; துகிற் கொடி.

**Pennate,** *a.* சிறகுள்ள.

**Penny,** *n.* 'ஆங்கிலநாட்டு'த் துட்டு, *(pl.)* 1. (நாணயம்) pennies, துட்டுகள். 2. (விலை மதிப்பு) pence, துட்டு(கள்). *a. (neg.)* pennis, காசில்லாத. *comb. a.* pennywise and pound foolish, சிறு விழிப்புப் பெருமடமை யுள்ள.

**Penology,** *n.* தண்டனை நூல்; குற்றத்துறை நூல்.

**Pension,** *n.* (ஓய்வு பெற்ற பிறகு கொடுபடும்) உதவிச் சம்பளம்; படி ஊதியம்; ஓய்வூதியம். *v.* உதவிச்சம்மபளம் கொடு. *n. pers.* pensionary, pensioner, ஓய்வாளர்; ஓய்வுச் சம்பளக்காரர்.

**Pensive,** *a.* சிந்தனையில் மூழ்கிய; கவலைப்படுகிற. *n.* pensiveness.

**Pent,** *a.* (*pa. p.* of pend) சிறைப்பட்ட; அடைபட்ட; அடங்கிய.

**Pentacle,** *n.* ஐங்கோண (மந்திர) சக்கரம்.

**Pentad,** *n.* ஐந்து சேர்ந்த தொகுதி.

**Pentagon,** *n.* ஐந்து பக்க உருவம்; ஐங்கோணம். *a.* pentagonal.

**Pentameter,** *n.* ஐந்து சீர்கொண்ட செய்யுளடி.

**Pentastich,** *n.* ஐந்து பாக்களுள்ள செய்யுள்.

**Pentateuch,** *n.* விவிலிய நூலில் முதல் ஐந்து பிரிவுகள். *a.* pentateuchal.

**Penthouse,** *n.* சார்புப் பந்தல்.

**Penultimate, penult** *a.* ஈற்றயலான; கடைசிக்கு முந்திய.

**Penumbra,** *n.* குறை நிழல்; அரை நிழலொளி. *a.* penumbral.

**Penurious,** *a.* வறுமையான; கஞ்சத்தனமான. *n.* penurious ness. > *n.* penury, வறுமை; இல்லாமை.

**Peon,** *n.* ஏவலாள்; குற்றேவலர்; பணியாள்.

**People,** *n.* மக்கள்; உறவினர்; மக்களினம்; நாட்டு இனம். *v.* குடியேற்று. *pa. p. a.* peopled குடியிருப்புடைய.

**Pep,** *n.* (கொச்சை வழக்கு) எழுச்சி; ஊக்கம்.

**Pepper,** *v.* மிளகு; நல்ல மிளகு; குருமிளகு. *v.* மிளகுப் பொடி தூவு; அடிக்கடி தாக்கு. *a.* peppery, மிளகு போல உறைப்பான; சிடு சிடுக்கிற.

**Peppermint,** *n.* ஒருவகை மணப்பூண்டு; ஒருவகைத் தின் பண்டம்.

**Peptic,** a., *n.* செரிமானத்துக்கு உதவுகிற (மருந்துச் சத்து).

**Peptone,** *n.* (இரைப்பையில் ஊறும்) செரிமான நீர்.

**Per** *prep.* தோறும்; விழுக்காடு; மூலமாக; ஆல்; கு. (per annum, சுருக்கம்; *p.a.* ஆண்டுக்கு. per mensem, சுருக்கம்; p.m. மாதத்துக் ணகு percent, சுருக்கம்; p.c. அல்லது % நூற்றுக்கு; perdiem, நாள் ஒன்றுக்கு; per capita, தலைக்கு; ஆளுக்கு. etc.)

**Peradventure,** *adv.* ஒரு வேளை; தற்செயலாய்.

**Perambulate,** *v.* சுற்றித் திரி. *n.* perambulation. *n. ag. impers.* perambulator, சிறு தள்ளுவண்டி.

*perannum, (p.a.) phr. adv. see. per.*

*per capita, phr. adv. see per.*

**Perceive,** உணர்ந்தறி; *v.* புரிந்துகொள்; காண். *n. see* percept, perception.

**Percentage,** *n.* நூற்றுவீதம்.

**Percept,** *n.* (*correl.* concept) புலனறி பொருள்; புலனுணர்ச்சி; உணர்ந்தறியக் கூடிய பூல னுணர்ச்சி; புலனறிவு; உணரும் ஆற்றல். *a.* perceptive. *a.* perceptible. *n.* perception, புலனால் உணர்கிற.

**Perch,** *n.* 5½ கசம் அளவு; 30½ சதுர கச அளவு; பறவைகள் தங்கு மிடம். *v.* (கிளை அல்லது கொம்பில்) உட்கார்; அமர்ந்திரு; குந்தியிரு.

**Perchance,** *adv.* தற்செயலாய் ஒருவேளை.

**Percipient,** *a.* உணர்கிற; அறிகிற. *n.* உணர்பவர்.

**Percolate,** *v.* (நீர்) கசி; ஊறிப்பரவு; வடிகட்டு. *n.* percolation. *n. ag. impers.* percolator.

**Percussion,** *n.* மோதுதல்; தட்டுதல்.

**Percutaneous,** *a.* மேல்தோல் மூலமான.

**Perdition,** *n.* அழிவு; நகர தண்டனை.

**Perdurahle,** *a.* அழியாத.

**Peregrinat,** *v.* அலை; திரி. *n.* peregrination.

**Peremptory,** *a.* கண்டிப்பான; உறுதியான; உடனே கீழ்ப்படிய வேண்டிய. *n.* peremptoriness.

**Perennial,** *a.* என்றுமுள்ள; (ஆறு) என்றும் ஓடுகிற; (மரம், காடு) என்றும் வாழ்கிற. *n.* ஏல்லாப் பருவங்களிலும் தழைக்கும் கொடியினம்.

**Perfect,** *a.* குறைபாடில்லாத நிறைவுடைய. *v.* நிறைவுபடுத்து. *n.* perfection.

**Perfectible,** *a.* சிறந்ததாக்கக் கூடிய. *n.* perfectibility.

**Perfidious,** *a.* வஞ்சகமான *n.* perfidy, perfidiousness.

**Perforate,** *v.* துளையிடு. *n.* perforation. *n. ag. impers.* perforateor, துளையிடு கருவி.

**Perforce,** *adv.* அவசியத்தினால்; கட்டாயத்தால்

**Perform,** *v.* செய்; வினையாற்று நிறைவேற்று; இசைக்கருவியில் வாசி; நடி. *n.* performance, செயல்; வினைமுறை; ஆடல்; நாடக ஆட்டம்; காட்சிச் செயல். *n. ag.* performer.

**Perfume,** *n.* நறுமணம். *v.* நறுமண மூட்டு. *n. pers.* perfumer, நறுமணச் சரக்குகளை விற்பவர் அல்லது செய்பவர். *n. abs.* perfumery, நறுமணப் பொருளகம்; நறுமணப் பொருள் செய்தொழில்; நறுமணத் தொழிலகம்.

**Perfunctory,** *a.* கவனக்குறைவான; அசட்டையாகச் செய்த. *n.* perfunctoriness.

**Perhaps,** *adv.* ஒருவேளை; (அவ்வாறும்) இருக்கலாம்.

**Peri,** *n.* அணங்கு; அரமகள்.

**Perianth,** *n.* மலரின் இதழ்கள்.

**Periapt,** *n.* மந்திரக் கவசம்.

**Pericardium,** *n.* இதள உறை.

**Pericarp,** *n.* விதையின் உறை.

**Pericranium,** *n.* மூளை உறை.

**Perigee,** *n.* திங்கள் நெறியில் நில உலகுக்கு மிக அணுக்கமான இடம்.

**Perhelion,** *n.* கோள்நெறியில் கதிரவனை அணுகுமிடம்.

**Peril,** *n.* இடர்; இடுக்கண். v. இடுக்கண் படுத்து. *a.* perilous, nv. imperil.

**Perimeter,** *n.* (கட்டம், முக்கோணம்) சுற்றளவு.

**Period,** *n.* காலப்பகுதி; காலக் கூறு; பருவம்; ஊழி; வேளை; (பள்ளி) நேரக் கூறு; முற்றுப்புள்ளி; முடிவு; *a. see* periodic.

**Periodic,** *a.* ஒழுங்கான; திரும்பத் திரும்ப நடக்கிற; பருவம் தவறாத; காலகாலத்தில் நிகழ்கிற. *a., n.* periodical, *(a.)* பருவந் தோறும் நிகழ்கிற; காலகாலமா. *(n.)* பருவ வெளியீடு; நாளிதழ்; பத்திரிகை. *n. abs.* periodicity, பருவ நிகழ்வு; காலகால நிகழ்வு.

**Peripatetic,** *v.* இங்குமங்கும் நடக்கிற; விட்டுவிட்டு நிகழ்கிற.

**Periphery,** *n.* சுற்றளவு; விளிம்பு; சுற்றியுள்ள எல்லைக்கோடு. *a.* peripheral.

**Periphrasis, Periphrase,** *n.* மிகைபடக் கூறல். *a.* peripharastic.

**Periscope,** *n.* நீர்மூழ்கிக் கப்பலி லிருந்து வெளியே பார்க்க உதவும் கருவி; பார்வைக் கூம்பு.

**Perish,** *v.* அழி, மடி; இற; இல்லாமல் அவதியுறு. *a.* perishable. *n.* perishables, அழியக்கூடியன.

**Peristalsis,** *n.* குடல் தசையின் இயக்கம். *a.* peristaltic.

**Peritoneum,** *n.* வயிற்றுறையின் உட்புறத்திலுள்ள உறை.

**Periwig,** *n.* பொய்மயிர்க் குல்லாய்.

**Periwinkle,** *n.* சிப்பி வகை.

**Perjure,** *v.* பொய் ஆணையிடு; பொய்ச்சான்று கூறு; உறுதி மீறு. *n.* perjury, பொய்ச்சான்று; உறுதி மீறகை.

**Perlite,** *n.* கண்ணாடிப்பாறை.

**Permanenet,** *a.* நிலையபான. *n.* permanenece, permanency.

**Permanganate,** *n.* இயைபியல் கலவை வகை. மிகு கண்ணகி'.

**Permeate,** *v.* ஊடுருவிச்செல்; ஊடு பரவு. *a.* permeable, ஊடுருவிச் செல்லக்கூடிய. *n.* permeability.

*per mensem, phr. adv. see per.*

**Permission,** *n.* (permit) இணக்கம்; இணக்க உத்தரவு. *a.* permissible, இணக்கமளிக்கத் தக்க. *a.* permissive, இடங் கொடுக்கிற; இணக்கமளிக்கிற.

**Permit,** *v.* இணக்கமளி; உத்தரவு கொடு; *n.* இணக்க உத்தரவு; இணக்கச் சீட்டு. *n. abs. see* permission.

**Permutation,** *n.* உறுப்பு மாற்றுக் கோவை (ஒரே உருக்களைப் பல்வகையில் மாற்றிச் சேர்த்தல்) *v.* permute.

**Pernicious,** *v.* மிகு கேடு விளைக்கிற.

**Peroration,** *n.* சொற் பொழிவின் முடிவுப்பகுதி. *v.* perorate.

**Peroxide,** *n.* (இயைபியல்) மிகு உயிரகி.

**Perpendicular,** *a.* செங்குத்தான; கடு நிமிர்வான. *n.* செங்குத்துக் கோடு.

**Perpetrate,** *v.* (அழிமதி, கொடுமை) செய்; (குற்றஞ்) செய்; *n.* perpetration.

**Perpetual,** *a.* முடிவில்லாத; ஓயாத; இடைவிடாத; மாறாத; நிலைத்த; ஓயாத. *v.* perpetuate, நீடித்திருக்கச் செய்; மறக்காம லிருக்க ஏற்பாடு செய். *n.* perpetuation. *n. abs.* perpetuity, முடிவற்ற காலம்.

**Perplex,** *v.* குழப்பமடையச் செய்; திகைக்கச் செய். *n.* perplexity, திகைப்பு; மலைவு.

**Perquisite,** *n.* மேல்வரும்படி.

**Persecute,** *v.* துன்பப்படுத்து; தொல்லைப்படுத்து. *n. ag.* persucutor. *n.* persecution.

**Persevere,** *v.* விடாமுயற்சி செய். *n.* perseverance.

**Persist,** *v.* (காரியத்தில்) நிலைத் திரு; பிடிவாதமாயிரு. *n.* persistence, persistency. *a.* persistent.

**Person,** *n.* மனிதன் ; ஆள் உடல்; மேனி; தோற்றம்; பண்புரு; பண்பி; (இலக்கணத்தில் பெயரின்) மூவிடம். *a. see* personable, personal. *n. abs. see* personage. *v. see* personage, personify.

*persona grata, phr. n.* விரும்பத் தகாத ஆள்.

*persuna non grata, phr. n.* விரும்பத் தக்க ஆள்.

**Personable,** *a.* (person) நல்ல தோற்றமுடைய காணத்தக்க.

**Personage,** *n.* (person) ஆள்; (தகுதியுடைய) ஆள்.

**Personal,** *a.* (person) தனிமுறை உரிமையுடைய, ஆளுரிமை யுடைய; உடன் கொண்டு செல்கிற (personal belongings, goods etc); தனக்குரிய; ஒருவரைப் பற்றிய. நற்பண்புடைய. *n.* personal belongings, goods etc); தனக்குரிய; ஒருவரைப் பற்றிய, நற்பண்புடைய. *n.* personality, ஆள்; ஆட்பண்பு தனிமனிதப் பண்பு. *adv.,* personally, தானாக, தனிப்பட்ட ஆள் என்ற நிலையில். *comb. n.* personal allowance, தனிப்படி. (personal assistant, உறுதுணைவர். personal file, தனிமுறைக் கோப்பு. personal effect, தனிஅ முறை உடைமைகள்; தனிமுறை உரிமைகள். personal register, தனிமுறைப் பதிவேடு.

**Personate,** *v.* (இன்னொருவர்) போல் நடி. *n.* personation. *n. ag.* personator.

**Personify,** *v.* பண்பைப் பண்பி யாக உருவகம் செய்; உருவகம் செய். *n.* personification.

**Personnel,** *n.* (ஒரு காரியத்தில் ஈடுபட்ட) ஆட்கள் தொகுதி.

**Perspective,** *n.* தொலைத் தோற்றம்; தொலைநிலை; நோக்கு; நோக்கு வாய்ப்பு; தொலைக்காட்சி ஓவியம். *a.* தொலைக்காட்சிக் குரிய.

**Perspicacious,** *a.* கூரிய அறிவுள்ள. *n.* perspicacity.

**Perspicuous,** *v.* எளிதில் புரிகிற; தெளிவாயிருக்கிற. *n.* perspicuity, perspicuousness.

**Perspire,** *v.* வியர். *n.* perspiration, வியர்வை.

**Persuade,** *v.* இணங்கச் செய்; வசப் படுத்து. *n.* persuasion, இசை விப்பு; கருத்து; கட்சி; மதம்; நம்பிக்கை. *a., n.* persuasive தூண்டுகிற (கருவி). *n.* persuasiveness.

**Pert,** *a.* துடுக்கான, *n.* pertness.

**Pertain,** *v.* பற்றியதாயிரு; தொடர் புடையதாயிரு.

**Pertinacious,** *a.* பிடிவாதமான. *n.* pertinacity.

**Pertinent.** *a.* ஏற்றதாயுள்ள. பொருத்தமான; சார்பான. (x impertinent). *n.* pertinence, pertinency.

**Perturb,** *v.* நிலை தடுமாறச் செய்; குலை. *n.* perturbation.

**Peruke,** *n.* பொய் மயிர்க் குல்லாய்.

**Peruse,** *v.* கவனமாகப் படி; துருவிச்செல். *n.* persusal.

**Pervade,** *v.* முழுவதும் பரவு. *a.* pervasive, (*comb.* all-pervasive, எங்கும் பரவி நிறைந்த).

**Perverse.** a, (pervert) வேண்டு மென்றே தவறான வழியில்

செல்லுகிற. *n.* perversity, perverseness.

**Pervert,** *v.* தவறான வழியில் செலுத்து; புரட்டு. *n.* நெறி கோணியவர். *n. abs.* perversion, *a. see* perverse.

**Pervious,** *a.* ஊடுருவிச் செல்லத் தக்க.

**Peshkush,** *n.* (இந்திய வழக்கு) பண்ணை வரி; பண்ணைக் காணிக்கை.

**Pessimism,** *n.* எதிலும் கெடு தலையே, காணும் மனப் பான்மை; சிணுங்கித் தனம் சோர்வு மனப் பான்மை. *n. pers.* pessimist. *a.* pessimistic.

**Pest,** *n.* பீடை; நச்சொட்டு; பூச்சி பொட்டு; நோய்க் கீடம்; பெருவாரி நோய். *comb. n.* insects and pests, பூச்சி பொட்டுகள்.

**Pester,** *v.* தொந்தரவு செய்; துன் புறுத்து.

**Pestilence,** *n.* பெருவாரி நோய்; கொள்ளை நோய். *a.* pestilent, pestilential.

**Pestle,** *n.* குழவி; சிற்றுலக்கை; குழியம்மிக் குழவி. (*correl,* mortar, சிற்றுரல்).

**Pet,** *n.*1. செல்லமாக வளர்க்கும் குழந்தை அல்லது உயிர். *a.* அன் புக்குரிய. *v.* சீராட்டு. 2. முன் சினம்.

**Petal,** *n.* பூவிதழ். *a.* petalous.

**Peter,** (out) *v.* ஒடுங்கு; மெல்ல ஓய்ந்து போ.

**Petiole,** *n.* இலையின் காம்பு. *a.* petiolate, இலைக்காம்பிலுள்ள.

*pitit,* (ஃபிரஞ்சு வழக்கு) *a.* (*fem.* petite) சிறிய; சிறிய நேர்த்தியான அமைப்புள்ள.

**petition,** *n.* மனு; வேண்டுகோள்; விண்ணப்பம்; கோரிக்கை. *v.* கீழ்ப்படிந்து வேண்டு; மனுச்செய்; கோரு; மன்றாடு. *n. ag.* petitioner, மேல்வழக்கு வாதி; மனுச் செய்பவர்.

**Petrify,** *v.* கல்போலாகு; கல்லாகச் செய்; உணர்ச்சியறச் செய். *n.* petrifaction.

**Petrol,** *n.* கல்லெண்ணெய்; தெளிந்த நில எண்ணெய். *comb. n.* petrol bunk, கல்லெண் ணெய்க் கிடங்கு; கல்லெண் ணெய்ச் சாவடி.

**Petroleum,** *n.* நிலத்திலிருந்து வெட்டி யெடுக்கும் மட்டி மண் ணெண்ணெய்; நில எண்ணெய்.

**Petticoat,** *n.* மாதர் சட்டை.

**Pettifogger,** *n.* இழிவான வழிகளைக் கையாளுவோன் . *n.* pettifoggery.

**Petty,** *a.* சிறிய. (*comb.*) *n.* petty cash, சில்லறைச் செலவுக்கான தொகை; சில்லறைக் கணக்கு.

**Petulant,** *a.* வெடுவெடுப்பான. *n.* petulance.

**Pew,** *n.* கோவிலில் நிலையாக அமைந்திருக்கும் இருக்கை.

**Pewit, peewit,** *n.* ஒருவகைக் குருவி.

**Pewter,** *n.* கலப்பு ஈயம்.

**Phaeton** *n.* நான்கு சக்கரக் குதிரை வண்டி.

**Phalanx,** *n.* (*pl.* -xes, -ges) படை வரிசை; விரல் எலும்பு.

**Phantasm, Phantom,** *n.* கற்பனைத் தோற்றம்; மயக்கப் புனைவு.

**Phantasmagoria,** *n.* மருள் தோற்றுறம்.

**Phantasy,** *n.* (*see* fantasy.)

**Pharisee,** *n.* யூதர் குரு; போலிச் சமயவாதி. *a.* pharisaical.

**Pharmaceutical,** *a.* மருந்து உண்டுபண்ணும்தொழிலுக்குரிய *n.* pharmaceutist. *n. abs.* pharmaceutics.

**Pharmacology,** *n.* மருந்து முறை நூல்; மருந்து செய்வது பற்றிய நூல்.

**Pharmacopoeia,** *n.* மருந்துகளை விவரிக்கும் நூல்

**Pharmacy,** *n.* மருந்துகள் சேகரிக்கும் கலை; மருத்துவச் சாலை.

**Pharos,** *n.* கலங்கரை விளக்கம்.

**Pharyngitis,** *n.* (pharynx) முன் தொண்டை அழற்சி.

**Pharynx,** *n.* முன் தொண்டை. *a.* pharyngal. *s. n. see* pharyngitis.

**Phase,** *n.* தோற்றம்; புருவம்; (திங்களின்) கலைக் கூறு. *a.* phasic.

**Pheasant,** *n.* வான் கோழி.

**Phenol, Phenyl,** *n.* நோய்த் தடை நீர்ம வகைகள்; 'கரியகி நெய்மம்'.

**Phenomenon,** *n.* (*pl.* phenomena) குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி அல்லது ஆள். *a.* pheno menal, தனிச் சிறப்புக்குரிய; காணற்குரிய.

**Phew,** *int.* பூ! தூ!

**Phial,vial,** *n.* சிறு மருந்துப் புட்டி.

**Philander,** *v.* சிறு மருந்துப் புட்டி.

**Philander,** *v.* காதல் விளையாடு; ஊர்சுற்றிக் காதல் புரி.

**Philanthropy,** *n.* மக்கட் பற்று; மக்கட்பணி; அன்புப் பண்பு. *n. pers.* philanthropist, philanthrope. *a.* philanthropic.

**Philipic,** *n.* (வரலாறு; ஃவிலிப் அரசனை எதிர்த்து அதேனிய சொற்பொழிவாளன் டெமாஸ் தெனிஸ் நிகழ்த்திய) எதிர்ப்பு முழக்கம்; முனைத்த தாக்குதல் பேச்சு.

**Philistine,** *n.* கலைப்பற்றற்றவர்; பண்பிலார்.

**Philology,** *n.* மொழி நூல். *n. pers.* philologist, philologer.

**Philomel,** *n.* பறவை வகை; இராக்குயில் (nightingale)

**Philosophy,** *n.* மெய்விளக்கத் துறை. *n. pers.* Philosopher, *a.* philosophic(al). *phr. n.* philosopher's stone, சிந்தாமணி.

**Philtre, Philter,** *n.* காதலைத் தூண்டும் மருந்து.

**Phlegm,** *n.* கபம்; கோழை; எழுச்சி யின்மை. *a.* phlegmatic(al).

**Phlogiston,** *n.* (இடைக்கால அறிவியலாரால் எதிர்மறை எடையுடையதாகக் கற்பிக்கப்

பட்ட) ஒரு கற்பனை இயைபியல் பொருள். *a.* phlogistic.

**Phone,** *n.* (telephone என்பதன் சுருக்கம்) தொலைபேசி.

**Phonetic,** *a.* ஒலிப்பு முறை சார்ந்த. *n.* phonetics, ஒலிமுறை நூல். *n. pers.* phonetician, phonetist.

**Phonic,** *a.* ஒலிக்குரிய.

**Phonogram,** *n.* ஒலிப்பதி வெழுத்து ஒலிக்குறி.

**Phonograph,** *n.* ஒலிபதிப்பிக்கும் கருவி. *n. abs.* phonography.

**Phonology,** *n.* குரல் ஒலிநூல். *n. pers.* phonologist.

**Phony,** *a.* ஏமாற்றான போலியான.

**Phosphate,** *n.* (எருவாக உதவும்) 'தீயகி'; உப்பு வகை.

**Phosphor,** *n.* விடிவெள்ளி.

**Phosphoresce** *v.* இருளில் ஒளிவிடு. *n.* phosphorescence. *a.* phosphorescent.

**Phosphorus,** *n.* தீயகம்; எரியம்.

**Photo,** *n.* (சுருக்கம்; *see* photo graph) புகைப்படம்; நிழற்படம்; சாயற்படம்; நிழற்படப் படிவம்.

**Photograph,** *n.* நிழற்படம். (சுருக்கம்; photo) *n. abs.* photography. *n.* photographer.

**Photometer,** *n.* ஒளித்திறம் அளக்கும் கருவி. *n.* photometry.

**Photosphere,** *n.* ஞாயிற்றைச் சுற்றியுள்ள ஒளி மண்டலம்.

**Photosynthesis,** *n.* (செடி நூல்) ஒளிச் சேர்க்கை; ஒளி மூலமான பொருளிணைப்பு.

**Phrase,** *n.* சொற் றொடர். *v.* சொற் றொடரால் தெரியப்படுத்து; சொற் றொடராக்கிக் கூறு.

**Phraseology,** *n.* சொற்றொடர்ப் போக்கு. சொல்லமைதி; சொல் முறை.

**Phrenetic,** *a.* வெறிப் போக்கான.

**Phrentis,** *n.* மூளைக் காய்ச்சல்; சன்னி.

**Phrenology,** *n.* மண்டை அமைப்பாராய்ச்சி நூல். *n. pers.* phrenologist..

**Phthisis,** *n.* காசம்; எலும்புருக்கி நோய்.

**Phut,** *n. adv.* 'பட்' என்ற ஒலி(யுடன்).

**Physic,** *n.* மருந்து. *v.* மருந்து கொடு. *n. pers. see* physician.

**Physical,** *a.* (physique) உடல் சார்ந்த; பருப்பொருள் சார்ந்த; பருப்பொருளியலான.

**Physician,** *n.* (physic) மருத்துவர்.

**Physicist,** *n. see* physics.

**Physics,** *n.* இயக்க நூல். *n. pers.* Physicist.

**Physiognomy,** *n.* முகத்தோற்றம்; முகக்குறி நூல். *n. pers.* physiognomist.

**Physiography,** *n.* .நில இயற்கை நூல். *n. pers.* physiographer.

**Physiology,** *n.* உடற் கூறு நூல். *n. pers.* physiologist.

**Physique,** *n.* உடலமைப்பு; உடல் வலிமை. *a. see* physical.

**Pia mater,** *n.* மூளையையும் தண்டுவடத்தையும் சூழ்ந்துள்ள மெல்லிய போர்வை.

**Piano, pianotorte,** *n.* இசைப் பெட்டி வகை. *n. pers.* pianist.

**Piazza,** *n.* வெளிமுற்றம்; தாழ் வாரம்.

**Pica,** *n.* சிறிய அச்செழுத்து வகை.

**Pice,** *n.* (பைசா) முக்கால் துட்டு; ஒன்றரைக் காசு.

**Pick,** *v.* பொறுக்கு; (சண்டையைத்) தேடு. *n.* கடப்பாரை போன்ற கருவி; தேர்ந்தெடுத்தது; சிறந்தது.

**Pickaxe,** *n.* இருநாக்கோடரி; மண்கொத்து கருவி.

**Picket,** *n.* முளை; அரண்; காவலர்; மறியல் செய்பவர்; வேலை நிறுத்தத்தை மீறிச் செல்பவர் களைத் தடுப்பவர். *v.* முளையில் பிணை; வேலியால் அரண்செய்; வேலை செய்பவரைத் தடு; மறியல் செய். *n. abs.* picketing, மறியல்.

**Pickle,** *n.* ஊறுகாய்; தொந்தரை; ஊறவை.

**Pick-pocket,** *n.* கத்திரிக் கோல் கள்ளன்; முடிச்சு மாறி.

**Picnic,** *n.* நிலா விருந்து; மனைப்புற விருந்து.

**Pictograph,** *n.* சித்திர எழுத்து; சித்திரம்.

**Pictorial,** *a.* (picture) ஓலியத்துக் குரிய; தெளிவாக விவரிக்கிற.

**Picture,** *n.* படம்; ஓவியம். *v.* படம் வரைந்து காட்டு. *a. see* pictorial, picturesque

**Picturesque,** *a.* (picture) படமாக அமையத் தகுந்த; அழகிய; மனத்தில் பதியத் தகுந்த; கண்கவர் வனப்புடைய.

**Pidgin, pigeon, (English)** *n.* சீனக் கலவை ஆங்கிலம்.

**Pie,** *n.* வேவல்; பிரித்துப் போடாத அச்செழுத்துகள்; தம்பிடிக்காசு.

**Piebald,** *a.* கருமையும் வெண்மை யும் கலந்த.

**Piece,** n சிறு துண்டு; நாணயம்; துப்பாக்கி நாடகப் பகுதி; நூல்; கட்டுரை; நூற்பகுதி. *v.* ஒன்றுசேர்; ஒட்டுப்போடு.

**Piece-goods,** *n.(pl.)* நெசவுத் துணிகள்; துணிமணிகள்; அணி மணி அறுவைகள்.

**Piecemeal,** *adv., a.* சிறிது சிறிதாக; துண்டுகளாக.

**Piece-work,** *n.* கூலி வேலை.

**Pier,** *n.* வளைவு தாங்கி; திண்டு; அலை தாங்கி; கடற் பாலம்; பாலக்கரை. pierglass, பெரிய சுவர்க்கண்ணாடி.

**Pierce,** *v.* துளை; ஊடுருவிச் செல்; மனத்தில் உறுத்து. *n. ag.,* piercer.

**Piet,** *n.* கடவுட் பற்று; பெரியார்ப் பற்று; அடக்க ஒடுக்கம். *a.* pious.

**Pig,** *n.* பன்றி; பெரிய உலோகக் கட்டி. *v.* பன்றிக்குட்டி பெறு; பன்றிபோல் வாழ்.

**Pigeon,** *n.* 1. மாடப்புறா. 2. *see* pidgin, (1) pigeon hearted, மன உரமில்லாத. pigeon-hole புறாக் கூட்டின் வாயில். *(fig.)* தனித்தனி

அறை. *v.* தனிப்பட்ட அறையில் வை.

**Piggish,** *a.* பன்றிபோன்ற; பிடிவாத மான; அழுக்கான; கீழ்த்தரமான *n.* piggery, piggishness.

**Piggy,** *n.* பன்றிக் குட்டி.

**Pigheaded,** *a.* மூடமான.

**Pig-iron,** *a.* வார்ப்பு இரும்பு.

**Pigment,** *n.* வண்ணம்; நிறப் பொருள்.

**Pigmy, Pygmy,** *n.* குள்ளன்; குள்ளமானது. *a.* குள்ளமான.

**Pigsty,** *n.* பன்றிப் பட்டி.

**Pigtail,** *n.* சடைப் பின்னல்.

**Pike,** *n.* வேல்; ஈட்டி; குத்துக் கம்பு; ஒருவகை மீன். *a.* piked, கூர்மையான.

**Pilaster,** *n.* சுவர்கடந்து நிற்கும் கட்டை.

**Pile,** 1. *n.* குவியல்; பெரிய கட்டடத் தொகுதி. *v.* குவித்து வை; அடுக்கி வை 2. *n.* கம்பம்; மண்ணில் அடித்த முளை. *v.* முளையுடன் இணை.

**Piles,** *n.* மூல நோய்.

**Pilfer,** *v.* சிறு அளவில் திருடு.

**Pilgrim,** *n.* திருஉலா வாணர்; திருத்தலஞ் சுற்றுவோர்; புண்ணியப் பயணம் செய்பவர். *n. abs.* pilgrimage.

**Pill,** *n.* மாத்திரை; குளிகை.

**Pillage,** *n.* கொள்ளை; திருட்டு. *v.* கொள்ளையடி; பாழாக்கு.

**Pillar,** *n.* தூண்; ஆதாரம்.

**Pillar box,** *n.* தெரு அஞ்சல் பெட்டி.

**Pillory,** *n.* (குற்றவாளியைப் பிணைத்துத் தண்டிக்கும்) மரச் சட்டம்; குட்டை.

**Pillow,** *n.* தலையணை; திண்டு. *n.* Pillow case, தலையணை உறை.

**Pilot,** *n.* (வானூர்தி) ஓட்டுபவர், (கப்பல்) வலவர்; வழி காட்டி. *v.* (வானூர்தி, கப்பல் முதலியன) செலுத்து; வழிகாட்டு. *comb. n.* pilot file, முதற்படிக் கோப்பு.

**Pimple,** *n.* பரு; கொப்புளம்; முகப்பரு.

**Pin,** *n.* குண்டூசி; முளை. *v.* ஊசி அல்லது முனையால் குத்திப் பிணை. *n.* pincushion, குண்டூசி களைக் குத்தி வைக்கும் சிறு திண்டு.

*pinche-nez*, *n.* வில் அமைப் புடைய மூக்குக் கண்ணாடி.

**Pincers,** *n. (pl.)* இடுக்கி; சாமணம்.

**Pinch,** *n.* கிள்ளுதல்; சிட்டிகை; வறுமை. *v.* கிள்ளு; நசுக்கு; வருத்து; திருடு; சிறைசெய்.

**Pine,** 1.*n.* தேவதாரு மரம், 2. *v.* சோர்வடை; இளைத்துப்போ. (1) *n.* pinery, தேவதாருக் காடு; அன்னாசித் தோட்டம். *a.* piny.

**Pine-apple,** *n.* அன்னாசிப் பழம்; ஈரப்பலா; (கொச்சை) வெடி குண்டு.

**Pinfold,** *n.* மாடுகளை அடைக்கும் தொழுவம்.

**Ping-pong,** *n.* மேடைப் பூம்பந்து (ஆட்டம்)

**Pinhead,** *n.* குண்டூசித் தலை.

**Pinhole,** குண்டூசித் துளை.

**Pinion,** *n.* இறகு; சிறு பற் சக்கரம், *v.* பறவைகளில் இறக்கைகளைச் சேர்த்துக் கட்டு; கைகளைச் சேர்த்துப் பிணை.

**Pink,** *n.* நறுமண மலர்ச்செடி வகை இளஞ்சிவப்பு; (தன்னினத்தில்) சிறந்தது. *a.* இளஞ் சிவப்பான. 2. *v.* (கத்தியால்) குத்து; தொளை யிட்டு அணி செய்.

**Pink-ey,** *n.* கண்வலி மாறு கண்.

**Pinmen,** *n. pl.* சலவையாளர்; வெளுப்பவர்; மண்ணார்; வண்ணார்.

**Pin-money,** *n.* மனைவி கைச் செலவுப் பணம்.

**Pinnance,** *n.* போர்க் கப்பலின் சிறு படகு.

**Pinnacle,** *n.* ஒடுங்கிய கோபுரம்; உச்சி.

**Pinnate,** *a.* இறகு போல் அமைந்த.

**Pint,** *n.* 'காலன்' அளவில் எட்டில் ஒரு பங்கு.

**Pioneer,** *n.* முனைவர்; முற்பட்ட பணியாளர்; புது முயற்சியாளர்; புதுவது புனைவோர். *v.* புதுவது புனை; முனை; முதன் முயற்சி செய்.

**Pious,** *a. see* piety.

**Pip,** *n.* (கோழிகளுக்கு வரும்) நோய்வகை.

**Pipe,** *n.* குழல்; குழல் வடிவ முடைய இசைக் கருவி; புகை பிடிக்கும் குழல்; பறவையின் இசை; தண்ணீர்க் குழாய். *v.* குழலில் இசை. *comb. n.* pipeclay, களிமண் வகை. a pipy. *n. pers.* piper, குழலிசை வாணர்.

**Pipette,** *n.* நீர்ம அளவுக் கருவி; வடியளவை.

**Piping,** *n.* குழாய்கள்; வண்ண மயிர்க் கச்சை.

**Piquant,** *a.* (pique) துடுக்குத் தன் மையான; உணர்ச்சி தூண்டுகின்ற. *n.* piquancy,

**Pique,** *n.* மான உணர்ச்சி. *v.* கோப மூட்டு; துண்டு; மான ஊறு. *a. see* piquant.

**Pirate,** *n.* கடற் கொள்ளைக்காரன். *n. abs.* piracy, கடற் கொள்ளை; எழுத்தாளர் திருட்டு. *a.* piratic(al).

**Piscatology,** *n.* மீன் பிடிக்கும் கலை.

*pisces*, *n.* பங்குனி வீடு; மீன்வீடு.

**Piso culture,** *n.* மீன் வளர்த்தல்.

**Piscivorous** *a.* மீன்களைத் தின்கிற.

**Pish,** *int.* சீ!

**Piss,** *v.* சிறுநீர் கழி.

**Pistil,** *n.* (மலரின்) சூலகம்.

**Pistol,** *n.* கைத் துப்பாக்கி.

**Piston,** *n.* உலக்கைத் தண்டு; உந்து தண்டு.

**Pit,** *n.* குழி; நிலக்கரிச் சுரங்கம். பள்ளம்; நாடகசாலையில் தாழ்ந்த பகுதி; கல்லறை; நரகம். *v.* குழியி லிடு; சண்டை மூட்டு. *comb. n.* pitfall, வீழ்ச்சிக் குழி; படு குழி; எதிர்பாரா இடர். burrow-pit, புதைகுழி; மண்ணெடுக்கும் குழி.

**Pitch,** 1.*n.* கீல். *v.* கீல் பூசு. *a.* pitchy, 2. *v.* தூக்கிஎறி; முளையடி; கூடாரம் அடி; தலைகுப்புற விழு. 3. *n.* எறிதல். 4. (பந்தாட்டம்) முளைகளுக்கு இடையிலுள்ள இடம். 4. குரல் எடுப்பு.

**Pitchblende,** *n.* கரிய பளபளப்பான (யுரேனிய) தாதுப் பொருள்.

**Pitcher,** *n.* சாடி; குடம்.

**Pitchfork,** *n.* கவட்டைக் கோல். *v.* (கவட்டைத் தடியால்) தூக்கி எறி.

**Pitcous,** *a.* இரக்கமுண்டாக்கக் கூடிய.

**Pith,** *n.* சடை; நெட்டி; உயிர் நிலைப்பகுதி. *n.* pithy.

**Pitiable,** *a.* இரங்கத்தக்க.

**Pitiful,** *n.* இளகிய மனமுள்ள; இரங்கத்தக்க; இழிவான.

**Pitiless,** *a.* இரக்கமற்ற; கொடிய.

**Pitman,** *n.* நிலக்கரிச் சுரங்க வேலையாள்; இயந்திரங்களின் இணைப்புச் சட்டம்.

**Pitsaw,** *n.* பெரிய அறுப்பு வாள்.

**Pittance,** *n.* (உணவு, பணம் முதலியவற்றில்) சிறுபகுதி; சிறு திறம்.

**Pituitary,** *a.* கபஞ் சுரக்கிற; நீண்ட எலும்புகளாலமைந்த; கபச் சுரப்பிக்குரிய

**Pity,** *n.* இரக்கம்; இரங்கத்தக்கது. *v.* இரங்கு. *adv.* pityingly.

**Pivot,** *n.* சுழலச்சு. *v.* அச்சு மீது சுழலு. *a.* pivotal.

**Pixy, pixie,** *n.* குறளிப்பேய்.

**Placable,** *a.* எளிதில் அமைகிற; மன்னிக்கும் குணமுடைய. (x implacable). *n.* placability.

**Placard,** *n.* சுவரொட்டி விளம்பரம். *v.* சுவரொட்டி விளம்பரம் ஒட்டு.

**Placate,** *v.* அமைதிப்படுத்து; மனநிறைவுபடுத்து; அமைதி யடையச் செய்; அவாத் தணி. *a.* placatory.

**Place,** *n.* இடம்; இருக்கை; வீடு; ஊர்; பதவி; தொழில். *v.* இடத்தில் வை; அமர்த்து. *n.* placement.

**Placenta,** *n.* கொப்பூழ்க் கொடி; (நஞ்சுக்கொடி).

**Placer,** *n.* புதையலுள்ள இடம்.

**Placid,** *a.* அமைதியான; அமரிக்கையான. *n.* placidity, placidness.

**Plackert,** *n.* மாதர் சட்டை; சட்டைப் பை.

**Plagiarize,-se,** *v.* பிறர் கருத்தை (நூலிலிருந்து திருடு. *n. pers.* plagiarist, கருத்தைத் திருடுபவர். *n.* plagiory, plagiarism.

**Plague,** *n.* கொள்ளை நோய்; துன் பம் கொடுக்கும் ஒருவர் அல்லது ஒன்று. *v.* தொந்தரை செய். *a.* plaguy.

**Plaid,** *n.* கம்பளச் சால்வை; கம்பள மேலாடை. *a.* plaided.

**Plain,** *a.* தெளிவான; எளிதான; கபடமற்ற; சிறப்பற்ற; பொதுப் படையான. *adv.* தெளிவாக. *n.* சமவெளி. *n.* plainness.

**Plain-dealing,** *n.* நேர்மையான தொடர்பு.

**Plaint,** *n.* குற்றச் சாட்டு; புலம்பல்; குறைகூறல்; வழக்கு.

**Plaintiff,** *n.* (வழக்கில்) வாதி; வழக்காடி (x defendant).

**Plaintive,** *v.* துன்பகரமான; இரக்க மான; இரங்கத்தக்க. *n.* plaintive-ness.

**Plait, pleat,** *n.* மடிப்பு; பின்னல். *v.* மடி; முடை; பின்னு.

**Plan,** *n.* திட்டம்; ஏற்பாடு; (கட்டடத் தின்) நிலப்படம். *v.* திட்டம் செய். ஏற்பாடு செய்.

**Planchet,** *n.* (நாணயங்கள் செய்ய உதவும்) உலோகத் தகடு.

**Planchette,** *n.* (இறந்தோரின் ஆவியால் எழுத்துகள் வரைவ தாகச் சொல்லப்பெறும்) பலகை.

**Plane,** *n.* மட்டத்தளம்; இழைப் புளி; மட்டம்; மரவகை; வானூர்தி; *v.* மட்டமாக்கு; இழைப்புளியால் மரத்தைச் சீர்படுத்து; வானூர்தி யில் செல்.

**Planet,** *n.* கோளினம்; கோள்; கோளம். *a.* planetary.

**Planetold,** *n.* சிறுகோள்.

**Plank,** *n.* பலகை; திட்டத்துறை; துறை. *v.* பலகையால் மூடு.

**Plankton,** *n.* கடலில் வாழும் நுட்ப உயிர் வகை.

**Plant,** *v.* செடியினம்; செடி; தொழிற் சாலையிலுள்ள இயந்திரத் தொகுதி. *v.* நடுதல் செய்; நடு; நாட்டு; ஊன்றிவை; நிலைநாட்டு; பயிராக்கு. *comb. n.* tools and plant, நிலையமும் நிலையதள வாடங் களும், avenue planting, சாலை நிறுவுதல்.

**Plantain,** *n.* வாழை; கதலி; அரம்பை.

**Plantation,** *n.*(plant) தோப்பு; தோட்டம்; பண்ணை; குடியேற்றம்; குடியிருப்பு; குடியேறிய மக்கள்.

**Planter,** *n.* (plant) தோட்ட முதலாளி.

**Plantigrade,** *a., n.* காலின் அடித்தளம் முழுதும் பதித்து நடக்கிற (உயிரினம்).

**Plaque,** *n.* சிறு பலகை.

**Plash,** 1. *n.* சிறு குளம்; கட்டை. 2. *v.* நீரைஏற்று; நீரில் குதி. *n.* நீரைத் தட்டுதல்; நீரில் குதித்தல். (1) (2) *a.* plashy.

**Plasma,** *n.* குருதியிலுள்ள நிறமற்ற நீர்மம்.

**Plaster,** *n.* காரை; சாந்து. *v.* காரை பூசு.

**Plastic,** 1. *a.* இளக்கமான; களிமண் போன்ற; உருவாக்கத் தக்க. *n.* செயற்கைக் குழைவுப் பொருள்; குழைமம். 2. *a.* குழை மத்தாலான; குழைமப் பொருள் வழங்குகிற (1) *n. abs.* plasticity. (2) *comb. n.* plastic surgery.

**Plastron,** *n.* மார்புக் கவசம்.

**Plate,** *n.* தட்டு; தாலம்; கவசத்தகடு; பொன் வெள்ளிக் கலங்கள்; (கண்ணாடித்) தகடு. *v.* தகடு பதி; முலாம் பூசு; கவசத்தகடு பொருத்து.

**Plateau,** *n.* (*pl.* plateaux, plateaus). மேட்டுச் சமவெளி; மேட்டு நிலம் ; நிலமேடை.

**Platen,** *n.* (அச்சழுத்தும்) தாள் தகடு.

**Platform,** *n.* பேச்சு மேடை; மேடை. *(fig)* அரசியல் கட்சியின் கொள்கை; கட்சி.

**Plating,** *n.* முலாம் பூசுதல்; தகடு பதித்தல்; முலாம் பூசிய தகடு.

**Platinum,** *n.* உலோக வகை; வெண்மம்.

**Platitude,** *n.* பொது அறிவுச் செய்தி; பொது மெய்ம்மை. *a.* platitudinous. *a., n. pers.* platitudinarian, பொதுஉரை பசப்புவோன். *n. ab.s.* platitudinarianism.

**Platonic,** *a.* பிளேட்டோ கொள்கை பற்றிய; புனைவியலான; கருத்திய லான. (platonic love, friendship etc.)

**Platoor,** *n.* படைப் பகுதி.

**Platter,** *n.* உணவுத் தட்டு.

**Plaudit,** *n.* புகழ்; புகழ் ஆரவாரம்.

**Plausible,** *a.* நம்பக்கூடியதான; சரியாகத் தோன்றுகிற. *n.* plausibility.

**Play,** *v.* விளையாடு; இசைக்கருவி யை இயக்கு செயலாட்சி இயக்கம்; இயங்குதல். *n.* விளையாட்டு ஆட்டம்; நாடகம்; இயக்கம். *a.* playable.

**Playfellow, playmate,** *n.* விளையாட்டுத் தோழன்.

**Playful,** *a.* விளையாட்டுத் தனமுள்ள.

**Playground,** *n.* விளைாட்டு வெளி; விளையாட்டிடம்.

**Playhouse,** *n.* நாடகக் கொட்டகை.

**Playing card,** *n.* விளையாட்டுச் சீட்டு.

**Playlet,** *n.* சிறு நாடகம்.

**Plaything,** *n.* விளையாட்டுப் பொம்மை; பொருள்.

**Playway,** *a.* விளையாட்டு வாயி லான; விளையாட்டு முறையான. (playway education)

**Playwright,** *n.* நாடக நூல் ஆசிரியர்.

**Plea,** *n.* நியாயம்; காரணம்; வழக் காடல்; வழக்கு; கோரிக்கை.

**Plead,** *v.* எடுத்துச் சொல்; வழக்குரை; ஆதரித்துப் பேசு; வற்புறுத்தி வேண்டு. *n. ag., pers.* pleader, வழக்குரைஞர்.

**Pleasant,** *a.* இன்பமான; மகிழ்ச்சி யான. *n.* pleasantness.

**Pleasantry,** *n.* வேடிக்கை; விளையாட்டுப் பேச்சு.

**Please,** *v.* மகிழ்ச்சி யுண்டாக்கு; மனநிறை வுண்டாக்கு. *a.* pleasing.

**Pleasurable,** *a.* மகிழ்ச்சி தருகிற.

**Pleasure,** *n.* இன்பம்; மகிழ்ச்சி; *v.* இன்பமளி.

**Pleat,** *n.* (*see* plait).

**Plebian,** *n.* பொதுமகன்; சிறப் புரிமையற்றவன்; கீழ் மகன். *a.* பொது மக்கள் சார்பான.

**Plebiscite,** *n.* பொது மக்கள் மொழி உரிமை; பொது மக்கள் மொழியுரிமைப்படி அமைந்த சட்டம்.

**Pledge,** *n.* ஈடு; அடகு; வாக்குறுதி. *v.* ஈடு வை; சூள் உரை. *n. pers.* pledgee, அடகு வாங்கி வைத்திருப்பவர். pledger, அடகு கொடுப்பவர்.

**Pleiades,** *n. (pl.)* கார்த்திகை நாள் மீன்; கார்த்திகை மீன் குழு.

**Pleistocene,** a.*n.*, (மண்ணூல்) அணிமைப் புத்தூழி.

**Plenary,** *a.* நிறைந்த; முழுமை யான; (கூட்டம்) குழுக் கூட்ட மல்லாத.

**Plenipotentiary,** *a.* முழு உரிமை வாய்ந்த. *n.* முழு உரிமை பெற்ற அரசியல் தூதர்.

**Plenitude,** *n.* நிறைவு.

**Plenty,** *n.* ஏராளம்; போதுமான (நிறைந்த) அளவு. *a.* plenteous, plentiful.

**Plenum,** *n.* (*pl.* plena plenums). நிறைந்த இடம்; நிறைந்த அவை.

**Pleonasm,** *n.* ஒருபொருள் பன் மொழியடுக்கு. *a.* pleonastic.

**Plethora,** *n.* குருதியின் மிகுசிவப்பு; மிகைபாடு; ஏராளம். *a.* plethoric.

**Pleura,** *n.* நுரையீரலை மூடி யிருக்கும் சவ்வு. *n.* pleural.

**Pleurisy,** *n.* நுரையீரல் சவ்வின் நோய்.

**Plexus,** *n.* நரம்பு வலைப் பின்னல்.

**Pliable, pliant** *a.* வளைத் தக்க; நெகிழ்வுடைய; இணக்கமுடைய; பணியத் தக்க. *n.* pliancy, pliability.

**Plight,** 1. *v.* வாக்குக்கொடு; 2.*v.* அடகுவை. *n.* ஈடு 3. *n.* நிலைமை; இடுக்கண் நிலை.

**Plinth,** *n.* தூணின் பீடம்.

**Plod,** *v.* ஓயாது உழை; பளுவுடன் நட; துன்பப்பட்டு வேலை செய். *n. pers.* plodder. *adv.* ploddingly. மெல்ல; தளர்ந்து; தள்ளாடி.

**Plop.** *n.* 'தொப்' என்னும் ஒலி. *v.* தொப் என்று (நீரில்) விழு.

**Plosion,** *n.* வெடிப்பொரில; வல்லெழுத்தொலி. *a.*, *n* வெடிப் பெழுத்து; வல்லெழுத்து.

**Plot,** *n.* சிறு நிலம்; பாத்தி; கதையின் நிகழ்ச்சி; சதித் திட்டம். *v.* திட்டம் செய்; சதி செய். *n. pers.* plotter.

**Plough,** *n.* (ப்ளோ) கலப்பை; உழுபடை. *v.* (ப்ளௌ) உழு. *comb. n.* ploughshare, கலப்பை யின் கொழு. *phr. n.* the plough, வட மீன் குழு.

**Pluck,** *v.* பறி; சட்டென இழு. கொய். *n.* இழுத்தல்; பறித்தல்; முயற்சி; முனைப்பு. *a.* plucky, முயற்சி முனைப்புள்ள. *n.* pluckiness.

**Plug,** *n.* அடைப்பு; முளை. *v.* அடைப்புப் போடு.

**Plum,** *n.* பழவகை; உலர்ந்த, கொடி முந்திரிப்பழம்.

**Plumage,** *n.* இறகுத் தொகுதி.

**Plumb,** *n.* எடைநூல் குண்டு. *a.* செங்குத்தான. *v.* ஆழங்கண்டு பிடி.

**Plumbage,** *n.* (எழுதுகோலுக் குரிய) கரிவங்கம்; காரீய வகை.

**Plumber,** *n.* ஈயவேலைக் காரன்; நீர்க் குழாயைச் சரிப்படுத்துபவன். *n.abs.* plumbery, plumbing.

**Plumbum,** *n.* காரீயம்.

**Plume,** *n.* இறகு; சிகையணி இறகு; தலைச்சூட்டு. *v.* இறகினால் அணி செய்; அழகுசெய். *a.* plumy.

**Plummet,** *n.* தூக்கு நூல் குண்டு; ஆழம் பார்க்கும் குண்டு.

**Plump,** *a.* கொழுத்த; உருண்டு திரண்ட. *v.* கொழு; பருமனாகு. 2. *n.* சட்டென விழு; முழுகு; ஒருவருக்கே மொழியுரிமை கொண்டு கொட்டு. *adv.* சட்டென செங்குத்தாக; வெளிப்படையாக. (1) *n.* plumpness. *a.* plumpy.

**Plumule,** *n.* சிறு இறகு; (விதை யின்) முளைக்குருத்து.

**Plunder,** *v.* கொள்ளையிடு; பறி. *n.* கொள்ளைப் பொருள்.

**Plunge,** *v.* (நீரில் திடீரென) முழுகு; அமிழ்த்து; நுழை. *a.* முழுக்கு; திடீரென நீரில் விழுதல்; பாய்தல்.

**Pluperfect,** *a., n.* (இலக்) இறந்த காலத்திலேயே செய்துமுடிந்த; முடிவிறந்த கால (வினை). (= past perfect)

**Plural,** *a.* பல; ஒன்றுக்கு மேற்பட்ட. *a., n* (இலக்) பன்மை *n. abs.* pluralism, பன்மைக் கொள்கை; பல பதவி தாங்கும் முறைமை. plurality, பன்மை நிலை.

**Plus,** *n.* கூட்டற் குறி (+). *a.* மிகுதிப்படியான. *conj.* உடன்; கூட.

**Plus fours,** *n.* அகன்ற காற் சட்டை.

**Plush,** *n.* துணி வகை.

**Plutarchy, plutocracy,** *n.* செல்வராட்சி.

**Pluvial, pluvious,** *a.* மழைக் குரிய; மழையாலான.

**Pluviometer,** *n.* மழையளக்கும் கருவி; மழைமானி.

**Ply,** *v.* உழை; (வாதங்கள்)வழங்கு; ஈடுபடுத்து (தொழில்) செயற் படுத்து; (வழி) செல்; (கேள்வி) கேள்; வழக்கமாகச் செலுத்து. *n.* மடிப்பு; புரி. *(comb). n.* plywood, ஒட்டுப்பலகை.

**Pneumatic,** *a.* காற்றுக்குரிய; காற்றழுத்தத்தால் வேலை செய்கிற; காற்றடைத்த. *n.* காற்றடைத்த சக்கரம் *(pl.)* காற்றாய்வு நூல்.

**Pneumatology,** *n.* காற்று மண்டல வளிகள் பற்றிய நூல்; ஆவி களைப் பற்றிய நூல்.

**Pneumonia,** *n.* குலைக்காய்ச்சல்; உயிர்ப்புப் பை நோய் *a.* pneumonic.

**Poach,** *v.* பிறர் வேட்டைக்காடு புகுந்து வேட்டையாடு வேட்டை யுரிமை வவ்வு; திருட்டு வேட்டை கொள். *n. pers.* poacher.

**Pock,** *n.* (*pl.* pox, pocks), அம்மைபோன்ற நோயால் வரும் கொப்புளம். *n.* pockmark, pock-pit, அம்மைத் தழும்பு. *n.* pocky.

**Pocket,** *n.* பை; சட்டைப் பை; (போர்த்துறை, அரசியல்) துண்டு பட்ட பகுதி; 'சூழகம்'; தனி யுரிமையிடம்; (pocket borough) தனிமனிதர் மொழி யுரிமை ஆதிக்கத்திலுள்ள தொகுதி; (தனியாள் தொகுதி) *v.* பையில் போடு; திருட்டுத் தனமாக எடுத்துக்கொள்.

**Pod,** *n.* நெற்று; விதைகள் கொண்ட உறை.

**Podgy,** *a.* குட்டையாயும் தடித்து முள்ள. *n.* podginess.

*podu* ***c*ultivation** *n.* (இந்திய வழக்கு) பொதுப் பயிர்த்துறை.

**Poem,** *n. com.* செய்யுள்; பாடல்.

**Poesy,** *n.* கவிதை; பாடல்கள்; கவிதைமொழி; பாட்டு நடை.

**Poet,** *n.* (*fem.* poetess), கவிஞன் *a.* poetic, poetical.

**Poetaster,** *n.* புன்கவி.

**Poetics,** *n.* யாப்பிலக்கணம்.

**Poetize, -se,** *v.* செய்யுளாக்கு; கவிபாடு.

**Poet laureate,** *n.* அவைப் புலவர்; அரசவைக் கவிஞர்.

**Poetry,** *n. abs. coll.* கவிதை; பாட்டு; செய்யுள்.

**Poignant,** *a.* கூர்மையான; அறுக்கிற; வருத்தம் தருகிற. *n.* poignancy.

**Point,** *n.* முளை; புள்ளி; செய்தி; முக்கிய செய்தி; நோக்கம்; முற்றுப் புள்ளி; நிலக்கோடி முனை; (point of view நோக்குமுனை) *(pl.)* points, குணங்கள்; இருப்புப் பாதைகளில் பிரியுமிடங்கள். *v.* குறி பார்; கூராக்கு; தெளிவாகக் குறிப்பிடு; சுட்டு. (*comb.*) *n.* points of the compass, திசை காட்டும் கருவிக் குறிகள்; திசை; திசைமூலங்கள்.

**Point-blank,** *a. adv.* நேரடியாக; மொட்டையான.

**Pointer,** *n.* (மணிப்பொறி) சுட்டிக் காட்டும் முள்; வேட்டை நாய்.

**Pointless,** *a.* பொருளற்ற.

**Pointsman,** *n.* இருப்புப் பாதை பிரியுமிடத்தில் இணைப்புச் செய்பவன் .

**Poise,** *v.* சமநிலையில் நிறுத்து. *n.* சமநிலை; தயக்கநிலை.

**Poison,** *n.* நஞ்சு. *v.* நஞ்சிடு; சீர்கெடு. *n.* poinsonous.

**Poison gas,** *n.* (போர்த்துறை) நச்சுவளி.

**Poke,** 1. *n.* கோணிப்பை, 2. *n.* நுழை; தலையிடு. *n.* நுழைத்தல்; தலையீடு.

**Poker,** *n.* நெருப்பைக் கிளறும் இரும்புச் சட்டம்; அகப்பைக் கோல்; சீட்டாட்ட வகை.

**Poky,** *a.* மடத்தனமான; நெருக்கடி யான; இழிவான.

**Polar,** *a.* (pole) நிலமுனைக் கோடிக்குரிய, polar lights, முனைக்கோடிகளின் அருகே காணப்படும் வான் ஒளி; துருவ ஒளி. polar-region துருவப் பகுதி. *n. see* polarity.

**Polaris,** *n.* வட மீன் .

**Polarity,** *n.* (polar) முனைக்கோடிகளையுடைய நிலை; காந்தத்தில் முனைக்கோடிகளின் அமைப்பு. *v.* polarize, -se.

**Pole,** 1. *n.* சுழலச்சு; நிலவுலகின் முனைக்கோடி; துருவம் காந்த முனைக் கோடி; மின்சார முனை. (pole-star, வட மீன்.) 2. *n.* நீண்ட கழி; கொடி. 3. *n.* போலந்து நாட்டார். (1) *a. see* polar etc.

**Polemic, polemical,** *a.* வாதத்தில் விருப்புள்ள; வாதத்துக்குரிய. *n.* polemics, வாத நூல். *n. pers.* polemicist, polemist.

**Police,** *n.* காவல் துறை; காவலாளர்; காவல் துறையினர். *a.* காவல் துறை சார்ந்த அமைதி காவல் சார்ந்த.

**Policy,** 1. *n.* கொள்கைமுறை; கோட்பாடு; அரசியல் சூழ்ச்சி நயம்; திறநயம். 2. *n.* (காப்பகம்) காப்புறுதி. (2) *com. n. pers.* policy holder, காப்புறுதியாளர்.

**Polish,** (பாலிஷ்) *v.* மெருகிடு; பளபளப்பாக்கு. *n.* பளபளப்பு; நாகரிக நடத்தை; மெருகு கொடுக்கும் பொருள். 2. *a., n.* (போலிஷ்) போலந்துக்குரிய (ஆள்கள், மொழி).

**Polite,** *a.* வணக்க இணக்கமான; நடைமுறையுள்ள *n.* politeness.

**Politic,** *a.* நாட்டாட்சிக்குரிய; திறநயமுடைய; காரியத் திறமையுள்ள.

**Politics,** *n.* அரசியல்; அரசியல் நூல். *a.* political, அரசியல் சார்ந்த; அரசியல் கட்சி சார்ந்த political economy, நாட்டுப் பொருளியல். political science, அரசியல் நூல். *n. pers.* politician, அரசியல்வாதி; அரசியல் வல்லுநர்.

**Polity,** *n.* அரசியல்; செயல் ஆட்சி முறை; அரசியலுக்குட்பட்ட மக்கள்.

**Poll,** 1. *n.* கிளியின் செல்லப் பெயர். 2. *n.* தலை (poll- tax, தலைவரி). 3. *(gen. pl.)* தேர்தல் நிலையம். *v.* 1. உச்சியை வெட்டு; கொம்பை அல்லது மயிரைக் கத்தரி 2. எண்ணிக்கையைக் கணக்கிடு. 3. தேர்வு; மொழிகொடு; மொழி பெறு; மொழியெடு. *comb. n.* polling station, மொழி யெடுப்பு நிலையம்; தேர்தல் சாவடி.

**Pollen,** *n.* பூந்துகள்; பூந்தாது; மகரந்தம். *v.* pollinate, மகரந்தக் கலப்பு ஏற்படச் செய். *n.* pollination.

**Polling-booth,** *n.* தேர்தல் பதிவு செய்யுமிடம்.

**Pollute,** *v.* பழிப்பாக்கு; தீட்டுச்செய். *n.* pollution.

**Polo,** *n.* குதிரை மேலமர்ந்து ஆடும் பந்தாட்டம்; 'செண்டாட்டம்'.

**Polonium,** *n.* உலோகவகை.

**Poltroon,** *n.* கோழை. *n.* poltroonery.

**Polyandry,** *n.* பல கணவர் மணம் (ஒரே சமயத்தில்) பல ஆண்களை மணத்தல். *a.* polyandrous.

**Polyanthus,** *n.* மலர்வகை.

**Polybasic,** *a.* பல இயைபு மூலமுடைய.

**Polygamy,** *n.* (ஒரே சமயத்தில்) பல மனைவியரை அல்லது கணவரை யுடைய தன்மை. *a.* polygamous, *n. pers.* polygamist.

**Polygot,** *a.* பலமொழி பேசுகிற; பல மொழிகளில் எழுதப்பட்ட. *n.* பன்மொழிப் புலவர்.

**Polygon,** *n.* நான்குக்கு மேற்பட்ட கோணங்களையுடைய வடிவம். *a.* polygonal.

**Polyhedron,** *n.* பலபக்கங்களை யுடைய கனவடிவம்; பல்புறத் திண்மம்.

**Polysyllable,** *n.* பல அசை களுள்ள சொல். *a.* polysyllabic.

**Polytechnic,** *a.* பல கலை வளர்ப்பதற்குரிய; பல்கலை மூல முறையான. *n.* பல்துறைப் பயிற்சி நிலையம்.

**Polytheism,** *n.* பல தெய்வ வணக்கம். *n. pers.* polytheist *a.* polytheistic.

**Pomade,** *n.* நறுமணக்களிம்பு.

**Pomato,** *n.* தக்காளி உருளைக் கிழங்கு ஒட்டுச்செடி.

**Pomegranate,** *n.* மாதுளை; மாதுளங்கனி.

**Pomiculture,** *n.* பழங்களைப் பயிரிடும் கலை.

**Pommel,** *n.* வாளின் கைப்பிடி; குமிழ். *v.* அடி; மோது.

**Pomp** *n.* பகட்டு. *a.* pompous, பகட்டான தற்பெருமையான. *n.* pomposity, pompousness.

**Pom-pom,** *n.* துப்பாக்கி வகை.

**Pompon,** *n.* அழகுக் குஞ்சம்.

**Pond,** *n.* குளம்; குட்டை. அணை. *n. abs.* pondage, குளநீரளவு.

**Ponder,** *v.* நன்கு ஆராய்; ஆழ்ந்து சிந்தி.

**Ponderable,** *a.* நிறுத்து மதிப் பிடக் கூடிய.

**Ponderous,** *a.* கனமான; பளு மிகுந்த, *n.* ponderousness, ponderosity.

**Poniard,** *n.* குத்துவாள். *v.* குத்துவாளால் குத்து.

**Pontiff,** *n.* தலைமை மதகுரு; திருத்தந்தை; சமய முழுமுதல் தலைவர்; மடத்தலைவர். *a.* pontifical. *n. (pl.)* pontificals. மடத்தலைவருக்குரிய விருதுகள்.

**Pontoon,** *n.* பரிசல்; ஓடம்; படகுப்பாலம். *n.* pontooner, படகுப்பாலம் அமைப்பவர்.

**Pony,** *n.* மட்டக்குதிரை.

**Poodle,** *n.* சிறுநாய் வகை.

**Pooka,** *n.* குறளிப் பேய்.

**Pooh,** *int.* சீ! கேவலம்! *v.* pooh, pooh-pooh, புறக்கணிப்பாகக் கருத்து.

**Pool,** 1. *n.* மடு; சிறுகுட்டை. 2. *n.* சேமிப்புத் தொகுதி; பந்தயத் தொகைகளின் சேர்க்கை. *v.* பொது நீதியில் சேர்.

**Poop,** *n.* கப்பலின் பின் பகுதி.

**Poor,** *a.* சிறுமைப்பட்ட ஏழ்மையான; மதிப்பற்ற,, இரங்கத்தக்க; எளிய; கீழான; குறைந்த. *n. see* poverty. *comb. n.* poor house, ஏழையர் விடுதி; ஏழையர் இல்லம்.

**Pope,** *n.* கத்தோலிக்க மதத்தினரின் தலைமைக் குரு; திருத்தந்தை; சமய உலக முதல்வர். *n. abs.* Popedom, திருத்தந்தையாட்சி; திருத்தந்தைமுறை. *n. abs.* popery, திருத்தந்தை முறைமை; கத்தோலிக்கநெறி. *a.* popish *conn. see* papal, papist etc.

**Popgun,** *n.* விளையாட்டுத் துப்பாக்கி.

**Popinjay,** *n.* கிளி; அம்பு; கிளி போல் அமைந்த இலக்கு பகட்டன் .

**Poplar,** *n.* மரவகை.

**Poplin,** *n.* (நுண்மயிர் கலந்து நெசவு செய்த) பட்டு வகை; அரைப்பட்டு.

**Poppy,** *n.* கசகசாச் செடி; நல்ல சிவப்பு நிறம்.

**Populace,** *n.* மன்மக்கள்; பொது மக்கள்; மக்கள் திரள்.

**Popular,** *a.* மக்களால் விரும்பப் படுகிற; பொது விருப்பான; மலிவான; வழக்கத்திலுள்ள; பெரு வழக்கான. *n.* popularity, புகழ்; பெரு வழக்கு; மக்கட்செல்வாக்கு. *v.* popularize,-se, மக்களிடையே பரவச் செய்; பெரு வழக்காக்கு பொது வழக்காக்கு; எளிதில் புரியும்படி செய்.

**Populate,** *v.* வாழச் செய்.

**Population,** *n.* மக்கள் தொகை; குடி வாழ்பவர்; குடிமக்கள்; நாடு வாழ் மக்கள்.

**Populous,** *a.* மக்கள் நிரம்பியுள்ள; மக்கள் நெருக்கமுள்ள. *n.* populousness.

**Poramboke,** *n.* (இந்திய வழக்கு) புறம்போக்கு மனை; பொதுவுரிமை நிலம்.

**Porcelain,** *n.* பீங்கான்; மங்கு; சீன மட்பாண்டம்.

**Porch,** *n.* தெருவாயில்; படிவாயில்; கட்டட முகப்பு; முக மண்டபம்.

**Porcupine,** *n.* முள்ளம் பன்றி.

**Pore,** 1. *n.* நுண்தொளை; வேர்வைக் கால். 2. *v.* உற்றுப் பார்; கருத்துடன் படி. (1) *a.* porous, நுண்தொளை நிறைந்த. *n.* porosity, porousness, நுண்தொளையுடைமை.

**Pork,** *n.* பன்றி இறைச்சி.

**Porker,** *n.* இறைச்சிக்காகக் கொழுக்க வைத்த பன்றி.

**Porkling,** *n.* பன்றிக் குட்டி.

**Porky,** *a.* பன்றிகளுக்குரிய; கொழுத்த.

**Porphyry,** *n.* அழகிய சிவப்பு அல்லது வெள்ளை நிறப்பாறை.

**Porpoise,** *n.* திமிங்கிலம் போன்ற சிறிய கடல் உயிரின வகை.

**Porridge,** *n.* கூழ்.

**Porringer**, *n.* சிறுவட்டில்.

**Port,** 1.*n.* இன் தேறல் வகை (போர்ச்சுகல் நாட்டுத் தேறல்). 2. *n.* துறைமுகம்; துறைமுகப்

பட்டணம்; பட்டினம். 3. *n.* வாயில்; கப்பலின் பக்கம். (port - hole, கப்பல் பக்கத்தொளை); காற்றுப் புழை. 4. *n.* நடக்கும் தோரணை; நடத்தை. (2) *comb. n.* port trust, port trust board, துறைமுக ஆட்சிக் கழகம்; துறைமுகப் பொறுப்பாளர் குழு; துறைமுகப்பொறுப்பாட்சி; துறை முகப் பொறுப்பாண்மை.

**Portable,** *a.* எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய.

**Portage, porterage,** *n.* (porter) சுமை கூலி; சுமத்தல்.

**Portal,** 1. *a.* கல்லீரலின் குறுக்குப் பிளவுக்குரிய; கல்லீரல் சார்ந்த. 2. *n.* வாயில்.

**Portcullis,** *n.* கோட்டை வாயிலடைக்கும் பாரிய கதவுச் சட்டம்.

**Potend,** *v.* (தீமை) முன் அறிகுறி காட்டு; எச்சரிக்கை செய். *n.* portent. *a.* portentous.

**Porter,** *n.* (*fem.* Portres), வாயில் காவலன் சுமை கூலியாள். *n. see* portage.

**Portfolio,** *n.* பை; (அமைச்சர்) தொழில் அரங்கம்.

**Portico,** *n.* வாயில் முகப்பு; தலை வாயில்; நுழைமாடம்.

**Portion,** *n.* பங்கு; மாதர் திரு. *v.* பங்கு பிரி.

**Portly,** *a.* வீறார்ந்த; பருத்த.

**Portmanteau,** *n.* பயணப்பெட்டி; மூட்டைக் கட்டு.

**Portrait,** *v.* உருவப் படம்; ஓவியம்; வருணனை; சரி உருவம். *s. n.* portraiture, உருவப்படக்கலை.

**Portray,** *v.* உருவப்பட மெழுது; வர்ணனையாக எழுது. *n. vbl.* portrayal, *n. com. see* portrait.

**Portuguese,** *a., n.* போர்ச்சுகல் (portugal) நாட்டுக்குரிய(வர்); போர்ச்சுகீசிய மொழி.

**Pose,** 1.*v.* தோரணையுடன் நில்; நடி. *n.* நிற்கும் நிலை; தோரணை. 2. *v.* திகைக்கும் படி வினவு. (2) *n.* poser, திகைக்கச் செய்யும் வினா.

**Posit,** *v.* அமை; கூறு.

**Position,** *n.* நிலைமை இடம்; பதவி. *v.* இடத்தில் வை; இடத்தை உறுதி செய். *a.* positional.

**Positive,** 1. *a.* உறுதியான; தெளிவான; ஐயமில்லாத. 2. நேர்நிலையான (x negative.) 3. (நிழற்படம்) மூல உருவத்தைப் போன்ற படம். (x negative.) (2) *n.* positiveness, உறுதி நிலை. *n.* positivism, நேர் காட்சி வாதம்.

**Posse,** *n.* (பாஸி), படைவீரர் அல்லது காவலர் தொகுதி

**Possess,** *v.* உடைமையாக வைத் திரு; பெற்றுநுகர்; (பேய்) பிடித்துக் கொள். *n. ag.* possassor, *n. abs.* possession, உடைமை; உடைமைப் பொருள்; (பேய்) பிடித்தல். *a.* possessive, உடைமைக்குரிய; தன்னுடைமையான. *n.* ஆறாம் வேற்றுமை.

**Possibility,** *n.* (possible) நிகழக்கூடியது; கூடியது.

**Possible,** *a.* நிகழக்கூடிய; இயற் கைக்கு மாறல்லாத. *adv.* possibly, ஒருவேளை. *n. see* possibility.

**Post,** *n.* 1. தூண்; கம்பம்; 2. தங்கு மிடம்; நிலை; அஞ்சல். 3. உயர்பணி நிலை. *v.* 1. விளம்பரம் ஒட்டு; பதிவு செய். 2. அஞ்சலில் போடு. 3. பணியிலமர்த்து. 4. தெரிவி. 5. விரைந்து பயணம் செய். *adv.* வேகமாக. (முன் இணைப்பு விகுதி) பின்; பிற்பட்ட; பிற்பாடு.

**Postage,** *n.* அஞ்சல் கட்டணம்.

**Postal,** *a.* அஞ்சல் சார்பான.

**Postboy,** *n.* அஞ்சல் சுமந்து செல்லும் பையன்; குதிரை ஓட்டும் பையன் .

**Postchaise,** *n.* அஞ்சல் வண்டி.

**Postdate,** *v.* பின் தள்ளிக் காலம் குறி. (x antedate).

**Post-diluvian,** *a.* ஊழி வெள்ளத் திற்குப் பின்னாள். (x ante diluvian).

**Poster,** *n.* சுவரொட்டி விளம்பரம்.

**Posterior,** *a.* பின் வருகிற; பின் பக்கத்து. *n.* பின் பகுதி. *n. abs.* posteriority.

**Posterity,** *n.* பின்னோர்; பின் மரபு.

**Postern,** *n.* பின் புறக் கதவு; மறை கதவு.

**Postfix,** *n.* விகுதி. *v.* விகுதி சேர்; பிற்சேர்க்கை இணை.

**Post-glacial,** *a.* பனிக்கட்டி ஊழிக்குப் பின்னான.

**Post-graduate,** *a., n.* பட்டத் திற்கு மேலான படிப்பில் ஈடுபடு கிற(வர்).

**Post-haste,** *adv.* படு விரைவான.

**Posthumous,** *a.* (குழந்தை) தந்தை மறைவுக்குப்பின் பிறந்த; (நூல்) ஆசிரியரின் மறைவுக்குப் பின் வெளியிடப்பட்ட.

**Positilion,** *n.* (குதிரைமீது அமர்ந்து ஓட்டும்) வண்டி யோட்டி.

**Postman,** *n.* அஞ்சல்காரர்.

**Postmark,** *n.* அஞ்சல் முத்திரை.

**Postmaster,** *n.* அஞ்சல் நிலையத் தலைவர்.

*postmeridiem, adv.* (சுருக்கம்; p.m.) நண்பகலுக்குப் பிறகு.

*postmortem, adv.* இறந்த பிறகு. *a., n.* post-mortem, இறந்த பிறகு செய்யும் (ஆய்வு).

**Post-office,** *n.* அஞ்சல் நிலையம்.

**Postpone,** *v.* தள்ளி வை; காலங் கடத்து; கடத்திப் போடு; ஒத்திப் போடு; தவணை சொல். *n,* post-ponement.

**Postposition,** *n.* (பின் சேர்க்கை) உருபு.

**Postscript,** *n.* (சுருக்கம்; P.S.) (கடிதம் அல்லது புத்தகத்தின்) பிற் சேர்க்கை)

**Postulate,** *n.* எண்பிக்காமல் உண்மையெனக் கருதப்படுவது; முற்கோள். *v.* தெளிவு நாடாது உண்மையெனக் கொள். வற்புறுத்தி வேண்டு. *n.* postulation. *n. pers.* postulator.

**Posture,** *n.* நிற்கும் நிலை; தோரணை மன உணர்ச்சி நிலை. *v.* ஒரு தோரணையாக நில்; நடி. *a.* postural.

**Postwar,** *a.* போர்ப் பிற்காலத்துக் குரிய.

**Posy,** *n.* மலர்ச் செண்டு; சிறு செய்யுள்.

**Pot,** *n.* பானை; பாண்டம்; (செடி வளரும்) தொட்டி. *v.* பானையில் சேமித்துவை. *n.* pothouse சாராயக் கடை. *n.* pot-luck, பானை யிலுள்ள உணவு.

**Potable,** *a.* குடிப்பதற்குத் தகுந்த.

**Potash,** *n.* உப்பு வகை; 'வெடிய' உப்பு.

**Potassium,** *n.* 'வெடியம்' எனும் உலோகம்.

**Potation,** *n.* குடித்தல்; குடிபொருள்.

**Potato,** *n.* (*pl.* potatoes) உருளைக் கிழங்கு.

**Potbelly,** *n.* பெருவயிறு.

**Potboiler,** *n.* பணத்திற்காகவே இயற்றப்பட்ட கலை வேலைப் பாடு.

**Potboy,** *n.* சாப்பாட்டு விடுதியின் சிற்றாள்.

**Potent,** *a.* சக்தி வாய்ந்த; செல்வாக்குள்ள. *n.* potency.

**Potentate,** *n.* அரசன்; பெருமகன்.

**Potential,** *a.* (x kinetic) உள் ளாற்றலுடைய; இயல் தகுதி சார்ந்த மறை தன்மையுடைய; புதை வியல் புடைய; இனி வெளிப்படை யாகத் தெரியக்கூடிய; என்றேனும் வெளிப்படக்கூடும் பண்புடைய; கருவியல்பான; உள்ளார்ந்த தன் மையுடைய. *n.* மின் அழுத்தம் உள்ளியல்பு; கருவியல்பு; இயல் தகுதி. *n.* potentiality, சக்தி யுடைய தன்மை; உள்ளார்ந்த இயல்பு; கருவியல்பு.

**Pother,** *n.* குழப்பம். *v.* தொந்தரை செய்; குழப்பு.

**Potion,** *n.* குடிநீர்; கியாழம்.

**Potter,** 1. *n.* குயவன். *n.* pottery, குயவன் தொழில்; சட்டி பானைகள். 2. *v.* சிறிதைப் பெரிதாகக் கருதி ஈடுபடு; சுற்றித்திரி. (2) *n.* potterer.

**Potty,** *a.* சிறுதிறமான; கிறுக்கான.

**Pouch,** *n.* பை. *v.* பையில் போடு.

**Poulterer,** *n.* கோழி விற்பவர்.

**Poultice,** *n.* வீக்கத்திற்குக் கட்டுகிற மாவு.

**Poultry,** *n.* கோழிப் பண்ணை; கோழித் தொகுதி.

**Pounce,** *v.* திடீரெனப் பாய்ந்து பிடி.

**Pound,** 1.*n.* கல் எடையளவு (இராத்தல்); ஆங்கிலநாட்டுப் பொன் காசு. 2. *n.* (ஆடு மாடு களை) அடைக்கும் பட்டி; அடைப்பட்டி; தொண்டுப் பட்டி. *v.* பட்டியில் அடை. 3. *v.* பொடியாக்கு; திரும்பத் திரும்ப அடி. (1) *n. abs.* poundage, கல் எடை வரி வீதம். (3) *n. ag. impers.* pounder, உலக்கை; குழவி.

**Pound-foolish,** (*see* penny wise).

**Pour,** *v.* ஊற்று; கொட்டு வழிந் தோடு; ஊற்று; (சொல்மாரி) பொழி.

*pourparler, n.* உடம்படிக்கை செய்து கொள்ளுமுன் பேசும் சிறு பேச்சு.

**Pout,** *v.* உதட்டைப் பிதுக்கு; வெறுப்பைக் காட்டு; *n.* வெறுப்பு; சிடுசிடுப்பு.

**Poverty,** *n.* (poor) வறுமை; ஏழ்மை; நல்குரவு; மிடிமை.

**Powder,** *n.* பொடி; தூள்; சுண்ணம்; மாவு வெடி மருந்து; *v.* பொடி யாக்கு; பொடி தூவு. *a.* powdery பொடியான; பொடியாக்கு; பொடி தூவு. *a.* powdery. பொடியான; பொடியாகக் கூடிய. *comb. n.* face powder, முகப் பொடி; நறுஞ்சுண்ணம். bleaching powder, சலவைத் தூள்; வண்ணான் காரம்.

**Powder-puff,** *n.* முகப்பொடி பூச உதவும் மென்மையான இழைக் குஞ்சம்.

**Power,** *n.* சக்தி; வலன்; ஆற்றல்; திறமை; உரிமை; வலிமை வாய்ந்த நாடு; எண்ணின் பெருக்க அடுக்கு; (எண்ணின்) விசை; *a.* powerful. *comb. n.* house power, புரவி யாற்றல்; பரிவலன். candle power, வற்றி ஆற்றல் திரியாற்றல். steam power, நீராவி யாற்றல் water power, நீராற்றல். electric power, மின் ஆற்றல்.

**Power-house,** *n.* (மின் வலி) உற்பத்தி நிலையம்.

**Power-loom,** *n.* இயந்திரத் தறி; விசைத்தறி.

**Power-plant,** *n.* மின் வலி உற்பத்திப் பொறி.

**Pox,** *n.* அம்மைநோய்; வைசூரி நோய். *comb. n.* small pox, பெரியம்மை; வைசூரிநோய்; chicken pox, சிச்சிலம்மை; சின்னம்மை.

**Practicable,** *a.* (practice) செய்யக்கூடிய; இயலக் கூடிய. *n.* practicability.

**Practical,** *a.* (practice) பயனுடைய. *n.* practicalness, practicality. *adv.* practically, செயல் வகையில்; கிட்டத்தட்ட முழுதும்.

**Practice,** *n.* பயிற்சி; நடைமுறை; வாடிக்கை; தொழில் பழக்கம்; செயல் நீடிப்பு; தொழில் நடத்துதல்; செயற்பழக்கம். *v. see* practise, *a. see* practicable, practical, *adv.* practically.

**Practise,** *v.* பலமுறை செய் ப்ழகு; பயிற்சி பெறு; தொழில் நடத்து. *n. pers.* practitioner, *n. see* practice, etc.

**Pragmatic,** *a.* பொது வாழ்வுக் குரிய; வாழ்க்கைத் திறமையுள்ள; பிறர் செய்திகளில் தலையிடுகிற; தற்பெருமையுள்ள. *n.* pragmatism.

**Prairie,** *n.* பெரும் புல்வெளி.

**Praise,** *n.* புகழ்; மதிப்பு. *v.* புகழ்ந்துபேசு.

**Praiseworthy,** *a.* புகழ்ச்சிக்குரிய

**Prance,** *v.* துள்ளு; இங்குமங்கும் பாய்.

**Prank,** *n.* குறும்பு.

**Prate,** *v.* பிதற்று. *n.* பிதற்றல்.

**Prattle,** *v.* குழந்தைபோல் பேசு. *n.* பொருத்தமற்ற பேச்சு.

**Prawn,** *n.* மீன் வகை.

**Pray,** *v.* வேண்டிக் கொள்; குறை; இர; தொழு. *n.* prayer, வேண்டுகோள்; வழிபாடு. *a.* prayerful.

**Preach,** *v.* மேடையுரையாற்று. சமயஉரையாற்று; ஒழுக்க அறி வுரை கூறு. *n. ag. pers.* preacher.

**Preamble,** *n.* முன்னுரை; பீடிகை.

**Precarious,** *a.* உறுதியற்ற; நிலையற்ற; இடையூறுடைய.

**Precaution,** *n.* முன் எச்சரிக்கை; முன் ஏற்பாடு *a.* precautionary.

**Precede,** *v.* முன்னாகச் செல் முன் நிகழ்; முந்து முற்படு *n.* precedence, முந்துதல்; முன் நிகழ்வு; முந்துநிலை; முற்பாடு; முன் வரிசை; முன் மாதிரி நிகழ்கை; முன்னுரிமை; முந்து சலுகை. *a.* preceding, முந்திய; முன் சென்ற; முற்பட்ட. *n., a. see* precedent

**Precedent,** *n.* (precede) முன் நிகழ்ச்சி; முன் மாதிரி நிகழ்ச்சி; வழிகாட்டுஞ் செய்தி. *a.* முந்திய.

**Precept,** *n.* கட்டளை. *a.* preceptive.

**Preceptor,** *n.* (*fem.* Preceptress) அறிவு புகட்டுபவர்; ஆசிரியர்.

**Precession,** *n.* (வானநூலில்) முன் நிகழ்தல்.

**Precinct,** *n.* எல்லை.

**Precious,** *a., adv.* மதிப்பு மிகுந்த; விலையுயர்ந்த.

**Precipice,** *n.* செங்குத்தான பாறை; கொடும்பாறை.

**Precipitate,** *v.* தலைகீழாக விழு; கவிழ்த்துக்கொட்டு; விரைவு படுத்து; திடப்பொருள் படியச் செய். *a.* அவசரமாகச் செய்கிற; பதறுகிற. *n.* மண்டி; படிவு *n.* precipitateness, precipitance, precipitancy, பதற்றம்; அவசரம். *n.* precipitation, திடீர் வீழ்ச்சி கவிழ்த்தல்.

**Precipitous,** *a.* செங்குத்தான; பதற்றமான.

*precis, n.* (நூல், நூல்பகுதி) சுருக்கம்.

**Precise,** *a.* தெளிவான; சரி நுட்ப மான. *n.* preciseness.

**Precisian,** *n.* சட்ட திட்டங்களி லிருந்து சிறிதும் மாறாதவர்; சரிநுட்ப அறிஞர்.

**Precision,** *n.* சரிநுட்பத் திறம்.

**Preclude,** *v.* விலக்கு; தடு. *a.* preclusive, *n.* preclusion.

**Precocious,** *a.* பிஞ்சிலே பழுத்த; வயதுக்கு மீறி அறிவுள்ள. *n.* precocity, precociousness.

**Precognition,** *n.* முன்னுணர்வு.

**Preconceive,** *v.* முன்பாகவே உய்த்துணர். *n.* preconception.

**Preconcert,** *v.* முன்னரே ஏற்பாடு செய்.

**Preconsider,** *v.* முன்பே ஆழ்ந்தாராய். *n.* preconsideration.

**Precursor,** *n.* முன்னோடி; முன் வருதூதன். *a.* precursory.

**Predate,** *v.* முன் தேதி குறிப்பிடு.

**Predatory,** *a.* கொள்ளையிடுகிற.

**Pre-decease,** *v.* முன் இற.

**Predecessor,** *n.* முன்னிருந்தவர்; முற்பதவியாளர்.

**Predetermine,** *v.* முன்னரே உறுதி செய். *n.* predetermination.

**Predicable,** *a.*, *n.* ஒன்றைப் பற்றிச் சொல்லக்கூடிய (செய்தி).

**Predicament,** *n.* இடர்ப்பாடான நிலைமை.

**Predicate,** *v.* பயனிலைப் படுத்து; விரித்துரை; ஒன்றைப்பற்றிச் சொல்; உறுதியாகக் கூறு. *n.* ஒன்றைப் பற்றிக் கூறப்படுவது; (இலக்.) பயனிலை; (வாய்வியல்) வாசகத்தின் பயனிலைப் பகுதி; பயனிலைத் தொடர்.

**Predicative,** *a.* உறுதியாகக் கூறுகிற; பயனிலை சார்ந்துள்ள. *adv.* predicatively.

**Predict,** *v.* வருவதை முன்னரே அறிவி. *n.* prediction. *a.* 1. predictive, முன்னறிந்து தெரிவிக்கிற. 2. predictable, முன்னறிந்து தெரிவிக்கக்கூடிய; முன்னறியக் கூடிய.

**Predilection,** *n.* இயற்கை ஒருச்சாய்வு; முன் சார்பு நிலை.

**Predispose,** *v.* முன்னிணக்கமாயிரு; முன் முடிபு படுத்திவிடு. *n.* predisposition.

**Predominate,** *v.* மேம்பட்டிரு; தலைமையாயிரு. *n.* pre dominance. *a.* predominant.

**Pre-eminent,** *a.* ஈடெடுப்பற்ற; முதன்மையுள்ள. *n.* pre-eminence.

**pre-emption,** *n.* பிறருக்கு முன் விலைக்கு வாங்கும் உரிமை. *a.* pre-emptive.

**Preen,** *v.* அலகுகளால் இறகைக் கோது; கோலஞ் செய்துகொள்.

**Pre-exist,** *v.* முன்னரே இரு. *n.* pre-existence.

**Preface,** *n.* முகவுரை, *v.* முன்னுரை கூறு. *a.* prefatory.

**Prefect,** *n.* தலைமைப் பணியாளர்; (மாணவர்களில்) தலைமையானவர். (பிரான்ஸ்) மாகாணத் தலைவர். *a.* prefectorial, prefectoral. *n. abs.* prefecture.

**Prefer,** *v.* 1. விண்ணப்பம் செய். 2. உயர்த்து; முன்னேற்று. 3. ஒன்றைவிட ஒன்றை விரும்பு; முன்னுரிமை அளி. (2) *n.* preferment, முன்னேற்றம்; பணியுயர்வு; உயர்பணி. (3) *a.* preferable (மற்றொன்றினும் அல்லது மற்றவற்றினும்) மிகுதியாக; விரும்பத்தக்க. *n.* preference. < *a.* *see* preferential.

**Preferential,** *a.* (preference *see* prefer) ஆதரவு பெறுகிற; முற்பட்ட விருப்பத் தேர்வுடைய; சார்தகவான; சாதகமான; சலுகையுடைய; முன்னுரிமையுடைய.

**Prefigure,** *v.* முன்னரே கற்பனை செய்து பார்.

**Prefix,** *v.* தொடக்கத்தில் நிறுத்து. *n.* தொடக்கத்தில் சேர்க்கப்படுவது; மொழி முதலில் சேர்க்கப்படும் எழுத்து அல்லது அசை. (x postfix, suffix) *n.* prefixion.

**Pregnable,** *a.* கைப்பற்றக் கூடிய.

**Pregnant,** *a.* கருக் கொண்டுள்ள; கருத்து நிறைந்த. *n.* pregnancy.

**Prehensi(b)le, prehensory,** *a.* கைப்பற்றுகிற; கைப்பற்றக் கூடிய; *n.* prehension.

**Prehistoric,** *a.* வரலாற்றுக் காலத்துக்கு முந்திய.

**Prejudge,** *v.* முழு விசாரணை செய்யாமல் தீர்ப்பளி. *n.* pre judgement, விசாரணைக்கு முன் தீர்மானம்.

**Prejudice,** *n.* தப்பெண்ணம். *v.* நேர்மையற்ற முறையில் கருத்துக் கொள்ளச் செய்; ஒரு சார்பு ஏற்படச் செய். *a.* prejudicial, ஒருதலையான; கெடுதி விளைக் கிற.

**Prelate,** *n.* தலைமைக் குரு. *n.* prelacy, தலைமைக்குரு நிலை; குருமார் (குழு).

**Preliminary,** *a.* முன்னுரையான; பீடிகையான.

**Prelude,** *n.* பீடிகை; தொடக்க இசை அல்லது நடனம். *v.* பீடிகை யாக அமை. *a.* preludial, prelusive.

**Premature,** *a.* பருவத்துக்கு முந்திய; பருவமெய்தாத; முதிராத; குதிராத; அல்கால; வெம்பிய. *n.* prematureness, prematurity.

**Premeditate,** *v.* முன்பே ஆழ்ந் தாராய். *n.* premeditation. *a.* premeditative.

**Premier,** *a*, தலைமையான; முதலான, *n.* முதலமைச்சர்; முதல்வர். *n. abs.* premiership, முதன்மை; முதல்வர் பணி.

**Premise,** *n.* தொடக்க வாசகம்; வாத மூலவாசகம். *(pl.)* premises, மனையிடம்; மனையகம். *v.* premi'se, தொடக்கத்தில் கூறு; முன்னுரையாக எடுத்துச் சொல்.

**Premium,** *n.* பரிசுப் பணம்; (திட்ட விலைக்கு) மிகுதிப்படியான தொகை; (காப்பகம்) பகுதிக் கட்டணம் தவணைக் கட்டணம்.

**Premonition,** *n.* முன் எச்சரிக்கை; (பின் நிகழப்போவதைப் பற்றிய) முன்னுணர்வு. *a.* premonitory.

**Prenatal,** *a.* பிறப்புக்கு முன்னான.

**Prentice,** *n.* apprentice, என் பதன் சுருக்கம்) அலுவற் பயிற்சி யாள்.

**Preoccupy,** *v.* முன்னரே இடங் கொள்; முழுக்கவனத்தையும் கவர். *n.* preoccupation.

**Preordain,** *v.* முன்னரே உறுதி செய். *n.* preordination.

**Preparation,** *n.* முன்னேற்பாடு; (முன்பே கூட்டிக் கலந்த) மருந்து.

**Preparative,** *a.* முன்னேற் பாடான. *n.* ஏற்பாட்டுக்குரிய காரியம்.

**Preparatory,** *a.* முன்னேற்பாட்டுக்குரிய; பாலர் வகுப்பு; (இந்தியாவின்) 5ஆம் வகுப்பு.

**Prepare,** *v.* முன்னேற்பாடு செய்; ஒழுங்கு செய். *pa. p. a.* prepared, செயல் முற்றிய; முன்னேற்பாடு முற்றிய; சித்தமான; ஆயத்தமான. *n.* preparedness.

**Prepay,** *v.* (prepaid) பணம் முன் கூட்டிக் கொடு. *n.* prepayment.

**Preponderate,** *v.* மிகுதிப் பளுவாயிரு; மிகுதியாகு; ஆற்றல் மிகுதியாயிரு. *n.* preponderance. *a.* preponderant.

**Preposition,** *n.* பெயர் முன் இடைச்சொல் (வேற்றுமை உருபு.) *a.* prepositional.

**Prepossess,** *v.* முன்பே கவர்; முற்சார்பு படுத்து. *n.* prepossession. *a.* prepossessing.

**Preposterous,** *a.* நம்ப முடியாத; பகுத்தறிவுக்கு மாறான. *n.* preposterousness.

**Prerequisite,** *a., n.* முன் கூட்டித் தேவையான (பொருள்.)

**Prerogative,** *n.* தனிச் சிறப்புரிமை; உயர் உரிமை.

**Presage,** *n.* அறிகுறி. *v.* முன் அறிகுறி காட்டு.

**Presbyter,** *n.* கோவிற் சங்க குரு; மூத்தோர்.

**Presbyterianism,** *n.* மூத்தோர் ஆட்சிக் கொள்கை; சமய சங்கக் குழு ஆட்சி.

**Presbytery,** *n.* மூத்தோர் சங்கம்; குருமார் சங்கம்.

**Prescient,** *a.* வருவதுணர்கிற. *n.* prescience.

**Prescribe,** *v.* கட்டளையிடு; வரையறை செய்; மருந்து குறிப்பிடு. *n.* prescription, கட்டளை; வரையறை; மரபு வரையறை; ஆணை; மருந்துக் குறிப்பு; மருந்துப் பட்டி. *a.* prescriptive, வழக்க வரையறையான.

**Presence,** *n.* உண்டெனும் நிலை; அணிமை; முன்னிலை; முன்னிலைப்பாடு; உடனிலை; வந்திருத்தல்; இருத்தல்; இருப்பு உண்மை; உருத்தோற்றம்; ஆள்; ஆற்றல்; தன்மை; உடலின் தோற்றம். *a. see* present. *n.* presence-chamber, கொலு மண்டபம்.

**Present,** (> presence) 1. *a.* வந்தமர்ந்துள்ள; உடனிருக்கிற. 2. முன்னிலையிலுள்ள; முன் இருக்கிற; கண்கூடான; உள்ள; நிகழ்காலமான. *n.* (present tense) நிகழ்காலம். 3. *v.* கொடு; முன்னிலையில் வை; முன்னிலைப்படுத்து; பரிசளி. *n.* பரிசு.

**Presentable,** *a.* பரிசளிக்கத் தகுந்த; நல்லதோற்றமுடைய.

**Presentation,** 1. *n.* பரிசு; பரிசு வழங்கல். 2. முன்னிலைப் படுத்தல்; அறிமுகப்படுத்தல்.

**Presentee,** *n.* உயர் பணிக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்.

**Presentient,** *a.* முன்னுணர்வுள்ள.

**Presentiment,** *n.* முன்னுணர்வு.

**Presently,** *adv.* உடனே.

**Preservation.** *n.* பாதுகாத்தல்; பேணுதல்; இடர்காத்து வைத்தல்.

**Preservative, preservatory,** *a.* பாதுகாக்கிற. *n.* பாதுகாப்பது.

**Preserve,** *v.* காப்பாற்று. *n.* காப்பாக வைத்த பொருள்; வேட்டைக் காடு. *(pl.)* preserves, மூக்குக்கண்ணாடி.

**Preside,** *v.* தலைமை வகி.

**Presidency,** *n.* (president) தலைமை; அவைத் தலைமை (யிடம்); தலைமாகாணம்.

**President,** *n.* (*fem.* Presidentess), அவைத் தலைவர்; குடியரசுத் தலைவர். *a.* presidential, *n.* presidentship. *also see* presidency.

**Presidium,** *n.* செயல் முறை மன்றம்.

**Press,** *v.* அழுத்து; நெருக்கு; விசையாகத் தள்ளு; முனைந்து முன்னுக்குச் செல்; வற்புறுத்திச் சொல். *n.* அழுத்தக் கருவி; அச்சுப்பொறி; அச்சுக்கூடம்; அச்சகம்; பத்திரிகை, பத்திரிகை உலகு. *comb. n.* press act, பத்திரிகைச் சட்டம். press communique, (பத்திரிகை களுக்கு) அரசு அறிக்கை.

**Press-gang,** *n.* ஆள் திரட்டும் படை.

**Pressing,** *a.* அவசரமாகக் கவனிக்க வேண்டிய.

**Pressure,** *n.* அழுத்தம்; நெருக்கம்; அவசரம்.

**Prest,** *n.* முன் பணம்; கடன் .

**Prestige,** *n.* தன் மதிப்பு; மதிப்புரிமை.

**Presume,** *v.* 1. உய்த்தறி; எண்ணு. 2. வரம்பு மீறு. *a.* presumable. *n.* presumption. *a.* presumptive, presumptuous.

**Presupose,** *v.* முன்னதாகவே எண்ணு. *n.* presuposition.

**Pretence,** *n.* போலித்தனம் மாற்றுத் தோற்றம் உரிமை கொண்டாடுதல்; சாக்குப்போக்கு; பகட்டு.

**Pretend,** *v.* பாசாங்கு செய்; உரிமை கொண்டாடு; நடி. *n. pers.* pretender. *n.* pretension.

**Pretentious,** *a.* (மேன்மைக்கு) உரிமை கொண்டாடுகிற; பகட்டான. *n.* pretentiousness.

**Preterite, preterit,** *a.* இறந்த காலமான. *n.* இறந்தகாலம்.

**Preternatural,** *a.* இயல்பு கடந்த; பொது மீறிய; ‘இயற்கை’யான.

**Pretext,** *n.* பொய்க் காரணம்; சாக்குப் போக்கு.

**Pretty,** *a.* சிங்காரமான. *adv.* ஓரளவு; மட்டமான அளவில். *n.* prettiness. *a.* prettyish.

**Prevail,** *v.* மேம்படு; வெல்; பரவி நிலவு; வழக்கத்திலிரு. *n.* prevalence பரவி நிலவல்; பரந்த வழக்கு. *a.* prevalent, and *pr. p. a.* prevailing, நடைமுறையி லிருக்கிற; நடப்பிலுள்ள.

**Prevaricate,** *v.* மழுப்பிப் பேசு; ஏய்த்துப் பசப்பு. *n.* prevarication.

**Prevent,** *v.* தடு; முன்னறிந்து நிகழாமல் செய்; நிறுத்து. *n.* prevention, தடை; முன்னறிந்து தடுத்தல். *a.* preventable, preventible. *a., n.* preventive, முன்னின்று தடுக்கிற (பொருள்); தடுப்பு முறையான (மருந்து.) *comb. n.* preventive detention, தடைகாவல்; முன்னெச்சரிக்கைத் தடைவு, peventive medicine, தடுப்பு மருந்து; தடைமருந்து.

**Previous,** *a., adv.* முந்திய; முற்பட்ட.

**Pre-war,** *a.* போருக்கு முந்திய.

**Prey,** *n.* இரை, *v.* கொள்ளையடி; இரையாகப் பற்று; கரித்துத் தின் .

**Price,** *n.* விலை; மதிப்பு. *v.* விலை குறி; விலை கேள். *a.* priced. *a. (neg.)* priceless, விலை மதிப்பிட முடியாத; விலை யில்லாத. *comb. n.* price control, விலைக் கட்டுப்பாடு, price inventory, விலைக் குறிப்புப் பட்டி. price list விலைப்பட்டி.

**Prick,** *n.* முள்; சுருக்கென்று தைத்தல்; குத்து; முள் தைத்த நோவு; குத்திய அடையாளம். *v.* குத்து; தை; துளையிடு; நிமிர்த்து; தூண்டு.

**Prickle,** *n.* முள்; கூர்; சுணை.

**Prickly,** *a.* முள் நிறைந்த; சுணையுள்ள. *n.* prickly, pear, பாம்புக் கள்ளி; சப்பாத்துக் கள்ளி; கற்றாழை.

**Pride,** *n.* இறுமாப்பு; செருக்கு; தற் பெருமை. *v.* தற்பெருமை கொள். *a. see* proud.

**Priestg,** *n.* (*fem.* priestess) மதகுரு; புரோகிதன். *n. abs.* priesthood, priestcraft. *a.* priestly.

**Prig,** *n.* தருக்குடையவர்; பிலுக்கர் *a.* priggish. *n.* priggishness.

**Prim,** *a.* நிறைகோலமான. *v.* முறைப்படி தோற்றங்கொள். *n.* primness.

*prima, a.* முதலாவதான.

*prima donna, phr. n.* முதல் பெண் நடிகை.

*prima facie, phr. adv., a.* முதல் தோற்றத்திலேயே.

**Primal,** *a.* முதலாவதான; தலைமையான; (உலகத்) தொடக்கத்திலிருந்த.

**Primary,** *n.* தொடக்கத்திலிருந்த; முதலாவதான; முக்கியமான. *n.* தலைமையானது பாலபாடம்; முதலாவது. *adv.* primarily. *comb. n.* primary cell, மூல மின்கலம்; மூல உயிரணு.

**Primate,** *n.* தலைமைக் குரு; (மனிதனுட்பட்ட) உயர் உயிர் இனம்; இருகால் உயிரினம்.

**Prime,** 1. *a.* தொடக்கத்திய; தலைமையான; (எண்) பகா நிலையான; வகுக்கப்படாத; மூல. *n.* தலைமையானது; தொடக்க நிலை; நிறை இளமை. 2. *v.* துப்பாக்கியில் மருந்து வை; முன் கூட்டியே செய்தி சொல்லி வை; அடிப்படையான வண்ணம் முதலியன பூசு. (1) primeness. (2) *n.* priming, (1) *comb. n.* prime minister, முதலமைச்சர்.

**Primer,** *n.* முதல் புத்தகம்; பால பாடம்.

**Prim(a)eval,** *a.* (மண்ணூல்) தொடக்கக் காலத்தைச் சேர்ந்த; தொல் பழங்காலத்திய.

**Primitive** *a.* நாகரிகத் தொடக்க காலத்தைச் சேர்ந்த; முதிரா நிலைக்குரிய; நாகரிக முதற்படி யிலுள்ள; நாகரிகங் குறைந்த. *n.* primitivism.

*primo, adv.* முதலாவதாக.

**Primogeniture,** *n.* மூத்த மகனது உரிமை முறை; தலை மூப்புரிமை.

**Primordial,** *a.* தொடக்கத்தி லிருந்து உள்ள.

**Primrose,** *n.* மஞ்சள் மலர் வகை.

**Prince,** *n.* (*fem.* princess), இளவரசன்; தலைவன். *a.* princely.

**Principal,** *a.* தலைமையான. *n.* தலைவர்; முதல்வர்.

**Principality,** *n.* சிற்றரசன் நாடு; கோமக்கள் ஆட்சி; வேளிர்நாடு.

**Principally,** *adv.* முக்கியமாக; சிறப்பாக.

**Principle,** *n.* கொள்கை நெறி; முறை; தத்துவம்; மூலமெய்மை; வாழ்க்கைக் கோட்பாடு. *a.* principled, கொள்கைக் கட்டுப் பாடுடைய; (x unprincipled) *n. pers.* principlinarian. கொள்கைக் கட்டுப்பாட்டாளர்; ஒழுக்கக் கண்டிப்பாளர்; ஒழுங்குமுறைக் கண்டிப்பாளர்.

**Prink,** *v.* பகட்டாக ஆடை யணி.

**Print,** *n.* பதித்த அடையாளம்; அச்சு; அச்சிட்டது; அச்சடித்த ஆடை. *v.* பதிப்பி; அச்சடி. *n. ag.* printer, அச்சுத்தொழிலாளி, *comb. n.* printing press, அச்சகம்.

**Printer's devil,** *n.* அச்சுத் தொழில் நிலையத்தில் சிற்றாள்; அச்சுப்பிழை.

**Prior,** *a.* காலத்தால் முற்பட்ட; முந்திய. *n.* மடத்தலைவன் . (*fem.* prioress).

**Priority,** *n.* முந்திய தன்மை; முதன்மை.

**priory,** *n.* துறவி மடம்; கன்னியர் மடம்.

**Prise, prize,** *v.* நெம்பித் திற; தென்னு; குத்திப் பிள.

**Prism,** *n.* பட்டகம்; அடிமுடி சரிஒத்த செங்கோட்டு வடிவங் களாலான நீள் பிழம்புருவம். *a.* prismatic.

**Prison,** *n.* சிறை; சிறைச்சாலை; காவற் கூடம்; 'தடை'வுக் கூடம்.

**Prisoner,** *n.* சிறைப்பட்டவர்; சிறையாளி; கைதி.

**Pristine,** *a.* பண்டை நலம் பொருந்திய.

**Prithee,** *int.* (பழவழக்கு) (I pray thee என்பதன் சுருக்கம்) அருள் கூர்க.

**Privacy,** *n.* (private) தனி நிலை; பிறர் பார்வையில் படா நிலை.

**Private,** *a.* தனி மனிதருக்குரிய; மறைவிடமான; பொது மக்களறி யாத. *n. see* privacy.

**Privateer,** *n.* (அரசியலாதரவு பெற்ற) தனி மனிதர் போர்க்கப்பல்.

**Privation,** *n.* வறுமை; மிடிமை; நல்குரவு; இல்லாது வருந்துகை.

**Privies,** *n. pl. see* privy.

**Privilege,** *n.* உரிமை; பேறு; சிறப்புரிமை; தனிச்சலுகை. *a.* privileged.

**Privy,** *a.* மறையான; உடந்தை யான. *n. pl.* privies, கழிப்பிடம்; மறைவிடம்; கழிமலங்கள். *adv.* privily. *n.* privy council, மன்னர் அவை; உயர் அவை.

**Prize,** 1. *n.* பரிசு; வெற்றியில் கிடைத்த பொருள்; சூறை; கொள்ளை; நன்கொடை. *v.* உயர்வாக மதி. 2. *see* prise, (1) *comb. n.* prizes and scholar ships, பரிசுகளும் உதவிப் படிகளும். prize court, போரிற் கவர்ந்த பொருள் ஆட்சி பற்றிய மன்றம்; சூறை மன்றம்.

**Pro,** 1. *prop.* (ஒன்றற்கு) ஆக. 2. *adv.* சார்பாக, (pro and con, சார்பாகவும் எதிராகவும்.) 3. (முன் ஒட்டு இடைச்சொல்) சார்பான. (pro - British) பிரிட்டனுக்குச் சார்பான.) (x anti-)

**probable,** *a.* நிகழக்கூடிய; உண்மையா யிருக்கக்கூடிய. *n.* probability.

**Probate,** *n.* இறப்புறுதிச் சான்று.

**Probation,** *n.* தகுதி ஆய்வுக் காலம். *a.* probational, தகுதி ஆய்வுக்காலஞ் சார்ந்த. *n. pers.* probationer, probative, probatory, ஆய்ந்து தெளிய உதவுகிற.

**Probe,** *n.* புண்ணை ஆராய உதவும் கருவி. *v.* ஆய்ந்து பார்; கிளறிப் பார்.

**Probity,** *n.* நேர்மை; நாணயமான தன்மை.

**Problem,** *a.* சிக்கலான செய்தி; சிக்கல் வினா; ஆய்பொருள்; புதிர்மானம்; புதைமானம்; கடா; தீர்க்க வேண்டிய இடைபாடு; பிரச்சனை. *a.* problematic, ஐயத்துக்கிடமான; உறுதியற்ற.

**Proboscis,** *n.* (பூச்சிகளின்) உறிஞ்சுகுழல்; தும்பிக்கை.

**Procedure,** *n.* (proceed) போக்கு; நடவடிக்கை. வினைமுறை; நடை முறை; செயல்முறை; வகைமுறை.

**Proceed,** *v.* முன் செல்; நடைபெறு; நடத்திச் செல்; முன்னேறு. *n. see* procedure, proceeding, process, procession, proceeds etc.

**Proceeding,** *n.* செயல்முறை; போக்கு; *(pl.)* நடைமுறைகள்; நடவடிக்கைகள்.

**Proceeds,** *n.* *(pl.)* பயன்; விளைவு; ஆதாயம்.

**Process,** *n.* (proceed) செய்முறை; படிமுறை; முறைமன்றக் கட்டளை; எலும்புத் திரட்சி; எலும்பு முள். (*comb.*) *n.* process server. முறைமன்ற எடுபிடி ஆள்; கட்டளைச் சேவகர்.

**Procession,** *n.* (proceed) ஊர்வலம்; ஊர்கோலம். *n. pers.* processionist.

**Proclaim,** *v.* விளம்பரம் செய்; பறையறை; பறைசாற்று. *n.* proclamation. (மன்னர், ஆட்சித் தலைவர்) ஆணை விளம்பரம்; திரு எழுத்தறிவிப்பு.

**Proclivity,** *n.* சார்பு; (மன) நோக்கு.

**Proconsul,** *n.* (புற) மாகாணத் தலைவர்; வெளிநாட்டுத் தூதர்.

**Procrastinate,** *v.* காலந்தாழ்த்து; கடத்து; ஒத்திப்போடு. *n.* procrastination, நெடுநீர்மை.

**Procreate,** *v.* பிறப்பி; உண்டாக்கு. *n.* procreation. *n. pers.* procreator. *a.* procreative.

**Proctor,** *n.* பல்கலைக் கழகப் பணியாளர்.

**Procuration,** *n.* பெறுதல்; காரியங் கூட்டுவித்தல். *n. pers.* procurator, செயலாட்சியாளர்; வழக்கறிஞர்.

**Procure,** *v.* (ஒருவருக்காகப்) பெறு; (காரியங்) கூட்டுவி; வாங்கிச் சேர்; (பொருள்) தருவி. *a.* procurable, *n.* procurement, பொருள் சேகரம். *see* procuration. *n. pers.* procurer.

**Prod,** *v.* தூண்டு; முள்ளால் குத்து. *n.* தூண்டுதல்; தாறு.

**Prodigal,** *a.* வீண் செலவினால் அழிகிற; மிதமீறிச் செலவழிக்கிற; *n.* அளவு மீறிச்செலவழிப்பவர். *n.* prodigality.

**prodigious,** *a.* வியப்புக்குரிய; மிகப் பெரிய.

**Prodigy,** *n.* வியப்புக்குரிய செய்தி; அருநிகழ்ச்சி; அருந்திறலாளர்.

**Produ'ce,** *v.* உண்டு பண்ணு; ஆக்கு; உண்டாக்கு; பிறப்பி; இயற்று; நீட்டு. *n.* pro'duce, விளைபொருள்; விளைச்சல்; விளைவு; பயன் வளம்; மேனி வளம். *a.* produci'ble. *n. ag.* produ'cer, ஆக்குவோர்; விளை விப்போர்; ஆக்கிப்படைப்பவர்.

**Product,** *n.* மாற்று விளைவு; தொழில் விளைபொருள்; பயன் ; பெருக்குத்தொகை.

**Production,** *n.* உற்பத்தி செய்தல்; விளைவு. *a.* productive, உற்பத்தி செய்யக் கூடிய; செழிப்பான. *n.* productivity, productiveness.

**Proem,** *n.* முகவுரை; பாயிரம்; தொடக்கம்.

**Profane,** *v.* தூய்மையைக் கெடு; தெய்விகத் தன்மையை இழிவு செய். தூய்மையற்ற. *n.* profanity, profaneness.

**Profess,** *v.* உரிமை கொண்டாடு; ஒத்துக்கொள்; வெளிப்படக் கூறு. *a.* professed. *n. see* profession.

**Profession,** *n.* (profess) 1. வெளித் தோற்றத்துக்குச் சொல்லிக் கொள்வது; மேலீடான பாவனை. 2. வாழ்க்கைத் தொழில்; தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தொகுதி. (1) *v. see* profess. (2) *a., n.* professional, (*a.*) தொழிலுக் குரிய (n) ஊதியப் பணியாளர். (x amateur).

**Professor,** *n.* பேராசிரியர்; (கலை, வித்தை) முதன்மை வல்லுநர். *a.* professorial. *n.* professorship.

**Proffer,** *v.* கொடுக்க முன் வா. *n.* கொடுக்க முன் வரல்; கொடை.

**Proficient,** *a.* திறமைமிக்க. *n.* வல்லுநர்; திறமைசாலி. *n. abs.* proficiency.

**profile,** *n.* வடிவுருவம்; உருப் படிவம்; பக்கத் தோற்றம்.

**Profit,** *n.* பலன்; ஆதாயம். *v.* பயன்படு. *a.* profitable. *a.(neg.)* profitless.

**Profiteer,** *v.* கொள்ளை ஆதாயம் பெறு. *n.* கொள்ளை ஆதாயக் காரன். *n.* profiteering.

**Profligate,** *a.* ஒழுக்கங்கெட்ட. *n.* நடைகேடன்; ஒழுக்கங் கெட்டவன். *n. abs.* profligacy.

*proforma invoice,* *n.* ஒப்படைப்புப் பட்டியல்.

**Profound,** *a.* ஆழமான; ஆழ்ந்த அறிவுள்ள; ஆழ்ந்த உணர்ச்சி யுள்ள. *n.* profoundness. profundity.

**Profuse,** *a.* தாராளமான *n.* profuseness, profusion.

**Progenitor,** *n.* மூதாதை; குல முதல்வர்; தந்தை.

**Progency,** *n.* பின் மரபு; எச்சம். *v.* progenerate.

**Prognosticate,** *v.* முன்னறிவி. *n.* prognostication.

**Program(me)** *n.* திட்டம்; நிகழ்ச்சி முறை; நிகழ்ச்சி நிரல். *v.* நிகழ்ச்சி முறைக்கு ஏற்பாடு செய்.

**Pro'gress,** *n.* முன்னேற்றம்; மேம்பாடு அடைதல். *v.* progre'ss, முன்னேறு; சீர்திருந்து. *n.* progression, முன்னேறுதல்; வரிசை முறை. (arithmatical progression, எண் ஏற்றம். geometrical progression, எண் பெருக்கம்)

**Progressive,** *a.* படிப்படியாக முன்னேறுகிற; சீர்திருந்துகிற.

**Prohibit,** *v.* தடு; விலக்கு; தவிர். *n.* prohibition, தடை; விலக்கு; தடையுத்தரவு; குடி விலக்கு. *n. pers.* prohibitionist. *n. abs.* prohibitionism. *a.* prohibitive, prohibitory, தடைசெய்கிற, *n.* prohibitiveness.

**Proje'ct,** 1. *v.* முன் புறம் நீட்டு; பிதுங்கி நில்; வெளிப்பட்டு நில்; திட்டம் செய்; 2. *n.* pro'ject, திட்டம் ஏற்பாடு. (1) *n. see* projection. *n. ag. see* projector. *a. n. see* projectile. (2) *phr. n.* project method. (கல்வி முறை); செயல் திட்டமுறை.

**Projectile,** *n.* (project) உந்து படை; எறிபடை; வீசு குண்டு.

**Projection,** *n.* (project 1) பிதுக்கம்; நீட்டம்; விரிவு; தளநேரிணை; நிழலீடு; நிழற் படிவம்; முன்பக்கமாக எறிதல்.

**Projector,** *n.* (project) திட்டம் செய்பவன்; திரைப்படம் காட்டும் கருவி.

**Prolepsis,** *n.* (இலக்.) எதிரது போற்றல். *a.* proleptic.

**Proletariat(e),** *n.* உழைப்பு வகுப்பு; தொழிலாளர் இனம். *a.* proletarian.

**Prolific,** *a.* இனப்பெருக்க வளமுள்ள.

**Prolix,** *a.* மிகைபடக் கூறப்பட்டுள்ள; மிக நீண்ட. *n.* prolixity.

**Prologue,** *n.* நாடக முகப்பு.

**Prolong,** *v.* நீடி; நீளமாக்கு; *n.* prolongation.

**Promenade,** *n.* உலாவுதல்; சாலை, *v.* உலாவு.

**Prominent,** *a.* முனைப்பான; தெளிவாகத் தெரிகிற; தலைமை யான; புகழ்பெற்றுச் சிறந்துள்ள. *n.* prominence, முக்கியம்; முனைப்பு; முகடு.

**Promiscuous,** *a.* கலப்படமான; ஒழுங்கற்ற; குழப்பமான. *n.* promiscuity.

**Promise,** *n.* வாக்குறுதி; நம்பிக்கை தரும் செய்தி; வாக்குறுதி யளிக்கப்பட்ட செய்தி. *v.* வாக்குறுதியளி; நம்பிக்கைக்கு இடமளி.

**Promising,** *a.* நம்பிக்கை யளிக்கின்ற.

**Promissory,** *a.* வாக்குறுதியுடன் கூடிய. (*comb.*) *n.* promissory note, வாக்குறுதிக் கடன் பத்திரம்; உறுதிப்பத்திரம்.

**Promontory,** *n.* நிலமுனை; உந்துநிலம்.

**Promote,** *v.* முன்னேற உதவு; மேம்படச் செய். *n.* promotion. *a. ag.* promoter, அமைப்போர் (நிலையம்). நிறுவுவோர்; ஆதர வாளர்.

**Prompt,** *a.* செயலுக்கொருங்கி யிருக்கிற; உடனுக்குடன் செய்கிற; தாமதிக்காத. *v.* செயல் தூண்டு. (நடிகர் பகுதி) நினைவுறுத்து. *n.* promptitude promptness.*n.ag.* prompter.

**Promulgate,** *v.* விளம்பரம் செய்; அறிக்கையிட்டுப் பரவச்செய். *n.* promulgation.

**Prone,** *a.* சார்புள்ள. *n.* proneness.

**Prong,** *n.* கவராயுள்ள கருவி; கவர்முள். *a.* pronged.

**pronoun,** *n.* (இலக்) மூவிடப்பெயர்; பெயர்ச்சுட்டு; சுட்டுவினாப் பெயர். *a.* pronominal.

**Pronounce,** *v.* ஒலி; கூறு; கருத்தைச் சொல். *n.* pronouncement, அறிவிப்பு. *a. see* pronounced. *n. see* pronounciation.

**Pronounced,** *a.* (pronounce) முனைப்பான.

**Pronunciation,** *n.* (pronounce) (எழுத்து, சொல்) ஒலிப்பு; ஒலித்தல்.

**Proof,** *n.* எண்பித்தல்; தெளிவு; (அச்சுத்) திருத்துவதற்கான படி; பார்வைப்படி. *a.* நுழையவிடாத; தேர்ந்த; வலிமையுடைய; (நீர்; காற்று, தீ, பிணி) தடுக்கிற; தடைகாப்பான. (water proof. Fire proof). *comb. n.* galley proof, திருத்துவதற்கான தகட்டுப் படி; 'படித்தகடு'. page proof, திருத்துவதற்கான பக்கப் படி; படிப்பக்கம்'. form proof, திருத்துவதற்கான பூட்டுப்படி; படிப்பட்டு. *v. see* prove.

**Prop,** *n.* ஆதாரம்; ஊன்று கோல், *v.* முட்டுக்கொடு; தாங்கு.

**Propaganda,** *n.* கொள்கை பரப்புதல்; விளம்பரப்படுத்தல். *n. pers.* propagandist. *a.* propagandistic. *v.* propagandize,-se.

**Propagate,** *v.* வளர்; பெருக்கு; வளம்பரப்பு; தழைப்பி; பரப்புதல் செய். *n.* propagation.

**Propel,** *v.* முன்னுக்குச் செலுத்து; இயக்க. *n. ag. impers.* propeller.

**Propensity,** *n.* மனச்சார்பு பற்றுகை.

**Proper,** *a.* நேர்மையான; சரியான; தகுதி வாய்ந்த.

**Properly,** ad. தகுதியாக; நேர்மையாக.

**Property,** *n.* உடைமை; சொத்து; (வாய்வியல்) இனப் பொதுப் பண்பு; உரிமை.

**Pro'phecy,** *n.* (prophet) வருவதுரைத்தல். *v.* prophesy. வருவதுரை.

**Prophet,** *n.* (*fem.* prophetess), வருவதுரைப்பவர். *a.* prophetic(al), *n. abs. etc. see* prophecy.

**Prophylactic,** *a. n.* நோயைத் தடுக்கின்ற (முறை). *comb. n.* prophylactic vaccine, நோய்த் தடுப்பு ஊசி மருந்து.

**Propinquity,** *n.* அண்மை; நெருங்கிய உறவு.

**Propitiate,** *v.* இணங்கச்செய்; மன நிறைவு செய்; அவாத் தணி (தெய்வங்களின்) சினமாற்று. *n.* propitiation. *n. ag.* propitiator. *a.* propitiatory.

**Propitious,** *a.* உகந்த; தகுந்த.

**Proponent,** a., *n.* (propose) முன் மொழிபவர்; முதன் முதல் கருத்துரைப்பவர்.

**proportion,** *n.* வீதம்; வீதப்பங்கு; படிவீதம். *v.* வீதப்படி பிரி; பொருத்தமாக அமை. *a.* pro portionable, வீதமுறைப்படத் தக்க. proportionate வீதமுறை யான. proportional, வீத அளவான.

**Propose,** *v.* கலந்தாராயக் கொண்டு வா; முன் மொழி; நோக்கமாகக் கொள்; திருமணத்திற்கு இணங்கும் படி கேள். *n.* proposal. புது ஏற்பாடு; புதுத் திட்டம்; புதுக் கருத்து; புத்துரை; முன் மொழி(வு). *n. pers.* proposer. *see* proponent.

**Proposition,** *n.* (propose) ஆராய்ச்சிக்குரிய பொருள்; கருத்துரை; புதுக்கருத்து; புத்துரை; திட்டம்; ஆலோசனை; யோசனை; கூற்று; (வாய்வியல்) கருத்துரை வாசகம். *a.* propositional.

**Propound,** *v.* ஆழ்ந்தாராய்; முன் மொழி.

**Proprietary,** *a.* (ஒருவருக்குத்) தனியுரிமையான.

**Proprietor,** *n.* (*fem.* proprietress, proprietrix) தனி உரிமையாளர்;

உரிமையாளர். *n. abs.* proprietor ship. *a.* proprietary, proprietorial.

**Propriety,** *n.* தகுதி; நேர்மை; ஒழுங்கு.

**Proprium,** *n.* தனிக் குணம் உண்மைத் தன்மை.

*pro-rata, adv., a.* வீதப்படி.

**Prorogue,** *v.* தற்காலிகமாக ஒத்திவை; கூட்டத்தைத் தள்ளி வை. *n.* prorogation.

**Prosaic,** *a.* (prose) உரை நடை போன்ற; செய்யுளியல் பில்லாத; வெள்ளையான; உவர்ப்புத் தட்டுவதான; சாரமற்ற.

**Proscribe,** *v.* ஒத்து விலக்கு; தடையுத்தரவு செய்; (அரசியல்) தடைசெய்; விலக்காணை செய். *n.* proscription. *a.* proscriptive.

**Prose,** *n.* உரைநடை. *a. see* prosaic, prosy.

**Prosecute,** *v.* தொழில் செய்; பின் பற்று (அரசியல்) குற்றஞ்சாட்டு; *n.* prosecution. அரசியல் குற்றச் சாட்டு. *n. ag.* prosecutor, (அரசியல் சார்பான) வழக்குரைஞர்.

**Proselyte,** *n.* மதம் மாறியவன் . *n.* proselytize, -se மதமாறச் செய். *n. abs.* proselytism.

**Prosody,** *n.* செய்யுளிலக்கணம்; யாப்பிலக்கணம். *n. pers.* prosodist.

**Prospect,** *n.* பரந்த கட்சி; எதிர்பார்க்கும் செய்தி; எதிர்கால வாய்ப்பு. *v.* எதிர்பார்; பொன் முதலியவற்றிற்காக நிலமாராய். *a.* prospective, மேல்வளம் உடைய; வருங்கால வசதி யுடைய; வருங்கால வளமுடைய; நல்வாய்ப்புடைய; வருங்கால வாழ்வுக்குரிய. *comb. n.* prospecting license, அடி நிலவள ஆய்வுரிமை(ச்சீட்டு).

**Prospectus,** *n.* (காப்பக முதலிய பொது நிலையங்களின்) முன் விளம்பரம்; தகவல் தொகுப்பு; நல உறுதித் தொகுப்பு.

**Prosper,** *v.* வெற்றியடை; முன் னேற்றமடை; செழிப்பாகு. *a.* prosperous. *n.* prosperity, (x adversity).

**Prostitute,** *n.* விலைமகள், *v.* பொருள் கருதிச் செயலாற்று; இழிந்த செயலில் இறங்கு. *n.* prostitution.

**Prostrate,** *a.* குப்புறப்படுத் திருக்கிற; படுத்து வணங்குகிற; சரணடைந்த; அடிமைப்பட்ட; நலிந்த. *v.* படுத்து வணங்கச் செய்; கீழே விழுந்து வணங்கு; நலிவுறச் செய். *n.* prostration.

**Prosy,** *a.* (prose) பொது நிலை யான; உப்புச்சப்பற்ற. *n.* prosiness.

**Protagonist,** *n.* முதலாதரவாளர்; முதல்வர்.

**Protean,** *a.* மாறுமியல்புள்ள; பலதிறப்பட்ட.

**Protect,** *v.* பாதுகாத்தல் செய்; காப்பாற்று; ஆதரவளி. *n.* protection. *a.* protective. *n.* protectiveness. *n. abs. see* protectionism. *n. ag. see* protector.

**Protectionism,** *n.* (protection) அயல் சரக்குகளுக்கு வரி விதிப் பதை ஆதரிக்கும் கோட்பாடு. *n. pers.* protectionist.

**Protector,** *n.* (protect) காப்பாளர் நாட்டுக்காவல் தலைவன்; காவ லாள். *n. abs.* protectorship, protectorate, காப்பாண்மை; காப்பாளர் ஆட்சி; காப்பாளர் ஆட்சிப் பகுதி. *comb. n.* Protector of Emigrants, குடிபெயர்வோர் காப்பாளர்; குடி போக்காளர் காவலர். Protector of Immigrants, குடிபுகுவோர் காப்பாளர்; குடிவருகையாளர் காவலர்.

**Protege,** *n.* (*fem.* protegee) ஆதரவிலிருப்பவர்.

**Protein, proteid,** *n.* ஊன் வளர்க்கும் பொருள்; நீரகக் கரியகிச் சத்து.

**Prote'st,** *v.* மறுத்துக் கூறு; உறுதியாகச் சொல். n. pro'test, கண்டனம். *n. vol. see* protestation. *n. pers. see* Protestant.

**Protestant,** *n.* (protest), மறுப்போர்; கத்தோலிக்க மதத்தி லிருந்து பிரிந்த கிறித்துவ மதக்கொள்கையுடையவர்.

**Protestation,** *n.* (protest), மறுத்துரைத்தல்; உறுதியான கூற்று.

**Proteus,** *n.* அடிக்கடி மாறுமியல் புள்ளவர்; நீர்த் தேவதை.

**Protocol,** *n.* உடன்படிக்கைப் பேச்சுகளில் வரையப்படும் முதல் குறிப்பு.

**Proton,** *n.* அணுவின் மையத்தி லுள்ள நேர்மின் வலி தாங்கிய பகுதி; 'நேர்மம்', (x electron *cf.* neutron)

**Protoplasm,** *n.* உயிர்ச்சத்து; உயிரணு. *a.* protoplasmic.

**Prototype,** *n.* மூல முன் மாதிரி.

**Protract,** *v.* நீட்டித்தல் செய்; காலங் கடத்து. *a.* protracted. *adv.* protractedly. *n. ag. impers.* protractor. 1. நீட்டுத்தசை. 2. கோணமானக் கருவி. *n. abs.* protraction. *a.* protractile, நீட்டிக்கக்கூடிய.

**protrude,** *v.* முன் புறமாக நீட்டு; உந்திநில்; துருத்திக் கொண்டிரு; தலைநீட்டு, n. protrusion. *a.* protrusile, protrusive.

**Protuberant,** *a.* முனைத்த; உந்தியிருக்கிற. *n.* protuberance.

**Proud,** *a., adv.* செருக்குடைய; தற் பெருமையுள்ள; பகட்டாரவார மான. *adv.* proudly. *n. see* pride.

**Prove,** *v.* (proved, proved, proven) மெய்யெனக் காட்டு; ஆகு. *a.* provable, *n. see* proof.

**Provender,** *n.* தீவனம்.

**Proverb,** *n.* பழமொழி. *a.* proverbial.

**Provide,** *v.* திரட்டிக்கொடு; அளி.

**Provided,** *conj.* (என்ற) கட்டுப் பாட்டின் மேல்.

**providence,** *n.* இயற்கையின் நல்லாற்றல்; தெய்வம்.

**Provident,** *a.* செட்டான; முன் னேற்பாடான. *comb. n.*

provident fund, துணை நலவைப்பு; சேமநல நிதி; உய்வுத் திரு.

**Providential,** *n.* தெய்வத்தாலான; தற்செயல் நற்பேறான. *adv.* providentially.

**Province,** *n.* மாநிலம்; மாகாணம்; துறை; கடமை எல்லை; ஆட்சிப் பகுதி; நிலப்பகுதி. *a.* provincial, மாகாணத்துக்குரிய; நாட்டுப்புற. *n. abs.* provincialism, மாகாண மனப்பான்மை; நகரப் பண்பின்மை.

**Provision,** *a.* முன்னொருக்கம்; முன்னொதுக்கீடு; முன்காப்பு; முன்னேற்பாடு (செய்தல்); உணவு (ப்பொருள்); உணவுக் குவை; காப்பு வாசகம். *comb. a.* provision store, உணவுப் பொருள் கிடங்கு; கூலமளிகை.

**Provisional,** *a.* தற்காலிகமான; எதிரது போற்றுகிற; முன்னேற் பாடான; இடர்காப்பான; எய்ப் பினில் வைப்பான. *adv.* provisionally.

**Proviso,** *n.* காப்பு வாசகம்.

**Provisory,** *a.* பாதுகாப்புக் கட்டுப் பாட்டோடு கூடிய; தற்காலிக மான.

**Provoke,** *v.* தூண்டு; சினமூட்டு. *a.* provoking, *n.* provocation. *a.* provocative.

**Provost,** *n.* நகர முறைமன்றத் தலைவர்; படைத் தலைவர்.

**Prow,** *n.* கப்பலின் முன்புறம்.

**Prowess,** *n.* வீரம்; தீரம்.

**Prowl,** *v.* இரை தேடித் திரி; கொள்ளைப்பொருளை நாடித் திரி. *n. ag.* prowler.

**Proximate,** *a.* அருகேயுள்ள; அடுத்த.

**Proximity,** *n.* அண்மை; நெருங்கிய தன்மை.

*proximo, a.* அடுத்தமாதத்து; வரு மாதத்து.

**Prude,** *n.* பாசாங்கு ஒழுக்க முடையவர்; நடித்தேய்ப்பவர். *n.* prudery. *a.* prudish. *n.* prudishness.

**prudent,** *a.* முன் கவனமான; மதியுள்ள. *n.* prudence, *a.* prudential, முன் மதிசார்ந்த.

**Prune,** 1.*n.* உலர்த்திய பழம். 2 *v.* (செடி. கொடி) கத்தரி; செப்பம் செய். *comb. n.* pruning shears. (தழை வெட்டும்) கத்தரி; தழை கொத்தி; தழை வெட்டி.

**Pry,** *v.* துருவிப் பார்; நுழைந்து ஆராய். *a.* prying.

**Psalm.** *n.* பாசுரம். *n. pers.* psalmist. *n. abs. coll.* psalmody.

**Psalter,** *n.* (விவிலிய நூலில்) புகழ்ப்பாடல் பகுதி.

**Pseudo-, (** (முன் ஒட்டிடைச் சொல்) பொய்யான; போலியான.

**Pseudonym,** *n.* புனைபெயர். *a.* pseudonymous.

**Pshaw,** *int.* சீ!

**Psyche,** *n.* அழகுத் தெய்வம்; ஆன்மா; மனம்.

**Psychiatry,** *n.* உளநோய் மருத்துவம். *n. pers.* psychiatrist.

**Psychic(al),** *a.* உளஇயல் சார்ந்த.

**Psychology,** *n.* உளநூல். *a.* psychological, உளநூலுக்குரிய; உளப்பாங் கறிந்த. (psychological moment, தக்க தறுவாய்.) *n. pers.* Psychologist.

**Psychopathist,** *n.* உளநோய் மருத்துவர்.

**Psychosis,** *n.* உளநோய்.

**Psychotherapeutics,** *n.* (நரம்பு, மூளைக்கோளாறு முதலிய நோய்களின் உள நூன்முறை) மருத்துவம்.

**Pub,** *n. see* public.

**Puberty,** *n.* பூப்பு; பருவமடைதல்.

**Public,** *a.* பொதுமக்களுக்குரிய; பலரறிந்த; பொதுவான. *n.* பொதுமக்கள். *n.* (*comb.*) public house, (சுருக். pub) கள்ளுக்கடை; சாராயக்கடை. *comb. n.* public act, வெளிப்படையான செயல்; பொது நலச் சட்டம். public convenience, பொதுநலக் கழிப்பிட வசதி. public debt, பொது நலக்கடன் ; நாட்டுக்கடன். public endowment, பொது நலக் கொடை. public health, பொதுமக்கள் உடல் நலம். public notification. பொது அறிவிப்பு. public order, பொது அமைதி. public prosecutor, அரசியல் வழக்குரைஞர். public record, பொது உரிமைப் பதிவேடு. public safety, பொதுநலக்காப்பு; பொதுப் பாதுகாப்பு. public resort, பொது ஓய்வகம். public service, பொது ஊழியம்; மக்கட்பணி; அரசியல் பணி. public service commission, பொதுப்பணித் தேர்வுக்குழு, public works, பொதுப்பணி. public works department. (P.W.D.)

**Publican,** *n.* (ரோமானிய) வரி பிரிப்போர்; (யூத) சமூகத்துக்குப் புறம்பானவர்.

**Publication,** *n.* (> publish) வெளியிடுதல்; வெளியீடு; வெளியீட்டுத்தாள்; செய்தியிதழ்; நூல்.

**Publicist,** *n.* பத்திரிகைத் தொழிலாளர்; உலகநாட்டுச் சட்ட வல்லுநர்.

**Publicity,** *n.* செய்திப்பரப்பு; விளம்பரம்; பறைசாற்று; பட்டாங்கமாதல்; அம்பலமாதல்; பலரறி பெருமை; புகழ். *comb. n.* publicity board, விளம்பரக் குழுமம். publicity bureau, விளம்பரக் கூடம்.

**Publish,** *v.* வெளியீடு; பலரறியச் செய். *n. ag. pers.* publisher, *n. see* publication.

**Puck,** *n.* குறளி; (குறும்பு செய்யும்) குழந்தை. *a.* puckish, குறும்புடைய.

**Pucker,** *v.* (நகைமுகம்) சுழிப்புகளாகச் செய்; சுருங்கச் செய். *n.* மடிப்பு; சுருக்கம். *a.* puckery.

**Pudding,** *n.* சமைத்த மாவு; களி; பிட்டு.

**Puddle,** *n.* சிறு குளம்; குட்டை; சேறு. *v.* சேறாக்கு; வார்ப் பிரும்பைத் தூய்மைப்படுத்து.

*pudendum, n.* (*pl,* -da) பிறப்புக்குரிய உறுப்புகள்.

**Pudgy,** *a.* பருத்துக் குள்ளமான.

**Puerile,** *a.* குழந்தைத் தன் மையான.

**Puff,** *n.* மோதுகாற்றலை; காற்றுப் பை; மிகைபடப் புகழ்தல் (powder puff, முகத்தூள் குஞ்சம்) *v.* சட்டென வீசு; காற்றினால் புடைப்பாகு; பெரு மூச்சு விடு; பெருமையடை; புகழ்; முகத்தூள் ஒத்து.

**Puffy,** *a.* புடைப்பான; மூச்சுத் திணறுகிற.

**Pug, pugilist,** *n.* குத்துச் சண்டை வீரர்; வாதிடுபவர். *a.* pugilistic. *n.* pugilism.

**Pugnacious,** *a.* சண்டையில் ஆர்வமுள்ள. *n.* pugnacity.

**Puisne,** *a., n.* (propose) கீழ்ப் பதவி (முறைவர்).

**Puissant,** *a.* வலிமையுள்ள. *n.* puissance.

**Puke,** *v.* வாந்தி எடு.

**Pule,** *v.* மெல்ல அழு; அழுங்கு.

**Pull,** *v.* இழு. *n.* இழுப்பு; இழுப்பாற்றல்.

**Pulley,** *n.* கப்பி; வட்டு; உருளை.

**Pulmonary,** *a.* நுரையீரலுக்குரிய.

**Pulmonete,** *a.* நுரையீரல் போன்ற உறுப்புடைய.

**Pulmonic** *a.* நுரையீரல் நோய் உடைய.

**Pulp,** *n.* கூழ்; களி; குழம்பு; (கொட்டையின்) பருப்பு; (பழம் முதலியவற்றின்) சதை. *a.* pulpy.

**Pulpit,** *n.* (கோயில்) சொற் பொழிவு மேடை.

**Pulsate,** *v.* (pulse 1) நாடி துடி; ஒழுங்காக விரிந்து சுருங்கு. *n.* pulsation. *a.* pulsative.

**Pulse,** 1. *n.* நாடி; ஒழுங்கான துடிப்பு; *v.* (நாடி) துடி; 2. பருப்பு வகைக் கூலம். (1) *v. see* pulsate.

**Pulverize, -se,** *v.* பொடிசெய். *a.* pulverisable. *n. ag.* pulverizer, -ser.

**Pumice,** *n.* (கடல் நுரை போன்ற) ஒருவகைக் கல்.

**Pummel,** *v.* (முட்டியால்) திரும்பத் திரும்பக் குத்து.

**Pump,** *n.* விசைக் குழாய்; துருத்திக் குழாய்; வாங்கு குழாய்; குழாய்ப் பொறி. *v.* குழாய்ப்பொறி இயக்கு. (நீர், காற்று முதலியவற்றைப்) புகுத்து அல்லது அகற்று. செய்தியை ஒருவனிடமிருந்து வெளிப்படுத்து.

**Pumpkin,** *n.* பூசணிக்காய்.

**Pun,** *v.* சிலேடையாகப் பேசு. *n.* சிலேடை. *n. ag.* punster.

**Punch,** 1.*n.* பானகம்; ஐம்பால்; ஐம்பழச் சாறு. 2. *v.* துளையிடு; முட்டியால் குத்து. n (தாளில்) துளையிடுங் கருவி; தமர் ஊசி; துளைக்கருவி.

**Puncheon,** *n.* துளையிடுங் கருவி; ஒருவகைப் பாவு கல்; கடாகம்; மிடாவகை.

**Punctual,** *a.* நேரந்தவறாத. *adv.* punctually. *n.* punctuality.

**Punctuate,** *v.* நிறுத்தக் குறிகளை யிடு; இடையிடையே மறித்துக் கூறு. *n.* punctuation. நிறுத்தக்குறி முறை. நிறுத்தக் குறியமைதி.

**Puncture,** *n.* சிறு கிழிசல்; தொளை யிடுதல்; தொளை. *v.* கிழி; துளையிடு.

**Pungent,** *a.* காரமான; மனத்தைப் புண்படுத்துகிற. *n.* pungency.

**Punish,** *v.* தண்டனை செய். *a.* punishable. *n.* punishment.

**Punitive,** *a.* தண்டனையாக விதிக்கப்படுகிற; தண்டிக்கிற.

**Punkah,** *n.* (இந்திய வழக்கு) இழுப்பு விசிறி; விசை விசிறி.

**Punt,** 1.*n.* பரிசில் ஓடம். *v.* படகு ஓட்டு. 2. *v.* சூதாட்டத்தில் பணயம் கட்டு. 3.*v. n.* (உதை பந்து) நிலத்தில் விழுமுன் முதலுதை (கொடு) *n. pers.* punter, puntist.

**Puny,** *a.* மிகச்சிறிய; நுண்ணிய; வலிமையற்ற. *n.* puniness.

**Pup,** *n. see* puppy. *v.* (நாய்) குட்டிபோடு; ஈனு.

**Pupa,** *n.* (*pl.* pupae) (பூச்சி யினத்தின் இடை ஓய்வுப் பருவத்) துயிற் கூடு. *v.* pupate. *n. abs.* pupation.

**Pupil,** *n.* 1. பள்ளி மாணவன்; இளைஞன் . 2. கண்மணி; கண் பாவை. (1) *n.* pupilage, பள்ளிப் பருவம் (2) *a.* pupillary, கண்மணிக்குரிய.

**Puppet,** *n.* பொம்மை; கைப் பொம்மை. *n.* puppet-show, பொம்மலாட்டம்; பாவைக் கூத்து.

**Puppy,** *n.* நாய்க்குட்டி; வீண் பகட்டுக்காரன் . *n.* சுருக்கம். *v. n. see* pup. *n.* puppyism, தற்பகட்டு. *a.* puppyish.

**Purblind,** *a.* அரைக் குருடான; பண்புணராத; மூடமான. *n.* purblindness.

**Purchase,** *v.* விலைக்குவாங்கு. *n.* விலைக்கு வாங்குதல்; கொள் முதல்; கொள்முதல் பொருள். *a.* purchasable. *n. ag.* purchaser.

**Pure,** a தூய்மையான; கலப்பற்ற; குற்றமற்ற. *n.* purity, pureness. *adv.* purely, முற்றிலும்; தீர. *n. see* purism.*v. see* purify.

**Purgation,** *n.* (purge) தூய்மைப் படுத்துதல்; பேதியினால் குடல் தூய்மைப் படுதல்; குற்றமற்றவன் என எண்பித்தல்; (அவை குழு) வேண்டாதவரகற்றல். *a., n.* purgative, பேதி மருந்து. *a. n. see* purgatory.

**Purgatory,** *a.* (purgation) தீவினை போக்குகிற. *n.* ஆன் மாக்களின் பழி களையப்படும் இடம்; கழுவாய் பெறுவதற்காக மேற் கொள்ளப்படும் துன்பம்; வினைநிலம் (கர்ம பூமி); நில உலகம்; நடு உலகம். *a.* purgatorial.

**Purge,** *v.* மாசு போக்கித் தூய்மைப் படுத்து; பேதியாகு; குற்றத்தை

நீக்க. *n.* மாசுகளை நீக்குதல்; (எதிரிகளை) கட்சி அல்லது சமூகத்திலிருந்து ஒழித்தல். *n. see* purgation. *a., n.* purgatory etc.

**Purify,** *v.* (pure) தூய்மையாக்கு; பழி போக்கு. *n. ag.* purifier. *n.* purification, *a.* purificator.

**Purism,** *n.* (pure) தனித் தாய்மொழிக் கோட்பாடு; 'கடுந் தூய்மை முறை'. *n. pers.* purist, *a.* puristic.

**Puritan,** *n.* (சமயம், ஒழுக்கம்) கடுந் தூய்மையாளர்; கடுந் தூய்மைச் சமயத்தார். *a.* puritanic(al), கடுமையான ஆசாரமுள்ள *n.* puritanism.

**Purity,** *n. see* pure.

**Purl,** 1.*v.* சலசலவென்று ஒலி. *n.* சலசலவெனும் ஒலி. 2. *v.* குஞ்சம் வைத்துத் தை; எதிராகத் தை. *n.* குஞ்சம்; கரைக்கட்டுப் பின்னல் வேலை; எதிர்த் தையல்.

**Purlieu,** *n.* எல்லைப் பகுதி. *(pl.)* சுற்றுப்புறம்.

**Purloin,** *v.* திருடு. *n. ag. pers.* purloiner.

**Purple,** *n.* கருஞ் சிவப்பு; ஊதா; (அரசனின்) ஊதா உடை. *a.* கருஞ்சிவப்பான.

**Purport,** *v.* பொருள்படு; பொருளுள்ளதாகத் தோன்று. *n.* pur'port, பொருள்; கருத்து.

**Purpose,** *a.* கருது; எண்ணு; *n.* pur'pose, கருத்து; நோக்கம். *a.* purposeful. *(neg.)* purposeless *adv.* purposely, வேண்டுமென்றே (செய்த.) *a.* purposive, நோக்கத்தினால் தூண்டப்பட்ட.

**Purr,** *v.* உறுமு; மகிழ்ச்சி தெரிவித்து ஒலி செய்.

**Purse,** *n.* பணப்பை; பணம் பரிசுத் தொகை. *v.* உதடு. புருவம் முதலிய வற்றைச் சுருங்கச் செய் பணப் பையில் போடு.

**Pursue,** *v.* பின் தொடர்ந்து செல்; பெறுவதற்கு முயற்சி செய். *a.* pursuable, pursuant, *n.* pursuance, pursuit, பின் தொடர்தல்; துரத்துதல்; தொழில்.

**Pursy,** *a.* தடித்த; மூச்சடக்க முடியாத.

**Purvey,** *v.* தேவைகளை உண்டு பண்ணிக்கொடு *n.* purveyance. *n. pers.* purveyor.

**Purview,** *n.* கவனிப்புக்கு உட்பட்ட எல்லை.

**Pus,** *n.* சீழ்.

**Push,** (புஷ்) *v.* தள்ளு; தூண்டு; முயற்சி செய். *n.* தள்ளுதல்; முயற்சி. *a.* pushing, முனைப்பியல்புடைய; முனைத்த தன் முயற்சியுடைய (*comb.*) *n.* push money, விற்பனையைப் பரப்புவதற்கான மிகுதிப்பணம்.

**Pusillanimous,** *a.* இழிந்த; திடமனமற்ற. *n.* pusillanimity.

**Puss, pussy,** *n.* பூனை; குழந்தையின் செல்லப் பெயர்.

**Put,** 1. *v.* (put) வை; போடு; அமர்த்து 2. *see* putt. *phr.* put in, இடைவை; பெய்; இடை

யிட்டுச் சொல்; புகுத்து; நுழை. put up, தங்கவை; தங்கல் வாய்ப்பளி. (passive; be put up in, தங்கு. put up with, சமாளி; ஏற்றுச் சமாளி; பொறுத்துச் சமாளி. (put on, (விளக்கு ஏற்று, put out, (விளக்கு) அணை. put off, கடத்து.

**Putt, put,** *v.* (பட்) (putted) பந்தைக் குழியில் வீழ்த்து; பளு எறி. (putting the shot, குண்டெறி பயிற்சி.)

**Putative,** *a.* (பலரால்) கருதப்பட்ட.

**Putrescent,** *a.* அழுகுகின்ற. *n.* putrescence.

**Putrid,** *a.* அழுகிய. *n.* putridity, putridness.

**Puzzle,** *n.* தடுமாறவைக்கும் கேள்வி; விடுகதை; புதிர். *v.* திகைக்கச் செய்.

**Pygmy,** *n. see* pigmy.

**Pyjamas,** *n. (pl.)* தளர்த்தியான கால் சட்டை.

**Pyorrhoea,** *n.* பற் சீழ் நோய்.

**Pyramid,** *n.* அடி செவ்விருவான கூர்முனை வடிவம்; மோட்டுருவம்; 'மோடு'; கோபுரம், *a.* pyramidal.

**Pyre,** *n.* சிதை; ஆசந்தி; பாடை; ஈம விறகுக் குவியல்.

**Pyrites,** *n.* கந்தகக் கல்.

**Pyrotechnic,-al,** *a.* பட்டாசு வாணங்களுக்குரிய. *n. (pl.)* pyrotechnics, வாண வேடிக்கை (கலை). *n. pers.* pyrotechnist.

**Pyrrhic,** *a.* (-victory) அளவுக்கு மிகுதியான, செலவில் பெற்ற.

**Python,** *n.* (பெரிய) மலைப்பாம்பு.

**Pyx,** *n.* தேர்ந்து பார்த்த நாணயங்கள் வைத்திருக்கும் பெட்டி. *v.* நாணயத்தைத் தேர்ந்து பார்.

**Pyxis,** *n.* சிறு பெட்டி; பேழை.

# Q

**Quack,** *n.* போலிமருத்துவர். *v.* போலி மருத்துவராக நடி. *a.* quackish.

**Quad,** 1. *n. see* quadrangle) 2. (see quadart.)

**Quadragenarian,** *n.* நாற்பது வயதானவர்.

**Quadragesimal,** *a.* நாற்பது நாள்கள் நீடிக்கிற.

**Quadrangle,** *n.* நாற்கோண உருவம்; அங்கணம்; உள்முற்றம் (சுருக்கம். quad), *a.* quadrangular.

**Quadrant,** *n.* கால் வட்டம்; வட்டத்தில் நாலில் ஒன்று. ஒருவகைக் கோணமானி.

**Quadrat, Quad,** *n.* (அச்சு எழுத்துகளிடையே) இடைக் கட்டை.

**Quadrate,** *a., n.* சதுரமான (உருவம்).

**Quadratic,** *a., n.* தற்பெருக்கமான (எண்). *n.* quadratics.

**Quadrennial,** *a.* நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையான.

**Quadrilateral,** *a., n.* நான்கு பக்கமுள்ள (உருவம்).

**Quadrille,** *n.* (நால்வர் ஆடும்) சீட்டாட்ட வகை.

**Quadruped,** *a.* நான்கு மடங்கான. *n.* நான்கு மடங்கு. *v.* நான்கு மடங்காக்கு.

**Quadruplet,** *n. (pl.)* (ஒரு பேற்றின்) நான்கு குழந்தைகள்.

**Quadruplicate,** *a., n.*நான்கு மடங்கான; நான்கு படிகளான. *v.* நான்கு மடங்காக்கு.

**Quaff,** *v.* மிகுதியாகக் குடி; விடாது பருகு.

**Quag,** *n.* சதுப்பு நிலம். *a.* quaggy.

**Quagmire,** *n.* சதுப்பு நிலம்.

**Quail,** *n.* ஒருவகைப் பறவை. *v.* அஞ்சு; நடுங்கு.

**Quaint,** *a.* வியப்பான; வேடிக்கை யான. *n.* quaintness.

**Quake,** *v.* அச்சப்படு; நடுங்கு *n.* நடுக்கம்.

**Qualification,** *n.* தகுதி; திறமை; மாறுதல்; கட்டுப்பாடு; கட்டுத் திட்டம்.

**Qualified,** *n.* தகுதியான; கட்டுத் திட்டங்களுக்குட்பட்ட.

**Qualify,** *v.* தகுதியாகு; தகுதியாக்கு; மாறுதல் செய்; வரம்பு செய்; மட்டுப்படுத்து. (இலக்கணம்; பெயர்ச் சொல்லைத்) தழுவு; பண்பேற்று.

**Qualitative,** *a.* பண்புக்குரிய; குணத்தை ஆய்கிற.

**Quality,** *n.* குணம்; பண்பு; தன் மை; உயர்குணம்; உயர் பிறப்பு.

**Qualm,** *n.* மன உறுத்துதல்; மன நடுக்கம். *a.* qualmish. *n.* qualmishness.

**Quandry,** *n.* இருதலைக் கொள்ளி எறும்பு நிலை; இக்கட்டு நிலை.

**Quantify,** *v.* அளவுக் கணக்கெடு.

**Quantitative,** *a.* அளவுக்குரிய

**Quantity,** *n.* அளவு; மிகுதி; மிகுதிப்பாடு.

**Quarantine,** *v.* தொத்து நோய்க் காகத் தனிப்படுத்திவை; தொற்றுக் காப்புச் செய். *n.* தொத்து நோய்க் காகத் தனிப்படுத்தி வைத்தல் (காலம்); தொற்றுத் தடுப்புக்காலம்; தொற்றுத் தடுப்பிடம்.

**Quarrel,** *n.* சண்டை; சச்சரவு. *v.* சச்சரவு செய். *a.* quarrelsome.

**Quarry,** 1. *n.* வேட்டை உயிரினம்; வேட்டை விலங்கு. 2. *n.* வெட்டப்படும் சுரங்கம்; கல் சுரங்கம்; கல்குதை குழி; கல்கரு; கல்வெட்டுக் கரு; செய்தி அறியப்படுமிடம். *v.* (கல்வெட்டு மிடத்திலிருந்து) கல் எடு; தேடியெடு. *pron.* quarrying, கல்வெட்டி எடுத்தல்.

**Quart,** *n.* ‘காலன்’ அளவில் நான் கில் ஒன்று; இரண்டு பைன்ட் அளவு.

**Quarter,** *n.* நான்கிலொன்று; கால் பாகம்; 28 கல் எடை நிறை; இடப்பகுதி; (தோற்று எதிரிக்கு) விட்டுக் கொடுத்தல். *n. (pl.)* quarters, இருப்பிடம்; குடி யிருப்பு; குடியிருப்பிடம்; துருப்புகள் தங்குமிடம். *comb.*

*n. pl.* headquarters, (சுருக்கக் குறியீடு Hqrs.) தலைமையிடம்; தலைமைப் பணிமனை. *v.* give quarter, இடமளி; சலுகை கொடு. give no quarter, இடம் மறு; சலுகை மறு.

**Quarter-deck,** *n.* கப்பல்மேல் தளத்தின் பிற்பகுதி.

**Quarterfoil,** *n. see* quartrefoil.

**Quarterly,** *a.* ஆண்டில் நான்கு முறை நிகழ்கிற. *n.* மூன்று மாதத்துக்கு ஒரு முறை வெளி வரும் செய்தி இதழ். *adv.* மூன்று மாதத்துக்கு ஒரு முறையாக.

**Quartermaster,** *n.* தங்கிட வாய்ப்பு மேலாள்.

**Quarterstaff,** *n.* படைக் கருவி யாக வழங்கக்கூடிய கைத்தடி.

**Quartel(te),** *n.* நால்வர் சேர்ந்து பாடும் இசை; நாலடிச் செய்யுள்.

**Quarto,** *n.* (*pl.* quartos) நான்காக மடித்த அளவு; அந்த அளவுள்ள புத்தகம்.

**Quartz,** *n.* படிகக் கல்.

**Quash,** *v.* நசுக்கு; ஒழித்தழி; தள்ளுபடி செய்.

**Quasi,** *conj. prefix,* போலியான; பொய்த் தோற்றமான; அரை குறையான. *comb. n.* quasi public bodies, அரைகுறைப் பொது நிலையங்கள்.

**Quarter-centenary,** *n.* நானூ றாண்டு விழா.

**Quaternary,** *a.* நான்கு பகுதி களுள்ள; நான்கான. நான்காம் காலத்தைச் சேர்ந்த. *n.* நான்கு சேர்ந்த தொகுதி; நான்கு எனும் எண்.

**Quatrain,** *n.* நான்கடிச் செய்யுள்.

**Quatrefoil, quarterfoil,** *n.* நாற்பகுதியுள்ள இலை; நான்கு இதழ் களாயமைந்த சித்திர வேலை.

**Quaver,** *v.* (குரல்) நடுங்கு; நடுங்கும் குரலுடன்; பாடு. *n.* குரல் நடுக்கம். *a.* quavery.

**Quay,** *n.* (கீ) கப்பலில் - சரக்கு ஏற்றி இறக்குமிடம்; இரேவு. *n. abs.* quayage.

**Quazi** *n.* (இஸ்லாமிய வழக்கு) சமயச் சட்ட அறிஞர்; சமயகுரு.

**Quean,** *n.* துட்டை; நடத்தை கெட்டவள்.

**Queen, dowager,** *n.* கைம்பெண் ணான அரசி.

**Queer,** *a.* வியப்பான; பழக்கத்தில் இல்லாத; அரைக்கிறுக்கான.

**Quell,** *v.* வல்லந்தமாக அடக்கு; கீழ்ப்படியச் செய்.

**Quench,** *v.* தணி; (நெருப்பை) அணை.

**Querist,** *n.* (query) வினவுவோர்.

**Quern,** *n.* எந்திரம்; திரிகை.

**Querulous,** *a.* குறைசொல்லுகிற; சிடுசிடுப்புள்ள. *n.* querulous ness.

**Query,** *v.* (queried) வினவு; ஐயத்தைத் தெரிவி. *n.* வினா; வினாக்குறி(?)

**Quest,** *n.* தேடுதல்; தேடும் பொருள். *v.* தேடிச் செல்; வேட்டை தேடு.

**Question,** *n.* வினா; ஆய் பொருள்; வாதத்துக்குரியது; வாதத் தடை; ஐயம். *v.* வினவு; எதிர்த்துக் கேள்; எதிர்வாதமிடு; உரிமை எதிர். *a.* questionable, ஐயப்படத் தக்க; உறுதியற்ற; வாதத்திற் கிடமான.

*questionnaire, n.* வினாத் தொகுதி.

**Queue,** *n.* (க்யூ) வரிசை; பின்னல். *v.* பின்னு; வரிசையாக நில்.

**Quibble,** *n.* சொல்லைப் புரட்டுதல்; சிலேடை. *v.* சொல்லைப்புரட்டு; சிலேடை பேசு. *n. pers.* quibbler.

**Quick,** *a.* விரைவான; சுறுசுறுப் பான; உயிருள்ள; எளிதில் சினம் கொள்கிற. *adv.* விரைவாக. *v.* quicken. *adv.* quickly. *n.* quickness. *phr. n.* quick assets, உடனே கையில் காசாக்கக் கூடிய சொத்து.

**Quickness.,** *n.* விரைவு; அறிவுக் கூர்மை.

**Quicksand,** *n.* புதைமணல்.

**Quickset,** *n.* உயிருள்ள செடிகளா லமைந்த வேலி.

**Quicksilver,** *n.* பாதரசம்.

**Quicktempered,** *v.* முன் சினமுள்ள; பதற்றமுள்ள.

**Quick-witted,** *a.* அறிவுக் கூர்மையுள்ள.

**Quid,** *n.* மெல்லும் புகையிலைத் துண்டு.

**Quiddity,** *n.* இயல்பு; தனிப்பண்பு; சிலேடை.

**Quid pro quo**. *n.* சரிக்குச் சரி; இழப்பீடு.

**Quiescent,** *a.* அமைதியான.

**Quiet,** *n.* அமைதி; அசைவின் மை. *a.* அமைதியான; ஓசையற்ற. *v.* அமைதியாக்கு; ஆற்று. *n.* quietness, quietude. *v.* quieten, அமைதியா(க்)கு.

**Quietus,** *n.* சாவு; விடுபாடு; ஓய்வு; ஒழிவு.

**Quill,** *n.* இறகு; இறகு எழுதுகோல்; பன்றியின் முள்.

**Quilt,** *n.* மெத்தை; திண்டு; பஞ்சுறை. *v.* மெத்தையைப் போல் தை. *n.* quilting.

**Quinary,** *a.* ஐந்துக்குரிய; ஐந்தைந்தான.

**Quinate,** *a.* ஐந்து சிற்றிலைகள் சேர்ந்தமைந்த இலை.

**Quindecennial,** *a., n.* பதினைந் தாம் ஆண்டு முடிவு (விழா).

**Quinine,** *n.* (தென் அமெரிக்க மரவகைப் (cinchona) பட்டையி லிருந்து உருவாக்கப்படும்) மலங்காய்ச்சல் மருந்துப் பொடி.

**Quinquennial,** *a.* ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை நிகழ்கிற; ஐந்து ஆண்டுகள் நீடிக்கிற. *n.* quinquennium. ஐந்தாண்டுத் தொகுதி.

**Quinsy,** *n.* தொண்டைப் புண்.

**Quintessence,** *n.* ஐவடிசத்து. உள்ளுயிர்ச் சத்து.

**Quintillion,** *n.* ($10^{30}$) பத்தைப் பத்தால் முப்பது முறை பெருக்கிய எண்ணிக்கை.

**Quintuple,** *a.* ஐந்து மடங்கான.

**Quintuplet,** *n.* ஒரு பேற்றில் பிறந்த ஐந்து குழவிகளில் ஒன்று.

**Quip,** *n.* திறமையுள்ளபேச்சு; குத்தலான சிலேடைப் பேச்சு. *n. pers.* quipster. *a.* quippish.

**Quire,** 1. *n.* இருபத்து நான்கு தாள் அடுக்கு. 2. (*see* choir.)

**Quirk,** *n.* மழுப்புதல்; பேச்சைத் திருப்புதல்; சிலேடை.

**Quirt,** *n.* கசை. *v.* கசையால் அடி.

**Quisling, quisler,** *n.* மாற்றான் கையாள்; உட்பகைவர்.

**Quit,** *a.* விடுபட்ட; கட்டுப்பாடில்லாத. *v.* கைவிடு; துற; விடுவி; நீங்கிச்செல். *comb. n.* quitrent, விடுவரி. quitrent assessment, விடுவரி மதிப்பீடு.

**Quite,** *adv.* முழுதும்; முற்றிலும்; எஞ்சாது; தீர.

**Quit-rent,** *n.* மானிய நிலத் தீர்வை.

**Quits,** *a.* கட்டுவிட்ட.

**Quittance,** *n.* கடன் தீர்த்தல்; விடுபடல்.

**Quiver,** *n.* அம்பறாத் தூணி. *v.* நடுங்கு; துடி. *n.* நடுக்கம்; துடிப்பு; *adv.* quiveringly.

**Quixote,** *n.* கோமாளி வீரர் விசித்திரப் பண்புடையவர். *a.* quixotic.

**Quiz,** *n.* விடுகதை; ஏமாற்றம்; எப்போதும் விடுகதையாக பேசுபவர். *v.* கேலிசெய்; உற்றுப் பார். *a.* quizzical, ஏய்ப்பு நகைத் தோற்றமுடைய நகைப் புதிர் உடைய.

*quod vide*, (சுருக்கம்; *q.v.*) மேற்கோள் பார்க்கவும்.

**Quoin,** *n.* (காய்ன்) கட்டடத்தின் வெளி மூலை; ஆப்பு; முடுக்க உதவும் சிறு ஆப்பு. *v.* ஆப்பு அறை.

**Quondam,** *adj.* முற்காலத்திய.

**Quorum,** *n.* (குழு, கூட்டத்துக்கு வேண்டிய) குறைந்த அளவு உறுப்பினர் (தொகுதி); குறை வெண்.

**Quota,** *n.* பங்கு வீதம்; (மொத்தத்திலிருந்து) உரிய பங்கு.

**Quotation,** *n.* மேற்கோள்; எடுத்துக் காட்டு வாசகம் குறிக்கப் பட்ட விலை; மேற்கோள் குறிகள்: (“ ........”, ‘ .......’).

**Quote,** *v.* மேற்கோள் காட்டு; விலை கூறு. *a.* quotable. quoteworthy. *n. see* quotation.

**Quoth,** *a.* (பழவழக்கு) சொன்னேன் ; சொன்னார். (quotha = quoth he), உண்மையாக.

**Quotient,** *n.* ஈவு.

# R

**Rabbet,** *n.* பலகைப் பொருத்து.

**Rabbi, rabbin,** *n.* யூத குரு.

**Rabbit,** *n.* குழி முயல்; திறமையற்றவர்.

**Rabble,** 1. *n.* ஒழுங்கற்ற கூட்டம்; பொதுமக்கள் கும்பல். 2. *n.* (உருகின உலோகத்தைக் கிளற உதவும்) இரும்புக் கோல்.

**Rabid,** *a.* வெறி பிடித்து.

**Rabies,** *n. pl.* பித்துப்பிடித்த நாய்க்கடி; வெறிநாய்க்கடி; வெறி நாய் நச்சு; நாய்ப்பித்து. *a.* rabic (x antirabic).

**Race,** 1. *n.* கால் வழி; குடி மரபு; இனமரபு; மரபினம்; மக்கள் இனம். 2. *n.* ஓட்டப் பந்தயம். *v.* பந்தயத் திற்கு ஓடு. (1) *a. see* racial.

**Race-course,** *n.* (race 2) குதிரைப் பந்தயம் (நடை பெறும் இடம்).

**Racer,** *n.* (r. race) பந்தயக் காரன்; பந்தயக் குதிரை.

**Raceme,** *n.* (ரஸீம்) பூங்கொத்து.

**Racial,** *a.* (race 1) இனம் சார்ந்த.

**Rack,** 1. *n.* ஓடும் முகில். 2. *n.* மரச்சட்ட நிலை. அடுக்கு நிலை; புத்தகம் அடுக்கும் சட்டம். 3. *n.* சித்திரவதை செய்யும் கருவி; சித்திரவதை. *v.* மரச் சட்டத்தில் வை; சித்திரவதை செய்; கடு வேலை கொடு (3) *n.* rack - rent, மட்டு மிஞ்சிய வாடகை.

**Racket,** 1. *n.* (தொழிலாளியை அச்சுறுத்திப் (பணம் பறித்தல். 2. *n.* racket, recquet, பந்து மட்டை. *(pl.)* ஒருவகைப் பந்தாட்டம். 2. *n.* பனி மிதியடி. 4. *n.* குழப்பம்; கும்மாளம். *v.* கூச்சலிட்டு விளையாடு. (1) *n. pers.* racketeer. தொழிலாளி யிடமிருந்து பணம் பறிப்பவன். *v. abs.* racketeering. (2) *a.* rackety.

**Racy,** *a.* தனிப்பட்ட சிறப்புள்ள; விறுவிறுப்பான. *n.* raciness.

**Radar,** *n.* தொலை இயக்கமானி; தொலைப்புலமானி; பகைத்திற இயக்கமறியும் கருவி.

**Raddle,** *n.* சிவப்பு வண்ணம். *v.* சிவப்பு வண்ணம் தீட்டு.

**Radial,** *a.* ஒளிக்கதிர்களைப் போன்ற; ஆர வளைவுகள் போல அலையலையாகச் செல்கிற. *n.* (உடலின்) தலைமைக் குருதிக் குழாய்.

**Radiant,** *n.* ஒளி வீசுகிற. *n.* radiance.

**Radiate,** *v.* (ஒளி, மின் ஒலி) அலை பரவு; அலை பரப்பு; வட்டாகார மாகப் பரவு; வட்டாகாரமாகப் பரப்பு; ஒளி பரவு; ஒளிபரப்பு; சுடரிடு; ஒளிபிறங்கு. *a.* மையத்தி லிருந்து நாற்றிசை களிலும் செல்லுகிற. *n. impers.* radiator. *n.* radiation.

**Radical,** *a.* வேர் நிலையான; முக்கியமான. *n.* radicalism. அடிப்படையையே மாற்றி யமைக்க விரும்பும் கோட்பாடு.

**Radicle,** *n.* சிறுவேர்; முளைவேர்; விதையிலிருந்து வேராகக் கிளம்பும் பகுதி; (உடலியல்) முளைவேர்.

**Radio.** *n.* வானொலி.

**Radio-active,** *a.* அணுச் சிதை வினால் கட்புலனாகாத கதிர்களை வெளிவிடுகிற; நுண்ணதிர் வுடைய. *n.* radio-activity.

**Radiogram,** *n.* வானொலிச்செய்தி.

**Radiograph,** *n.* கதிர்வீச்சு முறையால் எடுத்த படம்.

**Radiology,** *n.* கதிர்வீச்சு அலை முறை மருத்துவம் *n. pers.* radiologist.

**Radiometer,** *n.* கதிர்வீச்சு அளவைக் கருவி.

**Radish,** *n.* முள்ளங்கிக் கிழங்கு.

**Radium,** *n.* 'ஒளிமம்'; உலோக வகை.

**Radius,** *n.* (*pl.* radii) அரை விட்டம்; ஆரம்; முன் கையி லுள்ள எலும்பு.

**Radix,** *n.* (*pl.* radices), வேர்; மூலம்.

**Radon,** *n.* 'ஒளிஞம்'; செயலற்ற ஆனால் ஒளிமக்கிளர்ச்சியுள்ள மூலப்பொருள் வகை.

**Raffle,** *n.* குலுக்குச் சீட்டு.

**Raft,** *n.* கட்டுமரம்; தெப்பம்; *v.* கட்டுமரத்தினால் கட.

**Rafter,** *n.* உத்திரம்; கைம்மரம்.

**Rag,** *n.* கந்தை. *v.* திட்டு இழிவாகப் பேசு; துன்புறுத்து; உரத்து கூச்சலிடு.

**Ragamuffin,** *n.* கிழிந்த ஆடை அணிந்த கீழோன்.

**Rage,** *n.* சீற்றம்.

**Ragged,** *a.* கந்தலான; கந்தலணிந்த.

**Raid,** *n.* கொள்ளையிடல்; தாக்குதல்; காவலர்களின் திடீர்ச் சோதனை. *v.* கொள்ளை யிடு; தாக்கு; சோதனை செய்.

**Rail.** 1. *n.* கம்பி; கிராதி; இரும்புச் சட்டம்; தண்டவாளம் இருப்புப் பாதை. *v.* கிராதியால் அடை. 2. *v.* வசைச் சொல் கூறு; இகழ்ந்து பேசு (1) *n.* railing வேலி; கிராதி யடைப்பு. *n.* railway, இருப்புப் பாதை. *n.* railroad traffic. (இருப்புப் பாதை, வண்டிப் பாதைப் போக்கு வரவு. *a.* rail-borne, தண்டவாளத்தின் மீது செல்லுகிற; இருப்புப்பாதையில் செல்லுகிற. (2) *n.* railing. raillery, வசவு.

**Raiment,** *n.* ஆடை.

**Rain,** *n.* மழை; *v.* மழை பொழி; பெய். *n.* rainfall, மழை பொழிவு; மழை பெயல்; மழை வீழ்ச்சி (அளவு). *n.* raingague, மழை யளக்கும் கருவி. *n.* rain coat, மழைநீர் புகாத மேலங்கி.

**Rainbow,** *n.* வானவில்.

**Rainproof,** *a.* மழையில் நனைந்து ஊறாத.

**Rainy,** *a.* மழையுள்ள. *(fig.)* rainyday, பணம் தேவையுள்ள காலம்; ஏழ்மையான நிலை.

**Raise,** *v.* உயர்த்து; தூக்கு; நிறுத்து; எழுப்பு.

**Raisin,** *n.* உலர்ந்த கொடி முந்திரிப்பழம்.

*raison d'tere,* *n.* தோற்ற முதற் காரணம்; விளக்கக் காரணம்.

**Rake,** 1. *n.* பரம்புச் சட்டம். *v.* (தளம், வைக்கோல்) சமப்படுத்து; பரம்படி. 2. *n.* கயவன்; தீநெறியில் செல்பவன். (2) *a.* rakish.

**Rally,** 1.*v.* ஒன்று கூடு; (புதிய தாக்குதலுக்குப் படையைத்)

திரட்டு; புதிய ஊக்கம் பெறு; புதிய ஆற்றலுடன் உதவிக்கு வா. *n.* புதிய ஊட்டம் பெறுதல்; அணி திரட்டு. 2. *v.* கேலி செய்.

**Ram,** 1. *n.* செம்மறியாடு; மேட வீதி; சித்திரை வீடு. 2. அரண் தகர்ப்புப் பொறி. *v.* இடி; தகர் தாக்கு.

**Ramble,** *v.* திரி; நட; வகையறப் பேசு; எழுது. *n.* திரிதல். *n. ag.* rambler. *a.* rambling.

**Ramify,** *v.* கிளைவிடு; பலகிளை களாகப் பிரி; பல்கிப் பரவு. *n.* ramification.

**Rampage,** *v.* சீறித் துள்ளு. *n.* சீற்றப்படுதல்.

**Rampant,** *a.* மூர்க்கமான; தடையில்லாத; செழிப்பான.

**Rampart,** *n.* கோட்டை; மதில்; அலங்கம்; பாதுகாப்பு. *v.* மதில் எழுப்பிக் காவல் செய்.

**Ramrod,** *n.* பீரங்கியில் மருந்து திணிக்க உதவும் கோல்.

**Ramshackle,** *a.* இடிந்த; பாழான.

**Ran,** *v.* (*see* run.)

**Ranch,** *n.* (ஆடு, மாடு அல்லது குதிரைகளின்) பெரிய பண்ணை.

**Rancid,** *a.* ஊசிப்போன; அழுகிய நாற்றமும் சுவையுமுடைய.

**Rancour,** *n.* தீராப் பகை. *a.* rancorous.

**Rand,** *n.* மிதியடிக் குதிங்கால் சிறுதோல்.

**Random,** *n.* தோன்றியபடி செய்தல். *a.* மனம்போனபடி செய்யப்பட்ட; தற்செயலான; அரிதான.

**Range,** *v.* வரிசையாய் வை; வரிசையாயிரு; திரி; பரவு. *n.* வரிசை; பரப்பு; குண்டு பாயுந் தொலை; செல்வாக் கெல்லை; மலைத்தொடர்.

**Ranger,** *n.* காடுகளின் மேற் பார்வையாளர். *(pl.)* குதிரைப் படை.

**Rank,** 1. *n.* வரிசை; மதிப்பு; மதிப்புத் தூதரம். *v.* வரிசையாய் நிறுத்து; அடுக்கு; ஒரு வகுப்பில் சேர். 2. *a.* அளவு மீறின செழிப்பான; முடைநாற்றமான; வெறுக்கத்தக்க. (1) (*phr.*) rank and file பொது நிலையாளர்.

**Rankle,** *v.* மனம் புண்படு.

**Ransack,** *v.* துருவித் தேடு; கொள்ளைகொள்.

**Ransom,** *n.* விடுதலைப் பணம். *v.* விடுதலையடையப் பணம் கொடு; பணம் கொடுத்து விடுவி.

**Rant,** *v.* வீண் ஆரவாரப் பேச்சுப் பேசு; உரத்த குரலில் முழங்கு. *n.* வீண் பேச்சு. *n. ag.* ranter.

**Rap,** *v.* தட்டு. *n.* தட்டுதல்; முட்டியில் அடித்தல்.

**Rapacious,** *a.* கொடுங் கொள்ளை யிடுகிற. *n.* rapacity.

**Rape,** 1. *v.* கற்பழி. *n.* கற்பழித்தல். 2. *see* rapeseed.

**Rapeseed,** *n.* (கொடி முந்திரி பிழிந்தபிறகு உள்ள சக்கை) விதைகள்.

**Rapid,** *a.* விரைவான; வேகமான, *n.* (நீரின்) இழுப்பு வேகமுள்ள இடம்; சிறிய நீர் வீழ்ச்சி. *n. abs.* rapidity.

**Rapier,** *n.* கொடுவாள்; பட்டாக் கத்தி.

**Rapine,** *n.* கொள்ளை.

**Rappert,** *n.* தொடர்பு; உறவு.

*rapproachement,* *n.* கேண்மை; இருகட்சி இணைவு முயற்சி.

**Rapt,** *a.* மனமொன்றிய; முழு தாழ்ந்த.

**Rapture,** *n.* உவகை; கழிமகிழ்வு. *a.* rapturous.

**Rare,** *a.* அரிதான; அடிக்கடி கிடைக்காத; உயர்வான; அடர்த்திக் குறைவான. (*see* rarefy). *n.* rareness. *see* rarity. *adv.* rarely.

**Rarefy,** *v.* நொய்தாக்கு; நெருக்கத்தைக் குறை; தூய்மைப் படுத்து. *n.* rarefaction. *a.* rarefactive.

**Rarity,** *n.* (rare) அருமை; அருந்தல் நிலை.

**Rascal,** *n.* போக்கிரி; கயவன்.

**Rash,** 1. *n.* சிரங்கு; தோல் நோய். 2. *a.* துடுக்கான; ஆத்திரமுள்ள; முன்பின்பாராத. (2) *n.* rashness.

**Rasher,** *n.* பன்றி யிறைச்சித் துண்டு.

**Rasp,** *v.* அராவு; துன்புறுத்து. *n.* பெரிய அரம்.

**Raspberry,** *n.* பழவகை.

**Rat,** *n.* எலி.

**Ratable,** *a.* (rate) மதிப்பிடக் கூடிய.

**Ratal,** *n.* (rate) தீர்வை உறுதிக்குக் கொள்ளப்படும் தொகை.

**Rate,** *n.*. விலை; வீதம்; தீர்வை. *v.* விலை மதிப்பிடு; கணக்கிடு; திட்டு; கண்டித்துப் பேசு; வரி போடு. *a. see* ratable. *s. n. see* ratal, rating. (*comb.*) *n.* ratepayer, வரி கொடுப்போர்.

**Rather,** ad*v.* சற்று மிகுதியால்; மற்றொன்றை விட மிகுதியாக; சற்றே ஒரு சிறிது.

**Rating,** *n.* (rate) நகரவைத் தீர்வை; கப்பலின் பணிவகை; திட்டுதல்.

**Ratio,** *n.* விழுக்காடு; விகிதம்.

**Ratiocinate,** *v.* வாதம் பெருக்கு; காரண காரியம் விளக்கிக் கொண்டிரு. *n.* ratiocination.

**Ration,** *n.* பங்கீடு; பாத்தீடு. *(pl.)* குதிரைப்படை. உணவுப்பொருள். *v.* (உணவு முதலியனவற்றை) ஆள் வீத அளவு கொடு; ஆள் தொகை வீத அளவு கொடு. *comb. n.* rationing officer, பங்கீட்டுப் பணியாளர்.

**Rational,** *a.* (reason) பகுத்தறி வுள்ள *n.* rationality. *see* rationalism.

**Rationale,** *n.* காரண விளக்கம்; உள்ளார்ந்த காரணம்; விளக்கக் காரணம்; உள்ளார்ந்த விளக்கம்; இயல் விளக்கம்.

**Rationalism,** *n.* (rational) பகுத்தறிவை அடிப்படையாகக்

கொண்டகோட்பாடு. *n. pers.* rationalist. *a.* rationalistic. *v.* rationalize, -se.

**Rationality,** *n. see* rational.

**Ratsbane,** *n.* எலி நஞ்சு.

**Rat-tail(ed),** *a.* மயிரில்லாத வாலுடைய; மெலிந்து நீண்டு உருண்டுள்ள.

**Rat(t)an,** *n.* பிரம்புக் கொடி; கைப்பிரம்பு.

**Rattle,** v கடகடவென்று பேசு; வண்டியை ஓட்டிச் செல்; வேகமாக ஒப்பி. *n.* கிலுகிலுப்பை; கலகல வென்ற ஒலி *n. ag.* rattler.

**Rattle-brain,** *n.* ஆராயாமல் பேசுபவர்.

**Rattlesnake,** *n.* (வாலினால் கலகலவென்ற ஓசை யுண்டாக்கும்) நச்சுப்பாம்பு வகை.

**Rattletrap,** *n.* வண்டி; சளசள வென்று பேசுபவர்

**Rat-trap,** *n.* எலிப்பொறி.

**Raucous,** *a.* கனத்து குரலோசை யுள்ள; கடும் குரலுடைய.

**Ravage,** *v.* பாழாக்கு; *n.* பாழாக்குதல்; கொள்ளை.

**Rave,** 1. *n.* வண்டியின் இரும்புச் சட்டக் கோப்பு. 2. *v.* பிதற்று.

**Raven,** *n.* அண்டங் காக்கை. 2. பளபளப்பான கரிய நிறமுடைய. *v.* கொள்ளையடி; விழுங்கு; பெரும் பசியுடன் உண். *a.* ravenous, பெருந்தீணி தின்கிற; மிகுந்த பசியுடன் உண்கிற. *n.* ravenousness.

**Ravine,** *n.* கிடங்குக் கணவாய்; பள்ளத்தாக்கு; மலைப் பிளவு.

**Ravish,** 1. *v.* வல்லந்தமாகத் தூக்கிச் செல்; கற்பழி; 2. பெரு மகிழ்வூட்டு; பெரு மகிழ் வடைவி. (2) *a.* ravishing.

**Raw,** *a.* பச்சையான; சமையல் செய்யப்படாத; பக்குவமடை யாத; அனுபவமில்லாத; ஈரமான; செயல் முற்றுப்பெறாத; மூலப் பொருள் நிலையிலுள்ள; திருந்தாத; பண்படாத; முரடான கரடு முரடான. *comb. n.* raw rice பச்சரிசி. raw fruits, காய்கள், raw materials, தொழில் மூலப் பொருள்கள்.

**Raw-boned,** *a.* சதைப் பிடிப் பில்லாத; எலும்புந் தோலுமான.

**Ray,** *n.* கதிர். *v.* ஒளி வீசு.

**Rayon,** *n.* செயற்கைப் பட்டு.

**Raze,** *v.* தளமட்டமாக்கு.

**Razor,** அம்பட்டக் கத்தி.

**Re,** (regarding என்பதன் சுருக்கம்.) இவ் வகையில்.

**Reach,** *v.* எட்டிப் பிடி; போய்ச்சேர்; அடை n எல்லை; பரப்பு; அடையும் ஆற்றல்.

**React.** *v.* எதிர்த்துச் செயலாற்று; மாறெதிர் செய். *a.* reactive. reaction. *a.* reactionary, பிற் போக்கான.

**Read.** *v.* (ஒலிப்பு; ரீட்) (read ஒலிப்பு; ரெட்) வாசி; உரத்துப் படி; புரிந்துகொள்; புதிர் விடுவி. *n.* reading, வாசிப்பு (சட்ட) வாசிப்பு முறை (ஏட்டு மூலம்) பாட

வேறுபாடு. *a.* readable, வாசிக்கத்தக்க; எளிய. *n. ag. pers.* and *impers. see* reader. *comb. n.* reading room, படிப்பகம்; வாசிப்பகம்.

**Reader,** *n.* (read) படிப்பவர் அச்சுத் திருத்தம் படிப்பவர்; வாசகப் புத்தகம்; சிறப்புப் பேராசிரியர். *n.* readership, சிறப்புப் பேராசிரியப் பணி.

**Reading room,** *n.* படிப்பகம்; வாசிப்பகம்.

**Readjust,** *v.* திரும்ப ஒழுங்கு படுத்து.

**Readmit,** *v.* திரும்பவும் சேர். *n.* readmittance, readmission.

**Ready,** *a.* முன்னேற்பாடாயுள்ள; செயல்விரைவுள்ள; விரைந் துணர்கிற; கையருகேயுள்ள *n.* readiness. *adv.* readily.

**Ready-made,** *a.* வழங்குநிலையி லுள்ள; ஆயத்தமான.

**Ready-witted,** *a.* சமயத்துக்கேற்ற சொல்திறமுடைய.

**Reaffirm,** *v.* திரும்ப உறுதிப் படுத்து.

**Real,** *a.* உண்மையான இருக்கிற; என்றுமுள்ள; புலனுணர்ச்சிக் குரிய; மெய்யான. *adv.* really, உண்மையாக.

**Realise,** *v. see* realize.

**Real estate,** *n.* நில உடைமை.

**Realism,** *n.* இயல் வாய்மை. *a.* realistic. உயிருள்ளது போன்ற; நேர்காட்சியான. (இலக்கியம், புனைகதை) வாய்வியலான; மெய்வாய்மை கெடாத.

**Reality,** *n.* உண்மையாயிருப்பது; கற்பனையல்லாதது; இயற் பொருள் உலகு.

**Realize, -se,** *v.* அனுபவத்தால் அறி; உழைத்துப் பெறு; (கடன்) சொத்து முதலியவற்றைப் பணமாகப் பெறு; விலைபெறு; பயன் பெறு; எய்தப் பெறு; கைவரப்பெறு; மெய்வரப் பெறு; காணப்பெறு. *n.* realization, -sation.

**Realm,** *n.* அரசு; ஆட்சி பரவி யுள்ள பகுதி.

**Ream,** *a.* 480 தாள்கொண்ட கட்டு. (20 'குயர்'கள்)

**Reanimate,** *v.* மறுபடியும் உயிர்ப்பி; புத்துயிர் கொடு. *n.* reanimation.

**Reap,** *v.* அறுவடை செய். பலனாகப் பெறு. *n. ag.* reaper.

**Reappear,** *v.* மீண்டும் தோன்று. *a.* reappearance.

**Reappoint,** *v.* மீண்டும் அமர்வு செய். *n.* reappointment.

**Reappropriation,** *n.* திரும்பப் பெறுதல். *v.* reappropriate.

**Rear,** *v.* வளர்; கட்டி எழுப்பு; உயரத் தூக்கு; பின் காலில் நில். *n., a.* (*sup.* degree alone *see* rear most) பின்புறம்; கடைசி(யான); படையின் பின்னணி(யான).

**Rear-admiral,** *n.* கடற்படைத் தலைவர் வகை.

**Rear-guard,** *n.* பின்புறக் காவல் படை.

**Rearm,** *v.* திரும்பவும் படைக் கலம் தாங்கு; மீண்டும் படைக் கருவி திரட்டு. *n.* rearmamant (x disarmament).

**Rearmost,** *a.* (rear) மிகவும் பின்னான.

**Rearrange,** *n.* மற்றொரு வகையாக ஒழுங்குபடுத்து.

**Rearward,** *a. adv.* பின்னோக்கிய(படி).

**Reascend,** *v.* திரும்பவும் ஏறு.

**Reason,** *n.* மெய்யுணர்வு; ஆராய்ச்சி அறிவு; முடிந்த காரணம்; மெய்க்காரணம்; செயலின் நோக்கம்; நேர்மை *v.* பகுத்தறிவைப் பயன்படுத்து; ஆராய்; வாதிடு. *n.* reasoning, பகுத்தறிவாராய்ச்சி. *a. see* rational, reasonable. *n.* rationalism. *a.* reasonable.

**Reasonable,** *a.* (reason) நேர்மையான; ஒத்துக் கொள்ளத் தக்க; நேர்மைக்கு இணங்குகிற; விட்டுக் கொடுக்கும் பண்புடைய; பகுத்தறிவுக்கு ஒத்து. *n.* reasonableness.

**Reassemble,** *v.* திரும்ப ஒன்று கூடு; மீண்டும் கூட்டியணை.

**Reassert,** *v.* மறுபடியும் உறுதியாகக் கூறு; மீட்டும் செயல் முனைப்பாகு. *n.* reassertion.

**Reassign,** *v.* திரும்பவும் (பங்கிட்டுக்) கொடு. *n.* reassignment.

**Reassume,** *v.* மீண்டும் மேற்கொள். *n.* reassumption.

**Reassure,** *v.* மீண்டும் மேற்கொள். *n.* reassumption.

**Reassure,** *v.* மீண்டும் உறுதி கூறு; உறுதி கொடு; ஆதரவுரை கூறு; மன உரமூட்டு.

**Reave,** *v.* (reft) கொள்ளையிட்டுப் பாழாக்கு.

**Rebate,** *n.* (பணம்) தள்ளுபடி; குறைப்பு. *v.* வட்டம் தள்ளிக் கொடு.

**Rebel,** *v.* கிளர்ச்சி செய்; கலகம் செய்; மீறி எழு. *n.* கலகக்காரர்; கிளர்ச்சி செய்பவர். *n.* rebellion. *a.* rebellious.

**Rebirth,** *n.* மறு பிறவி.

**Reborn,** *a.* திரும்பப் பிறந்துள்ள; புதுத் தோற்றங் கொடுத்துள்ள.

**Rebound,** *v.* எதிர்த்தடி; எதிர்த்துத் துள்ளு. *n.* எதிர்த்தடிப்பு; எதிர் துள்ளல்.

**Rebuff,** *n.* திடீரென்று தடுத்தல்; (எதிர்பாராத) மறுதலிப்பு. *v.* மறுதலி.

**Rebuild,** *v.* திரும்பக் கட்டு.

**Rebuke,** *v.* திட்டு; கண்டி. *n.* திட்டு; கண்டிப்பு.

**Rebut,** *v.* பின்னுக்குத் தள்ளு; எதிர்த்துத் தாக்கு. *n.* rebutment, rebuttal.

**Recalcitrate,** *v.* கட்டுப்பாடு மீறு. *a.* recalcitrant. *n.* recalcit-grance.

**Recall,** *v.* திரும்ப அழை; நினைவூட்டு, *n.* திரும்ப வரவழைத்தல்.

**Recant,** *v.* பின்வாங்கு; மாறு; பின்னிடை; கொள்கை மறுதலி; பணி அமர்வு நீக்கு; சொன்னதி லிருந்து பின்னிடு; சூளுரை மாற்று. *n.* recantation.

**Recapitulate,** *v.* திரும்பக் கூறு; பொழிப்புத் தொகுத்துரை.

**Recapture,** *v., n.* திரும்பக் கைப்பற்று(தல்).

**Recast,** *v.* (recast) திரும்பக் கணக்கிடு; சீர்திருத்தி அமை.

**Recede,** *v.* பின்னுக்குச் செல்; பின் வாங்கு; அகன்று செல்.

**Receipt,** *n.* (receive) பெற்ற பொருள்; பற்றுச் சீட்டு. *pl.* வரவுகள் (x disbursements) *v.* பற்றுச் சீட்டுக் கொடு. *comb. n.* sundry receipts. சில்லறை வரவுகள்.

**Receive,** *v.* பெற்றுக்கொள்; மனத்தில் ஏற்றுக்கொள்; வரவேற்று முகமன் அளி. *n. see* receipt. *n. ag.* receiver, பெற்றுக் கொள்பவர். (வானொலி) குரல் வாங்கி; வழக்குப்பட்ட உடைமை மேற்பார்வையாளர். *n.* receivership, வழக்குப்பட்ட சொத்து மேற்பார்வை. *n. pers. see* recipient.

**Recension,** *n.* சீர்திருத்திய பதிப்பு.

**Recent,** *a.* நாட்படாத; அணிமைக் காலத்திய. *n.* recency.

**Receptacle,** *n.* கொள் கலம் வைக்குமிடம்.

**Reception,** *n.* வரவேற்பு; வரவேற்பு விழா.

**Receptive,** *a.* எளிதில் கருத்துகள் புரிந்து கொள்கிற; எளிதில் ஏற்கிற. *n.* receptiveness, receptivity.

**Recess,** *n.* ஓய்வு நேரம்; பின்னிடம்; ஒதுக்கிடம்.

**Recession,** *n.* பின்னிடல். *a.* recessive.

**Recharge,** *v.* திரும்பத்தாக்கு, மறுபடியும் மின் வலியேற்று; வெடிமருந்து திரும்பவும் திணி; அதே குற்றத்திற்குத் திரும்பவும் காவலில் பற்று.

**recherche,** *n.* (ரெஷெர்ஷெ) மிகச் சிறந்தது; பொறுக்கி யெடுத்தது.

**Recipe,** *n.* மருந்து விவரப் பட்டி; மருத்துவர் பட்டி.

**Recipient,** *n.* (receive) பெற்றுக் கொள்பவர். *a.* வாங்கும் வலியுள்ள.

**Reciprocal,** *a.* பரிமாற்றமான. *v.* reciprocate. *n.* reciprocation. *n. pers.* reciprocator. *a.* reciprocative. *n.* reciprocity.

**Recital,** *n.* (> recite) விவரங் கூறுதல்; தொடர்ச்சி யாகச் செய்தி களைச் சொல்லல்.

**Recite,** *v.* உரத்துப் படி; நினைவி லிருந்து சொல்; விவரங்கூறு. *n.* recitation. *see* recital. *n. ag.* reciter.

**Reck,** *v.* கவனி; கருத்துக் கொள்; *a. (neg.)* reckless, கவன மில்லாத; இடர் பொருட்படுத்தாத; இடர் பொருட்படுத்தாத; மடத் துணிச்சலுள்ள. *n.* recklessness.

**Reckon,** *v.* கணக்கிடு; மதிப்பிடு; முடிவு செய்; நம்பிக்கை *n. ag.* reckoner, கணக்கிட உதவும் சாதனம்; கணக்கிடுபவர். *phr. n.* ready reckoner, கணக்குப் பட்டி கணக்குப் பொறி; உடன் கணிப்புப் பொறி; காட்சிக் கணிப்புப் பட்டி.

**reclaim,** *v.* திரும்பக் கேள்; சீர்படுத்து; பயன் தரத்தக்கதாகச் செய். *n.* reclamation. *a.* reclaimable.

**Recline,** *v.* பின்புறம் சாய்; படுத்துக்கொள்.

**Recluse,** *n.* துறவி; தனிவாழ் வினர்.

**Recognition,** *n.* நினைவு கூர்தல்; ஏற்றல்; புரிந்து கொள்ளுதல்.

**Recognizance,** *n.* நன்னடக்கைக் காகக் கொடுக்கும் பிணையம்.

**Recognize, -se** *v.* திரும்ப அறி; நினைவிற்குக் கொண்டு வா; (மதிப்பு, உரிமை முதலியவற்றை) ஒப்புக்கொள்; ஏற்றுக்கொள்; உரிமை மதி; ஒப்புதல் அளி; அடையாளம் அறி; காண்; உணர். *a.* recognizant,-sant, recognizable, -sable. *n.* recognition, ஏற்பு உணர்தல். அடையாளம் அறிதல் *also n.* recognizance.

**Recoil,** *v.* எதிர்த்தடி; திருப்பித் தாக்கு. *n.* திரும்பித் தாக்குதல்.

**Recollect,** (1) *v.* நினைவுபடுத்திக் கொள்; தன்நினைவு கொள். 2. *v.* (re-collect) திரும்பத் திரட்டு. *n.* (1) recollection.

**Recommence,** *v.* திரும்பத் தொடங்கு. *n.* recommencement.

**Recommend,** *v.* (பொருளை., ஆளை விரும்பும்படி ஒருவரிடம்) மேவி உரை; புரிந்து பேசு; ஆதரவு கோரிப் பேசு; நலம் புனைந்துரை; ‘நலவு’ உரை; பாராட்டு; புகழ்மேவுவி. *n.* recommendation, நலவு உரை; பரிந்துரை; மேவுரை. *n.* recommendatory, நலம் புனைவான மேவலான.

**Recompense,** *v.* ஈடு செய்; திருப்பிக்கொடு. *n.* உழைப்பீடு.

**Recompose,** *v.* மறுபடியும் ஒன்று சேர்த்துக் கூட்டு; திரும்பவும் அச்சுக் கோத்தல் செய். *n.* recomposition.

**Reconcile,** *v.* வேற்றுமையைப் போக்கு; நட்புண்டாக்கு; பொருந்தச் செய்; சரிசெய். *n.* reconciliation, reconcilement, *a.* reconciliatory.

**Recondite,** *a.* மறைந்துள்ள; புரியாத; மறைவான.

**Recondition,** *v.* சரிப்படுத்து; சீர்படுத்து.

**Reconnaissance,** *n.* வேவு பார்த்தல்; நோட்டமறிதல். *v.* reconnoitre.

**Reconquer,** *v.* மீண்டும் வெற்றிகொள். *n.* reconquest.

**Reconsider,** *v.* மறுபடியும் ஆராய்ந்து பார். *n.* reconsideration.

**Reconstitute,** *v.* திரும்பவும் இணைத்துக் கூட்டு. *n.* reconstitution.

**Reconstruct,** *v.* திரும்பக் கட்டு; புதிய திட்டம் வகுத்துச் செய். *n.* reconstruction, புத்தாக்கம் மறு சீராக்கம்.

**Reconvert,** *v.* திரும்பவும் முன் போல் மாற்று. *n.* reconversion.

**Reconvey,** *v.* திருப்பிக் கொண்டு போ; எடுத்துச் செல்.

**Record,** *v.* எழுத்து மூலமாய்ப் பதிந்துகொள்; நிலையாகப் பதிவு செய் நிலவரப்படுத்து; சான்றுப் பதிவுகொள். *n.* பதிவேடு; ஆவணம்; ஆயப் பத்திரம்; மாறாப் பதிவு; பதிவுச் சான்று; நிலைச்சான்று; (நடவடிக்கை, செயல்) உச்ச எல்லை; 'மீகண்'. *n. ag.* recorder, பதிவு செய்பவன்; பதிவு செய்யும் பொறி; பொறியின் பதிவு செய்யும் உறுப்பு.

**Recount,** *v.* திரும்பக் கணக்கிடு.

**Recoup,** *v.* இழந்ததைத் திரும்பப் பெறு. *n.* recoupment.

**Recourse,** *n.* உதவி நாடல்; புகலிடம்.

**Recover,** 1.*v.* இழந்ததைத் திரும்பப் பெறு; நலம் பெறு. 2. *a.* re-cover, திரும்பவும் மூடிவை. (1) *n.* recovery, மீட்பு; மறுபடி பெறுதல்; உடல்நலமீட்பு; நலப்பேறு; (கடன் இருப்பு) மீட்பு; (கடமைவரி) பணம் பிரிப்பு.

**Recreant,** *a.* இழிவான; வீர மில்லாத; கொள்கைமாற்றுகிற. *n.* இழிகுணத்தவர்; கொள்கையை விட்டவர்.

**Recreate,** 1. *v.* புத்துயிர் கொடு; எழுச்சியளி. 2. *v.* (re-create) புதிதாக்கு; திரும்ப அமை. (1) *a.* recreative, *n.* recreation, பொழுதுபோக்கு.

**Recriminate,** *v.* எதிர் குற்றஞ் சாட்டு. *n.* recrimination, *a.* recriminatory.

**Recrudesce,** *v.* (நோய் முதலியன) திரும்பத் தோன்று. *a.* recrudescent. *n.* recrudescence, அனுபவமற்றவர்; கற்றுக்குட்டி.

**Recruit,** *v.* (புதிதாக) படை வீரரைச் சேர்; (புதுஆளை) வேலைக்கு எடு. *n.* புது ஆள்; புதுப் படைவீரர். *n.* recruitment.

**Rectangle,** *n.* நீண்ட சதுரம். *a.* rectangular.

**Rectify,** *v.* சரிப்படுத்து. சீர்படுத்து. *n.* rectification. *a.* rectifiable.

**Rectilinear, rectilineal,** *a.* நேர்கோடுகளாலான.

**Rectitude,** *n.* நேர்மை.

**Rector,** *n.* (*fem*, rectoress) ஊர் மத குரு; தலைமைக் கல்வி மேற் பார்வையாளர். *n.* rectorship, rectary. *n.* rectorate, rector(i)al.

**Rectum,** *n.* மலக்குடல். *a.* rectal.

**Recumbent,** *a.* படுத்திருக்கிற.

**Recuperate,** *a.* வலிமையைத் திரும்ப அடை. *n.* recuperation. *a.* recuperative.

**Recur,** *v.* நினைவிற்குவா; திரும்ப நிகழ் திரும்ப நினை; திரும்ப நாடு. *a.* recurrent, திரும்பத் திரும்ப நிகழ்கிற. *n.* recurrence. *phr. n.* recurring expense, grant, etc.

தொடர்ந்து வரும் செலவு, மானியம் முதலியன. recurring contingencies மேல் தொடர்ந்து வரக் கூடும் இடைச் செலவுகள்; மேல்வரு தொடர் செலவுகள். recurring decimals, மீள்வரிப் பதின் கூறுகள்.

**Red,** *n.* சிவப்பு, *a.* சிவப்பான. *v.* redden *a.* reddish, reddy. *n.* redness. *comb. n. see* red cross, red entry, திறமைக் குறிப்பு. *see* red, (மாடு) சிவப்புக் காண்; கலைவுறு; (அணிவழக்கு) கலசல் அடை; வீண் கிலி கொள். Redflag, செங்கொடி (பொது உடைமைக்கொடி); புரட்சிக்கொடி.

**Redact,** *v.* திருத்திப் பதிப்பி; திருத்தி அமை. *n.* redaction.

**Red Cross,** *n.* செஞ்லுவை (ச் சங்கம்).

**Redeem,** *v.* திரும்பப்பெறு; விடுவி; நிறைவேற்று; பழி நீக்கி ஆதரி; மீட்பளி; நற்கதி அளி. *n. a ag.* redeemer. *a.* redeemable. *n.* redemption, நற்கதி; மீட்பு.

**Red-handed,** *a.* கையுங் களவுமாக.

**Red-herring,** *n.* சூட்டில் பக்குவப்படுத்திய மீன் வகை; கவனம் திருப்புவதற்கான ஏய்ப்புச் செய்தி.

**Red-hot,** *a.* பழுக்கக் காய்ந்த;

**Redirect,** *v.* (கடிதம்) முகவரி மாற்றி அனுப்பு.

**Rediscover,** *v.* திரும்பக்கண்டு பிடி.

**Redistribute,** *v.* புதுமாதிரியாகப் பகுத்து அளி; மாற்றிப் பங்கிடு; கலைத்துப் பங்கிடு. *n.* redistribution.

**Red-lead,** *n.* ஈயச்செந்தூரம்.

**Red-letter day,** *n.* நற்பேற்று நாள்; புகழ்நாள்; உவமை நாள்.

**Redolent,** *a.* நறுமணமுள்ள; புத்தூக்கமுள்ள. *n.* redolence.

**Redouble,** *v.* இரட்டிப்பின் இரட்டியாக்கு.

**Redoublt,** *n.* சிறு காவல் கோட்டை.

**Redoubtable,** *a.* வலிமைமிக்க; அஞ்சத்தக்க.

**Redound,** *v.* சேர்ந்துதவு; விளை வாகு; திரும்பி வா; கூட்டிணைப் பாகு.

**Redress,** 1. *v.* (குறை) தீர்; நல் தீர்ப்பளி; சரிப்படுத்து; ஈடு செய். *n.* சரிப்படுத்தல்; ஈடு செய்தல். 2. *v.* (redress) திரும்ப ஒப்பனை செய்; கலைத்து உகு; திரும்பப் பக்குவப்படுத்து; திருத்திச் சுத்தம் செய்.

**Red-tape,** *n.* ‘சிவப்பு நூல்’ பட்டை; பணிமனைக் குறி; சட்டக்குறி. *n. abs.* red-tapism, கட்டுப்பாட்டுப் பசப்பு; நாட் கடத்தும் போலி மரபு முறை.

**Reduce,** *v.* குறை; தாழ்த்து; வெல்; பொடியாக்கு; (கணக்கியல்) அளவைகளை ஓரினப்படுத்து; எளிதாக்கு; கீழினமாக்கு. *a.*

reducible. *n.* reduction, குறைத்தல்; குறைவு; ஆதிக்கத் துக்கு உட்படுத்தல்.

*reductio ad absurdum, phr. n.* பொருந்தாமை எண்பித்துக் காட்டல்.

**Redundant,** *a.* மிகையான *n.* redundance.

**Reduplicate,** *v.* இரட்டிப்பாக்கு; எழுத்திரட்டு. *n.* reduplication.

**Re-echo,** *v.* மறு எதிரொலி.

**Reed,** *n.* நாணல்வகை; ஊது குழல்; இசைக்குழல்; இசைப் பெட்டியின் இசைக் கட்டை

**Re-edify,** *n.* திரும்ப அறிவு பயிற்று.

**Re-edit,** *v.* புதிதாகப் பதிப்பி.

**Re-educate,** *v.* மறுபடியும் புதிதாகக் கற்பி; *n.* re-education.

**Reef,** *n.* கடற்பாறைத் தொடர்; பொன் இருக்கும் பாறை.

**Reek,** *n.* புகை; ஆவி. *v.* புகையைக் கிளப்பு; நாற்றம் வெளிப்படுத்து. *a.* reeky.

**Reel,** 1. *n.* நூல் உருளை. *v.* உருளையில் சுற்று. 2. தள்ளாடு.

**Re-elect,** *v.* திரும்பத் தேர்ந்தெடு, *n.* re-election.

**Re-embark** *v.* திரும்பக் கப்பலில் செல்; திரும்பவும் ஈடுபடு. *n.* re-embarkation.

**Re-enact,** *v.* திரும்பச் சட்ட மியற்று. *n.* re-enactment.

**Re-enter,** *v.* திரும்ப நுழை. *a., n. ag.* re-entrant.

**Re-establish,** *v.* திரும்ப நிலை நாட்டு.

**Reeve,** *v.* வளையத்தின் வழியே கயிற்றை நுழை.

**Re-examine,** *v.* திரும்பட் தேர்வு செய். *n.* re-examination.

**Refer,** *v.* பேச்சில் குறிப்பிடு; அறிவுரை கேள்; காட்டு; வழி காட்டு; ஏடு திருப்பிப் பார்; சான்று கேள்; நடுவுரை கேள். *a.* referable. *n. pers.* referee. (கேளிக்கை) அறிவுரை நடுவர்; அறிவுரையாளர்.

**Reference,** *n.* குறிப்பிடல்; பார்வையிடல்; குறிப்பு; எடுத்துக் காட்டான பகுதி; நடுவருக்கு விடுதல்; குறிப்பு (த் தரும் நூல்). *v.* குறிப்புப் பெட்டி தொகு. *comb. n.* cross- reference, மாட்டெறிவு; எதிர் குறிப்பு reference number குறிப்பு எண். reference library, பார்வை ஏடகம்; குறிப்ப;ப பட்டி; குறிப்புத் தொகுப்பு.

**Referendum,** *n.* (வாதச் செய்தியில்) பொதுமக்கள் தீர்ப்பு எடுப்பு; பொதுக் குடி ஒப்பம்.

**Refine,** *v.* நயமாக்கு; மேன் மைப்படுத்து. *n. see* refinement, refinery.

**Refinement,** *n.* (refine) நடத்தை நயம் பண்பு நயம்.

**Refinery,** *n.* (refine) திருத்தம்; நய நுணுக்கம்; மினுக்கம்; கலைநய வேலை; மினுக்க வேலை; கலை நயப் பொருள்கள் (தொகுதி); தேறல் சத்து, மருந்துவகை)

திருத்தத் தொழில் (சாலை); (நில எண்ணெய்) செப்பம் செய்யும் சாலை.

**Refit,** v திரும்ப அமை; செப்பனிடு.

**Reflect,** *v.* உருநிழல் காட்டு; ஆழ்ந்து நினை; வழுக்குறிப்பிடு; வசைக்குட்படுத்து. *n.* reflection. *a.* reflective.

**Reflector,** *n.* கண்ணாடி; நிழற்படுத்தும் பொருள்.

**Reflex,** *a.* திரும்பிப் பாய்கிற; எதிர்நிழலிடுகிற; விருப்பாற் றலுக்கு உட்படாத. *n.* எதிர்நிழல்; நிழலுரு; எண்ண எதிரலைகள்.

**Reflexive,** *a., n.* (இலக்) எழுவாயையே குறிக்கிற (சொல்); தற் சுட்டு ஆன (சொல்).

**Reform,** 1. *v.* சீர்திருத்து; புதுப்பி; மேன் மையாகு. *n.* சீர்திருத்தம்; மேன்மையடைதல். 2. *v.* (re-form) *v.* திரும்ப உருவாக்கு; திரும்ப அணிவகு. *n. see* reformation.

**Reformation,** 1. *n.* (reform) சீர்திருத்தம்; முன்னேற்றம்; (கிறித்துவ) சமயச் சீர்திருத்த இயக்கம். 2. *n.* re-formation, மறுசீரமைப்பு; மறு அணிவகுப்பு.

**Reformative,** *a.* சீர்திருத்துகிற.

**Reformatory,** *a.* சீர்திருத்தக் கூடிய. *n.* இளைஞரைச் சீர்திருத்தம் பள்ளிக்கூடம்; திருத்தகம்; சீர்திருத்த மனை.

**Reformer, Reformist,** *n.* சீர் திருத்தகக்காரர்.

**Refrant,** *v.* நேர் கோட்டிலிருந்து விலகு; விலகிச் செல்; திசை திரும்பிச்செல்; நெறிமாறிச் செல்; கோடுதல் செய். *a.* refractive. *n.* refraction. நெறிமாற்றம்; நெறிக் கோட்டம்; ஒளிக்கோட்டம். *n. ag. impers.* refractor, ஒளி கோட உதவும் பொருள்.

**Refractory,** *a.* கீழ்ப்படியாத; முரடான; எளிதில் உருகாத; எளிதில் இணையாத; செயல் முரடான.

**Refrain,** *v.* செயலைத்தவிர்; அடக்கிவை. 2. *n.* பல்லவி; அடுக்கிசை; மெல்லிசை.

**Refresh,** *v.* புதிதாக்கு; புத்துயிர் கொடு; வலுப்படுத்து உணவு கொடுத்து ஊட்டு.

**Refreshment,** *n.* புதுவலு; புத்துயிர் கொடுப்பது; ஓய்வுண வூக்கம். *(pl)* உண்டி.

**Refrigerate,** *v.* குளிர்முறைப் பாதுகாப்புச் செய். *n., ag. impers.* refrigerator, குளிர் முறைப் பாதுகாப்புப் பெட்டி. *a.* refrigerant, refrigeratory. *n. abs.* refrigeration.

**Reft,** *v.* (reave பார்க்கவும்.)

**Refuge,** *n.* புகலிடம்; சரண்; தஞ்சம்; ஏமம்; அடைக்கலம் ஓம்படை.

**Refugee,** *n.* ஓடிச்சென்று தஞ்ச மடைந்தவர்; புகலாளர்; துணை தேடி. *comb. n.* refugee home, புகலகம்.

**Refulgent,** *a.* ஒளிர்கிற; பளபளப் பான. *n.* refulgence.

**Refund,** *v.* (பணத்தைத்) திருப்பிக் கொடு; மீட்டளி.

**Refusal,** *n.* (refuse, 1) மறுதலித்தல்.

**Refuse,** 1. *v.* மறுதலி; இல்லை என்று கூறு; மறு; தள்ளுபடி செய். 2. *n.* கழிவு; குப்பை. (1) *n. see* refusal.

**Refute,** *v.* தவறென்று எண்பி; சொற்போரில் வெல். *n.* refutation. *a.* refutable.

**Regain,** *v.* திரும்பப் பெறு; இழந்ததை அடை.

**Regal,** *a.* அரசனுக்குரிய; வீறார்ந்த.

**Regale,** *v.* சுவையான விருந்திடு; மேன்மையாக வரவேற்புச் செய்.

**Regalia,** *n. (pl)* அரசனுக்குரிய முடிமுதலிய அணிகள்; உரிமை நிலைக்குரிய சின்னங்கள்.

**Regality,** *n.* அரச பதம்.

**Regard,** *v.* கவனம் செலுத்து; மதிப்பாகக் கருது. *n.* மதிப்பு; கவனம் செலுத்துதல். *a., ad.* regardless, அலக்கணிப்பான. *a.* regardful.

**Regarding,** *prep.* (ஒன்றைக்) குறித்து; (ஒன்றைப்) பற்றி.

**Regatta,** *n.* படகுப் பந்தயம்.

**Regency,** *n.* (regent) (மன்னர் வயது வராதபோது நடைபெறும்) ஆட்பேராட்சி; பகர ஆட்சிக் குழு.

**Regenerate,** *v.* புத்துயிர் கொடு; சீர்படுத்து. *n.* regeneration. *a.* regenerative.

**Regent,** *a., n.* மன்னர் பேராட்சி யாளர்; பகர ஆட்சியாளர். *n. abs.* regentship. *n. see* regency.

**Regicide,** *n.* அரசனைக் கொன்றவர். அரசனைக் கொல்லல்.

**Regime,** *n.* (ரெஃஷீம்) ஆட்சி முறை.

**Regiment,** *n.* படைப் பகுதி. *v.* ஆள்களைத் திரட்டி வேலையில் ஈடுபடுத்து. *a.* regimental, படைத்துறை சார்ந்த. *n. abs.* regimentation.

**Region,** *n.* நிலப்பகுதி; திணை நில வட்டாரம். *a.* regional திணைசார்ந்த. *comb. n.* regional geography, திணையியல் நில நூல் regional inspector, வட்டாரப் பார்வையாளர். regional language, வட்டார மொழி; திசைமொழி; திணை மொழி.

**Register,** *n.* அட்டவணை; பதிவுப் புத்தகம்; பதிவுப் பட்டி. *v.* (புத்தகத்தில்) பதிவு செய்; நிலவரமாகக் குறி; நிலவரக் கோப்பில் குறித்து வை. *n.* registgration, பதிவு (செய்தல்); பதிவாண்மை. *n.* registry, பதிவு; பதிவு செய்யுமிடம்; பதிவு செய்தல். *comb. n.* attendance register, நாள் வருகைப் பதிவேடு. service register, ஊழியப்பதிவேடு.

**Registrar,** *n.* பதிவுப் பணியாளர்; பதிவாளர்; பதிவாணர்.

**Regnal,** *a.* அரசாட்சிக்குரிய; ஆட்சிக் கணக்கிட்ட.

**Regnant,** *a.* ஆட்சி செய்கிற; தலைமையாயிருக்கிற.

**Regress,** *n.* திரும்பிப்போதல்; பின்னோக்கம் *v.* பின்னுக்குச் செல். (x progress) *n.* regression. *a.* regressive.

**Regret,** *n.* கழிவிரக்கம். *v.* கழிவிரங்கு. *a.* regretful, regrettable, வருந்தக்கூடிய.

**Regular,** *a.* ஒழுங்கான. ஒழுங்கு முறையான. *n.* முறைப்படி அமர்த்தப்பட்டவர். அமர்வு பெற்றவர். *n.* regularity. *v.* regularize, -se.

**Regulate,** *v.* ஒழுங்குபடுத்து; சமநிலைப் படுத்து; சரிப்படுத்து. *n. ag.* regulator, (மணிப்பொறி. இயந்திரம் முதலியவற்றில் கால மாறுதலுக்கியையச் சரியீடு செய்யும்) சமநிலைப் பொறி. *n. abs.* regulation, ஒழுங்கு (செய்தல்); சட்டம்; சட்டப்பிரிவு; கட்டளை விதி.

**Rehabilitate,** *v.* மறுதிருவளி; மறுசீரமை; புதிது சீரமை. *n.* rehabilitation, மறுதிரு அமைதி; மறுசீரமைப்பு; புதுச் சீரமைப்பு. *comb. n.* relief and rehabilitation, இடர் உதவியும் மறுச்சீரமைப்புதவியம்.

**Rehash,** *v., n.* பழைய ஒன்றைச் சிறிது மாற்றிப் புதிதாகக் காட்டு(தல்).

**Rehearsal,** *n.* ஒத்திகை; வெள்ளோட்டம். > *v.* rehearse.

**Reign,** *n.* ஆட்சிக்காலம். *v.* ஆட்சி செய்; ஆதிக்கம்செய்.

**Reimburse,** *v.* செலவழித்ததைத் திருப்பிக் கொடு; ஈடு செய். *n.* reimbursement.

**Reimpose,** *v.* திரும்பவும் விதி. *n.* reimposition.

**Rein,** *n.* கடிவாளத்தின் வார்; ஆட்சிக்குரிய சாதனம். *v.* கடிவாளத்தால் செலுத்து; தடை செய்; அடக்கியாள்.

**Reincarnate,** *v.* மறுபடி பிற. *n.* reincarnation, மறு பிறப்பு.

**Reindeer,** *n.* கலைமான்.

**Reinforce,** *v.* வலிமை பெறச் செய்; படைவலுப்பெருக்கு. *n.* reinforcement.

**Reinstate,** *v.* திரும்ப அமர்த்து. *n.* reinstatement.

**Reinter,** *v.* திரும்பப் புதை. *n.* reinterment.

**Reintroduce,** *v.* திரும்பப் புகுத்து. *n.* reintroduction.

**Reinvest,** *v.* மறுபடியும் அணிவி; மீண்டும் விடுமுதலாக இடு. *n.* reinvestment.

**Reinvigorate,** *v.* புத்துயிர் கொடு. *n.* reinvigoration.

**Reissue,** *v.* திரும்ப வெளியிடு. *n.* புதிய பதிப்பு.

**Reiterate,** *v.* திரும்பத் திரும்பச் செய் அல்லது சொல். *n.* reiteration.

**Rejoice,** *v.* தள்ளுபடி செய்; மறு; விலக்கு. *n.* rejection.

**Rejoice,** *v.* மகிழ்ச்சியடை; கொண்டாடு. *n.* rejoicing.

**Rejoin,** *v.* திரும்பச் சேர் மறுபடியும் ஒன்று கூடு; மறு மொழி கூறு.

**Rejoinder,** *n.* மறுமொழி.

**Rejuvenate, rejuvenize, -se,** *v.* திரும்ப இளமை அளி; புத்தூக்கம் அளி. *n.* rejuvenation. rejuvenescence, இளமை திரும்புதல். *a.* rejuvenescent.

**Rekindle,** *v.* திரும்பக் கொளுத்து; புதிதாகத் தூண்டு.

**Relapse,** *v.* பழைய நிலையை அடை; குணமடைந்தபின் மறுபடியும் மோசமாகு. *n.* பழைய நிலையடைவு.

**Relate,** *v.* சொல்; விவரித்துக் கூறு; தொடர்பு படுத்து. *n.* relation, தொடர்பு; உறவு கூறுதல்.

**Relative,** *a.* தொடர்புடைய தாயுள்ள; தொடர்பு காட்டுகிற; ஒப்புமைசார்ந்த; (இலக்கம்) வாசகத் தொடர்பு குறித்து. *n.* உறவினர்; (இலக்கணம்) தொடர்பு குறிக்கும் சொல். *n. abs.* relativeness. *adv.* relatively, ஒப்பீட்டடிப்படையில். *comb. n.* relative adverb, வினையடை இணைசொல். relative pronoun, இடச்சுட்டு வினை.

**Relativity,** *n.* (இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் பேரறிஞர் ஐன்ஸ்டீன் வகுத்த) கால இடப் பொதுத் தொடர்புத் தத்துவம்; (கால இடத்) தொடர்புறக் கோட்பாடு.

**Relax,** *v.* தளர்த்து; நரம்பு தளர்த்து; ஓய்வு கொடு; ஓய்வுகொள்; இளைப்பாறு; களையாறு; நெகிழ விடு; நெகிழ்; தளர். *n.* relaxation.

**Relay,** 1. *n.* வழி மாற்றுக் குதிரை ஏற்பாடு; குதிரை மாற்று இடை மாற்று ஏற்பாடு; கெடுமாற்று; அஞ்சல் முறை. *v.* (relayed) (குதிரை) மாற்றித்தொடு; (வானொலி) மாற்றி இணை; அஞ்சல் செய்; (வானொலி) திரும்பப் பரப்பு. 2. *v.* (relaid) மறுபடியும் வை.

**Release,** *v.* விடுவி; விடுதலை செய்; (பிடியிலிருந்து, கட்டுப்பாட்டிலிருந்து) விடு; வெளியிடு; பொது உரிமைப்படுத்து. *n.* விடுவிப்பு; விடுதலை.

**Relegate,** *v.* துரத்து; நீக்கு; ஒதுக்கிவை; வேறிடத்திற்கு அனுப்பு. *n.* relegation.

**Relent,** *v.* இரங்கு; மனமிளகு. *a. (neg.)* relentless. *n.* relentlessness.

**Relevant,** *a.* பொருத்தமான; தகுந்த. *n.* relevance, relevancy.

**Reliable,** *a.* நம்பிக்கை வைக்கத் தகுந்த. *n.* reliability, reliableness.

**Reliance,** *n.* நம்பிக்கை; சார்பு. *a.* reliant.

**Relic,** *n.* நினைவூட்டுச் சின்னம்; மிஞ்சியுள்ள எச்சம்.

**Relief,** 1. *n.* துயருதவி; இடருதவி; 2. (துன்பம், நோவு, நோய், இடர்) தணிவு. 3. (முற்றுகை) விடுவிப்பு. 4. *v. see* relieve, (வேலையிலிருந்து) ஓய்வு. *comb. n.* 5. புடைப்பகழ்வுச் சித்திரம். relief and rehabilitation இடர் உதவியும் மறுசீரமைப் புதவியும்; relief

works, இடர் உதவித்தொண்டுகள்; இடர் உதவிப்பணிகள்; இடர் உதவிக் கான பணிகள்.

**Relieve,** *v.* (வலி, நோய், துயர், இடர்) தணி; ஒய்வு கொடு; (பொறுப்பு) விடுவி; உதவி செய் (முற்றுகை) விடுவி. *n. ag.* Reliever. *n. see* relief.

**Religion,** *n.* சமயம்; சமயப் பற்று; கடவுட் பற்று; வாழ்க்கைக் கோட்பாடு உறுதி நெறி. *a.* religious, சமயப் பற்றுடைய; பற்றுறுதியுடைய *n.* religiousness.

**Relinquish,** *v.* கைவிடு; துற; உரிமைதுற. *n.* relinquishment.

**Relish,** *n.* இன் சுவை; விருப்பம்; சுவையூட்டும் பொருள். *v.* விரும்பு; இன் சுவை நுகர்; இனிது துய்; துய்த்து மகிழ்.

**Re-live,** *v.* திரும்பவும் நினைத்துப் பார்; மறுபடி வாழ்.

**Reluctant,** a விருப்பமில்லாத. *n.* reluctance *adv.* reluctantly.

**Rely,** *v.* நம்பிக்கை வை; சார்; நம்பியிரு.

**Remain,** *v.* பின்தங்கு; மீந்திரு; எஞ்சியிரு; காத்திரு; இரு; நிலைத்திரு. *n. (pl.)* எஞ்சியிருக்கும் பொருள்; உயிர்நீங்கிய உடல்; இறந்தவர்கள் நூல்கள்; எச்சமிச்சங்கள். *comb. n.* archaeological remains, இறந்தகாலப் பொருட் சுவடுகள்; முற்கால உலக எச்சமிச்சங்கள்; பண்டைநாட் சின்னங்கள்.

**Remainder,** *n.* மிச்சம்; எஞ்சியுள்ளது.

**Remand,** *v.* திரும்ப அனுப்பு சிறைப்படுத்து. *n.* திரும்பச் சிறைப்படுத்தக் கட்டளை.

**remark,** *v.* கவனி; தன் கருத்தைக் கூறு; குறித்துரை; கருத்துரை; சொல்லு; குறைகாண்; நுணைகூறு. *n.* கருத்துரை; தற்குறிப்புரை; மேலுரை; முனைப்புரை; சொட்டுரை; மாற்றுரை.

**Remarkable,** *a.* குறிப்பிடத்தக்க; தனிச்சிறப்புக்குரிய; தனிப்பட்ட. *adv.* remarkably.

**Remarry,** *v.* மறுமணம் செய். *n.* remarriage.

**Remedy,** *n.* மருந்து; கழுவாய். *v.* குணப்படுத்து; சரிப்படுத்து. *a.* remedial, மருந்துமுறை சார்ந்த; கழுவாய் சார்ந்த remediable, சரிப்படுத்தக்கூடிய.

**Remember,** *v.* நினைவில் வை; நினைவுபடுத்து; நினைவுக்குக் கொண்டுவா. *n.* remembrance.

**Remind,** *v.* நினைப்பூட்டு; *n.* reminder, நினைவூட்டு; நினைவூட்டு முடங்கல்; மறுநினைவுக் கடிதம்.

**Reminiscence,** *n.* பழைய நினைவு; கருத்துத் தொடர்புடையது. *a.* reminiscent.

**Remiss,** *a.* கடமையில் தவறுகிற; கவனமில்லாத; சோர்வுள்ள. *n.* remissness.

**Remission,** *n.* மன்னிப்பு; குறைப்பு; தள்ளுபடி செய்தல். *comb.* remission of sentence (x enhancement) தண்டனை

குறைப்பு; நோவு குணப்படுதல்; தணிவு.

**Remit,** *v.* (பணம்) அனுப்பு; செலுத்து; குறை மன்னித்தல் செய். *n.* remittal.

**Remittance,** *n.* பணம் அனுப்புதல்; பணம் செலுத்துதல்; பணம் கட்டுதல்; அனுப்பிய பணம்; செலுத்திய பணம்; கட்டிய பணம்.

**Remittant,** *a., n.* இடையிடையே குறைகிற.

**Remnant,** *n.* எஞ்சியுள்ளது; மிச்சத் துண்டு.

**Remodel,** *v.* புது மாதிரியாக அமை; உருவம் மாற்று; திருத்தியமை.

**Remonstrance,** *n.* தடுப்புரை; எதிர்வாதம். *v.* remonstrate, *a.* remonstrant.

**Remorse,** *n.* தவறுக்கு இரங்குதல்; கழிவிரக்கம். *a.* remorseful, remorseless.

**Remote,** *a.* தொலைவான; காலத்தால் மிகவும் முந்திய அல்லது பிந்திய; தொடர்பில்லாத. *n.* remoteness.

**Remould,** *v.* புது உருவம் கொடு.

**Remount,** *v.* திரும்பவும் ஏறு; (படம்) புதிதாகச் சட்டமிடு. *n.* புதுக்குதிரை.

**Remove,** *v.* நீக்கு; இடம் மாறு, மறையச் செய். *n.* அகற்றிய தொலை; படி. *n.* removal, நீக்குதல்; இடம் மாறுதல். *a.* removable.

**Remunerate,** *v.* கைம்மாறு அளி; ஊதியம் கொடு; கூலிகொடு; பயன் அளி; ஈடுசெய்; பரிசளி. *n.* remuneration, *a.* remunerative, நல்லூதியம் தருகிற; ஊதிய மளிக்கிற.

**Renaissance, renascence** *n.* புதுமலர்ச்சி; மறுமலர்ச்சி; (வரலாறு: 15-16ஆம் நூற்றாண்டின் மேனாட்டு) மறுமலர்ச்சி யியக்கம். *a.* renascent.

**Rename,** *v.* புதுப் பெயரிடு.

**Renascence,** *n.* *see* renaissance.

**Rend,** *v.* (rent) கிழி; பிள; தகர்த் தெறி. *n.* rent.

**Render,** *v.* அளி; கொடு; உதவு திரும்பக் கொடு; வகைமாற்று; மொழிபெயர். *n.* rendering, கொடுத்தல்; மொழிபெயர்ப்பு.

**Rendezvous,** *n., v.* சந்திப்பிடம் (குறி); பொதுக் குறியிடம் (குறி).

**Renegade,** *n.* கொள்கையைக் கைவிட்டவர்; இடமாறி; பக்கமாறி; கட்சிமாறி.

**Renew,** *v.* மறுபடிதொடங்கு; புதுப்பி; புதுக்கு; புத்துருவம் கொடு. *a.* renewable. *n.* renewal.

**Renounce,** *v.* கைவிடு; ஒழி; துற. *n.* renouncement. *see* renunciation.

**Renovate,** *v.* புதுப்பி; சீர்திருத்து; புத்துயிர் கொடு. *n.* renovation, renovator.

**Renown,** *n.* புகழ்; நற் பெயர்; கீர்த்தி. *a.* renowned.

**Rent,** 1. *v.* (*see* rend) 2. *n.* வாடகை; வரி. *pl.* வரிப்பணம்; வாடகைப்பணம்; வாடகைக் குத்தகை. *v.* வாடகைக்கு விடு; வாடகைக்கு அமர்த்து. (2) *a.* rentable, rented. *a., n.* rental, வாடகை. *comb. n.* quitrent, விடுவரி. rental value, வாடகை மதிப்பு.

**Renunciation,** *n.* (renounce) துறத்தல்; துறவு; தன் மறுப்பு.

**Reorganize-se,** *v.* மறுபடி ஒழுங்கு செய். *n.* reorganization, -sation.

**Repair,** *v.* (அடிக்கடி) செல்; சீர்படுத்து; திருத்தியமை; பழுது பார்; செப்பனிடு; அற்றகுற்றம் பார்; சீர்செய்; திருத்து; ஒக்கிடு; ஈடு செய். *n.* திருத்தம்; சீரமைப்பு; ஒக்கீடு.

**Repairable,** *a.* சீர்செய்யக் கூடிய. (x irrepairable) *n.* reparation, இழப்பீடு.

**Repartee,** *n.* திறனுடைய விடை; உடனுக்குடன் மறுமொழி.

**Repast,** *n.* சாப்பாடு; உண்டி.

**Repatriate,** *v.* தாய்நாட்டுக்குத் திரும்ப அனுப்பு. *n.* repatriation, தாயக அடைவு; தாயக மீட்சி; தாயகத்துக்குத் திருப்பி அனுப்பு தல்.

**Repay,** *v.* (repaid) திருப்பிக் கொடு. *n.* repayment.

**Repeal,** *v.* தள்ளுபடி செய்; ஒழி. *n.* தள்ளுபடி; ஒழிப்பு; அடித்தல்; துடைத்தல். *comb. n.* repealing, amending act, அடித்துத் திருத்தல் சட்டம்.

**Repeat,** *v.* திரும்பச்சொல்; மறுபடிசெய் ஒப்பி. *adv,* repeatedly, அடிக்கடி. *a.* repeatable, *n.* (*see*) repitition.

**Repel,** *v.* தள்ளு; விலக்கு. *a.* repellent.

**Repent,** *v.* செய்ததற்கு இரங்கு; இரங்கிச் சீர்திருந்து. *n.* repentance. *a.* repentant.

**Repeople,** *v.* மறுபடியும் மக்களைக் குடியேற்று.

**Repercussion,** *n.* எதிரொலி; எதிர் விளைவு. *a.* repercussive.

**Repertoire, repertory,** களஞ்சியம்; சேம உடைமை.

**Repetition,** (repeat) திரும்பக் கூறல் அல்லது செய்தல் ஓதுதல். *a.* reptitious.

**Repine,** *v.* துயருறு; குறைப்படு.

**Replace,** *v.* பழைய இடத்தில் வை; பகரமாக இரு; ஈடுசெய். *n.* replacement. *a.* replaceable.

**Replant,** *v.* திரும்ப நடு; திரும்பப் பயிர் செய்.

**Replenish,** *v.* நிரப்பு. *n.* replenishment, *n. ag.* replinisher.

**Replete,** *a.* நிறைந்துள்ள *n.* repletion.

**Replica,** *n.* மறு பகர்ப்பு.

**Reply,** *v.* மறுமொழி கூறு; விடை கூறு; சொல். *n.* மறுமொழி; விடை.

**Repopulate,** *v.* மீண்டும் குடியேற்று.

**Report,** *v.* அறிக்கை யிடு; செய்தி யறிவி; முன்னிலைப்படுத்து; குற்றங் கூறு குறை தெரிவி. *n.* விவரம்; அறிக்கை; கண்டெழுத்து; துப் பாக்கி ஓசை. *n.* reporter, செய்தி யனுப்புவோர்; செய்தித்தாளுக்குச் செய்தி அனுப்புவோர். *comb.n.* reports, returns, அறிக்கையும் புள்ளி விவரங்களும்; செய்தி யறிவிப்பும், புள்ளி விவரச் செய்திகளும்.

**Repose,** *v.* (படுத்து) இளைப்பாறு; நம்பிக்கை வை. *n.* படுக்கை; உறக்கம்; ஓய்வு, *n.* reposal.

**Repository,** *n.* களஞ்சியம்.

**Repossess,** *v.* மறுபடியும் அடை; மறுபடியும் பெறு. *n.* repossession.

**Reprehend,** *v.* குற்றஞ்சொல்; குற்றம் கண்டுபிடி. *a.* reprehensible, reprehensive, *n.* reprehensible-ness, reprehension.

**Represent,** *v.* விவரித்துரை; தெரிவி; முறையிடு; பகரமாகு; ஆட்பேராகு; பகர ஆளாகு; அறிகுறியாக இரு; குறி. *n.* representation, பக ராண்மை; தெரிவிப்பு; முறையீடு.

**Representative,** *n. a.* ஆட்பேர் (ஆன). வகையாள் (ஆன).

**Repress,** *v.* நசுக்கு; அடக்கு முறைசெய்; கீழ்ப்படுத்து. *n.* repression. *a.* repressive.

**Reprieve,** *v.* தண்டனையை நிறுத்தி வை; ஒறுப்புக் குறை. *n.* தண்டனையைக் குறைத்தல்; ஓய்வுக்காலம்.

**Reprimand,** *a.* மேலாளர்) கண்டனம். *v.* குற்றங் கூறு; அதட்டு.

**Reprint,** *n.* புதிய பதிப்பு. *v.* மறுபடியும் (துணிமீது) அச்சிடு.

**Reprisal,** *n.* பழிவாங்குதல்; இழப்பீடு.

**Reproach,** *v.* கடிந்து சொல்; குற்றஞ்சாட்டு. *n.* குற்றச்சாட்டு; கடிந்து கூறுதல்; அவமானம். *a.* reproachful, reproachable.

**Reprobate,** *a., n.* நெறிகெட்ட(வர்); (கடவுளால்) கைவிடப்பட்ட(வர்). *v.* வெறுப்பைத் தெரிவி; குற்றஞ் சாட்டு; கைவிடு. *n.* reprobation.

**Reproduce,** *v.* இனப் பெருக்கம் செய் படிவம் அமை; புதுப்பி. *n.* reproduction. *a.* reproductive.

**Reproof,** *n. see* reprove.

**Reprove,** *v.* குற்றங் கூறு; திட்டு. *n.* reproof. *adv.* reprovingly.

**Reptile,** *a., n.* ஊர்ந்து செல்கிற (உயிர்); இழிந்த(வர்),

**Republic,** *n.* குடியரசு.

**Republican,** *a.* குடியரசு சார்ந்த. *n.* குடியரசுக் கொள்கை யுடையவர். *n.* republicanism.

**Republish,** *v.* திரும்பவும் பதிப்பி, *n.* republication.

**Repudiate,** *v.* தள்ளு; மறு; கைவிடு; மறுதலி. *n.* repudiation, *n. ag.* repudiator.

**Repugnance,** *n.* மிகுவெறுப்பு பகைமை; தயக்கம். *a.* repugnant.

**Repulse,** *v.* துரத்து; எதிர்த்துத் தள்ளு; மறு. *n.* மறுப்பு; எதிர்ப்பு.

**Repulsion,** *n.* வெறுப்பு. *a.* repulsive.

**Reputable,** *a.* நற் பெயருள்ள; மதிப்பான.

**Reputation,** *n.* நற் பெயர்; மதிப்பு.

**Repute,** *v.* நன்கு மதி; எண்ணு. *n.* மதிப்பு; புகழ். *adv.* reputedly. *a.* reputed, reputable.

**Request,** *n.* வேண்டுகோள்; விருப்பம். *v.* வேண்டு; விரும்பு.

**Requiem,** *n.* இரங்கற்பா.

*requiescat,* *n.* உயிர்ப்பிரிவுக் கால வழிபாடு.

**Require,** *v.* உரிமையுடன் கேள்; தேவைப்படு. *n.* requirement, தேவை.

**Requisite,** *a. n.* தேவையான; வேண்டிய. *n.* தேவைப்பொருள்; இன்றியமையாதது.

**Requistion,** *n.* எழுத்து மூல வேண்டுகோள்; (எழுதித்) தேவையைக் கேட்டல்; கட்டளைக் கோரிக்கை; பற்றாணை. *v.* தேவையைக் கேள்; கட்டளையாகக் கொள்.

**Requite,** *v.* கைம்மாறு செய். *n.* requital.

**Rescind,** *v.* தள்ளுபடி செய். *n.* rescission. *a.* rescindable.

**Rescue,** *v.* மீளவை; காப்பாற்று; விடுவி. *n.* விடுவிப்பு; காத்தல்.

**Research,** *n., v.* புத்தாராய்ச்சி (செய்) உண்மையை நாடித் தேர்வு (செய்.)

**Resemble,** *v.* போன்றிரு; ஒத்திரு. *n.* resemblance.

**Resent,** *v.* குற்றமாக நினை; சினங்கொள்; எதிர். *a.* resenful. *n.* resentment.

**Reservation,** *n.* (reserve) ஒதுக்கீடு.

**Reserve,** *v.* ஒதுக்கி வை; மறைத்து வை; சேமித்து வை. *a.* ஒதுக்கி வைக்கப்பட்ட; நல ஒதுக்கீடான; சேம ஒதுக்கீடான; சேம. *n.* ஒதுக்கிவைப்பு; எண்ண மறைப்பு; அடக்க ஒடுக்கம்; *(pl.)* சேம மூலங்கள்; (கையிருப்பு மூலம்; மூல தளப்படை) சேமப்படை வீரர். *n. abs. see r*eservation. *a.* reserved (person), அடக்க நடையுள்ள; (seats) தனிப்பட ஒதுக்கியுள்ள இருக்கைகள். (*comb.*) reserve bank, மூலப் பொருளகம். reserve police, மூலதளக்காவல் படை. reserve (reserved) forest காப்புக்காடு.

**Reservoir,** *n.* நீர்த்தேக்கம்; களஞ்சியம்.

**Reset,** *v.* மறுபடியும் பொருத்தி வை.

**Resettle,** *v.* புத்தமைதிகாண்; புது ஏற்பாடு செய் புதுக் குடியிருப் பமை. *n.* resettlement, புத்தமைதி, புது ஏற்பாடு; புதுக்குடி யிருப்பு; புதுக்குடியமைப்பு.

**Reshape,** *v.* புதுமாதிரியாக உருவங்கொடு.

**Reside,** *v.* குடியிரு; தங்கு.

**Residence,** *n.* இருப்பிடம்; உறைவிடம்; தங்கல்; மனை; விடு.

**Residency,** *n.* 1. (resident) அயல்நாட்டு நிலவரத்தூதர் மாளிகை; நிலவரத் தூதர் ஆட்சிப் பகுதி.

**Resident,** a., *n.* தங்குகிற(வர்); அயல்நாட்டு நிலவரத் தூதர்.

**Residential,** *a.* குடியிருக்கத் தக்க; குடியிருப்பு வாய்ப்புடைய, *comb. n.* residential school, மனைப்பள்ளி; தங்கற்பள்ளி. residential university தங்கற்பல்கலைக் கழகம்.

**Residual,** *a.* எஞ்சியிருக்கிற; (residual powers, வரையறுக் காது விட்டுப்போன உரிமைகள்.)

**Residuary,** *a.* மீதியுள்ளதற்குரிய.

**Residue,** *n.* எஞ்சியுள்ளது; மீதி.

**Reseduum,** *n.* எஞ்சியுள்ளது; கழிவு; மண்டி.

**Resign,** *v.* பணிதுற; கைவிடு; ஒப்படைத்து விடு; கீழ்ப்படி. *a.* resigned, வருவதை ஏற்பதற்கு ஒருங்கிய; வேண்டாவெறுப்பான துறந்தமைந்த. *n.* resignation, பணி துறப்பு; துறப்பமைவு; கலைவயின் மை; அக்கறையின் மை.

**Resile,** *v.* பின் வாங்கு; எதிர்த்து நெறி நில். *a.* resilient, எதிர்த்துத் தாக்குகிற; வில் போன்ற *n.* resilience, resiliency.

**Resin,** *n.* பிசின்; குங்குலியம்; *a.* resinous.

**Resist,** *v.* எதிர்த்து நில்; தடைசெய். *a.* resistible; *(neg.)* resistless,. *n.* resistance.

**Resoluble,** *a.* (resole) பகுக்கக் கூடிய.

**Resolute,** *a.* மன உறுதியுள்ள; பிடிவாதமான.

**Resolution,** *n.* மனவுறுதி; தீர் மானம்; பகுதிகளாகப் பிரித்தல்; பகுப்பு.

**Resolve,** *v.* 1. பகுதிகளாகப் பிரி; 2. ஐயுறவு போக்கு; தீர்மானம் செய். *n.* மனவுறுதி; தீர்மானம் *see* resolution. *a.* resolvable (1) *see* resoluble. (2) *see* resolute.

**Resonant,** *a.* எதிரொலிக்கிற. resonance.

**Resonator,** n ஒலியைப் பெருக்கும் கருவி.

**Resort,** *v.* மேற் கொள்; தஞ்சமடை. *n.* அடிக்கடிசெல்லுமிடம்; புகலிடம்; சேரிடம்; சாரிடம்; போக்கிடம்; நாடுமிடம்; பொழுது போக்கிடம்.

**Resound,** *v.* எதிரொலி; ஒலியால் நிரம்பு.

**Resource,** *n.* திறமை கையிருப்பு; கைவளம்; கையுறைவளம்; மூல வளம்; ஊற்றுவளம்; கருவளம்; வகைவளம்; வகைதுறை; வளம்; தகு வழி காணும் திறம்; *(pl)* சேமப்பொருள்கள்; வள ஆதாரங் கள். *a.* resourceful, (ஆள்) தகுவழிகாணும் திறம் உடைய; வகைவளமுள்ள; வண்மைத் திறமுடைய; வண்திறமுடைய.

**Respect,** *n.* நன் மதிப்பு *(pl.)* குதிரைப்படை. வாழ்த்து; வகை. (in this respect), *v.* நன்கு மதி.

**Respectability,** *n.* மதிப்பு; நற் பெயர். *a.* respectable.

**Respecting,** *prep.* (ஒன்றைக்) குறித்து; பற்றி.

**Respectful,** *a.* மதிப்புக் காட்டு கிற. *a.* respectfulness.

**Respective,** *a.* தனித்தனியான; முறைமைப்படியான; அவ்வவர்க் குரிய.

**Respire,** *v.* மூச்சு விடு. *a.* respiratory. *n.* respiration. *n. ag. impers.* respirator, மூச்சு ஊட்டும் கருவி.

**Respite,** *n.* தாமதம்; ஓய்வு. *v.* தாமதி; ஓய்வு கொடு.

**Resplendent,** *a.* ஒளிர்கிற. *n.* resplendence, resplendency.

**Respond,** *v.* விடை கூறு; செயல் மறுதலி. *n. see* response.

**Respondent,** *a.* விடை சொல்கிற; எதிர்வாதம் செய்கிற. *n.* எதிர் வாதி.

**Response, (respond)** மறுமொழி (செயல்) மறுதலிப்பு; (செயல்) எதிர் செயல்.

**Responsibility,** *n.* பொறுப்பு உரிமை.

**Responsible,** *a.* பொறுப்புள்ள; நம்பகமான.

**Responsive,** *a.* விடையளிக்கிற; கைக்கொள்கிற; பயன் தருகிற. *n.* responsiveness.

**Rest,** 1. *v.* அமைதியாயிரு; தங்கு; ஓய்வு எடுத்துக் கொள் சார்ந்திரு; இறுதி ஓய்வுபெறு. *n.*1 அமைதி; ஓய்வு; உறக்கம்; சார்பு. *n.* 2. மீதி. *comb.n.* resthouse, தங்கிடம்; ஓய்வகம்; வழிப்போக்கர் விடுதி.

**Restart,** *v.* திரும்பத் தொடங்கு.

**Restate,** *v.* திரும்பக் கூறு.

**Restaurant,** *n.* சிற்றுண்டிச் சாலை; அருந்தகம்.

**Restful,** *a.* அமைதியான; ஓய்வு தருகிற. *n.* restfulness.

**Restitution,** *n.* திருப்பிக் கொடுத்தல்.

**Restive,** *a.* அடங்காத. *adv.* restively, *n.* restiveness.

**Restless,** *a.* அமைதியற்ற. *n.* restlessness.

**Re-stock,** *v.* திரும்பவும் (பொருள்களை) வாங்கிச் சேமித்துவை.

**Restoration,** *n.* திருப்பிக் கொடுத்தல்; திரும்ப உரிமை பெறுதல்

**Restorative,** *a.* உடல்நலத்திற் குரிய. *n.* உடல்நல மருந்து.

**Rester,** *v.* திருப்பிக்கொடு; பழைய நிலையில் வை; புதுப்பி; சீர்படுத்து. *a.* restorable.

**Restrain,** *v.* தடு; அடக்கிவை; *n.* restrainment, தடுத்தல். restraint, தடை.

**Restrict,** *v.* எல்லைக்குட்படுத்து; கட்டுப்படுத்து; வரையறை செய். *n.* restriction. *a.* restrictive.

**Result,** *v.* உண்டாகு; விளைவாகு. *n.* வளைவு; முடிவு; பயன். *n., a.* resultant, விளைவு (சார்ந்த); மாறுபாட்டு விளைவு (ஆன).

**Resume,** 1. *v.* (ரிஸ்யூம்) திரும்பவும் மேற்கொள்; மறுபடி தொடங்கு; விட்ட இடத்திலிருந்து தொடங்கு. 2. *n.* (ரேஸ்யூமே) சுருக்கம் பொழிப்பு; தொகுப்புரை. (1) *n.* resumption, மறு தொடக்கம்; புதுத் தொடக்கம்; புதுப்பொறுப்பேற்பு; மறுபடி ஏற்பு; புத்தேற்பு.

**Resurge,** *v.* திரும்பவும் எழு அல்லது தோன்று. *a.* resurgent, resurgence.

**Resurrect,** *v.* வழக்கம் முதலியன புதுப்பி கல்லறையிலிருந்து தோண்டி எடு; மீண்டும் பிழைத் தெழு. *n.* resurrection, (இயேசு பிரான்) மறுஉயிர் எழுச்சி, திருமீட் டெழுச்சி.

**Resuscitate,** *v.* உயிர்ப்பி; புத்துயிர் கொடு. *n.* resuscitation. *a.* resuscitative.

**Retail,** *v.* சில்லறை வாணிகம் செய்; விவரித்துக் கூறு. *n.* சில்லறை வாணிகம்.

**Retain,** *v.* வைத்திரு; கூலி கொடுத்து அமர்த்து; விடாமல் கொள். *a.* retainable. *n. see* retention. *comb. n. see* retainer. *comb. n.* retaining fee, தொடர் கட்டணம்.

**Retainer,** *n.* உடைமையாகக் கொள்ளும் உரிமை; வழக்குரைஞர் கூலி; உரிமை ஏவலாள்.

**Retake,** *v.* மீண்டும் கைப்பற்று; மீண்டும் படம்பிடி.

**Retaliate,** *v.* பழிக்குப் பழி வாங்கு; எதிர் பழிசெய்; பழி மாறுசெய். *n.* retaliation. *a.* retaliatory.

**Retard,** *v.* தடை செய்; தாமதப்படுத்து. *n.* retardation.

**Retention,** *n.* (retain) விடாமல் கொள்ளல்; வைத்திருத்தல்; நினைவு ஆற்றல். *a.* retentive. *n.* retentiveness, retentivity.

**Reticence,** *n.* மோனம்; அடக்கம். *a.* reticent.

**Reticulate,** *v.* வலை போல் அமை. *n.* reticulation. *a.* reticulate.

**Reticulum,** *n.* இரண்டாவது இரைப்பை.

**Retina,** *n.* கண் விழியின் பின்புறத் திரை; விழித்திரை.

**Retinue,** *n.* புடையர் குழு.

**Retire,** *v.* பின் வாங்கு; விலகு; ஒதுங்கு; ஓய்வெடுத்துக் கொள். *a.* retired, அடக்கமான; ஒதுங்கிய; ஓய்வு பெற்ற. *n.* retirement. ஒதுக்கம்; ஓய்வு; ஓய்வுக் காலம்; ஓய்வுநிலை. *comb. n.* retiring room, ஓய்வறை.

**Retort,** 1. *v.* எதிர்த்துக் கூறு *n.* சுடுசொல்; திறமையான விடை. 2. *n.* வாலை.

**Retouch,** *v.* சீர்திருத்து.

**Retrace,** *n.* வந்த வழியே திரும்பச் செல்; ஒவ்வொன்றாக நினைவுக்குக் கொண்டுவா.

**Retract,** *v.* (x protract) பின் வாங்கு; தள்ளுபடி செய்; சொன்

னதை மாற்று; சுருக்கு. *n.* retraction. *a.* retractile.

**Retreat,** *v.* பின் வாங்கு; பின் செல்; பாதுகாப்பான இடத்துக்குச் செல். *n.* பின்னடைதல்; ஓய்ந்திருத்தல்; தனிமையிடம்.

**Retrench,** *v.* குறை; சுருக்கு; செலவைக்குறை ஆட்குறை. *n.* retrenchment, குறைப்பு; செலவுக் குறைப்பு; ஆட்குறைப்பு.

**Retrial,** *n.* மறு விசாரணை.

**Retribution,** *n.* பழிவாங்குதல். *a.* retributive.

**Retrieve,** *v.* திரும்பப் பெறு; சீர்திருத்து; பழைய நன்னிலையை அடைச் செய். *a.* retrievable. *n.* retrieval, retrievement.

**Retriever,** *n.* வேட்டையில் கொன்றதை எடுத்து வரும் நாய்.

**Retrocede,** *v.* பின் செல். *n.* retrocession.

**Retrograde, retrogress,** *a.* பின்னுக்குப் போகிற நிலைமை மோசமாகிற. *v.* பின்னுக்குப் போ; இழிவடை. *n.* retrogradation, retrogression. *a.* retrogressive.

**Retrospect** *n.* பின்னோக்கு; பழைய நிலைமை அல்லது சென்றவற்றைக் கருதுதல். *n.* retrospection.

**Retrospective,** *a.* பின்னோக்குகிற; சென்ற காலத்தையும் உட்படுத்துகிற. *adv.* retrospectively. *phr.* retrospective effect, செல்கால உளப்பாட்டு நிலையுடன்; செல்காலம் உட்பட.

**Retrovert,** *v.* பின்னுக்குத் திரும்பு. *n.* retroversion.

**Retry,** *v.* திரும்ப முயற்சி செய்.

**Return,** *v.* திரும்பு; திரும்பி வா; திரும்பவும் தோன்று; விடைகூறு; திரும்பக்கொடு; தேர்தல் செய்தனுப்பு. *n.* திரும்புதல்; விடை; ஊதியம்; அறிக்கை; (அலுவலகப்) புள்ளி விவரம்; நடைமுறை விவரம்; வருகை; வரவு; தொடர் வருகை. *comb. n.* anual returns, ஆண்டுவாரிப் புள்ளிவிவரம்.

**Returning-officer,** *n.* தேர்தல் அலுவலாளர்.

**Reunion,** *n.* திரும்ப ஒன்று கூடுதல். *v.* reunite.

**Revalue,** *p.* திரும்பவும் மதிப்பிடு. *n.* revaluation. *n.* revaluate.

**Reveal,** *v.* வெளிப்படுத்து; புலப்படச் செய்; திரையை நீக்கு *n. see* revelation.

**Revel,** *v.* கும்மாளத்துடன் விருந்துண்; கூத்தாடு. *n.* revelry.

**Revelation,** *n.* (reveal) வெளிப்படுத்தல்; (கடவுள் அருள்) வெளிப்பாடு.

**Revenge,** *v.* பழிக்குப் பழி வாங்கு; வஞ்சம் தீர். *n.* பழிக்குப் பழி; வஞ்சம் தீர்த்தல். *a.* revengeful. *conn. see* vengence, avenge.

**Revenue,** *n.* வருவாய்; வரி வருமானம்; அரசாங்க வருமானம்.

**Reverberate,** *v.* எதிரொலி; ஒலி அதிர்வுறு. *n.* reverberation. *n. ag. impers.* reverberator.

**Revere,** *v.* போற்று; உயர்வாகக் கருது. *n.* reverence.

**Reverend,** a., *n.* போற்றத் தக்க(வர்); திருத்தகு (நிலை யுடையவர்).

**Reverential,** *a.* வழிபாடுணர்ச்சி யுள்ள.

**Reverie,** *n.* ஆழ்ந்த சிந்தனை; பகற்கனவு; மனக்கோட்டை.

**Reverse,** *a.* (revert) நேர் மாறான; தலைகீழான. *v.* திருப்பு; கவிழ்; எதிரிடையாக்கு. *n.* எதிரானது; மறுபுறம்; இடர்ப்பாடு. *n. (vbl)* reversal. *a.* reversible.

**Reversion,** *n.* (revert) மழைய நிலையடைதல்; மரபு முட்டி உடைமை மீளல்; மரபு மீண்டுவரும் உடைமை உரிமை. *n. pers.* reversioner, மரபு மீட்சியுரிமையாளர்.

**Revert,** *v.* பழைய நிலையடை; உரிமையுடையவரை அடை; முன் சொன்னதைக் குறிப்பிடு. *adj. see* reverse. *n. see* reversion.

**Revet,** *v.* தடுப்புச் சுவர் அமை. *n.* revetment.

**Revictual,** *v.* மறுபடியும் உணவு தேடிச்சேர்த்துவை.

**Review,** *v.* திரும்பிப் பார்; சரிபார்; துருப்புகளைப் பார்வையிடு. *n.* சரிபார்த்தல்; ஆராய்தல் கருத்துரை; ஆய்வுரை; மதிப்புரை; திறனாய்வு; மறு ஆய்வு; பின் தொகுப்பு. *n. ag.* reviewer. *comb. n.* book review, புத்தக ஆய்வுரை; புத்தக மதிப்புரை. news review, செய்தித் தொகுப்பு.

**Revile,** *v.* திட்டு. *n. ag.* reviler.

**Revise,** *v.* திருப்பிப் பார்; சரிபார்; திருத்து. *n.* revisal, revision.

**Revisit,** *v.* மறுபடி சென்று காண். *n.* மறுதடவை வந்து காண்டல்; மறுபேட்டி.

**Revitalize-se,** *v.* புத்துயிர் கொடு. *n.* revitalization, -sation.

**Revive,** *v.* உயிர்ப்பி; பிழைப்பி; பிழைத்தெழு; மீட்டெழு; உயிர் பெறு; புதுப்பி; வலுவூட்டு; வலுப் பெறு; நினைவுக்குக் கொண்டு வா. *n. abs.* com. revival; மீட்டுயிர்ப்பு; புதுப்பிப்பு; புதுமுயற்சி; புதுத் தோற்றம்; மறுநினைவு.

**Revivify,** *v.* புத்துயிர் ஊட்டு; உயிர்ப்பூட்டிக் காட்டு. *n.* revivification.

**Revocable,** *see* revoke.

**Revocation.** ”

**Revoke,** *v.* தள்ளு; உத்தரவை மாற்று. *a.* revocable. *n.* revocation.

**Revolt,** *v.* எதிர்த்துக்கிளர்ச்சி செய்; வெறுப்படையச் செய்; மன அதிர்ச்சி கொடு. *n.* கலகம்; அரசாங்க எதிர்ப்புக் கிளர்ச்சி. *a.* revolting, வெறுப்பான; திடுக்கிடச் செய்கிற.

**Revolution,** *n.* சுழலுதல்; புரட்சி. *v.* revolutionzie,-se *n.* revolutionist.

**Revolutionary,** *a., n.* புரட்சி செய்கிற(வர்).

**Revolve,** *v.* சுற்று; சுழலு; சிந்தனை செய். *n. see* revolution.

**Revolver,** *n.* பல குண்டுகளைச் சுடத்தக்க ஒரு கைத்துப்பாக்கி; சுழல் துப்பாக்கி.

**Revulsion,** *n.* மனமாற்றம்; வெறுப்பு.

**Reward,** *n.* ஊதியம்; பரிசு; ஈடு செய்தல். *n.* ஊதியம் கொடு; பரிசு கொடு.

**Rewind,** *v.* திரும்பச் சுற்றி வை.

**Rewire,** *v.* மறுபடியும் கம்பிகளை இணை.

**Rewrite,** *v.* திரும்பவும் எழுது.

**Rex,** *n.* (ஆட்சி செய்து கொண்டிருக்கும்) அரசன்.

**Reynard,** *n.* (புனைகதை உருவகப் பெயர்) நரி.

**Rhapsody,** *n.* களிப்புப் பாடல்; உணர்ச்சி பொங்கும் பேச்சு; பாட்டு; புகழ் அல்லது கட்டுரை. *v.* rhapsodize -se. *n. pers.* rhapsodist.

**Rheostat,** *n.* மின் தடை மாற்றி யமைக்கக் கூடிய கருவி.

**Rhetoric,** *n.* பேச்சுத்திறன்; சொற் கோப்புக்கலை; கலைத் திறம் வாய்ந்த சொற்பொழிவு. *a.* rhetorical, சொற்றிறம் வாய்ந்த. *n. pers.* rhetorican.

**Rheum,** *n.* நீர்க்கோவை.

**Rheumatic,** *a.* வாதத்திற்குரிய. *n.* கீல்வாதநோயாளி. *n.* rheumatism.

**Rhino, rhinoceros,** *n.* காண்டா மிருகம்.

**Rhinology,** *n.* மூக்கு மருத்துவம்.

**Rhizome,** *n.* தண்டுக்கிழங்கு.

**Rhododendron,** *n.* பூச்செடிவகை.

**Rhom, rhombus,** *n.* சாய்சதுரம், *a.* rhomboid, சாய்சதுரம், போன்ற. *a.* rhombic, சாய்ந்த சதுரமான.

**Rhyme, rime,** *n.* எதுகை; அடியீற் றெதுகை. *n. pers.* rhymer, rhymester, கவிபாடுபவர்; புன் கவிஞர்.

**Rhythm** *n.* சந்தம்; தாளம்; இலயம். *a.* rhythmic(al), சந்தம் பொருந்திய.

**Rib,** *n.* விலா எலும்பு; கப்பலின் பக்கக் கட்டைகளில் ஒன்று; இல்லை நரம்பு; குடைக் கம்பி. *v.* விலா எலும்புபோல அமை.

**Ribald,** *n.* இழிஞன். *a.* இழிவான; கொச்சையான. *n.* ribaldry.

**Ribbon, riband, ribband,** *n.* நாடா; இழைக்கச்சை; இழைப் பட்டை; அணியிழை.

**Rice,** *n.* அரிசி; சோறு. *comb. n.* rice mill. நெல்லரைக்கும் ஆலை; அரிசி ஆலை; raw rice, பச்சரிசி; boiled rice புழுங்கல் அரிசி சோறு. rice flour, அரிசி மாவு.

**Rich,** *a.* செல்வமிக்க; செழிப்பான; மிகுதியான; மதிப்பு மிக்க. *n.* richness.

**Riches,** *n.* செல்வம்.

**Rick,** *n.* (வைக்கோல் முதலிய வற்றின்) போர்; குவியல்.

**Rickets,** *n.* கணச்சூடு; என்புருக்கி நோய். *a.* rickety.

**Rickshaw,** *n.* இழுப்புவண்டி; ஆள் வண்டி; கைவண்டி.

**Rid,** *v.* (rid) விடுவி; நீக்கு. *n.* riddance, விடுதலை. *n. ag.* Ridder.

**Riddle,** 1. *n.* விடுகதை. *v.* விடுகதைக்கு விடை சொல். 2. *n.* சல்லடை; அரிகூடை. *v.* சலித் தெடு; மிகுதியாகத் துளை செய்.

**Ride,** *v.* (rode, ridden) (குதிரை, வண்டி) ஏறிச் செல்; இவர்ந்து செல்; ஊர்ந்து செல். *n.* அமர்ந்து செல்லுதல்; ஏறிச் செல்லுதல்; ஏறுலா; உலா; போதல்; பயணம்; உலாவல்; பாட்டை; பாதை. *n. ag.* rider, குதிரை ஏறிச்செல்பவர்; (உருக்கணக்கியல்) கடாத்தீர்வு; கடா.

**Ridge,** *n.* அணை; பாறை அருகு; முகடு; மலைத் தொடர். *v.* வரிவரியாக நிலத்தை வகு. *a.* ridgy.

**Ridicule,** *n.* ஏளனம்; இகழ்ச்சி; கேலி. *v.* ஏளனம் செய்; இகழ்ந்து பேசு. *a.* ridiculous.

**Rife,** *a.* மிகுந்துள்ள.

**Riff-raff,** *n.* குப்பை; இழி மக்கள்.

**Rifle,** *v.* சோதனையிட்டுத் திருடு; கொள்ளையடி; துப்பாக்கியால் சுடு. *n.* சுழல் துப்பாக்கி. *n. (pl.)* துப்பாக்கிப் படை. *n.* riffling.

**Rift,** *n.* பிளவு; திறப்பு; வெடிப்பு. *v.* பிள; வெடி. *n.* rift-valley, பிளவுப் பள்ளத்தாக்கு.

**Rig,** *n., v.* கப்பலின்பாய்(கட்டு). *n. ag.* rigger.

**Right,** *a.* நேரான; நேர்மையான; சரியான; வலப்பக்கமான. *adv.* சரியாக; நேராக; உடனே; உண்மை யாக. *n.* உண்மை; நேர்மை; உரிமை; வலப்பக்கம். *v.* நேராக்கு; சரியாக்கு. *n.* right-angle, செங்கோணம் (90 பாகை).

**Rightabout (turn)** *adv. n.* நேர் எதிராகத் திரும்பி (நிற்கும் நிலை).

**Righteous,** *a.* நேர்மையான. *n.* righteousness.

**Rightful,** *a.* நேர்மையுடைய; உரிமையுள்ள. *n.* rightfulness.

**Rightly,** *adv.* நேர்மையாக; சரியாக.

**Rigid,** *a.* உறுதியான; வளையாத; முறைப்பான. *n.* rigidity.

**Rigmarole,** *n.* நீண்ட பொருளற்ற கதை; வம்பளப்பு; வளைய வளையப் பேசுதல்; பிதற்றல்.

**Rigour,** *n.* கடுமை; கண்டிப்பு; இரக்கமற்ற தன்மை; துன்பம். *a.* rigorous.

**Rill,** *n.* ஓடை; சிற்றாறு.

**Rim,** *n.* விளிம்பு; கரை; ஓரம். *v.* கரை அல்லது விளிம்பு அமை.

**Rime,** *n. see* rhyme.

**Rind,** *n.* (பழத்தின்) தோல்; தோடு; பட்டை.

**Rinderpest,** *n.* ஆடுமாடுகளுக்கு வரும் ஒரு நோய்; ‘கோமாரி’.

**Ring,** 1. *n.* வளையம்; மோதிரம்; சிறு கூட்டத்தினர்; வட்ட அரங்கம். *v.* சுற்றிவளை; வளையம்

அல்லது மோதிரம் போடு. 2. *v.* (rang, rung) மணியடி; ஓசை செய். *n.* மணியோசை; உரத்து ஒலி. (1) *a.* ringed, (2) *n. ag.* ringer.

**Ringleader,** *n.* கலகத் தலைவர்.

**Ringlet,** *n.* சிறு மோதிரம் அல்லது வளையம்; சுருட்டை மயிர்.

**Ringmaster,** *n.* மற்போர் அரங்கத் தலைவர்; மற்போர் வல்லுநர்.

**Ringworm,** *n.* தோல் நோய் வகை; படர் தாமரை.

**Rinse,** *v.* நீரால் கழுவு. *n.* rinsing.

**Riot,** *n.* கலகம்; கலாம்; கலவரம்; குடிக்கலசல்; கிளர்ச்சி; ஒழுங்கற்ற நடவடிக்கை; அமளி; கூத்துக் கும்மாளம். *v.* கலகம் செய்; அமைதியைக் குலை; குடித்துக் கூத்தாடு. *a.* riotous, riotory. *n.* riotousness.

**Rip,** *v.* கிழி; கிழித்துப் பிள; தையலைப் பிரி; பாய்ந்தோடு. *adv.* rippingly, மேன்மையாக; கிளர்ச்சியுடன்.

**Ripe,** *a.* பக்குவமான; பழுத்து; முதிர்ந்த. *v.* ripen. *n.* ripeness.

**Ripple,** *n.* சிறு அலை. *v.* சிற்றலைகள் உண்டாக்கு; சலசல வென்று ஒலிசெய். *a.* ripply. *n. (dimu)* ripplet.

**Rise,** *v.* (rose, risen) உயர்; (கதிரவன்) எழு; மேலெழு; எழுந்திரு; தோன்று; உண்டாகு; மேன்மையடை; போருக்கெழு. *n.* எழுச்சி; உயர்வு; எழுதல்; உயர்தல்; வளர்ச்சி பிறப்பிடம்; தோற்றம்; பிறப்பு.

**Risible,** *a.* சிரிக்கத்தக்க; சிரிக்கும் இயல்புள்ள. *n.* risibility. *adv.* risibily.

**Risk,** *n.* இன்னல்; இடர்; இடுக்கண்; இடையூறு. *v.* இடர் வீழ்; துணிவு மேற் கொள். *a.* risky.

**Rite,** *n.* சடங்கு; வினைமுறை. *a., n.* ritual. *n. abs.* ritualism. *n. pers.* ritualist. *a.* ritualistic. *v.* ritualize,-se சடங்குசெய்.

**Rivage,** *n.* கரை; அணை.

**Rival,** *n.* போட்டியிடுபவர்; எதிராளி. *a.* போட்டியான; போட்டியிடுகிற. *v.* போட்டியிடு. *n.* rivalry.

**Rive,** *v.* (rived, riven) கிழி; பிள.

**River,** *n.* ஆறு; நீர்ப்பெருக்கு. *a., n.* riverain, ஆறு சார்ந்த. *n. diminutive*, (*see*) rivulet, *comb. n.* river-horse, நீர்க்குதிரை. riverside, ஆற்றுப்பக்கம். river valley, ஆற்றுவெளி.

**Rivet,** *n.* மர ஆணி. *v.* (ஆணி யடித்து இறுக்கு; (கவனம் அல்லது பார்வையை) ஊன்று.

**Rivulet,** *n.* (river) ஓடை; சிற்றாறு.

**Road,** *n.* சாலை; பாதை; நெறி; வழி; பாட்டை. *comb. n.* trunk road, பெருஞ்சாலை; நெடுஞ்சாலை. high road, நெடுஞ்சாலை; public road, பொதுச்சாலை. metalled road, கரட்டுச் சாலை. paved road, பாவு சாலை. grand trunk road, முதற் பெருஞ்சாலை; பெருநெடுஞ்சாலை. road roller,

சாலை செப்பனிடும் உருளை; பாட்டை உருளை.

**Road-metal,** *n.* சல்லிக் கற்கள்; சரளை.

**Road-stead,** *n.* கப்பல்கள் தங்குமிடம்.

**Roadway,** *n.* பாட்டை நடுப்பகுதி; பாட்டையாக வழங்கும் உரிமை.

**Roam,** *v.* சுற்றித்திரி; அங்கு மிங்கும் செல்.

**Roan,** *a.* புள்ளிகளமைந்து மயிலை அல்லது கருநிறமான; கலப்பு நிறமான. *n.* மயிலை அல்லது கலப்புநிறம். செந்நிறக் குதிரை.

**Roar,** *v.* கூச்சலிடு; முழங்கு; உரத்துப் பேசு. *n.* கூச்சல். *n. ag.* roarer.

**Roast,** *v.* நெருப்பில் வாட்டு; சுடு; வறு. *n.* வாட்டப்பட்டது; சுடப் பட்டது; வறுத்தல்; பொரியல். *n. ag. pers. impers.* roaster.

**Rob,** *v.* கொள்ளையடி; திருடு. *n. ag.* robber, கொள்ளைக்காரன்; கள்ளன். *n. abs.* robber, கொள்ளை; திருட்டு.

**Robe,** *n.* நீண்ட சட்டை அங்கி.

**Robin,** *n.* (*also* robin red-breast) சிவந்த மார்பை யுடைய சிறு குருவி வகை.

**Robin Goodfellow,** *n.* குறும்புக் காரக் குள்ளத் தெய்வம்.

**Robot,** *n.* மனிதன் போன்ற எந்திரம்; எந்திரம் போன்ற மனிதன்.

**Robust,** *a.* வலிமையுள்ள; உரமான. *n.* robustness.

**Rock,** 1. *n.* பாறை; பெருங்கல்; அரண். 2. *v.* தாலாட்டு. (1) *a.* rocky. (2) *n. ag.* rocker, தாலாட்டுபவர்; ஊசலாடும் பொருள்.

**Rock-bottom,** *a., n.* (கடலின்) உறுதிவாய்ந்த அடித்தளம்.

**Rock crystal** *n.* படிகப் பாறை மணல்; கூழாங்கல்.

**Rocket,** *n.* வாணம்; வாண வெடிகுண்டு; ஏவுகணை. *v.* வானம்விடு; மேலெழும்பிக் குதி; உயரக் கிளம்பு; வேகமாகப் பற.

**Rocking-horse,** *n.* அசைந்தாடும் பொம்மைக் குதிரை.

**Rock-oil,** *n.* (பெட்ரோலியம்) கல்லெண்ணெய்.

**Rock-salt,** *n.* இந்துப்பு.

**Rod,** *n.* கோல்; கழி; கம்பு; தூண்டில்; செங்கோல்; 5½ கெச நீள அளவு (கோல்).

**Rodent,** *n., a.* (விலங்கு நூல்) கொறிக்கும் உயிரினம் (சார்ந்த).

**Rodomontade,** *n.* ஆரவாரப் பேச்சு; வாய் வீரம்.

**Roe,** *n.* சிறு மான் வகை. *comb.n.* roe-buck, (அவ்வகை) ஆண்மான்.

**Rogue,** *n.* போக்கிரி; குறும்பன். *n.* roguery, போக்கிரித்தனம். *a.* roguish. *n. a.* roguishness.

**Roister,** *v.* குதித்துக் கும்மாளம் போடு. *a. pers.*roisterer.

*rol, roi faineant, n.* அரசன்.

**Role,** *n.* நடிகருடைய பகுதி; கதைக்கூறு; (தனிமனிதர்) கடமை; வாழ்க்கைப்பங்கு.

**Roll,** *v.* சுழலு; உருட்டு; சுற்று; உருளு; உருளையால் அழுத்து; உருண்டு செல்; அலைபோல் செல்; இடிபோல் முழங்கு. *n.* சுருள்; மரபு வரிசை; வழிவழி மரபு; சூட்டப்ப வகை; சுருள் அப்பம்; பெயர்ப்பட்டி (முழக்கம்); அலைபோன்ற அசைவு; அலை பாய்வு; அலையாடல். *n. comb.* roll call, பெயர்ப்பட்டிப்படி அழைத்தல். பெயர்ப்பட்டி அழைப்பு. acquittance rool, சம்பளப் பட்டி.

**Roller,** *n.* உருளை.

**Rollick,** *v.* களியாடு; கூத்தடி. *a.* rollicking.

**Rolling-stock,** *n.* (தொடர் ஊர்தித் துறைத்) தட்டு முட்டுச் சேமகலம்; உருள் கலங்கள்.

**Rolling-stone,** *n.* பிடிப்பற்றவர்; சுற்றித் திரிபவர்.

**Romance,** *n.* இலத்தீன் மொழியிலிருந்து தோன்றிய (இத்தாலியம், ஃபிரஞ்சு போன்ற) மொழி; மருள் கதை; புதுமைக் கதை; புனைவியல் திறம்; வியப்பூட்டும் அருந்திறப் புத்துணர்ச்சி (வாய்ந்த இலக்கியம்); அரும்பெறல் உணர்ச்சி (வாய்ந்த காதல், வீரக்கதை). *v.* புனை கதை எழுது. *n. pers.* romancer-romancist, புதுமைக் கதையாசிரியர்; பொய்யர். *a.* romantic, பொது உணர்ச்சி மீறிய; புதுமை உணர்வூட்டுகிற. *n.* romanticism.

**Romp,** *v.* குதித்து விளையாடு; கும்மாளமடி. *n.* கூச்சலுடன் கூடிய விளையாட்டு விளையாட்டுக் குழந்தை. *n.ag.* romper, *a.* rompish.

**Rontgen rays,** *n.* ராண்ட்ஜன் கதிர்கள்; சிற்றலைக் கதிர் வகைகள்.

**Rood,** *n.* சிலுவை; ¼ ஏக்கர் பரப்பு.

**Roof,** *n.* (*pl.* roofs) கூரை; வாயின் அண்ணம். *v.* கூரை வேய்.

**Rook,** 1. *n.* சதுரங்க விளையாட்டில் ‘யானை’ என்ற காய். 2. ஒருவகைக் காகம். *v.* ஏமாற்று; திருடு. (2) *a.* rooky. *n. coll* rookery, காகத் திரள்; வார்புதர்க் கூடு; திருடர் வாழ்விடம்.

**Room,** *n.* இடம்; அறை வாய்ப்பிடம்; வாய்ப்பு. *a.* roomy, இடமகன்ற, *n. abs.* roominess.

**Roost,** *n.* பறவை தங்குமிடம். *v.* கிளைமீது உறங்கு.

**Rooster,** *n.* வீட்டுக்கோழி.

**Root,** *n.* வேர்; ஆதாரம்; கிழங்கு; மூலகாரணம்; (இலக்.) சொல்லின் பகுதி (கணக்கியல்) (பெருக்க) மூலம். *v.* வேர் ஊன்று; நிலையாகு. *v.* root out *or* up. வேருடன் பிடுங்கு. *n. abs.* rootage. *a.* rooty.

**Rootstock,** *n.* வேர்த் தண்டு; அடிமரத் தண்டு; தண்டுக் கிழங்கு; பிறப்பிடம்.

**Rope,** *n.* கயிறு; *v.* கயிற்றால் கட்டு. *phr.* rope send, பொறுமையின் எல்லை.

**Rope-dancing,** *n.* கயிற்றின் மீது நடத்தல். *n. ag.* rope -dancer.

**Ropery,** *n.* கயிறு திரிக்குந் தொழில்.

**Ropeways,** *n. pl.* கயிற்றுப் பாதை(கள்).

**Rosary,** *n.* தொழுகை மணிமாலை.

**Rose,** 1. *see* rise. 2. *n.*, வன மல்லிகை மலர் (ரோசா); வனமல்லி நிறம்; இளஞ் சிவப்பு. (1) *a.* rosy, roseate. *adv.* rosily. *n. abs.* rosiness. *n.* (*comb.*) rose water, பன்னீர்.

**Rosemary,** *n.* நறுமணமுள்ள ஒரு செடி.

**Rosette,** *a.* வன மல்லிகை போன்ற அணி; நாடாவினால் வனமல்லி மலர்போல் கட்டப்பட்டது.

**Rose-wood,** *n.* நூக்க மரம்.

**Rosin,** *n.* குங்குலியம்.

**Roster,** *n.* பணிமனை அலுவலர் தொகுதி முறைப்பட்டி.

**Rostrum,** *n.* (*pl.* rostrums, rostra) சொற்பொழிவு மேடை.

**Rosy,** *a. see* rose.

**Rot,** *v.* அழுகு; சிதைவுறு. *n.* அழுகுதல்; கெடுதல்; ஆடுகளுக்கு வரும் ஒரு நோய். *a.* rotten, அழுகிய; சிதைவுற்ற. *n. abs.* rottenness.

**Rotary,** *a.* சுழல்கிற. *n.* சுழலும் அச்சு இயந்திரம்.

**Rotate,** *v.* சுழலு; சுற்று; வரிசைப் படி மேற்கொள்; *a.* rotatory. *n.* rotation. சுழற்சி; வரிசைப்படி வருதல். *a.* rotational. *n. ag. impers.* rotator, சுழலச் செய்யும் பகுதி.

**Rote,** *n.* உருப்பாடம். (*phr. adv.* by rote உருவிட்டு.)

**Rotten,** *a.* (*see* rot).

**Rotter,** *n.* பயனற்றவன்; இழிஞன்.

**Rotund,** *a.* உருண்டையான. கூட்டமான. *n.* rotundity.

**Rotunda,** *n.* வட்டமான கட்டடம்.

**Rouge,** *n.* (ரூஃழ்) (முகம் இதழ் பூசும்) செவ்வண்ணப் பசை. *v.* சிவப்பு வண்ணம் பூசு.

**Rough,** *a.* சொர சொரப்பான; கரடுமுரடான; கொந்தளிக்கிற; புயலான; மட்டு மதிப்பற்ற; திருத்த மற்ற; முதற்படியான; திருந்தப்படியான. *n.* போக்கிரி. *n.* roughness. *v.* roughen. *phr. a.* rough and tumble, ஒழுங்கற்ற. rough and ready, வேலை முடியாவிட்டாலும் பயன்படுத்தக் கூடிய, *comb. n.* rough paper, முரட்டுத்தாள்; பரபரப்பான தாள். rough note, திருந்தா வரி ஏடு; பலவகை ஏடு. rough sketch, திருந்தாப் படம்; முதல்வரிப் படம்; மாதிரிப் படம்; அரை குறைப்படம்; rough copy, அடித்தல் திருத்தல்படி; திருத்தப் படி. rough draft, முதல்வரி எழுத்து; அரைகுறைப் படிவம்.

**Rough-shod,** *a.* அரைகுறையாக விட்ட; முரட்டுத்தனமான.

**Round,** *a.* வட்டமான; உருண்டை யான; முழுதான; தெளிவான. *n.* வட்டம்; உருண்டை சுற்றி வருதல்; கடமை நெறி; படி; காவலன் சுற்ற வேண்டிய வழி; துப்பாக்கியில் ஒரு தடவைக்கான

குண்டுகள்.; துப்பாக்கி சுடுதல். *v.* வட்டம் அல்லது உருண்டையாகச் செய்; சுற்றிவா. *adv. prep.* சுற்றிலும்; எங்கும். *n.* roundness. *a.* roundish. *adv.* roundly, முழுவதும்; தெளிவாக; வழுவின்றி.

**Roundabout,** *a.* நேரல்லாத; சுற்றான. *n.* சுழலும் ராட்டினம்.

**Roundel,** *n.* வட்டம்; வளையம்; வளையமான அரண்.

**Roundelay,** *n.* கும்மி; கோலாட்டம்; இவற்றிற் கேற்ற பாடல்.

**Roundly,** *adv. see.* round.

**Roundup,** *n.* (மனிதர், ஆடு மாடு) ஒன்று திரட்டுதல்.

**Rouse,** *v.* கிளறு; தூண்டு; எழுப்பு.

**Rout,** *n.* கும்பல்; தோல்வியடைந்து நிலைகுலைதல். *v.* முறியடி; நிலைகுலையச் செய்.

**Route,** *n.* (ரூட்) வழி; செல்வழி; பாட்டை; ஊர்தி செல்பாதை; வழிப்பாதை; பாதைவகை.

**Routine,** *n.* நாள்முறைப் பழக்கம்; பழக்க மரபு; வழக்க முறை; வழக்கமாகச் செய்யும் வேலைகள்.

**Rove,** *v.* சுற்றித்திரி; விழியை உருட்டிப் பார். *n.* roving. *n. ag.* rover, சுற்றித் திரிகிறவர்; கொள்ளைக்காரர்; முறுக்கேற்றும் இயந்திரம்.

**Row,** 1. *n.* வரிசை. *v.* துடுப்பினால் தள்ளு; (படகு) ஓட்டு. 2. *n.* சச்சரவு; சந்தடி (1) *n. ag.* rower.

**Rowdy,** *a.* சந்தடியான. *n.* கலகக்காரன்; வீணன்; போக்கிரி. *n.* rowdyism, rowdyness.

**Rowlock,** *n.* படகில் துடுப்பைப் பிணைக்கும் பகுதி.

**Royal,** *a.* அரசனுக்குரிய; பெருமிதமான. *n.* காகிதத்தில் ஓர் அளவு (25" x 20")

**Royalist,** *n.* அரசன் கட்சியை ஆதரிப்பவர்.

**Royalty,** *n.* அரசநிலை; அரசர்; அரசக் கோட்பாடு; (அரசனுக்கு அல்லது உரிமையாளருக்குக் கொடுக்கும்) ஊதியப் பங்கு; (ஏட்டாசிரியர்) ஆதாயப் பங்கு.

**Rub,** *v.* துடை; தெய்; சினமூட்டு. *n.* தேய்த்தல்; வேறு பாட்டுணர்ச்சி; முரண்பாடு; துன்பம்.

**Rubber,** *n.* தேய்ப்பவர்; துடைக்கும் கருவி; 'துடைப்பான்' 'தொய்வகம்'. *comb.* rubber stamp கைப்பொறிப்பு; கை முத்திரைப் படி.

**Rubbish,** *n.* குப்பை; இழி மக்கள்.

**Rubric,** *n.* தலைப்பு.

**Ruby,** *n.* சிவப்புக்கல்; சிவப்பு. *v.* சிவப்பாக்கு.

**Rudder,** *a.* கப்பல் சுக்கான்; பயின்.

**Ruddy,** *a.* சிவப்பான; நிறமான; *n.* ruddyness.

**Rude,** *a.* முரட்டுத்தனமான. *a.* rudish. *n.* rudeness.

**Rudiment,** *n.* வளர்ச்சியடையாத உறுப்பு; (பயனில்லாத) உறுப்பு; *(pl)* மூலக்கோட்பாடுகள் தொடக்கப் பகுதிகள். *a.* rudimentary, -tal.

**Rue,** *v.* வருந்து; சென்றதற்கு இரங்கு. *a.* rueful. *n.* ruefulness.

**Ruff,** *n.* கழுத்து அணி.

**Ruffian,** *n.* முரடன்; கொடியவன். *a.* முரடான; கொடிய. *a.* ruffianism. *a.* ruffianly.

**Ruffle,** *v.* சுருக்கங்கள் உண்டாகச் செய்; குழப்பு; கலக்கு. *n.* குழப்பம்; குஞ்சம்.

**Rufous,** *a.* கருஞ்சிவப்பான.

**Rug,** *n.* கம்பளம்; சமக்காளம்; தடித்த விரிப்பு.

**Rugby,** *n.* கால்பந்தாட்ட வகை.

**Rugged,** *a.* கரடு முரடான; கரகரப்பான; முரட்டுத்தனமான; நாகரிகமற்ற; மேடுபள்ளமான. *n.* ruggedness.

**Ruin,** *n.* வீழ்ச்சி; அழிவு. *(pl.)* பாழடைந்த கட்டடம் முதலியன. *v.* சிதை; அழி; வறுமையாகக்கு. *n.* ruination. *a.* ruinous.

**Rule,** *n.* முறை; விதி; ஒழுங்கு; சட்டம்; ஆட்சி; கட்டளை; வழிஒழுங்கு. *v.* ஆட்சிசெய்; ஒழுங்காக வை; விதி ஏற்படுத்து; காடுகள் வரை. *n. pers. impers. see* ruler. *comb. n.* footrule, அடிவரைகோல்.

**Ruler,** *n.* ஆட்சி செய்பவர்; கோடு வரைய உதவும் கழி; (அடி) 'வரைகோல்' 'வரைகழி', 'நேர் கோட்டுருளை'.

**Ruling,** *n.* (தலைவர் முறைமன்ற நடுவர்) தீர்ப்பு; கோடு போடுதல். *a.* ஆட்சி செய்கிற.

**Rum,** 1.*n.* வெல்லச் சாராயம். 2. *see* rummy.

**Rumble,** *v.* உறுமு; கடகட வென்று முழங்கு. *n.* உறுமுதல்; முழக்கம்; வண்டியில் பின்புற இடம்.

**Ruminant,** *a., n.* அசைபோடுகிற (உயிர்)

**Ruminate,** *v.* அசைபோடு; ஆழ்ந்து சிந்தி. *n.* rumination. *a.* ruminative. *a., n. see* ruminant.

**Rummage,** *v.* கிளறித் தேடு; தேடுவதால் ஒழுங்கீனமாக்கு. *n.* புரட்டித்தேடுதல்; பலபண்டத் தொகுதி.

**Rummy, (rum)** *a.* விந்தையான; வியப்பைத் தருகிற.

**Rumour,** *n.* ஊரலர்; அம்பலுரை. *v.* பொய்ச் செய்தி. கூறு.

**Rump,** *n.* தறித்த வால்; எஞ்சியுள்ள சிறு பகுதி; எச்சம்; குறைக்கட்டை.

**Rumple,** *v.* மடிப்புகள் அல்லது சுருக்கம் விழச்செய்; ஒழுங்கைக் குலை; கசக்கு. *n.* மடிப்பு; சுருக்கம்.

**Run,** *v.* (ran, run) ஓடு; பரவு; உருகு; கல; நடப்பில் இரு; வழிந்தோடு; கசி. *n.* ஓட்டம்; ஓடிய தொலை; நிகழ்ச்சி நடப்பு; நெருக்கடி. *n.* runway, வானூர்தி. நிலத்தில் ஓடும்பாட்டை. *n.* runagate, போக்கிரி. *n.* runaway, தப்பி யோடியவர். *a.* rundown, ஓய்ந்து போன.

**Rung,** 1. *n.* ஏணியின்படி. 2. *v. see* ring.

**Runner,** *n.* தூதர்; தரைமீது படர் கொடி; கொடிக்கயிறு; அஞ்சல் கொண்டோடுபவர்.

**Runner-up,** *n.* போட்டியில் இரண்டாவதாக வருபவர்.

**Rupee,** *n.* (இந்திய) வெண் பொற்காசு; வெள்ளி.

**Rupture,** *n.* பிளவு; முறிதல்; சச்சரவு; குடல்வாத நோய். *v.* பிள; முறி.

**Rural,** *a.* சிற்றூர்க்குரிய; பட்டிக் காடான; பட்டிக்காட்டுக்குரிய; நாட்டுப் புறம் சார்ந்த; நாட்டுப் புறமான. *v.* ruralize, -se *n.* ruralization, -sation. *comb. n.* rural development, சிற்றூர் வளர்ச்சி; சிற்றூர் முன்னேற்றம். rural reconstruction, சிற்றூர்ப் புத்தாக்கம்.

**Ruse,** *n.* சூது; சூழ்ச்சிச் செயல்.

**Rush,** 1.*v.* பாய்ந்து செல்; வேகமாகத் துள்ளு; கூட்டமாக ஓடு. *n.* பாய்ச்சல் நெருக்கம்; வேகம்; அருமை; அருந்தல் நிலை. *a.* சுறுசுறுப்பாக வேலை நடக்கிற. 2. *n.* நாணல்; சிறுமைப் பட்டது. (2) *a.* rushy, நாண லினால் ஆன.

**Rushcandle, rushlight,** *n.* மங்கிய ஒளி; சிற்றறிவு.

**Rusk,** *n.* திரும்பச் சுட்ட அப்பத்துண்டு.

**Russet,** *a.* பழுப்பு நிறமான; வீட்டில் நெசவு செய்த. *n.* பழுப்பு நிறம்; வீட்டில் நெசவு நெய்த ஆடை.

**Rust,** *n.* இரும்புத் துரு; களிம்பு; பயிர்களுக்கு வரும் ஒரு நோய். *v.* துருவாகு; வீணாகு. *a. (neg.)* rustless.

**Rustic,** *a., n.* நாட்டுப்புறத்துக் குரிய(வர்); நாகரிகமில்லாத(வர்); *n. abs* rusticity. *abs., v.* rusticate. *n. vbl.* rustication.

**Rustle,** *v.* சலசலவென்று ஒலி செய். *n.* சலசல ஒலி.

**Rustler,** *n.* சுறுசுறுப்பானவர்; பண்ணையிலிருந்து மாடு திருடுபவர்.

**Rusty,** *a.* துருப்பிடித்து; நாட் பட்டுத் தகுதியற்ற. *n. abs.* rustiness.

**Rut,** 1. *n.* வண்டித் தடம்; நீண்ட பள்ளம்; நொடி; துரடு; பழகிய வழி. *v.* தடம் அல்லது பள்ளம் செய். 2. *n.* மிகுந்த ஆசை; (யானையின்) கடம்; மதம். *a.* rutty, ruttish.

**Ruth,** *n.* (ரூத்) இரக்கம்; கருணை. *a. (neg.)* ruthless, இரக்கமற்ற; கொடிய. *n.* ruthlessness.

**Rye,** *n.* கம்பு போன்ற தானியம்.

**Ryot,** *n.* (இந்திய வழக்கு) குடி யாளவர்; உழவர். *a.* ryotwari, நேர் குடிவரை உறவுடைய *comb. n.* ryotwari system, நேர்குடி வாரமுறை.

# S

**Sabbath,** *n.* (கிறித்துவர்) புண்ணிய நாள்; வார ஓய்வு நாள். (கிறித்து வர்க்கு ஞாயிற்றுக்கிழமை; யூதர்க்குச் சனிக்கிழமை; முஸ்லிம்களுக்கு வெள்ளிக்கிழமை)

**Sable,** *n.* கீரியின் உயிர்வகை; அதன் மயிர். *(pl. )* துயர் அறிகுறி உடை. *a.* கரிய நிறமான.

**Sabotage,** *n.* அழிவு வேலை; *v.* அழிவு வேலை செய். *n.* saboteur.

**Sabre,** *n.* கொடுவாள்; பட்டாக் கத்தி. *v.* வாளினால் வெட்டு.

**Sac,** *n.* பை (உடலில் உள்ள) பை போன்ற உறுப்பு.

**Saccharine,** *a.* இனிப்பான. *n.* (கருப்பெண்ணையி லிருந்து உண்டு பண்ணப்பட்ட) செயற் கைச் சர்க்கரை வகை. *v.* saccharify. *s. n.* saccharimeter, சர்க்கரை ஆய் கருவி.

**Sacciform,** *a.* பை உருவமுடைய

**Sacerdotal,** *a.* புரோகிதனுக்குரிய, *n.* sacerdotalism.

**Sack,** 1. *n.* கோணிப்பை; பை; தளர்ச்சியான சட்டை. *v.* பையில் போட்டுக் கட்டு. 2. *n.* கொள்ளை யடித்தல்; நீக்குதல். *v.* பாழாக்கு; தாக்கிக் கொள்ளையடி; வேலையி லிருந்து விலக்கு.

**Sacrament,** *n.* சமயவினை. *a.* sacramental.

**Sacred,** *a.* தெய்வத்துக்குரிய; திருநிலையான. *n.* sacredness.

**Sacrifice,** *v., n* விட்டுக் கொடுப்பு; தன் மறுப்பு; தியாகம். *a.* sacrificial.

**Sacrilege,** *n.* திரு அழித்தல்; அவச்செயல்; அவம்; தெய்வம் பழித்தல்; திருப்பழிப்பு. *a.* sacrilegious.

**Sacrist, sacritsan,** *n.* கோவில் மணியக்காரன். *n.* sacristy, கோவில் உக்கிராணம்.

**Sacrosanct,** *a.* திருவில் திரு நிலையுடைய; தூய்மையில் தூய; தெய்விக.

**Sacrum,** *n.* முதுகெலும்பின் கீழ் நுனிப்பகுதி; திரிகம். *a.* sacral.

**Sad,** *a.* துயரமான; துயரம் தருகிற; மோசமான; சோர்வான; பளு வுடைய; திண்ணிய. *a. v.* sadden, துயரப்படுத்து. *n.* sadness.

**Saddle,** *n.* சேணம். *v.* சேணம் கட்டு; தடங்கல் அணி. *n. ag.* Saddler, சேணம் இயற்றுபவர். *n. abs. com.* saddlery, குதிரைக் கோப்பு(கள்) சேணத் தொழிலகம்; சேணக்கலச் சேமகம்

**Sadism,** *n.* அவலச் சிற்றின்ப நிலை; விலங்குக் காமம். *n. pers.* Sadist. *a.* sadistic.

**Safe,** *a.* நம்பகமான; இடர் காப்பான; பாதுகாப்பான; *n.* பாது காப்பான பெட்டி; ஒழுக்கறைப் பெட்டி; காப்பறை. *n. abs. see* safeness, safety. *(comb) n.* safe-conduct உறுதிச் சீட்டு safe guard, பாதுகாப்பு. *v.* பாதுகாவல் செய். *n.* safe-keeping பாது காப்பாக வைத்திருத்தல். safe custody, சேமக்காப்பு; iron safe, இரும்புப் பெட்டி; ஒழுக்கறைப் பெட்டி

**Safety,** *n. (safe)* காப்பீடு; பாதுகாப்பான நிலை. *n.* safety -

match, காப்புத் தீக்குச்சி. safety, valve, காப்புக்கதவு; காப்பு வாயில், safety-razor (blades) (மயிர்) நீவுக் கத்தி; சௌள அலகு

**Safflower,** *n.* குங்குமப்பூ.

**Saffron,** *n.* மஞ்சள்; குங்குமம். *a.* மஞ்சள் நிறமான.

**Sag,** *v* பளுவினால் தொய்வு அடை; தளர்; சோர்

**Saga,** *n.* வீர காவியம். *n.* sagaman, வீரகாவியம் ஆக்கியோர்.

**Sagacious,** *a.* அறிவுக்கூர்மை யுடைய; அறிவு நுட்ப முடைய. *n.* sagacity.

**Sage,** 1. *n.* அறிவர்; அறிவாளி. *a.* அறிவுடைய; ஆய்ந்துணர்கின்ற. 2. *n.* செடியின் வகை (1) *adv.* sagely. *n.* sageness.

**Saggittarius,** *n.* (வானவட்டத்தின்) வில்வீடு; தனுர் இராசி.

**Sago,** *n.* சவ்வரிசி.

**Said,** *v. (see say).*

**Sail,** *n.* கப்பலின் பாய்; கடற்பயணம் (set sail, கடலில் செல்). *v.* கப்பலில் பயணம் செய்; கப்பலைச் செலுத்து; மிதந்து செல். *n.* sailor, கப்பலோட்டி.

**Saint,** *n.* நாயனார்; ஆழ்வார்; திருத்தொண்டர்; ஒழுக்கவாணர். *a.* sainted, saintly. *n. abs.* sainthood, saintliness.

**Sake,** *n.* காரணம்; காரியம். *a.* நோக்கம். (*phr.* for the sake of பொருட்டு.)

**Salad,** *n.* தேங்குழம்பு; இன் கலவை

**Salamander,** *n.* உடும்பு.

**Sal-ammoniac,** *n.* நவச்சாரம்.

**Salary,** *n.* சம்பளம்; ஊதியம். *v.* சம்பளம்; கொடு. *a.* salaried.

**Sale,** *n.* விற்றல்; விற்பனை. *comb. n.* sale(s) proceeds, விற்றவரவு; விற்றமுதல்; sales ledger, விற்பனைப் பேரேடு.

**Salesman,** *n.* (*fem.* Sales woman) விற்பவர். *n. abs.* salesmanship.

**Salient,** *a.* புறமுனைப் புடைய; முனைப்பான; முக்கியமான. *n.* படைமுன்னணியின், முன் பகுதி. *n.* salience.

**Saliferous,** *a.* உப்பு மிகுந்துள்ள.

**Saline,** *a.* உப்பான; உப்புக் கலந்த; உப்புப்போன்ற. *n. abs.* salinity.

**Saliva,** *n.* வாயூறல்; உமிழ் நீர். *a.* salivary.

**Sallow,** *a.* (மேனி) விளறிய. *n.* sallowness.

**Sally,** *v., n* (கோட்டையிலிருந்து) புறம் பாய்ந்து தாக்கு. *n.* திடீர்த் தாக்குதல்; மறுமொழித் திறமை; சொல்திறம்.

**Salmon,** *n.* மீன் வகை.

**Salon,** *n.* வரவேற்பு அறை; தலைவர்களின் கூட்டம்; (பாரிஸ் நகரின்) ஆண்டிறுதிக் கலைக் கண்காட்சி.

**Saloon,** *n.* கூடம்; வரவேற்பு அறை; கப்பலின் அறை; உணவக அரங்கம்; தொடர் வண்டி (உணவக)த் தனிப்பெட்டி *comb.*

*n.* shaving saloon, மயிர்புனை கூடம்.

**Salt,** *n.* உப்பு; சுவை; காரம்; அறிவு. *a.* உப்பான. *v.* உப்பிடு; உப்பிட்டு உலர்த்து. *a.* salty, saltish. *n. abs.* saltiness. *comb. n.* salt fields, உப்பளம் saltpan, உப்புப்பாத்தி. saltfactory உப்புப் பண்டகசாலை. saltlist உப்புத் துறைப் பணியாளர் பட்டியல் epsomsalt, கூட்டுப்பு; *see* saltpetre.

**Salter,** *n.* உப்பு வாணிகர்.

**Saltern,** *n.* உப்பளம்.

**Saltigrade,** *a., n.* துள்ளும் காலமைப்புள்ள (சிலந்தி).

**Saltpetre,** *n.* வெடியுப்பு.

**Salubrious,** *a.* உடல் நலத்துக்குகந்த. *n.* salubrity.

**Salutary,** *a.* நன்மை விளைகிற.

**Salutation,** *n.* (> salute) முகமன் உரை; வணக்கமொழி; வணக்கச் சைகை அடையாளம் (நெற்றி நோக்கி வலக்கை சுட்டல்). *a.* salutatory.

**Salute,** *v., n.* முகமன் கூறு; வணங்கு. *n.* வணக்கம். *n. see* salutation. *comb,. v.* take the salute, (படைத் துறை வழக்கு) படைவீரர் வணக்க மதிப்பீடு பெறு.

**Salvage,** *n.* அழிவிலிருந்து காப்பாற்றுதல்; காப்பாற்றிய பொருள்; இதற்கான கூலி. *v.* அழிவிலிருந்து காப்பாற்று. *n. ag. impers.* salvor.

**Salvarsan,** *n* மேகநோய் மருந்துவகை.

**Salvation,** *n.* அருள் மீட்பு; வீடுபேறு; பேரின்பம்.

**Salve,** *n.* வலியைத் தணிக்கும் களிம்பு அல்லது எண்ணெய். *v.* களிம்பு அல்லது எண்ணெய் பூசு.

**Salver,** *n.* தாம்பாளம்; தட்டு.

**Salvo,** *n.* பல பீரங்கிகளை ஒன்றாகச் சுடுதல்; (கை கொட்டு) ஆர்ப்பரிப்பு.

**Salvor,** *n.* (*see* salvage.)

**Same,** *a., pron.* மாறுபாடில்லாத; (பொருள், ஆள்) ஒரே மாதிரி யான; முன் கூறப்பட்ட. *n. abs.* sameness.

**Samite,** *n.* (பழைய வழக்கு) திண்ணமான பட்டுத் துணி.

**Sampan,** *n.* (சீனா, ஜப்பான்) படகு.

**Sample,** *n.* மாதிரி; பதம். *v.* மாதிரிகள் எடு.

**Sampler,** *n.* மாதிரிப் பின்னல் வேலை.

**Sanad,** *n.* (இந்திய வழக்கு) பட்டயம்; பரிசு.

**Sanative, Sanatory,** *a.* நோய் களைக் குணப்படுத்துகிற.

**Sanatorium,** *n.* உடல் நலமாடம்.

**Sanctify,** *v., n* தெய்விகத் தன்மை பெறச் செய். *n.* sanctifiation.

**Sanctimonious,** *a.* மிகு மதிப்புக் காட்டுகிற. *n.* sanctimonious ness, sanctimony.

**Sanction,** *n.* இசைவாணை; கட்டளை இணக்கம்; உரிமை

இணக்கம்; மேலுரிமை அளிப்பு; சட்ட இசைவு; சட்ட உரிமை; சட்டவலு. *v.* செயலுரிமை அளி; இடங்கொடு. *a.* sanctionable, sanctionary.

**Sanctity,** *n.* தெய்விகத் தன்மை. திருநிலைத் தூய்மை.

**Sanctuary,** *n.* கோயில் திருவிடம்.

**Sanctum** (sanctorum), *n.* மூலக்கோயில்; இறைவன் கோயில்; 'திருநிலைத் திரு'.

**Sand,** *n.* மணல் *(pl. )* மணற்பரப்பு. *v.* மணலைத் தூவு. *a.* sandy, மணற்பாங்கான; மணல் போன்ற

**Sandal,** 1. *n.* மிதியடி; செருப்பு வகை. 2. *n. see* sandal (wood)

**Sandal,** *n.* சந்தனம். *comb.n.* sandalwood, சந்தனக் கட்டை. sandalwood powder, சந்தனமரத் தூள் sandalwood oil சந்தனத் தைலம்.

**Sandgag,** *n.* மணல்மூட்டை.

**Sandbar,** *n.* கடற்கரை; மணல் கரை; தேரி.

**Sand-blind,** *a.* மங்கிய பார்வை யுள்ள; அரைக் குருடான.

**Sand -glass,** *n.* மண்வட்டில் (பழங்கால மணிப்பொறி).

**Sand-paper,** *n.* தேய்ப்புத் தாள்.

**Sand-sluice,** (*also* scour sluice) *n.* மணல்வாரி (மதகு); பாதாள மடை.

**Sandstone,** *n.* மணற்கல்.

**Sandwich,** *n.* சுவைப்பொருள் இடைச்செருகிய அப்பத் துண்டுகள்; இடை இடை மாற்றப் பொருள். *v.* இடை இடைச் செருகு.

**Sandy,** *a.* (*see* sand).

**Sane,** *a.* தெளிந்த அறிவு நிலையுள்ள; குடிமயக்கமற்ற; கிறுக்கில்லாத. (x insane) *n. see* sanity.

**Sang-frord.** *n.* (சங்ஃவ்ருவாட்) இடரிடை அமைவுறுதி; நிலை யான அமைதி.

**Sanguinary,** *a.* குருதி வெறியுள்ள; கொலைக்களரியான.

**Sanguine,** *a.* குருதிச் சிவப்பான; நம்பிக்கை நிறைந்த; கிளர்ச்சி நிறைந்த. *n.* sanguineness.

**Sanitary,** *a.* உடல் நலத்திற்குரிய; துப்புரவான; தூய்மையான. *n.* sanitariness. *comb.n.* sanitary arrangements, துப்புரவு ஏற்பாடுகள்.

**Sanitation,** *n.* வாழ்க்கை நல ஏற்பாடுகள்.

**Sanity,** *n. (sane)* மனத்தின் நன் னிலை; நல்லறிவு நிலை; நல்லுணர்வு நிலை (x insanity).

**Sank,** *v. see* sink.

**Sans,** *prep.* இல்லாத.

**Sansculotte,** *n.* அரையாடை யில்லாதவன்; தீவிரப் புரட்சிக் காரன்.

**Sap,** 1.*n.* சாறு; செடியினப்பால்; உயிர் தரும் நீர்மம். *v.* (நீர் ஊறிப்) பதன் அழி; அமைப்பைத் தகர். (1) *a.* sappy. *n. ag.* sapper, அறுப்பவன்.

**Saphead,** sap, *n.* மடையர்; அரைக்கிறுக்கு.

**Sapeint,** *a.* அறிவுடைய; அறிவுள்ளதுபோல் நடிக்கிற. *n.* sapience.

**Saples,** *a.* சத்தில்லாத.

**Sapling,** *n.* இளமரம்; பைதல்; சிறுவர்.

**Saponaceous,** *a.* சவுக்காரம் கலந்துள்ள; சவுக்காரம் போன்ற.

**Saponify** *v.* சவுக்காரம் மாற்று. *n.* saponification.

**Sapper,** *n.* 1. 2. சுரங்க வெடிக் கண்ணிப் போர் வீரர்.

**Sapphire,** *n.* நீலமணிக் கல். *a.* நீலமான.

**Sapwood,** *n.* பட்டையை அடுத்துள்ள மென் பகுதி.

**Sarcasm,** *n.* ஏளனம்; பழிப்பு, sarcastic.

**Sarcophagus,** *n.* (கல்லால் ஆன) பிணப்பெட்டி.

**Sardar,** *n.* (இந்திய வழக்கு) தலைவர்; முதல்வர்; படை முனைவர்.

**Sardine,** *n.* சிறுமீன் வகை.

**Sardonic,** *a.* ஏளனமான; (சிரிப்பு) இயற்கையல்லாத.

**Sari, saree,** *n.* தாவணி; மேலாக்கு; புடைவை; சேலை.

**Sarishtadar,** *n.* (இந்திய வழக்கு) பணியாள் முதல்வர்.

**Sarsaparilla,** *n.* நன்னாரி.

**Sartorial,** *a.* தையல் சார்ந்த.

**Sash,** 1. *a.* அரைப்பட்டிகை; கச்சை. 2. பலகணிக் கண்ணாடியின் சட்டம்.

**Sassafras,** *n.* (மணம் வாய்ந்த வேர்ப்பட்டையுடைய) மரவகை.

**Sat,** *v. see* sit.

**Sath,** *n.* சைத்தான்; தீயோன். *a.* satanic, satanical.

**Satchel,** *n.* (மாணவரின்) புத்தகப் பை; தொங்குபை.

**Sate,** 1. *v.* மனநிறைவூட்டு தெவிட்டு. 2. *see* sit.

**Sateen, satteen,** *n.* பளபளப் பான துணி வகை.

**Satellite,** *n.* துணைக்கோளம்; சேர்க்கையாளர்.

**Satiate,** *a.* தெவிட்டுகிற. *v.* மனநிறைவடைவி; தெவிட்டு (வி). (x *a.* insatiate). *s. a.* satiable.

**Satiety,** *n.* நிறை செறிவு; உச்ச நிறைவு; தெவிட்டிய நிலை.

**Satin,** *n.* (ஒருபுறம் பளபளப்பான) பட்டுத் துணி. *a.* satiny.

**Satire,** *n.* வசையுரை; வசைப்பா; வசை நூல்; அங்கதம். *a.* satiric(al). *adv.* satirically. *n.* satiricalness. *v.* satirize, -ise, வசையால் தாக்கு.

**Satisfy,** *v.* மனநிறைவு அளி; அவா நிறைவேற்று. *n.* satisfaction. *a.* satisfactory.

**Satrap,** *n.* மாகாணத்தலைவர்; சிற்றரசர். *n. abs.*satrapy.

**Saturate,** *v.* (நீர்மம்) திண்ணிறைவாக்கு; ஏற்கக்கூடிய அளவு கல. *n.* saturation. *a.* saturated.

**Saturday,** *a.* சனிக்கிழமை.

**Saturnalia,** *n. (sing., pl.)* (உரோமக்) களியாட்ட விழா.

**Saturnic,** *a.* காரீய நஞ்சூட்டப் பட்ட.

**Saturnine,** *a.* மந்தமான; சனியின் ஆட்சிக்குட்பட்ட.

**Satyr,** *n.* (கிரேக்கக் கதை, நாடகம்) குதிரைமுகக் கூளி; களிமகன்.

**Sauce,** *n.* சுவைச் சத்து; துடுக்கு; குறும்பு, *v.* சுவையாக்கு; துடுக் காயிரு.

**Saucer** *n.* சிறு தட்டு.

**Saucy,** *a.* துடுக்கான நடத்தை யுடைய.

**Saunter,** *v.* உலாவு; மெல்ல நட. *n.* மெல்ல உலாத்து. *n. ag.* saunterer.

**Saurian,** *a., n.* பல்லியினத்தைச் சேர்ந்த(உயிர்).

**Sausage,** *n.* காரப்பண்ணியவகை; காரத் திண்பண்ட வகை.

**Savage,** *a.* நாகரிகமற்ற; கொடிய, *n.* நாகரிகமற்ற மனிதர். *n. abs.* savagery.

**Savanna(h),** *n.* மரங்களற்ற புல்வெளிப் பகுதி.

**Savant,** *n.* புலவன்; இயல் நூலறிஞன்.

**Save,** *v.* காப்பாற்று; பாதுகாவல் செய்; சேமித்து வை; தடுத்தாட் கொள்; தடு. *prep.* (*also* saving) தவிர.

**Saving,** *a.* செட்டான; பாது காப்பான. *prep.* தவிர. *n.* சேமிக்கப்பட்ட பொருள். *(pl.)* மீதி வைத்த பணம். *comb. n.* savings account, சேமிப்புக் கணக்கு; சேமிப்பு வகை. savings bank, சேமிப்புத் திருவகம்; சேமிப்புச் சீர்; சேமிப்பு மனை.

**Saviour,** *n.* காப்பவர்; ஆண்டவர்; பாதுகாவலர்; (இயேசு) கிறித்து.

**Savour,** *n.* சுவை; மணம். *v.* தன்மை காட்டு; நினைப்பூட்டு; போன்றிரு. *a.* savoury, சுவையான. *v.* சுவை யான பண்டம்; காரப்பொருள்.

**Savey,** *n.* கோசுக்கீரை வகை.

**Saw,** 1. *v.* (Sawed sawn or sawed) இரம்பத்தினால் அறு. 2. *n.* இரம்பம்; வாள் 3. பழமொழி. *v.* (*see* see) (2) *n. ag.* sawyer.

**Sawder,** *n.* (soft sawder) முகப் புகழ்ச்சி; புகழ்சசி.

**Sawdust,** *n.* மர அறுப்புத் தூள்.

**Sawhorse,** *n.* மர அறுப்புச் சட்டம்.

**Saw-mill,** *n.* மரமறுக்கும் ஆலை.

**Say,** *v.* (said) பேசு; சொல். *n.* பேசவிருக்கும் செய்தி.

**Saying,** *n.* பேச்சு; கூற்று; பழமொழி; பழஞ்சொல்.

**Scab,** *n.* பொருக்கு; சொறி; தொழி லாளிகளுடன் வேலை நிறுத்தத்தில் சேராதவன். *a.* scabby. *n. abs.* scabbiness.

**Scabbard,** *n.* வாளுறை.

**Scabies,** *n.* சொறிநோய்.

**Scabious,** *a.* சொறி பிடித்த.

**Scaffold,** *n.* தூக்கு மேடை; சாரம், *v.* சாரம் கட்டு. *n.* scaffolding.

**Scald,** *v.* பொள்ளு; ஆவியினால் சுடு; சற்று வேகவை. *n.* ஆவியால் உண்டான புண்; வெம்புண்.

**Scald-head,** *n.* பொடுகு.

**Scale,** 1. *n.* அளவு கோல்; படி வரிசை; சுர வரிசை; (நிலப் படத்தின்) அளவு வீதம்; வளர்ச்சிப் படிமுறை; ஏற்றப் படிமுறை. *v.* படிப்படியாகச் செல்; மேலேறு. 2. *n.* நிறைகோல் தட்டு. *(pl.)* நிறைகோல்; துலை. *v.* துலையில் நிறு. 3. *n.* செதிள். *v.* செதிளுரி (1) progressive scale, விரை ஏற்றப்படி முறை. (3) *a.* scaly. *n.* scaliness.

**Scalence,** *a., n.* (உருக்கணக்கு; முக்கோணம்) பக்கங்கள் ஒத்திராத.

**Scalp,** *n.* உச்சந்தலை; தலையின் தோல்பகுதி. *v.* தலைத்தோலை உரி.

**Scalpel,** *n.* மருத்துவர் அறுவைக் கத்தி.

**Scalper, scruper,** *n.* சிற்பம் செதுக்கும் உளி.

**Scamp,** *n.* போக்கிரி; வஞ்சகன். *v.* அரை குறையாக வேலை செய். scampish.

**Scamper,** *v.* விரைவாக ஓடு. *n.* விரைந்து ஓடுதல்.

**Scan,** *v.* அசைபிரித்துப் பாடு; அலகிடு; ஆராய்ந்து பார். *prep. n.* scanning, அலகிடுதல்; கூர்ந்து காண்டல்; துருவி நோக்குதல். *n. see* scansion.

**Scandal,** *n.* அவதூறு; அம்பல் உரை; அலர் உரை; பழி. *a.* scandalous. *n.* scandal monger, பழி தூற்றுகிறவர். *v.* scandalize, -se.

**Scansion,** *n.(scan)* செய்யுளை அசை பிரித்தல்; அலகீடு.

**Scant,** *a.* குறைவாயுள்ள. போதாத. *n.* scantling. *a.* scanty. *n. abs.* scantiness.

**Scape,** *n.* நீண்ட பூக்காம்பு; இறகின் நடு நரம்பு.

**Scapegoat,** *n.* பிறர்பழி சுமப்பவர்; ஏமாளி.

**Scapegrace,** *n.* எப்போதும் இடரில் சிக்குபவர்; முரடர்.

**Scapula,** *n.* தோள்பட்டை எலும்பு; (உடுப்பின்) தோள்பட்டையணி. *a., n.* scapular, தோள்பட்டையுடைய (உடுப்பு).

**Scar,** 1.*n.* தழும்பு; வடு. *v.* தழும்பு படு. 2. *see* scaur.

**Scaur, scar** *n.* செங்குத்தான் மலைப்பக்கம்.

**Scarce,** *a.* குறைவாயுள்ள; கிடைப்பதற்குரிய; அருகலான. *n.* scarcity, scarceness. *adv.* scarcely, பெரிதும் இல்லாமல்; சிறிதுகூட இல்லாமல். *phr. adv.* scarcely, (had he gone) when, etc. (சென்றதும்) உடனடியாக.

**Scare,** *v.* அச்சுறுத்து; வெருட்டு. *n.* காரணமில்லா வெருட்சி. *n.* scaremonger, கிலி பரப்புபவர்.

**Scar-crow,** *n.* பூச்சாண்டி; கண் கழிப்பு உருவம்; புள்ளோட்டி உருவம்.

**Scarf,** 1. *n.* கழுத்துக் குட்டை; மேல் துண்டு. 2. ஆப்புருவ இணைப்பு. *v.* பொருத்து. (1) (*comb.*) *n.* scarf-skin, மேல் தோல்.

**Scarlet,** *a.,n.* நல்ல சிவப்பான (நிறம்); செந்நீர் நிற(ஆடை) *n.* scarlet fever, scarlatina, நச்சுக்காய்ச்சல் வகை.

**Scathe,** *v.* சேதப்படுத்து; நோவூட்டு; ஊறுபடுத்து. *n.* சேதம்; தீங்கு; கேடு; காயம். *a.* scathing, புண்படுத்துகிற. *a. neg.* scatheless.

**Scatter,** *v.* தூவு; தெளி; சிதறு; சிதறி ஓடச்செய். *n.* scatterbrain, தெம்மாடி.

**Scavenger,** *n.* தோட்டி; நகரத் துப்புரவுத் தொழிலாளி. *v.* தோட்டி வேலை செய். *v.* scavenge. *n. abs.* scavengery.

**Scenario,** *n.* நாடகமேடைக் குறிப்புகள்; திரைப்படக் கதை.

**Scene.n** காட்சி; நாடக, திரைப்படக் காட்சி; தோற்றம். *n. abs.* scenery, திரை ஓவியம்; இயற்கைக் காட்சி. *a.* scenic நாடகக் காட்சிக்குரிய; காட்சிக்குரிய.

**Scent.** *v.* நறுமண மூட்டு; மணத்தால் அறி; மோப்பம் பிடி. *n.* மணம்; மோப்பம்; மணச்சத்து. *a.* scented மணமூட்டப் பெற்ற

**Sceptic, - al, skeptic,-al.** *a.* ஐயமுடைய; நம்பிக்கை யுறுதி யற்ற; சமயப் பற்றற்ற. *n. pers.* sceptic, skeptic, சமயப் பற்றற்றவர். *n. abs.* scepticism, skepticism.

**Sceptre,** *n.* செங்கோல் ஆட்சி. *a.* sceptred.

**Schedule,** *n.* காலப்பட்டி; பட்டியல்; அட்டவணை. *v.* காலப்பட்டியில் குறி. *comb. n.* scheduled classes (castes, tribes) ஒதுக்கப்பட்ட வகுப்பினர்; (ஒதுக்கப்பட்டவரென வகுக்கப் பட்ட வகுப்பினர்)

**Scheme,** *n.* திட்டம்; ஏற்பாடு. *v.* திட்டம் செய்; ஏற்பாடு செய்; சதி செய்; சூழ்ச்சி செய். *a.* scheming சூழ்ச்சி செய்கிற. *n. ag.* schemer

**Schism,** *n.* சமயப் பிளவு; கட்சிப் பிளவு; உள்வேறுபாடு; உட்கட்சி, உட்பிரிவு. *a.* schismatic(al).

**Schist,** *n.* தகடுகளாகப் பிரியும் பாறை; தகட்டுப் பாறை.

**Scholar,** *n.* மாணவர்; புலவர்; உதவிச் சம்பளம் பெற்றுப் படிப்பவர். *a.* scholarly, புலமை சான்ற. *n.* scholarship, 1. புலமை. 2. (மாணவர் படிப்பு) உதவிச் சம்பளம்.

**Scholastic,** *a.* மாணவருக்குரிய; கலைப் பள்ளிக்குரிய; புலமை மிக்க. *n.* scholasticism.

**Scholiast,** *n.* பழம்பெரு நூல்களுக்குக் குறிப்புரைகாரர். *a.* scholiastic.

**School,** *n.* பள்ளிக்கூடம், கலைக் கூடம்; மாணவர் தொகுதி; கோட்பாட்டுக் கிளை; கோட்பாட்டு மரபு. *v.* கற்பி; பழக்கு.

**Schoolable,** *a.* கட்டாயக் கல்வி கற்கும் பருவமுடைய.

**Schooling,** *n.* புத்தகப் படிப்பு; கல்வி கற்றல்.

**Schoolman,** *n.* பள்ளி ஆசிரியர்; புத்தகப் படிப்பை முக்கியமாகக் கொண்ட ஆசிரியர்; முற்காலச் சமயத் துறைப் பண்டிதர்.

**Schoolmaster,** *n.* பள்ளி ஆசிரியர்;

**Schooner,** *n.* இரட்டைப் பாய்க் கப்பல்.

**Science,** *n.* நூல்; இயல்நூல்; அறிவு நூல்; பனுவல்; பட்டாங்கு. *n. pers.* scientist இயல் நூலாளர்.

**Scientific,** *a.* நூலியல் (ஆன) *comb. n.* science association, scientific association, நூலியல் கழகம். scientific knowledge, இயல் நூலறிவு; நூலியலறிவு, scientific method, நூலியல் முறை.

**Scimilar,** *n.* கொடுவாள்; உடைவாள்.

**Scintilla,** *n.* பொறி; அணு.

**Scintillate,** *v.* பொறிகளைத் தெறி; சுடரிடு; ஒளிவிடு; மின்னிடு; தளிர்; கொழுந்து; மினுக்கு. *n.* scintillation.

**Scion,** *n.* தளிர்; கொழுந்து; முனை; கிளை; மரபின் கான் முளை,

**Scissor,** *v.* கத்தரிக்கோலால் வெட்டு. *n. (pl)* கத்தரிக்கோல். *n.* scissoring கத்தரிக்கோல். *adv.* scissorwise, எதிரெதிர்; குறுக்காக.

**Scoff,** *v.* ஏளனம் செய்; அவமதி. *n.* ஏளனம்; அவமதிப்பு. *n.* scoffer. *adv.* scoffingly.

**Scold,** *v.* குற்றங் கூறு; (ஓயாது) திட்டு. *n.* திட்டுபவர் *n.* scolding, திட்டுதல்.

**Scoop,** *n.* பெரிய கரண்டி; குடையப்பட்ட இடம். *v.* கரண்டியால் எடு; குடைந்தெடு; தோண்டு. *n. ag.* Scooper குடையும் கருவி.

**Scooter,** *n.* குழந்தை விளையாட்டு வண்டி வகை.

**Scope,** *n.* வாய்ப்பு; எல்லை; செயல் வாய்ப்பு; செயல் எல்லை; ஆற்றல் எல்லை; நோக்கம். *a.* scopeful. *a. (neg.)* scopeless

**Scopula,** *n.* தூரிகை. *a.* scopulate, தூரிகை போன்ற

**Scorch,** *v.* சுடு; எரி; வாட்டு; பொசுக்கு. *a.* scorching. *n. ag.* scorcher.

**Score,** *n.* கீற்று; வெட்டிய அடையாளம்; இருபது; ஆட்டத்தில் எடுத்த எண்ணிக்கை யளவு; குறுக்கே கிழித்த கோடு. *v.* கோடு கீறி அடையாளம் செய்; கணக்கு வை; ஆட்டத்தில் எண்ணிக்கை எடு. *n.* scoring, scorer.

**Scorn,** *n.* வெறுப்பு; வெறுப்புக் கிடமான பொருள். *v.* வெறுப்புடன் பார்; ஏளனம்செய் *a.* scornful. *adv.* scornfully. *n., a.* scorner

**Scorpio,** *n.* கார்த்திகை விடு; கடகவீடு.

**Scorpion,** *n.* தேள்; ஒரு வகைக் கசை. *a.* scorpioid தேள் கொடுக்குப்போன்ற.

**Scot,** 1. *n.* 1. *n.* ஸ்காட்லாந்துக் காரர். 2. *n.* வரி. *(comb) a.* scot - free, வரியற்ற; தங்கு தடையற்ற.

**Scotch,** 1. *v.* சிறிது காயப்படுத்து; கீறு. *n.* சிறு காயம். 2. *n.* சக்கரத்

துடுப்பு ஆப்பு. *v.* ஆப்பு வைத்து சக்கரத்தைத் துடு. 3. *a., n.* ஸ்காட்லாந்து. நாட்டுக்குரிய (ஆள், மொழி).

**Scotland,** *n.* ஸ்காட்லாந்து நாடு; *a., n. see* scotch, scot.

**Scoundrel,** *n.* போக்கிரி; இழிஞன்; கயவன். *n.* scoundrelism, scoundreley

**Scour** 1. *v.* தேய்த்துத் துப்புரவாக்கு. 2. *v.* அலைந்து திரி. (1) *n. ag.* scourer. *n.* scourings குப்பை, கழிவுப் பொருள்கள்; தேய்த்து நீக்கிய தோறுகள்.

**Scour - sluice,** *n. see* sandsluice.

**Scourge,** *n.* கசை; தண்டனைக் குரிய சாதனம். *v.* கசையால் அடி; தண்டனை செய்; வாதனை செய்.

**Scourings,** *n. see* scour.

**Scout.***n.* தொண்டர், ஒற்றர்; சாரணர்; தொண்டர் படையாளர். *v.* வேவுபார்; இகழ்ந்து விலக்கு; தள்ளுபடி செய். *n.* scout-master. தொண்டர் தலைவர்; வன் தொண்டர். boy scouts, சிறுத்தொண்டர், scout cubs, ‘குருளைத் தொண்டர்.’

**Scowl,** *v.* புருவங்களை நெரி. *n.* சின்னப் பார்வை.

**Scramble** பற்றிஏறு; (ஒன்றைப் பெறப் பலருடன்) போராடு. *n.* சண்டை; கலக்கம்; சச்சரவு.

**Scrap,** *n.* துண்டு; துணுக்கு; *(pl)* துண்டுகள் *v.* பயனற்ற தென்று கழி. *a.* scrappy. *n. abs.* scrappiness.

**Scrap - book,** *n.* துணுக்குச் சேகரப் புத்தகம்.

**Scrape,** *v.* சுரண்டு; சுரண்டித் தூயதாக்கு; சிறிது சிறிதாகத் தேடு. *n.* துன்பம்; தொந்தரவு; தொல்லை. *n.* scraping. *n. ag.* scraper, *comb. n.* sky scraper, அமெரிக்க வானளாவு பன்னூறு நிலைமாடம்.

**Scratch,** பிறாண்டு; கீறு; போட்டியிலிருந்து விலக்கு. *n.* பிறாண்டிய காயம்; கீறல். *a.* scratchy.

**Scrawl,** *v.* கிறுக்கலாக எழுது; *n.* கிறுக்கலான எழுத்து,

**Scream,** *v.* கூச்சலிடு; வீறிடு. *n.* கூச்சல்; வீறிடல். *adv.* screamingly.

**Screamer,** *n.* 1. பறவைவகை, 2. இனத்தின் உச்சமாதிரி.

**Screech,** *v.* கீச்சிடு. *n.* கீச்சிடு குரல்.

**Screen,** *n.* தட்டி; திரை தடுப்பு; மறைப்பு; பெரிய சல்லடை. *v.* திரையில் படம் அல்லது காட்சியைக் காட்டு; சல்லடையால் சளி. *comb. n.* smoke screen புகைத்திரை; புகை மறைப்பு.

**Screw,** *n.* திருகாணி; மறையாணி; கஞ்சன். *v.* திருகாணியிடு; வல்லந்தமாக வாங்கு. *n.* screw-driver, திருப்புளி.

**Scribble,** *v.* கிறுக்கு. *n.* கிறுக்கல்.

**Scribe,** *n.* எழுதுபவர்; பணித் துறை எழுத்தாளர்; (யூத) புலவர் குழுவினர்.

**Scrimmage, scrummage,** *n.* கூட்டத்தில் ஏற்படும் சண்டை; குழப்பமான போர்.

**Scrimp,v** குறைவாகக் கொடு; கஞ்சத்தனம் செய். *a.* scrimpy

**Scrip,** *n.* கூடடு வாணிபப் பங்குச் சான்றுப் பத்திரம்; சிறு மூட்டை.

**Script,** *n.* எழுதப்பட்டது; எழுத்து வடிவு; வரிவடிவு

**Scripture,** *n.* திருநூல் தொகுதி; சமயநூல் தொகுதி. *a.* scriptural திருநூலில் கூறப்பட்டுள்ள; திருநூற் சிறப்புடைய.

**Serivener,** *n.* எழுதுபவர்; பாத்திரங்கள் எழுதுபவர்; தரகர்; காசுக்கடை முதலாளி.

**Scrofula,** *n.* கண்டமாலை நோய். *a.* scrofulous.

**Scroll,** *n.* தாட்சுருள்; சுருள் வடிவ மான ஏடு. எழுத்துக் குறிப்பு: சுருள்களுடைய ஒப்பனை வேலைப்பாடு.

**Scrotum,** *n.* விதைப்பை.

**Scrub,** *v.* அழுத்தித் துடை; தேய். *n.* கீழ்மக்கள்: புதர். *a.* scrubby. *n. ag. impers. see* scrubber.

**Scrubber,** *n.* **(Screb)** துடைக்கும் கருவி; நிலக்கரி வளியைத் தூய்மையாக்கும் கருவி.

**Scruff,** *n.* பிடரி; பின் கழுத்து.

**Scrutle,** *n.* 20 குன்றிமணியள வுள்ள ஓர் எடை; சிறு அளவு. முயக்கம்; தயக்கம்; நன்மை; தீமை அச்சத் தயக்கம்; ஐயம். *a.* scrupulous, ஐயுறவினால் செய்கையில் தயங்காத; முழு விழிப்பான; சிற்றிழை யளவும்; நெறி தவறாத; சிறு செய்தி களையும் நன்கு கவனித்துச் செய்கிற. *n.* scrupulousness, scrupulosity.

**Scrutator,** *n.* ஆராய்வோர்.

**Scrutiny,** *n.* ஆராய்தல்; (தேர்தல்) மொழிச் சீட்டுகளைத் தேர்ந் தாராய். *v.* scrutinize, -ise. *n. pers.* scrutineer.

**Scuffle,** *v.* ஒழுங்கின்றிப் போராடு; நெருங்கிப் போர் செய். *n.* ஒழுங்கில்லாத சண்டை; பூசல்.

**Scull,** *n.* படகுத் துடுப்பு. *v.* துடுப்பினால் படகைத் தள்ளு. *n. ag.* sculler, படகு வளிப்பவர்; துடுப்புள்ள படகு.

**Scullery,** *n.* சமையலறையின் பின் புறம்

**Scullion,** *n.* சமையல் வேலைக் காரன்; இழிஞன். *a.* scullionly.

**Sculptor,** *n.* சிற்பி; உருவக் கலைஞர்

**Sculpture,** *n.* சிற்பம்; குழைவுக் கலை; உருவக் கலை. *v.* சிற்ப வேலை செய். *a.* sculptural.

**Scum,** *n.* அழுக்கு; நுரை; கழிவுப் பொருள். *v.* அழுக்கெடு; கடைந் தெடு. *a.* scummy.

**Scurf,** *n.* உரிந்துவிழும் தோல்; பொடுகு; பொருக்கு. *a.* scurfy. *n. abs.* scurfiness.

**Scurrilous,** *a.* வசை சார்ந்த; கொச்சையான; கீழ்த்தரமான. *n.* scurrility.

**Scurvy,** *n.* சொறிநோய் வகை; கரப்பான் நோய். *a.* சொறியுள்ள; இழிந்த. *n. abs.* scurviness.

**Scutage,** *n.* கடமை மாற்றுப் பணம்.

**Scutcheon,** *n.* **(= escutcheon)** பெயர் பொறித்த பலகை; சாவித் துளையை மறைக்கும் தகடு.

**Scutter,** *v.* விரைந்தோடு.

**Scuttle,** 1. *n.* கரிக்கூடை. 2. (வீடு .கப்பல் ஆகியவற்றிலுள்ள) மூடியுடன் கூடிய துளை. *v.* கப்பலை மூழ்கடி. 3. *n.* விரைந்தோடல். *v.* விரைந்தோடு; தப்பியோடு.

**Scutum,** *n.* கேடயம்; கேடயம் போன்ற மேலோடு.

**Scythe,** *n.* பன்னரிவாள்; அரிவாள். *v.* பன்னரிவாளால் வெட்டு.

**Sdeath,** *int.* **(= God's death),** நாசமாய்ப் போக! (மன வெறுப்புடன் ஆணையிடும் தொடர்.)

**Sea,** *n.* கடல்; வாரி; உவரி; பௌவம்; புணரி; நீர்ப் பரப்பு; அலை; பெரும் பரப்பு; ஆழ்திடம்.

**Sea-board,** *n.* கடற்கரைப் பகுதி.

**Sea-breeze,** *n.* கடற்காற்று.

**Sea-dog,** *n.* கடல்நாய், கடற் கொள்ளைக்காரர்; கடல் மறவர்.

**Sea-faring,** *a.*, *n.* வழக்கமாகக் கடற்பயணம் செய்த(ல்).

**Sea-horse,** *n.* (மீன்) நீர்க் குதிரை.

**Seal,** 1. *n.* 'கடல் நாய்'. (*n.* sealing, கடல் நாய் வேட்டை) 2. *n.* பொறிப்பு; முத்திரை; அச்சுப் பதித்த அடையாளம்; அச்சுச் சுவடு; உறுதிப்பாடு. *v.* பொறிப்பிடு; நன்கு மூடி வை; உறுதிப் படுத்து. 2. *comb. n.* sealingwax, முத்திரை அரக்கு.

**Sea-lion,** *n.* கடற் சிங்கம்.

**Seam,** *n.* தையல் விளிம்பு; மடிப்பு; பலகைகளின் சந்திப்பு இடை வெளி; மெல்லிய பலகை. *v.* தைத்துச் சேர்; விளிம்பு அமை. *a.* seamy தையலுடன் கூடிய; மோசமான; வெளிக்காட்டத் தகாத. *a. neg.* seamless. பொருத்து இல்லாத.

**Seaman,** *n.* கடலோடி; பரவர்; கப்பலோட்டி.

**Seamark,** *n.* கப்பலோட்டிகளுக்கு வழிகாட்டியாயுள்ள அடையாளம்; கடற்குறி; கலங்கரை விளக்கம்.

**Seamstress, sempstress,** *n.* தையற்காரி.

**Séance,** *n.* பொதுமன்றக் கூட்டம்; இறந்தோருடைய ஆவிகளுடன் பேச எண்ணிக் கூடும் கூட்டம்.

**Sea nymph,** *n.* கடற்குன்னி.

**Seaplane,** *n.* கடல் புறவானூர்தி.

**Seaport,** *n.* கடல்துறை; (துறைமுகப்) பட்டினம்.

**Sear, Sere,** *a.* உலர்ந்த; பசுமையற்ற; உணர்ச்சியற்ற. *v.* உலர்த்து; வாட்டு; உணர்ச்சியறச் செய்; சுடு.

**Search,** *v.* தேடு; சோதித்துப் பார். *n.* தேட்டம்; தேடுதல். *comb. n.* search fee, தேடுகூலி. search warrant, சோதனை உத்தரவு.

**Search-light,** *n.* கைப்பந்த விளக்கு; நீடொளி விளக்கு.

**Sea-robber, sea-rover,** *n.* கடற் கொள்ளைக்காரன்.

**Seashore,** *n.* (நாட்டின், நிலப் பகுதியின்) கடற்கரை.

**Sea sickness,** *n.* கடல்பழக்க மில்லாதவர் நோய்.

**Season,** *n.* பருவம்; தக்க காலம். *v.* பக்குவப்படுத்து; சுவையாக்கு. *a.* seasonal. பருவஞ்சார்ந்த; பருவ காலத்துக்குரிய. *comb. n.* season-report. பருவ அறிக்கை (பருவம்பற்றிய அறிக்கை). season report, seasonal report, பருவவாரி அறிக்கை. *adv.* well seasoned, நன்கு பக்குவப் படுத்தப்பட்ட.

**Seasonable,** *a.* பருவத்திற்கு ஏற்ற; சமயத்துக்குப் பொருத்த மான.

**Seasonal,** *a.* குறித்த பருவ காலங்களில் நிகழ்கிற.

**Seat,** *n.* இருக்கை; இடம்; அமரு மிடம்; அமரக்கூடிய உரிமை; நிலையம்; பணியிடம்; பதவி; அதிகார நிலையம். *v.* இருக்கையில் அமர்த்து; நிலைக்கச் செய்; இருக்கை அமை. *comb. n.* front seat, முன்னிடம். back seat, பின்னிடம், seating arrange ments, இருக்கை ஏற்பாடுகள்; இருக்கை ஒழுங்குமுறைகள். seating facilities, seating conveniences. இருக்கை வாய்ப்புகள்; இட வாய்ப்புகள்.

**Sea urchin,** *n.* (முட்களுள்ள முட்டை வடிவமான கூட்டில் வசிக்கும்) கடல் உயிர் வகை; கடற்பஞ்சு வகை.

**Seaward,** *a., n.* கடல் நோக்கிய (நிலப்பகுதி).

**Seaweed,** *n.* கடற்பாசி வகை.

**Sea-worthy,** *a.* கடலில் செல்லத் தகுதியான. *n.* sea-worthiness, கடல் செல் தகுதி.

**Secant,** *a.* வெட்டுகிற. *n.* (இடக்கணக்கியல்) (வட்ட வளைவின்) வெட்டுக்கோடு; முக்கோனவியல் (சுருக்கம்; sec.) பக்கக் கை வீதம்; 'கை வீதம்'.

**Secede,** *v.* விலக. *n.* secession. *n. ag.* seceder.

**Seclude,** *v.* தனிப்படுத்தி வை; ஒதுக்கி வை. *a.* secluded. *adv.* secludedly. *n.* seclusion.

**Second.** *a.* இரண்டாவதான; அடுத்தபடியான; கீழடுத்த. *n.* இரணடாவது. *n.* துணையாள்; துணைவர். 2. *n.* (கால அளவை) கணத்தில் (minute) அறுபதில் ஒன்று; நொடி; (கோண அளவை) பாகையில் (degree) அறுபதில் ஒன்றான கலையில் (minute) அறுபதில் ஒன்று; (pfiy); தற்பரை. 3. *v.* பின் தாங்கு, ஆதரி; உதவி செய்; ஆதரித்துரை; பின் மொழி; வழி மொழி. 1. *a.* secondary, துணைமையான; இரண்டாவது படியான; (கல்வி நிலையம்) இடைத்தரக் கல்வி சார்ந்த (அஃதாவது) உயர் பள்ளி (high school) இடைப் பள்ளி (middle school) சார்ந்த. (3) *n. ag. pers.* seconder, வழிமொழிபவர்.

**Second-hand,** 1. *a.* புதிதல்லாத; பழைய. 2. (மணிப்பொறி) நொடிகாட்டும் முள்; கண முள்.

**Second-rate,** *a.* இரண்டாந் தரமான.

**Second-sight,** *n.* தொலை நோக்கு.

**Secrecy,** *n.* அடக்கம்; ஒளிவு; மறைவு.

**Secret,** *a.* ஒளித்து வைக்கப்பட்ட; மிகச்சிலரே அறிந்த; வெளிப் படுத்தப் பெறாத. *n.* ஒளிவு மறைவு; மறைவடக்கம்; மறை பொருள்; (ஒன்றை விளக்கும்) மருமம்; மறைசெய்தி.

**Secretariat,** *n.* செயலகம்; அரசுப் பணி நிலையம்; அரசாங்க நிலையம்.

**Secretary,** *n.* செயலாளர்; அமைச்சர். *a.* secretarial. *n. abs.* secretaryship.

**Secrete,** *v.* மறைத்து வை; (உடலியல்) சுர. *n.* secretion. *a.* secretive.

**Sect,** *n.* உட்பிரிவு; சமயக் கட்சி. *a. n. pers.* sectatrian. *n. abs.* sectarianism. குறுகிய உள் வகுப்புப் பற்று. *a.* sectarian, -al.

**Section,** *n.* பகுப்பு; வெட்டப்பட்ட துண்டு; பிளவு; பிளவு முகம்; பிரிவு; பகுதி; வகுப்பு; கட்சி; உட்கட்சி. *a.* sectional. பகுப்பியல் (ஆன); கட்சி சார்ந்த உட்கட்சி சார்ந்த. *n. abs.* sectionalism. கட்சி மனப்பான்மை; உட்கட்சி மனப்பான்மை; சிறுகுழு மனப் பான்மை; சமயக்கட்சி மனப் பான்மை. *n. comb.* cross-section, குறுக்குப் பிளவு முகம். vertical section, கீழ்ப் பிளவு முகம்.

**Sector,** *n.* வட்டத்தின் இரண்டு ஆரங்களுக்கு இடையே உள்ள பகுதி; வட்டக் கோணப்பகுதி. *a.* sector(i)al.

**Secular,** *a.* இவ் வுலகச் சார்பான; உலகியல் சார்ந்த; சமயச் சார்பற்ற. *v.* secularize,-se. *n. abs.* secularity, secularism.

**Secure,** *a.* கவலையில்லாத; பாதுகாப்பான; நம்பகமான. *v.* பாதுகாப்பாக வை; சிறைப்படுத்து; உத்திரவாதம் பண்ணு; கைவசப் படுத்து; பெறு. *n.* security, பாது காப்பு; அமைதிகாப்பு; பிணையம்; பிணையத் தொகை; பிணை; நன்னடத்தைப் பிணை. *comb. n.* secured creditors, ஈட்டுக் கடன் காரர், security bond. பிணைப் பத்திரம், security deposite, பிணைய வைப்பு, security proceedings, காப்பு (நிதி) நடவடிக்கை. personal security, ஆட்பிணை. cash security, பணப்பிணை.

**Sedan,** *n.* மூடு பல்லக்கு; மூடு வண்டி; தூக்கு நாற்காலி.

**Sedate,** *a.* அமைதியான; இயக்கமற்ற; எழுச்சியற்ற. *n. abs.* sedateness.

**Sedative,** *a. n.* (வலியை) ஆற்றுகிற அல்லது தணிக்கிற (மருந்து).

**Sedentary,** *n. a.* பெரும்பாலும் உட்கார்ந்திருக்கிற; சுறுசுறுப்பற்ற. *n.* sedentaryness.

**Sedge,** *n.* கோரைப்புல்வகை. sedgy.

**Sediment,** *n.* வண்டல்; மண்டி. *a.* sedimentary.

**Sedition,** *n.* அரசுப் பகைமை; ஆட்சிப் பகைமை; சட்ட எதிர்ப்புக் குற்றம். *a.* seditious. *n.* seditiousness.

**Seduce,** *v.* தவறான நெறியி லிறங்கச் செய்; கற்புநெறி தவறச் செய்; கெடு; வசியம் செய்; கவர்ச்சி செய். *n. ag.* seducer. *n. abs.* seduction.

**Sedulous,** *a.* ஊக்கமுள்ள; விடா முயற்சியுள்ள. *n.* sedulousness, sedulity.

**Sec,** *v.* **(saw, seen)** பார்; பார்த்து அறி; கவனி; தெரிந்துகொள்; ஆராய். 2. *n.* மதகுருவின் ஆட்சிக்குட்பட்ட இடம். 1. *n. see* sight.

**Seed,** *n.* விதை; வித்து; மூலப் பகுதி; மரபெச்சம். *v.* விதையாகு; விதையெடு.

**Seed-bed,** *n.* நாற்றங்கால்; முளைப்பாத்தி.

**Seedcoat,** *n.* விதையின் மேல் தோல்; விதையுறை.

**Seedling,** *n.* நாற்று; இளஞ் செடி.

**Seek.** *v.* **(sought)** தேடு; அடைய முயற்சி செய்.

**Seem,** *v.* தோன்று; காணப்படு. *a.* seeming, போலியான. *n.* வெளித் தோற்றம்; போலி. *adv.* seemingly, தோற்றத்திற் கேற்ப.

**Seemly,** *a. adv.* தகுதியான. *a.* seemliness.

**Seep,** *v.* ஒழுகு; கசி. *n.* கசிந்தொழுகி அமைந்த குட்டை. *n.* seepage. ஒழுகுதல்; ஒழுகிய நீர்மம்.

**Seer,** *n.* வருங்கால நிகழ்ச்சியை உரைப்பவர்; சேர்; நாழி; படி.

**Seesaw,** *a.* (கீழ்மேலாக அல்லது முன்னும் பின்னுமாக) ஆடி அசைகிற.

**Seethe,** *v.* (seethed or sod. Seethed or sodden) கொதி; கொந்தளி.

**Segment,** *n.* நேர்கோட்டினால் வெட்டப்பெற்ற வட்டப் பகுதி; துண்டம்; வட்டு. *v.* வெட்டிப்பிரி. *a.* segmentary. *n.* segmentation.

**Segregate,** *v.* தனிப்படுத்து; பிரித்து வை. *a.* தனிப்படுத்தி*a*. *n.* segregation.

**Seigneur, seignior,** *n.* உயர் திருவாளர்; மூப்பர்; பெரு நிலக் கிழார். *n. abs.* seign (i) - orage, மூப்பர் வரி; பெருநிலக்கிழமை.

**Seismic,** *a.* நிலநடுக்கம் சார்ந்த.

**Seigmograph,** *n.* நிலநடுக்க மானி. *a.* seismographic, -al.

**Seismology,** *n.* நிலநடுக்க நூல், *n. pers.* seismologist.

**Seize,** *v.* கைப்பற்று; வல்லந்த மாகக் கைக்கொள்; சட்டப்படி பற்று. *n.* seizure, கைப்பற்றுதல்;

கைப்பற்றிய பொருள்; திடீரென நோய் தாக்குதல்.

**Seldom,** *adv.* அருகலாக; அடிக்கடியில்லாமல்; அருகில்.

**Select,** *v.* பொறுக்கியெடு; தேடியெடு. *a.* தேர்ந்தெடுத்த; சிறந்த. *n.* selection, *a.* selective.

**Selenium,** *n.* தனி மூலப் பொருள் வகை.

**Selenography,** *n.* திங்களைப் பற்றிய நூல்.

**Self,** *pron.* (*pl.* selves), தான். *n.* உள்ளுயிர்; ஆன்மா; தன் முனைப்பு; தன்னல முனைப்பு (*correl. see* pelf)

**Self-assurance,** *n.* தன்னுறுதி; தன்னம்பிக்கை.

**Self-centred,** *a.* தன் காரிய ஈடுபாடுள்ள.

**Self command,** *n.* தன்னடக்கம்.

**Self-complancence,- cy,** *n.* தன்னைப் பற்றிய மன நிறைவு.

**Self-conceit,** *n.* இறுமாப்பு; செருக்கு.

**Self-confidence,** *n.* தன்னம்பிக்கை. *a.* self-confident.

**Self-conscious,** *a.* தன்னையறிந்த; தற்பெருமை யுடைய. *n. abs.* self-consciousness, தன் முனைப்பு.

**Self-contained,** *a.* நா அடக்க முள்ள; தன்னுள் அமைந்த.

**Self-contradiction,** *n.* தானே முன்னுக்குப்பின் முரணாதல். *a.* self-contradictory.

**Self-control,** *n.* தன்னடக்கம்.

**Self-defence,** *n.* தற்பாதுகாப்பு.

**Self-denial,** *n.* தன் மறுப்பு. *a.* self-denying. தன் மறுப்புடைய; தன்னலந் துறந்த.

**Self-evident,** *a.* தானே விளங்குகின்ற.

**Self-government,** *n.* தன்னாட்சி.

**Self-importance,** *n.* தற் பெருமை.

**Self-interest,** *n.* தனிநலம்; தன்னலம்.

**Selfish,** *a.* தன்னலமுடைய; தன் நலத்தையே நாடுகிற; குறுகிய தனிநலம் பேணுகிற. *n.* selfishness.

**Self less,** *a.* தன் நலமற்ற.

**Self made,** *a.* தன் முயற்சியால் உயர்ந்த.

**Self-opinionated,** *a.* கருத்துச் செருக்குள்ள.

**Self-possessed,** *a.* தன்னடக்க முள்ள; உணர்ச்சியைக் காட்டாது அமைதியாயுள்ள. *n.* self-possession.

**Self-praise,** *n.* தற்புகழ்ச்சி.

**Self-protection,** *n.* தற்பாது காப்பு.

**Self-realisation,** *n.* தன்னையறிதல்.

**Self-reliance,** *n.* தற்சார்பு.

**Self-respect,** *n.* மானம்; தன் மதிப்பு; தன்மானம்.

**Self-sacrifice,** *n.* தற்பலி; தன்மறுப்பு.

**Self-same,** *a.* அதே.

**Self-seeking,** *a.* தன்னலத்தையே நாடுகிற. *n.* தன்னலம்.

**Self-sufficent,** *a.* வெளி உதவி வேண்டாத; தன்னிறைவுள்ள.

**Self-willed,** *a.* பிடிமுரண்டான; மூர்க்கமான. *n.* self-will.

**Sell,** *v.* **(sold)** விற்பனை செய்; விலைக்குக்கொடு; விலையாகு; பணம் பெற்றுக்கொண்டு ஒருவரைக் காட்டிக் கொடு. (*correl. see* buy) *n. see* sale etc. *n. ag.* seller.

**Semantic,** *a.* சொற்பொருள் மாறுபாடு சார்ந்த. *n.* semantics.

**Semaphore,** *n.* இருப்புப் பாட்டைக் கைகாட்டி மரம்.

**Semasiology,** *n.* (மொழியியல்) சொற் பொருளைப் பற்றிய பகுதி.

**Semblance,** *n.* தோற்றம்; போலி.

**Semen,** *n.* விந்து; ஆண் கரு.

**Semi,** *pref.* பாதியான; பங்கான.

**Semicircle,** *n.* அரைவட்டம். *a.* semicircular.

**Semicolon,** *n.* (:) என்ற நிறுத்தக்குறி; அரைப்புள்ளி.

**Semifinal,** *n.* முடிவுப் போட்டிக்கு முந்திய போட்டி.

**Seminal,** *a.* கருமூலத்துக்குரிய; இனப்பெருக்கத்துக்குரிய.

**Seminary,** *n.* கல்விச்சாலை.

**Semitone,** *n.* (இசைக்கலையில்) மைய இசை.

**Semiology,** *n.* நோய் அறிகுறி பற்றிய நூல்.

**Senate, senatorium,** *n.* மேலோர் மன்று; மூப்பர் அவை; பல்கலைக்கழக ஆட்சிக் குழு. *n. pers.* senator. *a.* senatorial. *comb. n.* senate house, மூப்பர் அகம்; மேலகம்.

**Send,** *v.* **(sent)** அனுப்பு; செல்லச் செய்; செய்தி அனுப்பு; எறி. *n. ag.* sender.

**Send-off.** *n.* வழியனுப்பு (விழா).

**Seneschal,** *n.* காரியக்காரன்.

**Senile,** *a.* மூப்படைந்த; தளர்ச்சி யடைந்த. *n.* senility.

**Senior,** *a.* பெரும்படி (ஆன); மூப்புடைய; மேம்பட்ட; முதிர் வுடைய; மூத்த; மேல் பதவி யிலுள்ள; மேல் வகுப்பிலுள்ள; மேல்நிலை(யான). *n.* மூத்தவர்; மேல்பதவியில் உள்ளவர். (x junior) *n. abs.* seniority.

**Senna,** *n.* (பேதி மருந்தாக வழங்கும்) நிலவாகை வகை இலை.

**Senight,** *n.* வாரம்; ஏழு நாள்.

**Sensation,** *n.* புலன்களால் அறிதல்; உணர்ச்சி; மனஎழுச்சி; கலவரம். *a.* sensational.

**Sensationalism,** *n.* புலன் களாலேயே நம் கருத்துக்க ளெல்லாம் ஏற்படுகின்றன என்ற கோட்பாடு; நாட்டுக் கலவரம். *n. pers.* sensationalist.

**Sense,** *a.* (செவி, கண், மூக்கு, நாக்கு, மெய் ஆகிய ஐம்புலன் களில் ஒரு) புலன்; உணர்வு பகுத்தறிவு; கருத்து; சொற் பொருள்.

**Senseless,** *a.* அறிவற்ற; பொருளற்ற.

**Sensibility,** *n.* உணர்ச்சியறிவு; மேம்பட்ட உணர்ச்சி.

**Sensible,** *a.* புலன்களாலறியத் தக்க; நல்லறிவுடைய. *n.* sensibleness.

**Sensitive,** *a.* (-plant) கூருணர்ச்சியுடைய (செடி); தொட்டால் வாடுகின்ற (செடி) (-instrument) நுண்ணளவு காட்டு (கருவி). *n.* sensitiveness, sensitivity.

**Sensorial, sensory,** *a.* மூளை அல்லது உணர்ச்சிக்கு உரிய.

**Sensual,** *a.* சிற்றின்பத்துக்குரிய; புலனுணர்ச்சி இன்பங்களில் அவா மிகுந்த. *abs.* seasualism, sensuality. *n. pers*, sensualist.

**Sensuous,** *a.* புலனுணர்வாற்றலுடைய; புலனுகர் திறமுடைய.

**Sentence,** *n.* வாக்கியம்; வாசகம்; முற்றுத்தொடர்; தீர்ப்பு. *v.* தீர்ப்புக் கூறு; தண்டனையளி.

**Sententious,** *a.* பொருட் செறிவுள்ள; சூத்திரம் போல் திட்ப நுட்பம் அமைந்த.

**Sentient,** *a.* புலனுணர்ச்சியுள்ள. *n. abs.* sentience.

**Sentiment,** *n.* மேலீடான மன உணர்ச்சி; உணர்ச்சியால் பாதிக்கப் படும் கருத்து; மெய்ப்பாடு. *a.* sentimental. *n.* sentimentalism. உணர்ச்சிக் கலைக்கோட்பாடு. *n. abs.* sentimentality. *n. pers.* sentimentalist.

**Sentinel, sentry,** *n.* படைக் காவல் வீரன். (*comb.*) *n.* sentry-box. காவல் வீடு.

**Sepal,** *n.* புற இதழ்; புல்லிதழ்.

**Separate,** *n. a.* தனியான; வேறான. *n.* separateness. தனியாக்கு; வேறாக்கு; பிரிந்து போ; பகுதி களாகப் பிரி. *a.* separable. *n. abs.* separation. *n. ag.* separator. பிரிக்கும் கருவி.

**September,** *n.* ஆங்கில ஆண்டின் ஒன்பதாம் மாதம்.

**Septennial,** *a.* ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறையான; ஏழாண்டுக் காலமான. *n.* septennium (*pl.* - ia).

**Septic,** *a.* அழுகச் செய்கிற நச்சூட்டுகிற. (x antiseptic). *n.* septicity. *comb. n.* septic tank, நச்சுத் தடை மலக்குழி.

**Septuagenarian,** *n.* எழுபது வயதானவர்; எழுபது ஆண்டுடையது. *a.* எழுபது (ஆண்டு) சென்ற.

**Septum,** *n.* (*pl.* septa) (மூக்கிலுள்ளது போன்ற) இடைச்சுவர்.

**Septuple,** *a.* ஏழு மடங்கான. *n.* ஏழுமடங்கு.

**Sepulchre,** *n.* கல்லறை; சவக்குழி. *a.* sepulchral கல்லறைக்குரிய; சாவுச் சடங்குக்குரிய; துயர் நிறைந்த.

**Sequel,** *n.* விளைவு; பின் தொடர்ச்சி.

**Sequence,** *n.* அடுத்து வருவது; வரிசை; முறை. *a.* sequential, sequent.

**Sequester, sequestrate,** *v.* பிரித்துவை. தனிப்படுத்து; (சட்டத்தில்) கடனாளியின் சொத்தைக் கைப்பற்று; பற்று முதல் செய். *a.* sequestered, தனித்த; ஒதுக்கமான. *n.* sequestration.

**Serai,** *n.* (*also* caraven serai) வழிப்போக்கர் தங்கும் விடுதி.

**Seraph,** *n.* (*pl.* seraphs, seraphim) ஒளிமகன்; அரமகன். *a.* seraphic.

**Sere,** *a. see* sear.

**Serenade,** *n.* இரவில் அல்லது மாலையில் பாடும் இசை. *v.* இராக்கால இசைபாடு; காதலர் கேட்கப் பாடு.

**Serene,** *a.* அமைதியான; அமைதிவாய்ந்த; கொந்தளிப்பில்லாத. *n.* serenity.

**Serf,** *n.* அடிமை; ஊழியன். *n. abs.* serfdom.

**Serge,** *n.* கம்பளித்துணி வகை.

**Sergeant. Serjeant,** *n.* (சார்ஜெண்ட், படைத் தலைவர். sergeant - major. உயர் தரப் படைத் தலைவர்

**Serial,** *a.* **(series)** வரிசையாயுள்ள; தொடர்ச்சியான. *n.* தொடர்ச்சி யாக வரும் வெளியீடு. *adv.* serially. *n. abs.* seriality. *v., a.* seriate. *n.* seriation.

**Seriatim,** *adv.* வரிசையாக; ஒன்றன் பின் ஒன்றாக.

**Sericiculture,** *n. see* **sericulture.**

**Series,** *n.* வரிசை; ஒழுங்கு; தொகுதி; தொடர்; கோவை; தொடர்ச்சி. *a. see* serial.

**Sericomic,** *a.* விளையாட்டும் வினையும் கலந்த.

**Sericulture,** *n.* also sericiculture. பட்டுப் புழு வளர்த்தல்; பதன் படாப் பட்டுச் செய்தல்; பட்டுத் தொழில். *a.* seri(ci)cultural. *n. pers.* seri(ci)culturalist.

**Serious,** *a.* வினையியலான; விளையாட்டில்லாத; சொற்படி கருதி நடக்கிற; புறக்கணிக்கத் தக்கது அல்லாத; முக்கியமான; இடர் நிரம்பிய; துயரார்ந்த; கேடளாவிய. *n.* seriousness.

**Serjeant,** *n. see* sergeant.

**Sermon,** *n.* சமயச் சொற் பொழிவு; அறிவுரை; அறவுரை; திருவுரை; பகட்டுரை; கோயில் மேடைப் பேச்சு. *v.* sermonize, -se.

**Serous,** *a.* **(serum)** நிண நீர் போன்ற; சீயான்.

**Serpent,** *n.* பாம்பு; வஞ்சகர். *a.* serpentine. *comb. a.* serpent like. பாம்பு போன்ற; நெளிகிற; வளைந்து வளைந்து போகிற. *n.* பச்சைக் கல் வகை.

**Serrate, serrated,** *a.* வாள் போல் பற்களமைந்த. *n.* serration.

**Serried,** *a.* (படை) நெருக்கமான; செறிந்த.

**Serum,** *n.* நிண நீர்; குருதியிலிருந்து மருந்தாக வடிக்கப்படும் ஊன் நீர். *a. see* serous.

**Servant,** *n.* வேலையாள் பணியாளர்; ஊழியர்; பணித்துறை யாளர்.

**Serve,** *v.* சேவகம் செய்; தொண்டு செய்; வேலை செய்; கீழ்ப்படி; ஏவல் செய்; உணவு பரிமாறு. *phr.* serve for பகரமாகப் பயன்படு. *n. ag.* server. *n. pers. see* servant. *n. abs. see* service.

**Service,** *n.* (serve) தொண்டு; பணி ஊழியம்; உதவி; பணித்துறை; சமயக் கடமைகள்; கடமை; வழிபாடு; உணவு பரிமாறுகை (ஒரு தடவை); வட்டிப்பு. *a.* serviceable, பயன் படத்தக்க; உதவியாயுள்ள. *n.* serviceableness. *comb. n.* All India Service. அனைத்திந்திய ஊழியம், Civil service, சீர்த்துறை ஊழியம். divine service, கடவுள் பூசனை. military (war) service, போர்த்துறை ஊழியம், service postage stamps. பணித்துறை அஞ்சல் தலைகள், superior service, மேல்நிலை, ஊழியம். inferior service, தாழ்நிலை ஊழியம்.

**Servile,** *a.* அடிமைக் குணமுள்ள; இழிவான; கெஞ்சுகிற. *n.* servility.

**Servitor,** *n.* பணியாளர்; தொண்டர்; ஏவலாள்.

**Servitude,** *n.* அடிமைத் தனம்.

**Sesame,** *n.* எள். *a.* sesamoid, -al.

**Serqui-,** *pref.* இரண்டுக்கு மூன்று வீதமான; ஒன்றரை மடங்கான.

**Sesquicentennial,** *a., n.* நூற்றைம்பதாம் ஆண்டு (விழா).

**Session,** *n.* (மன்ற) அமர்வு; அமர்ந்திருக்குங்காலம்; அமர் நேரம்; அமர்வு; கூட்டமர்வு; (சட்டமாமன்றம்; முறை மன்றம்) அமர்வுக்காலம்; அமர்வுப் பருவம்; (பள்ளி, கல்லூரி) (இரு நீள் விடுமுறை) இடைக்காலம்; கல்வி ஆண்டுப் பகுதி; *pl.* மாவட்ட உலாவியல் முறைவர் குழு (அமர்வு). (*sing., pl.*) முறைவர் குழு (மன்றம்). *comb. n.* sessions court, மாவட்ட உலாவியல் மன்றம். sessions judge, மாவட்ட உலாவியல் மன்ற நடுவர்.

**Seset,** *n.* ஆறடிச் செய்யுள்.

**Set,** *v.* (set) இடத்தில் அமை; உறுதிப்படு; உறுதியாக்கு; ஏற்பாடு செய்; அமர்வு செய்; பொருத்து; இசையைப்பொருத்து. (ஞாயிறு) அடை. *a.* உறுதியான; மாற்ற முடியாத; ஏற்பாடு முடிந்த. *n.* அடைவு; தொகுதி. *n. see* setting. *comb. n.* set-back, தடை; பின்னடைவு. set-off, ஈடு செய்யும் பொருள் சரியீடு. எதிரீடு. (*phr. v.* set off, பண்பு களை முனைப்பாக எடுத்துக் காட்டு.) (*see* set-up).

**Settee,** *n.* நீண்ட சாய்மணை.

**Setting,** *n.* (set) அமர்த்துதல், அடைதல்; உறைதல்; (மணிக்) கல்லின் பதிவு முறை; பின்னணி; அமைதி.

**Settle,** 1.*n.* நீண்ட சாய் மணைக் கட்டில். 2. *v.* குடியேற்று; குடியேறு; நிலையாகத் தங்கி வாழ்; நிலையான குடிவாழ்வை மேற் கொள். 3. *v.* (சச்சரவு; வழக்கு) இணக்கமாக்கி வை. 4. *v.* (கடன்) தீர்த்துவை. 5. *v.* (புயல் முதலியன) அமைதிப்படு; நிலைப்படு. 6. *v.* (நீர் முதலியவற்றில் வண்டலாக) அடியில் படி. 7. *v.* முடிவு செய்; 8. *v.* அறுதி செய்; வரையறை செய்; நிலவரப்படுத்து; நிலைநாட்டு. 9. (சொத்து) எழுதிவை. *n. abs.* settlement, உடன் படிக்கை; ஒப்பந்தம்; ஒப்பந்தப் பத்திரம்; (வழக்கு. பூசல்) இணக்கமாக வைத்தல்; (கடன்) தீர்ப்பு; முடிவு; தீர்மானம்; நிலவரத் திட்டம்; குடி யேறுதல்; குடியேற்றம்; குடியேற்றப் பகுதி. *n. abs. see* settlement. Permanent Revenue Settle ment. நிலவர வரியாட்சித் திட்டம்.

**Settlement,** *n.* (settle) குடி யேற்றம்; (சட்டப்படி) எழுதி வைத்தல்.

**Set-up,** *n.* (set up) அமைப்பு முறை.

**Seven,** *a., n.* ஏழு. *n., a.* seventh, ஏழாவது (ஆன); ஏழிலொன்று (ஆன). *a.* sevenfold, ஏழு மடங்கு.

**Seventeen,** *a., n.* பதினேழு. *n., a.* seventeenth, பதினேழாவது; பதினேழிலொன்று.

**Seventy,** *a., n.* எழுபது. *n., a.* seventieth. எழுபதிலொன்று (ஆன).

**Sever,** *v.* பிரி; துண்டி; வேறாக்கு. *n.* severance. *a.* severable.

**Several,** *a.* வெவ் வேறான; பல்வகைப்பட்ட; பல. *adv.* severally. வேறு வேறாக; தனித்தனியாக; பல்வகையாக.

**Severe,** *a.* கடுமையான; கண்டிப் பான; இரக்க உணர்ச்சியற்ற; அணியழகற்ற. *adv.* severely. *n.* severity, severeness.

**Sew,** *v.* (ஊசியால்) தை; நூலினால் இணை. *n.* sewing. *n. ag.* sewer. தையல் எந்திரம்; தையல்காரர்.

**Sewage,** *n.* சாக்கடை (நீர்).

**Sewer,** 1. *n.* சாக்கடை; வடிகால்; கழிகால். *v.* சாக்கடை அமை. 2. (*see* sew,) *n.* sewerage.

**Sex,** *n.* ( ஆண், பெண் ) பாலினம்; பெண் பாலர்; சிற்றின்பத்துறை. *a.* sexual. *a.* (*neg.*) sexless, பால்வேறுபாடற்ற. *n.* sexuality.

**Sexagenarian,** *n.* அறுபது வயதானவர். *a.* sexagenary.

**Sexagesimal,** *a., n.* அறுபதாவது; அறுபதுகளாக அமைந்துள்ள (எண்மானம்)

**Sexennila,** *a.* ஆறு ஆண்டு களுக்குரிய. *n.* ஆறு ஆண்டு களுக்கு ஒருமுறை நடப்பது.

**Sextant,** *n.* கோண அளவுமானி வகை.

**Sextet(te),** *n.* ஆறு பேருக்குரிய கூட்டிசை.

**Sexton,** *n.* (கிறித்துவர்) கோவில் மணியக்காரன்; பிணக்குழி

தோண்டுபவன்; கோயில் வெட்டியான்.

**Sextuple,** *a.* ஆறுமடங்கான. *v.* ஆறு மடங்காக்கு.

**Shabby,** *a.* கந்தையணிந்துள்ள; இழிதோற்றமான. *adv.* shabbily. *n.* shabbiness.

**Shack,** *n.* குடிசை.

**Shackle,** *n.* தளை; விலங்கு. *v.* விலங்கு மாட்டு; சிறைப்படுத்து.

**Shade,** *n.* நிழல்; சிறு வேறுபாடு; நிறத்திண்மை; ஆவி; மறைவிடம்; (படத்தின்) ஒளிமறைவுப் பகுதி. *v.* நிழல் செய்; மறைவிடம் அமை; வண்ணம் திட்பமாக்கு. *n.* shading. மறைவு; (ஒளி) மூடாக்கு. *n. see* shady.

**Shadow,** *a.* நிழலுருவம்; சாயை; மறைவிடம்; இருள்; உண்மையற்ற தோற்றம்; பிரியாத நண்பன். *v* நிழலிடு; ஊகமாகத் தெரிவி; (நிழல் போல) பின்தொடர். *a.* shadowy கெட்ட பெயருக்கு இலக்கான; மெய்யல்லாத; தெளிவல்லாத; ஐயப்பாடான.

**Shady,** *a.* நிழலான; ஐயப்படத் தக்க; இரண்டக நிலையான.

**Shaft,** *n.* அம்பு; கருவியின் கைப்பிடி; நீண்ட கோல்; சுரங்கவழி; கம்பத்தின் நடுப்பகுதி.

**Shaggy,** *a.* முரட்டுமயிருள்ள. *n.* shagginess.

**Shake,** *v.* (shook, shaken) குலுக்கு; நடுங்கு; வலிமை குன்றச் செய்; வலுக்குறை; நிலையில்லாதிரு. *n.* அசைவு; அதிர்ச்சி; நடுக்கம். *a.* shaky.

**Shale,** *n.* மாக்கல் பாறை. *a.* shaly.

**Shall,** *v. aux.*(*pt.* form should when verb in the main clause is past tense. எதிர்காலங் காட்டும் துணை வினை.

**Shallop,** *n.* பளுவற்ற சிற்றோடம்.

**Shallow,** *a.* ஆழமற்ற; அறிவற்ற; சிறுமைப்பட்ட. *v.* ஆழமற்ற நீர்நிலை; குட்டை. *n.* shallowness.

**Sham,** *v.* பாசாங்கு செய். *a.* பொய்யான; பாசாங்கான. *n.* பாசாங்கு; ஏய்ப்பு; கள்ளத்தனம். *n. pers.* shammer.

**Shamble,***v.* அருவருப்பாக நட. *n.* *(pl.)* கொலைக்களம்; இறைச்சிக் கடை.

**Shame,** *n.* வெட்கம்; இழிவு; அவமதிப்பு. *v.* அவமானப்படுத்து; இழிவுபடுத்து. *a.* shameful. *a.* *(neg.)* shameless. *n.* shame fulness. *(neg.)* shamelessness. *n. comb. a.* shamefaced. நாணமுள்ள; வெட்கத்தால் தலையிறங்கிய.

**Shammy, shamoy,** *n.* (chamois). தோல் வகை.

**Shampoo,** *v.* (தலைமுடியைக் கழுவித் துடைத்துக்) கோது; (உடலைக் கழுவித்) தேய். *n.* தேய்ப்பு; கோதுதல்.

**Shamrock,** *n.* மூவிலைச் செடி வகை; அயர்லாந்து நாட்டுச் சின்னம்

**Shank,** *n.* கால்; முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடைப்பகுதி; கீழ்க்கால்.

**Shanty,** *n.* சிறு குடிசை.

**Shape,** *v.* உருவாக்கு; தகுதியாக்கு. *n.* உருவம்; தோற்றம். *a.* shap(e) able. *a.* (*neg.*) shapeless.*a.* shapley, அழகான; மனத்துக்குப் பிடித்த உருவமுள்ள.

**Shard, sherd,** *n.* மட்கலத்தின் உடைந்த சில்; ஓடு; ஓட்டாங் கண்ணி.

**Share,** *n.* பங்கு; வரைநிலைக் கழகத்தின் மூலதனப்பங்கு; பகுதி; கலப்பைக்கொழு. *v.* பகுதி பிரி; பங்கு பெறு. *n.* shareholder, பங்காளி.

**Shark,** *n.* சுறாமீன்; எத்தன்; பேராவற்காரன். *v.* ஏமாற்று; வஞ்சனைசெய்.

**Sharp,** 1. *v.* கூராக்கு; (இசை ஓசை) உயர்த்து; இசை ஓசையுயர்வுக் குறியிடு; போலி ஆட்டமாடு; 2. *a.* கூர்மையான; அறிவுக் கூர்மையுடைய; (மனத்தைப்) புண்படுத்துகிற; மூர்க்கமான; புளிப்பான அல்லது காரமான; உயர் ஓசையுள்ள. *n.* உயர் ஓசை ஒலி. (1) *n. pers.* sharper, எத்தர். (2) *v.* sharpen, (*n.*) sharpness.

**Shatter,** *v.* நொறுக்கு; உடை; தகர்.

**Shave,** *v.* (shaved, shaved or shaven) சீவு; கத்தியால் மயிர் களை; சிரை; (மிக அருகாக உராய்ந்து) செல். *n.* நெருங்கிய இடரினின்று தப்புதல். *n.* shaving.

**Shaveling,** *n.* புரோகிதன்; இளைஞன்; அனுபவமற்றவன்.

**Shavian,** *a.* பெர்னாடுஷாவின் பாணியான.

**Shaw,** *n.* சிறுகாடு.

**Shawl,** *n.* சால்வை; மேல் வேட்டி.

**Shay,** *n.* குதிரை வண்டி வகை.

**She,** *pron.* அவள்.

**Sheaf,** *n.* (*pl.* sheaves) கதிர்க்கட்டு; கொத்து *v.* கட்டாகச் செய்.

**Shear,** *v.* (sheared, sheared, or shorn) கத்தரியால் மயிர் கத்தரி; ஒன்றுமில்லாது துடை. *n. (pl.)* shears, பெரிய கத்தரிக்கோல். *n.* shearling. ஒருமுறை மயிர் வெட்டிய ஆடு.

**Sheath,** *n.* உறை; கூடு; ஓடு; கவசம்.

**Sheathe,** *v.* உறையிலிடு; கவசத் தால் மூடு. *n.* sheathing.

**Sheave,** *n.* கயிறு ஓடுவதற்காக விளிம்பில் பள்ளமுள்ள சக்கரம்.

**Shed,** *v.* (shed) சொட்ட விடு; கைவிடு; விழச்செய். *n.* குடிசை; சாவடி; தொழு. *comb. n.* car-shed. விசை வண்டிச் சாவடி. cattleshed. கால்நடைத் தொழு; மாட்டுக் கொட்டில்.

**Sheen,** *n.* பளபளப்பு; ஒளி; மினுக்கம். *a.* sheeny.

**Sheep,** *n.* (*pl.* sheep) செம்மறி யாடு; வலிமை யற்றவர்; நாணுபவர். *a.* sheepish, நாணுகிற; ஏக்கந் தெரிகிற sheepishness.

**Sheep-coat, sheep-fold,** *n.* ஆட்டுக்கிடை; பட்டி.

**Sheer,** *a.* கலப்பற்ற; செங்குத்தான. *n.* நேர் வழியிலிருந்து விலகு;

ஒதுங்கிச் செல். *n. (pl. )* பாரந் தூக்கும் கருவி.

**Sheet,** *n.* தகடு; (படுக்கை) விரிப்பு; கப்பல் பாய்க்கயிறு. *comb. n.* bed-sheet. படுக்கை விரிப்பு. carbon-sheet, கரியத்தாள்; படியெடுக்குந் தாள். tin-sheet, வெள்ளீயத் தகடு. iron-sheet, இரும்புத் தகடு.

**Sheet-anchor,** *n.* பெரிய நங்கூரம்; இடர்காப்பு நங்கூரம்; சேம ஆதாரம்.

**Shelf,** *n. (pl.* shelves) நிலைப் பெட்டி; நிலைக்கால் தட்டு; சுவர்நிலைத் தட்டு; கிணற்றுப்படி; நீர்க்கீழ்ப் பாறை. *conn. see* shelve.

**Shell,** *n.* கவசம்; உறை; ஓடு; மேல்தோடு; தோடு; ஆமைத் தோடு; சிப்பி; சங்கு; உள் பிணப் பெட்டி; நொய் படகு; வெடி குண்டு; ஊற்றெண்ணெய்க் கல். *v.* மேலோட்டை உடை; வெடி குண்டு அல்லது பீரங்கிப் படையால் தாக்கு. *a.* shelly.

**Shellac,** *n.* அரக்கு.

**Shell-fish,** *n.* கிளிஞ்சில்; சிப்பி.

**Shelter,** *n.* பாதுகாப்பு (இடம்); தஞ்சம்; மறைவிடம் *v.* தஞ்சம் புகு; பாதுகாப்பாக வை; மறைத்து வை; ஆதரி.

**Shelve,** *v.* (shelf) சாய்வாக அமைந்திரு; நிலைப்பெட்டியில் புத்தகம் முதலியன வை; நிலைப்பெட்டி அமை; தள்ளிவை.

**Shepherd,** *n.* (*f.m.* shepherdess). ஆட்டிடையன்; மதகுரு. *v.* ஆடுமேய் The Good Shepherd. ஏசுகிறித்து.

**Sheppy,** *n.* ஆட்டுக்கிடை.

**Sherbet,** *n.* இனிய குடிநீரகம்.

**Sherd,** *n.* (*see* shard).

**Sheriff,** *n.* வட்டத் தலைவர்; நாட்டாண்மைக்காரர்; மாநகர் மணியம். *n. abs.* sheriffdom, *comb. n.* under-sheriff, மாநகர் உதவி மணியம்.

**Sheery,** *n.* தீந்தேறல் வகை.

**Shew,** *v.* (*see* show).

**Shibboleth,** *n.* சமூக மூட மரபு; மூடக்கொள்கை.

**Shield,** *n.* கேடயம்; கவசம்; குலச் சின்னம் வரைந்துள்ள பட்டயம்; (ஆட்டப்) பரிசுச் சின்னம். *v.* ஆதரி; பாதுகாப்புச் செய்.

**Shift,** *v.* இடம் பெயர்; அப்புறப் படுத்து. *n.* மாற்றுதல்; சாக்குப் போக்கு; சூழ்ச்சித்திறம்; (வேலை யாள்) மாற்றுதல்; வேலை நேர அளவு; (பள்ளி, தொழிற் சாலை) மாற்று நேரம்; மகளிர் உள்ளுடை.

**Shiftless,** *a.* நோக்கமற்ற; ஏற்பாடில்லாத. *n.* shiftlessness.

**Shifty,** *n.* சூழ்ச்சித்திறமுடைய. *n.* shiftiness.

**Shimmer,** *v.* ஒளிவிடு; மங்கி எரி. *n.* மங்கிய ஒளி.

**Shin,** *n.* கீழக்கால் முன்புறம்.

**Shine,** *v.* (shone) ஒளிவிடு; எழுச்சிகொள்; மேம்படு. *n.* ஒளி. *n.* shining. பளபளப்பு; மினுமினுப்பு. *a. see* shiny.

**Shingle,** *a. n.* கூரை வேய உதவும் பலகை. *v.* பலகையால் கூரை வேய். தலைமயிரைக் கட்டையாக வெட்டு. 2. *n.* கூழாங்கல்; சரளைக் கல். 3. *n. pl.* (இடுப்புப்) படைநோய். (2) *a.* shingly.

**Shiny,** *a.* பளபளப்பான.

**Ship,** *n.* நாவாய்; கப்பல்; மரக்கலம். *v.* கப்பலில் ஏற்றி அனுப்பு.

**Ship-building.** *n.* நாவாய் கட்டும் தொழில்.

**Shipload,** *n.* கப்பலில் பாரமேற்றக் கூடிய அளவு.

**Shipment,** *n.* கப்பலில் சரக்கு ஏற்றுதல்; கப்பல் சரக்கு.

**Shipping,** *n.* நாவாய்த் தொகுதி; கப்பலில் சரக்கு ஏற்றுதல்; கப்பல் துறை; கப்பல்தொழில்; கப்பல் சரக்கேற்றம். *comb. a.* shipping -agent. கப்பலின் துறைமுகப் பணிமுகவர்; shipping fees கப்பற்கட்டணம்.

**Ship shape,** *a.* ஒழுங்கான; தூய்மையான.

**Shipworm,** *n.* கப்பல்மரத்தை அரிக்கும் புழு.

**Shipwreck,** *n.* கப்பல் கவிழ்வு; முழு அழிவு. *v.* கடலில் அழி.

**Shipwright,** *n.* கப்பல் கட்டுபவர்.

**Shipyard,** *n.* கப்பல் கட்டும் துறை.

**Shire,** *n.* கோட்டம்; வட்டம்.

**Shirk,** *v.* தப்பித்துக்கொள்; தவற விடு; கடமை நழுவ விடு. *n. pers.* shirker.

**Shiri,** *n.* உட்சட்டை; குடுத்துணி; மெய்ப்பை. கச்சு. *n.* shirting. சட்டைத் துணி.

**Shiver,** *v.* (குளிர், அச்சம் முதலியவற்றால்) நடுங்கு; அதிர்ச்சியடை. *n.* நடுக்கம். 2. *v.* உடைந்து - சிதறு. *n.* சிறிய துண்டு; சிம்பு. *a.* shivery.

**Shoal,** *n.* கூட்டம்; (மீன்) திரள். *v.* கூட்டங்கூடு. *n.* ஆழமில்லாத (நீர்நிலை); ஆழமற்ற இடம்; மணல் திடர். *v.* ஆழம் குறைவாகு. *adv. a.* shoalwise, shoaly.

**Shock,** 1.*n.* அதிர்ச்சி; மோதுதல்; மின்வலி அதிர்ச்சி. *v.* அதிர்ச்சி யடையச் செய்; திடுக்கிடச் செய். 2. *n.* கதிர்த் தொகுதி. *v.* கதிர்களைத் தொகுதியாக அமை 1. *a.* shocking, அச்சம், வெறுப்பு முதலியன தரத்தக்க

**Shod,** *v. see* shoe.

**Shoddy,** *n.* கந்தல் ஆடையின் நூல்; கந்தல் நூலினால் மறுபடி நெசவு செய்யப்பட்ட ஆடை; போலி. *a.* போலியான; சிறுமைப் பட்ட.

**Shoe,** *n.* செருப்பு; இலாடம். *v.* (shod) இலாடம் அடி. (*comb*) *n.* shoe-black கால் புதை யரணமை (இடுபவர்). *n.* shoe-horn. கால் புதையரணம் அணிய உதவும் கருவி. *n.* shoe-lace, கால் புதையரண நாடா.

**Shone,** *v. see* shine.

**Shoo,** *int.* சூ! எனும் ஒலி.

**Shook,** *v. see* shake.

**Shoot,** *v.* (shot) எறி; பாய்ந்து செல்; (குண்டு) சுடு; சுட்டுக்கொல்; (அம்பு) எய்; தளிர்த்து வெளிப்படு; முளை; தண்டு; புதிய கிளை. *n.* shooting -star. எரிமீன்.

**Shop,** *n.* கடை; தொழிற் சாலை. *v.* கடையில் சரக்கு வாங்கு. *n.* shopping, கடைச்சரக்கு வாங்கப் போதல். *comb. n.* shopkeepe,r கடை முதலாளி. shop man, கடை வேலையாள். shop site, கடை மனை. *a.* shop-worn, கடையில் சேதமடைந்த. *n.* workshop, பட்டறை; பணிக்கிடங்கு.

**Shore,** *n.* (கப்பல். சுவர். கம்பம் முதலியவற்றுக்கு) ஆதரவான உதைகால்; அணை சுவர்; கடற்கரை. *v.* ஆதரவு கொடுத்துத் தாங்கு. *n. abs.* shoring. *comb. n.* shoreline, கரைக்கோடு; நிலவரை.

**Shorn,** *v.* (*see* shear.)

**Short,** *a.* கட்டையான; குட்டையான; சுருக்கமான; அளவிற்குக் குறைவான. *adv.* திடீரென; சுருக்கமாக. *n.* குறில் (எழுத்து அல்லது அசை).

**Shortage,** *n.* குறைபாடு; அளவில் குறைவு.

**Short-circuit,** *n.* மின் வலியின் குறுக்குப் பாய்ச்சல்.

**Shortcoming,** *n.* குறைபாடு; குற்றம்.

**Short-cut,** *n.* குறுக்கு வழி.

**Shorten,** *v.* குறைவாக்கு; சுருக்கு.

**Shorthand,** *n.* சுருக்கெழுத்து; கண்ணெழுத்து. *comb. n.* shorthand writers. சுருக்கெழுத்தாளர்.

**Short-handed,** *a.* போதிய உதவியாளில்லாத.

**Short-lived,** *a.* சிறிதுகாலமே இருக்கிற; குறைவான.

**Shortly,** *adv.* விரைவிலேயே.

**Short-sight,** *n.* அணுக்கப் பார்வைக் கோளாறு. (x long sight.)

**Short-sighted,** *a.* வருவதுணராத; முன் கருத்தில்லாத. *n.* short-sightedness.

**Short-tempered,** *a.* முன் சினமுடைய.

**Short-wave,** *n.* குறுகிய மின்னலை; குறுகிய வானொலி அலை.

**Short-winded,** *a.* மேல்மூச்சு வாங்குகிற.

**Shot,** *v.* (*see* shoot.) *n.* (துப்பாக்கிக் குண்டு; எறிபடை; வீசு; எய்; எறி; சுடு; இலக்கு மேற் செல்லவிடு; (துப்பாக்கிக் குண்டு, எறிபடைகள்) சுடுதல்; எறியும் தொலைவு; சுடுபவன் அல்லது எறிபவன்.

**Should,** *a. see* shall.

**Shoulder,** *n.* தோள்; ஆதாரம். *v.* தோள்மீது தாங்கு; தோளினால் தள்ளு.

**Shoulder-blade,** *n.* தோள் பட்டை எலும்பு.

**Shoulder-strap,** *n.* படை வீரனின் தோளணி.

**Shout,** *n.* கூப்பாடு; ஆரவாரம். *v.* கூச்சலிடு; உரத்துப் பேசு.

**Shove,** *v.* முன்னுக்குத் தள்ளு; செலுத்து, *n.* தள்ளுதல்.

**Shovel,** *n.* மண்வெட்டி. *v.* தோண்டி எறி, *n.* shoveller.

**Show, shew,** *v.*, (showed or shewed, shown or shewn). காட்டு; விளக்கிச் சொல். *n.* காட்சி; தோற்றம்; வேடிக்கைக் காட்சி; கண் காட்சி; புறத்தோற்றம்; பகட்டு போலித் தோற்றம்.

**Showcase,** *n.* காட்சிப்பெட்டி.

**Showdown,** *n.* வெளிக் கொணர்தல்; வழக்கை முடிவாகத் தீர்த்தல்.

**Shower,** *n.* மழைத் தூற்றல்; தாரை; குன்றாது கொடுத்தல். *v.* மழை பொழி; சொரி; குன்றாது கொடு. *a.* showery.

**Showman**. *n.* (*pl.* showmen) காட்சி காட்டுபவர்; விளம்பரப் பொறுப்பாளர்.

**Show-off,** *v.* பகட்டாக வெளிக் காட்டு. *n.* பகட்டு.

**Showroom,** *n.* சரக்குக்காட்சி அறை; முகப்புக் காட்சியறை.

**Show up,** *v.* இழிவை வெளிப் படுத்து; குறித்த நேரத்தில் தோன்று.

**Showy,** *a.* பகட்டான; கவனத்தைக் கவர்கிற. *n.* showiness.

**Sharpnel,** *n.* சிதறிய வெடி குண்டுப் பகுதி.

**Shred,** *n.* கிழிந்த துண்டு; துணுக்கு. *v.* துண்டுகளாகக் கிழி அல்லது நறுக்கு.

**Shrew,** *n.* அடங்காப் பிடாரி; கலகக்காரி. *a.* shrewish.

**Shrewd, a** கூரிய அறிவுள்ள. *n.* shrewdness.

**Shriek,** *v.* கத்து; கூச்சலிடு; வீறிடு. *n.* கத்தல்; வீறிடல்.

**Shrift,** *n.* (shrive) சமய குருவின் முன்பாப மன்னிப்பு வேண்டல். (short shrift) குற்றச்சாட்டுக்குப் பின் விரைவில் தண்டனை பெறுதல்.

**Shrill,** *a.* காதைத் துளைக்கிற; கீச்சென்ற. *adv.* shrilly. *n.* shrillness.

**Shrimp,** *n.* நண்டு இன உயிர் வகை; குள்ளன்.

**Shrine,** *n.* தெய்விகத்தன்மை வாய்ந்த இடம்; கோயில்; பலிபீடம்.

**Shrink,** *v.* (shrank, shrunk or shrunken) உருவத்தில் சிறுகு; சுருங்கு; பின்னிடு. *n.* shrinkage.

**Shrive,** *v.* (shrove or shrived, shrived of shriven) பாவ மன்னிப்புக் கொடு. *n.* (*see* shrift).

**Shrivel,** *v.* சுருங்கு; மெலிவடை; வாட்டமடை.

**Shroff,** *n.* காசுக் கடைக்காரர்; காசாளர்; வட்டிக் கடைக்காரர்.

**Shrotriyam,** *n.* (இந்திய வழக்கு) இறையிலி நன்கொடை.

**Shroud,** *n.* பிணப் போர்வை; மறைக்கும் சாதனம். *(pl.)* பாய்மரக் கயிறுகள். *v.* மூடு; போர்வையால் மறை.

**Shrub,** *n.* புதர்ச் செடி; பூண்டு. *a.* shrubby, *n.* shrubbery.

**Shrug,** *v.* (வெறுப்பு அல்லது ஐயத்தைத் தெரிவிக்க) தோள்களை அசை. *n.* தோள்களைக் குலுக்குதல்.

**Shuck,** *n.* உமி; தோல். *v.* உமி அல்லது தோலை நீக்கு.

**Shudder,** *v., n.* நடுங்கு (தல்.)

**Shuffle,** *v.* இடம் மாற்று; கலக்கு; கால் அடி தேய்த்துக்கொண்டு நடந்து செல். நேர் விடை கொடாது கடத்து. *n. pers.* shuffler.

**Shun,** *v.* வெறுத்து ஒதுக்கு; தவிர்.

**Shunt,** *v.* திருப்பு; (தொடர் ஊர்தி, மின் வலி முதலியவற்றை) வேறு திசையில் திருப்பு; ஒதுக்கி வை.

**Shut,** *v.* (shut) மூடு; தாழிடு.

**Shut-down,** *n.* தொழில் நிறுத்தம்.

**Shutter,** *n.* (பலகணி) அழிக் கதவு; அழியடைப்புகள்.

**Shuttle,** *n.* தறியின் ஓடம். *n.* shuttlecock, இறகுப் பந்து (*correl. see* battledore).

**Shy,** *a.* நாணுகிற; கூச்சமுள்ள; ஒதுங்கி நிற்கிற. *v.* திடீரென ஒதுங்கு; துள்ளு. *n.* shyness. *adv.* shyly

**Shyer,** *n.* மிரளும் குதிரை (அல்லது பிற உயிர்).

**Siamese,** *a., n.* சியாம் நாட்டைச் சேர்ந்த(வர்). *n. pers.* siamese twins. இணை பிரியா நண்பர்கள்.

**Sib,** *a., n.* நெருங்கிய உறவுள்ள (வர்)

**Sibilant.** *a., n.* ‘ஸ்’ என்று ஒலிக்கிற எழுத்து.

**Sibyl,** *n.* குறி சொல்பவள்; குறி சொல்லும் குறத்தி. *a.* sibylic, sibylline.

**Sice,** *a. n.* பகடைக் காயில் ஆறு எனும் எண். 2. *see* syee.

**Sick,** *a.* நோய்ப்பட்டுள்ள; வாந்தி உணர்ச்சியுள்ள; வெறுப்புடைய; களைப்புடைய. *a.* sickly, நோயான. *n.* sickliness. *v.* sicken. நோய்ப்படு (த்து); வெறுப்படைவி; குமட்டச் செய். *n. ag.* Sickner. *adv.* sickeningly. *n. see* sickness.

**Sickle,** *n.* (கதிர் அறுக்கும்) அரிவாள்; வெட்டரிவாள்.

**Sickle moon,** *n.* பிறை மதியம்.

**Sickness,** *n.* நோய்; குமட்டுதல்.

**Side,** *n.* பக்கம்; விளிம்பு; விலாப் பக்கம்; கிளை; கட்சிப் பிரிவு. *a.* ஒரு பக்கமான; நேரல்லாதது; கிளைத்த; கிளையான. *v.* ஒரு கட்சியில் சேர்; ஆதரி; ஒரு புறமாக ஒதுங்கு.

**Sideboard,** *n.* பக்கச் சுவரில் பதித்துள்ள பலகை; கோக்காலிப் பலகை.

**Sidecar,** *n.* மிதி பொறி வண்டியில் பக்கத்திலுள்ள இருக்கை.

**Side-dish,** *n.* துணை உணவு.

**Side-light,** *n.* ஐயம் போக்கும் விளக்கச் செய்தி.

**Side-line,** *n.* துணைத் தொழில். கிளை இருப்புப் பாட்டை.

**Sidelong,** *a.* சாய்ந்த; ஒரு பக்க மாக நீண்டு; பக்கம் நாடிய; ஓரச்சார்பான. *adv.* சாய்வாக.

**Sidereal,** *a.* விண்மீன்கள் பற்றிய; விண்மீன்களைக் கொண்டு அளக்கிற.

**Side show,** *n.* துணைக்காட்சி; கவனம் திரும்பும் முயற்சி.

**Sideslip,** *v.* சறுக்கு பக்கமாக வழுக்கிச் செல்.

**Side splitting,** *a.* சிரித்து வயிறு புண்ணாகிற.

**Side step,** *v.* பக்கமாக விலகு.

**Side-track,** *n.* கிளைப்பாதை. *v.* கிளைப் பாதையில் செலுத்து; கவனம் திருப்பு; கவனம் திருப்பி ஏமாற்று. *comb. v.* sidetrack issues, ஆய்பொருள் குழப்பு. திசை திருப்பி ஏய்.

**Side-walk,** *n.* கிளைப்பாதை; கிளை வழி.

**Sidewards, sideways, side wise,** *adv., a.* ஒரு பக்கமான; பக்கம் நோக்கி.

**Sidle,** *v.* (கெஞ்சிக்கொண்டு) ஒரு புறமாகக் கோணி நட.

**Siege,** *n.* முற்றுகை; வளைத்துப் போரிடல்.

**Sienna,** *n.* செம்மண்; காவி மண்.

**Sierra,** *n.* ஒழுங்கற்ற மலைத் தொடர்.

**Siesta,** *n.* நடுப்பகலில் சிறு துயில் ஓய்வு.

**Sieve,** *n.* சல்லடை; அரிதட்டு; மறை செய்தியை அடக்கி வைக்க இயலாதவர். *v.* (சல்லடையில்) சலி.

**Sift,** *v.* சலித்தெடு; தரம் வாரியாகப் பிரி; நுட்பமாக ஆராய். *n. ag.* Sifter.

**Sigh,** *v.* பெருமூச்செறி; மிக விரும்பு. *n.* பெருமூச்சு.

**Sight,** *n. see* பார்வை காணப் படுவது; காட்சி; காணத் தகுந்தது; துப்பாக்கியில் குறிபார்க்கும் அமைப்பு. *v.* (அருகில் சென்று) பார்; (கருவியால்) காண். *a.* sightly, பார்க்கத் தகுந்த. *n.* sightliness. *a.* (*neg.*) stghtless குருடான; கண்ணுக்குத் தெரியாத.

**Sight-seeing,** *n.* பொழுது போக்குக் காட்சி. *n. ag.* sightseer.

**Sign,** *n.* அறிகுறி; அடையாளம்; சைகை; தெய்வ ஆற்றலால் ஏற்படும் நிகழ்ச்சி; பன்னிரண்டு வான வீடுகளில் ஒன்று; (கூட்டல் கழித்தல் முதலிய) குறி. *v.* சைகையால் காட்டு; கையொப்பமிடு.

**Signal,** *n.* சைகைச் செய்தி; அறிகுறி. *a.* குறிப்பிடத் தகுந்த. *v.* எச்சரிக்கை செய்; சைகையால் செய்தியனுப்பு. *n. ag. pers.* signal(l)er.

**Signalize, -se.** *v.* குறிப்பிடத் தக்கதாக அல்லது சிறப்புறும்படி செய்.

**Signatory,** *a., n.* உடன் படிக்கையில் கையொப்பமிட்ட (கட்சியினர்)

**Signature,** *n.* கையொப்பம்.

**Sign-board,** *n.* பெயர்ப் பலகை.

**Signer,** *n.* முத்திரை. (-ring) முத்திரை மோதிரம்.

**Significance,** *n.* (signify) உட்குறிப்பு உட்பொருள்; உட்கருத்து; சிறப்பு; பயன். *a.* significant, பொருளுள்ள; குறிப்பிடத்தக்க; சிறப்புப் பொருள் தருகிற; முக்கியமான.

**Signify,** *v.* குறிப்பிடு; முக்கியமாயிரு; பொருள்படு. *n.* signification. சரியான பொருள்; உட்கருத்து. *also see* significance. *a.* significative.

**Sign-post,** *n.* கைகாட்டி மரம்; வழிகாட்டிமரம்.

**Silence,** *n.* சும்மாவிருத்தல்; மௌனம்; அமைதி. *v.* ஒலியை நிறுத்து; வாய் அடங்கச் செய். *int.* மௌனமாயிரு. *n. ag. impers.* silencer.

**Silent,** *a.* பேசாத; அமைதியான; ஒலிக்காத.

**Silhoutte,** *n.* நிழற்படம்; இருண்ட நிழல் வடிவத் தோற்றம். *v.* நிழற்படம் போல் அமை.

**Silica,** *n.* மணல், பளிங்குக் கல் ஆகியவற்றில் பெரும் பகுதியாக அமைந்துள்ள பொருள்; மணல் சத்து. *a.* silicated.

**Silicon,** *n.* 'மணலம்' எனும் ஒரு மூலகம்.

**Silk,** *n.* பட்டு நூல்; பட்டாடை. *a.* பட்டினால் ஆன; பட்டைப் போன்ற. *a.* silken, பட்டினாலான; பட்டினாலானது போன்ற. silky பட்டுப் போன்ற. *(comb) n.* silkworm, பட்டுப் புழு. *n.* silk-cotton. இலவம் பஞ்சு.

**Sill,** *n.* பலகணி அருகு; வாயிற்படி

**Silly,** *a.* மடத்தனமான; சிறு குழந்தை தனமான. *n.* silliness.

**Silt,** *n.* வண்டல்; சேறு; தூர்வை. *v.* சேறு அல்லது வண்டல் அடை.

**Silvan, sylvan,** *a.* சோலை சார்ந்த; நாட்டுப் புறத்துக்குரிய.

**Silver,** *n.* வெள்ளி; வெள்ளிக் காசு; வெள்ளிக் கலங்கள். *a.* வெள்ளி போன்ற; வெள்ளியால் ஆன. *v.* வெள்ளி பூசு; வெள்ளியாகு. *a.* silvery, வெள்ளிபோன்ற; கணீர் என்ற. *a.* silvern, வெள்ளித் தரமான; இரண்டாந் தரமான. (*comb.*) *n.* silversmith, வெள்ளி வேலையாள், silverware, வெள்ளிக் கலங்கள். *a.* silver tongued, பேச்சு நயமுடைய. *phr.* idi. born with a silver spoon in his mouth. சொகுசுமிக்க குடியில் பிறந்த.

**Silver bromide, silver chloride, (*comb.*)** *n.* (நிழற் படத்தில் பயன்படும்) வெள்ளி உப்புக் கலவை வகைகள்.

**Silviculture, sylviculture.** *n.* மர வளர்ப்பு; காடு வளர்ப்புக் கலை.

**Similar,** *a.* ஒருமித்த; ஒரே மாதிரியான. *n.* similarity.

**Simile,** *n.* (ஃசிமிலி) உவமை; உவமையணி.

**Similitufe,** *n.* போலிமை; ஒப்புமை.

**Simmer,** *v.* தளதளவென்று வெதும்பு; உள்ளூரத் துடி; சிரி; சினங்கொள்.

**Simoon,** *n.* பாலைவனக் காற்று; ஊதை.

**Simper,** *v.* அருவருப்பாகச் சிரி. *n.* அருவருப்புச் சிரிப்பு.

**Simple,** *a.* எளிய; தனியான; சிக்கலில்லாத. அணியில்லாத; கபடில்லாத; எளிதில் நம்புகிற; மடத்தனமான. *n.* simplicity. *adv.* simply. *v.* (*see* simplify.) (*comb.*) *a.* simple-hearted, simple-minded, கபடில்லாத.

**Simpleton,** *n.* முட்டாள்; பேதை.

**Simplify,** *v.* எளிதாக்கு; தெளிவாக்கு; சிக்கலில்லாமல் செய்; (கணக்கியல்) விடுவி; தீர். *n.* simplification.

**Simulate,** *v.* பார்த்ததுப் பகர்; நடி; பாசாங்கு செய்; *conn. see* dissimulate. *n.* simulation.

**Simulataneous,** *a.* ஒரே காலத்தில் நிகழ்கிற; உடனிகழ்ச்சியான. *n.* simultaneousness. Simul taneity.

**Sin,** *n.* தீவினை; பழி; பழி கேடு; பாவம். *v.* பழிசெய்; தீவினை செய். *a.* sinful *a.* (*neg.*) sinless. *n.* sinfulness. *n. pers.* sinner. பாவி.

**Since,** *adv., prep.* (காலம்) இருந்தே; முதற் கொண்டே. 2. *prep.* பின்னர்; பிறகு. 3. *rel. adv.* பயனாக; காரணமாக; விளைவாக. 4. *conj.*

**Sincere,** *a.* நேர்மையான; உண்மையான; கபடமில்லாத. *adv.* sincerely. *n.* sincerity.

*sine, a. prep.* இல்லாமல். 2. *n.* (முக்கோணவியல் வீத வகை) செங்கோண முக்கோணத்தில் கோணத்துக்கு எதிர்வரை (நிமிர்வரை)யுடன் நெடுநீள்வரை கொள்ளும் வீதம்; ‘நிமிர் வீதம்’; ‘நிமிர்வு’. (1) *phr. adv. sine die.* தேதி குறிப்பிடாமல். *sine quanon.* இன்றியமையாத கூறு.

**Sinecure,** *n.* ஊதியம் மிகுந்த பணி. *n. pers.* sinecurist.

**Sinew,** *n.* தசை நார்; வலிமை தரும் சாதனம்; தசைப் பிடிப்பு. *a.* sinewy, தசைப் பற்றுள்ள; வலிவுள்ள.

**Sing,** *v.* (sang, sang or sung) பாடு; புகழ்பாடு. *n. ag. pers.* singer. *n. see* song.

**Singe,** *v.* பொசுக்கு; தீயால் சுடு. *n.* சுட்ட புண்.

**Single,** *a.* தனியான; மணமாகாத; ஒற்றையான; முழுமையான; ஒருமுகமான; மடிப்பில்லாத. *v.* தனியாகப் பொறுக்கியெடு. *adv.* singly, தனியாக; ஒவ்வொன்றாக. *n. abs.* singleness.

**Singsong,** *a.* இசை வாசிப்பான; இழுத்திசைக்கிற; தூங்கிசையான; ஒரே மெட்டில் இசைக்கிற. *n.* இழுத்த குரலுடன் படித்தல் அல்லது பேசுதல்.

**Singular,** *n.* (இலக்கணம், எண் ) ஒருமை. *a.* (இலக்கணம்) ஒருமை எண் சார்ந்த; தனிப்பட்டு; புதுமை

வாய்ந்த; விசித்திரமான; தனிச் சிறப்பு வாய்ந்த; வழக்கத்துக்கு மாறான. *n.* singularity. தனித் தன்மை.

**Sinister,** *a.* இடப்பக்கமான; தீய குறியான; கொடிய தோற்றமுள்ள; தீமையான - *s.a.* sinistral, இடப்பக்கம் சார்ந்த.

**Sink,** *v.* (sank, or sunk, sunk or sunken) படிப்படியாகக் கீழே செல்; அமிழ்; அமிழ்த்து; தாழச் செய். (கிணறு) தோண்டு. *n.* சாக்கடை; கழிநீர் பாயும் குழி. *a.* sinkable. (*comb.*) *n.* sinking-fund, கடன் தீர்க்க உதவும் நிதி. *n.* sinkhole, சாக்கடைக்குழி.

**Sinuous,** *a.* வளைந்து வளைந்து செல்கிற; நெளிவுகளுள்ள. *n.* sinuosity.

**Sinus,** *n.* உடற்பை; தசைப்பை; பள்ளம்; குழி.

**Sip.***v.* சிறிது சிறிதாக உறிஞ்சிப் பருகு; சுவை பார். *n.* சிறிது பருகுமளவு.

**Siphon,** *n.* கவான் குழாய்; காற்றமுத்த ஆற்றலால் நீர் ஏறி இறங்க அமைத்த குழாய். *n. abs.* siphonage.

**Sir,** *n.* (நன் மதிப்பு விளி) ஐய, ஐயா. அன்புடையீர்.

**Sire,** *n.* தந்தை; குடும்பத் தலைவன்; (விலங்கின்) தந்தை; (நன்மதிப்பு விளி) *a.*

**Siren,** *n.* அணங்கு; சூர்மகள்; மோகினி; வசியம் செய்து கெடுப் பவள்; எச்சரிக்கைக் குழலோசை; எச்சரிக்கைச் சங்கு. *a.* மயங்குகிற.

**Sirius,** *n.* ஒரு விண்மீன். அனல்மீன்.

**Sirloin,** *n.* மாட்டிறைச்சி; மாட்டின் துடையிறைச்சி.

**Sirrah,** *n.* (இழிவிளி) பயலே, ஏடா.

**Sirup,** *n. see* syrup.

**Sister,** *n.* உடன் பிறந்தாள்; உடன் தோழி; பெண் துறவி. *n.* sister-in-law. மைத்துனி. *n. abs. com.* sisterhood (பெண்மை) உடன் பிறப்பு; உடன் பிறப்புக் குழு.

**Sit,** *v.* (sat, பழவழக்கு. sate) உட்கார்; அமர்; தங்கு; அழுத்து; அடைகாத்தல் செய்; அவை கூடியிரு. *n. ag.* sitter, ஓவியத்துக்கு அமர்பவர். *pr. p. n.* sitting, தங்கல்; அமர்கை. கூட்ட அமர்வு; ஒரு தடவை கூடும் நேரம்; ஓவியத்துக்கு அமர்கை; அடைகாக்க அமர்கை.

**Site,** *n.* இடம்; மனையிடம்; புரையிடம்.

**Situate, situated,** *a.* இடங் கொண்டு; (குறிப்பிட்ட) இடத்தி லுள்ள; நிலையிலுள்ள.

**Situation,** *n.* நிலைமை; இருக்கு மிடம்; பணியிடம்.

**Six,** *a., n.* ஆறு. s. *a., n.* sixth, ஆறாவது ( ஆன ). ஆறிலொன்று ( ஆன ) *n. a. adv.* sixfold, ஆறு மடங்கு. *adv.* sixthly. ஆறாவதாக. (*comb.*) *n.* six penny. ஆறு செப்புக்காசு; அரை வெள்ளி; மிகச் சிறிது. *n.* six-shooter. அறுகுழல் துப்பாக்கி.

**Sixteen,** *a., n.* பதினாறு, *a., n.* sixteenth. பதினாறாவது (ஆன); பதினாறிலொன்று (ஆன).

**Sixty,** *a., n.* அறுபது. *a., n.* sixtieth. அறுபதாவது (ஆன); அறுபதிலொன்று (ஆன).

**Sizable,** *a.* பெரிய அளவான; பருமனான.

**Size,** 1. *a.* பிசின்; கஞ்சிப் பசை. *v.* பசைபோடு. 1. பருமன். *v.* அளவின் படி தரம் பிரி. 1. sizy. *see* sizable, (2) *phr.* size, up. அளவிடு; ஒருவரைப்பற்றி மதிப்பிடு.

**Skate,** *n.* (பனிமீது சறுக்கும்) சறுக்குக் கட்டை. *v.* சறுக்கிச் செல். *n. pers.* skater.

**Skein,** *n.* நூல்கண்டு; வாத்துகளின் கூட்டம்; குழப்பம்.

**Skeleton,** *n.* கங்காளம்; எலும்புக் கூடு; பயனற்று எஞ்சி நிற்கும் பகுதி; குறிப்புத் திட்டம்; ஒல்லியான ஆள். *a.* skeletal.

**Skeptih,** *n. see* sceptic.

**sketch,** *n.* படமாதிரி; உரு மாதிரி; மாதிரிச் சித்திரம்; கரு வரை; திட்டவரை; உருவிளக்கப் படம்; துண்டுத்துணுக்கு; இடையிடைப் பகுதிகள்; வடிவமைதி; மாதிரித் திட்டம் குறிப்புத் திட்டம்; விளக்க வுரை; சுருக்கவுரை. *v.* மாதிரி வரை;விட்டுவிட்டு வரை; மாதிரித் திட்டமிடு; வடிவமைதி குறி; விளக்கு; சுருக்கிக் கூறு; செய்தி சுருக்கு. *a.* sketchy விட்டு விட்டு வரைந்த; தெளிவற்ற; விவரமா யில்லாத. *n.* sketchi ness. (*comb.*) *n.* sketch-book. குறிப்புப் புத்தகம்.

**Skew,** *a.* ஒரு புறமாகச் சாய்ந்த; கோணவான.

**Skewer,** *n.* அகப்பைக்கோல்.

**Ski,** *n., v.* (*pl.* ski, skis) பனிக்கட்டிமீது செல்ல உதவும் நீண்ட மரச் சறுக்குக் கட்டை (மேல் செல்). *n. ag.* skier. *n. abs.* skieing.

**Skiff,** *n.* பளுக்குறைந்த ஓடம்.

**Skill,** *n.* திறமை; (பயிற்சியால் வரும்) தேர்ச்சி. *a.* skillful, skilled.

**Skim,** *v.* மேலாகத் தெளித்தெடு; மேற்பரப்பில் மிதந்து செல்; மேற்பரப்பில் வெட்டிச் செல்; வாரி எடு; (வெண்ணெய்) கடைந்து எடு. *n.* skimmilk, வெண்ணெய் எடுத்த பால். *n. ag.* skimmer. மத்து; கரண்டி.

**Skin,** *n.* தோல்; தொலி; பட்டை. *v.* தோல்போர்த்து; தோல் உரி. *a.* skinny, ஒல்லியான; மெலிந்த. *n. pers.* skinner, தோல் வாணிகன். *com. a.* skin deep, ஆழமற்ற. *n.* skinflint, கஞ்சன்.

**Skip,** *v.* தாவு; குதித்துச் செல்; பாய்ந்து செல்; சோரவிடு. *n.* துள்ளல்; தாவுதல்.

**Skipper,** *n.* கப்பல் தலைவன்; (விளையாட்டு) கட்சித் தலைவர்.

**Skirmish,** *n.* சண்டை; தூசிப் படைப் போர். *v.* சிறுசிறு கூட்டங் களாகப் போரிடு; அடிதடிச் சண்டையிலிறங்கு. *n. ag.* skirmisher.

**Skirt,** *n.* பாவாடை; ஆடையின் கீழ் விளிம்பு; வெளி விளிம்பு; (ஆகு பெயர் வழக்கு) பெண். *v.* ஓரமாக ஓடு; எல்லையிலிரு. *n.*

*(pl.)* skirts, outskirts. எல்லைப் பகுதி.

**Skit,** *n.* நகைச்சுவையுடன் கூடிய கட்டுரை அல்லது கருத்துரை.

**Skitter,** *v.* நீர் மட்டத்தைத் தடவிக் கொண்டு ஓடு; தூண்டிலை இழுத்துச் சென்று மீன் பிடி.

**Skittish,** *a.* கூச்சமுள்ள; மிரளுகிற; மயக்குகிற; விளையாட்டுத் தனமுள்ள.

**Skittles,** *n. (pl. )* பந்தினால் அடித்து விழச் செய்யும் மர முனைகள்.

**Skive,** *v.*, தேய்த்து மெல்லி தாக்கு; அராவு. *n. ag. impers.* skiver. அராவுளி.

**Skulk,** *v.*, பதுங்கு; கடமை செய்வதில் தவறு. *n. ag. pers.* skulker, skulk.

**Skull,** *n.* கபாலம்; மண்டை யோடு.

**Skunk,** *n.* கீரியின் உயிர் வகை; இழிஞன்.

**Sky,** *n.* வானம். *adv.* sky-ward(s), வானம் நோக்கி; மேல் நோக்கி. *a.* skyey, வானம் போன்ற.

**Sky lark,** *n.* வானம்பாடி. *v.* விளையாடு; வேடிக்கை செய். *n. ag.* skylarker.

**Skylight,** *n.* கூரைச்சாளரம்; மோட்டு ஒளிவாயில்.

**Sky line,** *n.* அடிவானத்தில் குன்று முதலியவற்றின் விளிம்பு.

**Sky-pilot,** *n.* (கொச்சை வழக்கு) குருக்கள்.

**Sky-rocket,** *n.* (வானில் வெடிக்கும்) வானம். *v.* விரைவில் உயர்ந்து செல்.

**Sky-scraper,** *n.* வான் அளாவு கட்டடம்; முகில் மாடம்.

**Slab,** *n.* பலகை; தகடு.

**Slack,** *a., adv.* உறுதியற்ற; தளர்ந்த; கவனமற்ற. *n.* தொய்யும் கயிற்றுப் பகுதி. *(pl.)* கால்சிராய். *v.* slacken. தொய்; தளர்ச்சி யடை; வேகம் குறை. *n. ag.* slacker சோம்பேறி. *n. abs.* slackness.

**Slag,** *n.* (சுரங்கத்தின்) உலோகக் கசடு; சாம்பல் கசடு.

**Slake,** *v.* (நெருப்பை) அவி; அணை; தணி; (சுண்ணாம்பு) நீற்று.

**Slam,** *v.* தடாரென மூடு.

**Slander,** *n.* பழி; அவதூறு. *v.* பழி கூறு; இழித்துச் சொல். *a.* slanderous.

**Slang,** *n.* கொச்சை மொழி. *v.* பழித்துரை. *a.* slangy.

**Slant,** *n.* சாய்வு; சரிவு. *v.* ஒரு புறமாகச் சாய்; சரிவாகு. *a.* சரிவான. *adv.* slantingly, slantwise.

**Slap,** *v.* அடி; கைதட்டு; அறை. *n* முகத்திலடித்தல்; அவமானம்.

**Slash,** *v.* நீட்டுப் போக்கில் வெட்டு; கத்தி முதலியவற்றால் வெட்டு; (கசையால்) அடி. *n.* நீண்டவெட்டு அல்லது பிளவு.

**Slate,** *n.* மாக்கல்; கற்பலகை. *v.* கற்பலகையால் கூரை வேய். *a.* slaty. *n. ag.* slater.

**Slattern,** *n.* ஒழுங்கற்றவள்; தூய்மையற்றவள். *a.* slatternly.

**Slaughter,** *n.* (>slay) கொலை வதை. *v.* கொலை செய்; வதை செய். *a.* slaughterous. (*comb.*) *n.* slaughter-house. கொல்லுமிடம்; இறைச்சி வெட்டுமிடம்; இறைச்சிக் கடை. *comb. n. see* man-slaughter.

**Slave,** *n.* அடிமை; தொழும்பன். *v.* அடிமையாக உழை. *n. ag.* slaver, அடிமை வணிகன்; அடிமை வணிகக் கப்பல். (*see* slaver) *n. abs.* slavery, அடிமைத் தனம். *a.* slavish, அடிமைக் குண முடைய. *n. abs.* slavishness.

**Slaver,** 1. *n.* உமிழ்நீர்; எச்சில் உமிழ். 2. *see* slave.

**Slay,** *v.* (slew, slain) கொலை செய். *n. see* slaughter.

**Sled, sledge, sleigh,** *n.* பனிக் கட்டிமீது வழுக்கிச் செல்லும் சறுக்கு வண்டி, 1. பனிக்கட்டிமீது செல்.

**Sledge,** 1. *n.* (sledge-hammer) சம்மட்டி. 2. *see* sled.

**Sleck,** *a.* மழமழப்பும் பளபளப்பு முள்ள. *s.* மழமழப்பாக்கு. *n. abs.* sleekness.

**Sleep,** *n.* தூக்கம்; உறக்கம்; ஓய்வு; சாவு. *v.* (slept) தூங்கு; உறங்கு; ஓய்வு கொள்; இற. *pred. adv.* asleep. *a.* sleepy. *a. (neg.)* sleepless. *n. abs.* sleepiness, தூக்கநிலை. *a. (neg.)* sleepless ness. *adv.* sleepily. *adv. (neg)* sleeplessly. (*comb.*) *n.* sleeping partner. முதல்மட்டுமிட்டுத் தொழிலில் கலக்காத பங்காளி. sleeping sickness தூக்கநோய். sleepwalking, இரவில் உணர் வற்று நடமாடும் மயக்க நோய்.

**Sleet,** *n.* ஆலங்கட்டி மழை; கல் மழை. *v.* ஆலங்கட்டி மழை பெய்.

**Sleeve,** *n.* சட்டைக் கை.

**Sleigh,** *n. see* sled.

**Sleight. Sleight. - of-hand,** *n.* சூது; மாற்று; கைத்திறம்; செப்படி வித்தை; கைச் சாலம்.

**Slender,** *a.* மெல்லிதான; போதாத; அருகலான. *n.* slenderness.

**Slept,** *v. see* sleep.

**Sleuth, sleuth-bound,** *n.* வேட்டைநாய்; ஒற்றன். *a.* மோப்பம் பிடித்துச்செல்; ஒற்றாடு.

**Slew,** *v. see* **slay.**

**Slice,** *n.* துண்டு; பூழி; சீவல்; கத்திவகை. *v.* நறுக்கு.

**Slick,** *a.* கைத்திறமையுள்ள; தனித்த. *adv.* சரி நுட்பமாக; நேராக; நிறைவாக.

**Slide,** *v.* (slid) வழுக்கிச்செல்; சறுக்கு; நழுவு. *n.* வழுக்கும் பாதை; சரிவு; சரிந்த மண், கல் முதலியன; படக்காட்சியில் ஓடும் சில். (*comb.*) *n.* slide-valve. (நீராவி இயந்திரத்திலுள்ள) நழுவு அடைப்பு. sliding-scale, விகித அளவு காட்டும் சுழல் சட்டம்.

**Slight,** *a.* நொய்ய; மிகச் சிறிய; நுண்ணிய. *n.* அவமதிப்பு; அசட்டை. *v.* அவமதி; புறக்கணி.

**Slim,** *a.* ஒல்லியான; தந்திரமுள்ள. *n. abs.* slimness. *a.* slimmish.

**Slime,** *n.* சக்தி; சேறு. *a.* slimy சேறான; கள்போன்ற.

**Sling,** *n.* கவண்; கவண்கயிறு; தொங்கல்முடிச்சு. *v.* கவண் கொண்டு எறி; எறி, தொங்க விடு.

**Slink,** *v.* (slunk) பதுங்கிச் செல்; தலைகுனிந்து செல்.

**Slip,** *v.* வழுக்கிச் செல்; சறுக்கி விழு; பிறர் அறியாமல் செல். கள்ளத்தனமாக நுழை; (தெரியாமல்) தவறு செய். *n.* வழுக்குதல்; தவறு; தாள் நறுக்கு; துண்டுத்தாள்; சிறுதுண்டு; சல்லி கீற்று; கள்ளி; கிளை; கப்பல் செப்பனிடும் சாய்வு தளம் *comb. n.* slip knot, சுருக்குமடி. *a. see* slippery.

**Slipper,** *n.* செருப்பு; மிதியடி; நடையன். *v.* செருப்பினால் அடி.

**Slippery,** *a.* (slip) வழுக்கலான; பிடிப்பில்லாத; நம்பத்தகாத.

**Slipshod,** *a.* (வேலையில்) கவனமில்லாத; ஒழுங்கற்ற.

**Slipslop,** *a.* ஒழுங்கற்ற *n.* சொற்களின் தவறான பயனீடு.

**Slit,** *v.* **(slit)** நீளப்போக்கில் கீறு; பிள. *n.* பிளவு; கீறல்.

**Slither,** *v.* (கொச்சை) ஆடியாடிச் சறுக்கிச் செல்.

**Sliver,** *n.* சிராய்; சிம்பு. *v.* பிள.

**Slobber,** *v.* சாளைவாய் பெருக விடு; வேலையில் தவறு செய். *n.* கோளை. *a.* slobbery.

**Slogan,** *n.* (அரசியல்) கட்சிப் போர்க்குரல்.

**Sloop,** *n.* ஒற்றைப் பாய்மரக் கப்பல்.

**Slop,** *v.* சிதறு; கொட்டு; *n.* (கொச்சை) காவலர். *n. (pl.)* கழுநீர்; கஞ்சி.

**Slope.** *n.* சாய்வு; சரிவு. *v.* சாய்வாகு; சரிவாக்கு. *adv.* slopingly.

**Sloppy,** *a.* சேறான, அழுக்கும் ஈரமுமான.

**Slosh,** *n. see* slush.

**Slot,** *n.* (மான் சென்ற) தடம்; அடிச்சுவட்டு வழி; சிறு துளை. *v.* துளையிடு.

**Sloth.** *n.* சோம்பல்; கரடி இன உயிர்வகை. *a.* slothful. *n. abs.* slothfulness.

**Slouch,** *n.* தலையைத் தொங்க விடல்; விளிம்பைக் கீழ் நோக்கிச் சாய்த்தல்; அருவருப்பான தோற்றம் அல்லது நடத்தை. *v.* தலைதொங்கவிடு; சாய். *a.* slouchy.

**Slough,** *n.* சதுப்பு நிலம்; சேறு; பாம்புச்சட்டை. *a.* sloughy.

**Sloven,** *n.* ஒழுங்கற்றவர்; தூய்மை யற்றவர். *a.* slovenly, ஒழுங்கற்ற; கவனமில்லாத. *n.* slovenliness.

**Slow,** *a.* தாமதமான; மந்தமான; காலத்தால் பிற்படுகிற. *v.* தாமதப் படுத்து; வேகத்தைக்குறை. *n.* slowness. (*comb.*) *n.* slow down strike, வேலையைத் தாமதமாகச் செய்யும் வேலை நிறுத்தம்.

**Slow-witted,** *a.* மந்தபுத்தி யுள்ள.

**Slubber,** *v.* கவனமின்றி வேலையைத் தவறாகச் செய்.

**Sludge,** *n.* சேறு; பனிச் சகதி; சாக்கடை நீர்.

**Slue, slew,** *n.* முறுக்குதல்.

**Slug,** *n.* கூடில்லாத நத்தை; சோம்பேறி; துப்பாக்கிக் குண்டு வகை.

**Sluggard,** *n.* சோம்பேறி.

**Sluggish,** *a.* மந்தமான; சோம்பலான. *n.* sluggishness.

**Sluice,** *n.* (நீர்) மதகு; மடை; கலிங்கல். *v.* மடை திறந்து வெள்ளம் பெருகச் செய்; மிகுந்த நீர் ஊற்றிக் கழுவு.

**Slum,** *n.* நகரின் கழிசடைப் பகுதி; சேரி.

**Slumber,** *n.* தூக்கம்; சிறு துயில். *v.* தூங்கு. *a.* slumb(e)rous. *n. ag.* slumberer.

**Slump,** *v.* திடீரென விலையிறங்கு; முழுதும் தோல்வியடை. *n.* விலையிறக்கம்.

**Slur,** *v.* தெளிவில்லாது எழுது அல்லது பேசு; அசட்டை செய்; கறைப்படுத்து; அவமானப் படுத்து.

**Slush,** *n.* சேறு; அரைகுறையாக உருகிய பனிக்கட்டி. *a.* slushy.

**Slut,** *n.* ஒழுங்கற்றவள்; தூய்மை யற்றவள். *a.* sluttish. *n. abs.* sluttishness.

**Sly,** *a.* தந்திரமான; சூதான; வஞ்சகமான. *n. abs.* slyness.

**Slyboots,** *n.* சூழ்ச்சிக்காரர்.

**Smack,** *n.* 1. சுவை; வாடை; நாற்றம். 2. அடி; சுடக்கு; கொட்டு; முத்தம். 3. மீன் பிடிக்கும் படகு. *v.* 1. சுவை படு; கமழ்; நாறு. 2. சுவை பார்; (இதழ்) அதுக்கு. 3. அடி; சுடக்கிடு; முத்தமிடு.

**Small,** *n.* சிறிய; வலிமையற்ற; அடக்கமான. *n.* smallness *(comb) n.* small-arms, சிறுதிறப் போர்க் கருவிகள். small beer, சிறுகுடி. small fry, சிறுதிற ஆள். சிறுதிறப் பொருள். small-hours, பின்னிரவுக்காலம்.

**Small cause,** *n.* சிறுதிற வழக்கு; சிறுவழக்கு. *comb. n.* small cause suit, சிறுதிற வழக்கு. small cause court, சிறுதிற வழக்கு மன்றம். small cause appeal, சிறுதிற மேல் வழக்கு.

**Small-pox,** *n.* அம்மைநோய்; பெரியம்மை; வைசூரி.

**Smart,** *v.* நோவினால் வருந்து; துன் புறு(த்து); தண்டனை பெறு. *a.* தீவிரமாக வலிக்கிற; சுறுசுறுப்பான; பேச்சில் விரைவுள்ள; அறிவுக் கூர்மையுள்ள; நன்கு ஆடையணிந்துள்ள; உடனடியான; தவறாத; (விலை, பொருள் முறி) உடன் மதிப்புடைய. *n.* நோவு; வருத்தம். *n. abs.* smartness.

**Smash,** *v.* நொறுக்கு; தகர்; தாக்கிச்சிதற அடி. *n.* மோதுதல்; முறிவு; உடைந்து நொறுங்குதல்.

**Smashup,** *n.* பெருந்தோல்வி; நிறைமுடிவு.

**Smatter, smattering,** *n.* அரைகுறை அறிவு; மேலேழுந்த வாறான அறிவு. *n. ag. pers.* smatterer.

**Smear,** *v.* பூசு; கறைப்படுத்து. *a.* smeary, பசைபோல் ஒட்டுகின்ற.

**Smell,** *n.* மணம்; மோப்பம். *v.* (smelt or smelled) முகர்; மணங் கமழ். *a. (neg.)* smelless. *a.* smelly, நாறுகிற.

**Smelt,** *v.* தாதுப் பொருள்களை உருக்கி உலோகத்தை எடு; வார்த்துருக்கு. *n. ag. impers.* smelter, உருக்குமிடம்.

**Smile,** *v.* புன்முறுவல் கொள்; புன்னகை செய்; மகிழ்ச்சி காட்டு; ஆதரவாயிரு; சற்று இகழ். *n.* புன் சிரிப்பு; மகிழ்ச்சி காட்டும் பார்வை (இகழ்ச்சியான) நகைப்பு. *adv.* smilingly.

**Smirch,** *v.* மேலேபூசு; அழுக்காக்கு.

**Smirk,** *v.* இளி. *n.* இளித்தல்.

**Smite,** *v.* (smote, smitten) பலமாக அடி; தாக்கு; வெட்டு; தோல்வியுறச் செய்.

**Smith,** *n.* உலோக வேலை செய்பவன்.

**Smithereens, smithers,** *n. (pl.)* சிறு துணுக்குகள்.

**Smithery, smithy,** *n.* கொல்லன் பட்டறை; கொல்லன் உலை.

**Smock,** *n.* மாதர் உள்ளாடை; குழந்தை மேலாடை. *n.* smock-frock, தொழிலாளியின் மேலாடை.

**Smoke,** *n.* புகை; ஆவி; புகை போன்றபொருள். *v.* புகை வெளி விடு; புகையூட்டு; புகையிலைச் சுருட்டு முதலியன பிடி. *n. ag.* smoker. *a.* smoky, புகை யடைந்த; புகைநிறமான. *n.* smokiness. (*comb.*) *n.* smoke-screen, (போர்த்துறை) புகைப் படலத்திரை.

**Smooth,** *a.* மழமழப்பான; மென்மையான; முகப் புகழ்ச்சி யான. *v.* smooth, smoothen, மழமழப்பாக்கு; சமப்படுத்து. *n.* smoothness. *adv.* smoothly. (*comb.*) *a.* smoothfaced, smooth - spoken, smooth - tongued, பசப்பான.

**Smote,** *v. see* **smite.**

**Smother,** *v.* மூச்சடைக்கச் செய்.

**Smoulder,** *v.* தீக்கொழுந்தின்றி எரி; கனிந்து எரி; உள்ளூர வேகு.

**Smudge, smutch,** *v.* அழுக்கைப் பூசு; துடைத்து அழி; கறைப் படுத்து. *n.* கறை; அழுக்குப்பூச்சு. *a.* smudgy.

**Smug,** *a., n.* குறுகிய நோக்கமும் தற்பெருமையும் உடைய(வர்).

**Smuggle,** *v.* சுங்கம் மீறிச் சரக்குக் கடத்து; சட்டமீறி வாணிகம்செய்; கள்ளத்தனமாகச் சரக்குக் கொண்டு செல். *n. ag.* smuggler. *n.* smuggling, கள்ள வாணிகம்; சட்ட மீறிய தகா வாணிகம்; சுங்க ஏய்ப்பு; சுங்க மீறிய திருட்டு ஏற்றுமதி இறக்குமதி.

**Smut,** *n.* அழுக்கு; கறை; பயிர் நோய். *v.* இழிந்த பேச்சுப் பேசு. *a.* smutty.

**Snaffle,** *n.* கடிவாளம்.

**Snag,** *n.* கட்டையான கிளை; வெட்டுத் தறி; உடைந்த பல்; தடை. *a.* snagged, snaggy தடைகள் நிறைந்த.

**Snail,** *n.* நத்தை.

**Snake,** *n.* பாம்பு; பாந்தன்; அரவு; பொல்லாதவன்; பகைவன். (*comb.*) *n. pers.* snake-charmer பாம்பாட்டி; (வெள்ளந் தடுக்கும்) வைக்கோற்புரி; snakes and horses. (அணி வழக்கு மரபு) வெள்ளந்தடுக்கும் வைக்கோற் புரிகளும், புரிமுட்டுகளும்.

**Snap,** *v.* ஒடி; முறி; சட்டென வாயினால் கௌவு; கோபித்துக் கூறு. *n.* ஒடிதல்; முறிதல்; சட்டெனக் கௌவுதல். *a.* snappish வெடு வெடுப்பான; உறுமுகிற. *n.* snappy, விட்டுவிட்டுச் செய்கிற; திடீர் எழுச்சியான.

**Snapshot,** *v.* சட்டென எடுக்கப் படும் புகைப்படம்; நொடிப்படம் (பிடிப்பு.) *n.* சட்டெனப் படம் பிடி.

**Snare,** *n.* வலை; கண்ணி. *v.* கண்ணியில்; சிக்கவை; இடரில் சிக்கவை. *v.* ensnare.

**Snarl,** *v.* உறுமு; சீறிவிழுந்து பேசு. *n.* உறுமுதல்; சீற்றம். *adv.* snarlingly. *a.* snarly. *n. ag.* snarler.

**Snatch,** *v.* சட்டெனக் கைப்பற்று; பறித்துச் செல். *n.* கைப்பற்றல்; இடையிடையே வேலையில் காட்டும் சுறுசுறுப்பு. சிறு துண்டு. *a.* snatchy, இடையிடைவிட்டு; தொடர்பற்ற.

**Sneak,** *v.* பதுங்கிச் செல்; கள்ளத்தனமாக நட. *n.* கோழை; ஒளித்து நடப்பவன். *adv.* sneakingly.

**Sneakers,** *n. (pl.)* சந்தடி செய்யாத மிதியடி.

**Sneer,** *v.* இகழ்ச்சி செய்; எள்ளி நகையாடு; அலைக்கழி. *n.* இகழ்ச்சி; ஏளனம்; நையாண்டி. *adv.* sneerlingly.

**Sneeze,** *v.* தும்மு. *n.* தும்மல்.

**Sniff,** *v.* உறிஞ்சு; மோப்பம் பிடி. (*see* snuff. )

**Snip,** *v.* கத்தரி; நறுக்கு. *n.* கத்தரித்தல்; நறுக்கிய துண்டு. *n.* snipping.

**Snipe,** *n.* நீண்ட அலகுள்ள ஒரு சதுப்பு நிலப் பறவை. *v.* வேட்டையாடு; மறைந்து சுடு. *n. ag.* sniper.

**Snippet,** *n.* நறுக்கிய சிறு துண்டு. *(pl.)* பல்பொருள் துண்டுத் தொகுப்பு. *n.* snippety.

**Snivel,** *v.* சிணுங்கி. *ag. n.* சளி பெருகுதல்; சிணுங்கி யழுதல்; பொய்ப் பேச்சு; நசுநாறித்தனம்.

**Snob,** *n.* பிலுக்கன்; பகடி; சாதிச் செருக்கன்; பட்டணத்தின் பட்டிக் காட்டான்; புறத்தோற்றப் பசப்பன். *a.* snobbish, வெளித்தோற்றம் மதிக்கிற. *n.* snobbishness, snobbery.

**Snooze,** *v.* சிறுதுயில் கொள்; (பகலில்) சற்று உறங்கு *a.* சிறு துயில்.

**Snore,** *n. v.* குறட்டை (யிடு).

**Snort,** *v.* மூச்செறி. *n.* வன்மூச்சு. *n. ag.* snorter.

**Snout,** *n.* மூஞ்சி; அலகு; முகறை.

**Snow,** *n.* பனி; பனிமழை. *v.* பனிபெய். *a.* snowy, பனியுள்ள; பனிபோன்ற; வெண்மையான. *n.* snowiness. (*comb.*) *n.* snowline, மலைமீது உருகாத பனி எல்லைக்கோடு.

**Snub,** *v.* தடு; பேச்சில் மடக்கு; அடக்கு; இழிவுபடுத்து. *n.* மடக்குதல்; தடுத்தல்; இழிவு படுத்தல். *n.* snubbing.

**Snub-nose,** *n.* சப்பை மூக்கு.

**Snuff, sniff,** *a. v.* மூக்கினால் உறிஞ்சு; மோப்பம் பிடி; மூக்கினால் உறிஞ்சி இகழ்ச்சியைத் தெரிவி. *n.* (புகையிலைப்) பொடி; மூக்குத் தூள். 2. *v.* விளக்கின் கரிந்த திரியைக் கத்தரித்து நீக்கு. (1) *a.* snuffy. (2) *n. impers. (pl.)* snuffers, கரிந்த திரியை வெட்டும் கத்தரி.

**Snuffle,** *v.* வலுவாக மூச்சை இழு; மூக்கினால் பேசு.

**Snug,** *a.* இன்ப வாய்ப்பான; சொகுசான; வெதுவெதுப்பான; பாதுகாப்பான; சிற்றடக்கமான. *adv.* snugly. *n. abs.* snugness.

**Snuggle,** *v.* நெருங்கித் தழுவு.

**So.** *adv., conj., int., pron.* இவ்வாறு அதுபோலவே; ஆகையால்; மிகவும்; அப்படி.

**Soak,** *v.* ஊற வை; நனை. *n.* soaking. *n. ag.* soaker, பெருங்குடியர்; நனைக்கும் மழை.

**Soap,** *n., v.* சவுக்காரம்; சவர்க்காரம் *a.* soapy, வழுவழுப்பான. *n. impers. (pl.)* soapsuds, சவுக்கார நுரை. *n.* soapiness. (*comb.* ) *n.* soap-stone, மாக்கல்.

**Soar,** *v.* (பறவை போல்) விண்ணகம் தாவிப் பற; விண்ணில் பறந்து உலவு; இறக்கைகளை அடிக்காமல் பற; மிக உயர் அவாக் கொள், உயர் கருத்துக்களிடையே உலாவு. *adv.* soaringly.

**Sob,** *v.* விம்மியழு. *n.* விம்முதல் *adv.* sobbingly.

**Sober,** *a.* குடி வெறியில்லாத; அமைதியான; அடக்கமான; மங்கலான நிறமுடைய. *v* அமைதியாக்கு; உணர்ச்சிகளை அடக்கு. *n.* sobriety.

**Sobriquet, soubriquet,** *n.* புனைபெயர்; மாற்றுப் பெயர்.

**So-called,** *a.* தவறாக (இப் பெயர்) குறிக்கப்பட்டு; பெயரளவான.

**Soccer,** *n. see* socker.

**Sociable,** *a.* பழகுந் தன்மையுள்ள; பழகுவதற்கு ஏற்ற; இனிது அளவளாவுகிற; அன்புப் பாசமுடைய. *n.* sociability. *adv.* sociably.

**Social,** *a.* **(society)** சமூகச் சார்பான; வாழ்குழுச் சார்பான; மன்பதைச் சார்பான; சமூகத்தினுடைய பொது நலஞ்சார்ந்த; அளவளாவுகிற; தோழமை சார்ந்த; அன்புப் பாசமுள்ள; கூடி வாழ்கிற; கூட்டுறவுடைய; பண்பாளர் குழுச்சார்ந்த; பண்புடைய; சமூகத்தில் வாழ்கிற ஒத்துணர்

வுடைய; கிளர்ச்சி கரமான. *n.* அளவளாவற் கூட்டம். *n.* sociality.

**Socialism,** *n.* **(social, society)** பொதுவுடைமை; பொது அறம்; சமூகப் பொதுவுடைமைக் கொள்கை. (*correl. see* communism) *a.*, *n. pers.* socialist. *a.* socialistic. *v.* socialize, -se, சமூகப் பொது வுடைமையாக்கு

**Society,** *n.* சமூகம்; மன்பதை; மன் மக்கள் குழு; வாழ்குழு; இனக் குழு; வாழ்வினம்; வாழ்க்கைக் குழு; கூடிவாழ்வோர்; கழகம்; சங்கம்; (உயர்) வகுப்பினர். *a. see* sociable, social. *n. conn. see* socialism, sociology. *comb. n.* co-operative society, கூட்டுறவுச் சங்கம். fredit society, கடன் உதவிச் சங்கம்; கடன் சங்கம் Insurance society, காப்புறுதிச் சங்கம். Assurance society, ஈட்டுறுதிச் சங்கம்.

**Sociology,** *n.* சமூகவாழ்க்கை நூல்.

**Sock,** *n.* காலுறை.

**Socker, soccer,** *n.* காலினால் ஆடும் பந்து விளையாட்டு வகை.

**Socket,** *n.* குடைகுழி; குதை; குழிப்பொருத்து. *comb. n.* ball and socket உரல் குழவிப் பொருத்து; குதை குழிப்பொருத்து.

**Sod,1.** *v.* (*see* seethe) 2. *n.* புல் தரை; புல்லுடன் சேர்ந்த மண்; கரண்; மண் கட்டி.

**Soda,** *n.* உவர்க்காரம். *n.* soda water, (உவர்க்) கார நீர். soda ash உவர்க்காரக் கரியகி.

**Sodden,** *a.* ஈரமான; மூடத்தன மான; குடிப் பழக்கமுள்ள. *v* நனைந்து ஈரமாகு; ஈரமாக்கு. *n.* soddeness. *a.* (*see* seethe.)

**Sodium,** *n.* உவர்மம்; உலோகவகை.

**Sodomy,** *n.* ஒருபால்பட்ட புணர்ச்சி; போலிப் புணர்ச்சி முறை. *n. pers.* sodomite.

**Sofa,** *n.* மஞ்சம்; சாய்வு கட்டில்; அகல் சாய்விருக்கை.

**Soft,** *a.* மென்மையான; உரமில்லாத; முட்டாள்தனமான. *int.* மெல்ல! பொறு!! *n.* softness. *adv.* softly. *v.* soften.

*soi-disant*, *a.* தானே கூறிக் கொள்கிற; வெளிப் பகட்டான.

**Soil.** *n.* நிலம்; மண். *v.* அழுக்கு முதலியன பூசு; தூசி முதலிய வற்றால் அழுக்கடை; தூய்மை கெடு. *n.* அழுக்கு; கறை.

**Sojourn,** *v.*, *n.* தற்காலிகமாகத் தங்கியிரு(த்தல்). *n. ag. pers.* sojourner.

**Sol,** *n.* ஞாயிறு. *a. see* solar.

**Solace,** *v.* தேறுதல் கூறு; நோவு தணியச் செய். *n.* ஆறுதல்; நோவு முதலியன தணியச் செய்தல்.

**Solar,** *a.* (>sol) ஞாயிற்றுக்குரிய. *n.* solar system, ஞாயிறும். அதைச் சுற்றி வரும் கோள்களும்.

**Solar plexus,** *n.* நாபி வலை; ஒரு நரம்பு முடி.

**Sold,** *v. see* **sell.**

**Solder,** *n.* (உலோகங்களை ஒட்ட வைக்கும்) பற்றாசு. *v.* பற்றாசு வைத்துச் சேர்; ஒட்டவை.

**Soldier,** *n.* படை வீரன்; போர்வீரன்; போர் மறவன்; செருநன்; பொருநன். *a.* soldierlike, soldierly, வீரனுக்குரிய; வீரனைப் போன்ற; வீரமான. *phr.* soldier of fortune, நாடோடிப் பார்வீரன். *n. abs.* soldiery.

**Sole,** 1. *n.* உள்ளங்கால்; செருப்பு அடிப்பகுதி. *v.* செருப்பு அடித்தோல் பொருத்து. 2. *a.* தனியான; ஒன்று மட்டிலுமான. (2) *adv.* solely.

**Solecism,** *n.* (இலக்கணம்; பேச்சு, எழுத்து) வழு; (நடத்தையின்) தவறு.

**Solemn,** *a.* வீறார்ந்த; பெருமித மான; ஆர்ந்தமைந்த; உள்ளார்ந்த; முழுப்பற்று நிறை வுடைய; முறை யாயமைந்த. *adv.* solemnly. *n.* solemnity சடங்கு; விழா; முக்கியத்துவம்; முழுப் பற்றுணர்ச்சி. *v.* solemnize, -se, (விழா) கொண் டாடு; (சடங்கு முதலியன) முறை யாக நடத்து; முக்கியத்துவம் கொடு. *n.* solemnization, -sation.

**Solicit,** *v.* கெஞ்சு; வேண்டு; (உதவி) கோரு; மன்றாடு; விரும்பிக் கேள்; வாடிக்கை நாடு. *n. pers.* solicitor, வழக்குரைஞர்; பரிந்து பேசுபவர். *n. abs.* solicitation. *a.* solicitous. s. *n. see* solicitude.

**Solicitude,** *n.* (solicit) ஆவல்; பரிவு; கவலை; அக்கறை.

**Solid,** *a.* கெட்டியான; திண்மை யான; உறுதியான; திடமான. *n.* திடப்பொருள். *adv.* solid. *n. abs.* solidity. திண்மை; கெட்டிமை. solidarity, திட்பம்; ஒற்றுமை. *v.* solidify.

**Soliloquy.** *n.* தனக்குத் தானே பேசுதல்; தனி மொழி; தற்கிளவி. *v.* soliloquize, -se, *n. pers.* soliloquist.

**Solitary,** *a.* தனியாக வாழ்கிற; தனித்த. *n.* துறவி. *n. abs.* solitariness.

**Solitude,** *n.* தனிமை; தனி வாழ்க்கை; மனித வாழ்க்கையற்ற இடம்.

**Solo,** *n.* (*pl.* solos, soli) தனியாகப் பாடுதல்; தனிக் கச்சேரி. *n. pers.* soloist, தனியாகப் பாடுபவர்.

**Solstice,** *n.* ஞாயிற்றியக்கக் கோடி; (கதிரவன் நெறி தென், வட) எல்லைசெல்லும் இருநாட்களுள் ஒன்று (சங்கராந்தி) *a.* solstitial.

**Soluble,** *a.* கரைக்கக் கூடிய; விளக்கக் கூடிய; (கணக்கியல்) விடை காணக்கூடிய. *n. abs.* solubility.

**Solus,** *a.* தனியான; பின் பாட்டில்லாத.

**Solute,** *n.* கரை பொருள்.

**Solution,** *n.* கரைசல்; விளக்கம்; விடை காணல்.

**Solve,** *v.* கரை; சிக்கறு; விடுவி; விளக்கு; விடை கண்டுபிடி. *a.*

solvable. *n. abs.* solvability. (*conn. see* soluble, solute, solvent.)

**Solvent,** *a.* கரைக்கும் தன்மை யுள்ள; கடன்களைக் கொடுக்கப் போதுமானபணமுள்ள,செயலுள்ள, பெறுமானமுள்ள. *n.* கரைக்கும் தன்மையுள்ள நீர்மம்; கரைநீர்; கடன் பொறுப்புடையவர்; பெறு மானமுடையார்; பெறும் புள்ளி. (x insolvent) *n. abs.* solvency.

**Sombre,** *a.* மங்கலான; எழுச்சி யற்ற. *n. abs.* sombreness. *adv.* sombrely. *a.* sombrous.

**Some,** *a., pron., adv.* சில; சிலர்; சிறிதளவு; ஏதோ ஒரு; யாரோ ஒருவர்; ஏறக்குறைய.

**Somebody,** *n.* யாரோ ஒருவர்; முக்கியமானவர்.

**Somehow,** *adv.* ஏதோ ஒரு வழியில்; எப்படியாவது.

**Someone,** *pron.* யாரோ ஒருவர். *n.* முக்கியமான ஒருவர்.

**Somersault, somerset,** *n.* குட்டிக்கரணம்.

**Something,** *n.* ஏதோ ஒன்று; சிறிதளவு.

**Sometime,** *adv.* ஏதோ ஒரு வேளையில்.

**Sometimes,** *adv.* சிற்சில வேளைகளில்.

**Somewhat,** *adv., n.* சிறிதளவில் சிறிதளவு.

**Somewhere,** *adv.* எங்கேனும்.

**Somnambulism,** *n.* தூக்கத்தில் நடத்தல். *n. pers.* somnambulist.

**Somnolent,** *a.* தூக்க மயக்கமுள்ள; தூங்கச்செய்கிற. *n. abs.* somnolence, somnolency.

**Son,** *n.* மகன்; பிள்ளை. *n.* sonship. *n. dimi. see* sonny. *comb. n.* son-in-law. மருமகன்; மகளின் கணவன்.

**Sonant, sonate,** *a., n.* குரலினால் ஒலிக்கக்கூடிய (எழுத்து); உயிர்ப்பு ஒலி சார்ந்த (எழுத்து); கரையுயிர்; உயிர். (*correl.* consonant) *n. abs.* sonancy.

**Song,** *n.* பாடல்; (மரபு வழக்கு) சிறு விலை (for a song).

**Songster,** *n.* **(***fem.* **songstress)** பாடகன்; பாடும் பறவை; கவி.

**Sonnet,** *n.* 14 அடிகளுடன் கூடிய செய்யுள் வகை; பரிபாடல்வகை. *n. ag. pers.* sonneteer.

**Sonny,** *n.* (son) சிறு மகன்; பாலன்; பாலகன்; பையன்.

**Sonorous,** *a.* உரத்து ஒலிக்கிற; முழக்கமான. *n.* sonorousness. sonority.

**Soon,** *adv.* விரைவில்; உடனே. *phr.* rel. *adv.* as soon as, no sooner than, உடனடியாகத் தானே.

**Soot,** *n.* (சூட்) புகை; புகைக்கரி. *a.* sooty. புகைக்கரி படிந்த; புகை யுண்டாக்குகிற. *n.* sootiness.

**Sooth,** *n.* உண்மை. (*comb.*) *n.* sooth-sayer, குறிகாரர்.

**Soothe,** *v.* நோவை ஆற்று; தணியச்செய். *a.* soothing. *adv.* soothingly.

**Sop,** *n.* மோர்; ஊறவைத்த உணவு. *a.* soppy.

**Sophism,** *n.* கிரேக்க மெய் விளக்கக் காட்சி; போலிவாதம்; போலி அறிவு. *n. pers.* sophist. *a.* sophistic, sophistical. *v.* sophisticate, கெடு; போலிப் பசப்பூட்டு; கலப்படமாக்கு; தூய்மை கெடு.

**Sophistry,** *n.* போலி வாதம்; போலி எண்பிப்பு; குதர்க்கம்; பசப்புரை.

**Soporific,** *a., n.* தூங்கச்செய்கிற (மருந்து). *a.* soporiferous.

**Soprano,** *n. pl.* (sopranos, soprani) (ஆண், பெண், இளைஞர் உச்சநிலைக் குரல்; உச்சக் குரலிசைஞர் குழு. *n. pers.* sopanist.

**Sorcerer,** *n. (fem.* sorceress) சூனியக்காரன். *n. abs.* sorcery. சூனியம்; வினை வைப்பு.

**Sordid,** *a.* இழிந்த; மோசமான; கஞ்சத்தனமான. *n.* sordidness.

**Sore,** *a.* புண்பட்டு; வேதனை செய்கிற. *adv.* வேதனை தரும் படியாக; தீவிரமாக. soreness. *adv.* sorely.

**Sorrel,** *n.* சிவலைக் குதிரை வகை; புளிங்கீரை வகை.

**Sorrow,** *n.* துயரப்படு; இழவினால் வருந்து. *a.* sorrowful. *n.* sorrowfulness.

**Sorry,** *a.* வருந்துகிற; இரங்குகிற; சிறு திறமான. *n.* sorriness.

**Sort,** *n.* வகை; இனம். *v.* வகைப்படுத்து; இனம் இனமாகப் பிரி; ஓரினத்தைப் பொறுக்கியெடு. *n. ag. pers. impers.* sorter. *a.* sortable.

**Sortie,** *n.* (முற்றுகையிடப்பட் டோர்களின்) திடீர்த் தாக்குதல்.

**Sortilege,** *n.* திருவுளச் சீட்டு.

**So-so,** *adv., a.* மிக மட்டான; மட்டமான; சிறந்ததா யில்லாமல்.

**Sot,** *n.* குடிகாரர்; அறிவிலி. *a.* sottish. *n.* sottishness. *sotto voce. adv.* தணிந்த குரலில்.

**Soubriquet,** *n. see* **sobriquet.**

**Sought,** *v.* (*see* seek.)

**Soul,** *n.* உயிர்நிலை; உள்ளுயிர்; ஆன் மா; உயிர்; அரும் பொருள்; உளஞுறை; உயிர்மை; உயிரினம். *a. (neg.)* soulless, உயிரற்ற; இரக்கமற்ற. *a.* soulful நல்லுணர்ச்சிமிக்க. (*comb.*) *a.* high - souled, உயர் பண்புடைய; உள்ள உயர்வுடைய.

**Sound,** 1. *a.* உடையாத; ஊறு படாத; குற்றமற்ற; தவறில்லாத; நிறைவான; உடல் நலம் அல்லது மனநலம் வாய்ந்த; முழுமையான; நிறைந்த; (அடி, உதை, திட்டுதல்) வலங்கொண்ட; முதல்தரமான; (உறக்கம்) ஆழ்ந்த. 2. *n.* ஒலி; ஓசை. *v.* ஒலி செய்; செவிப் புலனாகு. 3. *v.* தேர்ந்தறி; உளவு காண்; ஆழம்பார்; கருத்தை அறிய முயற்சி செய்; குத்தித் தேர்ந்தறி. 4. *n.* கடற்குழி; கடலிடுக்கு. (1) *n.* soundness. (2) *a. neg.* soundless. *comb. n.* sound box, ஒலிப்பெட்டி.

**Soup,** *n.* (உணவுடன் சேர்த்து உட்கொள்ளும்) குழம்பு; சாறுணா; சாறு; சூப்பி.

**Sour,** *a.* புளிப்பான; கனியாத; வெடுவெடுப்பான. *v.* புளிப்பாகு; புளித்துப் போ; இனிய குணத்தை இழ. *n. abs.* sourness.

**Source,** *n.* ஊற்று; தலைவாய் மூலமுதல்; தோற்றுவாய்; பிறப் பிடம்.

**Souse,** *n.* உப்பிட்ட ஊறுகாய்; உணவு. *v.* ஊறவை; நனை; நீரில் நன்கு அமிழ்த்து. *adv.* கீழ் நோக்கிப் பாய்ந்து.

**South,** *n.* தெற்கு. *a.* தெற்கு நோக்கி யுள்ள; தெற்கிலுள்ள. *adv.* தெற்கு நோக்கிச் செல். *a.* southern, *(sup. deg.)* southmost, southernmost, தென் கோடியான. *n.pers.* southerner, தென் நாட்டவர். *a. adv.* southernly. தெற்கு நோக்கிய; தெற்கிலிருந்து வீசுகிற. *a.* southward, தெற்கு நோக்கிய *adv.* southward, southwards (*comb.*) *n.* south east, தென் கிழக்கு. *a.* south-easterly; தென் கிழக்கிலிருந்து வீசுகிற; தென் கிழக்கு நோக்கிய.

**Souvenir,** *n.* நினைவு மலர்.

**Sovereign,** *a.* தலைமையுரிமை யுடைய; தலைமையான; முழு முதற் சார்புடைய; அரசருக்குரிய. *n.* அரசன்; முடி மன்னன்; இங்கிலாந்தில் வழங்கும் பொன் (காசு.) *n.* sovereignty, தலைமை யுரிமை; தனியாட்சி; தனியாணை; பேரரசாட்சி.

**Soviet,** *n.* ருசிய ஆட்பேரவை; மாமன்றம்.

**Sow, 1.** *n.* பெண் பன்றி; (*correl.* boar) 2. நீண்ட இரும்புக் கட்டி; உலோகப் பாளம். 3. *v.* (sowed, sown or sowed) விதை தூவு; விதை ஊன்று; பரவச்செய். (3) *n. ag.* sower.

**S.P.C.A.** *a., n.* (சுருக்கம்; Society for the Prevention of Cruelty to Animals) உயிர்க்கொடுமைத் தடுப்புக் கழகம். (உ. கொ. த. க.)

**Spa,** *n.* மருந்து நீருற்று; மருந்து நீருற்றுள்ள இடம்.

**Space,** *n.* இடம், பரந்தவெளி; தொலை; நேரம். *v.* இடைவெளி அமை; இடம் வீடு. *n. ag. impers.* spacer, இடமடைப்புக் காய். *a.* spacious அகலமான; இடமகன்ற. *n.* spaciousness. *a.* see. spatial.

**Spade,** *n.* மண்வெட்டி வகை; மண்கொத்தி; (நான்கு இனத்தில்) ஓரின விளையாட்டுச் சீட்டு. *v.* மண்வெட்டியால் வெட்டு. *a.* spadeful.

**Spoke,** *v.* see. speak.

**Span, 1.** *n.* சரண் ( 9 அங்குலம்); பால வளைவு; ஒரே இடம்; அகலம்; இடை நேரம்; பால அகலம். *v.* (சாணிட்டு) அள; இடை தூரத்தை (பாலம் முதலியவற்றால்) இணை; தரவு; தழுவி இணை. 2. *v.p.t.* of spin, *a. (neg.) see* spanless.

**Spangle,** *n.* மின்னும் சிறு தகடு.*v.* மின் தகடு வேய்.

**Spanless,** *a.* (span) அளவிடற் குரிய.

**Spanner,** *n.* திருகுமுடுக்கி; முடுக்கும் கருவி; குறுக்குச் சட்டம்.

**Spar,** 1. *n.* மரச்சட்டம். 2. படிகக் கல் வகை.

**Spare,** *a.* மெலிந்த; நலிந்த; சிறிதள வான; அருகலான; அருந் தலான; சிக்கனமான; செட்டான; (கருவி கள், உறுப்புகள் முதலியன) இணைப்புவிட்டுத் துனித்துள்ள; உதிரியான; தனியான; பயன் படுத்தப் பெறாமல் எஞ்சியிருக் கிற; மிகுதிப்படியான; பிற்காலத் தேவைக்குரிய; சேம இருப்பான. *v.* சிக்கனமாகக் கையாளு; செட்டாக வழங்கு; துற; விட்டு விடு; மனமார விட்டுக்கொடு; வழங்காதிரு; விலக்கிவாழ்; இல்லாமற் கழி; கொல்லாமல்விடு; பிழைத்துப்போகச் செய்; அழி யாமல் பேணு; காப்பாற்று; (தீங்கு; ஊறு, துன்பம்) வராமல் கா; இல்லாமல் செய்; விலகியிரு; தவிர்; பரிவுகாட்டு; மன்னி; சிறிது கொடு; கொடுத்தருள்; தாங்கு; இயலு. *a.* sparing, சுருங்கிய; குறைவான; கஞ்சத்தனமான. *adv.* sparingly, *idiom.* spare no pains, குறைவற முழுமுயற்சி செய். enough and to spare, போதியதற்கு மேல்; ஏராளம். have nothing to spare, கொடுக்க (மீந்தது) எதுவும் இல்லை. spare parts, உதிரி உறுப்புகள். spare copies, மிகுதிப்படியான படிகள்.

**Spark,** *n.* தீப்பொறி; (அறிவுச்) சுடர்; இளைஞன். *v.* பொறி உண்டாக்கு.

**Sparkle,** *v.* மின்னு; பளிச்சென ஒளிவிடு. *n.* மின்னுதல்; ஒளிர்தல். *n. ag.* sparkler.

**Sparrow,** *n.* குருவி வகை.

**Sparse,** *a.* சிதறியுள்ள; அரிதா யுள்ள. *n. abs.* sparseness.

**Spasm,** *n.* வலிப்பு நோய், துடிப்பு; அதிர்வு. *a.* spasmodic, spastic.

**Spat,** *v. see* spit.

**Spate,** *n.* வெள்ளம்; திடீர்ப் பாய்ச்சல்.

**Spathe,** *n.* (மலர்க்கொத்தை மூடியிருக்கும்) மடல்; பாளை.

**Spatial,** *a. see* space. இடத்திற்குரிய.

**Spatter,** *v.* (துளி) சிதறு; வாரித் தெளி.

**Spawn,** *n.* (மீன் , தவளை முதலிய நீர் வாழ்வனவற்றின்) முட்டைகள். *v.* முட்டையிடு.

**Spay,** *v.* கரு அழி.

**Speak,** *v.* (spoke or spake, spoken) பேசு; தெரிவி; சொற் பொழிவு நிகழ்த்து. *n. see* speech, *n. ag. pers, impers.* speaker, அரசியல் மன்றத் தலைவர்; ஒலிபெருக்கி. *n. abs.* speakership மன்றத் தலைமை. *conn. n. pers. see* spokesman.

**Spear,** *n.* ஈட்டி. *v.* (ஈட்டியால்) எறி; குத்து. (*comb.*) *n. pers.* spearman. *n.* spearhead, ஈட்டி முனை; தாக்குதலின் முன்னணி.

**Special,** *a.* தனிப்பட்டு; (தனிச்) சிறப்பான; ஒன்றிற்கே உரிய. *adv.* specially. *n. pers.*

specialistic. *n. abs.* speciality, specialty தனித்தன்மை; தனிச் சிறப்பு; சிறப்புக்கூறு. *v.* specialize, -se. திறமை பெறு; தனிப்பயிற்சியடை. *n. abs.* specialization, -sation. *comb. n.* special allowance, தனிப்படி. special duty, தனிப் பணி. special provision. தனி (முன்) ஏற்பாடு. special staff, சிறப்புப் பணியாளர் (குழு). special test. சிறப்பாய்வு; தனித் தேர்வுமுறை.

**Species,** *n.* இனம்; வகுப்பு வகை.

**Specific,** *a.* ஓர் இனத்துக்குரிய; தெளிவாகக் குறிப்பிட்டுள்ள; திட்டமான. *n.* குறிப்பிட்ட ஒரு நோயின் மருந்து. *adv.* specifically. *n.* specification. தனிக் குறிப்பீடு; சிறப்புக் குறியீடு; தனியறிவுறுத்து. (*comb.*) *n.* (இயங்கியல்) specific gravity. (நீரகத்துடன் ஒப்பிட்ட) பளு வீதம்.

**Specify,** *v.* தெளிவாகக் குறிப்பிடு; விவரங்களைக் குறிப்பிடு. *a.* specifiable. *n. see* specification.

**Specimen,** *n.* மாதிரிச்சான்று; முன் முகம்; மாதிரிப் பொருள்; எடுத்துக் காட்டு. *comb. n.* specimen signature. மாதிரிக் கையொப்பம்; மாதிரிக்கையெழுத்து.

**Specious,** *a.* நல்ல தோற்ற முடைய; வெளித்தோற்றத்தில் சரியாயுள்ள; போலிப் பகட்டான; புறப் போலியான. *n.* specious ness, speciosity.

**Speck,** *n.* சிறு துகள்; புள்ளி; மாசு. *v.* புள்ளியிடு.

**Speckle,** *n.* துகள். *v.* புள்ளிகளிடு. *a.* speckled.

**Specs,** *n. see* spectacles.

**Spectacle,** *n.* காட்சி; பார்க்கத் தகுந்த பொருள். *n. (pl.)* மூக்குக் கண்ணாடி. (சுருக்கம்; பேச்சு வழக்கு; specs. *a.* spectacular, காட்சிக்குரிய; காட்சிச் சிறப் புடைய; அருங் காட்சியாயுள்ள.

**Spectator,** *n.* காண்பவர்; காட்சியாளர்.

**Spectral,** *a.* 1. (> spectre) ஆவி உருவான. 2. (>spectrum) (இயங்கியல்) ஒளிக்கதிர் வண்ணப் படம் சார்ந்த.

**Spectre,** *n.* பேய் உரு. *a.* (*see* spectral (1).)

**Spectroscope,** *n.* ஒளிக்கதிர் வண்ணப்பட்டை (ஆராய்ச்சிக் கருவி). *a.* spectroscopic. *n. abs.* spectroscopy, வண்ணப் பட்டை ஆராய்ச்சித் துறை.

**Spectrum,** *n.* (முப்பட்டைக் கண்ணாடியால் வெண்மை யொளி பிரிக்கப்பட்டுக் கிடைக்கும்) ஒளிக்கதிர் வண்ணப்பட்டை; வான வில்லில் தோன்றும் ஏழு வண்ணங்கள்.

**Speculate,** *v.* (ஒன்றைக் குறித்து) ஆழ்ந்தாராய்; வாய்ப்பாராய்; ஆதாய நட்டமாராய்; எண்ணு; நீளநினை; (வாணிகப் பங்குக் களத்துறைகளில்) வாங்கி விற்று ஆதாயம் பெறுந் துணிகரத் திட்டமிடு; வாணிகச் சூதாடு. *a.*

speculative. *n. pers.* speculator. *n. abs.* speculation, 1. (வாணிக, பங்குக் களச்) சூதாட்டம். 2. ஆழ்ந்த ஆராய்ச்சி; கோட்பாட் டாராய்ச்சி; நீணினைவு; எண்ணக் கோட்டை.

**Speech,** *n.* (>speak) பேச்சு; பேசும் திறன்; சொற் பொழிவு. *a. neg.* speechless, மௌனமான; பேச்சற்ற.

**Speed,** *v.* (sped) விரைந்து செல். *n.* வேகம்; விரைவு. *a.* speedy. *n.* speediness. *adv.* speedily.

**Spell,** 1. *n.* மயக்குதல்; கவர்ச்சி; மாயம். 2. சிறிது நேரம். 3. *v.* (spelled or spelt) எழுத்துக் கூட்டு; எழுத்துக் கூட்டிப்படி. ஆகு; விளை வாகு; பயனாய் அளி. (1) *a. adv.* Spell-bound, மாயக் கவர்ச்சியால் கட்டுண்ட (நிலையில்). (3) *n.* spelling, எழுத்துக் கூட்டல்; (சொல்லின்) எழுத்து முறை.

**Spelter,** *n.* துத்தநாகம்.

**Spencer,** *a.* சிறு சட்டை வகை.

**Spend,** *v.* (spent) செலவு செய்; பயன் படுத்து; (காலம்) கழி; அழி.

**Spendthrift,** *n.* வீண் செலவு செய்பவர்; ஊதாரி.

**Spent,** *a.* (>spend) களைப் படைந்த.

**Sperm,** *n.* கருமூலம்.

**Spermatoroon,** *n.* கருத்தரிக்கச் செய்யும் அணு.

**Spew, spue,** *n.* வாந்தியெடு; கக்கு.

**Sphere,** *n.* உருண்டை வடிவமான பொருள்; கோளம்; (தொழில், உரிமை, செல்வாக்கு) எல்லை. *a.* spheric(al) *see* spheroid. *n.* (*dimi.*) *s.n. see* spherule.

**Spheroid,** *n.* அரைகுறை உருண்டை வடிவம்; முட்டை வடிவம். *a.* spheroidal.

**Spherometer,** *n.* (sphere) கோளமானி.

**Sphrule,** *n.* (sphere) சிறுகோளம்.

**Spice,** *n.* மணப்பொருள்; தாளிதப் பொருள்; காரம்; துணிச்சல்; அறிவுக்கூர்மை; சுவை. *v.* சுவை யூட்டு. *a. see* spicy. *n. abs. coll.* spicery.

**Spick and span,** *phr. a.* புத்தம் புதிய; நேர்த்தியான.

**Spicy,** *a.* சுவையான; உறைப்பான; சாரமுள்ள; மணமான; கவர்ச்சி கரமான. *n. abs.* spiciness. *adv.* Spicily.

**Spider,** *n.* சிலந்தி, எட்டுக் கால் பூச்சி வகை.

**Spigot,** *n.* முளை; ஆப்பு.

**Spike,** *n.* முளை; ஈட்டிமுனை; ஈட்டி; பெரிய ஆணி; கூலக் கதிர். (spike disease) கூலக்கதிர் நோய்வகை. *v.* ஆணி அறை; ஈட்டிகளை நடு. *n. dimi.* spikelet, சிறு ஈட்டி. *a.* spiky.

**Spikenard,** *n.* மணத் தைல வகை.

**Spill,** *v.* (spilled or spilt). (நீர்மம்) சிதறு; ஊற்று; கொட்டு; தெளி; சிந்து.

**Spin,** *v.* (spun or span, spun) நூல் நூற்றல் செய்; சுழல்; சுழற்று; நீண்டதாக இழு. *n.* சுழற்சி; நூற்பு

நயம். *pr.p.n., a. (n.)* spinning. நூற்பு; சுழற்சி. *(a)* நூற்கிற; சுழலுகிற. *comb. n.* spinning jenny, நூற்புக் கதிர்ப் பொறி. spinning wheel, இராட்டை. *n. ag. see* spinster.

**Spindle,** *n.* நூற்கும் கதிர்; அச்சாணி. *n.* spindleshanks, நீண்ட காலுடையவன்.

**Spine,** *n.* முள்; கூரணி; முது கெலும்பு. *a.* spinal, முதுகெலும்பு சார்ந்த. *n.* spinal column, முதுகுத் தண்டு. spinal cord, தண்டு வடம்; தண்டு நரம்பு; சுழி முனை நாடி. *a.* spinose, spinous, spiny, முள்ளுடைய. *n. abs.* spinosity.

**Spinner, spinneret,** *n.* (சிலந்தி, பட்டுப்புழு போன்றவற்றின் உடலில் உள்ள) நூற்கும் உறுப்பு.

**Spinney,** *n.* சிறு காடு.

**Spinster,** *n.* (spin) நூற்பவர்; மணமாகாத முதிய மாது.

**Spire,** 1. *n.* தூபி; கோபுரம். 2. *n.* சுருள்; திருகு. *a.* spiral, திருகு சுருளாயமைந்த. *n.* சுருள் வடிவு. *adv.* spirally.

**Spirit,** 1. *n.* உள் உயிர்; ஆன் மா; உயர்நிலை; தெய்வதம்; புத்தேளுரு; சிறு தெய்வம்; அணங்கு. 2. *n.* மனநிலை; எழுச்சி; ஊக்கம். *v.* எழுச்சியூட்டு; மறைவாகத் தூக்கிச் செல். 3. சாராயம், 'சாராவி' *(pl.)* spirits சாராய வகைகள் (2) *a.* spirited. *a. (neg.)* spiritless. (2). (3) *see* spiritual. *see* spirituous, etc. *comb. n.* denatured spirit. தரங்குறைந்த சாராவி. certified spirit, தெளிசாராவி.

**Spiritual.** *a.* spirit 2. சமய வொழுக்கத்திற்குரிய; ஆன்மிக உயிர் நலஞ்சார்ந்த. *adv.* spiritually. *n.* spirituality. உயிர்நல ஆற்றல்; ஆன்மிக ஆற்றல். *v.* spiritualize, -se. *n.* spirituality சமயத் தலைமை; சமய ஆசிரியர். *n. abs.* spiritualism, ஆவியுலகக் கோட்பாடு.

**Spirituous,** *a.* **spirit.** (3.) சாராயம் கலந்துள்ள; சாராயஞ் சார்ந்த.

**Spirit, spurt,** *v.* பீச்சு; பீறிடு; விரைவாகப் பாய். *n.* பீச்சுதல்; பீறிடல்; பாய்ந்து செல்லல்.

**Spit.** 1. *n.* (இறைச்சியை நெருப்பில் பதப்படுத்த உதவும்) இருப்புமுள்; (கடலில் புகுந்துள்ள) ஒடுங்கிய நிலப்பகுதி. *v.* குத்திவை. 2.*v.* (spat or spit, spit) உமிழ்; துப்பு. *n.* துப்புதல்; எச்சில்.

**Spite, 1.** *n.* வெறுப்பு; பகை. *v.* தொந்தரவு செய்; இடையூறு செய். *a.* spiteful, பகைமையுடைய. 2. *phr.* inspite of இருந்தும் நேர் மாறாக.

**Spittle,** *n.* உமிழ்ந்த எச்சில்.

**Spittoon,** *n.* படிக்கம்.

**Splash,** *v.* சிதறச் செய்; துளைந்து விளையாடு. *n.* தெறித்த நீர் *a.* splashy. (*comb.*) *n.* splash - board, நீர்த்தடுக்கு.

**Splatter,** *v.* சளசள என்றொலி.

**Spleen**. *n.* மண்ணீரல்; சினம்; பகைமை. மனச்சோர்வு. *a.* spleeny, spleenish.

**Splendid,** *n.* சிறந்த; உயர்ந்த; பகட்டான.

**Splendour,** *n.* பேரொளி; பகட்டு.

**Splenetic,** *a.* சிடுசிடுப்பான; முன் சினமுள்ள.

**Splint,** *n.* சிராய்; சிம்பு. *v.* சிம்பு வைத்துக் கட்டு.

**Splinter,** *v.* சிம்புகளாகப் பிரி. *n.* சிராய்; சிம்பு.

**Split.** *v.* **(split)** நெடுக்காகப் பிள; கீறு; உடைந்து சிதறு; பிரி. *n.* பிளவு; கீற்று; பிரிதல்.

**Splutter,** *v. see* sputter.

**Spoil,** *v.* (spoiled or spoilt) கெடு; சிதை; உடைமைபறி; அழி. *n.* கைப்பற்றிய பொருள்; கொள்ளை; ஊதியம். *n. abs.* soilage அழிவு; சேதாரம். *see also* spoliation.

**Spoke,** 1. *n.* சக்கரத்தின் ஆரம்; ஆரைக்கால்; ஏணிப்பழு. 2. *v. see* speak.

**Spokesman,** *n.* (speak) (ஒருவருக்கு) ஆட்பேராகப் பேசுபவர்.

**Spoliation,** *n.* (spoil) கொள்ளை யிடல்; அழிவு செய்தல்.

**Spondee,** *n.* (இலக்., செய்யுள்) இரண்டு நெடில்கள் அல்லது அழுத்த அசைகள் இணைந்த சீர்.

**Sponage,** *n.* கடற்பாசி, கடற்பஞ்சு, கடற்பஞ்சு போன்ற பொருள்; உறிஞ்சும் பொருள்; பிறர் சார்பி லேயே வாழ்பவர். *v.* கடற்பஞ்சி னால் துடை; உறிஞ்சு; பிறரை அண்டிப் பிழை. *a.* spongy.

**Sponsor,** *n.* தொடங்கி நடத்துபவர்; திட்டமுதல்வர்; பிணையா யிருப்பவர். *n. abs.* sponsor ship.

**Spontaneous,** *a.* தானே இயங்கு கிற; இயற்கையான. *adv.* spontaneously. *n. abs.* spontancity, spontaneousness.

**Spoon,** *n.* கரண்டி. *v.* கரண்டியால் எடு. *n.* spoonful. கரண்டியளவு. (*comb.*) *a.* spoonfed. செயற் கையாக வளர்க்கப்பட்ட.

**Spoor,** *n.* மோப்பத்தினால் அறியும் வழி; விலங்குகளின் தடம்; மோப்பத் தடம்.

**Sporadic,** *a.* சிதறலான; இடை யிடையான. *adv.* sporadically.

**Spore,** *n.* சிதல் விதை; இலைச்சிதல்.

**Sport,** *n.* கேளிக்கை; விளையாட்டு; கேலி. *(pl)* போட்டி விளையாட்டுகள். *v.* விளையாடு; வேடிக்கை செய்; போட்டி ஆட்டங்களில் ஈடுபடு. *n.* sportsman வேட்டைக்காரர்; ஆட்டக்காரர்; பெருந்தன்மை யுள்ளவர்; விட்டுக் கொடுப்பவர். *n. abs.* sportsmanship. *a.* sporting, விளையாட்டான; விளையாட்டுச் சார்ந்த. *adv.* sportingly. *a.* sportive, விளையாட்டு விருப்பமுள்ள. *n. abs.* sportiveness.

**Spot,** *n.* கறை; பொட்டு; களங்கம்; இடம். *v.* கறைப்படுத்து; புள்ளி யிடு; கண்டுபிடி. *a.* spotty, spotted. *(neg.)* spotless.

**Spotlight,** *n.* குறித்த இடத்தில் விழக்கூடிய ஒளி; எல்லோராலும் பார்க்கக்கூடிய இடம்; முனைப் பொளி.

**Spouse,** *n.* கணவன் அல்லது மனைவி; வாழ்க்கைத் துணைவர்.

**Spout,** *v.* (தண்ணீர்) தாரையாக விழு; பீறிட்டு வெளிப்படு. *n* குழாய் முனை; தூம்பாய்; கிண்ணி மூக்கு; நீர்த்தாரை.

**Sprain,** *n.* தசைப் பிடிப்பு; சுளுக்கு. *v.* (தசை) சுளுக்கு.

**Sprang,** *v. see* spring.

**Sprat,** *n.* சிறு மீன் வகை.

**Sprawl,** *v.* கை கால்களைப் பரப்பு.

**Spray, 1.** *n.* நுண்ணுரை; நுண் திவலை ஆவி; நூலானம்; நீர்த் திவலைத் தொகுதி. *v.* திவலை களாகச் சிதறு; நுண்திவலை தூவிப் புள்ளிகளிடு; புள்ளி தூவு. 2. *n.* மலர்கள் அல்லது இலை களுடன் கூடிய சிறு கிளை; பூங்கொம்பு. (1) *n. ag. int. pers.* sprayer(s) நீருற்று குவளை; நீர் தெளிக்கும் புட்டி. spray painting தெளி பூச்சு; தூவுபுள்ளி வண்ணம்

**Spread,** *v.* (spread) பரவு; மலர்; சிதறு; பலரறியச் செய். *n.* பரவல்; அகலம்.

**Spree,** *n.* களியாட்டம்; வேடிக்கை.

**Sprig,** *n.* சிறு கிளை - தளிர்.

**Sprightly,** *a.* சுறுசுறுப்பான. *n. abs.* sprightlines

**Spring,** *v.* (sprang or sprung sprung) துள்ளு; பாய்ந்து செல்; முளைத் தெழு; விளைவாகு; எதிர் பாராத நிலையில் உண்டா(க்)கு. *n.* பாய்தல்; துள்ளல்; பிறப்பிடம் ஊற்று; சுனை; சுருள்வில்; இளவேனில் (பருவம்) (-*f*- summer, autumn, winter) *a. see* springy. *comb. n. see* springboard.

**Springboard,** *n.* (spring) தாவு பலகை; விசை கொடுக்கும் பலகை. மூலதளம்.

**Springy,** *a.* (spring) வில்லைப் போல்; விசையுள்ள; வளைகிற; தொய்வான. *n. abs.* springiness.

**Sprinkle,** *v.* (நீர் முதலியன) தெளி; தூவு. *n.* தெளித்தல்; துளிகள் சிதறல். *n.* sprinkling. *n. ag.* srinkler.

**Sprite,** *n.* (*conn. see* spirit) பேய்.

**Sprout,** *v.* முளை; தளிர். *n.* முளை; அரும்பு.

**Spruce,** 1. *a.* தூய ஆடையணிந்த; நாகரிகத் தோற்றமுள்ள. 2. *n.* ஒருவகை மரம். (1) *n. abs.* spruceness.

**Sprung,** *v. see* spring.

**Spry,** *a.* சுறுசுறுப்பான; எழுச்சி யுள்ள.

**Spume,** *n, v.* நுரை (ஆகு). *a.* spumous, spumy.

**Spun,** *v. see* spin.

**Spur,** *n.* குதிமுள்; தூண்டுகோல்; கிளைமலைத் தொடர். *v.* தூண்டு; குதிமுள்ளினால் குத்து; விரை வாகச் செலுத்து.

**Spurious,** *a.* போலியான; உண்மை யல்லாத. (x genuine), *n. abs.* spuriousness.

**Spurn,** *v.* உதைத்துத் தள்ளு. *n.* வெறுத்தல்.

**Spurt,** *v. see* spirt.

**Sputter, splutter,** *v.* உமிழ்; திக்கிப் பேசு. *n.* தெற்றிப் பேசுதல்.

**Sputum,** *n.* (ஸ்ப்யூட்டம்) கபம்; கவண்; கோழை; உமிழ்நீர்; எச்சில்.

**Spy,** *v.* பார்; வேவு பார். *n.* பார்வை யாளர்; ஒற்றர். *(comb) n.* spy-glass. சிறு தொலை நோக்காடி.

**Squabble,** *v.* சச்சரவிடு; சண்டை செய். *n.* சச்சரவு.

**Squad,** *n.* பயிற்சிக்குழு; சிறு கூட்டம்.

**Squadron,** *n.* (120 முதல் 200 வரை அடங்கிய) குதிரைப் படைவீரர் தொகுதி. போர்க் கப்பல் தொகுதி, மக்கள் தொகுதி.

**Squalid,** *a.* இழிவான; அழுக் கடைந்த. *n. abs.* squalor, squalidity, squalidness.

**Squall,** *v.* உரக்கக் கத்து. *n.* உரக்கக் கத்துதல்; திடீர்ப் புயல்; மழை. *a.* squally.

**Squaloe,** *n. see* **squalid.**

**Squander,** *v.* வீண் செலவு செய். *n. ag.* squande rer.

**Square,** *a.* (வடிவியல்) சதுர வடிவமான; சதுரமான; சமசதுக்க மான; சரிசம நீள அகலமுடைய; நேர் கோணமாயமைந்த (கணக்கியல் எண்ணின்) தற் பெருக்கமான; பொருத்தமான நேர்மையான; மீதியில்லாத; (அணிவழக்கு) முழுமையான; நிறைவான; திட்டவட்டமான. *n.* சதுரம்; சதுரமான அணிவகுப்பு (எண்ணின்) தற்பெருக்கம். பெருக்கம்; தெருச்சதுக்கம்; நாற் சந்தி; சுற்றுக்கட்டு; அகமுற்றம்; நடுவம்பலம். *v.* சதுரமாக்கு; பொருந்து; பொருத்தமாக்கு; (எண்) பெருக்கம் கணி. *adv.* squarely. நேர்மையாக; பொருத்த மாக; முழுமையாக. *n. abs.* squareness.

**Squash,** *v.* நசுக்கு; திணி; நெருக்கு; வாயடைக்கும்படி விடையளி, *n.* நசுக்கப் பட்ட பொருள்; கூட்டம்; மெத்தென்று பொருள் விழுதல். *a.* squashy.

**Squat,** *v.* உட்கார்; குந்தியிரு; உரிமையில்லாமல் தங்கு. *a.* குந்தியிருக்கிற; பதுங்கியிருக்கிற; தடித்துக் குள்ளமான *n. ag.* squatter.

**Squawk,** *v.* கத்து. *n.* கத்தல்.

**Squeak,** *v.* கீச்சிடு *n.* கீச்சொலி. *n. ag.* squeaker, கத்துபவர்; பறவைக்குஞ்சு.

**Squeal,** *v.* கீச்சிடு. *n.* கீச்சிடும் ஒலி. *n. ag.* squearer.

**Squeamish,** *a.* எளிதில் வெறுப் படைகிற; வேண்டா அளவில் சிறு நுட்பம் கவனிக்கிற; எளிதில் கோபிக்கிற. *n. abs.* squeamish-ness.

**Squeeze,** *a.* பிசை; அழுத்து; நசுக்கு; பிழி; நெருக்கியடித்துச் செல். *n.* நசுக்குதல்; கூட்டம்; நெருக்கடி.

**Squint,** *v.* கடைக்கண் பார்; சாய்த்துப் பார்; *n.* கடைக்கண்

பார்வை; ஓரக்கண் பார்வை. *a.* கடைக்கண் பார்வையான. *n. ag.* squinter.

**Squire,** *n.* ஊர்ப் பெரியதனக்காரர்; அம்பலக்காரர்; பண்பாளர்.

**Squirm,** *v.* (புழுப் போல்) நெளி; மன உளைவடை.

**Squirrel,** *n.* அணில்.

**Squirt,** *v.* நீர் சிதறு; பீறிடு.

**Stab,** *v.* குத்து; புண்படுத்து. *n.* குத்திய காயம். *n. ag.* stabber.

**Stable, 1.** *a.* நிலைத்திருக்கிற; அசையாத; உறுதியான. 2. *n.* குதிரை இலாயம்; கொட்டில். *v.* கொட்டிலில் கட்டிவை. (1) *n.* stability. *v.* stabilize, -se, நிலைக்கச் செய். *n. abs.* stabilization, - sation.

**Staccato,** *a.* விரைந்து தனியாகப் பாடவேண்டிய.

**Stack,** *n.* வைக்கோல் போர்; குவியல். *v.* குவியலாக அமை; போராகப் போடு.

**Stadium,** *n.* (*pl.* -ia, -ioms) பந்தயக் காட்சி அரங்கம்; சூழரங்கம்; ஆடரங்கு; சூழ்படியம்பலம்.

**Staff,** *n.* (*pl.* 1., 2. staves, 3. staffe) 1. கைத்தடி; ஊன்றுகோல்; செங்கோல். 2. கொடிக்கம்பம். 3. பணியாளர் தொகுதி. *v.* பணியாளர் தொகுதி அமை.

**Stag,** *n.* ஆண் மான்; கலை மான்.

**Stage,** *n.* நாடக மேடை; அரங்கம்; வேலை செய்யும் மேடை; நாடகக் கலை; தங்கும் இடம்; வழியிடைப் படி; வழித்துறை; படி; கூறு; கட்டம்; பகுதி. *v.* அரங்கத்தில் (நாடகம்) நடத்து. *a.* stage, நாடக மேடைப் பண்புடைய. *comb. n.* stage carriage, stage coach, அஞ்சல் வண்டி. stage craft, நாடகக் கலை. stage fright, மேடைக் கூச்சம்; அவைக் கூச்சம்.

**Stagger,** *v.* தள்ளாடி நடு; தயங்கு; தள்ளாடச் செய்; தயங்கச் செய். *n.* தள்ளாட்ட நிலை. *(pl.)* தலை சுற்று நோய்.

**Staghound,** *n.* வேட்டை நாய் வகை.

**Stagnate,** *v.* தேங்கி நில்; சோம்பேறியாகு. *a.* stagnant. *n. abs.* stagnation, stagnancy.

**Stagy,** *a. see* stage.

**Staid,** *a.* அமைதியான.

**Stain,** *v.* கறைப்படுத்து; சாயம் நோய். *n.* கறை; மாசு; களங்கம்; சாயம். *a. neg.* stainless.

**Stair,** *n.* படிக்கட்டு; படி. *n. pl.* stairs. மேடைப்படி; படிக்கட்டு. *comb.n.* staircase, stairway. படிக்கட்டு.

**Stake,** *n.* மரமுளை; கழுமரம்; பந்தயம்; பணயம் வைக்கும் பொருள். *v.* முளையில் கட்டு; முளையடித்து எல்லை குறி; பணயம் வை; பந்தயம் வை.

**Stalactite,** *n.* ஊசிப் பாறை; சுண்ணாம்புச் சத்து மூலம் நீரில் மேலிருந்து கீழ் வளர் பாறை. *n.* stalagmite மேற் கூறியபடி. கீழிருந்து எழும் அமைப்பு.

**Stale,** *a.* ஊசிப்போன; நாட்பட்ட *n. abs.* staleness.

**Stalemate,** *n.* சிக்கல் நிலை; திக்கு முக்காட்டு நிலை. *v.* சிக்கல் நிலைக்குக் கொணர்; காரியத்தில் முன்னும் பின்னும் போகவொட் டாமல் செய்.

**Stalk,** *n.* காம்பு; காம்பு போன்ற பகுதி. *v.* நடமாடு. (கால் எட்டி வைத்து) நடு; பதுங்கிச்செல். (*comb.*) *n.* stalking-horse. வேட்டைக் குதிரை; பொலிச் சாக்கு.

**Stall,** *n.* மாட்டுத் தொழுவம்; குதிரை இலாயம்; விற்பனை மேடை; பெட்டிக் கடை; தட்டிக் கடை; சாவடி; நிலையான இருக்கை; கொட்டில். *v.* தொழுவத்தில் (இலாயத்தில்) அடை; வேலை செய்யாது நில்; வேகங் குறைந்து நிலை தடுமாறு.

**Stallion,** *n.* ஆண் குதிரை; பொலி குதிரை. (*comb.*) *n.* stallion-bull. பொலி எருது; பொலி காளை.

**Stalwart,** *a., n.* வீரமுள்ள; தாட்டிமையுள்ள.

**Stamen,** *n.* மலர்த்துய்; மலரிழை. *a. see* staminal 1.

**Stamina,** *n.* உள்ளுரம்; பொறுதி யாற்றல்; உறுதி, *a. see* staminal. 2.

**Staminal,** *a.* (>stamen) *a.* மலரிழைக்குரிய. 2. *a.* (>stamina) உள்ளுரத்துக்குரிய.

**Stammer,** *v.* திக்கிப் பேசு. *n.* கொன்னிப் பேசுதல். *n. ag.* stammerer.

**Stamp,** *v.* (காலினால்) அறை; உதை; அடையாளம் செய்; முத்திரை யடி; பொறிப்பிடு; பதிய வை; நசுக்கு. *n.* முத்திரை; பொறிப்பி; மதிப்பு; தன்மை; அஞ்சல் தலை; (அஞ்சல், வரித்துறை) பில்லைச் சின்னம்; பில்லை; வரிப் பில்லை. *n. ag.* stamper. *comb. n.* stam vendor. பில்லைத்தாள் விற்பனை யாளர். stamp act, வரிப் பில்லைச் சட்டம். stam duty, பில்லை வரி. *phr. v.* stam out, துடைத்தழி; இல்லாமல் செய்.

**Stampede,** *v. n.* (யானைக் கூட்டம், கூட்டம்) மிதித்தடி (த்தல்); நெருக்கித் துள்ளு(தல்).

**Stanch, staunch,** *v.* நீர் கசிவதைத் தடு; தோய்த்துத் துடை. *a.* உறுதியான; திடமான; பற்றுறுதி யான.

**Stanchion,** *n.* ஆதாரச் சட்டம்; உதைகால்; முட்டு.

**Stand,** *v.* (stood) நில்; உறுதியாயிரு; குறித்த உயரத்தோடிரு; ஓரிடத்தில் அமைந்திரு. *n.* நிலை; கொள்ளும் தொடர்பு; நிலை தாங்கி; நிலச் சட்டம்; மாட்டுச் சட்டம்; மாட்டி; நிலைமாட்டி; ஆதாரம்; தங்கும் இடம்; (ஊர்தி, பொறி வண்டி) தங்கல்; தங்கல் நிலையம்; நிறுத்துமிடம்; (இடை) நிறுத்தம். *n., a. see* standing. *comb. n.* standstill, stanpoint.

**Standard,** *n.* 1. பொது அளவு (கருவி); வரையளவு; மூலஅளவு; திட்ட அளவு; ஒருநிலைப்படிவம்; படித்தரம். 2. கொடி. 3. பள்ளிக் கூட வகுப்பு. 4. மரபமைதி; சமூக

மரபு. *a.* குறித்த அளவு அல்லது மதிப்புள்ள; படியள வுள்ள; சரியான வரையறை யுடைய; சரி திட்பமான; ஒருநிலைப் படியான; தரப்படுத்தப்பட்ட; மரபுப்படி அமைந்துள்ள. *v.* standardize, -se, ஒரே திட்டப்படி அமை. *n.* standardization, -sation. படியளவு ஏற்பாடு; படியளவு நிலை; ஒரு நிலைப்பாடு. *comb. n.* standard of living (of life) வாழ்க்கைப் படித்தரம். standard heads, தரப்படுத்தப்பட்ட இனங்கள்.

**Standard-bearer,** *n.* கொடி தாங்குவோர்; முனைவர்.

**Standing,** *a.* (stand) நிற்கிற; சட்டப்படி அமைந்துள்ள; நிலைத் திருக்கக் கூடிய; நிலவரமான; நிலையான (standing army, standing order standing committee etc.); வெட்டாம லிருக்கிற; ஓட்டமில்லாத. *n.* நீடிப்பு; நிலைப்பு (three years, standing etc) நிலைக்கக் கூடிய தன்மை; பதவி; உரிமை; செல்வாக்கு.

**Standpoint,** *n.* நோக்கும் நிலை; பார்வைக் கோணம்.

**Standstill,** *n.* அசையா நிலை.

**Stank,** *v. see* **stink.**

**Stannary,** *n.* தகரச் சுரங்கம்.

**Stanza,** *n.* செய்யுள் பத்தி; பாடற்பகுதி; பாட்டு.

**Staple,** *n.* 1. நாதாங்கி; தாழ்ப்பாள் பொருந்துகிற கொண்டி. 2. முக்கியப் பொருள்; (கம்பளி, பருத்தி ஆகியவற்றின்) தரம். *a.* முக்கியமான; மூலப்பகுதியான. *n. conn.* stapler, stapling machine. (புத்தகம், தாள்கட்டு) கம்பித் தையல் பொறி. *comb. n.* harp and staple கொண்டியும் நாதாங்கியும்.

**Star,** *n.* வான் மீன்; விண்மீன்; நாண்மீன். *a.* starry.

**Starboard,** *n.* (கப்பலின்) வலப்பக்கம்.

**Starch,** *a.*, *n.* மாச்சத்து; கஞ்சிப் பசை. *v.* கஞ்சிப் பசைபோடு. *a.* starchy.

**Stare,** *v.* உறுத்துப் பார்; கண்களை நன்கு திறந்து பார். *n.* உறுத்து நோக்கு.

**Star fish,** *n.* கடலுயிர் வகை.

**Star gazer,** *n.* வான் நூலாராய்ச்சி யாளர்; கனவு காண்பவர்.

**Stark,** *a.* விறைப்பான; முழுதான *adv.* முழுவதும்.

**Starlight,** *n.* விண்மீன் ஒளி.

**Starlit,** *a.* விண்மீன் ஒளி பெற்ற.

**Start,** *v.* தொடங்கு; புறப்படு. திடுக்கிடு திடீரென்று ஒன்றை வெளிப்படுத்து. *n.* தொடக்கம்; துள்ளல்; திடுக்கிடல்.

**Startle,** *v.* திடுக்கிடச் செய்; திகைக்கச் செய். *pr. p. a.* startling திடுக்கிடச் செய்கிற.

**Starve,** *v.* பட்டினி கிட; பட்டினியால் வருந்து அல்லது இற; உணவு போடாமல் கொல்; ஒரு பொருள் இல்லாததால் வருந்து; இல்லாமற் செய். *n.* starvation, *n. a.*, *n. see* starveling.

**Starveling, (starve)** *a., n.* பட்டினியால் வருந்துகிற (வர்); சவலைக் குழந்தை.

**State, 1.** *n.* நிலைமை; பதவி; ஆடம்பரம். 2. *n.* நாடு; அரசு. *a.* ஒருநாட்டுக்குரிய; அரசுக்குரிய; அரசு முறைப்பட்டு; அரசுரிமைப் பட்டு; ஆடம்பரச் சடங்குகளுக் குரிய. 3. *v.* விளக்கமாகக் கூறு; விவரமாகப் பேசு அல்லது எழுது. (3) *n.* statement அறிக்கை; அறிவிப்பு வாக்குமூலம்; வாசகம், எழுத்துப் படிவம். *comb. n.* state elephant, அரச யானை; அரசுரிமை யானை. statebank அரசுரிமைப் பொருள்மனை. satelist, அரசுத்துறைப் பட்டி; state huest, அரச விருந்தினர். state prisoner, உயர் அரசியல் சிறையாளி. *adv.* Instate அரசுரிமை ஆடம்பத்துடன்.

**State craft,** *n.* அரசியல் முறை; அரசியல் சூழ்ச்சி.

**Stately,** *a.* வீறார்ந்த; பகட்டார வாரமான. *n. abs.* stateliness.

**Statement,** *n. see* **state.**

**Statesman,** *n.* அரசியல் வல்லுநர்; பெருஞ்செயற்பண்பாளர். *n. abs.* statesmanship. *a.* states man like, statesmanly.

**Static(al),** *a.* பொருள்களின் நிலையமைதி சார்ந்த. *n.* statics, பொருள்களின் அசையாநிலை பற்றிய நூல் நிலையியல்; நிலையியக்கவியல்)

**Station,** *n.* தங்குமிடம்; நிலையம். *v.* நிறுத்தி வை; பதவியிலமர்த்து. *(comb) n.* station-master, (ஊர்தி) நிலைய முதல்வர். *a.* stationary, நிலையாயிருக்கிற. *comb v.* railway station, ஊர்தி நிலையம். police station, காவல்சாவடி. polling station, தேர்தல் சாவடி. puming station, இறைப்பு நிலையம்.

**Stationer,** *n.* எழுதுவதற்கு வேண்டிய தாள் முதலியன விற்பவர். *n.* stationery, தாள் முதலிய எழுதுவதற்கான பொருள்கள்; (வாணிகம்) கருவி கலங்கள். கோல் கலங்கள்.

**Statistics,** *n. (pl.)* புள்ளி விவரங்கள்; புள்ளி விவரக் கணக்கு. *n.* statistician, statist. *a.* statistic(al) *comb. n.* vital statistics வாழ்க்கைப் புள்ளி விவரங்கள்; வாழ்வு மாள்வுப் புள்ளி விவரங்கள்; பிறப்பு இறப்புக் கணக்கு.

**Statue,** *n.* உருவச்சிலை. *a., n.* statuary, சிற்பஞ் சார்ந்த (பொருள்கள், கலைஞர்). *a.* statuesque சிலைத் தன்மை யுடைய, *n. (dimi.)* statuette சிறுசிலையுருவம்.

**Stature,** *n.* இயற்கை உயரம்; உயர அளவு.

**Status,** *n.* மதிப்பு நிலை; படித்தரம்.

*status quo., n.* நடைமுறை நிலைமை; மரபு நிலைமை.

**Statute,** *n.* சட்டம் நிலவரச் சட்டம்; பட்டயம்; படிக்கட்டளை. *a.* statutory, சட்டத்தினால் விதிக்கப் பட்ட; சட்ட முறையான. *comb.*

*n.* statute book, நிலவரச் சட்டப் புத்தகம்.

**Staunch,** *a. see* **stanch.**

**Stave,** *n.* (பீப்பாய்க்குரிய) வளைந்த பலகை; ஏணிப்படி; செய்யுள்; இசை கோடு வகை. *v.* (staved or stove) துளை போடு; உடைத்து நொறுக்கு; (பீப்பாய்) பலகைகள் பொருத்து; தாமதப் படுத்து; விலக்கு; தவிர்.

**Stay,** *v.* தங்கு; நிற்கச் செய்; தடுத்து வை; நில்; காத்திரு; நீடித்திரு; விழாமல் தாங்கு; *n.* தாங்கும் ஆதாரம்; தங்குமிடம்; நிற்றல்; கப்பல் பாய்மரக் கயிறு. *(pl.)* மார்புச் சட்டை.

**Stead,** *n.* (ஆளின்) இடம்; பயனீடு. (*comb.*)instead of in one's stead, பகரமாக; பதிலாக.

**Steadfast,** *a.* உறுதியான. *n.* steadfastness.

**Steady,** *a.* நிலையான; உறுதியான; ஒழுங்காக நிகழ்கிற; அசையாத; பற்றுறுதியுள்ள. *n. abs.* steadiness. *adv.* streadily.

**Steak,** *n.* இறைச்சித் துண்டு. *comb.* beef-steak. (பீஃவ் ஸ்டெக்) மாட்டிறைச்சித் துண்டு.

**Steal,** *v.* (stole, stolen) திருடு; ஓசையின்றி நழுவிச் செல்; மறைவாகச்செல். *n.* stealth. *a.* stealthy. *adv.* stealthily. *a. abs.* stealthiness.

**Steam,** *n.* நீராவி; ஆவி. *v.* நீராவியை வெளிவிடு; நீராவியில் வேக வை; நீராவியின் ஆற்றலால் இயங்கு. *a.* steamy. *n.* steamboat, நீராவி ஓடம். *n. ag. impers.* steamer, நீராவிக் கப்பல்; நீராவியால் சமைக்கும் கலம். *comb. n.* steam roller, (நீராவியால் இயங்கும்) பொறி உருளை.

**Steamship,** *n.* நீராவிக் கப்பல்.

**Steed,** *n.* குதிரை; போர்க் குதிரை.

**Steel,** *n.* எஃகு; எஃகுக் கருவிகள். *v.* எஃகைப்போல் கெட்டியாக்கு.

**Steelyard,** *n.* துலாக்கோல்; வெள்ளிக்கோல்.

**Steep,** 1. *a.* செங்குத்தான; செய்தற்கருமையான. *n.* செங்குத் தான பாறை. 2. *v.* ஊற வை. *n.* ஊற வைத்தல்; ஊறவைக்கும் நீர்மம். (1) *n.* steepness. *v.* steepen.

**Steeple,** *n.* கோபுரம்; தூபி. *n.* steeple-jack, கோபுரத்தைப் பழுது பார்ப்பவன்.

**Steeplechase,** *n.* தாவி ஓட வேண்டிய குதிரை ஓட்டப் பந்தயம்.

**Steer,** 1. *n.* இளங்காளை மாடு. 2. *v.* (கப்பல் பொறி வண்டி) ஓட்டு; வழிகண்டு செல்; வழி செல்; வழிகாட்டு. *s. n.* steerage, steering rod. பொறிவண்டி திருப்புவிசை. *n. ag.* steerer.

**Stellar,** *a.* விண்மீன்களுக்குரிய.

**Stellate(d),** *a.* விண்மீன் வடிவமைந்த.

**Stem, 1.** *n.* அடிமரம்; தண்டு; காம்பு; மரபு; கப்பலின் முன் பகுதி. (*correl.* stern) சொல்லின்

பகுதியுறுப்பு 2. *v.* வெள்ளத்தைத் தடு; எதிர்த்து நில்.

**Stench,** *n.* முடை நாற்றம்.

**Stencil,** *n.* செதுக்கு தகடு. எழுத்துப் பதி தகடு. *v.* எழுத்து வெட்டிய தகட்டினால்வரை. *n. ag.* stenciller.

**Stenography,** *n.* சுருக்கெழுத்து முறை. *v. pers.* stenographer.

**Stenotypist,** *n.* சுருக்குக் கையச்சாளர்.

**Stentorian,** *a.* உரத்த குரலான. *n. pers.* stentor. உரத்த குரலுள்ளவர்.

**Step,** *n. v.* காலடித் தொலை; காலடி; சிறுதொலை; ஏணியில் ஒரு படி; நடக்கும் தோரணை; அடிச்சுவடு; நடக்கும் அடியோசை; சிறு முன்னேற்றம்.

**Step-brother,** *a.* மாற்றாந்தாயின் மகன்.

**Step-mother,** *n.* மாற்றாந் தாய்.

**Step-up,** *a.* உயர்த்துகிற.

**Stereotype,** *n.* அச்சுப்பதிவுத் தகடு; இத்தகட்டு முறை. *v.* பதிவுத் தகடு செய்; பதிவுத் தகடாக்கு; பதிவுத் தகட்டினால் அச்சடி; மாறா நிலைப்படுத்து; மாற்ற முடியாமல் செய்; சலிப்பு ஏற்படும்படி ஒரே மாதிரியாகச் செய். *n. pers.* stereotypist *ag.* stereotyper. *a.* stereotyped.

**Sterile,** *a.* மலடான; பலனளிக்காத; புனைவு திறனற்ற. *n.* sterility *v.* sterilize, -se, நுண்ணிய நோய்ப் புழுக்களை அழி. *n.* sterilization, -sation. *n. ag. impers.* sterilizer, -ser, நோய்த் தடை மருந்து.

**Sterling,** *a.* மிகச் சிறந்த குண முள்ள; தூய்மையான. உண்மை மதிப்புள்ள (பொன் காசு).

**Stern, 1.** *a.* கண்டிப்பான; கடுமையான. 2. *n.* கப்பலின் பின் பகுதி. (*correl* bow) (1) *n.* sternness. *adv.* sternly. (2) *a. (sup. deg.)* sternmost.

**Sternum,** *n.* மார்பின் நடு எலும்பு; மார்பெலும்பு. *a.* sternal.

*stet, v.* (அச்சுத்துறைக் குறிப்பு) அமைக (நீக்க வேண்டாம்).

**Stethoscope,** *n.* நெஞ்சுத் துடிப்பு மானி; நாடி மானி. *n. abs.* stethoscopy.

**Stevedare,** *n.* கப்பலில் பாரம் ஏற்றி இறக்குபவர்.

**Stew,** *v.* வதக்கு; புழுங்கச் செய். *n.* வதக்கிய உணவு; மனத் துன்பம்.

**Steward,** *n.* (*fem.* stewardess) மேற்பார்வை செய்பவர். *n. abs.* stewardship.

**Stick,** *v.* **(stuck)** 1. ஒட்டிக் கொள்; விடாது பற்று. 2. (கத்து; அசைய முடியாதிரு. 3. *n.* மரக் கம்பு; தடி; கோல். (1) *n. ag.* sticker. விடாமுயற்சியுள்ளவர்; ஒட்டிக் கொள்ளும் பொருள்; ஒட்டும் தாள். *a. see* sticky.

**Stickler,** *n.* பிடிவாதக்காரன்.

**Sticky,** *a.* ஒட்டிக் கொள்கிற; பசை போன்ற; ஈரமான. *n.* stickness.

**Stiff,** *a.* வளையாக விறைத்த; உறுதியான; தடித்த; கடுமையான. *n. abs.* stiffness. *v.* stiffen.

**Stiffle,** *v.* திக்குமுக்காடச் செய்; (தீயை) அணைத்து விடு.

**Stigma,** *n.* நற் பெயருக்குக் கேடு, மானக்கேடு; கறை; மலரின் கீல் முனை; சூல்முடி.

**Stigmatize, - se.** *v.* கறைப்படுத்து; குறிப்பிடு.

**Stile,** *n.* வேலிக்கடவு; ஈரேணி; ஏறி இறங்கும் படிமரம்.

**Still, 1.** *a.* அசைவில்லாத; ஓசையில்லாத; (birth) செத்த; உயிரற்ற. *v.* அமைதியாக்கு; ஓசை யில்லாமல் செய். 2. *adv.* இன்றும், இன்னும்; இப்பொழுதும்; ஆயினும். 3. *n.* சாராயம் வடித்தல்; வடிக்கும் பாண்டம்; வாலை. *v.* வாலையில் காய்ச்சி வடி. (1) *n. abs.* stillness.

**Still-born,** *a.* செத்துப் பிறந்த.

**Stilt,** *n.* பொய்க்கால். *a.* stilted, செயற்கையான; ஒட்டுக் கோப் பான.

**Stimulant,** *a., n.* ஊக்கமூட்டும் (பொருள்); கிளர்ச்சி தரும் (பொருள்). *v.* stimulate, தூண்டு. *n. abs.* stimulation. *n. ag.* stimulator. *a., n.* stimulative. ஊக்கமளிக்கிற (பொருள்).

**Stimulus,** *n.* (*pl.* stimuli) தூண்டுகோல்; தூண்டல் (correl. response).

**Sting,** *v.* (stung) கொடுக்கினால் கொட்டு; துன்புறுத்து. *n.* கொடுக்கு; கொட்டு நோவு; சுடு சொல்லினால் ஏற்படும் துயர்.

**Stingy,** *a.* (ஸ்டிஞ்சி) கஞ்சத்தன முள்ள. *n. abs.* stinginess.

**Stink,** *v.* (stank or stunk, stunk) முடைநாற்றம் வீசு. *n.* கெட்ட வாடை.

**Stint,** *v.* அடக்கிச் செலவழி. *n.* வரையறைக்குட்பட்ட அளவு; படியளவு. *abv.* stintingly. *a. (neg.)* stintless.

**Stipend,** *n.* உதவிப் பணம்; (பயிற்சி) உதவிச் சம்பளம். *a., n. pers.* stipendiary.

**Stipulate,** *v.* உடன்படிக்கை செய்; கட்டுப்பாடு கோரிக் கொள். *n. abs.* stipulation. *n. pers.* stipulator.

**Stir,** *v.* அசையச்செய்; கிளறி விடு; கலக்கு; தூண்டு. *n.* அலைவு; சிற்றலைவு; அனக்கம்; அரவம்; சிறு குழப்பம்.

**Stirrup,** *n.* குதிரை ஏறும் படித்தட்டு; அங்கவடி.

**Stitch,** *n.* தையல்; தையலிழை. *v.* தை.

**Stithy,** *n.* கொல்லன் உலை.

**Stiver, u.** சிறு காசு.

**Stock,** *v.* (உயிரற்ற) கட்டை; நிலவரப் பொருள்; அடி மரம்; தறி; கைப்பிடி; கையிருப்பு; இருப்புச் சரக்கு; பண்ணை உயிரினத் தொகுதி. *n. (pl.)* அரசாங்கப் பங்குப் பத்திரம்; கடன் மூலதனப் பங்குகள்; கப்பல் கட்டுவதற்கான மரச் சட்டம்; தண்டனைப் பொறி வகை. *v.* பொருள்களைச் சேகரித்து வை; நிரப்பு. *comb. n.* livestock, பண்ணை உயிரினத் தொகுதி; stock account, இருப்புக் கணக்கு, stock exchange, பங்கு

மாற்று (நிலையம்). stocks and shares, அரசுப் பத்திரங்களும் பங்குகளும்; பத்திரப் பங்குகள்.

**Stockade,** *n.* இருப்பு வேலிக் கூடம். *v.* வேலி அரண் செய்.

**Stock-broker,** *n.* பங்குத் தரகர்; பங்குகள் கடன் பத்திரங்கள் தரகர்.

**Stock-exchange,** *n.* பங்கு மாற்று நிலையம்.

**Stocking,** *n.* பின்னல் காலுறை.

**Stocky,** *a.* கட்டையாகவும் வலிமை யாகவும் அமைந்துள்ள.

**Stockyard,** *n.* ஆடுமாடுகளின் பட்டி.

**Stodge,** *n.*, *v.* பெருந் தீனி (உட்கொள்) *a.* stodgy. *n. abs.* stodginess.

**Stoic,** *n.* இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர். *a.* stoic(al). *n. abs.* stoicism.

**Stoke,** *v.* நெருப்பைக் கிளறி விடு. *n. ag. impers.* stoker. கிளறு கோல்; நெருப்புக் கோல்; ஞெலி கோல். *(comb) n.* stoke - hole, நீராவி இயந்திர உலைவாய்.

**Stole,** 1. *v. see* steal. 2. *n.* (கிறித்துவக் குருமார்) நீண்ட அங்கி.

**Stolid,** *a.* மந்தமான; பளுவான. *n. abs.* stolidity.

**Stolon,** *n.* ஓடுவேர்த் தண்டு; (நிலந் தொட்டதும்) வேர் விடும் தண்டு.

**Stoma,** *n.* (*pl.* stomata), இலை நுண் துளை.

**Stomach,** *n.* இரைப்பை; பசிச் சுவை; விருப்பம். *v.* நிறைவுடன் உட்கொள்; பொறுமையுடன் ஏற்றுக்கொள். *n.* stomach-ache, வயிற்றுவலி; குடல் வலி. *a. n.* stomachic, செரிமானத்திற்கு உதவும் (மருந்து).

**Stomatitis,** *n.* வாய் அழற்சி.

**Stone,** *n.* கல்; பாறை; 14 கல் எடை; பழங்களின் கொட்டை; மணிக்கல். *v.* கல் எறி; பழத்தின் கொட்டையை எடு. *a.* stony, இரக்கமற்ற; கற்கள் நிரம்பிய. *phr. n.* stone's throw, stone's cast கல்எறி தொலை.

**Stood,** *v. see* **stand.**

**Stooge,** *n.* கோமாளியின் துணை யாள்; கேலிக்கு இலக்கானவர்; இழிந்த காரியங்களுக்குப் பயன் படும் தோழர்; இழிவான கையாள்.

**Stook,** *n.* கூலக்குவியல்; அம்பாரம். *v.* கதிர்களைக் குவி.

**Stool,** *n.* முக்காலி; மணை. *(pl)* மலங்கழிக்குமிடம்; மலம்.

**Stoop,** *v.* குனிவு; தாழ்ந்து கொடு. *n.* குனிவு; சாய்வு.

**Stop,** *v.* [-pp-] தடு; நில்; தங்கு; அடை; நிறுத்து; முடிவு செய். *n.* நிறுத்தல்; (பொறிவண்டி) நிற்கு மிடம்; நிறுத்துமிடம்; இடை நிறுத்தம்; இடை நிறுத்த இடம்; ஓய்வு; தடை; முற்றுப் புள்ளி; இசைக் கருவி மெட்டு; (ஒலி நூல்) தடை ஒலி; வல்லெழுத்து. *n. abs.* stoppage, நிறுத்தல்; தடங்கல். *n. ag. impers. see* stopper.

**Stop-cock,** *n.* குழாய் அடைப்பு; அடைப்புக் குமிழ்.

**Stop-gap,** *n.* தற்காலிக ஏற்பாடு; ஒட்டுமான வேலை.

**Stopper, stopple,** *n.* அடைப்பு; அடைப்பான்; ஆப்பு; மூடி. *v.* அடைப்பினால் மூடு.

**Stop - watch,** *n.* நிறுத்தவும் ஓட்டவும் அமைப்புடைய கைக் கடிகாரம்; ஆணைக் கைக்கடிகாரம்.

**Storage,** *n.* **(>store)** சேமிக்கு மிடம்; சேமித்து வைக்கும் முறை; சேமிப்புக் கூலி. *(comb.)* storage battery. (மின்சார) சேமக்கலம்.

**Store,** *v.* சேமித்து வை; திரட்டு. *n.* சேகரித்த சரக்கு; களஞ்சியம்; கிடங்கு. பண்டசாலை; மண்டி; சரக்கு விற்பனைக் கடை. *n. abs.* see storage. (*comb.*) *n.* store-house, store-room. களஞ்சியம்; கிடங்கு.

**Storey, story** *n.* (*pl.* **storeys stories)** மாடி; தளமாடம்; நிலைமாடம்; மாடித் தட்டு; மாடித்தளம்; மாடி அடுக்கு. *a.* storeyed, storied.

**Storiette, storyette,** *n.* சிறு கதை.

**Stork,** *n.* கொக்கு; நாரை.

**Storm,** *n.* புயல்; இடிமின்னலுடன் சேர்ந்த மழை; சினக்கிளர்ச்சி; கோட்டை தாக்குதல். *v.* மூர்க்கமாக வீசு; கோபித்துச் சீறு; அரண் முதலியவற்றைத் தாக்கு. *a.* stormy, புயலான; கொந்தளிக்கிற.

**Storm-belt,** *n.* புயல் பகுதி.

**Story,** 1. *n.* கதை; வரலாறு; சரிதை. 2. see storey. (1) *a.* storied, வரலாற்றில் கூறப்பட்டு; புகழ் பெற்ற, *see also* storey.

**Stout,** *a.* தடித்த; வலிமையான. *n.* stoutness.

**Stove,** 1. *v. see* stave. 2. *n.* அடுப்பு; கணப்பு.

**Stow,** *v.* அடுக்கிவை; உரிய இடத்தில் வை; பாதுகாப்பாக வை. *n. (vbl.)* stowage, பொருள் களை அடுக்கி வைப்பதற்கான கூலி. *n.* stowaway, கட்டண மில்லாமல் பயணம் செய்வதற்காக (கப்பலில்) ஒளிந்திருப்பவர்.

**Straddle,** *v.* காலை விரித்துக் கொண்டு நட; கால்விரித்து நில். *n.* கால் விரிந்த நிலை.

**Strafe,** *n.* கடுந்தண்டனை. *v.* வானிலிருந்து குண்டு வீசு.

**Straggle,** *v.* சுற்றித் திரி; (படை அணிவகுப்பிலிருந்து) விலகிச் செல்; பிரிந்து செல். *n. ag. pers.* straggler.

**Straight,** *a.* நேரான; நேர்மைக் குணமுள்ள *adv.* நேர்மையாக; உடனே. *n.* straightness. *v.* straighten (*comb.*) *a.* straight forward கபடற்ற; ஒளிவு மறைவற்ற. *adv.* straightaway. உடனே.

**Strain,** 1. *v.* முழு ஊக்கம் செலுத்தி உழை; கூடிய வரை உழை; மட்டுமீறிப் பளு ஏற்று; ஊக்கமழி. துன்பப்படுத்து; மனத் தாங்கல் உண்டாக்கு; பழுதாக்கு; வடிகட்டு. *n. see* strainer மிகு சோர்வு; களைப்பு; உழைப்புச்சேதம்;

பழுது. 2. பண தோரணை; பாணி; வகை.

**Strainer,** *n.* அரிப்பு; சல்லடை.

**Strait,** *a.* ஒடுக்கமான; கண்டிப்பான *n.* கடல் இடுக்கு; இடைகழி கடற் கால்; இடு கடல். *(pl.)* இக்கட்டான நிலை; இடைஞ்சல். *n. abs.* straitness. *v.* straiten (*comb.*) *a.* strait-laced, மட்டுமீறிக் கண்டிப்பான; குறுகிய நோக்க முள்ள.

**Strand,** 1. *n.* இழை முறுக்கு குழல்; சடை; புரி அலகு. *v.* புரியை அறு. 3. *n.* கரை; ஏரிக்கரை; ஆற்றங்கரை. *v.* (கப்பல்) தரை தட்டு. (2) a stranded இடைஞ்சல் நிலையிலுள்ள.

**Strange,** *a.* முன்பு அறிந்திராத; புதுமை வாய்ந்த; வியப்பைத் தருகிற. *n. abs.* strangeless. *n. pers.* stranger, அயலார்; ஏதிலார்.

**Strangle,** *v.* கழுத்தை இறுக்கிக் கொல்; திக்குமுக்காடச் செய். *n.* strangulation.

**Strap,** *n.* தோல்பட்டைவார். *v.* தோல்பட்டை முதலியவற்றால் இணை; கசையினால் அடி.

**Stratagem,** *n.* தந்திரம்; சூழ்ச்சி முறை.

**Strategy,** *n.* படைத் தலைமைத் திறம்; போர்முறைத் திறம்; நடைமுறைத்திறம்; திறமுறை. *n. pers.* strategist, *a.* starategic. (al).

**Straticulate,** *a.* படுகைகளாக அமைந்துள்ள; படி அடுக்கான.

**Stratify,** *v.* படுகைகளாக ஆக்கு; பாளம் பாளமாக ஆக்கு. *n.* stratification.

**Stratosphere,** *n.* வளிமண்டலத் தில் 7 கல் தொலைக்கு மேலுள்ள பகுதி; ‘மீவளி மண்டலம்’

**Stratum,** *n.* (*pl.* strata), படுகை; பாளம்; மண் படுகை; அடுக்கு.

**Straw,** *n.* வைக்கோல்; துரும்பு; சிறு பொருள்.

**Strawberry,** *n.* செடிவகை; (அதன்) பழவகை.

**Strawboard,** *n.* வைக்கோல் அட்டை.

**Stray,** *v.* அலைந்து திரி; வழி தவறு; தவறு செய். *a.* வழி தவறி அலைகிற *n.* இருப்பிட மில்லாதவர்.

**Streak,** *n.* கீற்று; வரி; மென் கோடு; கதிர். *v.* வரிகள்; கீற்று. *a.* streaky.

**Stream,** *n.* நீரோட்டம்; காற் றோட்டம்; நீர்த்தாரை; ஓடை; ஒழுக்கு. *v.* பெருகியோடு; காற்றில் மித. *n. (dimi)* streatlet, சிற்றோடை. *n. ag. impers.* streamer. நீண்ட கொடி அல்லது நாடா; ஒளிக்கதிர். (*comb.*) *n. v.* Streamline, காற்றினால் தடை ஏற்படாத வரி (அமை); நீர் ஓடும் பாதை. (*comb.*) *n.* streamliner, தடைப்படா வரியுடையது.

**Street,** *n.* தெரு; சாலை. *n. ag. pers.* street walker, தெருச் சுற்றி.

**Strength,** *n.* **(strong)** வலிமை; வலு; (பள்ளி; வகுப்பு; மாணவர் etc) மொத்த எண்ணிக்கை;

மொத்தத் தொகை. *v.* strengthen வலிமைப்படுத்து, உரமூட்டு.

**Strenuous,** *a.* விடாமுயற்சியுள்ள. *n. abs.* strenuousness.

**Stress,** *n.* அழுத்தம்; இறுக்கம்; நெருக்கடி; முக்கியத்துவம். *v.* அழுத்து; அழுத்திக் கூறு; வற்புறுத்து.

**Stretch,** *v.* இழு; கிடத்து; நீட்டு; மிகைப்படுத்து. *n.* அகல்வெளி. *n. ag. impers.* stretcher, தூக்குக் கட்டில். நெடுகக் கிடக்கும் பொருள்

**Strew,** *v.* (strewed, strewed or strown) சிதறு; தூவு.

**Stricken,** *a.* (strike) அடித் தடக்கப்பட்டு; இன்னலுக் காளாக்கப்பட்டு; சோர்ந்த; (நோயால்) பீடிக்கப்பட்டு; வீழ்த்தப்பட்ட.

**Strick,** *a.* கண்டிப்பான; கடுமை யான. *n.* strictness.

**Stricture,** *n.* கண்டனம். (குழாய்களின்) இடுக்கம்.

**Stride,** *v.* (strode) தாவி நடு; தாண்டு; காலை அகலவைத்து நில். *n.* காலடித் தொலை; காலடி; நடை. *a.* strident எடுப்பான; உரத்த.

**Strife,** *n.* சச்சரவு; பூசல் கலகம்; சண்டை, போட்டி.

**Strike,** *v.* (struck, struck or stricken) அடி; குத்து; தாக்கு; துன் பத்துக்காளாக்கு (*see* stricken); (விளக்கு) ஏற்று; மணியடி; (கப்பல் பாய், கூடாரம் முதலியன; இறக்கு; (அச்சு) பதிப்பி; வேலை நிறுத்தம் செய்; (பேரம் பேசித்) தீர்மானி; (வேர்) ஊன்று; கருத்தில்;) படு; தோன்று, *n.* வேலை நிறுத்தம். *n. see* stroke. *n. pers.* striker. *a.* striking, மனங்கவர்கிற; முனைப் பான; வியப்புத் தருகிற. *adv.* strikingly.

**String,** *n.* மென் கயிறு; நூற்கயிறு; இசைக்கருவியின்) தந்தி; வில்லின்) நாண்; வரிசை. *v.* (strung) (கயிறு, தந்தி) இழுத்துக் கட்டு; தொடு; கோவைப்படுத்து. *a.* stringed.

**Stringent,** *a.* கண்டிப்பான; முடையான; இடுக்கமான. *n. abs.* stringency.

**Strip,** *v.* கழற்று; கிழித்தெடு; பறி; உரி. *n.* கீற்று; பூழி; இடுங்கிய நிலம்; தீரம்.

**Strip,** *n.* கீற்று; கோடு; கரை; பட்டை; கசையடி. *v.* கோடுகளிடு; பட்டை போடு.

**Stripling,** *n.* பைதல்; பயல்; சிறுவன்.

**Strive,** *v.* (strove, striven) முயற் சி செய்; போட்டியிடு; போராடு.

**Strode,** *v. see s*tride.

**Stroke, 1.** *n.* (strike) அடி; வீச்சு; இழுப்பு; அறை (தல்); கீறல்; கோடு; மணி ஓவை; துடுப்பு வலிப்பு; திடீர்ப் பேறு (stroke of fortune). 2. *v.* மெல்லத் தடவு; வருடு. (*comb.*) (1) *n.* sun stroke, வலிப்பு நோய்; தலை யுடை; தலையிடி.

**Stroll,** *v.* சுற்றித்திரி; உலாவு. *n.* உலாவுதல்; உலா.

**Strong,** *a.* வலிமையான; உறுதியான; வெல்லமுடியாத; தீவிரமான. *n. see* strength. *comb. n.* stronghold. அரண் செய்யப் பட்ட இடம்; அரண்காப்பு; கோட்டை.

**Strop,** *n.* (கத்தி தீட்டும்) தோல் பட்டை. *v.* (தோலில் கத்தி) தீட்டு.

**Strove,** *v. see* strive.

**Struck,** *v. see* strike.

**Structure,** *n.* அமைப்பு; கட்டடம்; கட்டுமானம். *a.* structural.

**Struggle,** *v.* போராடு; சண்டையிடு; வருந்தி முயற்சி செய்; துன்பத்தில் உழலு; அல்லாடு. *n.* போராட்டம்; கடுமுயற்சி.

**Strum,** *v.* தந்திகளைத் தட்டு.

**Strumpet,** *n.* விலைமகள்; வேசி; பரத்தை; குச்சுக்காரி; ஒழுக்கங் கெட்டவள். ஓடுகாலி.

**Strung,** *v. see* string.

**Strut,** 1. *v.* வீறாப்புடன் நட. *n.* பகட்டு நடை. 2. உதை கால். *v.* உதைகால் கொடுத்துத் தாங்கு. (1) *adv.* struttingly.

**Strychnia, strychnine.** *n.* வச்சநாவி; சவ் வீரம்; நஞ்சு வகை. (*comb.*) strychniaplant. அரளி.

**Stubble,** *n.* (வயலின்) அரிதாள்; தூற்றுக் கட்டை; குறுங் கட்டை; கொழு; முனை.

**Stubboin,** *a.* பிடிமுரண்டுள்ள; இணங்காத. *n. abs.* stubbornness.

**Stucco,** *n.* காரை. *v.* காரை பூசு.

**Stuck,** *v. see* stick.

**Stud, 1.** *n.* குதிரைப் பண்ணை. 2. *n.* குமிழ். *v.* பதித்துவை. (1) (*comb.*) studbull, stud horse. பொலி காளை; பொலி குதிரை.

**Student,** *n.* மாணாக்கர்.

**Studio,** *n.* கலைத்தொழிலகம்; காட்சிப் படம் எடுக்கும் நிலையம். கலையகம்; வானொலி நிலையம்.

**Studious,** *a.* கற்பதில் விருப்பமுள்ள; உழைப்பாளியான; கவனமுள்ள. *adv.* studiously. *n. abs.* studiousness.

**Study,** *n.* படிப்பு; கல்வி; கற்றல்; பாடம்; குழு ஆராய்ச்சி; கற்கு மிடம்; ஆராய்ச்சிக் குழு; கலைக் கழகம்; *pl.* studies கற்றல்; படிப்பு முறை(கள்); படிப்புத் துறைகள்; கல்வித்துறைகள்; ஆராய்ச்சிகள்; கலைத்துறைகள். *v.* (studied *pa. pa.* stud-i-ed) படி; ஆழ்ந்து ஆராய்; நன்கு கற்றறி; ஆராய்ந்து பார்; சிந்தனை செய்; *pa. p. a.* studied. பயின்று மேற்கொள்ளப் பட்ட; வலிந்த; *comb. n.* study-circle, ஆய்வுக் குழு; கல்விக் குழு; ஆய்குழாம். study room. படிப்பறை; study-leave, படிப்பு ஓய்வு; படிப்புக்கான ஓய்வு.

**Stuff.** *n.* பொருள்; சரக்கு; வீண் பேச்சு; இடத்தை யடைக்கும் பொருள்; துணி; பயனற்ற பொருள். *v.* திணி; நிரப்பு; அளவுமீறி உணவு செலுத்து. *a.* stuffy. காற்றோட்டமில்லாத. *n. abs.* stuffiness.

**Stultify,** *v.* பயனற்றதாகச் செய்; குன்றச் செய். *n.* stultification.

**Stumble,** *v.* (கால்) தடுமாறு; (வேலையில்) தவறு செய்; தற் செயலாக எதிர்ப்படு. *n.* இடறுதல்; தவறு. (*comb.*) *n.* stumbling-block, முட்டுக்கட்டை; இடையூறு.

**Stump,** *n.* அடித்தறி; பயனற்ற கடைசித் துண்டு; முளை. *v.* ஓசையுடன் அடி வைத்து நட. (மரப் பந்தாட்டம்) முளைகளைக் கீழே தள்ளு; பாடிப் பேசிக் கொண்டு செல். *a.* stumpy. குட்டையான; கட்டுருளியான.

**Stun,** *v.* உணர்ச்சியறச்செய்; செவிடுபடச்செய் *a.* stunning. *adv.* stunningly. *n. ag. see* stunner.

**Stung,** *v. see* sting.

**Stunk,** *v. see* stink.

**Stunner,** *n.* (stun) அதிர்ச்சி தரும் ஒன்று; மிகு கவர்ச்சிகரமான மனிதன்.

**Stunt,** 1. *v.* வளராமல் தடை செய். 2. *n.* பகட்டுவிளம்பரம்; அதிர்ச்சி தரும் செயல். (1) *a.* stunted, (வளர்ச்சி) தடைப்பட்டு; குறுகிய.

**Stupefy,** *v.* உணர்வு மழுங்கச் செய், *n.* stupefaction.

**Stupendous,** *a.* மாபெரிய; பாரிய.

**Stupid,** *a.* அறிவற்ற. *adv.* stupidly, *n. abs.* stupidity.

**Stupor,** *n.* உணர்ச்சியிழத்தல்.

**Sturdy,** *a.* முரடான; வலிமையுள்ள; உறுதியுள்ள; திண்ணிய. *n. abs.* sturdiness.

**Sturgeon,** *n.* மீன் வகை.

**Stutter,** *v.* திக்கிப் பேசு. *n.* திக்குதல்.

**Sty,** *n.* (பன்றிப்) பட்டி; (குப்பைத்) தொட்டி.

**Stygian,** *a.* கீழுலகு சார்ந்த; நரகஞ் சார்ந்த.

**Style,** *a.* எழுத்தாணி; (எழுத்து அல்லது பேச்சு) மொழி நடை; பாணி; நாகரிகம்; ஊசி; எழுத்தாணி; (மலரின்) சூல் தண்டு; கீலம். *v.* (பெயரிட்டுக) குறிப்பிடு. *a.* stylish. நாகரிகமான; பகட்டான; புதுப் பாணியிலுள்ள. *n. pers.* stylist

**Styptic,** *a., n.* குருதிப் போக்கை நிறுத்துகிற (மருந்து).

**Suave,** *a.* இதமான; இனிய குணமுள்ள; விரும்பத்தக்க. *n. abs.* suavity.

**Sub.** (முன்னிணைப்பு வடிவம்) கீழ் (ப்படியிலுள்ள); துணை (நிலை யான); உதவி (நிலையான).

**Subaltern,** *a.* (பணித்துறையில்) கீழ்த்தரமான. *n.* துணைத் தலைவர்.

**Subaqueous,** *a.* தண்ணீருக் குள்ளான.

**Sub-assistant,** *a.* உதவித் துணை (நிலையான). *n.* உதவித் துணைவர்.

**Subclass,** *n.* உட்பிரிவு.

**Sub-committee,** *n.* துணைக் குழு.

**Sub-conscious,** *a.* உள்ளுறு நினைவு சார்ந்த; தன்னை அறியாத உள் நினைவான; உள்ளுணர்ச்சி சார்ந்த.

**Sub-contract,** *n.* கிளை ஒப்பந்தம். *n. pers.* sub-contractor.

**Sub-cutaneous,** *a.* தோலுக்குக் கீழான.

**Sub-divide,** *v.* மேலும் பிரி. *n.* sub-division. உட்பிரிவு; துணைக் கோட்டம்; கிளை மாவட்டம்.

**Subdue,** *v.* அடக்கு; கீழ்ப்படுத்து; பழக்கி இணக்கு.

**Sub-editor,** *n.* (செய்தியகத்) துணையாசிரியர்.

**Sub-heads,** *n. pl.* கிளைத் தலைப்புகள்; கிளையினங்கள்.

**Subject,** *perd., a., adv.* உட்பட்டு. *a.* குடியாள் ஆன; கீழப்பட்ட. (வடி) உட்பட்டு; தனிக் கட்டுப் பாட்டுடன். *n.* ஆட்சிக்குட் பட்டவர்; குடியாள்; குடியுரிமை யான (x sovereign). 2. தலைப்பு; செய்தி; பொருள். 3. (இலக்.) எழுவாய் (*correl.* predicate, object) (வாய்வியல்) எழுவாய் நிலை; அறிபொருள்; கட்டு. (*correl.* predicate.) 4. (மெய் விளக்கவியல்) தன்னிலை; அக மெய்ம்மை; உளநிலை. (*correl* object.) *v.* subject, கீழ்ப்படுத்து; உட்படுத்து. *n.* subje'ction, கீழ்ப்படுத்தல்; அடக்குதல். *a.* subje'ctive, அகப்பொருளான; அகவியலான. (x objective.) *n. abs.* subjectivity. *n. pers.* subjectivity. *n. pers.* subjectivist.

**Subjoin,** *v.* முடிவில் இணை; பிற் சேர்க்கையாக அமை.

**Sub-judge,** *n.* துணை நடுவர்.

*sub judice, a.* வழக்கு முடியா திருக்கிற.

**Subjugate,** *v.* (ஆட்சிக்கு) உட்படுத்து; கீழ்ப்படுத்து. *n.* subjugation. *n. pers.* subjugator.

**Subjunctive,** *a.* (இலக்.)வியங் கோள்.

**Sublease,** *n.* உட்குத்தகை.

**Sublet,** *v.* கீழ்க் குடிக்கூலி.

**Sublimate,** *v.* மேம்பாடு ஆக்கு; ஒரேயடியாக மாறு; உருகாது ஆவியாகு; நேரடியாகத் திண் பொருளாகு; உறை; படி; புடம் போடு. *n.* படிமானம்; உறை பொருள்; புடமிட்டது. *n.* sublimation.

**Sublime,** *a.* விழுமிய; மதிப்பார்வ முண்டுபண்ணுகிற; வீறமைதி யுடைய. *n.* வீறமைதி நிலை. உயரிய கருத்து. *n. abs.* sublimity.

**Sublunar. Sublunary,** *a.* நில உலகுசார்ந்த; இவ் வுலகு சார்ந்த.

**Sub-magistrate,** *n.* துணைத் தண்டலாளர்.

**Submarine,** *a.* கடலின் கீழான. *n.* நீர் மூழ்கிக் (கப்பல்).

**Submerge,** *v.* நீரில் மூழ்கு; வெள்ளத்தினால் மூடப்பெறு. *n. abs.* submergence, submersion.

**Submit,** *v.* 1. (ஆட்சிக்கு) உட்படு; அடங்கு; கீழ்ப்படி; பணி. 2. முன் வை; முன்னிலைப்படுத்து; மேலனுப்பு; அனுப்பிக்கொடு; (1) *a.* submissive. (2) *n.* submission.

**Sub-montane,** *a.* மலைக் கீழதான.

**Sub-normal,** *a.* பொது இயல்பில் குறைந்த; இழிந்த; இழிநிலையான; தரங் குறைந்த.

**Subordinate,** *a.* கீழ்ப்பட்டு; தணிந்த படியிலுள்ள; (பணித் துறையில்) தாழ்ந்த; அடங்கிய; கீழடங்கிய; உட்பட்ட. *n.* கீழ்ப் பட்ட பணியிலுள்ளவர்; இரண் டாந்தரப் பணியாளர்; அடங் கியவர்; கீழ்ப்படியிலுள்ளவர். *v.* கீழ்ப்படுத்து; அடக்கு. *n.* subordination.

**Suborn,** *v.* உண்மையாக்கு; உடந்தையாக்கு. *n.* subornation.

**Subpoena,** *n.* முறைமன்ற அழைப்பு. *v.* முறைமன்றத்துக்கு வரக் கட்டளையிடு.

**Sub-registrar,** *n.* துணைப் பதிவாளர்.

**Subscribe,** *v.* கையொப்பமிடு; கீழ்க் குறிப்பிடு; இணக்கம் தெரிவி; வரியாளாகு; செய்தித்தாள் வரியாளாகப் பணம் செலுத்து; குழு வரி செலுத்து; பங்குவரி செலுத்து. *n. ag.* subscriber, பங்கு வரியாளர். *a. see* subscription.

**Subscript,** *n.* சிறிதாக எழுதப் படும் அடையாளக் குறி.

**Subscription,** *n.* (subscribe) (செய்தித்தாள், கழகங்கள், பொது நல நிலையங்களுக்கான) கட் டணம் செலுத்துதல்; கட்டணம்; பங்குவரி; (பங்கு வரியாளாக இடும்) கையொப்பம்; கூட்டுக் கோரிக்கையின் கீழ்க் கை யொப்பம்.

**Subsequent,** *a.* பின்னர் வருகிற; அடுத்தபடியான. *n.* subsequence. *adv.* subsequently.

**Subserve,** *v.* சார்பாயுதவு; உடந்தையாக உதவு.

**Subservient,** *a.* உதவுகிற; அடிமை போல் நடக்கிற. *n. abs.* subservience.

**Subside,** *v.* தணி; அமைதியாகு; கீழாகு. *n.* subsidence.

**Subsidiary,** *a.* (subsidy) உதவியா யிருக்கிற; முக்கியமல்லாத. *n.* துணைப் பொருள்; உதவியாள். *comb. n.* subsidiary alliance, (வரலாறு) துணைமைத் தொடர்பு.

**Subsidy,** *n.* பண உதவி; ஆதரவுத் தொகை; ஆதரவுக் கூலி; வரி; கப்பம்; திறை; ஊக்க உதவி. *v.* subsidize,-se. *a. see* subsidiary.

**Subsist,** *v.* உயிர் பிழைத்திரு; தொடர்ந்திரு. *n.* subsistence, பிழைப்பூழியம்; பிழைப்பூதியம்.

**Subsoil,** *n.* கீழ் மண்.

**Subspecies,** *n.* இன உட்பிரிவு.

**Substance,** *n.* பொருள்; சுருக்கம்; செல்வம். *a.* sustantial, 1. திடமாயடைந்துள்ள. 2. உண்மை யாயுள்ள. 3. போதுமான அளவுள்ள. *adv.* substantially. *n.* substantiality. *v.* substantiate உறுதியாக்கு.

**Substantive,** *n.* (இலக்.) எழுவாய்ச்சொல்; (மூவிடப் பெயருள்ளிட்ட) பெயர்ச் சொல்.

**Substitute,** *v.* பகரமாக வை; ஒன்றனிடத்தில் ஒன்று வை; *n.* பகரமானவர்; பதிலாள்; பகரமானது; பதிலானது; பகரப்பொருள். *n. abs.* substitution, பகர அமைவு; பகர அமைப்பு.

**Substratum,** *n.* (*pl.* - ta). கீழாயுள்ள படுகை; ஆதாரம்; அடிப்படை.

**Substructure,** *n.* கடைக்கால்; அடிப்படை; கீழ்க் கட்டுமானம்.

**Subsume,** *v.* உட்கொண்டிரு. *n.* subsumption.

**Subtenant,** *n.* கீழ்வாரியக்காரர்; கீழ்க்குடிக் கூலிக்காரர்; கீழ்க் குத்தகைக்காரர். *n. abs.* subtenancy.

**Subtend,** *v.* (இடக்கணக்கு) எதிரிணையாயமைந்திரு.

**Subterfuge,** *n.* மறைசெயல்; சூழ்ச்சி; குள்ளநரித்தனம்.

**Subterranean, subterraneous,** *a.* கீழ்நில; நிலவடியான; நிலவறை போன்ற.

**Subtle,** *a.* நுட்பமான; அறிவுக் கூர்மையுள்ள; சூழ்ச்சித் திறமுடைய; இரண்டகமான. *n. abs.* subtlety. *adv.* subtly.

**Subtract,** *v.* குறை; (கணக்கியல்) (சிற்றெண்ணைப் பேரெண்ணிலிருந்து) கழி. *n.* subtraction.

**Sub-treasury,** *n.* கிளைக் கருவூலம்.

**Suburb,** *n.* சுற்றுப்புறம்; புறஞ்சேரி; நகர்ச்சேரி. *a.* suburban.

**Subvention,** *n.* ஆதரவளித்தல்; (அரசியலார்) பண உதவி.

**Subvert,** *v.* தலைகீழாக்கு; கவிழ்; புரட்டு. *n.* subversion. *a.* subversive கவிழ்க்கிற; புரட்சித் தனமான.

**Sub-voucher,** *n.* துணை உறுதிச் சீட்டு.

**Succeed,** *v.* 1. வெற்றியடை. 2. பின் தொடர்; பின் மரபாகு; (அரசுநிலை, பணி) அடுத்து அமைவு பெறு (1) *n.* success, வெற்றி. *s.* successful. (2) *a.* sucessive, அடுத்தடுத்த. *a.* successional, மரபுரிமை சார்ந்த. *s.* succeeding, அடுத்த. *adv.* successively. முறையாக. *n.* succession, மரபு வழியுரிமை; மரபுத் தொடர்பு; பின் மரபுரிமை; மரபுரிமைப் பேறு. *n. pers.* successor. பின் மரபினர்; கால்வழியினர்; பின் தோன்றல்.

**Succinct,** *a.* சுருக்கமான; செறிந்த.

**Succour,** *n. v.* உதவி(செய்); உற்றிடத்துதவி (செய்).

**Succulent,** *a.* சாறு நிரம்பியுள்ள; கனிந்த *n.* succulence.

**Succumb,** *v.* எதிர்ப்புக் கைவிடு; முயற்சியிழ; தோல்வியுறு; கீழ்ப்படி; சரணடை, இற.

**Such,** *a., pron.* அதே போன்ற(து); முன் கூறியது போன்ற(து); அவ்வகையான(து).

**Suchlike,** *a., n.* ஒருவர் அல்லது ஒன்றைப்போன்ற (பிறர் அல்லது பிறபொருள்கள்).

**Suck,** *v.* உறிஞ்சிக் குடி; உறிஞ்சு; உட்கொள்; (குழந்தை) பால்குடி. *n.* உறிஞ்சுதல். *n. ag.* sucker, பால்குடி குட்டி; நீர் உயிர்வகை; உறிஞ்சு குழல்.

**Suckle,** *v.* (குழந்தைக்குத் தாய்) பால் கொடு; பால் குடிக்கவிடு.

**Suckling,** 1. *n.* பால்குடி குழந்தை; பாலன். 2. *pr. p.* of suckle.

**Suction,** *n.* (suck) உறிஞ்சுதல்; காற்றழுத்தத்தால் வாங்குதல். (suction-pipe வாங்குகுழாய்).

**Sudden,** *a.* திடீரென நிகழ்கிற; உடனடியான; எதிர்பாராத. *adv.* suddenly உடனே; எதிர்பாராமல்; *n. abs.* suddenness.

**Sue,** *v.* வழக்காடு; கெஞ்சிக் கேள்; (மாதினை) மணந்து கொள்ளும்படி கேள். *n. see* suit, suitor.

**Suet,** *n.* கொழுப்பு.

**Suffer,** *v.* துன்பப்படு; படு. பொறு; தாங்கு; பாதிக்கப் பெறு; பொறுத்திரு; செய்ய விடு; இணக்கங்காட்டு. *n. ag.* sufferer, *a.* sufferable. பொறுக்கக்கூடிய. *n. abs.* sufference, பொறுமை; இணக்கம். *a., n.* suffering, துன்பம் (படுகிற).

**Suffice,** *v.* போதுமானதாயிரு; தேவைக்குச் சரியாயிரு.

**Sufficient,** *a.* போதுமான. *n. abs.* sufficiency.

**Suffix,** *n.* பின்னிணைப்பு விகுதி. (*correl.* prefix)

**Suffocate,** *v.* திணறடி; மூச்சு முட்டவை; திக்குமுக்காடச் செய். *n.* suffocation.

**Suffrage,** *n.* மொழியுரிமை; தேர்வுரிமை. *n. pers.* suffratist நிறைமொழியுரிமைவாதி; பெண் மொழியுரிமை கோருபவர் *comb. n.* women's suffrage. பெண்டிர் மொழியுரிமைப் பேறு; மாதர் வாக்குரிமை; universal suffrage, அனைவர் மொழியுரிமை; மன்பதை வாக்குரிமை.

**Suffuse,** *v.* (நிறம், ஈரம் முதலியன) நன்கு பரவு. *n.* suffusion.

**Sugar,** *n.* சர்க்கரை. *v.* இனிப்பாக்கு. *a.* sugary. (*comb.*) *n.* sugar-candy. கற்கண்டு sugar-cane, கரும்பு.

**Suggest,** *v.* குறிப்பாகத் தெரிவி; கருத்தைத் தோற்றுவி. *a.* suggestive. *n.* suggestion.

**Suicide,** *n.* தற்கொலை; தற்கொலை செய்துகொள்பவர்; தற்கொலையாளர். *a.* suicidal.

*sui generis, a.* தனி முதன்மையுள்ள; பிறிதின் சார்பற்ற; தான் தோன்றியான.

*sui juris, a.* தன் உரிமையினாலான; தன்னுரிமையுடைய.

**Suit,** *n.* (sue) வழக்கு; வேண்டுகோள்; மனு; காதல் கோரல்; மணக் கோரிக்கை; விளையாட்டுச் சீட்டில் ஒரு வரிசை; உடைத்தொகுதி. *v.* தகுதியாயிரு; பொருத்தமாயிரு, பயன்படு. *a.* suitable. *pers. see* suitor. *comb. n.* full suit. முழு உடை; உடையங்கி. appeal suit. மேல் வழக்கு; original suit முதல் வழக்கு; முதல் தடவை வழக்கு;

pauper suit, பெண்கள் வழக்கு; ஏலான் வழக்கு.

**Suitcase,** *n.* கைப்பெட்டி.

**Suite,** *n.* உழையர்க்குழு; அடுக்கா யிருக்கும் பொருள்களின் கூட்டு.

**Suiting,** *n.* உடுப்புத் துணி.

**Suitor,** *n.* (sue) வழக்காடுபவர்; வாதி; மனுச் செய்பவர்; (பெண்ணின்) காதல் கோருபவர்; மணங் கேட்பவர்.

**Sulk,** *v.* முகறையை இழுத்துக் கொண்டிரு; வெறுப்பு; சினங் காரணமாகப் பாராமுகமாயிரு. *a.* sulky.

**Sullen,** *a.* சிடுசிடுப்பாயுள்ள. *n. abs.* sullenness.

**Sully,** *v.* கறைப்படுத்து.

**Sulphur,** *n.* கந்தகம். *s.n.* sulphate கந்தகி; கந்தக உப்பு. sulphide, கந்தகை. *a.* sulphureous, sulphuric.

**Sultan,** *n.* (*fem.* sultana) (முஸ்லிம் வழக்கு) அரசன். *n. abs.* sultanate, அரசு.

**Sultry,** *a.* புழுக்கமான; உள் வெப்பான; காற்று இறுக்கமான. *n. abs.* sultriness.

**Sum,** *n.* கூட்டுத்தொகை; மொத்தம்; பணத்தொகை; (விடை கண்டறிய வேண்டிய) கணக்கு. *v.* கூட்டுத் தொகை கண்டுபிடி. *phr. v.* sum up, சுருக்கமாகக் கூறு.

**Summary,** *a.* சுருக்கமான; விரைவில் செய்யப்பட்ட, *n.* சுருக்கம்; பொழிப்பு. *adv.* summarily, சட்டென்று; உசாவுதலின்றி; நடைமுறைப் படிகளில்லாமல்; மொத்தமாக. *v.* summarize. -se.

**Summation,** *n.* (sum) கூட்டுத் தொகை கண்டுபிடித்தல்.

**Summer,** *n.* கோடைக்காலம்; முதுவேனில். (*comb.*) *n.* summer-house. வேனில் மாளிகை; வேனிலகம்.

**Summersault, summerset,** *n.* (*see* somersault.).

**Summit,** *n.* உச்சி; பொருட்டு; முகடு.

**Summon,** *v.* வரவழை; முறை மன்றம் வர உத்தரவிடு; (கூட்டத் திற்கு) அழைப்பு அனுப்பு. *n.* summons. (*pl.* summonses) முறைமன்ற அழைப்பு.

**Summum bonum,** *n.* மிகச் சிறந்த நன்மை; உச்ச அளவு நன்மை.

**Sumptuous,** *a.* நிறைவுடைய; குறைவற்ற; முழு உயர்வுடைய *n. abs.* sumptuousness.

**Sun,** *n.* கதிரவன்; வெயில். *n.* வெயிலில் காய வை. *a.* sunny, ஒளி பிறங்குகிற; உவகையுள்ள.

**Sunbird,** *n.* தேன் சிட்டு.

**Sunburnt,** *a.* வெயிலினால் கறுத்த.

**Sunday,** *n.* ஞாயிற்றுக்கிழமை.

**Sunder,** *v.* இணைப்பை அறு.

**Sundry,** *a.* பலவகைப்பட்ட; சில்லறையான. *n. (pl.)* sundries, சில்லறைப் பொருள்கள்; சில்லறைச் செலவுகள்.

**Sun-flower,** *n.* சூரியகாந்தி (ச் செடி, மலர்)

**Sung,** *v. see* sing.

**Sunk, sunken,** *v. see* sink.

**Sunlight,** *n.* வெயில்.

**Sunny,** *a.* ஒளி பிறங்குகிற. உவகையுள்ள. *n. abs.* sunniness.

**Sunrise,** *n.* விடியல் (காலம்).

**Sunset,** *n.* ஞாயிறடைவு.

**Sunshade,** *n.* வெயில் தாங்கி; வெயில் மறைப்புத் (திரை); மேல்தட்டி; இளங்குடை.

**Sunshine,** *n.* வெயில்; கதிரொளி.

**Sunspot,** *n.* செங்கதிர்க்கறை; (ஞாயிற்றுப் பிழம்பிலுள்ள) கரும்புள்ளி.

**Sunstroke,** *n.* கடும்வெயிலால் ஏற்படும் மயக்கநோய்.

**Sup,** *v.* கரண்டியிலிருந்து உறிஞ்சு; மாலையுணவு சாப்பிடு. *n.* ஒருவாய் தேறல்.

**Super.** (முன்னிணைப்பு விகுதி) மேலான; மிகுதியான; பொது நிலை கடந்த.

**Superabound,** *v.* ஏராளமாயிரு.

**Superadd,** *v.* மேலும் மிகுதியாக்கு.

**Superannuate,** *v.* நாட்பட்டதெனத் தள்ளு; வயதானமையால் வேலையிலிருந்து விலக்கு; உதவிச் சம்பளத்துடன் ஓய்வு கொடு. *a.* superannuated மிக வயது முதிர்ந்த; தளர்வயதுடைய; வயது கடந்த. *n.* superannuation வயது முதிர்வு; நீள் முதமை; படுகிழப்பருவம்.

**Superb.** *a.* (superior, supreme), மிகச் சிறந்த.

**Supercilious,** *a.* அடம்பிடித்த; தற்பெருமைமிக்க; அசட்டை செய்கிற. *n. abs.* superciliousness.

**Superficial,** *a.* மேலெழுந்தவாறான; ஆழமில்லாத; மேலீடான. *n. abs.* superficiality.

**Superfine,** *a.* மிக மேன்மையான; மிக நுட்பமான.

**Superfluous,** *a.* தேவைக்கு மேற்பட்டு; தேவையில்லாத. *n. abs.* superfluity.

**Superhuman,** *a.* மனித எல்லை மீறிய.

**Superimpose,** *v.* ஒன்றின் மீது மற்றொன்றை வை; மேலும் சுமத்து.

**Superintend,** *v.* மேற்பார்வை செய். *n. abs.* superintendence, *n. pers. a.* superintendent மேற்பார்வையாளர் (ஆன)

**Superior,** *a.* மேம்பட்ட (*cf* superb. supreme, உயர்வான; சிறந்த. *n.* உயர் பதவி வகிப்பவர்; துறவி; மடத் தலைவர்; தலைவன்; தலைவி. *n. abs.* superiority.

**Superlative, (degree).** *a.* தலைசிறந்த; உச்ச; உயர்வான; (இலக்.) உறுமிகுதி காட்டுகிற.

**Superman,** *n.* மனித வரம்பு கடந்த திறலோர்; மீமனிதர்.

**Supermundane,** *a.* இவ்வுலகத்துக்கு அப்பாற்பட்ட.

**Supernal,** *a.* நிலவுலகுகடந்த; வானுலகுக்குரிய.

**Supernatural,** *a.* இயற் கை கடந்த; பொது இயல்பு கடந்த; தெய்விக

மான. *a.* supernaturalism, இயற்கைகடந்தவற்றில் நம்பிக்கை. *n. pers.* supernaturalist.

**Supernumerary,** *a., n.* தேவையான எண்ணிக்கைக்கு மேற்பட்ட (ஆள்).

**Superphosphate,** *n.* மீளரியகி.

**Superphysical,** *v.* பருப்பொருளமைதி கடந்த; உடலமைதி கடந்த.

**Superscribe,** *v.* மேலே எழுது. *n.* superscription, முகவரி.

**Supersede,** *v.* (மற்றொன்றின்) இடம் கைக்கொள்; தள்ளிவை; ஒதுக்கு. *n.* supersession.

**Superstition,** *n.* மூடநம்பிக்கை. *a.* superstitious.

**Superstructure,** *n.* மேற்கட்டுமானம்.

**Supertax,** *n.* மேல்வரி; மிகைவரி.

**Supervene,** *v.* மீதாக நிகழ்; இடையூறாக நிகழ். *n.* supervention.

**Supervise,** *v.* மேற்பார்வை செய். *n.* supervision, மேற்பார்வை; கண்காணிப்பு. *n. ag. pers.* supervisor, 'மீகண்', மேற்பார்வையாளர்; கண்காணிப்பாளர்.

**Supine,** *a.* மல்லாந்து கிடக்கிற; சோம்பேறியான. *n. abs.* supineness, சோம்பல்; (கவலையற்ற) இறுமாந்த நிலை.

**Supper,** *n.* மாலையுணவு; இரவுணா.

**Supplant,** *v.* மற்றொன்றின் இடத்தை அடை; பிறர் உரிமை பெறு.

**Supple,** *a.* எளிதில் வளைகிற; குழைவான; ஒசிவான; துவள்கிற. *n.* suppleness.

**Supplement,** *n.* குறைவு நிரப்பு; பின் சேர்க்கை பின்னுரை; (வடிவியல்) நேர்கோணில் (180 பாகையில்) குறைநிரப்பும் கோணமானம், நேர் குறைமானம், *v.* பிளவு நிரப்பு; குறை நிரப்பு; சேர்ந்து நிரப்பு, மிகையாகச் சேர், பின் சேர்; பின்னொட்டு *a.* supplemental, supplementary குறை நிரப்பான; நேர்குறைமானமான. *comb. n.* supplementary angle, நேர்குறை கோணம். supplementary angles, குறைநேர் இணை கோணங்கள், supplementary questions (சட்டமாமன்றம்) மேல்நிறை கேள்விகள்.

**Suppliant,** *a.* கெஞ்சிக் கேட்கிற; இரந்து வேண்டுகிற. *n.* இரப்பவர்; ஆர்வத்துடன் வேண்டுகிறவர். *v.* supplicate, *n.* supplication *a.* supplicatory, இரந்து வேண்டப்படுகிற.

**Supply,** *v.* (தேவையானதைத்) தருவித்து வழங்கு; அளி; நிரப்பு. *n.* கொடுக்கப்படும் சரக்கு; தரவு, *(pl.)* supplies, தருவித்த (உணவு) முதலிய பொருள்கள். *n. ag. pers.* supplier.

**Support,** *v.* தாங்கு; ஆதரி; பொறுத்திரு; உதவிசெய். *n.* ஆதரிப்பவர்; ஆதாரப் பொருள். *a.* supportabe. *n. ag. pers.* supporter.

**Suppose,** *v.* எண்ணு; பாவி; புனைந்துகொள்; உண்மை யெனத் தற்காலிகமாகக் கொள். *adv.* supposedly. *n.* supposition. *a.* suppositional. suppositious. supposititious.

**Suppository,** *n.* (புடை வைத்த இடத்தில் அடைக்கும்) மருந்து அடைப்பு.

**Suppress,** *v.* அடக்கி வை; நிறுத்திக்கொள்; வெளி விடாதிரு. *a.* suppressible, suppressive. *n.* suppression. *n. pers.* suppressor.

**Supreme,** *a.* (cf. superb, superior.) தலைசிறந்த; முதன்மை யான; யாவருக்கும் மேலான; தலைமையான; தலை முதலான; நடுவரசுக்குரிய; மேலரசு சார்ந்த; பேரரசுக்குரிய. *n.* supremacy, மேலாண்மை; மேலாட்சி; தனி முதன்மை. *adv.* supremely.

**Surcharge,** *n.* மிகுவரி; மிகுதிப் படி கட்டணம்; தண்டக் கட்டணம்; மிகுதிப்படி பளு. *v.* மிகுபளு ஏற்று; மிகுதிப்படி கட்டணம் விதி.

**Surcoat,** *n.* மேலங்கி.

**Surd,** *n.* (இலக்.) வல்லோசை மெய் ஒலி (எழுத்து); (கணக்கியல்) பகுபடா எண்; (பதின் கூற்றில்) தீராக் கீழ்வாய்.

**Sure,** *a. adv.* தவறாத; உறுதியான; நம்பகமான. *adv* surely. *n.* surety, உறுதிப்பாடு; பிணை; பிணை ஆள்; மேல் ஒப்பம்.

**Surf,** *n.* அலை; கரை மோதும் அலை; நுரையுடன் தாக்கும் அலை.

**Surface,** *n.* மேற்பரப்பு.

**Surfeit,** *n.* தெவிட்டுதல். *v.* தெவிட்டு.

**Surge,** *n.* பெரிய அலை; அலை உயர்ந்து தாழ்தல். *v.* அலை போல் எழு; (கூட்டம் நெருக்கடி யால்) முன்னும் பின்னும் அலைபாய்; அல்லாடு.

**Surgeon,** *n.* அறுவை மருத்துவர்; அறுவைவாணர்; அறுவை வல்லுநர். *n. abs.* surgery, அறுவை மருத்துவம். *a.* surgical. *comb. n.* surgeon-general, அறுவை முதல்வர்.

**Surly,** *a.* வெடுவெடுப்பான. *n. abs.* surliness.

**Surmise,** *n.* ஊகம். *v.* ஊகி.

**Surmount,** *n.* ஏறு; கட; ஏறிக் கடந்து செல்; வெற்றி கொள். *a.* surmountable.

**Surname,** *n.* குடும்பப் பெயர்; துணைப் பெயர்.

**Surpass,** *v.* மேம்படு; சிறந்த தாகு. *a.* surpassing. *adv.* surpassingly.

**Surplice,** *n.* (மத குருவின் பணித்துறைச் சார்பான) வெண்ணிற அங்கி.

**Surplus,** *n.* தேவைக்கு மிகுதி; மிகுதிப்படி. *n. abs.* surplusage. மிகுதிப்பாடு.

**Surprise, n** வியப்பி; திடுக்கிடல், *v.* திடுக்கிடச் செய்; வியப்

படையச் செய். *a.* surprising. *n.* surprisal, வியப்பூட்டல்.

**Surrender,** *v.* எதிர்ப்பைக் கை விடு; கீழ்ப்படி; விட்டுக் கொடு; சரணடை; பொறுப்பு விட்டுக் கொடு; (பொறுப்பு) ஒப்படை. *n.* சரணடைவு; கீழ்ப்படிவு.

**Surrepitious,** *a.* வஞ்சனையான; திருட்டுத்தனமாகச் செய்யப் பட்ட.

**Surround,** *n.* சுற்றிவளை; சூழ்; *n. (pl.)* surroundings சுற்றுப்புறம்; சூழல்; சூழ்நிலை.

**Surtax,** *n.* மிகைவரி.

**Surveillane,** *n.* கண்காணிப்பு; காவல்.

**Survey,** *v.* **sur-vey,** பார்; (நிலை) அளவிடு; மனையள; எல்லை யள; அளவாராய்; மேற்பார்; மதிப்பிடு. *n.* (sur'vey) பார்த்தல்; (நிலம் முதலியன) அளவிடல்; மனையளவை; அளவாய்வு; மதிப்பிடு; மேற்பார்வை. *n.* surveying. *n. pers.* surveyor. அளவர்; அளவாயர்; அளவாய் வாளர்.

**Survive,** *v.* பிழைத்துவாழ்; தொடர்ந்துவாழ். *n.* survival (நிகழ்ச்சி, பிறர் வாழ்வுக் காலம்) கடந்து வாழ். *n. pers.* survivor. *n. abs.* survivorship ஒருவர் இறந்த பின் மற்றவருக்குள்ள உரிமை.

**Susceptible,** *a.* (எளிதில்) பதியத்தக்க; ஏற்குந்தன்மையுள்ள. *n.* susceptibility.

**Suspect,** *v.* ஐயங்கொள்; நம்பிக்கை யிழ. *n.* ஐயத்துக்கிடமானவர், ஐயுறவாள். *n. see* suspicion.

**Suspend,** *v.* தொங்கவிடு; (சிறிது காலம்) நிறுத்திவை; (வேலையி லிருந்து) விலக்கி வை. *n. ag.* suspender, தொங்கவிட உதவும் சாதனம். *n. see* suspense, suspension.

**Suspense,** *n.* (suspend) உறுதி யின்மை; ஐயப்பாடு; ஊசலாட்டம். *comb. n.* suspense-account தற்காலிகக் கணக்கு; இடைக் கணக்கு; தனிக் கணக்கு.

**Suspension,** *n.* **(suspend)** தொங்கவிடுதல்; தாமதம்; நிறுத்தி வைத்தல்; (சிறிது) காலம் வேலை யிலிருந்து) விலக்கி வைத்தல்.

**Suspicion,** *n.* (suspect) நம்பிக்கையின்மை; ஐயப்பாடு. *a.* suspicious. *n. abs.* suspiciousess.

**Sustain,** *v.* பொறு; ஆதரி வலிமையளி. *a.* sustainable. *n.* sustainment; *see.* sustenance.

**Sustenance,** *n.* (sustain) ஆதாரப்பொருள்; உணவு; வாழ்க்கைப் பிழைப்பு.

**Suture,** *n.* தையல்; மண்டை எலும்புப் பொருத்துவாய்.

**Suzerain,** *n.* மேலரசுரிமை.

**Swab,** *n.* (கப்பல்) துணித் துடைப்பம். *v.* துடை.

**Swaddle,** *v.* துணியால் கட்டு.

**Swag,** *n.* திருட்டு ஆதாயம்.

**Swagger,** *v.* வீம்புடன் கை வீசி நட. *n.* வீம்பு நடை வீறாப்புப் பேச்சு.

**Swain,** *n.* குடியானவன்; ஊர்ப்புறத்தான்.

**Swallow,** 1. *n.* குருவி வகை; தூக்கணாங் குருவி. 2. *v.* விழுங்கு; உறிஞ்சு; ஆராயாது ஏற்றுக்கொள்; தான் கூறியதை மறை.

**Swamp,** *n.* சதுப்பு நிலம்; சேறு. *v.* அமிழ்ந்து போ; மேல் விழுந்து அடக்கு. *a.* swampy.

**Swan,** *n.* அன்னப்புள்; எகினம்; பாடகர்; ஒரு கவி. *a.* swanlike அன்னம்போன்ற; அன்னம் போன்றினிய. *comb. n.* swansong இறக்குமுன் பாடும் கடைசிப் பாட்டு; இறுதிப் பெருஞ் செயல்.

**Sward,** *n.* பசும்புல் வெளி.

**Swarm,** *n.* திரள்; (தேனீக் கூட்டம். *v.* கும்புகூடு) மொய்.

**Swarthy,** *a.* கறுத்த. *n. abs.* swarthiness.

**Swash,** *n.* நீர் மோதும் ஒலி. *v.* மோது. (*comb.*) *n.* swash buckler, வீம்பு வீரன்; முரடன்.

**Swat,** *v.* அடித்து நசுக்கு.

**Swath,** *n.* அறுவடைத்தாள்.

**Swathe,** *v.* வரிந்து போர்த்து; வரிந்து கட்டு.

**Sway,** *v.* ஊசலாடு; தள்ளாடு; ஒருபுறஞ்சாய்; செல்வாக்குப் பெறு; ஆட்சி செய்; *n.* ஆட்டம்; இயக்கம்; இழுப்பாற்றல்; செல்வாக்கு ஆற்றல்; ஆட்சி.

**Swear,** *v.* (swore or sware, sworn) உறுதியாகக் கூறு; ஆணையிட்டு வசை மொழி கூறு. *n.* வஞ்சினமொழி.

**Sweat,** *n.* வேர்வை. *v.* வேர்வை வெளிப்படு; உழை. *n.* sweater, கம்பளிச் சட்டை.

**Swede,** *n.* ஸ்வீடன் நாட்டுக்காரர். *a.* swedish.

**Sweep.** *v.* (swept) துடைப்பத்தால் பெருக்கு; தூர்; துடை; துடைத்தழி; வீசிச் செல்; வேகமாகச் செல்; விரைவாகப் பார்த்தறி; பெருமிதத் துடன் நட. *n.* வீசிச் சென்ற பரப்பு; (கோட்டின்) அளவு; வளைவு; கோட்டின் அகலம்; (chimney-sweep) புகை போக்கியைத் துடைப்பவர். *n. ag. pers.* sweeper; பெருக்கு பவர்; தூர்ப்பவர்.

**Sweeping,** *a.* மிகப் பரந்த; எல்லாம் தழுவுகிற; மிகைப் படையான. *n. (pl.)* sweepings. குப்பை.

**Sweepstake,** *n.* குதிரைப் பந்தயச் சூதாட்டம்.

**Sweet,** *a.* இனிமையான; தித்திப்பான; மகிழ்ச்சி தருகிற; நறுமணமுள்ள; அமைதிக் குணமுள்ள. *n.* இனிப்பு; தித்திப்பு; இனிப்புப் பண்டம். *n. (pl)* sweets. இனிப்புப் பண்டங்கள் *n. abs.* sweetness. *v.* sweeten.

**Sweetheart,** *n.* உள்ளக் காதலர்; உள்ளக் காதலி.

**Sweetmeat,** *n.* தின் பண்டம்.

**Sweet potato,** *n.* சர்க்கரை வள்ளிக்கிழங்கு.

**Swell,** *v.* (swelled, swollen or swelled) வீங்கு; அலையெழு; பருமனாகு; உரத்த ஒலியாகு. *n.* வீக்கம்; ஒலி உரத்தாதல்; மேட்டு நிலம்; பெரிய அலை; கடல் எழுச்சி; பகட்டாக உடை யணிந்தவர்; பகடி.

**Swelter,** *v.* புழுங்கு.

**Swept,** *v. see* **sweep.**

**Swerve,** *v.* நெறி திறம்பு; வழி பிறழ்; திரும்பு.

**Swift, 1.***a.* விரைவான. 2. *n.* ஒருவகைக் குருவி; ஒருவகைச் சிறு பல்லி; (நூலைப் பிரிக்க உதவும்) திரிவட்டம். (1) *n. abs.* swiftness.

**Swill,** *n.* கீழ்த்தரக்குடி; பன்றித் தொட்டி நீர். *v.* மட்டுமிஞ்சிக் குடி.

**Swim,** *v.* (swam, swum) நீந்து; நீந்தச் செய்; மித; தலைசுற்று. *n.* நீந்துதல்; மிதந்து செல்லல். *n.* swimming. *adv.* swimmingly. எளிதாக; வெற்றிகரமாக. *comb. n.* swimming pool. நீந்துத் தொட்டி; நீர்த்தரை; நீந்தரங்கம்.

**Swindle,** *v.* மோசடி செய். *n.* மோசடி; சூது. *n. pers.* swindler.

**Swine,** *n.* (*pl.* swine) பன்றி. *a.* swinish பன்றி போன்ற; முரடான.

**Swing,** *v.* (swung). ஊசலாடு; முன்னும் பின்னும் அசை; தூக்கிவிடப் பெறு; கைவீசி நட. *n.* ஊஞ்சல்; ஊசலாட்டம்; (கேலி வழக்கு) தூக்கு.

**Swingle,** *n.* சணலை அடித்து நாரைப் பிரிக்கும் கருவி. *n.* swingletree, நுகத்தடி.

**Swirl,** *v.* சுழன்று ஓடு. *n.* சுழல்.

**Swish,** *v.* கசை அல்லது பிரம்பினால் அடி. *n.* கசை அல்லது பிரம்பை வீசும் ஒலி.

**Swiss,** *a., n.* ஸ்விட்ஸர்லாந்து நாடு சார்ந்த (ஆள்).

**Switch,** *n.* மிலாறு; மின் சார விசையாணி; விசைக்குமிழ். *n.* கோலினால் அடி; தண்ட வாளத்தில் வண்டியைத் திருப்பு; மின் சார விசை திருப்பு. *phr. v.* switch on, (விளக்கு) ஏற்று, switch off, அணை.

**Swivel,** *n.* ஒன்றன் மீது ஒன்று சுழலும்படியாக அமைத்த மூட்டு; சுழல் மூட்டு.

**Swollen,** *v. see* swell.

**Swoon,** *v.* மயக்கமடை. *n.* மயக்கம்.

**Swoop,** *v.* (பருந்துபோல்) பாய்ந்து இறங்கு; வேகமாகத் தாக்கு. *n.* பருந்துப் பாய்ச்சல்; திடீர்த் தாக்குதல்.

**Sword,** *n.* வாள்; (வாள்) வலிமை. (*comb.*) *n.* swordcraft, sword play, வாள் பயிற்சி swordsman, வாள் (பயிற்சி) வீரன். *n. abs.* swordsmanship.

**Swore, sworn,** *v. see* swear.

**Swum,** *v. see* swim.

**Swung,** *v. see* swing.

**Syce, sice,** *n.* குதிரைக்காரன்.

**Sycophant,** *n.* அண்டிப் பிழைப்பவன்; பிறன் புகழ் பாடுபவன். *n.* sycophancy. *a.* sycophantic.

**Syllable,** *n.* (சொல்லின் பகுதி யான) அசை. *a.* syllable. *v.* syllabify.

**Syllabus.,** *n.* (*pl.* syllabi, syllabuses) பாடத்தொகுதி; பாட அட்டவணை; பாடத் திட்டம்; வேலைபற்றிய கால அட்ட வணை.

**Syllepsis,** *n.* (அணியியல்) இரு சொல் தழுவும் அடைமொழி மயக்கம். *a.* sylleptic.

**Syllogism,** *n.* (வாய்வியல்) முக்கூற்று முடிவு; தேர் முடிவு. *a.* syllogistic(al). *v.* syllogize, -se.

**Sylph,** *n.* அரமகள்; அணங்கு; வனப்பு வாய்ந்த பெண்.

**Sylvan,** *a. see* silvan.

**Sylviculture,** *n. see* silviculture.

**Symbol,** *n.* அறிகுறி; அடை யாளம். *a.* symbolic(al). *n. abs.* symbolism, குறிப்பு அடையாள முறைமை. *v.* symbolize, -se.

**Symmetry,** *n.* அந்த சந்தம்; செவ் வு; செவ் வொழுங்கு; செப்பம்; இருசிறை இசைவு. *a.* symmetric(al).

**Sympathy,** *n.* இரக்கம்; ஒத்துணர்வு. *a.* sympathetic. *v.* sympathize, -se.

**Symphony,** *n.* இசை ஒப்பு; இணைப்பிசை; ஒத்திசைத்தல். *a.* symphonious.

**Symposium,** *n.* பல் கூட்டுத் தொகுதி; புலவர் கழகம் (செய்தித் தாள்) பலர் கருத்துத் திரட்டு.

**Symptom,** *n.* நோய் அறிகுறி; முன் அறிகுறி. *a.* symptomatic.

**Synchronize, - se,** *v.* ஒத்து நிகழ்; ஒரே காலத்தில் செய். *a.* synchronism, synchronization, -sation. *a.* synchronous.

**Syncopate,** *v.* (இலக்.) இடை யெழுத்துக் கெடு. *n.* syncopation. (இலக்கணம்; எழுத்து, ஒலி) இடை கெடல் (விகாரம்)

**Syncope,** *n.* இடைக் குறைச்சொல்; இதயத் துடிப்பு நின்று உண்டாகும் மயக்கம். *a.* syncop(t)ic.

**Syndicalism,** *n.* தொழிலாளர்களே தம் ஆட்பேர் மூலமாகத் தொழிற் சாலைகளை நடத்த வேண்டு மென்ற கோட்பாடு; தொழிலாளர் ஆட்சி முறைமை.

**Syndicate,** *n.* செயல்முறைக் கூட்டு; செயலாட்சிக் கழகம்; ஆட்சிக் குழு. *a.* syndicated. *n.* syndication. செயல்முறைக் கூட்டம் நிறுவுதல்.

**Synecdoche,** *n.* (இலக்.) சினை யாகு பெயர்; முதலாகு பெயர்.

**Synod,** *n.* கோயில் கூட்டம்; திருக்கூட்டம்.

**Synonym,** *n.* (x antonym) ஒரு பொருள் பிற சொல். *a.* synonymous.

**Synopsis,** *n.* சுருக்கம்; பொழிப்பு. *a.* synoptic(al).

**Syntax,** *n.* சொற் றொடரிலக்கணம். *a.* syntactic.

**Synthesis,** *n.* (*pl.* syntheses) இணைப்பு; தொகுப்பு; தொகுத்தல். (x analysis) *a.* synthetic(al). *v.* synthesize, - se.

**Syphilis,** *n.* மேக நோய்.

**Syringe,** *n.* பீச்சாங்குழல். *v.* நீரைப்பிலிற்று.

**Syrup,** *n.* தேம்பாகு; இனிய குழம்பு நீர்.

**System,** *n.* ஏற்பாடு முறைமை; உறுப்புகளின் தொகுதி; ஒழுங் கமைப்பு; அமைப்பு. *a.* systematic. ஒழுங்கு முறையான. *v.* systematize, -se.

**Systole,** *n.* இதயம் சுருங்கல். *a.* systolic.

# T

**Tab,** *n.* நாடா; கழுத்துப் பட்டையிலுள்ள குறி.

**Tabard,** *n.* மேல் அங்கி.

**Tabaret,** *n.* திரைத்துணி.

**Tabby,** *n.* வரிநிறப் பூனை; வம்பி; அலை ஆடை. *v.* ஆடைக்கு அலைத்தோற்றம் அளி.

**Tabernacle,** *n.* சிறுகோயில்; கூடாரம்; சிறு குடிசை; மனித உடல். *v.* தங்கு.

**Tabes,** *n.* உடல் உருக்கி நோய்.

**Table,** *n.* மேசை; மேசை உணவுப் பந்தி; கலைப்பட்டி; அட்டவணை. *v.* மேசைமீது வை; பத்திகளில் அமை. (*see* tabular, tabulate.)

**Tableau,** *n.* (*pl.* tableaux), ஓவியப் பலகை; ஓவியப் பட்டி.

**Table-land,** *n.* மேட்டுச் சமவெளி.

**Tablet,** *n.* வரையப்பட்ட தகடு; மாத்திரை; குளிகை.

**Table-tennis,** *n.* மேசைப் பந்து.

**Tabloid,** *n.* சிறு மாத்திரை.

**Taboo,** *n.* தீட்டு; விலக்கு. *v.* ஒதுக்கிவை.

**Tabor,** *n.* முழா; மத்தளம்; தவுல்.

**Tabular,** *a.* (table) தகடுகளாக அமைந்த; அட்டவணைப் படுத்தப்பட்ட; வரிசைப்படுத்தப் பெற்ற.

**Tabulate,** *v.* (table) வரிசைப் படுத்து; அட்டவணையில் அமை.

**Tachometer,** *n.* வேகமானி.

**Tacit,** *a;* வெளிப்படையாயில்லாத; குறிப்பாயமைந்துள்ள; வாய் பேசாத.

**Taciturn,** *a.* வாயடக்கமான. *n. abs.* taciturnity.

**Tack,** *n.* ஆணி; கட்டுத்தையல்; (கப்பல்) பாலக்கயிறு. *v.* பாயிழுத்துக் கட்டு; ஒட்டுத் தையலிடு; பொருத்து; (பாய்மரக் கப்பல்) திசை மாறிச் செல்.

**Tackle,** *n.* கப்பல் பாய்மரக் கருவிகள்; மீன் பிடி கருவிகள். *v.* ஊக்கத்துடன் முயற்சி செய்; எதிர்த்துப் போராடு; சமாளி.

**Tact,** *n.* செயல்நயம்; நுண்திறம். *a.* tactful. *a. (neg).* tactless. *s. n. see* tactics.

**Tactics,** *n.* நுண் நயமுறை(கள்); நயத்திற நடவடிக்கை. *a.* tactical.

*n. pers.* tactician/ நயமுறை வாணன்; நடைநய முடையவர்.

**Taffeta,** *n.* பட்டுத்துணிவகை

**Tag,** *n.* கோப்புநாடா; நாடாவின் நுனி; தொங்கும் முனை; பிற் சேர்க்கை; நடிகரின் இறுதிச் சொல்; ஓடிப் பிடிக்கும் விளையாட்டு. *v.* பிறசேர்க்கை சேர்; இணை.

**Tagrag,** *n.* வறியோர்.

**Tashildar,** *n.* (இந்திய வழக்கு) வட்டத் தலைவர்.

**Tail,** *n.* வால்; பின் பகுதி; புடையர் குழு.

**Tailings,** *n. (pl.)* பதர்; உமி. தவிடு, தாதுப் பொருள்கள்; உருகுவதில் கழிவு.

**Tailor,** *n.* (*fem.* tailoress). தையல்காரன். *v.* தை. *n.* tailoring.

**Taint,** *v.* கறைப்படுத்து; கெடு. *n.*கறை; பழுது; மாசு.

**Take,** *v.* (took, taken) எடு; கைப்பற்று; ஏற்றுக்கொள்; கவர்; கொண்டுசெல்; மரபு வழிப் பெறு (take after). *n.*கைப்பற்றிய அளவு, பிரித்த பணம்; (ஒரு தடவை) பிடித்த மீன். *a.* taking, கவர்கிற தோற்றுகிற. *n. (pl.)* takings, பேறு; வருவாய்.

**Tale, 1.** *n.* கட்டுக்கதை; பொய்க்கதை; வம்பளப்பு; கோள் சொல். 2. எண்ணிக்கை. 3. *n.*காக்காய்ப் பொன் தகடு; மாக்கல் வகை. 4. *n. pl. see* tales. (1) (*comb.*) *n.* talebearer, tale. teller, கோள் சொல்லி. *a. see* tell-tale.

**Talent,** *n.* 1. *n.* பண்டைய நாணய வகை. 2. *n.* திறமை; திறமைக் கூறு. (2)*a.* talented.

**Tales,** 1. *n.* (tale) சான்றாளர் அழைப்பு. 2. *pl. see* tale. *n. pers.* talesman.

**Talipot, taliput,** *n.* பனை மரம்.

**Talisman,** *n.* தாயத்து; மெய் காப்பு. *a.* talismanic.

**Talk,** *v.* பேசு; சொற்பொழிவு செய்; (ஒன்றை;ப பற்றிக்) கூறு. *n.* பேச்சு; உரையாடல்; ஊரலர்; தூற்றுரை. *n. ag. pers.* talker. *a.* talkative. பேச்சில் விருப்பமுள்ள; வாயாடி யான. *n. abs.* talkativeness. *s. n. se*e talkies.

**Talkies,** *n. (pl.)* (talk) (*sing.* talkie) பேசும் படங்கள்.

**Tall,** *a.* உயரமான நெட்டையான; வீறாப்பான. *n. abs.* tallness.

**Tallow,** *n.* கொழுப்பு மெழுகு. *v.* கொழுக்க வை; கொழுப்பினால் பூசு.

**Tally,** *n.* இரட்டைக் கணக்கு; எதிர் கணக்கு, *v.* இரட்டுறக் குறி; பொருந்தச் செய்; சரி பார்.

**Talon,** *n* இரைப் பறவையின் நகம்; உகிர்.

**Taluq, taluk,** *n.* (இந்திய வழக்கு) கூற்றம்; வட்டம்.

**Tamarind,** *n.* புளி(யமரம்.)

**Tambourine,** *n.* இசைக்கருவி வகை.

**Tame,** *a.* பழகிய ஊக்கமற்ற; கீழ்ப்படிதலுள்ள. *v.* மூர்க்கத் தன்மை குறை; பழக்கு. *a.*

tamable. *n.* tameness. *adv.* tamely.

**Tamper,** *v.* உரிமையின்றித் தலையிடு; நேர்மையின்றி மாறுதல் செய்; தவறாகக் கையாடு.

**Tan,** *n.* தோல் பதனிட உதவும் மரப்பட்டை; பழுப்பு நிறம். *v.* தோலைப் பதனிடு; பழுப்பு. நிறமாக்கு. *n.* tanning. *n. ag.* tanner.

**Tan,** *v.* (tanned) (தோல்) பதனிடு; தவிட்டு நிறமாக்கு; செப்பு நிறமாக வாட்டு. *n. ag.* tanner, தோல் பதனிடுபவர். *n. abs.* tannery, பதனிடும் தொழில் (சாலை). *pr. p.* tanning. தோல் (பதனிடும்) தொழில்.

**Tandem,** *adv.* ஒன்றின் பின் ஒன்றாக. *n.*ஒன்றின் பின் ஒன்றாக இணைத்த குதிரைகள் இழுக்கும் வண்டி.

**Tang,** *n.* (கருவிகளின்) கைப்பிடியுள் மறைந்த பகுதி; சுவை விருவிருப்பு. *n. v.* கணீர் ஒலி (செய்).

**Tangent,** *n.* (இடக்கணக்கியல்) (வட்டத்தின்) தொடுகோடு *n. abs.* tangency. *a.* tangential.

**Tangible,** *a.* தொட்டு அறியக் கூடிய; தெளிவாகத் தெரிகின்ற. *n. abs.* tangibility, tangiblenss.

**Tangle,** *v.* சிக்கலாக்கு; குழப்ப மாகச் செய். *n.*சிக்கல்; குழப்பம். *a.* tanglesome.

**Tank,** 1.*n.* (போர்த்துறை) இயங்குகோட்டை; உந்து கோட்டை; உருள் கோட்டை. 2. *n.*தொட்டி; குளம்.

**Tank-bed,** *n.* குளத்தின் உள்வாய்.

**Tanker,** *n.* எண்ணெய்க் கப்பல்.

**Tantalize-se,** *v.* ஆசைகாட்டி ஏமாற்று; நம்பவைத்து மோசம் செய்; மலைக்க வை. *adv.* tantalizingly, - singly.

**Tantamount,** *a.* சமமான; நிகராயுள்ள.

**Tap,** 1.*v.* இலேசாக அடி; தட்டு. 2.*n.*குழாயின் திருகு பிடி. 3. *v.* துளையிடு; வடி; முயற்சிசெய்து பார்; நாடிப் பார். (3) *see* taproom, tapster.

**Tape,** *n.* நாடா; (நாடா போன்ற) துணி; தாள்; கயிறு. (*comb.*) *n.* tapeline, tape-measure, அளவை நாடா.

**Taper,** *n.* மெழுகு திரி; சிறு விளக்கு. *v.* ஒடுங்கிச் செல்; குவி; கூம்பு. *a.* tapering.

**Tapestry,** *n.* ஓவியத்திரை; திரைச்சீலை.

**Tapeworm,** *n.* குடல் புழு.

**Tapioca,** *n.* ஏழிலைக் கிழங்கு; மரச்சீனிக் கிழங்கு; மரவள்ளிக் கிழங்கு (மாவு).

**Tapir,** *n.* விலங்கு வகை.

**Tap-room,** *n.* (tap) சாராயக் கிடங்கு.

**Tap-root,** *n.* நடுவேர்; ஆணி வேர்; தாய்வேர்.

**Tapster,** *n.* (tap) சாராயம் வடித்துக் கொடுப்பவர்.

**Tar,** *n.* கீல்; கரி எண்ணெய். *v.* (-rr-) கீல் அடி.

**Tarantula,** *n.* பெரிய சிலந்தி வகை.

**Tardy,** *a.* தாமதமாகச் செல்கிற; மந்த இயல்பான; தங்குகிற. *n. abs.* tardiness.

**Tare,** 1. *n.* களைவகை. 2. தள்ளுபடி எடை.

**Target,** *n.* இலக்கு.

**Tariff,** *n.* பாதுகாப்பு வரி; காப்பு வரி; சுங்கவரி; விலை; (கட்டணப்) பட்டி.

**Tarn,** *n.* மலஞ்சுனை.

**Tarnish,** *v.* நிறம் மங்கச்செய்; கறைப்படுத்து; அழுக்காக்கு.

**Tarpaulin,** *n.* கறுப்பெண்ணெய் (கீல்) பூசிய கித்தான் துணி; கருநெற்றுத் துணி.

**Tarry,** *v.* பின் தங்கு; காத்திரு; தாமதி.

**Tart,** 1.*n.* பழம் உள்ளீடான பணியார வகை. 2. *a.* புளிப்பான; உறைப்பான; கடுமையான. *n. abs.* tartness.

**Tartan,** *n.* பலநிறக் கம்பளித் துணி.

**Tartaric acid,** *a.* புளிச்சத்துக் கார வகை.

**Tasdik,** *n.* (இந்திய வழக்கு) அரசியல் கொடையுதவி.

**Task,** *n.* கடமை; வேலை; உழைப்பு. *v.* வேலையிடு; வேலையைச் சுமத்து. (*comb.*) *n.* taskmaster, வேலையளிப்பவர்.

**Tassel,** *n.* குஞ்சம்; தொங்கணி.

**Taste,** *v.* சுவைத்துப் பார்; சிறிது தின்னு; அனுபவத்தில் அறி. *n.* சுவை; உணரும் திறன். *a.* tasty, tasteful, *a. (neg.)* tasteless. *n. ag. pers.* taster.

**Tat,** 1.*v.* பின்னல் வேலை செய். 2. (*see* tit.)

**Tatter,** *n.* கிழிந்த துணி; கந்தல். *v.* கந்தலாகக் கிழி.

**Tattle,** *n. v.* வம்பு(பேசு); பிதற்றுதல் (செய்). *n. ag.* tattler.

**Tattoo,** 1. *n.* படைவீட்டு முரசொலி. 2. *v.* பச்சை குத்திக்கொள். *n.*பச்சை குத்து.

**Taught,** *v. see* teach.

**Taunt,** *v.* குற்றங் கூறு; இடித்துரை; திட்டு. 2. வசைமொழி. *adv.* tauntingly.

**Taurus,** *n.* வைகாசி வீடு; எருது வீடு.

**Taut,** *a.* இழுத்துக் கட்டப் பட்டுள்ள; உறுதியான; இறுகலான. *n. abs.* tautness. *v.* tauten.

**Tautology,** *n.* கூறியது கூறல் குற்றம். *a.* tautologic(al). *v.* tautologize, -se. *n. pers.* tautologist.

**Tavern,** *n.* சாராயக் கடை; வழி விடுதி.

**Taw,** *n.* கோலி விளையாட்டு.

**Tawdry,** *a.* அலங்கோலமான. *n. abs.* tawdriness.

**Tawny,** *a.* பழுப்பு நிறமான. *n. abs.* tawniness.

**Tax,** *n.* வரிப்பணம்; இறை; வரி; தீர்வை; கடமை. *v.* வரிவிதி;

தீர்வைபோடு; சுமத்து (குற்றம்) சாட்டு; செலவு உண்டுபண்ணு; நட்டப்படுத்து; தொல்லைப் படுத்து. *n.* taxation, வரி (விதிப்பு) *a.* taxable. *comb. n.* polltax, தலைவரி. supertax மேல்வரி.

**Taxi, taxicab,** *n.* வாடகைப் பொறிவண்டி. *v.* (வானூர்தி; நிலத்தில் அல்லது நீரில் புறப்படுவதற்கு முன்) இயங்கு; வாடகைப் பொறிவண்டியில் செல்.

**Taxidermy,** *n.* பஞ்சடைத்த போலி உயிரினம் செய்யும் தொழில். *n. pers.* taxidermist.

**Taxpayer,** *n.* வரி செலுத்துபவர்.

**Tea,** *n.* (சீன, சப்பானிய) இளங்குடி; இளங்குடிக்கு உதவும்) தளிரிலை வகை; தேயிலை; தேநீர்; மாலைச் சிற்றுண்டி. (*cf.* coffee) *comb. n.* tea party தேநீர் விருந்து(க் குழு); சிற்றுண்டிக் குழு; இன்பப் பொழுது போக்குக் குழு.

**Teach,** *v.* (taught) (கல்வி) பயிற்று; கற்பி; பழக்கு; *n. see* teaching, *n. ag.* teacher, கல்வி ஆசிரியர். *n. abs.* teachership. *a.* teachable, (பாடம். மாணவன்) கற்பிக்கத் தகுந்த. *n. abs.* teachability.

**Teaching,** *n.* (teach) படிப்பினை; பாடம்; கற்பித்தல் (ஒருவரது) தனிக் கோட்பாடு.

**Teak,** *a.* தேக்குமரம்.

**Team,** *n.* இணைந்த தொகுதி; கூட்டிணை; இணைகூட்டு; ஒன்றுபட்ட குழு; (ஆடு மாடுகளின்) பிணையல்; (இணைபட்ட துறைத்) தொழிலாளர் குழு; கூலிகள் தொகுதி; விளையாட்டுக் குழு. *n. pers.* teamster, கூலிகள் தொகுதி; மேற்பார்வையாளர்; கண்காணி. (*comb.*) *n.* team work, ஒன்றுபட்ட முயற்சி.

**Teapoy,** *n.* சிறு கால் மேடை.

**Tear,** 1.*v.* (டெயர்) tore, torn) கிழி; கீறு; பிள; *n.*கிழிசல்; கீற்று, பிளவு. 2. *n.*(டீயர்) கண்ணீர்; கண்ணீர் போன்ற துளிகள் (1) *a.* tearing, பிளக்கிற; மட்டுமிஞ்சிய (2) *a.* tearful, கண்ணீர் விடுகிற; வருந்துகிற. *a. neg.* tearless. (*comb.*) *n.* teargas. கண்ணீர்ப் புகை

**Tease,** *v.* தொந்தரை செய்; தொந்தரை செய்து விளையாடு; சீப்பினால் சீவு; நார் முதலிய வற்றைக் கோது. *adv.* teasingly.

**Teasel,** *n.* செடிவகை; ஆடையைத் தைக்கும் கருவி.

**Teat,** *n.* முலை. (காம்பு; முலைக் காம்பு.)

**Technic(al),** *n.* தொழில் துறை சார்ந்த; தனித் துறைக்குரிய. *n. (pl.)* technics, தனித் துறைச் செய்திகள். *n.* technicality, தனித்துறை மரபு. *a. pers.* technician. தொழில்துறைஞர்; தொழில் வல்லுநர்; ‘தொள்ளாளி.’

**Technique,** *n.* தொழில் முறை; கலைமுறை; தொழில் நுணுக்கம்; துறை நுணுக்கம்; துறைப்பண்பு.

**Technology,** *n.* தொழில் முறை; தொழில் நுணுக்கத் துறை; பொறி நுட்பத் துறை. *a.* technological. *a. pers.* technologist.

*te deum, n.* (கிறித்துவ இலத்தீனப் பாசுர முதல் வரி) புகழ்ப்பாடல்; வெற்றிப் புகழ்ப்பாடல்.

**Tedious,** *a.* தொந்தரையான; முசிவான; சோர்வைத் தருகிற. *n.* tediousness.

**Tedium,** *n.* சோர்வு; அலுப்பு.

**Teem,** *v.* பிறங்கு; பெருக்கமாகத் தோன்று; நிறைந்து காணப்படு.

**Teens,** *n. (pl.)* பத்தின் மேற்பட்ட (இருபதுக்குட்பட்ட) வயது ஆண்டுகள். *a.* teening, சிறுபிள்ளைத் தன்மையுள்ள.

**Teeth,** *v. see* tooth.

**Teethe,** *v.* பல்முளை. (tooth) *n.* teething.

**Teetotal,** *n.* குடி ஒழித்தல் சார்ந்த. *n.* teetoralism. *n. pers.* teetotaller. *adv.* teetotally. முற்றமுழுவதும்.

**Teetotum,** *n.* (கைசுற்றுப்) பம்பரம்.

**Tegmen,** *n.* போர்வை; விதை உள்ளுறை.

**Tegular,** *a.* ஓடுகள் சார்ந்த.

**Tegument,** *n.* (உயிரினங்களின்) மேல்தோல்.

**Telautograph,** *n.* தந்தியச்சு; தொலையச்சு.

**Telecast,** *n.* உருவொலி பரப்பி, *n.*உருவொலி பரப்பு.

**Telegram,** *n.* தந்தி(ச் செய்தி).

**Telegraph,** *n.* தந்தி முறை. *v.* தந்திச் செய்தி அனுப்பு. *n. pers* telegrapher, telegraphist.*a.* telegraphic. *n. abs.* telegrapy, தந்தித் துறை; தந்தித்தொழில்.

**Telemechanics,** *v. (pl.)* (மின் வலித்) தொலை இயக்கி முறை.

**Telepathy,** *n.* தொலையுணர்வு. *a.* telepathic. *v.* telepathize,- se.

**Telephone,** *v.* தொலைபேசி. *a.* telephonic. *n. abs.* telephony. *a. pers.* telephonist.

**Telephotography,** *n.* தொலை நிழற்பட முறை.

**Telescope,** *n.* தொலைநோக்கி. *a.* telescopic, தொலைநோக்கி சார்ந்த; தொலை நோக்கியால் மட்டும் காணக் கூடிய.

**Teletypewriter,** *n.* தொலைக் கையச்சு.

**Television,** *n.* தொலைக்காட்சி முறை; தொலைக் காட்சிப் பண்பு.

**Tell,** *v.* (told) 1. சொல்; அறிவி. 2. எண்ணு; வழிபாட்டு மணிஉரு எண்ணு. 3. (தாக்குதல்) முழுப் பயன் விளைவி; பயன் அளி; பயன் காண். (1) *n. pers.* teller. சொல்பவர்; மொழி தரவு கணக் கிடுபவர்; (2) *a.* telling, மிகுபயன் விளைவிக்கிற, (*comb.*) *a. n.* tell-tale, கோள் சொல்லுகிற(வர்.); மறைவெளி யிடுகிற(வர்); தானே விளங்குகிற.

**Tellurian,** *a.* இவ்வுலக (வாழ்வுக்குரிய).

**Temerity,** *n.* துணிச்சல்; மடத் துணிவு. *a.* temerarious.

**Temper,** *v.* பக்குவப்படுத்து; பதப்படுத்து; மட்டாக்கு; தணி; சரியான வீதத்தில் கல. *n.* மனநிலை; திட்பநிலை; மாற்று; பதன்; செவ்வி.

**Temperament,** *n.* இயல்பு; உணர்ச்சியியல்பு; மணப்பாங்கு. *a.* temperamental.

**Temperance,** *n.* தன்னடக்கம்; மட்டான குடிநிலை; மட்டு மீறிய குடியின் ஒழிப்பு.

**Temperate,** *a.* மட்டான இயல் புடைய; (மண்டலம்) மட்டான தட்பவெப்பமுடைய; தன்னடக்க முடைய. *n. abs.* temperate ness.

**Temperature,** *n.* தட்பவெப்ப நிலை.

**Tempest,** *n.* சூறாவளி; கடும்புயல் காற்று; பெருங் கொந்தளிப்பு. *a.* tempestuous. *n. abs.* tempestuousness.

**Temple,** 1.*n.* கோவில்; கோயில்; திருமனை. 2. *n.*நெற்றிப்பொட்டு; செவித் தடம்; செப்பை.

*tempo, n.* (இசை) இயக்க விரைவு; உணர்ச்சி வேகம்; விசை ஏற்றம்; உணர்ச்சி வேக நடை.

**Temporal,** 1.*a* இம்மைக்குரிய; நிலையற்ற. 2. *a.* (*conn.* temple.) *n.* செப்பைக்குரிய; செப்பை எலும்பு.

**Temporality,** *n.* சமய மானியம்; மதகுரு மானியம்.

**Temporary,** *a.* தற்காலிகமான; நிலையற்ற; குறுநேர; சிறுபோதைய. *n. abs.* temporariness.

**Temporize, - se,** *v.* நேரங்கண்டு நட; காலங் கடத்தும் நோக்கத்துடன் காரியஞ் செய்; தாக்காட்டு.

**Tempt,** *v.* மிரட்டு; மருட்டு; அவாவூட்டு; ஆசை காட்டு. *n.* temptation. *n. pers.* tempter. (*fem.* temptress.)

**Ten,** *a., n.* பத்து. *n., a.* tenth. பத்தாவது (ஆன). பத்திலொன்று (ஆன). *a., a., adv.* tenfold, பத்து மடங்கு (ஆக). *conn. see* tenner.

**Tenable,** *a.,* நிலைக்கக்கூடிய; நீடிக்கக்கூடிய; செல்லுபடியான; ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய. *n. abs.* tenability.

**Tenacious,** *a.* விடாப்பிடியான; உறுதியான; எளிதில் மறக்காத; ஒட்டிக் கொள்கிற. *n.* tenacity.

**Tenancy,** *n.* (tenant) குடிவாரம்; குடிநில உரிமை; நிலவார உரிமை.

**Tenant,** *n.* வாடகைக்குக் குடி யிருப்பவர்; குத்தகை எடுத்தவர். *n.*வாடகைக்கு எடு. குத்தகைக்கு எடு. *n. see* tenancy. *a.* tenantable.

**Tenantry,** *n.* வாடகைக் குடியிருப்பு (க்குழு); வாடகைக்குக் குடியிருப் பவர்கள்; கீழ்வாரம்; கீழ்வாரத்தார்.

**Tend,** 1.*v.* கவனித்துப் பேணு; பாதுகாத்தல் செய். 2. நாடு; நாடி நில்; சார்ந்து இயங்கு; நோக்கிச் செல். *n. ag.* (1) *see* tender 2. (2) see tendency.

**Tendency,** *n.* போக்கு; சார்பு. *a.* tendentious, அடிப்படை நோக் குடைய; முன்னேறச் செய்யும் கருத்துள்ள.

**Tender,** 1. *v.* கொடுக்க முற்படு; ஒப்புவி. *n.*ஒப்புவித்த பொருள்; குத்தகை ஏற்பாடு. 2. *n.*காப்பவர்; பெருங் கப்பலைக் காக்கும் சிறு கப்பல்; தண்ணீர்; கரி தாங்கிய ஊர்தி வண்டி. 3. *n.*செலாவணிப் பொருள். 4. *a.* இள; மெல்லிய; நொய்தான; உணர்ச்சியுள்ள; இரக்கமுள்ள. (4) *adv.* tenderly, மென்மையாக; மெல்லென; பூப்போல. *n.* tenderness. *com.* tenderfoot, புதுவேலையாள்.

**Tendon,** *n.* தசைத் தளை; தசை நாண்.

**Tendril,** *n.* (கொடிகளின்) தளை; தளிர்க்கை.

**Tenement,** *n.* நிலம்; வீடு; குடி யிருப்பு மனை; குடியிருப்புகள்; வரிசையாகக் கட்டப்பெற்ற வாடகை வீடுகள்.

**Tenet,** *n.* கொள்கை; நிலையான கருத்து; ஒழுக்கநெறி.

**Tenfold,** *a. adv. see* ten.

**Tenner,** *n.* பத்து (பொன்) தாள் முறி.

**Tennis,** *n.* ‘வரிப் பந்து’.

**Tenon,** *n.* பொருத்துமுளை. *v.* முளை செதுக்கிப் பொருத்து.

**Tenor,** *n.* போக்கு; வழி; கருத்துப் போக்கு; (குரல்) உச்ச நெறி.

**Tense,** 1. (இலக்.) (வினைச் சொல்லின்) காலம், 2. *a.* விறைப் பாயுள்ள; இழுத்துக் கட்டப் பெற்றுள்ள. (2.) *n.* tenseness, tensity, *see* tension. *a.* tensile, tensible, இழுத்து நீட்டக் கூடிய; இழுத்தல் விசைக்குரிய.

**Tension,** *n.* இழுத்து நீட்டுதல்; இழுவிசை; விறைப்பு; உணர்ச்சி மிகுதி; நெருக்கடி நிலை.

**Tensor,** *n.* (உடல் உறுப்பு) நீட்டும் தசை.

**Tent,** *n.* கூடாரம்; பாசறை. *n. abs.* tentage, கூடார அமைப்பு; கூடாரச் செலவு.

**Tentacle,** *n.* (கீழ் உயிரினங்களின்) உணர்ச்சிக் கொடுக்கு. *a.* tentacled.

**Tentative,** *a.* ஆய்நிலையான; வெள்ளோட்டமான; தேர் வாராய்ச்சிக்காகச் செய்யப் படுகிற; தற்காலிகமாக மேற் கொள்ளப்பட்ட, *n.* தற்காலிகக் கொள்கை.

**Tenter,** *n.* ஆடைகளை உலர்த்து வதற்கான சட்டம். *phr. v.* be on tenterhooks, மிக்க துன்ப நிலையிலிரு.

**Tenuity,** *n.* மென்மை; மெல்லிதான தன்மை. *a.* tenuous.

**Tenure,** *n.* உரிமைக் கட்டுப்பாடு; உரிமைக் காலம்.

**Tepid,** *a.* சிறிது வெப்பமான. இளஞ் சூடான. *n. abs.* tepidity. *v.* tepify.

**Tercentenary,** *n.* முந்நூறாம் ஆண்டுவிழா. *a.* tercentennial.

**Term,** *n.* சொல்; கிளவி; சொற் றொடர்; சிறப்புச் சொல்; சொல் வகுப்பு வக்கணைச்சொல்; (கணக்கியல்) தொகை; எண்கூறு; காலக் கூறு; வரைகாலம்; காலப் பிரிவு. *(pl.)* உரிமைக் கட்டுப்பாடுகள்; பேரம்; உடன்

படிக்கை வாசகம்; ஒப்பந்தப் பேச்சு. *v.* குறிப்பிடு. *comb. n.* term of abuse (reproach) வசைச்சொல் (கண்டனச் சொல்).

**Termagant,** *n.* வம்புச் சண்டை யிடுகிறவள்; 'ஆண் மாரி'; பிடாரி.

**Terminable,** *a.* (terminate) முடிவுக்கு வரக்கூடிய; முடிவு செய்யக்கூடிய.

**Terminal,** *a.* எல்லையாயுள்ள; முடிவாயுள்ள; ஒவ்வொரு காலப் பகுதி யிறுதியிலும் நிகழ்கிற. *n.* முடிவாயுள்ள பொருள்; முனை. *v.* terminate, முடிவுசெய். *a.* terminative.

**Termination,** *n.* முடித்தல்; முடிதல்; எல்லை; முடிவு; (இலக்கணம்) விகுதி.

**Terminology,** *n.* துறைச் சொல் தொகுதி; துறைச் சொல் வழக்கு. *a.* terminological.

**Terminus,** *n.* (*pl.* termini, terminuses) எல்லை; முடிவுக் கோடி; (இருப்புப்பாதை) எல்லைக் கோடி.

**Termite,** *n.* கரையான்.

**Tern,** *n.* கடற்பறவை வகை.

**Terrace,** *n.* மொட்டைமாடி; மட்டப்பா; தட்டட்டி; மேல்தளம்; மேடானசாலை. *v.* மேல் தளம்.

**Terra-cotta,** *n.* (சுட்டமண்) பாண்ட வகை. *a.* (சுட்ட மண்ணின்) சிவப்பு நிறமான terra-firma, *n.* திண்ணிய நிலம்.

**Terrain,** *n.* நிலப்பகுதி; நிலத்திணை.

**Terrapin,** *n.* (நன்னீர்வாழ்) ஆமை.

**Terrestrial,** *a.* மண்ணுக்குரிய; நிலத்துக்குரிய; நிலவுலகுக்குரிய; இவ்வுலகுக்குரிய; நிலத்தில் வாழ்கிற;

**Terrible,** *a.* அச்சந் தருகிற; அச்சம் விளைவிக்கிற; மட்டு மிஞ்சிய. *adv.* terribly. *n. abs.* terribleness.

**Terrier,** *n.* சிறுநாய் வகை.

**Terrific,** *a.* திகிலுண்டாக்குகிற. *v.* terrify, திகிலடையச் செய்.

**Territorial,** *a.* நில ஆட்சிக்குரிய; நிலஞ்சார்ந்த; நிலப் பரப்புச் சார்ந்த; நாட்டுப் பரப்புச் சார்ந்த; நாட்டெல்லை சார்ந்த. *n.* நாட்டுக் காவற்படைவீரன். (*cf.* extra-territorial) *comb. n.* territorial waters. நாட்டெல்லைக்குட்பட்ட கடற்பகுதிகள்; territorial rights, நில ஆட்சி உரிமைகள்.

**Territory,** *n.* நிலப்பகுதி; நில எல்லை; ஆட்சி நிலம்.

**Terror,** *n.* திகில்; கிலி; அச்சம்.

**Terrorism,** *n.* கொடுஞ்செயல் கோட்பாடு. *n. pers.* terrorist. *a.* terroristic. *v.* terrorize, -se, அச்சுறுத்து; அச்சுறுத்தி ஆட்சி செய்.

**Terse,** *a.* சொற் சுருக்கமுள்ள.

**Tertiary,** *a.* மூன்றாவதான.

**Tessellate,** *v.* கற்கள் பதி; கட்டங்கள் போல் அமை. *pa. p. a.* tesselated. *n.* tessellation.

**Test,** *n.* தேர்வு; கடுந்தேர்வு; சோதனை *v.* தேர்வு செய்;

(நுட்பமாக) ஆராய்; உலோகத்தின் மாற்றுத்தேர்; கடுந்தேர்வு செய். *n.* test case. அறுதியிடும் வழக்கு; ஆய்முடிவுச் செய்தி.

**Testament,** *n.* இறுதி விருப்பப் பத்திரம்; (விவிலிய நூலின்) ஏற்பாடு. *a.* testamentary. *a., n.* testate. *n. pers.* testator. (*fem.* testatrix.)

**Testicle,** *n.* (உயிரினங்களின்) விதை.

**Testify,** *v.* சான்றுகூறு; சான்றாகு; எண்பி, உறுதியளி; ஆணை யிட்டுக் கூறு. *n. ag. pers.* testifier.

**Testimonial,** *n., a.* நற் சான்றுரை; நற் சான்று; திறமைக்குரிய பரிசு.

**Testimony,** *n.* சான்று; சான்றுரை; பொறுப்புறுதி; அத்தாட்சி.

**Testy,** *a.* முன் கோபியான; சிடுசிடுப்புக் குணமுள்ள.

**Tetanus,** *n.* வலிப்பு நோய்; இசிவு. *a.* tetanic.

**Tete-a-tete,** *n.* (இருவர்) தனி உரையாடல்; தனி மறைவுரை. *a.* தனி அடக்கமான.

**Tether,** *n.* தாம்பு; ஆற்றலெல்லை; செல்வாக்கு முதலியவற்றின் எல்லை.

**Tetragon,** *n.* நாற் கோண உருவம்.

**Tetrahedron,** *n.* நான்கு பக்க முள்ள கனவடிவம். *n.* (செய்யுளில்) நாற்சீரடி.

**Text,** *n.* நூலின் அகப்பகுதி; மூலப் பகுதி; மூலபாடம்; மூலவாசகம்; (சமயமேடை யுரையின்) தலைப்பு வாசகம். (பள்ளிப்) பாடப் புத்தகம். *a.* textual, மூலபாடத்திற் குரிய; பாடப் புத்தகத்திற்குரிய; பாடப் புத்தகத்திலுள்ள. *comb. n.* text-book, பாடப் புத்தகம்; கல்வி ஏடு; அடிப்படை ஏடு; விளக்க ஏடு; text-book committee, பாடப் புத்தகத் தேர்வுக் குழு; ஏட்டுரிமைக் குழு.

**Textile,** *a.,n.* நெசவுக்குரிய.

**Texture,** *n.* நெசவின் தன்மை; நெய்த்து. இழை நயம்; தரம்; அமைப்பு. *a.* textural.

**Than,** *conj* விட; காட்டிலும்; பார்க்கிலும்.

**Thane,** *n.* (பண்டைய வழக்கு) உயர்குடியாளன்.

**Thank,** *v.* நன்றி கூறு. *n.(pl.)* நன்றியுரை; நன்றி. *a.* thankful. thankworthy. *n.* thankfulness, *a. (neg.)* thankless, நன்றி யுணர்வுக்குரியதாகாத; நன்றி கேடான.

**Thanks-giving,** *n.* நன்றி தெரிவிப்பு; வணக்க வழிபாடு; தெய்வ வணக்கம்.

**That,** *a. pron.* (*pl.* those) அந்த; அது. rel. *pron.*(பெயரெச்சத் தொடர்முன் அடை) *rel. adv.* so that, that, such that. (மேலதன்) பயனாக; (கீழதன்) படியாக; நோக்கத்துடன்; வண்ணம். *conj.* என்று; என (பெயர்த் தொடர்முன் அடை).

**Thatch,** *n.* கூரைவேய் பொருள் (புல், ஓலை). *v.* கூரைவேய். *n.*

thatching, வேய்பொருள்; வேய்கூரை.

**Thaumaturgy,** *n.* மாயவித்தை. *n. pers.* thaumaturge, thaumaturgist.

**Thaw,** *v.* (பனி) உருகு; கரை; எழுச்சியடை; களிவுறு. *n.* உருகுதல்; கரைதல்.

**The,** *art.* (தனிச்சுட்டு) 'உ' 'உந்த', (*comb.*) the man, குறிப்பிட்ட மனிதன். the horse, குதிரை (இனம்). the sky, வான் (தனிப் பொருள்).

**Theatre,** *n.* நாடகக் கொட்டகை; நாடக அரங்கம்; நாடக மேடை; நாடகத் துறை. *a.* theatric(al). நாடக அரங்கத்திற்குரிய; நடிகன் போன்ற; பகட்டாரவாரமான.

**Thee,** *pron.* (*obj.* case of thou) (பழைய வழக்கு) உன்னை.

**Theft,** *n.* களவு; திருட்டு. *conn. n. pers. see* thief.

**Their,** *pron. poss. a.* (they) அவர்களுடைய; அவற்றி னுடைய. *poss. pron.* theirs. அவர்களுடையது; அவற்றினுடையது.

**Theism,** *n.* கடவுட் கொள்கை; கடவுளுண்டு எனும் கோட்பாடு. *n. pers.* theist. *a.* theistic(al).

**Them,** *pron. (obj. case* of they*)* அவர்களை; அவற்றை etc.

**Theme,** *n.* தலைப்பு; (கட்டுரைப் பொருள்.)

**Themselves,** *(reflex.) pron.* (they) அவர்களே; அவர்களையே; அவையே; அவற்றையே. etc.

**Then,** *adv., conj.* அப்பொழுது; பிறகு; அவ்வாறாயின்; ஆகையால். *a.* அக்காலத்திய.

**Thence,** *adv.* அவ்விடத்தி லிருந்து; அப்பொழுதிலிருந்து; அக்காரணத்தினால். (*comb.*) *adv.* Thenceforth, thence forward, அச் சமயத்திலிருந்து.

**Theocracy,** *n.* தெய்வ ஆட்சி; அடியார் ஆட்சி. *a.* theocratic-al, *n. pers.* theocrat(-ist).

**Theodolite,** *n.* தளமட்ட அளவைக் கருவி.

**Theology,** *n.* கடவுள் கொள்கை விளக்கம்; சமய சித்தாந்தம். *a.* theological. *n. pers.* theologian, theologist, theologize, -se.

**Theorem,** *n.* (உருக்கணக்கியல், குறிக் கணக்கியல்) பொது அமைதியுரை; விளக்க அமைதி.

**Theory,** *n.* தத்துவம்; கொள்கை நிலை; தற்காலிகக் கோட்பாடு; ஊகக் கோட்பாடு; விளக்கக் கோட்பாடு; கற்பனை; கொள்கை; கொள்கைத் துறை; கருத்தியல் துறைச் சார்பு. (x practice.) *v.* theorize,-se, ஊக ஆராய்ச்சி செய்; கொள்கை உருவாக்கு; கற்பனை யுருவாக்கு. *n. pers.* theorist, *a.* theoretic(al), கொள்கை நிலையான; ஊகக் கோட்பாடான; கோட்பாட்டுத் துறைசார்ந்த; கருத்தியலான; ஊகமான.

**Theosophy,** *n.* கடவுளுணர்வு; கடவுள் தொடர்புக் கோட்பாடு. *n. pers.* theosophist. *a.* thosophic, - al.

**Therapeutic,** *a.* நோய் தீர்க்கிற; மருத்துவக் கலைக்குரிய. *n. (pl.)* therapeutics, therapy. *n. pers.* therapeutist.

**There,** *adv.* அங்கு; அவ் விடத்தில்; (முதல் நிலை அசை there is, are etc = is, are etc.)

**Thereabout, thereabouts,** *adv.* அதனருகே.

**Thereafter,** *adv.* அதன் பிறகு.

**Thereat,** *adv.* அச்சமயத்தில்; அக்காரணத்தினால்.

**Thereby,** *adv.* அதன் மூலமாக; அது காரணமாக.

**Therefore,** *adv.* ஆகையால்; அக்காரணத்தினால்.

**Therefrom,** *adv.* அதிலிருந்து.

**Therein,** *adv.* அதனில்.

**Thereof,** *adv.* அதனுடைய; அது பற்றி.

**Thereon, thereupon,** *adv.* அதன் மேல்; உடனே.

**Thereto, thereunto.** *adv.* அதன் மேலும்; அதற்கு.

**Thereunder,** *adv.* அதன் கீழ்.

**Thereunto,** *adv.see* thereto.

**Thereupon,** *adv. see* thereon.

**Therewith,** *adv.* அதனோடு; அதன் கூட.

**Thermal,** *a.* வெப்பத்திற்குரிய.

**Thermodynamics,** *n.* வெப்ப விசையியக்க இயல்.

**Thermometer,** *n.* வெப்பமானி; தட்ப வெப்ப அளவைக் கருவி. *n.* thermometry தட்பவெப்ப அளவையீடு. *a.* thermometric (als).

**Thermos,** *n.* (thermoflask) தட்ப வெப்ப நிலைக்காப்புக் கலம்; காப்புக் கலம்.

**Thermoscope,** *n.* வெப்பநிலை மாறுபாட்டளவை.

**Thermostat,** *n.* வெப்பநிலை காப்பகம்.

**Thesaurus,** *n.* சொல்தொகை வகுப்பு; நிகண்டு.

**These,** *pron. (pl.* of this*)* இவை; இவர்கள். *a.* (பன்மை முன்) இந்த. (*correl. see* those).

**Thesis,** *n.* (*pl.* theses) ஆராய்ச்சிக் கட்டுரை.

**Theurgy,** *n.* மாய நிகழ்ச்சி; தெய்விக நிகழ்ச்சி.

**Thews,** *n. (gen. pl.)* வலிமை; தசை.

**Thick,** *a.* நெருக்கமான; தடித்த; அடுத்தடுத்து விரைவாக வருகிற; தெளிவில்லாத; அறிவுமந்தமான. *n.*அடர்த்தியான இடம். *adv.* அடர்த்தியாக; விரைவாக. *v.* thicken. *adv.* thickly. *n. abs.* thickness பருமன்; திண்ணம்; தண்டி; கெட்டிமை. *phr.* thick and thin, இன்ப துன்பங்கள்; நன்மை தீமைகள்; இடையூறுகள்.

**Thicket,** *n.* புதர்க் காடு; அடர்ந்த கானகம்.

**Thickhead,** *n.* மடையன்.

**Thickset,** *a.* கட்டுக்குட்டான.

**Thick-skinned,** *n.* தடித்த தோலுள்ள; உணர்ச்சியற்ற.

**Thick-witted,** *a.* அறிவு மழுங்கிய.

**Thief,** *n. (pl.* thieves*)* திருடன்; கள்வன். *a.* thievish திருட்டுத் தனமான. *n. abs. see* theft. *comb. phr.* beware of thieves! (பொது அறிவிப்பு) திருடர்கள், எச்சரிக்கை!

**Thieve,** *v.* திருடு; களவாடு. *n.* thievery.

**Thigh,** *n.* துடை (தொடை).

**Thimble,** *n.* விரல் குமிழ்; விரல் உறை; சிமிழ்.

**Thin,** *a.* மெல்லிதான; நெருக்க மில்லாத; தாள் போன்ற; சிலவே யான. *adv.* நெருக்கமில்லாமல். *v.* நெருக்கமில்லாது செய்; தேய்; குறுகு; மெல்லிதாக்கு.

**Thine,** 1. *pron. poss.* (பண்டைய இலக்கிய வழக்கு; உயிர் ஒலி முன்) உன்னுடைய (மெய்முன் *see* thy); *poss. pron.* உன் னுடையது; உனது *poss. a.* (உயி ரெழுத்துக்குமுன்) உன்னுடைய. (*see* thy).

**Thing,** *n.* பொருள்; நிகழ்ச்சி; அஃறிணைப் பொருள்.

**Think,** *v.* (thought) நினை; எண்ணு; ஆராய்; கருது; நம்பிக்கை கொள். *a.* thinkable. *n. ag.* thinker. *a. abs. see* thought.

**Thin-skinned,** *a.* உணர்ச்சி மிகுந்த; எளிதில் கோபிக்கிற.

**Third,** *a.* மூன்றாவதான; அயலான. *n.* மூன்றிலொரு பகுதி. *adv.* thirdly.

**Thirst,** *n.* விடாய்; நீர் வேட்கை; அவா. *v.* விடாய் கொள்; அவாக்கொள். *a.* thirsty.

**Thirteen,** *a.,n.* பதின்மூன்று, a., *n.* thirteenth. பதின்மூன்றாவது, பதின் மூன்றிலொன்று.

**Thirty** *a., n.* முப்பது. *n. pl.* thirties, நூற்றாண்டின் முப்பதின் மேலாண்டுகள். *n., a.* thirtieth முப்பதாவது (ஆன); முப்பதி லொன்று (ஆன).

**This,** *a., pron. (pl.* these*)* இது; இந்த. (*correl. see* that.)

**Thistle,** *n.* முட்செடி வகை. *a.* thistly.

**Thither,** *adv.* அவ்விடத்திற்கு அங்கு *adv.* thitherward(s), அவ்விடம் நோக்கி.

**Tho',** *conj. see* though.

**Thole,** 1.*v.* வருந்து. 2. *n.*(படகு.) துடுப்பு முனை.

**Thong,** *n.* தோல்வார்; சாட்டைத் தும்பு.

**Thorax,** *n.* மார்பு; மார்புக் கூடு. *a.* thoraic.

**Thorium,** *n.* (இயைபியல்) ஒண்மக் கிளர்ச்சியுள்ள மூலப்பொருள் வகை.

**Thorn,** *n.* முள்; முட்செடி; நோவு தருவது. *a.* thorny.

**Thorough,** *a.* கண்டிப்பான; முழு நிறைவான; கடுமுறையான. *n. abs.* thoroughness. *adv.* thoroughly. *a., n.* thorough-bred. *(comb)* முழுநிறை பயிற்சி யுற்ற(து); வலிமை முற்றிய(து.)

**Thorough-fare,** *n.* பொதுப் பாதை.

**Thorough-going,** *a.* அறக் கண்டிப்பான; விட்டுக்கொடுக்காத.

**Thorp(e),** *n.* (டேனியவழக்கு) சிற் றூர்.

**Those,** *pron., a. (pl.* of that) அவை; அவர்கள்; (பன்மைக்கு முன்) அந்த.

**Thou,** *pron.* (*pl.* பண்டைய வழக்கு) நீ (தற்கால இழிவு; உயர் தனிச் சிறப்பு வழக்கு) நீ, நீர். (*see* thy, thee, thine).

**Though,** *conj.* (சுருக்கம்; Tho') ஆயினும்; எனினும்; இருந்த போதிலும்.

**Thought,** 1.*v.* (past tense of think.) *2. n.* (think) கருத்து; எண்ணம்; நினைவு; ஆழ்ந்தாய்வு; அறிவாராய்ச்சி; கவலை. *a.* thoughtful 1. ஆராய்ச்சியுள்ள; அமைந்தாய்கிற. 2. கவலையுள்ள, *a. (neg.)* thoughtless. 1. சிந்தனையற்ற, 2. உணர்ச்சியற்ற.

**Thousand,** *a., n.* ஆயிரம். *a.* thousandfold, ஆயிர மடங்கு. *a. n.* thousandth, ஆயிரத்தாவது; ஆயிரத்திலொன்று.

**Thrall,** *n.* அடிமை; அடிமைத் தனம். *n. abs.* thraldom.

**Thrash, thresh,** *v.* கதிர்களை அடித்துக் கூலம் பிரி; சூடடி; அடித்துத் துவை; நையப்புடை; அடித்துத் தண்டனை செய். *n. ag.* thrasher, thresher. சூடடிக்கும் கருவி; சூடடிப்பவன்.

**Thread,** *n.* நூல்; புரி; நூல் போன்ற இழை; இணைப்புத் தொடர்பு. *v.* (ஊசியில்) நூலை நுழை; ஊடாக நுழைந்து செல்; வழி கண்டறிந்து செல்.

**Threadbare,** *a.* இழை இழை யான; நைந்துபோன. *n. abs.* threadbareness.

**Threat,** *n.v.* வெருட்சி; அச்சுறுத்து. *v.* threaten. *a.* threatening.

**Three,** *a., n.* மூன்று. *a.* threefold, மும்மடங்கான. *a.* (*see* third, thrice.)

**Threnode, threnody,** *n.* இரங்கற்பா.

**Thresh,** *v.* (கூலக்கதிர்; கூல மணிகள்) சூட்டு; துவை. thresher, சூடடிக்கும் பொறி. *conn. see* thrash.

**Threshold,** *n.* வாயிற்படி; தொடக்கம்.

**Threw,** *v. see* throw.

**Thrice,** *adv.* (three) மூன்று தடவை; மும்மடங்காக.

**Thrift,** *n.* (thrive) சிக்கனம்; செட்டான தன்மை; வாழ்வின் செம்மை. *a.* thrifty *a. (neg.)* thriftless.

**Thrill,** *v.* எழுச்சியூட்டு; சிலிர்க்கச் செய். உணர்ச்சி மிகச்செய். *a.* சிலிர்ப்பு; உணர்ச்சி மிகுதி. *a.* thrilling. *n. ag.* thriller, உடல் சிலிர்க்கச் செய்யும் கதை; உணர்ச்சி எழுப்பும் நிகழ்ச்சி.

**Thrive,** *v.* (throve or thrived; thriven or thrived) செல்வம்

பெருகு; செழிப்படை; நீண்டு வளர். *n. see* thrift.

**Thro,** *prep. see* through.

**Throat,** *n.* தொண்டை; மிடறு; குரல்வளை. *a.* throaty. கரகர வென்று ஒலிக்கிற; பெரிய தொண்டையான. *n.* throatiness.

**Throb,** *v.* துடி; நடுங்கு. *n.* துடிப்பு.

**Throe,** *n.* வேதனை; கடுநோவு.

**Throne,** *n.* அரசுரிமை; அரசு கட்டில்; தவிசு; அரசிருக்கை; அரசு.

**Throng,** *n.* கூட்டம். *v.* கூட்டமாகச் செல்.

**Tharottle,** *n.* தொண்டை; குரல் வளை. *n.* குரல்வளையை அழுத்தித் திக்குமுக்காடச் செய்.

**Through,** *prep.* (சுருக்கம்; thro') குறுக்கே; ஊடே; இடையே; காரணமாக; மூலமாக; ஆல். (மூன்றாம் வேற்றுமை உருபு). *adv.* முழுவதும்; (ஊடாக).

**Throughout,** *prep. adv.* முழுவதும் எங்கும் (துருவி).

**Throve,** *v. see* thrive.

**Throw,** *v.* (threw, thrown) எறி; வீசியெறி; விழச்செய். *n.* எறிதல்; எறிதொலை; வீழ்ச்சி *(comb.)* overthrow, படுதோல்வி.

**Thrum,** 1. *n.* (தறியின்) நூல் தொங்கல் *v.* தொங்கலுடன் நெய், 2. (யாழ்த்தந்தி) மீட்டு; விரலால் தாளம் போடு.

**Thrush,** *n.* இன்னிசைப் பறவை வகை.

**Thrust,** *v.* (thrust) தள்ளு; குத்தி நுழை. *n.* தள்ளுதல்; கூரிய படைக்கலத்தால் குத்துதல்.

**Thud,** *n.* மெத்தென விழும் ஒலி.

**Thug,** *n.* (வரலாறு; வட இந்தியக்) கொள்ளைக் கூட்டத்தினர். *n. abs., com.* thuggee.

**Thumb,** *n.* கட்டை விரல்; பருவிரல். *v.* கட்டை விரலால் அழுக்காக்கு. *n.* thumb-impression, கட்டை விரல் அடையாளம்.

**Thump,** *v.* அடி; மொத்து. *n.* மொத்துதல்; அடித்தல்.

**Thumper,** *n.* பெரும்பொய். *a.* thumping, பெரும்படியான.

**Thunder,** *n.* இடி; பேரொலி. *v.* இடிமுழக்கம்செய்; உரத்துப் பேசு. *a.* thundery.

**Thunderbolt,** *v.* இடியேறு; மின்னேறு; திடீரெனத் தாக்குமொன்று.

**Thunderstruck,** *a.* திடுக்கிட்ட.

**Thurible,** *n.* தூபத் தட்டு.

**Thursday,** *n.* வியாழக்கிழமை.

**Thus,** *adv.* இப்படியாக; இவ்வாறாக.

**Thwart,** *a.* குறுக்காயுள்ள. *adv., prep.* குறுக்கே. *v.* குறுக்கிடு; குறுக்கிட்டுக் கெடு. *conn. adv. prep. see* athwart.

**Thy,** *poss, a.* (இலக்கிய வழக்கு; மெய்முன். *thy*. உயிர் முன், *see* thine) (பழைய வழக்கு) (thou) உன்னுடைய.

**Thyme,** *n.* நறுமணச் செடி வகை.

**Thyroid,** *n., a.* கேடயச் சுரப்பி; (சார்ந்த); குரல்வளைக் கழலை (சார்ந்த.) (*comb.*) *n.* thyroid gland, கேடயச் சுரப்பி.

**Thyself,** *pron.* (பழைய வழக்கு thou) நீயே; உன்னையே, etc.

**Tiara,** *n.* முடி; மணிமுடி; முடிச் சூட்டு.

**Tibia,** *n.* கீழ்க்கால் உள்ளெலும்பு.

**Tie,** *n.* தசைத்தடிப்பு நோய்.

**Tick,** 1. *n.* டிக்' ஒலி. 2. 'டிக்' 'டிக்' ஒலி செய். 2. *v.* சரி பார்த்த அடையாளக் குறி. 3. *n.* மெத்தை உறை (ticking). 4. (கால்நடை) உண்ணி.

**Ticket,** *n.* சீட்டு; துண்டுமுறி; நுழைவுச் சீட்டு; பயணச் சீட்டு; வண்டிச் சீட்டு. *v.* முகவரிச் சீட்டு ஒட்டு.

**Tickle,** *v.* கீச்சம்' காட்டு; கிளர்ச்சியூட்டு; மகிழச் செய். *a.* ticklish. *n.* tickler, திகைக்கச் செய்யும் வினா. *comb. phr. n.* tickle me tobby and I'll tickle you, திட்டப்படி ஒருவர்க் கொருவர் புகழ்(தல்); ஒருவர்க் கொருவர் நலஞ்செய்து பொது மக்களைக் கண்துடைத்தல்.

**Tide,** *n.* பருவகாலம்; கடலெழுச்சி; வேலி (ஏற்ற இறக்கம்).

**Tidings,** *n. (pl.)* செய்தி.

**Tidy,** *a.* ஒழுங்கான; தூய்மையான; நேர்த்தியான. *n.*(இருக்கை) உறை. *v.* ஒழுங்கு செய்; தூய்மைப் படுத்து. *n. abs.* tidiness.

**Tie,** *v.* கட்டு; முடிச்சிடு; இணை; (போட்டியில்) சமமாயிரு. *n.* முடிச்சு; கழுத்துப்பட்டைத் தொங்கல்; போட்டியில் சமமாயிருத்தல்; சிக்கல் நிலை.

**Tier,** *n.* அடுக்கு; வரிசை.

**Tierce,** *n.* முகத்தல் அளவைக் கூறு; (சீட்டாட்டம்) முச்சீட்டிணை.

**Tiff,** *n.* சச்சரவு.

**Tiffany,** *n.* துணி வகை.

**Tiffin,** *n.* சிற்றுண்டி; சிற்றுணா.

**Tiger,** *n. (fem.* tigress*)* புலி; வேங்கை, *a.* tigerish.

**Tiger-cat,** *n.* காட்டுப் பூனை.

**Tiger-eye, tiger's eye,** *n.* மஞ்சள் நிற மணிக்கல் வகை.

**Tight,** *a.* இறுகலான; நெருக்க மான; பணமுடையான. *n. pl.* இறுகலான உடை. *n.* tightness, *v.* tighten, (*comb.*) *a.* tight-fisted, கஞ்சமான; tight-laced, கண்டிப்பான.

**Tile,** *n.* கூரை வேயும் ஓடு. *v.* ஓடு போடு. *n.* tiling. *n. ag.* tiler. *n. abs.* tilery, ஓட்டுத் தொழிற் சாலை.

**Till,** 1. *prep., conj.* வரையில் *conn. see* until 2. *n.* பணப் பேழை; கல்லாப்பெட்டி. 3. *v.* உழுது பண்படுத்து, (3) *a.* tillable, *n. abs.* tillage. *n. ag. see* tiller.

**Tiller,** *n.* 1. உழவன், 2. சுக்கானின் கைப்பிடி.

**Tilt,** *v.* ஒருபுறமாகச் சாய்; (எதிரியை) ஈட்டியால் தாக்கு,

*n.* சாய்தல்; தாக்குதல்; பண்டைக் கால வீரர்களின் ஈட்டிப் போர்.

**Timbal,** *n.* சிறு பறை.

**Timber,** *n.* வெட்டு மரம்; தடி; உத்திரம்; மரங்கள்.

**Timber-toe(s),** *n.* (பேச்சு வழக்கு) மரத்தினால் போலிக் கால் அணிந்த மனிதர்; மரக்காலர்.

**Timbre,** *n.* (தொனிகளின்) தன்மை; நயம்; நயத்தரம்.

**Timbrel,** *n.* (இசை) தோல் கருவி வகை.

**Time,** *n.* காலம்; சமயம்; பருவம்; இசையின் முடுகு; தறுவாய். *v.* தறுவாயில் செய்; காலத்தைக் குறி. *adv.*, *a.* timely, also. அரு வழக்கு. *a.* timeous, timous, காலந்தவறாத; குறித்த காலத்தில் நிகழ்கிற; தக்க சமயத்தில் செய்யப்பெற்ற, (x *see* untimely), *a. (neg.) see* timeless. *com. see* time-keeper, etc, *phr. adv.* in time. காலத்தே; குறித்த காலத்துக்குமுன், on time, குறித்த காலத்தில் கணக்காக.

**Time-honoured,** *a.* நெடுங்கால மாக மதிக்கப்பெற்று வந்துள்ள.

**Time-keeper,** *n.* காலங் குறிப்பவர்; மணிப்பொறி.

**Timeless,** *a.* காலங் குறிக்க முடியாத; எக்காலத்துமுள்ள,

**Time-limit,** *n.* காலவரம்பு.

**Timely,** *a.*, *adv. see* time.

**Time-piece,** *n.* மேசை மணிப் பொறி; வேளைப் பொறி.

**Timesaving,** *n.* காலத்தை மிச்சப் படுத்துகிற.

**Time-scale,** *n.* (சம்பளம்) கால முறைத் திட்டம்; காலப்படி முறை.

**Time-server,** *n.* சமயத்திற் கேற்றபடி நடப்பவர்; கொள்கை யற்றவர்; தன்னலம்பேணி.

**Time-table,** *n.* கால அட்ட வணை.

**Timid,** *a.* உரமற்ற; எளிதில் அஞ்சுகிற; நாணமுள்ள. *n. abs.* timidity.

**Timorous,** *a.* எளிதில் அஞ்சுகிற; நடுங்குகிற; பின்னிடைகிற. *n. abs.* timorousness.

**Tin,** *n.* தகரம்; வெள்ளீயம்; தகரம் பூசிய இரும்புத்தகடு; தகரக் கலம். *v.* தகரம் பூசு. *n.* tinfoil, மெல்லிய தகரத் தகடு. *n. pers.* tinsmith.

**Tincture,** *n.* சாராயத்தில் கரைத்த மருந்து; மங்கிய நிறம்; மென் சுவை.

**Tinder,** *n.* எளிதில் தீப்பற்றும் உலர்ந்த பொருள்.

**Tinderbox,** *n.* தீப்பற்றவைக்கும் பொருளுள்ள பெட்டி; முன் கோபி.

**Tinge,** *n.* இலேசான நிறம். *v.* இலேசாக நிறங்கொடு; பிற பொருள் சிறிது கல.

**Tingle,** *n.* சிலிர்க்கும் உணர்ச்சி, *v.* உடல் சிலிர்; நரம்பு உளர்.

**Tinker,** *n.* தட்டிச் செப்பனிடுபவன். *v.* தட்டிச் செப்பனிடு; முரட்டு வேலை செய்; தலையிட்டுக் கெடு.

**Tinkle,** *v.* மணிபோல் ஒலி செய், *n.*மணியொலி.

**Tinsel,** *n.* பளபளப்பான மெல்லிய தகடு; மின் தகடு; பகட்டான பொருள். *a.* பகட்டான; இழிதிறமான.

**Tinstone,** *n.* வெள்ளீயக் கல்.

**Tint,** *n.* மங்கலான நிறம்; நிறக்கூறு, *v.* மங்கலாக நிறங்கொடு.

**Tinware,** *n.* வெள்ளீயக் கலங்கள்.

**Tiny,** *a.*, மிகச் சிறிய.

**Tip,** 1.*n.* நுனி; முனை; தும்பு; *v.* நுனியில் பொருத்து; முனை கொடு. *v.* தொடு; சாய்; கவிழ்; தூண்டுதல் கொடு, *n.*சாய்வு; தொடுகை; (நடிகர்) தூண்டுதல் உரை; குறிப்பு. 3. *n.*சிறு கையுறை, *v.* சிறு கைக்கூலி கொடு; கொடுத்துச் சரி பண்ணு.

**Tippet,** *n.* தோள் குட்டை.

**Tipple,** *v.* அடிக்கடி குடி. *n.*சாராயக் குடி. *n. ag. pers.* tippler.

**Tipster,** *n.* பந்தயத்தில் குறிப்புக் கொடுப்பவர்.

**Tipsy,** *a.* குடிவெறியிலுள்ள; வெறி மயக்கத்திலுள்ள. *n. abs.* tipsiness.

**Tiptoe,** *n. adv.* கால் விரல் நுனி (மீது நடந்து).

**Tiptop,** *a.*, *n.* மிகச் சிறந்த; முதல்தரமான.

**Tirade,** *n.* வசைமாரி; கண்டனச் சொற்பொழிவு.

**Tire,** 1. *v.* களைப்படை, சோர்வுறச் செய்; வலிமையிழ, 2. *see* tyre, (1) *a.* tired, tiresome. *(neg.)* tireless. *n.* tiredness.

**Tiro,** *n. see* tyro.

**Tissue,** *n.* இழைமூலம்; தாள் மூலம்; உறுப்பு மூலம்; இழை பொருள்.

**Tit, (for tat)** *n.* (பழிக்குப்) பழி; (ஏட்டிக்குப்) போட்டி.

**Titbit,** *n.* துண்டு துணுக்கு; சுவை தரும் கதம்பம்.

**Tithe,** *n.* பத்தில் ஒருபங்கு (வரி); கோவில் மகன்மை. *v.* மகன்மை விதி. *a.* tithable.

**Titillate,** *v.* தொடுவதால் கூச்ச முண்டாக்கு; மகிழச் செய். *n.* titillation.

**Title,** *n.* பட்டப் பெயர்; தலைப்பு; பட்டம்; முகப்பு; புத்தகத் தலைப்பு; உரிமை; உரிமைப் பத்திரம், *v.* பட்டப்பெயர்கொடு; தலைப்புப் பெயர் கொடு, *a.* titular, பெயரளவில் மட்டுமுள்ள, *a.* titled, பெருமகன் பட்டம் பெற்றுள்ள. *comb. n.* title and head, முகப்பும் தலைப்பும், titles and titleholders, பட்டங்களும் பட்டக்காரர்களும்.

**Title-deed,** *n.* உரிமை முறி; உரிமைப் பத்திரம்.

**Title-page,** *n.* (புத்தகத்தின் தலைப்பு முதலியன உள்ள) முதற்பக்கம்.

**Title-role,** *n.* (நாடகம் முதலிய வற்றில்) தலையுறுப்பினர் பகுதி.

**Titter,** *v.* அடக்கிச் சிரி; மனத்துக்குள் சிரி. *n.* அடக்கமான சிரிப்பு.

**Tittle,** *n.* சிறு துணுக்கு.

**Tittle tattle,** *n., v.* வீண் வம்பு பேச்(ச்)சு.

**To,** *prep.* நோக்கி, 'கு' (4ஆம் வேற்றுமை உருபு). திசையில் ஆக. *phr. adv. see* to and fro.

**Toad,** *n.* தேரை.

**Toadstool,** *n.* நச்சுக்காளான் வகை.

**Toady,** *n.* அண்டிப் பிழைப்பவர்; இழிஞர்; *v.* இழிவாகக் கெஞ்சு; (பிறர் முன்) பல்லைக் காட்டு. *n.* toadyism.

**To and fro** *phr. adv.* அங்கும் இங்கும்; முன்னும் பின்னுமாக; போக வர.

**Toast,** *n.* நெருப்பில் வாட்டிய அப்பத்துண்டு; வாழ்த்துரை. *v.* நெருப்பில் வாட்டு; வாழ்த்துக் கூறிப் பருகு.

**Tobacco,** *n.* புகையிலை. *a.* tobacconist, புகையிலை வாணிகன்.

**Tobaggan,** *n.* (பனிக்கட்டிமீது செல்ல உதவும்) சருக்கு வண்டி.

**Tocsin,** *n.* எச்சரிக்கை மணி ஒலி.

**Today,** *n., adv.* இன்றைய நாள்; இன்று.

**Toddle,** *v.* தள்ளாடி நட. *n. ag.* toddler.

**Toddy,** *n.* கள்.

**Toe,** *n.* கால்விரல் *v.* கால் விரலால் தொடு.

**Toehold,** *n.* நிற்குமிடம்; சிறிதளவு ஆதாரம்.

**Toffee, toffy** *n.* (சர்க்கரை, வெண்ணெய் முதலியன கலந்து செய்த) தின்பண்ட வகை.

**Together,** *adv.* ஒரே சமயத்தில்; ஒரே இடத்தில்; ஒருமிக்க.

**Toil,** *n.* கடு உழைப்பு. *v.* வருந்தி உழை. *a.* toilsome. *n. pers.* toiler.

**Toilet, toilette,** *n.* உடல் சிங்காரிப்பு; ஆள் ஒப்பனை; ஒப்பனைக்குரிய பொருள். *n. abs.* toiletry.

**Token,** *n.* அடையாளம்; அறிகுறி; நினைவுக்குறி; சின்னம்; குறியீடு; மட்டமான செயல்; அடையாள முறைச்செயல். *a.* அடையாள முறையான; அடையாளச் சான்றான. *comb. n.* token money. பணங் குறித்த (தாள் முதலிய) பொருள்.

**Told,** *v. see* tell.

**Tolerable,** *a.* பொறுக்கக் கூடிய; நடுத்தரமான. *n.* tolerableness.

**Tolerance,** *n.* பொறுதி; பெரும் போக்கு; தாராள மனப்பான்மை; பரந்த பொறுமை மனப்பான்மை; இணைவிணக்கம்; சகிப்புத் தன்மை. (x intolerance) *a.* tolerant.

**Tolerate,** *v.* பொறுத்துக் கொள்; கண்டிக்காதிரு; இடங்கொடு; அணைத்தாதரி; (சமய) சமரசம் காட்டு. *n. ag.* tolerator, *n. abs.* toleration. ஒப்புரவு; பொறுதி; சமய சமரசம்; பரந்த மனப் பான்மை; அருளாட்சி.

**Toil,** 1.*v.* விட்டுவிட்டு மணியடி; சாவு மணியடி. *n.*மணி ஒலி. 2.

*n.* சுங்கம்; ஆயம் வரி; சுங்கவரி. (2) *n.* toll-gate, toll-bar, toll-house ஆயப் புரை; சவுக்கை; சுங்கச் சாவடி; சுங்கவாயில்; சுங்க முகப்பு.

**Tom,** *n., a.* (பூனை இன உயிர் களின்) ஆண்; (தாமஸ் என்னும் பெயரின் சுருக்கம்) பொது மக்களில் ஒருவன்; பொது மகன்.

**Tomahawk,** *n.* (வடஅமெரிக்க இந்தியர்) கைக்கோடரி. *v.* கைக்கோடரியால் கொல்.

**Tomato,** *n. (pl.* -oes*)* (சீமைத்) தக்காளி (ப்பழம்).

**Tomb,** *n.* கல்லறை. (*comb.*) *n.* tombstone, (கல்லறை) நடுகல்.

**Tomboy,** *n.* ஆண்பிள்ளை போல் நடக்கும் பெண்.

**Tome,** *n.* பெரிய புத்தகம்.

**Tomfoolery,** *n.* வேடிக்கை; அறிவற்ற விளையாட்டுச் செயல்.

**Tommy, Tommy Atkins,** *n.* (பிரிட்டிஷ்) படைவீரன்.

**Tomorrow,** *n. adv.* நாளைக்கு.

**Tomtom,** *n.* பறை; தம்பட்டம்.

**Ton,** *n.* 2,240 கல் எடையளவு; கண்டி; பாரம். *n.* tonnage. கப்பலில் ஏற்றக் கூடிய பார அளவு; எடை வரி வீதம்.

**Tonal,** *a.* (tone) இசை அல்லது தொனிக்கு உரிய. *n.* tonality.

**Tone,** *n.* இசைக்கூறு; தொனி; சுரம்; தொனியின் குணம்; சுர வேறுபாடு; குரல். *v.* தொனி அமை; இசைக் கூட்டு; (படத்தின் நிறத்தைச்) சிறிது மாற்றிச் சீர் திருத்து. *a. see.* tonal. tonic 1.

**Tonga,** *n.* இரு சக்கர வண்டி.

**Tongs,** *n. (pl.)* இடுக்கி; குறடு; சாமணம்.

**Tongue,** *n.* நாக்கு; மொழி; நாவு போன்றபகுதி. *a.* tongue-tied, பேச்சற்ற; நாவெழாத.

**Tonic,** 1. *a.* (டோனிக்) தொனிகளுக்குரிய. 2. *a.* (டானிக்) வலிமை தருகிற. *n.*(உடல், மன) வலிமை தரும் மருந்து; கற்பம்.

**To-night,** *n., adv.* இன்றிரவு.

**Tonite,** *n.* வெடிமருந்து வகை.

**Tonsil,** *n.* உள்நாக்கு. *s. n.* tonsilitis, உள்நாக்கழற்சி.

**Tonsure,** *n.* (கத்தோலிக்கக் குருமாரின்) மழித்த நடு உச்சி மண்டை. *a.* tonsorial, நாவிதனுக்குரிய.

**Too,** *adv.* போதுமானதற்கு மேற்பட்டு; மட்டுமீறி; (ஒன்றனுடன்) கூட; மிகுதியான. (too *good* to *be true*, மெய்யாயிருக்க முடியாத படி அவ்வளவு நல்ல.)

**Took,** *v. see* take.

**Tool,** *n.* கைக்கருவி. *comb. n.* tools and plants, கருவி தளவாடங்கள்.

**Toot,** *n.* குழலொலி; கூக்குரல்.

**Tooth,** *n. (pl.* teeth*)* பல்; சக்கரத்தின் பல்; சீப்பு; இரம்பம் முதலியவற்றின் பல். *a.* toothed, பற்களமைந்த. tooth-some. சுவையான. *n.* tooth-someness. *a. (neg.)* toothless. *v.* teeth,

teethe, பல்விடு; பல்குருத்து விடு; பல்முளை. *comb. n.* tooth-ache, பல்வலி. *n.*tooth-pick, பல் குத்தும் குச்சி. *phr. adv.* tooth and nail, மூர்க்கமாக; கடுமையாக.

**Top,** 1. *n.* உச்சி; உயர்நிலை; பாய்மரத் தலைமேடை. *v.* உச்சிமீது மூடு; வென்று மேலெழு; உச்சியைவெட்டு. *a.* உயர்வான; மேலான. (*sup. deg.* topmost), 2. *n.* பம்பரம். *a. see* stopping *comb. see* toplight etc.

**Tope,** 1.*v.* மட்டுமீறிச் சாராயம் குடி, 2. *n.*(இந்திய வழக்கு) தோப்பு. (1) *n. ag. pers.* toper.

**Topflight,** *a.* மிகச் சிறந்த.

**Topgallant,** *n.* (கப்பலின் தலைப் பாய்க்கு மேலுள்ள) சிறு பாய்.

**Topheavy,** *a.* அளவு மீறிய மேல் பாரமுள்ள.

**Top-hole,** *a.* மிகச் சிறந்த; உயர்தர.

**Topiary,** *n.*, *n,* தோட்டச் செடிச் சித்திர வெட்டு வேலை.

**Topic,** *n.* தலைப்பு; குறித்த பொருள். *a.* topical, முக்கியமான; தலைப்புக்குரிய.

**Topmast,** *n.* கப்பலின் தலைப் பாய்.

**Topmost,** *a. see* top.

**Topography,** *n.* இடஅமைதி; நிலக்கிடக்கை; இடவிவரம்; திணை விவரம். *n. pers.* topo grapher. *a.* topographic(al), *adv.* topographically, நிலக் கிடக்கையைப் பின்பற்றிய கட்டில்.

**Topping,** *n.* முகடுவெட்டல்; முகடு. *a.* மிகச்சிறந்த.

**Topple,** *v.* தலைகீழாகக் கவிழ்; ஆடி விழு.

**Topsyturvy,** *a., adv.* தலைகீழான; குழப்பமான. *v.* தலைகீழாக்கு *n. abs.* topsyturvydom.

**Torch,** *n.* தீவட்டி; தீப்பந்தம்.

**Torchbearer,** *n.* தீவட்டி பிடிப்பவர்; (சீர்திருத்தம், அறிவியல் முதலிய வற்றில்) வழிகாட்டி; முன்னணித் தொண்டர்; அறிவுத் தொண்டர்.

**Tore,** *v. see* tear.

**Torment,** *n.* உடல் வேதனை; மனவேதனை; வேதனை தருவது, *v.* வேதனை செய்; மிக்க தொந்தரை செய். *n. pers.* tormentor.

**Torn,** *v. see* tear.

**Tornado,** *n.* பெரும் புயல்; சுழல் காற்று.

**Torpedo,** *n. (pl*-oes*)* மின் மீன்; (கப்பலைத் தாக்கும்) நீர் மூழ்கிக் குண்டு. *v.* நீர் மூழ்கிக் குண்டால் கப்பலைத் தாக்கு; திட்டத்தைக் குலை. (*comb.*) *n.* torpedo-boat, வெடிகுண்டு தாங்கிச் செல்லும் படகு.

**Torpid,** *a.* உணர்ச்சியற்ற; மசணை யான. *n.* torpidity, torpor. *v.* torpify.

**Torrent,** *n.* பெருவெள்ளம். *(pl.)* பெருமழை. *a.* torrential.

**Torrid,** *a.* வெயிலால் வறட்சியான; உலர்ந்துபோன; வெப்பமான. *n. abs.* torridness, torridity. *phr.*

*n.* torrid zone, (நில இயல்) வெப்ப மண்டலம்.

**Tort,** *n.* (சட்டத்தில்) குற்றச் செயல்; சட்டமீறிய செயல்.

**Tortoise,** *n.* ஆமை. (*comb.*) *n.* tortoise-shell. ஆமை ஓடு.

**Tortuous,** *a.* முறுக்கின; வளைந்து வளைந்து செல்கிற. *n. abs.* tortuousity, tortuousness.

**Torture,** *n.* படுநோவு; சித்திரவதை *v.* சித்திரவதை செய்.

**Tory,** *n.* (பழம் பிரிட்டனின்) மாறுதல் வேண்டாத கொள்கை யுடைய கட்சி சார்ந்தவர்.

**Toss,** *v.* வீசியெறி; தூக்கி எறி; தடுமாறு; சுண்டிப் போடு; 'தலையோ பூவோ' பார்ப்பதற்குக் காசைச் சுழற்று. *n.* வீசி எறிதல்; எழுதல். (*comb.*) *n.* tossup. பூவோ தலையோ' பார்க்கத் தூக்கிப் போடுதல்; சுண்டுதல்; ஐய நிலை.

**Total,** *a.*, *n.* மொத்தம்; எல்லாம். *v.* (totalled) கூட்டுத்தொகை கண்டுபிடி. *n.* totality. *adv.* totally,

**Totalitarian,** *n.* தனியாதிக்கவாதி, *a.* ஒருமுக ஆதிக்கமான. *n. abs.* totalitarianism.

**Totem,** *n.* (மரஞ்செடி உயிரின வடிவாம்) குலமரபுச் சின்னம். *n. abs.* totemism. *n. pers.* totemist. *a.* totemic, totemistic.

**Totter,** *v.* தடுமாறு; தள்ளாடு; நிலைகொள்ளாது அசைந்தாடு.

**Touch,** *v.* தொடு; நெருங்கியிரு; தொடர்பு கொள்; உணர்ச்சி இயக்கு; கனிவி; செயல் தாக்குதல் செய்; புண்படுத்து; தலையிடு; (ஒன்றைப் பற்றிப்) பேசு அல்லது எழுது. *n.* ஊறுணர்ச்சி; தொடுதல்; தடம்; ஒட்டுப்பண்பு; கூறு.

**Touching,** *a.* இரங்கத்தக்க; உள்ளத்தை உருக்குகிற.

**Touchstone,** *n.* உரைகல்; சோதனை; ஆய்வு.

**Touchwood,** *n.* எளிதில் தீப்பற்றும் செத்தை; காளான்.

**Touchy,** *a.* எளிதில் சினங் கொள்கிற, *n. abs.* touchiness.

**Tough,** *a.* உறுதியான; வளையாத; முறியாத. *n. abs.* toughness.*v.* toughen, உறுதியாக்கு; உரமாக்கு.

**Tour,** *n.* (டூர்) சுற்றுப் பயணம்; சுற்றுலா; உலாப் பயணம்.*v.* பயணஞ் செய். *n. pers.* tourist.

**Tournament, tourney,** *n.* பந்தய விளையாட்டு; வீரக் களியாட்டக் காட்சி; பொது ஆடரங்கு.

**Tout,** *v.* வாடிக்கைக்காரர்களைத் தேடிப்பிடி; ஓட்டப் பந்தயக் குதிரைகளைப் பற்றின மறைவி வரங்களை அறி. *n.* மேற் கூறிய வேலைகளைச் செய்பவர்; உள்ளாள்; தரகர்.

**Tow,** *4. v.* (படகை) நீரில் இழு; (வண்டியைக்)கயிறு கட்டியிழு. *n.*கட்டியிழுக்கும் கயிறு. *n. abs. com.* towage, கயிறு கட்டி யிழுத்தல்; இழுப்புக் கூலி. 2. *n.* சணல்கூளம். *n.* (1) towline.

**Toward, towards,** *prep.* (திசை) (குறி) நோக்கி; (ஒன்றை) நாடி. *adv.* பக்கத்தில்.

**Towel,** *n.* நீராடிய பின் துடைக்கும் துண்டு; மேல் குட்டை; கைக் குட்டை. (*comb.*) *n.* towel-horse, ஆடை உலர்த்தப்போடும் சட்டம்.

**Tower,** *n.* கோபுரம்; தூபி; அரண். *v.* உயர்ந்தோங்கு; மேலே எழும்பு. *a.* towering. உயர்ந்தோங்கிய; முதல்தரமான.

**Town,** *n.* நகரம்; பேரூர்; பட்டணம்; நகர மக்கள். *comb. n.* port-town. பட்டினப்பாக்கம்; பாக்கம், park-town, பூங்கா நகர், town-planning, நகர் அமைப்புத் திட்டம். town-planning committee, நகர் அமைப்புக் குழு. town-side, நகர்ப்புறம்; நகர்நடு; நடுநகர். townsman, (*pl.* townsmen), நகரத்தான் town-folk, நகர மக்கள். townhall, நகர மாளிகை; நகரமண்டபம்; நகர்க் கூடம். town-extension, நகர் விரிவு; நகர்ப்புறம்; நகர்ப் புது விரிவு.

**Town-crier,** *n.* நகரில் பறையறை விப்பவர்; வள்ளுவர்.

**Townhall,** *n.* நகர மண்டபம்.

**Townsfolk,** *n.* நகரவாணர்.

**Township,** *n.* நகரமும் அதன் சுற்றுப்புறமும்.

**Townsman,** *n.* நகரத்தான்.

**Toxic,** *a.* நஞ்சுபற்றிய; நஞ்சான.

**Toxicology,** *n.* நஞ்சு நூல். *n. pers.* toxicologist.

**Toxin,** *n.* நோய் நஞ்சு.

**Toy,** *n.* விளையாட்டுக் கருவி; பொம்மை; சிறுதிறப்பொருள். *v.* இழிவாய்க் கருது; விளையாட்டாகக் கையாளு.

**Trace,** 1. *n.* அடையாளம்; அடிச்சுவடு; அறிகுறி; தடம்; சிறிது அளவு. *v.* அடிச்சுவடு தொடர்ந்து செல்; குறிப்பெழுது; படத்தைப் பகர்ப்புச் செய்; உன்னிப்பாக எழுது; பதிதாளி; பதித்துப் பகர்ப்புச் செயல்; பதிகோடிடு; படிவரை; வரைமேல்எழுது; உருவரை எழுது; தீட்டு; வரை; மூலம்காட்டு; வரலாறு விளக்கு; தொடர்பு காட்டு; புலங்கண்டுபிடி. *a.* traceable. *n. ag. pers., impers.* tracer, படி வரைபவர்; குதிரைவார். *n. abs.* tracery, கல்லில் செதுக்கிய சித்திர அமைதி. *n. see* tracing.

**Trachea,** *n.* மூச்சுக்குழல். *a.* trachian, trachial, trachiate, s. *n.* tracheitis, மூச்சுக் குழல் அழற்சி.

**Tracing,** *n.* (trace) மெல்லிய கோடுகளால் தாளில் வரைந்த வடிவம்; படிவரைத்தாள்; படிமைத் தாள். *a.* பகர்ப்புக்குரிய; படி பதிவிற்குரிய.

**Track,** *n.* அடிச்சுவடு; பதிந்த அடையாளம்; ஓட்டப்பந்தயப் பாதை வழி; இருப்புப் பாட்டை. *v.* அடிச்சுவடு பற்றிச்செல்; கயிறு கட்டியிழு. *a. (neg.)* trackless.

**Tract,** 1.*n.* நீர்ப்பரப்பு; நிலப்பரப்பு. 2. *n.*கட்டுரை; சிறு நூல்.

**Tractable,** *a.* எளிதில் பழக்கக் கூடிய; சொற்கேட்டு நடக்கிற. *n.* tractability, tractableness.

**Traction,** *n.* பாரம் இழுத்துச் செல்லல். *n.* tractor, பாரம் இழுக்கும் வண்டி; இயந்திரக் கலப்பை.

**Trade,** *n.* தொழில்; பண்ட மாற்று; வாணிகம்; ஒரே தொழிலுடை யோர்; குழு. *v.* வாணிகம் செய்.

**Trade-mark,** *n.* வாணிக அடையாளப் பொறிப்பு.

**Trader, tradesman,** *n.* வணிகர்; கொண்டு விற்பவர்.

**Trade-union,** *n.* தொழிற் சங்கம்; வணிகச் சங்கம். (*comb.*) *n. abs.* trade-unionism, *n. pers.* trade-unionist.

**Trade-wind,** *n.* வாணிகக் காற்று; நிலையான பருவக்காற்று (*cf.* monsoon)

**Tradition,** *n. (pl.* traditions*)* மரபு; மரபு வழக்கு; மரபுரை; மரபுப் பண்பு. *a.* traditional, traditionary.

**Traduce,** *v.* பழித்துக் கூறு. *n. abs.* traducement. *n. ag.* traducer.

**Traffic,** *n.* போக்கு வரவு; வண்டிப் போக்கு வரவு; வாணிகப் போக்கு வரத்து; வாணிகத் தொடர்பு; தொழில் தொடர்பு; இடைபாடு; கொடுக்கல் வாங்கல்; தொடர்பு; தொடர்புறவு. *v.* (*also rarely* traffick. *p., pa.p.* trafficked. *pr.p.* trafficking) வாணிகம் செய்; உறவாடு. *n. ag.* trafficker. *comb. n.* traffic control). போக்குவரவுக் கட்டுப்பாடு. traffic rules, போக்குவரவு ஒழுங்குமுறை விதிகள். women's traffic, பெண் விலைத் தொழில்; பெண் விடுதித் தொழில்.

**Tragedy,** *n.* துன்பியல் நாடகம்; துயர் நாடகம்; வீறு நாடகம்; துயரக் கதை; துயர நிகழ்ச்சி; இரங்கத் தக்க செயல். *n. pers.* tragedian துன்பியல் நாடக ஆசிரியன் அல்லது நடிகன். *a.* tragic(al).

**Trail,** *v.* தரையில் பட இழு; ஒன்றின் பின் இழுபட்டுச் செல்; (செடிகள்) தரையில் படர்; (வேட்டை) மோப்பம் அல்லது அடிச்சுவடு பிடித்துச் செல். *n.*அடிச்சுவடு; கானகத்தில் செல்லும் வழி; தடம்; (வேட்டை) மோப்பநெறி.

**Trailer,** *n.* இழுத்துச் செல்லப்படும் வண்டி.

**Train,** *v.* பயிற்சி கொடு; பழக்கு; நேராக வளரச் செய். *n.*தரையில் இழுபட்டு வரும் ஆடைப் பகுதி; பின்தானை; புடையர் குழு; புகைவண்டித் தொடர்; தொடர் ஊர்தி; வரிசை. (*comb.*) *n. ag.* trainbearer, பின்தானைக் கையாள். *n.* trainee பயிற்சி பெறுபவர். *n. ag.* trainer. *comb. n.* training college. பயிற்சிக் கல்லூரி. training institute, பயிற்சி நிலையம்; பயிலகம். training school, பயிற்சிப் பள்ளி.

**Trait,** *n.* தனித்தன்மை; சிறப்புக் குணம்; போக்கு.

**Traitor,** *n. (fem.* traitress*)* நாட்டுப் பகைவன்; செய்ந்நன்றி கொன்றவன்; நம்பிக்கை கெடுத்தவன். *a.* traitorous.

**Tram,** *n.* மின்னூர்தி; 'மின்னோடி' (*comb.*) *n.* tramcar. மின் வண்டி. tramway, மின்னூர்திப் பாதை. (*also. pl.* tramways) மின்னூர்தித்துறை.

**Trammel,** *n.* வலை; விலங்கு; கால்கட்டு; தடங்கல்; தடை. *v.* வலையில் பிடி; தடைசெய்.

**Tramp,** *v.* நடந்து செல்; நடந்து பயணம் செல்லல்; (குறிப்பிட்ட வழியில் மட்டும் செல்லாத) சரக்கேற்றிய கப்பல்.

**Trample,** *v.* சவட்டு; மிதி; அவமதித்து நடத்து.

**Trance,** *n.* மெய்ம்மறந்த நிலை.

**Tranquil,** *a.* அமைதியான. *n. abs.* tranquillity. *v.* tranquillize, - se.

**Trans,** (முன்னொட்டிடைச் சொல்) கடந்து; அப்பாலான.

**Transact,** *v.* நடத்து; நடைமுறைப் படுத்து. *n.* transaction.

**Transatlantic,** *a.* அட்லாண்டிக் கடலுக்கு அப்பாலான; அட்லாண்டிக் கடல் தாண்டுகிற.

**Transcend,** *v.* மேம்படு; உயர்ந் தெழு; மிகுதிப்படியாகு.

**Transcendent,** *a., n.* மேம்பட்ட(து); மனித அறிவுக் கெட்டாத(து); மீ உயர்ந்த(து). *n.* transcendental. *n. abs.* transcendentalism, மீஉயர் ஆற்றல் நம்பிக்கை; மீஉயர் ஆற்றல் கோட்பாடு; மீஉயர் ஆற்றல் வகை. *s. n. pers.* transcendentalist.

**Transcribe,** *v.* பார்த்து எழுது. *n. ag.* transcriber. *n. abs.* transcription. *n.* transcript.

**Transfer,** *v.* இடமாற்று; உரிமை மாற்று; (உரிமை; ஆள்; பொருள்) மாறுபாடு செய். *a.* transferable. *n. abs.* transference, (இடம், உரிமை) மாற்றம். *n. pers.* transferee, இடமாற்றப் பெறுபவர்; இடமாற்றாளர்; transferer, இடமாற்றுபவர். *comb. n.* transferred epithet, ஆகுபெயர்.

**Transfigure,** *v.* உருவம் மாற்று; தோற்றமாற்று. *n. (vbl.)* transfiguration.

**Transfix,** *v.* குத்து; அசையாது நிறுத்து. *n. (vbl.)* transfixion.

**Transform,** *v.* உருவத்தை மாற்று; (ஒன்றையே வேறொன்றாக) மாற்று. *n.* transformable. *n. (vbl.) com.* transformation.

**Transfuse,** *v.* கலமாறிக் கல; குருதியில் கல. *a.* transfusible. *n.* transfusion.

**Transgress,** *v.* எல்லை மீறிச் செல்; சட்டத்தை மறு; பழிவினை செய். *n. (vbl.)* transgression. *n. ag.* transgressor.

**Transient,** *a.* சிறிது காலமே யிருக்கக்கூடிய; நிலையற்ற. *n. abs.* transience.

**Transit,** *n.* குறுக்கே செல்லல்; இடம் பெயர்வு; கோட் குறுகுதல்.

**Transition,** *n.* மாறுபாடு; நிலை மாறுபாடு; புடைபெயர்வு; நிலை பெயர்வு; நிலைதிரிபு; இடைமாறு பாடு; நிலைதிரிகாலம்; இடைமாறு பாட்டுக் காலம். *a.* transitional.

**Transitive,** *a., n.* (இலக்.) செயப்படுபொருள் உள்ள (வினைச்சொல்) (x intransitive).

**Transitory,** *a.* நிலையில்லாத. *n. abs.* transitoriness.

**Translate,** *v.* மொழிபெயர்; இடமாற்று; நிலைமாற்று. *n.* translation. *n. ag.* translator., *a.* translatable.

**Transliterate,** *v.* (மற்றோர் மொழியின் எழுத்துகளில்) உருப் பெயர்த்து எழுது; எழுத்துப் பெயர்ப்புச் செய்; ஒலிப்பு மாற்றாது எழுத்து மாற்றி வரை. *n.* transliteration. எழுத்துப் பெயர்ப்பு.

**Translucent,** *a.* அரைகுறையாக ஒளி ஊடுருவிச் செல்கிற. *n. abs.* translucence, translucency.

**Transmigrate,** *v.* கூடுவிட்டுக் கூடுபாய்; மறு பிறப்புறு; இடம் விட்டு இடம் செல். *n.* transmigration.

**Transmit,** *v.* அனுப்பு; பெற்று அனுப்பு; *n.* transmission, transmittal. ஊடுசெல்ல விடுதல்; ஊடுபாய்ச்சு. *n. ag. impers.* transmitter, ஊடனுப்பி; ஊடிணை பொறி. *a.* transmissible, transmittable.

**Transmute,** *v.* உருமாற்று; *n.* transmutation. *a.* transmutable. *n. abs.* transmutability.

**Transoccanic,** *a.* கடல்கடந்து அப்பாலான.

**Transparent,** *a.* ஒளி எளிதில் ஊடுருவிச் செல்கிற; தெளிவாகத் தெரிகின்ற; பளிங்கு போன்ற. *n. abs.* transparence, transparency.

**Transpierce,** *v.* ஊடுருவித் துளை செய்.

**Transpire,** *v.* ஆவியாக வெளிப்படு; மறை வெளிப்படு; நிகழ். *n.* transpiration. நீராவிப் போக்கு.

**Transplant,** *v.* இடம் பெயர்த்து நடு; நாற்றுப் பறித்து நடு; இட மாற்றியமை. *n.* transplantation.

**Transport,** 1. *v.* (transport) கொண்டு செல்; தன்னை மறக்கவை; எக்களிப்பூட்டு; நாடு கடத்து; உணர்ச்சியில் மிதக்கவை. 2. *n.* tra'nsport, இடப்பெயர்வு; (சரக்குப்) போக்குவரத்து; ஏற்றிச் செல்லல்; இடமாற்றம்; புடை பெயர்ச்சி; எக்களிப்பு; தன் மறதி; *n. vbl.* transportation. 1. இடப் பெயர்வு; (சரக்கு) இடப் பெயர் வகி. 2. நாடு கடத்தல்.

**Transpose,** *v.* இடம் மாற்றிவை; சொற்களின் வரிசையை மாற்று. சுருதி மாற்று. *n.* transposal, transposition.

**Trans-ship,** *v.* கப்பலிலிருந்து மற் றொன்றுக்கு மாற்று. *n.* trans-shipment.

**Transubstantiate,** *v.* ஒரு பொருளைப் பிறிதொன்றாக மாற்று. *n.* transubstantiation. 'பொருள் மாற்றம்;' (திருக்கோவில் வழிபாட்டு முறை; அப்பமும்

செந்தேறலும் இயேசுவின் தசை, குருதியாகி விடுகின்றன என்னும் கத்தோலிக்கரின்) திருமாறு பாட்டுக் கோட்பாடு.

**Transverse,** *a.* குறுக்கான. *n.* transversal. (கோடுகளைக் குறுக்காக வெட்டும்) வெட்டுக் கோடு. *adv.* transversely, குறுக்காக.

**Trap,** *n.* கண்ணி; பொறி தந்திரம்; சூழ்ச்சிப் பொறி; எக்கச்சக்க நிலை; ஒருவகை வண்டி. *v.* பொறியில் சிக்கவை; கண்ணியில் மாட்டு; சூழ்ச்சியால் ஏமாற்று. *n. ag.* trapper.

**Trapeze,** *n.* (நீண்ட கயிற்றில் தொங்கும்) உடற்பயிற்சிக்கான ஊஞ்சல்.

**Trapezium,** *n.* (வடிவியல்) இருபக்கங்கள் மட்டும் இணைக் கோடுகளாயமைந்த நாற் கோட் டுருவம்; முரணிணைவகம்.

**Trappings,** *n. (pl.)* (குதிரையின்) சேணங்கள்; பகட்டணிப் பொருள்கள்.

**Trappy,** *a.* சூதான; மோசடியான.

**Traps,** *n. (pl.)* கையேணி; கைப் பொருள்கள்.

**Trash,** *n.* கழிபட்டபொருள்; செத்தை; இழிபொருள்.

**Travail,** *n.* பிள்ளைப்பேற்று நோவு; உழைப்பு. *v.* கடுமையாக உழை; பிள்ளைப் பேற்று நோவுறு.

**Travel,** *v.* கால்நடையாகச் செல்; பயணம் செல். *n.* பயணம். *n. pers.* traveller, (வெளிநாட்டுப்) பயணம் செய்பவர். *comb. n.* travelling allowance, பயணப் படி; travellers bungalow, வழிப்போக்கர் விடுதி; அரசியல் விருந்தினர் மாளிகை.

**Traverse,** *a., adv.* குறுக்கான. *n.* குறுக்குச் சட்டம். *v.* கட; குறுக்கே செல்; சுழலு; மறுத்துக் கூறு.

**Travesty,** *n.* கேலி வர்ணனை. *v.* நகைப்பிற்கிடமாகும்படி ஒன்றை விவரி.

**Trawl,** *n.* பெரிய பைபோன்ற வலை. *v.* பெரிய வலைவீசி மீன் பிடி.

**Trawler,** *n. ag. pers. impers.,* மீன் பிடி வலைஞர்; வலைஞர் நாவாய்.

**Tray,** *n.* தாம்பாளம்; தட்டம்; வட்டகை; தட்டு.

**Treachery,** *n.* நம்பிக்கைக் கேடு. *a.* treacherous.

**Treacle,** *n.* பாகு வெல்லம்; பாகு.

**Tread,** *v. (pa. p.* trod or trod or trodden*)* அடியிட்டு நட; காலால் மிதி. *n.* கால் வைத்தல்; நடக்கும் தோரணை; அடி வைக்கும் ஓசை.

**Treadle,** *n.* (அச்சகம்) பொறியைக் காலினால் அழுத்தும் பகுதி.

**Treadmill,** *n.* கால் வைத்து அழுத்தி ஓட்டும் பொறி; வேலை முதலியவற்றில் சலிப்பு.

**Treason,** *n.* (மன்னர், அரசுக்கு எதிரான) சதி; மன் பகை. *a.* treasonable.

**Treasure,** *n.* கருவூலம்; பொருட் குவை; மதிப்பிற்குரிய பொருள். *v.* செல்வம் திரட்டு; உயர்வாக மதி; கவனத்துடன் காப்பாற்று. *n. pers.* treasurer. கருவூலக் காப்பாளர்; பொருள் காப்பாளர்; பொருளாளர்; கருவூலத்தார்.

**Treasure-trove,** *n.* புதையல்.

**Treasury,** *n.* அரசியற்கருவூலம்; பொருட்குவியல்.

**Treat,** *v.* 1. நடத்து. 2. செயற்படுத்து; (கலந்து) செயலாற்று; 3. (மருத்துவத் துறை) பண்டுவம் பார். 4. குறித்துப் பேசு, குறித்து எழுது. (*see* treatise.) 5. உடன் படிக்கை ஏற்பாடு செய். (*see* Treaty.) 6. விருந்தளி; பாராட்டி விருந்து அளி. *n.* விருந்து; மகிழ்ச்சியான பொழுதுபோக்கு. *n.* (1-4) *see* treatment. (4) *see* treatise. (5) *see* treaty.

**Treatise,** *n.* (treat 4) கட்டுரை; தனி நூல்.

**Treatment,** *n.* (treat 1-4) கை யாளுமுறை; கையாட்சி; நடத்து கை; நடத்துமுறை; பரிமாற்ற முறை; செயல் தொடர்பு முறை. 3. விளக்க முறை; (மருத்துவப்) பண்டு வம்; மருத்துவ உதவி முறை.

**Treaty,** *n.* (treat 5) உடன் படிக்கை; ஒப்பந்தம்.

**Treble,** *a.* மும்மடங்கான. *v.* மூன்று மடங்காக்கு. *n.* உயர் இசைக்குரல்.

**Tree,** *n.* மரம்; மரபு வழி; மரக்கட்டை; தூக்குமரம். *a. (neg.)* treeless, மரமற்ற.

**Trefoil,** *n.* மும்மூன்று இலைகளா யுள்ள செடியினம்; மூவிலை வடிவம்.

**Trek,** *n.,v.* மாட்டு வண்டிப் பயணம் (செய்).

**Trellis,** *n.* கொடிகள் படர அமைக்கும் பந்தல்; தட்டி. (*comb.*) *n.* trelliswork, கொடிப்பின்னல் முறை.

**Tremble,** *v.* நடுங்கு; பதறு; திடுக்கிடு. *adv.* tremblingly.

**Tremendous,** *a.* மிகப்பெரிய; வியப்பைத் தருகிற; அஞ்சத்தக்க.

**Tremor,** *n.* நடுக்கம்; அதிர்ச்சி. *a.* tremulous.

**Trench,** *n.* அகழி; நீண்ட பள்ளம்; போர்க்காலப் பதுங்கு குழி. *v.* குழி தோண்டு; வல்லந்தமாகப் பிறர் இடத்தில் நுழை.

**Trenchant,** *a.* வெட்டுகிற; கூரிய.

**Trencher,** *n.* பெரிய மரத்தட்டு; சாப்பாடு.

**Trench-food,** *n.* சேற்றுப் புண்.

**Trend,** *n.* போக்கு; விருப்பம்; சார்பு. *v.* ஒரு திசை நோக்கியிரு; திசை திரும்பு.

**Trepan,** *v.* பொறியில் சிக்கவை. வஞ்சித்து இழு. *n.* மண்டை எலும்பறுக்கும் சிறு வாள்.

**Trepidation,** *n.* நடுக்கம்; தடுமாற்றம்.

**Trespass,** *v.* உரிமையில்லாத இடத்தினுள் நுழை; சட்டத்தை மீறு; குற்றம் அல்லது பழிசெய்; வரம்புகட; எல்லைமீறு; உரிமை கடந்து செயலாற்று. *n.* உரிமை

யின்றி ஓரிடத்தில் நுழைதல்; குற்றஞ் செய்தல். *n. ag. pers.* trespasser.

**Tress,** *n.* கூந்தல்; மயிர்ச்சுருள்.

**Trestle,** *n.* (பாலங்களில் இருப்புப் பாட்டைகளைத்) தாங்கும் மரச்சட்டம்.

**Triad,** *n.* மூன்றினத் தொகுதி; மும்மை.

**Trial,** *n.* (try) முயற்சி; வழக்கு விசாரணை; தேர்வு முறை; துன்பம்.

**Triangle,** *n.* முக்கோணம். *a.* triangular.

**Tribe,** *n.* குலம்; மரபுக் குழு; பண்படாக் குழு; கும்பு; குடும்பு; உறவுக் குழு; மலங்குடி. *a.* tribal. கும்பு நிலையான; பண்படாத; மலங்குடி சார்ந்த.

**Tribesman,** *n.* குலத்தைச் சேர்ந்தவன்; மரபுக் குழுவினன்.

**Tribulation,** *n.* கடுந்துயர்.

**Tribunal,** *n.* உயர்முறை மன்றம்.

**Tribune,** *n.* மக்களின் பேராள்; பொது மக்கட் பேராள்; முறைவர்; தீர்ப்பாளர்; தீர்ப்புரிமையாளர். *s. n.* tribunal. தீர்ப்புரிமையாளர்; தீர்ப்புரிமை மன்றம்.

**Tributary,** *a.* திறைகட்டுகிற; புகழ்ச்சிகரமான; துணைமை (ஆறு) யான. *n.*கப்பம் கட்டும் சிற்றரசர்; (வந்து சேரும்) கிளையாறு. *correl. see* distributory.

**Tribute,** *n.* கப்பம்; திறை; புகழ் உரை; முகமனுரை.

**Trice,** *n.* கணப்பொழுது; நொடிப்பொழுது.

**Triceps,** *n.* முத்தலைத் தசை.

**Trick,** *n.* தந்திரம்; சூது; குறும்பு. *v.* ஏமாற்று; ஆடை உடுத்து; ஒப்பனை செய். *n. ag.* tricker. *n. abs.* trickery. *a.* trickish.

**Trickle,** *v.* (நீரியல்பொருள்) துளிகளாக விழு சிறுநீரோட்ட மாகச் செல்; கசிந்தொழுகு.

**Trickster,** *n.* ஏமாற்றுக்காரன்; எத்தன்.

**Tricolour,** *a.* மூன்று நிறங்கள் சார்ந்த. *n.*மூவண்ணக் கொடி.

**Tricycle,** *n.* முச்சக்கர மிதிவண்டி; 'மும்மிதி' வண்டி; 'மூவாழி' மூவுருளை.

**Trident,** *n.* முக்கவர்ச் சூலம்.

**Tried,** *v.* (try) *pa. p. a.* தேர்ந்த; தேறிய; கை தேறி; தேர்ந்து பயின்ற.

**Triennial,** *a.* மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையான. *n. abs.* triennium மூன்றாண்டுக் காலம்.

**Trifle,** *n.* சிறு திறம்; சிற்றியற் பொருள்; மிகச் சிறு விலை. *v.* சிறுபிள்ளைத் தனமாக நட; விளையாடு; வீண்செலவுசெய். *n. ag.* trifler. *a.* trifling, மிகச் சிறுதிற.

**Trifoliate,** *a.* மூவிலையுள்ள.

**Trifurcate,** *v., a.* மூன்று கிளையாகப் பிரி(கிற).

**Trigger,** *n.* (துப்பாக்கி) விசை.

**Trigonometry,** *n.* முக்கோண இயல்; முக்கோணகம். *a.* trigonometric(al).

**Trill,** *v.* நடுக்கக் குரலுடன் பேசு அல்லது பாடு. *n.*குரல் நடுக்கம்.

**Trillion,** *n.* (ஆங்கில வழக்கு) ($10^{18}$) ஒன்றடுத்துப் பதினெட்டுச் சுன்னங்கள் குறிக்கும் பேரெண்; பதினாயிரம் கோடி கோடி. (million million millions); (அமெரிக்க வழக்கு) ($10^{12}$) பன்னிரண்டு சுன்னங்களடுத்த பேரெண்; நூறாயிரங்கோடி. (million millions or thousand thousand billions).

**Trilogy,** *n.* முத்தொகுதி; முந்நாடகத் தொகுதி.

**Trim,** *v.* ஒழுங்கு செய்; நேர்த்தி யாக்கு; ஒப்பனை செய்; ஒழுங்காகக் கத்தரி; (கப்பலைப்) புறப்பட ஆயத்தமாக்கு. *n.* ஒழுங்கு; சிங்கார உடுப்பு; குறைவறு செய் நிலை. *a.* ஒழுங்கான; நேர்த்தி யான. *n. abs.* trimness.

**Trimeter,** *n.* மூவசை அடி; மூவடிச் செய்யுள்.

**Trimmer,** *n.* கோலஞ் செய்பவர்; இரு கட்சியிலும் சேராதவர்; சமயத்திற் கேற்றபடி நடப்பவர்.

**Trimming,** *n.* சிங்கார உடுப்பு; சோடிப்பு.

**Trimmings,** *n. (pl.)* வெட்டித் தள்ளிய சிறுபகுதிகள்; குஞ்சங்கள்.

**Trimness,** *n. see* trim.

**Trinity,** *n.* மும்மை; மூவுரு; முத் தெய்வ வடிவம்; மும்மூர்த்தித் துவம். *a. n.* trinitarian, மும் மூர்த்தக் கொள்கை யுடைய(வர்); *n. abs.* trinitarianism.

**Trinket,** *n.* சிறுதிற அணிமணி; சிறுவிலைப் பொருள்.

**Trinomial,** *n.* (உருக்கணக்கியல்) மூவுறுப்புக்கோவை.

**Trio,** *n.* மூவர்; மும்மை; மூவர் பாட்டு.

**Trip,** *v.* விரைவாக அடி வைத்து நட; சந்தம்பட நட (*see* tripping); இடறி விழு; தவறு செய்; கால் இடறி விழச் செய். *n.* சிறிது தொலைப் பயணம்; பயணம்; விழச்செய்தல் இடறுதல்; (கப்பல், பொது ஊர்திகள்) பயணத்தடவை *n. ag.* tripper.

**Tripartite,** *a.* மூன்று கட்சிகள் சேர்ந்து செய்த; முக்கூட்டான.

**Triple,** *a.* மும்மடங்கான; மும்மடி யான; முக்கூட்டான; முக்கூறான; மூன்று சேர்ந்த. *v.* மூன்று மடங்காகச் செய்; மும்மடியாக்கு;

**Triplet,** *n.* மூன்று சேர்ந்த தொகுதி; முக்கோவை; மூன்றடி இயை புடைய செய்யுள்; சிந்தடிச் செய்யுள்; சிந்து. *(pl.)* ஒருங்கே பிறந்த மூன்று குழந்தைகள்.

**Triplex,** *a., n.* மூன்றாயுள்ள (அமைப்பு).

**Triplicate,** *a.* மும்மடங்கான *n.* மூன்று எழுத்துப் படிகள்; முப்படிவத் தாள்; மும்மடி இதழ்.

**Tripod,** *n.* முக்காலி.

**Tripping,** *a.* (trip) சந்தத்துடன் அடிவைத்து நடக்கிற; விரைவாக நடக்கிற. *adv.* trippingly.

**Trisect,** *v.* மூன்று சரிபகுதிகளாகப் பிரி. *n.* trisection, *n. ag.* trisector.

**Tristich,** *n.* மூவடிச் செய்யுள்.

**Trisyllable,** *n.* மூவகைச் சொல். *a.* trisyllabic.

**Trite,** *a.* பழகிப்போன; மிகச் சிறுதிறமான. *n. abs.* triteness.

**Triumph,** *n.* வெற்றி; வெற்றி விழா. *v.* வெற்றியடை; வெற்றிவிழாக் கொண்டாடு. *a.* triumphal, வெற்றிக்குரிய. *a.* triumphant, வெற்றிபெற்ற *adv.* triumphantly.

**Triumvir,** *n.* முக்கூட்டாட்சியாளர்; மூவாட்சியாளர். *n. abs.* triumvirate.

**Trivial,** *a.* சிறுதிற; பயனற்ற. *n.* triviality.

**Trochee,** *n.* ஒரு நெடில் (அல்லது அழுத்த அசை) ஒரு குறில் (அல்லது அழுத்தமிலா அசை) இணைந்த சீர்.

**Trod, trodden.** *see* tread.

**Trojan,** *a.* (பண்டைய) டிராய் நகரத்துக்குரிய.

**Troll,** 1. *n.* குள்ளன்.2. (ஒவ் வொருவராகப்) பாடு. *n.*பாட்டு. 3. மீன் பிடி.

**Trolly, trolley,** *n.* (கூண்டு) இல்லாத பாரவண்டி.

**Troop,** *n.* கூட்டம்; குதிரைப் படைவீரர் பகுதி; படை. *n.* trooper, குதிரை வீரன்.

**Trope,** *n.* செய்யுள் அணி அமைதி; அணிமொழிநடை.

**Trophy,** *n.* வெற்றிச்சின்னம்.

**Tropic,** *n. (also. pl.)* வெப்ப மண்டலம். *a.* tropic(al).

**Troth,** *n.* வாக்குறுதி; சொல்லுறுதி.

**Troubadour,** *n.* பண்டை பிரெஞ்சு நாட்டு வீரப்பாணன்; நாடோடிப் பாடகன்.

**Trouble,** *v.* தொந்தரை செய். *n.* தொந்தரை; மனக் குழப்பம். *a.* troublesome, troublous.

**Trough,** *n.* தொட்டி; பள்ளம்.

**Trounee,** *v.* கசையினால் அடி.

**Troupe,** *n.* (நாடோடி நடிகர்) குழு.

**Trousers,** *n. (pl.)* கால் சட்டை. *a.* trousered, *n.* trousering, கால் சட்டைக்கான துணி.

**Trousseau,** *n.* மணப்பெண்ணின் உடை.

**Trout,** *n.* மீன் வகை.

**Trow,** *v.* எண்ணு; கருது.

**Trowel,** *n.* (கொற்றனது) கரண்டி; மண்வெட்டி.

**Truant,** *n.* சுற்றித் திரிபவர்; வேலைக் கள்ளர்; ஊர் சுற்றும் மாணவர். *n.* truancy.

**Truce,** *n.* தற்காலிகப் போர் நிறுத்தம்; போரிடை ஓய்வு.

**Truck,** 1. *n.* பார வண்டி. 2. *v.* பண்டமாற்றி வாணிகம் செய். *n.*பண்டமாற்று; சிறுவாணிகப் பொருள்கள்; செயல் தொடர்பு.

**Truculent,** *a.* முரட்டுத்தனமான; இரக்கமற்ற. *n.* truculence.

**Trudge,** *v.* சோர்ந்து நட. *n.*சோர்வு நடை.

**True,** *a.* உண்மையான; சரியான; உண்மைப் பற்றுள்ள; தூய; நேர்மை யான. *adv.* truly. *n. see* truth.

**True-bred,** *a.* தூய பயிர்ப்புடைய.

**Truism,** *n.* தானே விளங்கும் உண்மை; பொது உண்மை; சிறுதிற மெய்ம்மை.

**Trump,** *n.*துருப்பு; துருப்புச் சீட்டு; வெற்றிச் சீட்டு; வெற்றி தரும் திட்டம். *v.* துருப்புச் சீட்டினால் பிடியை வெல்லு. *phr.* trump up, பொய்யாகக் கற்பனை செய். trumpery, *n.*பயனற்ற பகட்டுப் பொருள்.

**Trumpet,** *n.* ஊது கொம்பு; எக்காளம். *v.* உரத்துக் கூவு பலரறியும்படி புகழ்ந்து கொண்டாடு. *n. ag.* trumpeter.

**Truncate,** *v.* முனையை வெட்டு; சிதை; உறுப்பை வெட்டு. *n.* truncation.

**Truncheon,** *n.* குறுந்தடி; குண்டாந் தடி; கட்டியக் கோல்.

**Trunk,** *n.* அடிமரம்; உடற்பகுதி; தும்பிக்கை; பெட்டி. (*comb.*) *n.* trunkline, தலைமை இருப்புப் பாதை; தலைநெரி; தொலைபேசி மூல இணைப்பு. *n.* trunk call.

**Truss,** *n.* வைக்கோல் கட்டு; கட்டுப்போடுதல்; கொத்து; உத்திரங்களின் தொகுதி. *v.* சேர்த்துக் கட்டு; முட்டுக் கொடுத்து வலுப்படுத்து. *n. abs.* trussing.

**Trust,** *n.* நம்பிக்கை பொறுப்புறுதி; பொறுப்பாட்சிக் குழு; பொறுப்புக் குழு; பொறுப்பாண்மை; பொறுப் பாட்சி நிலையம்; ஓம்படைப் பொருள்; நம்பிக்கைப் பொறுப்பு (க்குரியது). *a.* நம்பகமாக ஒப்படைக்கப்பட்ட. *v.* நம்பு; நம்பிக்கை வை; நம்பியிரு. *adv.* trustingly. *comb. phr. adv.* on trust, நம்பிக்கையின் பேரில்; மலரணையாக.

**Trustee,** *n.* (trust) பொறுப்பாளர்; பொறுப்பாணர்; காப்பறவாணர்; பொறுப்பாளி; அறநிலையக் காவலர்; பொருள் காவலர். *n. abs.* trusteeship.

**Trustful,** *a.* நம்பிக்கை வைக்கிற; நம்பிக்கையுள்ள. *n.* trustfulness.

**Trustworthy,** *a.* நம்பத் தகுந்த; நேர்மையான. *n.* trust worthiness.

**Trusty,** *a.* நம்பகமான.

**Truth,** *n.* (true) உண்மை; மெய்ம்மை, மாறாப் பற்றுடைமை. *a.* truthful. *adv.* truthfully. *a.* truthfulness.

**Try,** *v.* முயற்சி செய்; தேர்ந்தறி; வழக்கு ஆராய். *n.* முயற்சி. *a.* trying. கடுந்தேர்வு செய்கிற; பொறுக்க முடியாத; துன்புறுத்து கிற. *adv.* tryingly. *n. see.* trial, *pa. p.a. see* tried.

**Tryst,** *n.* சந்திக்கும் இடமும் பொழுதும். *v.* சந்திக்க ஏற்பாடு செய்.

**Tsar,** *n. see* czar.

**Tsetse,** *n.* (ஆப்பிரிக்காநாட்டு) நச்சு ஈ. வகை.

**Tub,** *n.* தண்ணீர்த் தொட்டி; கொப்பறை; குட்டுவம்; மிடா. *v.* தொட்டியில் வை; (தொட்டியில்) நீராடு.

**Tubby,** *a.* தடித்த; உருளை போன்ற.

**Tube,** *n.* குழல்; குழாய். *v.* குழாய் பொருத்து. *n.* tubing, குழாய்; குழாய் செய்யும் பொருள். *a.* tubular, குழாய் போன்ற; உள்துளையுள்ள. *n.*tubule, சிறு குழாய். *a.* tubulous, புழையான; உட்குழலுள்ள *comb. n.* tube well. குழாய்க் கிணறு; நீர்க்குழாய்.

**Tuber,** *n.* கணு; தூரிலுள்ள தண்டு; கிழங்கு வகை.

**Tuberculosis,** *n.* (சுருக்கம் T.B.) உடலுருக்கி; பெருங்காசம். *comb. n.* bone tuberculosis எலும்புருக்கி, intestine tuberculosis, குடலுருக்கி.

**Tuberose, tuberous,** *n.* கழலைகள் நிறைந்துள்ள. *n.* tuberosity.

**Tuck,** *v.* நெருக்கமாக இழு; சுருக்குப்போட்டுத் தை. *n.* உடையில் மடிப்பு; கொய்சகம்.

**Tucker,** *n.* கொய்சகமாக அமைத்த மாதர் தோள் ஆடை.

**Tuesday,** *n.* செவ்வாய்க் கிழமை.

**Tuft,** *n.* கொத்து; திரள்; கொண்டை; மயிர்முடி. *v.* கொத்துகளால் அணி செய். *a.* tufted, tufty.

**Tug,** *v.* இழு; இழுத்துச்செல்; முயற்சி செய். *n.*வலிந்து இழுத்தல்; இழுக்கும் சிறு நீராவிப் படகு. *phr. n.* tug of war வடம் இழுக்கும் போட்டி.

**Tuition,** *n.* கல்வி புகட்டுதல்.

**Tulip,** *n.* மணி உருவப் பூ வகை.

**Tumble,** *v.* கீழே விழு; உருள்; கொட்டு; தலை கீழாக விழு. *n.* விழுதல்; குட்டிக்கரணம்.

**Tumbler,** *n.* கழைக்கூத்தாடி; கிண்ணம்; குவளை; ஒரு வகைப் புறா.

**Tumid,** *a.* வீங்கியுள்ள; பேச்சில் பகட்டான. *n.* tumidity.

**Tumour,** *n.* (உடலில்) கட்டி; கழலை.

**Tumult,** *n.* குழப்பம்; சந்தடி. *a.* tumultuous, tumultuary.

**Tumulus,** *n.* (*pl.*-li) (கல்லறை மீதுள்ள) மண் மேடு. *a.* tumular.

**Tun,** *n.* மிடா; 252 ‘காலன்’ அளவு.

**Tundra,** *n.* பனிவெளிப் பகுதி.

**Tune,** *n., v.* இசை; இசைப் பொருத்தம்; இசைவு; (உடல்மனம் ஆகியவற்றின்) பாங்கு. *a.* tuneful. tuny. *a. (neg.)* tuneless.

**Tungsten,** *n.* உலோக வகை.

**Tunic,** *n.* உள்சட்டை; மென் துணிச் சட்டை.

**Tuning fork,** *n.* இசைக் கவை.

**Tunnel,** *n.* சுரங்கப்பாதை; சுருங்கை வழி. *v.* குடைந்து பாதை அமை.

**Turban,** *n.* தலைப்பாகை; தலைக்கட்டு.

**Turbid,** *a.* கலங்கலான; கூழான. *n.* turbidity, turbidness.

**Turbine,** *n.* (நீர் அல்லது நீராவி ஆற்றலால் சுழலும்) பொறி உருளை.

**Turbot,** *n.* மீன் வகை.

**Turbulent,** *a.* கொந்தளிப்பான; கீழ்ப்படியாத; கலகம் விளைக்கிற. *n.* turbulence.

**Turf,** *n.* புல் நிலம்; கரண். (the turf, குதிரைப் பந்தய வெளி). *a.* turfy.

**Turgid,** *a.* வீங்கியுள்ள; வீறாப்பாகப் பேசுகிற. *n.* turgidity.

**Turkey,** *n.* வான் கோழி. *n.* turkey-red, சிவப்புச் சாய வகை.

**Turmeric,** *n.* மஞ்சள்.

**Turmoil,** *n.* குழப்பம்; சந்தடி; தொந்தரை.

**Turn,** *v.* சுழலு; மாற்று; திரும்பு; விளைவாகு; மொழி பெயர்த் தெழுது; மாறுதல் அடை. *n.* மாறுதல்; திரும்புதல்; திருப்பம்; சுற்று; சிறிதுதொலை நடை; வரிசை முறை; உதவிச் செயல்; வாய்ப்பு; தேவை; பாங்கு; நடிப்பு.

**Turncoat,** *n.* கொள்கை மாறுபவர்; கட்சி மாறி.

**Turndown,** *v.* அளவைக் குறை; வேண்டுகோளை மறு; குழாய் அடை.

**Turner,** *n.* கடைசல் செய்பவர். *n. abs.* turnery.

**Turning,** *n.* திருப்பம்; மூலை யிடம்; மாறுதல்; கடைசல் பிடித்தல்.

**Turning-point,** *n.* திரும்பு கட்டம்.

**Turnip,** *n.* கிழங்கு வகை.

**Turnkey,** *n.* திறவுகோலை வைத்திருக்கும் காவலாளி.

**Turnover,** *n.* 1. கவிழ்தல். 2. கொள்முதல்; வினைமுதல்; விற்றுமுதல்; செய்முதல்.

**Turnpike,** *n.* சுங்கச் சாவடி.

**Turnspit,** *n.* அகப்பைக் கோல்; இறைச்சியைத் தணப்பில் திருப்பிக் கொடுப்பவர்.

**Turnstile,** *n.* (ஒவ்வொருவராகச் செல்லவிடும்) சுழல் சட்டம்; நுழைவாயில் சட்டம்.

**Turpentine,** *n.* கற்பூரத் தைலம்.

**Turpitude,** *n.* இழிகுணம்; கொடுமை புரியும் இயல்பு.

**Turquoise,** *n.* நீலக்கல் வகை.

**Turret,** *n.* சிறு கோபுரம்; அரண் கூண்டு; சிறு தூபி; பீரங்கி மேடு. *a.* turreted.

**Turtle, turtledove,** *n.* புறா வகை. *n.*கடலாமை. (turn turtle. தலை கீழாகு.)

**Tush,** *int.* (வெறுப்புக் குறி) சூ! சே!

**Tusk,** *n.* தந்தம்; இபம்; தந்தம் போன்ற பல்.

**Tusker,** *n.* (நீண்ட தந்தமுடைய) யானை; கொம்பனானை.

**Tussle,** *n.* பூசல்; போர்; சண்டை. *v.* போராடு.

**Tut,** *int.* (வெறுப்பு, கண்டித்தல், அவசரம் முதலிய உணர்ச்சி களைக் காட்டும் சொல்) அட போ!

**Tutelage,** *n.* படியாள் நிலை; ஒருவருடைய பாதுகாப்பில் இருக்கும் நிலைமை. *a.* tutelar, tutelary பாதுகாக்கிற.

**Tutor,** *n.* ஆசிரியன்; பயிற் சியளிப்பவன். (*fem.* tutoress) *n. abs.* tutorage. tutorship. *a.* tutorial.

**Twaddle,** *v.* பொருளில்லாது பேசு; பிதற்று. *n.* பிதற்றல்.

**Twain,** *n.* இரண்டு.

**Twang,** *n.* (வில்லின்) நாண் ஒலி. *v.* நாண் ஒலி செய்.

**Tweed,** *n.* கம்பள ஆடை வகை.

**Tweedle,** *n.* இசைக் கருவித் தந்தி ஒலி. *phr.* tweedledom and tweedledee தோற்றத்தில் இரண்டு; காரியத்தில் ஒன்றின் இரட்டிப்புச் சொற்பகட்டு.

**Twelve,** *a., n.* பன்னிரண்டு. *a., n.* twelfth. பன்னிரண்டாவது; பன்னிரண்டிலொன்று.

**Twenty,** *a., n.* இருபது. *a., n.* twentieth இருபதாவது; இருபதிலொன்று.

**Twice,** *adv.* இரு மடங்காக; இருமுறையாக.

**Twig,** சுள்ளி; கம்பு.

**Twilight,** *n.* அந்தி; ஒளி.

**Twill,** *v.* சாய்வரி அமையும் படி. நெசவு செய். *n.*சாய்வரித் துணி.

**Twin,** *n.* இரட்டையில் ஒன்று; இரட்டைப் பிள்ளைகளில் ஒன்று. *a.* இரட்டையான.

**Twine,** *v.* வளைந்து சுற்றிக் கொள்; முறுக்கு. *n.*முறுக்கிய நூல்; கயிற்று நூல்.

**Twinge,** *n.* திடீரெனத் தாக்கும் நோவு. *v.* திடீர் வலி தோன்று.

**Twinkle,** *n., v.* மினுக்கு மினுக்கென்று ஒளிவிடு; கண்ணி மைத்தல் (செய்).

**Twirl,** *v.* சுழலு; சுழற்று; முறுக்கு. *n.*சுழலுதல்; சுழற்றுதல்.

**Twist,** *v.* முறுக்கு; முறுக்கிக் கயிறாக்கு; சுழற்று; பொருளை மாற்றிக் கூறு. *n.*முறுக்குதல்; திடீரென ஏற்பட்ட மாற்றம்;திரிபு; புரட்டு.

**Twit,** *v.* திட்டு; கண்டி.

**Twitch,** *v.* சட்டென்று இழு; நெட்டு; துடி. *n.* சட்டென்று இழுத்தல்; இசிப்பு.

**Twitter,** *v.* கலகலவென்று ஒலி செய். *n.*கலகலவென்ற ஒலி.

**Two,** *n.* இரண்டு. *a. see* second, twice, half. *comb. a.* twofold, இருமடங்கான.

**Tympanum,** *n.* காதுச் சவ்வு; விட்டமுக்கோணம்.

**Type,** *n.* உருவ மாதிரி; அச்செழுத்து; கையச்சு; கையடியச்சு. *v.* மாதிரியாக அமை; கையச்சுப் பொறியில் அச்சடி. *n. pers.* typist, கையச்சடிப்பவர்; கையச்சாளர். *comb. n.* type-writer. கையச்சுப் பொறி; கையச்சடிப்பவர். *v.* type-write, (*pa. p.* type-writen) கையச்சடி.

**Typhoid,** *n.*(also typhus) நச்சுக் காய்ச்சல்.

**Typhoon,** *n.* சூறாவளிக் காற்று.

**Typhus,** *n. see* (typhoid) நச்சுக்காய்ச்சல் *a.* typhous.

**Typical,** *a. (type)* மாதிரிப் படிவமாய் அமைந்த; உரு மாதிரி யான; மாதிரியாக அமைந்துள்ள.

**Typify.** *v. (type)* மாதிரியாக அமை; எடுத்துக்காட்டு; முன்னறி குறி காட்டு. *n.* typification.

**Typist,** *n. see* type.

**Typography,** *n.* (type) அச்சிடும் கலை; அச்சிட்ட அமைப்பு. *n.* typographer, *a.* typographic(al).

**Tyranny,** *n.* நேர்மையின்மை; கொடுங்கோன்மை; கொடுமை யாக நடத்துதல்; (கிரேக்க வரலாற்று வழக்கு) கடுங்கோன்மை, வல்லாட்சி. *a.* tyrannical, tyrannous. *v.* tyrannize, -se. *pers.* tyrant.

**Tyre, tire,** *n.* (சக்கரத்தின்) பட்டை (பொறி வண்டிச் சக்கரத்தின்) குழாய்ப் பட்டை; பொதிகவசம். *comb. v.* tyre retreading plant, பட்டை சீர்செய் இயந்திரம்.

**Tyro, tiro,** *n.* கற்றுக்குட்டி; புது வேலையாள்.

**Tzar,** *(see* czar.)

# U

**Ubiquity,** *n.* எங்கும் பரவி யிருத்தல். *a.* ubiquitous.

**U-boat,** *n.* (யூ-போட்) நீர் மூழ்கிக் கப்பல்.

**Udder,** *n.* (பால் சுரக்கும்) மடி.

**Ugh,** *int.* (வெறுப்பைக் காட்டும் சொல்.) பூ!

**Ugly,** *a.* அருவருப்பான தோற்ற முடைய; அழகில்லாத. n. ugliness.

**Ukase,** *n.* (ரஷ்ய அரசாங்கத்தின்) கட்டளை.

**Ulcer,** *n.* புண்; குருதிக் கட்டி; கெடுகேடு. *a.* ulcerous. *v.* ulcerate. *n. (vbl.)* ulceration.

**Ulterior,** *a.* அப்பாலுள்ள; மிகு தொலைவிலுள்ள; மறைவாயுள்ள.

**Ultimate,** *a.* முடிவான; கடைசி யான. *adv.* ultimately.

**Ultimatum,** *n.* (*pl.* ultimatums, ultimata) இறுதி எச்சரிக்கை; இறுதி யறிவிப்பு.

*ultimo, adv.* (சுருக்கம் *ult.*) சென்ற மாதத்தில்.

**Ultra,** *a.* அப்பாலான, (முன்னொட் டிடைச் சொல்) முனைத்த (கோட் பாடுடைய); கடந்த அப்பாலுள்ள. *n.* வெறித்த முறைகளை ஆதரிப்பவர்.

**Ultramarine,** *a.* கடலுக்கு அப்பாலுள்ள. *n.* கருநீல நிறம்.

**Ultramundane,** *a.* நிலவுலகத்துக்கு அப்பாலான.

**Ultra-violet,** *n.* ஒளி நிறப் பட்டியில் ஊதா கடந்த நிறம்; கட்புலப்படா 'அப்பால்' ஊதா நிறம்.

*ultra vires, adv. or a.* உரிமை வரம்பிற்கு அப்பாலுள்ள.

**Ululate,** *v.* ஊளையிடு; புலம்பு; குலவையிடு. *n.* ululation.

**Umbra,** *n.* (x penumbra) அகநிழல்; கருநிழல்; திண்ணிழல்.

**Umbrage,** *n.* நிழல்; பாதுகாப்பிடம்; கோபம்; சினம். *a.* umbrageous, நிழல்தருகிற; இலைகளடர்ந்த.

**Umbrella,** *n.* குடை.

**Umpire,** *n.* நடுவர்; தாழ்ச்சி. *n. abs.* umpirage, umpireship.

**Unable,** *a.* செய்ய முடியாத.

**Unabashed,** *a.* நாணமற்ற.

**Unabated,** *a.* சிறிதும் குறையாத; தணியாத; முழு ஆற்றலுட னிருக்கிற.

**Unabridged,** *a.* சுருக்கப்படாத.

**Unaccompanied,** *a.* தனியான; பக்கமேளம் இல்லாத.

**Unaccomplished,** *a.* அரை குறை யான; தேர்ச்சியில்லாத; (வேலை) முடியாத.

**Unaccountable,** *a.* விளக்க முடியாத.

**Unaccustomed,** *a.* பழக்கமில்லாத; வழக்கில்லாத.

**Unacknowledged,** *a.* ஒப்புக் கொள்ளப்படாத; கவனிக்கப் படாத.

**Unacquainted,** *a.* அறிமுக மில்லாத.

**Unadulterated,** *a.* கலப்பில்லாத; தூய.

**Unadvised,** *a.* (கலந்து) ஆராயாது செய்த; முரட்டுத்தனமாகச் செய்த. *adv.* unadvisedly.

**Unaffected,** *a.* இயற்கையான; பாசாங்கற்ற.

**Unaided,** *a.* உதவியற்ற.

**Unalloyed,** *a.* கலப்பில்லாத.

**Unani,** *a.* (-அரபு நாடு சார்ந்த) இஸ்லாமிய மருத்துவமுறை சார்ந்த.

**Unanimous,** *a.* ஒருமித்த; ஒருமுக மான; ஒருமனதான. *n.* unanimity.

**Unappalled,** *a.* அஞ்சாத.

**Unappeasable,** *a.* தணிக்க முடியாத.

**Unassailable,** *a.* தாக்க முடியாத.

**Unassuming,** *a.* முனைப்பில்லாத; அடக்கமான; இயல்பெளிமை யுடைய.

**Unauthorised,** *a.* சட்டப்படி உரிமையற்ற; உரிமைபெறாத.

**Unavailable,** *a.* கிடைக்கப் பெறாத.

**Unavailing,** *a.* பயனற்ற.

**Unavoidable,** *a.* தவிர்க்கமுடியாத.

**Unaware,** *a.* அறியாத; தெரியாத. *adv.* unawares. எதிர்பாராமல்; தன் விழிப்பற்ற நிலையில்.

**Unbalanced,** *a.* நடுநிலையில்லாத; நிலை தவறிய; ஒருச் சார்புடைய.

**Unbar,** *v.* தடையை நீக்கு; அடைப்பைத் திற.

**Unbearable,** *a.* பொறுக்கக் கூடாத.

**Unbecoming,** *a.* தகுதிக்கு ஏற்காத; ஒவ்வாத.

**Unbegot, unbegotten,** *a.* பிறப்பற்ற; என்றுமுள்ள.

**Unbelief,** *n.* அவநம்பிக்கை. *n. pers.* unbeliever நம்பாதவன்; புறச்சமயி.

**Unbend,** *v.* கோணலை நிமிர்த்து; 'நட்பாயிரு.' *a.* unbending சிறிதும் தளராத; உறுதியான.

**Unbiased,** *a.* ஓரவஞ்சகமில்லாத; நடுநிலையான.

**Unbind,** *v.* பிணிப்பை அறு; விடுவி; கட்டவிழ்.

**Unblemished,** *a.* மாசுபடாத; தூய்மையான; குற்றமற்ற.

**Unblushing,** *a.* நாணமற்ற; துணிச்சலுள்ள.

**Unbolt,** *v.* தாழைத் திற; தடையை நீக்கு. *a.* unbolted.

**Unborn,** *a.* (இன்னும்) பிறக்காத; இனிப் பிறக்க இருக்கிற.

**Unbosom,** *v.* உளந் திறந்துகாட்டு; ஒளியாது வெளிப்படுத்து.

**Unbounded,** *a.* அளவற்ற; எல்லையற்ற.

**Unbridled,** *a.* கட்டுப்பாடில்லாத.

**Unbroken,** *a.* உடையாத; முழுமையான.

**Unbuckle,** *v.* கட்டவிழ்; பூட்டவிழ்.

**Unburden, unburthen,** *v.* பளுவை நீக்கு; கவலையிலிருந்து விடுவி.

**Unbutton,** *v.* உடுப்புப் பூட்டுக் கழற்று; திற.

**Uncalled-for,** *a.* தேவையில்லாத; அழைப்பற்ற; விரும்பிக் கோராத.

**Uncanny,** *a.* மாயமான; இயற் கைக்கு அப்பாலான.

**Unceremonious,** *a.* முறைமை யற்ற; தாராளமாகப் பழகுகிற; திடீரென்ற.

**Uncertain,** *a.* தெளிவில்லாத; உறுதியற்ற; நம்பமுடியாத. *n.* uncertainty.

**Unchain,** *v.* தளையறு; விலங்கைத் தறி.

**Unchanging,** *a.* மாறாத.

**Uncharitable,** *a.* இரக்கமற்ற; நேர்மையற்ற. n. *abs.* uncharitableness.

**Unchaste,** *a.* கற்பில்லாத; தூய்மையற்ற.

**Unchecked,** *a.* தடைப்படாத.

**Unchristian,** *a.* கிறித்துவத் தன்மையற்ற; இரக்கமற்ற.

**Uncivil,** *a.* முரட்டுத்தனமான.

**Uncivilized,** *a.* நாகரிகமற்ற.

**Unclad,** *a.* ஆடை உடுத்தாத.

**Unclasp,** *v.* பிடியைத் தளர்த்து; திற.

**Unclaimed,** *a.* (கேட்க) ஆளற்ற; உரிமை கோரப் பெறாத.

**Uncle,** *n. (fem.* aunt*)* பெற்றோரின் உடன் பிறந்தவன்; மாமன்; சிற்றப்பன்.

**Unclean,** *a.* மாசுடைய; தூய்மைக் கேடான; பழிசேர்ந்த.

**Uncle Sam,** *n.* (உருவகப்படுத்திய) அமெரிக்க ஐக்கிய நாடு.

**Unclose,** *v.* திற; வெளிக்காட்டு.

**Unclothe,** *v.* ஆடையை நீக்கு.

**Uncoil,** *v.* சுருளைப் பிரி.

**Uncomely,** *a.* அழகற்ற.

**Uncomfortable,** *a.* வசதியில்லாத.

**Uncommon,** *a.* வழக்கமில்லாத; அருமையான; புதுமையான;

அருநடப்பான. *adv.* uncommonly, மீமிக; சிறப்புற.

**Uncompromising,** *a.* சிறிதும் விட்டுக்கொடுக்காத; விடாப் பிடியான.

**Unconcern,** *n.* புறக்கணிப்பு

**Unconditional,** *d.* தட்டுத்தடங் கலற்ற; தடையற்ற; வில்லங்கமற்ற.

**Unconquerable,** *n.* வெல்ல முடியாத.

**Unconscionable,** *a.* மனச்சான்றுக்கு ஒவ்வாத; பகுத்தறிவுக்குப் பொருந்தாத.

**Unconscious,** *a.* உணர்ச்சி நிலையற்ற; மயக்கமடைந்துள்ள.

**Unconstitutional,** *a.* சட்டத்துக்கு மாறான.

**Unconstrained,** *a.* வலுக்கட்டாய மற்ற; தன் விருப்புடன் கூடிய

**Uncontested,** *a.* போட்டி யில்லாத; எதிர்ப்பில்லாத.

**Uncontrolled,** *a.* கட்டுப்பாடில் லாத; அடங்காத.

**Unconvinced,** *a.* அறிவுக்கு ஏற் பில்லாத; மனத்தில் ஏற்றுக் கொள்ளாத; சரி என்று அறிவால் ஏற்றுக் கொள்ளப்படாத.

**Uncork,** *v.* (குப்பியின்) மூடி கழற்று; திற.

**Uncounted,** *a.* எண்ணமுடியாத; எண்ணாத.

**Uncouth,** *a.* அருவருப்பான; வடிவமைதியற்ற.

**Unconvenanted,** *a.* உடன் படிக்கை செய்யப்படாத.

**Uncover,** *v.* மேல்மூடியைத் திற; வெளிப்படுத்து; தொப்பியைக் கழற்று.

**Uncrowned,** *a.* முடிசூடாத.

**Unction,** *n.* தைலம் பூசுதல்; தைல வழிபாடு செய்தல். *a.* unctuous, எண்ணெய்ப் பிசுக்குள்ள; திருவிலைத் தன்மையுள்ளது போல் தோன்றுகிற.

**Uncultivated,** *a.* (கல்விப்) பயிற் சியற்ற; பண்பற்ற.

**Uncurl,** *v.* சுருள் நீங்கி நேராகு.

**Uncut,** *a.* வெட்டப்படாத; அராவப்படாத.

**Undated,** *a.* தேதி குறிப்பிடாத.

**Undaunted,** *a.* துணிவுள்ள; அச்சமற்ற.

**Undeceive,** *v.* தவறான எண்ணத்தைப் போக்கு; அவநம்பிக்கை நீக்கு.

**Undecided,** *a.* தீர்மானிக்காத.

**Undemonstrative,** *a.* உணர்ச்சியை வெளிக்காட்டாத.

**Undeniable,** *a.* மறுக்க முடியாத.

**Under,** *prep., adv.* கீழே; குறைவாக; உள்ளடங்கிய. *a.* கீழ்ப்பட்ட; தாழ்வான.

**Underbid,** *v.* விலை குறைத்துக் கேள்.

**Underbred,** *a.* தாழ்ந்தோர் இயல்புள்ள.

**Underbuy,** *v.* மலிவாக விலைக்கு வாங்கு.

**Undercharge,** *v.* குறைவாக விலை கூறு; பீரங்கியில் குறைவாக வெடிமருந்திடு.

**Underclothes,** *n.* உள் உடைகள்.

**Undercurrent,** *n.* அடியோட்டம்; உள்ளுணர்ச்சி.

**Undercut,** *v.* விலை குறை; கீழிருந்து வெட்டு; குறைவாக விலை கேள்.

**Underdog,** *n.* தோற்றவன்; கீழானவன் ; சேரிவாழ்நன்.

**Underdone,** *a.* பக்குவம் போதாத.

**Underestimate,** *v.* குறைவாக மதிப்பிடு. *n.* குறைந்த மதிப்பு.

**Undergo,** *v.* (underwent, under gone) படு; பட்டறி; பொறு; தாங்கு.

**Undergraduate,** *n.* பட்டம் பெறாக் கல்லூரி மாணவர்; பட்டம்பெற இருப்பவர்.

**Underground,** *a., adv.* நிலத்துக்குக் கீழான. *phr.* தலைமறைவான.

**Undergrowth,** *n.* தூர் வளர்ச்சி; செடி; புதர்.

**Underhand,** *a., adv.* திருட்டுத் தனமான; நேர்மையற்ற முறையில்.

**Underlay,** *v.* சரியான உயரத்திற் காக அடியில் வை; அண்டை கொடுத்து உயர்த்து.

**Underlie,** *v.* கீழாக அமைந்திரு; குறிப்பாயமை.

**Underline,** *v.* கீழே கோடு இழு; வற்புறுத்து.

**Underling,** *n.* கீழ்த்தரவேலை யாள்; இழிஞர்.

**Undermine,** *v.* அடிப்படையை அரி; தீங்கிழைத்து வீழ்த்து.

**Undermost,** *a.* மிகக் கீழான.

**Underneath,** *pre., adv.* கீழே; கீழிடத்தில்.

**Undernourishment,** *n.* ஊட்டம் போதாமை; உணவுக் குறை.

**Under-paid,** *a.* போதிய கூலி கொடுக்கப் பெறாத.

**Underproduction,** *n.* பொருளுற் பத்திக் குறைவு.

**Underquote,** *v.* குறைவான விலை குறிப்பிடு.

**Underrate,** *v.* குறைவாக மதிப்பிடு.

**Underscore,** *v.* எழுத்து முதலிய வற்றின் கீழே கோடு இழு; அடித்துக் குறை.

**Undersell,** *v.* (undersold) (பிறரை விடக்) குறைந்த விலைக்குப் பொருளைக் கொடு.

**Undersign,** *v.* கீழே கையொப்ப மிடு; ஏற்பளி.

**Understand,** *v.* (understood) தெரிந்துகொள்; அறி. *n. a.* understanding.

**Understate,** *v.* குறைத்துக் கூறு.

**Understudy,** *n.* தற்காலிகமாக நடிப்பவர்; பழகும் நடிகர்.

**Undertake,** *v.* (undertook, under taken) (வேலையை) மேற் கொள்; செய்ய உடன்படு; உத்தரவாதம் செய். *n.* undertaking, செய்ய மேற்கொண்ட காரியம்; உத்தர வாதம், பொறுப்பு.

**Undertaker,** *n.* மேற் கொண்டவர்; பிணத்தை அப்புறப்படுத்தும் காரியத்தை மேற்கொள்பவர்.

**Undertone,** *n.* தாழ்குரல்.

**Undertow,** *n.* (ஓட்டத்திற்கு எதிரான) கீழோட்டம்.

**Undervalue,** *v.* குறைவாக மதிப்பிடு; புறக்கணிப்பாக நினை.

**Underwear,** *n.* உள் உடுப்புகள்.

**Underweight,** *n., a.* சராசரிக்குக் குறைந்த எடை (உள்ள).

**Underwood,** *n.* தூர்வளர்ச்சி; செடி; புதர்.

**Underworld,** *n.* பாதாளம்; குற்றவாளிகள் கூட்டம்; சேரி வாழ்நர்.

**Underwrite,** *v.* கீழே கையொப்பமிடு; ஈடு செய்ய உத்தரவாதம் செய்.

**Undeserved,** *a.* தகாத; பொருந்தாத.

**Undesigned,** *a.* வேண்டுமென்று செய்யாத; திட்டமிடப் பெறாத; இயல்பான.

**Undesirable,** *a.* விரும்பத்தகாத.

**Undetected,** *a.* வெளிப்படாத.

**Undetermined,** *a.* தீர்மானிக்காத; தீர்மானிக்கப்பெறாத.

**Undeviating,** *a.* மாறாத; நேர்வழி யாகச் செல்கிற.

**Undigested,** *a.* செரிக்கப் பெறாத.

**Undiminished,** *a.* குறையாத; தணியாத.

**Undiscernible, - able,** *a.* பார்க்க முடியாத; உணர முடியாத. *a.* undiscerning தெளிவாகப் பார்க்காத; காணமுடியாத; அறிவற்ற.

**Undischarged,** *a.* விடுவிக்கப் படாத; (பீரங்கி, துப்பாக்கி) சுடப்படாத.

**Undisguised,** *a.* ஒளிவு மறை வில்லாத; வெளிப்படையான.

**Undisciplined,** *a.* பயிற்சி யளிக்கப்படாத; கட்டுப்பாடற்ற.

**Undisputed,** *a.* எதிர்ப்பில்லாத; எதிர்வாதமில்லாத.

**Undisturbed,** *a.* அமைதியான; குழப்பமற்ற.

**Undo,** *v.* (undid,undone) அவிழ்; பகுதிகளாகப் பிரி; பாழாக்கு. *n.* undoing.

**Undoubted,** *a.* ஐயப்பாடில்லாத; ஐயத்துக் கிடமில்லாத; உறுதியான.

**Undress,** *v.* ஆடையைக் கழற்று. *n.* un'dress, சிறப்பிலாப் பொது உடை; பொதுவாக அணியும் உடை.

**Undue,** *a.* தகாத; தகுதிக்கு மிஞ்சிய.

**Undulate,** *v.* அலை அலையா யெழு; விழுந்துவிழுந்துஎழு; அலையாடு. n. undulation. *a.* undulatory.

**Unduly,** *adv.* தகாத முறையில்; மட்டுமீறி.

**Undying,** *a.* என்றுமுள்ள; காவாத; பொன்றாத.

**Unearned,** *a.* உழைத்து ஈட்டாத.

**Unearth,** *v.* தோண்டியெடு; மறைவிலிருந்து வெளிப்படுத்து.

**Unearthly,** *a.* இவ்வுலக இயற்கை மீறிய; மாயமான.

**Uneasy,** *a.* அமைதியற்ற; மன உளைவு தருகிற.

**Unemployed,** *a., n.* வேலை யற்ற(வர்). *n. abs.* unemployment. வேலையின்மை; வேலை யில்லாத் திண்டாட்டம்.

**Unequal,** *a.* சமமில்லாத; பொருத்த மற்ற. *a.* unequalied, ஒப்பற்ற.

**Unequivocal,** *a.* தெளிவான; ஐயத்துக்கிடமற்ற.

**Unerring,** *a.* குறி தவறாத; பிழையாத.

**Uneven,** *a.* சமதளமில்லாத; கரடு முரடான; மேடுபள்ளமான; இரட்டைப் படையல்லாத.

**Uneventful,** *a.* சிறப்பு நிகழ்ச்சி யில்லாத; அமைதியான.

**Unexampled,** *a.* இணையற்ற.

**Unexceptionalbe,** *a.* குற்றமற்ற; குறைகூறமுடியாத.

**Unexpected,** *a.* எதிர்பாராத; திடீரென்ற.

**Unfailing,** *a.* தவறாத.

**Unfair,** *a.* நேர்மையற்ற.

**Unfasten,** *v.* அவிழ்; கழற்று.

**Unfavourable,** *a.* மாறான; எதிரான; வசதியில்லாத.

**Unfeeling,** *a.* இரக்கமற்ற; கொடிய மனமுள்ள.

**Unfeigned,** *a.* போலியல்லாத; உண்மையான; மனமார்ந்த.

**Unfetter,** *v.* விலங்கைத் தறி; கட்டுப்பாடு நீக்கு; தடையகற்று. *a.* unfettered.

**Unfit,** *a.* தகுதியற்ற.

**Unflagging,** *a.* தளராத.

**Unflinching,** *a.* மனவுறுதியுடன் நிற்கிற.

**Unfold,** *v.* பிரி; விரிவாக்கு; வெளிக்காட்டு; திற.

**Unforgettable,** *a.* மறக்க முடியாத.

**Unformed,** *a.* வடிவமற்ற; உருக்கொள்ளாத.

**Unforeseen,** *a.* எதிர்பாராத.

**Unfortunate,** *a.* அவப் பேறுடைய; நற்பேறற்ற.

**Unfounded,** *v.* ஆதாரமற்ற; பொய்யான.

**Unfrequented,** *a.* மனித நட மாட்டமில்லாத.

**Unfriended,** *a.* நண்பர்கள் அற்ற.

**Unfriendly,** *a.* நட்புணர்ச்சியற்ற.

**Unfruitful,** *n.* பயனற்ற; ஊதியமில்லாத.

**Unfurl,** *v.* (இறகு, கொடி) விரி; படர்; அவிழ்; (கொடி) ஏற்று.

**Ungainly,** *a.* அழகற்ற; இயக்க நயமற்ற; செயல் நயமற்ற; அருவருப்பான.

**Ungird,** *v.* கச்சையவிழ்; ஒருக்கமாகு. *a.* ungirt, கட்டவிழ்ந்த; தளர்த்தியாக ஆடை உடுத்த.

**Ungodly,** *a.* கடவுளிடம் பற்றற்ற; பழி சார்ந்த.

**Ungovernable,** *a.* கட்டுப்படுத்த முடியாத.

**Ungracious,** *a.* பொறுப்பைத் தருகிற.

**Ungrateful,** *a.* நன்றியற்ற.

**Unguarded,** *a.* விழிப்பில்லாத; தற்காப்பு முயற்சியில்லாத.

**Unguent,** *n.* தைலம்; களிம்பு.

**Unhand,** *v.* கையெடு; விடுவி.

**Unhandy,** *a.* திறமையற்ற; தடுமாறுகிற.

**Unhappy,** 1.*a.* மகிழ்ச்சியற்ற, 2. அவப்பேறான. (1) *n. abs.* unhappiness.

**Unharness,** *v.* (சேணம், கவசம்) கழற்று.

**Unhealthy,** *a.* உடல் நலமற்ற. n. unhealthiness.

**Unheard,** *a.* கேட்காத; கேள்விப் படாத; புதுமை வாய்ந்த. *a.* unheard-of, முன் கேள்விப் பட்டிராத.

**Unhinge,** *v.* ஆணி கழற்று; முறுக்கவிழ்; (மனம்) சீர் குலை; அறிவு தடுமாறவை.

**Unholy,** *a.* தெய்விகத்தன்மையற்ற; பழிகேடான.

**Unhorse,** *v.* (குதிரையினின்று) விழச்செய்; இறக்கு; வீழ்த்து.

**Unhoused,** *a.* வீடிழந்த; இருக்க வீடில்லாத.

**Unicameral,** *a.* ஒரே சட்ட அவையுள்ள.

**Unicellular,** *a.* (அணுத்திரள்) ஒரு நுண்ணிமம் உள்ள; ஒரே உயிரணுக்கண்ணறையான.

**Unicorn,** *n.* (கிரேக்க புராணத்தில் ஒற்றைக் கொம்புள்ள குதிரை யாகப் புனைந்து குறிக்கப்பட்ட) மாய விலங்கு வகை.

**Unifier,** *n. see* unify.

**Uniform,** *a.* ஒரே மாதிரியான; ஒரு தன்மைத்தான. *n.* (ஒரு தொழில் அல்லது பதவிக்குரிய) அங்கி; படைவீரர் உடை. *n. abs.* uniformity, ஒரே தன்மை; ஒரு சீர். *adv.* uniformly.

**Unify,** *v.* ஒன்றாக இணை; ஒற்றுமைப் படுத்து. *n.* unification. *a.* unifiable. *n. ag.* unifier.

**Unilateral,** *a.* ஒருதலையான; ஒருச் சார்பான.

**Unimaginable,** *a.* கருத்துக்கு எட்டாத.

**Unintentional,** *a.* வேண்டுமென்று செய்யாத.

**Uninviting,** *a.* கவர்ச்சியில்லாத; அவாவூட்டாத.

**Union,** *n.* (*conn. see* unit, unity) (x disunion) ஒற்றுமை; சங்கம்; கூட்டுறவுக் குழு; கூட்டாக. *n. pers.* unionist, ஒற்றுமைவாதி; கூட்டரசுக் கட்சியாளர். *comb. n.* union-jack. பிரிட்டிஷ் ஒன்று பட்ட அரசுக்கொடி. union list, கூட்டரசுப்பட்டி; நடுவரசுப்பட்டி.

**Unique,** *n.* தனித்தன்மை வாய்ந்த; இணையற்ற.

**Unison,** *n.* (இசைப்) பொருத்தம்; ஒத்திசைவு; ஒருமை.

**Unissued,** *a.* (பத்திரிகை, முதல்) வெளியிடப்படாத; வழங்கப் படாத.

**Unit,** *n.* ஒன்று; முழு உருப்படி; ஒரு பொருள் அல்லது ஆள்; மூல அளவு; பொது நிலை அளவைக் கூறு; (அடிப்படை) அலகு.

**Unitarian.** *n.* (கிறித்துவருள் கடவுள் வடிவு மூன்றல்ல எனும்) ஒருமைக் கோட்பாட்டினர்.

**Unite,** *v.* (*conn. see* unit) ஒன்று படு; இணை; கூடு; ஒற்றுமைப்படு; (x disunite); *pa. pa.* united ஒன்றுபட்ட; ஒற்றுமையுடைய. (x disunited) *n. see* unity. *comb. n.* United Nations, ஒன்றுபட்ட உலக நாடுகள்; உலக நாடுகள். United Nations Organisation. (சுருக்கம்; U.N.O.) உலக நாடுகள் அமைப்பு; ஐக்கிய நாடுகள் சங்கம்; (ஐ. நா. ச.)

**Unity,** *n.* (unite) ஒற்றுமை; ஒன்றாம் தன்மை; ஒன்று எனும் எண்; முழுமை நிலை.

**Universal,** *a.* எல்லாவற்றையும் உட்படுத்திய; எல்லா விவரங் களையும் உட்கொண்ட; முழு மொத்தமான. *n.* universality.

**Universe,** *n.* படைப்பு முழுமை; முழுத்தொகுதி.

**University,** *n.* பல்கலைக் கழகம்.

**Unjust,** *a.* நேர்மையற்ற.

**Unkempt,** *a.* தலைமயிர் சீவாத; பண்படாத.

**Unkind,** *a.* (ஷேக்ஸ்பியர் வழு வமைதி. *sup deg.* Most unkindest) அன்பில்லாத *n. abs.* unkindness.

**Unknowingly,** *adv.* அறியாமல்.

**Unlatch,** *v.* தாழ்திற.

**Unlawful,** *a.* சட்ட மீறிய.

**Unlearn,** *v.* கற்றதை மற. *a.* unlearned, அறியாமையுடைய.

**Unleash,** *v.* கட்டவிழ்த்து விடு; கட்டிலிருந்து விடுவி.

**Unleavened,** *a.* (காடிச் சத்தினால்) புளிப்புறாத; பதனுறாத; மட்டுப் பெறாத; (நவக்) கலப்பற்ற.

**Unless,** *conj. adv.* இல்லாவிடில்; ஒழிய. (unless one comes,) வந்தாலொழிய.)

**Unlettered,** *a.* படிப்பில்லாத.

**Unlike,** *a.* போலிராத; ஒத்திராத.

**Unlikely,** *a.* பொருத்தமற்ற; இயை பற்ற; நிகழக்கூடாத; நம்பக் கூடாத.

**Unlimited,** *a.* எல்லையற்ற; அளவற்ற; (கூட்டுக்கழகம்) வரை யிலா நிலையுடைய; கடன் பொறுப்புவரம்பற்ற.

**Unload,** *v.* (பாரம்) இறக்கு; இறக்கி வை.

**Unlock,** *v.* (பூட்டைத்) திற.

**Unloose,** *v.* கட்டவிழ்; விடுவி.

**Unlucky,** *a.* கெடு முயற்சியான; அவப்பேறான.

**Unmake,** *v.* (ஆக்கியதை) அழி; சீர்குலை.

**Unman,** *v.* ஆண்மை குலையச் செய்; ஊக்கம் இழக்கச் செய். *a.* unmanly.

**Unmannered, unmannerly,** *a.* நன்னடக்கையில்லாத.

**Unmask,** *v.* உண்மைத் தன்மையை வெளிப்படுத்து; பாசாங்கு அகற்று; தன்னுருக் காட்டு.

**Unmeaning,** *a.* பொருளற்ற.

**Unmeant,** *a.* வேண்டுமென்றே செய்யாத.

**Unmentionable,** *a.* சொல்லத் தகுதியற்ற.

**Unmerciful,** *a.* தயையற்ற.

**Unmistakable,** *a.* தெளிவான; பிழைபாட்டுக்கு இடமில்லாத; தவறாகப் புரிந்துகொள்ள முடியாத.

**Unmitigated,** *a.* தணியாத; குறைதலில்லாத.

**Unmoor,** *v.* (கப்பலின்) நங்கூரமெடு.

**Unnatural,** *a.* இயற்கைக்கு மாறான.

**Unnecessary,** *a.* தேவையில்லாத; பயனற்ற.

**Unnerve,** *v.* ஊக்கமிழக்கச் செய்.

**Unofficial,** *a.* முறையில்லாத; பணித்துறைத் தொடர்பற்ற.

**Unopposed,** *a. adv.* எதிர்ப் பில்லாத; எதிர்ப்பில்லாமல்; எதிரியின்றி.

**Unpack,** *v.* (மூட்டை கட்டு) அவிழ்; (வேட்டை நாய்க்கும்பு); அவிழ்த்து விடு.

**Unpaid,** *a.* (முதல், கடன், சம்பளம்) கொடுபடாத; தீர்க்கப்படாத.

**Unpalatable,** *a.* சுவையற்ற; விருப்பற்ற.

**Unparalleled,** *a.* இணையற்ற.

**Unpardonable,** *a.* மன்னிக்க முடியாத.

**Unparliamentary,** *a.* மன்று முறையற்ற; மன்ற நடைமுறைக் கொவ்வாத.

**Unpleasant,** *a.* மகிழ்ச்சி தராத; வெறுப்புத் தருகிற.

**Unpopular,** *a.* மக்கள் வெறுக்கிற.

**Unpractical,** *a.* செய்முறைக்கு ஒவ்வாத.

**Unprecedented,** *a.* முன் நிகழ்ந்திராத; புதிதான.

**Unpretending,** *a.* பகட்டில்லாத; அடக்கமான; எளிமையான.

**Unprincipled,** *a.* கொள்கையற்ற; நேர்மையற்ற; கொள்கைக் கட்டுப் பாடற்ற.

**Unqualified,** *a.* தகுதி பெற்றிராத; தடையற்ற; மட்டுமடக்கற்ற

**Unquestionable,** *a.* எதிர் வினாவுக்கிடமற்ற; உறுதியான.

**Unquiet,** *a.* அமைதியற்ற; கொந்தளிப்பான.

**Unravel,** *v.* சிக்கறு; தெளிவாக்கு.

**Unreal,** *a.* உண்மையல்லாத. *n. abs.* unreality.

**Unreasonable,** *a.* அறிவுக்குப் பொருந்தாத.

**Unremitting,** *a.* இடைவிடாத.

**Unreserved,** *a.* (நிலம், படை, முதல்) ஒதுக்கப் பெறாத; (ஆள், செய்தி, உரை) மறைப்பில்லாத; ஒளிவு மறைவற்ற; கூச்சமற்ற; திறந்த மனப்பான்மையுடைய.

**Unrest,** *n.* அமைதியின்மை; கவலை.

**Unruly,** *a.* கட்டுப்பாட்டுக்கு அடங்காத.

**Unsafe,** *a.* பாதுகாப்பற்ற; இடையூறு தருகிற.

**Unsavoury,** *a.* சுவையற்ற.

**Unsay,** *v.* (சொன்னதை) மறுத்துக் கூறு.

**Unscathed,** *a.* தீங்குறாத; தீங்கில்லாத.

**Unscientific,** *n.* இயல் நூல் முறை மீறிய; ஆராய்ச்சிக்கு மாறான.

**Unscrew,** *v.* திருகாணி கழற்று; திற.

**Unscrupulous,** *a.* தீமைசெய்யத் தயங்காத; தீவினையஞ்சாத; பொல்லா.

**Unseat,** *v.* (குதிரை முதலியவற்றி லிருந்து) இறங்கச் செய்; (சட்ட சபைத் தேர்தலில்) தோற்கடி.

**Unsettle,** *v.* நிலைகுலையச் செய்; குழப்பமாக்கு.

**Unsheathe,** *v.* (வாளை) உறையி லிருந்து எடு.

**Unsightly,** *a.* பார்க்கத் தகாத; (பார்க்க) விருப்பமற்ற.

**Unskilled,** *a.* திறமையில்லாத; திறமை தேவையில்லாத.

**Unsociable,** *a.* பழக விரும்பாத; தனிமை விரும்புகிற.

**Unsophisticated,** *a.* சூதுவாது இல்லாத; கபடமற்ற.

**Unsound,** *a.* உடல் நலமில்லாத; தவறான; வேலை முறைக்கு ஒவ் வாத; (மனம்) சமநிலையற்ற. *n. abs.* unsoundness.

**Unsparing,** *a.* கைக்கடிப்பில்லாத; தாராளமான.

**Unspeakable,** *a.* சொல்ல முடியாத.

**Unstable,** *a.* நிலையில்லாத; தடுமாறுகிற; விழும் நிலை யிலுள்ள.

**Unstring,** *v.* முறுக்குத் தளர்த்து. *a.* unstrung, ஊக்கமிழந்த.

**Unstudied,** *a.* இயற்கையான; முன் பயிற்சியற்ற; கபடமற்ற.

**Unsubstantial,** *a.* பருப்பொருள் தன்மையற்ற; பொருளற்ற; ஆவி யுருவான; உறுதியற்ற; சிறப்பற்ற; போலியான. *n. abs.* unsubstantiality.

**Unsuitable,** *a.* பொருத்தமற்ற; தகுதியற்ற. *n. abs.* unsuitability.

**Unthinkable,** *a.* நினைக்கவும் கூடாத.

**Unthinking,** *a.* எண்ணாத; கருதாத. *adv.* unthinkingly.

**Untidy,** *a.* தூய்மையற்ற; துப்புர வற்ற; செப்பமில்லாத.

**Untie,** *v.* கட்டவிழ்; இணைப்பறு.

**Until,** *adv. prep.* வரை; வரையிலும். *conn. see* till.

**Untimely,** *a., adv.* வேளை தவறிய; வேலையல்லா வேலையான. (x timely).

**Unto,** 1. *prep* (x to) (சள், இடம்; கு, இடம், அருகே. 2. (காலம்) வரை.

**Untold,** *a.* சொல்லமுடியாத; எண்ண முடியாத.

**Untouchable,** *a., n.* தீண்டத் தகாத(வர்) *n. abs.* untouchability. தீண்டாமை.

**Untoward,** *a.* பயிற்சியளிக்க முடியாத, முரடான; தொந்தரை யான. *a. adv.* untowardly.

**Untried,** *a.* தேர்ச்சியில்லாத; முன் தேர்வுபடாத; தேர்ச்சியற்ற; தேராத;

**Untrue,** *a.* பொய்யான. *n.* untruth.

**Untutored,** *a.* கல்விபயிலாத; நாகரிகப்பண்பற்ற; எளிமை யான; சூதில்லாத.

**Untwist,** *v.* முறுக்குப் பிரி.

**Unused,** *a.* வழக்கமில்லாத; வழக்கப் படாத.

**Unusual,** *a.* வழக்கத்துக்கு மாறான.

**Unutterable,** *a.* சொல்ல முடியாத; கூறமுடியாத.

**Unvarnished,** *a.* புனைந்துரை யற்ற; இயல்பாயுள்ள.

**Unveil,** *v.* முகமூடியகற்று; திறந்து காட்டு; வெளிப்படுத்து.

**Unwarrantable,** *a.* முறைகேடான; நேர்மையற்ற.

**Unwarv,** *a.* விழிப்பற்ற.

**Unwell,** *a.* உடல் நலமற்ற.

**Unwept,** *a.* துயர் கொண்டாடப் பெறாத.

**Unwieldy,** *a.* பளுவான; எளிதில் கையாள முடியாத.

**Unwilling,** *a.* விருப்பமற்ற.

**Unwind,** *v.* சுற்றைப் பிரி.

**Unwisdom,** *n.* அறிவின்மை, மடமை

**Unwittingly,** *adv.* கருதாமல் தெரியாமல்; தன்னறிவில்லாமல்.

**Unwonted,** *a.* வழக்கமில்லாத.

**Unworldly,** *a.* உலகியல் கடந்த; உலகியல் பற்றற்ற.

**Unworthy,** *a.* தகுதியில்லாத, பொருத்தமற்ற. *n. adv.* unworthiness.

**Unwrap,** *v.* உறையை நீக்கி மடக்கவிழ்; திற.

**Unwritten,** *a.* எழுதப்படாத மரபுரையான.

**Up,** *adv. pre.* மேலே; (கீழிருந்து) உயரே; (ஆற்றொழுக்கு) எதிர்த்து; (ஊர்திப் பாதை, பாட்டை) முக்கிய இடத்தை நோக்கி. (up trains etc.) (do up, work up etc.) முழுவதும்; முற்றிலும். *a.* (comparative) upper, உயர்ந்த மேற்பகுதி சார்ந்த. superlative, upmost, uppermost, முகடார்ந்த; முகட்டுச்சியிலுள்ள.

**Upas,** *n.* நச்சுமரம்.

**Upbraid,** *v.* குற்றங் கூறு; கண்டித்துக் கூறு.

**Upbringing,** *n.* பயில்வித்தல்; வளர்ப்பு.

**Upcountry,** *a.* உள்நாட்டுக்குரிய.

**Up-grade,** *n.* ஏற்றம்.

**Upheave,** *v.* மேலே உயர்த்து. *n.* upheaval, எழுச்சி; புரட்சி.

**Upheld,** *v. see* uphold.

**Uphill,** *a.* கடுமையான.

**Uphold,** *v.* (upheld, upheld or upholden) ஆதரித்துப் பேசு; தாங்கு.

**Upholster,** *v.* (வீட்டுத்) தட்டு முட்டுப் பொருள்கள் தருவித்துக் கொடு. *n. ag.* up-holsterer. *n. abs.* upholstery, தட்டுமுட்டுப் பொருள்கள் (தொழில்).

**Upkeep,** *n.* வைத்துக் காப்பு; பேணுகை; வாழ்துணையளிப்பு.

**Upland,** *n.* மேட்டு நிலம். *a.* மேட்டு நிலமான.

**Uplift,** *n.* உயர்த்தல்; கை தூக்கி விடல். *v.* upli'ft. உயர்த்து; கை தூக்கு.

**Upmost,** *a. see* up. உயரமான; உச்சமான.

**Upon,** *prep.* (ஒன்றின்) மீது; மேல்.

**Upper,** *a. see* up.

**Upper Division,** *n.* மேற் பிரிவு.

**Upper-case,** *a.* (அச்சு) பெரிய எழுத்துகளாலான.

**Upper House,** *n.* பெருமக்கள் அவை, மேல் சபை.

**Uppermost,** *a. see* upmost.

**Uppish,** *a.* இறுமாப்புடைய.

**Upraise,** *v.* உயர்த்து; மேம்படுத்து.

**Upright,** *a.* நேரான; சாய்வு இல்லாத; நேர்மையான. *n. abs.* uprightness நேர்மை.

**Uprising,** *n.* கிளர்ச்சி; புரட்சி.

**Uproar,** *n.* கூச்சல்; சந்தடி; அமளி. *a.* uproarious.

**Uproot,** *v.* வேருடன் பிடுங்கு.

**Upset,** *v.* தலைகீழாக்கு; நிலை குலை.

**Upshot,** *n.* காரியத்தின் விளைவு.

**Upstairs,** *adv., n.* மேல்மாடியில்; மேல்மாடி சார்ந்த.

**Upstart,** *n.* புதுப்பணக்காரர்; பதிதாக உயர்வுற்றவர்.

**Upstream,** *adv.* நீரோட்டத்திற்கு எதிராக.

**Upstroke,** *n.* மேனோக்கிய அடி; மேனோக்கிய வரை.

**Upsweep,** *n.* மேல் வீச்சு.

**Uptake,** *n.* புரிந்துகொள்ளும் திறன் ; மேலே செலுத்தும் குழாய்.

**Upthrow,** *n.* மேல் நோக்கி எறிதல், புரட்சி.

**Upthrust,** *n.* மேல் நோக்கிய அழுத்தம்.

**Uptown,** *n.* நகரத்தின் வெளிப்புறப் பகுதி.

**Upturn,** *v.* கீழ் மேலாகப் புரட்டு.

**Upward,** *a.* மேல் நோக்கிய. adv. upward(s). மேல் நோக்கி.

**Uranium,** *n.* தனிப்பொருள் வகை; பொன்ம (உலோக) வகை.

**Uranus,** *n.* ஏழாவது கோள் இனம்; 'விண்மம்' (1751இல் கண்டுணரப் பட்டது.)

**Urban,** *a.* மாநகருக்குரிய; மாநகர்ப்புற.

**Urbane,** *a.* பண்பமைதியுடைய, இணக்க வணக்கமுடைய, நாகரிகப் பண்புடைய. *n.* urbanity. *v.* urbanize, - se.

**Urchin,** *n.* பையன்; பைதல்; துடுக்குடைச் சிறுவன்.

**Ureter,** *n.* சிறு நீர்க் குழாய். *a.* uretic, சிறுநீர்க்குரிய.

**Urge,** *v.* தூண்டு; ஆர்வத்துடன் வேண்டு; விரைவுபடுத்து.

**Urgent,** *a.* அவசரமான; உடனடியான; படுவிரைவான. *n.* urgency.

**Uric acid,** *n.* சிறுநீர்ப் புளியம்.

**Urine,** *n.* சிறுநீர். *a.* urinary, சிறு நீர் உறுப்புகள் சார்ந்த. *a. n. com.* urinal (a) சிறுநீர் சார்ந்த; (n) சிறுநீர் கழிப்பிடம். *v.* urinate, சிறு நீர் கழி.

**Urn,** *n.* தாழி; புதைகலம்.

**Ursa,** *n.* கரடி. *(comb.)* *n.* ursa Major, வடமீன் குழு. ursa Minor, தென் மீன் குழு.

**Us,** *pron. (abj.* case of we.*)* எம்மை; நம்மை; எங்களை; எமக்கு; நமக்கு; எங்களுக்கு. etc.

**Usage,** *n.* பழக்கம்; வழக்கு; பயன் பாடு; வழங்குமுறை.

**Usance,** *n.* வழக்கம்; வட்டி.

**Use,** *n.* (யூஸ்) தேவை; வழக்கம். *v.* (யூஃஜ்) நடத்து; பழகு; பழக்கு; வழங்கு; பயன்படுத்து. *a.* useful, *(neg.)* useless, பயனற்ற. *n. ag.* user.

**Usher,** *n.* (பெருமகன் வீட்டு) வாயில் ஏவலர் கட்டியங் கூறுபவர்; விருந்தினரை இட்டுச் செல்பவர். *v.* இட்டுச் செல்; வரவை முன் வந்து தெரிவி.

**Usual,** *a.* வழக்கமாக நிகழ்கிற; பொது நிகழ்ச்சியான.

**Usufruct,** *n.* (செல்வத்தை) விற்காது பயன்படுத்தும் உரிமை.

**Usurp,** *v.* உரிமையில்லாததைக் கைக்கொள்; உரிமையின்றிக் கைப்பற்று. n. usurpation. *n. ag.* usurper. *n. fem.* usurpatrix.

**Usury,** *n.* அழிமதி வட்டி; கடுவட்டித் தொழில். *a.* usurious. *n. ag.* usurer.

**Utensil,** *n.* (வீட்டிற்கு வேண்டிய) கலங்கள்; துணைக்கலங்கள்; கருவி கலங்கள்.

**Uterus,** *n.* கருப்பை. *a.* uterine.

**Utilitarian,** *a.* பயனோக்கிய; பயனீட்டுக் கொள்கை சார்ந்த; காரியவாதமுடைய. *n.* பயனீட்டு வாதி; *n. abs.* utilitarianism.

**Utility,** *n.* பயன். *v.* utilize, -se, *n.* utilization, -sation.

**Ulmost uttermost,** *a.* மிகச் சிறந்த அளவான. *n.* செய்யக்கூடிய அளவு.

**Utopia,** *n.* கற்பனை உலகம்; கனா உலகம்; கருத்தியல் கற்பனை. *a.* utopian.

**Utter,** 1. *a.* முனைத்த; முழு நிறைவான; தீர்ந்த. 2. *v.* பேசு; உரை. (1) *adv.* utterly, முழுவதும். தீர, முற்ற. (2) *n.* utterance. *a.* utterable. (x unutterable.)

**Uvula,** *n.* உள்நாக்கு. *n.* uvular.

**Uvulitis,** *n.* உள்நாக்கு அழற்சி.

**Uxorious,** *a.* மனைவியை மிகவும் நேசிக்கின்ற. *n. abs.* uxoriousness.

# V

**Vacant,** *a.* ஒன்றுமில்லாத; வெறுமையான; வேலையில்லாத. *n.* vacancy வெறுமை; ஆளின்மை; ஒன்றுமின்மை; கருத்தின்மை; கருத்தற்ற பார்வை; வெற்றிடம்; ஆள் அமர்த்தாத பணியிடம்; பணி ஒழிவிடம். *comb. n.* vacancy remission. குடியின்மைத் தள்ளுபடி; குடியில் குறைப்பு.

**Vacate,** *n. see* vacation, ஒழிவு செய்; ஒய்வாக்கு.

**Vacation,** *n.* vacate, நீள் ஒய்வு; நீள் விடுமுறைக் காலம்.

**Vaccine,** *n.* அம்மைப்பால். *v.* vaccinate அம்மை குத்திக் கொள். *n.* vaccination. *n. pers.* vaccinator.

**Vacillate,** *n.* ஊசலாடு. n. vacillation.

**Vacuity,** *n.* வெறுமை. *a.* vacuous வெறுமையான; அறிவு மந்தமான.

**Vacuum,** *n. (pl.* vacua*).* வெற்றிடம்; காற்றில்லா இடம். (*comb.*) *n.* vacuum flask, காற்றொழி குவளை.

*vade mecum, n.* எப்போதும் கையில் வைத்திருக்கும் பொருள்.

**Vagabond,** *n.* நாடோடி; ஊர்சுற்றி. *a.* அலைந்து திரிகிற; நாடோடியான. *n. abs.* vagabondage, vagabondism.

**Vagary,** *n.* மானாமாரிப் போக்கு; விளங்காப் போக்கு; கோளாறு.

**Vagina,** *n.* கருப்பை வாயில் குழாய்; அல்குல்வாய். *a.* vaginal.

**Vagrant,** *a.* நாடோடியான; வீடில்லாது அலைந்து திரிகிற. *n.* நாடோடி. *n. abs.* vagrancy.

**Vague,** *a.* தெளிவற்ற; ஐயத்துக்கு இடமான. *n. abs.* vagueness.

**Vain,** *a.* வீணான; பயனற்ற; தற் பெருமையுடைய; தருக்குடைய.

**Vainglory,** *n.* இறுமாப்பு; தற் புகழ்ச்சி; தற்பெருமை மகிழ்ச்சி. *a.* vainglorious.

**Vakalat,** *n.* (இந்திய வழக்கு) வழக்கேற்பு; வழக்காட்டேற்பு

**Vakil,** *n.* (இந்திய வழக்கு) வழக்கறிஞர்; மன்றாடி.

**Vale,** *n.* மலையிடைத் தாழ்வெளி; பள்ளத்தாக்கு.

**Valediction,** *n.* பிரிவு வாழ்த்து; இறுதியுரை. *a.* valedictory. *comb. n.* valedictory address. பிரிவுப் பேருரை; கடைசியுரை.

**Valence, valeney,** *n.* (இயைபியல்) அணு ஆற்றல் அலகு எண் (எத்தனை நீரக எண்ணுடன் சேரும் என்ற அளவெண்).

**Valet,** *n.* ஏவலாள்; கையாள்.

**Valetudinarina. - nary,** *a.* உடல்நலக் குறைவான; உடல் நலத்தைப் பற்றி வீண் கவலை கொள்கிற. *n.* நோயாளி; தன் உடல்நலத்தைப் பற்றி வீணே அஞ்சுபவர்.

**Valhalla,** *n.* (ஸ்காண்டினேவியப் புராண வழக்கு) வீட்டுலகு; துறக்கம்.

**Valiant,** *a.* துணிவுள்ள; வலுவுள்ள.

**Valid,** *a.* சட்டப்படி செல்லக் கூடிய. *n. abs.* validity, validness.

**Valise,** *n.* தூக்குப் பை.

**Valley,** *n.* பள்ளத்தாக்கு.

**Valour,** *n.* வீரம்; தீரம்; அஞ்சாமை. *a.* valorous.

**Value,** *n.* மதிப்பு; விலை; முக்கியத்துவம். *v.* மதிப்பிடு; விலை மதிப்புக் கூறு; உயர்வாகக் கருது. *a.* valuable. *n.* valuation, விலை.

**Valve,** *n.* குழாய் அடைப்பு; தடுக்கிதழ். *a.* valvular. *n. (dimu.)* valvule. *comb. n.* valve box ஒருவழி மூடிப் பெட்டி; ஒருவழி அடைப்புப் பெட்டி.

**Vamp,** *n.* செருப்பின் முன் புற மேல் தோல் *v.* ஒட்டுப் போடு; பழுது பார்.

**Vampire,** *n.* குருதி உறிஞ்சும் வெளவால் வகை; சுரண்டுபவர்.

**Van,** 1. முன்னணி; கொடிப் படை. 2. மூடுவண்டி. (1) vanguard.

**Vandalism,** *n.* (<vandal, பண்படா முரட்டு ஜெர்மானிய இனம்); கலை அழிவு வேலை.

**Vane,** *n.* காற்றாடி; காற்றாடிக் கை இறகு.

**Vanish,** *v.* திடீரென மறைந்து போ. *n.* ஆவியாகும் களிம்பு.

**Vanity,** *n.* நிலையாமை; பகட்டு.

**Vanquish,** *a.* தோல்வியுறச் செய்; வெற்றியடை.

**Vantage,** *n.* சாதக நிலை; வாய்ப்பு.

**Vapid,** *a.* சுவையற்ற; எழுச்சியற்ற. *n. abs.* vapidity.

**Vapour,** *a.* ஆவி; நுட்பமான நீர்மத் துளிகள்; எளிதில் மறையும் பொருள். *n.* ஆவியாயெழு; தற் புகழ்ச்சியாகப் பேசு; வம்பு பேசு. *v.* vaporize, -se ஆவியாகு. *n.* vaporization,-sation. *a.* vaporous, vapoury.

**Variable,** *a.* (vary) மாறுமியல் புள்ள. *n. abs.* variability, variableness.

**Variance,** *n.* (vary) மாறுபாடு; வேறுபாடு. *a.* variant. *n.* மாற்றுருவம்; பாடபேதம்.

**Variation,** *n.* (vary) மாறுபாடு; வேறுபாடு. *a.* varied. பல்வேறான; வெவ்வேறு தோற்றமுடைய.

**Variegate,** *v.* வெவ்வேறான நிறங்களாக்கு; பலவகைப்படுத்து. *n.* variegation.

**Variety,** *n.* பல்வகைப் பெருக்கம்.

**Variorum,** *n.* முழுநிறை உரைப் பதிப்பு; விருத்தியுரைப் பதிப்பு.

**Various,** *a.* வெவ்வேறான; பற்பல; பல்வேறுபட்ட.

**Varlet,** *a.* வேலையாள்; இழிஞன்; போக்கிரி.

**Varnish,** *n.* மெருகு எண்ணெய்; நெய்ச் சாயம்; பளபளப்பு. *v.* மெருகு எண்ணெய் பூசு; பகட்டான தோற்றங்கொடு.

**Vary,** *v.* மாறுதலடை; வேறாகு; சற்று வேறுபடுத்து. (*see* variable etc.)

**Vase,** *n.* மலர்க்குவளை; மலர்ப்படிக்கம்.

**Vaseline,** *n.* (புண் மருந்து, உடல் ஒப்பனை) களிம்பு நெய்.

**Vassal,** *n.* பண்ணையாள்; கீழாள். n. vassalage.

**Vast,** *n.* மிகப்பெரிய; அகன்ற. *n. abs.* vastness.

**Vat,** *n.* தொட்டி; அண்டா; பாண்டம்.

**Vault,** *n.* வில் வளைவான கூரை; வில் வளைவுக் கூரையுடைய அறை; நிலவறை. *v.* வில் வளைவுக் கூரை அமை; துள்ளிக் குதி. *n.* துள்ளிக்குதித்தல்; குட்டிக் கரணம்.

**Vaunt,** *n.* பகட்டாகப் பேசு; வீண் பெருமை கொள். *n.* வீண் பெருமை. *n. ag.* vaunter. *adv.* vauntingly.

**Veal,** *n.* கன்றின் இறைச்சி.

**Vector,** *n.* (கணக்கியல்) சுற்றும் ஆரம்.

**Veer,** *v.* திரும்பு; திரும்பச் செய்.

**Vegetable,** *n.* காய்கறி வகை. *a.* செடிவகையைச் சார்ந்த.

**Vegetate,** *v.* (செடியினம் போல்) அறிவின்றி உயிர் வாழ்; உணர்ச்சியற்று வாழ்; வளர்ந்து பெருகு. *a.* vegetative.

**Vegetation,** *n.* செடியின் வளர்ச்சி; செடியினம்.

**Vehement,** *a.* உணர்ச்சிமிகுதியுள்ள. *n. abs.* vehemence.

**Vehicle,** *n.* வண்டி;ஊர்தி. உருள்கலம். *a.* vehicular.

**Veil,** *n.* திரை; முகமூடி; மறைப்பு. *v.* திரையிடு; மறைத்து வை.

**Vein,** *n.* நரம்பு; தாதுப் படுகை; வண்ண வரி; மனப்போக்கு. *n.* veined, veinous (*comb.*) *a.* intraveinous, (ஊசி மருந்து) நரம்பிடை (ஆன).

**Velar,** *a.* அண்ணத்தின் பின் பகுதிக்குரிய. *n.* அடி நா அண்ணத்திலுறழப் பிறக்கும் எழுத்து.

**Vellum,** *n.* (பண்டை) தோல் தாள்.

**Velocity,** *n.* விரைவு வீதம்; வேகம்.

**Velum,** *n.* அண்ணத்தின் மென் பகுதி.

**Velvet,** *n.* மென்பட்டு வகை. *a.* velvety மெத்தென்ற *a. n.* velveteen, செயற்கை மென் பட்டு.

**Venal,** *a.* விலை கொடுத்துப் பெறக்கூடிய; கைக்கூலி வாங்கும் இயல்புள்ள. *n. abs.* venality.

**Venation,** *n.* இலை நரம்பு அமைப்பு.

**Vend,** *v.* விலைக்குக் கொடு; விலை கூறு. *a.* vendible. *n. ag. pers.* vender, vendor விலைக்குக் கொடுப்பவர். vendee, விலைக்குக் கொடுக்கப் பெறுபவர்.

**Vendetta,** *n.* பழி; மரபுப் பழிப் பண்பு.

**Veneer,** *n.* (பலகை) பகட்டு மேலொட்டு; வெளிப்பகட்டு. *v.* பகட்டாகப் பலகை யொட்டு; வெளிப்பகட்டான தோற்றமளி.

**Venerable,** *a.* நன் மதிப்புக்குரிய; கண்ணியமான. *v.* venerate, *n.* veneration.

**Venereal,** *a.* (venus, காதல் தெய்வம்) மேகநோய் சார்ந்த.

**Vengeance,** *n.* பழிக்குப் பழி வாங்குதல். *a.* vengeful, பழி வாங்குமியல்புள்ள. (*see* revenge, avenge.)

**Venial,** *a.* மன்னிக்கக் கூடிய.

**Vension.** *n.* மான் இறைச்சி.

**Venom,** *n.* நஞ்சு; மனத்தில் கொள்ளும் பகைமை; வன்மம். *a.* venomous.

**Vent,** *n.* சிறு திறப்பு; செல் வழி; போக்கு வாயில். *v.* திறப்பு அமை; (மனத்திலுள்ளதை) வெளியே கொட்டு.

**Ventilate,** *v.* காற்று வீச விடு; காற்றோட்டம் அமை. *n.* ventilation, *n. ag. impers.* ventilator, பலகணி; காலதர்; காற்றுப்புழை.

**Ventral,** *a.* வயிற்றின் பக்கமான.

**Ventricle,** *n.* உடலினுள் அறை போன்ற அமைப்பு; இதயத்தின் கீழ் அறைகளில் ஒன்று; மூளையின் பகுதி.

**Ventriloquism - loquy,** *n.* பிறிதோரிடத்திலிருந்து கேட்பது போல் தோன்றும் படி தன் குரலை மறைத்துப் பேசும் கலை. *n. pers.* ventriloquist.

**Venture,** *n.* இடையூறுக்குரிய காரியம்; துணிகரச் செயல். *v.* துணிந்து செய்; இடையூறுக்கு உட்படுத்து; துணிகரமாக முற்படு. *a.* venturous, venturesome.

**Venue,** *n.* நிகழுமிடம்; சந்திக்குமிடம்; அடிக்கடி செல்லுமிடம்.

**Venus,** *n.* (ரோமானியரின்) காதல்தெய்வம்; கோளினங்களில் ஒன்று; வெள்ளி. *conn. see* veneral.

**Veracious,** *a.* உண்மையான; உண்மை பேசுகிற. *n. abs.* veracity.

**Veranda(h),** *n.* தாழ்வாரம்; ஒட்டுத் திண்ணை; படிப்புரை; புறத்திணை; புறக்கூடம்.

**Verb,** *n.* (இலக்) வினைச்சொல். *see* verb.

**Verbal,** *a.* 1. (verb) வினைச் சொல்லைச்சார்ந்த; 2. (verb இலத்தீனச் சொல்) வாய் மொழி யான; 3. சொற்சார்ந்த; சொல் மட்டுமே சார்ந்த. (3) *adv.* verbally. *n. abs.* verbalism. *n. pers.* verbalist. *v.* verbalize,-se

**Verbatim,** *adv. a.* சொல்லுக்குச் சொல் சரியான.

**Verbiage,** *n.* சொற் பெருக்கம்; வெற்றுச் சொல்.

**Verbose,** *a.* சொற் பெருக்கமுள்ள. n. verbosity.

**Verdant,** *a.* பசுமையான.

**Verdict,** *n.* தீர்ப்பு.

**Verdigris,** *n.* தாமிரத் துரு.

**Verdure,** *n.* பசுமை.

**Verge,** 1. *v.* சாய்; அணுகு; எல்லை அணுகு *n.* ஓரம்; எல்லை. 2. *n.* கட்டியக் கோல். *n.* verger, 2. கட்டியக்கோல் தாங்கிச் செல்பவர்.

**Verify,** *v.* சரிபார்; ஒத்துக் காண்; தேர்ந்து கண்டறி; தெளிவு படுத்திக் காண்; எண்பி. *a.* verifiable. *n.* verification.

**Verily,** *adv.* உண்மையாக; உறுதியாக.

**Verisimilitude,** *n.* உண்மை போன்ற தோற்றம். *a.* verisimilar.

**Verity,** *n.* உண்மை; மெய்ம்மை. *a.* veritable.

**Vermicelli,** *n.* மாவிழை; (சேமியா).

**Vermiform,** *v.* புழுப்போன்ற உருவமுள்ள.

**Vermilion,** *n.* சாதிலிங்கம்; நல்ல சிவப்பு நிறம்.

**Vermin,** *a.* நோய்க்கிடம்; கயவன்; இழிஞன். *a.* verminous.

**Vernacular,** *a., n.* (= அடிமை மொழி) பொதுமக்கள் பேசும் மொழி, நாட்டு மொழி; பேச்சு மொழி; தாய்மொழி. *n.* vernacularization, - sation. *v.* vernacularize,-se.

**Vernal,** *a.* இளவேனிலுக்குரிய.

**Vernier, (scale)** *n.* நுண் அளவுகோல்.

**Versatile,** *a.* முழுநிறைவான; பலதிறப் பயிற்சியுள்ள. *n. abs.* versatility.

**Verse,** *n.* செய்யுள் அடி; செய்யுள்.

**Versed,** *a.* பயிற்சியுள்ள; அறிவறிந்த.

**Versify,** *v.* செய்யுள் கட்டு; செய்யுள் உருவம் கொடு. *n.* versification.

**Version,** *n.* பதிப்பு; பாடபேதம்; உருத்திரிபு வகை; கூற்று; மொழி பெயர்ப்பு.

*versus, prep. adv.* (சுருக்கம் *vs*) எதிர் (ஆக).

**Vertebra,** *n. (pl.* vertebrae*)* தனித் துண்டெலும்புப் பூட்டு; முள் எலும்பு. *a.* vertebral. (*comb.* vertebral column. முதுகெலும்பு)

**Vertebrate,** *a., n.* முதுகெலும் புள்ள (உயிர்).

**Vertex,** *n. (pl.* vertices*)* கோண முனை.

**Vertical,** *a.* செங்குத்தான; நிலைக் குத்தான நேர்மேலே. *n.* செங்குத்துக்கோடு.

**Verve,** *n.* (கலை) உயிர்ப் பண்பு.

**Very,** *adv.* மிகவும்; மிக; நிரம்ப. *a.* உண்மையான; அதுவேயான; கலப்பற்ற.

**Vesicate,** *v.* கொப்பளங்கள் உண்டாக்கு.

**Vesicle,** *n.* சிறுகொப்பளம்; (உடலின்) கண்ணறை. *a.* vesicular, vesiculous.

**Vesper,** *n.* மாலை; மாலை வெள்ளி, வெள்ளி (கோள் இனம்) *(pl.)* மாலைக் கால வழிபாடு.

**Vespiary,** *n.* குளவிக் கூடு; குளவிக் கூட்டம்.

**Vespid,** *n.* குளவி வகை. *a.* vespine, vespiform.

**Vessel,** *n.* கலம்; குருதிக் குழாய்; கப்பல்; நாவாய்.

**Vest,** *n.* கையில்லாத சட்டை. *v.* ஆடையுடுத்து; உரிமையைக் கொடு; உரிமை வந்தடை.

**Vestal,** *a.* (veste, வீட்டுத் தெய்வம்) கற்புள்ள. *n.* (கோவிலில்) தூய்மை வாய்ந்த கன்னி; பெண் துறவி.

**Vested,** *a.* சட்ட உரிமையுடைய; ஆடையுடுத்த; நிலைபெற்ற. *phr.* vested interest, ஆள் குழு நலங்கள்.

**Vestibule,** *n.* தலைவாயில்; முன் கூடம். *a.* vestibular.

**Vestige,** *n.* அடிச்சுவடு; அடையாளம்.

**Vestment,** *n.* ஆடை; உடுப்பு; *(pl.)* குருமாரின் உடை.

**Vestry,** *n.* உடுப்பு வைக்கும் அறை. *n. pers.* vestryman.

**Vesture,** *n.* ஆடை; உடுப்பு;

**Veteran,** *a., n.* தேர்ச்சி மிகுந்த(வர்).

**Veterinary,** (சுருக்கம். vety) *a.* விலங்கு நோய் சார்ந்த; கால்நடை மருத்துவம் சார்ந்த. *n.* விலங்கு மருத்துவர். *n. pers.* veterirarian.

**Veto,** *n.* (அரசியல்) தடை. தடையுரிமை; மறுப்பாணை *v.* தடைசெய்.

**Vex,** *v.* தொந்தரை செய். துயரளி; கோபமூட்டு. *n.* vexation. *a.* vexatious, vexed. துன்பம் அல்லது வெறுப்படைந்த; அடிபட்டலுத்த.

*via, n.* வழி. *prep.* வழியில்; ஊடாக.

*Via., media, phr. n.* நடுவழி; செவ்வழி.

**Viable,** *a.* தனியே உயிர் வாழக் கூடிய. *n.* viability,

**Viaduct,** *n.* வாராவதி; பாலம்.

**Vial, phial.** *n.* புட்டி.

**Viand,** *n.* சிற்றுண்டி.

**Viaticum,** *n.* இறுதிக்கால நன்னெறி யுரை; பயணச் செலவு.

**Vibrate,** *v.* ஊசலாடு; அதிர்; அலை; துடி. *n.* vibration. *a.* vibratory. vibrant. அதிர்ச்சி சார்ந்த; அதிர்வுடைய. *n. ag. impers.* vibrator.

**Vicar,** *n.* ஊர் மதகுரு. *n.* vicarage, ஊர்க் குருவின் மானியம்; மதகுரு இல்லம், *a.* vicarial. vicariate. *n. abs.* vicariate, vicarship

**Vicarious,** *a.* பகரமான; ஒருவர் இடத்தில் நின்று பெறுகிற.

**Vice,** 1. *n.* (கம்மியரது) பிடிசாவி; இடுக்கி. 2. *n.* குற்றம் பழிச்செயல்; நேர்மைக்கேடு. 3. *prep.* பகரமாக. (2) *a.* vicious.

**Vice-chancellor,** *n.* துணை வேந்தர்.

**Vice-president,** *n.* துணைத் தலைவர்.

**Viceroy,** *n.* அரசப் பகர ஆள். *a.* viceregal. n. viceroyalty.

*vice versa, adv.* எதிர்மாறாக; தலைமாறாக; நேர் எதிர் ஆக.

**Vicinity,** *n.* அருகிடம்; சுற்றுப்புறம்.

**Vicissitude,** *n.* நிலைமை; சூழ்நிலை; மாறுபடு நிலை.

**Victim,** *n.* பலி; பலியாள்; துயருறு வோர்; கொலைப்படுபவர். victimize,-se. *n. abs.* victimization, -sation.

**Victor,** *n. (fem.* victress). (victory) வெற்றியடைந்தவர்.

**Victoria,** *n.* நான்கு சக்கர வண்டி வகை.

**Victory,** *n.* வெற்றி. *a.* victorious, *n. see* victor.

**Victual,** *v.* (விட்'ல்) உணவுப் பொருள்கள் சேகரித்து அளி. n. *(pl.)* victuals, உணவு. *n. ag.* victualler.

*vide, v.* பார். (*comb.*) *v.* vide infra, கீழே பார். vide supra, மேலே பார்.

*videlicet, adv.* (சுருக்கம்; viz) அஃதாவது, என்னவெனில்.

**Vie,** *v. (pr. part.* vying.*)* போட்டியிடு; போராடு.

**View,** *n.* காட்சி; பார்வை; தோற்றம்; படம்; கருத்தின் போக்கு; நோக்கம்; எண்ணம்; கொள்கை. *v.* பார்; (மனத்தில்) கருது. *a. (neg.)* viewless, கண்ணுக்குப் புலப் படாத.

**Viewpoint,** *n.* நோக்குநிலை; பார்வைக்கோணம்; நோட்டம்.

**Vigil,** *n.* இராவிழிப்பு; சிறு வழிபாடு.

**Vigilance,** *n.* விழிப்பாயிருத்தல்; எச்சரிக்கை. *a.* vigilant.

**Vignette,** *n.* பூக்கொடிச் சித்திர வேலைப்பாடு; விளிம்பு வரையறுக்கப்படாத படம்.

**Vigour,** *n.* உரம்; ஊக்கம்; வலிமை; வீரியம்.

**Viking,** *n.* (பண்டை டேனிய) கடலரசன் ; கடற் கொள்ளை வீரன்.

**Vile,** *a.* இழிந்த; கொடிய. *n. abs.* vileness. *v.* vilify. *n. vbl.* vilification. *n. ag. pers.* vilifier.

**Villa,** *n.* நாட்டு மாளிகை; தோட்டம் சூழ்ந்த மனை.

**Village,** *n.* ஊர்; சிற்றூர்; நத்தம்; நாட்டுப்புறம். *n. pers.* villager, ஊர் வாழ்நர்; ஊரார்.

**Villain, villein,** *n.* 1. பண்ணை வேலையாள்; குடியானவன். 2. போக்கிரி. (2) *a.* villainous. *n. abs.* villainy.

**Vim,** *n.* உள்ளாற்றல்; ஊக்கம்; உரம்.

**Vincible,** *a.* வெல்லக்கூடிய (x invincible).

**Vinculum,** *n.* (கணக்கியல்) மேல்வரி அடைப்புக் கோடு. (எ-டு) 2x3-1.

**Vindicate,** *v.* உரிமைமெய்ப்பி; நேர்மை காட்டு; உறுதிக்கு ஆதரவளி. *n.* vindication.

**Vindictive,** *a.* பழிவாங்குமியல் புள்ள. *n. abs.* vindictiveness.

**Vine,** *n.* கொடி முந்திரி.

**Vinegar,** *n.* புளிக்காடி.

**Vinegary,** *n.* கொடி முந்திரித் தோட்டம்.

**Vinous,** *a.* கொடி முந்திரி சார்ந்த.

**Vintage,** *n.* கொடி முந்திரிப் பருவ விளைச்சல்; முந்திரிப் பழச்சாறு.

**Vintner,** *n.* முந்திரிப் பழச்சாறு வணிகர்; முந்திரிப் பழச்சாறு வடிப்பவர்.

**Viol, viola,** *n.* இசைக் கருவி வகை. *n. pers.* voilist.

**Violate,** *v.* உடல் வலுக்காட்டிச் செயலாற்று; வல்லந்தம் செய்; (சட்டவரம்பு) மீறு; கற்பழி. *n.* violation, வல்லந்தம். *n. pers.* violater. *a.* violable. *n.* violence, வல்லந்தம்; வல்லடிச் செயல்; தாக்குதல்; மூர்க்கத்தனம்; உடல் வெறி. *a.* violent, மூர்க்கமான; வல்லந்தமாகச் செயலாற்றுகிற; வலுக்கட்டாய மான; வலக்காரமான.

**Violet,** *n.* மலர்ச்செடி வகை; செந்நீல நிறம். *a.* செந்நீல நிறமான; ஊதா நிறமான.

**Violin,** *n.* நரம்பு இசைக் கருவி. *n. pers.* violinist.

**Violoncello,** *n.* பெரிய இசைக் கருவி வகை.

**Viper,** *n.* பாம்பு வகை; விரியன் பாம்பு; வஞ்சகர். *a.* viperous.

**Virago,** *n.* ஆண் மாரி; பிடாரி; பெண்பேய்.

**Virgin,** *n.* கன்னி; மணமாகாத பெண்; மன்றல் அணையாத மாது. (The virgin). ஏசுவின் தாயான கன்னி மரியா. *a.* தூய்மையான; மாசுபடாத; இள நிலையான. *a.* virginal. கன்னிக் குரிய; தூய. *n. abs.* virginity.

**Virgo,** *n.* (வான மண்டலம்) கன்னி வீடு.

**Virile,** *a.* ஆண்மைக் குணமுள்ள, வீரியமுள்ள; வீரம் மிக்க. *n. abs.* virility.

**Virtual,** *a.* செயல் துறையில் உண்மையான; உண்மை போல் கொள்ளத்தக்க; (ஒளிக்கதிர்) மாய; போலியான. *adv.* virtually.

**Virtue,** *n.* நற்குணம்; தூய்மை; புண்ணியச் செயல். *a.* virtuous, நன்னெறியில் வாழ்கிற.

**Virtuoso,** *n. (pl.* virtuosi*).* கலைப்பொருட் சேமிப்பாளர்; இசைவல்லார். *n. abs.* virtuosity.

**Virulence, virulency,** *n.* தீவிரம்; முனைப்பு; உக்கிரம்; கொடிய வெறுப்பு. *a.* virulent.

**Virus,** *n.* நஞ்சு; பகைமை; நச்சு ஊனீர்.

**Visa,** *n. (see* vise.*)*

**Visage,** *n.* முகம்.

**Vis-a-vis,** *adv.* எதிரெதிரான நிலையில்.

**Viscera,** *n. (pl.)* உடலின் உள்ளுறுப்புகள்.

**Viscid, viscous,** *a.* பிசுக்குள்ள; களியான. *n. abs.* viscidity, viscosity.

**Viscose,** *n.* களிபோன்ற வெல்ல வகை; பாகுவெல்லம்.

**Viscount,** *n.* (வைக்கௌண்ட்) (*fem.* viscountess). இளங் கோமான்.

**Vise, visa,** *n.* பிறநாட்டு நுழைவு இணக்கம்; கடவுச் சீட்டு; இணக்கச் சீட்டு; வாய்மைக் குறியீடு; இணக்கச் சீட்டுக் கையொப்பம். *v.* இணக்கச் சீட்டில் உரிய கையொப்பமிடு.

**Visible,** *a.* பார்க்கக்கூடிய; தெளிவாகத் தெரிகிற, (x invisible) *n. abs.* visibility.

**Vision,** *n.* பார்வை; பார்க்கும் ஆற்றல்; பார்க்கும் பொருள்; கனவில் காணும் உருவம்; உரு வெளித்தோற்றம். *a.* visionary, கனவுத் தோற்றமான மாயத் தோற்றமான; கனவு காண்கிற. *n.* கனவுருக்காண்பவர்.

**Visit,** *v.* பார்க்கச் செல்; (தண்டனை) சுமத்து. *n.* சென்று காணல்; (திரு) வருகை; வருகாட்சி; பேட்டி. *n. ag. pers.* visitor, பேட்டியாளர்; சென்று காண்பவர். *n.* visitant, வந்து காண்பவர்.

**Visitation,** *n.* போய்க்காணல்; நேர்வு; (தெய்விகத்) தண்டனை.

**Visor, vizor,** *n.* முகமூடி. *a.* visored.

**Vista,** *n.* அணி வரிசை; மனக்காட்சி.

**Visual,** *a.* பார்வைக்குரிய. *v.* visualize, -se. *n.* visualization, -sation.

**Vital,** *a.* உயிர்நிலையான; இன்றி யமையாத; உயிருள்ள; உயிர் சார்ந்த. *n.* (*pl.* vitals.) உடலின் முக்கிய உறுப்புக்கள். *comb. n.* vital statistics, மக்கள் தொகை விவரம்; வாழ்க்கைப் புள்ளி விவரம்.

**Vitality,** *n.* உயிர்ச்சக்தி; மிக்க வலிமை. *v.* vitalize,-se, உயிர்ப்பி; சுறுசுறுப்பாகச் செய்.

**Vitamio,** *n.* ஊட்டச்சத்து.

**Vitiate,** *v.* தூய்மையைக் கெடு; குணம் அல்லது வலிமையைக் குறை; பழுதாக்கு. *n.* vitiation.

**Vitreous,** *a.* (பளிங்கு) போன்ற. *v.* vitrify, கண்ணாடியாக்கு.

**Vitriol,** *n.* செம்புக் கந்தகி; துத்தம். *a.* vitriolic.

**Vituperate,** *v.* குற்றங் கூறு; வசைச் சொல் கூறு. *n.* vituperation. *a.* vituperative.

**Vivacious,** *a.* எழுச்சிமிக்க களியார்வமிக்க. n. *abs.* vivacity.

**Viva voce,** *adv., a.* வாய் மொழியாக, *n.* வாய்மொழித் தேர்வு.

**Vivid,** *a.* உயிர்ச் சித்திரம் போன்ற; தெளிவான; விளக்கமாகத் தெரிகிற. *n. abs.* vividness.

**Vivify,** *v.* உயிர்கொடு, எழுச்சியூட்டு.

**Viviparous,** *a.* குட்டி போடுகிற.

**Vivisection,** *n.* உயிர் அறுவை சித்திரவதை. *n.* vivisect.

**Vixen,** *n.* பெண் நரி; முன் சினமுள்ளவன்.

*viz. (see* videlicet*).*

**Vizard,** *n.* முகமூடி.

**Vizier,** *n.* (முஸ்லிம்) முதல் அமைச்சர்.

**Vizor,** *n. see* visor.

**Vocable,** *a.* ஒலிக்கக்கூடிய. *n.* சொல்.

**Vocabulary,** *n.* சொல் தொகுதி.

**Vocal,** *a.* குரலுக்குரிய; குரலால் சொல்லப்பட்ட. *n. pers.* vocalist வாய்ப்பாடகர். (*comb.*) *n.* vocal chord, குரல் நாண்களில் ஒன்று. *v.* vocalize, -se, குரல் கொடு;

குரல் வாயிலாகத் தெரிவி. n. vocalization, -sation.

**Vocation,** *n.* தொழில் வாழ்க்கைத் தொழில். *a.* vocational, வாழ்க்கைத்தொழில் சார்ந்த. *comb. n.* vocational school, வாழ்க்கைத் தொழில் (சார்ந்த) பள்ளி.

**Vocative,** *a., n.* (இலக்.) விளி வேற்றுமை; எட்டாம் வேற்றுமை.

**Vociferate,** *v.* கூச்சலிடு. *n.* vociferation *a.* vociferous.

**Vodka,** *n.* ரஷிய நாட்டுச் சாராயம்.

**Vogue,** *n.* நடப்பு; வழக்கு; நடைமுறை மரபு.

**Voice,** *n.* குரல்; கருத்து; (இலக்.) வினைவடிவு. (active and passive) *v.* குரல் எழுப்பு; கூறு. *a.* voiced, (ஒலி நூல்) மெல்லொலி யுடைய; குரல் நாள அதிர்வுடைய. *a. (neg.)* voiceless. வாய்விடாத; பேசாத (ஒலி நூல்); குரல் நாள அதிர்வற்ற; வல்லோசையான.

**Void,** *a.* வெறுமையான; பயனற்ற; செல்லாத. *n.* பாழ்வெளி; செல்லுபடியற்றது; வெற்றிடம். *v.* வெறுமையாக்கு; பயனற்றதாக்கு; வெளியே கொட்டு. *a.* voidable, n. voidance.

**Voile,** *v.* மெல்லிய துணிவகை; இழையணி, ‘குழையாடை’.

**Volatile,** *a.* எளிதில் ஆவியாகிற; சுறுசுறுப்பு மிக்க; எளிதில் மாறுகிற. *n.* volatility. *v.* volatilize, -se.

**Volcano,** *n.* எரிமலை. *a.* volcanic.

**Volition,** *n.* துணிபாற்றல்.

**Volley,** *n.* குண்டுமாரி; சொல் மாரி. *v.* (குண்டுமாரி. பொழி. 2. *see* volley-ball)

**Volley-ball,** *n.* கையுறை பந்து; எற்றுபந்து; எறிபந்து; உந்துபந்து.

**Volt,** 1.*v.* சட்டெனத் திரும்பு. 2. *n.* மின் வலி; இயக்க விசை; மூல அளவு. *n. abs.* voltage, மின் மூல அளவை (எண்).

**Voltameter,** *n.* மின் முறிகலம்.

**Volte,** *n.* கத்திப்போரில் சட்டென நகருதல்.

*volte face, n.* திரும்புதல்; அரசியல் குட்டிக்கரணம்.

**Voltmeter,** *n.* மின் அழுத்தமானி.

**Voluble,** *a.* சரளமாகப் பேசுகிற. *n. abs.* volubility.

**Volume,** *n.* (நூலின் பகுதியான) பிரிவு ஏடு; பெரும் பிரிவு; தொகுதி; காண்டம்; பிண்டம்; பருமன் பருமானம்; கன அளவு; நிறைவு; பெரிய அளவு; பாளம்; (நீள அகல உயரப்) பிழம்பு. *a.* voluminous, மிகப் பெரிய.

**Voluntary,** *a.* தன் விருப்பார்ந்த; தானாக முன் வருகிற; தொண்டு மனப்பான்மையுடைய; தன் செயலான; தன் இயல்பான. (voluntary muscles) *n.* தன் விருப்பாகச் செயலாற்றுபவர், *adv.* voluntarily.

**Volunteer,** *n.* தொண்டர். *v.* தொண்டாற்ற முன் வா; தானே முன் வா.

**Voluptuous,** *a.* இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள; இன்பத்தில் திளைக்கிற; சிற்றின்ப ஈடுபாடுள்ள. *n. abs.* voluptuousness. *n. pers.* voluptuary.

**Vomit,** *v.* வாந்தி செய். *n.* வாந்தி. *a.* vomitory.

**Voracious,** *a.* பெருந்தீனி உண்கிற. n. *abs.* voracity.

**Vortex,** *n. (pl.* vortices*).* நீர்ச்சுழல்; சுழிக்காற்று.

**Votary,** *n. (fem.* votaress*).* வழிபாட்டாளர்; வணங்குவோர்; பக்தர். *a.* votive.

**Vote,** *n.* விருப்பம்; விருப்பச் சீட்டு; மொழிச்சீட்டு; வாக்குரிமை (ச்சீட்டு); *v.* விருப்பத்தைத் தெரிவி; மொழிச் சீட்டளி. *n. ag. pers.* voter, வாக்காளர். *comb. n.* casting vote, முடிவு செய்; வாக்கு; தீர்வுறுதிச் சீட்டு; முடிவு வாக்கு.

**Vouch,** *v.* உத்தரவாதம் செய். சான்று கூறு. *n. ag.* voucher. உத்தரவாதம் முதலியன செய்பவர்; உறுதிச் சீட்டு; கைப்பற்றுச் சீட்டு.

**Vouchsafe,** *v.* அருள்செய்; செயல்பாலி; இணக்கமுடன் அளி.

**Vow,** *n., v.* நேர்ச்சி செய்; (கடவுளுக்கு முன்) உறுதி செய்; சூளுரை.

**Vowel,** *n.* உயிரெழுத்து.

*vox populi, phr. n.* பொது மக்கள் குரல்.

**Voyage,** *n.* கடற்பயணம். *v.* கப்பலில் பயணம் செய். *n. ag. pers.* voyager.

**Vs.** (சுருக்கக் குறிப்பு) *see* versus.

**Vulcanite,** *n.* தொய்வகமும் (ரப்பரும்) கந்தகமும் கலந்து சூடாக்கிச் செய்யப்பட்ட கெட்டிப்பொருள்; வன் கந்தகம். *v.* vulcanize,-se. வன் கந்தகமாக்கு. *n.* vulcanization,- sation.

**Vulgar,** *a.* முரட்டுக் குணமுள்ள; கொச்சையான; நாகரிகமில்லாத. (கீழ்வாய் எண்) பொதுவான; பதின் கூறல்லாத. *v.* vulgarize, -se. *n.* vulgarity. *n. abs.* vulgarism, கொச்சை வழக்கு.

**Vulnerable,** *a.* ஊறுபடத் தக்க; காயத்துக்கு உள்ளாகத்தக்க; சேதமுறத்தக்க. *n. abs.* vulnerability.

**Vulpine,** *a.* நரிக்கு உரிய; தந்திரமுள்ள.

**Vulture,** *n.* (பிணந்தின்னிக்) கழுகு; பேராவற்காரர். *a.* vulturine, vulturish.

**Vulva,** *n.* பெண் குறி.

**Vying,** *pr. part. see* vie.

# W

**Wad,** *n.* திணிக்கப்பட்ட சக்கை; கத்தை; கூளம். *v.* திணித்துவை. *s. n.* wadding, கூளம் முதலியன.

**Waddle,** *v.* (தவளை போல்) அசைந்து நட; அருவருப்பாக நட. *n.* அருவருப்பான நடை.

**Wade,** *v.* நீரில் நட. *n. ag.* wader, நீர்ப்பறவை.

**Wafer,** *n.* மெல்லிய அப்பம்; தாள் பிள்ளை.

**Waft,** *v.* (நீர், காற்று) அடித்துக் கொண்டு செல். *n.* சிறு மூச்சுக் காற்று; சைகை.

**Wag,** *v.* ஊசலாடு; வாலாடு; வாலாட்டு. *n.* பக்கவாட்டில் அசைத்தல்; கோமாளி; குறும்புக் காரர். *a.* waggish, வேடிக்கையில் விருப்பமுள்ள *n. abs.* waggish ness, waggery.

**Wage,** 1.*v.* (போர் முதலியன) நடத்து. 2. *n. also pl.* wages). உழைப்புக் கூலி; சம்பளம். *comb. n.* time wages. நேரக் கூலி; maximum wages, உச்சப் படிக்கூலி, பெருமக்கூலி; minimum wages. குறைபடிக் கூலி, சிறுமக் கூலி.

**Wager,** *n.* பந்தயம்; பணயம்; சூளுரை. *v.* பந்தயம் கட்டு.

**Waggle,** *v.* பக்கவாட்டில் அசை.

**Wag(g)on,** *n., v.* பாரவண்டி. (ஏற்று); சகடு (சுமையேற்று) n. *pers.* wag(g)oner.

**Wagtail,** *n.* வாலாட்டிக் குருவி.

**Wail,** *n.* உடையவனில்லாத பொருள்; அளவற்றவர்.

**Wail,** *v.* புலம்பி அழு. *n.* அழு குரல். n. wailing.

**Wainscot,** *n.* சுவரில் பதிக்கப்பட்ட பலகை.

**Wainwright,** *n.* வண்டி அமைக்கும் தச்சன்.

**Waist,** *n.* இடுப்பு; அரை. *n.* waistband, அரைக்கச்சை, அரைஞாண். n. waistcoat, அரைச்சட்டை.

**Wait,** *v.* காத்திரு; பின் தங்கிரு. *n.* waiting. *phr. v. (idiom)* wait upon தொண்டு ஊழியஞ் செய்; *phr. n.* waiting list, காத்திருப்பவர் பட்டியல், waiting room, தங்கு மிடம்; waiting shed, தங்கற் (சாவடி); தங்குசாலை; தங்கு கொட்டடி.

**Waiter,** *n. (fem.* waitress*)* ஏவலாள்; உணவு பரிமாறுபவன்.

**Waive,** *v.* (உரிமையைக்) கைவிடு; நிறுத்திவை; வற்புறுத்தாதிரு. *n. ag. impers. pers.* waiver. தள்ளுபடி (செய்பவர்).

**Wake,** 1.*n.* கப்பல் சென்ற வழி. *phr.* in the wake of, பின் பற்றி, உடனே. 2. *v.* (waked or woke, waked, woke or woken) விழி; விழித்திரு; எழுப்பு; எழுச்சி யூட்டு. *a.* wakeful, விழிப்பான; எச்சரிக்கையான. *n.* wakeful ness. *v.* waken. *conn. see* awake, awaken.

**Walk,** *v.* நட; நடந்துகொள். *n.* நடை; உலாவுமிடம்; பணித்துறை. (*comb.*) *n.* walkover, 1. எளிதில் வெற்றி பெறல். 2. கட்சி மாறுதல்.

**Wall,** *n.* சுவர்; மதில்; வேலி; பாதுகாப்பு. *v.* சுவர் எழுப்பு; நாற் புறமும் சுவர் கட்டு.

**Wallet,** *n.* பயணப் பை.

**Wallop,** *v.* வலுவாக அடி. *n.* walloping, நன் கு அடித்தல்.

**Walnut,** *n.* வாதுமை வகை (கொட்டை).

**Walrus,** *n.* தட்பமண்டல விலங்கு வகை, நீர்யானை.

**Waltz,** *n.* இருவர் சேர்ந்தாடும் ஆடல் வகை; அதற்குரிய இசை.

**Wan,** *a.* சோர்ந்த; நோய்ப்பட்ட; வெளிறிய தோற்றமுடைய.

**Wand,** *n.* நீண்ட கோல்; கட்டியக் கோல்; மாத்திரைக் கோல்; மந்திரக் கோல்.

**Wander,** *v.* சுற்றித் திரி; அலைந்து திரி; மூளை திரி; பிதற்று. *n. ag.* wanderer *comb. n.* wandering gang, நாடோடிக் கூட்டம்.

**Wanderlust,** *n.* அலைந்து திரிகிற விருப்பம்.

**Wane,** *v.* குறை; தேய். *n.* தேய்வு; குறைவு. (x wax). *phr. n.* waning moon, தேய் பிறை.

**Want,** *n.* விருப்பம்; தேவை; வறுமை. *v.* விரும்பு; தேவைப்படு; வறிய நிலையிலிரு. *a.* wanting. இல்லாமலிருக்கிற; குறைபாடா யுள்ள.

**Wanton,** *a.* வேண்டுமென்ற; அழி வழக்கான. *v.* குறும்பு செய்; அழி விளையாட்டாடு. *adv.* wantonly. *n.* wantonness.

**War,** *n.* போர். *v.* போரிடு. *comb. see* warfare, warlike, war cry etc. war allowance போர்ப்படி; war loan, போர்க் கடன்; war and peace, போரும் அமைதியும்.

**Warble,** *v.* (பறவை) குலவு; இசை பாடு. *n.* (பறவையின்) பாடல். *n. ag.* warbler, இசைப் பறவை.

**War cry,** *n.* போர்க் குரல்.

**Ward,** 1. *correl.* warden, guardian.*)* *n.* இளங்கணாளர்; இளங்கண்; பாதுகாப்பிலுள்ளவர். 2. *n.* ஊரின் பிரிவு; மருத்துவ சாலைப் பிரிவு; வட்டகை; வளாகம். *v.* பாதுகாவல் செய்; அணுக விடாது தடு; (வாள் வீச்சு) தட்டி; தேடு. (1) *n. abs.* wardship *comb. n.* court of wards. இளங்கணாளர் காப்பு மன்றம்; இளங்கண் முறை மன்றம்.

**Warden,** *n.* பாதுகாவலர்; முதுகணாளர்; முதுகண்; (சிறைச்சாலை மாணவர் விடுதி) மேலாள்; காப்பாள்.

**Warder,** *n. (fem.* Wardress*)* வாயில் காவலன்; சிறைக் காவலன்.

**Wardrobe,** *n.* (துணிகள்) வைக்கும் நிலையடுக்குப் பேழை.

**Ware,** *n.* (வழக்கத்தில் wares) பண்டங்கள்; சரக்குகள். *n.* ware house, பண்டகசாலை, கொட்டாரம்.

**Warfare,** *n.*(war) போர்த் தொழில்; போர்.

**Warily,** *adv.* (wary) விழிப்பாக.

**Warlike,** *a.* (war) போர் விருப்ப முள்ள; போர் வீரமுள்ள.

**Warm,** *a.* சற்றுச் சூடான; வெதுவெதுப்பான; மனவெழுச்சி யுள்ள; அன்புள்ள. *v.* சூடாக்கு; மனவெழுச்சியுண்டாக்கு. (x cool) *n.* (*see* warmth.)

**Warmhearted,** *a.* இரக்கமுள்ள.

**Warmth,** *n.* வெதுவெதுப்பு; அன்பு; உணர்ச்சி மிகுதி.

**Warn,** *v.* முன் எச்சரிக்கை செய்; முன்னரே தெரிவி. *n.* warning, முன்னறிவித்தல்; இடர் எச்சரிக்கை.

**Warp,** *n.* பாவு நூல். (*correl.* woof, weit) முறுக்குதல். *v.* முறுக்கி உருவத்தைக் குலை; புரட்டு.

**War-plane,** *n.* போர் வானூர்தி; போர்வான் கலம்.

**Warrant,** *v.* உரிமையளி; உத்தர வாதஞ் செய்; மெய்ப்பி. *n.* உரிமை தருவது; உத்தரவாதம்; உத்தரவு; பற்றாணை. *a.* warrantable, நேர்மையான; சட்ட ஆதர வுடைய. *n. pers.* warrantee, உத்தரவாதம் அளிக்கப் பட்டவர். *n. ag.* warrantee, warrantor, உத்தரவாதம் செய்பவர். *n.* warranty, உத்தரவாதம்; உத்தர வாத உரிமை. *comb. n.* warrant of precedence, வரிசை முறைப் பற்றாணை. warrant and distraint, பற்றுக் காவல் ஆணை.

**Warren,** *n.* (முயல்) வளை.

**Warrior,** *n.* போர் வீரன்.

**Warship,** *n.* போர்க் கப்பல்.

**Wart,** *n.* கரணை; மறு. *a.* warty.

**Wary,** *a.* விழிப்பான; எளிதில் ஏமாற்ற முடியாத. *n. abs.* wariness. *adv. see* warily.

**Was,** *v. pa. t. (be)* இருந்தான்; இருந்தாள்; இருந்தது; இருந்தேன்.

**Wash,** *v.* கழுவு; அலம்பு; அலக்கு; (ஆடை) துவை; வெளு; (-oneself) குளி; அலைமோது; அடித்துச் செல்லப்பெறு; பூசு. *n.* கழுவுதல்; குளித்தல்; துவைத்தல்; வெளுத்தல்; நீர்ப்பெருக்கு; அலை; பூசு தைலம்; பூச்சு; கழுநீர். *n. abs.* washing. *n. ag.* washer.

**Washing soda,** *n.* சலவை உப்பு.

**Washout,** *n.* ஓடும் நீர் மண்ணை வாரிச் செல்லல்; தோல்வி; தோல்வியடைந்தவர்.

**Washy,** *a.* ஈரமான, மெலிந்த; வலுக்குறைந்த.

**Wasp,** *n.* குளவி. *a.* waspish, குளவிபோன்ற; சிடுசிடுப்புள்ள.

**Waste,** *a.* பாழான; தரிசான. *v.* பாழாக்கு; வீண் செலவு செய். *n.* பாழாக்குதல்; வீண் செலவு; கழிவுப் பொருள்; தரிசு நிலம் (wasteland) n. *abs.* wastage. *n. pers.* waste. *a.* wasteful, (*comb. n.*) waste-pipe. கழிவு நீர்க் குழாய். assessed waste, வரித் திட்டத்துக்குட்பட்ட தரிசு. unassessed waste, வரித்தீட்டப் படாத தரிசு. waste paper, கழிவுதாள். waste paper basket, கழிவு தாள் கூடை.

**Wasting,** *a.* அழிக்கிற; தேய்கிற.

**Wastrel,** *n.* (ஆக்கும் பொழுது) கெட்ட பொருள்; பயனற்றவர்; வீண் செலவுக்காரர்.

**Watch,** *n.* காவல்; காவலாளர்; காவல் நேரம்; கைக் கடிகாரம். *v.* காவல் செய்; பதுங்கியிரு; பார்த்திரு. *n. ag. pers.* watcher.

**Watch-dog,** *n.* காவல் நாய்; காவல் புரிபவர்.

**Watchful,** *a.* விழிப்பாயுள்ள. கவனமாயுள்ள; எச்சரிக்கையான.

**Watchman,** *n.* காவலாளி.

**Watch-tower,** *n.* காவற் கூண்டு.

**Watchword,** *n.* (காவலாளர்) அடையாளச் சொல்; நினைவில் வைக்கத் தகுந்த உரை; மேற் கோளுரை.

**Water,** *n.* நீர்; வைரத்தின் ஒளி. *v.* நீர் பாய்ச்சு; நீருடன் கல; பட்டு முதலிய துணியில் அலை போன்ற தோற்றங்கொடு; வாயூறு; விடாய் கொள். (*comb.*) *n.* aerated water காற்றூட்டப் பட்டநீர். stagnant water, தேங்கு நீர்.

**Water-closer,** *n.* சிறுநீர் விடுதி; மலங்கழி விடுதி.

**Water-colour,** *n.* நீரில் கரைக்கும் வண்ணம்; நீர் வண்ணம்.

**Watercourse,** *n.* ஆறு; ஓடை; நீர்நெறி.

**Water-diviner, water finder,** *n.* நீர் ஊற்றுக் காட்சியாளர்.

**Waterfall,** *n.* அருவி; நீர் வீழ்ச்சி.

**Waterfowl,** *n.* நீர்ப்பறவை.

**Waterglass,** *n.* நீர்க கடிகாரம்; குடிநீர்க் கலம்.

**Watering-place,** *n.* (கால் நடை) நீர் குடிக்குமிடம்; (பொறிவண்டி, ஊர்தி) நீர்வார்க்குமிடம்.

**Water-lily,** *n.* அல்லி; ஆம்பல்.

**Waterlogged,** *a.* நீர் சூழ்ந்த.

**Water-man,** *n.* (*pl.* watermen) தண்ணீர்க்காரர்.

**Water-mark,** *n.* நீர் மட்டம் காட்டும் வரை; (தாளின்) நீரெழுத்து அல்லது ஒளிக்குறி.

**Water-mill,** *n.* நீரினால் ஓட்டப் பெறும் ஆலை.

**Water-proof,** *a.* நீரினால் நனையாத; நீர் ஊறாத. *n.* water-proofing, நீரில் நனையாத துணி.

**Water-ratte,** *n.* நீர்வரி, தண்ணீர்த் தீர்வை.

**Water-shed,** *n.* தண்ணீர்ப் பந்தல்.

**Watertight,** *a.* நீர் உட்புகாத; ஒழுகாத.

**Water-supply,** *n.* நீர்வள ஆதாரம்.

**Water-way(s)** *n.* நீர்வழி; நீர்வழிப் பாதை(கள்).

**Waterworks,** *n.* நீர் அளிப்பு முறை; நீர்த்தேக்க முறை.

**Water-worn,** *a.* நீரினால் அரிக்கப்பட்ட.

**Watery,** *a.* நீர்போன்ற; நீர் கலந்த; நீர்சார்ந்த.

**Watt,** *n.* மின் வேக நுண் கூறு. kilowatt, ஆயிர மின் வேக நுண் கூறு; மின் வேகப் பெருங்கூறு.

**Wattle,** *n.* மிலாறு; மிலாறு களாலான வேலி; கூரை.

**Waul,** *v.* (பூனைபோல்) கத்து.

**Wave,** *n.* அலை; அலைபோன்ற இயக்கம்; மேடு பள்ளம்; கை யசைத்துச் சைகை செய்தல். *v.* அலைபோல் வீசு; காற்றில் அலைந்து செல்; அலைத்துச் சைகை செய்; அலைபோல் உருவங் கொடு. *n. dimi.* wavelet, சிற்றலை. *a.* wavy, அலை போன்ற.

**Wavelength,** *n.* (ஒளி) அலை; நீளம்.

**Waver,** *v.* தடுமாறு. *n. ag.* waver.

**Wax,** 1. *v.* பெருகு; பொங்கு; வளர்ச்சியடை. (x wane) 2. *n.* மெழுகு; அரக்கு; (2) *a.* waxy, waxen, மெழுகினால் செய்த; குழைவான.

**Way,** *n.* பாதை; வழி; நடந்து கொள்ளும்முறை; வழக்கம். *pl.* வழிகள்; பாதைகள்; நெறிகள்; நடைஉடை மாதிரிகள்; பழக்க வழக்கங்கள். *comb. n.* ways and means, வகை துறைகள்; வழி துறைகள்; highways, பெருஞ் சாலை, waterways, நீர்நெறிகள், air-ways, வானெறிகள், way in, உட்செல்வழி; உள்வழி. way out, புறஞ்செல்வழி, புறவழி.

**Wayfarer,** *n.* வழிப்போக்கன்.

**Waylay,** *v.* வழியில் ஒளிந்திருந்து தாக்கு; பாதையில் பதுங்கியிரு; ஆறலைத்தல் செய்.

**Ways and means,** *phr. n. see* way.

**Wayside,** *n.* வழிப்பக்கம். *a.* வழியில் உள்ள.

**Wayward,** *a.* முரட்டுக் குணமுள்ள; சொற் கேளாத, மானாங் கண்ணி யான; தான்தோன்றி யான; அடம் பிடித்த. *n. abs.* way-wardness.

**We,** *pron.* நாம்; யாம்; நாங்கள். see us, our, ours, ourselves etc.

**Weak,** *a.* மெலிந்த; வலுவற்ற; மனவுறுதியில்லாத. *v.* weaken, *adv.* weakly. *n. pers.* weakling. *n. abs.* weakness, வலு வின்மை; குறைபாடு; குற்றம்.

**Weal,** *n.* செழிப்பு; வாழ்வு நலம்.

**Weald,** *n.* தரிசான சமவெளி.

**Wealth,** *n.* செழிப்பு; செல்வம்; வளமை. *a.* wealthy.

**Wean.** *v.* (குழந்தையைப்) பால் மறக்கச் செய்; ஒரு வழக்கத்தி லிருந்து மாறச் செய்.

**Weapon,** *n.* போர்க்கருவி; கைக்கருவி.

**Wear,** *v.(*wore, worn*)* அணி; உடு; தாங்கு; தோற்றங்கொள்; வழங்கு; வழங்கித் தேய்; நெடுங்காலம் உழை. *n.* உடுப்பு; உழைத்துத் தேய்தல். *phr. n.* wear and tear, (நாட்பட்ட) உழைப்புத் தேய்வு; தேய்மானம்; சேதாரம்.

**Weary,** *a.* சோர்வடைந்த; களைத்த, *v.* சலிப்பு அடையச் செய். *n.* wearlness, *a.* wearisome, முசிவு தருகிற.

**Weasel,** *n.* கீரியின் உயிர் வகை.

**Weather,** *n.* நாள்நிலை; வான நிலை. *v.* வானிலை தாங்கு; (வெயில் மழை) அடிபடு; உறுதியுடன் தாங்கு; தாங்கி உறுதியடை.

**Weather-beaten,** *a.* பட்டுத் தேர்ந்த அடிபட்ட.

**Weather-board,** *n.* சாரல் தாங்கி.

**Weather-bound,** *a.* (கப்பல்) புயலில் தடைப்பட்ட.

**Weather-cock,** *n.* காற்றாடி; காற்றுத் திசைகாட்டி; அடிக்கடி கொள்கைகளை மாற்றிக் கொள்பவர்; சமய சஞ்சீவி; வேளைக்கொத்த நடையாளர்.

**Weather-forecast,** *n.* வானிலை முன்னறிவிப்பு

**Weather-glass,** *n.* காற்றழுத்த மானி.

**Weave,** *v.* (wove, wove or woven) நெய்; நெசவு செய்; வலை பின்னு. *pr. p. n.* weaving நெசவு; நெய்தது, weaving expert; நெசவு வல்லுநர்.

**Weazen,** *a. see* wizen.

**Web,** *n.* நெசவு செய்யப்பட்டது; தறியிலுள்ள பாவு; சிலந்திக் கூடு. (cobweb); (நீர்ப்பறவைகளின்) விரல்களிடையேயுள்ள தோல். *a.* webbed, web-footed. தோலடிப் பாதமுள்ள.

**Wed,** *v.* (wedded or wed) மணம் செய்; இணைந்திரு. *n.* wedding, வேட்டம்; வேளி; திருமணம்.

**Wedge,** *n.* ஆப்பு. *v.* ஆப்பு வைத்து அடி; திணித்துவை.

**Wedlock,** *n.* மண வாழ்; மணம்.

**Wednesday,** *n.* புதன் கிழமை.

**Weed,** *n.* களை; பதர்; பயனற்றவர். *n. (pl.)* (கைம்பெண்) துயர் உடை; களைபறி; பயனற்ற பொருள்களை நீக்கு. *n. ag.* weeder, *a.* weedy.

**Week,** *n.* வாரம். (*comb.*) *n.* weekday. ஞாயிறு தவிர மற்றக்) கிழமைகளில் ஒன்று; வார வேலைநாள். *a. see* weekly. *comb. n.* week-end. வாரமுடிவு; *phr.* this day week. இதே நாள் அடுத்த வாரம்.

**Weekly,** *a.* வாரத்திற்குரிய. வாரந் தோறும் நிகழ்கிற *adv.* வாரத்திற் கொரு முறையாக. *n.* வார இதழ்.

**Ween,** *v.* எண்ணு; கருது.

**Weep,** *v.* (wept) அழு; கண்ணீர் விடு.

**Weevil,** *n.* அந்துப்பூச்சி

**Weft,** *n.* ஊடு நூல் (*correl.* warp)

**Weigh,** *v.* எடை கண்டுபிடி; பளுவாயிரு; அழுத்து; சீர் தூக்கி மதிப்பிடு; முக்கியமாயிரு. *n.* weight. *a.* weighty, பளுவேறிய; முக்கியமான. *n.* weightiness, *comb. n.* weights and measures, நிறையளவுகள்.

**Weir,** *n.* அணை; மொட்டைக் கலிங்கல்; மீன் பிடிக்கும் அடைப்பு.

**Weird,** *n.* விதி. *a.* இயற்கை மீறின.

**Welcome,** *a.* மகிழ்ச்சி தருகிற; நல்வரவான. *n.* வரவேற்பு; நல்வரவு; நல்வரவுரை. *v.* வரவில் மகிழ்; வரவேற்பளி. *comb. n.* welcome address வரவேற் புரை, பாராட்டிதழ்.

**Weld,** *v.* (உலோகத்தைப்) பற்றவை.

**Welfare,** *n.* நலம்; இன்னலம்; செம்மை; சேமம். *comb. n.* welfare centre.

**Welkin,** *n.* வானம்.

**Well,** 1. *n.* கிணறு; ஊற்று; பிறப்பிடம். *v.* ஊற்றாக வெளிப்படு; மேலெழுந்து வா. 2. *adv. a.* better, (best) நன்கு; நன்றாய்; நன்னிலையில்; உடல் நலமாக. 3. *int.* நன்று.

**Welladay,** *int.* ஐயோ!

**Well-advised,** *a.* நல்லறிவுடைய; நற்கேள்வியறிவுடைய.

**Well-being,** *n.* நல்வாழ்வு; நன்மை; நலம்.

**Well-born,** *a.* நற்குடிப் பிறந்த.

**Well-bred,** *a.* நன்முறையில் வளர்க்கப்பட்ட; வணக்க இணக்க முள்ள.

**Well-conducted,** *a.* நன்னடக்கை யுள்ள.

**Well-connected,** *a.* நல் உரவுள்ள; செல்வாக்குடைய.

**Well-favoured,** *a.* கண்ணுக் கினிய; நன்னிலையிலுள்ள.

**Well-informed,** *a.* சரியான தகவலுள்ள; நற்பயிற்சியுடைய; அறிவறிந்த.

**Well-known,** *a.* பலருக்கும் நன்கு தெரிந்த; புகழார்ந்த; பேர்போன.

**Well - meaning,** *a.* நல்லெண்ண முடைய.

**Well-nigh,** *adv.* ஏறக்குறைய; கிட்டத்தட்ட.

**Well-off,** *a., adv.* நன் னிலையில்; செல்வ நிலையில் (உள்ள).

**Well-to-do,** *a.* செல்வமுள்ள.

**Well-wisher,** *n.* நல்லது நினைப்பவர்; நண்பர்.

**Welsh,** *a., n.* வேல்ஸ் நாட்டுக் குரிய (மொழி).

**Welter,** *v.* (சேற்றில்) புரள். *n.* புரள்தல்; குழப்பம்.

**Wench,** *n.* சிறுமி; சிறுக்கி; வேலைக்காரி.

**Wend,** *v. (*wended or went, gone. or wended*)* செல்; போ; நடந்து கட. *see* go.

**Went,** *v. see* go, wend.

**Wept,** *v. see* weep.

**Werewolf,** *n.* ஓநாய்; மந்திரத்தால் ஓநாய் உருவம் கொள்ளக் கூடியவர்.

**West,** *n.* மேற்கு; மேற்றிசை நாடு. *a.* மேற்றிசைக்குரிய; மேற்கு நோக்கிய.

**Westerly,** *a.* மேற்கிலிருந்து வருகிற; மேற்றிசைப் புறமான; மேற்கு நோக்கிய. *adv.* மேற்றிசையாக.

**Western,** *a.* மேற்றிசைப் புறமான; மேற்றிசையிலுள்ள.

**Westerner,** *n.* மேல் நாட்டார்.

**Westernmost,** *a.* மேற்குக் கோடியான.

**Westward,** *a.* மேற்கு நோக்கிய. *adv.* westward(s).

**Wet,** *a.* ஈரமான; நீர்க் கசிவான; மழையான; wetnurse, பால் கொடுக்கத்தக்க செவிலி. (x drynurse) *v.* ஈரமாக்கு; நீர்மத்தில் நனை. *n.* wetness, *comb. n.* wetland, நன் செய்; சேற்றுப்பாசன நிலம்.

**Wether,** *n.* விதையடித்த ஆண் ஆடு.

**Whack,** *v.* வலுவாக அடி. *n.* வலுத்த அடி.

**Whale,** *n.* திமிங்கிலம். *n. pers.* whaler திமிங்கில வேட்டை யாளர். திமிங்கில வேட்டைக்

கப்பல். *n. abs.* whaling, திமிங்கில வேட்டை.

**Wharf,** *n. (pl.* wharves*)* சரக்கு ஏற்றியிருக்கும் துறை; நாவாய்க் குறடு. *abs.* wharfage, கப்பல் துறைக்கூலி; கப்பல் சரக்கு ஏற்றியிருக்கும் துறைகள்.

**What,** *pron.* என்ன; எது; யாது. *a.* எந்த; எவ்வகைப்பட்ட.

**Whatever, whatsoever** *pron. a.* ஏதாவது; எதுவெனினும்.

**Wheat,** *n.* கோதுமை. *a.* wheaten.

**Wheedle,** *v.* கெஞ்சிக் காரியமாற்று.

**Wheel,** *n.* சக்கரம்; உருளை. *v.* சுழலு; சக்கரங்களின் மீது செல்; திசை திரும்பு.

**Wheel-barrow,** *n.* தள்ளு வண்டி.

**Wheel-wright,** *n.* வண்டிச் சக்கரம் செய்பவர்.

**Whelm,** *v.* அமிழ்த்து; அழி.

**Whelp,** *n.* நாய்க்குட்டி; விலங்குக் குட்டி; பையன்.

**When,** *adv., pron.* எப்பொழுது. conj. பொழுது. *n.* காலம்.

**Whence,** *adv., conj.,* எங்கிருந்து; எதற்காக.

**Whencesoever,** *adv. conj.* எங்கிருந்தாயினும்.

**Whenever, whensoever,** *adv. conj.* எப்பொழுதாயிலும்.

**Where,** *adv., conj.,* எங்கு; எவ்விடத்திற்கு.

**Whereabout(s).** *adv. conj.* எவ் விடத்திற்கு அருகில். *n.* where abouts, இருப்பிடத்தகவல்.

**Whereas.** *adv. conj.* அவ் வாறிருப்பதால்; (உண்மை) என்னவெனில்.

**Whereby,** *adv. conj.* எதனால்; எப்படி.

**Wherefore,** *adv., conj.,* எக்காரணத்திற்காக.

**Wherein,** *adv., conj.,* எதனில்; எவ்விடத்தில்

**Whereon,** *adv., conj.,* எதனால்; எதன் மீது.

**Wheresoever, wherever,** *adv., conj.,* எங்கிருந்தாயினும்; எங்காயினும்.

**Whereto, whereunto,** *adv., conj.,* எதற்கு; எவ்விடத்திற்கு.

**Whereupon,** *conj., adv.* அதன் பிறகு; உடனே.

**Wherewith,** *adv., conj.,* wherewithal, *adv.* எதனால்; எச்சாதனத்தால். *n.* wherewithal. பணம்; சாதனம்; மூலதனம்.

**Wherry,** *n.* சிறு படகு வகை.

**Whet,** *v.* கூராக்கு; சாணைபிடி; தூண்டு.

**Whether,** *pron. adv., conj.* இரண்டில் எது, இரண்டில் எதுவேனும்.

**Whey,** *n.* மோர்த் தெளிவு.

**Wheyface,** *n.* வெளுத்த முகம். *a.* wheyfaced.

**Which,** *pron., a., conj., n.* இரண்டில் எது; எவர்; எந்த.

**Whichever, whichsoever,** *pron.* (இரண்டில்) எது வேனும் (ஒன்று).

**Whiff,** *n.* (காற்று) வீச்சு. *v.* சிறிது வீசு.

**Whig,** *n.* (இங்கிலாந்து பண்டை அரசியல்) முற்போக்கான கொள்கையுடைய கட்சி.

**While,** *n.* நேரம்; பொழுது. *v.* வீண் பொழுது போக்கு. *adv., conj.,* (*also* whilist). வேளையில்; அதே சமயத்தில்.

**Whilom,** *adv.,a* முற்காலத்து; முன்னொரு சமயத்தில்; முன்னொரு சமயத்திலிருந்த.

**Whim, whimsey,** *n.* சட்டெனத் தோன்றும் எண்ணம். *a.* whimsical.

**Whimper,** *v.* சிணுங்கு; தேம்பி அழு. *n.* சிணுங்குதல்; தேம்பி அழுதல்.

**Whine,** *v.* நோவினால் அழு; ஆண்மையற்றுச் சிணுங்கிய. *n.* அழுகை.

**Whinny,** *n., v.* (குதிரை) கனை(ப்பு).

**Whip,** *v.* கசையாலடி; (தயிர் முதலியன) கடை; வரிந்து கட்டு; சட்டென நகர்ந்து செல். *n.* கசை; வண்டியோட்டுபவர்; கட்சிச் சட்டாம்பிள்ளை. *n. abs.* whipping, கசையடி(த் தண்டனை); சவுக்கடி; மொத்துதல்.

**Whipper-snapper,** *n.* எதிலும் முன்னிற்க முயலும் இளைஞன்.

**Whipsaw,** *n.* (இரு கைப்பிடியுள்ள) நீண்ட மரமறுக்கும் வாள்.

**Whir, whirr,** *v.* விரை (இறக்கை யடித்து) ஒலி செய். *n.* விரைந் தடிக்கும் இறக்கை.

**Whirl,** *v.* விரைவாகச் சுழலு. *n.* சுழற்சி; கொண்டாட்டம்.

**Whirligig,** *n.* சுழலும் இராட்டினம்; குடை; இராட்டினம்.

**Whirlpool,** *n.* நீர்ச்சுழி.

**Whirlwind,** *n.* சுழல் காற்று.

**Whisk,** *v.* சட்டெனத் துடைத்துச் செல்; கலக்கு. *n.* விரைந்து துடைத்துச் செல்லல்; துடைப்பம்; மத்து.

**Whisker,** *n.* மீசை; (பூனை போன்ற உயிரினங்களின்) மீசை. *a.* whiskered.

**Whiskey, whisky,** *n.* தேறல் வகை; சாராயவகை.

**Whisper,** *v.* தணிந்த குரலில் பேசு. *n.* தணிந்த குரல்; மறை ஒலிப்பு.

**Whistle,** *v.* சீழ்க்கை அடி; கீச்சென்ற ஒலி. *n.* சீழ்க்கை.

**Whit,** *n.* மிகச் சிறு அளவு.

**White,** *a.* வெண்மையான; தூய்மையான. *n.* வெண்மை நிறம்; வெண்மைப்பொருள். *n. abs.* whiteness. *v.* whiten. *phr. n.* white beat, வெண்சூடு; உறு வெப்பம்.

**White-ant,** *n.* கரையான்.

**White book,** *n.* அரசாங்க அறிக்கை.

**White elephant,** *n.* வெள்ளை யானை; பலனுக்கு மேல் செலவைத்தரும் உடைமை.

**Whitehall,** *n.* பிரிட்டிஷ் அரசாங்கப் பணிமனை.

**White House,** *n.* அமெரிக்க முதல்வர் உறைவிடம்.

**White-livered,** *a.* கோழைத் தனமான.

**White-wash,** *n.* வெள்ளை யடிக்கும் சுண்ணாம்பு. *v.* வெள்ளையடி; தூய்மைப்படுத்து; இழந்த நற் பெயரைத் திரும்பப் பெற முயற்சி செய்.

**Whither,** *adv. conj.* எவ் விடத்துக்கு; எதுவரை *adv., conj.,* withersoever. எங்காயினும்.

**Whitlow,** *n.* நகச் சுற்று.

**Whitsunday,** *n.* ஈஸ்டருக்குப் பிறகு ஏழாம் ஞாயிற்றுக்கிழமை (விழா).

**Whiz,** *n., v.* 'உசு' என்ற ஒலி (செய்).

**Who,** *pron., conj,* யார்; எவன்; எவள்; எவர்.

**Whoever, whoso, whosoever.** *pron., conj.* யாராயினும்,

**Whole,** *a.,* எல்லாமான; முழுமையுமான; சேதமுறாத; உடல் நலமுடைய. *n.* எல்லாம்; முழுமை; நிறைவு. *n. abs.* wholeness, *adv.* wholly.

**Wholesale,** *n.,* மொத்தவாணிகம். *a.* மொத்தமாக விற்கிற; மிகுவாகப் பரவியுள்ள.

**Wholesome,** *a.* உடல் நலத்துக்கு ஏற்ற; நற்பயன் விளைவிக்கிற.

**Whom,** *pron. conj.* எவரை; யாரை.

**Whomsoever,** *pron., conj. (*whosoever*)* எவரையாயினும்.

**Whoop,** *n.* கூப்பாடு; போர்க் கூக்குரல்; *v.* உரத்த கூச்சலிடு; போர்முழக்கம் செய்.

**Whooping-cough,** *n.* கக்குவா னிருமல்.

**Whore,** *n.* பரத்தை; கீழ் மகள்.

**Whorl,** *n.* (சிறுகிளையின்) இலைவரிசைச் சுற்று.

**Whose,** *pron., conj.* (*poss case of* who) எவருடைய; யாருடைய. *(poss. pron.)* எவருடையது; எவருடையவர்.

**Why,** *adv., conj.,* ஏன்; எதற்காக.

**Wick,** *n.* (விளக்குத்) திரி.

**Wicked,** *a.* (விக்கெட்) கொடிய; பழிசார்ந்த. *n.* wickedness.

**Wicker,** *n.* பிரம்பு; பிரம்பினால் செய்த பொருள். (*comb.*) *n.* wickerwork. பிரம்பு வேலை.

**Wicket, (wicket, gate),** *n.* கதவினுள் கதவு; புழை வாயில்; புழைக்கடை; (மரப் பந்தாட்டம்) ஒருவர் ஒழிவு வரையுள்ள ஆட்டம். (*comb.*) wicket-keeper, பந்துக்குறி காவலர்.

**Wide,** *a.* அகலமான. *adv,* அகல; அப்பால்; தொலைவில்; மிகவும். *v.* widen. *n.* width. *adv.* widely.

**Wideawake,** *a.* விழிப்பாயுள்ள.

**Widespread,** *a.* மிகவும் பரந்த தாயுள்ள.

**Widow,** *n.* கைம்பெண்; அறுதலி. *n. abs.* widowhood.

**Widower,** *n.* மனைவியை இழந்தவன்; 'மனையிலி'; 'மனையிழந்தவன்'.

**Width,** *n.* அகலம்.

**Wield,** *v.* சுழற்று; கையாளு; மேலாட்சி செய்.

**Wife,** *n.* (*pl.* wives) மனைவி. *a.* wifely, மனைவிக்குரிய. *v. see* wive.

**Wig,** *n.* பொய் மயிர்த் தொப்பி.

**Wight,** *n.* ஆள்.

**Wigwarm,** *n.* (வட அமெரிக்க இந்தியர்) குடிசை.

**Wild,** *a.*, காட்டுக்குரிய; பழக்கப் படாத; காடாக வளர்ந்துள்ள; முரட்டுத் தன்மை வாய்ந்த; பொல்லாத; மூர்க்கமான; கொந் தளிப்பான; வெறிகொண்ட; பண் பாடற்ற; நாகரிகமற்ற; இயற்கைத் தன்மைவாய்ந்த; தடையற்ற; தடைப்படாத; பாலைநிலமான. *n.* (மனிதர் அடியிடாத) காடு. *n. abs.* wildness. *comb. n.* wild animals, wild beasts, கொடு விலங்குகள். wild birds, கொடும் பறவைகள்.

**Wilderness,** *n.* மனிதர் அடியிடாத காடு; பாலை நிலம்.

**Wile,** *n.* சூதானது, மனத்தைக் கவர்; மகிழ்ச்சியொடு பொழுதுபோகச் செய். *a.* wily, தந்திரமான; வஞ்சகமான.

**Wilful,** *a.* அடங்காத; தான்றோன் றியான. *n. abs.* wilfulness. *adv.* wilfully.

**Will,** 1. *n.* விருப்பம்; விருப்பாற்றல்; தீர்மானம். *v. aux,* (முன்னிலை, படர்க்கை இடங்களில்) எதிர் காலங்காட்டும் பொதுத் துணை வினை; (தன்மையில்) துணிபு காட்டும் எதிர்காலத் துணை வினை. (would *past* form after main verb in the past tense) 2. *n.* முடிவாற்றல்; தன்னாவணம்; இறுதி விருப்பப் பத்திரம். *v.* இறுதி விருப்பப் பத்திரமெழுது; தீர்மானம் செய்.

**Willing,** *a.* விருப்பமுள்ள *adv.,* willingly.

**Will-o'-the-wisp,** *n.* சதுப்பு நில ஒளி; கொள்ளி வாய்ப்பேய்.

**Willow,** *n.* (எளிதில் வளைகிற) மரவகை. *a.* willowy, அம் மரவகை சார்ந்த; எளிதில் வளையக்கூடிய; ஒசிவான.

**Willy-nilly,** *a., adv.* விரும்பினும் விரும்பாவிடினும்.

**Wilt,** *v.* வாடு; சோர்வு அடை.

**Win,** *v.*(won) முயற்சிசெய்து பெறு; வசப்படுத்து; வெற்றியடை. *n. ag.* winner. *a.* winning. வெற்றி யுடைய; வெற்றி தருகிற; கவர்ச்சியுடைய. *adv.* winningly.

**Wince,** *v.* (நோயினால்) பின்னிடு; துடி; அஞ்சி விலகு; கண்ணிமை.

**Wind,** 1.*v, (wound)* (வைண்ட் - வௌண்ட்) சுற்று; (பந்தாகச்) சுருட்டு; வளைந்து வளைந்து செல்; சுற்றி மூடு. *n.* winding, சுற்றிச் செல்லல்; திரும்புமிடம்.

**Wind,** *2.n.* (வின்ட்) காற்று; மூச்சு; வயிற்று வளி. *v.* (winder or wound) மோப்பத்தால் அறி; மூச்சுத் தடுமாறச் செய்; ஓய்வெடு; ஊது கொம்பை ஊது.

**Windbag,** *n.* காற்று நிறைந்த பை; நுரையீரல்; சளசளவென்று பேசுபவர்.

**Windfall,** *n.* காற்றினால் உதிர்ந்த பழம். எதிர்பாராத நல்ல பேறு.

**Windlass,** *n.* பாரந் தூக்கும் உருளை.

**Windmill,** *n.* காற்றாடி இயந்திரம்.

**Window,** *n.* சாளரம்; பலகணி; காலதர்.

**Windpipe,** *n.* (கழுத்துப் புறத்து) மூச்சுக் குழாய்.

**Windswept,** *a.*, காற்றுப்படும் படி திறந்துள்ள.

**Windward,** *a., adv.* காற்று எழும் திசை நோக்கி. *n.* காற்று வரும் திசை.

**Windy,** *a.*, காற்று வீசுகிற; புயலான; வெறுமையான (பயனற்ற).

**Wine,** *n.* கொடி முந்திரித் தேறல்; இன்தேறல்.

**Winery,** *n.* முந்திரித்தேறல் சாலை.

**Wing,** *n.* சிறகு; இறக்கை; பறத்தல்; பெரிய கட்டடட்தோடு இணைந்த சிறு கட்டடம்; படைச் சிறகு. *v.* பற; சிறகு அமை; சிறகில் காயப் படுத்து. *a.* winged, சிறகுள்ள; பறக்கிற.

**Wink,** *v.* கண் சிமிட்டு; கண் இமைத்துச் சைகை செய்; கண்டும் காணாததுபோலிரு. *n.* கண் இமைத்தல்; கண் சாடை செய்தல்.

**Winnow,** *v.* (முறத்தால்) தூற்று; தூசியுடை; பொலிகளம் தூற்று; விசிறு.

**Winsome,** *a.* கவர்ச்சியான தோற்றமுள்ள; அழகிய.

**Winter,** *n.* குளிர்காலம்; கிழத்தனம், *v.* குளிர்காலம் கழி. *a.* wintry, குளிர்காலம் போன்ற; குளிரும் புயலுமான.

**Wipe,** *v.* துடை. *n.* துடைத்தல்; அடித்தல்.

**Wire,** *n.* கம்பி; தந்திச் செய்தி. *v.* கம்பியால் கட்டு. தந்திச் செய்தி யனுப்பு.

**Wire gauze,** *n.* கம்பிவலை.

**Wireless,** *a.*, கம்பிகளிலில்லாத *n.* (wireless telegraphy). கம்பி யில்லாத தந்தி, வான் தந்தி, சேணொலி *v.* கம்பியில்லாத் தந்தி அனுப்பு.

**Wirepuller,** *n.* (பிறரை) இயக்குபவர். *n. abs.* wirepulling. *v.* wirepull.

**Wiring,** *n.* மின் கம்பி அமைத்தல்; மின் கம்பி அமைப்பு.

**Wiry,** *a.*, கம்பி போன்ற; சன்னமான; உறுதியான; களைப்பில்லாத.

**Wisdom,** *n. (*wise*)* மெய்யறிவு; மெய்யுணர்வு; கூரறிவு; அறிவாழம்; முதிர் அறிவு; அனுபவ அறிவு; சேம அறிவு; அறிவுக் கருவூலம். (*comb.*) *n.* wisdom tooth, (17 வயதுக்குமேல் முளைக்கும் கடைசி நான்கு) கடை வாய்ப் பற்களில் ஒன்று.

**Wise,** 1.*n.* வழி; முறை. 2. *a.* கூரறிவுள்ள. *n.* (see wisdom.) *adv.* wisely.

**Wiseacre,** *n.* படித்தவன் போல் நடிக்கும் முட்டாள்.

**Wish,** *v.* விரும்பு; விருப்பத்தைத் தெரிவி. *n.* விருப்பம்; விரும்பிய பொருள். *a.* wishful, அவாவுள்ள (wishful thought) விருப்பக் கற்பனை; விருப்ப மயக்கம்.

**Wishy-washy,** *a.* உறுதியற்ற.

**Wisp,** *n.* (வைக்கோல்; மயிர் ஆகிய வற்றின்). குஞ்சம்; சிறு கட்டு; துரும்பு; புரி.

**Wistful,** *a.* அவா மிகுந்த; கவலைக் குறியுடைய.

**Wit,** 1. *n.* அறிவு; சொல் திறம்; சொல்நயம்; சொல் திறமுடையவர்; சொற் கலைஞர். 2. *v.* பண்டை வழக்கு) அறி. *v. impers. see* wot. (1) *a. (neg.)* witless, முட்டாள்தனமான; அறிவற்ற. *a.* (in *comb.*) witted. அறிவுள்ள. *phr.* to wit, என்ன வென்றால். *a.* s*ee* witty.

**Witch,** *v.* மயக்கு. *n.* (*mas*. wizard) மாயக்காரி; சூனியக்காரி. *n. as.* witchcraft, சூனிய வித்தை. *n.* witchery, மாயக்கவர்ச்சி. *a.* witching, மயக்குகின்ற. *v. see* bewitch.

**With,** *prep.* (மூன்றாம் வேற்றுமை உருபு; உடனிகழ்ச்சி; கருவிப் பொருள்) கூட; உடன் கொண்டு. (x without. (1) *adv.* withal. இதனுடன் கூட; இதே சமயத்தில்.

**Withdraw,** *v. (*withdrew with drawn*)* பின்வாங்கு; பின் னிழுத்துக் கொள்; திரும்ப எடு. *n.* withdrawal.

**Wither,** *v.* உலர்; வதங்கு; உணங்கு. *n. (pl.)* குதிரைத் தோள் எலும்புகளிடையே யுள்ள வரை.

**Withhold,** *v.* கொடாமல் வைத்துக்கொள்; செயலில் இறங்காது நில்; தடுத்து நிறுத்து.

**Within,** *prep.* உள்ளே, *adv*. உட்புறத்தில்; உட்புறமாக (x without)

**Without,** 1. *prep.* இல்லாமல். (x with) 2. *prep.* (x within) வெளியே. *adv.* வெளிப் புறத்தில்; வெளிப்புறமாக.

**Withstand,** *v.* எதிர்த்துநில்; தடை செய்.

**Witness,** *v.* சான்றாயிரு; சான்று கூறு; காண்; காட்சியாளராயிரு. *n.* சான்று; சான்றுரையாளர்; காட்சி யாளர். *comb. n.* witness allowance, சான்றுப்படி.

**Witticism,** *n. (*wit*)* செயற்கைப் பேச்சுத் திறமை.

**Wittingly,** *adv. (*wit*)* தெரிந்தே; வேண்டுமென்றே.

**Witty,** *a.* திறமையான உரை யுடைய; நகைத்திறமுடைய.

**Wive,** *v. (*wife*)* மனைவியாகக் கொள்; மணங்கொள்.

**Wizard,** *n. (fem.* witch*)* மாயக்காரன்.

**Wizen, wizened, weazen,** *a.* உலர்ந்த; வாடின.

**Wobble,** *v.* தள்ளாடு; தள்ளாடி நட. அடிக்கடி மாறு. *n.* தள்ளாட்டம்; அடிக்கடி மாறுதல். *n. ag.* wobbler.

**Woe,** *n.* மிகுதுயரம்; ஆரிடர் *int.* அந்தோ! (துயரத்தைக் காட்டும் சொல்). *a. see* woeful.

**Woebegone,** *a.* துயரம் நிரம்பிய; துயரத்தோற்றமுள்ள.

**Woeful,** *a.* *(*woe*)* துயரம் நிரம்பிய; துயரத்திற்குரிய.

**Wold,** *n.* சிறுகுன்று. (*pl.* wolds.) சிறு குன்றுகள் நிறைந்த பகுதி.

**Wolf,** *n.* *(pl.* wolves*)* ஓநாய்; பட்டினி; வறுமை. *a.* *see* wolfish.

**Wolf-dog,** *n.* கிடை (காக்கும்) நாய்.

**Wolfish,** *a.* ஓநாய் போன்ற; மூர்க்கமான; பெருந்தீனி விருப்ப முள்ள.

**Woman,** *n.* (*pl.* women) (*mas.* man) மாது; பெண்; பெண்ணினம். *n. abs.* womanhood. *a.* womanish. *n. coll*, womankind பெண்ணினம். *a.* womanly, பெண்ணுக்குரிய; பெண் போன்ற; பெட்பமைந்த; (பெண்ணுக்குரிய) மதிப்பு வாய்ந்த.

**Womb,** *n.* கருப்பை.

**Women,** *n. pl. see* woman.

**Won,** *v.see* win.

**Wonder,** *n.* வியப்பு; வியத்தக்க அருமை. *v.* வியப்படை; அறிய அவாக்கொள். *a.* wonderful, wonderous. *n.* wonderment, வியப்புணர்ச்சி. *comb. n.* wonderland, வியத்தகும் உலகம்; மாய உலகம். *a. adv.* wonder struck, வியப்பினால் செயலற்ற (நிலையில்)

**Wont,** *n.* வழக்கம். *a.* வழக்கமான, *a.* wonted, பழக்கப்பட்ட; பொதுமரபான.

**Woo,** *v.* காதல்கூர்; காதலித்து வேண்டு; விரும்பி நாடு. *a. ag. pers.* wooer.

**Wood,** *n.* காடு; மரக்கட்டை; (மூலப் பொருள்) மரம்; முருடு கட்டை; விறகு.

**Woodcock,** *n.* காட்டுப் பறவை வகை.

**Wood-cutter,** *n.* மரம்வெட்டி.

**Wooded,** *a.* மரங்களடர்ந்த;

**Wooden,** *a.* மரத்தாலான; உணர்ச்சியற்ற; மரத்த; செப்பமற்ற.

**Wood-nymph.** *n.* வன தெய்வம்.

**Wood-pecker,** *n.* மரங்கொத்திப் பறவை.

**Wood -pigeon,** *n.* காட்டுப் புறா.

**Woodwork,** *n.* மரவேலை(ப் பொருள்)

**Woody,** *n.* மரங்களடர்ந்த; மரக்கட்டையால் செய்யப்பெற்ற.

**Woof,** *n.* ஊடு இழை. (x warp, weft)

**Wool,** *a.* கம்பளிமயிர்; கம்பளி; கம்பளி ஆடை.

**Wool-gathering,** *n.* வேற்று நினைவாயிருத்தல், *a.* கவனக் குறைவான; வேற்று நினைவு வயப்பட்ட.

**Woollen,** *n.* கம்பளியாலான. *n.* கம்பளி ஆடை

**Woolsack,** *n.* பிரிட்டிஷ் மேல் அவை முதல்வர்; (கம்பளம்) பொதிந்த இருக்கை.

**Word,** *n.* சொல்; செய்தி; உத்தரவு; வாக்குறுதி. *v.* சொல் வழக்கு.

*comb. n.* wording and atticulation, சொல் அமைதியும் ஒலிப்பும்.

**Word-building,** *n.* சொல்லாக்க விளையாட்டு.

**Word-play,** *n.* சொற் சிலம்பம்.

**Wordy,** *a* சொல் பெருக்கமான; மிகு சொல்லாடுகிற; பிதற்றுகிற. *n.* wordiness.

**Wore,** *v. see* wear.

**Work,** *n.* வேலை; உழைப்பு; பணி; செயல் விளைவு; உழைப்பின் பயன் ; செய் பொருள்; (ஆசிரியர் எழுதிய) நூல். *(pl.)* (படைத் துறை) அரண்கள் தொழிற் சாலைகள். *v.* (worked or wrought) வேலை செய்; தொழில் நடத்து; உருவம் கொடு; பயன் விளை; விடை கண்டுபிடி.

**Workable,** *a.* வேலை செய்யக் கூடிய; நடக்கக் கூடிய.

**Workaday,** *a.* வேலை நாளுக் குரிய; பொது வாழ்வுக்குரிய; பொதுப்படையான.

**Workday,** *n.* வேலைநாள்; வார நாள்.

**Worker,** *n.* வேலையாள்; தொழிலாளி.

**Workhouse,** *n.* (வேலையும் உணவும் அளிக்கும்) ஏழை விடுதி; தொழிலகம்; பணிக்களரி.

**Workman,** *n.* (*pl.* workmen) தொழிலாளி; தொழில் திறமுடையவர். *a.* workmanlike. திறமையாகச் செய்யப்பெற்ற. *n. abs.* workmanship. வேலைத் திறன், வேலைப்பாடு. *comb. n.* workman's compensation, வேலையாள் இழப்பீடு.

**Work-shop,** *n.* தொழிற் சாலை; பட்டறை; கருவி கலச்சாலை; ஒக்கீட்டுக்களரி.

**World,** *n.* உலகம்; உலகமக்கள்; உலக வாழ்க்கை; சமூகம்; ஒரு துறைத் தொகுதி. (art world etc.) *a.* worldly உலகியல் பற்றுடைய; சமயப் பற்றற்ற. *n. abs* worldliness. (*comb.*) *a.* worldly minded.

**World-power,** *n.* உலக வல்லரசு.

**World-wide,** *n.* உலகமெங்கும் பரவியுள்ள; மிகப் பரந்த.

**Worm,** *n.* புழு; (மனத்தைப்) புண்படுத்தும் உணர்ச்சி; (பலர் வெறுக்கும்) இழிஞன் ; (கழன்று செல்லும்) குழாய்; (திருகாணியின்) சுரை. *v.* புழுப்போல்நெளி; உள்ளிருந்து அரி; சூழ்ச்சி முறை களால் மறை வெளிப்படுத்து. *a.* wormy.

**Worm-eaten,** *a.* புழு அரித்த.

**Wormwond,** *n.* எட்டி மரம்; காஞ்சிரமரம்; கசப்பு.

**Wormy,** *a.* புழுக்கள் நிறைந்த; புழுப்போன்ற.

**Worn,** *v. see* wear.

**Wornout,** *a.* உடுத்துக் கிழிந்த.

**Worry,** *v.* தொந்தரை செய்; நச்சுப்படுத்து. *n.* தொந்தரை; தொல்லை. (*pl.* worries). கவலைகள்.

**Worse,** *a. (comp. of.* bad.*)* மேலும் மோசமான; மேலும் இழிந்த. *ads* (*comp.* of ill, badly); இன்னும் மோசமாக. *v.* worsen.

**Worship,** *n.* வழிபாடு முறை மன்றத் தலைவரின் முன்னிலைப் பட்டம். *v.* வழிபடு; பூசி; பூசனை செய்; மதித்தாதரி. *a.* worshipful.

**Worst,** *a.(sup. of* bad*)*, உறு மோசமான. *adv.* (*sup. of ill,* badly) உறு மோசமாக. *n.* கழிமிகு கீழ் நிலை. 2. *v.* (*see* worsted). தோல்வியடையச் செய்; பிறரைக் கீழ்ப்படுத்து.

**Worsted,** 1.*v. (p. and p. of* worst *2.)* 2. *n.* முறுக்கிய கம்பளி நூல். *a.* முறுக்கிய கம்பளி நூலால் ஆக்கப்பெற்ற.

**Worth,** *n.* மதிப்பு; விலை; மேம்பட்ட குணம்; மதிப்புக் குரிய; விலையுள்ள; தகுதியுள்ள; பெறுமானமுள்ள. *a.* worthy, தகுதியுள்ள. *n. abs.* worthniess. *a. (neg.)* worthless, பயனற்ற. *n. abs. (neg.)* worthlessness.

**Wot,** *n.* (பண்டை வழக்கு) (1st and 3rd *pers. sing. of the v.* wit.) (நான்) அறிகிறேன்; (அவர்) அறிகிறார்.

**Would,** *v. aux. see will.*

**Would-be,** *a. adv.* இருக்க விரும்புகிற. (*comb.*) *n.* would-be doctor. மருத்துவராக விரும்புகிறவர்.

**Wound,** 1. *n.* (ஊண்ட்) (உடலின்) புண்; காயம், ஊறு; ஊனம்; உறுப்புச் சேதம். *v.* காயப்படுத்து; புண்படுத்து. 2. *v. pa. pap* (வௌண்ட்) *see.* wind, 1. *comb. n.* wound pension. ஊனப் பட்டோர் ஓய்வுச் சம்பளம்.

**Wove, woven,** *v.* (*see* weave)

**Wow,** *n.* பரிவு வியப்பு.

**Wrack,** *n.* அழிபாடு.

**Wraith,** *n.* இறப்புக்கு முன்போ பின்போ காணப்படும் ஆவியுரு.

**Wrangle,** 1.*v.* சச்சரவு செய். *n.* சச்சரவு. *n. ag.* wranglar, 1. சச்சரவிடுபவர். 2. (கேம்பிரிட்ஜ் மரபு) கணக்கியலில் முதன்மை யாகத் தேறுபவர்.

**Wrap,** *v.* மடித்துவை, சுற்றிப் போர்த்து. *n.* போர்வை; மேலுறை. *s.n.* wraping *n. ag. impers.* wrapper. மேலுறை; அட்டைத் தாள்; போர்வை; மேலங்கி.

**Wrappage,** *n.* போர்வை.

**Wrath,** *n.* சீற்றம்; கடுஞ்சினம். *a.* wrathful *comb. a. see* wroth.

**Wreak,** *v.* செலுத்து; பழி வாங்கு.

**Wreath,** *n.* (ரெத்) தோரணம்; (பூ) மாலை.

**Wreathe,** *v.* (ரீத்) வளையங்களாக மேலெழு; எழு. (மாலை) சூடு; அணிவி.

**Wreek,** *v.* சேதப்படுத்து; அழியச் செய். *n.* சேதம்; அழிவுப் பொருள்கள்; அழிபாடுகள். *n. ag. impers. pers.* wreaker. கப்பலுடைக்கும் பாறை. *v. abs.* wreckage, சேதப் பொருள்கள்.

**Wren,** *n.* பறவை வகை.

**Wrench,** *n.* திருக்கு; முறுக்கு; திருகு குறடு; பேரிடர்; துன்பம்; வல்லந்தமாக கைப்பற்றுதல். *v.* திருகு; முறுக்கு; திருக்கியிழு; வல்லந்தமாகக் கைப்பற்று.

**Wrest,** *v.* திருகியிழு; வல்லந்த மாகப் பறி; சொற் பொருளைப் புரட்டு. *n.* வீணைத் தந்திகளை முடுக்க உதவம் சாவி.

**Wrestle,** *v.* மற்போர் செய்; முயற்சி செய். *n.* மற்போர். *a.* wrestling.

**Wretch,** *n.* துயரம் நிறைந்தவர்; இழிஞர்.

**Wretched,** *a.* துயர் மிகுந்த; இழிந்த; கீழ்த்தரமான. *n. abs.* wretchedness.

**Wrick,** *n.* சுளுக்கு; முதுகுவலி.

**Wriggle,** *v.* நெளிந்து செல்; வலிந்து நுழை; புழுப்போல் துடி.

**Wright,** *n.* வேலையாள்; செய் பொருள் ஆக்குபவன், கம்மியன்.

**Wring,** *v.* (wrung) பழி; முறுக்கு; பறி.

**Wrinkle,** *n.* சுருக்கம்; திரைப்பு; படிப்பு. *v.* சுருக்கு; சுருங்கல்; விழச் செய். *a.* wrinkly.

**Wrist,** *n.* மணிக்கட்டு; முன் கை.

**Writ,** *n.* (write) (எழுதப்பட்ட) உத்தரவு. (*comb.*) *n.* Holy Writ. திருக்கட்டளை; விவிலிய நூல்.

**Write,** *v.* (wrote, writ or written) எழுது; நூல் எழுது; பதியச் செய். *n. ag.* writer, எழுத்தாளர்; வரைஞர். *pr. p. n. a.* writing. *(n)* எழுத்து; எழுதுதல், *(a)* எழுதுகிற; எழுத உதவுகிற. *pa. p. n. see* writ, *comb. phr. v.* write off, தள்ளுபடி செய்; அடித்து விடு. *n.* writing pad, வைத் தெழுதும் அட்டை; எழுதும் அட்டை. writing ink, எழுதும் மை. writing paper, எழுதுதாள்.

**Writhe,** *v.* நோயினால் நெளி; படுநோவடை.

**Writing,** *n.* எழுத்து; எழுதுதல். *(pl.)* நூல்கள்.

**Wrong,** *a.* தவறான; தகுதியற்ற. *adv.* தவறி; தவறாக. *n.* தவறு; தீங்கு; அவமதிப்பு; குற்றம். *v.* தீங்கு செய்; அவமதி. *adv.* wrongly.

**Wrong doer,** *n.* தவறு செய்பவர்; குற்றம் செய்பவர். *n. vbl.* wrongdoing.

**Wrongful,** *a.* தீங்கான; தவறான; சட்ட மீறிய.

**Wrong-headed,** *a.* தவறான கொள்கைகளுடைய; அறிவற்ற; மூர்க்கமான.

**Wrote,** *v.see* write.

**Wroth,** *a.* (wrath) கோபங் கொண்டுள்ள.

**Wrought,** *v. see* work.

**Wrought iron,** *n.* தேனிரும்பு.

**Wrung,** *v. see* wring.

**Wry,** *a.* கோணலான; முறுக்கப் பட்ட; ஒரு பக்கமாகச் சாய்ந்த. *n.* wryness.

**Wuyyle,** *n.* குழப்பு.

**Wynd,** *n.* சந்து.

# X

**Xebec,** *n.* மூன்று பாய் மரங்களை யுடைய சிறு கப்பல்.

**Xenial,** *a.* விருந்தோம்பும் பண்பு சார்ந்த.

**Xenogamy,** *n.* (செடியினம்) அயல் கருவுறுதல்.

**X-ray,** *n.* (எக்ஸ்-ரே) ஊடுருவு கதிர்; திண்பொருளூடுருவும் நுண் அலை ஒளிக்கதிர் வகை. (வெற்றிடக் குழாயில் மின்வலி பாயும் போது ஏற்படுவது). *v.* நுண் அலை ஒளிக்கதிர் வகையினுதவியால் நோய் தேர்; நுண்கதிரால் மருத்துவம் செய். *comb. n.* x-ray apparatus. ஊடுருவு கதிர்; ஆய்கலம்.

**Xylem,** *n.* (செடியினங்களின்) மரப் பகுதி.

**Xylophone,** *n.* மரக்கட்டை களினால் ஆன இசைக் கருவி வகை.

**Xyster,** *n.* (அறுவை மருத்துவம்) எலும்பு சுரண்டும் கருவி.

# Y

**Yacht,** *n.* பந்தயப் படகு.

**Yak,** *n.* (திபெத்து நாட்டு) எருது வகை.

**Yam,** *n.* காச்சைக் கிழங்கு.

**Yank,** *v.* சட்டென இழு , *n.* சட்டென இழுத்தல்.

**Yank, yankee,** *n.* (இழி வழக்கு) அமெரிக்க ஆங்கிலேயர்.

**Yap,** *v.* குரை. *n.* குரைத்தல் ஒலி.

**Yard,** 1. *n.* வெளிமுற்றம்; கொல்லை; தோட்டம். 2. *n.* மூன்று அடி கொண்ட நீளம்; இருமுழம்; கெசம்; கப்பல் பாய் மரத்திற்குக் குறுக்காக வைக்கும் சட்டம்.

**Yard stick,** *n.* கெசக்கோல்.

**Yarn,** *n.* முறுக்கிய நூல்; புரி; கதைப் புனைவு.

**Yarrow,** *n.* செடி வகை.

**Yawl,** *v.* ஊளையிடு. *n.* சிறு படகு.

**Yawn,** *n.* கொட்டாவி. *v.* கொட்டாவி விடு.

**Yaws,** *n. pl.* தொற்றுத் தோல் நோய்வகை.

**Yelept,** *a.* (பண்டை, செய்யுள் வழக்கு) என்றும் அழைக்கப் பெறுகிற.

**Ye,** *pron.* (பண்டை, செய்யுள் வழக்கு) நீங்கள்; நீவிர்.

**Yea,** *adv. n.* (இணக்கச் சொல்); ஆம்; அப்படியே.

**Yean,** *v.* (ஆடு)குட்டி போடு; ஈனு.

**Yeanling,** *n.* (ஆட்டுக்) குட்டி.

**Year,** *n.* ஆண்டு; பன் னிரண்டு திங்கள் தொகுதி. *adv. a.* yearly. ஆண்டுதோறும் (ஆன); ஓராண்டுக் காலமுள்ள.

**Year book,** *n.* (வாணிக நிலையங் களின்) ஆண்டுத் தகவல் தொகுதி.

**Yearling,** *n.* ஒரு வயதுள்ள உயிரினம்.

**Yearn,** *v.* ஆவல்கொள்; மிகு விரும்பு; இரக்கப்படு. *a., n.*

yearning, ஆவலுள்ள; மிகு விருப்பம்.

**Yeast,** *n.* காடிச்சத்து; (மாவைப் புளிக்க வைக்கும்) நொதி; தேறல் புளிச்சத்து. *a.* yeasty.

**Yelk,** *n. see* yolk.

**Yell,** *v.* கூச்சலிடு; ஊளையிடு. *n.* கூக்குரல்; ஊளையிடுதல்.

**Yellow,** *a.* மஞ்சளான. *n.* மஞ்சள்நிறம். *a.* yellowish, yellowy. (*comb.*) *n.* yellow fever, காய்ச்சல் வகை; மஞ்சள் காய்ச்சல்.yellow press, வெறி எதிர்ப்புப் பத்திரிகைத் தொகுதி.

**Yelp.** *v.* குரை; நோவினால் கூச்சலிடு. *n.* குரைத்தல்.

**Yen,** *n.* (ஜப்பான் நாட்டு) நாணய வகை.

**Yercum,** *n.* எருக்கஞ் செடி.

**Yeoman,** *n. (pl.* men*)* வேளாளன்; தன் நிலத்தைத் தானே பயிரிடும் உழவர்; சிறுவேளாளர். *a.* yeomanly, வேளாண் மரபுக் குரிய, வீரமுள்ள; தன்னுரிமை யுடைய. *n.* yeomanry, வீர வேளாண் படை.

**Yes,** *adv.* ஆம்.

**Yes-man,** *n.* ஆமாம் கூறுபவர்.

**Yesterday,** *n. adv.* நேற்று.

**Yestereve, yesterevening,** *n. adv.* நேற்றுமாலை.

**Yesternight,** *n.* நேற்றிரவு.

**Yester year,** *n.* சென்ற ஆண்டு.

**Yet,** *adv.* எனினும்; மேலும்; ஆயினும், இன்னும்; இதுகாறும் *conj.* இவ்வாறாயினும்.

**Yeti,** *n.* பனிமனிதர்.

**Yew,** *n.* மர வகை.

**Y-gun,** *n.* (நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்க நீர்க்கீழ்க் குண்டுபோடும்) இரு குழாயுள்ள பீரங்கி.

**Yield,** *v.* கீழ்ப்படி; விட்டுக் கொடு; பலனளி; விளைவி. *n.* விளை பயன்; விளைவு. *a.* yielding வளைந்து கொடுக்கிற; இணங்கி வருகிற.

**Yoke,** *n.* நுகத்தடி; தளை; ஊழியம்; இணை எருதுகள். *v.* நுகத் தடியைப் பூட்டு; நுகத்தடியிற் பிணை; இணை.

**Yoke-fellow, yoke-mate,** *n.* கூட்டாளி; கணவன் அல்லது மனைவி.

**Yokel,** *n.* நாட்டுப்புறத்தார்.

**Yolk,** (yelk, அருவழக்கு) *n.* முட்டையின் மஞ்சட்கரு.

**Yon, yonder,** *a. adv.* அதோ; அந்த; அதனண்டை.

**Yore,** *n.* பண்டைக் காலம்.

**You,** *pron.* (பழைய முன்னிலைப் பண்மை, தற்கால ஒருமைப் பன்மை வழக்கு) நீங்கள்; நீர்; நீ; உங்களை; உம்மை; உன்னை; etc.

**Young,** *a.* இளமையான; வாழ்க்கைக்குப் புதிதான; அனுபவமில்லாத. *n.* குட்டி; கன்று; பிள்ளை. *a.* youngish. *n. pers.* youngster. *n., see* youth.

**Younker,** *n.* நாகரிக இளைஞர்; சிறுவன்.

**Your,** *poss. a.* உன்னுடைய; உங்களுடைய.

**Yours,** *pron.* உன்னுடைய; உங்களுடையது.

**Yourself,** *pron.* நீயே; உன்னையே. (pl. yourselves) நீங்களே; உங்களையே etc.

**Youth,** *n.* (young இளமைப் பருவம்; இளைஞன். *a.* youthful, *n. abs.* youthfulness.

**Yowl,** *n.* கூக்குரல்.

**Yuk,** *n.* சிரிப்பு; நகைச்சுவை.

**Yule,** *n.* கிறித்துமஸ் பண்டிகை. *n.* yule-tide, கிறித்துமஸ் பண்டிகைக் காலம்.

**Yurt,** *n.* சிறு கூடாரம்.

# Z

**Zeal,** *n.* ஆர்வம்; ஆவல்; சுறுசுறுப்பு. *a.* zealous. *n. pers.* zealot, முனைப்பார்வலர்; வெறியார்வமுடையவர். *n. abs.* zealotry.

**Zebra,** *n.* வரிக்குதிரை.

**Zebu,** *n.* எருது; மாடு.

**Zein,** *n.* மக்காச் சோளம்; புரதம்.

**Zeltgeist,** *n.* காலப்பண்பு; ஊழிப் பண்பு.

**Zemindar,** *a.* பெருநிலக்கிழார்.

**Zenana,** *n.* அந்தப்புரம்; கவளகம்; மாதர் பகுதி.

**Zendik,** *n.* மாந்திரீகன்.

**Zenith,** *n.* வானத்தின் உச்சம்; மீமுகடு.

**Zephyr, zephyrus,** *n.* தென்றல்; மென் காற்று; இளங்காற்று.

**Zeppelin,** *n.* வான் கப்பல்; பறவைக் கப்பல்.

**Zero,** *n.* இன்மைக் குறி, சுழி; சுன்னம் (0).

**Zero hour,** *n.* (படைத்துறை) தாக்குதலுக்குக் குறித்த காலம்.

**Zest,** *n.* சுவை; ஆர்வம்; பற்றார்வம்; மகிழ்ச்சி; ஆர்வ ஊக்கம்.

**Zeus,** *n.* (பண்டைக் கிரேக்கரின்) வானவர் தந்தை.

**Zho,** *n.* மலைவாழ் ஆமா.

**Zigzag,** *a. adv. n.* இடவலப் புறமாக மாறி மாறி வளைந்து செல்லும் (வழி, வேலி, குழி மின்னொளி etc.) *v.* வளைந்து வளைந்து செல்.

**Zinc,** *n.* துத்தநாகம்.

**Zincity,** *v.* துத்தநாகம் பூசு.

**Zion,** *n.* (விவிலிய நூல்) ஜெசருலத்திலுள்ள திருமலை; கடவுளிருப்பிடம். *n. abs.* zionism, யூதர் (தாயகமான பாலஸ்தீனக் குடியேற்ற ஆதரவுக்) கோட்பாடு. *n. pers.* zionist.

**Zodiac,** *n.* வானவட்டம்; வான வீட்டுத் தொகுதி; இராசி மண்டலம்.

**Zone,** *n.* அரைக் கச்சை; அரைப்பட்டி; (நில நூல்; நில உலக மண்டலம்; பருவ மண்டலம்); எல்லை; வட்டாரம்; சுற்றுப்புறம்.

**Zoo,** *n.* விலங்குக் காட்சிசாலை.

**Zoology,** *n.* விலங்கு (வாழ்க்கை) நூல். *n. pers.* zoologist. *a.* zoological. (*comb.*) *n.*

zoologicalgarden, விலங்குக் காட்சிச் சாலை.

**Zoom,** *v.*, *n.* (வானூர்தி) திடீரெனச் செங்குத்தாக மேல் எழும்பு (தல்).

**Zoomancy,** *n.* விலங்குக் குறி நூல்.

**Zoophyie,** *n.* (பவளம் கடற்பஞ்சு போன்ற) கடல் உயிரின வகை.

**Zoroastrianism,** *n.* பாரசீகரின் பழைய சமயநெறி; பார்சி நெறி.

**Zulu,** *n.* தென் ஆப்பிரிக்கா நாட்டு மக்களின் இனம்.

**Zyme,** *n.* புளிமா, நோய்க்கிருமி.

**Zymosis,** *n.* நுண்ணுயிர் வளர்ச்சி முறை, zymotic.

❖❖❖

# தொகுக்கப்பட்ட அப்பாத்துரையார் நூல்கள் கால வரிசையில்

| | | |
|---|---|---|
| 1. | குமரிக் கண்டம் | 1940-43 |
| 2. | நாத்திகர் யார்? ஆத்திகம் எது? | 1943 |
| 3. | இராவணன் வித்தியாதரனா? | 1943 |
| 4. | கால்டுவெல் ஒப்பிலக்கணம் | 1944 |
| 5. | கெஞ்சி | 1944 |
| 6. | தளவாய் அரியநாத முதலியார் | 1944 |
| 7. | சிறுகதை விருந்து | 1945 |
| 8. | மேனாட்டு கதைக் கொத்து | 1945 |
| 9. | சேக்சுபியர் கதைகள் | 1945, 1950, 1954 |
| 10. | கிருட்டிண தேவராயர் | 1946 |
| 11. | வருங்காலத் தமிழகம் | 1946 |
| 12. | சங்க காலப் புலவர்கள் | 1946 |
| 13. | டேவிட் லிவிங்ஸ்டன் | 1946 |
| 14 | போதும் முதலாளித்துவம் | 1946-47 |
| 15. | குடியாட்சி | 1947 |
| 16. | ஆங்கிலப் புலவர் வரலாறு | 1947 |
| 17. | சமதரும விளக்கம் | 1947 |
| 18. | இரவிவர்மா | 1949 |
| 19. | சுபாசு சந்திரபோசு | 1949 |
| 20. | சங்க இலக்கிய மாண்பு | 1949 |
| 21. | காதல் மயக்கம் | 1949 |
| 22. | பெர்னாட்சா | 1950 |
| 23. | தாயகத்தின் அழைப்பு | 1951 |
| 24. | ஐக்கிய நாடுகளின் அமைப்பு | 1952 |
| 25. | பொது உடைமை | 1952 |
| 26. | சமூக ஒப்பந்தம் | 1952 |
| 27. | ஆங்கில தமிழ் அகராதி | 1952 |
| 28. | வருங்காலத் தலைவர்கட்கு | 1952 |
| 29. | சமூக ஒப்பந்தம் | 1952 |

| | | |
|---|---|---|
| 30. | பொது உடைமை | 1952 |
| 31. | ஐன்ஸ்டீன் | 1953 |
| 32. | எண்ணிய வண்ணமே | 1953 |
| 33. | ஜேன் அயர் | 1954 |
| 34. | நிழலும் ஒளியும் | 1954 |
| 35. | தென்னாடு | 1954 |
| 36. | *தென்னாட்டுப் போர்க்களங்கள் | 1954 |
| 37. | India's Language problem | 1954 |
| 38. | டாம் பிரெணின் பள்ளி வாழ்க்கை | 1955 |
| 39. | தென்மொழி | 1955 |
| 40. | திராவிடப் பண்பு | 1955 |
| 41. | நீலகேசி | 1955 |
| 42. | கட்டுரை முத்தாரம் | 1956 |
| 43. | வாழ்வாங்கு வாழ்தல் | 1956 |
| 44. | இதுதான் திராவிட நாடு | 1956 |
| 45. | 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழகம் | 1956 |
| 46. | ஹோரேஸ் வால்போல் கடிதங்கள் | 1956 |
| 47. | கதை இன்பம் | 1956 |
| 48. | அறிவுச் சுடர் | 1956 |
| 49. | பொன்னின் தேட்டம் | 1957 |
| 50. | பெஞ்சமின் பிராங்ளின் | 1957 |
| 51. | வாழ்க | 1957 |
| 52. | உலகம் சுற்றுகிறது | 1957 |
| 53. | பேரின்பச் சோலை | 1957 |
| 54. | கன்னியின் சோதனை | 1957 |
| 55. | நல்வாழ்வுக் கட்டுரைகள் | 1957 |
| 56. | திருநிறை ஆற்றல் | 1957 |
| 57. | செஸ்டர் ஃபீல்டின் கடிதங்கள் | 1957 |
| 58. | வியப்பூட்டும் சிறுகதைகள் | 1957 |
| 59. | மன்பதைக் கதைகள் | 1957 |
| 60. | மக்களும் அமைப்புகளும் | 1957-58 |
| 61. | மருதூர் மாணிக்கம் | 1958 |
| 62. | சிலம்பு வழங்கும் செல்வம் | 1958 |
| 63. | மணிமேகலை | 1958 |
| 64. | சரித்திரம் பேசுகிறது | 1959 |

| | | |
|---|---|---|
| 65. | வள்ளுவர் நிழல் | 1959 |
| 66. | காரல் மார்க்சு | 1960 |
| 67. | தமிழன் உரிமை | 1960 |
| 68. | மேனாட்டு இலக்கியக் கதை | 1960 |
| 69. | இரு கடற்கால்கள் | 1960 |
| 70 | வாடாமல்லி | 1960 |
| 71. | இருதுளிக் கண்ணீர் | 1960 |
| 72. | காரல் மார்க்ஸ் | 1960 |
| 73. | மலைநாட்டு மங்கை | 1961-62 |
| 74. | புதியதோர் உலகம் செய்வோம் | 1962 |
| 75. | யாழ் நங்கை | 1963 |
| 76 | வளரும் தமிழ் | 1964 |
| 77. | கன்னடநாட்டின் போர்வாள் ஐதரலி | 1964 |
| 78. | வெற்றித் திருநகர் | 1964 |
| 79. | மொழிவளம் | 1965 |
| 80 | குழந்தை உலகம் | 1967 |
| 81. | செந்தமிழ்ச் செல்வம் | 1968 |
| 82. | கொங்குத் தமிழக வரலாறு | 1983 |
| 83. | இந்துலேகா | 1988 |

**முதற் பதிப்பிற்கான ஆண்டு இல்லாத நூல்கள்**
**மறுப்பதிப்பு செய்த ஆண்டு விவரம்:**

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் முழக்கம் | 2001 |
| 2. | இன்பத்துள் இன்பம் | 2001 |
| 3. | இந்திய மக்கள் விடுதலை வரலாறு | 2002 |
| 4. | வாழும் வகை | 2002 |
| 5. | உலக இலக்கியங்கள் | 2002 |
| 6. | ஈலியாவின் கட்டுரைகள் | 2002 |
| 7. | பிறமொழி இலக்கிய விருந்து -1 | 2003 |
| 8. | பிறமொழி இலக்கிய விருந்து 2 | 2006 |
| 9. | சிறுவர் கதைக் களஞ்சியம் 1 | 2002 |
| 10. | சிறுவர் கதைக் களஞ்சியம் 2 | 2002 |
| 11. | சிறுவர் கதைக் களஞ்சியம் 3 | 2002 |
| 12. | சிறுவர் கதைக் களஞ்சியம் 4 | 2002 |
| 13. | சிறுவர் கதைக் களஞ்சியம் 5 | 2002 |

* தென்னாட்டுப் போர்க்களங்கள் எனும் நூல் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

# பொருள் அடிப்படையில் தொகுக்கப்பட்ட அப்பாத்துரையம்

| **தமிழ் - தமிழர் -- தமிழ்நாடு** | | **முதல் பதிப்பு** | **மறுபதிப்பு** |
|---|---|---|---|
| 1. | வருங்காலத் தமிழகம் | 1946 | 2002 |
| | வளரும் தமிழ் | 1964 | 2006 |
| | தமிழ் முழக்கம் | --- | 2001 |
| 2 | தென்மொழி | 1955 | 2001 |
| | தமிழன் உரிமை | 1960 | 2001 |
| 3. | சரித்திரம் பேசுகிறது | 1959 | 2002 |
| | மொழிவளம் | 1965 | 2001 |
| 4. | புதியதோர் உலகம் செய்வோம் (அறப்போர் பொங்கல் மலர்) | 1962 | 2001 |

**வரலாறு**

| | | | |
|---|---|---|---|
| 5. | சங்க காலப் புலவர்கள் | 1945 | 2003 |
| | தளவாய் அரியநாத முதலியார் | 1944 | 2003 |
| | கிருட்டிண தேவராயர் | 1946 | 2003 |
| | இரவிவர்மா | 1949 | 2003 |
| 6. | சுபாசு சந்திரபோசு | 1949 | 2003 |
| | கன்னடநாட்டின் போர்வாள் ஐதரலி | 1964 | 2003 |
| 7. | டேவிட் லிவிங்ஸ்டன் | 1946 | 2003 |
| | ஐன்ஸ்டீன் | 1953 | 2003 |

| | | | |
|---|---|---|---|
| | ஜேன் அயர் | 1954 | 2003 |
| 8. | பெர்னாட்சா | 1950 | 2003 |
| | டாம் ப்ரெணின் பள்ளி வாழ்க்கை | 1955 | 2002 |
| 9. | பெஞ்சமின் பிராங்ளின் | 1957 | 2008 |
| 10. | குடியாட்சி | 1947 | 2006 |
| | ஐக்கிய நாடுகளின் அமைப்பு | 1952 | --- |
| | இரு கடற்கால்கள் | 1960 | 2002 |
| 11. | தென்னாடு | 1954 | 2006 |
| | இதுதான் திராவிட நாடு | 1956 | --- |
| 12. | இந்திய மக்கள் விடுதலை வரலாறு | --- | 2002 |
| 13. | வெற்றித் திருநகர் | 1964 | 2003 |
| 14. | கொங்குத் தமிழக வரலாறு | 1983 | 2002 |

**ஆய்வுகள்**

| | | | |
|---|---|---|---|
| 15. | சங்க இலக்கிய மாண்பு | 1949 | 2002 |
| | சிலம்பு வழங்கும் செல்வம் | 1958 | 2001 |
| | இன்பத்துள் இன்பம் | --- | 2001 |
| 16. | தென்னாட்டுப் போர்க்களங்கள் -1 | 1954 | 2003 |
| 17. | தென்னாட்டுப் போர்க்களங்கள் -2 | 1954 | 2003 |
| 18. | வாழ்க | 1957 | 2001 |
| | உலகம் சுற்றுகிறது | 1957 | 2007 |
| 19. | மணிமேகலை | 1958 | 2002 |
| | செந்தமிழ்ச் செல்வம் | 1968 | 2001 |
| | வள்ளுவர் நிழல் | 1959 | 2001 |

**மொழி பெயர்ப்பு**

| | | | |
|---|---|---|---|
| 20. | குமரிக் கண்டம் | 1940-43 | 2002 |
| 21. | கால்டுவெல் ஒப்பிலக்கணம் | 1944 | --- |
| | திராவிடப் பண்பு | 1955 | 2014 |

| | | | |
|---|---|---|---|
| 22. | கெஞ்சி | 1944 | -- |
| 23. | பிறமொழி இலக்கிய விருந்து -1 | --- | 2006 |
| | எண்ணிய வண்ணமே | 1953 | --- |
| 24. | பிறமொழி இலக்கிய விருந்து 2 | --- | 2003 |
| 25. | தாயகத்தின் அழைப்பு | 1952 | --- |
| | காதல் மயக்கம் | 1949 | --- |
| 26 . | 1800ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் | 1956 | 2001 |
| 27. | ஹோரேஸ் வால்போல் கடிதங்கள் | 1956 | 2002 |
| | செஸ்டர் ஃபீல்டின் கடிதங்கள் | 1957 | 2002 |
| | ஈலியாவின் கட்டுரைகள் | --- | 2002 |
| 28. | நீலகேசி | 1955 | 2003 |
| | வாழ்வாங்கு வாழ்தல் | 1956 | |
| | கன்னியின் சோதனை | 1957 | 2002 |
| | யாழ் நங்கை | 1963 | --- |
| 29. | பேரின்பச் சோலை | 1957 | 2003 |
| 30. | வாடாமல்லி | 1960 | 2004 |
| 31. | மலைநாட்டு மங்கை | 1961-62 | 2007 |
| | இந்துலேகா | 1988 | 2003 |

## இளையோர் வரிசை

| | | | |
|---|---|---|---|
| 32. | சிறுவர் கதைக் களஞ்சியம் -1 | --- | 2002 |
| | குழந்தை உலகம் | 1967 | 1982 |
| 33. | சிறுவர் கதைக் களஞ்சியம் - 2 | --- | 2002 |
| 34. | சிறுவர் கதைக் களஞ்சியம் - 3 | --- | 2002 |
| 35. | சிறுவர் கதைக் களஞ்சியம் - 4, | --- | 2002 |
| | கதை இன்பம் | 1956 | --- |
| 36. | சிறுவர் கதைக் களஞ்சியம் -5 | --- | 2002 |
| 37. | சேக்சுபியர் கதைகள் - 1 | --- | 2002 |
| | சேக்சுபியர் கதைகள் - 2 | --- | 2002 |

| | | | |
|---|---|---|---|
| 38. | சேக்சுபியர் கதைகள் - 3 | --- | 2002 |
| | சேக்சுபியர் கதைகள் - 4 | --- | 2002 |
| 39. | பொன்னின் தேட்டம், | 1957 | 2002 |
| | மன்பதைக் கதைகள், | 1957 | 2002 |
| | மருதூர் மாணிக்கம் | 1958 | 2004 |
| 40. | மேனாட்டு இலக்கியக் கதைகள் | 1960 | 2002 |
| | மேனாட்டுக் கதைக் கொத்து, | 1945 | 2002 |
| | சிறுகதை விருந்து, | 1945 | --- |
| | வியப்பூட்டும் சிறுகதைகள் | 1965 | --- |

## பொது

| | | | |
|---|---|---|---|
| 41. | அறிவுச் சுடர் | 1951 | 2004 |
| | மக்களும் அமைப்புகளும் | 1957-58 | --- |
| | நிழலும் ஒளியும் | 1949 | --- |
| | நாத்திகர் யார்? | 1943 | --- |
| | இராவணன் வித்தியாதரனா? | 1943 | --- |
| 42. | கட்டுரை முத்தாரம் | 1956 | |
| | வாழும் வகை | --- | 2002 |
| 43. | நல்வாழ்வுக் கட்டுரைகள் | 1957 | 2002 |
| | திருநிறை ஆற்றல் | 1957 | 2004 |
| 44. | போதும் முதலாளித்துவம் | 1946-47 | |
| | இருதுளிக் கண்ணீர், | 1960 | |
| | உலக இலக்கியங்கள் | --- | 2002 |
| 45. | காரல் மார்க்சு | 1960 | |
| | சமூக ஒப்பந்தம் | 1952 | |
| | பொது உடைமை | 1952 | |
| | ஆங்கிலப் புலவர் வரலாறு | 1947 | |
| 46. | சமதருமம் விளக்கம் | 1947 | 2002 |
| | வருங்காலத் தலைவர்கட்கு | 1952 | 2002 |
| 47. | ஆங்கிலம் தமிழ் அகராதி | 1952 | --- |
| 48. | India's Language problem | 1954 | --- |

**கீழ்க்கண்ட நூல்கள் வெளிவந்தும் எங்களுக்கு கிடைக்ககாத காரணத்தால் தொகுப்பில் இடம்பெறவில்லை**

1. அன்னை அருங்குண
2. அலிபாபா
3. அன்பின் வெற்றி(கழகம்)
4. சிந்தாமணி இன்பம்
5. காங்கிரசு வரலாறு
6. கூப்பர் கடிதங்கள்
7. சிங்காரச் சிறு கதைகள்
8. சேரன் வஞ்சி
9. காங்கிரசுக்கு ஏன் ஓட்டு செய்ய வேண்டும்
10. இல்லற மாண்பு
11. இருகுழந்தைகள் (ஆசிரியர் கழகம்)
12. கழகச் சிறுகதைகள்(கழகம்)
13. கிருட்டிணதூது சருக்கம் (முத்தமிழ்)
14. மதம் அவசியமா?
15. மேவிழா முழக்கம்
16. ஊழ் கடந்த மூவர்(ஆசிரியர் கழகம்)
17. பாலநாட்டுச் சிறு கதைகள் (ஆசிரியர் கழகம்)
18. புத்தரின் சிறு கதைகள்( கழகம்)
19. திருக்குறள் மணி விளக்க உரை
20. தென்னகப் பண்பு
21. துன்பக்கேணி
22. உயிரின் இயல்பு
23. வகுப்புவாதிகள் யார்?
24. வின்ஸ்ட்டன் சர்ச்சில்
25. வீர அபிமன்யு(ஆசிரியர் கழகம்)
26. யுத்தக் கதைகள்
27. The Mind and Heart of Thiruvalluvar

# தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்ட
# தொகுப்பு நூல்களின் விவரம்

| வ.எண். | தொகுப்பு நூல்கள் | |
|---|---|---|
| 1. | சாமி சிதம்பரனார் நூற்களஞ்சியம் | 22 நூல்கள் |
| 2. | மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம் | 20 நூல்கள் |
| 3. | அறிஞர் க. வெள்ளை வாரணனார் நூல் வரிசை | 21 நூல்கள் |
| 4. | முதுமுனைவர் இளங்குமரனார் தமிழ்வளம் | 40 நூல்கள் |
| 5 | திரு.வி.க. தமிழ்க்கொடை | 26 நூல்கள் |
| 6. | முனைவர் இராசமாணிக்கனார் நூல்கள் | 39 நூல்கள் |
| 7. | பாவாணர் தமிழ்க் களஞ்சியம் | 52 நூல்கள் |
| 8. | தொல்காப்பியம் (உரைகளுடன்) | 15 நூல்கள் |
| 9. | உரைவேந்தர் தமிழ்த்தொகை | 28 நூல்கள் |
| 10. | கருணாமிர்த சாகரம் | 7 நூல்கள் |
| 11. | பாவேந்தம் | 25 நூல்கள் |
| 12 | புலவர் குழந்தை படைப்புகள் | 16 நூல்கள் |
| 13. | நா.மு.வே.நாட்டார் தமிழ் உரைகள் | 24 நூல்கள் |
| 14. | கவியரசர் முடியரசன் படைப்புகள் | 13 நூல்கள் |
| 15. | செவ்விலக்கிய கருவூலம் | 15 நூல்கள் |
| 16. | இராகவன் நூற்களஞ்சியம் | 16 நூல்கள் |
| 17. | தமிழக வரலாற்று வரிசை | 12 நூல்கள் |
| 18 | சதாசிவப் பண்டாரத்தார் | 10 நூல்கள் |
| 19. | சாமிநாத சர்மா நூல்திரட்டு | 31 நூல்கள் |
| 20. | ந.சி.க. நூல் திரட்டு | 24 நூல்கள் |
| 21. | தேவநேயம் | 13 நூல்கள் |
| 22. | மறைமலையம் | 34 நூல்கள் |
| 23. | மாணிக்க விழுமியங்கள் | 18 நூல்கள் |
| 24. | நாவலர் சோமசுந்தர பாரதியார் நற்றமிழ் ஆய்வுகள் | 5 நூல்கள் |
| 25. | ஐம்பெருங் காப்பியங்கள் | 5 நூல்கள் |

| | | |
|---|---|---|
| 26. | பதினெண் கீழ்க்கணக்கு | 3 நூல்கள் |
| 28. | நீதி நூல்கள் | 2 நூல்கள் |
| 29. | முதுமொழிக் களஞ்சியம் | 5 நூல்கள் |
| 30. | உவமைவழி அறநெறி விளக்கம் | 3 நூல்கள் |
| 31. | செம்மொழிச் செம்மல்கள் | 2 நூல்கள் |

32. குறுந்தொகை விளக்கம் (இராகவன் ஐயங்கார்) - 1 நூல்

33. சுப்புரெட்டியார் - 3 நூல்கள்

**அகராதிகள்**

34. தமிழ் இலக்கணப் பேரகராதி (கோபாலையர்) - 18 நூல்கள்

35. யாழ்ப்பாண அகராதி - 2 நூல்கள்

36. வெள்ளி விழாத் தமிழ்ப் பேரகராதி - 3 நூல்கள்

37. ந.சி. கந்தையா அகராதிகள் - 2 நூல்கள்

38. இளங்குமரனார் அகராதிகள் - 2 நூல்கள்

**புதிய வெளியீடுகள்**

| | | |
|---|---|---|
| 39. | வள்ளுவ வளம் | 5 நூல்கள் |
| 40. | இளவரசு | 4 நூல்கள் |
| 41. | செந்தமிழ் ஓர் அறிமுகம் | 1 நூல் |
| 42. | பாரத வெண்பா | 1 நூல் |
| 43. | சிந்துநாகரிகம் புதிய ஒளி | 1 நூல் |
| 44. | உலகில் தமிழினம் | 1 நூல் |
| | **பி. இராமநாதன்** | 9 நூல்கள் |

1. தமிழரின் தோற்றமும் பரவலும்
2. தமிழ நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும்
3. தொன்மைச் செம்மொழித் தமிழ்
4. தமிழர் வரலாறு கி.பி. 600 வரை
5. தமிழர் வராறு இன்றைய நோக்கில்
6. உலக அறிஞர்கள் பார்வையில் தமிழ்
7. இந்தியப் பண்பாட்டில் திராவிடக் கூறுகள்
8. பன்னாட்டு அறிஞர்களின் பார்வையில் தமிழும் தமிழரும்
9. தமிழுக்குத் தொண்டு செய்த பிறநாட்டு அறிஞர்கள்

# 2018 இல் வெளிவர இருக்கின்ற அறிஞர்களின் நூல்கள்

**புதுவரவு:**

1. நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பெருந்தமிழறிஞர் **முதுமுனைவர் இரா. இளங்குமரனா**ர் எழுதிய நூல்கள் **தமிழ்வளம்** எனும் தலைப்பில் 10 தொகுதிகள் (முன்னரே 40 தொகுதிகளும் **தமிழ்வளம்** எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளோம்). மிக விரைவில் வெளிவர இருக்கின்றன.
2. **செந்தமிழ் சொற்பொருட் களஞ்சியம்** எனும் தலைப்பில் பத்துத் தொகுதிகளும் மிக விரைவில் வெளிவர இருக்கின்றன.

**மீள்பதிப்பு:**

3. தமிழர் வாழ்வியல் இலக்கணத்தை வரையறுத்துக் கூறும் ஒல்காப் பெரும்புகழ் **தொல்காப்பிய அடங்கல்** (எழுத்ததிகாரம் - சொல்லதிகாரம் -பொருளதிகாரம்) மிக விரைவில் வெளிவர இருக்கின்றன.
4. பழந்தமிழர் ஆவணமாகத் திகழும் **சங்க இலக்கியக் களஞ்சியம்** (பத்துப்பாட்டு - எட்டுத்தொகை) மிக விரைவில் வெளிவர இருக்கின்றன.

## தொல்காப்பிய அடங்கல்

**எழுத்ததிகாரம்:**

1. இளம்பூரணம் - வ.உ. சிதம்பரனார் (1928)
2. நச்சினார்க்கினியம் - சி. கணேசையர் (1952)

**சொல்லதிகாரம்:**

| | | |
|---|---|---|
| 1. | இளம்பூரணம் | - க. நமச்சிவாய முதலியார் (1927) |
| 2. | நச்சினார்க்கினியம் | - சி.வை. தாமோதரம் பிள்ளை (1892) |
| 3. | சேனாவரையம் | - சி. கணேசயைர் (1966) |
| 4. | தெய்வச் சிலையம் | - இரா. வேங்கடாசலம் பிள்ளை (1929) |
| 5. | கல்லாடம் | - தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (1971) |

**பொருளதிகாரம்:**

| | | |
|---|---|---|
| 1. | இளம்பூரணம் | - வ.உ. சிதம்பரனார் (1932, 35) |
| 2. | நச்சினார்க்கினியம் | - சி. கணேசையர் (1948) |
| 3. | பேராசிரியம் | - சி. கணோசையர் (1943) |

## சங்க இலக்கியக் களஞ்சியம்

| | | |
|---|---|---|
| 1. | பத்துப்பாட்டு | - நச்சினார்க்கினியர்<br>பழைய உரை (1889)<br>விளக்கவுரை இராசமாணிக்கனார் |
| 2. | நற்றிணை | - பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (1914) |
| 3. | குறுந்தொகை | - இரா. இளங்குமரனார் (2017) |
| 4. | ஐங்குறுநூறு | - அறிஞர் சதாசிவ ஐயர் (1943) |
| 5. | பதிற்றுப்பத்து | - பண்டித அருளம்பலவனார் (1960) |
| 6. | பரிபாடல் | - பரிமேலழகர் பழைய உரை (1918) |
| 7. | கலித்தொகை | - இ.வை. அனந்தராமையர் (1925) |
| 8. | நெடுந்தொகை (அகநானூறு) | - இரா. இராகவையங்கர் (1920) |
| 9. | புறநானூறு | - ஜி.யு.போப் (1894) |